V211,31 N77
N78.612
122098

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளுக்கு அகரவரிசைத் தொகுப்பு அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்
படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின்
முதல் கூட்டத் தொடர்

1977, ஆகஸ்ட் 9, 10, 11, 12 ஆம் நாட்கள்.

தொகுதி VI—(எண்கள் 1 முதல் 4)

©
தமிழ் நாடு அரசு
1977

சட்டமன்றப் பேரவைத் துறை
செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-600009.

V311,31'N77
N78-6;2
122092

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படியான ஆறுவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடர்

*1977, ஆகஸ்ட் 9, 10, 11, 12–ஆம் நாட்கள்.*

தொகுதி VI(எண்கள் 1 முதல் 4)

உள்ளடக்கம்.

செவ்வாய்க்கிழமை, 1977, ஆகஸ்டு 9.


| | பக்கங்கள். |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. .. .. .. | i—v |
| தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. | v |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல் .. .. .. | vii—xv |
| 1. வினுக்கள்—விடைகள் .. .. .. | 1—19 |
| 2. உரிமைப் பிரச்சினை— 'சிவப்பு நாடா'-தினசரிப் பத்திரிகையின் மீது | 19—20 |
| 3. ஒழுங்குப் பிரச்சினைகள்— | |
| (அ) உரிமைக் குழுவுக்கு அனுப்பப்பெறும் பொருள் விவரம் குறித்து .. | 21 |
| (ஆ) மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு நேரம் ஒதுக்குவது குறித்து .. | 79—83 |

பக்கங்கள்

4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

(அ) சென்னை, இராயபுரம், காசிமேடு பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தினால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்தும், அரசு உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் அவசியம் குறித்தும் .. .. .. .. 21—25

(ஆ) உளுந்தூர்பேட்டை அருகில் லாரி விபத்தில் 12 பேர்கள் மரணமடைந்ததும், பலர் படுகாயம் அடைந்தது குறித்தும் .. .. 25—27

5. தகவல் கோரல்—

(அ) ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர்கள் அப்பொருள் குறித்து பேசுவது குறித்து .. .. 27—29

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தை மீண்டும் கேரளத்தோடு இணைப்பது குறித்து கேரள சட்டமன்றத்தில் எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து .. .. .. 32—39

(இ) தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது கொடுக்கப் பெற்றுள்ள உரிமை மீறல் பிரச்சினை குறித்து .. 42

(ஈ) சுந்தரம்-கிளேடன் தொழிற்சாலை குறித்து. 42—43

6. அறிக்கை அளித்தல்—

மூன்றாவது சம்பளக் குழு உறுப்பினர்கள் நியமனம், பணிகள் குறித்து, நிதியமைச்சரின் அறிக்கை .. .. .. 29—32

7. கவன ஈர்ப்புகள்—

(அ) கைத்தறித் துணிகள், இராமநாதபுரம் மாவட்டம் எமனேஸ்வரம் பகுதியில் உள்ள நெசவாளர் சங்கங்களில் இலட்சக் கணக்கில் தேங்கியிருப்பதால் நெசவாளர் வேலையற்றிருக்கும் நிலை குறித்து .. .. .. .. 39—41

(ஆ) பெரியாறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடாததால் மேலூர் தொகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்து .. .. .. 41

பக்கங்கள்

8. 1977-78-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி)

கோரிக்கை எண் 35 உணவுப் பொருள் வழங்கல்... .. .. .. 44—79

கோரிக்கை எண் 56-பல்வகை மூலதனச் செலவு .. .. .. .. 83—125

9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள். .. 125—126

<u>புதன்கிழமை 1977, ஆகஸ்ட் 10.</u>

1. வினாக்கள்-விடைகள். .. .. .. 183—192

2. தகவல் கோரல்—

பேரவை விதிகளின்கீழ் உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளை எடுத்துக் கொள்வது குறித்து .. .. .. 192—195

3. உரிமைப் பிரச்சினைகள்—

(அ) சுந்தரம்-கிளேடன் தொழிற்சாலை திறக்கப்படுவது குறித்து, அரசு பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையையே திரும்பவும் அமைச்சர் அவர்கள் அவைக்கு அளித்தமை குறித்து .. 196—201

(ஆ) 'மாலை முரசு' பத்திரிகையில் ஒரு அமைச்சர் பத்திரிகையில் வெளியிட்டதாகச் செய்தியைப் போட்டு, மற்றொரு அமைச்சர் படத்தைப் போட்டிருப்பது குறித்து .. .. .. .. 201—205

4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

(அ) சென்னை அம்பத்தூர், காமராஜ் நகரில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து. .. 205—207

(ஆ) குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளை தொழிலாளர் நல அமைச்சர் பார்வையிட்டதன் விளைவாக, அங்குள்ள 200 குடும்பங்கள் முன்னறிவிப்புக் கூட இன்றி வெளியேற்றப்பட இருப்பது குறித்து .. .. .. .. 207—215

பக்கங்கள்

5. 1977-78-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்.
(ஆ) கோரிக்கை எண் 20—வேளாண்மை.
(இ) கோரிக்கை எண் 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. } 215—291

6. அறிவிப்பு—

பேரவை அலுவல் குறித்து .. .. 292—293

7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. 293


## வியாழக்கிழமை 1977, ஆகஸ்ட் 11.

1. வினாக்கள்-விடைகள் .. .. .. .. 341—356

2. அறிவிப்பு—

மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல் .. .. .. 356

3. அறிக்கை அளித்தல்—

(அ) சுந்தரம் கிளேட்டன் தொழிற்சாலை மீண்டும் திறப்பது குறித்து தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அறிக்கை அளித்தல் .. 356—357

(ஆ) விவசாய சங்கத்தினர் மேற்கொள்ள இருக்கும் போராட்டங்களைக் கைவிடக் கோரி போக்குவரத்துத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை. 452–455

4. ஒழுங்குப் பிரச்சினைகள்—

(அ) உறுப்பினர்களுடைய தீர்மானங்கள் அனுமதிக்கப்படாமை குறித்து .. 358—361

(ஆ) ஆய்வு உரையில் உள்ள அச்சுப் பிழை குறித்து. .. .. .. .. 367—369




பக்கங்கள்

5. கவன ஈர்ப்பு—

காவிரிப் பாசனப் பகுதிகளில் தண்ணீர் முறை வைத்து விடுவதால் கீழத்தஞ்சை மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து 361—363

6. 1977–78 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள். .. ..
(ஆ) கோரிக்கை எண் 33—வீட்டு வசதி.
(இ) கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி. } 370—480

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 48


## வெள்ளிக்கிழமை ஆகஸ்ட் 1977, 12.

1. வினாக்கள்-விடைகள். .. 611—622

2. உரிமைப் பிரச்சினை—

'அண்ணா' நாளேடு பற்றி .. .. .. 622

3. அறிவிப்பு—

பொதுக் கணக்குக் குழுவிற்கான தேர்தல். 623—624

4. கவன ஈர்ப்புகள்—

(அ) நெல்லிக்குப்பம் பஞ்சாயத்து ஒன்றியப் பகுதிகளில் நிலத்தடி நீர் இல்லையென்ற காரணத்தால் ஆழ்கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க மறுக்கப்படுவதும் அதனால் விவசாயிகளும், விவசாய உற்பத்தியும் பாதிக்கப்பட்டிருப்பதும் குறித்து .. .. .. .. 625—631

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டில் ஏற்பட்ட கோர தீ விபத்து குறித்தும் எடுக்க வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் .. .. .. 631—633

பக்கங்கள்

5. 1977-78 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி) .. .. .. .. —

(அ) கோரிக்கை எண் 21—மீனளம். .. } 634—736
(ஆ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு .. }

6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் .. 736—737

## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை (Index) பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன; துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினுக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ) என்று போடுவது ஒத்தி வைப்புத் தீர்மானத்தையும்; (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினுக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் ''சட்ட முன்வடிவு'' என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புகள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றங்(கள்)', 'மாநகராட்சி(கள்)', ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப் பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின்கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் ''தலைவர்'' என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது :

| | | |
|---|---|---|
| அ | .. | அறிக்கை |
| அறிவி. | .. | அறிவிப்பு |
| அ.வி. | .. | அரைமணி நேர விவாதம் |
| கு.வி. | .. | குறுகிய கால விவாதம் |
| பொ.வி. | .. | பொது விவாதம் |
| ஆ.உ. | .. | ஆளுநர் உரை |
| உ.பி. | .. | உரிமைப் பிரச்சினை |
| ஒ.பி. | .. | ஒழுங்குப் பிரச்சினை |
| க.ஈ. | .. | கவன ஈர்ப்பு |
| க.ஈ.அ. | .. | கவன ஈர்ப்பு அறிக்கை |
| ச.அ.நி. | .. | சட்ட முன்வடிவின் அறிமுக நிலை |
| ச.ஆ.நி. | .. | சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை இந்நிலையில், (1) ஆய்வு/கூட்டாய்வுக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம். (2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம். (3) சுற்றுக்கு அனுப்பப்பெறுவதற்கான திருத்தம். (4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம். (5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன. |



| | | |
|---|---|---|
| ச.பிரி.ஆ. | .. | சட்ட முன்வடிவு—பிரிவுவாரியாக ஆய்தல். |
| ச.பே. | .. | சட்டமன்றப் பேரவை |
| ச.மே. | .. | சட்டமன்ற மேலவை |
| த.கோ. | .. | தகவல் கோரல் |
| த.வி. | .. | தன்னிலை விளக்கம் |
| தீ. | .. | தீர்மானம் |
| உ.தீ. | .. | உரிமைத் தீர்மானம் |
| ஒ.தீ. | .. | ஒத்திவைப்புத் தீர்மானம் |
| த.தீ. | .. | தனித் தீர்மானம் |
| து.மா.கோ. | .. | துணை மானியக் கோரிக்கை |
| மி.மா.கோ. | .. | மிகைச் செலவிற்கான மானியக்கோரிக்கை. |
| பே.அ. | .. | பேரவையின் அலுவல் |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்

**திரு. பிரபுதாஸ் பட்வாரி.**

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்** *(முதலமைச்சர் கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தேர்தல்கள், பயண அனுமதிச் சீட்டுகள், மது விலக்கு, சுகாதாரம், மருத்துவம், அறக் கட்டளைகள், லஞ்ச ஒழிப்பு, தொழில்கள், சுரங்கங்கள் கனிப் பொருள்கள், கிராமத்தொழில்கள், ஊரகத் தொழில்கள் திட்டம், பூதான கிராமதான இயக்கங்கள் மற்றும் முன்னாள் இராணுவ வீரர்கள்.*

2. **மாண்புமிகு திரு. கி. மனோகரன்** *(நிதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நிதி, திட்டம், வணிக வரிகள், ஆயத் தீர்வை, வருவாய், சட்ட மன்றம்.*

3. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** *(பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார் : பொதுப் பணிகள், சிறுபாசன சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், இரும்புஉருக்கு கட்டுப்பாடு, மின்சாரம்.*

4. **மாண்புமிகு திரு கே. நாராயணசாமி முதலியார்** *(சட்டத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார் :—சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் அளவைகள் குறித்த சட்டம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், கம்பெனிகளை பதிவு செய்தல்.*

5. **மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்** *(உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார் : உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீனளம், பத்திரப்பதிவு, சிங்கோனு உட்பட காடுகள், இளைஞர் அணி.*

6. **மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** *(செய்தி விளம்பரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார் : செய்தி, விளம்பரம், படச் சுருள் தொழில் நுட்பம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம், திரைப்படச் சட்டம்.*

7. **மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** *(கல்வித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும்.*

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி, சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்.

9. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழிலாளர் நலன், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரம், குடி நீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு.

10. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார் : அரிசன நலன், பிற்பட்ட வகுப்பினர், எழுது பொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், மலை வாழ் பழங்குடி மக்கள்.

11. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார் : போக்கு வரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

12. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார்: மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், கால்நடை வளர்ப்பு, இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், கண்காணிப்புப் பணிகள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

13. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, வேளாண்மை மறு நிதி உதவி, வேளாண்மை பொறியியல் பிரிவு, வேளாண்மை பொறியியல் சம்பந்தமான பகுதிகள், பால், பால்வள நிறுவனம், பால்வள முனைப்புத் திட்டங்கள்.

14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி-ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : இட வசதிக் கட்டுப்பாடு, பத்திரிகை காகிதக் கட்டுப்பாடு, வேளாண்மைப் பணி சம்பந்தமான டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங் உட்பட்ட மாவட்டச் சங்கங்கள், முகமதியர் அறக் கட்டளை, ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கதர்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NAD

## GOVERNOR OF TAMIL NADU

THIRU PRABHUDAS PATWARI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)—Minister in-charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption, Industries, Bhoodan and Gramdan and Ex-servicemen, Mines and Minerals, Village Industries and Rural Industries Project,

2. THE HON. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)—Minister in-charge of Finance, Planning, Commercial Taxes and Excise, Revenue and Legislature.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Public Works*)—Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme, Works, Iron and Steel Control and Electricity.

4. THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR (*Minister for Law*)—Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money Lending, Legislation on Chits and Registration of Companies.

5. THE HON. THIRU G. R. EDMUND (*Minister for Food*)—Minister in-charge of Food, Food Production, Co-operation and Fisheries, Registration, Forest including Cinchona and Youth Service Corps.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Publicity*)—Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism and Tourism Development Corporation and Cinematograph Act.

7. The Hon. Thiru C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Minister in-charge of Education including Technical Education, Official Language, Employment and Training.

8. The Hon. Thiru K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness.

9. The Hon. Thiru S. RAGHAVANANDHAM (*Minister for Labour*)—Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board and Town Planning.

10. The Hon. Thiru P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)—Minister in-charge of Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes.

11. The Hon. Thiru C. PONNAIYAN (*Minister for Transport*)—Minister in-charge of Transport, Nationalised Transports, Motor Vehicles Act, Highways and Ports.

12. The Hon. Selvi P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)—Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas and Refugees and Evacuees and Correctional Administration (Approved Schools and Vigilance Service).

13. The Hon. Thiru P. KOLANDAIVELU (*Minister for Agriculture*)—Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. The Hon. Thiru K. RAJA MOHAMMED (*Minister for Handlooms and Textiles*)—Minister in-charge of Accommodation Control, Newsprint Control, Agro-Service Co-operative Societies at Block District and Apex Level including Federation, Waqfs, Textiles, Yar Handlooms and Khadi.



தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. முனு ஆதி.

பேரவைத் துணைத் தலைவர்

திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. கே. பண்ணை சேதுராம்
2. திரு. ஆர். முத்தையா
3. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா
4. திரு. கே. கே. முத்தையா

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.

துணைச் செயலாளர்

திரு. த. இராதாகிருஷ்ணன்

குழு அலுவலர்

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

சார்புச் செயலாளர்கள்

திரு. கே. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மனுபன் நம்பியார், பி. ஏ.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்

தலைமை நிருபர்

திரு. பி. கே. இலக்குமிநாராயணன்

எஸ்டேட் அதிகாரி

திரு. வி. சீதாராமன், பி.காம்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும் (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. எம். .. | ஹரூர் (செ.வ.). |
| 2 | அப்துல் ரஜாக், திரு. கே. எம். | ஆலந்தூர். |
| 3 | அப்துல் லத்தீப், திரு. கி. .. | கடலூர். |
| 4 | அப்புனு கவுண்டர், திரு. கா. .. | பெண்ணாகரம். |
| 5 | அமிர்த ராஜ், திரு. இரா. .. | திருச்செந்தூர். |
| 6 | அம்பிகாபதி, திரு. மு. .. .. | மன்னார்குடி. |
| 7 | அய்யாசாமி, திரு. ரா. .. | தாராபுரம் (செ.வ.). |
| 8 | அரங்கசாமி, திரு. க. .. .. | குன்னூர் (செ.வ.). |
| 9 | அரங்கநாதன், திரு. அ. க. .. | வேலூர். |
| 10 | அரங்கநாதன், திரு. மு. .. | திருவல்லிக்கேணி. |
| 11 | அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்) .. | கோயம்புத்தூர் (மேற்கு). |
| 12 | அருணாசலம் திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.). |
| 13 | அர்சுனன், திரு. வீ. .. .. | ஆரணி. |
| 14 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி. |
| 15 | அன்பழகன் திரு. க. .. .. | புரசவாக்கம். |
| 16 | அன்பழகன், திரு. தி. .. .. | நாட்ராம்பள்ளி. |
| 17 | ஆண்டி அம்பலம், திரு. மெ. .. | நத்தம். |
| 18 | ஆதிசுவாமி, திரு. இரா. .. | குளச்சல். |
| 19 | ஆறுமுகம், திரு. சி. .. .. | மதுராந்தகம். |
| 20 | ஆறுமுகம், திரு. எச். ஜி. .. | பர்கூர். |
| 21 | ஆறுமுகம், திரு. இல. .. .. | திருநாவலூர். |
| 22 | ஆறுமுகம், திரு. மு. .. .. | சேலம்-2. |
| 23 | ஆறுமுகம், திரு. த. .. .. | அரியலூர். |
| 24 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 25 | இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர். | திண்டிவனம். |
| 26 | இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி. |
| 27 | இராதா, திரு. எஸ். ஆர். .. .. | கும்பகோணம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 28 இராமசாமி, திரு. க.ந.க. .. | கோபிச்செட்டிபாளையம். |
| 29 இராமசாமி, திரு. எஸ். ஜே. | சோளிங்கர். |
| 30 இராமசாமி, திரு. எஸ். வி. .. | பெரம்பலூர் (செ.வ.). |
| 31 இராமசாமி. திரு. டி. .. .. | இராமநாதபுரம். |
| 32 இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். . | சாத்தூர். |
| 33 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்) | அருப்புக்கோட்டை. |
| 34 இராமச்சந்திரன், திரு. என். .. | செஞ்சி. |
| 35 இராமச்சந்திரன், மாண்புமிகு .. திரு. ச. (அமைச்சர்) | பண்ருட்டி. |
| 36 இராமச்சந்திரா ரெட்டி, திரு. .. என். | ஹோசூர். |
| 37 இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |
| 38 இராஜாராம் நாயுடு, திரு. .. தே. இரா. | தல்லி. |
| 39 இளங்கோவன், திரு. கோ. .. | திருவையாறு. |
| 40 ஈஸ்வரமூர்த்தி என்கிற .. சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம். |
| 41 உக்கிரபாண்டியன், திரு. க. .. | பரமக்குடி (செ.வ.). |
| 42 உச்சி, திரு. கே. .. .. | கூடலூர். |
| 43 உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 44 உமாநாத், திரு. ரா. .. .. | நாகப்பட்டிணம். |
| 45 உய்யக்கொண்டான், திரு. .. கே. ஜே. | ஆற்காடு. |
| 46 எட்மண்ட், மாண்புமிகு .. திரு. க. உரொ. (அமைச்சர்) | திருநெல்வேலி. |
| 47 எத்ராஜ், திரு. கி. .. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 48 ஏகாம்பர ரெட்டி, திரு. .. | பள்ளிப்பேட். |
| 49 ஐசரி வேலன், திரு. .. .. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 50 கணேசன், திரு. இ. .. .. | எடப்பாடி. |
| 51 கணேசன், திரு. எஸ். .. .. | பூம்புகார். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 52 கண்ணன், திரு. ம. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 53 கந்தசாமி, திரு. கே. .. | ஆண்டிப்பட்டி. |
| 54 கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு. |
| 55 கபாலி, திரு. டி. கே. .. | மயிலாப்பூர். |
| 56 கரியமாணிக்கம் அம்பலம், .. திரு. கரு. ராம. | திருவாடானை. |
| 57 கருணகிரி முத்தையா, திரு. க. | மருங்காபுரி. |
| 58 கருணாநிதி, திரு. மு. .. | அண்ணாநகர், சென்னை. |
| 59 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.). |
| 60 கருணாமூர்த்தி, திரு. வெ. .. | ஜெயங்கொண்டான். |
| 61 கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. | ஆலங்குளம். |
| 62 கலியமூர்த்தி, திரு. துரை .. | சிதம்பரம். |
| 63 காத்தமுத்து, திரு. கி. பெ. .. | தொட்டியம். |
| 64 காளிமுத்து, மாண்புமிகு .. திரு. கா. (அமைச்சர்) | திருப்பரங்குன்றம். |
| 65 காளியப்பன், திரு. பொ. .. | காரைக்குடி. |
| 66 காளியப்பன், திரு. இரா. .. | ஏற்காடு (ஆ. வா.). |
| 67 கிட்டப்பா, திரு. என். .. | மாயூரம். |
| 68 கிட்டு, திரு. ப. கோ. .. | பல்லடம். |
| 69 கிருஷ்ணன், திரு. பி. எம். .. | பாலக்கோடு. |
| 70 கிருஷ்ணன், திரு. செ. .. | கன்னியாகுமரி. |
| 71 கிருஷ்ணன், திரு. நா. .. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.). |
| 72 கிருஷ்ணன், திரு. பி. .. | விழுப்புரம். |
| 73 கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர்(செ.வ.). |
| 74 குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர். |
| 75 குருசாமி, திரு.ப. .. .. | ஆண்டியூர் (செ. வ.). |
| 76 குழந்தைவேலு, மாண்புமிகு .. திரு. ப. (அமைச்சர்) | உடுமலைப்பேட்டை. |
| 77 கோதண்டராமன், திரு. .. வி கே. | குடியாத்தம் |
| 78 கோதண்டராமன் என்கிற .. முசிறிப்புத்தன் பி. | முசிறி. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 79 கோபாலன், திரு. போ. | உதகமண்டலம். |
| 80 கோவிந்தராசன், திரு. சி. | நெல்லிக்குப்பம். |
| 81 கோவிந்தன், புலவர் கா. | செய்யாறு. |
| 82 கோவேந்தன், திரு. மு. ரெ. | பேராவூரணி. |
| 83 சங்கரய்யா, திரு. என். | மதுரை கிழக்கு. |
| 84 சண்முகம், திரு. கா. ந. | லால்குடி. |
| 85 சண்முகம். திரு. ப.உ. | திருவண்ணாமலை. |
| 86 சண்முகம், திரு. ஆர். | திருத்தணி. |
| 87 சண்முகம். திரு. ச. | கூத்தகுடி, திருப்பத்தூர். |
| 88 சதாசிவம், திரு. செ. | அரவக்குறிச்சி. |
| 89 சந்திரசேகரன், திரு. ஆர். | கம்பம். |
| 90 சந்திரன், திரு. ப. | பெரணமல்லூர். |
| 91 சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ. | தியாகராயநகர், சென்னை. |
| 92 சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டிணம். |
| 93 சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்) | திருமங்கலம். |
| 94 சவுந்திரராஜன், திரு. ரெ. வீ. | பாபநாசம். |
| 95 சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | ஆயிரம்விளக்கு, சென்னை. |
| 96 சாது செல்வராஜ், திரு. கோ. | ஸ்ரீவைகுண்டம். |
| 97 சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் (செ. வ.). |
| 98 சிகாமணி, திரு. பொ. | திருவொற்றியூர். |
| 99 சிவசாமி, திரு. செ. | இளையாங்குடி. |
| 100 சிவபெருமாள், திரு. மு. | ஓமலூர். |
| 101 சின்னசாமி, திரு. வ. | சேந்தமங்கலம் (ஆ.வா.). |
| 102 சின்னசாமி, திரு. வி. கொ. | பவானிசாகர். |
| 103 சின்னய்யா, திரு. வீ. | குளத்தூர் (செ.வ.). |
| 104 சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி. |
| 105 சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ. | குளித்தலை. |
| 106 சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர். |
| 107 சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 108 சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர். |
| 109 சுந்தரராஜ், திரு. நா. | திருமயம். |
| 110 சுப்பராயன், திரு. என். | பனைமரத்துப்பட்டி. |
| 111 சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு. | உத்திரமேரூர். |
| 112 சுப்பிரமணியம், திரு. கே. ஜே. | போளூர். |
| 113 சுப்பிரமணியன், திரு. மா. | சின்னசேலம். |
| 114 சுப்பிரமணியன், திரு. ஓ. | சிவகங்கை. |
| 115 சுப்பிரமணியம், திரு. ஆர். சி. | கடலாடி. |
| 116 சுப்பிரமணியம், திரு. டி. | ஆண்டிமடம். |
| 117 சுப்பிரமணியன், திரு. வ. மு. | மானாமதுரை (செ. வ.). |
| 118 சுப்பிரவேலு, திரு. கா. | சீர்காழி (செ.வ.). |
| 119 சுப்பு, திரு. க. | வில்லிவாக்கம். |
| 120 சுப்புலட்சுமி, திருமதி | மொடக்குறிச்சி. |
| 121 சுப்பையா, திரு. ச. | சங்கரநாயினார் கோவில் (செ. வ.). |
| 122 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 123 செங்கோடன், திரு. கா. | கபிலமலை. |
| 124 செங்கோட்டையன், திரு. கு. அ. | சத்தியமங்கலம். |
| 125 செல்லப்பா, திரு. அ. | வலங்கைமான் (செ.வ.) |
| 126 செல்வராசன், திரு. அ. | துறைமுகம், சென்னை. |
| 127 செல்வராஜ், திரு. சீனி. | சமயநல்லூர் (செ.வ.). |
| 128 செல்வராஜ், திரு. மு. | குறிஞ்சிப்பாடி. |
| 129 சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் (செ.வ.). |
| 130 சோமசுந்தரம், திரு. ஒ. ப. | பொள்ளாச்சி. |
| 131 சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்). | கிருஷ்ணராயபுரம் (செ. வ.). |
| 132 சௌந்திரராசன், திரு. கே. | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 சௌந்திரராஜன், திரு. மு. ரா. | பவானி. |
| 134 சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம். |
| 135 ஞானசிகாமணி, திரு. தே. | விளவங்கோடு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 136 தங்கவேலு கவுண்டர், திரு. பொ. | மேல்மலையனூர். |
| 137 தங்கவேலு, திரு. ர. ச. .. | வால்பாறை (செ. வ.). |
| 138 தண்டபாணி, திரு. ரா. க. சு. | காங்கேயம். |
| 139 தமிழரசன், திரு. இ. .. | பேரணும்பட்டு (செ.வ.) |
| 140 தனசேகரன், திரு. ந. .. | தூத்துக்குடி. |
| 141 தனபால், திரு. ப. ... .. | சங்கரி (செ. வ.) |
| 142 தனுஷ்கோடி, திரு. கோ. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 143 தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத்தலைவர்.) .. | அறந்தாங்கி. |
| 145 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 146 துரை கோவிந்தராசன், திரு. அரசாங்க தலைமைக்கொறடா | திருவோணம். |
| 147 துரைசாமி, திரு. ப. .. | ராசிபுரம். |
| 148 துரை முத்துசாமி, திரு. .. | சங்கராபுரம். |
| 149 துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 150 துரைராஜ், திரு. சு. ம. .. | பொன்னேரி (செ.வ.) |
| 151 துலுக்காணம், திரு. வ. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 152 தைலப்பன், திரு. டி. எம். .. | ஒரத்தநாடு. |
| 153 நடராசன், திரு. அ. .. | பேரூர். |
| 154 நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 155 நல்லதம்பி, திரு. தி. சு. .. | பார்க்டவுன், சென்னை. |
| 156 நாச்சிமுத்து, திரு. க. .. | பொங்கலூர். |
| 157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கொ. பொ. | மேட்டூர். |
| 158 நாராயணன், திரு. ரா. .. | தாரமங்கலம். |
| 159 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 160 பண்ணை சேதுராமன், திரு. கே. | பெரியகுளம். |
| 161 பரமசிவம், திரு. அ. மா. .. | மேலூர். |
| 162 பரமசிவம் திரு. மொ. ... | வானூர் (செ. வ.). |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 163 பழனிசாமி, திரு. சு. .. ... | மேட்டுப்பாளையம். |
| 164 பழனிசாமி, திரு. சொ. ந. .. | அவிநாசி (செ. வ.). |
| 165 பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 166 பழனியப்பன், திரு. அ. ப. .. | ஒட்டன்சத்திரம். |
| 167 பழனிவேல், திரு. என். .. | பழனி (செ. வ.). |
| 168 பாண்டியன், திரு. .. .. | சேரன்மாதேவி |
| 169 பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 170 பாலகுருவா ரெட்டியார், திரு. வெ. | சோழவந்தான். |
| 171 பாலன், திரு. சு. .. .. | பெரம்பூர் (செ. வ.). |
| 172 பாலாஜி, திரு. க. .. | காஞ்சீபுரம். |
| 173 பாலுசாமி, திரு. அ. .. | நிலக்கோட்டை (செ. வ.). |
| 174 புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டை, சென்னை. |
| 175 புஸ்பராஜு, திரு. த. .. | ஆலங்குடி. |
| 176 பெரியசாமி, திரு. மொ. .. | மங்களூர் (செ. வ.). |
| 177 பெரியசாமி, திரு. ரா. .. | உப்பிலியாபுரம். |
| 178 பெரியசாமி, திரு. டி. பி. மு. | மதுரை மேற்கு. |
| 179 பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ. வ.). |
| 180 பெருமாள், திரு. ரா. கு. .. | விளாத்திகுளம் |
| 181 பொன்னுசாமி, டாக்டர், ஏ. | பெருந்துறை. |
| 182 பொன்னுரங்கம், திரு. ப. .. | இராயபுரம். |
| 183 பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்) .. | திருச்செங்கோடு. |
| 184 மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.). |
| 185 மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர். |
| 186 மணிமுடி, திரு. எஸ். .. | எழும்பூர், சென்னை (செ.வ.). |
| 187 மருதாசலம், திரு. க. .. | தொண்டாமுத்தூர். |
| 188 மனோகரன், திரு. கி. மாண்புமிகு (அமைச்சர்) .. | பாளையங்கோட்டை. |
| 189 மாணிக்கம், திரு. சி. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 190 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் .. | (நியமன உறுப்பினர்). |
| 191 மார்க்கபந்து, திரு. ரா. .. | அணைக்கட்டு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 192 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். ... | பட்டுக்கோட்டை. |
| 193 மீனாட்சிசுந்தரம், திரு. மா. ... | வேதாரண்யம். |
| 194 முத்துசாமி, திரு. பா. க. சி. | தர்மபுரி. |
| 195 முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு. |
| 196 முத்துசாமிகரையாளர், திரு. சு. | தென்காசி. |
| 197 முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி. |
| 198 முருகேசன், திரு. கூ. ச. .. | திருவரம்பூர். |
| 199 முனிசாமி, திரு. பொ. .. | வந்தவாசி, (செ.வ.). |
| 200 முனிரத்தினம், திரு. எஸ். .. | கும்மிடிபூண்டி. |
| 201 முனு ஆதி, மாண்புமிகு திரு... (பேரவைத் தலைவர்) | தாம்பரம், சென்னை. |
| 202 மூக்கையா தேவர், திரு. பி. கே. | உசிலம்பட்டி. |
| 203 யூசப், திரு. யா. சை. மு. .. | ராதாபுரம். |
| 204 ரகுமான்கான், திரு. ஏ. .. | சேப்பாக்கம், சென்னை. |
| 205 ரகுராமன், திரு. வி. .. | புவனகிரி. |
| 206 ரகோத்துமன், திரு. கோ. .. | முகையூர். |
| 207 ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 208 ரசாக், திரு. எம். எம். ஏ. | கடையநல்லூர். |
| 209 ராமசாமி, திரு. கோ. .. | சிவகாசி. |
| 210 ராமசாமி, திரு. து. .. | வெள்ளக்கோயில். |
| 211 ராமதாஸ், திரு. பி. .. | போடிநாயக்கனூர். |
| 212 ராமநாதன், திரு. சி. .. | விருத்தாசலம். |
| 213 ராமலிங்கம், திரு. இ. .. | காட்டுமன்னார்கோவில் (செ. வ.). |
| 214 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 215 ராஜு, திரு. செ. மெ, .. | தலைவாசல் (செ. வ.). |
| 216 ராஜு, திரு. வி. கே. .. | அரக்கோணம் (செ. வ.). |
| 217 லட்சுமிநாராயணன், திரு. என். | மதுரை மத்திய தொகுதி. |
| 218 லத்தீப், திரு. எம். ஏ. .. | வாணியம்பாடி. |
| 219 வடிவேலு, திரு. கே. .. | கரூர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 0 வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல். |
| 1 வரதராஜன், திரு. சௌ. வே. | சேலம்-1. |
| 2 வாசன், திரு. சீ. மு. .. | வேடசந்தூர். |
| 3 வின்சென்ட், திரு. மி. .. | நாகர்கோவில். |
| 4 விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர். |
| 5 வேங்கா கவுண்டர், திரு. பி. | வீரபாண்டி.. |
| 6 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா. | சிங்காநல்லூர். |
| 7 வெள்ளைச்சாமி, திரு. ஆ. .. | ஆத்தூர். |
| 8 வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு. |
| 9 வேலுச்சாமி, திரு. ஒ. சோ. | ஒட்டபிடாரம் (செ. வ.) |
| 0 ஜகதீசன், திரு ஆனூர் . | செங்கல்பட்டு |
| 1 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி. |
| 2 ஜெபமணி, திரு. ர. .. | சாத்தான்குளம். |
| 3 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 4 ஜெயவேலு, திரு. எம்.ஏ. .. | காட்பாடி. |
| 5 ஜேம்ஸ், திரு. ஜே. .. | திருவட்டார். |

ரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் — அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.

திரு. வி.பி. இராமன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளுக்கு அகர வரிசைத் தொகுப்பு அட்டவணை

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறுவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடர்

1977, ஆகஸ்ட் 9, 10, 11, 12-ஆம் நாட்கள்

(தொகுதி VI—எண்கள் 1 முதல் 4)

அ


பக்கங்கள்

அணைகள்—

குண்டம்பாச்சி ஆறு, கொடைக்கானல் 183-184

அண்ணாமலை, திரு. மு.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :

மீனளம்
கூட்டுறவு } 635

அம்பிகாபதி திரு. மு.—

ஆய்வு உரையில் உள்ள அச்சுப்பிழை குறித்து (ஒ.பி.) 367-368

தீ விபத்து, சென்னை இராயபுரம் காசிமேடு பகுதியில் (ஒ.தீ.) .. .. .. 22

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

உணவுப்பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச்செலவு } 43, 90-93

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் வீட்டு வசதி
நகர்பகுதி வளர்ச்சி .. .. } 364, 408-415

அ—தொடர்ச்சி


பக்கங்கள்

அரங்கநாதன், திரு. மு.—

வரவு-செலவுத்திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :
உணவுப்பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச்செலவு } 73-79

அர்ச்சுனன், திரு. வி.—

வரவு—செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :
உணவுப்பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச்செலவு } 89-90

அழகர்சாமி, திரு. சோ.—

இளைஞர் அணி, வேலை இழந்தவர்கள் போராட்டம் .. .. 346-352
இறைவைப் பாசனக் கிணறுகளுக்கு மின்னிணைப்பு 1
தீ விபத்து, ஒரத்தநாடு (க.ஈ.) .. 631,633
மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு நேரம் ஒதுக்குவது குறித்து (ஒ.பி.) .. 79, 82-83
மின் இணைப்பு, நெல்லிக்குப்பத்திற்குத் தராமை (க.ஈ.) .. 628, 629, 631
வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:
பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச்செலவு } 261-264

அறிக்கை அளித்தல்—

மூன்றாவது சம்பளக் குழு உறுப்பினர்கள் நியமனம், பணிகள் குறித்து .. .. .. 29-32

அறிவிப்புகள்—

அலுவல் ஆய்வுக்குழு முடிவுகள் .. .. 292-293
பொதுக்கணக்குக் குழு, உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல் .. .. .. 623-624





பக்கங்கள்

அ—தொடர்ச்சி

அன்பழகன் திரு. க.—

ஆய்வு உரையில் உள்ள அச்சுப்பிழை குறித்து (ஒ.பி.) — 369
குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள், முன்னறிவிப்பின்றி வெளியேற்றப்பட இருப்பது குறித்து (ஒ.தீ.) .. 212-213
வரவு செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:
தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் 437-439
வீட்டுவசதி .. 441-447
நகர்பகுதி வளர்ச்சி .. 448-452
மீன்வளம்
கூட்டுறவு } 691

ஆ

ஆதிசுவாமி, திரு. இரா.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு
பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 242—245

ஆறுமுகம், திரு. எச். ஜி.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:
உணவுப் பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச் செலவு } 95—96

ஆறுமுகம். திரு. மு.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:
பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 216, 271—273
மீன்வளம்
கூட்டுறவு } 699

## இ

பக்கங்கள்

**இராகவானந்தம், திரு. எஸ்.—**

குடிசைமாற்று வாரிய குடியிருப்புக்கள்:

முன்னறிவிப்பின்றி வெளியேற்றப்பட இருப்பது குறித்து (ஒ. தீ.) .. 209—211

சுந்தரம் கிளேட்டன் தொழிற்சாலை: மீண்டும் திறப்பது குறித்து (அ) .. 356—357

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:
தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்
வீட்டு வசதி
நகர்ப்பகுதி வளர்ச்சி } 363, 365, 366, 367, 376, 395, 455—477

**இராசமாணிக்கம், திரு. இரெ.—**

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

உணவுப் பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச் செலவு } 86—88

**இராதா, திரு. எஸ். ஆர்.—**

வரவு செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

மீனளம்
கூட்டுறவு } 689, 691

**இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—**

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

உணவுப் பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச் செலவு } 119

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்
வீட்டு வசதி
நகர்ப்பகுதி வளர்ச்சி } 3[illegible]3

மீனளம்
கூட்டுறவு } 691, 3-624



பக்கங்கள்.

## இ—தொடர்சி.

**இராமச்சந்திரன், திரு. ச.—**

காவிரிப்பாசனப் பகுதிகளில் தண்ணீர் முறை வைத்து விடுவதால் கீழ்த் தஞ்சை மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து (க.ஈ.அ.) .. 361—363

மின் இணைப்பு, நெல்லிக்குப்பத்திற்கு தராமை (க. ஈ. அ.) .. 625—631

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:
பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 221

மீனளம்
கூட்டுறவு } 690

விவசாயிகள், பெரியாறு நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் விடப்படாததால் மேலூர் தொகுதியில் பாதிப்பு (க. ஈ. அ.) .. 41

**இராமச்சந்திரன், திரு. செஞ்சி. B.—**

நீர் மின்சாரத் திட்டம், ஒகேனக்கல் .. 611

**இராமலிங்கம், திரு. செ.—**

மின் இணைப்பு, நெல்லிக்குப்பத்திற்கு தராமைத் (க.ஈ.) .. 629, 631

**இராஜா முகமது, திரு. கே.—**

கைத்தறித் துணிகள் தேக்கம் காரணமாக எமனேஸ்வரம் பகுதியில் நெசவாளர்கள் வேலையற்றிருக்கும் நிலை (க. ஈ. அ.) .. 39—403, 41

**இருபது அம்சத் திட்டம்:—**

விளம்பரச் செலவு 10—13

**பஞர் அணி:—**

ணியாற்றுவோர் எண்ணிக்கை .. .. 341—346

இறந்தவர்கள், போராட்டம் .. 346—352

பக்கங்கள்.

ஈ

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—

தீ விபத்து, சென்னை இராயபுரம் காசிமேடு பகுதி (ஒ. தீ.) .. 22

உ

உத்திராபதி, திரு. பொ.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் வீட்டு வசதி .. .. .. 447—448

நகர்பகுதி வளர்ச்சி:

பால் வழங்கு திட்டங்கள் }
வேளாண்மை } 217
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு }

மீனளம் }
கூட்டுறவு } 635—728

உமாநாத். திரு. ரா :—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளை எடுத்துக் கொள்ளுதல் (த. கோ.) .. 195

வரவு-செலவு திட்டம், 1977 - 78, வாக்கெடுப்பு :

உணவுப்பொருள் வழங்கல் } 43,
பல்வகை மூலதனச் செலவு .. } 59—66,
} 117

உய்யக் கொண்டான், திரு. கே. ஜே.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

உணவுப்பொருள் வழங்கல் .. }
பல்வகை மூலதனச் செலவு } 96—98

உரிமைப் பிரச்சனைகள்.—

அண்ணா நாளேடு, தவறான செய்தி வெளியிட்டது குறித்து .. .. 622

சுந்தரம்—கிளேட்டன் தொழிற்சாலை, பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையையே அவைக்கு அளித்தது குறித்து. .. .. .. 196—20[93]

''மாலை முரசு'' பத்திரிகை, ஒரு அமைச்சரின் செய்தியையும் இன்னொரு அமைச்சரின் படத்தையும் போட்டது குறித்து. .. 201 [6]23-624



பக்கங்கள்.

எ

எட்மண்ட் திரு. க. உரோ.—

குடிசைமாற்று வாரிய குடியிருப்புகள், முன்னறிவிப்பின்றி வெளியேற்றப்பட இருப்பது குறித்து (ஒ. தீ.) 214

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :

உணவுப் பொருள் வழங்கல் .. ..
பல்வகை மூலதனச் செலவு .. 43, 45
113—123

மீனளம் .. .. } .. 634—635
கூட்டுறவு .. .. } .. 636—691
} 702—711
} 713—714
} 715—725
} 726—727
} 728—732

ஏ

ஏகாம்பர ரெட்டி, திரு. —

குசஸ்தலை ஆறு, பாலம் அமைத்தல் .. 13—14

சென்னை — திருத்தணி வழித்தடம், நீட்டித்தல் 191—192

ஒ

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள், முன்னறிவிப்பின்றி வெளியேற்றப்பட இருப்பது குறித்து. 207—215

தீ விபத்து, அம்பத்தூர் காமராஜ் நகர் (சென்னை) .. .. .. 205—207

ஒழுங்குப் பிரச்னைகள்—

அனுமதிக்கப்படாமை குறித்து .. .. 358—361

ஆய்வு உரையில் உள்ள அச்சுப்பிழை குறித்து 367—368, 369

மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு நேரம் ஒதுக்குவது குறித்து. .. .. .. 79—83

பக்கங்கள்.

க


**கணேசன், திரு. எஸ்.—**

மின் இணைப்பு, நெல்லிக்குப்பத்திற்கு தராமை (க. ஈ.) .. .. .. 630,631

**கந்தசாமி, திரு. கே—**

தீ விபத்து, சென்னை இராயபுரம் காசிமேடு பகுதி (ஒ. தீ.) .. .. .. 22

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

உணவுப் பொருள் வழங்கல், ..
பல்வகை மூலதனச் செலவு .. .. 98—101

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் வீட்டு வசதி, .. .. ..
நகர்பகுதி வளர்ச்சி .. .. .. 423—425

**கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம.—**

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு,
மீனளம் .. .. ..
கூட்டுறவு .. .. .. .. } 682

**கருணாநிதி, திரு. தாழை மு.—**

வரவு--செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு.

பால் வழங்கு திட்டங்கள்,
வேளாண்மை,
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 219—225

**கருணாநிதி, திரு. மு. :—**

ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்படாமை குறித்து (ஒ. பி.) .. .. 358—361

சுந்தரம்—கிளேட்டன் தொழிற்சாலை, பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையையே அவைக்கு அளித்தது குறித்து. (உ. பி.) .. .. 199—200

"மாலை முரசு" பத்திரிகை, ஒரு அமைச்சரின் செய்தியையும் இன்னொரு அமைச்சரின் படத்தையும் போட்டது குறித்து. (உ. பி.) 203—211

மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு நேரம் ஒதுக்குவது குறித்து. (ஒ. பி.) .. 82




பக்கங்கள்.

க—தொடர்ச்சி.


**கருணாநிதி, திரு. மு.—தொடர்ச்சி.**

வரவு—செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

உணவுப் பொருள் வழங்கல்,
பல்வகை மூலதனச் செலவு .. .. 119

மீனளம், .. .. ..
கூட்டுறவு .. .. .. } 660,726, 728,731, 732

**கவன ஈர்ப்புகள்—**

காவிரிப் பாசன பகுதிகளில் தண்ணீர் முறை வைத்து விடுவதால் கீழ்த் தஞ்சை மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து 361—363

கைத்தறித் துணிகள் தேக்கம் காரணமாக எமனேஸ்வரம் பகுதியில் நெசவாளர்கள் வேலையற்றிருக்கும் நிலை. .. .. .. 39—41

தீ விபத்து, ஒரத்தநாடு .. .. 631—633

மின் இணைப்பு, நெல்லிக்குப்பத்திற்குத் தராமை .. 625

விவசாயிகள், பெரியாறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடப்படாததால் மேலூர் தொகுதியில் பாதிப்பு .. .. .. .. 41

கி

**கிட்டப்பா, திரு. என்.**

சென்னை—நாகப்பட்டிணம் பேருந்து, பயண நேரம் குறைத்தல் .. .. 352—356

பூங்கா (அரசினர்), கிண்டி, தேசியப்பூங்கா வாக்குதல் .. .. .. .. 184

மிருகக் காட்சி சாலை, சென்னை, வேறு இடத்திற்கு மாற்றுதல் .. .. .. 184—191

வரவு-செலவுத் திட்டம் 1977-78 வாக்கெடுப்பு,

பால் வழங்கு திட்டங்கள்,
வேளாண்மை,
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. } 218

பக்கங்கள்.

க—தொடர்ச்சி.

கிட்டப்பா திரு. என்.—தொடர்ச்சி

விவசாயக் கடன்களை வசூலித்தல் .. .. 1—9

<u>கிருஷ்ணன், திரு. ரா.</u>

தீ விபத்து, சென்னை இராயபுரம் காசிமேடு பகுதி (ஒ. தீ.) .. .. .. 22

வரவு-செலவுத் திட்டம் 1977-78 வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. } 215

<u>குடியிருப்புகள்.</u>

குடிசை மாற்று வாரியம், முன்னறிவிப்பின்றி வெளியேற்றப்பட இருப்பது குறித்து (ஒ.தீ.) 207—215

<u>குழந்தைவேலு, திரு. ப.</u>

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு.

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 215, 216, 217, 218, 281—288, 290

<u>கைத்தறி.—</u>

துணிகள் தேக்கம் .. .. .. 614

நெசவாளர்கள், துணிகள் தேக்கம் காரணமாக எமனேஸ்வரம் பகுதியில் வேலையற்றிருக்கும் நிலை. .. .. .. .. 39—41

<u>கோதண்டராமன், திரு. வி. கே.—</u>

தீ விபத்து, சென்னை இராயபுரம் காசிமேடு பகுதி (ஒ.தீ.) .. .. .. 22

வரவு-செலவுத் திட்டம் 1977-78 வாக்கெடுப்பு.

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்
வீட்டு வசதி
நகர்பகுதி வளர்ச்சி, .. } 364





பக்கங்கள்.

க—தொடர்ச்சி.

<u>கோவிந்தராசன், திரு. சி.—</u>

கரும்பிற்கான விலை .. .. .. 14—19

தீ விபத்து, சென்னை இராயபுரம் காசிமேடு பகுதி (ஒ.தீ.) .. .. .. 22

மின் இணைப்பு, நெல்லிக்குப்பத்திற்குத் தராமை (க. ஈ.) .. .. .. .. 625, 627

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்
வீட்டு வசதி
நகர் பகுதி வளர்ச்சி } 364

மீனளம் .. .. ..
கூட்டுறவு } 651—660

<u>கோவிந்தன், புலவர். கா—</u>

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :

உணவுப் பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச் செலவு .. .. } 45—51

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. } 274—281, 288

<u>சண்முகம், திரு. கூத்தக்குடி ச. :</u>

கைத்தறித் துணிகள், தேங்கி இருக்கும் கைத்தறித் துணிகளின் மதிப்பு .. .. 614

மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு நேரம் ஒதுக்குவது குறித்து (ஒ.பி.) .. .. 80, 82

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.


**சண்முகம், திரு. ப. உ.—**

வரவு-செலவுத் திட்டம், 1977—78 — வாக்கெடுப்பு :

உணவுப் பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச் செலவு .. 103—113

மீனளம்
கூட்டுறவு } 701—703, 711—724, 727

**சதாசிவம் திரு. செ.—**

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :

மீனளம்
கூட்டுறவு } 648

**சந்திரன். திரு. ப.—**

வரவு-செலவுத் திட்டம், 1977—78 வாக்கெடுப்பு :

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்
வீட்டு வசதி
நகர்பகுதி வளர்ச்சி .. 364

**சமரசம் டாக்டர். கே—**

நீர் மின்சாரத் திட்டம், ஒகேனக்கல் 611

**சவுந்தரராஜன். திரு. ரெ. வீ.—**

வரவு-செலவுத் திட்டம், 1977—78, வாக்கெடுப்பு:

மீனளம்
கூட்டுறவு } 636

**சாதிக் பாட்சா. திரு. எஸ். ஜே.—**

உரிமைக் குழுவுக்கு அனுப்பப்பெறும் பொருள் விவரம் குறித்து. (ஒ. பி.) .. .. 21

குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள், முன்னறிவிப்பின்றி வெளியேற்றப்பட இருப்பது குறித்து (ஒ. தீ.) 207—208

மின் இணைப்பு, நெல்லிக்குப்பத்திற்குத் தராமை. (க. ச.) 630




ச—தொடர்ச்சி.

பக்கங்கள்


**சாதிக் பாட்சா திரு. எஸ். ஜே—தொடர்ச்சி.**

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்
வீட்டு வசதி .. .. ..
நகர்பகுதி வளர்ச்சி .. .. } 364—461

மீனளம் .. .. ..
கூட்டுறவு .. .. .. } 634—724, 735

**சிவசாமி. திரு. செ.—**

தீ விபத்து, சென்னை இராயபுரம் காசிமேடு பகுதி (ஒ. தீ.) .. .. .. 22

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்
வீட்டு வசதி .. ..
நகர்பகுதி வளர்ச்சி .. .. } 366

பால் வழங்கு திட்டங்கள்,
வேளாண்மை .. .. ..
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 216

மீனளம் .
கூட்டுறவு } 666

**சின்னசாமி. திரு. வி. கொ.—**

வரவு-செலவுத் திட்டம், 1977—78, வாக்கெடுப்பு :

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. } 239—241

**சின்னராசு. திரு. க. இரா.—**

வரவு-செலவுத் திட்டம், 1977 — 78, வாக்கெடுப்பு :

உணவுப்பொருள் வழங்கல் ..
பல்வகை மூலதனச் செலவு. .. } 93—95

பக்கங்கள்.

ச— தொடர்ச்சி.


சுந்தரம். திரு. மு.—

வரவு-செலவுத் திட்டம், 1977—78, வாக்கெடுப்பு :

மீனளம் கூட்டுறவு .. .. .. 693

சுந்தரராஜ். திரு. நா.—

தீ விபத்து, சென்னை இராயபுரம் காசிமேடு பகுதி (ஒ. தீ.) .. .. 22

லாரி விபத்து உளுந்தூர் பேட்டை அருகில் (ஒ. தீ.) .. .. 25—26

சுப்பிரமணியம், திரு. ஆர். சி.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :

உணவுப் பொருள் வழங்கல் பல்வகை மூலதனச் செலவு 51—54

சுப்பிரமணியன். திரு. டி.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :

பால் வழங்கு திட்டங்கள், வேளாண்மை வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.. 227—229

சுப்பு, திரு. க.—

அண்ணா நாளேடு தவறான செய்தி வெளியிட்டது (குறித்து உ.பி.) 622

இளைஞர் அணித் திட்டம் .. 341—346

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளை எடுத்துக் கொள்ளுதல், (த. கோ.) .. 192—195

சுந்தரம்—கிளேட்டன் தொழிற்சாலை, பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையையே அவைக்கு அளித்தது குறித்து (உ. பி.) .. 196—197

தீர்மானங்கள், அனுமதிக்கப்படாமை குறித்து (ஒ. பி.) .. 358—361

தீ விபத்து, அம்பத்தூர், காமராஜ் நகர் (சென்னை) (ஒ. தீ.) .. 205—206




பக்கங்கள்.

ச—தொடர்ச்சி.


சுப்பு, திரு. க.—

லாரி விபத்து, உளுந்தூர்பேட்டை அருகில் (ஒ. தீ.). .. 25—26

வரவு செலவுத் திட்டம்-1977-78, வாக்கெடுப்பு:

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் வீட்டுவசதி நகர்ப்பகுதி வளர்ச்சி .. .. 368,370 379

மீனளம் கூட்டுறவு .. .. .. 725, 729

சுப்புலட்சுமி, திருமதி—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு,

மீனளம் கூட்டுறவு .. 643

சுவாமிதாஸ், திரு. அ.—

இருபது அம்சத் திட்டம், விளம்பரச் செலவு .. 10—13

வரவு செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :

உணவுப்பொருள் வழங்கல் பல்வகை மூலதனச்செலவு .. .. 43

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் வீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சி .. 367

பால் வழங்கு திட்டங்கள் வேளாண்மை வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. 217, 218

மீனளம் கூட்டுறவு ... 634, 635, .. 661

செங்கோடன், திரு. கா.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள் வேளாண்மை வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. 245—248

பக்கங்கள்.

ச—தொடர்ச்சி.

செங்கோட்டையன், திரு. கு. அ.

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. 225—227

செல்வராஜ், திரு. மு.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

மீனளம்
கூட்டுறவு .. .. .. 636

சொக்கலிங்கம், திரு. கெ.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. 215

சோமசுந்தரம், திரு. ஒ. ப.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. 233—236

த

தகவல் கோரல்—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளை எடுத்துக்கொள்ளுதல் .. 192—195

தமிழரசன், திரு. இ.—

வரவு—செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்
வீட்டு வசதி
நகர்ப்பகுதி வளர்ச்சி .. 398—401



பக்கங்கள்.

த—தொடர்ச்சி.

தலைவர்—

அறிவிப்பு—

மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல் .. 356

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்.—

அறிக்கைகள் :—

விதி 82-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை
அமைச்சர் அளித்த அறிக்கையின் மேல் விவாதம் கூடாது .. 31, 32

உரிமைப் பிரச்னைகள்—

'அண்ணா' நாளேடு மீது

உரிமைப் பிரச்னை கொடுத்த உறுப்பினர் இருக்கையில் இல்லாமையால் தள்ளுபடி செய்யப் பெற்றது. .. 622

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது—

சுந்தரம் கிளேட்டன் தொழிற்சாலை திறக்கப் பெறுவது குறித்து அரசு 7-8-1977 அன்று பத்திரிகைகளுக்குக் கொடுத்த அறிக்கையையே 8-8-1977 அன்று மீண்டும் 82-வது விதியின் கீழ் அமைச்சர் அவைக்கு அளித்தது, அவையின் நேரத்தை வீணாக்குவது மட்டுமின்றி அவையை மிஸ்லீட் (mislead) செய்வதாகும் என, 1977-ஆகஸ்டு, 10-ஆம் தேதி ஓர் உறுப்பினர் அமைச்சர் மீது உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வந்தார். இதன்மீது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :—

"அமைச்சரிடம் விளக்கம் கேட்டதற்கு செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் வெளியிடப் பெற்ற செய்தி தனது கவனத்திற்குக் கொண்டு வரப் பெறவில்லை என்றும், அவையின் நேரத்தை வீணாக்க வேண்டுமென்ற உள்நோக்கத்தோடோ அவைக்குத் தவறான தகவல் கொடுக்க வேண்டுமென்ற உள்நோக்கத்தோடோ தாம் அறிக்கை கொடுக்கவில்லை யென்றும் அமைச்சர் விளக்கம் கொடுத்துள்ளார். எனவே இதில் எந்தவிதமான உரிமைப் பிரச்னையும் எழவில்லை." .. 196—199

பக்கங்கள்.

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப்பிரச்சினைகள்—தொடர்ச்சி.

'மாலை முரசு' நாளேடு மீது—

'மாலை முரசு' பத்திரிகையில் ஓர் அமைச்சர் வெளியிட்டதாக செய்தியைப் போட்டு, இன்னொரு அமைச்சர் படத்தைப் போட்டிருப்பது, மக்களிடையே தவறான கருத்தை உண்டாக்குவதாகும் என ஓர் உறுப்பினர் 1977, ஆகஸ்டு 10 ஆம் நாள் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்தார். அதன்மீது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :—

"கவனமற்ற முறையிலே பத்திரிகைகள் படங்களைப் பிரசுரிக்கக் கூடாது. எதிர்க் கட்சித் தலைவர் சொன்னதைப் போல இதை அந்தப் பத்திரிகையின் கவனத்திற்கு கொண்டு வந்து எதிர்காலத்திலே இப்படிக் கவனமற்ற முறையிலே பிரசுரிக்கக் கூடாது என்பதைத் தெரிவிக்கிறேன். பத்திரிகைகள் எல்லாம் படங்களைப் போடுவதிலும், கருத்துக்களைத் தெரிவிப்பதிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்". .. 204

ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்—

குடியிருப்புகள்—

குடிசை மாற்று வாரிய குடியிருப்புக்களை தொழிலாளர் நல அமைச்சர் பார்வையிட்டதன் விளைவாக, அங்குள்ள, 200 குடும்பங்கள் முன்னறிவிப்புக்கூட இன்றி வெளியேற்றப்பட்டிருப்பது குறித்து—

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப் பெற்றது. .. 212



பக்கங்கள்.

த—தொடர்ச்சி,

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

விபத்துக்கள்:—தொடர்ச்சி.

உளுந்தூர்பேட்டை அருகில், லாரி விபத்தில் 12 பேர்கள் மரணமடைந்ததும், பலர் படுகாயம் அடைந்ததும் குறித்து.

அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது. .. 25—28

சென்னை, அம்பத்தூர், காமராஜ் நகரில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து.—

அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப் பெற்றது .. 207

சென்னை, இராயபுரம் காசிமேடு பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தினால் பல குடும்பங்கள் பாதிக்கப் பட்டுள்ளது குறித்து—.

அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப் பெற்றது .. 22—23, 25

ஒழுங்குப் பிரச்சினைகள்—

ஆய்வுரையிலுள்ள அச்சுப்பிழை—

ஆய்வுரையில் ஏற்பட்ட அச்சுப்பிழையைப் பெரிதாக்கிக் கொள்ளாமல் பகுத்தறிவைப் பயன் படுத்தித்திருத்திக் கொள்ள வேண்டும். .. 368, 369

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்-குடிப்புரைகளும்—தொடர்ச்சி

ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெறும் பொருள் குறித்து—

8-8-1977-ம் தேதி 'சிகப்பு நாடா' என்னும் தினசரியில் பேரவைத் தலைவருக்கு மாசு கற்பிக்கும் விதத்தில் வெளியிடப் பெற்றுள்ள செய்தி அவையின் உரிமையைப் பாதிப்பதாக உள்ளதால் அதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி விசாரிக்க வேண்டும் என 1977, ஆகஸ்டு 9-ம் நாள் மாண்புமிகு அவை முன்னவர் முன்மொழிந்த தீர்மானம் நிறைவேற்றப் பெற்றவுடன், அப்பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளது என்ன என அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்னை ஒன்றை எழுப்பினார். அதற்குத் தலைவர் தீர்ப்பளிக்கையில் குறிப்பிட்டதாவது—

"8-ம் தேதி பத்திரிகையில் வந்திருக்கிறது, உரிமைக் குழு பரிசீலித்து முடிவு சொல்லும்." .. 19—21

ஒரு பொருள் குறித்து உறுப்பினர் கொடுத்த அறிவிப்புகளை எடுத்துக்கொள்ளாமல் அதே பொருள் குறித்து அமைச்சரை அறிக்கை அளிக்க அனுமதித்தது—

ஒரு பொருள் குறித்து விதி 82-ன்கீழ் அமைச்சர் அறிக்கை அளித்தவுடன், சில உறுப்பினர்கள் அதே பொருள் குறித்து விதி 57, 42 ஆகிய வற்றின்கீழ் தாங்கள் கொடுத்திருந்த அறிவிப்புகள், மானியத்தின்கீழ் விவாதிக்கப் பெறலாம் என்பதாக முன்னர் திருப்பப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்தபோது தலைவர்—



த—தொடர்ச்சி

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

"அன்றைக்குக் கொண்டுவந்த நேரத்தில் அதை அவசரமாக எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம், நிர்ப்பந்தம் இல்லை என்ற காரணத்தால் திருப்பப்பட்டது. உறுப்பினர்களுடைய அறிவிப்புகள் திருப்பிவிடப்பட்டதால் உறுப்பினர்களுடைய உரிமைகள் எதுவும் பறிக்கப்பட்டு விடவில்லை. இன்றைக்கு மானியம் விவாதத்திற்கு வர இருப்பதால், அமைச்சர் அறிக்கை உறுப்பினர்களுக்கு உதவியாக இருக்கும் என்றே அனுமதிக்கப் பெற்றது" எனத் தீர்ப்புரைத்தார் .. 358—359

தலைவர் தீர்ப்புக்குப்பின் எழுப்பக்கூடாது—

பிரச்னை ஒன்றின்மீது தலைவர் தீர்ப்புரைத்த பிறகு அப்பிரச்னை குறித்த ஒழுங்குப் பிரச்னைகளை எழுப்புதல் கூடாது. .. 201

கவன ஈர்ப்புகள்

எடுத்துக் கொள்ளுதல்—

கவன ஈர்ப்புத் தீர்மானம் விரைவில் எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென ஓர் உறுப்பினர் வலியுறுத்தியபோது, "அத்தனை அமைச்சர்களுக்கும் நேர்முகக் கடிதங்கள் எழுதப்பட்டிருப்பதாகவும், எவ்வளவு துரிதமாக அவர்களால் பதில் தர முடியுமோ, அவ்வளவு துரிதமாகத் தர வேண்டுமென்று தாம் கேட்டுக் கொண்டிருப்பதாகவும், பதில் வந்தவுடன் எடுத்துக் கொள்ளப் பெறும்", என்றும் குறிப்புரைத்தார். .. 363

ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அமைச்சர் அறிக்கை அளித்த பின்பு, அதேபொருள் பற்றி அறிவிப்புக் கொடுத்திருப்பதால் விளக்கம் கேட்க தாமும் விரும்புவதாக இன்னொரு உறுப்பினர் தெரிவித்தபோது, தலைவர் அவரை அனுமதித்து அவர் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பெறுமென அறிவித்தார் .. 628

பக்கங்கள்.

த—தொடர்ச்சி

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்—தொடர்ச்சி.


குழுக்கள்—

தலைவர் நியமனம் குறித்த மரபு.—

பொதுக் கணக்குக் குழுத் தலைவராக எதிர்க் கட்சித் தலைவர் வருவதுதான் மரபு என்றும் அம்மரபு மாற்றப்பெற காரணம் என்ன என்றும் ஒரு உறுப்பினர் வினவியபோது, தலைவர், "குழுத் தலைவர் நியமனத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் நியமனப் பத்திரமே தாக்கல் செய்யாத நிலையில், குழு உறுப்பினர்களில் ஒருவரையே தலைவராக நியமிக்கும் அதிகாரம் தலைவருக்கு இருக்கிறது" என்று குறிப்புரைத்தார் .. 624

தகவல் கோரல்—

உரிமைப் பிரச்னை—எடுத்துக் கொள்ளுதல்.—

உரிமைப் பிரச்னையைக் கொடுத்த உறுப்பினர் அதை எடுத்துக் கொள்ளும் நேரத்தில் தனது இருக்கையில் இருக்க வேண்டும் .. 42

உறுப்பினர்கள் கூறியதில் ஏதாவது கருத்துக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அதைத் தெரிந்து கொள்ளலாமே தவிர புதிய கருத்தை தெரிந்து கொள்ள விரும்புவது பாயின்ட் ஆப் இன்பர்மேஷனில் வராது .. 89

முன் அனுமதியின்றி திடீரென்று கேட்கக் கூடாது.

ஒரு பிரச்னையை எழுப்ப திடீரென்று தலைவரின் அனுமதியைக் கோரவோ, அரசுத் தரப்பில் தயாராக இல்லாத நிலையில் திடீரென்று ஒரு பிரச்னையைக் கிளப்பவோ கூடாது .. 32—36




பக்கங்கள்.

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.


நடைமுறைகள்—

உரிமைப் பிரச்சினை—

உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டுவரும் உறுப்பினர்கள் மட்டுமின்றி, அனைத்துக்கட்சித் தலைவர்களுக்கும் தலைவர் தீர்ப்பு அளிப்பதற்கு முன், பேச சந்தர்ப்பம் அளிக்கப்பெற வேண்டும் என்கிற கோரிக்கை எழுந்தபோது, தலைவரளித்த குறிப்புரையாவது :—

"எல்லா உறுப்பினர்களும் பங்கு பெற்றுத்தான் ஆக வேண்டுமென்று இல்லை. அப்படி விதிமுறைகளில் இல்லாவிட்டாலும் அது மரபாக இருந்து வந்திருக்கிறது. மானியக் கோரிக்கை விவாதத்திற்கு நேரம் தேவை என்ற காரணத்தால் அதையொட்டி ஒருவர் இருவரை மட்டும் பேசச் சொல்லுகிறோம்" .. 201

ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்—பேசும் வாய்ப்பு.

ஒத்தி வைப்புத் தீர்மானங்களை விளக்கும் வாய்ப்பு, சம்பந்தப்பட்ட தொகுதி உறுப்பினருக்கு மட்டும் கொடுக்கப் பெற்றதை ஆட்சேபித்த கட்சித் தலைவர்கள், தீர்மானம் கொடுத்த உறுப்பினர்களில் கட்சிக்கு ஒருவர் பேச வாய்ப்பளிக்க வேண்டுமென்று விடுத்த வேண்டுகோளைத் தலைவர் ஏற்றார் .. 29

விவாதம்—

அதிகாரிகளின் பெயரைக் கூறுதல் கூடாது—

அதிகாரிகள் பதில் சொல்ல வாய்ப்பில்லாததால் அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டுப் பேசக்கூடாது. குற்றச்சாட்டு இருந்தால் உரிய அமைச்சரிடம் சொல்லலாம் .. 414

பக்கங்கள்.

## த—தொடர்ச்சி

## தலைவர்—தொடர்ச்சி.

## தீர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

## விவாதம்—தொடர்ச்சி.


அரை மணி விவாதம்

சுந்தரம்-கிளேட்டன் தொழிற்சாலை திறக்கப் படுவது பற்றிய பிரச்னை குறித்து மேலவையில் அரை மணி நேர விவாதத்திற்கு அனுமதி யளிக்கப்பட்டிருக்கிறபோது பேரவையிலும் நேரம் ஒதுக்கப்பட வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் கேட்டார்.

''தொழிலாளர் நல மானியம் பற்றிப் பேசுவ தற்கு மேலவையில் இல்லாத சந்தர்ப்பம், பேரவையில் இருக்கிறது'' என்று தலைவர் குறிப்புரைத்தார். .. 360

உறுப்பினர் பேசும்பொழுது பேரவைத் தலைவ ரைப் பார்த்துப் பேச வேண்டும். .. 426

குறுக்கீடுகள்—

அமைச்சர் பதிலுரையின்போது புதுக் கருத்தாக இருந்தால் அது குறித்துக் கேட்கலாம் .. 476

குற்றச்சாட்டுகள்—

செய்தித்தாளை ஆதாரமாக வைத்து குற்றச் சாட்டை எழுப்பும் பொழுது செய்தித்தாளின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் .. 375

தலைவரின் தீர்ப்புக்குப் பின் ஒழுங்குப் பிரச்னையோ, விமரிசனமோ, விவாதமோ எழுப்புதல் கூடாது.

ஒழுங்குப்பிரச்னை என்று சொல்லி தலைவரின் தீர்ப்பின்மீது பேசக் கூடாது. தீர்ப்பை ஏற்றுக் கொள்வதுதான் மரபு. தீர்ப்பின் மீது கருத்து மாறுபாடு இருந்தாலும் தீர்ப்பைப் பற்றி விமர்சிக்கக் கூடாது. .. 213—214




பக்கங்கள்.

## த—தொடர்ச்சி

## தலைவர்—தொடர்ச்சி.

## தீர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

## விவாதம்—தொடர்ச்சி.


தனிப்பட்டவர்களைப்பற்றிக் குறிப்பு—

தனிப்பட்ட நபரின் பெயரைக் குறிப்பிட்டோ அவர் பற்றிய குற்றச்சாட்டுகளையோ சொல்லக் கூடாது. .. 440—441

தனிப்பட்டவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டி யதில்லை. .. 728

பதில் கூறும்படி அமைச்சரைக் கட்டாயப்படுத்த முடியாது.—

உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் எல்லாவற்றிற்கும் அமைச்சர் பதில் சொல்ல வேண்டுமென்று நிர்ப்பந்தம் இல்லை. பதில் கூறும்படி அமைச்சர்களைத் தலைவர் நிர்ப்பந் திக்க முடியாது, .. 289-290

பேசும் உரிமை—

அனுமதியில்லாமல் எழுந்து பேசக் கூடாது. அனுமதி பெற்று உறுப்பினர்கள் எழுந்து பேச வேண்டும் .. 202

பொது—

உறுப்பினரொருவர் எழுப்பிய பிரச்னையொன் றிற்குக் கேட்ட விளக்கத்திற்குத் தலைவர் பதிலுரைக்குமுன் மற்றோர் உறுப்பினர் இன்னொரு பிரச்னையை எழுப்புவது முறையா வெனக் கேட்கப் பெற்ற போது நடை முறையை நன்கு புரிந்து கொண்டு பிரச்னைகளைக் கிளப்ப வேண்டுமென்றும், ஒழுங்குப் பிரச்னை யானாலும் விளக்கமானாலும் எதுவானாலும் அனுமதி பெற்றுப் பேசுவது நலமாக இருக்கும் என்றும் தீர்ப்புரைக்கப்பெற்றது. .. 37—38

மூன்றாவது மணி அடிக்கும் பொழுது உறுப்பி னர்கள் உட்கார்ந்துவிட வேண்டும். .. 88

மேலவையினுடைய நடவடிக்கைகளைக் குறிப் பிட்டுப் பேசுதல் கூடாது. .. 193—195

பக்கங்கள்.

த—தொடர்ச்சி.

தலைவர் தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

மொழி—

ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு ஆங்கிலத்தில் அமைச்சர் பதில் அளித்தது குறித்து பிரச்னை யெழுந்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :—

"ஆங்கிலத்திலும் படிக்கலாம் என்று விதி இருந்தாலும், தமிழ்த் தெரிந்தவர்கள் தமிழிலே எல்லா நடவடிக்கைகளிலும் பங்கு கொள்ள வேண்டும்." .. 212

விளக்கம் கோருதல்—

அமைச்சரின் அறிக்கைக்குப் பிறகு உறுப்பினர் சுருக்கமாக விளக்கம் கேட்க வேண்டும் .. 627, 362

அமைச்சரின் பதிலுரைக்குப்பின் விளக்கம் கேட்பதற்குள்ள உரிமை எல்லோருக்கும் இருக்கிறது என்றாலும் அத்தனைபேரையும் பேசுவதற்கு அனுமதிக்க முடியாது .. 477, 478

தீர்மானம் கொடுத்தவர்தான் விளக்கம் கேட்க வேண்டும், வேறொரு உறுப்பினர் கேட்க முடியாது. .. 42

வினாக்கள்—விடைகள்

துணை வினாக்கள்—

அமைச்சர் துணைக் கேள்விக்குப் பதில் சேகரிக்காத ஒன்றை எழுப்புவது நல்லது இல்லை .. 8—9

உறுப்பினரொருவர் தம் துணை வினாவில் குற்றச்சாட்டொன்றைக் கூறியபோது, கேள்வி கேட்கும் போது குற்றச்சாட்டு கூறுவதும்; முற்றிலும் புதிதான விஷயத்தைப் பற்றி எழுப்புவதும் முறையாகாதென ஓர் அமைச்சர் வினவிய போது, கேள்வி நேரத்தில் பதில் சொல்ல முடியாத நிலையில் பிரச்னை இருக்கிறது என்று தீர்ப்புரைத்த தலைவர், கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார் :—

பக்கங்கள்

த—தொடர்ச்சி

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி.

'பொறுப்பேற்கிற வகையில் இருந்தால்தான் இந்த அவையிலே குற்றச்சாட்டை அனுமதிக்க முடியும். அதே நேரத்தில் தனக்கு முன்கூட்டியே இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்லி எழுப்பலாம்'' .. 9

சுருக்கமாக இருத்தல் வேண்டும். .. 6, 15, 348

தமிழில் கேள்வி போட்டால் எல்லோரும் தெரிந்து கொள்வதற்கு நலமாக இருக்கும் .. 352

யாசனை கூறுதல் கூடாது .. 346

ருவேங்கடம், திரு. பெ. சு.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 216

மீனளம்
கூட்டுறவு } 635

ானங்கள்—

தீ விபத்து, சென்னை இராயபுரம் காசிமேடு பகுதி (ஒ.தீ.) .. .. 21—25

லாரி விபத்து, உளுந்தூர்பேட்டை அருகில் (ஒ.தீ.) 25—27

பேரவைத்தலைவர் பதவிக்கும், அவைக்கும் மாசு கற்பிக்கும் விதத்தில் 'சிவப்பு நாடா'-வில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது குறித்து. (உ.தீ.) 19—20

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

தீர்மானங்கள்—தொடர்ச்சி.


விபத்து, அம்பத்தூர், காமராஜ் நகர் (சென்னை) (ஒ.தீ.) 205—207

துரை கோவிந்தராசன், திரு.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 250—254

துரை முத்துசாமி, திரு.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

உணவுப்பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச் செலவு } 83—86

லாரி விபத்து, உளுந்தூர்பேட்டை அருகில் (ஒ.தீ) 25— 26

துரைமுருகன், திரு.—

வரவு—செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்
வீட்டு வசதி
நகர்பகுதி வளர்ச்சி } 415—419

துலுக்காணம், திரு. வ. —

லாரி விபத்து, உளுந்தூர்பேட்டை அருகில் (ஒ.தீ.) .. 26

தொழில் நிறுவனங்கள்

சுந்தரம் கிளேட்டன் தொழிற்சாலை மீண்டும் திறப்பது குறித்து (அ) .. 356—357




பக்கங்கள்.

ந


நடராசன், திரு. எஸ்.—

தீ விபத்து, ஒரத்த நாடு (க.ஈ.) .. .. 632, 633

வரவு—செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்
வீட்டுவசதி
நகர்பகுதி வளர்ச்சி } 426—429

நாச்சிமுத்து. திரு. க.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

உணவுப்பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச்செலவு } 70—73

நிதி அலுவல்—

வரவு—செலவுத்திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

உணவுப்பொருள் வழங்கல் 44—79
பல்வகை மூலதனச் செலவு 83—125

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 215—291

மீனளம்
கூட்டுறவு } 634—736

நீக்கம்.. .. .. 33, 411, 413, 425, 440,

நீர்பாசனம்:—

இறைவைப் பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு. 1


ப


பண்ணை சேதுராம், திரு.கே.—

''மாலைமுரசு'' பத்திரிகை, ஒரு அமைச்சரின் செய்தியையும் இன்னொரு அமைச்சரின் படத்தையும் போட்டது குறித்து. (உ.பி.) .. 203

## ந—தொடர்ச்சி


பக்கங்க

**பண்ணை சேதுராம், திரு. கே.—தொடர்ச்சி**

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 269—271

**பரமசிவன், திரு. அ. மா.—**

விவசாயிகள், பெரியாறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடப்படாததால் மேலூர் தொகுதியில் பாதிப்பு (க.ஈ.) .. 41

**பல்கலைக்கழகங்கள்—**

மதுரை, ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல் .. 356

**பழனிசாமி, திரு. சொ. ந.—**

வரவு—செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச்செலவு } 268

**பழனிமுத்து, திரு. சி.—**

லாரி விபத்து, உளுந்தூர்பேட்டை அருகில் (ஒ.தீ.) 25—26

**பாலங்கள்—**

குசஸ்தலை ஆறு, பாலம் அமைத்தல் .. .. 13—14

**பாலன், திரு. சு.—**

வரவு—செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

உணவுப்பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச் செலவு } 43

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்
வீட்டுவசதி
நகர்பகுதி வளர்ச்சி } 264, 366





பக்கங்கள்.

## ப—தொடர்ச்சி.

**பாலுச்சாமி, திரு. அ.—**

வரவு-செலவுத்திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்
வீட்டு வசதி
நகர்பகுதி வளர்ச்சி } 406—408

**புஷ்பராஜூ, திரு. த.—**

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 257—260

**பூங்கா(க்கள்).—**

கிண்டி (அரசினர்), தேசியப் பூங்காவாக்குதல் .. 184

**பெரியசாமி, திரு. டி. பி. மு.—**

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 248—250

**பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** .. .. 125—126
293,
480—482
736—737

**பொன்னுரங்கம், திரு. ப.—**

தீ விபத்து, சென்னை, இராயபுரம், காசிமேடு பகுதி (ஒ.தீ.) .. .. .. .. 22—24

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

மீனளம்
கூட்டுறவு } 675, 7
714—715

**பொன்னையன் திரு. சி.—**

விவசாயிகள் போராட்டம், அரசின் வேண்டுகோள் 452—455

ப—தொடர்ச்சி.


பக்கங்கள்.

**போக்குவரத்து—**

சென்னை-திருத்தணி வழித்தடம், நீட்டித்தல் .. 191—192

சென்னை - நாகப்பட்டினம் பேருந்து, பயண நேரத்தை குறைத்தல் .. .. .. .. 352—356

ம

**மணிமாறன், திரு. ஆர்.—**

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் }
வீட்டு வசதி } 385—388
நகர்பகுதி வளர்ச்சி }

**மணிமாறன், திரு. மா.—**

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளை எடுத்துக் கொள்ளுதல் (த. கோ.) .. 19.

காவிரிப் பாசனப் பகுதிகளில் தண்ணீர் முறை வைத்து விடுவதால் கீழ்த்தஞ்சை மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து (க.ஈ.) 361—363

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

மீனளம் }
கூட்டுறவு .. .. .. .. } 685

**மனோகரன், திரு. கி.—**

கன்னியாகுமரி மாவட்டத்தை மீண்டும் கேரளத்தோடு இணைப்பது குறித்து கேரள சட்டமன்றத்தில் எழுப்பப்பட்ட பிரச்னை குறித்து (த. கோ.) .. .. 33—34

தீ விபத்து, அம்பத்தூர், காமராஜ் நகர் (சென்னை) (ஒ.தீ.). 206—207

தீ விபத்து, ஒரத்தநாடு (க.ஈ.) .. .. 631—633

தீ விபத்து, சென்னை, இராயபுரம், காசிமேடு பகுதி (ஒ.தீ.) 24—25





பக்கங்கள்.

ம—தொடர்ச்சி.

**மனோகரன், திரு. கி.—தொடர்ச்சி.**

பேரவைத் தலைவர் பதவிக்கும், அவைக்கும் மாசு கற்பிக்கும் விதத்தில் 'சிவப்பு நாடா'-வில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது குறித்து (உ.தீ) .. 19—20

மூன்றுவது சம்பளக் குழு உறுப்பினர்கள் நியமனம், பணிகள் குறித்து (அ) .. .. 30—32

லாரி விபத்து, உளுந்தூர்பேட்டை அருகில் (ஒ.தீ) .. 26—27

வரவு-செலவுத் திட்டம், 1977-78 - வாக்கெடுப்பு:

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் .. }
வீட்டு வசதி .. } 440
நகர்பகுதி வளர்ச்சி .. .. }

**மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.—**

இளைஞர் அணி, வேலை இழந்தவர்கள் போராட்டம் 346—352

கைத்தறித் துணிகள் தேக்கம் காரணமாக எமனேஸ்வரம் பகுதியில் நெசவாளர்கள் வேலையற்றிருக்கும் நிலை (க. ஈ.) .. .. .. .. 39—40

மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு நேரம் ஒதுக்குவது குறித்து (ஒ.பி.) .. .. .. 79—80

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :

உணவுப்பொருள் வழங்கல் }
பல்வகை மூலதனச்செலவு .. .. } 54—59

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் }
வீட்டுவசதி .. .. .. } 381—384
நகர்பகுதி வளர்ச்சி .. .. .. }

மீனளம் .. .. .. .. .. }
கூட்டுறவு .. .. .. .. .. } 710

**மார்க்கபந்து, திரு. ரா.—**

தீ விபத்து, ஒரத்தநாடு (க.ஈ.) .. .. .. 633

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் .. }
வீட்டு வசதி .. .. .. .. .. } 366, 367
நகர்பகுதி வளர்ச்சி .. .. .. .. } 401—406

ம—தொடர்ச்சி.


மார்க்கபந்து, திரு. ரா—தொடர்ச்சி.

பால் வழங்கு திட்டங்கள் .. } 216, 217,
வேளாண்மை .. }
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. } 254—257

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

மீனளம் .. .. .. .. .. }
கூட்டுறவு .. .. .. .. .. } 635

மிருகக் காட்சிசாலை—

சென்னை, வேறு இடத்திற்கு மாற்றுதல் .. 184—191

மின்சாரம்—

நீர் மின்சாரத் திட்டம், ஒகேனக்கல் .. .. 6·1

மின் இணைப்பு, நெல்லிக்குப்பத்திற்குத் தராமை .. 625—631

மீனாட்சிசுந்தரம், திரு. மா.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள் .. .. .. }
வேளாண்மை .. .. .. } 264—267
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. }

முத்தையா, திரு. இரா.

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

மீனளம் }
கூட்டுறவு .. .. .. .. .. } 687, 689, 692

முருகேசன், திரு. சு. த.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள் .. }
வேளாண்மை .. .. .. } 236—239
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. }






ர


ரகுமான்கான், திரு. அ.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

மீனளம் .. .. .. .. .. }
கூட்டுறவு .. .. .. .. .. } 688, 691

ரமணி, திரு. கு.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் }
வீட்டு வசதி .. .. .. .. } 388—398
நகர்ப்பகுதி வளர்ச்சி .. .. .. .. }

ராமதாஸ், திரு. பி.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள் .. .. .. }
வேளாண்மை .. .. .. .. .. } 260—261
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. }


ரா.


ராமநாதன், திரு. சி.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

மீனளம் .. .. .. .. .. }
கூட்டுறவு .. .. .. .. .. } 697

ராஜு, திரு. செ. மெ.—

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

மீனளம் .. .. .. .. }
கூட்டுறவு .. .. .. .. } 680

ரஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டைமான், திரு.—

குண்டம்பாச்சி ஆற்றில் அணை, கொடைக்கானல் 183—184

ல


பக்கங்கள்.

**லத்தீப், திரு. எம். ஏ.—**

தீ விபத்து, சென்னை இராயபுரம் காசிமேடு பகுதி (ஓ.தீ.) .. .. .. .. 22

மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு நேரம் ஒதுக்குவது குறித்து (ஒ.பி.) .. .. 80—81

லாரி விபத்து, உளுந்தூர்பேட்டை அருகில் (ஓ.தீ.) 25—26

வரவு-செலவுத் திட்டம், 1977-78-வாக்கெடுப்பு:

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்<br>வீட்டு வசதி .. .. .. .. ..<br>நகர்பகுதி வளர்ச்சி .. .. .. .. } 419—422

வ

**வடிவேல் திரு. கு.—**

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு :

மீனளம் .. .. .. .. ..<br>கூட்டுறவு .. .. .. .. .. } 695, 697

**வரதராஜன், திரு. என்.—**

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்<br>வீட்டு வசதி .. .. .. .. ..<br>நகர்பகுதி வளர்ச்சி .. .. .. .. } 366, 427—432

**வரதராஜன், திரு. சௌ. வே.—**

வரவு-செலவுத் திட்டம், 1977-78 வாக்கெடுப்பு:

தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்<br>வீட்டு வசதி .. .. .. .. ..<br>நகர்பகுதி வளர்ச்சி .. .. .. .. } 379—381





பக்கங்கள்.

வ—தொடர்ச்சி.

**வரதராஜன், திரு. சௌ. வே.—தொடர்ச்சி.**

**விவசாயம்—**

கடன்கள், திருப்பி வசூலித்தல் .. .. .. .. 1—9

கரும்பிற்கான விலை .. .. .. .. 14—19

விவசாய சங்கத்தினர் மேற்கொள்ள இருக்கும் போராட்டங்களை கைவிடக் கோருதல் (அ) 452—455

விவசாயிகள், பெரியாறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடப்படாததால் மேலூர் தொகுதியில் பாதிப்பு (க.ஈ.) .. .. .. .. 41

வி

**வின்சென்ட், திரு. எம்.—**

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு:

உணவுப்பொருள் வழங்கல் .. .. ..<br>பல்வகை மூலதனச் செலவு .. .. .. } 101—103

**வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.**

வரவு-செலவுத் திட்டம், 1977—78, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள் .. .. ..<br>வேளாண்மை .. .. .. ..<br>வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. } 217, 229—233, 290

ஜ

**ஜேம்ஸ், திரு. ஜே.—**

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அனுமதிக்கப்படாமை குறித்து (ஒ.பி.) .. .. .. .. 358—361

கன்னியாகுமரி மாவட்டத்தை மீண்டும் கேரளத்தோடு இணைப்பது குறித்து கேரள சட்டமன்றத்தில் எழுப்பப்பட்ட பிரச்னை குறித்து (த. கோ.) .. .. .. .. .. 32, 33, 34, 35, 38

சுந்தரம்-கிளேட்டன் தொழிற்சாலை, பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையையே அவைக்கு அளித்தது குறித்து (உ.பி.) .. .. .. 198—199

பக்கங்கள்.

ஜ—தொடர்ச்சி.

ஜேம்ஸ், திரு. ஜே. —தொடர்ச்சி.

தீ விபத்து, சென்னை இராயபுரம் காசிமேடு பகுதி (ஒ.தீ) .. .. .. .. 22

லாரி விபத்து, உளுந்தூர்பேட்டை அருகில் (ஒ.தீ) 25—26

வரவு-செலவுத் திட்டம், 1977-78, வாக்கெடுப்பு
உணவுப்பொருள் வழங்கல் .. .. .. } 45
பல்வகை மூலதனச்செலவு .. .. .. } 66—7

வரவு—செலவுத் திட்டம், 1977-78-வாக்கெடுப்பு :
தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் வீட்டு வசதி .. .. .. .. }
நகர்ப்பகுதி வளர்ச்சி .. .. .. .. } 364, 365, 432—437

பால் வழங்கு திட்டங்கள் .. .. }
வேளாண்மை .. .. .. .. } 21
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. }



## செவ்வாய்க்கிழமை, 1977 ஆகஸ்ட் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்,

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, சனிக்கிழமை அன்று நான்கு கேள்விகள், திங்கட்கிழமை எடுத்துக் கொள்வதாக ஒத்திவைக்கப் பெற்றன. நேற்று அவற்றில் இரண்டு கேள்விகள்தான் எடுத்துக்கொள்ளப்பெற்றன. வினாக்கள் எண் 29-ம், 30-ம் எடுத்துக்கொள்ளப்பெறவில்லை. அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த இரண்டு கேள்விகளும் கல்வி அமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டியவை. அவர் மகாநாட்டிற்குச் சென்றிருப்பதால் ஊரில் இல்லை. வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்பெறும்.

இன்றைய வினாப் பட்டியலில் உள்ள வினா எண் 36, முதலமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க, நாளைக்கு ஒத்தி வைக்கப்பெறுகிறது.

### இறைவைப் பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு

*37 வினா—: திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் இறைவைப் பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க தடை விதிக்கப்பட்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

### கடன்களைத் திரும்ப வசூலித்தல்.

*38 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —?

தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கடன்களை திருப்பி வசூலிப்பதில் விவசாயிகளிடம் அதிகாரிகளின் கெடுபிடிகள் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளனவா ?

[1977 ஆகஸ்ட் 9

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள சில கூட்டுறவு நாணயச் சங்கங்களின் அங்கத்தினர்களிடமிருந்து கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதில் கடுமையான நடவடிக்கை எடுப்பதாக அரசுக்குப் புகார்கள் வந்தன. ஆனால் விசாரித்ததில் இந்தப் புகார்களில் உண்மையில்லை என்று தெரியவந்தது. இருப்பினும் கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்வதில் தொந்தரவுகள் தவிர்க்கப்பட வேண்டுமென்று கண்டிப்பான உத்தரவுகள் இடப்பட்டுள்ளன.

திரு. என். கிட்டப்பா : அண்மையில் ஒரு சட்டம் இந்த மன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தனியார் கொடுத்த கடன்களை இன்னும் 6 மாதத்திற்கு வசூலிக்கக் கூடாது என்று ஒத்திவைத்திருக்கிறோம். அதுபோலவே அரசினர், மற்றும் கூட்டுறவுத் துறையினர் கொடுத்திருக்கிற கடன்களையும் ஒத்திவைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அப்படிப்பட்ட யோசனை இந்த அரசிடம் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் தருமக்கோட்டை, வள்ளூர், பாளையக்கோட்டை, பைங்காநாடு போன்ற இடங்களில் கடலைக்குக் கடன் கொடுப்பது காலதாமதமாகிவிட்டது என்று குறிப்பிட்டு இந்த ஆண்டு கொடுக்கக்கூடிய கடன் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இதனால் 60 சொஸைடிகளில் 60 ஆயிரம் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உடன் அவர்களுக்கு கடன் அளிக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மூலக் கேள்வி கடன் வசூலிப்பதைப் பற்றியது. கடன் கொடுப்பது பற்றி அல்ல.

திரு. கே. பண்ணை சேதுராம் : தி.மு.க. அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் கட்சிக் கண்ணோட்டத்துடனேயே அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வுக்கு ஓட்டுப் போட்ட பொதுமக்கள் மீதும், கழகத் தொண்டர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இதை அரசு கவனித்து தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இனிமேல் அந்தத் தவறுகளை நாம் தவிர்ப்போம்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை திருமயம் தொகுதியில் பல்வேறு இடங்களில் கடன் வசூலை கடுமையாக்கி, ஜப்தி போன்ற நடவடிக்கைகள் எடுத்து வருவது



1977 ஆகஸ்ட் 9]

குறித்து சம்பந்தப்பட்ட இலாக்கா அமைச்சருக்கு தந்தி அனுப்பியிருக்கிறார்கள். இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : கடனை வசூலிக்க ஜப்தி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது என்பது சட்ட விரோதமானது அல்ல. எனினும் கொடுக்க முடியாத சங்கட நிலையில் உள்ளவர்கள் மீது, அதுபோன்ற கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வசூலிக்க வேண்டாம் என்று இந்த அரசு அறிவித்துள்ளது.

திரு. ரா. உமாநாத் : ஜப்தி மெஷர்ஸ் எடுக்கப்படுவது குறித்து ரிப்போர்ட் வரவில்லை என்று சொன்னார்கள். நானே இரண்டு அட்டாச்மெண்டு நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். கடனை வசூலிக்கத் தகுதியுள்ளவர்கள், தகுதி இல்லாதவர்கள் என்று எப்படிப் பிரிப்பது ? தகுதி இல்லாதவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று எப்படி பாகுபாடு செய்வது ? அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது இவ்விதம் எந்தப் பாகுபாடும் செய்யவில்லை, ஆகவே பொதுவாக இன்றுள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்தப் பேரவையில், கடன்களுக்காக ஜப்தி செய்வது, அட்டாச்மெண்டு செய்வது போன்ற கடுமையான நடவடிக்கைகள் நிறுத்தப்பட உத்தரவிடுவார்களா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: கட்டாயமாக ஜப்தி செய்யக் கூடாது என்று பொதுவாக ஒரு உத்தரவைக் கொடுத்தால், கடனைத் திருப்பிக் கொடுக்க வசதியுள்ளவர்களும் அதிலிருந்து தப்பித்துக்கொள்வார்கள்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கூட்டுறவு முறையிலே தரப்படும் கடன்கள் எப்படியாவது திரும்பக் கிடைத்தால்தான் மறுபடியும் கடன் கொடுக்கலாம் என்ற பொதுவான நியதி வரவேற்கத் தக்கதுதான். ஆனால் கடனுக்காக ஜப்தி செய்யாமல் இருந்தால்தான் சமுதாயம் பாதிக்கப்படாமல் இருக்கும், விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட, அரசால் ஒத்துக்கொள்ளப்பட்ட கருத்து. இரண்டுக்கும் இடையில் ஜப்தி செய்வதற்கு முன்னால் மேலே எழுதி இயக்குனருக்கோ, அமைச்சரவர்களுக்கோ அந்தக் குறிப்பு வந்து அவர்கள் ஒத்துக்கொண்டால்தான் ஜப்தி செய்யலாம் என்று செய்யப்படுமா ? ஏனென்றால் தகுதியுடையவர்கள் யார், என்பதை நிர்ணயிப்பது மிகவும் கடினம் என்பதால் அது தலைமை அலுவலகத்திற்கோ அல்லது அமைச்சருக்கோ வந்து அனுமதி பெற்று அந்த நிலையில்தான் ஜப்தி செய்யலாம் என்ற நிலையை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, அப்படியொரு காரியத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்வது என்பது இயலாத காரியம். It is highly impossible and improbable.

[1977 ஆகஸ்ட் 9

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, தேர்தல் முடிந்தவுடனே மறுநாள் ஆண்டிப்பட்டிக்கு நான் போயிருந்தேன். நான்கு ஜீப்களில் ஏழை எளிய விவசாயிகளை விரட்டினார்கள் என்று சட்டமன்றத்தில் நான் குறிப்பிட்டேன். அந்த ஏழை விவசாயிகள் நான்காண்டுக் கால வறட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று இருந்தும்கூட, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கட்டாய ஜப்தி முறை அனுமதிக்கப்படமாட்டாது என்று அறிவித்தும் கூட, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனாவாரி சர்ட்டிபிகேட் கொடுக்காதவர்களிடம் கட்டாயமாக வசூலிக்கும் என்று அறிவிப்பு கொடுத்துவிட்டு ஏழைகளிடம், கொடுக்க இயலாத ஏழை எளிய விவசாயிகளிடமிருந்து வசூலிப்பதற்கு 'கொயர்சிவ் மெஷர்ஸ்' எடுக்கிறார்களே, இது மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அப்படி எடுக்கப்படும் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு அரசு உத்தரவு போடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, தனிப்பட்ட முறையிலே ஏதாவது இப்படிப்பட்ட நியாயத்திற்குப் புறம்பான சம்பவங்கள் நடந்து அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமேயானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, கொடுக்கப்பட்ட கடனைத் திரும்பப் பெறுவதற்காக அந்தச் சம்பந்தப்பட்ட நபர்மீது 'கொயர்சிவ் மெஷர்ஸ்' எடுக்கப்படுகிறது என்று இப்பொழுது சொல்லப்படுகிறது—அவரிடம் இருந்தோ அல்லது இன்னும் ஒரு சிலரிடமிருந்தோ திரும்பப் பெறவில்லை என்றால் அந்தப் பகுதி மக்களுக்கே அந்த சொசைட்டிகள் மூலமாகக் கொடுக்காமல் நிறுத்தப்படுகிறது. அப்படி நிறுத்தக் கூடாது என்று அரசு சொல்லியிருந்தும் அப்படிப் பெருவாரியாக நடைபெறுகிறது. எனவே, இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, இதுவரையில் அப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் எங்கே அப்படிப்பட்ட சம்பவம் நடந்தது என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால் கடன் வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகளை அரசு நிச்சயமாகச் செய்யும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : கடன் வசூலிக்கின்றபொழுது சில அதிகாரிகள் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்துவதாகத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக திருப்பத்தூர் பகுதியில் ஒரு அதிகாரி அணைக்கரைப்பட்டி



1977 ஆகஸ்ட் 9]

என்ற கிராமத்தில் ஒரு பெண்மணியிடம் மரியாதைக் குறைவாகப் பேசியதாக தந்தி வந்திருக்கிறது. அதைக் கவனித்து அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அவர்களுக்கு வந்திருக்கின்ற தந்தியை இந்த அரசுக்குக் கொடுத்தால் உடனடியாக அந்த அதிகாரியின்மீது விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நான் எழுப்பிய வினாவிற்கு விடையளிக்கின்றபொழுது, மேலே தெரிவித்து என்று சொல்கின்றபொழுது ஒன்று, அந்த இலாக்காவினுடைய இயக்குநருக்குத் தெரிவித்து அல்லது அமைச்சருக்கு அனுப்பப் பெற்று அனுமதி பெற்றபிறகு ஜப்தி நடைபெறுமா என்று கேட்டதற்கு, "It is highly impossible and improbable" என்று அமைச்சரவர்கள் சொன்னதிலிருந்து நடைபெறுவதெல்லாம் நடைபெற்ற பிறகு போஸ்ட்மார்ட்டம் விசாரணையை மட்டும்தான் இந்த அரசாங்கம் நடத்த விரும்புகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட முறையிலே வந்து நிர்வாகத்தினுடைய ஒழுங்குமுறைகளைச் சீர்திருத்தம் செய்ய ஆரம்பித்தால் மாநிலமெங்கும் இருந்து ஏராளமான புகார்கள் வந்து கொண்டேயிருக்கும். அவற்றை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் மாதக்கணக்கில் ஆனாலும் ஆகலாம். காலக் கடன்களைக் குறிப்பிட்ட காலத்தில் வசூலிப்பதற்காக இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கிறது. விசாரணைக்கு வந்து முடிவெடுப்பது என்றால் காலங்கடந்துவிடும். ஆகவே அது முடிகின்ற காரியம் அல்ல என்று நான் சொன்னேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, அரசு மற்றும் அமைச்சர்களினுடைய உணர்வுக்கும் அதிகாரிகளின் உணர்வுக்கும் பெருத்த வித்தியாசமிருக்கிறது. கடந்த மூன்றாண்டுக் காலமாகக் கடுமையான வறட்சியின் காரணமாக, விளைச்சல் இல்லாத நிலையில் இப்படிப்பட்ட ஜப்திகள் நிறைய நடைபெறுவதாக நாடு முழுவதிலும் இருந்து தகவல் வந்து கொண்டேயிருக்கின்றன. அமைச்சரவர்கள் பதிலில் உறுதியாக அப்படி நடைபெறாது என்று வாக்குறுதி கொடுக்கிறார்கள். தெருக்கூத்துகளிலே அரசன் ஒரு திரைச் சீலைக்கு முன்னால் இருந்தால் அமைச்சர்கள் அவரை காணாமலே அங்குள்ள சிப்பந்திகளை விசாரிப்பார்கள்.

[1977 ஆகஸ்ட் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வி நேரம். சுருக்கமாகக் கேள்வியைப் போடுங்கள்.

திரு. என். வரதராஜன் : நம்முடைய அமைச்சர்களை அப்படிச் சொல்லவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட நிலையில் வறுமையிலும், துன்பத்திலும் வாடுகின்ற வசதியில்லாத நபர்களைக் கொடுமைப்படுத்தி ஜப்தி செய்வதைத் தடுக்க ஸ்தலத்திலேயே தீர்மானிக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசிற்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, தங்களுடைய உணர்வுகளை, உணர்ச்சிகளைப் பல்வேறு உத்தரவுகளின் மூலமும், மன்றத்தில் பேசிய பேச்சுக்களின் மூலமாகவும் அதிகாரிகளுக்கு அரசு தெரியப்படுத்தி இருக்கிறது. அதிகாரிகளும் தங்களுடைய உணர்வுகளை, உணர்ச்சிகளை மாற்றிக் கொண்டு ஏழை மக்களுக்கு உதவி செய்யும் வகையில் தங்களுடைய நிலைமைகளைச் சீர்படுத்திக் கொள்வார்கள் என்று இந்த அரசு நம்புகிறது.

[முற்பகல் 9-10]

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அல்லது அந்த அரசால் புரமோஷன் பெற்ற, பதவி உயர்ந்த அதிகாரிகள் இன்றும் கட்சிக் கண்ணோட்டத்துடன் வசூல் செய்கிறார்கள் என்ற புகார் வந்திருக்கிறது. குறிப்பாக, காவேரிப்பட்டணம் தொகுதியிலே அதிகாரிகள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் சொத்தை ஜப்தி செய்தும் அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் மீது ஜப்தி செய்யாமலும் இருக்கிறார்கள். அந்த அதிகாரிகள்பற்றி நான் குறிப்பிட்டு கொடுத்தால் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பொதுவாக, அதிகாரிகள் எந்த அரசின்கீழ் பணியாற்றுகிறார்களோ அந்த அரசுக்கு விசுவாசமாக இருக்கவேண்டும். முன்னாலிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு அதிகாரிகள் விசுவாசமாக இருந்திருந்தாலும் இப்பொழுது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் செயல்முறைகளை நிறைவேற்றுவதில், இந்த அரசுக்கு விசுவாசமாக இருப்பார்கள் என்று நாம் நம்பலாம்.

திரு. என். கிட்டப்பா: இங்கே ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் வளர்ந்துவிட்ட அதிகாரிகள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரைத் துன்பப்படுத்துகிறார்கள் என்ற வகையிலே எடுத்துச் சொல்கிறார்கள். மாயூரம் தொகுதியைப் பொறுத்தமட்டில்,



1977 ஆகஸ்ட் 9]

பாண்டூர் வைத்தியலிங்கம்—தி. மு. கழகச் செயலாளர்—அவர் வீட்டிலே இல்லாதபொழுது அவருடைய மனைவியின் தாலிச் சங்கிலியை கைப்பற்றியிருக்கிறார்கள். அங்கே அதுபற்றி புகார் செய்யப்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? அது பற்றி மேல் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட். அப்படிப்பட்ட புகார் எதுவும் அரசுக்கு இதுவரையில் வரவில்லை. அப்படிப்பட்ட புகார்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்கு அனுப்பினால் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அதிகாரிகள் கூட்டுறவுச் சங்கக் கடன்களை ரத்து செய்ய முடியாது, வசூலை ஒத்திவைக்க முடியாது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். வசூலிக்க அதிகாரிகள் சென்றால், அவர்களையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று உறுப்பினர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். நான். திராவிட முன்னேற்றக் கழகமா, அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகமா என்று அதற்குள் நுழையவில்லை. எந்த எந்தக் கடனை வசூலிப்பது என்று அரசாங்கம் கைட் லைன்ஸ் கொடுத்திருக்கிறதா? அப்படியென்றால் அமைச்சரவர்கள் அந்த விவரத்தை வெளியிடுவார்களா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, கடன்களை ஒத்திவைக்க முடியாது என்று நான் என்னுடைய பதிலிலே சொல்லவில்லை. எல்லாக் கடன்களிலும் வசூலை ஒத்திவைக்கிற முறையை அரசாங்கம் கையாள முடியாது. தகுதி உள்ளவர்களிடம், கட்டமுடியாதவர்களிடம், கட்டாய வசூலைக் கடைப்பிடிக்க முடியாது, ஜப்தி செய்ய முடியாது, அதற்கு ஏதாவது வரம்பு வகுத்திருக்கிறீர்களா அல்லது முறை வைத்திருக்கிறீர்களா என்று கேட்கிறார்கள். அது அங்கங்கே உள்ள நிலைமைகளைப் பொறுத்து, ஏழை மக்களுக்கு உதவுகின்றவகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

திரு. ப. உ. சண்முகம்: தகுதியை அங்கங்கே இருக்கிற ஸ்தல அதிகாரிகளே நிர்ணயிக்க வேண்டுமென்பதுபோல் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அங்குதான் வருகிறது கோளாறு. என்ன தகுதி என்பதை அரசாங்கமே நிர்ணயித்து உத்தரவு அனுப்பிவிட்டால் நல்லதல்லவா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இதற்கான வரம்புகளை முந்தைய அரசுதான் நிர்ணயித்திருக்கிறது. அனாவாரி சர்டிபிகேட் வாங்க வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார்கள். 37 காசுகளுக்குக் குறைவாக உள்ள விவசாயிகளுக்கு, அந்தக் கடனை ஒத்திவைக்கவேண்டுமென்று இப்

பொழுதிருக்கிற அரசு போடவில்லை. முந்தைய அரசுதான் போட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்றுதான் இந்த அரசு கருதுகிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ! தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் கேள்வி கேட்கிறபொழுது ஒரு குறிப்பிட்ட குற்றச்சாட்டை கேள்வியிலே எழுப்பினார். அது முறையா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சமரசம் எழுப்பிய கேள்வியில் கட்சிப் பாகுபார்டு காட்டப்படுவதாக எழுப்பியதையடுத்து, திரு. கிட்டப்பா அவர்கள் தனி நபரைச் சுட்டிக்காட்டிச் சொன்னார்கள். பொதுப்படையாகக் கேட்கலாம், பெயரைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று சொல்கிறேன்.

திரு. க. அன்பழகன் : பாதிக்கப்பட்ட தனி நபருடைய பெயர் சட்டமன்றத்திலே சொல்லப்படுவது தவறல்ல. குற்றம் செய்த தனிப்பட்டவருடைய பெயரைச் சொல்வது தவறு. தீ விபத்திலே, அடிதடியிலே இன்னார் காயம் அடைந்தார் என்று சொல்வதில் தவறில்லை. இன்னார் வீட்டுப் பெண்ணின் தாலியைப் பிடித்து இழுத்தார் என்று அவர் சொல்லவில்லை. (குறுக்கீடு) பாதிக்கப்பட்டவரைப் பற்றி மட்டுமே சொல்லப்பட்டது. பாதிக்கப்பட்டவரைப் பற்றி சொல்வதே தவறு என்பது மரபல்ல. குற்றம் சாட்டுகின்றபொழுது, குற்றம் சாட்டப்படுகிறவருடைய பெயரைச் சொல்வது தவறு என்பதுதான் ஏற்றுக்கொண்ட மரபு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்டவர்களைப்பற்றி கேள்வி கேட்பதை நான் குறிப்பிடவில்லை. நான் சொல்வது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தகவலைத் தருகிறார். கடனை வசூலிப்பதற்காக கழுத்திலிருந்த தாலிச் செயினை அல்லது தாலியைக் கைப்பற்றினார்கள் என்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்களிடம் அவற்றிற்கான ஆதாரங்கள், பதில் இருப்பதிலேதான் துணைக் கேள்விகள் அனுமதிக்கப்படுவது மரபு. முற்றிலும் புதிதான விஷயத்தைப் பற்றி, அதே நேரத்தில் அதைப்பற்றி ஒரு துணை வினாவை எழுப்புவது முறையா என்று கேட்க விரும்புகிறேன்

திரு. என். கிட்டப்பா : பாயின்ட் ஆப் ஆர்டர். அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் கூத்தகுடி சண்முகம் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஆளுங்கட்சியிலுள்ள உறுப்பினர்கள் பொத்தாம்பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லும்போது, நடைபெற்றிருக்கிற ஒன்றை, பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்ற அடிப்படையில் சொல்லியிருக்கிறேன் என்பதை தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலேயே பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்லியிருந்தால் கூட பரவாயில்லை. ஒரு தனிப்பட்டவருடைய தாலியை அறுத்து—இழுத்துக் கொண்டு போனார்கள் என்ற கேள்வியை நான் பெரிதாக எடுத்துக் கொள்ளாவிட்டாலும், அதற்கு உள்ளே போகவேண்டாம். துணைக் கேள்விக்கு, அவர்கள் பதில் சேகரிக்காத ஒன்றை எழுப்புவது நல்லது இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள் கேள்வி கேட்டபோது திராவிட முன்னேற்றக் கழக அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் ஆளுங்கட்சியினரிடத்தில் கடன் வசூலிப்பதிலே கடுமை காட்டுகிறார்கள் என்றும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரிடத்திலே அப்படிப்பட்ட கடுமை காட்டப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். அதற்கு ஒரு விவரமான பதிலையும் அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். அதையொட்டித்தான் கிட்டப்பா அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களிடத்திலேயும் கடுமையான முறையில் கடன் வசூலிக்கப்பட்டது என்று தெரிவித்தார்கள். இதற்கும் அமைச்சர் அவர்கள் விவரமான பதிலை அளித்து அதற்கான ஆதாரம் தரப்படுமானால் விசாரிக்கிறேன் என்று அவர்கள் பொறுப்போடு பதில் அளித்தார்கள். இந்த நிலையில் இது எப்படி ஒழுங்குப் பிரச்சினையாக வரும் என்று தெரியவில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : என்னுடைய ஒழுங்குப் பிரச்னை இதுதான். கேள்வி நேரத்தில், கேள்வி கேட்கும்போது குற்றச்சாட்டை அனுமதிக்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொறுப்பேற்கிற வகையில் இருந்தால்தான் இந்த அவையிலே குற்றச்சாட்டை அனுமதிக்க முடியும். அதே நேரத்திலே எனக்கு முன் கூட்டியே இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது, அதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்லி எழுப்பலாம். கேள்வி நேரத்தில் பதில் சொல்ல முடியாத நிலையில் இந்தப் பிரச்சினை இருக்கிறது என்று சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் சொல்கிறபோது, எனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது, இது தந்தியிலே வந்திருக்கிற தகவல் என்று சொன்னேன். அவசியமானால் அந்தக் கேள்விக்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். ஒருவரையே சாட்சி சொல்லச் சொல்கிறேன். நான் பெயரைக் கூடக் குறிப்பிடவில்லை. இதை உதாரணமாகக் காட்டவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1977 ஆகஸ்ட் 9

இருபது அம்சத் திட்ட விளம்பரத்திற்கான செலவு.

*39 வினா— திரு. எ. சுவாமிதாஸ்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) அவசரகால நிலையின்போது இருபது அம்சத் திட்ட பிரசாரத்திற்கென்று கன்னியாகுமரி கூட்டுறவு மத்திய வங்கி எவ்வளவு தொகை செலவிட்டது? எவ்வெவ்வழிகளில் செலவிடப்பட்டது?

(ஆ) அதனால் விளைந்த நன்மைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) அவசரகால நிலையின்போது 20 அம்சத் திட்ட பிரசாரத்திற்கென்று கன்னியாகுமரி கூட்டுறவு மத்திய வங்கி ரூ. 1,203.89 செலவிட்டது. இது பெரும்பாலும் மத்திய வங்கியின் பல செயல்முறைத் திட்டங்களை விளக்கும் வகையில் நடத்தப்பட்ட விழாக்களில் பிரசாரத்திற்காகவும், விளம்பரத்திற்காகவும் செலவிடப்பட்டது.

(ஆ) இதனால் மேற்படி வங்கியின் நிதிநிலையும், கடன் வழங்கும் அளவும் கணிசமாக உயர்ந்துள்ளது.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே அவசரகால நிலையின்போது கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி 20 அம்சத் திட்ட பிரச்சாரத்திற்காகச் செலவிட்ட தொகையைச் சொன்னார்கள். எனக்குக் கிடைத்திருக்கிறதகவல்படி இங்கே அமைச்சர் அவர்கள் கொடுத்த தொகை மிகக் குறைவாகக் காணப்படுகிறது. அதுமட்டும் அல்ல, வீண் விரயம் பலவழிகளிலே செலவிடப்பட்டிருக்கிறது ஆகவே, இதுகுறித்து தீவிரமாகக் கண்டறிய, உயர் மட்டத்திலே உள்ள அதிகாரியைப் போட்டு விசாரணை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, வந்திருக்கிற தகவல்படி ரூ. 1,203.89 பைசாதான் செலவிடப்பட்டுள்ளது. அதிகமான தொகை செலவிடப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்களே தவிர, குறிப்பாக இவ்வளவு தொகை செலவிடப்பட்டது என்று சொல்லவில்லை. குறிப்பிட்ட தொகையை மாண்புமிகு உறுப்பினர் தெரிந்து சொல்வார்களானால் அதுபற்றி விசாரிக்கப்படும்.

[முற்பகல் 9-20]

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, 20 அம்சத் திட்டம் முந்தைய மத்திய அரசாங்கம கொண்டு வந்த திட்டம். அந்த அரசாங்கம் போய், இன்னொரு அரசாங்கம் ஏற்பட்டு, 20-அம்சத் திட்டம் என்ற பிரச்னையே இல்லை என்று பகிரங்கமாக பிர



1977 ஆகஸ்ட் 9]

கடனம் செய்து கைவிட்டிருக்கிறார்கள். ஆகவே மாநில அரசாங்கம் இல்லாத ஒரு திட்டத்தை மேலும் தொடர்ந்து பிரசாரம் செய்வதற்கு செலவு செய்யப் போகிறார்களா? இந்தப் புதிய சூழ்நிலையில் என்ன நிலை எடுக்கப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசாங்கம் இருக்கின்ற திட்டத்தைத்தான் விளம்பரப்படுத்துமே தவிர இல்லாத திட்டத்தை விளம்பரப் படுத்தாது.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தியும், அல்லது பொது நிறுவனங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்தியும், விளம்பரம் என்ற பெயரால் பணத்தைத் திரட்டிக் கொண்டிருக்கின்ற நடவடிக்கை வளர்ந்திருக்கிறது என்ற அவச்சொல் நாட்டில் இருக்கிறது. இன்ன விளம்பரங்களைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த அரசு தன் கீழே இருக்கின்ற அமைப்புகளுக்கு உத்திரவிடுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, இதற்கு முன்பு விளம்பரம் என்று சொல்லி பல்லாயிரக்கணக்கான ரூபாய், மத்திய வங்கிகளின் பணம், கூட்டுறவுச் சங்கங்களின் பணம் வீணாகச் செலவழிக்கப்பட்டது என்பதை ஒப்புக்கொள்கிறேன். இதுபற்றி விசாரிக்க ஏற்படுத்தப்பட்ட 'பாரதி குழு' தன்னுடைய பரிந்துரைகளை அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. அந்தக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் அரசு மேற்கொண்டு தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இனிமேல் எந்த விளம்பரத்துக்கான செலவை கூட்டுறவுச் சங்கங்களும், மத்திய வங்கிகளும் கொடுக்கலாம் என்பது பற்றி அரசு தீவிரமாக ஆலோசித்து, திட்டவட்டமான முடிவை அறிவிக்கும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, 20 அம்சத் திட்டம் ஏதோ பயங்கரமான திட்டம் போல் கருத்துச் சொல்லப்படுகிறது, அது ஒரு சிறந்த திட்டம். பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டத்தில், தீவிர நிலச் சீர்திருத்தம், விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி, குறைந்த விலையில் மாணவர்களுக்குப் புத்தகம், ஆகிய இப்படிப்பட்ட திட்டங்கள் இருப்பதைத் தொடர்ந்து இந்த அரசு விளம்பரப் படுத்துவதோடு மட்டுமல்லாமல், அதில் உள்ள நல்ல அம்சங்களையெல்லாம் செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, 20 அம்சத் திட்டமே இப்போது அமுலில் இல்லாத போது, அதில் இருக்கின்ற நல்ல அம்சங்கள் எவை என்று அரசு எப்படி எடுத்துக்கொள்ள முடியும் என்று தெரியவில்லை.

[1977, ஆகஸ்ட் 9

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கூட்டுறவு மத்திய சங்கங்கள் அல்லது மாவட்ட அளவில் உள்ள சங்கங்கள், விளம்பரங்கள் எதெதற்குக் கொடுப்பது என்பதை அரசாங்கம் தீர்மானிக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி தீர்மானிப்பது வேறு. ஆனால் இவ்வளவு விகிதாசாரம் தான் மொத்த வருமானத்திலிருந்து செலவிடலாம் என்று ஏற்கெனவே விதியிருக்கின்றதா இல்லையா ? அந்த விதிகளுக்குட்பட்டு செலவழிக்கப்பட்டிருக்குமேயானால், 'டிஸ்க்ரீஷனரி பவர்' கூட்டுறவுச் சங்கத் தலைவருக்கு, மற்றும் பொறுப்பில் இருப்பவர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்று தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, தனிக்கேள்வி போட்டால், அதைப் பற்றி விவரங்களைச் சேகரித்துத் தெரிவிக்கின்றேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் திட்டமே இல்லை என்று குறிப்பிட்டார்கள். எந்தத் திட்டம் இல்லை ? நிலச் சீர்திருத்தச் சட்டம் இல்லையா ? விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்ற திட்டம் இல்லையா ? நியாய விலையில் சாமான்கள் கிடைக்க வேண்டும் என்ற திட்டம் இல்லையா ? உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற திட்டம் இல்லையா ? வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்ற திட்டம் இல்லையா ? திட்டம் இருக்கிறது. ஆனால் ஏன் திட்டமே இல்லை என்று கூறுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, நான் 20-அம்சத் திட்டம்தான் இல்லை என்று சொன்னேனே ஒழிய, அந்தத் திட்டத்துக்குள் இருக்கின்ற மற்ற திட்டங்கள் இல்லை என்று சொல்லவில்லை. ஏற்கெனவே 20—அம்சத் திட்டம் வருவதற்கு முன்னாலேயே இந்தப் பல்வேறு திட்டங்கள் அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, அந்தத் திட்டங்களை அரசு தொடர்ந்து அமுல்படுத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, அந்தத் திட்டங்கள் நீண்டகாலமாக இருக்கின்றன. அதை அமுல்படுத்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: தலைவரவர்களே, திட்டமே இல்லை என்றாலும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அதில் 16 அம்சங்களை மத்திய அரசாங்கம் எங்களை அமுலாக்கச் சொல்லியிருக்கிறது என்று சொன்னார்கள். அதை அமுலாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1977 ஆகஸ்டு 9]

மாண்புமிகு திரு.க.உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. என்.சங்கரய்யா : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி கூட்டுறவு வங்கி பற்றிக் கூறும்போது மிக அதிகமான பகுதி செலவழிக்கப்பட்டிருக்கிறது என்றார்கள். அதில் உறுப்பினர்கள் அடங்கியிருக்கிறார்களா அல்லது கூட்டுறவு வங்கியின் தலைவரால் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிந்து அந்தத் தொகைகள் குறிப்பிட்ட இனங்களுக்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறதா, அல்லது வேறு வகையில் செலவழித்துவிட்டு கணக்குக் காட்டியிருக்கிறார்களா என்று தகவல் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு.க.உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, எல்லா மாவட்டங்களிலும் உள்ள மத்திய கூட்டுறவு வங்கிகளின் சீர்கேடுகளைப் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது, அரசு அதற்கென ஒரு குழுவை திரு.பாரதி தலைமையில் நியமித்து, எல்லா மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கும் அந்தக் குழு சென்று விசாரித்து, அறிக்கையை அரசிற்கு அளித்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தந்த கூட்டுறவுச் சங்கங்கள், மத்திய கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் தலைவர்கள் மீது சர்சார்ஜ் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் எந்த விளக்கமும் அரசு இப்போது சொல்லத் தயாராக இல்லை.

*Bridge across Kusasthali river.*

*40. THIRU EAKAMBARA REDDY.—Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether the proposal for construction of a submerisible bridge across 'Kusasthali' River near Pallipat, has been approved by the Government of India ;

(*b*) if so, the stage at which the matter stands ;

(*c*) whether necessary funds have been allotted for the work ; and

(*d*) when the work will be taken up for execution ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) இத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) மத்திய அரசின் ஒப்புதல் 1977 ஜூலை மாதம் தான் கிடைத்துள்ளது. டெண்டர் கோருதல் முதலிய பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடான ரூ. 27 லட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு உள்ளது.

(ஈ) டெண்டர் கோருதல் முதலிய முன்னேற்பாடுகள் முடிந்த பின் இத்திட்டத்திற்கான வேலைகள் நடப்பாண்டிலேயே தொடங்கப் படும்.

[1977 ஆகஸ்டு 9

THIRU EAKAMBARA REDDY.—Mr. Speaker, Sir, in view of the urgency and importance of the scheme, may I request the Hon. the Minister for Transport to take up this work this year itself by giving priority as a special case ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு நான் முன்னரே பதில் கூறியுள்ளேன். நடப்பாண்டிலேயே பூர்வாங்க வேலைகள் தொடங்கப்படும்.

கரும்புக்கான விலை.

*41. திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கரும்பு உற்பத்தியாளர்கள், சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பும் கரும்புக்கு நியாயமான விலை கிடைப்பதற்கு இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கரும்பு உற்பத்தியாளர்களுக்குத் தரவேண்டிய குறைந்தபட்ச விலையை ஆண்டுதோறும் மத்திய அரசு நிர்ணயித்து சட்டரீதியான அறிவிப்பை வெளியிடுகிறது. மத்திய அரசுக்கு நம்முடைய மாநில அரசு, டன் ஒன்றுக்கு ரூ. 125 நியாயமான விலை என்று முடிவு செய்யுமாறு பரிந்துரைத்தது. மத்திய அரசு சென்ற இரண்டு ஆண்டுகளாக இருந்ததைப் போலவே, டன் ஒன்றுக்கு ரூ. 85 என்று 1976-77 ஆம் ஆண்டிற்கும் குறைந்தபட்ச கரும்பு விலையை நிர்ணயம் செய்தது. இதன்படி 8·5 சர்க்கரை தரும் கரும்புக்கு டன்னுக்கு ரூ. 85 வீதத்திலும், அதற்கு மேற்பட்டு சர்க்கரை தரும் கரும்புக்கு கூடுதல் விலையும் ஆலைகள் தரவேண்டும் என்று முடிவு செய்துள்ளது.

திரு. சி. கோவிந்தராசன் ; ஒரு ஏக்கரில் கரும்பு பயிரிடு
வதற்கு எல்லாச் செலவுகளையும் கூட்டிப் பார்த்தால் ரூ. 3,460
ஆகிறது. அ...ந்த கரும்பு பயிரிடுவோர் குத்தகைக்கு எடுத்துச்
செய்வதாக இ...ருந்தால் ரூ. 700 யையும் சேர்த்து ரூ. 4,160
ஆகிறது. ஆன...ல், டன் ஒன்றுக்கு ரூ. 85 என்று சொன்னால்
சராசரி 40 அ...லது 45 டன்கள் தான் ஒரு ஏக்கரில் விளைகிறது.
கண்டுமுதலாகி...றது. அதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படு
கிறது. எனவே... கரும்பு நடமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது.
அதனால் சர்க்...கரை உற்பத்தி இந்த மாநிலத்தில் குறையும்
என்ற நிலை ஏ...ற்பட்டிருப்பதால் மத்திய அரசுக்கு மாநில அரசு
பரிந்துரை செ...ய்தும் மத்திய அரசு குறைந்தபட்சம் ரூ. 85
என்று சொல்...லியிருப்பதால் இதனால் சர்க்கரை உற்பத்தி தடை
படக்கூடிய சூ...ழ்நிலை இருக்கிறது. எனவே பலமான முறையில்
நடவடிக்கை எடுத்து விவசாயிகளின் கோரிக்கையை ஆதரித்து
மாநில அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா ?



1977 ஆகஸ்டு 9]

மாண்புமிகு திரு. ப.குழந்தைவேலு : 1966 ஆம் ஆண்டு கரும்பு (கட்டுப்பாடு) ஆணையின் 3-வது பகுதியில் குறிப்பிட்டுள்ள கீழ்க்காணும் கூறுகளைக் கருத்திற்கொண்டு இவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது:—

(1) கரும்பு உற்பத்திக்கான செலவு.

(2) கரும்பிற்குப் பதிலாக வேறொரு பயிரை பயிரிடுவதனால் உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கும் வருமானம் ; பொதுவாக வேளாண்மைப் பொருள்களின் விலைவாசி நிலவரம்.

(3) பயன்துய்ப்போருக்கு நியாய விலையில் சர்க்கரை கிடைக்கச் செய்தல்.

(4) கரும்பிலிருந்து எடுக்கப்படும் சர்க்கரையை அதன் உற்பத்தியாளர் விற்கும் விலை.

(5) கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை அளவு.

உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனைகள் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படும் என்பதை இதனால் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பண்ணை கே. சேதுராம் : கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் கரும்பை ஆலைகளுக்குக் கொடுத்துவிடுகிறார்கள் அப்படிக் கொடுத்துவிட்டு ஆண்டுதோறும் ஜீனி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு அவர்களது குடும்பத்திற்குத் தேவையான ஜீனியைக் கொடுப்பதற்கு இந்த அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ப.குழந்தைவேலு : தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு.கே.கந்தசாமி : 1974-75ம் ஆண்டிலே கரும்பு பயிர் செய்யும் விவசாயிகள் சங்கம் சார்பாக அன்றையதினம் உணவு அமைச்சர் அவர்களை நாங்கள் சந்தித்துப் பேசியபோது டன்னுக்கு ரூ 95 என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன்படி பணம் கொடுக்கப்பட்டு பின்னர் அடுத்த ஆண்டு 1976-ல் விவசாயிகள் சார்பாக கேட்டபோது டன்னுக்கு ரூ. 10 உபரித் தொகையாகக் கொடுக்கப்பட்டது. இப்போது மிகவும் குறைந்த தொகையாக ரூ. 85 என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். இது கரும்பு பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மிக்க ஏமாற்றத்தை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்த திடீர் வீழ்ச்சி ஏற்பட்டதற்குக் காரணம் என்ன ? மற்றப் பொருள்களின் விலைகள் உயர்ந்து கொண்டிருக்கும்போது இந்த அத்தியாவசியப் பொருளின் விலை மட்டும் குறைந்திருக்கக் காரணம் என்ன ? இதற்கு மத்திய அரசு குறுக்கீடு இருக்குமானால்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகப் போடுங்கள்.

[1977 ஆகஸ்டு 9

திரு. கே. கந்தசாமி : இது "வைட்டல் இஷ்யூ" மத்திய அரசின் மீது ஒரு போர்க் கொடி உயர்த்தினால் விவசாயிகள் சார்பாக அதற்கு ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறோம். ஆகையால் அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு விளக்கம் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை யோசித்து பரிசீலிக்கப்படும்.

திரு. ரா. உமாநாத் : வெல்லத்திற்கு விலை நிர்ணயம் செய்வது மட்டுமல்ல, அதாவது கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வது மட்டுமல்ல நிர்ணயித்து இருக்கக்கூடிய விலை கரும்பு விவசாயிகளுக்கு பாக்டரிகளிலிருந்து கொடுக்கப்படாமல் பல லட்சக்கணக்கான ரூபாய்கள், எக்கச்சக்கமாக பாக்கியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பாக்கிகளை வைத்திருப்பதுமட்டுமல்ல, பாக்டரியையும் நிறுத்திவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே பாக்கியிருக்கின்ற இந்த லட்சக்கணக்கான ரூபாய்களைக் கொடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி ; தலைவர் அவர்களே, மத்திய அரசு கரும்புக்கு இவ்வளவுதான் விலை என்று எடுத்துச் சொன்னப் போதிலும், கழக அரசு காலத்தில் முத்தரப்பு மாநாடு என்ற பெயரில், அதில் அரசாங்கப் பிரதிநிதிகள், ஆலை அதிபர்களின் பிரதிநிதிகள், விவசாயிகளின் பிரதிநிதிகள் மூவரும் கலந்து பேசி மத்திய அரசு நிர்ணயித்திருக்கக்கூடிய விலையிலிருந்து கூடுதல் விலை பெறுவதற்கு வாய்ப்புக்கூறுகளை ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டது. அது போன்று இப்போதும் முத்தரப்பு மாநாடுகளை கூட்டுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய யோசனை யோசித்து பரிசீலிக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வது என்பது விவசாயிகளுக்குப் பாதுகாப்பு என்பது மட்டுமல்ல. சர்க்கரை ஆலைக்கும் இது பாதுகாப்பாக இருக்கும் என்பதை அரசு உணருமா? கரும்பு விலை குறைவாக இருப்பதன் காரணமாக கரும்பு கொடுக்கப்படாமல் ஆரூரான் சர்க்கரை ஆலை கடந்த ஆண்டு மூன்று மாதங்களுக்கு மேல் ஓடாமல் இருக்கிறது என்பதை சர்க்கார் அறியுமா? 125 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று நம்முடைய சர்க்கார் பரிந்துரை செய்திருந்தும், மத்திய அரசு குறைந்த விலையையே நிர்ணயம் செய்யாமல் மத்திய அரசின் உத்தரவை எதிர்பாராமல் நாமே விலையை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா?



1977 ஆகஸ்டு 9]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தப் பிரச்சினையில் மத்திய அரசின் உத்தரவை எதிர்ப்பார்த்துத்தான் நாம் விலையை நிர்ணயம் செய்ய வேண்டியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : கரும்பு உற்பத்தி செய்வதற்கு வேண்டிய எல்லாப் பொருட்களுக்கும் விலை அதிகமாகியிருக்கிறது. உற்பத்திச் செலவு அதிகரித்திருக்கிறது. ஆனால் கரும்பினுடைய விலை அதிகரிக்காமல் இருக்கிறது. ஆகவே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல் ஒரு முத்தரப்பு மாநாட்டைக்கூட்ட அரசு முன் வருமா? ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் கூறியபடி ரூ.125 கொடுக்க வேண்டும், என்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. விவசாயியைப் பொறுத்த வரை குறைந்த அளவு ஒரு டன்னுக்கு 150 கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் 150 ரூபாய் என்றில்லாவிட்டாலும் 125 ரூபாய் கொடுப்பதற்கு அரசாங்கம் உறுதியான நடவடிக்கை எடுக்க முன் வருமா? சர்க்கார் கூடுதலான விலை நிர்ணயம் செய்யாத காரணமாக ஆலைகளுக்கு விவசாயிகள் கரும்பு அனுப்ப முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சர்க்கரை உற்பத்தித் திறன் தடை படுகிறது. இதனால் தொழிலாளர்களுக்கும் லே-ஆப் போன்ற நிலையும் ஏற்படும் ஆபத்துள்ளது. வெளியே கொடுக்கிறார்கள். ஆகவே இந்த அரசின் பரிந்துரையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளுவதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஏற்கனவே மத்திய அரசு இதைப்பற்றி 30—7—1977-ல் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் விவாதிக்கப்பட்டது என்றும், அதில் கரும்புக்கு மத்திய அரசு அறிவித்துள்ள சட்டப்படிக்கான குறைந்த அளவு விலைக்கு மேற்பட்டு தாங்கள் பரிந்துரைக்கின்ற விலையைக் கொடுக்குமாறு சில மாநில அரசுகள் தங்கள் அதிகார வரம்புக்குள் அமைந்துள்ள சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுறுத்தியுள்ளன. இதற்கு மத்திய அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. ஏனெனில் அனைத்துத் துறைகளின் மொத்த நலனைக் கருதி, சர்க்கரை தொழிலில் உற்பத்தி, பங்கீடு ஆகியவை குறித்துத் திறமையான முறையைத் திட்டமிடவும் நிர்வகிக்கவும் மத்திய அரசுக்குள்ள திறமை இதனால் கணிசமான அளவிற்குப் பாதித்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆலைகளுக்கு வழங்கப்படும் கரும்புக்கு மாநில அரசுகள் தாங்கள் பரிந்துரைக்கும் விலைகளை அறிவிக்கின்ற நடைமுறையை இனி மேற்கொள்ளாதிருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே இந்தப் பிரச்னையில் மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் மாநில அரசுகள் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மத்திய அரசு தன்னுடைய அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன் மூலம் கரும்புக்கு விலை நிர்ணயித்த விதத்தில் அதையே நீங்கள் தொடர்ந்து நிறைவேற்ற

இருக்கிறீர்கள் என்ற முறையில் அமைச்சர் அவர்களுடைய பதில் இருக்கிறது. ஆனால், கரும்பின் உற்பத்தி அளவை சர்க்கரையின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்றும் மத்திய அரசு ஆலோசனை சொல்லிவருகிறது. இதைக் குறைக்கின்ற அளவுக்கு, விலை கட்டுப்படியாகாததால் விவசாயிகள் கரும்பின் உற்பத்தி ஏக்கரேஜ் குறைந்திருக்கிறது. இந்த இரண்டுக்கும் மத்தியிலே, இந்தச் சிக்கலைத் தீர்க்க நம்முடைய அரசு இப்போது மத்திய சர்க்காரிலே விலை நிர்ணயித்திருக்கிறார்களே, அதற்குமேல் சட்டத்தை மீறுமல், அதே சமயத்தில் விவசாயிகளுக்கு உதவக்கூடிய வகையில், கட்டுப்படியாகக்கூடிய வகையில் அதிகப்படியான பணம் கொடுக்கும் முறையில் ஊக்க போனஸ் அல்லது உற்பத்தி போனஸ் அல்லது அதிகக் கரும்பு பயிரிடுபவர்களுக்கு போனஸ் என்ற முறையில், நெல்லுக்கு கொடுக்கின்ற மாதிரி அவர்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலையைக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையை மத்திய அரசுடன் கலந்து, ஆலோசித்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன் மூலம் கரும்புக்குக் குறைந்தபட்ச விலை அதாவது ஒரு டன்னுக்கு ஆண்டுதோறும் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அதற்கு முன்பு, நாங்கள் ஆட்சியில் இருந்தபோது, மத்திய அரசாங்கம் கரும்புக்கு குறைந்தபட்ச விலையைத்தான் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆகவே, கூடுதல், விலை கொடுத்து வாங்க நம் மாநில அரசு முயற்சிக்கலாம் என்றுதான் அப்போது சொல்லப்பட்டது. ஆனால், அமைச்சர் அவர்களின் பதில், அப்படி கூடுதல் விலை கொடுத்து வாங்கக் கூடாது, மத்திய அரசாங்கம் நிர்ணயித்த குறைந்தபட்ச விலைக்குத் தான் வாங்க வேண்டும் என்பது போல் இருக்கிறது. எனவே, மத்திய அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச விலைக்குமேல், அதிக விலை கொடுத்து வாங்கக் கூடாது என்று மத்திய அரசு சொல்லி விட்டதா? அப்படியானால், மத்திய அரசாங்கத்தின் கொள்கை மாறியிருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> நிர்ணயித்த விலை குறைந்தபட்ச விலைதான். அதாவது 8.5 சத்துள்ள, சர்க்கரை சதவிகிதம் உள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 85 குறைந்தபட்ச விலை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு இறுதியில் கரும்பு உற்பத்தியாளர்கள் மகாநாடு பெண்ணாடத்தில் கூடியபோது அரசாங்கத்தை டன்னுக்கு ரூ. 175 கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டார்கள். அதற்குப் பின்னர்;, திருச்சியிலே ஒரு மகாநாடு நடத்தி, ரூ. 125 டன்னுக்கு கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்போது முதல் அமைச்சராகவும் இப்போது எதிர்க் கட்சித் தலைவராகவும் இருப்பவர் கலந்து கொண்டு பேசினார்கள். அப்போது, போராட்டம் எல்லாம் நடத்துவதாகப் பேசினார்கள், அதுபற்றி, அவரையே விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.



<u>திரு மு. கருணாநிதி :</u> அதைப்பற்றி விளக்குவதற்கு, தனியாக ஒரு மணி நேரம் ஒதுக்கினால், பதிலளிக்க ஏதுவாக இருக்கும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. உரிமைப் பிரச்சினை:

## 'சிவப்பு நாடா;—தினசரிப் பத்திரிகையின் மீது.

<u>மாண்புமிகு திரு கி. மனோகரன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் 188 வது விதியின்கீழ், உரிமை மீறல் பிரச்னை குறித்து தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

சென்னை, 8—8—1977 ஆம் தேதி 'சிகப்பு நாடா' என்னும் தினசரியில் பேரவைத் தலைவர் அவர்களைப் பற்றி ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அச்செய்தி பேரவைத் தலைவர் பதவிக்கும், இந்த அவைக்கும் மாசு கற்பிப்பதாக உள்ளது. இது அவையின் உரிமைகளைப் பெரிதும் பாதிப்பதாக உள்ளது. எனவே, இதைக் குறித்து நன்கு விசாரித்து, தகுந்த நடவடிக்கை எடுக்க, உரிமை குழுவிற்கு அனுப்பி விசாரிக்க வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

(முற்பகல் 9–40)

இது உரிமை மீறல் பிரச்சினை என்று நான் சொல்லுவதற்குக் காரணம்—பொதுவாக நாடாளுமன்றமானாலும் சரி, சட்டமன்றமானாலும் சரி, நாம் இன்றைக்கு வழித்துணையாகக் கொண்டிருக்கிற முக்கியமான விதிமுறைகள் 'மேஸ் பார்லிமென்டரி ப்ரொசீஜரில்' இருந்து நாமும் உருவாக்கிக் கொண்டிருக்கிற விதிமுறைகளில் இருந்து நாம் கடைப்பிடித்து வருகிறோம். 'சிகப்பு நாடா' பத்திரிகையில் தங்களைப் பற்றி எழுதப் பட்டிருக்கும் குறிப்புகளைப் படித்தால் இந்தச் சபைக்கு

அவமானம் ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தின் காரணமாக நான் படித்துக் காட்ட விரும்பவில்லே. மிகக் கீழ்த்தரமான முறையில், அவதூறு கற்பிக்கின்ற முறையில் அடிப்படையற்ற பொய்க் குற்றச்சாட்டுக்களே, கற்பனேக் குற்றச்சாட்டுக்களேச் சுமத்தி உங்களே அவமானப்படுத்துவதன் மூலம் இந்த அவையை அந்தப் பத்திரிகை அவமானப்படுத்தியிருப்பதாக நான்நம்புகிறேன். 'மேஸ்பார்லிமென்டரி ப்ரொசிஜரில்.'

"It is a breach of privilcge and contempt of the House to make speeches or to print or publish any libels reflecting on the character of the House, proceedings of the House or its Committees or any member of the House or reflecting on his Character or aonduct as Member of Parliament."

நான் இங்கே குறிப்பிட விரும்புவது—இந்தச் சபையிலே இருக்கும் அங்கத்தினர்களேப் பற்றி மட்டுமல்லாமல், குறிப்பாக சபாநாயகரைப் பற்றி, அதுவும் நீங்கள் வகித்திருக்கும் பதவிக்குக் களங்கம் தேடுகின்ற வகையில் வந்திருக்கும் இந்தச் செய்தி மிகவும் கடுமையாகக் கண்டிக்கக்கூடிய செய்தி என்பதை நான் வன்மையாக இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பத்திரிகைகளின் சுதந்திரங்களுக்கு நூற்றுக்கு நூறு உரிமை இருக்கவேண்டுமென்று வாதிடுகின்ற கட்சியைச் சார்ந்த நான், இப்படிப்பட்ட கீழ்த்தரமான செய்திகளேத் தரமுள்ள பத்திரிகைகளேச் சார்ந்த எழுத்தாளர்களோ அல்லது நிருபர்களோ அல்லது ஆசிரியர்களோ அல்லது பொறுப்புள்ள

அரசியல் கட்சியின் தலேவர்களோ ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நான் இந்த உரிமை மீறல் பிரச்சினேயை இங்கே வைக்கிறேன். இதை நான் இங்கே படித்துக் காட்டவில்லே என்று சொன்னேன்—சில பேர் கேட்கக்கூடும். 'என்ன எழுதியிருக்கிறது என்று அது குறிப்பேட்டில் இடம் பெறுவது நல்லதல்ல. தயவுசெய்து அந்தப் பத்திரிகையைப் படித்துப் பார்த்துத் தெரிந்து கொள்வது நியாயமாக இருக்கும். அவ்வளவு அருவருக்கத் தக்க முறையில் உங்களேப் பற்றிக் குற்றச்சாட்டு வந்திருக்கிறது. நீங்கள் இந்தச் சபையில்—'You are the custodian of privileges and rights cf members of the House' அதிலிருந்து உங்களுடைய தரம், தகுதி ஊருக்கும் உலகுக்கும் தெரியும். அப்படிப்பட்ட உங்களுக்கு அவதூறு கற்பிக்கின்ற முறையில் வந்திருக்கிற காரணத்தால் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்—இதை நன்ருக விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுக்க இப்பிரச்சினேயை உரிமைக் குழுவுக்கு அனுப்பி பரிசீலிக்க வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விப்பட்டு நிறைவேற்றப் பெற்று உரிமைக் குழுவுக்கு அனுடப்பெற்றது.



(3) ஒழுங்குப் பிரச்சினேகள்.

(அ) உரிமைக் குழுவுக்கு அனுப்பப்பெறும் பொருள் விவரம் குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். உரிமைக் குழுவுக்கு அனுப்புவதைப் பற்றி ஆட்சேபனே இல்லே. சப்ஜக்ட் மாட்டர் ரெக்கார்டு ஆகாமல் அந்தப் பிரச்சினேயை எப்படி உரிமைக் குழுவுக்கு விடுவது? அதைப் படிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : மன்னிக்க வேண்டும் ஏற்கனவே சபை ஏற்றுக்கொண்ட பிறகு திரும்ப அந்தப் பிரச்சினேயைக் கிளப்புவது எந்த வகையிலும் நியாயம் அல்ல. 'சிகப்பு நாடா' பத்திரிகையில் 8 ஆம் தேதி வந்திருக்கும் செய்தி அந்தச் செய்தியை மன்றத்தில் படித்து மாசு கற்பிக்க விரும்பவில்லே.

திரு. ஏ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர், இந்தப் பிரச்சினேயை உரிமைக் குழுவுக்கு அனுப்புவதைப் பற்றி ஆட்சேபனே இல்லே. ஆனல் அதிலே என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது, என்பது சபைக்குத் தெரியவேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனேகரன்: உரிமைக் குழுவுக்கு அனுப்பிய பிறகு தயவுசெய்து அந்த பிரச்சினேயைப் பற்றி விவாதிக்க வேணடும்.

மாண்புமிகு பேரவைத் தலேவர்: 8 ஆம் தேதி பத்திரிகையில் வந்திருக்கிறது. உரிமைக் குழு பரிசீலித்து முடிவு சொல்லும்.

(4) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

[அ] சென்னே இராயபுரம் காசிமேடு பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தினல் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்தும், அரசு உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் அவசியம் குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : கடந்த 6—8—1977 அன்று சென்னே இராயபுரம் தொகுதி காசிமேடு கடலோரப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தினல் அங்குள்ள பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளது பற்றியும் அதுபற்றி அரசு உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் அவசியம் பற்றியும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களே ஒத்திவைக்க வேண்டுமென்று தீர்மானங்களேக் கொடுத்துள்ளார்கள்:

[பேரவைத் தலைவர்] [1977 ஆகஸ்டு 9

இது எப்படி அவையின் அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசர முக்கியமானது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஏறக்குறைய 11 பேர் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தொகுதியைச் சேர்ந்த திரு. ப. பொன்னுரங்கம் மட்டும் எழுப்பினால் நம்முடைய நேரம் வீணாகாமல் இருக்கும். திருவாளர்கள் எஸ். சிவசாமி, ப. பொன்னுரங்கம், கே. கந்தசாமி, வி. கே. கோதண்டராமன், சி. கோவிந்தராஜன், மு. அம்பிகாபதி, ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொர்ணம், ஆர். கிருஷ்ணன், நா. சுந்தர ராஜன், ஜே. ஜேம்ஸ், எம். ஏ. லத்தீப் ஆகிய இவ்வளவு பேரும் விவாதிக்க ஆரம்பித்துவிட்டால் ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகிவிடும்.

ஆகவே, குறிப்பிட்ட தொகுதியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் எடுத்து விளக்கி அவை முன்னவர் பதில் சொன்னால் போதுமானது. ஆகவே, திரு. பொன்னுரங்கம் இது எப்படி அவையின் மற்ற அலுவலல்களை ஒத்திவைத்து விவாதிக்கத்தக்கது என்பதை விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6—8—1977 அன்று சனிக்கிழமை 10 மணிக்கு மேல் என்னுடைய தொகுதியில் காசிமேடு குப்பத்தில் ஒரு பெரிய தீ விபத்து ஏற்பட்டதை இந்த அவை உறுப்பினர்களாகிய நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள். அந்தத் தீ விபத்தில் 200—க்கும் மேற்பட்ட குடிசைகள் தீக்கிரையாகிவிட்டன. அந்த தீ விபத்து எப்படி ஏற்பட்டது என்பதைப்பற்றி அரசு சரியான குறிப்புகளைச் சேகரித்து வைத்து இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆனால் அதே நேரத்திலே ஒரு டீ கடையாலே அந்த தீ விபத்து ஏற்பட்டது என்று அங்குள்ளவர்கள் எனக்குத் தகவல் தெரிவித்தார்கள். 300—க்கு மேற்பட்ட குடிசைகள் மட்டும் அல்ல, அங்கே இருந்த கட்டு மரங்களும் தீயினால் பாதிக்கப்பட்டன. லாஞ்ச்களுக்கும், கட்டுமரங்களுக்கும் பயன்படுகிற கருவிகளும், விசைப் படகுகளும் 30—க்கும் மேற்பட்ட வலைகளும் பாதிக்கப்பட்டன.

அது மாத்திரமன்று, சில வியாபாரிகள், சிறு தொழில்கள் செய்யக்கூடியவர்கள் உதாரணமாக, ஐஸ்கடை, வெற்றிலை பாக்குக்கடை, பழக்கடை வைத்திருக்கின்றவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் அரசு இதுவரையில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும் அரசு பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசரமாகவும், அவசியமாகவும் என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை நாம் இந்த அவையிலே விவாதித்தாக வேண்டும்.



1977 ஆகஸ்ட் 9] [திரு. ப. பொன்னுரங்கம்]

நான் உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன். கட்டுமரங்கள் என்று சொல்கிற நேரத்திலே அந்தக் கட்டுமரங்களை மட்டும் பயன்படுத்துகின்ற தொழிலாளர்கள் 500க்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஒரு கட்டுமரத்தை எடுத்துக் கொண்டால் 5, 6 பேர்கள் தொழில் செய்து வருகிறார்கள். இதை அவர்கள் பாணியிலே நான் சொல்ல வேண்டுமானால் இடவலைக்கும், மதவலைக்கும் தூரிக்கும் எரால் போன்ற மீன்களை எல்லாம் அந்த சாமான்ய மக்கள் பிடித்து தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு சனிக்கிழமையிலிருந்து அன்றாடம் சாப்பாட்டிற்கே வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் நேற்றுக்கூட அங்கே சென்று இருந்தேன், தீ விபத்து நடந்த அன்று கூடச் சென்றேன். அதற்கு மறுநாளும் சென்றேன், நேற்றும் சென்றிருந்தேன். நான் அங்கே சென்ற போது அவர்கள் ஒன்றைத் தெரிவித்தார்கள், அமைச்சர்கள் எல்லாம் வந்தார்கள், ஆனால் சம்பந்தப்பட்ட அமைச்சர் வரவில்லை என்று தெரிவித்தார்கள். வழக்கமாகச் செய்வதைக் கூட செய்யாமல் விட்டுவிட்டார்கள். இப்படிப்பட்ட தீ விபத்து ஏற்பட்டால் ஆங்காங்கே சோறு போடுவது வழக்கம். அங்கே அதுகூட போடவில்லை. அங்கே ஒருவர் சொன்னார், அது எல்லாம் கருணாநிதி ஆட்சியோடு சரி என்று சுட்டிக்காட்டினார். அதற்குப் பிறகு இன்னொருவர் சொன்னார், குறும்பர் என்று கருதுகிறேன். அன்னமிட்ட கையெல்லாம் படத்தோடு சரி என்று சொன்னார். நான்கூட கண்டித்தேன் அதை..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைத்ததற்குப் பிறகு பேச வேண்டியவைகளை எல்லாம் இப்போது சொல்கிறீர்களே, சுருக்கமாக உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : நீங்கள்தான் ஒத்திவைப்புத் தீர்மானங்களை அனுமதிப்பதே இல்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு. நீங்கள் இப்போது சுருக்கமாகப் பேசுங்கள். அனுமதித்ததற்குப் பிறகு பேச வேண்டியதை இப்போது பேசாதீர்கள்.

[முற்பகல் 9-50]

திரு. ப. பொன்னுரங்கம் : இங்கே சீனியர் மெம்பர்கள் பேசி இருக்கிறார்கள். எப்படி ஒத்திவைப்புத் தீர்மானம் இருக்க வேண்டும் என்பதையும், எப்படி அதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். நான் பே[illegible]போது அந்த இடத்திலே தடுக்கி விழுந்தேன். பக்கத்திலே இருந்தவர்கள் தாங்கிக் கொண்டார்கள். எம்.எல்.ஏ. வருகிறார் என்று சொல்

விக் கொண்டு கூட வந்தார்கள். எனக்கு அந்த நிலை ஏற்பட்டது. வீடுகள் எரிந்து, அங்கு நடப்பட்டிருந்த கொம்புகள் எரிந்து, துண்டு துண்டாக இருந்தன. அதில் ஒன்று தடுக்கி விட்டதால் கீழே விழ இருந்தேன். ஏனென்று பார்த்தால் அங்கே இருந்த விளக்குகள் எல்லாம் எரிக்கப்பட்டிருந்தன. நான் சொல்வதைத் தயவு செய்து கேளுங்கள். இப்படி ஆக்கப்பட்டிருக்கிறது. அன்று ஞாயிற்றுக்கிழமை. அதிலே ஒரு குறும்பர் சொன்னார், அமைச்சர்கள் வந்தால் தான் லைட் இருக்கும் என்று. இப்படி எல்லாம் பேசக் கூடாது என்று நான் சொன்னேன். அந்த அளவிற்கு மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எந்த இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டாலும் சரி இப்படித் தான் புறக்கணிப்பதா என்பதை நான் பணிவோடு கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், இன்றையதினம் அவர்கள் பிழைப்பிற்காக வைத்துக் கொண்டிருக்கிற கட்டு மரங்கள், லாஞ்சுகள், விசைப் படகுகள் ஆகியவை இந்தத் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் வேலை இல்லாமல் அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அளிக்க வேண்டி இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து, இந்தப் பிரச்னையை விவாதிக்க வேண்டுமென்றும், இந்த மீனவர்களுக்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு பேரவை முன்னவர் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்மீது தன்னுடைய கருத்தைத் தெரிவிப்பார்.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது குறும்பர் என்று குறிப்பிட்டார். அவர் யாரைக் குறிப்பிடுகிறார் என்பதற்கு விளக்கம் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> 6—8—77 அன்று சுமார் பகல் 11-00 மணியளவில் சென்னை காசிமேடு மீன் பிடிப்புப் பகுதியில் அமைந்துள்ள மீனவர் குப்பத்தில் இத் தீ விபத்து நடந்தது. மீன் சேகரித்து, உலர்த்தி, விற்பதற்காக அமைக்கப்பட்டிருந்த சுமார் 91 குடிசைகளும், பழுது பார்ப்பதற்காகவோ விற்பனைக்காகவோ, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று விசைப் படகுகளும், 50 கட்டுமரப் படகுகளும் தீக்கிரையாயின. இரண்டு விசைப் படகுகளும், 17 கட்டு மரப் படகுகளும், ஓரளவு சேதம் அடைந்தன. இவை தவிர மீன் பிடிப்பு வலைகளும் சேதம் அடைந்தன. தீயணைப்புப் படையினரின் சுமார் இரண்டு மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு, தீ அணைக்கப்பட்டது.





இத் தீ விபத்தில் உயிர்ச் சேதமோ, காயமுற்றோரோ இல்லை. ஏற்பட்ட சொத்தின் இழப்பின் மதிப்பு சுமார் 1,88,050 ரூபாய் என மதிப்பிடப்படுகிறது. குடியிருப்புக் குடிசைகள் ஏதும் இல்லாததால் வீடு இழந்தமைக்காக அளிக்கப்படும், நிவாரண உதவி அளிக்கப்படவில்லை. இருப்பினும், தீக்கு இரையான குடிசைகளுக்குத் தலா ரூபாய் நூறு வீதமும், முற்றிலும் சேதமடைந்த கட்டு மரப் படகுகளுக்கு தலா ரூபாய் ஐந்நூறு கடனாகவும், ரூபாய் ஐந்நூறு மானியத் தொகையாகவும், ஓரளவு சேதமடைந்த பதினேழு கட்டு மரப் படகுகளுக்கு ரூபாய் 200 கடனாகவும், ரூபாய் இருநூறு மானியத் தொகையாகவும், மற்ற ஓட்டர் போர்டுகளுக்கு (Otter boards) தலா இரண்டிற்கு ரூபாய் 200 கடனாகவும், ரூபாய் 200 மானியத் தொகையாகவும், ஐந்து நைலான் வலைகளுக்கு ரூபாய் 500 கடனாகவும், ரூபாய் 500 மானியமாகவும். பருத்தியால் ஆன ஒன்பது மீன்பிடிப்புவலைகளுக்கு ரூபாய் 200 கடனாகவும், ரூபாய் 200 மானியத் தொகையாகவும், ட்ராவல் (இழுப்பு வலை) வலைகளுக்கு ரூபாய் 500 கடனாகவும், ரூபாய் 500மானியத் தொகையாகவும், ஓரளவு சேதமடைந்த இரண்டு விசைப் படகுகளுக்கு ரூபாய் 500 கடனாகவும், ரூபாய் 500 மானியத் தொகையாகவும், ஆக மொத்தம் ரூபாய் 44,100 கடன் தொகையாகவும், ரூபாய் 53,200 மானியத் தொகையாகவும் வழங்க மீன் துறை இயக்குநர் அரசுக்குப் பரிந்துரை செய்து உள்ளார். அதனை அரசு பரிசீலித்து வருகிறது.

இவ் விபத்தினால் ஏற்பட்ட இழப்பிற்கும், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் மானியமாகவும், கடனாகவும், நிதி உதவி வழங்க அரசு வேண்டிய, உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. ஆதலால் இவ்விபத்து குறித்து மீண்டும் விவாதித்து பேரவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு தர மறுக்கப்படுகிறது.

<u>(ஆ) உளுந்தூர்பேட்டை அருகில், லாரி விபத்தில் 12 பேர்கள் மரணமடைந்ததும், பலர் படுகாயம் அடைந்ததும் குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உளுந்தூர் பேட்டை அருகில் பாதூரில் ஒரு பயங்கர லாரி விபத்தில் 12 பேர்கள் மரணமடைந்தது குறித்தும், மற்றும் பலர் படுகாயம் அடைந்தது

குறித்தும், அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று திருவாளர்கள் எம். ஏ. லத்தீப், ஜே. ஜேம்ஸ், நா. சுந்தரராஜ், துரை முத்துச்சாமி, க. சுப்பு, வ. துலுக்காணம், சி. பழனிமுத்து ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய அவசர, அவசிய, முக்கியத்துவம் என்ன என்பதை திரு. துலுக்காணம் அவர்களை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்; அவர் அத் தொகுதி உறுப்பினர் என்ற முறையில்.

* <u>திரு. வ. துலுக்காணம் :</u> தலைவரவர்களே, கடந்த ஆறும் தேதியன்று எங்கள் உளுந்தூர்பேட்டை தாலூக்காவில் பதூர் என்ற கிராமத்தின் அருகில் சேலம் மாவட்டத்திலிருந்து, வறுமையில் வாடிய மக்கள் மண்வெட்டும் தொழில் செய்வதற்காக சென்னைக்கு வந்து கொண்டிருந்தார்கள். பஸ்ஸில் சென்றால் அதிகம் செலவாகும் என்று கருதி லாரியில் வந்து அந்த விபத்தில் பலியானார்கள். இதுபோன்ற திடீர் விபத்துக்கள் முன்பு நடந்தபோது அன்றைக்கு முதல்வராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள், முதல்வர் நிதியிலிருந்து உடனடியாக நிவாரணம் அளித்து ஏழை எளிய மக்களின் துயரைத் துடைத்தார்கள். உதாரணமாக சினிமாத் தியேட்டர் ஒன்றில் இறந்தவர்கள் குடும்பத்திற்கு நிதி அளித்திருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது இந்த அரசானது வாடிவதங்கி வறுமையில் இருந்தவர்கள் உயிர்நீத்த பொழுது அந்தக் குடும்பத்தின் துயர் துடைப்பதற்காக முதல்வரவர்கள் நடவடிக்கை எடுக்காதது வருந்தத்தக்கது. விபத்திற்குள்ளான லாரியின் உரிமத்தைப் பறிமுதல் செய்திருக்க வேண்டும். விபத்தில் உயிர்நீத்த ஒவ்வொரு நபருக்கும் முதல்வர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக நிதி அளிக்க முன் வர வேண்டுமென்பதைப்பற்றியெல்லாம் விவாதிக்க வேண்டுமென்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> தலைவரவர்களே, எம்.டி.யூ 9295 எண்ணுள்ள விஜய் மைன் என்ற பெயருடைய லாரி ஒன்று பாறாங்கற்களை ஏற்றிக் கொண்டு மேட்டூரிலிருந்து சென்னை செல்லும்போது 6-8-1977 அன்று காலை மணி சுமார் 3.00 அளவில் உளுந்தூர்ப்பேட்டையை அடுத்துள்ள பதூர் அருகே விபத்துக்குள்ளாகியது. அந்த லாரியில் 28 கூலி ஆட்கள் ஆத்தூரிலிருந்து சென்னைக்குப் பயணம் செய்தனர்: இவ்விபத்தில் 3 ஆண்களும் 3 பெண்களும் நான்கு குழந்தைகளும் தலத்திலேயே உயிரிழந்தனர். மற்றும் காயமுற்ற 7 பேர்களை உளுந்தூர்ப்பேட்டை அரசு மருத்துவமனையிலும் மற்றும் 8 பேர்களை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையிலும் (கடலூர்) சிகிச்சைக்காக அனுமதிக்கப்





பட்டுள்ளது. நல்லான் என்ற 30 வயதுள்ள ஒருவரும், 2 வயதுள்ள லலிதா என்ற பெண் குழந்தையும் கடலூரில் உள்ள அரசு மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் உயிரிழந்தனர். அந்த மருத்துவ மனையிலுள்ள மீதி 6 பேர்களும் நலமுற்று வருகிறார்கள். அந்த லாரியில் பயணம் செய்த மற்ற 3 பேர்களும் காயமின்றி உயிர் தப்பினார்கள். உளுந்தூர்ப்பேட்டை அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட 7 பேர்களில் நால்வர் இன்னும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மற்ற மூவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். ஜோசப் என்ற லாரி ஓட்டுனர் கைது செய்யப்பட்டுள்ளார். லாரி சுத்தம் செய்பவர் தப்பி ஓடி விட்டார். இ.பி.கோ. 304ஏ, 337 மற்றும் 338 என்ற பிரிவுகளின் கீழ் குற்றம் எண் 269/77—ல் திருநாவலூர் காவல் நிலயத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. உளுந்தூர்ப்பேட்டை மருத்துவ மனையைச் சேர்ந்த மருத்துவ உதவி அதிகாரிகள் மூவரும், கடலூர் மாவட்ட தலைமை மருத்துவ மனையைச் சேர்ந்த மூன்று உதவி மருத்துவ அதிகாரிகளும் பிரேத பரிசோதனை செய்துள்ளனர்.

மேற்கூறிய விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருந்து வருவதால் விசாரணைக்குப் பிறகு அரசு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்ற உறுதியின் பேரில் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அனுமதிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவையில்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவுதர மறுக்கப்படுகிறது.

## <u>5. தகவல் கோரல்.</u>

### <u>(அ) ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர்கள் அப்பொருள் குறித்துப் பேசுவது குறித்து :</u>

<u>திரு. க. சுப்பு :</u> நான் பேசப் போவதில்லை. நான் கொடுத்திருக்கிறேன் என்பதால் ஒரேவொரு பாயிண்டை மட்டும் கிளாரிபை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> எல்லா உறுப்பினர்களும் ஒப்புக்கொணடார்கள்.

<u>திரு. க. சுப்பு :</u> நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் ஒரு மெம்பர். . . . .

[1977 ஆகஸ்ட் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. எல்லா உறுப்பினர்களும் தங்களைப் போன்றே கேட்க ஆரம்பித்தால் நேரம் வீணாகும்.

திரு. க. சுப்பு : நான் பேசவில்லை. கட்சிக்கு ஒருவர் பேசினால் போதும் என்பதால் நான் பேசவில்லை. அரசாங்க அறிக்கையிலே நான் கேட்பது வந்திருந்தால் உட்கார்ந்திருப்பேன. அது வரவில்லை என்பதால்தான் கேட்கிறேன். லாரிகளில் ஆட்களை ஏற்றிக்கொண்டு செல்லக்கூடாது என்று அரசாங்க உத்தரவு இருக்கிறது. அந்த அரசாங்க உத்தரவு ஏன் அமுல் நடத்தப்படவில்லை? இதனால்தான் வந்தது இந்த விபத்து. இதுபற்றி விளக்கம் கொடுக்கப்படவில்லை என்பதற்காகத்தான் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து—பேரவைக்கு ஓர் அறிவிப்புத் தருகிறேன். இனி ஒத்தி வைப்புத் தீர்மானம் தருகிற முதல் உறுப்பினரை, அந்த உரிமையோடு பேச அனுமதித்தால்தான் அவை நேரத்தைக் குறைத்துக் கொள்ளமுடியும் என்று கருதுகிறேன். திரு. சுப்பு அவர்களுடைய உரிமையை நான் பறிக்கவில்லை. ஆனால், பாதிக்கப்பட்ட தொகுதி உறுப்பினர்கள் சொன்னால் போதும் என்று சொன்னேன். அமைதியாக இருந்தீர்கள். இப்பொழுது தாங்கள் மட்டும் பாதிக்கப்பட்டவர்களுக்காக என்று சொல்லி, பேசினால், மற்ற உறுப்பினர்களுக்கு உரிமை தரவில்லை என்ற வேதனையை அளிக்கும். அது வேண்டாம், உட்காருங்கள்.

திரு. என். சுந்தரராஜ் : இப்பொழுது ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்மீது ஒரு கட்சியின் சார்பில் அனுமதி கொடுக்கிற பொழுது, அதைப் போல், பாக்கி கட்சிகள் சார்பிலும் ஒவ்வொரு நபர் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனைவரையும் அனுமதிக்கத் தயார். அதைப்பற்றி கொஞ்சம் கூடச் சந்தேகம் இல்லை. நம்முடைய நேரம் வீணாகாமல், விவாதத்திற்கு அதிகம் நேரம் வேண்டுமென்றீர்கள். அதற்காகத்தான் சொல்கிறேன். எல்லோருமே பேசுங்கள், விளக்கம் தாருங்கள். ஆனால், நம்முடைய அவையில் முக்கியமான மானியத்தில் அதிகமாகப் பேச வேண்டுமென்று விரும்புவதால், அதைத் தீர்க்க வேண்டுமென்று கூறுகிறேனே தவிர, உங்களுடைய உரிமையைப் பறிக்கவில்லை. முதலிலே கொடுத்த உறுப்பினரை அனுமதிப்பதால்........



1977 ஆகஸ்ட் 9]

திரு. என். சுந்தரராஜ் : பிரச்னைகளைப் பல கோணங்களிலே நோக்க வேண்டுமே தவிர, ஒருவர் சொன்னால் போதும் என்றால், அந்தக் கட்சியின் சார்பிலே சொன்னதாகத்தானிருக்கும். ஆகவே, மாறாகச் சொல்ல அனுமதிக்க வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இது முடிந்த வரையிலும் சரி. இனி, ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் பேச வாய்ப்பு கொடுக்கும்போது...... ஒரு கட்சிக்கு ஒருவர் என்றுதான் வைத்திருக்கிறோம். அந்த முறையைப் பின்பற்ற வேண்டும். கட்சிக்கு ஒருவரை அனுமதிக்க வேண்டும்.

திரு. என். சங்கரய்யா : நானும் அதே கருத்தை வற்புறுத்துகிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானம் என்று வரும்போது கட்சிக்கு ஒருவர் என்ற முறை இருப்பது அவசியம்.

திரு. மு. கருணாநிதி : ஏற்கனவே, இந்த அவையில் 10, 15 பேர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தாலும், கட்சிக்கு ஒருவர்....அவர்கள் யாரைப் பேசவதற்குத் தேர்ந்தெடுக்கிறார்களோ அவர்கள் கட்சியின் சார்பில் பேசுவதற்கு அனுமதிப்பதுதான் இந்த அவையின் மரபாக இருக்கிறது. அந்த வகையிலே பேசுவதுதான் நலம்.

திரு. என். சுந்தரராஜ் : தலைவரவர்களே, முதலாவது தீர்மானம் கொடுத்தவர் பேச அனுமதிக்கப்படுவார் என்று தாங்கள் சொன்னதை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் கட்சிக்கு ஒருவருக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதை ஏற்றுக்கொண்டேன். அப்படியே இனி நடைபெறும்.

## 6. அறிக்கை அளித்தல்.

மூன்றாவது சம்பளக்குழு உறுப்பினர்கள் நியமனம், பணிகள் குறித்து நிதி அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, சட்டமன்றப் பேரவை விதி 82-ன்கீழ் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஓர் அறிக்கையை அவைக்கு அளிப்பார்கள்.

[1977 ஆகஸ்ட் 9

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு உயர்நீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதி திரு. ஆர். சதாசிவம் அவர்களின் தலைமையில் மூன்றாவது சம்பளக் குழு நியமிக்க அரசு முடிவு செய்திருப்பதை நான் அவைக்கு அறிவித்ததை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். வருவாய்த்துறை வாரியத்தின் முன்னாள் முதல் உறுப்பினர் திரு. எம். ஜி. ராஜாராம் அவர்களையும் தற்போது அரசின் இணைச்செயலாளராகப் பணியாற்றும் திரு. எஸ். சீனிவாசன், ஐ.ஏ.எஸ். அவர்களையும் அக்குழுவின் ஏனைய இரு உறுப்பினர்களாக நியமிப்பதென இப்பொழுது முடிவு செய்துள்ளோம். திரு. எஸ். சீனிவாசன் குழுவின் உறுப்பினர்—செயலாளராகப் பணியாற்றுவார்.

2. இக்குழு கவனிக்க வேண்டிய அம்சங்கள் வருமாறு :—

(i) நம் மாநில அரசு விதி இயற்றும் அதிகாரத்தின் கீழ்ப் பணியாற்றும் எல்லா வகையான அலுவலர்களின் தற்போதைய வெவ்வேறு சம்பள விதங்கள், அகவிலைப்படி, ஏனைய ஈட்டுப் படிகள், சலுகைகள், ஓய்வுகால நன்மைகள் ஆகியவற்றை ஆராய்ந்து, சம்பள விதங்களைச் சீரமைக்கவும் எளிதாக்கவும் அவசியமான, நடைமுறையில் செயல்படுத்தத்தக்க மாற்றங்களைப் பரிந்துரை செய்யும். நிகரான பழைய சம்பள விதங்களிலுள்ள அலுவலர்களைப் புதிய சம்பள விதங்களில் பொருத்துவதற்கு ஏற்புடைய முறையையும் பரிந்துரை செய்யும்.

(ii) சம்பள விதங்களை முன்னர் மாற்றியமைத்ததால் முரண்பாடுகள் எவையேனும் ஏற்பட்டிருப்பின் அவற்றை ஆராய்ந்து, அந்த முரண்பாடுகளைப் போக்குவதற்குப் பொருத்தமான பரிந்துரைகளைச் செய்யும்.

(iii) தனது பரிந்துரைகளினால் உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள், மானியம் பெறும் கல்விக் கூடங்களிலுள்ள பிற பணியாளர்கள் ஆகியவர்களின் ஊதியங்களில் ஏற்படும் விளைவுகளை இக்குழு பரிசீலிக்கும். பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரை செய்த சம்பள விதங்களினால் பயனடையும் பல்கலைக் கழக ஆசிரியர்கள், அரசுக் கல்லூரிகளிலும், தனியார் கல்லூரிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆகியவர்கள் இக்குழுவின் பரிசீலனைக்கு உட்பட மாட்டார்கள்.

(iv) தமிழ்நாடு இரண்டாவது சம்பளக் குழு பரிந்துரைகளைச் செயல்படுத்திய பின்னர், கூடுதல் அகவிலைப்படி, இடைக்கால நிவாரணம் ஆகிய வகைகளில் அரசு அளித்துள்ள ஊதிய உயர்வுகளையும் ஏனைய சலுகைகளையும் குழு கருத்தில் கொள்ளும்:



(V) அரசு அலுவலர்களுக்குக் கிடைக்கிற சுகாதார வசதிகள், குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகள் வீட்டுவசதி, சிக்கனத்தை ஊக்குவிப்பதையும், சமூகப் பாதுகாப்பையும் முன்னிட்ட திட்டங்கள் குறித்துத் தக்க பரிந்துரைகளைக் குழு செய்யும்.

(vi) குழு தனது பரிந்துரைகளைச் செய்கையில், நம் மாநிலத்திலும் நாட்டிலுமுள்ள வரலாற்றுப் பின்னணி, பொருளாதார நிலைமை பரிந்துரைகளால் ஏற்படக்கூடிய நிதிச்செலவு, பொதுவாகத் திட்டத்திற்காகவும், திட்டத்தின் கீழ்வராத ஏனைய இன்றியமையாச் செலவுகள், குறிப்பாக, ஐந்தாதாவது, ஆறாவது திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இம் மாநிலத்திற்கு வேண்டியிருக்கும் நிதிவசதி ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்.

(vii) இக்குழு தனது பணியைச் செய்யுங்கால் மாநில அரசு கேட்டுக்கொள்ளக்கூடிய பிறவற்றைக் குறித்தும் பரிந்துரை செய்யும்.

3. முறையீடுகளைச் செய்துகொள்ள, பொதுமக்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள் உட்பட அரசு அலுவலகங்களின் அங்கீரிக்கப்பபட்ட சங்கங்கள் ஆகியவர்களுக்கு இக்குழு முழுவாய்ப்பளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம். இயன்ற விரைவில் இக்குழு தனது அலுவல்களை மேற்கொண்டு, அறிக்கையை அளிக்குமாறு வேண்டப்படுகிறது. இவ்வகையில் அரசு ஆணைகள் தனியே பிறப்பிக்கப்படுகின்றன. அவையினர் தகவலுக்காக நான் இந்த அறிக்கையை அவை முன் வைக்கிறேன்.

<u>திரு. ஆர். உமாநாத்:</u> பாயின்ட் ஆப் ஆர்டர்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> There shall be no debate.

<u>திரு. ஆர். உமாநாத் :</u> சப்ஜெக்ட்டிலே பாயின்ட் ஆப் ஆர்டர் 'ரெய்ஸ்' பண்ணலாம். என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் இது சம்பந்தப்பட்டது அல்ல. இந்த கமிட்டி கான்ஸ்டிடியூட் செய்வது சம்பந்தமாக ஒரு கேள்வி வந்தபோது ஊழியர்கள் பிரதிநிதிகள் இடம்பெறுவார்களா என்று கேட்டதற்கு நிச்சயமாகப் பரிசீலனை செய்யப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> நிச்சயமாகப் பரிசீலித்ததற்குப் பிறகு தேவையில்லை என்ற முடிவுக்கு சர்க்கார் வந்திருப்பதற்கான காரணத்தை நான் கடைசியில் படித்தேன். முறையீடுகளைச் செய்து கொள்ள, பொதுமக்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளின்

[திரு. கி. மனோகரன்] [1977 ஆகஸ்ட் 9

ஆசிரியர்கள் உட்பட அரசு அலுவலகங்களின் அங்கீகரிக்கப் பட்ட சங்கங்கள் ஆகியவர்களுக்கு இக்குழு முழு வாய்ப் பளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.'' ஆகை யினால் அவர்கள் இருந்து தீர வேண்டுமென்ற அவசியம் இல்லை. இல்லாமலேயே தங்களுடைய கருத்தைத் தாராளமாகச் சொல்லலாம்.

(திரு. ஜேம்ஸ் எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன் மேல் டிபேட் இல்லை.

5. தகவல் கோரல் (தொடர்ச்சி).

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தை மீண்டும் கேரளத் தோடு இணைப்பது குறித்து கேரள சட்ட மன்றத்தில் எழுப்ப பட்ட பிரச்சினை குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, ஒரு முக்கிய மான விஷயம். நேற்றையதினம் கேரள சட்டசபையில் கன்னியாகுமரி மாவட்டத்தை மீண்டும் கேரளத்தோடு இணைப் பதற்காக பிரச்னை எழுப்பப்பட்டிருக்கிறது .இதற்கு முன்ன தாக 2, 3 மாதங்களுக்கு முன்பாகவும், நெருக்கடி நிலைமை இருந்த போதும் கூட சட்ட மன்றத்தில் இந்தப் பிரச்னை எழுப் பப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய அவையின் மரபுப்படி எழுத்து மூலம் தந்திருக்கிறீர்களா? அதைக கொண்டு வரவில்லை என்பதற்காக எழுப்புகிறீர்களா என்பது தெரியவில்லை. எதன் அடிப்படையில் இதைச் சொல்கிறீர்கள் என்று தெரியவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நீங்கள் முன்பு இந்த அவையின் அங்கத்தினராக இருந்த போதுகூட இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டது, அப்போது கூட எந்த விதிமுறைக்கும் உட்பட வில்லை. ஆகவே இது விதிமுறைக்கு மாறுபட்டு இருந்தாலும் கூட அனுசரித்து ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரிடம் விளக்கம் கேட்கிறீர்கள்? அந்த சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் இந்த விளக்கம் இருக்கிறதா, தகவல் இருக்கிறதா என்று தெரிந்து கொள்ளாமல், திடீரென்று சிக்கலான ஒரு பிரச்னையை எழுப் பினால் அதற்குப் பதிலளிக்க அவர்கள் தயாராக இருக்கிறார் களா?



1977 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஏற்கனவே இந்தப் பிரச்னை குறித்து இந்தச் சபையில் விவாதிக்கப்பட்டது: திடீர் திடீ ரென்று பிரச்னையைக் கிளப்பும்போது போதுமான தகவல் இல்லாமல் இருக்கிற நேரத்தில், அதற்குப் பதில் அளிக்கின்ற வாய்ப்பு ஆட்சித் தரப்பில் இல்லாமல் போகும் என்ற காரணத்தால் திடீர் திடீரென்று இந்தப் பிரச்னையை — இப்படிக் கிளப்புகிற மரபை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்பதை எனது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் கவனத்திற்கு வைக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஒரு கிளாரிபிகேஷன். இதிலே ஏதாவது அன்பார்லிமெண்டரியாக இருந்தால் எக்ஸ்பன்ஜ் பண்ணுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் நிரம்ப அனுபவம் உள்ளவர் — அதைச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு: கி. மனோகரன் : அன்பார்லிமென்டரி பிரச்னைக்கு இடம் இல்லை. இந்தப் பிரச்னை 'இர்ரெலவன்ட்' என்பதிலே வருகிறது.

[முற்பகல் 10-10]

திரு. ஜே: ஜேம்ஸ் : தலைவரவர்களே, முக்கியமாக பத்திரிக் கைகளில் எல்லாம் காலையில் செய்தி வந்திருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதுபற்றி தெரிவிப்பார்களா என்பது வேறு. ஒரு வேளை இது முடிந்து போன பிரச்னை என்று அமைச்சர்கள் சொல்லியிருந்தால்,

* * * *

அப்படி இல்லாத காரணத்தால் பத்திரிகையில் வந்திருக் கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கேரள சட்டமன்றத்தில் உள்ள * * பற்றி இங்கே பேசுவது சரியாகாது. அது உரிமைப் பிரச்னை யாகிவிடும். அதைக் குறிப்பேட்டிலிருந்து நீக்க உத்திரவிட வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்னையில் அரசு தரப்பில் தற்போது ஏதும் தயாராக இல்லை என்று சொல்லு கிறார்கள்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 10-10 இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

Thiru J. James: This is a matter which affects my district.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, பெருமதிப்பிற்குரிய உறுப்பினர் ஜேம்ஸ் அவர்களுக்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, இது குறித்து தனியாக விவாதிக்க வேண்டும் என்று திரு. ஜேம்ஸ் அவர்கள் விரும்புவாரேயானால், எந்த முறையில் அப்படிப்பட்ட ஒரு விவாதத்திற்கு வழிவகை செய்வது என்பதை நீங்களாக யோசித்து, 'கால் அடென்ஷன் நோட்டீஸ்' மூலமாகவோ, 'அட்ஜர்ன்மெண்ட் மோஷன்' மூலமாகவோ, 'ரெஸலூஷன்' மூலமாகவோ, ஏதாவது ஒரு வழியில் நீங்கள் பார்த்து ஒத்துக் கொண்டு, அப்படிக் கொண்டு வருவதுதான் நியாயமாக இருக்குமே தவிர, இப்போது நேரத்தையும் செலவழித்துக் கொண்டு, எங்களையும் சிரமப்படுத்துகிறீர்கள். ஆகையால் தயவு செய்து இதை விட்டுவிட வேண்டும் என்று திரு. ஜேம்ஸ் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரூல் 68-ஐ படித்து விடுகிறேன். 68-வது விதியில்

'Save in so far as is otherwise provided in the Constitution or in these rules, no discussion of a matter of general public interest shall take place except on a motion made with the consent of the Speaker"

என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் படித்திருந்து, அவையில் தலைவர் சொல்லத் தவறியிருந்தால், அரசுத் தரப்பில் சொல்லத் தவறி இருந்தால், தயவு செய்து அதோடு விட்டுவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தாங்கள் இது சம்பந்தமாக ரூல் 42-ன்கீழ் 'மோஷன்' கொண்டு வந்தால் அனுமதிக்கலாம் என்று அப்படி ஆலோசனை கூறுகிறீர்கள் என்றால் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதற்கும் கூடத்தேவை இல்லாத காரணத்தால் தான், தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேனே தவிர, அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேனே தவிர, வேறு உள் நோக்கம் கற்பிக்கவோ, சிக்கலான பிரச்சனையாக ஆக்கவோ அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையில் அரசுத் தரப்பில் தகவல் இல்லை, தயாராய் இல்லை என்று சொல்கிறார்கள். அதையே எழுப்பிக் கொண்டிருந்தால் என்ன பொருள் ?





திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் நான் சொல்வதற்கு முன்பே தகவல் இல்லை என்று சொல்லி விட்டார்கள். நான் சொல்ல விரும்புவதை சொல்லி முடிப்பதற்கு அவகாசம் கொடுங்கள். நான் நீண்ட பிரசங்கம் செய்ய விரும்பவில்லை. ஒன்றே ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே இரண்டு மாதத்திற்கு முன்பு எழுப்பினார்கள். இப்போது மீண்டும் எழுப்புகிறார்கள். அதில் முக்கியத்துவம் இருக்கிறது என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஸ்டேட்மெண்டாகவோ அல்லது தலைவர் மூலமாகவோ கொடுங்கள். நாளைக்கு அரசை தகவல் கொடுக்கச் சொல்கிறேன். இப்போது நேரம் இல்லை.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, ஏற்கனவே எந்த விதியின் கீழ் இந்தப் பிரச்சனையை எழுப்புகிறீர்கள் என்று கேட்கிறார்கள். இது போன்ற மரபுகளைக் காப்பாற்ற விதிமுறை இல்லை என்றாலும், தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. ''ரெசிடுவரி பவர்'' இருக்கிறது. ''ரெசிடுவரி பவர் ஆப் தி ஸ்பீகர்—242-வது விதி இருக்கிறது''. நீங்கள் அந்த அதிகாரத்தை உபயோகப்படுத்த வேண்டும் என்று கேட்கத் தான் திரு. ஜேம்ஸ் எழுந்து நிற்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொன்ன 242-வது விதியையும் படித்தேன். அதற்கும் தலைவர் ஒப்புதல் வேண்டும். நான் ஒப்புதல் தரவில்லை. ஆகவே அதற்கு மேல் பிரச்னை இல்லை.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, ஒப்புதல் தந்த பிறகு தான் ஜேம்ஸ் எழுந்து பேசுகிறார். ஒப்புதல் 'இம்பிளைட்,' கன்சென்ட் ஆப் தி ஸ்பீக்கர் ஈஸ் இம்பிளைட்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒரு 'கிளாரிபிகேஷன்' என்று சொல்லிவிட்டு, இன்னொரு மாநிலப் பிரச்னையை, அரசுத் தரப்பில் தயாராக இல்லாத பிரச்னையை எழுப்புகிறார்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, அரசுத்தரப்பில் தயராக இல்லை என்று சொல்லி முடித்துவிடுவதாக இருந்தால் நான் ஆட்சேபனை செய்யவில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் அது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

THIRU K. SUPPU: Let me state whether it is a point of order or not. You are the Leader of the House. You are not the Speaker. I am on a point of order.

THE HON. THIRU K. MANOHARN: There is no scope for Point of Order at all. That is why I am saying......................

THIRU DURAI MURUGAN : It is none of your business to say that it is not a point of order.

Mr. SPEAKER : There is no point of order.

THE HON. THIRU K. MANOHARAN : It is a veritable trio.

நான் தயவு செய்து தெரிவித்துக் கொள்கிறேன்— ''பாயிண்ட் ஆப் ஆர்டர்'' அல்லவா என்று தீர்மானிக்கிற உரிமை எனக்கு இல்லை என்பதை உணர்ந்து சொல்கிறேன். நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது இதிலே ''பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு'' இடம் இல்லை என்பதுதான் . இது என்னுடைய கருத்தாகும்.

திரு. க. சுப்பு : நான் என்னுடைய கருத்தைச் சொன்னதற்குப் பிறகு மாண்புமிகு பேரவை முன்னவர் அவருடைய கருத்தை எடுத்துச் சொல்லலாம். இப்படிச் சில இடங்களில் விதிமுறை இல்லாமல் இருக்கலாம். பேரவைத் தலைவர் உறுப்பினர்கள் பல பிரச்னைகளை எழுப்புவதற்கு அனுமதி கொடுக்கலாம் என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்னைக்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

திரு. க. சுப்பு : ரூல் 42-ல் என்ன சொல்லப்பட்டிருந்தாலும் சபையில் ஒரு பிரச்னையை எழுப்பப் பேரவைத் தலைவர் அனுமதி அளிக்கலாம். அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இப்படி முக்கியமான பிரச்னைகளில் பேசுவதற்கு அனுமதி அளிக்கலாம்

The residuary powers of the Speaker have not been utilised properly.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து இந்தப் பிரச்னையை இத்துடன் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்பிரச்னையை கிளப்புவது சரியாக இருக்காது. திடீரென்று வந்து தலைவர் அனுமதி தர வேண்டுமென்று சொல்லி அரசுத் தரப்பில் தயாராக இல்லாத நிலையில் பிரச்னையைக் கிளப்புவது என்பதை இத்தோடு முடித்துக் கொள்ளுங்கள் இந்தப் பிரச்னையைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்,



திரு. ஏ.ஆர். மாரிமுத்து: இப்படிப்பட்ட பிரச்சனைகளை விவாதிப்பதற்கு பார்லிமெண்டில் ஒரு நடைமுறை இருக்கிறது. அதைப் பின்பற்றி, அவைத் தலைவர் இப்படிப்பட்ட தீர்மானங்களுக்கு அனுமதி அளிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு பிரச்னை கிளப்பப்படுகிற நேரத்தில் ஒரு தடவை உட்காருங்கள் என்று சொன்னால் உட்காராமல், ஒன்பது தடவை சொன்னால்தான் உட்கார வேண்டுமா ? உட்காருங்கள் என்று சொன்ன பிறகும் பேசிக் கொண்டிருப்பது முறையாகுமா என்பதைக் கொஞ்சம் விளக்கினால் நலமாக இருக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தங்களுக்கு இந்த அவையில் '' புரோஸிஜர் '' நன்கு தெரியும். அன்றைக்குத் தாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கின்ற போது பல நேரங்களில் இப்படிப்பட்ட பிரச்னைகளைக் கிளப்பியிருக்கிறீர்கள். அன்றைக்குத் தாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கும்போது மாண்புமிகு கருணாநிதி அவர்கள் முதலமைச்சர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப்பட்ட ஒழுங்குப் பிரச்னைகளை நான் கிளப்பவில்லை. தயவுசெய்து இந்தப் பிரச்னை முடிந்த பிறகு உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் என்னுடைய கட்சிக்காரரின் கேள்விக்கு தாங்கள் பதில் சொல்வதற்கு முன்னால் இன்னொரு உறுப்பினர் பேச முடியுமா ?

திரு. துரை முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டு பேர் ஒரே நேரத்தில் நிற்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் நிற்கலாமா ?

*திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே திரு. அம்பிகாபதி அவர்கள் ஒரு நல்ல கேள்வியை இங்கே எழுப்பினார்கள். அவருடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் சண்முகம் அவர்கள் கேட்ட பிரச்னைக்கு நீங்கள் பதில் சொல்வதற்கு முன்னால் திரு. ஜேம்ஸ் அவர்கள் எழுந்திருக்கலாமா என்று கேட்டார்கள். நான் தங்கள் மூலம் கேட்டுக் கொள்வது, காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. மாரிமுத்து ஒரு பிரச்னையை எழுப்பி, அதற்குத் தாங்கள் பதில் சொல்வதற்கு முன்பாக கூத்தக்குடி சண்முகம் ஒரு பிரச்னையை எழுப்பலாமா ?

[1977 ஆகஸ்ட் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன், நடைமுறையை நன்கு புரிந்து கொண்டு பிரச்சினைகளைக் கிளப்ப வேண்டும். "பாயின்ட் ஆப் ஆர்டரானாலும் சரி, கிளாரிபிகேஷனானாலும் சரி, எதுவானாலும் என்னுடைய அனுமதியைப் பெற்றுப் பேசினால் நலமாக இருக்கும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் :

* * *

(முற்பகல் 10.20)

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடுதான் நான் பேசினேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதை அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவரைப் பற்றி*என்று சொன்னாரே, அதை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : [ * *] பற்றிய குறிப்புகள் நீக்கப்பட்டனவா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * * அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட நான் உத்தரவிடுகிறேன்.

திரு.ஜே.ஜேம்ஸ்: தாங்கள் உறுப்பினராக முன்பு இந்த அவையில் இருந்தபோதும் இதே பிரச்சினையை நான் எழுப்பி இன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற, அன்றைய தினம் மாண்புமிகு முதல் அமைச்சராக இருந்த அவர்கள் அதற்கு ஒரு பதில் கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முக்கியமான காரியங்களை நாம் கேள்வி நேரம் முடிந்ததும், மற்ற அலுவல்களுக்குப் போவதற்கு முன்பாக, பாராளுமன்றத்தில் ''ஸீரோ ஹவர்'' என்றிருப்பதைப்போல் இங்கும் ஒரு மரபைக்கடைப்பிடித்து வந்தோம். அது இன்றைய தினம் எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கும் புலவர் கோவிந்தன் அவர்களுக்கும் தெரியும். தாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோதும் தெரியும். இப்போது ஆளும்கட்சிக்கு வந்திருந்த போதிலும் தெரியும். எனவே இந்த மரபைத் தொடர்ந்து நடத்துவது முறையாக இருக்கும் என்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 10-15—10-25 இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.



1977 ஆகஸ்ட் 9]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ரூல் 42, 41 கீழ் உள்ளவை முடிந்த பிறகு வேறு பொருள்கள் பற்றி பேச வேண்டும். திரு. ஜேம்ஸ் அவர்கள் இதை இப்பொழுது எழுப்பியதே தவறு. கவன ஈர்ப்புத் தீர்மானம் கூட வரவில்லை. அதற்குள்ளாக திரு. ஜேம்ஸ் அவர்கள் எழுந்து விட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானம் முடிந்து விவாதத்திற்குப் போவதற்கு இடையே உள்ளதைத்தான் 'ஸீரோ ஹவராக' உபயோகப்படுத்துவது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை முடிந்துவிட்டது என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, கவன ஈர்ப்பு....

திரு. ஆர். மணிமாறன் : கொடுக்கப்பட்டிருக்கும் அந்த ரிபோர்ட்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் வராது.

திரு. ஆர். மணிமாறன் : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த ரிப்போர்ட் மேல் பேசக்கூடாது. எல்லாம் முடிந்துவிட்டது. தயவு செய்து அமருங்கள்.

7. கவன ஈர்ப்பு.

(அ) கைத்தறித் துணிகள், இராமநாதபுரம் மாவட்டம் எமனேஸ்வரம் பகுதியில் உள்ள நெசவாளர் சங்கங்களில் இலட்சக் கணக்கில் தேங்கியிருப்பதால், நெசவாளர்கள் வேலையற்றிருக்கும் நிலை குறித்து.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே. கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கைத்தறிப் பஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

" இராமநாதபுரம மாவட்டம் எமனேஸ்வரம் பகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர் சங்கங்களிடம் ரூ. 40 இலட்சத்திற்கு அதிகமாகத் துணிகள் தேங்கியதன் காரணமாக ஆயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் வேலையற்றிருக்கும் நிலைமை குறித்து.''

*மாண்புமிகு திரு. கே. ராஜா முகமது : தலைவர் அவர்களே, எமனேஸ்வரம்-பரமக்குடி பகுதியில் 35 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 4,000 கைத்தறி நெசவாளர்களைக்கொண்டு

இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் யாவும் 100 நெ.: 80 நெ. சேலைகளை உற்பத்திசெய்து வருகின்றன. இச்சங்கங்கள் சராசரியாக சுமார் 20 இலட்சம் மதிப்புள்ள துணிகளை மாதந்தோறும் உற்பத்தி செய்து வருகின்றன. இப்பகுதிச் சங்கங்களில் தற்பொழுது சேலைகள் இருப்பு சுமார் 25 இலட்சம் முதல் 30 இலட்சம் வரை என்று கூறப்பட்டுள்ளது. கோ-ஆப்டெக்ஸ் ரூ. 10 இலட்சம் வரை சரக்குகளைக் கொள்முதல் செய்ய திட்டமிட்டு ஏற்கெனவே ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள கைத்தறி துணிகளைக் கொள்முதல் செய்து விட்டது. மேலும் கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து வருகிறது. இச் சங்கங்களிலிருந்து கடந்த 5 மாதங்களில் கோ-ஆப்டெக்ஸ் ரூ. 45 இலட்சம் மதிப்புள்ள துணிகளைக் கொள் முதல் செய்துள்ளதென்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

முகவை மாவட்ட மத்திய வங்கி இந்த 35 சங்கங்களுக்கு காசுக் கடன் (Cash/credit) ரூ. 52·28 இலட்சம் வரை வரம்பு வைத்து வழங்கியுள்ளது. இக்காசுக்கடனுக்கு இணையாக சரக்கு இருப்பு ரூ. 25 இலட்சத்திலிருந்து 30 இலட்சம் ஆகும். இச் சங்கங்கள் அங்கத்தினர்களுக்குத் தொடர்ந்து வேலை கொடுக்கும் அளவுக்கு இவைகள் உச்ச கடன் வழங்கும் தன்மை பெற்று உள்ளன. மேலும் தற்போதைய கைத்தறித் துணிச் சரக்கு இருப்பு 1½ மாதத்திய உற்பத்தியாகும். இது இச்சங்கங்களின் வழக்கமான சரக்கு இருப்பு ஆகும். இச்சங்கங்களின் இச்சரக்கு இருப்பு கவலை அளிக்கக் கூடிய அளவுக்கோ, அங்கத்தினர்களுக்குத் தொடர்ந்து வேலை கொடுக்க முடியாத அளவுக்கோ நிச்சயமாக இல்லை எனக் கூறலாம். கோ-ஆப்டெக்ஸ் சரக்குக் கொள்முதலைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மேலும் அவற்றுக்குத் தீபாவளி காலத்தில் சிறப்புத் தள்ளுபடி அறிவிக்கப்பட்டவுடன் நல்ல விற்பனை கிடைக்கும். முகவை உதவி இயக்குநர், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து ரூ. 40,000 வரை கடன் மூலம் நூல் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளார். நெசவாளர்களுக்குத் தேவையான எல்லா மூலப்பொருள்களும் தடங்கலின்றி வழக்கம் போல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்று கூறி அமருகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, ஒன்றரை மாத உற்பத்தி தேங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது 30 லட்சத்திற்கும் மேலாக இருக்கும். கோ-ஆப்டெக்ஸ் மூலமாக 10 லட்சம் வரை கொள்முதல் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டிருந்தும் இதுவரை இரண்டு அல்லது இரண்டரை இலட்சம் வரை கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மீதியை உடனடியாகக் கொள் முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும் தேங்கியிருக்கும் இந்த 30 லட்சம் ரூபாய் சரக்கில் சரிபாதி அளவுக்காவது கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?





மாண்புமிகு திரு. கே. ராஜா முகமது: தலைவர் அவர்களே கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற துணிகளில் 50 சதவீதம், 60 சதவீதம் வரையுள்ள துணிகள் கோ-ஆப்டெக்ஸ் மூலம் வினியோகம், விற்பனை செய்யப்பட்டு வருகிறது, மேலும் இந்தத் தேக்கங்கள் இல்லாதவாறு, உற்பத்தி விநியோகம். இவை, கோ-ஆப்டெக்ஸ் மூலம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை, இரண்டு லட்சம் ரூபாய் அளவுக்குக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. தொடர்ந்து கொள்முதல் நடைபெற்று வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பெரியாறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடாததால் மேலூர் தொகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்து.

திரு. அ. மா. பரமசிவன்: பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு நீர்த் தேக்கத்திலிருந்து இதுவரையில் தண்ணீர் திறந்து விடாததால் மேலூர் சட்ட மன்றத் தொகுதிக்கு வேண்டிய நீர் கிடைக்காததால் அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள அவசர நிலை பற்றியும் அதற்கு உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்தும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; பேரவைத் தலைவர் அவர்களே, கல்லந்திரி மதகுப் பலகை மேலுள்ள இருபோக சாகுபடி நிலங்களின் பாசனத்திற்காக பெரியாறு தலைமைக் கால்வாயைத் திறக்கும் இயல்பான தேதி ஜூன் முதல் நாளாகும். ஆகஸ்ட் 15-ம் தேதி அன்றுதான் ஒருபோக சாகுபடி செய்யும். மீதமுள்ள நிலப் பரப்புகளுக்குத் தண்ணீர் வழங்க வேண்டும். மேலூர் வட்டத்திலுள்ள நிலப்பரப்பு பெரும்பாலானவை ஒரு போக சாகுபடி நிலங்கள்தான் ஆகும்.

இந்த வருடம் இயல்பான தேதியாகிய ஜூன் மாதம் முதல் நாளன்று கல்லந்திரி மதகுப் பலகை மேலுள்ள இருபோக சாகுபடி நிலங்களின் பாசனத்திற்காகத் தண்ணீர் ஏற்கனவே திறந்துவிடப்பட்டாயிற்று. நீர்த்தேக்க நிலை சாதகமாக உள்ளதால் குறிப்பிட்ட ஆகஸ்ட் 15-ஆம் தேதியன்று ஒருபோக சாகுபடி நிலங்களுக்கும் தண்ணீர் திறந்துவிடக் கருதப்படுகின்றது.

## 5. தகவல் கோரல் (தொடர்ச்சி)

### (இ) தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது கொடுக்கப் பெற்றுள்ள உரிமை மீறல் பிரச்சினை குறித்து.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, நேற்றையதினம் நமது தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தவறான தகவலைத் தந்தார் என்பதற்காக அவர் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வந்திருக்கிறேன். உரிமைப் பிரச்சினைக்கு தாங்கள் முதலிடம் கொடுத்திருக்க வேண்டும். அதை இப்போது உடனடியாக எடுத்துக் கொள்ளலாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மீது கொடுக்கப்பட்டுள்ள உரிமை மீறல் பிரச் நாளைக் காலை எடுத்துக் கொள்ளப்படும். உரிமை மீறல் பிரச்னையை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். முதலில் இதைக் கொடுத்த உறுப்பினர் அந்த நேரத்தில் தனது ஆசனத்தில் இருக்க வேண்டும். நான் பார்த்தேன், அப்போது அவர் ஆசனத்தில் இல்லை. எதுவானாலும் இது நாளைக் காலை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கே. கந்தசாமி : திரு. பரமசிவம் அவர்கள் எழுப்பிய கவன ஈர்ப்புத் தீர்மானம் பற்றி ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இதைக் கேட்க முடியாது, அவர்தான் கேட்க வேண்டும். . . .

### (ஈ) சுந்தரம்—கிளேடன் தொழிற்சாலை குறித்து

திரு. மு. கருணாநிதி : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், உரிமைப் பிரச்சினையை நாளைக் காலை எடுத்துக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறீர்கள். நன்றி. அதற்கிடையே பாடி தொழிற்சாலையில் அமைதி ஏற்பட்டுவிட்டதாகவும், பிரச்னைகள் தீர்க்கப்பட்டுவிட்டதாகவும் தொழிற்சாலை திறக்கப்படப் போவதாகவும் அவையிலும் சொல்லப்பட்டது, பத்திரிகைகளிலும் செய்தி வந்திருக்கிறது. ஆனால் நேற்று மாலையிலும் இன்று காலையிலும் வந்திருக்கின்ற செய்திகளைப் பார்த்தால், மீண்டும் அங்கு ஏதோ குழப்பமான சூழ்நிலை இருப்பதாகத் தான் தெரிகிறது. இதைப்பற்றி அரசுக்கு ஏதாவது செய்தி வந்திருக்கிறதா, அதன்பேரில் அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

(முற்பகல் 10–30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி ஒரு குறுகிய காலக் கேள்வி கொடுத்தால், நான் தகவல்கள் கொடுக்கத் தயாராக இருக்



## 8. 1977-78 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும்—வாக்கெடுப்பும் (தொடர்ச்சி).

### கோரிக்கை எண் 35.—உணவுப்பொருள் வழங்கல்.

### கோரிக்கை எண் 56—பல்வகை மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 35—உணவுப் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ், ரூ. 4,03,95,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைப் பற்றி விவாதிக்க;

"நிதிக் கோரிக்கை எண் 35—உணவுப் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,03,95,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, நேரடிக் கொள்முதலும், உணவுப் பொருள்களின் மொத்த வியாபாரத்தையும் அரசு மேற்கொள்வதன் அவசியம் பற்றி விவாதிக்க,

"நிதிக் கோரிக்கை எண் 35—உணவுப் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,03,95,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு எ. சுவாமிதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் (கார்ப்பரேஷன்) கிடங்குகளிலிருந்து உணவுப் பொருள் சரியான எடை போட்டு வழங்குகிறார்களா என்பதைக் கண்காணிக்க அங்கு எடை அளவு (Weights and Measures) ஆய்வாளர்கள் நியமிக்கப்படாதது குறித்து விவாதிக்க;

"நிதிக் கோரிக்கை எண் 35—உணவுப் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,03,95,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் அரசே உணவு தான்ய வர்த்தகத்தை ஏற்று நியாய விலைக் கடைகள் மூலம் மக்களுக்கு உணவு தான்யம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டியது பற்றி விவாதிக்க;

"நிதிக் கோரிக்கை எண் 35—உணவுப் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,03,95,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

1977 ஆகஸ்ட் 9] [திரு. எஸ். இராகவானந்தம்]

கிறேன். அவர்களுடைய நடவடிக்கைகள் பற்றித் தகவல்கள் வந்திருக்கின்றன. தங்களையும் கேட்டுச் செய்யவில்லை என்ற தகவலும் வந்திருக்கிறது. எனவே, தொழிலாளர்கள் 10-ம் தேதி வேலைக்குச் சென்றால் அவர்களை ஏற்றுக் கொள்வதில்லை என்ற தகவலும் வந்திருக்கிறது. இதைத் தவிர மேலும் சில தகவல்களும் வந்திருக்கின்றன. மறியல் செய்வதாகவும், நேற்றுக் காலை திரு. சித்தன் அவர்கள் நேப்பியர் பார்க்கில் பேசியதாகவும் தகவல் வந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததை எல்லோரும் ஏற்றுக் கொண்டு ஒரு சகஜ நிலையை ஏற்படுத்துவார்கள் என்று நம்புகிறேன். காரணம்,

This is an automobile industry for the whole of India. The whole automobile industry will be affected.
எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்; வேண்டிக் கொள்கிறேன்.

*திரு. மு. அம்பிகாபதி: தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், சுமுகமாக இதற்குத் தீர்வு காண விரும்புவதாகச் சொன்னார்கள். ஆனால், அறிக்கைகள் வந்திருப்பதில், தொழிற் சங்கங்களைக் கலந்துகொண்டு 18(1)ன் படியோ, அல்லது 12(3)ன் படியோ நடக்கவில்லை என்றும், இதில் சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்கள் கலந்து கொள்ளவில்லை என்றும்தான் அறிக்கைகள் வந்திருக்கின்றன. எனவே, இப்படிப்பட்ட சிக்கல்களை, சூழ்நிலையை அரசு கவனத்தில் கொண்டு, துரிதமாகப் பரிகாரம் தேட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இதை எந்த விதிப்படி கேட்கிறார்கள்?. என்னிடத்திலே தகவல்கள் வந்திருக்கின்றன. நான் எப்போது வேண்டுமானாலும் சொல்லத் தயாராக இருக்கிறேன். 'ஐ ஆம் ரெடி'. தங்கள் உத்தரவுப்படி நடந்து கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகவல்கள் தயாராக இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைச் சொல்வதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், ஒரு ஸ்டேட்மெண்டாகக் கொடுத்தால் நல்லது. நாளைக்கு முடியுமானால், இந்தச் சபைமுன்பு விதி 82இன்கீழ் ஒரு அறிக்கை வைக்கலாம்.



1977 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

''நிதிக் கோரிக்கை எண் 56—பல்வகை மூலதனச்செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,61,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

Thiru J. JAMES: Sir, to discuss policy, I move—'That the allotment of Rs. 7,61,24,000 under Demand No. 56—Miscellaneous Capital Outlay be reduced by Rs. 100.

The Hon. Thiru G. R. EDMUND: I have not received a copy of the Cut Motion for this Demand.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. இந்த மானியக் கோரிக்கைகளின் மேல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதும் கூற வேண்டுமென்றால் கூறலாம்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண்கள் 35, 56 ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய உரை* அச்சடித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதையே என் உரையின் முன்னுரையாக அவை நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றிட வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

*புலவர் கா. கோவிந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன். பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள் என்னுடைய அருமை நண்பர்களிலே ஒருவராவார்கள். அவர்கள் உணவுத் துறையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் உணவுத் துறை பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற அமைச்சர்கள் எவ்வளவு நல்ல உணர்வோடு நல்ல உள்ளத்தோடு நாட்டு மக்களுக்கு நல்ல முறையில் உணவு வழங்க வேண்டுமென்ற உயர்ந்த குறிக்கோளோடு செயல் புரிந்தாலும் அவர்கள் எல்லாம் கடைசியிலே நல்லவர்கள் என்ற பாராட்டைப் பெறுவதற்கு மாறாக பழிச் சொல்லை ஏற்கின்ற ஒரு நிலைதான் தொடர்ந்து வந்திருக்கிறது. அப்படிப்பட்ட மிகக் கடினமான பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற மாண்புமிகு எட்மண்ட் அவர்கள் அந்த நிலைக்கு ஆளாகாமல் தன்னுடைய பதவிக் காலத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பாராட்டக்கூடிய அளவுக்கு தன்னுடைய பணியைப் புரியவேண்டுமென்ற என் வாழ்த்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

* 127 முதல் 182-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

[திரு. புலவர் கா. கோவிந்தன்] [1977 ஆகஸ்ட் 9

மிக முக்கியமான ஒரு மானியத்தை நாம் விவாதித்து கொண்டிருக்கிறோம். இந்த உடலுக்கு உணவின் பிண்டம் என்றும் பெயர் உண்டு. ''உண்டி முதற்றே உணவின்பிண்டம்''. ஆகவே, இது எவ்வளவு முக்கியமான மானியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணருவார்கள்.

ஒரு நல்ல அரசு எப்படிப் பணிபுரிய வேண்டுமென்பதற்கு நம்முடைய தமிழகத்தில் நாம் தெரிந்த அளவுக்கு அரசியல் நிலை ஏற்பட்ட நாள் தொட்டு பசியைப் போக்குவதுதான் ஒரு அரசினுடைய தலையாய கடமை என்பதை வற்புறுத்த வேண்டுமென்றே '' பசியும், பிணியும் பகையும் நீக்கி.... ; என்று பசியை நீக்குவதை முதல் பணியாகச் சொல்லியிருக்கிறார்கள் அப்படிப்பட்ட மிகப் பெரிய, மிகச் சிறப்பான பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில் நம்முடைய அரசு எந்த நிலையில் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

1967-ல் இந்த மாநிலத்தினுடைய ஆட்சிப் பொறுப்பைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்ட நேரத்தில் தமிழகத்தினுடைய உணவு நிலைமை எப்படி இருந்தது என்பதைப் பற்றியெல்லாம் அப்போது கூறப்பட்டது. சென்னை மாநகர மக்களுக்கு ஒரு நாளைக்கு வேண்டிய உணவுகூட இல்லையென்று சொல்லுகின்ற அளவுக்கு 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நேரத்தில் தமிழ் நாட்டில் உணவு நிலைமை பற்றி நாட்டு மக்கள் அறிந்திருந்தார்கள். ஆனால், டாக்டர் கலைஞர் இந்த ஆட்சிப் பொறுப்பில் இருந்து இறக்கப்பட்ட நேரத்தில் தமிழகத்தின் உணவு நிலைமை எப்படி இருந்தது என்பதையும் நாட்டு மக்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் அட்வைசராக இருந்த திரு. ஆர். வி. சுப்பிரமணியம் தமிழகத்தின் உணவு நிலைமை மிக மிகத் திருப்திகரமாக இருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். இப்போது இந்த அறிக்கையை அளித்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக தமிழகத்தினுடைய நிலைமை மிக திருப்திகரமாக இருக்கிறது என்ற கருத்தை நன்றாகச் சொல்லியிருக்கிறார்கள்.

'' பொது விநியோகத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு இப்பொழுது கணிசமான கையிருப்பு அரசின் வசம் உள்ளது '' என்றும்

'' ஒவ்வொரு மாதமும் 40 ஆயிரம் டன்கள் பொது விநியோகத்திற்குத் தேவைப்படும் என்றும் கணக்கிட்டு உணவு வரவு செலவுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் பொது விநியோகத்தை நடத்துவதற்கு நம்மிடம் போதுமான அரிசி கையிருப்பில் உள்ளது '' என்றும் கூறியிருக்கிறார்கள்.

[முற்பகல் 10-40]

அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி விவரத்திலே 1975-76-ம் ஆண்டில் கொள்முதல் 8·90 இலட்சம் டன் என்றும் விநியோகம் செய்தது 8·94 இலட்சம் டன் என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது.



1977 ஆகஸ்ட் 9] [திரு. புலவர் கா. கோவிந்தன்]

ஆக, 5 இலட்சம் டன், விநியோகம் செய்த பிறகும்கூட கையிலே இருப்பு இருக்கக்கூடிய நிலையில்தான் கலைஞர் ஆட்சி கலைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1976-77 ஆம் ஆண்டில் கொள்முதல் 1·58 இலட்சம் டன் ஆகவும் விநியோகம் 6·71 இலட்சம் டன் ஆகவும் இருந்தும் நம்முடைய அமைச்சர் அவர்கள் கையிருப்பு நல்ல நிலைமையிலே இருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமை தமிழகத்திலே இருப்பதற்கு டாக்டர் கலைஞர் ஆட்சிதான் காரணம் என்பதை நாட்டு மக்கள் மறுக்க மாட்டார்கள். இன்றைக்கு கொள்முதலிலே என்ன நிலைமை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

எந்தக் கட்சியாக இருந்தாலும், ஒரு கட்சி ஆளுங்கட்சியாக இருக்கிற நிலைமை மாறினாலும் அல்லது ஆளுங்கட்சியாக வருகிற வாய்ப்பைப் பெற்றிருக்காத நிலைமையிலும் ஆளுங்கட்சியாக, மாறும் வாய்ப்பே இல்லை என்கிற நேரத்திலும் என்ன வேண்டுமானாலும் பேசலாம், பேசியிருக்கிறார்கள்.

''சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல் ;

சொல்வது எல்லோர்க்கும் எளிது, ஆனால் சொல்லிய வண்ணம் செய்வது என்பது எவ்வளவு கடினம் என்பதை இந்த இடத்திலே இருந்து அந்த இடத்திற்குப் போனதற்குப் பின் உணருகிறார்கள்.

மாண்புமிகு மதியழகன் அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரையில் இங்கே எதிர்க்கட்சியிலே இருந்தபோது அப்போது வழங்கப்பட்ட அரிசியைக் கொண்டுவந்து காட்டி எந்த அளவிற்கு ஆளுங்கட்சியைப் பற்றிப் பேசினார்கள் என்பதை மக்கள் அறிவார்கள். ஆனால், அவர்களே, உணவு அமைச்சராக வந்ததற்குப் பிறகு என்ன நிலைக்கு ஆளாக்கப்பட்டார் என்பதை நாம் அறிவோம்.

ஆகவே, இந்த மன்றத்திலே ஆளுங்கட்சியாக வராது இருக்கிற நேரத்திலும் அல்லது 4, 5 உறுப்பினர்களைக் கொண்டு ஆளுங்கட்சியாக என்றைக்குமே வர முடியாது என்ற நிலைமையிலும் இருக்கின்றவர்கள் உணவு மானியத்தைப் பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் எந்தக் கருத்துக்களை வேண்டுமானாலும் கூறலாம், ஆனால் பொறுப்போடு, நாட்டு மக்களுக்கு நல்ல முறையிலே உணவு கிடைக்கச் செய்ய வேண்டுமென்று விரும்புகின்ற உறுப்பினர்கள் மிக நிதானத்தோடு அந்தக் கருத்துக்களை எல்லாம் கூறுவார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணவு வழங்குவதிலே எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்று இதிலே சொல்லியிருக்கிறார்கள். '' ஈரமான நெல் வாங்கப்பட்டால் அது அரைவைக்கு எடுத்துச் செல்வதற்கு முன்பே முளைத்து விடுகிறது.

[திரு. புலவர் கா. கோவிந்தன்] [1977 ஆகஸ்ட் 9

இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட நெல் அரைவையாளரிடம் கொடுக்கப்படுகிறது. தனியார் வியாபாரத்திற்கு தரமான அரிசியை தயார் செய்வதில் காட்டுகின்ற ஆர்வமும் அக்கறையும் அரசினால் கொள்முதல் செய்யப்பட்டு அரைவைக்கு கொடுக்கப்படுகின்ற நெல்லைப் பொறுத்த வரையில் காட்டப்படுவதில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படிப் பல குறைகள் உணவுத் துறையிலே அரசுக்கு ஏற்படுகிறது. அந்த சிரமங்களை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இது உண்மையான நிலைமைதான். இது அங்கே போய் உட்காரக்கூடிய நிலையிலேதான் உணரக்கூடிய நிலைமை ஏற்படுகிறது, இந்தப் பக்கத்திலே இருந்து பேசுகிற போது இல்லை. நான் இந்த இடத்திலே இருந்து பேசுவதால் வழக்கமான முறையிலேதான் பேசுவேன் என்று யாரும் எதிர்பார்க்கவேண்டாம். மக்களுக்கு நல்ல முறையிலே உணவுப் பொருள் வழங்கப்பட வேண்டும்.

இப்பொழுது கொள்முதல் பற்றி ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். வியாபாரிகளிடமிருந்து குறிப்பிட்ட அளவு என்று வாங்குவதற்குப் பதிலாக விவசாயிகளிடமிருந்தே வாங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஏற்படுகிற தவறுகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எவ்வளவு ஈரம் இருக்கிறது என்பதைக் காட்டுவதற்கு ஒரு கருவியை வைத்திருக்கிறார்கள், ஆனால் அந்த கருவியைச் செயல்படுத்துவதில்தான் எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் உணர வேண்டும். அந்தக் கருவியைச் செயல்படுத்துவதில் அந்தக் கருவியைச் செயல்படுத்துகிறவரின் கருத்துக்கு ஏற்ப அந்தக் கருவி ஈரத்தைக் காட்டும் என்பதை நான் இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். என்னிடத்திலே கூட காட்டினார்கள். அதிலே 5 கிலோவை குறைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள், இப்படிப்பட்ட முறைகள் எல்லாம் இருப்பதால் விவசாயிகளிடமிருந்து நெல் வாங்குகிற போது வேண்டியவர்களாக இருந்தால் ஈரம் குறையும், வேண்டாதவர்களாக இருந்தால் ஈரம் அதிகமாகும் என்ற நிலைமைதான் ஏற்படுகிறது. ஒரு விவசாயி 25 மூட்டை நெல்லைக் கொண்டு வந்து போட்டார். அவர்கள் எடை போட்டுப் பார்த்து 20 மூட்டைகளுக்குப் பணம் கொடுக்கப்பட்டது. அந்த விவசாயி அவருடைய நண்பரிடத்திலே இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு விட்டது என்று சொல்லி நெல் வாங்கிய அதிகாரிகளிடம் அந்த நண்பர் சென்று கேட்டார். கேட்டவுடனே மீண்டும் இரண்டு மூட்டைக்குக் கணக்குப் போட்டுப் பணத்தைக் கொடுத்து விட்டார்கள். அவர்களைக் கூப்பிட்டுக் கேட்டேன். அந்த நிலைமைகள் ஏற்பட்டதைப் பற்றிக் கேட்டேன். ஒன்று, அந்த நண்பர், உங்கள் துறையிலே பணி புரிபவர்கள் என்று இரண்டு மூட்டைகள் அதிகமாகப் போட்டுக் கொடுத்திருந்தாலும் அது தவறுதான். கொடுக்க வேண்டியதில் இரண்டு மூட்டைகளை அதிகாரிகள் குறைத்து விட்டார்கள், தவறு செய்து விட்டார்கள் ; அதனால் கொடுக்கப்பட்டது என்று



1977 ஆகஸ்ட் 9] [திரு. புலவர் கா. கோவிந்தன்]

சொன்னாலும் அதுவும் தவறுதான். இந்த நிலைமைகளையெல்லாம் போக்குவதில் அதிகாரிகள் எவ்வளவு விழிப்பாக இருக்க வேண்டுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

உணவு மண்டலமாக ஆந்திரா, கர்நாடகம் ஆகிய இரண்டும் தமிழ்நாட்டோடு சேர்ந்தும் கேரளா சேரவில்லை. கேரளா சேராமல் உபரியாக உள்ள ஆந்திரம் நம்மோடு சேர்க்கப்பட்டு விட்டதால், ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு அதிகமாக நெல் வந்து விட்டதால் தமிழகத்திலே எந்த அளவிற்கு நெல் விலை பாதிக்கப்பட்டிருக்கிறது, விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த நெல்லை அரைத்து அரிசியாக்கி விற்கிறார்கள். இதிலே நான் சென்ற முறையேகூட உணவுத் துறை அமைச்சராக இருந்தவர்களிடம் வாதாடியிருக்கிறேன். நெல்லை வாங்கி அதை அரிசியாக மாற்றுவதற்கு ஆகக்கூடிய செலவுகளைக் கூட்டிப் பார்த்தால் நான் அப்பொழுதே சொன்னேன்—இதற்கென்று அரிசியின் விலையைக் குறைக்க வேண்டும், அரிசி விலையைக் குறைக்கவில்லை என்றால், இப்பொழுது இருப்பதுதான் நியாயம் என்றால், அந்த அளவிற்கு நெல்லின் விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்ற கணக்கை அப்பொழுதே கொடுத்தேன்.

நம்முடைய அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற சில புள்ளி விவரங்களில் இருந்து சில விஷயங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1970 ஆம் ஆண்டு நெல்லின் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 48-ஆக இருந்தது. 1½ குவிண்டால் நெல் 1 குவிண்டால் அரிசியாகும் என்று சொல்கிறார்கள். ஒன்றரை குவிண்டால் நெல் அல்லது 1 குவிண்டால் அரிசி 72 ரூபாய் ஆகிறது. ஆனால், அந்த ஆண்டிலே அரிசியின் விலை கிலோவிற்கு 96 காசாக இருந்தது. அப்படியென்றால் ஒரு குவிண்டால் 96 ரூபாய் ஆகிறது. அப்படிப் பார்க்கும் பொழுது வித்தியாசம் கொள்முதலுக்கும், விற்பனைக்கும் இடையில் 24 ரூபாய் ஆகிறது. இது 1970ஆம் ஆண்டிலே. 1974ஆம் ஆண்டில் 1½ குவிண்டால் நெல் அல்லது 1 குவிண்டால் அரிசி 105 ரூபாய் ஆகிறது. ஏனென்றால் 1974-ல் நெல்லின் விலை குவிண்டாலுக்கு 70 ரூபாயாக இருந்தது. அப்பொழுது அரிசி என்ன விலை என்றால் கிலோவுக்கு ரூ. 1·40 ஆக இருந்தது. அப்படியென்றால் ஒரு குவிண்டாலுக்கு 140 ரூபாய் ஆகும், அதன்படி வித்தியாசம் 35 ரூபாய் ஆகிறது. 1975-ஆம் ஆண்டில் நெல்லுக்குக் கொடுக்கப்பட்ட விலை போதாது என்பதால், மத்திய அரசிடம் கேட்டும் அவர்கள் ஒத்துக்கொள்ளாத காரணத்தினால் நம்முடைய மாநில அரசே, டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலே இருந்த மாநில அரசே நம்முடைய மாநிலத்திலே விவசாயிகளுக்கு ஏதாவது தர முடியுமா என்பதை ஆராய்ந்து போனஸ் என்ற வகையில் 10 ரூபாயும், வண்டிச் சத்தம் என்று 5 ரூபாயும் ஆக 15 ரூபாய் 1 குவிண்டாலுக்குக்

*[திரு. புலவர் கா. கோவிந்தன்]* *[1977 ஆகஸ்ட் 9*

கொடுத்தது. அந்த நெல்லின் விலை 1975 ஆம் ஆண்டிலே 78 ரூபாயோடு இந்த 15 ரூபாயும் சேர்ந்து 93 ரூபாய் ஆகியது. அப்படிப் பார்க்கும் பொழுது 1½ குவிண்டால் நெல்லுக்கு 139 ரூபாய் 50 காசு ஆகிறது. அரிசியின் விலை அப்பொழுது கிலோவுக்கு ரூ. 1·70. அப்படியென்றால் 1 குவிண்டால் 170 ரூபாய் ஆகிறது. இதிலே அதிகமாக இருப்பது 30 ரூபாய் 50 காசுதான். 1976 ஆம் ஆண்டிலே நெல்லின் விலை குவிண்டாலுக்கு 78 ரூபாய். 1 1/2 குவிண்டால் நெல் அல்லது 1 குவிண்டால் அரிசியின் விலை 117 ரூபாய் ஆகிறது. ஆனால் இப்பொழுது என்ன விலைக்கு அரிசி விற்கிறார்கள் என்றால் கிலோவிற்கு ரூ. 1·60. அப்படியென்றால் குவிண்டால் 160 ரூபாய் ஆகிறது. இதிலே ஏற்படுகின்ற வித்தியாசம் 43 ரூபாய். இதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். 1975-ஆம் ஆண்டிலே வித்தியாசம் 30 ரூபாய் 50 காசு. ஆனால் இப்பொழுது வித்தியாசம் 43 ரூபாய். 75-லே போனஸாகவும், வண்டிச் சத்தமாகவும் கொடுத்தது 1 குவிண்டாலுக்கு 15 ரூபாய் அதிகம் கொடுத்தும், அப்பொழுது கிலோ ரூ. 1-70-க்கு விற்றிருக்கிறது. ஆனால் இப்பொழுது கிலோ ரூ. 1,60[க்கு விற்கிறது. நெல்லின் விலை 22 1/2 ரூபாய் குறைந்திருக்கின்றபொழுது அரிசியின் விலையை 10 ரூபாய்தான் குறைத்திருக்கின்றீர்கள். இந்த 12 1/2 ரூபாய் முறையில்லாத முறையிலே அரிசியின் விலையிலே வைத்து விற்கப்படுகிறது. ஒன்று அரிசி விலையைக் குறையுங்கள். அல்லது 12 1/2 ரூபாயை நெல்லின் விலையோடு கூட்டிக் கொடுக்க வேண்டும்.

அடுத்து, நெல்லைக் கொள்முதல் செய்யும் நேரத்தில் அதிகாரிகளே கொள்முதல் செய்கின்ற நிலைமையில் நான் முன்பு கூறிய தவறுகள் ஏற்படுவதோடு யாரும் எந்தவிதமான கணக்கும் பார்க்க முடியாது. 8 இலட்சம் டன் கொள்முதல் செய்கிறோம் என்றால் 1 இலட்சம் டன் கொள்முதல் செய்ய 8 கோடி ரூபாய் ஆகிறது. வட்டி 12 சதவிகிதம் தருகிறோம் என்று சொன்னார்கள்.

*[முற்பகல் 10-50]*

6 இலட்சம் டன் கொள்முதல் செய்வதாகச் சொன்னால் கிட்டத்தட்ட ரூ. 50 கோடி வேண்டும். ரூ. 50 கோடிக்கு வட்டியாக நாம் தரப்போவது ரூ. 6 கோடி. ரூ. 6 கோடி வட்டி தந்து, அரிசி வியாபாரம் செய்யத் துணிந்தோம். அதற்கு மற்ற செலவுகள் எல்லாம் இருக்கின்றன. இந்த நிலையிலே வியாபாரம் செய்கின்ற நேரத்தில், எவ்வளவு பெரிய தவறுகள் நடைபெறும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் எல்லாம் மனிதர்கள்தான். ஆயிரம் குவிண்டால் என்று வாங்கிக் கொண்டு, 1010 ஆக, 1100 ஆக எழுதினாலும் கண்டு பிடிக்க முடியாது. இந்த அவுட்டர்ன் 66, 67 சதவிகிதம் என்றிருக்கிறதே, அது ஈர நெல்லாக இருந்தது, ஆகவே, 65 சதவிகிதம்தான் வந்தது என்று யாரும் சொன்னால், மனதிற்குள்ளே சந்தேகப்படுகிறார்களே



1977 ஆகஸ்ட்டு 9] [திரு. புலவர் கா. கோவிந்தன்]

என்று சொன்னால், அதுதான் நிச்சயமாக நாட்டினுடைய நிலைமை. மனித இயல்பு அதுதான். அவர்கள் எல்லாம் மனிதர்கள்தான். அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, காவல் துறை மானியத்தில் பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் காவல் துறையினர்மீது பல குறைகளைச் சொன்னார்கள். அப்பொழுது அண்ணா அவர்கள் விடை அளிக்கிற நேரத்திலே. காவல் துறைக்கென தனி ஜாதி இல்லை. இந்தச் சமுதாயத்திலே இருந்து சிலர் எப்படி கல்வித் துறைக்குச் செல்கிறார்களோ, அப்படித்தான் காவல் துறைக்குச் செல்கிறார்கள், இந்தச் சமுதாயத்திலே இருந்து சிலர் எப்படி பொறியியல் துறைக்குச் செல்கிறார்களோ அப்படித்தான் காவல் துறைக்குச் செல்கிறார்கள். ஒவ்வொரு துறைக்கும் எப்படி செல்கிறார்களோ, அப்படித்தான் காவல் துறைக்குச் செல்கிறார்கள். ஆக, காவல் துறை கெட்டு விட்டது என்று சொன்னால், இந்த மனித சமுதாயம் கெட்டுவிட்டது என்று பொருள் என்று சொன்னார்கள். சமுதாயத்தைத் திருத்த வேண்டும்., சமுதாயத்தைத் திருத்தினாலொழிய இந்தக் குறையைப் போக்க முடியாது என்று சொன்னார்கள். அந்த நிலை இன்றும் இருக்கிறதென்பதை நாம் மனதிலே கொள்ள வேண்டும். தனியார் துறையிலிருந்து பொதுத்துறைக்கு வரும்போது அவ்வளவு அக்கறை காட்டுவதில்லையென்ற கருத்து பரவலாக இருக்கிறது. அது தவறு, திருத்த வேண்டும். திருத்த வேண்டுமென்று பேசுகிறோம். ஆனால், திருத்துவது அவ்வளவு எளிதல்ல என்பதை மட்டும் நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். ஆனால், அப்படிப்பட்ட நிலைமை இருப்பதைக் காட்டிலும், நம்முடைய எல்லைகளையெல்லாம் காவல் செய்துவிட்டு, அரிசியினுடைய விலை இவ்வளவுதான் இருக்கவேண்டும் என்று விலையை நிர்ணயித்துவிட்டு, நாள்தோறும் அரிசிக் கையிருப்பு இவ்வளவுதான் இருக்கவேண்டுமென்ற நிலையையும் ஏற்படுத்தி விட்டால், வியாபாரிகள் நல்ல அரிசியைத் தருவார்கள். இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

<u>திரு. ஆர். சி. சுப்பிரமணியம் :</u> துணைத் தலைவரவர்களே, இந்த உணவு வழங்கு மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகளை உங்கள் மத்தியிலே பேசுகிறேன். இங்கே பேசுகின்றபொழுது, எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத் திட்டங்களைப் பற்றி புரட்சிகரமான திட்டம் என்று எதிர்பார்த்தோம், புரட்சியில்லை ; அன்னம் இட்ட கை என்று எதிர்பார்த்தோம், ஒன்றும் அன்னம் இடப்படவில்லையென்று கேலியும் கிண்டலுமாக அவர்களுக்குள்ள பாணியிலே பேசுவதாகக் கடந்த சில நாட்களாக நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம்.

நான் உணவு என்ற பிரச்சனையிலே ஒன்று சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். சென்ற வருஷம் எங்களுடைய முதுகுளத்தூரிலே கடுமையான பஞ்சத்தில் நாங்கள் கஷ்டப்பட்டபோது,

[திரு. ஆர். சி. சுப்பிரமணியம்] [1977 ஆகஸ்ட்டு 9

நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அவர்களுடைய சொந்தப் பணத்திலிருந்து, ரூ. 1,30,000 கொடுத்து, பட்டினியால் வாடும் அந்த மக்களுக்கு அன்றாடம் சோறாக்கிக் கொடுங்கள் என்று சொன்னார்கள். என் கையாலேயே சோறு வழங்கினேன். ஆகவே, அன்னமிட்ட கைதான் என்பதை அந்தப் பகுதி மக்கள் வாயார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை முதலிலே சொல்லிக் கொண்டு, இந்த மாதிரி சபையிலே, 'எனக்கு நடிக்கத் தெரியாது, அன்னமிட்ட கை, புரட்சி எதிர்பார்த்தோம்"; என்றெல்லாம் சொல்வது நியாயமல்ல என்று தெரிவித்து, இப்படியெல்லம் எங்களுக்கும் பேசத் தெரியும் என்று தெரிவித்து என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

இன்றைக்கு ஆட்சிக்கு வந்து 30 நாட்கள்தான் ஆகியிருக்கிறது. கிராமத்திலே சொல்வார்கள், மொட்டுவிட்டு, 30 நாள் ஆகியிருக்கிறது என்று. அவர்கள் எத்தனை வருஷங்கள் ஆட்சியிலே இருந்தார்கள் என்பதையெல்லாம் மனதிலே எண்ணி, நாங்கள் ஆட்சிக்கு வந்து 30 நாட்கள் தான் ஆகியிருக்கின்றன, அவர்கள் இன்றையதினம் கேலியும் கிண்டலுமாகப் பேசுவது மிக வருத்தத்திற்குரிய செய்தி என்பதைச் சொல்லி, எங்கள் தொகுதியிலே, பஞ்சம் என்று அறிவியுங்கள் என்று அருமை சகோதரர் காளிமுத்து, கூத்தக்குடி சண்முகம் போன்றவர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் என்று பட்டினியிருந்தார்கள். ஆனால், அப்பொழுதிருந்த அரசுக்குப் பஞ்சம் என்று அறிவிக்க மனமில்லை. வறட்சி, வறட்சி என்று சொன்னார்களே தவிர, பஞ்சம் என்று அறிவிக்கவில்லை. அந்தப் பகுதியிலே எலிகள் உயிரோடு இல்லை, காகம் உயிரோடு இல்லை, நரிகள் அங்கே கிடையாது. கடந்த சில வருடங்களாக மழையின்மையால், இந்த மாதிரி விலங்குகள் இருக்க முடியாத அளவுக்கு, முயல் ஒன்றைத் தவிர, எந்தவிதமான பறவைகளும் கிடையாது. அங்கு 4, 5 வருடங்களாக மழை கிடையாது. ஆகவே, தகுந்த அதிகாரிகளை அனுப்பி, சோதனை செய்தால் நலமாக இருக்கும். அப்படிப்பட்ட பஞ்சம் வந்திருக்கிறது.

அப்படிப்பட்ட கடுமையான நிலையிலே பஞ்சம் வந்து கிட்டத்தட்ட 10 மைல் போய் தண்ணீர் எடுத்துவரக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்த அளவுக்குக் கஷ்டம். கிட்டத்தட்ட காலை 8 மணிக்குச் சென்று சாயந்திரம் 6 மணிக்குத் திரும்பும் நிலைமை இருக்கிறது. வீட்டிலே உணவு இருந்தால் தவிர, பட்டினி கிடந்து சாவதைத் தவிர வேறு எந்தவிதமான வழியும் இல்லை. கடுமையான பஞ்சம் என்று அப்போது இருந்து அரசை பஞ்சப் பிரதேசம் என்று அறிவியுங்கள் என்று சொன்னபோது ஏறெடுத்துப் பார்க்காமல் இருந்தது. இப்பொது 30 நாளைக்குள் முன்னேற்றத்தை எதிர்பார்க்கிறார்கள்.



1977 ஆகஸ்ட்டு 9] [திரு. ஆர். சி. சுப்பிரமணியம்]

இன்றைக்கு என்னுடைய பகுதிகளில் இருந்து மக்கள் உணவை தேடி வெளி மாவட்டங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். கடந்த 30 ஆண்டுகளாக—சுதந்திரம் வந்த பிறகு—பெருமை பேசுகிறோமே தவிர வேறு என்ன செய்தார்கள். நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். மேற்குத்தொடர்ச்சி மலையிலே உடைத்து தண்ணீர் கொண்டு வாருங்கள் என்று கேட்கவில்லை. மழைத் தண்ணீர் கடலிலே போய் விழுகிறதே அதைத் தடுத்து நிறுத்த வழிவகைகள் செய்தால் பஞ்சம் இராது என்று என்னுடைய சொந்தக் கருத்தாகச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் மலட்டாறு என்று ஒரு ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றிலே மழை பெய்தால்தான் தண்ணீர் வரும். ஆடி மாதம் தண்ணீர் வரும். ஆனால் வீணாகக் கடலிலே போய் விழும். எங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கிடைக்காது. காங்கிரசு ஆட்சியிலே இருந்த காலத்தில் 28 லட்சத்தில் ஒரு திட்டம் போட்டார்கள். அவர்கள் போய்விட்டார்கள். அதை மறுபரிசீலனை செய்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினர் ஒரு கோடி சொச்சத்தில் போட்டார்கள்; அதை நிறைவேற்றாமல் போய் விட்டார்கள். மதுரையில் மழை பெய்தால் மலட்டாற்றில் தண்ணீர் போகிறது. எங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லை. ஆனால் தண்ணீர் வேஸ்ட்டாக கடலிலே போகிறது. அந்தப் பகுதிக்கு இன்ஜினியர் சென்று எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. தயவுசெய்து கேட்கிறேன். நம்முடைய புரட்சித் தலைவர் தலைமையில் இருக்கிற அரசு மலட்டாறு திட்டத்தை உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு ஏர்வாடி, வாழிநோக்கம், மூக்கையூர் என்ற பகுதிகளில் நெய்மீன் கிடைக்கிறது. உலகத்திலேயே பிரசித்தமான மீன் என்னுடைய பகுதியான வாழிநோக்கத்திலேதான் கிடைக்கிறது. எனவே இங்கு ஒரு மீன் பிடி துறைமுகத்தை அமைத்துத் தர வேண்டுகிறேன். அத்தோடு கடலோரப் பகுதிகளில் மண்டபம் அல்லது தூத்துக்குடியில் துறைமுகங்கள் இருக்கின்றன. இடையிலே 150 மைல்கள் கடல் பகுதிகள் இருக்கின்றன. எந்த அரசாங்கமும் இந்தப் பகுதியைக் கவனித்ததாகத் தெரியவில்லை. ஒன்று மண்டபத்திலே ஏற்பாடு பண்ணுகிறார்கள் அல்லது தூத்துக்குடியிலே ஏற்பாடு பண்ணுகிறார்கள். இடையிலே உள்ள 150 மைல்களுக்கு எந்தவிதமான அபிவிருத்தியும் இதுவரையில் இல்லை. ஆனால் நல்ல தரமான மீன்கள் கிடைக்கிறது. அரசாங்கம் கவனம் செலுத்தி குறிப்பாக வாழிநோக்கம், மூக்கையூர் போன்ற இடங்களை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே 52 விதமான கடல் பாசிகள் கிடைக்கின்றன. ஒரு கிலோ கடல் பாசி 50 பைசா. ஆனால் ஒரு கிலோ 10 ரூபாய்க்குக் கூட விற்கிறது. அதை அகமதாபாத் கொண்டு

போய் பெரிய முதலாளிகள் விற்று பணம் சேர்க்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் அங்கு தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால் ரொம்ப உபயோகமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் முந்தல், மாரியூர் பகுதியில் நல் தண்ணீர் தீவு என்று கிட்டத்தட்ட 3 கிலோ மீட்டர் தொலைவில் ஒரு தீவு இருக்கிறது. தூத்துக்குடியிலேயிருந்து இலங்கைக்குச் செல்பவர்களும், இலங்கையிலேயிருந்து தூத்துக்குடி செல்பவர்களும் இந்தப் பகுதி வழியே செல்வதற்கு ஒரு தயக்கம் என்று சொல்கிறார்கள். கடலிலே கிட்டத்தட்ட 1 1/2 ஸ்கொயர் மைல் தூரத்திலே ஒரு தீவு இருக்கிறது. அங்கு அருமையான தண்ணீர் கிடைக்கிறது. அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு 75 சதவீத நிலமும் ஒரு 1/4 பகுதி ஒரே ஒரு முதலாளிக்கு—கீழக்கரையில் இருக்கிறார் என்று கருதுகிறேன்—சொந்தமான நிலம் இருக்கிறது. அதை அரசாங்கமே எடுத்து நம்முடைய சுற்றுலா பிராந்தியமாக அதை ஏற்பாடு செய்து கொடுத்தால் வெளிநாட்டில் உள்ளவர்கள் பார்வை இட வசதியாக இருக்கும். அவ்வளவ பெரிய முக்கியமான இடம் என்று சொல்கிறேன். அத்தோடு என்னுடைய தொகுதியிலே மாவிளைத்தோப்பு என்று ஒரு இடம் இருக்கிறது. அங்கே ரைஸ் ஹல்லர்ஸ் மிஷன்களைப் போட்டு ஆலைகளைக் கட்டி 6 வருஷம் ஆகிறது என்று சொல்கிறார்கள்.

[முற்பகல் 11-00]

ஏன் அவர்களுக்கு லைசென்ஸ் கிடைக்கவில்லை என்று விசாரித்தபோது, ஒருவர் இந்த நபருக்கு ரைஸ் மில் லைசென்சு கொடுத்தால் இடைஞ்சல் இருக்கிறது என்று மனுப் போட்டிருந்தாராம். அந்த மனுவை சம்பந்தப்பட்ட ஹெல்த் அதிகாரி விசாரிக்கின்றபோது, மனுவைப் போட்டவர், இவருக்கு ரைஸ் மில் லைசென்சு கொடுப்பதில் தமக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்று எழுதிக் கொடுத்துவிட்டாராம். அப்படி இருக்கின்றபோது, இன்னும் ஏன் லைசென்சு வழங்கப்படவில்லை என்று ஆராயும்போது, கிட்டத்தட்ட 20 ரைஸ் மில்களை வைத்திருக்கின்ற கீழக்கரை முதலாளி ஒருவர், இந்த ஏழைக்கு லைசென்சு கிடைக்காத அளவுக்குத் தடுத்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னார்கள். இதைக் கேட்கின்றபோது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இவைகளை ஏழை எளிய மக்களுக்காகப் பாடுபடுகின்ற இந்த அரசாங்கம் விசாரித்து, அவர்களுக்கு லைசென்சை வழங்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து:* மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே சுமார் 11 கோடியே 65 லட்ச ரூபாய்க்கு இரண்டு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்த மானியக் கோரிக்கைகளின் பேரிலே எனது கருத்துக்களைச் சொல்ல நான் முன்வந்திருக்கிறேன். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தமது துறையின்





கோரிக்கைகக்கான உரையை புத்தகமாக வடித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே உணவு விநியோகம் சம்பந்தப்பட்ட திரையிலும், கொள்முதல் சம்பந்தப்பட்ட வரையிலும் ஒரு தெளிவான முடிவை எடுக்கவில்லை என்பதைத்தான் பார்க்க முடிகிறது. உணவுத் துறையில் எப்படி கொள்முதல் செய்யப்பட்டது என்ற விவரங்களை எல்லாம் அதிலே கூறியிருக்கிறார்கள். பல்வேறு ஆண்டுகளில், பல்வேறு வகையிலே கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. மிக அதிகமான கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. குறைந்த அளவிலும் கொள்முதல் ஆகியிருக்கிறது. எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டு உணவு அமைச்சர் அவர்கள் முடிவுக்கு வந்திருப்பது, மாதத்திற்கு 40,000 டன் நமக்கு உணவுத் தேவைப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த 40,000 டன் தேவை என்று எப்படி முடிவுக்கு வந்தார்கள் என்று பார்க்கிறபோது, சென்ற இரண்டு ஆண்டுகளாக நாம் பொது விநியோக முறை மூலம் விநியோகித்த அளவை வைத்துக் கொண்டு இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இது வரையிலும் 9,290 பொது வினியோகம் கடைகள் மூலம்தான் நாம் விநியோகித்து இருக்கின்றோம். இந்த ஆண்டு 16,000 கடைகள் திறப்பதாக அரசு முடிவு எடுத்திருக்கிறது. இந்த 16,000 கடைகளையும் திறக்கின்ற போது, சென்ற ஆண்டு இருந்த ஒன்பதாயிரத்துச் சொச்சம் கடைகள் மூலம் வினியோகித்த அளவுதான் ஆகுமா, கூட ஆகுமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும்.

அப்படிப் பரிசீலிக்கின்றபோது, இதைவிட அதிகமான தேவை அரசுக்கு ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். 40,000 டன் மாதத்திற்கு என்றால் வருடத்திற்கு 4 3/4 லட்சம் டன்னும், அதைவிட அதிகமாகவும் தேவைப்படும் என்பது என்னுடைய கருத்து. கொள்முதல் சம்பந்தமாக அரசு என்ன முடிவு எடுக்கப்போகிறது என்பதுதான் இதனாலே தெரிந்து கொள்ளக் கூடிய ஒன்றாக இருக்கிறது.

முன்பு இரண்டு வகையான முறைகளைக் கையாண்டு இருக்கிறார்கள். விவசாயிகளிடத்திலே இருந்து நேரிடையாகக் கொள்முதல் செய்வது ஒன்று. இரண்டாவது மில்லர்களிடத்திலிருந்து, வியாபாரிகளிடத்திலிருந்து கொள்முதல் செய்வது என்பது ஒரு கொள்கை. ஆனால் எந்த முறையைக் கையாள்வது என்பதில் அரசு இன்னும் ஒரு தெளிவான முடிவிற்கு வரவில்லை. ஆனால் அமைச்சர் அவர்களின் குறிப்பிலிருந்து வியாபாரிகளிடமிருந்து கொள்முதல் செய்வது இரண்டு லட்சம் டன்களுக்கு மேல் முடியவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயிகளிடத்தில் இருந்து நேரிடையாக அரசு கொள்முதல் செய்யும் எண்ணம் இருக்கும் என்று நான் எண்ணுகிறேன். அரசு நேரிடையாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்கின்றபோது, விவசாயிகளிடத்திலே, பல அதிருப்தியான அனுபவங்களை நாம் காண முடிகிறது. அதிலே ஏற்பட்டிருக்கிற சிக்கல்களை அமைச்சர்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1977 ஆகஸ்ட்டு 9

அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறுர்கள். நான் அவரை வேண்டிக்கொள்வது அரசுக்குத் தேவையான, பொது விநியோகத்திற்குத் தேவையான தானியத்தைக் கொள் முதல் செய்ய வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து மாறுபாடு இருக்காது. ஆனுல் இப்படிக் கொள்முதல் செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு அரசு பெரிய தொந்திரவை அளிக்கிறது என்ற எண்ணம் ஏற்படாமல் கொள்முதல் செய்யவேண்டும். இப்படிக் கொள்முதல் செய்கின்றபோது ஒன்றை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். அரசு பூராவாகவோ அல்லது ஒரு ஏக்கருக்கு இவ்வளவு நெல் என்று வாங்குவது போக பாக்கி நெல்லை வெளி மார்க்கெட்டில் விவசாயிகள் விற்றுக் கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

அரசு என்ன விலைக்குக் கொள்முதல் செய்யப் போகிறது என்பதை அறிவிக்கவில்லை. என்ருலும் மத்திய அரசு நிர்ண யித்திருக்கும் விலைக்கு அதிகமாகக் கொடுக்கப் போவதில்லை. கொடுக்காது என்ற நிலை அமைச்சர் அவர்களின் அறிக்கையி லிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. இப்படி மத்திய அரசு நிர்ணயித்த விலை கட்டுபடியாகக் கூடிய விலையா என்ருல் இல்லை. இதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் அந்த விலை விவசாயிகளுக்குக் கட்டுப்படியானதாக இல்லை. ஆகையினுலே அவர்களுக்கு நியாயமான விலை, கட்டுப் படியாகக் கூடிய விலை கிடைக்கும்படி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும். ஏதோ மத்திய அரசு நிர்ணயித்து விட்டது ஆகவே நாங்கள் அதற்கு மேல் கொடுக்க மாட்டோம் என்று தங்களுடைய பொறுப்பைத் தட்டிக் கழிப்பது சரியானதல்ல என்பதை இந்த நேரத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

ஒரு ஏக்கர் நிலத்திலே ''சராசரி'' ஆக ஒரு டன் நெல் விளைவதாக விவசாயிகள் கணக்குச் சொல்கிறுர்கள். ஒரு டன் என்பது ஒரு மா நிலம் விளைவு 12 கலம் நெல். ஒரு மா என்பது மூன்றில் ஒரு ஏக்கர். 12 கலம் நெல்லுக்கு 6 மூட்டை, 342 கிலோ. ஆகவே அதை நாம் கருத்திலே கொண்டு பார்க்கிறபோது ஒரு ஏக்கருக்கு ஒரு போகம் நெல் சாகுபடி செய்கின்ற வருக்கு 250 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரையில் வருமானம் கிடைக்கும். ஒரு போகம் விளைகின்ற நிலத்தில் தஞ்சை ஜில்லா வில் இது கணக்கு. தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலான நிலங்கள் ஒரு போக நிலங்கள் என்பதை ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும். 5 லட்சம் ஏக்கரா நிலங்கள் தான் இரு போக சாகுபடி செய்யக் கூடியவை. பாக்கி ஒரு போக சாகுபடி நிலங்கள். இப்படிப்பட்ட நிலங்களை பத்து ஏக்கராவை சாகுபடி செய்கின்றவனுக்கு எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்பதை யோசனை செய்து பார்க்க வேண்டும். நம்முடைய மாநிலத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் முன்பு ஆட்சியிலிருந்தது.



1977 ஆகஸ்டு 9] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்த நேரத்தில் குவிண்டாலுக்கு 10 ரூபாய் நெல்லுக்கும், 5 ரூபாய் நெல் கொண்டு வர வண்டிச் சத்தமாக ஊக்க போனஸ் கொடுத்துக் கொண் டிருந்தது. அதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டு அதைக் கொடுக்க முடியாது என்று இன்றைய தினம் கொள்கையாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. இந்த முறையிலே அமைச்சர் அவர்களின் உரை இருக்கின்றது. இப்படி மத்திய அரசு நிர்ணயித்த விலையை நாம் வைத்துப் பார்ப்போமானுல் ஒரு குவிண்டால் நெல் விலை மோட்டா ரகத்திற்கு 48 ரூபாய், மத்திய ரகத்திற்கு 78 ரூபாய், சன்ன ரகத்திற்கு 83 ரூபாய், இந்த விலையில் கொள்முதல் செய்தீர்களானுல் ஒரு மூட்டை நெல் 57 கிலோ விலை 44 ரூபாய் ஆகிறது. அரசு கொள்முதல் செய்கின்ற விலை 44 ரூபாய். அதே நெல் வெளி மார்க்கெட்டிலே 65 ரூபாய்க்கு விற்கப்படு கிறது. இப்படி விற்கப்படுகின்ற நெல்லை அரசாங்கத்திற்கு 44 ரூபாய்க்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டால் விவசாயி என்ன நினைப்பான் என்பதை ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும். இப்படி அரசு அந்த நெல்லை வாங்குவதன் மூலம் 65 ரூபாய்க்கு வெளி மார்க்கெட்டிலே விற்கப்படுகின்றதை 44 ரூபாய்க்கு அரசாங்கத்திற்குக் கொடுத்து அதன் மூலம் 20, 21 ரூபாய் நஷ்டம் அடையும்படி விவசாயிடத்திலே சொன்னுல் அவன் எப்படி ஏற்றுக் கொள்வான். அரசாங்கத்தின் கொள்கையால் தனக்கு 20 ரூபாய் கிடைக்காமல் போகிறதே என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படும்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்னையைக் குறிப்பிட விரும்பு கிறேன். இந்த மாநிலத்திலே ஒரு மாவட்டத்திலிருந்து ஒரு மாவட்டத்திற்கு நெல், அரிசி கொண்டு போகலாம், தடை எதுவும் கிடையாது. எங்கிருந்து எங்கு வேண்டுமானுலும் தானியம் போகலாம் என்று அனுமதித்து இருப்பதாக இந்த உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல இடங்களில் தாலூகா அளவில் கூட உணவு தானியம் கொண்டு செல்வதைத் தடுக்கிறுர்கள் இதைத் தடுப்பதற்கு என்ன காரணம் என்பதை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11–10]

மாவட்டத்திற்கு மாவட்டம் போவதற்கு தடை இல்லாதிருக் கும்போது தாலூகாவிற்குத் தாலுகா போவதற்கு தடை செய் கிறுர்கள் அதிகாரிகள் என்ருல் அதை இந்த அரசு பரிசீலிக்க வேண்டும். மாவட்டத்திற்கு மாவட்டம் போவதற்கு தடை இல்லாமல் வைத்து விட்டு, ஒரு மாவட்டத்தில் கொள்முதல் செய்யும்போது பக்கத்திலுள்ள ஓப்பன் மார்கட்டில் ரூ. 65-க்கு விற்கிறது என்ருல் இங்கு ரூ. 44-க்கு கொள்முதல் செய்தால் எவ்வளவு பேர்கள் லெவியை ஒழுங்காகக் கொடுப்பார்கள் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். எப்படி கொள்முதலாகும்? ஆகவே ஓப்பன் மார்க்கட் விலைக்கும் லெவி விலைக்கும் இடையே மத்தியில்

ஒரு விலை வைத்து கொள்முதல் செய்ய முடியுமா என்பதை ஆலோசிக்க வேண்டும. அரசுக்கு பணக் கஷ்டம் இருக்கிறது, ரிசர்வ் பாங்க் அனுமதி வேண்டியிருக்கிறது, கோடவுன்களில் வைக்க சிரமங்கள் இருக்கின்றன. இவை எல்லாம் ஒருபுறமிருக்க லெவி வைப்பதன் மூலம் கொள்முதல் செய்யும்போது ஏற்படும் இம்மாதிரிக் கஷ்டங்களை எப்படிப் போக்கப் போகிறீர்கள்? முன்பு தஞ்சை மாவட்டத்தில் லெவி முறை இல்லை என்று சொன்னார்கள். உபரி அத்தனையையும் வாங்குகிறோம் என்று சொல்லி கொள்முதல் செய்தார்கள். எல்லாவற்றையும் வாங்கினார்கள். அப்போது மக்கள் மத்தியில் ஏற்பட்ட அதிருப்தியை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். மத்திய சர்க்கார் நிர்ணயித்திருக்கும் விலையில் கொள்முதல் செய்ய வேண்டும் என்று நினைப்பது தவறு. அதை விட அதிகமான விலை கொடுத்து விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலையில் மானியமாக அளித்தாவது அரசு கொள்முதல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கொள்முதல் விலைக்கும் விற்கப்படுகிற விலைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் பார்க்க வேண்டும். ரூ. 78-க்கு இரண்டாந்தர நெல் கொள்முதல் செய்கிறார்கள் என்றால்—1 1/2 குவிண்டால் வாங்கினால் 1 குவிண்டால் அரிசி தேறும்—ரூ. 117-க்கு நெல்லை வாங்கி அரிசியாக்கி சில்லறை விற்பனைக்கு வருகிறபோது ரூ. 1–60 என்று விற்பனை செய்வதால் ரூ. 160 என்ற அளவிற்கு வருகிறது. ஆக, ரூ. 117 என வாங்கி ரூ. 160-க்கு விற்றால் லாபம் ரூ. 43 வருகிறது. விநியோகிப்பதற்கு இவ்வளவு செலவாகிறதா? அந்தச் செலவைக் குறைக்க முடியாதா? அப்படிக் குறைத்து அதை விவசாயிகளுக்குக் கொடுக்க முடியாதா? அந்த அரசு பரிசீலிக்க வேண்டும். மார்ஜினை குறைவாக வைத்து செலவினங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு வருவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு—குறிப்பாக நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நியாய விலை கிடைக்க வேண்டும். தஞ்சை மாவட்டம் அல்லாத பகுதிகளில் இறவைப் பாசனம் மூலம சாகுபடி செய்பவர்களுக்கு அதிகச் செலவாகும். கிணற்றுப் பாசனம் என்றால் செலவு அதிகமாகும. அவர்களுக்கும் இந்த விலை கட்டுப்படியாக இருக்க வேண்டும். விவசாயிகளுக்கு கிடைக்கும் நெல்லின் விலையை அதிகரித்து அதைப் போனஸாகக் கொடுக்க வேண்டும். அதற்கு அரசு முன்வர வேண்டும்.

அடுத்தப்படியாக, அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகம் சம்பந்தமாக, எது எது அத்தியாவசியப் பண்டங்கள் என்று நிர்ணயிக்க வேண்டும். அந்தப் பண்டங்களை விநியோக அமைப்புகள் மூலம் விநியோகிக்கப் போகிறார்கள் என்ற முடிவிற்கு வருகிறபோது அந்தப் பொருள்களை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் நேரிலேயே கொண்டுபோய்க் கொடுக்க வேண்டும். ஒரு கூட்டுறவு சொஸைட்டிக்கு ஜீனி அலாட் செய்தால் இரண்டு மூட்டைகள் அலாட் செய்தால் பக்கத்திலுள்ள நகரத்திற்குப் போய் கொண்டுவர பத்து ரூபாய்



வண்டி வாடகை ஆகிறது. சில இடங்களில் அங்கேயே அதை விற்றுவிட்டு இங்கே கணக்குக் காட்டுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. தவறுகள் ஏற்படாதவாறு கண்காணிக்கப் பட வேண்டும். நேரடியாக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலிருந்து விநியோகிக்கும் இடத்திற்குக் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும். அப்படியானால் இம்மாதிரி தவறுகள் நடக்காது. அதுபற்றி அமைச்சர் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள், அதை வரவேற்கிறேன். எல்லாப் பொருள்களையும் அந்தந்தப் பாயின்டுக்கு கொண்டுபோய் கொடுக்க வேண்டும். அந்தப் பொறுப்பை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடம் ஒப்படைக்க வேண்டும. அம்மாதிரியான முறையை கையாள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மீனளத்துறையைப் பற்றியும் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. மீனளத் துறையில் காப்பிட்டல் எக்ஸ்பென்டிச்சர் என்பதில் மீன் துறை கட்டுவதற்கு நிறைய நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட துறைகள் ஏற்படுவதால் விசைப் படகுகளுக்குத்தான் மிகுந்த சௌகரியம் ஏற்படும். அதே நேரத்தில் நாட்டுப் படகுகள், கட்டு மரங்கள் இவைகளைக் கட்டி கடலில் வசதியாகப் போவதற்கு இது உதவி செய்யவில்லை. மரவக்காடு, தம்பிக்கோட்டை, அதிராம்பட்டினம் போன்ற இடங்களில் இத் தொழிலில் ஈடுபட்டவர்கள் அதிகமான பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அவர்கள் இருக்கின்ற இடங்களிலிருந்து கடல் வரைக்கும் கால்வாய் வெட்டிக் கொடுக்க வேண்டும். இதற்கு ரூ. 10 ஆயிரம் அல்லது 13 ஆயிரம்தான் செலவு ஏற்படும். இப்படிப்பட்ட கால்வாய்களை வெட்டிக் கொடுத்தால் கட்டுமரம், நாட்டுப் படகுகள் இவைகளை வைத்துக்கொண்டிருக்கக் கூடியவர்கள் தாங்கள் குடியிருக்கின்ற மீனவர்கள் இடத்திலிருந்து கடலுக்குச் செல்வதற்கு வாய்ப்பாக இருக்கும், ஆகவே மரவக்காடு, தம்பிக்கோட்டை, அதிராம்பட்டினம் இந்த இடங்களில் எல்லாம் கால்வாய் வெட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் துணை சபாநாயகர் அவர்களே, உணவு மான்யக் கோரிக்கைகளின் மீது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகச் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய முதல் கோரிக்கையாக பிரதான கோரிக்கையாக நாங்கள் வைப்பது, அத்தியாவசியப் பண்டங்களின் மொத்த வியாபாரத்தை அரசாங்கம் உடனடியாக ஏற்றெடுக்க வண்டும். அந்தப் பொறுப்பை அரசு உடனடியாக ஏற்றெடுக்க

வேண்டும் என்ற கோரிக்கையை நான் முக்கியமாக வைக்க விரும்புகிறேன். இந்தக் கோரிக்கை சம்பந்தமாக நமக்குக் கொடுத்திருக்கக்கூடிய இலாகாவின் குறிப்பில்............

''உணவுப் பொருட்களின் மொத்த விற்பனை முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது ஒரு கருத்து. இது கொள்கையளவில் வரவேற்கத் தக்கதாயினும், நடைமுறையில் இதை உடனடியாகச் செயல்படுத்ததுவதற்குச் சாதகமான சூழ்நிலை நாட்டில் இப்போது உருவாக வில்லை .....''.

என்று குறிப்பில் அரசாங்கத்தின் கருத்தாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பொஸிஷன் இருந்து கொண்டிருக்குமானால் உங்களுக்கு நிச்சயமாக கெட்ட பெயரைத்தான் உண்டாக்கும். கொள்கை அளவில் ஏற்றுக் கொண்ட பிறகு ஏன் அமல் நடத்தவில்லை என்று பொது மக்கள் நம்மைப் பற்றிக் கேட்பார்கள். ஏற்கனவே பொது மக்கள் என்ன சொல்லுகிறார்கள்? எல்லாவற்றையும் சொல்வார்கள், ஆனால் சொல்வதைச் செய்ய மாட்டார்கள் என்று இப்போதே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒத்துக் கொண்ட பின் இதை ஏன் நிறைவேற்றக் கூடாது, அப்படி நிறைவேற்றாமல் இருந்தால் மக்களிடையே நமக்கு கெட்ட பெயர்தான் ஏற்படும், அது சரியல்ல என்பதைத்தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சூழ்நிலை சரியாக இல்லை என்று சொல்லுகின்ற ஆர்குமெண்ட் சரியல்ல, என்ன சூழ்நிலை சரியாக இல்லை ? இதில் நாம் பச்சையாக கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். ஆனால் அமல் நடத்துவதற்கு சூழ்நிலை சரியாக இல்லை என்று சொல்லுகின்ற ஆர்குமெண்ட் சரியல்ல. என்ன சூழ்நிலை இல்லை? தஞ்சாவூரில் 1.50 ஆக விற்றுக்கொண்டிருந்த அரிசி இப்போது 60 பைசா அதிகமாகியிருக்கிறது என்று எனக்கு ரிப்போர்ட் வந்திருக்கிறது. இது சூழ்நிலை இல்லையா ? மூட்டை 55 ரூபாயாக விற்ற நெல் 70 ரூபாயாக உயர்ந்திருப்பதாக எனக்கு ரிப்போர்ட் வந்திருக்கிறது, இது சூழ்நிலை இல்லையா ? மேலும் எதை நாம் இந்தக் குறிப்பில் பார்க்கிறோம்.... "சென்ற சில வாரங்களாக அரிசியின் விலையில் ஆங்காங்கு சிறிது உயர்வு காணப்படுகிறது....'' இதை நீங்கள் அபாய சங்காக கருதவில்லையா, இதை ஒரு சூழ்நிலையாக கருதக் கூடாதா, மேலும் பருப்பு—எண்ணெய் வகைகள் எல்லாம் விலை உயர்ந்திருக்கிறது என்று ஒத்துக்கொண்டிருக்கிறோம். இது சூழ்நிலை இல்லையா ? ஆகவேதான் மொத்த வியாபாரத்தை சர்க்காரே ஏற்றெடுக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். அதை நாங்கள் திட்டவட்டமாக சொல்லுகிறோம்.... மத்திய அரசாங்கம் எவ்வளவு தான் நடவடிக்கை எடுத்தாலும், விலை உயர்வுக்கு காரணம் என்ன ? black marketeers வர்த்தக சூதாடிகள் தான் காரணம் என்பதை அரசாங்கம் மறுக்க முடியுமா ? இப்படிப்பட்ட வர்த்தகச் சூதாடிகள் மொத்த வியாபாரத்தை கையில் வைத்துக் கொண்டு, விலையை ஏற்றிக்





கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வர்த்தகச் சூதாடிகள் இருக்கும் வரை நாம் எப்படி விலையேற்றத்தைத் தடுக்கமுடியும்? எப்படி தடுக்கப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை ?

அடுத்தது கொள்முதல் விஷயம். அரசாங்கம் இப்போது ஸ்டாக் எவ்வளவு வைத்திருக்கிறது ? மொத்தம் 40 ஆயிரம் டன் ஸ்டாக் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஸ்டாக் போதுமா ? ஏதாவது பெரும் தேவை ஏற்பட்டால் என்ன செய்வார்கள், அப்போது இந்த ஸ்டாக் போதுமா? இதை நம்பிக்கொண்டு திருப்தி மனப்பான்மையுடன் எப்படி இருக்கிறீர்கள. இந்தக் குறிப்பில் என்ன சொல்லியிருக்கிறீர்கள்..

''வெளிச் சந்தையில் தாராளமாக அரிசி கிடைப்பதையொட்டி, பொது விநியோக முறையின் கீழ் அரிசி விநியோகத்துக்கான தேவை படிப்படியாகக் குறைந்து வரும் என்று எதிர்பார்க்கின்றோம்....'' என்று எஸ்டிமேட் போட்டு இதை நம்பித்தான் ஸ்டாக் வைக்க வில்லை என்று சொல்வது போல் இருக்கிறது. 'suppose the estimate goes wrong' நடக்கவில்லையா, எதிர்பார்ப்புக்கள் என்பது எல்லாம் எப்போதும் உடைந்து போகும். அப்படி வரும்போது இந்த ஸ்டாக்கை நம்பிக்கொண்டு இருந்தால், போதாது. அப்போது அரிசிக்கு எங்கே போவீர்கள் ?....

(முற்பகல் 11.20).

அரிசி பூராவும் மொத்த வியாபாரிகளின் கையிலேயும், பெரிய நிலப் பிரபுக்களின் கையிலேயும் தான் சிக்கிக் கொண்டிருக்கின்றன. 16,000 கடைகள் திறக்கப் போவதாக நீங்கள் சொல்கிறீர்கள். மேலும் 1,000 கடைகளை திறப்பது பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை, முதல் அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். நீங்கள் கூறுகிறீர்கள். நாங்கள் இந்த புழுங்கல் அரிசியைத் தான் அதிகமாகத் தமிழ் நாட்டிலே உபயோகப்படுத்துகிறோம் என்று. மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரிசி தேவையில்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால், இன்றைக்கு அவர்கள் வைத்திருக்கிற ஸ்டாக் போதாது. ஆகவே, அதிகபட்ச கொள்முதல் செய்து, ஸ்டாக் வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு இப்படி ஸ்டாக் செய்து வைத்துக் கொள்வதைத் தவிர, வேறு வழியில்லை. அதற்கு எங்களுடைய திட்டம் என்ன என்று கேட்டால், வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்யப் படுவதை நிறுத்தப்பட வேண்டும். இதைப் பற்றி யோசிக்கக் கூடாது. அடுத்து, மில் முதலாளிகளிடம் கொள்முதல் செய்வதையும் நிறுத்தியாக வேண்டும். எனவே, சர்க்காரே இந்தக் கொள்முதலை நேரடியாகச் செய்ய வேண்டும்.

[திரு. ரா. உமாநாத்] [1977 ஆகஸ்ட் 9

அதற்கு சில யோசனைகள் சொல்கிறேன். (1) சிறு விவசாயிகளுக்கு, அதாவது 3 ஏக்கர் நஞ்சை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும். (2) அதற்கு மேல் 10 ஏக்கர் வரை வைத்துள்ள விவசாயிகளுக்கு கிரேடட் லெவி நிர்ணயிக்கப்படவேண்டும். (3) 10 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பார்களானால், மார்க்கடபிள் சர்ப்பிளஸ் அனைத்தையும் அவர்களிடமிருந்து கொள்முதல் செய்யவேண்டும்.

குறிப்பாக, சிறு விவசாயிகளுக்கு விதிவிலக்கு கொடுத்தாலும் கூட, அவர்கள் தாமாகவே அவர்களுடைய நெல்லை விற்பதற்கு முன்வந்தால், அவர்களுக்கு ஊக்க போனஸ் கொடுத்து, அதற்கான அறிவிப்பை செய்து, அந்த மாதிரியும் அவர்களிடம் நெல் வாங்கப்படலாம். இப்படி அறிவிப்பு செய்தால், அவர்கள் கையில் இருக்கக் கூடிய நெல்லை விற்பதற்குத் தாமாகவே அவர்கள் முன் வருவார்கள். இப்படிப்பட்ட கொள்முதல் திட்டத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா ?

விற்பனை விலைப் பிரச்னையில், உயர்த்தப்பட வேண்டுமென்று மத்திய அரசு குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி உயர்த்தினால், விநியோக விலையை உயர்த்தக் கூடாது என்பதை திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்போது இந்த நெல் கொள்முதல் விலையைப் பற்றி இந்த அரசாங்கக் குறிப்பிலே, சொல்லியுள்ளபடி மோட்டா நடுத்தர ரக அரிசியின் விலை படி ரூபாய் 2.56 ஆகிறது. சன்ன ரக அரிசியின் விலை படிக்கு ரூபாய் 2.96 ஆகிறது. அப்படி அதிக விலை கொடுத்து வாங்கும் போது, இந்த அரிசியின் விலையை மேலும் அதிகப்படுத்தாமல், குறைப்பதற்கான முயற்சி எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இது சாத்தியப்படுமா ? என்று கேட்கலாம். அதற்கான சான்றைச் சொல்லுகிறேன். இது உங்கள் குறிப்பிலேயே தெளிவாக இருக்கிறது. "இப்போதும், நடுத்தர நெல்லின் கொள்முதல் விலை ரூபாய் 78 ஆக உள்ள போது, சில்லரை விற்பனை விலை கிலோ ரூபாய் 1.60 ஆக உள்ளது. இந்த பின்னணியில் பார்க்கும் பொழுது, குவிண்டால் நெல்லுக்குக் கொடுக்கும் கொள்முதல் விலையை விட அரிசியின் சில்லரை விற்பனை விலை ஏறக்குறைய இரு மடங்காக அமைந்து வரும் போக்கு பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வருவது தெளிவாகும்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி இரு மடங்காக ஆகிறது என்று நீங்களே சொல்லி இருக்கிறீர்கள். அதனாலே குறைப்பதற்கு மார்ஜின் உண்டு. அந்த மார்ஜின் எனக்குத் தெரியாதா ? அதிலே நுழைய நான் விரும்பவில்லை. நீங்களே இந்த மார்ஜினில் நுழைந்து, புதிய அரசாங்கம் என்ற முறையிலே விலையைக் குறைக்க முன்வரவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1977 ஆகஸ்டு 9] [திரு ரா. உமாநாத்]

ஒரு நீண்ட கால வேடிக்கையைச் சொல்ல விரும்புகிறேன். நியாய விலைக் கடைகளில் நடந்து வருகிறது. மலிவு தானியம் என்று அரசு கொடுக்கிறது. அந்த அரிசி மட்டும் மட்டரகமாகவும், துர் நாற்றம் வீசக்கூடியதாகவும் இருக்கிறது. அந்த அரிசிக்கென்று தனி ரக நெல் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. அங்கே மட்டும்தான் இந்த மட்டரகமான அரிசியைக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இப்படி நியாய விலைக் கடைகளில் ரொம்ப நாட்களாகக் கொடுக்கிறார்கள். இப்போது என்று நான் சொல்லவில்லை. ரொம்ப நாட்களாகவே. எனக்குச் சந்தேகம், இதற்கென்று இவர்கள் தனி ரக நெல் வைத்திருக்கிறார்களா என்று. இப்போது பொன்னி, ஆடுதுறை, கருணு போன்ற நெல்கள் எல்லாம் இருக்கின்றன. இந்த நெல்லுக்கு என்ன பெயர் வைப்பது என்று யோசித்தால், 'சிஓ—2' என்று வைக்கலாம் என்று கருதுகிறேன். 'சிஓ—2' என்றால் கார்பன்டையாக்சைட். அது தான் துர் நாற்றம் வீசும். இந்தச் சதியைச் செய்யக் கூடியவர்கள் சில மில்காரர்களும், மொத்த வியாபாரிகளும் தான். அவர்கள்தான், இந்த நியாயவிலை கடைகளில் உள்ள அரிசியை மக்கள் வாங்காமல், அவர்களிடம் வாங்குவார்கள் என்பதற்காக செய்யக்கூடிய சதி என்பதை அறிவித்துக் கொள்கிறேன். இந்தச் சதிக்கு சில கொள்முதல் செய்யக் கூடிய அதிகாரிகளும்கூட துணை நிற்கிறார்கள். ஆகவே, பெரிய ஆலைகள் சிலவற்றை அரசாங்கம் இன்னும் ஏற்றுக்கொள்ளாமல் இருந்தால், அவைகளையும் ஏற்றுக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்ல, இதிலே நடக்கக்கூடிய தவறுகளையெல்லாம் கண்காணிப்பதற்கு, ஜனங்கள் கமிட்டி, மக்கள் கமிட்டி என்று ஒன்று ஏற்படுத்தி, அதன் மூலம் கண்காணிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கான முயற்சிகளையும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்களை ஊக்குவிப்பது அரசாங்கத்தின் கொள்கை என்று சொல்லப்பட்டிருக்கிறது. 12,809 சிறு ஆலைகள் இருக்கின்றன என்று குறிப்பில் இருக்கிறது. ஆலைகளை நவீனப்படுத்தும் கொள்கையையும் ஏற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆலைகள் நவீனப் படுத்தப்பட்டு சிறு ஆலைகளோடு போட்டி போட்டால் நிச்சயமாக சிறு ஆலைகள் பாதிக்கப்படும். How can you reconcile both? ஒரு பக்கத்தில் மாடர்னிசேஷன் இன்னொரு பக்கத்தில் சிறு தொழிற்சாலைகளுக்குப் பாதுகாப்பு. மாடர்னிசேஷனுக்கு ஒத்துக்கொண்டால்தான் புதிய லைசென்ஸ் கொடுப்பது என்ற கொள்கை வேறு இருக்கிறது. இதனால் நிச்சயம் சிறு ஆலைகள் பாதிக்கப்படும். வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கக்கூடிய இந்தக் காலத்தில் மாடர்னிசேஷன் என்பதை நிறுத்த வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

[திரு ரா. உமாநாத்] [1977 ஆகஸ்டு 9

ஓட்டல்களில் எடையை ஈடு செய்ய பயங்கரமான கலப்படங்கள் நடக்கின்றன. லட்சக்கணக்கான மக்கள் வயிற்றுக் கோளாறு, மற்றும் நோய்களுக்கு உட்படுகிறார்கள். 'பைன்' பற்றிச் சொன்னபோது நீதிபதியை வற்புறுத்த முடியுமா என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஜட்ஜ் பைன் ஏன் போடுகிறார்? சட்டத்தில் பைன் போடலாம் என்று இருப்பதால்தான் போடுகிறார். பைன் போடுவது என்ற ப்ரொவிஷனையே எடுத்துவிட்டு 'சிறைத் தண்டனைதான்' என்று அமெண்ட்மெண்ட் செய்தால் இப்படிப்பட்ட ஆட்களைத் தடுக்க முடியும்.

கனம் அமைச்சர் சேல்ஸ்டாக்சை உணவுப் பண்டங்கள் மீது எடுத்து விட்டதாகச் சொன்னதாக காதில் விழுந்தது. முந்தா நாள் கொச்சின் எக்ஸ்பிரசில் ஐ. ஆர். ஆர். சாப்பாட்டு பில்லில் சேல்ஸ் டாக்ஸ் போடப்பட்டிருந்தது. பல கடைகளிலும் வசூல் செய்திருக்கிறார்கள். சென்னை நகரத்திலே இப்போதும் சேல்ஸ் டாக்ஸ் பில்லில் போடுகிறார்கள். நீங்கள் சேல்ஸ்டாக்ஸ் இல்லையென்று முடிவு எடுத்த பிறகு அந்தக் கடைக்காரர் சேல்ஸ் டாக்சை வசூல் செய்கிறார் என்றால் அதையும் அவர்கள் சாப்பிடுகிறார்கள் என்று அர்த்தம்.

<u>திரு. துரைமுருகன் :</u> ஒரு கிளாரிபிகேஷன். கனம் அங்கத்தினர் உமாநாத் அவர்கள் 'அபராதம்' என்பதை எடுத்துவிட்டு 'சிறைத்தண்டனை' என்று சட்டத்தில் அமெண்ட்மெண்ட் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அப்போது நம்பூதிரிபாட் அப்படிப்பட்ட அமெண்ட்மென்டைக் கொண்டு வந்தார்களா என்பதை அங்கத்தினர் அவர்கள் கூறுவார்களா ?

<u>திரு. ரா. உமாநாத் :</u> அந்தக் காலத்தில் என்ன நடந்தது என்று ஞாபகம் இல்லை. பரிசீலித்துச் சொல்லுகிறேன். இப்போது ஜோதிபாசு சர்க்கார் இருக்கிறது. அது என்ன செய்யும் என்பதைச் சொல்லுகிறேன்.

சீனியைப் பொறுத்தவரை சொல்ல விரும்புவது கரும்பு விவசாயிகளுக்குக் கட்டாயமாக டன்னுக்கு 150 ரூபாய் கொடுக்க வேண்டும். அப்போதுதான் விவசாயிக்கு கட்டுபடியாகும். கரும்புக்கு மத்திய சர்க்கார் ஏன் விலை நிர்ணயிக்க வேண்டுமென்று நான் கேட்க விரும்புகிறேன்.

இப்படி டன்னுக்கு 150 ரூபாய் நியாயமான விலை கிடைக்காததால் அவர்கள் அறைவை ஆலைக்கு கரும்பு சப்ளை செய்யாததன் காரணமாக ஆலை இயங்காமல் தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். லே ஆப் காரணமாக சர்க்கரை உற்பத்தியும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் இப்படி பாக்டரிகள் மூடப்படுவதற்கு என்ன ஏற்பாடு சொல்லுகிறார்கள் ? இதனால்



1977 ஆகஸ்ட் 9] [திரு. ரா. உமாநாத்]

தான் இங்கே ப்ரொடக்ஷன் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு கேன் பிரைஸ்தான் பிரதான காரணம். இதனால் இங்கே சிக்கல் உண்டாகிறது என்று மத்திய சர்க்காரிடம் சொல்ல வேண்டும். 'நீங்கள் வைத்திருக்கும் ப்ரைஸ் விளைவாக இங்கு விவசாயிகள் கரும்பு உற்பத்தி செய்வதில்லை. பாக்டரிகள் மூடப்படுகின்றன. அன்-எம்ப்ளாய்மெண்ட் ஜாஸ்தியாகிறது' என்று சொல்ல வேண்டும். பாக்டரிகள் மூடப்படுவதைப் பற்றி அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள மாட்டார்கள். ஒர்க்கர்சுக்கு வேலை இல்லாததைப்பற்றி அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளமாட்டார்கள். ஆனால் கரும்பு விலையை நிர்ணயிக்கும் பொறுப்பை மட்டும் அவர்கள்தான் வைத்திருப்பார்கள். இந்த விஷயத்தில் பிடிவாதமான ஒரு நிலையை எடுத்தாக வேண்டும்.

சீனி விநியோகம் வருமான அடிப்படையில் கார்டு இருப்பதை மாற்றி குடும்பத்தில் இருக்கக்கூடிய நபர் அடிப்படையில் சீனி விநியோகம் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உற்பத்தியில் 65 சத விகிதம் லெவி, 35 சத விகிதம் ஓப்பன் மார்க்கட், லெவி சர்க்கரை விலை ரூ. 2.15 பைசா. ஓப்பன் மார்க்கட் விலை ரூ. 4.50. ஓப்பன் மார்க்கெட் விலை இரண்டு பங்குக்கும் அதிகமாக விற்க ஏன் முதலாளிகளை அனுமதிக்க வேண்டும் ? 100 சத விகிதம் லெவி செய்தால்தான் கிராமம் முழுவதும் கிலோ ரூ.2.15-க்கு விநியோகம் செய்ய முடியும். 65 சத விகிதம் லெவியில் செய்ய முடியாது. ஆகவே, 100 சத விகிதம் லெவி செய்ய வேண்டும். அதை ஏற்றுக்கொள்ளாத முதலாளிகளின் ஆலைகளைத் தேசீய மயமாக்க வேண்டும். அப்போதுதான் விவசாயிகளின் கரும்புக்கு விலை கிடைக்கும்.

(முற்பகல் 11-30)

மறுபக்கத்திலே பேக்டரி புல்லாக ஓடலாம், ஆகவே அதைச் செய்யவேண்டும்.

கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். மீனவர்களுக்கு வலைகளுக்காக நைலான் நூல் சப்ஸிடி கொடுத்து வழங்க வேண்டும். இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த மிஸ்ஸெல்லேனியஸ் என்று கொடுக்கப்பட்டிருப்பதிலே அப்ரன்டிஸ் டிரெய்னிங் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே நீங்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதற்காக அது கொண்டுவரப்பட்டிருக்கின்ற சட்டமாகும். ஆனால் முதலாளிகள் என்ன செய்கிறார்கள் என்றால் ஏற்கனவே டெம்பரரியாக வேலை செய்கிறவர்களைப் போகச் சொல்லிவிட்டு சப்ஸிட்

யூட்டாக இவர்களைப் போடுகிறார்கள். எந்தக் காரணத்திற்காக இந்த அப்ரன்டிஸ் டிரெய்னிங் சட்டம் கொண்டுவரப்பட்டதோ அந்த நோக்கத்தை முறியடித்து விடுகிறார்கள். அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று சட்டத்திலே சொல்லவில்லை, சட்டம் டெம்பரரியாக இருக்கிறவர்களை அல்லது பர்மனன்ட் ஆக இருக்கிறவர்களை வெளியேற்றிவிட்டு இந்த ஸ்கீம் கொண்டுவரவேண்டுமென்று சொல்லவில்லை. பதிலிகளாக இவர்களைப் போடுவதன் மூலம் ஏற்கனவே டெம்பரரியாக வேலை செய்கிறவர்களையெல்லாம் வெளியேற்றிவிடுகிறார்கள். அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்து, கடன் ஒத்திவைப்பு சம்பந்தமாக ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். மாற்று ஏற்பாடாக இன்றைக்கும் கிராமங்களிலே ஒன்றும் செய்யப்படாமல் அங்கே உள்ள மக்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்புகளிலே பார்த்தால் நகை அடகு வைக்கிறவர்களுக்கு முன்னாலே இவ்வளவு கொடுத்தோம், இப்போது இவ்வளவு கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏழை விவசாயிகளிடத்தில் நகையா இருக்கிறது ? சாதாரண மணி போட்டிருக்கலாம். ஏழை விவசாயிகளிடத்தில் நகை இல்லை, லோயர், வீக்கர் செக்‌ஷன்ஸ் அவர்களிடம் நகைகள் கிடையாது, மத்திய தர, நடுத்தர வர்க்கத்தினரிடம்தான் நகைகள் இருக்கும். அவர்கள் அதை வைத்து விளையாடலாம். ஆனால் விவசாயிகளிடத்தில் நகை இல்லை. விவசாயிகளிடத்திலே பாத்திரங்கள்தான் இருக்கும். அதுகூட மண்பானைகள் தான் இருக்கும். ஆகவே அடகு என்ற அடிப்படையிலே கொடுக்கக்கூடிய மாற்றுக்கடன் அல்ல இது. ஆகவே அந்த மக்களுக்கு கடன் வழங்குவதற்கு சீரியசான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையைமுடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு இலாகா அமைச்சர் அவர்கள் மன நிம்மதியோடு இந்த மானியக் கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய குறிப்பின் உரையைப் பார்க்கிற போது நம்முடைய மாநிலத்திலே இருக்கக்கூடிய உணவு நிலைமையைப் பற்றித் தெள்ளத் தெளிவாக பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தில் அரிசி நிலைமை மிகவும் திருப்திகரமாக இருக்கிறது என்று தொடங்கி பலகருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். வரவேற்கிறோம். ஆனால் ஒரு நாட்டை எடுத்துக் கொண்டால் எப்போதுமே இப்படிப்பட்ட நிலைமை இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் எண்ணிவிடக் கூடாது. பல சிக்கலான சூழ்நிலைகள் வரும். அதற்கான முன் யத்தனத்தோடு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,





1966 ஆம் ஆண்டிற்கு முன்னதாக இந்த மாநிலத்திலே பல்வேறு பெரிய அணைக் கட்டுத் திட்டங்களையெல்லாம் போட்டு இந்த மாநிலத்திற்குத் தேவையான வசதிகளையெல்லாம் செய்து திருப்திகரமான உணவு நிலைமை இருக்க வேண்டும் என்பதற்காக தேவையான உற்பத்தி இருக்க வேண்டும் என்பதற்காக செயலாற்றிய போதும்கூட திடீரென்று ஏற்பட்ட வறட்சியின் காரணமாக இந்த மாநிலத்திலே ஏற்பட்ட உணவுப்பஞ்சம் எந்த அளவிற்கு இருந்தது என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதையொட்டி அடுத்து வந்த அரசு மேற்கொண்ட சில நடவடிக்கைகளின் காரணங்களால் ஏற்கனவே இருந்த அரசு 1966 ஆம் ஆண்டிற்கு முன்னாலே பல அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்றியிருந்த காரணத்தால், நம்முடைய மாநிலத்தில் உணவு நிலைமை திருப்தியாக இருக்கிறது என்று இன்றைக்கு அமைச்சர் அவர்கள் அறிக்கை வைத்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஒரு நாட்டின் பொருளாதாரத்தை எடுத்துப் பார்க்கின்றபொழுது உற்பத்திப் பெருக்கம் இருக்க வேண்டும். ஆனால் அது மட்டும் போதாது. உற்பத்தியாகின்ற பொருளை ஏழை எளியவர்களுக்கும் கிடைக்கும் அளவில் அதை விநியோகம் செய்ய வேண்டிய ஏற்பாடுகளையும் செய்திருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் அந்த நாட்டினுடைய பொருளாதாரம் சிறப்பாக இருக்கும் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே அறிக்கையில் இன்னொன்றையும் கூறியிருக்கிறார்கள். 1976-77 ஆம் ஆண்டு குறுவை சாகுபடி சற்றுப் பாதிக்கப்பட்டவுடன் மத்திய அரசு 4 மாதங்களுக்கு, அதாவது மே மாதத்திலிருந்து 4 மாதங்களுக்கு 50,000 டன் அரிசியை, ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்வதற்காகத் தந்து உதவி உள்ளது என்பதைச் சுட்டிக் காட்டி மத்திய அரசாங்கத்தைப் பாராட்டியிருப்பதைப் பார்க்கும்பொழுது உண்மையிலேயே நானும் அமைச்சரவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, இன்றைக்கிருக்கின்ற சூழ்நிலையில் மத்திய அரசு இந்த மாநில அரசுக்கு எந்த அளவிற்கு உதவுகிறது என்பதனை இடையிலே மறந்துவிடாமல் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதை இந்த அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கொள்முதலைப் பற்றி அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்க வேண்டுமென்பதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்கவில்லையென்றால் உற்பத்தி பாதிக்கப்படும். ஆகவே நியாயமான விலைகளைக் கொடுப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு இப்பொழுது இருக்கின்ற குறைகளை நிவர்த்தி செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1977 ஆகஸ்ட் 9

நியாயமான விலையை விவசாயிகளுக்குக் கொடுக்கின்றபோது வாங்கிச் சாப்பிடுகின்றவர்களுக்கு நியாயமான விலைக்குத்தான் இந்த அரசு விநியோகம் செய்ய வேண்டும். அமைச்சரவர்கள் தன்னுடைய அறிக்கையில் கூறியிருப்பதைப்போல இரண்டு மடங்கு இலாபத்தை, தனியார் அடைகின்ற இலாபத்தைப்போல அரசாங்கம் கொள்ளை இலாபம் அடிக்கக் கூடாது என்பதையும் அமைச்சரவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தன்னுடைய அறிக்கையில் 16 வது பக்கத்தில் கூறியிருக்கிருர்கள் '' கொள்முதல் விலையை விட அரிசியின் சில்லரை விற்பனை விலை ஏறக்குறைய இரு மடங்காக, அமைந்து வரும் போக்கு பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வருவது தெளிவாகும் '' என்று கூறியிருக்கிருர்கள். ஆகவே, இதனை உணர்ந்ததன் காரணமாக, இதை மாற்றி, இந்த விலையைத் திருத்தியமைக்க இந்த அரசு முன் வரும் என்று எண்ணுகிறேன்.

நெல்லைக் கொள்முதல் செய்து அதை அரிசியாக ஆக்குவதற்கு ஏற்படும் செலவினங்கள் நமக்கு நன்ருகத் தெரியும். அறவைக் கூலி, போக்குவரத்திற்கான செலவுகள், இன்னும் முடக்குகின்ற பணத்திற்குள்ள வட்டி போன்ற செலவினங்கள் இருந்தாலும் விற்கின்றபொழுது இரண்டு மடங்கு விலை ஏற்பட வேண்டிய அவசியமில்லை. இப்பொழுது மோட்டா ரக அரிசி கிலோ ரூ. 1·60 என்று விற்கின்றீர்கள். நெல் கொள்முதல் 78 ரூபாயாக இருக்கிறது. எனவே, அதை ரூ. 1·60 என்று விற்க வேண்டிய அவசியமில்லை. ஏறத்தாழ 1 ரூபாய் அளவில் அல்லது 1·10 என்ற அளவில் விற்கக்கூடிய நிலையில்தான் இருக்கிறது. ஆகவே, அமைச்சரவர்கள் ஏற்கனவே அறிக்கையில் கூறியிருப்பதால் விற்பனை விலையைக் குறைக்க உடனடியாக முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் குடும்பக் கார்டு முறையில் விளவங்கோடு தாலுக்காவிலும், கல்குளம் தாலுக்காவில் 14 கிராமங்களிலும் அரிசி விநியோகம் செய்து வருகிருர்கள். ஆனல் கல்குளம் தாலுக்காவில் 14 கிராமங்கள் என்று குறிப்பிட்டிருப்பது, அன்றையதினம், குடும்ப கார்டு திட்டம் கொண்டு வந்தபொழுது மாநிலத்திலிருந்த உணவு தானிய நெருக்கடியின் காரணமாக அவ்வாறு ஆளாக்கப்பட்டுவிட்டது. ஆனல், இப்பொழுது அந்தக் தாலுக்கா முழுவதும் குடும்பக் கார்டு அடிப்படையில் விநியோகம் செய்வதுதான் முறையாக இருக்கும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். காரணம், இப்பொழுது விநியோகம் செய்யப்படுகின்ற 14 கிராமங்களைப் போலத்தான் இன்னும் பாக்கியிருக்கின்ற கிராமங்களில்



1977 ஆகஸ்ட் 9] [திரு. ஜே. ஜேம்ஸ்]

நிலையும் இருப்பதால் அந்தக் கிராமங்களுக்கும் உடனடியாகக் குடும்பக் கார்டு அடிப்படையில் விநியோகம் செய்ய அரசு முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

இப்பொழுது விநியோகம் செய்கின்ற அரிசியைப் பார்க்கின்றபொழுது எனக்கு முன்னதாகப் பேசியவர் கூறியதைப் போல், துர்நாற்றம் எடுத்த அரிசி என்பது மட்டுமல்ல, எந்த அரிசி விநியோகம் செய்கிருேமோ அந்த நிறத்திற்கு ஏற்ற கல் எங்கிருந்து கிடைக்கிறது என்று தெரியவில்லை, அதே நிறத்தில் கல் சேர்க்கப்படுகிறது—மண்ணும் சேர்த்து கொடுக்கிருர்கள். நான், அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொஞ்சம் சாம்பிள் கொண்டு வந்து காட்டினேன். அந்த நிலையை உடனடியாக மாற்ற வேண்டுமென்று சொன்னல், ரேஷன் அரிசி தரமானதாக இருக்க வேண்டும். அதற்கு முயற்சி எடுப்பதாகவும் அமைச்சரவர்கள் அறிக்கையில் கூறியிருக்கிருர்கள். அதை நான் பாராட்டுகிறேன்.

அது மட்டுமல்ல, இப்பொழுது இந்த ரேஷன் கடையில் கொடுக்கப்படுகிற அரிசி எடை குறைவாகத்தான் கொடுக்கப்படுகிறது. ஒரு கிலோ அரிசியில் 100 கிராம், 50 கிராம் எடை குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னல், அந்த எடை குறைந்த அரிசிக்கும் ஓப்பன் மார்க்கெட் அரிசிக்கும் நிச்சயம் வித்தியாசம் வருவதில்லை. ஆகவே, இலாபத்தைவிட இடைத்தரகர்கள் எடுத்துக்கொள்கிருர்கள். ஆகவே, இந்த எடைக் குறைவை நிச்சயம் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன்.

6,000 கிராமங்களில் ஏறத்தாழ 9,000 விநியோகக் கடைகள் துவக்கி, உணவு தானியங்கள் விநியோகம் செய்து வருவதாக இந்த அறிக்கையில் காணப்படுகிறது. அது மட்டும் போதாது; இந்த மாநிலத்திலிருக்கிற ஏறத்தாழ 14,000 கிராமங்களில் விநியோகம் ஒழுங்கான முறையில் செய்வதற்கு நியாய விலைக்கடைகள் திறக்க வழி செய்வதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாகக் கூறினர்கள். அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி, மத்திய அரசாங்கத்தின் திட்டத்தில் ஜனதா கடைகள் அமைக்க அரசு முயற்சி எடுத்தால். ஒரு வேளை மத்திய அரசாங்கத்திலிருந்து கூட சலுகைகள் கிடைக்கக்கூடும்.

ஜனதா கடைகள் என்று சொல்லும்போது, ஏழை எளியவர்களுக்கு, குறிப்பிட்ட வருவாய்க்குக் கீழ், வருமானம் உள்ளவர்களுக்கு, சப்சிடைஸ்ட் என்ற நிலையில் விலையைக் குறைத்து, அரிசி விநியோகம் செய்வதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், கிராமங்களில், பல ஏழைகள் ரேஷன் அரிசி கூட வாங்குவதற்கு வகை

நவீனம் ஆக்கப்பட வேண்டும் என்று சொன்னால், கண்டிப்பாக அது முடியாது. கண்டிப்பாக இந்த அரசு பெரிய ஆலைகளை மட்டும், இரண்டு அல்லர்கள் உள்ள ஆலைகளை மட்டும் நவீனமாக்க, சிறு கூலி அறவை ஆலைகள் நவீனமாக்காமல் இருக்க, ஆவன செய்ய வேண்டுமென்றும் புதிய அறவை ஆலைகளுக்கு அறவை உரிமமும் நெல், அரிசி வியாபார உரிமமும் உடனே வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே ரேஷன் கார்டுகளிலே கிடைக்கின்ற அரிசியின் தரம் மிகவும் குறைவாக இருக்கிறது. அதை அறவையாளர்கள்—உரிமையாளர்கள் செய்கின்ற சதி என்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொன்னார்கள். ஆனால் கண்டிப்பாக அறவை உரிமையாளர்கள் செய்கின்ற சதி அல்ல. இது அரசிலே இருக்கிற அதிகாரிகள் 'சம்திங்' வாங்கிக் கொண்டு ஈர நெல்லை சுத்தப்படுத்தாத நிலையில் வாங்கி குடோனிலே வைத்து அதனால் அந்த நெல் கெட்டு விடுகிறது. அரிசியாகும்போது பழுப்பு நிறமாகி நாற்றம் அடிக்கின்ற நிலைமை ஏற்படுகிறது.

(முற்பகல் 11–50.)

தஞ்சாவூரில் கிட்டத்தட்ட 10,000 மூட்டைகளை கோடவுனில் அடுக்கி வைத்துக் கொண்டு, ஈர நெல்லை, கெட்டுப் போகின்ற நெல்லை அறவையாளர்களுக்குக் கொடுக்கிறார்கள். அதை அறைக்கின்றபோது, சிங்கில் ஊரல் போடாமல், இரண்டு தடவை வேக வைக்க வேண்டும் என்று அரசாங்கம் சொல்கிறது. அப்படிச் செய்யச் சொல்வதால், நெல் கெட்டுப் போய் இருப்பதால், டபுள் வேக்காடு போட்ட அரிசியாக வரும்போது கெட்டவாடை அடிக்கிறது. நிறம் மாறி விடுகிறது. இந்த அரசு அதைக் கவனித்து, காய்ச்சல் நெல்லாகப் பார்த்து கொள்முதல் செய்து, ஈரமாக இருந்தால் காய வைத்து அடுக்கி, அந்த நெல்லை சிங்கில் பாயில் செய்து அரவை செய்தால், நல்ல அரிசியாகத் தயாரிக்க முடியும். வெளி மார்க்கெட்டில் விற்கின்ற அரிசி போன்று தயார் செய்ய முடியும். அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டும்; இது அறவையாளர்கள் குறையல்ல என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் நெல் கொள்முதலை எடுத்துக் கொண்டால், நேரடியாக விவசாயிகளிடம் கொள்முதல் செய்வதுதான் சிறந்த முறையாகும். இப்போது வியாபாரிகளிடம் 40 சதவிகிதம் கொள்முதல் செய்கிறார்கள். ஆனால் வியாபாரிகளும், அதாவது அறவையாளர்களும், அறவை லைசென்சுதாரர்களும், அதிகாரிகளும் ஒன்று சேர்ந்துக் கொண்டு, சரியானபடி கொள்முதலுக்கு ஏற்பாடு செய்வதில்லை. குறுக்கு வயில் செல்கிறார்கள். சில பெரிய அறவை





யாளர்கள், லெவி கொடுக்காமல், நெல்லைக் கொள்முதல் செய்து கடத்தல் செய்கிறார்கள். ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு நெல்லைக் கொண்டு செல்லும்போது, சரியான முறையில் லெவி கொடுத்துக்கொண்டு செல்வதில்லை. பகுதி பேர் அப்படிச் செய்கிறார்கள். அந்த மாதிரியான அரவையாளர்கள் மீது அரசாங்கம் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் இந்த மாதிரி கிட்டத்தட்ட இரண்டு, மூன்று ஆண்டுகளாக, நடந்து வருகிறது. குறுக்கு வழியில் லெவி கொடுக்காமல் நெல்லைக் கடத்திக் கொண்டு செல்கின்ற அரவையாளர்கள் மீதும், அதற்கு உடந்தையாக இருக்கின்ற அதிகாரிகள் மீதும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, இந்த கடத்தல் முறையை நிறுத்த வேண்டும் நேரடியாக விவசாயிகளிடம் கொள்முதல் செய்தால், விவசாயிகளுக்கு ஏற்ற விலையை, கட்டுபடியாகின்ற விலையைக் கொடுக்கலாம். மேலும் விவசாயிகளிடம் நேரடியாக வாங்குவதன்மூலம், கடத்தலைத் தடுக்கலாம்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில், குண்டடம் பகுதியில் உப்பாறு டாம் இருக்கிறது. இதில் மீன் வளர்க் வாய்ப்பு இருக்கிறது. மீன் குஞ்சுகளை வளர்க்கின்ற இடம், வளர்க்கும் குட்டைகளைக் கட்டினால், அந்த இடத்திற்கு நல்ல வாய்ப்புகள் ஏற்படும் நிலை இருக்கிறது. இந்த அரசு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குண்டடம் பகுதியில் இன்னொரு குறை இருக்கிறது. அங்கேயுள்ள வெல்லம்பட்டி ஏரியாவில் ஒரு ஆறு செல்கிறது. அதைக் கட்டப்பதற்கு ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். உப்பாறு என்று சொல்லக்கூடிய இந்த ஆற்றைக் கிட்டத்தட்ட 10, 15 ஆண்டுகளாக யாரும் கவனிப்பார் அற்ற நிலையில், ஜனங்கள் மழைக் காலங்களில் அதைக் கடக்க மிகவும் கஷ்டப்படுகிறார்கள் பஸ் போக்குவரத்துக்கும் வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே அரசு உப்பாற்றுக்கு பாலம் கட்டிக் கொடுத்து, பஸ் வசதியைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, உணவு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கையை வரவேற்று எனது உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. மு. அரங்கநாதன் : பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு உணவு அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டிருக்கிற உணவு மானியக் கோரிக்கையின் மீதும், அதைப் போலவே, 'பல் வகை மூலதனச் செலவு' என்ற கோரிக்கையின் மீதும் பேசுகின்ற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலாவதாக அந்த 'பல்வகை மூலதனச் செலவு' என்கிற தலைப்பில் கொடுக்கப்பட்டிருக்கிற பிரச்னையில் என்னுடைய கருத்துக்களை, சில குறைபாடுகளை எடுத்துச் சொல்லி அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

(திரு. மு. அரங்கநாதன்) [1977 ஆகஸ்ட் 9

உள்துறை தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் நகரக் காவலர்கள் குடியிருப்பு கட்டுதல் என்ற தலைப்பின் கீழ் ராஜா அண்ணாமலைபுரத்தில் காவல் துறையைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர்கள், காவல் துறையைச் சேர்ந்த கிரேட் 1, கிரேட் 2 ஆகிய காவலர்களுக்கு 290 குடியிருப்புகள் கட்டுவதற்கான குறிப்புகளை இங்கே கொடுத்திருக்கிறார்கள். 1974-ம் ஆண்டிலே துவக்கப்பட்ட இந்த வேலை இன்னமும் முடிவு பெறாத நிலையில் இருந்து கொண்டு இருக்கிறது. கடலோரப் பகுதியில் இருக்கிற காரணத்தினால் இந்தக் கட்டடங்கள் கட்டுகின்ற வேலை துவக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகி விட்ட காரணத்தினாலும், உப்பம் காற்று அடிக்கின்ற காரணத்தினாலும் கட்டப்பட்ட கட்டடங்கள் மேலும், மேலும் பழுது பட்டுக்கொண்டே வருகிறது. இப்படிக் கட்டுவதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் சம்பந்தப்பட்ட பல கட்டட பணியாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிற காரணத்தினால் நான் இதனை இங்கே சுட்டிக் காட்ட விழைகின்றேன். அதேபோல என்னுடைய திருவல்லிக்கேணித் தொகுதியில், ஐஸ் அவுஸ் பகுதியில் பெசன்ட் சாலையில் காவலர் குடியிருப்பு இல்லங்கள் இருக்கின்றன. ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட நாட்டு ஓடுகள் வேய்ந்த அந்த இல்லங்கள் இன்றைக்கு பார்ப்பதற்கு பரிதாபகரமான நிலையில் இருக்கின்றன. அந்த இல்லங்கள், அதிலே வாழ்கிற காவலர்கள், இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் என்கிற நிலை இல்லாத காரணத்தினால் போதுமான பராமரிப்பு இல்லாத நிலையில் இருந்து கொண்டு இருக்கின்றன. கிரேட் I, கிரேட் II, காவலர்கள் அதிலே இருக்கிற காரணத்தினால் போதுமான பராமரிப்பு செய்யப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த நிலையிலே வீட்டு வசதி வாரியத்தின் கீழ் இதை உடனடியாக எடுத்து, அவர்களுக்கு மாற்று இல்லங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

அதற்கு அடுத்தாற்போல் மீன் வளத் துறையிலே கொடுத்திருக்கிறார்கள். எனது திருவல்லிக்கேணித் தொகுதியிலே மட்டாங்குப்பம், நடுக்குப்பம், அயோத்தியாக் குப்பம் என்று 3 பகுதிகள் ஏறத்தாழ 5 ஆயிரம் பேர் மீனவ சமுதாயத்தினர் வாழ்கிற பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதி முன்னாலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பிலே பிரமிக்கத்தக்க அளவிற்கு குடிசைமாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட அயோத்தியாக் குப்பக் கட்டடங்கள் உயர்ந்து காணப்படுகிறது. அந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு முடிவில் மின் விளக்கு வசதிகள் செய்வதற்கான திட்டம் இருந்தது. இன்றைய தினம் வரையில் அது நிறைவேற்றப்படாமல் அந்தப் பகுதி மாலை 6 மணிக்கு மேல் அங்கு சென்றால் ஒரு சந்தைக்கடைபோல விளக்குகள் இல்லாமல் இருளில் மூழ்கி உள்ள நிலைமையைக்



1977 ஆகஸ்ட் 9] (திரு. மு. அரங்கநாதன்)

காண முடியும். அவர்களுக்குப் போதுமான மின்விளக்கு வசதி இல்லாத குறைபாடுகள் உள்ளதால் அவர்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அதேபோல நடுக்குப்பம், மாட்டாங் குப்பம் அயோத்தியாக் குப்பம் என்று திருவல்லிக்கேணித் தொகுதியில் இருக்கின்ற மீன் பிடிக்கின்ற மீனவ சமுதாயத்தினர் பிடிக்கின்ற மீன்களைப் பாதுகாக்க போதுமான குளிர்சாதன அறை அண்மையில் இல்லாத காரணத்தினால் அவர்கள் அங்கிருந்து மூர்மார்க்கெட்டில் மாநகராட்சிக்குச் சொந்தமான குளிர்சாதன அறைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அதனால் பொருள் அதிகமாக விரயம் ஆவதுடன் கொண்டு போகின்ற மீன்களும் நொந்து விடுகிறது, கெட்டு விடுகிறது. அதனால் உடனடியாக அவர்களுக்கு பிடிக்கப்பட்ட மீன்களைப் பாதுகாப்பதற்கு குளிர் சாதன அறை ஒன்றை திருவல்லிக்கேணி பகுதியில் கடற்கரைக்கு அருகில் கட்டித்தர வேண்டுமென்றும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு தருகின்ற வகையில் கொடுக்கப்பட்டிருக்கிற தலைப்பில் வேலை இழந்த பொற்கொல்லர்களுக்கும், கைத்தறி நெசவாளர்களுக்கும் உதவுவதுதான் இத்திட்டத்தின் நோக்கம் என்று குறிப்பிட்டிருக்கிறது. மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சரவர்கள் ஒரு கூட்டத்திலே பேசிய நேரத்தில் கைத்தொழில் செய்கிறவர்கள், குறிப்பாக நெசவாளர்கள், நெசவாளப் பெருங்குடி மக்கள், இந்த நெசவுத்தொழில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், இந்த நிலைமையில் அண்மையில் நூல் விலைகள் அதிகமாக ஏறிவிட்ட காரணத்தினால், அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், அமைச்சரவர்கள் நெசவாளர் குடும்பத்திலே ஒரு அங்கம் வகிக்கின்ற காரணத்தினால், அந்த உணர்வின் அடிப்படையில் அந்த நெசவாளப் பெருங்குடி மக்களுடைய குறைகளைப் போக்குவதற்கு, ஒவ்வொரு நெசவாளருடைய இல்லங்களிலும் இருக்கிற வேலை இல்லாதவர்களுக்கு, அரசுத்துறையில் வேலை வாய்ப்புக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

[நண்பகல் 12–00].

அதை இந்த வரவு–செலவுத் திட்டத்தில் எந்தப் பக்கத்திலாவது கோடிட்டுக் காண்பித்திருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். அதுபற்றி பேச எனக்கு நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதத்தின்போது எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

(திரு. மு. அரங்கநாதன்) [1977 ஆகஸ்ட் 9

என்னுடைய திருவல்லிக்கேணி தொகுதியில் நெசவாளப் பெருங்குடி மக்கள் பெருவாரியாக வாழ்கிறார்கள். அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இருக்க இடம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அந்த நெசவாளப் பெருங் குடி மக்களுக்கு, திருவல்லிக்கேணி தொகுதியில் வாழ்கிற நெசவாளப் பெருங்குடி மக்களுக்கு குடிசை மாற்று வாரியத் தின் சார்பில் வீடுகள் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு அவர்களுக்கு அரசு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் முதலிடம் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் வீட்டுவசதி என்ற தலைப்பின்கீழ் பல தொழி லாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. ஆனால் தமி ழகத்தில் ஏறத்தாழ 1,85,000 ஆசிரியப் பெருங்குடி மக்கள் இருக்கிறார்கள். அந்த ஆசிரியப் பெருமக்களில் ஏறத்தாழ 85.000 ஆசிரியப் பெருமக்கள் கடந்த கால சம்பள உயர்வைப் பெறுகிற வாய்ப்பை இழந்து பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது கொடுக்கப்பட்ட சம்பள உயர்வு அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

அதுமட்டுமல்ல, ஆசிரியர்களுக்கான குடியிருப்பு என்பது எங்குமே இல்லை. சென்னை நகரில் குடிசைமாற்று வாரியம், அல்லது வீட்டுவசதி வாரியம் இவற்றால் பலயிடங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சென்னை நகரில் அரசு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. அதிலும் சென்னை நகர எல்லையோரப் பகுதிகளில் அரசு நிலங்கள் ஏராளமாக உள்ளன. ஆகவே அங்கே சென்னையில் வாழ்கிற ஆசிரியப் பெருங்குடி மக்களுக்கு ஆசிரியர் காலனி என்று அமைக்கும் நிலையை உடனடியாக இந்த அரசு ஏற்படுத்தி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் சமுதாயத்துறை என்ற தலைப்பின்கீழ் அரிசன மாணவர்களுக்கு, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு விடுதிகள் கட்டிக் கொடுக்கிற பிரச்னை இருக்கிறது. என்னுடைய திருவல்லிக்கேணி தொகுதி யில் ஏழை எளிய அரிசன, பிற்பட்ட வகுப்பு மாணவர் களுக்கு, ஆரம்பப் பள்ளியில் படிக்கிற மாணவர்களுக்குத்தான் ஒரு விடுதி இருக்கிறது. அங்கே மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவிக்கு ரூ. 40 என்று உணவிற்காக. கொடுக்கப்படுகிறது இப்போதுள்ள விலைவாசி ஏற்றத்தைப் பார்க்கிறபோது, இன்று அரிசி மற்ற பொருள்களின் விலைகளைப் பார்க்கிறபோது ஒரு மாணவிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 40 என்று சொன்னால் அந்த விடுதியில் எந்த அளவிற்கு மாணவச் செல்வங்களுக்கு உணவு போதுமான அளவில் வழங்கமுடியும் என்பதை எண்ணிப்பார்க்கும் போது உண்மையிலேயே நான் வேதனைப்படுகிறேன். நான் அந்த விடுதி உறுப்பினர் என்ற காரணத்தினால் அங்கே சென்று பார்க்கிற நேரத்தில் காலையில் ஒரு க்ளாஸ் காபி கூட இல்லா



1977 ஆகஸ்ட் 9] [திரு. மு. அரங்கநாதன்]

மல் மாணவிகள் வெறும் வயிற்றோடு பள்ளிக்குச் செல்லும் காட்சியைப் பார்த்தேன். அதைப்பற்றிக் கேட்டபோது சொல்கிறார்கள், இரண்டு வேளை உணவு, காலை டிபன், மதியம் டிபன் இவற்றை ரூ. 40 ல் எப்படிக் கொடுக்க முடியும் என்பது பற்றி எண்ணிப்பாருங்கள் என்று அந்த விடுதி பாதுகாப்பாளர் சொல்கிறபோது அது உண்மைதான் என்று தோன்றுகிறது. அந்த இளம் சிறார்கள மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே உடனடியாக இதில் அரசு கவனம் செலுத்தவேண்டும்.

அடுத்து, 1973–74-ம் ஆண்டு தமிழ் நாட்டு அரிஜன குடியிருப்பு மேம்பாட்டு வாரியம் என்று அமைக்கப் பட்டது தி.மு.க. ஆட்சியில். அதற்கு முன்னால் அப்படிப்பட்ட ஒரு வாரியம் இல்லை. வீட்டுவசதி வாரியம். குடிசைமாற்று வாரியம் என்று அமைக்கப்பட்டிருந்தாலும் கூட சரியான முறையில் அரிஜனங்களுக்கு வீட்டுவசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்ற முறையில் அரிஜன வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் என்று ஒரு தனி அமைப்பை ஏற்படுத்திய பெருமை எங்கள் தானைத் தலைவர் கலைஞர் அவர்களைச் சாரும். அந் நிலையில் முதன்முதலாக லாயிட்ஸ் சாலையில் கோகிலம் காலனி என்று மகாத்மா காந்தி அடிகளால் கால் எடுத்து வைக்கப் பட்ட அந்த ஹரிஜனப் பகுதியில் ஒரு பெரிய தீ விபத்து ஏற்பட்டது; அதன்விளைவாக உடனடியாக முதல் அமைச்சர் அவர்கள், எங்கள் தானைத் தலைவர் கலைஞர் அவர்களின் முடிவின்பேரில் அந்தப் பகுதியை இந்த ஹரிஜன வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆணைக்கேற்ப அன்றையதினம் இருந்த ஹரிஜன நல இலாகா அமைச்சர் அண்ணன் ராஜாங்கம் அவர்களால் மேற்கொள்ளப் பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அந்த வேலைகளுக்கிடையே சுதந்திரம் பறிபோன அந்த ஓராண்டுக் காலத்தில் அந்த வேலைகள் சரியானபடி கண்காணிக்கப் படாமல் மிகக் கேவலமானமுறையில் விடப்பட்டிருக்கின்றன. அதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை].

என்னுடைய தொகுதியான திருவல்லிக்கேணியிலுள்ள சுதந் திரா நகர், துவாரகா நகர், ராம் நகர் இந்த இடங்களில் எல்லாம் ஆதி ஆந்திரா மக்கள் வாழ்கிறார்கள். ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் அந்த ஆதி ஆந்திரா அரிசன மக்களுக்கு சலுகைகள் அளிக்கின்ற வகையில் அவர்கள் வாழ்கின்ற இடத்தை அந்த துப்புரவு தொழிலாளர் களுக்கே பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்று பெரு முயற்சி எடுக்கப்பட்டு, அதற்கான வேலைகள் எல்லாம் முடிந்து, சர்வே எல்லாம் நடத்தப்பட்டு, இரண்டு மூன்று நாட்களுக்குள் கொடுக்கப்படலாம் என்று இருக்கின்ற நேரத்தில், ஜனநாயகத்

தின் பெயரால் அன்றைய ஆட்சி மத்திய அரசால் கலைக்கப்பட்டது. அதிலிருந்து இதுவரை இந்தப் பட்டாக்கள் வழங்கப்படவில்லை. அதற்கிடையே இருந்த கவர்னர் ஆட்சியில் அப்போது இருந்த கவர்னர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்த இந்த வேலையை தொடர்ந்து பட்டாக்கள் வழங்கப்படும் என்று சொன்னார்கள். பத்திரிகைகளில் இந்த செய்தி வந்தபோது நாங்கள் எல்லோரும் பெருமைப்பட்டு கொண்டோம். ஆனால், அது இன்று வரை நடைபெறவில்லை. அதனைக் கவனிக்க வேண்டுகிறேன்.

மேலும் திருவல்லிக்கேணி தொகுதியில் கணேசபுரம், துலுக்காணத்தம்மன் தோட்டம் இந்தப் பகுதிகளில் எல்லாம் அரிசன மக்கள் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பக்கிம் காம் கால்வாய் ஓரத்திலும் குடிசை வாழ் மக்கள் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் மிக கேவலமான நிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இவர்களுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

அதற்கடுத்தபடியாக, இந்த உணவுப் பிரச்னைமீது நான் கொடுத்திருக்கும் வெட்டுத்தீர்மானத்தின் அடிப்படையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு உணவுப் பொருட்களை வழங்கிக்கொண்டிருக்கின்ற டி.யு.சி.எஸ். நிறுவனம் மிகவும் சீர்கேடு அடைந்திருக்கின்றது. இந்த நிறுவனம் மிகவும் கேவலமான நிலைமையில் போய்க் கொண்டிருக்கிறது. மக்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குவதற்கு முடியாத நிலையில் மணியடித்தால் கடையை மூடிக்கொண்டு வீடுகளுக்கு போய்கொண்டிருக்கின்ற நிலையில் இருக்கிறது. உணவுப் பொருட்கள் சரியான முறையில் வழங்கப்படுவதில்லை. இது தனியாக கூட்டுறவு நிறுவனமாக இருப்பதால், இதே கடைகளில் பல்வேறு அரிசி வகைகளும் இருக்கின்றன. அதோடு கூடவே தான் அரசாங்கம் வழங்குகின்ற உணவுப்பொருட்களையும் சேர்த்து வைத்து வழங்குகிறார்கள். ஆகவே அரசாங்கப் பொருட்கள் களவாடப்படுகின்றன. அப்படிக் களவாடிச் செல்லப்படுகின்ற நேரத்தில் நானே பிடித்துக் கொடுத்திருக்கிறேன். வழக்குப் போடப்பட்டு வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. இரண்டாண்டு காலமாக வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதை உடனடியாக அரசே சிவில் சப்ளைஸ்கார்ப்பரேஷன் மூலமாக பராமரிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு பிரச்னையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சர்க்கரை கிராமப்புறங்களில் கிடைப்பதில்லை என்றும் வெளியே அதிகமான விலைக்கு சர்க்கரை விற்கப்படுகிறது என்றும் பலர்



இங்கு சொன்னார்கள். நான் சொல்ல விரும்புவது, இந்த அரசுக்கு தைரியமிருந்தால், தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையை தமிழ்நாடு முழுமைக்கும் எவ்வளவு சர்க்கரை தேவையோ அதை நமது அதிகாரத்திற்குள் வைத்துக்கொண்டு, நம்முடைய சுயதேவையை பூர்த்தி செய்துவிட்டு, மீதமுள்ளவற்றை வெளியே கொடுப்பதற்கு தகுந்தவாறு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காகத்தான் எங்கள் தலைவர் மாநில சுயாட்சி வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். கிராமத்தில் ஒன்று சொல்லுவார்கள். 'சீனி வேண்டும் சித்தப்பா' என்று கேட்டதற்கு, ஒருவர் காகிதத்தில் 'சீனி' என்று எழுதிக்கொடுத்து, இதை 'நக்கப்பா' என்று கொடுத்தானும்.... சீனி வேண்டும் சித்தப்பா என்றதும் ஏட்டில் எழுதி நக்கப்பா என்று சொல்வதைப் போல. அந்த அளவில் சர்க்கரை என்று சொல்லும்போது அது வெறும் ஏட்டளவில் நின்றுவிடாமல், சீரான முறையில் மக்களுக்கு சர்க்கரை கிடைப்பதற்கான வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்புத்தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

## (3) ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

### (ஆ) மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு நேரம் ஒதுக்குவது குறித்து.

திரு. சோ. அழகர்சாமி : அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில், ஒவ்வொரு டிமான்டிலும் எப்படி எப்படி எவ்வளவு நேரம் பேச வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட முக்கியமான மான்யக் கோரிக்கையில் ஒவ்வொரு கட்சியும் தனது கருத்தை தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். அப்படியிருக்கும்போது எங்கள் கட்சியிலிருந்து இதில் பேசுவதற்கு யாருக்கும் இடமில்லை என்று சொல்லிவிட்டால், இதில் எங்கள் கருத்துக்களை தெரிவிக்காமல் இருப்பது நாகரீகமாக இராது. அப்படி நேரம் கிடைக்காமல் இருந்தால் ஒவ்வொரு கட்சியினுடைய கருத்தை பெற முடியாத நிலைமை ஏற்பட்டு விடும். ஆகவே இதைப்பற்றி தாங்கள் என்ன கூறுகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

[பிற்பகல் 12–10]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மான்ய கோரிக்கையின் மீது விவாதிக்கின்றபோது, குறைந்தபட்சம் ஒரு கட்சிக்கு ஒவ்வொரு மெம்பராவது அனுமதிப்பதுதான் முன்பு நடைமுறையில் இருந்தது. அதிலும், சி.பி.ஐ.யிலே 5 பேர்கள் இருப்பதுபோல், காங்கிரசிலும் 5 பேர்கள் இருக்கிறார்கள்;

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவிலே, எல்லாக் கட்சித் தலைவர்களும், எதிர்க் கட்சித் தலைவரும் கலந்து கொண்டு பேசுகிறபோது, அந்தந்தக் கட்சிகளுடைய பலத்தின் அடிப்படையிலே நேரத்தை ஒதுக்குவது என்று பேசி முடிவு செய்தோம். அந்த வகையிலே, அந்த முடிவை ஒட்டி நேரம் ஒதுக்கப்படுகின்றது. குறிப்பாக, எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு அதிக வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள், அவர்களது உரிமைகளை விட்டுக் கொடுக்கக் கூடாது என்று சொல்லுகிற அதே நேரத்திலே, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், எங்களுக்கு நேரம் குறைவாகக் கொடுக்கிறீர்களே என்று வாதாடுகிறார்கள். 10 பேர்களுக்கு கொடுக்கக் கூடியதற்கு 5 பேர்களுக்குத் தானே கொடுக்கிறீர்கள் என்று சொல்லுகிறார்கள். மொத்தத்திலே ஆளும் கட்சியைவிட, எதிர்க் கட்சிகளுக்கு அதிகமாக நேரம் ஒதுக்குகிறீர்கள் என்று சொல்கிறார்கள். அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு எடுக்கப்பட்டு, அதன்படி நான் கடமையைச் செய்கிறேன். எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள், எங்கள் உரிமை பறிபோகிறது என்று சொல்வது, எனக்கு தர்மசங்கடமாக இருக்கிறது. அலுவல் ஆய்வுக் குழு செய்யும் முடிவிற்கு ஏற்ப, நான் கடமையாற்ற காத்திருக்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, மானிய கோரிக்கையிலே ஒவ்வொரு தலைப்பு வரும்போதும், அந்தத் தலைப்பின்மீது ஒரு கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் பேசுவது வழக்கம். அப்படிப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளிக்காவிட்டால் அது நலமாக இருக்காது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்த மானிய கோரிக்கைக்கு $3\frac{1}{2}$ மணிநேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது 10லிருந்து $1\frac{1}{2}$ மணி என்று எடுத்துக் கொண்டால் $3\frac{1}{2}$ மணி நேரம் ஆகிறது. ஒரு உறுப்பினருக்கு முக்கால் நிமிஷம் என்று சொன்னாலும், எங்களுக்கு மூன்றே முக்கால் நிமிஷம் வரும். இந்த மானியக் கோரிக்கையின்மீது, பேசாமல், உட்கார்ந்து கொண்டு கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமா என்று யோசிக்கிறபோது, எங்களுக்கு ஒரு உணர்வு ஏற்படுகிறது. எங்கள் கட்சியிலேயும் 5 பேர்கள் இருக்கிறோம். ஒருவர்கூட பேசாமல்—ஒத்திவைப்புத் தீர்மானம் என்றாலே எல்லாக் கட்சிகளும் பேச அனுமதி கொடுக்க வேண்டுமென்ற முறையில் சொல்கிறபோது, மானிய கோரிக்கையிலே பேசுவதற்கு அனுமதி அளிக்காமல் இருந்தால் அது சரியல்ல.

திரு. எம். ஏ. லத்தீப் : இங்கே உறுப்பினர்களாக இருக்கக் கூடியவர்கள் தங்களுடைய கருத்துக்களை உறுப்பினர்கள் என்ற முறையில் அல்லாமல், சில கொள்கையின் அடிப்படையிலே, கோட்பாடுகளின் அடிப்படையிலே இந்தச் சபையின் முன் வைக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. ஆகவே, அந்தந்தக் கட்சியின் அடிடபடையிலே கருத்துக்களைத் தெரிவிக்க இருக்கிறார்கள். ஒரு





கட்சி என்றால் ஒருவர் அல்லது இருவர் இருக்கலாம். அந்த கட்சிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும். ஆனால் இது வரையிலும் இப்படி நடக்கவில்லை, எனக்குத் தெரிந்த அளவிலே, அலுவல் ஆய்வுக் குழுவிலே ஒரு கட்சிக்கு கொடுக்கக் கூடாது என்று பேசியதாக எனக்கு நினைவில்லை. கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையிலே நேரம் ஒதுக்கப்பட வேண்டுமென்று பேசப்பட்டது. ஆகவே, ஒவ்வொரு கட்சிக்கும் வாய்ப்பளிக்க வேண்டும். அதையும் கருத்தில் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையில் உங்கள் கட்சியின் நிலைமையைப் பற்றிப் பேசினீர்கள். நான் கட்சிக்கு அப்பாற்பட்டு கடமையாற்ற வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில் விருப்பு வெறுப்பு இல்லாமல் பணியாற்றிக் கொண்டு வருகிறேன். ஆனால், எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் உரிமைகள் பறிபோகின்றன என்று சொல்கிறீர்கள். அந்த அடிப்படையிலே கருத்துக்களைச் சொல்லியிருக்கிறீர்கள். அலுவல் ஆய்வுக் குழுவில் இதைப்பற்றித் தெளிவாக வகுத்துக் கொடுங்கள். அதன் அதன்படி நடக்கிறேன். உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கட்சியின் அடிப்படையிலே நேரம் ஒதுக்கும்படி கூறுகிறார்கள். ஆனால், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலே எங்களுக்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆளும் கட்சியிலே உள்ளவர்கள், எதிர்க் கட்சிகளுக்கு அதிக நேரம் ஒதுக்கி விடுகிறீர்கள். எங்களுக்கும் அதன்படி ஒதுக்க வேண்டுமென்று அவர்களும் உரிமைக்காக வாதாடுகிறார்கள். நான் ஒவ்வொரு உறுப்பினருக்கும் 5 நிமிஷம்கூட ஒதுக்கத் தயாராக இருக்கிறேன். இதற்கெல்லாம், அலுவல் ஆய்வுக் குழுவிலே தெளிவாகத் திட்டம் வகுத்துக் கொடுங்கள்.

அலுவல் ஆய்வுக் குழுவில் தெளிவாக எனக்கு வழியைக் காட்டுங்கள். இங்கே வருகிறபோது மாண்புமிகு லத்தீப் உரிமையைக் காப்பாற்ற வேண்டும் ; எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிற 48 உறுப்பினர்கள் உரிமையைக் காப்பாற்ற வேண்டும் ; இப்படிப்பட்ட இக்கட்டான நிலைமையில் தெளிவான முடிவைத் தாருங்கள். அதைக் கடைப்பிடிக்க நான் தயாராக இருக்கிறேன்.

திரு. துரை முருகன் : இரண்டு நாளைக்கு ஒரு டிமாண்ட் வைத்துக் கொள்ளலாம். இவ்வளவு பெரிய டிமாண்டுக்கு மூன்றரை மணி நேரம் போதுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவில் இவை எல்லாம் விவாதிக்கப்பட்டன. இந்த மாதம் 28ம் தேதிக்குள் நாம் இவற்றை எல்லாம் நிறைவேற்றியாக வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவில் பேசி நீண்ட நேரம் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தால்

[பேரவைத் தலைவர்] [1977 ஆகஸ்டு 9

நீங்கள் எல்லோரும் விரும்பினால் மாலையில் அவையை வைத்துக் கொள்ள நான் தயார். ஆனால் மாலை நேரத்தில் கோரம் இருப்பதில்லை. இதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோரும் சேர்ந்து அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்தால் அதைக் கடைப்பிடிக்க நான் தயார்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: எண்ணிக்கை அடிப்படையில் நிச்சயமாக அதற்கு மதிப்புக் கொடுப்பதில் ஆட்சேபணை கிடையாது. எண்ணிக்கை என்று பார்த்தாலும் ஏற்கனவே நான் சொன்னது போல் எங்களுக்கு நான்கு நிமிஷம் வருகிறது. இன்றைக்கு நீங்கள் எங்களைப் பேச அனுமதிக்காவிட்டால் நாங்கள் இந்த அவையில் இருப்பதைக் காட்டிலும் வெளியில் இருப்பது நல்லது என்ற கருத்து இருந்து வருகிறது. அப்படி ஒரு சந்தர்ப்பம் இல்லாமல் இரண்டு நிமிஷமாவது எங்கள் கருத்தைச் சொல்ல அனுமதிப்பது நலமாக இருக்கும்.

*திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இது போன்ற மிக முக்கியமான மானியங்களில் எல்லாக் கட்சிகளுடைய கருத்துக்களையும் தெரிவிப்பது ஆளும் கட்சிக்கும் பயனுள்ளதாக இருக்குமென்ற கருத்தை நான் மனதார ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆனால் தங்களுக்குள்ள பிரச்சினை எல்லாம் நேரத்தை எவ்வளவு ஒதுக்குவது என்பதும், ஐந்து நிமிஷம் அல்லது பத்து நிமிஷம் என்று நேரம் பெறுகிறவர்கள் தாங்கள், எவ்வளவுதான் மணி அடித்தாலும் கேட்காமல் நேரத்தை நீட்டிக் கொண்டே போகும் காரணத்தால் ஒவ்வொரு நாளும், இரண்டு மணி, இரண்டரை மணி, மூன்று மணி என்று அவையின் நேரம் செல்லுவதால் ஏற்படுகிற சங்கடத்தையும் உணராமல் இல்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை அவர்கள் ஐந்து பேர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்குத் தாங்கள் நேரத்தை ஒதுக்கி இந்தப் பிரச்சினையில் வாய்ப்பளிப்பதுதான் நலம் என்று நானும் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர்: தயவு செய்து இனி உறுப்பினர்கள் ஐந்து நிமிஷம் பேசவேண்டும். விவாதத்தை ஆரம்பிக்கிறபோதும், முடிக்கிறபோதும் கணிசமான நேரம் ஒதுக்கி, பதிலுரைக்க அமைச்சருக்குக் கணிசமான நேரம் ஒதுக்கி மற்ற உறுப்பினர்கள் ஐந்து நிமிஷத்திற்கு மேல் போகாமல் பேசினால் தான் எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்க முடியும். ஆகவே, ஐந்து நிமிஷம் ஆனவுடன் கண்டிப்பாக மணி அடித்துக் கொண்டே இருப்பேன்.

திரு. சோ. அழகர்சாமி: அலுவல் ஆய்வுக் குழுவில் பேசும் போது, ஒவ்வொரு கட்சி எண்ணிக்கைக்கும் தகுந்தவாறு நேரம் ஒதுக்க வேண்டுமென்று பேசினோம். டிமாண்ட் சம்பந்தப்பட்ட



1977 ஆகஸ்டு 9] [திரு. சோ. அழகர்சாமி]

மட்டில் இரண்டு நாளைக்கு ஒரு தடவைதான் சந்தர்ப்பம் கொடுப்பது என்று முடிவு செய்யவில்லை. ஒவ்வொரு டிமாண்டிலும் எண்ணிக்கைக்குத் தக்கபடி ஒவ்வொரு கட்சிக்கும் நேரம் கொடுக்க வேண்டும். நாலைந்து நிமிஷம் கொடுத்தாலும் பரவாயில்லை. இப்போது நாங்கள் கம்பிளீட்டாகப் பேசமுடியாமல் போகின்ற அளவுக்கு எப்படி முடிவு பண்ணினார்கள் என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அலுவல் ஆய்வுக் குழுவில் நடந்ததை எண்ணிப் பார்க்க வேண்டும். கவர்னர் உரை விவாதத்திற்கு முன்னால் எதிர்கட்சித் தலைவர் நேரத்தை வகுத்து மணிக் கணக்கை எல்லாம் பார்த்து நேரத்தை முடிவு செய்தார்கள். இந்தத் தடவை அதைக் கடைப்பிடிக்கவில்லை. காரணம் நிறைய சந்தர்ப்பம் எதிர்கட்சிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்ற காரணத்தால் அது மாண்புமிகு லத்தீபாக இருந்தாலும் கந்தசாமியாக இருந்தாலும், மார்க்கபந்துவாக இருந்தாலும் உடனே நேரம் தந்து விடுகிறேன். ஆகவே, இப்போது இருக்கும் சங்கடத்தில், இருக்கின்ற நேரத்தில் சந்தர்ப்பம் கொடுக்க, ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஐந்து நிமிஷ நேரந்தான் கொடுக்க முடியும். உறுப்பினர்கள் நேராக தொகுதியிலுள்ள பிரச்னைகளைச் சொல்லாமல் மற்றவற்றைப் பற்றியெல்லாம் பேசிவிட்டு தொகுதிக்கு வருகிற நேரத்தில் நேரம் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, நேராகத் தொகுதிக்குச் சென்றால் சரியாக இருக்கும்.

அடுத்து திரு. துரை முத்துசாமி அவர்கள் பேசுவார்கள்.

[பிற்பகல் 12–20]

* திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பை நல்கியமைக்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நியாய விலைக் கடை ஆயிரம் கார்டுகளுக்கு ஒரு கடை திறக்கப்படுகிறது, அதனால் ஜனங்கள் நெரிசலாகவும் வாங்குவதற்கு அவர்கள் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலைமையும் இருக்கிறது. ஆகவே 500 பேர்களுக்கு ஒரு கடை என்று வைத்தால் அதன் மூலம் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்பும், அதேபோல் ஜனங்களுக்கு நெரிசல் இல்லாமல் அவர்கள் நல்லமுறையிலே வாங்குவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே ஆயிரம் பேர்களுக்கு ஒரு கடை என்று இல்லாமல் 500 பேர்களுக்கு ஒரு கடை என்று அமைக்க வேண்டும்.

[திரு. துரை முத்துசாமி] [1977 ஆகஸ்டு 9

உணவு வழங்குவதைப் பொறுத்தவரையில் நீலகிரியில் பிரத்யேகமாக தனியார் கடைகள் 4 வைக்கப்பட்டிருப்பதாக இந்த குறிப்பிலே சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அங்கே அரசாங்கத்தின் சார்பிலே நியாயவிலைக் கடை எதுவும் இல்லை, அதனால் அங்கே உள்ள மக்கள் வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள், அங்கே அரசாங்கத்தினுடைய நியாயவிலைக் கடை ஒன்றை உடனடியாகத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய மார்க்கட் கமிட்டி இப்போது திருச்சியிலே இருக்கிறது. இதனால் விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். காரணம் இப்போது திருச்சி மாவட்டம் வேறு, புதுக்கோட்டை மாவட்டம் வேறு. ஆனால் விவசாயிகள் அங்கே உள்ள மார்க்கெட் கமிட்டிக்கு எடுத்துச் செல்வதற்குப் பெரிதும் துன்புறுகிறார்கள். விவசாயிகள் பெருத்த கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் ஆளாகிறார்கள். ஆகவே அதை புதுக்கோட்டைக்கு மாற்றி அமைத்துத் தருமாறு இந்த நேரத்திலே நான் கோட்டுக்கொள்கிறேன்.

அரிசி தாராளமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள், அண்ணா வழியிலே வந்த அரசு என்று சொல்கிறார்கள், அண்ணா சொன்னபடி ரூபாய்க்கு 3 படி என்று இல்லாவிட்டாலும் ரூபாய்க்கு ஒரு படி என்று இல்லாவிட்டாலும் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோவாவது கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறை மூலமாகக் கொடுக்கப்படக்கூடிய புழுங்கல் அரிசி தரமாக இல்லை. ஒரு கிலோ புழுங்கல் அரிசி வேக வைப்பதற்கு பத்து கிலோ விறகு தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட நிலைமையை மாற்ற வேண்டும். அதை டபிள் பாயில் செய்வதைத் தவிர்த்து சிங்கிள் பாயில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பக் கார்டுகளைப் பொறுத்தவரையில், சில கிராமங்களிலே உள்ள காலனிகளிலே இன்னும் குடும்பக் கார்டுகள் வழங்கப்படவில்லை, தேர்தலுக்கு முன்பும் சரி, தேர்தலுக்குப் பிறகும்சரி, இன்னும் குடும்பக் கார்டுகள் வழங்கப்படவில்லை என்ற புகார்கள் இருக்கின்றன. அதைப்பற்றி அதிகாரிகளைக் கேட்டால் அவர்கள் கார்டுகள் இல்லை, ஆகவே வழங்கப்படவில்லை, ஸ்டேஷனரி இல்லை என்று கூறுகிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் போக்க வேண்டும். ஏழை எளிய மக்களுக்கு, அரிசனகளுக்கு இன்னும் குடும்ப கார்டுகள் வழங்கப்படவில்லைக் உடனடியாக வழங்கப்பட வேண்டுமென்பதை அமைச்சர், அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1977 ஆகஸ்டு 9] [திரு. துரை முத்துசாமி]

கலப்படத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் எங்கேயும் எதிலேயும் கலப்படம் இருந்து கொண்டிருக்கிறது என்றார்கள், உணவு விநியோகமாக இருந்தாலும் சரி, எந்தப் பண்டமாக இருந்தாலும் சரி, இட்டிலி, தோசை, வடை, எண்ணெய் போன்றவைகளிலே எல்லாம் கலப்படம் இருந்துகொண்டிருக்கிறது. இது குறித்து கடுமையான நடவடிக்கை எடுத்தால் தான் இந்த நிலையை மாற்றியமைக்க முடியும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் நானும் எங்கள் கட்சித் தலைவராக இருக்கிறவர்களும், திருச்சியிலே சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு பாராட்டுக் கொடுப்பதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு 27 பேர்களும் ஒரு மாமண்டூர் ஹோட்டலுக்குச் சென்றபோது சாப்பிட்டோம், அவர்களிலே இன்னும் ஒருவருக்கு உடம்பு சரியாக இல்லை. சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதியில் — நான் பேரவைத் தலைவரின் அனுமதியோடு சொல்கிறேன்— அங்கே கொடுக்கப்பட்ட இட்டிலியையும் வடையையும் இங்கு கொண்டுவந்திருக்கிறேன், பேரவைத் தலைவர் வேண்டுமானால் சோதித்துப் பார்க்கலாம் — இப்படிப்பட்ட நிலைமைகள் கலப்படத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமாக மாற்றப்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1976–77 ஆம் ஆண்டிலே கொள்முதல் 1·58 இலட்சம் டன் என்றும் விநியோகம் செய்தது 6·77 இலட்சம் டன் என்றும் இருக்கிறது. தனியார்களிடம் வாங்கியிருக்கிறார்கள். தனியார்களிடம் வாங்கினால் விலையேற்றத்திற்குப் பதுக்கலுக்கும் வழி வகுக்கும் ஆகவே அரசாங்கமே கொள்முதலை நேரடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல தாலுக்காவாரியாக நாங்களெல்லாம் போகும் பொழுது பார்த்திருக்கிறோம். ரோடுகளிலேயே வாங்கிய நெல்லையெல்லாம் கொட்டி வைத்திருக்கிறார்கள். அந்த நெல்லானது அப்படி ரோடுகளிலேயே கிடந்து மழையிலும், வெய்யிலும் இருப்பதைப் பார்க்கிறோம். எனவே, ஒவ்வொரு தாலுக்காவிலும் கோடவுன்களை வைத்து, கொள்முதல் செய்து வாங்குகின்ற நெல் முழுவதையும் அங்கே வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்

அதேபோன்று நெல்லுக்கும், கரும்புக்கும் சரியான விலையைக் கொடுக்க வேண்டும். உழுபவன் கணக்குப் பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது'' என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட நிலையிலே, மிகவும் கஷ்டமான நிலையிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலே, அவர்களுக்குப் போனசும், மானியமும் கொடுக்க வேண்டும். அதே

நேரத்திலே விலையை உயர்த்திக் கொடுத்து விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் சார் பேரவைத் தலைவரவர்களே, உணவு அமைச்சரவர் உரையிலும், கவர்னர் உரையிலும் 9,300 கடைகள் இருப்பதாகத் தொடர்ந்து சொல்கிறார்கள். நாட்டிலே அப்படி 9,300 கடைகளில்லை. கூட்டுறவு சங்கங்கள்தான் தயவுக்காக அப்படிப் போடுகிறார்களே தவிர, கடைகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எப்படி பாயின்ட் ஆப் இன்பர்மேஷனிலே வரும், நீங்கள் சேகரித்து எங்களுக்கு கொடுக்கிறீர்களா ,

திரு. சி. ஆறுமுகம் : கடைகள் இல்லை என்றுதான் சொல்கிறேன்.

*திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த மன்றத்தில் இன்றைய தினம் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் உணவு விநியோக முறை சம்பந்தமாக எனக்கு முன்னால் பல பெரியவர்கள் பேசியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் இந்த மன்றத்திலே 5 ஆம் தேதி அன்றைய தினம் தஞ்சை மாவட்டத்தில் அரிசி கிடைக்கவில்லை, அரிசியின் விலை உயர்ந்திருக்கிறது என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து நான் இங்கே பேசியிருக்கிறேன். அன்றைய தினம் பேசிய உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் தஞ்சை மாவட்டத்திலே அரிசி நியாயமான விலையில், தாராளமாகக் கிடைக்கிறது என்றும், சீர்காழியில் கிலோ 2·20—க்கு விற்கிறது என்றும் என்னிடத்திலே சொன்னார்கள். அன்றைய தினம் அரிசியின் விலை சீர்காழியிலே மட்டும் உயர்ந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னால் தஞ்சை மாவட்டத்திற்குச் சென்று வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, நான் இன்னும் தஞ்சை மாவட்டத்திற்குச் சென்று வரவில்லை.

திரு. இரா. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். திருச்சி மாவட்டத்திற்குச் சென்று வந்திருக்கிறார்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்தின் நிலைமைகளைப்பற்றி





உணவு அமைச்சர் என்ற முறையிலே கேட்டறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆனால் இன்றைய தினம் தஞ்சை மாவட்டத்தில் பரவலாக எல்லாயிடங்களிலும் அரிசி கிலோ ரூ. 2·20, ரூ. 2·30 என்று விற்றுக் கொண்டிருப்பதை நான் நேற்று முன் தினம் அங்கே சென்று வந்த நேரத்தில் கண்டு வந்திருக்கிறேன். இங்கே பேசிய நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், தஞ்சை மாவட்டத்தில் நெல்லின் விலை மூட்டை ரூ. 70—லிருந்து ரூ. 75 வரையில் விற்றுக்கொண்டிருக்கிறது என்று. இன்றைய தினம் நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது, நியாயமான விலையில், நிர்ணய விலையில் அங்கேயுள்ள ஏழை மக்களுக்கு, விவசாயிகளுக்கு அரிசி கொடுத்தாக வேண்டும், அத்தியாவசியப் பண்டங்கள் கொடுத்தாக வேண்டும். அதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வெண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்வேன்.

இந்த அரசு 16.000 நியாய விலைக் கடைகளைத் தமிழகத்திலே திறக்க இருக்கிறது என்று சொன்னார்கள. 9,290 நியாய விலைக் கடைகள் இப்பொழுது இருக்கின்றன என்று சொன்னார்கள். நான் அன்றையதினம ஒரு கேள்வியிலே கேட்கின்றபொழுது, கிராமக் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடைகள் நடக்கின்றன. நியாய விலைக் கடைகள் (நிர்ணய விலைக் கடைகள்) எந்தக்கிராமப்பகுதியிலும் திறக்கவில்லை என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அன்றையதினம் உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் உறுப்பினரவர்கள் தெரிந்துகொள்ளாமல் இருக்கலாம், ஆனால் முந்தைய அரசு கொண்டு வந்த திட்டங்களைத் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று அன்றைய தினம் சொன்னார்கள். ஆனால் கிராமக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏராளமான வேலைகள் இருக்கின்றன. கடன் வழங்குவது, திரும்ப வாங்குவது போன்ற மக்களுக்குத்தேவையாக பல்வேறு பிரச்சினைகள் அணுகும் சூழ்நிலையில் அவை இருக்கின்றன. இப்படிப்பட்ட நேரத்தில் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களைக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விநியோகிக்கின்ற முறை சரியல்ல என்பதையும், அதற்காக நியாய விலைக்கடைகளைக் கிராமங்கள் தோறும் திறக்க வேண்டு மென்றும் நான் இந்த அரசைக் கோட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12-30]

அதோடு, மக்களுக்குத் தேவையான கடன் வழங்குவது, கடன் நிவாரணச் சட்டத்தையெல்லாம் நாம் கொண்டு வந்திருக்கிறோம். கடன் நிவாரணச் சட்டம கொண்டு வந்ததற்குப் பின்னாலே, கிராமப்புறத்திலுள்ள வாழக்கூடிய கூலி வேலை செய்யக்கூடியவர்களுக்கு, கடன் வழங்குவதற்கு, அவர்கள் கடன் வாங்குவதற்கு எந்தவித வசதியையும் இந்த அரசு செய்யவில்லை. அதற்கு,

[திரு. இரா. இராசமாணிக்கம்] [1977 ஆகஸ்டு 9

கண்டிப்பாக ஏதாவது ஒரு மாற்று வழியைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தினுடைய முதலமைச்சரவர்கள் முன்னாலே கூடச் சொன்னார்கள், தேவைப்பட்டால் தபால்ஆபிஸ் மூலமாகக்கூட கடன் வழங்குவோம் என்று சொன்னார்கள். அப்படி ஏதாவது செய்ய முடியுமானால், மத்திய அரசைக் கலந்துக்கொண்டு அப்படி செய்தால் நலமாக இருக்கும். அதற்கு முன் வரவேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வேன். (இரு முறை மணியடிக்கப்பட்டது).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அடுத்து மூன்றாவது மணியடிக்கும் போது உட்கார்ந்து விட வேண்டும்.

<u>திரு இரா. இராசமாணிக்கம் :</u> இன்னும், பல்வேறு பிரச்னைகள் இன்றையதினம் இருந்து கொண்டிருக்கின்றன. இன்றைய தினம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் வேலை செய்கிற பணியாளர்களை வேலை நீக்கம செய்கிறார்கள். பல நூற்றுக்கணக்கானவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு, வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க வேண்டும் ; இல்லையென்று சொன்னாலும், வேலைநீக்கம் செய்தவர்களை அதே வேலையில் மீண்டும் சேர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிகமான நியாய விலைக் கடைகளைத் திறக்கிற இந்நேரத்தில், அவர்களை வேலையில்லையென்று சொல்லி, வட்டுக்கு அனுப்புவது நல்லதல்ல, ஆகவே, அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லினுடைய் விலையைப் பொறுத்தவரையில், ரூ. 74 (குவின்டால், என்று விலை நிர்ணயம் செய்திருப்பதாகத் தெரிகிறது. கணக்குப் போட்டு பார்க்கிறபோது, மூட்டை ரூ. 42.18 பைசாவாகிறது. ஆகவே நெல்லுக்கு கொடுக்கக்கூடிய விலை கட்டுப்படியாகக் கூடிய விலை அல்ல. விவசாயிகளுக்கு இருக்கிற தொல்லைகளை உணர்ந்து, நியாயமான விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>*திரு. மு. அரங்கநாதன் :</u> ஆன் ஏ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். அங்கத்தினர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். சிவில் சப்ளையிலே இருக்கிற பணியாளர்கள் வேலை நீக்கம் குறித்து சொன்னார்கள் என்பது உண்மை. அப்படி நீக்குவதற்கான காரணம் பற்றி ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. அது எந்த அளவிற்கு உண்மை என்பது தெரியவில்லை. ஏற்கெனவே தி. மு. கழக அரசு பெரும்பாலான பணியாளர்களை வைத்திருக்கிறது என்று அவர்கள் சொல்கிற காரணத்தினால், இன்றைக்கு, வந்திருக்கிற ஆட்சியாளர் அவர்களுடைய கட்சியைச் சார்ந்த பணியாளர்களை வைத்திருப்பதாகக் தகவல் வந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது உண்மையா?



1977 ஆகஸ்டு 9]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஒவ்வொரு உறுப்பினரும் பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்று சொன்னால், நேரம் இல்லை. எந்தெந்த உறுப்பினர்கள் பேசுகிறார்களோ, அவர்கள் கூறியதில் ஏதாவது கருத்துக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அதைத் தெரிந்து கொள்ளலாமே தவிர, நீங்கள் புதிய கருத்தைத் தெரிந்துகொள்ள விரும்புவது பாயின்ட் ஆப் இன்பர்மேஷனில் வராது.

<u>*திரு வி. அர்ச்சுனன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு உணவு அமைச்சரவர்கள் உணவு மானியக் கோரிக்கையை அவையில் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதற்கு என் மாவட்ட சார்பில் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குத் தமிழகத்திலே போதிய அளவுக்கு உணவுதானியம் மிகச் சிறப்பான முறையில் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதே நேரத்திலே, சந்தைக் கடைகளிலே, தனியார் கடைகளிலே அரிசி நியாய விலையில் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதற்காக நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறன். மேலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்று, சிறப்பான காரியங்களைச் செய்திருப்பது குறித்து என் தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று தமிழ்நாடு உணவு மண்டலமாக இருந்ததை மாற்றி தமிழகம், ஆந்திரம் கர்நாடகம், பாண்டிச்சேரி ஆகியவைகளை இணைத்துக் கொண்டு, வந்ததற்காக மிகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் தமிழ்நாட்டிலே 103 லட்சம் குடும்பக் கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. மிகவும் பெருமைப் படத்தக்கதாகும். அதே நேரத்திலே சில குடும்பங்களிலே 5 கார்டுகள், 6 கார்டுகள் என்று இருக்கிறது. அதை இந்த அதிகாரிகள் கணக்கெடுத்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்து அந்தக் கார்டுகளைக் கைப்பற்றவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இன்னும் ஒரு சில குடும்பங்களுக்கு கார்டே வழங்கப்படாமல் இருக்கிறது. அந்தக் குடும்பங்கள்அதிகாரிகளை சென்று கேட்டால், நிர்க்கதியாக வீட்டுக்கு அனுப்பிவிடுகிறார்கள். இந்தப் பிரச்சினை நகரங்களிலே நிறைய இருக்கின்றன. அந்த அதிகாரிகள் அதைக் கண்காணித்துக் குடும்பக் கார்டுகள் எல்லா வீடுகளுக்கும வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் மாவட்டத்திற்குள் நெல், அரிசி கொள்முதல் செய்து எடுத்துச் செல்ல அனுமதித்து இந்த அரசு உத்தரவு போட்டிருப்பது மெத்த பெருமைப்படக் கூடிய விஷயம். அதே நேரத்தில் அரசு வியாபாரிகள் இடம் விவசாயிகளிடம் கொள்முதல் செய்கின்ற நேரத்திலே அதாவது 100க்கு 40 மூட்டை லெவி, அரசாங்கத்திற்குக் கண்டிப்பாக கொடுக்கவேண்டுமென்று வலியுறுத்துகிறேன். கள்ளக் கடத்தல் பேர்வழிகள் போன்ற சில பேர்களுக்கு வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள். அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை

[திரு. வி. அர்ச்சுனன்] [1977 ஆகஸ்டு 9

எடுத்து சஸ்பெண்டு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளகிறேன். அம்மாதிரி அதிகாரிகள் உடந்தையாக இருந்தால் நாம் எந்த காரியத்தையும் செயல்படுத்த முடியாது.

மேலும் விவசாயிகளுக்குப் போதிய அளவுக்கு உரம் போன்ற பொருள்களை இந்த அரசாங்கம் சீரான முறையில் கிடைக்க வழி வகை செய்ய வேண்டும். அதே நேரத்தில் சிறிய வியாபாரிகளிடம் கொள்முதல் செய்யும்போது அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்கின்ற முறையில் 75 கிலோ என்பதை 80 கிலோவாக வைத்து சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்கள் இந்த பிராடு வேலையைச் செய்கிறார்கள். உடனடியாக தனி அதிகாரிகளைப் போட்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன் சில நகரங்களில் இது கண்டிப்பாக நடந்திருக்கிறது. ஹல்லிங் ஏஜண்டுகள் ஒரு விலையை சொல்கிறார்கள். விவசாயிகளிடம் ஒரு விலையைக் கேட்கிறார்கள். அதைக் கண்டிக்கத் தக்க வகையில் கண்காணிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுக்குப் போதிய அளவுக்கு தண்ணீர் கிடைப்பது இல்லை. பமப் செட்டுகள் போட்டு 2 வருடம் 3 வருடம் ஆகிறது. கடன் வாங்கி போட்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது மின் இணைப்புக் கொடுப்பது இல்லை. அதனால் பலர் வீட்டிலே இருக்கிற பித்தளை சாமான்களை அதிகாரிகள் ஜப்தி செய்து எடுத்துச் சென்றிருக்கிறார்கள். உடனடியாக அந்த ஏழைகளுக்கு மின் வசதி இணைப்பு கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தனியார் கடைகளை விட, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளில் போடுகின்ற எடை குறைவாக இருக்கிறது. ஒரு கிலோவுக்கு 100 கிராம் சர்க்கரை குறைவாக இருக்கிறது. கோதுமையில் 100 கிராம் 10 கிராம் குறைவாக இருக்கிறது. அந்த எடை போடுகின்ற சிப்பந்திகளைக் கண்காணித்து அவர்களை வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பேசுவதற்கு வாய்ப்பளித்த மன்றத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன் நன்றி. வணக்கம்.

* <u>திரு மு. அம்பிகாபதி :</u> பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக உணவு அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கக்கூடிய இந்தக் குறிப்பில் விவசாயிகள் வெளிச் சந்தையில் விற்றுக் கொள்ள உரிமை அளிக்கப்படும் என்று குறிப்பிட்டிருப்பது—லெவி நெல் அளந்தது போக மீதியை வெளிச் சந்தையில் விற்க உரிமை அளிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்தக் கொள்கை தவறான கொள்கை. விவசாயிகளிடம் உற்பத்தி ஆவதை, அவர்களுடைய உபயோகத்திற்குப் போக மீதி அனைத்தையும் அரசாங்கம்



1977 ஆகஸ்டு 9] [திரு. மு. அம்பிகாபதி]

கொள்முதல் செய்ய வேண்டும் ; இல்லையென்றால் பதுக்கலுக்கும் கடத்தலுக்கும் ஆதரவாக அமையும் என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கூறிக்கொள்கிறேன். குறிப்பாக இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில், இந்த 1976-77 கொள்முதல் 1.85 இலட்சம் டன் என்றும் விநியோகம் 6.71 இலட்சம் டன் என்றும் கூறப்பட்டிருக்கிறது. முறையாக, சர்க்கார் கொள்முதல் செய்யாமல், தனியாரிடத்திலே அரிசி ஆலை உள்ளவர்களிடத்திலே பெற்று விநியோகிப்பதாகத் தெரிகிறது. இன்றைக்கு டபுள் பாயில் செய்யப்பட்ட ஒரு கிலோ அரிசி வேகுவதற்கு 10 கிலோ விறகு தேவைப்படுகிறது. தாய்மார்கள் கருவேல மரம் போட்டு கொளுத்தி சிரமப்படுகிறார்கள். எனவே, சிங்கில் பாயில்டு அரிசி தர அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-40]

இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் ரூ. 1.60க்கு விற்ற அரிசி கிலோ ரூ. 2.20, ரூ. 2.40 என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. கிராமப்புறங்களில், மைதா வாங்கினால் தான் சீனி கொடுக்கப்படும் என்ற நிலை இருக்கிறது. இம்மாதிரி கோவில்பட்டியில் இருக்கிறது. கிராமத்தில் இருப்பவர்களுக்கு ஒரு கிலோவும், நகரத்தில் இருப்பவர்களுக்கு வருமானத்தின் அடிப்படையில் வருமானம் 500 ரூபாய் என்றால் 5 கிலோவும், 200 என்றால் 2 கிலோவும் வழங்கப்படுகிறது. 200 ரூபாய் வருமானம் வருகிறவர்களுக்கு 7 பிள்ளை இருக்கிறது. 500 ரூபாய் வருமானம் வருகிறவர்களுக்கு பிள்ளையே இல்லை என்ற நிலையில் அவர்களுக்கு வழங்கப்படும் 5 கிலோ சீனியையும் என்ன செய்கிறார்கள் என்று தான் புரியவில்லை. சீனி வழங்குவதில் கிராமத்தில் இருப்பவர்களுக்கும், நகரத்தில் இருப்பவர்களுக்கும் வித்தியாசம் காட்டுவது நியாயமற்றது.

அடுத்து உணவு தான்ய வர்த்தகத்தை அரசாங்கம் எடுத்து நடத்த வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1,000 கார்டுகளுக்கு ஒரு கடை என்றிருப்பதை, 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்று மாற்றினால், எளிதாக உணவு தானியங்களையும், சீனியையும் வழங்க முடியும் என்பது மட்டுமல்லாமல், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஓரளவுக்கு நீக்குவதற்கு உதவியாக இருக்கும். அவசர நிலை இருந்த காலத்தில் சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷனிலிருந்து ஏராளமான பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டதாகத் தகவல் வருகிறது. அதைப் பரிசீலித்து மீண்டும் அவர்களுக்கு வேலை அளிக்க வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சையில் 1971 ஆம் ஆண்டு 1½ கோடி ரூபாய் ஊழல் நடை பெற்றதாகப் பத்திரிக்கையில் செய்தி வந்தது. 1974-ல் அது சம்பந்தமாக 42 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டதாகச்

சொல்கிறார்கள். இன்றைக்கு அந்த வழக்கு எந்த நிலையில் இருக்கிறது, அவர்கள் கைது செய்யப்பட்டார்களா என்று தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, 1965-லே ஒரு லிட்டர் அரிசி ஒரு ரூபாய்க்கு கேட்டு, 5,000 பேர் நாங்கள் தஞ்சை மாவட்டத்தில் சிறைக்குப் போனோம். நாகப்பட்டினம் சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் எங்களுக்கு இரண்டு மாதம் கடுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்டது. ரூபாய்க்கு ஒரு படி, படிப்படியாக மூன்று படி என்று சொன்ன நிலை போய், ஒரு ரூபாய்க்கு ஒரு லிட்டர் அரிசி கேட்டோம். தஞ்சை மாவட்டத்திலிருந்து நெல்லும், அரிசியும் வெளியே கடத்தப்பட்டு, ஒரு லிட்டர் 2 ரூபாய், 3 ரூபாய் என்று விற்க ஆரம்பித்தபோது, நாங்கள் ஒரு லிட்டர் அரிசி ஒரு ரூபாய்க்கு கேட்டு நாங்கள் சிறைக்குச் சென்றோம் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

<u>திரு. என். கிட்டப்பா</u> : தலைவரவர்களே, 1965லே திராவிட முன்னேற்றக் கழகம் அரசு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. மு. அம்பிகாபதி</u> : சபாநாயகர் அவர்கள் எனக்குக் கொடுத்த சில நிமிட நேரத்தில் வேகமாகப் பேச வேண்டும் என்ற அவசரத்தில் 1965 என்று சொல்லிவிட்டேன். 1974 ஆம் ஆண்டு நடைபெற்றது. லாரி கிடைக்காத நிலை இருந்தது. இப்படிப்பட்ட கள்ளக் கடத்தல்களுக்கு அரசாங்கம் வாய்ப்பு அளிக்காமல், உணவு தான்ய வர்த்தகத்தை முழுவதும் அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும்.

<u>திரு. மா. மணிமாறன்</u> : தலைவரவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். 1975-ல் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பற்றாக் குறை மாநிலமாக இருந்தது. இன்றைக்கு உபரி மாநிலமாக இருக்கிறது. எனவே 1975-லே அரிசி விலை ஏறக் காரணம் பற்றாக்குறைதான்.

<u>திரு. மு. அம்பிகாபதி</u> : சபாநாயகர் அவர்களே, அன்று உணவுத் தான்யங்கள் வெளியே அனுப்பப்பட்டது என்பதும் நாங்கள் சிறைக்குப் போனதும் உண்மை. அதற்கான ஆதாரம், வேண்டுமென்றால், சபாநாயகரிடம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் இது நடந்தது. நாங்கள் இரண்டு மாத காலம் கடுங்காவல் தண்டனை அனுபவித்தோம். அதற்கான ஆதாரமும் இருக்கிறது. அதையும் சபாநாயகரிடம் தாக்கல் செய்யத் தயாராக இருக்கிறோம். எனவே அப்படிப்பட்ட நிலை இல்லாமல், உணவு தானிய வர்த்தகம் முழுவதையும் அரசே எடுத்துக்கொண்டு



தேவைக்கு மேற்பட்ட உபரிகள் அனைத்தையும் கொள்முதல் செய்ய வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்படியான விலைக்கு கொள்முதல் செய்யவேண்டும். 500 கார்டுகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்று திறக்கவேண்டும். அப்படிச் செய்து, வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுக்கிற முறையிலும், மக்களுக்கு சுலபமாக விநியோகிக்கப்படுகின்ற முறையிலும், நீண்ட கியூ வரிசை நியாய விலைக் கடைகளில் இல்லாத முறையிலும் செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*<u>திரு. க. இரா. சின்னராசு</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உணவு அமைச்சர் அவர்கள் வைத்துள்ள உணவுத் துறை மானியக் கோரிக்கை மீது விவாதம் நடைபெறுகின்ற நேரத்தில், இந்தக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கின்ற நல்ல திட்டங்களை வரவேற்று, அதிலே இருக்கின்ற சில குறைபாடுகளை மட்டும் அவை முன் வைக்க ஆசைப்படுகிறேன்.

கூட்டுறவு நாணய சங்கத்தின் மூலமாகக் கொடுக்கப்படுகிற சர்க்கரை அனைத்தையும் கள்ள மார்க்கெட்டில் விற்று கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். அது கூட்டுறவு நாணய சங்கமா, [ * * * ] என்பதை அறிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்கள் வாங்குகிற சர்க்கரையை நகர்ப்புறங்களில் கள்ள மார்க்கெட்டில் விற்றுவிட்டு, கிராம மக்களுக்கு 6 மாதம், 7 மாதமாக கொடுக்க வேண்டிய சர்க்கரை ஒரு கிலோ கூட கொடுக்கப்படாமல், விவசாய மக்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது என்பதை அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்பேர்ப்பட்ட நிலைமைகள் கிராமப் புறங்களில் உள்ள கூட்டுறவு நாணயச் சங்கங்களில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படி உணவுத் துறையில் விவசாயிகள் இடத்திலிருந்து வாங்குகிற நெல்லை குறைந்த விலைக்கு வாங்குகிறார்கள். நெல்லுக்கு நியாயமான விலை இல்லாத காரணத்தினால் விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நெல்லுக்கு ரூ. 75 முதல் 76 வரை கொடுக்கப்படுகிறது. இப்படிக் கொடுக்கப்படுகிற கொள் முதல் விலை விவசாயிகளுக்குப் போதுமானதாக இல்லை என்று அரசுக்கு எடுத்துச் சொல்லுகிறேன். விவசாயிகளுக்கு ஏற்படுகிற செலவினங்களை எடுத்துப் பார்த்தால், விவசாயிகளுக்கு கடைசியிலே, உழவனுக்கு என்ன மிச்சம் என்று பார்த்தால், உழவு கோல் தான் மிச்சம் என்று சொல்வது போல, விவசாயிகளுக்கு எதுவும் மிச்சம் கிடைப்பதில்லை. விவசாயிகளிடமிருந்து இப்படி

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12-44இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

வாங்குகிற நெல்லை அரசு சீரான முறையிலே, நல்ல முறையிலே, தரமான முறையிலே இந்த நியாய விலைக் கடைகள் மூலம் கொடுக்கிறார்களா என்று பார்த்தால், வாங்குகிற ஈர நெல்லை அப்படியே கட்டிப் போட்டுவிடுவதால் "பாயில்" செய்கிறவகையிலே நிறைய குறைகள் ஏற்படுகின்றன, அது சாப்பிட முடியாத அளவிற்கு மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது. துர்நாற்றம் வீசுகிறது. இப்படிப் பட்ட அரிசியைத்தான் நியாய விலைக் கடைகள் மூலம் கொடுக்கிறார்கள். கொடுக்கின்ற அரிசியை நல்ல முறையிலே எடை போடுகிறார்களா என்று சொன்னால் இந்த நியாய விலைக் கடைகளில் உள்ள அதிகாரிகள் திருட்டுத் தனமாக எடையைக் குறைக்கிறார்கள். சர்க்கரையை எடுத்துக்கொண்டால் ஒருகிலோ எடைக்கு 100 கிராம் திருட்டுத் தனமாக எடுத்துக் கொள்கிறார்கள். இப்படித் திருட்டுத் தனம் நடந்து கொண்டு இருக்கிற காரணத்தினால் அரசு அதில் கவனம் செலுத்தி இப்பேர்ப்பட்ட அதிகாரிகளைக் கண்காணித்து இப்படிச் செய்கின்ற அதிகாரிகளுக்கு உரிய தண்டனையை வழங்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

நெல் கொள்முதல் விலையை இன்னும் அதிகமாக மத்திய அரசைக் கேட்டுத் தருகிறோம் என்று இந்த மானியக் கோரிக்கையில் குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். கோதுமைக்கு 5 ரூபாய் அதிக விலை மத்திய அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் வரவேற்று அதே போல தமிழகத்திலே வாங்குகிற நெல்லுக்கும் அதிக விலையைக் கொடுக்க இந்த அரசு அக்கறை எடுத்து மத்திய அரசிடம் வாதிட்டு விவசாயிகளுக்கு வேண்டிய விலையைக் கணக்கிட்டுத் தர வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் அரசு கிடங்குகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோடவுன்களில் சீரான முறையிலே உணவு தானியங்கள் சேமித்து வைக்கப்படாமல் அது நிறைய பாழாகிக் கொண்டிருக்கிறது. அங்கே எலிகள் அந்த தானியங்களைப் பெரிதும் தின்று கொண்டிருக்கின்றன. இப்படிப் பட்ட நிலைகளை மாற்றி நாம் உணவு தானியங்களை சேமித்து வைப்பதற்கு கோடவுன்களை நல்ல முறையிலே கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உணவு தானியங்களை சேமித்து வைப்பதற்கு கிராமத்திலே இருப்பதைப் போல நகரத்திலேயும் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படிக் கட்டுகிற கோடவுன்களை ஆற்றோரம் கட்ட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சென்ற அரசின் ஆட்சிக் காலத்தில் இப்படி ஆற்றோரம் கோடவுன்கள் கட்டப்பட்ட காரணத்தினால் அவைகளில் தண்ணீர் புகுந்து



நெல்லை அடித்துக் கொண்டு போயிற்று என்று சொன்னார்கள் இப்படிப்பட்ட நிலைமைகள் மறுபடியும் ஏற்படாமல் இருக்க ஆற்றோரம் கோடவுன்களைக் கட்ட வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன். தண்ணீர் ஓடுகின்ற பக்கத்தில் கோடவுன்களைக் கட்ட வேண்டாமென்று கேட்டு இந்த உணவு மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே; இந்த மாமன்றத்தில் எனக்குஉணவு மானியக் கோரிக்கையின் மீது பேசவாய்ப்பளித்த உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மானியக் கோரிக்கையின் மீது இந்த மாமன்றத்தில் உங்களுக்குப் பேச வாய்ப்பளிப்பது அமைச்சரல்ல. பேரவைத் தலைவர் அவர்கள் தான் உங்களுக்குப் பேச வாய்ப்பளிக்கிறார்கள். அதனால் அமைச்சரவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டியதில்லை.

மாண்புமிகு உறுப்பினர் சின்னராசு அவர்கள் பேசும் போது * * * என்று சொன்னார். அந்த வார்த்தைகள் அவ்வளவு நல்லதாகப் படவில்லை. அப்படி * * என்று சொன்ன வார்த்தைகளை நீக்கி விடும்படி உத்திரவிடுகிறேன்.

(பிற்பகல் 12–50)

திரு எச். ஜி. ஆறுமுகம் : உணவு மானியக் கோரிக்கையின் மீது எனது தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தர்மபுரி மாவட்டம் மூன்று நான்கு ஆண்டுகளாக மழையின்மை காரணமாக பஞ்ச நிலையை அடைந்துள்ளது. அப்படி பஞ்ச நிலை அடைந்துள்ள காரணத்தால் வறட்சிப் பகுதியாக தர்மபுரி மாவட்டத்தை அறிவிக்க வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். குடும்பக் கார்டுகள் மூலம் விநியோகிக்கும் முறை தர்மபுரி மாவட்டத்தில் மிகவும் மோசமான முறையில் கூட்டுறவுத்துறை மூலம் நடந்துவருகிறது. பல பஞ்சாயத்து தலைவர்கள் சர்க்கரையை நகரத்திலேயே வாங்கிக் கொண்டு அங்கேயே விற்றுவிட்டுச் சென்று விடுகிறார்கள். அதன் காரணமாக ஏழை எளிய மக்களுக்கு சர்க்கரை அங்கே கிடைப்பதில்லை. குடும்பக் கார்டு மூலம் வருமானத்தைப் பொறுத்து சர்க்கரை விநியோகிக்கிறார்கள். நான் சொல்வது என்னவென்றால் ஏழைகள் குடும்பங்களில் எவ்வளவு பேர்கள்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12–49இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

[திரு. எச். ஜி. ஆறுமுகம்] [1977 ஆகஸ்ட் 9

இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்து அதன் அடிப்படையில் சர்க்கரை, அரிசி, மற்றப் பொருள்களை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆறு வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கு பள்ளிகள் அமைக்கும் திட்டத்தை நான் வரவேற்கிறேன். தர்மபுரி மாவட்டத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் இப்படிப்பட்ட சிறார்களுக்கான பள்ளிகளை அமைக்க வேண்டும். பெரிய பெரிய நகரங்களில் இரண்டாயிரம் மக்கள் தொகை உள்ள இடங்களில் ஒவ்வொரு பள்ளிகள் அமைக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். தர்மபுரி மாவட்டம் அதியமான் ஔவையாருக்கு கனி கொடுத்த இடம். ஆகவே அதியமான்கோட்டையை சுற்றுலா மையமாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இது உணவு மானியம். உணவைப் பற்றிப் பேசுங்கள்.

<u>திரு. எச். ஜி. ஆறுமுகம் :</u> அடுத்து, நவீன முறையில் உள்ள பெரிய ரைஸ் மில்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்படுவதை ரத்து செய்து சிறிய அளவில் உள்ள மில்களுக்கு லைசென்ஸ் கொடுத்தால்தான் ஏழை எளிய மக்களுக்கு உணவு தானியங்களை அரைப்பதற்கு சௌகரியமாக இருக்கும்.

தர்மபுரி மாவட்டத்தில் ஹரூருக்கு ஒன்பது மைல்களுக்கு அப்பால் தீர்த்தமலை என்ற ஒரு நீர்வீழ்ச்சி இருக்கிறது. இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்களில் நிறையப் பேர்கள் அந்த நீர்வீழ்ச்சியைப் பார்த்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அந்த நீர்வீழ்ச்சியை நல்லமுறையில் ஒரு சுற்றுலா மையமாக்கித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பாலக்கோட்டில் ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. அங்கு 1,650 டன்தான் அரைப்பதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள். இன்னும் ஒரு ஆயிரம் டன் கூடுதல் அரைக்க அங்கே வசதி இருக்கிறது. எனவே பாலக்கோட்டில் உள்ள சர்க்கரை ஆலையில் இன்னும் ஒரு ஆயிரம் டன் கரும்பு அரைக்க அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதனால் தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது கரும்பிற்கு டன் ஒன்றுக்கு 119 ரூபாய் தர்மபுரி மாவட்டத்தில் கொடுக்கிறார்கள். அது ஏழை விவசாயிகளுக்கு கட்டுப்படியாவதாக இல்லை. எனவே இன்னும் ஒரு பத்து ரூபாய் அதிகமாகக் கொடுக்குமாறு இந்த அரசைச் கேட்டுக் கொள்கிறேன். எனக்கு இந்த மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

* <u>திரு. கே. ஜே. உய்யக்கொண்டான் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1977—78-ம் ஆண்டு உணவு மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய



1977 ஆகஸ்டு 9] (திரு. கே. ஜே. உய்யக்கொண்டான்)

முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்பிருந்த அரசு அரசாங்கக் கொள்முதல் செய்ய வகுத்துத் தந்திருக்கிற ஏற்பாடுகள் சிக்கலானதாகவும், பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும இருந்திருக்கிறது என்பதை நாட்டு மக்களும் நாமும் நன்றாக உணர்ந்திருக்கிறோம். கொள்முதலுக்காக நியமிக்கப்பட்டுள்ள கொள்முதல் ஏஜெண்ட்கள் பெருமளவில் அரசாங்கத்தை ஏமாற்றியிருப்பதாகத் தெரிகிறது. இவற்றின் முழு விவரங்களைச் சேகரித்து உண்மை நிலையை அறிய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இனி தனியார் கொள்முதல் ஏஜெண்டுகளை நீக்கி அரசாங்கமே நேரிடையாக கொள்முதல் செய்ய வேண்டும், ஒவ்வொரு கொள்முதல் நிலையங்களுக்கும் அதிகாரிகள், விவசாயிகள், வியாபாரிகள், நுகர்வோர்கள் ஆகியோர்கள் அடங்கிய ஆலோசனைக் குழு அமைத்து செயல்பட வேண்டும். அரசாங்கத்திற்கு தேவையான தானிய இருப்பை துல்லியமாக கணக்கிட்டு அந்த அளவு மட்டுமே கொள்முதல் இலக்கு நிர்ணயித்து கொள்முதல் செய்ய வேண்டும். இங்கு பேசிய உறுப்பினர்கள் ஓட்டல்களில் சாப்பிடுவதால் வயிற்றுக் கோளாறு, உடற் கோளாறு, ஏற்படுகிறது என்று பேசினார்கள். சென்னை மாநகரத்திற்கு பெருமளவில் ஆற்காடு கிச்சிலி சம்பா அரிசி வருவது வழக்கம். அது வந்து கொண்டு இருந்த வரையில் இப்படிப்பட்ட குற்றச்சாட்டு இல்லை. எனவே இனிமேலாவது ஆற்காடு கிச்சலி அரிசி வர தாராளமாக வழிவகை செய்ய வேண்டும். அத்துடன் தனியார் வியாபாரத்தை தாராளமாக அனுமதிக்க வேண்டும்.

தற்போது உணவு தானியத்திற்கு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலை போதுமானது அல்ல. விவசாயிகளுக்கு கட்டுப்படி ஆகாத நிலையில் நமது அரசாங்கம் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நெல் கொள்முதல் விலையை கூடுதலாக்கும் பொருட்டு, விலையை நிர்ணயிக்க மத்திய அரசிடம் முழுச் செல்வாக்கை பயன்படுத்தும் என்று உறுதி எடுத்துக் கொண்டதற்காக நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

மத்தியில் ஜனதா கட்சி ஆட்சி அமைந்த ஒரு சில நாட்களிலேயே வட மாநிலங்களில் அதிகமாக விளையக் கூடிய கோதுமைக்கு குவிண்டாலுக்கு 5 ரூபாய் உயர்த்திவிட்டு தென் மாநிலங்களில் அதிகமாக விளையக்கூடிய நெல்லுக்கு மட்டும் விலையை உயர்த்தாமல் விட்டது மிக வருந்தத்தக்கதாகும். இது மாற்றாந்தாயின் மனப்போக்கை காட்டுகிறது. இந்தக் கருத்தினை நமது பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆலடி அருணா அவர்கள் பாராளுமன்றத்தில் மிக அழகாக, தெளிவாக எடுத்துக்கூறியுள்ளதை இந்த மாமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் முன்னுள் அரசு நிர்ணயித்தபடி ஒரு குவிண்டால் அரிசிக்கு சுமார் 40 ரூபாய் லாபம் வைத்து அரிசி விற்பனை செய்கிறது. இது கற்பனை செய்ய முடியாத பெருத்த லாபம். இதனை ஒட்டி ஒரு கிலோ அரிசி வாங்கும் நுகர்வோருக்கு 40 காசு விலை கூடுதலாக ஆகிவிடுகிறது. இந்த லாபத்தினை குறைத்து விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் பலன் கிடைக்கும் அளவுக்கு செய்ய வேண்டும் என்று விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நிர்வாக செலவாக மாதம் ஒரு கோடி ரூபாய் செலவாகிறது என்று தெரிய வருகிறது. இந்த நிர்வாகச் செலவை குறைக்க ஆவன செய்ய வேண்டும். இதில் பணி புரிவோருக்கு ஐந்து பர்சன்ட் போனஸ் கொடுப்பதாகவும் தெரிகிறது. அரசாங்க அலுவலர் ஒரு சிலருக்கு மட்டும் போனஸ் தேவையில்லைஎன்பதைக் கருதி இந்த முறையை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தற்போது அரசாங்கத்திடம் உள்ள உணவு தானிய இருப்பில் ஏராளமானவை கெட்டுப்போகக்கூடிய நிலையிலும், கெட்டுப் போயும் இருப்பதாக அறிகிறேன். இதை சரியாக கணக்கிட நிபுணர் குழு ஒன்று அமைத்து ஆவன செய்யும்படி கோருகிறேன். அரசாங்கத்திடம் சேரும் தானிய இருப்பை அடுத்த கொள்முதலுக்குள் வினியோகம் செய்துவிட வேண்டும். இதனுல் பல நன்மைகள் ஏற்படும்.

உணவு தானியத்தை அரசாங்கம் மோட்டா ரகம், நடுத்தர ரகம், சன்ன ரகம், மிக சன்ன ரகம் என்று நான்கு வகையாக பிரித்து கணக்கிடுவதை போல எல்லா வியாபாரிகளும் அதே முறையில் கணக்கிட வேண்டுமென்று கட்டளையிட வேண்டும்.

எல்லா பிரிவு மக்களிடையே குற்றவாளிகள் இருப்பதைப் போல வியாபாரிகளிடையேயும் குற்றவாளிகள் இருக்கிருர்கள். ஆனுல் இந்த குற்றவாளிகள் அதிகாரிகளுக்கு முழு த்தோழர்களாக ஆகிவிடுகிருர்கள். நடக்கும் கள்ள மார்க்கட்டுவியாபாரம் அதிகாரிகளின் முழு தயவோடும் கூட்டுறவோடும் தான் நடக்கின்றது. கள்ள மார்க்கட்டு வியாபாரததை தன் தொழிலாகவே நடத்துபவர்கள் பிடிபடுவதேயில்லை. எனவே இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கக் கோருகிறேன். சிவில் சப்ளைஸ் இலாகாவில் பணி புரிவோர் அவர்களுக்கு இருக்கும் முழு சொத்தையும் அரசாங்கத்திற்கு அறிவித்து இந்த அதிகாரிகளின் சொத்துக்களை ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப் பட்டது).

(பிற்பகல் 1:00)

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் முன் வைக்கப்பட்டிருக்கிற உணவு மானியக் கோரிக்கையின் மீது தேசிய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பாக நான் கீழ்க்கண்ட கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.





உணவுப் பொருள் மனிதனுக்கு மிக முக்கியம். அத்தனை பேருக்கும் அத்தியாவசியமான பொருள் என்ற அந்த அளவிலே பிரதான தொழிலான உணவு உற்பத்திக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்கிற கருத்து ஒரு புறம், அதை வாங்கி அனுபவிக்கிற, உண்ணுகிற கூட்டத்திற்கு எந்த முறையில் நாம் விநியோகம் செய்வது என்பது மற்ருென்று. ஆக இந்த இரண்டு கருத்துக்களைப் பற்றி, நாம் இந்த மாமன்றத்திலே பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை விவாதித்துக் கொண்டிருக்கிருேம்.

அரசு கொள்முதல் செய்வது என்பது ஒரு அளவுக்குத்தான் சாத்தியமானது. அப்படி அரசு கொள்முதல் செய்து விநியோகம் செய்வதை அரசே வைத்துக் கொள்வது நல்லது என்பதை நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், தனிப்பட்ட தரகர்கள் இந்த கொள்முதலிலே கொள்ளை லாபம் அடிக்கின்ருர்கள். அதனுல், விவசாயிகளுக்குப் போதுமான, நியாயமான விலை போய்ச் சேருவதில்லை.

"Though not high price, it should be just and equitable price, for the producer, i.e., farmer'"
இந்தக் கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். காரணம், அமைச்சர் அவர்கள் பொருளாதாரம் நன்கு படித்தவர்; விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அதைக் கொடுப்பதற்கு மத்திய அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று சொல்வார்களானுல், மத்திய அரசு விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று சொல்வார்களானுல் ''எதோ ஆண்டவன் செயல்; தலை விதி'' என்ற கருத்தை பகுத்தறிவாளர்கள் எப்படி எதிர்க்கிருர்களோ, அதைப்போலவே அரசியல் சட்டத்தில் இன்றைக்குள்ள சூழ்நிலையில் எங்களுக்குத்தான் அதிக அதிகாரம் இருக்கின்றது என்று மத்திய அரசு சொல்வார்களானுல், அந்த வகையிலே விலையை நிர்ணயித்திருக்கிருேம் என்று சொல்வார்களானுல், அதை நாம் ற்றுக் கொள்ள வேண்டுமா? இன்றைக்கு உள்ள பொருாதார, சமுதாய நிலை மாறியிருக்கின்ற சூழ்நிலையில், த்திய அரசின் ஆதரவு தேவை என்றிருந்தாலும்கூட வர்கள் தன்னிச்சைப்பட, லோகல் கண்டிஷன் தெரிந்து கொள்ளால், டெல்லியிலே இருக்கிறவர்கள் விலையை நிர்ணயித்து, அதற்கு ாம் ஆமாம் சாமி போடுவது என்ருல்; அது என்ன நியாயம்? அதை நாம் எதிர்த்துப் போராடுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். இது மக்களுக்காக ஏற்பட்ட அரசாங்கம்.

"This is Government of the people, by the people and for the people. If so, why not they function for the good of the people? If there is lack of procedure or instruction by the Central Government, against the majority interest of the Tamilnadu people, why not we oppose it?

ஆகவே, அருள்கூர்ந்து இதைப்பற்றி சிந்திக்க வேண்டும். இதை நான் அரசியலாக்க விரும்பவில்லை. யார் மெஜாரிடி நலனுக்கு விரோதமாக இருந்தாலும், கண்டிப்பாக எதிர்க்க வேண்டும். இதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். காரணம், இப்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு, பல கஷ்டங்கள் அனுபவித்தது எனக்குத் தெரியும். நான் அப்போதிருந்த சூழ்நிலையில் எதிர்த்திருக்கிறேன். எனக்கு நன்கு தெரியும். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மக்களுக்காக உயிரைப் பணயம் வைக்கத் தயார் என்று மக்களிடம் சேவை செய்வதற்காக உறுதி கூறி, சபதம் ஏற்று ஆட்சிக்கு வந்திருக்கிறோம். ''ஆறிலும் சாவு, நூறிலும் சாவு'' என்று எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னது போல், இந்தப் பதவி இன்றைக்கு இருக்கும், நாளைக்குப் போகும். ஆனால், மக்களுக்குச் செய்யக் கூடிய சேவை என்றைக்கும் நிலைத்திருக்கும். ஆகவே, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும்.

சர்க்கரைக்கு போன ஆண்டு 95 ரூபாய் இருந்தது. இப்போது 85 ரூபாய் என்று சொன்னார்கள். இது என்ன நியாயம்? ஏழை எளிய விவசாயிகள் வாழ வேண்டாமா? அவர்கள் எப்படி வாழ முடியும்? டெல்லியிலே இப்படி ஒரு உத்தரவு போடுவது அதற்கு நாம் இப்படிக் கீழ்ப்படிவது என்றால் என்ன நியாயம்? "As if they are masters and we are servants. Nothing like that" இதை நான் ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை எனவே இதற்கு உரிய முறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்ததாக, ''உண்டி கொடுத்தோரே, உயிர் கொடுத்தார்'' என்பதற்கு ஒத்தவாறு, அவர்களுக்கு கொள்முதல் செய்யும் போது நியாயமான விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். ரீசனபில் பிரைஸ் பிக்ஸ் செய்வதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். ஆனால், அதிகாரிகள் கொள்முதல் செய்யும்போது, நல்ல நெல்லை கொள்முதல் செய்வதில்லை. "I know practically; check-up" தயவு செய்து நாம் இதைக் கண்காணிக்க வேண்டும். அதிகாரிகள் கொள்முதல் செய்யும்போது, முதல்தர நெல்லுக்குப் பில் போடுகிறார்கள். ஆனால் மூன்றும் தர நெல்லைத்தான் வாங்கிக் கொள்கிறார்கள். இதனால் தரம், குவாலிடி கெட்டு போய்விடுகிறது. இதை நாம்........ ..

(மணி அடிக்கப்பட்டது).

ஆரம்பத்திலேயே தலைவர் அவர்கள் மணி அடித்தால் எப்படி? இது முக்கியமான மானியக் கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் சபையில் இருந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். 5 நிமிடம் ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இன்னும் ஒரே நிமிடத்தில் முடித்துக் கொள்ளவும்.



122092



திரு. கே. கந்தசாமி : இந்தமாதிரி கொள்முதல் செய்வதிலே தவறுகள் இருக்கிறது. '' ஒல்சேல் டிரேடர்ஸ் இப்படிப் தவறுகள் செய்கிறார்கள் கேடுகள் செய்கிறார்கள். எப்படி போலீஸ் ஸ்டேஷனில் கேடிகள் படத்தை தொங்க விடுகிறார்களோ அப்படி இவர்கள் படத்தையும் தொங்கவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். first offender, second offender, third offender, enemies of society ஆன்டி சோஷல் எலிமென்ட்ஸ் போட்டோக்களைப் போட வேண்டும். துரோகி நம்பர் 1, 2, 3 என்று போட வேண்டும். (சிரிப்பு)

(மணி அடிக்கப்பட்டு திரு. வின்சென்ட் பேச அழைக்கப்பட்டார்).

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மானியத்தில் பேசுகின்ற வாய்ப்புத் தந்தமைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இன்றைய நிலையில் அரிசி தாராளமாகக் கிடைக்கிறது என்பதும், போதிய அளவு அரசிடம் ஸ்டாக் இருக்கிறது என்பதும், விலை குறைவாக மக்களுக்கு அரிசி கிடைக்கிறது என்பதும் மகிழ்ச்சியைத் தருகிறது.

சம்பா அறுவடை முடிந்து குறுவை அறுவடை வருவதற்கு இடைப்பட்ட காலமாகிய ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் அறுவடை இல்லாத காரணத்தால் விலை ஏறுவது வழக்கமாக இருந்த போதிலும் இந்த ஜூலை ஆகஸ்டில்கூட விலைகளில் குறிப்பிடக்கூடிய அளவு உயர்வு ஏற்படவில்லை என்பதை நான் பாராட்டுகிறேன். அமைச்சருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஏழைகள் சாப்பிடும் நடுத்தர அரிசி கூட ரூபாய் 1-60 முதல் ரூபாய் 1-80-க்குள் கிடைக்கிறது. சன்ன ரகம் ரூபாய் 2-05 முதல் 2-20க்கு கிடைக்கிறது. போதிய அளவு திருப்திகரமாக இருக்கும் உணவு நிலைமையை அரசு அக்கறையோடு காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று கலப்படம் இல்லாத உணவு கிடைக்கிறது. இங்கே ஒரு மணி நேரத்திற்கு முன்னால் அருமை உறுப்பினர் அவர்கள் கலப்படம் உள்ள உணவுதான் கிடைக்கிறது என்று இட்லியைப் பற்றிச் சொன்னார்கள். நான் காலையில் சாப்பிட்ட இட்டிலி கலப்படம் இல்லாத இட்டிலி. இந்த அரசில் கலப்படம் இல்லாத இட்டிலி கிடைக்கிறது என்பதைக் காட்ட சபாநாயகர் அவர்களுக்கு அளிப்பதற்காக இட்டிலியைக் கொண்டு வந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சாப்பிட்டாச்சு.

திரு. ஆர். உமாநாத் : இந்த விவாதத்தில் நீங்கள்தான் பெனிபிஷரி '' போல் இருக்கிறது.

[1977 ஆகஸ்ட் 6

திரு. மி. வின்சென்ட்: கொள்முதலைச் செய்கிறபோது அதை வியாபாரிகளுக்கு விட்டுவிடக் கூடாது. அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்பதை என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக் கொள்கிறேன். வியாபாரிகளுக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகளை இனிமேல் கொடுக்கக் கூடாது என்று சொல்லுவதைவிட, கொடுத்த உரிமைகளைத் திரும்பப் பெற முயற்சி செய்வது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி அதைத் தவிர்ப்பதன் மூலம் ஒன்றரைக் கோடி ரூபாய் அரிசி பேர ஊழல் நடக்காமல் தடுக்க முடியும். பசியைப் போக்குவதுதான் அரசின் முதற் கடமை என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் பசியைப் புசித்த கொள்ளைக்காரர்களை நாம் விட்டு வைக்கக் கூடாது என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். சட்டமன்ற மதிப்பீட்டுக் குழு சுட்டிக் காட்டிய ஒன்றரைக் கோடி ரூபாய் அரிசு பேர ஊழல் நீதி மன்றத்தில் விசாரிக்கப்படாமல் கிடப்பதை இந்த அரசு அனுமதிக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். 1971-ஆம் ஆண்டு புலனாய்வில்—மூன்றாண்டுகளாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஊழலை 1974-ல் புலனாய்வு முடிவுற்று, 1974 முழுவதும் இந்த வழக்கு நீதி மன்றத்தை விட்டு விலகவில்லை. 1975-லும் அதே கதிதான். 1976-லும் நீதி மன்றத்தில் இருக்கிறது. 1977-லும் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை நான் இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால் இராமபிரசாத்ராவ் நீதி விசாரணைக்கு அதிகார பூர்வமான ஆதாரங்கள், தடயங்கள் தரப்படவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் விசாரிக்கப்படவில்லை. அதிலே நியாயம் ஒழுங்காகக் கிடைக்கவில்லை என்ற காரணத்தால்தான் அதிலே வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அப்படி வழக்குத் தொடரப்பட்டதே தவிர அது நான்கு ஆண்டுகளாகப் பெண்டிங்காக இருக்கிறது. விசாரிக்கப்படாமல் இருக்கிறது. இதிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது பற்றிய பைல்களை மதிப்பீட்டுக் குழுவிற்குத் தரமாட்டோம், காட்ட மாட்டோம் என்று சொன்னார்கள். மதிப்பீட்டுக் குழு இந்த அறிக்கையைத் தாக்கல் செய்த போது யாருக்கோ இதில் தொடர்பு இருக்கிறது என்ற சந்தேகத்தை உருவாக்கினார்கள்.

[பிற்பகல் 1-10]

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

அது மட்டுமல்ல, நாம் 16 ஆயிரம் நியாய விலைக் கடைகளைத் திறக்கின்ற இந்த அரசைப் பாராட்டுகின்றோம். ஆனால், இதற்கு முன்னாலே இருந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கிராமங்களுக்கு சோளமும் கம்பும் கொடுத்தார்கள். சோளத்திற்கு வெளி மார்க்கட்டிலே விலை 1-80 காசுகள், ஆனால், ரேஷன் கடைகளிலே 2-00 ரூபாய். இப்படி வெளியிலே 1-80 ஆக இருந்தது ரேஷன் கடையிலே 2-00 ரூபாய் என்று விற்கக்கூடிய நிலைமை இருந்தது. ஆனால், நாம் அமைக்க இருக்கின்ற நியாய விலைக்



1977 ஆகஸ்ட் 9] [திரு. மி. வின்சென்ட்]

கடைகளிலே வழங்கப்படுகின்ற உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட நிலைமை ஏற்படவிடக் கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலம் இல்லாத காரணத்தால், நான் சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன். நாம் நன்றாகச் செயல்படுகிறோம். ஆனால், சாதாரண மக்கள்கூட, ஏழை எளிய மக்கள் எல்லாம்கூட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏழை எளிய மக்களின் நலம் பேணும் அரசு என்று ஊர்ஜிதம் செய்திருக்கிறார்கள். நாம் உஷாராகவும், கண்காணிப்போடும் செயல்பட வேண்டும். நாம் கொடுக்கின்ற உணவுப் பொருள்களில் தவறுகள் செய்யக்கூடிய முறையில் மில் அதிபர்களும் கள்ளச் சந்தைக்காரர்களும் அதிகாரிகளும் புகுந்து விடுகின்ற நிலை ஏற்படுமானால் மக்கள் ஏமாற்றப்படுவார்கள். ஆகவே, கண்காணிப்புத் தேவை. அந்த அளவில் ஏழை எளிய மக்களுக்காகப் பாடுபடுகின்ற நம்முடைய அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உணவுத்துறை மானியத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்த உணவுத் துறை மானியத்தின்மீது கடைசியாகப் பேசிய நண்பர் அவர்கள் ராமபிரசாத ராவ் விசாரணைக் கமிஷன் பற்றிக் குறிப்பிட்டார்கள். ராமப்பிரசாத ராவ் விசாரணைக் கமிஷன் நடந்து முடிவுற்றது. முடிவுற்று அந்தத் தீர்ப்பும் வந்து இந்த மன்றத்திலே மேஜை மீதும் வைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். தயவுசெய்து நூலகத்திலே உள்ள அந்த புத்தகத்தை வாங்கி படித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குற்றச்சாட்டுக்களை தூற்றுவது என்பதை கொள்கையாக வைத்துக் கொள்ளப்படக்கூடாது.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சட்டம் படித்தவன். நான் ஆதாரம் இல்லாமல் பேச மாட்டேன். நான் சொன்னது ராமபிரசாத் ராவ் விசாரணைக் கமிஷன் ஒழுங்காக நடைபெறவில்லை என்பதுதான். அந்த விசாரணையின் தீர்ப்பை நான் படித்தேன். ஆனால் அதிலே கொடுக்கப்பட்டிருக்க வேண்டிய தடையங்கள் ஆதாரங்கள் எல்லாம் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதைச் சொன்னேன். ஆதலால் நியாயம் கிடைப்பதற்காக அந்த நீதி விசாரணையில் ஒழுங்காக நியாயம் கிடைக்கவில்லை என்பதால் கிரிமினல் வழக்கு போடப்பட்டிருக்கிறது என்பதைச் சொன்னேன்.

[1977 ஆக்ஸ்ட் 9

*திரு. ப. உ. சண்முகம் : வழக்கு முதலிலா, ராமபிரசாத் ராவ் கமிஷன் முதலிலா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். வழக்கு முதலிலே போடப்பட்டது. ராமபிரசாத் ராவ் விசாரணைக் கமிஷன் இரண்டாவதாக வந்தது. நான் அதற்குள் புகுந்து பேச விரும்பவில்லை. கொடுக்கப்பட்ட நேரம் குறைவுதான். ராமபிரசாத ராவ் விசாரணை கமிஷன் சரியாக இயங்கவில்லை என்ற எண்ணம் இருக்குமானால் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்து வேறு ஒரு கமிஷனையும் போட்டு விசாரணை செய்யலாம். அதிகாரம் இருந்தால், செய்யட்டும். நான் அதை வரவேற்கிறேன். கிரிமினல் வழக்கு போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். குற்றவாளி யாராக இருந்தாலும் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். விட்டுவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வழக்கு கூட நாங்கள் தான் போட்டோம். வழக்குக்குள்ளே போய் நான் நீதிமன்றத்திற்கு ஒரு சிக்கலை ஏற்படுத்த விரும்பவில்லை. ஏதோ எஸ்டிமேட்ஸ் கமிட்டி என்றெல்லாம் சொன்னார்கள். அந்த அறிக்கை என்ன என்று மாண்புமிகு உறுப்பினர் படித்துப் பார்க்க வேண்டும்.

அதுவும் சரியான தகவல் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் இந்த மானியக் கோரிக்கையை ஆரம்பித்து வைத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் உணவு அமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து தனது பேச்சைத் துவக்கினார்கள். நான் உணவு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது இந்த இலாகாவை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு சிக்கல்கள் நிறைய வரக்கூடும். இருப்பினும் தைரியத்தோடு இந்த இலாக்காவின் பொறுப்பை ஏற்றிருக்கின்ற அமைச்சரவர்கள் இந்த இலாக்காவைத் தைரியத்தோடு சிறப்பாக நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் இலாக்காவிலே பணியாற்றுகின்ற ஊழியர்கள் மிகவும் திறமைசாலிகள். ஆனால் நான் விவாதத்தைத் துவங்கும்பொழுது ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக ஆனதற்குப்பிறகு இன்றையதினம் ஒரு பெரிய மகிழ்ச்சியை நாங்கள் அடைந்திருக்கிறோம். என்ன மகிழ்ச்சி என்று கேட்டால் ஆளுங்கட்சியாக நாங்கள் இருந்தபொழுது மத்திய அரசாங்கம் எல்லா அதிகாரங்களையும் குவித்து வைத்திருக்கிறது. மாநிலங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும், எந்த அதிகாரமும் மாநிலத்திற்கு இல்லாமற் போய்விட்டதே என்று கூறியபொழுதெல்லாம் அப்பொழுது அதை ஆதரிக்க மறுத்துவிட்டவர்கள் எல்லோரும் இன்றையத்தினம் இங்கே மாநில அரசுக்கு அதிக அதிகாரம் தேவை என்று பேசும் போது நாங்கள் கேட்கும்பொழுது, காது குளிர நாங்கள் கேட்கும்பொழுது, எங்களுடைய கொள்கை வெற்றி பெற்றுவிட்டது. எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினிடம் சண்டை போடுங்கள், நாங்கள் உங்களுக்கு ஆதரவாக இருக்கிறோம் என்று நண்பர் கந்தசாமிகூட



977 ஆகஸ்ட் 9] [திரு. ப. உ. சண்முகம்]

அவர்கள் பேச வேண்டிய அளவிற்குப் பிரச்னைகள் வந்திருக்கின்றன. அந்த அளவிற்கு நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோமே என்ற மகிழ்ச்சிதான் அது.

இங்கே நடந்த விவாதத்தைக் கேட்டுக்கொண்டிருந்தேன். நெல்லைப்பற்றி, கரும்பைப் பற்றிச் சொன்னார்கள். சர்க்கரையைப் பற்றியும், கோதுமையைப் பற்றியும் சொன்னார்கள். ஆனால், நெல்லுக்கு விலையை நிர்ணயிக்கின்ற அதிகாரம் நமக்கு உண்டா என்றால் இல்லை. கரும்புக்காவது விலை நிர்ணயிக்கின்ற அதிகாரம் நமக்கு உண்டா என்றால் அதுவும் இல்லை. சர்க்கரைக்காவது விலையை நிர்ணயிக்கின்ற அதிகாரம் நமக்கு உண்டா என்று கேட்டால் அதுவும் இல்லை. அல்லது சர்க்கரையை 65, 35 என்று, லெவி சர்க்கரை, வெளிச் சந்தை என்று இருக்கிறதே அதை மாற்றியமைக்கின்ற உரிமை நமக்கு இருக்கிறதா என்றால் இல்லை. அல்லது சர்க்கரையை யார் யாருக்கு கொடுக்க வேண்டும், நாம் விரும்பினால் யாருக்காவது கொடுக்க முடியுமா என்றால் அதுவும் இல்லை. நான் சொல்வதற்கு மன்னிக்க வேண்டும். நானும் உணவு அமைச்சராக இருந்தவன். உணவு இலாக்காவைக் குறைத்துச் சொல்வதாக நினைக்க வேண்டாம். இருக்கின்ற அதிகாரம் என்னவென்றால், எங்கேயாவது ரேஷன் கடைகளைத் திறக்கலாம். அந்த அதிகாரம்தான் உணவு இலாக்காவிற்கு இருக்கிறதே தவிர, வேறு இல்லை என்பதைத்தான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல்லுக்கு விலை கொடுத்தபொழுது ஏற்கெனவே நாங்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபொழுது 15 ரூபாய் அதிகமாகக் கொடுத்தது. அதிலே சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் தன் குறிப்பில் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் நான் அறிந்த வரையில் அதிகம் சரி என்று நம்புகிறேன். ஒரு வேளை தவறு என்று அவருக்கு இலாக்கா தகவல் தந்து திருத்துவார்களேயானால் நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். 10 ரூபாய் போனஸ் என்றும், 5 ரூபாய் வண்டிச் சத்தம் என்றும் ஆக 15 ரூபாய் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்பதற்காகக் கொடுத்தோம். அப்படிக் கொடுத்ததற்கு மத்திய அரசு ஆட்சேபணை தெரிவித்தது என்று சொல்கிறபொழுது எப்பொழுது அந்த ஆட்சேபணை வந்தது என்றால், நாம் வாங்கும்பொழுது அந்த ஆட்சேபணை இல்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இருந்தபொழுது ஏறத்தாழ 9 இலட்சம் டன் நெல்லை வாங்கி—1975–76–ல் கொள்முதல் செய்து வைத்து, அந்த நெல்லை அதிக நாள் உபயோகப்படுத்தாமல் இருந்தால் கெட்டுவிடும் என்பதற்காக மத்திய அரசாங்கத்திற்கு அந்த நெல்லைக் கொடுத்து நாங்கள் திரும்பவும் வாங்கிக்கொள்கிறோம் என்று கேட்கும்பொழுது மத்திய அரசாங்கம் வாங்கும்பொழுது நீங்கள் கொடுத்த விலையை நாங்கள் கொடுக்க மாட்டோம், 15 ரூபாயை போனஸ், வண்டிச் சத்தம் என்ற முறையில் கொடுத்திருக்கிறீர்கள், அதை

நாங்கள் கொடுக்க முடியாது, நாங்கள் என்ன விலையை நிர்ணயம் செய்தோமோ அந்த விலைக்கு நீங்கள் வாங்கியிருக்க வேண்டும், கூடுதலாகக் கொடுத்து வாங்கியிருந்தால் அந்தச் செலவை நீங்கள்தான் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று ஆட்சேபணை தெரிவித்தார்கள். இப்படி போனஸ், வண்டிச் சத்தம் என்பதைக் கொடுக்க அவர்கள் ஆட்சேபித்தார்களே தவிர நாம் கொடுத்ததை அவர்கள் ஆட்சேபிக்கவில்லை. அப்படி ஆட்சேபித்தாலும் அது சரியாக இருக்க முடியாது என்றுதான் நான் கருதுகிறேன். நெல்லைக் கொடுக்கும்பொழுது அவர்கள் 15 ரூபாயைக் கொடுக்க மறுத்துவிட்டார்கள். அவர்கள் கொடுக்க மறுத்துவிட்டாலும் அதை நாம் வாதாடிப் பெற வேண்டும். ஒருவேளை மத்திய அரசாங்கம் கொடுக்க மறுத்தாலும் நாம் வாங்கி,விற்கும்பொழுது அரசுக்கு நஷ்டமில்லாத வகையில் அந்தக் கூடுதல் விலையைச் செய்துவிடலாம். விவசாயிகளுக்கும் கூடுதல் விலை கிடைக்கும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

நான் இங்கே பேசிய உறுப்பினர்களின் வாதத்தைக் கவனித்துக் கொண்டிருந்தேன். குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர் மதிப்பிற்குரிய உமாநாத் அவர்கள் பேசும்பொழுது கரும்புக்கு 175 ரூபாய் விலை கொடுக்க வேண்டுமென்று வாதாடினார்கள். பேசினார்கள். 175 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். 175 ரூபாய் கொடுக்கலாம், எவ்வளவு ரூபாய் கொடுக்கிறார்களோ கொடுக்கட்டும். ஆனால் எனக்குள்ள அச்சமெல்லாம், எனக்குள்ள வருத்தமெல்லாம், கரும்புக்காக இவ்வளவு வாதாடுகிறார்களே, நெல்லுக்கு ஏன் வாதாடவில்லை, நெல்லுக்கு ஏன் கேட்கவில்லை என்பதுதான் எனக்குள்ள கவலை, வருத்தமெல்லாம். நெல்லுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று விவசாயிகள் சார்பிலே நான் கேட்டுக் கொள்கிறேனே தவிர, மிராசுதாரர்கள் சார்பில் கேட்பதாகக் கருதிவிடக்கூடாது. கரும்புக்கு அதிக விலை கொடுத்தால் விவசாயிகளுக்குப் போய்ச் சேரும் என்றால் அதைப்போல நெல்லுக்கும் அதிக விலை கொடுத்தால் விவசாயிகளுக்குத்தான் சேரும். அதை வலியுறுத்த வேண்டும், வற்புறுத்த வேண்டும். இதை மனதில் வைத்துக் கொள்வது மிகவும் முக்கியம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைபட்டிருக்கிறேன்.

**(பிற்பகல் 1–20)**

அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற குறிப்பிலே, 1 இலட்சம் டன் நெல் கொள்முதலுக்கு ரூ. 8 கோடி செலவாகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ரூ 8 கோடி செலவிலே என்னென்ன அடங்குகிறது என்று குறிப்பிட்டு இருப்பதில் வட்டி சேர்த்திருக்கிறார்கள். கிடங்கிற்காக ஆகும் செலவு சேர்த்திருக்கிறார்கள், போக்குவரத்துச் செலவு சேர்த்திருக்கிறார்கள், ஏற்படுகிற சேதாரத்தைச் சேர்த்திருக்கிறார்கள். இவையெல்லாம்





சேர்த்தால் ரூ. 8 கோடி ஆகிறது. ஆனால், விவசாயிகள் கையிலே போய்ச் சேருகிற பணம் எவ்வளவு என்றால், ரூ. 8 கோடி, ஏறத்தாழ ரூ. 7 கோடியே 80 இலட்சம் விவசாயி கையிலே போய் சேருகிறது. ரூ. 20 இலட்சம் இதுபோல செலவாகிறது என்ற உண்மையை எடுத்துக் காட்டுகிறார்கள். உண்மையில் அது ஆகிறது. அதற்காக அரசாங்கத்தைக் குறை சொல்லவில்லை. இதை எப்படியாவது குறைக்க வேண்டும். குறைப்பதற்கு வழி என்ன? இந்த முயற்சியை அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் அமைச்சரைக் கேட்டுக்கொள்வது, தயவு செய்து திடீரென்று ஒரு அரிசி சேமிப்புக் கிடங்கை சோதனைப் போட்டுப் பாருங்கள். நானே கூட சோதனை போட்டு பார்த்திருக்கிறேன். கிடங்கு உள்ளே போய்ப்பார்த்தால், அங்கே சிதறிக் கிடக்கிற அரிசியை மட்டுமல்லாமல், கருகிக்கிடக்கிற அரிசியைக் கூடப்பார்க்கலாம். மனித உபயோகத்திற்கு இலாயக்கற்ற அரிசியைக் கூடப் பார்க்கலாம். ஒருவேளை உங்களுடைய ஆட்சிக்காலத்தில் அப்படித்தான் இருக்கும், நீங்கள் சரியாக இல்லை, நீங்களே கூட அப்படிக்கொண்டு வந்து போட்டிருப்பீர்கள் என்று சொல்லலாம். இப்பொழுது கூடப் பார்த்தால் அதே நிலைமைதான் இருக்கும். அதே அதிகாரிகள், கீழ்மட்டத்திலே யாரோ சில பேர் செய்கிற தவறுகள் காரணமாக அரசுக்குப் பெரிய இழப்பு ஏற்படுகிறது. எடை போட்டு அரிசியைக் கொடுக்கிறோம். அந்த அரிசியில் தண்ணீரைத் தெளித்துக் கொண்டு வந்தால் எடை நிற்கும் என்று ஈர நெல்லை—அரிசியை உள்ளே மூட்டைகளில் கீழே அடுக்கி விடுகிறார்கள். அது நாள் கணக்காகிறபொழுது மாதக்கணக்காகிறபொழுது அடியிலே உள்ள மூட்டைகள் மாற்றப்படாத நிலையில்,அப்படியே அடுக்கிக்கிடக்கும் போது, குபு குபுவென்று ஆவி வந்து, மனித உபயோகத்திற்கு இலாயக்கற்றுப்போய் விடுகிறது.

இன்னும், நான் கேள்விப்பட்டேன், சென்னையில் வைக்கப்பட்டுள்ள கோதுமை, எப்.சி.ஐ.க்குச் சொந்தம் என்று சொன்னார்கள். உணவு தானியக் கழகத்திற்குச் சொந்தமானது என்றாலும் நமக்கும் பங்கு இருக்கிறது. ஒரு நாடு என்று ஏற்று கொண்டிருக்கிற காரணத்தால் நமக்கும் சொந்தம் என்று கருதி அதையும் நான் சொல்கிறேன். அங்கு கூட அடுக்கி வைக்கப்பட்டிருக்கிற ஆயிரக்கணக்கான டன் கோதுமை மனித உபயோகத்திற்கு இலாயக்கில்லை என்று, சென்னையில் கூட ஏலம் விடுகிறார்கள். அரசாங்க அதிகாரிகள் அதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் அல்ல. ரெவின்யூ அதிகாரிகளை டி.எஸ்.ஓ.வாகப் போடுகிறோம், ஆர்.டி.ஓ.வைக் கொண்டு போய், டி.எஸ்.ஓ.வாகப் போடுகிறோம். இவர், நெல்லை எப்படிப்பாதுகாப்பது, அரிசியை எப்படிப்பாதுகாப்பது என்பதற்காகப் பயிற்சி கொடுக்கப்பட்டவர்கள் அல்ல. தனிப்பட்ட வியாபாரிகளை ஊக்குவிக்கக் கூறுகிறேன் என்று கருதிட வேண்டும். அரசு கொடுத்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது, தனிப்பட்ட வியாபாரிகளிடத்திலே இந்தக் குறை

[திரு. ப. உ. சண்முகம்] [1977 ஆகஸ்ட் 9

இல்லை. மாண்புமிகு உமாநாத் அவர்கள், அரசாங்கக் கடைகளிலே கொடுக்கிற அரிசியிலே நாற்றம் அடிப்பானேன், மற்றக் கடைகளில் கொடுக்கிற அரிசி நல்லமுறையில் இருக்கிறதே என்ன காரணம் என்று கேட்டார். உண்மை. பல காலமாக இருக்கிறது, மறுக்கப்போவதில்லை. எல்லா நேரத்திலும் அப்படித்தருவதில்லை. அதிகாரிகள் வருத்தப்படத்தேவையில்லை. சில நேரங்களில் அவ்வாறு இருக்கிறது. இப்பொழுதும் சில நேரங்களில் அவ்வாறு வரலாம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வந்திருக்கலாம், மறுக்கவில்லை. அங்கே தேக்கிவைக்கப்பட்டிருக்கிற இலட்சக்கணக்கான மூட்டைகள் அதனை அவ்வப்பொழுது மாற்றி அடுக்கி வைக்காமலிருக்கிற காரணத்தால், தேங்கியிருக்கிற மூட்டை நாளாக நாளாக கருகிப் போகிறது. தனிப்பட்ட வியாபாரியாக இருந்தால், அவ்வப்பொழுது மாற்றி மாற்றி அடுக்குவான், உலர்த்துவான், காயப் போடுவான். அப்படி மாற்றி அடுக்கி வைத்தால் இவ்வளவு பெரிய நஷ்டம் கூடக் குறைந்திருக்கக் கூடும். நாற்றம்கூடக் குறைந்திருக்கக் கூடும்-என்பது அரசுக்குத் தெரிந்திருக்கும். கோடவுனிலே வைத்திருக்கிற மூட்டைகளாலே நஷ்டம் வருகிறது என்று அமைச்சருக்குக் கூடத் தெரிந்திருக்கும். அதனை அனுமதிக்க வேண்டும் என்று வாரத்திற்கு ஒரு நாள் அமைச்சருக்கு பைல் வரும். உணவு இலாகாவில் இந்தக் குறையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அமைச்சருக்கு பைல் வரும். ரூ. 10,000 என்று கருதுகிறேன், அதுவரை செயலாளரோடு நிற்கலாம். ரூ. 25,000 அல்லது ரூ. 50,000 என்று கருதுகிறேன். அமைச்சரோடு நிற்கலாம். ரூ. 50,000 க்கு மேல் போனால், முதலமைச்சருக்குப் போகலாம். அதில் கையெழுத்துப்போடும் போது கூட மனம் நோகும், இவ்வளவு நஷ்டம் வருகிறதே கையெழுத்துப் போட வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்படுகிறதே என்று மனம் நோகும்.

கிடங்குகளில் சேமித்து வைக்கப்படுகிற அரிசியை சரியான முறையில் சேமித்து வைக்க நமக்கு வசதிக் குறைவா? நண்பர் உமாநாத் அவர்கள் இன்னொன்று கூடச் சொன்னார்கள், அரசே வியாபாரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று. கொள்கை அளவிலே அது சரி என்று குறிப்பிலே போடப்பட்டிருக்கிறது. நானும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், மாநில அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியுமா? நான், எதிர்க்கட்சியாக இருந்தாலும் தெரிவித்துக்கொள்கிறேன், நடத்த முடியாது. நடத்த வேண்டுமென்று நாங்களும் சொல்லலாம். அதற்கு சாத்தியம் இல்லை. காரணம் இது அகில இந்திய பிரச்னை அளவில் வரவேண்டிய ஒன்றாகும். மொத்த வியாபாரத்தை அகில இந்திய அளவிலே எடுத்துக்கொள்வார்களானால் ஆட்சேபனை இல்லை. அகில இந்தியாவிலும் நடத்த வெண்டும். இல்லை என்றால் சாத்தியம் இல்லை. மாநில அரசின் தலையிலே வைத்து மொத்த வியாபாரத்தை இங்கே நடத்து நடத்து என்றால் எந்த மாநில அரசாலும் நிச்சயமாக முடியாது.



1977 ஆகஸ்ட் 9] [திரு. ப. உ. சண்முகம்]

விலையைக் குறைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். விலையைக் குறைக்க வேண்டுமென்றால் அதற்கு முக்கியமான காரணங்களைக் காட்டியிருக்கிறார்கள். என்னென்ன சொல்கிறார்கள். பண வீக்கத்தைத் தடுக்கவேண்டும், உற்பத்தியைப் பெருக்க வேண்டும், விநியோகம் முறையாக இருக்க வேண்டும். அதோடு கூட இன்னொன்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். விட்டு விட்டார்கள் என்று கருதுகிறேன். ஏற்றுமதி இறக்குமதி உத்தரவுகள் சரியாக இருக்க வேண்டும். இவ்வளவும் மாநில அரசிடத்தில் மட்டும்தானா இருக்கிறது. கிராமங்களில் வேண்டுமானால் சீராக விநியோகம் வைக்கலாமே தவிர, பண வீக்கத்தைத் தடுக்கின்ற அதிகாரம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்குக் கூடக் கிடையாதே. ஏறுகிற விலையைத் தடுக்கிற, ஏற்றுமதி இறக்குமதி உத்தரவைப் போடுகிற அதிகாரம் மாநில அரசுக்குக் கிடையாது. மத்திய அரசு போடுகின்ற உத்தரவால் ஏற்படுகின்ற விலைவாசி ஏற்றம், பளு, சுமை, முழுவதையும் சுமக்க வேண்டியவர்கள் மாநில அரசுகள்தான். அந்தப் பளுவை மாநில அரசுகள் தான் சுமக்க வேண்டும். அந்தப் பழி பாவத்திற்கு அவர்கள்தான் ஆளாக வேண்டுமே தவிர, விலைவாசி ஏற்றத்திற்கு காரணம் மத்திய அரசாங்கம் போடுகின்ற பல திட்டங்கள் ஆகும். பாதிக்கப்படுவது மாநில அரசுகள்தான். மாநில அரசுகள் இன்றைக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டுமென்ற நிலையில் 16 ஆயிரம் நியாய விலைக் கடைகளைத் திறப்பதன் மூலமாக விலைவாசிகளைக் குறைப்போம் என்று நம்பிக்கைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட ஆளுநர் உரையிலே பேசும்போது 16 ஆயிரம் என்று தெரிவித்து இருக்கிறீர்கள். நல்ல யோசனைதான். ஆனால், இதற்கு 18 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகுமே, நீங்கள் எப்படி செய்யப் போகிறீர்கள்? நீங்கள் கொடுத்திருக்கிற ஸ்டாட்டிஸ்டிக்ஸ் புத்தகத்தில் 17,300 ரெவின்யூ கிராமங்கள் இருக்கின்றன. ஆனால் நீங்கள் 16 ஆயிரம் கடைகள்தான் திறக்கப் போகிறோம் என்று சொன்னதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அந்த 1,300 கடைகளையும் சேர்த்துக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது தந்திருக்கிற அறிக்கையில் எப்புடி இந்த வியாபாரத்தை எப்படிச் செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது தவறு என்று கூட சொல்லவில்லை. நன்றாக யோசித்து செய்ய வேண்டிய காரியம். அவசரப்பட்டுக் காலை வைத்தால் வாணிபத்தில் அரசாங்கத்திற்குப் பெரிய இழப்பு, சங்கடம் ஏற்படும். இந்த வாணிபத் துறையில் ஈடுபடும்போது பெருத்த நஷ்டம் வந்தால் பெருத்த ஆபத்தில் கொண்டு போய்விடும். எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் கிராமங்களில் கடைகளைத் திறந்து வைத்து கொடுக்கப் போகிறோம் என்று சொல்வது அவ்வளவு சாத்தியமான காரியம் இல்லை. எளிதில் செய்ய முடியும் என்று நான் நம்பவில்லை. செய்ய முடியும் என்றால் ஏற்றுக் கொள்கிறேன். முடியும் என்றால்

பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். எப்போது சாத்தியம் ஆகப் போகிறது? எப்போது கிராமங்களுக்கு உப்பு, புளி, மிளகாய் இவைகளை எல்லாம் கொடுக்கப் போகிறீர்கள். இன்று நாட்டு மக்களுக்குத் தேவை ''கண்ணுக்கு எட்டிய தூரத்தில் கடைகள் இல்லை. கைக்கு எட்டிய தூரத்தில் விலை குறைய வேண்டும்''. விலை குறைக்கும் அதிகாரம் இருக்க வேண்டும். மாநில அரசாங்கத்திற்குக் கிடையாது. மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. பிரதமர் மொரார்ஜி அவர்கள் டிசம்பர் மாதம் வரை அவகாசம் கொடுங்கள். விலையைக் குறைக்கிறேன் என்று சொன்னதாக பத்திரிகையில் செய்தி பார்த்தேன். டிசம்பர் வரையில் அவகாசம் கொடுங்கள் என்று பாரதப் பிரதமர் கேட்கிறார். விலைவாசிகள் குறையும் என்று நம்புகிறார்கள். நாமும் பொறுத்திருந்து பார்ப்போம். இதை நான் குறையாகச் சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. துவக்கத்தில் இருந்து நான் பேசுகிற பேச்சுகள் முழுவதும் அரசாங்கத்திற்கு யோசனை சொல்கிறேனே தவிர, வேறு காரணம் இல்லை.

அடுத்து நான் தெரிவித்துக் கொள்வது உணவு விடுதிகளிலே பண்டங்களின் விலை நிர்ணயிப்பது பற்றிய ஒரு சட்டம். அந்தச் சட்டம் ஏற்கனவே போடப்பட்டிருக்கிறது. அவசரகாலச் சட்டம் ரத்தானதற்குப் பிறகு உணவுப் பண்டங்கள் விலை நிர்ணய சட்டம் 6 மாத காலத்திற்கு நீடிக்கும் என்று ஒரு வரி இருக்கிறது. என்னால் இதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு வேளை அரசியல் சட்டத்திலே அப்படி சட்டம் இருக்கிறதோ என்னவோ எனக்குத் தெரியாது. உத்தரவு போட்டிருக்கிறார்கள். 6 மாத காலம் இருக்கும் என்ற உத்தரவை போட்டிருக்கிறார்கள். எப்படிப் போட்டார்களோ எனக்குத் தெரியாது. உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப் படுத்த வேண்டுமென்று ஒத்துக் கொள்கிறேன். அது சாத்தியமா இல்லையா என்று பார்த்தால், திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைச்சரவையிலே நானும் உணவு அமைச்சராக இருந்திருக்கிறேன். மற்றவர்களும் இருந்திருக்கிறார்கள். அந்த இலாகாவில் பொறுப்பேற்றுப் பதவி வகித்த போது அப்போது கூட உணவுப் பண்டங்களில் விலையை—ஓட்டல் முதலாளிகளைக் கூப்பிட்டு, வாதிட்டு வற்புறுத்தி குறைத்திருக்கிறோம் அந்த விலையைக் குறைப்பதற்கு சட்டம் இருக்கிறதா என்றால், உண்மை, ஒத்துக் கொள்கிறேன் அப்படி சட்டம் ஏதும் இல்லை அப்போது காட்டிய சட்டம் எல்லாம் அவர்களை பயமுறுத்துவதற்கு உபயோகப்படுத்தப்பட்ட சட்டம் விற்பனை வரி சட்டம்தான். விற்பனை வரிச் சட்டத்தை அதற்காகப் பயன்படுத்தினோமே தவிர, சானிடேஷன் சட்டத்தை பயன்படுத்தினோமே தவிர, வேறு எந்த சட்டத்தையும் காட்டியதாகத் தெரியவில்லை. இன்னும் 6 மாத காலத்திற்குப் பிறகு அவசர காலச் சட்டம் ரத்தாகிய பிறகு அந்த 6 மாத காலத்திற்குப் பிறகு இந்தச் சட்டம் ரத்தாகப் போகிறது. அதற்குப் பிறகு நிலைமை என்ன?





[பிற்பகல் 1–30]

உணவு விடுதிகளில் போய் உணவுப் பண்டங்களின் எடையைக் கட்டுப்படுத்துவோம் என்று சொன்னால், இட்லி என்றால், இட்லியில் அதிகமாக உளுந்து சேர்த்தால் தான் சாப்பிட முடியும். உளுந்தைக் குறைத்தால் எடை கூடும், உளுந்தைச் சேர்த்தால் எடை குறையும். எதைச் செய்வார்கள் விடுதிக்காரர்கள்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் முடியும் வரை அவையை நீட்டிக்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: அரசாங்கம் மாதிரி உணவு விடுதி நடத்திக் கொண்டிருக்கிறது. கேள்வி நேரத்தில், உணவு அமைச்சர் அவர்கள் அதில் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது, தொடர்ந்து அவைகளை நடத்துவதா இல்லையா, மேற்கொண்டு விடுதிகளைத் திறப்பதா இல்லையா என்று பரிசீலிக்கும் என்று சொன்னார்கள் நஷ்டம் தான் வரும். அரசாங்கம் நடத்துகின்ற உணவு விடுதியில் நஷ்டம் வரும்போது, தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற உணவு விடுதியில் நஷ்டம் வராமல் லாபம் வரும் என்று எதிர்பார்க்க முடியாது.

இன்னொன்று இடையிலே சொல்ல விரும்புகிறேன். உணவு விடுதியில் சேல்ஸ் டாக்ஸ் போடுகிறார்கள் என்று குறைபட்டுச் சொன்னார்கள். சேல்ஸ் டாக்ஸ் போடக்கூடாது என்று சட்டம் போட்டிருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. இருக்கிற சட்டப்படி போட்டு வசூலிக்கிறார்கள். அப்படி போடக் கூடாது என்று சொல்லி சட்டத்தை எடுத்திருப்பார்களேயானால், வரவேற்கத் தயாராக இருக்கிறேன். எடுத்திருப்பார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. அப்படி உத்தரவு போட்டதாக எனக்கு நினைவில்லை.

உணவு விடுதிகளில் சேல்ஸ் டாக்ஸ் போட்டு வசூலிக்கிறார்கள் என்பது உண்மை. அது சாப்பிடுகின்றவர்கள் தலையில் வருகிறது. அதுவும் உண்மை. ஆனால் உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்கும் சட்டம் ஆறு மாதம் தான் இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கப் போகிறது என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் பேசும்போது நான் வலியுறுத்திச் சொன்ன கருத்தைத்தான் அவரும வலியுறுத்தினார்கள்.

நெல் விலைக்கும் அரிசி விலைக்கும் ஒன்றுக்கு இரண்டாக இருக்கிறது என்று இந்தக் குறிப்பில் எழுதப்பட்டிருக்கிறது. குறிப்பாக இதைத் தயாரித்தவர்கள் மிகவும் திறமையோடு தயாரித்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலிருந்து தான் இப்படி இருக்கிறது; புதிதாக விலை இப்படி ஒன்றுக்கு

[திரு. ப. உ. சண்முகம்] [1977 ஆகஸ்ட் 9

இரண்டாக இல்லை; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் செய்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு நாங்கள் பேசாமல் இருக்கவேண்டும், தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக எழுதியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். 1970-ம் ஆண்டு நெல் விலை குவிண்டாலுக்கு ரூ. 48 ஆக இருந்தது. அப்போது அரிசி விலை கிலோ 90 காசாக இருந்தது. இது ஒன்றுக்கு இரண்டு தான். இப்போது கூட எடுத்துக் கொள்ளுங்கள். நெல் விலை ரூ. 78 ஆக இருக்கிற போது, அரிசி கிலோ 1-60 ஆக இருக்கிறது என்று 15-ம் பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி போட்டுக் காட்டியிருப்பவர்கள் திறமையோடு போட்டுக் காட்டி யிருக்கிறார்கள் என்றாலும், புலவர் கோவிந்தன் அவர்கள் எடுத்துக் காட்டியது போல, அப்போது வந்த மிச்ச லாபம், மத்திய அரசு கொடுத்த பணம், அப்போது 43 ரூபாய் குவிண்டால் விலை என்ற போது குவிண்டாலுக்கு 24 ரூபாய். இப்போது குவிண்டால் 78 ரூபாயாக இருக்கும்போது, மிச்சம் 43 ரூபாய். இதில் எல்லாச் செலவும் அடங்கும். ஒத்துக்கொள்கிறேன். சேதாரச் செலவு இருக்கிறது. வட்டி இருக்கிறது, கிடங்கு வாடகை இருக்கிறது. அரசாங்க ஊழியர்களுக்குச் செலவு இருக்கிறது. எல்லாச் செலவும் இருக்கிறது. அரவைக் கூலி இருக்கிறது, அதுவல்லாமல், குறைவுக்காகக் கழிவு இருக்கிறது. இவ்வளவையும் எடுத்துக் கொண்டால், 43 ரூபாய் குவிண்டாலுக்கு அதிகம். இதை வைத்துக் கொண்டு, விற்பனை விலையைக் குறைப்பதற்கான யோசனை இருப்பதாக அமைச்சரின் குறிப்பில் இருக்கிறது. ஒன்று அரிசி விலையைக் குறைக்கலாம்; அல்லது விவசாயிக்கு நெல் விலையை அதிகப்படுத்திக் கொடுக்கலாம். நெல்லுக்கு அதிக விலை கொடுக்கலாம். அப்படி அதிக விலை கொடுக்க மத்திய அரசாங்கத்தின் உத்தரவு தடையாக இருக்குமேயானால், 15 ரூபாய் போனஸ் கொடுப்பதைத் தடுக்க முடியாது. 10 ரூபாய் போனஸ், 5 ரூபாய் வண்டிச் சத்தம் கொடுப்பதைத் தடுக்க முடியாது. அவர்கள் ஆட்சேபிப்பது நெல்லை மத்திய அரசாங்கத்திற்கு விற்றால் 15 ரூபாய் கொடுக்க மாட்டார்கள். அப்போதுதான் ஆட்சேபணை வருகிறது. நாமே 15 ரூபாய் கொடுத்துவிட்டு, மத்திய சர்க்காருக்கு விற்கும் போது ஆட்சேபணை செய்ய முடியாது என்று கருதுகிறேன். அப்படி ஆட்சேபணை அவர்கள் செய்ய முடியும் என்று கருதுவார்களேயானால், நான் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

கேள்வி நேரத்தில் வேளாண்மைத் துறை அமைச்சர் சொன்னார். எனக்கே வியப்பாக இருந்தது. திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு : சர்க்கரை ஆலைகளுக்கு எல்லாம் கரும்பு உற்பத்தியாளர்கள் குறைந்த விலையில் கரும்பை கொடுக்க வேண்டும் என்ற நடைமுறையைக் கடைப்பிடித்து கொள்ளையடித்துவிட்டார்கள் என்பது முன்னேற்றக் கழக அமைச்சரவையின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டாகும். அப்போதே சொன்னோம்; மத்திய



1977 ஆகஸ்ட் 9] [திரு. ப. உ. சண்முகம்]

அரசாங்கம் நிர்ணயித்திருக்கின்ற விலை ரூபாய் 85 என்று. 85 ரூபாய் என்றால் வாங்கமாட்டோம் என்று சொல்லி, யாரும் வாங்க மறுத்துவிட்டார்கள். அப்போது முத்தரப்பு மாநாடு கூட்டி ஆலைகள் அதிகவிலை தர ஏற்பாடு செய்தோம். இப்போது அதை உண்மை என்று ஒத்துக்கொள்கிறார்கள். மாநில அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கம் எழுதியிருக்கின்ற கடிதம் என்று ஒன்றைச் சொன்னார்கள். 85 ரூபாய் குறைந்தபட்ச விலை என்று கருதுகிறேன். அதைத் தான் எழுதியிருக்க முடியும். அதற்குமேல் கொடுக்கக் கூடாது, விற்கப் படக்கூடாது என்று அமைச்சரவர்கள் சொன்னதாக நினைவு. அப்படிச் சொல்லியிருந்தால், மத்திய அரசாங்கம் அப்படிக் குறிப்பு அனுப்பியிருந்தால், அதை நாம் ஆட்சேபித்து, அந்த உரிமையை மாநில அரசாங்கம் பெறவேண்டும். குறைந்த பட்ச விலையைத்தான் அக்ரிகல்சுரல் பிரைசஸ் கமிஷன் நிர்ணயிக்கிறது. அதிகமான விலை கொடுக்க கரும்பு ஆலை முதலாளிகள், விவசாயிகள் ஆகியவர்களை உட்கார வைத்துப் பேசி முடிவு செய்யவேண்டும். அப்படி ஆண்டுதோறும் முடிவு செய்து கொண்டு வந்தது. இப்போது யோசனை சொல்லுகிறேன். அதைச் செய்யுங்கள். அதைச் செய்தால்தான் இந்த நாட்டிலே கரும்பு உற்பத்தி செய்கிறவர்களுக்கு ஊக்கமாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது, மற்றொரு யோசனை தெரிவித்துக் கொள்வது, உணவு தானிய சேமிக்கும் கட்டடங்களை நிறையக் கட்டுங்கள். நமக்குக் கட்டடங்கள் தான் பஞ்சம். போதுமான கட்டடங்கள் கிடையாது. இன்னும் அதிகப்படியான கட்டடங்களைக் கட்டுகிற முயற்சியிலே ஈடுபட வேண்டும். அரசு நெல்லைச் சேமித்து வைக்கப் போதுமான கட்டடங்கள் இல்லை. இப்படி இல்லாத காரணத்தினால், வெட்ட வெளியிலே கட்டைகளைப் போட்டு அடுக்கி அதன்மேலே மூட்டைகளை அடுக்கி தார்ப் பாய் போட்டு வைத்திருப்பதை எங்கே சென்றாலும் பார்க்கலாம். இந்த நிலை மாறவேண்டும். கட்டடங்களை இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கட்டவேண்டும். அதற்குக் கடன் வாங்கியாவது இன்னும் அதிகப்படியான கட்டடங்களைக் கட்ட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன்கள் வாங்கி, அதிகப்படியான கட்டடங்கள் கட்டப்பட வேண்டுமென்ற யோசனையைத் தெரிவித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கொண்டுவரப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. கா. உ. ரா. எட்மண்ட் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உணவுப் பொருள் மானியக் கோரிக்கையின் மீதும், பல்வேறு தரப்பட்ட மானியக் கோரிக்கைகளின் மீதும் இங்கே பேசிய பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய நல்ல கருத்துக்களை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். இந்த விவாதத்திலே ஏறத்தாழ 17 மாண்புமிகு உறுப்பினர்கள்

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1977 ஆகஸ்ட் 9

கலந்துகொண்டு பொதுவாகத் தங்களுடைய கருத்துக்களை இந்த மன்றத்திலே எடுத்துச் சொன்னார்கள். இங்கே பேசிய பெருவாரியான உறுப்பினர்கள் பலரும் நெல்லுக்கு அதிகமான விலை கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வலியுறுத்தினார்கள்.

பொதுவாக, இந்த அரசைப் பொறுத்தமட்டில் நெல்லுக்கு அதிக விலை விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்தை இந்த அரசாங்கம் முழு மனதுடன் ஏற்றுக் கொண்டாலும், அதை அமல்படுத்துகின்ற வகையிலே இருக்கிற பல்வேறு சிக்கல்கள் காரணமாக அரசு இன்னும் அதைப் பற்றித் தீவிரமாக யோசனை செய்துகொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கூடிய விரைவிலே அதற்காக குழு டில்லியிலே கூட இருக்கும்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் குழுக் கூட்டத்திலே தமிழக அரசு சார்பில் கலந்து கொள்ள இருக்கிறார்கள். அந்தக் குழுக் கூட்டத்திலே நெல்லுக்கு இன்னும் அதிகமான விலை கொடுக்க வேண்டுமென்று நிச்சயமாக வற்புறுத்துவார்கள் என்ற நம்பிக்கை இந்த அரசிற்கு இருக்கிறது.

பொதுவாக, தமிழகத்தின் உணவு நிலைமையைப் பொறுத்த வரையில் இன்றைய தினம் உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது என்பது மாத்திரமல்ல, உணவுப் பண்டங்களின் விலை, குறிப்பாக அரசு விற்கின்ற உணவு தானியங்களின் விலை, மற்றைய ஆண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இந்த ஆண்டு அரசிற்கு மன நிறைவு தருகிற விலையில் விற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

தன்னுடைய கருத்தைத் தெரிவித்த நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் இங்கே பேசும்போது ஒரு கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். அந்தக் கருத்தைக் கடைசியாகப் பேசிய முன்னாள் உணவு அமைச்சர் மாண்புமிகு உறுப்பினர் ப. உ. சண்முகம் அவர்களும் அதையே வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அநேகமாக எல்லா உறுப்பினர்களும் இந்த அவையில், இந்த மானியத்தின் மீது அவர்களுடைய கருத்தைச் சொல்லும்போது, அந்தக் கருத்தையே வற்புறுத்தி, வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

நெல்லை வாங்குகிற நேரத்தில் நெல்லின் விலை 48 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றும், அரிசியாக விற்கப்படுகிற நேரத்தில் ஏறத்தாழ 96 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றும் நம்முடைய மாண்புமிகு புலவர் கோவிந்தன் தன்னுடைய கருத்திலே தெரிவித்தார்கள். இந்த இரட்டிப்பு விலையைக் குறைக்க வேண்டுமென்று இங்கே அவருடைய கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.



1977 ஆகஸ்ட் 9] [திரு. க. உரொ. எட்மண்ட்]

[பிற்பகல் 1–40]

அவர்கள் அந்தக் கருத்தைச் சொல்கிற நேரத்தில் ஒரு சில நியாயமான செலவுகளை அவர்கள் ஏற்றுக் கொண்டதற்காக நான் அவர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறவைக்கு உண்டான கூலியை இந்த அரசு கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த அரசு நெல்லை மொத்தமாக வாங்கி சேமித்து வைப்பதற்கு ரிசர்வ் பாங்கியிலிருந்து வாங்குகிற கடனுக்கு 12 பர்சண்ட் வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் சேர்த்துப் பார்த்தாலும் கூட ரூ. 48-க்கு நெல்லை வாங்கிவிட்டு ரூ. 96-க்கு விற்பது நியாயம் இல்லை என்று நம்முடைய புலவர் கோவிந்தன் அவர்கள் இந்த மன்றத்தில் எடுத்துச் சொன்னாலும் முன்னாள் உணவு அமைச்சராக இருந்த காரணத்தால் அதிலிருக்கிற பல்வேறு சிக்கல்களை உணர்ந்த நம்முடைய எதிர்க்கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ப. உ. சண்முகம் அவர்கள் இருக்கிற பல்வேறு செலவினங்களை ஏற்றுக் கொண்டு இந்த விலைக்கு விற்பது நியாயமான விலைதான் என்பதை அவர்கள் இந்த மன்றத்தில் ஒத்துக்கொண்டு பேசியதற்காக என்னுடைய நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக இந்தக் கருத்தை வலியுறுத்திய பல்வேறு நண்பர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் தனியார் வியாபாரம் செய்வதைப்போல் ஒரு அரசாங்கம் வியாபாரம் செய்யமுடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக ஒப்புக் கொண்டாகவேண்டும். காரணம், தனியார் தேவைக்குத் தகுந்த அளவிற்கு அப்போதைக்கப்போது நெல்லை வாங்கி அவித்து அறைத்து அதை விற்றுக் கொள்ளும் நிலை இருப்பதால் அவர்களுக்கு அதிகமாக சேமித்து வைக்கவேண்டிய அவசியம் இல்லை. அதிகமான மூலதனம் முடக்க வேண்டிய அவசியமுமில்லை, ஆனால் அரசு உணவுத் துறை ஏற்று நடத்துகிறது என்றால் நாட்டு மக்களுக்குத் தேவையான அரிசியை அது சேமித்து வைத்தாகவேண்டும். இங்கே ஒரு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இன்று அரசுக் கணக்குப் பிரகாரம் மாதம் ஒன்றுக்கு 40,000 டன் அரிசியை இந்த அரசு சேமித்து வைக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஒரு உறுப்பினர் அவர்கள், இந்த 40,000 டன் போதாது, நாளாவட்டத்தில் இதன் அளவு உயர்ந்தாலும் உயரலாம் என்று சொன்னார்கள். 40,000 டன் என்று அரசு கணக்கிடுகிறது என்றால், இந்த 40,000 டன் அரிசி அரசாங்கம் இன்று கையில் வைத்திருக்கிறது என்றால் இதை ஒரு சேமிப்பாகத்தான் வைத்திருக்கிறோம். ஆனால் மொத்தத்தில்

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1977 ஆகஸ்ட் 9

கணக்கிட்டுப்பார்த்தால் இதைவிட அதிகமாக நாட்டு மக்களால் கொள்ளப்படுகிறது என்ற உண்மையை மறைப்பதிற்கில்லை. அரசாங்கத் துறை எடுத்து, விநியோகத்துறையில் கொடுக்கிற அளவை வைத்து ஒரு மாதம் 40,000 டன் அரிசி தேவை என்று அரசு கணக்கிடுகிறது என்று அவர்கள் சொன்னார்கள். அந்தக் கணக்கில் இந்த அரசாங்கம் வைத்துக்கொள்ளவில்லை.

இன்றைய தினம் நாட்டில் அரிசி விநியோகம் செய்யப்படுகிறது என்றால் விநியோகம் செய்யப்படுகிற அரிசி, பொது விநியோகம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இருக்கலாம், அல்லது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடை மூலமாகக் கூட இருக்கலாம், இதுபோக நாட்டு மக்கள் வெளிச் சந்தையில் அரிசி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்—அந்த அடிப்படையில் பார்த்தால் இந்த 40,000 டன் அரிசி மாதத்திற்கு இந்த அரசு சேமித்து வைக்கிறது என்றால் ஒரு சேமிப்பாகத்தான் இதைச் சேர்த்து வைத்திருக்கிற அந்த அடிப்படையில் இவ்வளவு பெரிய அளவு நெல்லை அரசாங்கம் வாங்கியாகவேண்டும். வாங்கியவுடனே வாங்கிய இடத்திலேயே அறைப்பதற்கான ஆலைகள்—எல்லா மாவட்டங்களிலும் அந்த வசதி இல்லை. அதை உடனடியாகச் சேமிப்புக் கிடங்குகளுக்கு கொண்டு போகவேண்டும். அதற்கான போக்குவரத்துச் செலவை அரசாங்கம் இந்தத் துறையில் ஏற்றுக் கொள்ள வேண்டும். அங்கு சேமித்து வைத்த பின்னால் அவித்து அறைப்பதற்கு மீண்டும் அறவை ஆலைகளுக்கு இந்த அரசு அவற்றை அனுப்பவேண்டியிருக்கிறது. அறைத்த பின்னால் அதை மீண்டும் அரசு கிடங்களுக்கு எடுத்துச் சென்று அங்கே சேமித்து வைக்க வேண்டியிருக்கிறது. ஒரு ஆண்டுக்குத் தேவையான அரிசியைச் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் அரசு மிகுந்த அக்கறை காட்ட வேண்டியிருக்கிறது. இவ்வளவு கணக்குகளையும் சேர்த்துப் பார்க்கும்போது அரசு விற்கிற விலை நியாய விலையாக இருக்கும் என்பதை எல்லா உறுப்பினர்களும் நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அதைப்போல காங்கிரஸ் கட்சியின் தலைவர் மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். 9,000 கடைகள் இன்னும் ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. அந்தக் கடைகளையும் ஆரம்பிக்கிற நேரத்தில் இன்னும் அதிகமான அரிசி தேவைப்படும் என்று சொன்னார்கள். இன்னும் 9,000 கடைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியிருக்கிறது என்றாலும், ஸ்டாக்கைப் பொறுத்த வரையில் இது சேமிப்பாகத்தான் அரசாங்கக் கிடங்குகளில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கொள்முதலைப்பற்றி இந்த அரசுக்கு தெளிவான ஒரு முடிவும் இல்லை என்று சொன்னார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில், கொள்முதலை எப்படி மாற்றி அமைப்பது, எந்த அடிப்படையில் ஆரம்பிப்பது என்பதை ஆலோசிக்க வேண்டியுள்ளது. தஞ்சை, திருச்சி, மாவட்டங்களில் குறுவை



1977 ஆகஸ்ட் 9] [திரு. க. உரொ. எட்மண்ட்]

அறுவடையாகியிருக்கிறது. குறுவையில் கொள்முதல் செய்ய வேண்டிய தேவையில்லை. அதற்குப் பின்னால் கொள்முதல் செய்யும்போது, முன்னால் இருந்ததுபோலவே விவசாயிகளிடமிருந்தே கொள்முதல் செய்யலாமா, அல்லது வியாபாரிகளிடமிருந்து 40 சதவீதம் லெவி வாங்கிக்கொள்வது என்பதைத் தொடர்ந்து வைத்துக்கொள்வதா என்பதையெல்லாம் அரசாங்கம் யோசித்து அதற்கான முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கிறது. இதை ஏற்கனவே என்னுடைய உரையில் சொல்லியிருக்கிறேன். அதையேதான் நான் இப்போதும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் உமாநாத் அவர்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்வதை நிறுத்த வேண்டும். விவசாயிகளிடமிருந்து, அவர்களுடைய தேவைக்குப் போக மீதியுள்ளதை அரசாங்கத்திற்குக் கொடுத்தால், அவை அத்தனையும் அரசாங்கம் கொள்முதல் செய்துகொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு உமாநாத் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. இப்போதே 40 சதவீதம் அரிசியை வாங்குவது என்றிருப்பதைக் கூட அரசாங்கமே எடுத்துக் கொள்முதல் செய்யவேண்டும் என்றும் சொல்லப்பட்டது. இப்போதே 40 சதவீதம் அரிசியை லெவி முறையில் வாங்குவதற்கே—அதற்கான பணத்தை ரிசர்வ் வங்கியிலிருந்து பெறுவதற்கே—நாம் வட்டியாக மட்டும் 7.6 கோடி ரூபாய் கொடுக்கவேண்டும். அப்படியிருக்கும்போது, எல்லா விவசாயிகளும் உற்பத்தி செய்யக் கூடிய நெல்லை எல்லாம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வரும்போது அதற்கான பெருந் தொகைக்கும் நாம் வட்டி கொடுக்கவேண்டும். . . . . . . .

<u>திரு ரா. உமாநாத்:</u> எல்லா விவசாயிகளிடமிருந்தும் எடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. மூன்று ஏக்கர்களுக்கு மேல் இருக்கின்றவர்களிடமிருந்து, அதாவது மூன்றுக்கு மேல் பத்து ஏக்கர் வரையுள்ளவர்களிடம் இத்தனை அளவில் (கிரேடட் லெவி) என்ற முறையில்— கொள்முதல் செய்யவேண்டும், பத்து ஏக்கர்களுக்கு மேல் உள்ளவர்களிடமிருந்து மார்க்கெட் சர்ப்ளஸை வாங்கவேண்டும் என்ற கருத்தைத்தான் நான் சொன்னேன்.

<u>மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்:</u> அப்படிக் கணக்கிட்டுப் பார்த்தாலும் ரிசர்வ் வங்கியிலிருந்து பணம் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படும். அதற்கான வட்டியும் கொடுக்கவேண்டியிருக்கும். இப்போதுள்ள நிலைமையில் இருக்கின்ற சிரமம் என்னவென்றால், வாங்குகின்ற நெல்லை அல்லது அரிசியைப் பாதுகாப்பாக வைக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், சில குறிப்பிட்ட கிடங்குகளை

இருக்கின்ற தானியங்கள் கெட்டுப்போகின்றன. திரு ப. உ. சண்முகம் அவர்கள் சொல்லும்போதுகூடச் சொன்னார்கள், மூட்டைகளையெல்லாம் அவ்வப்போது உலர்த்தி வைக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஆகவே இதை அத்தனையும் எடுக்க வேண்டும் என்பது அரசாங்கத்திற்கு முடியாத காரியம். ஆதலால் தான் இதைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டாலும் திறம்பட எந்த அளவுக்குக் கொள்முதலை நடத்தலாம். எந்த அளவுக்கு கையிருப்பு வைத்திருக்கலாம் என்று ஆலோசித்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றிய முடிவுகளை இந்த அரசு கூடிய விரைவில் எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சர்க்கரையைப்பற்றிப் பல்வேறு உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். மத்திய அரசோடு இதற்காகப் போராடவேண்டும் என்று எல்லா உறுப்பினர்களுமே சொன்னார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு ஜேம்ஸ் அவர்களைத் தவிர எல்லோரும் சொன்னார்கள். இதே ஜேம்ஸ் அவர்கள் இதே சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சியில் இருந்த காலத்தில் மத்தியில் இந்திய தேசிய காங்கிரஸ் ஆண்டு கொண்டிருந்த காலத்தில் மத்திய அரசோடு போராட வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைய தினம் சொல்லவில்லை, அப்படிச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். நெல்லுக்கு அதிக விலை கொடுக்க வேண்டும் என்று கேட்ட நேரத்திலும், அரிசிக்குக் குறைந்த விலை நிர்ணயிக்கவேண்டும் என்று கேட்ட நேரத்திலும், மத்திய அரசோடு நாம் ஒன்றாக போராட வேண்டும் என்றும், விவசாயிக்கு உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது. விவசாயிகளுக்குப் போதுமான லாபம் கிடைக்கவில்லை என்பதோடு மட்டுமல்ல, இப்படியே நீடித்துக் கொண்டிருந்தால், நாளடைவில், விவசாயிகள் விவசாயத் தொழிலையே விட்டுவிட்டுப் போய்விடுவார்களோ என்று பயம் இருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையில் நெல்லுக்கு அதிக விலை கொடுக்க வேண்டும். நெல்லுக்கு அதிகமான விலையை நிர்ணயம் செய்யவேண்டும் என்று இந்த அரசாங்கம் கேட்கும் போது மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1–50)

திரு ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நமது அரசாங்கம் இப்போது கேட்கின்றதையெல்லாம் மத்திய அரசாங்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் டெல்லிக்கு போகிறபோது கேட்கிறதை எல்லாம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையில் போராட்டம் தேவையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நம் அரசின் நிலையை உணர்ந்து மத்திய சர்க்கார் 1 லட்சம் டன் அரிசி கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு மத்திய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படித் தேவைகளை உணர்ந்து 2 லட்சம் டன் அரிசி தருவதாகக் கூறும் மத்திய அரசாங்கம், விவசாயிகளின் தேவையை அறிந்து, நிலையை உணர்ந்து, அவர்களுக்கு அதிகப்படியான விலை கொடுக்கவும் முன் வருவார்கள் என்று நம்புகிறேன்.

திரு மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு அதிக விலை கொடுக்கக் கூடாது என்று மத்திய அரசாங்கம் சொல்வதை எதிர்த்துப் போராடத் தயாராக இருக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஜேம்ஸ் அவர்கள் போராடத் தயாராக இருக்கிறாரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. நாங்கள் எல்லோரும் தயாராக இருக்கிறோம், ஆனால், நாம் எப்போது போராடுவது என்பதையெல்லாம் சிந்தித்துச் செயல்படுவதற்கு முன்னால், அந்த இடைக்காலத்தில் ஏற்கனவே, இருந்த கழக அரசு வழங்கிய போனஸ், போக்குவரத்து என்று கொடுத்த அந்த 15 ரூபாயை, அதிகப்படுத்தித் தர இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்: 15 ரூபாய் என்பது மட்டுமல்ல. விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு நன்மைகள் செய்ய வேண்டுமோ, அந்த அளவுக்கு இந்த அரசு நிச்சயமாகச் செய்யும்.

திரு மு. கருணாநிதி: நான் குறிப்பாகக் கேட்கிறேன். விவசாயிகள் கொள்முதல் விலை குறைவாக இருக்கிறது, எனவே, அவர்கள் போனஸ், கேட்கிறார்கள். போக்குவரத்துக்கு 5 ரூபாய் கேட்கிறார்கள். 15 ரூபாய் இதற்கு முன்னால் கொடுக்கப்பட்டது: அதை 20 ரூபாயாகக் கொடுத்தால் நான் பாராட்டுக்குவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்: ஆனால், 15 ரூபாய்க்குக் குறையாமல் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு எம்.ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எதிர்பார்ப்பதைவிட அதிகம் கிடைக்கும்.

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்: நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அண்மையில் நடக்க இருக்கும் குழுவிலே கலந்துகொள்ள இருக்கிறார்கள். அப்போது தமிழ் நாட்டு நிலைமையை நிச்சயம் வலியுறுத்த இருக்கிறார்கள். அப்படி முதலமைச்சர் வலியுறுத்துகிற நேரத்தில், இங்கு ஜனதா

கட்சியின் தலைவர் திரு ஜேம்ஸ் அவர்கள், தமிழகத்திலே உள்ள முதலமைச்சர் அவர்கள் நியாயமான கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இங்கே உள்ள விவசாயிகளுடைய உற்பத்திச் செலவு எங்களுக்குத்தான் தெரியும், எங்களுடைய பிரதிநிதியாக முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நீங்கள் அவசியம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று திரு ஜேம்ஸ் அவர்கள் மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லவேண்டும்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u>: ஜேம்ஸ் அவர்கள் வாதாடுவதற்கு எப்போதும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் போராடுவதற்குத் தயாராக இல்லை. போராட்டச் சூழ்நிலை வராது என்று நான் நம்புகிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u>: என்னைப் பற்றி நன்றாக தெரிந்து வைத்திருக்கும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னது உண்மைதான். (ஆரவாரம்)

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்</u>: பேரவைத் தலைவர் அவர்களே, விநியோக முறையைப் பற்றி நம்முடைய பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, நம்முடைய எதிர்க் கட்சியிலே உள்ள திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள்கூட, நீங்கள் கிடங்குகளுக்கு அடிக்கடிச் சென்று சோதனை இடவேண்டும் என தன் அனுபவத்தில் ஏற்பட்ட அறிவுரையைச் சொன்னார்கள். அதற்கு நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நான் 2, 3 சேமிப்பு கிடங்குகளுக்கு முன்னறிவிப்பு இன்றி, திடீரென்று போய் சோதனையிட்டிருக்கிறேன். அப்படி சோதனைச் செய்து பார்க்கிற நேரத்தில், அங்கே சேமித்து வைக்கப்பட்ட அரிசியாக இருந்தாலும் கோதுமையாக இருந்தாலும் சரி நல்ல தரமான அரிசியாகவும், கோதுமையாகவும் தான் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சேமிப்பு கிடங்கில்—சென்னையிலே மழை, வெள்ளம் வந்தபோது இங்கிருந்து அங்கே அனுப்பப்பட்ட அரிசி—ஓரளவுக்கு கெட்டுப்போய் இருந்தது என்றுகூட சொல்வதற்கில்லை, அதனுடைய பாலிஷ் கெட்டுப் போய் இருந்தது. அந்த அடிப்படையிலே தான் நான் அவர்களுக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறேன். அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்ற இடத்தை அடிக்கடி மாற்றி மூட்டைகளை அடுக்க வேண்டும் என்று சொல்லியுள்ளேன். இன்னும் கூடுமான வரைக்கும் இந்த அரிசி மூட்டைகளில் ஈரம் இருக்கிறது என்று கண்டுபிடித்தால், அவைகளை உடனே உலர்த்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பாலிஷ் கெட்டுப்போன அரிசியாக இருந்தால், உடனடியாக அரிசி ஆலைகளுக்கு அனுப்பி வைத்து மீண்டும் பாலிஷ் செய்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்றெல்லாம் நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறேன்.



பொதுவாக இப்போது பொது விநியோகத்திலிருந்து கொடுக்கப்படுகிற அரிசி தரமுள்ள அரிசியாக இருக்கிறது. இல்லை யென்றுசொல்ல முடியாது. ஒரு சில கடைகளில் தவறுகள் நடக்கலாம், இல்லையென்று சொல்லவில்லை. அந்தத் தவறுகள் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் இப்பொழுது சேமிப்புக் கிடங்குகளில் இருந்து பொது விநியோகக் கடைகளுக்கு அரிசி எடுத்துச் செல்லுகிற நேரத்தில் அங்கு ஒரு அதிகாரியைப் போட்டு—எடுத்துச் செல்லுகிற அரிசி தரமுள்ள அரிசியாக இருக்கிறதா, எடை சரியாக இருக்கிறதா என்பதையெல்லாம் சரி பார்த்து பொது விநியோகக் கடைகளுக்கு அனுப்ப வேண்டுமென்ற உத்தரவை இந்த அரசு போட்டிருக்கிறது. மோசமான அரிசியோ, தரக்குறைவான அரிசியோ கொடுக்க இனி இடம் இருக்காது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

போன சனிக்கிழமை கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் போன போது மோசமான அரிசி கொடுத்ததாகப் பொது மக்களே என்னிடம் வந்து சொன்னார்கள். இல்லையென்று மறுப்பதற்கில்லை—சில கடைகளில் அப்படிக் கொடுக்கிறார்கள் அது சம்பந்தமாக அதிகாரிகளுக்கு அங்கேயே உத்தரவிட்டு வந்திருக்கிறேன். பொது விநியோகம் செய்கிற கடைகளை அடிக்கடி சோதனையிட வேண்டும். திடீர் திடீரென்று சோதனை இடவேண்டும். பொதுமக்கள் குறைகளைச் சொன்னால் தரம் இல்லாத அரிசியினை விநியோகம் செய்தால், யார் விநியோகம் செய்தார்கள் என்று கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டும், கிடங்குகளில் இருந்து அந்த அரிசிதான் கொடுத்தார்கள் என்று சொன்னால் அங்கு சென்று பார்த்து நடவடிக்கை எடுக்கவேண்டும். சேமிப்புக் கிடங்கிலிருந்து தரப் பட்ட அரிசியை வேறு கடைகளுக்குக் கொடுத்துவிட்டு மோசமான அரிசியை விநியோகித்தால், அவ்வாறு தகவல் வந்தால் விநியோகம செய்கிற கடைக்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற முறையில் உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் இப்பேர்ப்பட்ட தவறுகள் இந்த அரசில் நடைபெறாது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இன்னும் திறமையான முறையில் இந்தத் துறை செயல்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் அவர்கள் கொடுத்த ஆலோசனைகளாக அவற்றை எல்லாம் ஏற்றுக் கொண்டு எந்தக் கட்சியின் சார்பில் வந்த ஆலோசனையாக இருந்தாலும் இந்தத் துறை திறமையான முறையில், நாட்டு மக்களுக்கு நல்ல முறையில் பணி செய்யக்கூடிய அளவில் அவர்கள் சொன்ன ஆலோசனைகளை அப்போதைக்கப்போது அரசு பரிசீலனை செய்து செயல் படுத்தும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வகை மூலதனச் செலவு மானியக் கோரிக்கையின் மீது வெட்டுத் தீர்மானங்கள் அதிகமாகக் கொடுக்கப்படவில்லை. திரு. ஜேம்ஸ் அவர்கள் மட்டும் கொள்கை அடிப்படையில் விவாதிக்க வேண்டுமென்ற ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மானியக் கோரிக்கையில் நான் அரசுத் தரப்பில் கொடுத்திருக்கும் முன்னுரையை எல்லா உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டார்கள் என்று கருதுகிறேன். ஒருசில குறைகளை மாத்திரம் மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். மீன் வளத்துறையில் என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். காவலர் இல்லங்கள் கட்டுவதில் இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய காரியங்களைப் பற்றியெல்லாம் மாண்புமிகு அரங்கநாதன் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை எல்லாம் நிச்சயமாக அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளும். அதற்காக நடவடிக்கைகளை இந்த அரசு நிச்சயமாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்து இந்த இரண்டு மானியக் கோரிக்கைகள் மீதும் உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்ப பெற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 16,000 நியாய விலைக் கடைகள் ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் ஒரு கடை வீதம் ஏற்படுத்தப்படும் என்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டு அந்த உரையின்மீது விவாதம் நடந்தபோது—இன்னும் ஓராயிரம் கடைகளையும் அதோடு இணைத்துக் கொள்ளவேண்டும். 17,000 ரெவின்யூ கிராமங்கள் இருக்கின்றன, அந்த 17,000 கிராமங்களையும் சேர்த்து அந்த ரெவின்யூ வில்லேஜ்களில் நியாய விலைக் கடைகள் வரும் என்ற நம்பிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தக் கடைகளை அமைப்பதில் இருக்கும் சிக்கல்களைச் சொன்னபோது அதுபற்றி அரசாங்க அதிகாரிகளைக் கலந்து முடிவு செய்யப்படவிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கடைகள் எப்போது ஆரம்பமாகும் ?

[பிற்பகல் 2–00]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஆளுநர் உரையின் மீதான விவாதத்தின் போது கருத்துக்களைத் தெரிவிக்கிறபோது இந்தக் கடைகளைத் திறப்பதற்கு பேக்கருக்கு இவ்வளவு பணம் தேவை, பில் கிளார்க்கு இவ்வளவு தேவை, வாடகை இவ்வளவு தேவை என்றெல்லாம் கணக்குகளைச் சொன்னார்கள். அரசாங்கம் அந்தக் கணக்குகளையெல்





ாம் பார்த்து செலவைக் குறைத்து இதை சிக்கனமான முறையிலே எப்படிச் செய்வது என்று பல்வேறு கோணங்களிலே ஆராய்ச்சி செய்து வருகிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மாகன் தாரியா அவர்கள்கூட வேண்டிய நிதி உதவி தருவதாகவும் எங்களுக்கு உறுதியளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான் கான் ; இந்தத் திட்டங்களை அறிவித்துவிட்ட பிறகு நிதிநிலைமையைப் பார்க்கிறார்களா ? அல்லது நிதிநிலைமையைத் தெரிந்துக்கொண்டதற்குப் பிறகு இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : உறுப்பினருக்கு உணவு தேவையா ? அல்லது எப்படி பரிமாறுவது எப்படிச் செய்வது என்ற விளக்கம் தேவையா ?

திரு. ஏ. ரகுமான் கான் : திட்டத்தை அறிவித்ததற்குப் பிறகு ஆராய்ச்சியா ? ஆராய்ச்சிக்குப் பிறகு திட்ட அறிவிப்பா ?

திரு. மு. கருணாநிதி ;—தலைவர் அவர்களே, 16 ஆயிரம் கடைகள் எப்போது திறக்கப்படும் என்கின்ற ஆவலின் காரணமாகத்தான் கேட்கிறோம். வேறு அல்ல. முதலமைச்சர் அவர்கள் மத்திய நிதி உதவி கிடைக்கும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்தார்கள். அந்த முறையில் அவர்கள் எடுத்த முயற்சிக்கும் வாங்குவதாகச் சொன்ன நம்பிக்கையான அந்த வார்த்தைக்கும் நான் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இந்த 16 ஆயிரம் கடைகள் எப்பொழுது முதல் தொடங்கப்படும், பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதைத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஏறத்தாழ 7 ஆண்டுகாலம் முதலமைச்சராக இருந்தவர்கள் இந்தத் திட்டங்களை எந்த எந்தச் சூழ்நிலையில் எப்படி ஆரம்பிக்கமுடியும் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். இருந்தாலும் அவர்களுடைய கேள்விக்குப் பதில் சொல்கின்ற முறையிலே ஒன்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டசபைக் கூட்டம் முடிந்து நாங்கள் ஆங்காங்கு அதிகாரிகளைச் சந்தித்த பிறகு உடனடியாகப் பணிகளை மேற்கொள்ள இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் திர்மானம் வலியுறுத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சு. பாலன் : To discuss Policy '..........'

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெட்டுத் தீர்மானத்தைப் படிக்க வேண்டாம், வலியுறுத்துகிறீர்களா இல்லையா என்பதை மட்டும் சொல்லுங்கள்.

திரு. சு. பாலன் : வலியுறுத்துகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், வெட்டுத் தீர்மானம் 'To discuss Policy' என்று இருக்கிறது. வெட்டுத் தீர்மானத்தைப் படிக்கிறார் வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேர்வைத் துணைத் தலைவர்: டிஸ்கஷன் ஓவராகிவிட்டது. விவாதத்தின்போது தான் சொல்ல வேண்டும். வாக்கெடுப்பின்போது படிக்கக் கூடாது. இப்போது வலியுறுத்துகிறாரா இல்லையா என்பதை மட்டிலும்தான் சொல்ல வேண்டும்.

திரு. சு. பாலன் : வலியுறுத்துகிறேன்.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

திருவாளர்கள் ரா. உமாநாத் , எ. சுவாமிதாஸ், ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திரு. மு. அம்பிகாபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் பேரவையின் அனுமதியுடன் திரும்ப பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேளவி :

' நிதிக் கோரிக்கை எண். 35—உணவுப் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,03, 95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.





திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:— "நிதிக் கோரிக்கை எண். 56 பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,61,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-05 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 18. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

33. Notification issued in G.O.Ms.No.1110, Commercial Taxes and Religious Endowments, dated 7th July 1977 in regard to exemption of Sri Ramakrishna Math, Mylapore, Madras, from the operation of clause (iii) of sub-section (2) of section 20 of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959). [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959].

34. Notification issued in G.O. Ms. No. 1965, Home (Transport I), dated 11th July 1977 in regard to concessional rate of tax payable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974) in respect of Goods Vehicle TMW 1960, belonging to the Ramakrishna Mission Students' Home, Madras [Laid on the Table of the House under section 26(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974].

35. The Fourth Annual Report of the Tamil Nadu Agricultural University, for the year 1974–75. [Laid on the Table of the House under section 49(3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971].

36. The Fifth Annual Report of the Tamil Nadu Agricultural University, for the year 1975–76. [Laid on the Table of the House under section 49(3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971].

B. *Reports, Notifications and other papers.*

*43. Financial Supplement to Demand under Community Development, 1977–78. (Tamil).

**44. Policy Note on Demand No. 28—Community Development and Panchayat Development, 1977–78 (English and Tamil).

***45. Financial Supplement to Demand under Community Development, 1977–78 (English).

****46. Policy Note on Demand No. 56—Miscellaneous Capital Outlay (English and Tamil).

---

**Despatched to Members on 7th August 1977.

***Laid on the Table of the House on 8th August 1977.

****Circulated to Members on 8th August 1977.



## இணைப்பு

[45-ம் பக்கத்துள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண். 35—உணவுப் பொருள் வழங்கல்.

தமிழகத்தில் உணவு நிலைமை பற்றிய குறிப்பு.

### I. அரிசி நிலைமை.

தமிழகத்தில் அரிசி நிலைமை இப்பொழுது மிகவும் திருப்திகரமாக உள்ளது. வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகப் புழங்குகிறது; விலைகளும் நிதானமாகவே உள்ளன. தமிழ்நாடு தனி உணவு மண்டலமாக இருந்த நிலைமை மாறி, 1976 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் நாள் முதற்கொண்டு ஆந்திரா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களும், பாண்டிச்சேரி பகுதிகளும் தமிழகமும், உள்ளடங்கிய தென் உணவு மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விரிவான உணவு மண்டலத்திற்குள் அரிசி போக்குவரத்துத் தடை எதும் இல்லை. ஆயினும் நெல்லைப் பொறுத்த வரையில், ஒரு மாநிலத்தை விட்டு மற்றொரு மாநிலத்திற்கு நெல்லை எடுத்துச் செல்லக்கூடாது என்ற தடை இன்னும் தொடர்ந்து இருந்து வருகிறது. விரிவான தென் உணவு மண்டலம் அமைக்கப்பட்டதையொட்டி, 1976 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் நாள் முதற் கொண்டு தமிழகத்தில் மாவட்டங்களிலேயே நெல், அரிசி போக்குவரத்து மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் அனைத்தும், கேரளாவை ஒட்டிய சில எல்லையோரப் பகுதிகள் நீங்கலாக, மற்ற பகுதிகளில் நீக்கப்பட்டு விட்டன. இதன் காரணமாக, உபரி மாவட்டங்களிலிருந்து பற்றுக்குறை மாவட்டங்களுக்கு நெல் அரசி போக்குவரத்துக்கு வழி ஏற்பட்டுள்ளது. மாவட்ட கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதையொட்டி, உபரி மாவட்டங்களில் விவசாயிகளுக்குக் கூடுதலான விலை கிடைக்க வாய்ப்பேற்பட்டுள்ளது. பற்றுக்குறை மாவட்டங்களில் முன்பு இருந்த விலைகளை விட இப்பொழுது விலைகள் குறைந்துள்ளன. மாவட்டங்களிடையே போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் இருந்த நேரத்தில், உபரி மாவட்டங்களில் இருந்த குறைவான விலைக்கும் பற்றுக்குறை மாவட்டங்களில் இருந்த மிக உயர்வான விலைக்கும் இடையே இருந்த கணிசமான இடைவெளி, இப்பொழுது குறைக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் விலைகள் ஏறக்குறைய ஒரு சீராக உள்ளன. மேலும், தென் உணவு மண்டலம் விரிவாக்கப்பட்டதன் பயனாக, குறிப்பாக

[1977 ஆகஸ்ட் 9

## தமிழகத்தில் உணவு நிலைமை பற்றிய குறிப்பு.

ஆந்திர மாநிலத்திலிருந்து, அரிசி தமிழகத்திற்கு வர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 1976 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் நாள் முதற்கொண்டு, இன்று வரை, ஒரு லட்சம் டன்களுக்கு மேல் அரிசி , தமிழகத்திற்கு ஆந்திர, கர்னாடக மாநிலங்களிலிருந்து வந்துள்ளது. இவ்வாறு வெளி மாநிலங்களிலிருந்து அரிசி வரத்துக்கு வழி செய்துள்ளதாலும், மாவட்டங்களிடையே இருந்த தடைகளையெல்லாம் நீக்கி விட்டதாலும், தமிழகத்தில் இப்பொழுது தாராளமாக அரிசி கிடைப்பதுடன், விலைகளும் நிதானமாகவே உள்ளன. சாதாரணமாக சம்பா அறுவடை முடிந்து, குறுவை அறுவடை வருவதற்கு இடையிலுள்ள ஜூன் முதல் செப்டம்பர் வரை வெளிச் சந்தையில் அரிசியின் விலைகள் உயர்வது வழக்கம். ஆனால் இந்த ஆண்டில் ஜூலை மாத இறுதிவரை கூட, விலைகளில் குறிப்பிடத்தக்க அளவு உயர்வு ஏற்படவில்லை என்பது நமக்கு மன நிறைவு அளிக்கக் கூடியதாய் உள்ளது.

2. பொது விநியோகத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு இப்பொழுது கணிசமான கையிருப்பு அரசின் வசம் உள்ளது. 1976-77 ஆம் ஆண்டில் குறுவை சாகுபடி ஓரளவு பாதிக்கப்பட்டதாலும், தாளடி சாகுபடி பெரிதும் பாதிக்கப்பட்டதாலும், நெல் உற்பத்தியில் ஏறக்குறைய 8 லட்சம் டன்கள் துண்டு விழும் என்று நாம் அஞ்சினோம். இதை ஈடு செய்வதற்கு, முன் எச்சரிக்கையாக, மத்திய அரசு நமக்கு மே மாதம் முதற்கொண்டு பொது விநியோகத்திற்கு அரிசி வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தோம். மத்திய அரசும் மே முதல் நான்கு மாதங்களுக்கு மாதம் 50,000 டன் அரிசியை ஒதுக்கீடு செய்துள்ளது. மாநிலத்தின் தேவையை உணர்ந்து, பொது விநியோக முறையைப் பலப்படுத்த, மத்திய அரசு மத்திய கையிருப்புத் தொகுப்பிலிருந்து அரிசி அளிக்க முன் வந்ததற்கு தமிழகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

3. ஆனால் இதில் உள்ள ஒரு சிக்கலை நாம் மனதிற்கொள்ள வேண்டும். நம்முடைய மாநிலத்தில் பெரிதும் புழங்கப்படுவது புழுங்கல் அரிசி. பொது விநியோக முறையின் கீழ் நமக்குத் தேவைப்படுவதிலும் மிகப் பெரும் பகுதி, புழுங்கல் அரிசிதான். ஆனால், மத்திய அரசிடம் தரமான புழுங்கல் அரிசி போதிய அளவு கையிருப்பில் இல்லை. அவர்கள் சிரம



1977 ஆகஸ்ட் 9]

மின்றி பச்சரிசி தர முடியும். ஆனால் பச்சரிசிக்கு தமிழகத்தில் தேவை மிகவும் குறைவு. ஆகவே இந்த ஒதுக்கீடு முழுவதையும் தரமான புழுங்கல் அரிசியாகவே தரவேண்டும், அல்லது நெல்லாகத் தரவேண்டும் என்று நாம் மத்திய அரசிடம் வற்புறுத்தி வருகின்றோம். இம் முயற்சி பயன் அளிக்கும் என்று நம்புகிறோம்.

## II. பொது விநியோகம்.

4. தமிழகம் முழுவதும் ஏறக்குறைய 103 இலட்சம் குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. சுமார் 9,290 நியாய விலைக் கடைகள் பொது விநியோகப் பொறுப்பை ஏற்று நடத்துகின்றன. இவற்றில் சுமார் 6,500 கூட்டுறவுச் சங்கங்களாலும், சுமார் 830 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினாலும், எஞ்சியவை ஊராட்சி குழுக்களாலும், சில இடங்களில் கிராமக் குழுக்களாலும் நடத்தப்படுகின்றன. நீலகிரிப் பகுதியில் 4 கடைகள் மட்டுமே தனியார் வியாபாரிகளால் நடத்தப்படுகின்றன. பொது விநியோக முறையின் கீழ் நடத்தப்படும் கடைகள் அனைத்தும், தனியார் வியாபாரிகளிடம் ஒப்படைக்கப்படாமல், பொதுத் துறையில் நடத்தப்படுவது; பொது நலனுக்குகந்த சிறந்த தொரு சாதனையாகும்.

5. சென்னை நகரத்திலும், கோவை நகரத்திலும், அவற்றின் புறநகர்ப் பகுதிகளிலும், நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தாலுகாவிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தாலுகாவிலும் கல்குளம் தாலுகாவில் 14 கிராமங்களிலும் குடும்பக் கார்டுகளின் பேரில் அரிசி வழங்கும் பொறுப்பை நேரடியாக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. சென்னை, கோவை, நகரம், அவற்றின் புறநகரப் பகுதிகள் ஆகிய இடங்களில், வயது வந்தவர் ஒவ்வொருவருக்கும் மாதம் 6 கிலோ அரிசியும், குழந்தைக்கு 4 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. குறைந்த பட்சம் ஒரு குடும்பத்திற்கு சென்னையில் 30 கிலோ அரிசியும், கோவையில் 24 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்லையோரப் பகுதியில் வயது வந்தோர் ஒவ்வொருவருக்கும் மாதம் 8 கிலோ அரிசியும், குழந்தைக்கு 4 கிலோ அரிசியும், குறைந்த பட்சம் ஒரு குடும்பத்திற்கு மாதம் 30 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. நீலகிரி

மாவட்டத்தில் கூடலூர் தாலுகாவில் வயது வந்தோர் ஒவ்வொருக்கும் , 12 கிலோ அரிசியும் குழந்தைக்கு கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. இப்பகுதியில் குடும்பத்துக்குக் குறைந்த பட்சம், மாதம் 24 கிலோ அரிசி வழங்கப்படுகின்றது. மாநிலத்தின் பிற பகுதிகளில் நிரந்தரமாக அரிசி விநியோகப் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ளாத போதிலும், தட்டுப்பாடு ஏற்பட்டாலோ, வெளிச் சந்தையில் விலைகள் உயர்ந்தாலோ, பொது விநியோக முறையின் கீழ் அரிசி விநியோகத்தை விரிவாக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளிலும் மாதத்திற்கு ஒரு குடும்பத்திற்கு 24 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

6. வாங்கும் சக்தி அதிகமாக இல்லாத மக்கள் வசதிக்காக அவர்கள் அரிசியை மொத்தமாக வாங்காமல் தவணையின் கீழ் பொது விநியோகக் கடைகளில் வாங்கிக் கொள்ளலாமென்று வசதி செய்யப்பட்டுள்ளது. அது போலவே கடலெண்ணெயை 250 கிராமுக்குக் குறையாமல், பல தடவை வாங்கிக் கொள்ளலாமென்று அண்மையில் வசதி செய்யப்பட்டுள்ளது

7. 1976-ஆம் ஆண்டு முழுவதிலும், பொது விநியோக முறையின்கீழ், 6.23 இலட்சம் டன்கள் அரிசி வழங்கப்பட்டது. 1977-ஆம் ஆண்டில் ஜூலை மாதம் இறுதி வரை 2.46 இலட்சம் டன்கள் அரிசி வழங்கப்பட்டுள்ளது. 1977 சனவரி மாதத்தில் பொது விநியோகத்தின்கீழ் 35 ஆயிரம் டன்கள், பிப்ரவரி மாதத்தில் 42 ஆயிரம் டன்கள், மார்ச்சு மாதத்தில் 43 ஆயிரம் டன்கள், ஏப்ரல் மாதத்தில் 33 ஆயிரம் டன்கள், மே மாதத்தில் 31 ஆயிரம் டன்கள், ஜூன் மாதத்தில் 29 ஆயிரம் டன்கள், ஜூலை மாதத்தில் 33 ஆயிரம் டன்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் 40 ஆயிரம் டன்கள் பொது விநியோகத்திற்குத் தேவைப்படும் என்று கணக்கிட்டு, உணவு வரவு-செலவுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் பொது விநியோகத்தை நடத்துவதற்கு நம்மிடம் போதுமான அரிசி கையிருப்பில் உள்ளது.

8. சென்ற ஆண்டு அக்டோபர் வரை இருந்த நிலைமைக்கும் இப்போதுள்ள நிலைமைக்கும் இடையேயுள்ள முக்கிய வேறுபாடு ஒன்றை நாம் மனதிற்கொள்ள வேண்டும். சென்ற ஆண்டு நாம் ஒவ்வொரு மாவட்டத்தையும் ஒரு தனித் தொகுதியாகப்



பாவித்து, ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு அரிசியோ நெல்லோ எடுத்துச் செல்லக்கூடாதென்று தடை விதித்திருந்தோம். அந்த சூழ்நிலையில், குறிப்பாகப் பற்றுக்குறை மாவட்டங்களில், பொது விநியோக முறையை அரசு தீவிரமாகச் செயல்படுத்த வேண்டியிருந்தது. இந்த ஆண்டிலோ மாவட்டங்களுக்கிடையே நெல் அரிசி நடமாட்டத்தின் மீதிருந்த தடைகள் எல்லாம் நீக்கப்பட்டுவிட்டன. கேரள எல்லையோரப் பகுதிகளைத் தவிர மற்ற பகுதிகளில், அரிசியும் நெல்லும் மாநிலம் முழுவதும் தாராளமாகப் புழங்கலாம். இச் சூழ்நிலையில், வெளிச் சந்தையில் தாராளமாக அரிசி கிடைப்பதையொட்டி, பொது விநியோக முறையின்கீழ் அரிசி விநியோகத்துக்கான தேவை படிப்படியாகக் குறைந்துவரும் என்று எதிர்பார்க்கின்றோம். ஏதேனும் சில இடங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டாலோ, விலைவாசிகள் மிதமிஞ்சி உயர்ந்தாலோ, அங்கு பொது விநியோக முறையைச் செயல்படுத்துவதின் மூலம் நிலைமையைச் சீராக்குவதே நமது நோக்கமாக இருக்கும். இவ்வாறு பொது விநியோக முறையைத் தொடர்ந்து நடத்தித் தேவைக்கேற்ப அதை விரிவாக்குவதின் மூலம்தான் வெளிச் சந்தை விலைவாசிகளை நாம் கட்டுப்படுத்த முடியும். இந்த நோக்கத்தை அரசு நிறைவேற்ற வேண்டுமானால், அரசின் கைவசம் எப்பொழுதும் கணிசமான அளவு நெல் இருக்க வேண்டும். ஆகவே கொள்முதலைத் தொடர்ந்து நடத்துவது அவசியமாகிறது.

## III கொள்முதல்.

9. 1965-ம் ஆண்டு முதல் 1976-ம் ஆண்டு வரை அரசு கொள்முதல் செய்த அளவும், விநியோகம் செய்யப்பட்ட அளவும் பின் வருமாறு:—

| பசலி ஆண்டு. ஜூலை முதல் ஜூன் வரை. | | | கொள்முதல் செய்யப்பட்ட அளவு (இலட்சம் அரிசி டன்களில்). | பொது விநியோகம் செய்யப்பட்ட அரிசியின் அளவு (இலட்சம் டன்களில்.) |
|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) |
| 1965-66 | .. | .. | 8.06 | 7·01 |
| 1966-67 | .. | .. | 7·02 | 5·85 |
| 1967-68 | .. | .. | 8·10 | 7·15 |

[1977 ஆகஸ்ட் 9

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 1968-69 .. .. | 7·13 | 6·43 |
| 1969-70 .. .. | 4·70 | 4·37 |
| 1970-71 .. .. | 0·95 | 1·60 |
| 1971-72 .. .. | 1·61 | 0·79 |
| 1972-73 .. .. | 1·29 | 0·83 |
| 1973-74 .. .. | 2·85 | 1·30 |
| 1974-75 .. .. | 4·19 | 4·64 |
| 1975-76 .. .. | 8·90 | 3·94 |
| 1976-77 .. .. | 1·58 | 6·71 |

10. 1965-ம் ஆண்டு முதல் 1969-ம் ஆண்டு வரை தஞ்சை மாவட்டம் நீங்கலாக மாநிலம் முழுவதும் விவசாயிகளிடமிருந்து லெவியின்கீழ் கொள்முதல் செய்யப்பட்டது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை லெவி விதிக்காமல் உபரி முழுவதும் வாங்கப்பட்டது. 1970-ம் ஆண்டு முதல் 1974-ம் ஆண்டு சம்பாப்பட்டம் முடிய, சம்பாப்பருவத்தில் மட்டும் கொள்முதல் செய்யப்பட்டு, குறுவையின்போது கொள்முதல் செய்யப்படவில்லை. இவ்வாறு சம்பாவில் செய்த கொள்முதல், விவசாயிகளிடமிருந்து லெவி மூலம் நேரடியாகச் செய்யப்படாமல், வர்த்தக லெவி முறையின்கீழ் செய்யப்பட்டது. அந்த ஆண்டுகளில் குறுவையின்போது கொள்முதல் நடக்காவிடினும், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் விலைவாசிகளின் சரிவினால் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படக்கூடாது என்ற கவலையில், விவசாயிகள் தாமாக முன் வந்து அளித்த நெல்லை அரசு, தான் நிர்ணயித்த விலைகளில், வாங்கிக் கொண்டது. 1974-ம் ஆண்டு வர்த்தக லெவி முறை கைவிடப்பட்டு, விவசாயிகளிடமிருந்து லெவி முறையின்கீழ் கொள்முதல் செய்யும் முறை மீண்டும் கொண்டுவரப்பட்டது. தஞ்சையைத் தவிர மற்ற மாவட்டங்களில் சட்டப்பூர்வமான லெவி விதிக்கப்பட்டது. தஞ்சையைப் பொறுத்தவரையில் உபரி நெல் முழுவதும் கொள்முதல் செய்யப்பட்டது.

11. 1975 சம்பாப் பருவத்தின்போது நாம் மாநிலம் முழுவதும் விவசாயிகள்மீது சட்டபூர்வமான லெவி விதித்து கொள்முதல் செய்து வந்தோம். 1975 குறுவையின் போதும், 1976 சம்பாவின்



1977 ஆகஸ்ட் 9]

போதும் சட்டபூர்வமான லெவி விதிக்காமல், விவசாயிகளிடமிருந்து உபரி நெல் முழுவதையும் கொள்முதல் செய்தோம். அவ்வாறு செய்தபோது, ஒவ்வொரு மாவட்டத்தையும் ஒரு தனித் தொகுதியாகப் பாவித்து, மாவட்டத்திற்கு வெளியே அரிசியை எடுத்துக் செல்லக்கூடாதென்று தடை விதித்து, தனியார் வியாபாரிகள் மொத்த வியாபாரம் செய்வதையும் தடுத்து, உபரி நெல் முழுவதையும் அரசே கொள்முதல் செய்தது. 1976-க்குப் பின்பு மாவட்டங்களுக்கிடையே கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதையொட்டியும், நம்மிடம் மிகக் கணிசமாக கையிருப்பு இருந்த காரணத்தினாலும், கொள்முதல் முறையில் ஒரு மாற்றம் செய்து நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யாமல், வர்த்தக லெவி முறை ஒன்றை மேற்கொண்டோம். இந்த முறைதான் இப்போது அமுலில் உள்ளது. இம்முறையின்கீழ், மொத்த வியாபாரிகள் தாங்கள் வாங்கும் நெல்லிலோ அரிசியிலோ 40 சதவீதத்தை அரசு நிர்ணயித்த விலைகளில் அரசுக்குக் கொடுத்துவிடவேண்டும். இந்த வர்த்தக லெவி முறையின்கீழ், 1976 குறுவையின்போது சுமார் 33 ஆயிரம் டன்கள் தான் கொள்முதல் செய்ய முடிந்தது. 1977 சம்பாவில் ஜூலை இறுதிவரை சுமார் 1.31 இலட்சம் டன்கள் செய்துள்ளோம்.

12. பொது விநியோக முறையைத் தொடர்ந்து நடத்துவதற்கும், கணிசமாகச் சேமிப்பைத் திரட்டி வைப்பதற்கும், கொள்முதலைத் தொடர்ந்து நடத்துவது அவசியம். வர்த்தக லெவி முறையின்கீழ், எந்த ஆண்டிலும் இரண்டு இலட்சம் டன்களுக்கு மேல் கொள்முதல் செய்ய இயன்றதில்லை. விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்துவந்தபோது குறைந்தபட்சம் 5 இலட்சம் டன்களும் 1975-76-ம் ஆண்டில் 8.9 இலட்சம் டன்களும் கொள்முதல் செய்ய இயன்றது. மேலும் வர்த்தக லெவி முறையில், லெவி கொடுக்கும் பொறுப்பை எல்லா வர்த்தகர்களும், நியாய உணர்வுடனும் சமூகப் பொறுப்புணர்வுடனும் நிறைவேற்றி வருகிறார்கள் என்ற நம்பிக்கை—எந்த ஆண்டு அனுபவத்திலிருந்தும் ஏற்படவில்லை. இவற்றை எல்லாம் மனதிற்கொண்டு, வர்த்தக லெவி முறையைத் தொடர்ந்து நடத்துவதா, அல்லது பெரும்பாலான ஆண்டுகளில் நாம் கொள்முதல் செய்து வந்தது போலவே, விவசாயிகளிடமிருந்து

நேரடியாகக் கொள்முதல் செய்வதா என்ற முடிவை அரசு வெகு விரைவில் எடுக்க வேண்டியிருக்கும். நிலைமைகளை உன்னிப்பாக ஆராய்ந்து, பொது நலனுக்கு உகந்த முடிவை அரசு மேற் கொள்ளும்.

13. நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் முடிவை அரசு மேற்கொண்டால், விவசாயிகளுக்கு இடர்ப்பாடு எதுவும் ஏற்படாமல் கொள்முதல் முறை அமைய வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு ஆர்வம் உண்டு. லெவி விகிதங்களும், உற்பத்திக்கேற்ப, நியாயமான முறையில் அமைக்கப்படும். லெவிக்கு நெல் அளந்த பின்பு, எஞ்சிய உபரி நெல்லை, விவசாயிகள் வெளிச் சந்தையில் விற்றுக் கொள்ள உரிமை அளிக்கப்படும். லெவி முறையைச் செயல்படுத்தியபோது, பெரிய விவசாயிகள் நடைமுறையில் லெவி கொடுக்காமல் தட்டிக் கழித்து விட்டனர் என்றும், சிறு விவசாயிகள் கடுமையான நிர்ப்பந்தத்திற்கு ஆளாயினர் என்றும், சென்ற ஆண்டுகளில் பரவலாக இருந்த குறைபாட்டிற்கு இடம் தராமல், லெவி முறையைச் செயல்படுத்துவதில் இந்த அரசு மிகவும் விழிப் பாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கும்.

## IV. கொள்முதல் விலை.

சென்ற பத்து ஆண்டுகளில் ஒரு குவிண்டால் நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த கொள்முதல் விலை விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| காலம். | மிகச் சன்ன ரகம். | சன்ன ரகம். | நடுத்தர ரகம். | மோட்டா ரகம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 8—8—66 முதல் 9—8—67 வரை. | .. | 45 | 42 | 40 |
| 10—8—67 முதல் 2—8—69 வரை. | .. | 48 | 45 | 43 |
| 3—8—69 முதல் 30—9—70 வரை. | .. | 50 | 47 | 45 |





| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 1—10—70 முதல் 14—10—71 வரை. | .. | 51 | 48 | 46 |
| 15—10—71 முதல் 13—10—72 வரை. | .. | 52 | 49 | 46 |
| 14—10—72 முதல் 24—5—73 வரை. | 56 | 54 | 51 | 47 |
| 25—5—73 முதல் 18—8—73 வரை. | 58 | 56 | 53 | 49 |
| 19—8—73 முதல் 19—12—73 வரை. | 68 | 66 | 63 | 59 |
| 20—12—73 முதல் 24—9—74 வரை. | 78 | 75 | 70 | 66 |

25—9—1974 முதற்கொண்டு 15—12—1974 வரை தஞ்சை மாவட்டத்தில் மோட்டா ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 90, நடுத்தர ரகத்துக்கு ரூ. 95, சன்ன ரகத்துக்கு ரூ. 100, மிகச் சன்ன ரகத்துக்கு ரூ. 105 என்றும், மற்ற மாவட்டங்களில் இதே நெல் ரகங்களுக்கு முறையே ரூ. 85, 90, 95, 98 என்றும் கொள் முதல் விலைகள் நிர்ணயிக்கப்பட்டன. 16—12—1974 முதல் 3—9—1975 வரை மத்திய அரசு நிர்ணயித்திருந்த ரூ. 74, 78, 83, 86 என்ற விலைகளுக்கு மேலாக, போக்குவரத்து போனஸ் ஆக குவிண்டாலுக்கு ரூ. 5-ம், ஊக்குவிப்பு போனசாக குவிண் டாலுக்கு ரூ. 10-ம் ஆக மொத்தம் குவிண்டாலுக்கு ரூ. 15 போனஸ் கூடுதலாக வழங்கப்பட்டது. 3—9—1975 முதற் கொண்டு 10—3—1976 வரை, இந்த போனசைச் சேர்த்து தஞ்சையில் குவிண்டால் நெல்லுக்கு ரூ. 90, 95, 100, 105 என்ற விலைகளும், மற்ற மாவட்டங்களில் ரூ. 89, 93, 98, 101 என்ற விலைகளும் நிர்ணயிக்கப்பட்டன. 1976 ஆம் ஆண்டு சம்பாப் பருவத்தில் நிர்ணயிக்கப்பட்டிருந்த கொள் முதல் இலக்கு நிறை வேற்றப்பட்டதோடு அல்லாமல் மிஞ்சப்பட்ட காரணத்தை யொட்டி, 11-3-1976 முதற்கொண்டு தீவிரக் கொள்முதல்

நிறுத்தப்பட்டது. அதன் பின்பு மத்திய அரசு நிர்ணயித்திருந்த ரூ. 74,78,83,86 என்ற கொள்முதல் விலைகளில் விவசாயிகள் தாமாகக் கொள்முதலுக்கு அளிக்க முன் வரும் நெல்லை மட்டும் வாங்கிக் கொள்ளும் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. 1976 ஆம் ஆண்டு அக்டோபர் முதற் கொண்டு தென் உணவு மண்டலம் விரிவாக்கப்பட்டதையொட்டியும், மாவட்டங்களிடையே நெல் போக்கு வரத்து மீது இருந்த தடைகள் நீக்கப்பட்டதையொட்டியும், கொள்முதல் முறையில் மாற்றம் செய்யப்பட்டு, நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதற்குப் பதிலாக வர்த்தக லெவி முறை கொண்டு வரப்பட்டது. இந்த லெவி திட்டத்தின் கீழ் வர்த்தகர்கள் தரும் நெல்லுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள ரூ. 74, 78, 83, 86 என்ற விலைகள் தரப்படுகின்றன. இந்த நிலை தான் இப்பொழுதும் நீடித்து வருகின்றது.

விவசாயிகளுக்கு நியாயமான கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படவேண்டும் என்பதில் இந்த அரசுக்கு மிகுந்த நாட்டமுண்டு. கொள்முதல் விலைகளை நிர்ணயிக்கும் உரிமை மாநில அரசிடம் இல்லை. அனைந்திந்திய விவசாய விளை பொருள்கள் ஆணைக்குழு செய்யும் பரிந்துரைகளின் பேரில், மத்திய அரசு, நாடு முழுவதற்கும் பொதுவாகப் பொருந்தக்கூடிய விலைகளை நிர்ணயிக்கின்றது. இந்த விலைகளைத்தான் மாநில அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த விலைகளுக்கு மேலாக, அந்தந்த மாநில நிலைமைக்கு ஏற்ப, ஊக்குவிப்பு போனஸ் அளிப்பதற்கும், மாநில அரசுக்கு உரிமை இல்லையென்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது. 1975 ஆம் ஆண்டிலும், 1976 ஆம் ஆண்டில் மார்ச்சு மாதம் 10 ஆம் தேதி வரையிலும், மத்திய அரசு நிர்ணயித்த விலைகளுக்கு மேலாக குவிண்டால் நெல்லுக்கு ரூ. 15 என்று போனஸ் தொகையாக அளித்து வந்தது, ஆட்சேபிக்கப்பட்டு, அதன் பயனாக எழுந்துள்ள பல சிக்கல்களுக்கு இன்னும் இறுதியாகத் தீர்வு காணப்படவில்லை. இவற்றையெல்லாம் மனதிற்கொண்டும், விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டும், இப்போதுள்ள கொள்முதல் விலைகளை விட அதிகமான விலைகளை மத்திய அரசு நிர்ணயிக்க வேண்டுமென்று மாநில அரசு உரிய நேரத்தில் வற்புறுத்தும். அண்மையில் கோதுமைக்கு விலை நிர்ணயிக்கப்பட்டபோது முன்பிருந்த கொள்முதல் விலையை விட, குவிண்டா





லுக்கு 5 ரூபாய் உயர்த்தி மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளதும் நம்முடைய கருத்துக்கு வலுவூட்டுவதாக அமைகிறது. சாதாரணமாக, நெல் கொள்முதல் விலைகள் மத்திய அரசினால் அக்டோபர் மாதத்தில் நிர்ணயம் செய்யப்படும். அதறகு முன மாநில அரசுகளைக் கலந்து இப்பிரச்னையை விவாதிக்கும். அந்த நேரத்தில், தமிழக விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நெல் கொள்முதல் விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று இந்த அரசு தன்னுடைய முழுச் செல்வாக்கையும் பயன்படுத்தி வற்புறுத்தும் என்று உறுதி கூறுவதற்கு மேலாக, இப்பிரச்னை குறித்து இக்கட்டத்தில் அதிகம் கூற நான் விரும்பவில்லை.

### அரிசி விநியோக விலை

16. நெல் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்ற நியாயமான கோரிக்கை ஒருபுறம் வற்புறுத்தப்படுகின்ற நேரத்தில், பொது மக்களுக்குப் பொது விநியோக முறையின்கீழ் விற்கப்படும் அரிசியின் விலை குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

17. கொள்முதல் தீவிரமாக நடக்கும்போது நாம் நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்கிறோம். விவசாயிகளின் வசதியை முன்னிட்டு ஒவ்வொரு பெரிய கிராமத்திலும் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் திறக்கின்றோம். இந்த நிலையங்களை இயக்குவதற்கு நிர்வாகச் செலவு ஏற்படுகின்றது. ஒவ்வொரு நிலையத்திலும் எடை போடுவதற்கு தராசு, நெல்லின் ஈரத்தைப் பரிசோதிப்பதற்குக் கருவிகள், ஆகியவற்றை வாங்கி வைக்க வேண்டும். பல்வேறு மாவட்டங்களில் பரவிக் கிடக்கும் பல்லாயிரக்கணக்கான கிராமங்களில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் நெல்லை, முதலில் கிட்டங்கிகளுக்கு எடுத்துச் சென்று, பின்னர் ஆலைகள் அதிகம் உள்ள மாவட்டங்களுக்கு அரைவைக்காக எடுத்துச் செல்ல வேண்டி இருக்கின்றது. நம்முடைய மாநிலத்தில் அரைவை ஆலைகள் ஒரு சில மாவட்டங்களில் தான் குவிந்து கிடக்கின்றன. எந்த மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்படுகின்றதோ, அந்த மாவட்டத்திலேயே, நெல்லை அரைவை செய்வதற்குப் போதிய வசதிகள் இல்லை. தஞ்சாவூரில் ஆலைகள் ஏராளமாக இருந்த போதிலும், அவை வழக்கமாக குறுவை நெல்லை அரைப்பதில்லை. ஆகவே, தஞ்சாவூரில் கொள்முதல் ஆகும் குறுவையை மற்ற

மாவட்டங்களுக்கு எடுத்துச் சென்று அரைக்க வேண்டி உள்ளது. மேலும், தஞ்சையில் குறுவை அறுவடை மழை நேரத்தில் நடப்பதால், ஈர நெல் முளைத்து விடுவதற்கு முன் தஞ்சை மாவட்டத்திலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். இவ்வாறு குறுகிய காலத்தில் ஆயிரக்கணக்கான டன்கள் நெல்லை எடுத்துச் செல்ல முற்படும்போது லாரிக் கட்டணம் முதலிய செலவுகள் அதிகரிக்கின்றன. பல்வேறு மாவட்டங்களில் அரைக்கப்படும் அரிசியை பற்றாக்குறை மாவட்டங்களில் உள்ள கிட்டங்கிகளுக்கு எடுத்துச் சென்று சேமித்து வைக்க வேண்டியுள்ளது. பொது விநியோக முறையைத் திறம்பட நடத்துவது என்றால் அவ்வப்போது நெல்லை வாங்கி அரைத்து உடனடியாக விற்பது சாத்தியம் இல்லை. அறுவடை காலத்தில் நெல்லை வாங்கி, அரைத்து பற்றாக்குறை மாதங்களுக்காக அரிசியை சேமித்து வைக்க வேண்டும். மேலும், பொது விநியோகத்தை இவ்வளவு பெரிய அளவில் நடத்துவதற்காக கணிசமான கையிருப்பு நம் கைவசம் எப்பொழுதும் இருக்க வேண்டும். இவ்வாறு சேமித்து வைப்பதற்கு கிட்டங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய கட்டணம், சேமித்து வைத்த உணவுப் பொருட்களின் தரம் கெட்டு விடாமல் தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்கான செலவு, ஆகியவற்றை ஏற்க வேண்டும். சேமித்து வைத்து தேவை எழும்போது பல்வேறு மாவட்டங்களில் பரவிக் கிடக்கும் சில்லரைக் கடைகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டி இருக்கிறது. சில்லரைக் கடை நடத்துவோருக்கு வியாபாரக் கமிஷன் தர வேண்டி இருக்கிறது. பல்வேறு கட்டங்களில் போக்குவரத்து, சேமிப்பு ஆகியவற்றில் ஏற்படும் சேதாரச் செலவை ஏற்றுக் கொள்ள வேண்டி உள்ளது. ஒரு லட்சம் டன் நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு நமக்கு 8 கோடி ரூபாய் செலவாகிறது. கொள்முதலில் நாம் செலவு செய்யும் பணத்தை இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து கடனாகப் பெறுகின்றோம். கடனாகப் பெறும் பல கோடி ரூபாய்க்கு 12 சதவீதம் வட்டி செலுத்த வேண்டும். நெல்லைக் கொள்முதல் செய்யும் கட்டத்திலிருந்து அரிசியாக விற்பனை செய்யும் கட்டத்திற்கு இடையே பல மாதங்கள் ஆகி விடுகின்றன. இந்த இடைக் காலத்திற்கு நாம் வட்டி செலுத்த வேண்டும். ஒன்றரைக் குவிண்டால் நெல்லிருந்து ஒரு குவிண்டால் அரிசி கிடைப்பதையும் மனதிற் கொள்ள வேண்டும்.



18. நம்முடைய கொள்முதல் திட்டம் விவசாயிகளுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கும் அடிப்படையில், வகுக்கப்பட்டுள்ளது. நம்முடைய விநியோகத் திட்டம், தேவை ஏற்படும் நேரத்திலே பற்றாக்குறை மாவட்டங்களில் விநியோகம் செய்யும் நோக்கத்துடன், நுகர்வோருக்கு வசதி செய்யும் அடிப்படையில் அமைந்துள்ளது. நாம் நெல் வாங்குவதை ஒரு அளவோடு நிறுத்திக் கொள்ள முடியாது. விவசாயிகள் தர முன்வரும் நெல் அனைத்தையும் நாம் வாங்க வேண்டும். நாம் சிறு அளவில் உள்ளூரை ஒட்டிய பகுதியில் மட்டும் நம்முடைய வியாபாரத்தை நடத்த முடியாது. பெரும் அளவில் வாங்கிப் பல்வேறு மாவட்டங்களுக்கு நாம் எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. நாம் உடனுக்குடன் அரிசியை விற்று முதலீட்டை மீட்க முடியாது. அரிசியைச் சேமித்து வைத்துப் பற்றாக்குறை காலங்களில் பயன்படும் வகையிலே விநியோகத்தை ஆண்டு முழுவதும் தொடர்ந்து நடத்த வேண்டியுள்ளது.

19. 1970-ம் ஆண்டு நடுத்தர நெல்லின் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 48-ஆக இருந்தபொழுது, அரிசியின் சில்லரை விலை கிலோவுக்கு 96 பைசாவாக இருந்தது. 1974-ல் நெல்லின் கொள்முதல் விலை ரூ. 70 ஆக உயர்த்தப்பட்டபொழுது, அரிசியின் சில்லரை விற்பனை விலை கிலோவுக்கு ரூ. 1.40 ஆக உயர்ந்தது. இப்போதும், நடுத்தர நெல்லின் கொள்முதல் விலை ரூ. 78 ஆக உள்ளபோது, சில்லரை விற்பனை விலை கிலோ ரூ. 1.60 ஆக உள்ளது. இந்தப் பின்னணியில் பார்க்கும்பொழுது, குவின்டால் நெல்லுக்குக் கொடுக்கும் கொள்முதல் விலையை விட அரிசியின் சில்லரை விற்பனை விலை ஏறக்குறைய இரு மடங்காக, அமைந்து வரும் போக்கு பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வருவது தெளிவாகும்.

20. 1974-ம் ஆண்டு இறுதியில் பொது விநியோக முறையின் கீழ் மோட்டா ரக அரிசியின் விற்பனை விலை கிலோ ரூ. 1.80 ஆகவும், நடுத்தர அரிசியின் விலை கிலோ ரூ. 1.90 ஆகவும் இருந்தது. 1975-ம் ஆண்டு ஆகஸ்டு முதற் கொண்டு இது முறையே, ரூ. 1.60, ரூ. 1.70 என்று குறைக்கப்பட்டது. 1—1—1976 முதல் 13—3—1976 வரை, பழைய விலையான ரூ. 1.80, ரூ. 1.90-க்கு இது உயர்த்தப்பட்டது. 13—3—1976-க்குப்பின், மோட்டா ரக அரிசி, நடுத்தர ரக அரிசி, இரண்டுக்கும் ஒரே விலை நிர்ணயிக்கப்பட்டு, விலை மீண்டும் கிலோ ரூ. 1.60 ஆகக் குறைக்கப்

பட்டது. 2—1—1977 முதற்கொண்டு, அதற்கு முன்பு கிலோ ரூ. 2.00 என்ற விலையில் விற்கப்பட்டு வந்த சன்ன ரக அரிசியின் விலையும் கிலோ 1.85க்கு குறைக்கப்பட்டது. ஆகவே இப்போது மோட்டா ரக அரிசியும், நடுத்தர ரக அரிசியும் கிலோ ரூ. 1.60 என்ற விலையிலும், சன்ன ரக அரிசி கிலோ ரூ. 1.85 என்ற விலையிலும், விற்கப்பட்டு வருகிறது. மேலே எடுத்துச் சொன்ன நிலைமைகளை மனதிற்கொண்டு பார்க்கும் பொழுது, கொள்முதல் விலைகளை ஒட்டி, நாம் நிர்ணயித்துள்ள சில்லரை விற்பனை விலைகள் பொருத்தமாகவே உள்ளன என்பது தெளிவாகும். ஆயினும், இப்போதுள்ள விலையை இன்னும் குறைக்க சாத்தியக் கூறுகள் உண்டா என்பதைப் பரிசீலிப்பதில் இந்த அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வரும்.

VI பொது விநியோக அரிசியின் தரம்,

21. பொது விநியோக முறையின்கீழ் விநியோகிக்கப்படும் அரிசியின் தரம், வெளிச்சந்தையில் கிடைக்கும் அரிசியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, திருப்திகரமாக இல்லையென்ற குறை பரவலாக உள்ளதை அரசு உணர்ந்துள்ளது. இக் குறைக்கு இடந்தராத வண்ணம் பொது விநியோக முறையின்கீழ் விநியோகிக்கப்படும் அரிசியின் தரத்தைப் பாதுகாக்கவும் உயர்த்தவும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதிலுள்ள சிரமங்களையும் நலம் அறிவது அவசியம். தங்கள் சொந்த தேவைக்குப் பயன்படுத்தும் நெல்லின் தரத்தைப் பாதுகாப்பதில் காட்டப்படும் அக்கறை, கொள் முதலுக்கு தருவதற்கு ஒதுக்கி வைக்கும் நெல்லைப் பொறுத்தவரையில் காட்டப்படுவதில்லை. குறிப்பாக குறுவை பருவத்தின்போது அறுவடை நேரத்தில் மழை பெய்வதால், ஈரம் கலந்த நெல்லை உலர்த்தாமல், கொள் முதலுக்கு அளந்து விடும் போக்கும் காணப்படுகிறது. உச்சக் கட்டத்தில் கொள் முதல் நடந்து கொண்டிருக்கும் நேரத்திலே, விவசாயிகள்



ன்பே முளைத்து விடுகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப் ட்ட நெல் அரைவையாளரிடம் கொடுக்கப்படுகிறது. தனியார் யாபாரத்திற்கு தரமான அரிசியை தயார் செய்வதில் காட்டு ன்ற ஆர்வமும் அக்கறையும் அரசினால் கொள்முதல் செய்யப் ட்டு அரைவைக்கு கொடுக்கப்படுகின்ற நெல்லைப் பொறுத்த ரையில் காட்டப்படுவதில்லை என்ற குறைபாட்டுக்கும் இட முண்டு. அரிசியைத் தயார் செய்த பின்பு, அதை மொத்த கிட்டங்கிகளில் சேமித்து வைக்கும்போதும், பின்னர் சில்லரைக் கடைகளுக்கு அவற்றை எடுத்துச் செல்லுகின்ற நிலையிலும், தரத்தை பாதுகாப்பது கடினமாகிவிடுகிறது. மிகப் பெரிய அளவில் பல்லாயிரக்கணக்கான மூட்டை நெல்லை கொள்முதல் செய்து கிட்டங்கிகளில் சேமித்து வைத்து அரைவையாளரிடம் ஒப்படைத்து அரிசியை மீண்டும் கிட்டங்கிகளுக்கு எடுத்துச் சென்று, அங்கிருந்து தேவைக்கேற்ப, சில்லரைக் கடைகளுக்கு அனுப்புகின்ற பொது விநியோக முறையில், தரத்தை பாதுகாப்பது என்பது அரசு அலுவலர்களால் மட்டும் சாத்திய மாகக் கூடியதல்ல; விவசாயிகள், அரைவையாளர், சில்லரைக் கடை நடத்துவோர் ஆகிய அனைவருடைய ஒத்துழைப்பும் இந்தப் பணியில் தேவை.

22. அரிசியின் தரத்தை பாதுகாப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுவதில் உணவுத் துறை தொடர்ந்து விழிப்பாக இருக்கும். கொள்முதல் செய்யப்படும் நேரத்தில் ஈரத்தைத் தணிக்கை செய்வதற்கும் அதற்கேற்ப விலைகளில் வெட்டுகள் விதிப்பதற்கும் முறைகள் வகுக்கப் பட்டுள்ளன. நெல்லை சேமித்து வைக்கப்படும் கிட்டங்கிகளில் தரப் பரிசோதனை செய்வதற்கும், தரம் கெட்டு விடாமல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறையைச் சார்ந்த விவசாய நிபுணர்கள் கொள் முதல் நிறுவனத்தில் நியமிக்கப்பட்டு, தரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரைவை யாளர் தயார் செய்யும் அரிசியின் தரத்தைப் பரிசோதிக்கவும், தரம் குறைந்தால் அதற்கேற்ப கூலியில் பிடித்தம் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சில்லரைக் கடை களில் தரமான அரிசி விநியோகத்தைக் கண்காணிக்க, சில்லரைக் கடைகளில் ஒழுங்காக தணிக்கையும் சோதனையும் செய்யப்படுகின்றன. தரத்தைப் பாதுகாப்பதற்கு தேவையான

நடவடிக்கைகள் எடுப்பதில் உணவுத் துறை உன்னிப்பாக இருக்கும் என்று நான் உறுதி கூறும் நேரத்திலே, இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் விவசாயிகள், வியாபாரிகள், அரைவையாளர்கள் ஆகிய அனைவருடைய ஒத்துழைப்பும் கிடைப்பது அவசர அவசியத் தேவை என்பதை மீண்டும் நான் வலியுறுத்த வேண்டுகிறேன்.

### அரிசி அரைவை ஆலைகள்.

23. தமிழ்நாட்டில் மொத்தம் 14,700-க்கு மேற்பட்ட அரிசி அரைவை ஆலைகள் உள்ளன. இவற்றில் 1,919 மொத்த வியாபாரம் செய்யும் பெரிய ஆலைகள், 12,809 சிறிய அளவில் அரைவை செய்யும் ஆலைகள், சாதாரணமாகக் கூலி ஆலைகள் என்று அழைக்கப்படுபவை.

24. ஆலைகளில் அரைவை செய்யப்படும் அரிசியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடனும், நெல்லிலிருந்து கிடைக்கும் அரிசியின் அளவை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், அரிசி ஆலைகளில் நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட வேண்டுமென்ற கொள்கையை மத்திய அரசு சென்ற சில ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறது. இதற்காக அரைவை ஆலை அரிசி சட்டத்தில் மத்திய அரசு தேவையான திருத்தங்கள் செய்துள்ளது. நெல்லைத் தனியாகப் பிரிக்கும் இயந்திரக் கருவி, நெல்லைச் சுத்தப்படுத்தும் கருவி, ரப்பர் உருளைகள் ஆகியவற்றைப் பொருத்துவதே ஆலைகளை நவீனமயமாக்கும் திட்டத்தின் முக்கிய அம்சங்கள். இதன்படி நெல்லின் உமியை நீக்குவதற்கு ஹல்லர்களைப் பயன்படுத்தாமல், அரிசிக்கு மெருகு (பாலிஷ்) ஏற்றுவதற்கு மட்டுமே அவற்றைப் பயன்படுத்த வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட ஹல்லர் உள்ள ஆலைகளையும், ஷெல்லர் பொருத்தியுள்ள ஆலைகளையும், 1975-ம் ஆண்டு ஆகஸ்டுக்கு முன்பு நவீனமயமாக்க வேண்டுமென்று 1970-ம் ஆண்டிலேயே மத்திய அரசு, அரிசி ஆலைக்கட்டுப்பாடு உத்திரவில் திருத்தம் செய்தது. 1976-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஆலைகளை நவீனமயமாக்குவதற்கு அளிக்கப்பட்ட அவகாசத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு மத்திய அரசு நீடித்தது. மத்திய அரசின் ஆணைகளை மனதிற்கொண்டும், நம்முடைய மாநிலத்தில் ஆலை



யாளர்கள் செய்த முறையீடுகளை அனுதாபமாகப் பரிசீலித்தும், மத்திய அரசின் அனுமதி பெற்று, மாநில அரசு சில ஆணைகளை வெளியிட்டுள்ளது. இதன்படி, 1973 ஆம் ஆண்டு முன் அமைக்கப்பட்ட அரிசி ஆலைகள் 1978-ம் ஆண்டுக்குள் நவீனமயமாக்கப்பட வேண்டுமென்றும், 1973-ம் ஆண்டுக்குப்பின் அமைக்கப்பட்ட ஆலைகள் 1979 ஏப்ரல் மாதத்திற்குள் நவீனமயமாக்கப்பட வேண்டுமென்றும், கால அவகாசம் தந்து உத்தரவிடப்பட்டுள்ளது.

25. 1976-ம் ஆண்டில் மத்திய அரசு வெளியிட்ட திருத்தங்களின் படி, ஒரே ஹல்லர் பொருத்தியிருக்கும் ஆலைகளும் நவீனமயமாக்கப்பட வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த வகை ஆலைகளுக்கு 1979-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை நவீனமயமாக்கிக் கொள்ள அவகாசம் அளித்து மாநில அரசு உத்திரவு வெளியிட்டுள்ளது.

26. இந்த ஆணைகளின்படி, 17—3—1977-க்குப் பின்பு நவீனமயமாக்கப்படாத அரைவை ஆலை எதுவும் புதிதாக அமைப்பதற்கு அனுமதி வழங்குவதற்கில்லை என்று அரசு முடிவு செய்திருந்தது. ஆனால் பல புதிய ஆலைகளை நிறுவ, கணிசமான முதலீடு செய்யப்பட்டு, நிர்மாண வேலையும் இறுதிக் கட்டங்களில் இருப்பதாகவும், 17—3—1977-க்குப்பின், ஆலைகள் நவீனமயமாக்கப்பட்டாலொழிய புது உரிமங்கள் வழங்கப்படாது என்று மொத்தமாகத் தடை விதித்தால், தங்களுக்கு நட்டம் ஏற்படுமென்றும், பல முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளன. ஆலைகளை நவீனமயமாக்க வேண்டுமென்ற கொள்கைக்குத் தீங்கு ஏற்படாத வகையில், இவர்கள் கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலிக்க விரும்பிய இந்த அரசு, மத்திய அரசின் அனுமதியைப் பெற்று, இவர்களுக்கும் சலுகை அளிக்க முன்வந்துள்ளது. 30—4—1977 வரை புது ஆலை அமைக்க செய்து கொள்ளப்பட்ட விண்ணப்பங்களைப் பரிசீலித்து, அந்த ஆலைகளில் நிர்மாண வேலை இறுதிக் கட்டத்திற்கு வந்திருந்தாலோ, இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்தாலோ, அவற்றிற்கு உரிமம் வழங்கி, நவீனமயமாக்கிக்கொள்ள, உரிமம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து, ஓர் ஆண்டு அவகாசம் தர வேண்டுமென்று அரசு முடிவுசெய்து அண்மையில் ஆணைகள் வெளியிட்டுள்ளது.

27. ஆலைகளை நவீனமயமாக்கும் கொள்கை நாட்டின் உணவுப் பொருளாதார நலனுக்கு இன்றியமையாதது என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. அதே சமயத்தில், நவீனமயமாக்கிக் கொள்ள இயந்திரக் கருவிகள் வாங்குவதற்கும், கூடுதல் முதலீட்டிற்கு வங்கிகளிடமிருந்து பண வசதி பெறுவதற்கும், தொழில் நுட்ப ஆலோசனை பெறுவதற்கும், ஆலை உரிமையாளர்களுக்கு அவகாசம் அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் இந்த அரசு அவர்களுக்கு அவகாசம் அளித்து உத்திரவு வெளியிட்டுள்ளது. இந்த அவகாசத்தைப் பயன்படுத்திக்கொண்டு, நாட்டு நலனுக்கு மட்டுமல்ல, தங்கள் சொந்த தொழில் நலனுக்கும், உகந்ததாயுள்ள இந்த நவீனமயமாக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஆலை உரிமையாளர்கள் அக்கறை காட்டி, உருவான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

## VIII. கோதுமை, சர்க்கரை விநியோகம்.

**கோதுமை :**

28. அரிசியையே பெரிதும் பயன்படுத்திப் பழக்கப்பட்ட தமிழக மக்கள் கோதுமையை அதிக அளவில் பயன்படுத்துவதில்லை. அரிசியில் தட்டுப்பாடு ஏற்பட்டாலும், அரிசியின் விலைகள் மிதமிஞ்சி உயர்ந்துவிட்டாலும், அந்த நிலைமையில் தான், கோதுமையின் புழக்கம் அதிகரிக்கின்றது. அந்த நிலையில் கூட கம்பு, கேழ்வரகு, சோளம் போன்ற சிறு தானியங்களை பயன்படுத்தவும், அவையும் போதிய அளவு கிடைக்காவிடிலே கோதுமையைப் பயன்படுத்தவும், தமிழக மக்கள் விரும்புகிறார்கள். தமிழகத்தில் வெளிச்சந்தையில் இப்பொழுது தாராளமாக அரிசி கிடைக்கின்ற காரணத்தினால் பொது விநியோக முறையின் கீழ் கோதுமையின் விநியோகம் பெரிதும் குறைந்துள்ளது. 1975 ஜூலை மாதத்தில் மாதம் 70,000 டன் கோதுமை விநியோகிக்கப்பட்டதற்கு மாறாக, 1977-ம் ஆண்டில் பொது விநியோக முறையின் கீழ் மாதம் சுமார் 5,000 டன்கள் கோதுமைதான் வாங்கப்பட்டது.

29. இப்பொழுது கிலோ ரூ. 1.40 விலையில் கோதுமை தடையின்றி பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படுகிறது. நகர்ப் பகுதிகளில் மட்டுமல்லாமல், கிராமப் பகுதிகளிலும்,



ஒரு குடும்பம் எவ்வளவு கோதுமை கேட்டாலும் அதைக் கொடுப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. அரிசியின் விலையை விட கோதுமையின் விலை குறைவாகவுள்ளது என்பதைக் கருதியும், சத்துணவு அடிப்படையில் கோதுமையையும் சேர்த்துப் பயன்படுத்துவது உடல் நலனுக்கு உகந்தது என்பதைக் கருதியும், கோதுமையைப் பயன்படுத்தும் பழக்கத்தை தமிழக மக்கள் மேலும் அதிகமாக மேற்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

**கோதுமைப் பொருட்கள் :**

30. ரவை, மைதா, ஆட்டா, கோதுமைத் தவிடு போன்ற கோதுமைப் பொருட்கள் மீது இப்போது தடை எதுவும் இல்லை. 1976 டிசம்பர் முதற்கொண்டு, இப்பொருட்கள் நாடு முழுவதும் எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி விற்கப்படலாமென்று மத்திய அரசு ஆணையிட்டது. நம்முடைய மாநிலத்தில் கோதுமைப் பொருட்கள் இப்போது தாராளமாகக் கிடைக்கின்றன. விலைக் கட்டுப்பாடு இருந்த சமயத்தில் நிலவி வந்த விலைகளே, ஏறக்குறைய, இப்போதும் நிலவி வருகின்றன.

31. தமிழ்நாட்டில் கோதுமைப் பொருட்களைத் தயார் செய்யும் ரோலர் மாவு ஆலைகள் 28 உள்ளன. இவை அனைத்தும் தனியாரால் நடத்தப்படுகின்றன. இவற்றின் அரைவைத் திறன் மாதத்திற்கு 65 ஆயிரம் டன்களுக்கு மேலாகும். சென்ற சில ஆண்டுகள் வரை இவற்றிற்கு, அரைவைக்காக மத்திய அரசு ஒதுக்கி வந்த கோதுமை மிகக் குறைவாக இருந்தது. சென்ற சில மாதங்களாக, மாதம் 40 ஆயிரம் டன்கள் கோதுமை இவற்றிற்கு ஒதுக்கப்பட்டு வருகிறது. இதற்கும் மேலாக ஆலைகளுக்கு தேவைப்பட்டால் ஒதுக்கீடு செய்யவும் வசதி செய்யப்பட்டுள்ளது. 40 ஆயிரம் டன்கள் கோதுமையை மத்திய அரசு ஒதுக்கீடு செய்து வந்துள்ள போதிலும், நம் மாநிலத்தில் ரோலர் மாவு ஆலைகள் இப்போது சுமார் 30 ஆயிரம் டன்கள் அளவில்தான் கோதுமையை எடுத்துப் பயன்படுத்துகின்றன.

**லெவி சர்க்கரை விநியோக முறை:**

32. நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையில் 65 சதவிகிதத்தை லெவி முறையின் கீழ் விநியோகத்திற்கு ஒதுக்கி 34 சதவிகிதத்தை வெளிச்சந்தையில் விற்க உரிமை அளிக்கும் ஒரு முறையை மத்திய அரசு சென்ற சில ஆண்டுகளாக பின்பற்றி வருகிறது. லெவி சர்க்கரை கிலோ ரூ. 2.15 என்ற விலையில் குடும்பக் கார்டுகளின் பேரில் விநியோகம் செய்யப் படுகிறது. தமிழகத்தில் பொது விநியோகத்திற்கு மாதம் ஒன்றுக்கு 13,550 டன்கள் லெவி சர்க்கரையை மத்திய அரசு ஒதுக்கீடு செய்து வருகின்றது. இந்த ஒதுக்கீடு குறைந்தது 20,000 டன்களுக்கு உயர்த்தப்பட வேண்டுமென்று மத்திய அரசிடம் நாம் வற்புறுத்தி வருகின்றோம்.

33. இப்பொழுது ஒதுக்கப்படும் சர்க்கரையைக் கொண்டு நகரப் பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் குடும்பக் கார்டுகளின் பேரில் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளிலும் லெவி சர்க்கரை ஓரளவாகிலும் கிடைக்க வேண்டுமென்பதில் அக்கறை கொண்ட அரசு, கிராமப் பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்பத்திற்கு குறைந்த பட்சம் ஒரு கிலோ சர்க்கரையாவது வழங்கவேண்டுமென்று ஆணையிட்டுள்ளது. மத்திய அரசின் ஒதுக்கீடு அதிகரிக்கப் பட்டால், விநியோகத்தை மேலும் சீராக்கி கிராமப் பகுதிகளில் விநியோகம் ஆகும் அளவை உயர்த்துவதற்கு வாய்ப்பு கிட்டும்.

34. இப்பொழுதுள்ள விநியோக முறையின்படி பெருநகர்ப் பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு 6 கிலோ வரை வருமானத்தின் அடிப்படையில் சர்க்கரை வழங்கப்படுகிறது. கிராமப் பகுதிகளுக்கு நாம் ஒரு கிலோதான் இப்பொழுது கொடுக்க முடிகின்றது. நகர்ப்புறங்களில் வழங்கப்படும் சர்க்கரையின் அளவைக் குறைத்துக் கொண்டு கிராமப் பகுதிகளுக்கு அதிகப்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை வற்புறுத்தப்பட்டு வருகின்றது. பல ஆண்டுகளாக நகர்ப் பகுதிகளுக்கு அதிகம் வழங்கப்பட்டு வருவதை திடீரெனக் குறைத்து விடுவது பரவலான அதிருப்திக்கு இடம் தரும். மேலும் நகர்ப் பகுதிகளில் வழங்கப்படும் சர்க்கரை அளவைக் கணிசமாகக் குறைத்தால்கூட, அதனால் மிச்சப்படும் சர்க்கரை, கிராமப் பகுதிகளில் விநியோக அளவைக் கணிசமாக உயர்த்துவதற்குப் போதாது. இப்பொழுது வருமானத்தின் அடிப்படையில் சர்க்கரை வழங்கப்படுவதை மாற்றி குடும்பத்தினர் எண்ணிக்கையை மனதிற்கொண்டு விநியோக அளவை நிர்ணயிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையும் எழுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கும் ஒதுக்கீடு கணிசமாக அதிகரிக்கப்பட்டால், இக்கருத்துக்களைப் பரிசீலித்து, விநியோக முறையில் பொது நலனுக்கு உகந்த முறையில் மாற்றங்கள் செய்வது குறித்து ஆராயப்படும்.



35. கிராமப்புறங்களில் விநியோகத்திற்காக ஒதுக்கப் படும் சர்க்கரை சில சமயங்களில் கிராமத்திற்கே போய்ச் சேராமல் பெரிய நகரங்களில் விற்கப்பட்டு விடுகின்றது என்ற புகார்களும் வந்துள்ளன. இக்குறைபாட்டைத் தவிர்க்க, கிராமத்திற்கு ஒதுக்கப்படும் சர்க்கரையை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமே கிராமங்களுக்கு எடுத்துச் சென்று, அங்கேயே சில்லரைக் கடைகளுக்கு வழங்கும் முறையை, பரீட்சார்த்தமாக வட ஆற்காடு மாவட்டத்தில் செயல்படுத்தினோம். இம்முறை திருப்திகாரமாகச் செயல்பட்டு வந்த அனுபவத்தையொட்டி, இராமநாதபுர மாவட்டத்திற்கும் அண்மையில் விரிவாக்கப்பட்டுள்ளது. இவ்விரு மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படும் அனுபவத்தைக் கொண்டு, மற்ற மாவட்டங்களிலும் இம்முறையை விரிவாக்கப்படுவதைக் குறித்து அரசு பரிசிலிக்கும்.

**மண்ணெண்ணெய்:**

36. தமிழ் நாட்டிற்கு மத்திய அரசு மாதமொன்றுக்கு 25,000 டன்கள் அளவில் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்து வருகிறது. இது நமது தேவைக்குப் போதுமானது. பற்றுக்குறை இல்லாத காரணத்தினால் பொது விநியோகத் திட்டத்தில்கீழ் மண்ணெண்ணெய் விநியோகம் கொண்டு வரப்படவில்லை. உரிமங்கள் பெற்ற வர்த்தகர்கள் மண்ணெண்ணெய்யை விற்பனை செய்கின்றனர். மண்ணெண்ணெயின் விலை சட்ட பூர்வமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விலை தனித்தனியாக நிர்ணயிக்கப்படுகிறது. மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.31 முதல் 1.41 வரை விற்கப்படுகிறது.

## IX. விலைவாசிகளும், விலைகளைக் குறைக்க நடவடிக்கைகளும்.

**அரிசி :**

37. தற்போது அரிசியின் விலைகள் நிதானமாகவே உள்ளன என்று முன்பு குறிப்பிட்டுள்ளோம். நம்முடைய மாநிலத்தில் அதிகம் புழங்குவது நடுத்தர புழுங்கல் அரிசி. இதன் விலைகள் இப்போது உபரி மாவட்டங்களிலும் கிலோ ரூ. 1.60 முதல் ரூ. 1.95 வரையிலும், பற்றுக்குறை மாவட்டங்களில் கிலோ ரூ. 1.80 முதல் ரூ. 2.05 அளவிலும் உள்ளன. 1974-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் இந்த அரிசியின் விலை கிலோ ரூ. 2.25 முதல் ரூ. 2.85 வரை இருந்தது, 1975-ம் ஆண்டு ஜூலை மாதத்தின் இதன் விலை கிலோ ரூ. 3.60 வரை எட்டியிருந்தது. 1976 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கிலோ ரூ. 1.80 முதல் கிலோ ரூ. 2.50 வரை இருந்தது. 1976 அக்டோபருக்குப் பின்பு, தென் உணவு மண்டலம் விரிவாக்கப்பட்டதையும், தமிழகத்தில் மாவட்டங்களிடையே போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதையும் ஒட்டி, உபரி மாவட்டங்களிலிருந்த குறைந்த விலைக்கும் பற்றுக்குறை மாவட்டங்களிலிருந்த உச்ச விலைக்கும் இடையேயிருந்த கணிசமான இடைவெளி இப்போது பெரிதும் குறைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த ஆண்டு அரிசியின் விலை, சென்ற நான்கு ஆண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, குறைவாகவே உள்ளது. சென்ற சில வாரங்களாக அரிசியின் விலையில் ஆங்காங்கு சிறிது உயர்வு காணப்படுகிறது. இயல்பாகவே, ஜூன் மாதம் முதற்கொண்டு அக்டோபர் வரை, முக்கிய அறுவடை எதுவும் இல்லாத காரணத்தால், தமிழ்நாட்டில் அரிசியின் விலைகள் ஒவ்வொரு ஆண்டும் உயர்வது வழக்கம். இந்த ஆண்டு இந்த உயர்வு ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதென்றே கூறவேண்டும். மேட்டூர் நீர்ப்பாசன பிரச்னைகளிலிருந்த சிக்கல்களையொட்டி குறுவைப் பயிரின் நிலைமை சில நாட்களுக்கு முன்பு வரை தெளிவற்றிருந்ததும், இந்த ஏற்றத்திற்கு ஒரு காரணமாக இருக்கலாம். இப்போது குறுவை நிலைமை தெளிவாகி விட்டதால் இந்த உயர்வு கட்டுப்படுத்தப்படுமென்று எதிர்ப்பார்க்கலாம். விலைகள் மேலும் உயர்ந்தால், பொது விநியோக முறையை விரிவாக்கி விலைகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய வகையில் அரசிடம் அரிசி போதிய அளவு கையிருப்பில் உள்ளது. அக்டோபர் மாத இறுதியில், குறுவை அறுவடை கணிசமாக வந்தவுடன் நிலைமை மேலும் சீராகிவிடும்.



**சிறு தானியங்கள் :**

38. தமிழ்நாட்டில் சிறு தானியங்களின் விலை அரிசியின் விலையை அனுசரித்துச் செல்வதாக அமைவது வழக்கம். அவ்வாறே சிறு தானியங்களின் விலைகளும் இந்த ஆண்டு நிதானமாகவே உள்ளன. ராகி, சோளம், கம்பின் விலைகள் கிலோ ரூ. 1.10 முதல் ரூ. 1.40 வரை உள்ளன. மொத்தத்தில் சிறு தானியங்களின் விலைவாசிகள், 1974-1975 ஆம் ஆண்டுகளைவிட மிகக் குறைவாகவும், 1976-லிருந்த விலைகளுக்கு, ஏறக்குறைய சமமாகவும் உள்ளன.

**பருப்பு வகைகள் :**

39. சென்ற மூன்று ஆண்டுகளிலிருந்த விலையைவிட இந்த ஆண்டு சில வகை பருப்புகளின் விலைகள் ஏறியுள்ளன. இந்த விலை உயர்வு தமிழ்நாட்டில் மட்டும் ஏற்பட்டதல்ல; நாடு முழுவதும் காணப்படும் போக்கை ஒட்டியது. தமிழ்நாட்டில் பருப்பு வகைகளின் உற்பத்தி மிகக் குறைவு. மற்ற மாநிலங்களிலிருந்து வரத்தை நம்பித்தான் தமிழகம் உள்ளது. அந்த மாநிலங்களிலேயே இந்த ஆண்டு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதாலும், விலைகள் உயர்ந்துள்ளதாலும், இங்கும் விலைவாசிகள் உயர்ந்துள்ளன. குறிப்பாகத் துவரம் பருப்பின் விலை சாதாரண ஆண்டுகளில் கிலோ ரூ. 2.00 முதல் ரூ. 2.20 வரை இருக்கும்; இந்த ஆண்டு கிலோ ரூ. 3.40 முதல் ரூ. 4.50 வரை உயர்ந்துள்ளது. உளுத்தம் பருப்பின் விலையும் இப்போது ரூ. 3.70 முதல் ரூ. 4.60 வரை உயர்ந்துள்ளது, உற்பத்தி நிலையங்களில் அடுத்த அறுவடை இன்னும் சில மாதங்களில் வந்ததும், நிலைமை திருந்துமென எதிர்பார்க்கலாம்.

**கடலை எண்ணெய் :**

40. கடலை எண்ணெய் விலையில் நாடு முழுவதும் சென்ற சில மாதங்களாகவே காணப்படும் விலை உயர்வு, மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் கவலை அளிப்பதாய்

அமைந்துள்ளது. சாதாரணமாக தமிழகத்தில் உற்பத்தியாகும் கடலை எண்ணெய், மாநிலத்தின் தேவைகளுக்குச் சற்று அதிகமானது. சென்ற சில ஆண்டுகள் வரை தமிழகத்திலிருந்து எண்ணெய் மற்ற மாநிலங்களுக்குச் செல்வதும், அங்கிருந்து எண்ணெய் இங்கு வருவதும் வாடிக்கையாக இருந்தது. ஓரிரு ஆண்டுகளாக இந்தப் போக்கு தடைப்பட்டுள்ளது. தமிழகத்தில் 1976 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கிலோ ரூ. 6.50 வரை விற்று வந்த கடலை எண்ணெய் இப்பொழுது ரூ. 10.40 அளவில் விற்கப்படுகிறது.

41. நாடு முழுவதும் கடலை எண்ணெய்யில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டைப் போக்கவும், விலைகளைக் கட்டுப்படுத்தவும், மத்திய அரசு அயல் நாடுகளிலிருந்து சமையல் எண்ணெய்களை இறக்குமதி செய்து, சுத்திகரித்து அவற்றை கிலோ ரூ. 8.50 விலையில் விற்க ஒரு திட்டம் வகுத்துள்ளது. சுத்திகரிக்கப்பட்ட இந்த எண்ணெய்க்குத் தமிழகத்தில் அவ்வளவு வரவேற்பு இல்லை. சமையலின் போதும், சமையலுக்குப் பின்பும் ஒருவித வாசனை வருகிறது என்று பொது மக்கள் குறைபட்டுக் கொள்கின்றனர். ஆகவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் சுத்திகரித்த எண்ணெய்யைப் பெரிதும் நம்பியிராமல், அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் கடலை எண்ணெய்யில் கணிசமான பகுதியை ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் வற்புறுத்தியுள்ளோம்.

42. தமிழக அரசினால் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் எல்லா மாவட்டத் தலைநகர்களிலும், ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை உள்ள முக்கிய நகர்களிலும், கடலை எண்ணெய்யை கிலோ ரூ. 9.50 விலையில் விற்க இப்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனாலும், கிலோ ரூ. 8.50 அளவில் விற்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட அயல் நாட்டு எண்ணெய்யின் விற்பனையை விரிவாக்குவதனாலும், நிலைமையைக் கட்டுப்படுத்த முடியுமென்று எதிர்பார்க்கிறோம். மணிலாப் பயிரின் அடுத்த முக்கிய அறுவடை தமிழகத்தில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் வரும். அந்த அறுவடைக்குப்பின் கிடைக்கும் எண்ணெய்யைக் கொண்டு, தமிழ் நாட்டின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஒரு சீரான விநியோகத் திட்டம் வகுப்பது குறித்து உணவுத்துறை பரிசீலனை செய்து வருகிறது.



43. நல்லெண்ணெயைப் பொறுத்த வரையில் நம்முடைய மாநிலத்தின் தேவைகளுக்கு வேண்டிய அளவு இங்கு உற்பத்தியாவதில்லை. மற்ற மாநிலங்களிலிருந்து எண்ணெய் வரத்தை நாம் பெரிதும் நம்பியுள்ளோம். கடலை எண்ணெய்யின் விலைகளையொட்டி, நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய்களின் விலை உயர்வது வழக்கமாகியுள்ளது. நல்லெண்ணெய்யின் விலை இப்போது கிலோ ரூ. 9.35 முதல் ரூ. 10.45 வரை உள்ளது, சென்ற ஆண்டு விலைகளுடன் ஒப்பிட்டுப்பார்த்தால், இவை உயர்வாகவே உள்ளன. ஆனால், 1977 ஆம் ஆண்டு பிப்ரவரியில் இருந்த விலைகளைவிட இப்போதுள்ள விலைகள் குறைவாகக் காணப்படுகின்றன. தேங்காய் எண்ணெய்யைப் பொறுத்த வரையில் கிலோ ரூ. 10.45 முதல் ரூ. 13.00 வரை விலை அமைந்துள்ளது. 1977 சனவரியில் இந்த விலைகள் ரூ. 15.50 முதல் ரூ. 18 வரை எட்டியிருந்தன. அதன் பின்பு விலைகள் மிகவும் குறைந்து, பின்னர் சற்று ஏறி, இப்போது கிலோ ரூ. 10 முதல் ரூ. 13 அளவில் உறுதிப்பட்டுள்ளன. தேங்காய் எண்ணெய்யைப் பொறுத்தவரை, கேரள மாநிலத்திலிருந்து வரும் எண்ணெய்யைத்தான் தமிழகம் பெரிதும் நம்பியுள்ளது. கடலை எண்ணெய்யின் விலையைக் கட்டுப்படுத்த மத்திய அரசும் மாநில அரசுகளும் மேற்கொண்டுள்ள முயற்சிகளின் பலனாக, நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய்யின் விலைகளையும் விரைவில் கட்டுப்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கலாம்.

*நிரந்தரமான தீர்வு.*

44. விலைவாசிப் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வு காண்பதற்கு, உற்பத்திப் பெருக்கம், பண வீக்கத் தடுப்பு, சீரான விநியோகம், ஆகிய அம்சங்கள் ஒருங்கிணைந்த அனைத்திந்தியப் பொருளாதாரத் திட்டத்தின் பின்னணியில் செயல்படுவது இன்றியமையாததாகும். இதற்கு உரிய ஆக்கபூர்வமான பரிந்துரைகளை, மாநில அரசு மத்திய அரசுக்குச் செய்யும். அரிசி, கோதுமையைத் தவிர, மற்ற உணவுப் பொருள்களின் வர்க்கத்தைக் கட்டுப்படுத்த அரசுக்கு அதிக வாய்ப்பு இல்லை. உணவுப் பொருள்களின் மொத்த விற்பனை முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது ஒரு கருத்து. இது கொள்கையளவில் வரவேற்கத்தக்கதாயினும், நடைமுறையில் இந்த உடனடியாகச்

செயல்படுத்துவதற்குச் சாதகமான சூழ்நிலை நாட்டில் இப்போது உருவாகவில்லை. உணவுப் பொருட்களின் மொத்த வியாபாரத்தை அரசு ஏற்றுக் கொள்ள இயலாத நிலையில், செயற்கையாக உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு ஏற்படுத்துவதையும், மிதமிஞ்சி விலை உயர்வு ஏற்படுத்துவதையும் அரசு அனுமதிக்கவும் முடியாது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், அரசின் சார்பு கொண்ட சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் போன்ற நிறுவனங்கள் மூலமாகவும், இன்றியமையாத உணவுப் பொருட்களின் விநியோகத்தை மேற்கொள்வது, இச்சிக்கலான பிரச்னையைத் தீர்ப்பதற்கு உசிதமான வழிகளில் ஒன்றாகும்.

### நியாயவிலைக் கடைகள்.

45. இந்த அடிப்படையில்தான் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நியாய விலைக் கடையைத் திறந்து, அங்கு அரிசி, கோதுமை மட்டுமல்லாது, பருப்பு வகைகள், எண்ணெய் வகைகள், புளி, மிளகாய் போன்ற மற்ற உணவுப் பொருட்களையும் நியாயமான விலைக்கு விநியோகம் செய்ய திட்டம் வகுக்கப் படும் என்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது தமிழ் நாட்டில் ஏறக்குறைய 6,000 கிராமங்களில் அந்தக் கிராமங்களிலேயே நியாய விலைக் கடைகள் இருக் கின்றன. ஆனால் இந்த கடைகளில் இப்போது பொது விநியோக முறையின் கீழ் அரிசி, கோதுமை, லெவி சர்க்கரை போன்றவை மட்டுமே பெரும்பாலும் விற்கப்படுகின்றன. இக்கடைகள் அனைத்திலும், மற்ற இன்றியமையா உணவுப் பொருட்களையும் விநியோகிக்க வழி செய்வது, நாம் எடுக்க உத்தேசித்திருக்கும் முதல் நடவடிக்கையாகும். தமிழ்நாட்டில் ஏறக்குறைய 16,000 மேற்பட்ட ரெவின்யூ கிராமங்கள் உள்ளன. ஒரு கிராமத்திற்கு ஒரு கடை திறக்க வேண்டுமென்றால், இப்போ துள்ள சுமார் 6,000 கடைகள் நீங்கலாக, இன்னும் சுமார் 10,000 கடைகள் திறக்க வேண்டும். நிர்வாகச் செலவு மிதமிஞ்சி சென்றுவிடாமல், சிக்கனமாக இத்திட்டத்தைச் செயல்படுத்துவது என்ற அடிப்படையில், உணவுத்துறை பல்வேறு கோணங்களிலிருந்து, இப்பிரச்னையை ஆராய்ந்து வருகிறது. இப்பொழுது கிராமங்களில் செயல்பட்டு வரும் பல்வகைக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் இக்கடைகள் நடத்தப் படலாம் என்பது ஒரு யோசனை. பெரிய கிராமங்களில் ஏற்கனவே இயங்கி வரும் நியாய விலைக் கடைகளை மையமாகக்





கொண்டு, சுற்றியுள்ள கிராமங்களுக்கு வாரத்தில் குறிப்பிட்ட ஒரு நாளன்று உணவுப் பொருட்களை எடுத்துச் சென்று அங்கு விற்பனை செய்யலாமா என்பது மற்றொரு யோசனை. கிராம மட்டத்தில் பணியாற்றி வரும் ஊழியர்களின் உதவியைக் கொண்டு, அவர்களுக்கு ஒரு சிறப்பு ஊதியம் அளித்து, அவர்கள் மூலமாக இந்த விற்பனையை ஏற்பாடு செய்யலாமா என்பது மற்றொரு யோசனை. இப்பல்வேறு வழிகளைத் தீவிரமாக ஆராய்ந்து, சிறந்ததாகவும் சிக்கனமாகவும் உள்ள ஒரு முறையில் இத்திட்டத்தை அடுத்த சில மாதங்களில் நான்கு மாவட்டங்களி லாகிலும், ஓராண்டு காலத்திற்குள் மாநிலம் முழுவதிலும், செயல்படுத்தும் பொறுப்பை மேற்கொள்வோம்.

### வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள்.

46. உணவுப் பொருள் வெளிச்சந்தை வியாபாரத்தை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் கீழ்க்கண்ட ஏழு ஆணைகள் தற்போது அமுலில் உள்ளன :—

1. தமிழ்நாடு நெல், அரிசி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.
2. தமிழ்நாடு கோதுமை, கோதுமைப் பொருட்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.
3. தமிழ்நாடு உணவு தானிய வர்த்தகர்கள் (உரிமம் வழங்கும்) ஆணை, 1968.
4. நிலக்கடலை, நிலக்கடலைப் பொருட்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.
5. வனஸ்பதி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.
6. தமிழ்நாடு சர்க்கரை வர்த்தகர்கள் (உரிமம் வழங்கும்) ஆணை, 1972.
7. தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

இவற்றின்கீழ் வர்த்தகர்களுக்கு உரிமம் வழங்கவும், வர்த்தகம் பற்றிய சில விவரங்களை அவ்வப்போது அரசு அதிகாரிகள் பெறவும், தட்டுப்பாடு ஏற்படும் காலத்தில் வர்த்தகர் களுக்குப் பொது நலனுக்குத் தேவையான சில அறிவுரைகள் வழங்கவும், வகை செய்யப்பட்டுள்ளது.

47. இந்த கட்டுப்பாடு ஆணைகளைப் பொது நலனுக்கு உகந்த முறையிலும், வர்த்தகர்களுக்குத் தேவையற்ற இடர்ப்பாடுகள் ஏற்படாத வண்ணமும் செயல்படுத்துவதோடு, விலைவாசிகள் ஏறுகின்ற நேரத்திலும், செயற்கையாகத் தட்டுப்பாடுகள் உருவாக்கப்படுகின்ற நேரத்திலும், வர்த்தகர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி நிலைமைகளைச் சீராக்கும் முயற்சிகளையும் உணவு வழங்குதுறை மேற்கொண்டுள்ளது. இந்த அடிப்படையில் சென்ற ஆண்டில் முக்கியமாகக் கடலை எண்ணெய், நல்லெண்ணெய், உளுத்தம் பருப்பு, விறகு, மாமிசம் ஆகியவற்றின் விலைகளைக் குறைக்க வர்த்தகர்களுடன் உணவு வழங்குதுறை நடத்திய பேச்சுவார்த்தைகள் பலன் அளிக்கும் முறையில் அமைந்தன. இது போலவே, ரொட்டி, உற்பத்தியாளர்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தி ரொட்டியின் விலையைக் குறைக்க வகை செய்யப்பட்டது.

**மணிலா வர்த்தக உரிமம்.**

48. மணிலாப்பயிர் வர்த்தக ஆணையின்கீழ் உரிமம் பெறுவோர் ரூ. 100 காப்புத் தொகையாகக் கட்ட வேண்டுமென்று விதிகள் உள்ளன. மின்சாரத்தைப் பயன்படுத்தாமல் நாட்டுச் செக்கு நடத்துகின்றவர்கள் இந்தக் கட்டணத்திலிருந்து விலக்கு வேண்டுமென்று கோரி உள்ளனர். நாட்டுச் செக்குகள் நடத்துவோருக்கு சலுகை அளிக்க வேண்டுமென்ற அடிப்படையில், அவர்கள் செலுத்த வேண்டிய காப்புத் தொகையை ரூ. 100 லிருந்து ரூ. 50 ஆகக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது. கடலை எண்ணெய் வியாபாரம் செய்யும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கட்டணத்தை குறைக்க அரசு முடிவு செய்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் இப்பொழுது விதிக்கப்பட்ட தொகையில் 50 சத விகிதத்தை காப்புத் தொகையாக அவை கட்டினால் போதும் என்றும் உரிமம் பெறும் கட்டணத்திற்கு இப்பொழுது செலுத்திவரும் ரூ. 50-க்கு பதிலாக ரூ. 25 கட்டினால் போதும் என்றும் ஆணைகள் வெளியிட அரசு முடிவு செய்துள்ளது.

**விலைகள் அறிவிப்பு ஆணை.**

49. வர்த்தகர்கள், பொருள்களின் கையிருப்பை பொது மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்றும், நிர்ணயிக்கப்பட்ட விலையை விளம்பரப்படுத்த வேண்டுமென்றும், அதற்கு மேற்பட்ட



விலைகளில் விற்கக் கூடாதென்றும் கண்காணிக்கும் நோக்கத்துடன் இன்றியமையாப் பொருட்கள் (கையிருப்பு, விலைகள் அறிவித்தல், கணக்குவைத்தல்) ஆணை இந்தியப் பாதுகாப்பு விதிகளின்கீழ் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆணையை மீறிய குற்றத்திற்காக 1976-ம் ஆண்டு 1,433 வழக்குகளும் 1977-ம் ஆண்டு ஜுன் மாதம் வரை 133 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன. இவற்றில் 1976-ம் ஆண்டின் 1,105 வழக்குகளிலும் 1977-ம் ஆண்டின் 13 வழக்குகளிலும் நீதிமன்றங்கள் தீர்ப்பு கூறியுள்ளன. 1976-ம் ஆண்டு தொடுக்கப்பட்ட வழக்குகளில், நான்கு வழக்குகளை தவிர மற்ற வழக்குகளில் நீதிமன்றத்தில் வர்த்தகர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது. சிப்பங்களில் விற்கப்படும் பொருட்கள் சரியான எடையிலும் குறிப்பிட்ட விலையிலும் விற்பதைக் கண்காணிப்பதற்கு மத்திய அரசு பிறப்பித்துள்ள சிப்பப் பொருட்கள் ஆணை ஒன்றும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

50. 1976 அக்டோபர் முதற்கொண்டு விரிவான தென் உணவு மண்டலம் உருவான பின்பு, இந்த மாநிலத்திலிருந்து கேரள மாநிலத்திற்கு நெல், அரிசி எடுத்துச் செல்வதைத் தடுக்க உணவு புலனாய்வுத் துறையினரும், உணவுத் துறை அலுவலர்களும் முனைந்து செயலாற்றி வருகின்றனர். உணவுப் பொருள் சம்மந்தப்பட்ட இதர கட்டுப்பாடு உத்திரவுகளை அமுல் படுத்தவும் பதுக்கலைத் தடுக்கவும் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். 1976-ஆம் ஆண்டில் இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் கீழ் 8,932 குற்றங்களும் இந்திய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் 2,817 குற்றங்களும் பதிவு செய்யப்பட்டன. 1977-ம் ஆண்டில் ஜுன் மாதம் முடிய மொத்தமாக 894 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 1976-ம் ஆண்டில் 2.73 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பொருட்களும் 1977-ம் ஆண்டு ஜுன் வரை 34 லட்சம் மதிப்புள்ள பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

**உணவு விடுதிகளில் விலைக்கட்டுப்பாடு.**

51. உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு உணவு விடுதிகள் விலை நிர்ணய ஆணை 1976 ஏப்ரல் திங்கள் தமிழ்ப் புத்தாண்டு அன்று அமுல் செய்யப்பட்டது. இந்த ஆணையின்

படி பாமர மக்கள் பெரிதும் பயன்படுத்தும் இட்டலி, தோசை, அரிசிப் பொங்கல், ரவை உப்புமா, வடை, போண்டா, பூரி, காப்பி, தேநீர் ஆகிய ஒன்பது உணவுப் பண்டங்களுக்கும், ஜனதா சாப்பாட்டுக்கும், குறைந்தபட்ச எடைகளும் அதிக பட்ச விலைகளும் நிர்ணயிக்கப்பட்டன. இந்த ஆணை பொதுமக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது. இந்த ஆணையின் கீழ் நிர்ணயிக்கப்பட்டிருந்த விலைகள் குறைவாக இருந்தன என்றும், உணவு விடுதிகளின் தரத்தைப் பார்க்காமல் எல்லா உணவு விடுதிகளுக்கும் ஒரே சீரான விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன என்றும் உணவுவிடுதி பிரதிநிதிகள் முறையிட்டனர். அதன் பேரில் உணவு விடுதிகள் தரம் பிரிப்பது குறித்து சில கொள்கைகளை நிர்ணயிக்கவும், இந்த உணவுப் பொருட்கள் விலை நிர்ணய ஆணையை திறம்பட செயல்படுத்துவதற்கும், பரிந்துரைகள் செய்ய ஆறு அதிகாரிகளும் உணவு விடுதி பிரதிநிதிகள் மூவரும் அடங்கிய ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. இந்த குழு ஆகஸ்டு 1976-ல் அளித்த இடைக்கால அறிக்கையையொட்டி சில உணவுப் பொருள்களின் விலைகள் உயர்த்தப்பட்டன குழுவின் இறுதி அறிக்கை 1977 மே மாதம் அரசுக்கு வந்துள்ளது, குழுவில் உணவு விடுதிப் பிரதிநிதிகளாக இடம் வகித்த உறுப்பினர்கள் மாறுபட்ட குறிப்பு ஒன்றை கொடுத்துள்ளனர். குழுவின் இறுதி அறிக்கையும் உணவு விடுதிப் பிரதிநிதிகளின் மாறுபட்ட குறிப்பும் அரசின் ஆய்வில் உள்ளன. இது குறித்து விரைவில் ஆணைகள் வெளியிடப்படும். இந்த ஆணையைப் பிறப்பிப்பதற்கு அரசுக்கு அதிகாரம் கிடையாது என்று வாதித்து, நீதிமன்றங்களில் சில வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன.

52. அவசரகால நிலைமை ரத்து செய்யப்பட்டதையொட்டி பாதுகாப்பு விதிகளின்கீழ் பிறப்பிக்கப்பட்டிருந்த இந்த ஆணை செல்லுபடியாகாது என்ற தவறான எண்ணம் சிலருக்கு ஏற்பட்டிருந்தது. பாதுகாப்பு விதிகளின்கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் அவசரகால நிலைமை ரத்து செய்யப்பட்ட பின்பும் 6 மாதத்திற்கு செல்லுபடியாகும் என்ற சட்டபூர்வமான நிலைமையை விளக்கியும், உணவு விடுதிகளின் விலை நிர்ணய ஆணையைச் செயல்படுத்துவதில் உணவு விடுதி அதிபர்களின் ஒத்துழைப்பைக் கோரியும், அரசு ஓர் அறிக்கையை வெளியிட்டது. குழுவின் இறுதி அறிக்கையின் பேரில் அரசு முடிவு



எடுத்து புது ஆணைகள் வெளியிடும் வரை, இப்போதுள்ள உணவு விடுதிகள் விலை நிர்ணய ஆணை அமுலில் உள்ளது என்பதை விளக்கும் நேரத்தில், இந்த ஆணையை செயல்படுத்துவதில் உணவு விடுதி அதிபர்கள் அரசுடன் ஒத்துழைப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

## X. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்.

53. தமிழக அரசின் உணவுக் கொள்கையைச் செயல்படுத்தி, கொள்முதலை நடத்தி, மொத்த விநியோகப் பொறுப்பையும் ஏற்று நடத்தும் பணி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1972-ம் ஆண்டு ஜூலை மாதம் முதற்கொண்டு செயல்பட்டு வரும் இந்த வாணிபக் கழகம், பொது நலனுக்குத் தொண்டாற்றும் நோக்கத்துடன் அரசின் கொள்கைகளைச் செயல்படுத்தி வருவதோடு, லாபகரமாகவும் நடந்து வருகிறது. தீவிர கொள்முதல் நடந்த காலத்தில் ஆயிரத்திற்குமேற்பட்ட நேரடி கொள்முதல் நிலையங்களை கிராமங்களில் திறந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கு உடனுக்குடன் பணத்தை விவசாயிகளுக்கு கொடுத்து வரும் இந்தக் கழகத்தின் சேவை விவசாயிகளாலும் பொதுமக்களாலும் பாராட்டப்பட்டுள்ளது. 1975-76 ஆம் ஆண்டில் 8.9 லட்சம் டன்களுக்கு மேலாக கொள்முதல் செய்தது இந்தக் கழகத்தின் சாதனைகளில் மிகச் சிறப்பானதாகும். இப்பொழுது செயல்பட்டுவரும் வர்த்தக லெவி முறை திட்டத்தின்கீழ் வர்த்தகர்களிடமிருந்து நெல்லை வாங்கி சேமித்து விநியோகிக்கும் பொறுப்பையும் இந்தக் கழகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

54. மொத்த விநியோகப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதோடு 830 சில்லறை விற்பனைக் கடைகளையும் இந்தக் கழகம் நடத்துகிறது. இவற்றில் ஏறக்குறைய 192 கடைகள் சென்னை நகரில் மட்டும் உள்ளன. இக் கடைகள் தரமான பொருட்களை எடை குறையாமல் பொது மக்களுக்கு விற்பதைக் கண்காணிக்க கடுமையான தணிக்கை முறைகளும் சோதனைகளும் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

55. கோதுமை, லெவி சர்க்கரை ஆகியவற்றையும் அரசின் சார்பில் இக்கழகம் மத்திய அரசிடமிருந்து பெற்று மொத்த விநியோகத்திற்கு ஏற்பாடு செய்கின்றது.

56. இந்த விநியோகப் பொறுப்பைத் தொடர்ந்து மேற்கொள்வதுடன், விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படாத மற்ற பொருள்களையும் வாங்கி, நயமான விலைக்கு விற்க இந்தக் கழகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 1977-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தமிழ்நாட்டில் கடலை எண்ணெயின் நிலைமை மிகவும் நெருக்கடியாக இருந்த பொழுது, இக் கழகம் குஜராத் மாநிலத்திலிருந்து சுமார் 3,000 டன்கள் கடலை எண்ணெயை வாங்கி, மிகக் குறைந்த விலையில் பொது மக்களுக்கு விற்று வந்தது. இப்பொழுதும் கடலை எண்ணெயின் வெளிச் சந்தை விலை ரூ. 10.40-க்கு மேலாக உயர்ந்து விட்டதையொட்டி, இக்கழகம் கிலோ ரூ. 9.50 விலையில் கடலை எண்ணெயை மாவட்டத் தலைநகரங்களிலும் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள நகரங்களிலும் விநியோகிக்க ஏற்பாடு செய்துள்ளது. இது தவிர அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் சமையல் எண்ணெயை இக்கழகம் வாங்கி சுத்திகரித்து கிலோ ரூ. 8.50 விலையில் விற்க ஏற்பாடு செய்துள்ளது.

57. நவீன அரிசி ஆலைகளை இக்கழகம் தனது நேரடி மேற்பார்வையில் நடத்தி வருகின்றது. இக்கழகத்தின் நிர்வாகத்திற்கு வருவதற்கு முன்பு நட்டத்தில் ஓடிக்கொண்டிருந்த இந்த ஆலைகள் இப்பொழுது தங்கள் முழு உற்பத்தித் திறனையும் பயன்படுத்தி லாபத்தில் நடந்து வருகின்றன. இது தவிர எரிபொருள் எண்ணெயில் ஆகும் அதிக செலவைக் கட்டுப்படுத்த, உமியை எரித்தே உலர்த்தும் கருவிகளை இயக்கும் முறை ஒன்றை இக்கழகம் பரிசோதனைகள் மூலம் பக்குவப்படுத்தி, இந்த அரைவை ஆலைகள் மேலும் சிக்கனமாக நடப்பதற்கு வழி கண்டுள்ளது. இதனால் ஆண்டுக்கு 50 இலட்சம் ரூபாய் அளவில் செலவு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

58. மருத்துவ மனைகள், சிறைகள், மற்ற அரசு நிறுவனங்கள், உணவுப் பொருட்களை 'டெண்டர்' முறையிலிருந்து வாங்கிக் கொண்டிருந்த நிலை திருப்திகரமாக இல்லாததால், இந்த நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகிக்கும் பொறுப்பை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அரசு பணித்ததற்கேற்ப இப்பொறுப்பும் திறம்பட ஆற்றப்பட்டு வருகிறது.



59. 1976-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பயங்கரமான மழையினாலும், வெள்ளத்தினாலும் சென்னை நகரம் தாக்கப்பட்ட நேரத்திலே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கும் பொறுப்பை இக்கழகம் ஏற்றுக்கொண்டு, 10 நாட்களில் ஏறக்குறைய 8½ இலட்சம் உணவுப் பொட்டலங்களை மிகக் குறைந்த செலவில் உயர்ந்த தரத்தில் தயாரித்து விநியோகம் செய்து பொது மக்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

60. இக்கழகம் அமைக்கப்பட்டபோது அரசுக்குச் சொந்தமான சேமிப்புக் கிடங்குகளில் சுமார் 10,700 டன்கள் உணவுப் பொருட்களை வைப்பதற்கே வசதி இருந்தது. இக்கழகம் தன்னுடைய வருவாய் வசதிகளைப் பயன்படுத்தியே இப்பொழுது ஏறக்குறைய 1.25 இலட்சம் டன்கள் உணவைச் சேமித்து வைக்கக்கூடிய கிடங்குகளைக் கட்டியுள்ளது.

61. மொத்தத்தில், வர்த்தக ரீதியான திறமையும் சேவை மனப்பான்மையின் செம்மையும் ஒருங்கிணையும் வண்ணம், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் செயலாற்றி வருகின்றது.

## X. கிடங்கு வசதி.

62. தமிழக அரசின் சார்பில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் உணவுப் பொருட்கள் எதுவும் இப்பொழுது திறந்த வெளியில் வைக்கப்படவில்லை. எல்லா உணவுப் பொருட்களும் மூடப்பட்ட கிடங்குகளிலேயே வைக்கப்பட்டுள்ளன.

63. 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதி அன்று தமிழகத்தில் பல்வேறு நிறுவனங்களின் சார்பில் இருந்த கிடங்கு வசதி, சுமார் 23 இலட்சம் டன்களுக்கும் மேற்பட்ட உணவுப் பொருட்களை சேமித்து வைப்பதற்கு போதுமானதாக இருந்தது. இதில் 8.76 இலட்சம் டன்கள் வைக்கக் கூடியவை மூடும் கிடங்குகளாகவும், மற்றவை திறந்தவெளி கிடங்குகளாகவும் இருந்தன. 8.76 இலட்சம் மூடும் கிடங்குகளில், 1.11 இலட்சம் டன்கள் வைப்பதற்குரிய கிடங்குகள் மாநில சேமிப்புக் கிடங்கு கார்ப்பரேஷன் வசமும், 3.08 இலட்சம் டன்கள் வைப்பதற்குரிய கிடங்குகள் மத்திய அரசு சேமிப்புக் கிடங்குகள் கார்ப்பரேஷன் வசமும், 3.21 இலட்சம் டன்கள் வைப்பதற்குரிய சேமிப்பு கிடங்குகள் இந்திய உணவுக் கார்ப்பரேஷன் வசமும், 1.36 இலட்சம் டன்கள் வைப்பதற்குரிய கிடங்குகள் தமிழ்நாடு நுகர்

பொருள் வாணிபக் கழகத்தின் வசமும் இருந்தன. இது தவிர 6.5 இலட்சம் டன்கள் வைப்பதற்கு வசதியுள்ள கிடங்குகளை இப்பல்வேறு நிறுவனங்களும் தனியார் வசமிருந்து வாடகைக்கு எடுத்துப் பயன்படுத்தி வருகின்றன. இந்திய உணவுக் கார்ப்பரேஷன், இப்பொழுது விமானப் போக்குவரத்துக்கு பயன்படாத விமான நிலையத் தளங்களைப் பயன்படுத்தி, திறந்த வெளியில் 6.5 லட்சம் டன்கள் உணவுப் பொருட்களை சேமித்து வைத்துள்ளது.

64. இன்னும் அடுத்து மூன்று மாதங்களில் இப்பல்வேறு நிறுவனங்களும் மேலும் 37,800 டன்கள் வைப்பதற்குரிய முழுவதும் மூடப்பட்ட கிடங்குகளைக் கட்டுவதற்கு திட்டமிட்டுள்ளது. 1977-78-ம் ஆண்டு 1.50 இலட்சம் டன்கள் வைப்பதற்குரிய கிடங்குகளைக் கட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் திட்டமிட்டுள்ளது. இதில் பெரும்பகுதி வட்டத் தலைநகர்களில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய சேமிப்புக் கிடங்கு கார்ப்பரேஷன், தமிழகத்தில் 53,000 டன்கள் வசதியுள்ள சேமிப்பு கிடங்குகளைக் கட்ட ஒரு திட்டம் வகுத்துள்ளது. மாநில சேமிப்புக் கிடங்கு நிறுவனமும், 1977-78-ம் ஆண்டில், ஏறக்குறைய 21,500 டன்கள் வைப்பதற்கு வசதியுள்ள கிடங்குகளைக் கட்ட உத்தேசித்துள்ளது. தீவிர கொள்முதல் திட்டங்களையொட்டி மாநில மத்திய அரசுகளின் உணவுப் பொருட்களைச் சேமித்து வைக்க சேமிப்பு கிடங்கு வசதிகளை கணிசமான அளவு அதிகப்படுத்துவதே இத்திட்டங்களின் நோக்கமாகும்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்.

65. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1958-ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இதன் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் இரண்டு கோடி ரூபாய். இந்த மூலதனத்தைச் செலுத்தும் பொறுப்பை மத்திய அரசும், மாநில அரசும் பகிர்ந்துகொள்கின்றன. 1977-ம் ஆண்டு ஜுன் மாதம் 30-ம் தேதி முடிய 1.11 இலட்சம் டன்கள் உணவு பொருட்களை வைக்கும் வசதியுள்ள சேமிப்புக் கிடங்குகளை இந்த நிறுவனம் கட்டியுள்ளது. 1977-78-ம் ஆண்டில் கிடங்குகள் கட்டுவதற்கு 56 இலட்சம் ரூபாய் செலவிட இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.



## இணைப்பு II

## கோரிக்கை எண் 36—பல்வகை மூலதனச் செலவு

"மானியக் கோரிக்கை 56—பல்வகை—மூலதன முதலீடு" என்கிற தலைப்பின்கீழ் ரூ. 7,61,24,000 தொகை ஒதுக்கும்படி முன்மொழிகிறேன். இம்மானியக் கோரிக்கையில் பல்வேறு செலவினங்கள் அடங்கியுள்ளன. அவற்றில் சில கீழே விரிவாக எடுத்து விளக்கப்படுகின்றன.

### கூட்டுறவுத் துறை.

"கூட்டுறவு" க்கான நிதி ஒதுக்கீட்டை இம்மன்றத்தில் கோரும்போது, கூட்டுறவுத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களைப்பற்றிய விவரமான ஆய்வுரை மன்றத்திற்கு அளிக்கப்படும்.

கோரிக்கை எண். 56-இன்கீழ் உள்ள மூலதனச் செலவைப் பற்றி ஒரு சிறு குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

இம் மூலதனச் செலவு கோரிக்கையின்கீழ் ரூ. 3.61 கோடி கோரப்பட்டுள்ளது. இதில் முக்கியமான இனங்கள், தமிழ்நாடு மாநில நிலவள வங்கியால் சாதாரண மற்றும் தனி திட்டங்களுக்காக அறிவிக்கப்படும் கடன் ஈட்டுப் பத்திரங்களுக்கு ரூ. 145 இலட்சங்கள் அரசின் பங்காகக் கொடுப்பதற்காக உள்ளவையாகும். மாநில நிலவள வங்கியால் அதன் 223 முதல்நிலை வங்கிகள் மூலம் கொடுக்கப்படும் கடன்களின் அளவு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. 1974-75-ல் ரூபாய் 15.43 கோடி கடன்களாகக் கொடுக்கப்பட்டது. ஆனால் 1975-76-ல் ரூபாய் 19.05 கோடியும், 1976-77-ல் ரூபாய் 19.14 கோடியும் கடன்கள் கொடுக்கப்பட்டன. நீண்டகாலக் கடன்கள் கொடுப்பதில் இப்போக்கைப் பேணுவதற்கு, மாநில நிலவள வங்கியின் கடன் ஈட்டுப் பத்திர திட்டத்திற்கு உதவ அரசு ரூபாய் 145 இலட்சங்கள் ஒதுக்கியுள்ளது.

மேலும் ஒரு பெரிய மூலதனச் செலவு என்னவெனில் கூட்டுறவு சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு அரசு உதவித்தொகை வழங்குவதாகும். இந்திய ரிசர்வ் வங்கியின் தேசீய வேளாண்மைக் கடன் வசதி (நீண்ட காலப் பணி குறித்து) நிதியிலிருந்து இதற்காக அரசு கடன் பெற்று அத்தொகையை கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்கிறது. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும்

கிராமக் கடன் சங்கங்கள் ஆகியவற்றின் பங்கு மூலதனத்தில் 1977-78-ல் ரூபாய் 145 இலட்சங்கள் இவ்வாறு முதலீடு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு கவனத்தை ஈர்க்கும் சுவையான செய்தி என்னவெனில், இந்தக் கூட்டுறவு நிறுவனங்களால் கொடுக்கப்பட்ட குறுகிய மற்றும் மத்திய காலக் கடன்கள் 1975-76-ல் ரூபாய் 102 கோடியாக இருந்தது, 1976-77-ல் ரூபாய் 125.00 கோடியாகப் பெருகியது. 1977-78-ல் ரூபாய் 135 கோடி கடன்கள் மேற்கூறப்பட்ட நிறுவனங்களால் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், நகர வங்கிகள், விவசாய வங்கிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயக் கடன் சங்கங்கள் ஆகியவை நுகர்வுக் கடன்கள் கொடுக்கும் பணியை வலுவேற்றுவதற்காக ரூபாய் 5 இலட்சங்கள் இந்த நிறுவனங்களில் பங்கு மூலதனமாக முதலீடு செய்யப்படும்.

பல்வேறு கடன் நிவாரணம் மற்றும் கடன் ஒத்திவைப்பு சட்டங்கள் கொண்டுவரப்பட்டதன் விளைவாக கிராமப்புறங்களில் நுகர்வுக் கடன்கள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. நகையீட்டின் மேலும், சொந்தப் பிணையத்தின் மீதும் நுகர்வுக் கடன்கள் அதிக அளவில் கொடுப்பதன் மூலம் கூட்டுறவு நிறுவனங்கள் இக்கடன்கள் கிடைப்பதில் ஏற்பட்ட இடைவெளியை நிரப்ப முயற்சி செய்திருக்கின்றன.

1975-76ஆம் ஆண்டில் நகைகளின் மேல் கூட்டுறவு நிறுவனங்கள் கடன் அளித்தது ரூபாய் 22 கோடியாகும். ஆனால் 1976-77ஆம் ஆண்டில் நகைகளின்மேல் கொடுத்த கடனோ ரூபாய் 40.10 கோடியாகும். 1976-77 ஆம் ஆண்டில் சொந்தப் பிணையத்தின் மீது நுகர்வுக் கடன் கொடுத்தது ரூபாய் 23.63 இலட்சங்களாகும். கூட்டுறவு நிறுவனங்களால் கொடுக்கப்படும் நகைக் கடன்களையும், சொந்தப் பிணையத்தின் மீது அளிக்கப்படும் கடன்களையும் இன்னும் அதிக அளவில் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இரசாயன உரங்கள் விநியோகிக்கும் திட்டத்திற்காக விற்பனை இணையங்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையையும் மூலதனச் செலவில் மற்றுமொரு முக்கியமான இனமாகும். கிராமக் கடன் சங்கங்கள் மூலம் உரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. கூட்டுறவு சங்கங்கள் 1973-74-ல் ரூபாய் 34.18 கோடி மதிப்புள்ள உரங்கள் விநியோகித்தன. ஆனால் 1976-77-ல் அவை ரூபாய் 48.87 கோடி மதிப்புக்கு உரங்கள் விநியோகித்தன.





## பொதுப்பணித் துறை.

### மின்சார நிறுவனங்களுக்கு இழப்பீட்டுத்தொகை வழங்குதல்.

தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு தனியார் மின் வழங்கல் நிறுவனங்களைக் (கையகப்படுத்தல்) சட்டத்தின் 4 (1) பிரிவின் கீழ், 1973-74 ஆம் ஆண்டில் அரசு, தமிழ் நாட்டிலுள்ள கீழ்க்காணும் 7 தனியார் மின்சார நிறுவனங்களைக் கையகப்படுத்தியுள்ளது :—

1. சேலம்—ஈரோடு டி அண்டு இன்வெஸ்ட்மெண்ட் கம்பெனி லிமிடெட்.

2. திருநெல்வேலி-தூத்துக்குடி டி அண்டு இன்வெஸ்ட்மெண்ட் கம்பெனி லிமிடெட்.

3. எஸ். எம். ஈ. எஸ். கழகத்தைச் சேர்ந்த திருச்சி ஸ்ரீரங்கம் மின்சார நிறுவனம்.

4. கும்பகோணம் மின்சார கழகத்தின் கும்பகோணம் மின்சார நிறுவனம்.

5. நாகப்பட்டினம் மின் வழங்கல் கம்பெனியின் நாகப்பட்டின மின்சார நிறுவனம்.

6. வேலூர் மின் சக்திக் கழகத்தின் வேலூர் மின்சார நிறுவனம்.

7. செங்கோட்டை எலக்டிரிக் ஏஜென்ஸி.

மேற்சொன்ன சட்டத்தின் 5-வது பிரிவின் கீழ், மின்சார நிறுவன உரிமதாரருக்கு ஆண்டு நிகர ஆதாய அடிப்படையில் அல்லது சொத்து மதிப்பின் அடிப்படையில் இழப்பீட்டுத் தொகை வழங்கத்தக்கதாகும். இந்த நேர்வுகள் ஒவ்வொன்றிலும் வழங்கத்தக்க இழப்பீட்டுத் தொகை குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. இந்த நிறுவனங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்காக 1977-78 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 153.76 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

[1977 ஆகஸ்ட் 9

## உ று றை.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் நகரக் காவலர் குடியிருப்புகள் கட்டுதல்.

காவல் துறை சார்நிலைப் பணியாளர்களின் 80 சதவீதத்திற்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதே காவலர் வீட்டு வசதி திட்டத்தின் நோக்கமாகும். காவல் வீட்டு வசதி திட்டம் சாதாரணமாகப் பொதுப் பணித் துறையால் நிறைவேற்றப் படுகிறது. எனினும், கோவைபுதூர், ராஜா அண்ணாமலைபுரம் ஆகிய இடங்களில் காவல் துறை சார்நிலைப் பணியாளர்களின் குடியிருப்பு கட்டுவதற்கான இரண்டு திட்டங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் கொடுக்கப்பட்டுள்ளன.

ராஜா அண்ணாமலைபுரத்தில் காவல் துறை இன்ஸ்பெக்டர்கள் உட்பட, காவல் துறை சார்நிலைப் பணியாளர்களுக்கு 290 குடியிருப்புகள் கட்டுவதற்காக உள் துறையில் 5—12—1972 நாளிட்ட 3117 ஆம் எண் அரசு ஆணையின் மூலம் ரூ. 92.51 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்தத் தொகை ரூ. 92.51 லட்சத்தைக் கீழே குறிப்பிட்டுள்ளவாறு ஆண்டுத் தவணைகளில் கொடுக்கப் படவேண்டியுள்ளது.

| ஆண்டு. | தொகை (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1974-75 | 10.15 |
| 1975-76 | 20.29 |
| 1976-77 | 30.83 |
| 1977-78 | 20.69 |
| 1978-79 | 10.55 |
| மொத்தம் | 92.51 |

முதல் மூன்று தவணைகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. 1977-78 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 4-வது தவணையாக 20.69 லட்சம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது. இந்தத் தொகை சட்டமன்றத்தில் வரவு-செலவு திட்ட மதிப்பீடு அனுமதிக்கப்பட்டவுடன், வீட்டு வசதி வாரியத்திற்கு

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1977, ஆகஸ்ட், 10.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Dam across Gundambachi river.*

*42. *Q.* THIRU RAJKUMAR VIJAYA RAGHUNATHA TONDAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any scheme with the Government to construct a dam across Gundambachi river, Poombarai village, Kodaikanal taluk, Madurai district ; and

(*b*) if so, the amount sanctioned for this scheme and other details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(இ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு பொதுப் பணித்துறை அலுவலர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : கனம் சபாநாயகர் அவர்களே, அந்த பூம்பாறை கிராமத்தில் மூன்று நான்கு ஆண்டுகளாகப் பஞ்சம் ஏற்பட்டு, குடிதண்ணீர், விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை அரசாங்கம் சீக்கிரம் எடுத்து முடிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்] [1977 ஆகஸ்ட் 10

பட்டிருக்கிறது. இருப்பினும் இது ஒரு பின்தங்கிய பகுதியிலுள்ள திட்டம் என்கிற காரணத்தினுல், இது குறித்து அரசு விரைவில் முடிவு எடுக்கும்.

## கிண்டியிலுள்ள அரசினர் பூங்கா.

43 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சென்னை கிண்டி அரசினர் பூங்காவை தேசியப் பூங்கா வாக்கிடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தேசியப் பூங்காவாக மாற்றிஞல் அதன் நிர்வாகச் செலவுகளை மத்திய அரசே ஏற்குமா ? அல்லது மாநில அரசுதான் ஏற்க வேண்டுமா ? இந்த தேசியப் பூங்காவில் என்னென்ன காட்சிகள் இடம் பெறும் ? நீச்சல் குளம், படக் காட்சி, டெலிவிஷன் காட்சி, நாடகம் ஆகியவை இடம் பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இது இன்னும் அரசின் கவனத்தில் இருக்கிறது. இதுபற்றி எந்த முடிவையும் அரசு எடுக்கவில்லை. இதுபற்றி முடிவு எடுக்கிறபோது, இவை விரிவாக ஆலோசிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## சென்னையிலுள்ள மிருகக் காட்சிசாலை.

44 வினு—திரு. என். கிட்டப்பா : திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா —

சென்னை நகரிலுள்ள மிருகக் காட்சிசாலையினை நகரை விட்டு வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : ஆம். சென்னைக்குத் தெற்கில் வண்டலூருக்கு மாற்றும் செயற்குறிப்பு உள்ளது.



1977 ஆகஸ்ட் 9]

வழங்கப்படும். கடைசி இரண்டு தவணைத் தொகைகள் 1977-78-லேயே கொடுக்கப்பட வேண்டும் என்ற தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கோரிக்கையை அரசு ஏற்கவில்லை.

## மீன் வளத்துறை.

"மீன்வளம்" சம்பந்தமான கோரிக்கை எண் 56. பல்வகை முதற்பொருள் செலவின ஒதுக்கீடு கீழ்க்கண்ட திட்டம் மற்றும் திட்டமிடப்படாத வகைப்பாடுகளில் அடங்கும் :—

கோரிக்கை எண் 56. பல்வகை முதற்பொருள் செலவின ஒதுக்கீடு.

(ரூபாய் இலட்சத்தில்.)

| | திட்டம். | திட்டத்தில் சேராதது. | மொத்தம். |
|---|---|---|---|
| 498. கூட்டுறவு .. .. | 0·01 | .. | |
| 512. மீனளம் சம்மந்தமான முதற் பொருள் செலவினம். | 50·55 | 0·03 | 50·58 |

1977-78 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவிருக்கும் பலவகைத் திட்டங்களின் முக்கிய விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

கழிமுக மீன்வளம்.—ஐந்தாண்டுத் திட்டத்தில் கழிமுக மீன்வளம் முக்கியத்துவம் அடைந்துள்ளது. மொத்தம் 80,000 ஹெக்டேர் பரப்பளவுள்ள கழிமுகங்களும் காயல்களும் உள்ளன. இதில் 27,000 ஹெக்டேர் பரப்பளவுள்ள நீர் நிலைகளை இரால் மற்றும் இதர கடல் இன மீன்களின் உற்பத்தியை அதிகரிக்கப் பயன்படுத்தலாம். கழுவேலி மற்றும் பழவேற்காட்டில் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டுள்ள உவர் நீர் மீன் பண்ணைகளைக் கட்டி முடிக்க நடப்பு ஆண்டில் ரூ. 1.70 இலட்சம் செலவிடப்படும். இதைத் தவிர, அடையாற்றிலுள்ள உவர்நீர் பண்ணையில் ஒரு பரிசோதனைக் கூடத்தை நிறுவ ரூ. 0.42 இலட்சம் செலவிடப் படும்.

## அண்மைக் கடலாய்வும் ஆழ்கடல் மீன் பிடித்தலும்.

அண்மைக் கடலாய்வு மாநில அரசின் பொறுப்பிலும், தூரக் கடல் மற்றும் ஆழ்கடல் பகுதிகளின் ஆய்வு இந்திய அரசின் பொறுப்பிலும் உள்ளன. அண்மைக் கடற்பகுதிகளை ஆய்வு செய்வதற்காக மாநில அரசு சென்னை, கடலூர், மல்லிப்பட்டிணம்,

ராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அண்மைக் கடலாய்வு நிலையங்களை நிறுவியுள்ளது. இந்த நிலையங்கள் 30' மற்றும் 32' நீளமுள்ள சிறிய படகுகளையே பெற்றிருந்தன. படிப்படியாக, இந்நிலையங்களுக்கு பெரிய அளவுள்ள படகுகளை அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு மல்லிப்பட்டிணம் ஆய்வு நிலையத்திற்கு தேவையான $43\frac{1}{2}$' படகு ஒன்று 1977-78-ல் புதிதாகக் கட்டுவதற்கு ரூ. 5.89 இலட்சம் செலவிடப்படும். தவிர, முந்திய ஆண்டுகளில் ஒப்பளிக்கப்பட்ட கன்னியாகுமரி நிலையத்திற்கு தேவையான 30' படகு ஒன்றும் ராமேஸ்வரம் நிலையத்திற்கான $43\frac{1}{2}$' படகு ஒன்றும் கட்டி முடிப்பதற்கு ரூ. 6.01 இலட்சம் செலவிடப்படும்.

*உள்நாட்டு மீனளம்.*—உள்நாட்டு மீனளத்தைப் பெருக்குவதன் முக்கிய நோக்கம் மீன் வளர்ப்புக்குத் தக்க எல்லா நீர் நிலைகளிலும் விடுவதற்குத் தேவையான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதே. இதற்கு அனுசரணையாக தொடர்ச்சியாக நீர் கிடைக்கக்கூடிய நீர்த் தேக்கங்களுக்கருகில் மீன் பண்ணைகள், வளர்ப்புக் குட்டைகள், மீன் குஞ்சு வளர்ப்பு இடங்கள் ஆகியவை கட்டப்படுதல் வேண்டும். இக்கொள்கையை செயல்படுத்தும் பொருட்டு, ரூ. 5.00 இலட்சம் செலவில் ஆளியாறு, திருமூர்த்தி நகர் மற்றும் சாத்தனூர் நீர் தேக்கங்களில் கூடுதலான மீன் குஞ்சு வளர்ப்பு இடங்களும், மீன் வளர்ப்பு குட்டைகளும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பாலாறு—பொறந்தலாறு மற்றும் திருக்காட்டுப் பள்ளியில் தூண்டுதல் முறையில் முட்டை பெறும் நிலையங்கள் புதிதாக கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தவிர, பவானிசாகர், மேட்டூர் அணை மற்றும் லால் பேட்டையில் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களை முடிப்பதற்கு ரூ. 1.03 இலட்சம் செலவிடப்படும். மஞ்சளாறு மற்றும் வைகை அணைகளில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் மீன் குஞ்சுப் பண்ணைகளில் எஞ்சியுள்ள பணிகளை முடிப்பதற்கு ரூ. 2.11 இலட்சம் செலவிடப்படும். செம்பரம்பாக்கத்தில் உள்ள தூண்டுதல் முறையில் முட்டை வளர்ப்பு நிலையத்தின் எஞ்சியுள்ள பணியை செய்து முடிக்க ரூ. 0.30 இலட்சம் செலவிடப்படும்.





*பனிக்கட்டி நிலையம் மற்றும் குளிர்பதன நிலையங்கள்.*—பிடித்த மீன்களை பாதுகாக்கவும், அவற்றை நல்ல நிலையில் பொது மக்களுக்கு கிடைக்க வழி கோலவும், மீனவர்களுக்கு உதவும் பொருட்டு பனிக்கட்டி நிலையம், மற்றும் குளிர் பதன நிலையங்கள் மீன் வளத்துறையால் நிறுவப்பட்டுள்ளன.

பூம்புகார், பெரியதாழை, பவானிசாகர் மற்றும் உய்யாழிக் குப்பம் ஆகிய இடங்களில் உள்ள பனிக்கட்டி நிலையங்களில் எஞ்சிய பணிகளை செய்துமுடிக்க நடப்பு ஆண்டில் ரூ. 2.11 இலட்சம் செலவிடப்படும்.

*அடிப்படை தொழிற்கூடங்களும் பராமரிப்பு நிலையங்களும்:*—விசைப்படகுகளை பழுதுபார்ப்பதற்கு முக்கியமான மீன் இறங்கும் இடங்களில் அடிப்படை தொழிற்கூடங்களும் பராமரிக்கும் நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. தொழிற் கூடங்களிலும், பராமரிப்பு நிலையங்களிலும் எஞ்சியுள்ள பணிகளை செய்து முடிப்பதற்கும், கடலூர், ராமேஸ்வரம், மல்லிப்பட்டிணம், தூத்துக்குடி, பரங்கிப்பேட்டை, மண்டபம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வரும் நிலையங்களுக்கும் ரூ. 1.85 இலட்சம் நடப்பு ஆண்டில் செலவிடப்படும்.

*மீட்புக் கலன்கள்.*—மீனவர்களுக்கு கடலில் ஏற்படும் ஆபத்துகளின்போது உதவுவதற்காக அநேக நாட்களாக அவசியமாகத் தேவைப்பட்ட $43\frac{1}{2}$' அளவுள்ள இரண்டு மீட்பு கலன்களைக் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு நடப்பு ஆண்டில் ரூ. 10.00 இலட்சம் செலவாகும்.

*மைய அரசு ஆதரவுள்ள திட்டம்.*—*மீன்பிடித் துறைமுகங்கள்-இறங்கு துறைவசதிகள்:*—தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மல்லிப் பட்டிணத்திலும் கோடிக்கரையிலும் கட்டப்பட்டுள்ள தோணித் துறைகளின் எஞ்சிய பணிகளை முடிப்பதற்கு நடப்பு ஆண்டில் ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் ஏற்பு கிடைத்தவுடன் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்ன முட்டத்தில் ஒரு பெரிய மீன்பிடி துறைமுகம் கட்ட ஆரம்பிக்கப் படும்.

*உவர் நீர் மீன் பண்ணை.*—மைய அரசு ஆதரவு திட்டத்தின் கீழ் ரூ. 15.00 இலட்சம் செலவில் கிள்ளை என்னுமிடத்தில் 50 ஹெக்டேர் பரப்பளவுள்ள வியாபார நோக்கோடு கூடிய ஒரு உவர் நீர் மீன் பண்ணை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 1.00 இலட்சம் நடப்பு ஆண்டில் செலவிடப்படும்.

*மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.*—நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதியில் வளரும் மீன் உற்பத்தியைப் பெருக்க இந்திய அரசு ஒரு திட்டத்திற்கு ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் கூடுதலான மீன் பண்ணைகளையும், மீன் குஞ்சு வளர்ப்பு இடங்களையும் உதகமண்டலத்தில் கட்டுவதற்கு நடப்பு ஆண்டில் ரூ. 2.00 இலட்சம் செலவிடப்படும்.

*498. கூட்டுறவு.*—மீன் வளம் சம்பந்தமான 498. கூட்டுறவு என்னும் பெரும் தலைப்பில் செய்யப்பட்டுள்ள அடையாள ஒதுக்கீடு மீனவர் கூட்டுறவு சம்மேளனங்களுக்கு முதலீட்டுத் தொகை உதவியளிப்பதற்காகவே.

## தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை.

### கைவினைஞர் பயிற்சித் திட்டங்கள் பற்றிய குறிப்பு.

"கோரிக்கை—56—பல்வகை மூலதனச் செலவு—495-A இதர சமூக, சமுதாயப்பணிகள் மீதான மூலதனச் செலவு-ab வேலைவாய்ப்பு".

கைவினைஞர் பயிற்சித் திட்டம் தொடர்பான மூலதனச் செலவு குறித்த மானியக் கோரிக்கை "மானியக் கோரிக்கை 56—பல்வகை மூலதனச் செலவு" என்ற தலைப்பின்கீழ் காட்டப் பட்டுள்ளது.

1977-78 ஆம் ஆண்டில் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் கீழ்க்காணும் துணைத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக மாநில வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 13.83 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது :—

(i) *சிறப்புத் திட்டத்தின்கீழ் (பகுதிநேரம்) கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்குதல் :*

வேலை இழந்த பொற்கொல்லர்களுக்கும், மாதிரி அமைப்புச் செய்பவர்களுக்கும், கைத்தறி நெசவாளர்களுக்கும் உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் சேலம், திருச்சி,



பேட்டை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களில் நடைமுறையில் உள்ளது. இத் திட்டத்தை செயல்படுத்தும் நோக்குடன் கருவிகள் மற்றும், தளவாடங்கள் வாங்குவதற்காக இந்த நிதி ஆண்டில் ரூ. 1,000 அடையாள நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. இச் செலவினம் திட்டத்தில் சேராத பணிகளில் வகை செய்யப்பட்டுள்ளது.

(ii) *தொழிற்பயிற்சி நிறுவனங்களில் மாணவர் விடுதிக் கட்டிடம் கட்டுதல் :*

இம்மாநிலத்தில் உள்ள 24 தொழிற் பயிற்சி நிறுவனங்களில் நிலையான மாணவர் விடுதிக் கட்டிடங்கள் உள்ளன. இம்மாணவர் விடுதிகளில் பராமரிப்புக்கென்று நடப்பு நிதியாண்டில் ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(iii) *தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்:*

தொழில் பழகுவோர் ஒருசிலருக்குப் பயிற்சியளிப்பது 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தின்கீழ் தொழில் நிறுவனத்தின் கடமையாகும். தற்போது பொறியியல் தொழில் நிறுவனங்கள், உணவுக் காப்பக நிறுவனங்கள், அச்சுத் தொழில் நிறுவனங்கள் போன்ற 216 தொழில்கள், இச் சட்டத்தின்கீழ் வருகின்றன. பொருந்துநர், பற்றவைப்போர் மற்றும் வரைபட உதவியாளர் போன்ற 103 தொழில் பிரிவுகள் தொழில் பழகுநர் பயிற்சித் திட்டத்தின்கீழ் வகை செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதிலுமாக 1,247 தொழில் நிறுவனங்கள் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றன. அவைகள் தனியார், பொது மற்றும் கூட்டு நிறுவனங்கள் ஆகும். மேற்கூறிய தொழில் நிறுவனங்களில் 1977 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ஆம் நாள் கணக்குப்படி பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 9,481. இத் தொழில் நிறுவனங்கள் இந்த பழகுநர்களுக்கு செய்முறை பயிற்சியை அளித்து வருகின்றன. இருந்தபோதிலும் இந்த நிறுவனங்களில் பயிற்சியாளர்களுக்கு அடிப்படை நூலறிவு மற்றும் செய்முறைப் பயிற்சி அளிக்க போதிய வசதிகள் இல்லை. எனவே கிண்டி மற்றும் மதுரையில் உள்ள இரு தொழிற் பயிற்சி கூடங்களில் அடிப்படைப் பயிற்சி இத்தொழில் பழகுநருக்கு அளிக்கப்படுகிறது. கிண்டி தொழிற் பயிற்சி நிறுவனத்திலுள்ள அடிப்படைப் பயிற்சி நிலையத்திற்குக் கருவிகள் வாங்குவதற்காக 1977-78 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(iv) தொழில்களை பலதிறப்படுத்துதல்:

இத்திட்டத்தின்கீழ் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களாகக் கருதப்படுகின்ற நடைமுறையிலுள்ள தச்சர், அச்சுவார்ப்போர் மற்றும் கருமார் போன்ற தொழிற் பிரிவுகள் முற்றிலுமாக நீக்கப்பட்டும் அல்லது இத்தொழில் பிரிவுகளிலுள்ள இருக்கைகள் குறைக்கப்பட்டும் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களாகக் கருதப்படும் கம்மியர் (எலக்ட்ரானிக்ஸ்) மற்றும் இயந்திரப்பட வரைவாளர் போன்ற புதிய தொழில் பிரிவுகள் துவக்கப்பட்டிருக்கின்றன. புதிதாக அறிமுகப்படுத்தக் கருதியுள்ள தொழில் பாடமுறைகளுக்குத் தேவைப்படும் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்காக ரூ. 2.5 இலட்சமும் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 26,000 மும் நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

(v) புதிய சாதனங்கள் வாங்குதல்:

மத்திய அரசினால் பல்வேறுப்பட்ட தொழில் பிரிவுகளுக்கான கருவிகள் மற்றும் தளவாடங்கள் தரப்பட்டியலில் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாக கூடுதலாக கருவிகளும், தளவாடங்களும், வாங்கப்பட இருக்கின்றன. உதாரணமாக பழைய தரப் பட்டியலின்படி கம்மியர், வானொலி மற்றும் தொலைபட்கக் காட்சி தொழிற் பிரிவிற்கு டிரான்சிஸ்டர்கள் தேவை. ஆனால் திருத்திய தரப்பட்டியலின்படி மூடிய மின்னோட்ட மண்டல தொலைபடக் காட்சிப் பெட்டி தேவை (Closed Circuit Television) ஆகையால் 1977-78 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2.10 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(vi) தொழிற் பயிற்சி நிறுவனங்களை விரிவுபடுத்தல்:

இத்துறையின்கீழ் இயங்கும் 31 தொழிற் பயிற்சி நிறுவனங்களில் உள்ள பணிமனைக் கூடங்கள், தொழிற் பயிற்சிக் கூட வகுப்பறைகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் பலவகைப்பட்ட கட்டுமானச் செலவினத்திற்காகவும், பராமரிப்புச் செலவிற்காகவும் நடப்பு நிதியாண்டில் ரூ. 2 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(vii) தொழிற் பயிற்சி நிறுவனங்களில் மின் கம்பிகளைப் புதிதாகப் போடுதல்:

தொழிற் பயிற்சி நிறுவனங்களில் மின் கம்பிகளைப் புதியதாகப் போடுவதற்கு 1977-78 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 25,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



1977 ஆகஸ்ட் 9]

கைவினைஞர் பயிற்சித் திட்டம்:

நடப்பு ஆண்டில் "கம்மியர் (பொது எலக்ரானிக்ஸ்)" பயிற்சி வகுப்பு தொழில் பயிற்சி மாணவர்களுக்குத் தொடங்கப் பெறும். அடையாறில் உள்ள ஆய்வுக்கூட வசதிகளைப் பயன்படுத்த வாய்ப்பாக இருப்பதால் இந்தப் பயிற்சி வகுப்பு அடையாறில் உள்ள எலக்ரானிக் கூடத்தில் அமைக்கப்படும். 1977-78 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்கென ரூ. 3 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களைக் காலத்திற்கேற்ப மாற்றியமைத்தல்:

ஏற்கனவே தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் தேவைக்கு ஏற்ப மேலும் நுணுக்கமும் புதுமையும் வாய்ந்த தொழிற் கல்வி வகுப்புக்களை அறிமுகப்படுத்துவதற்கு முதல்படியாக இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் இந்திய தர நிர்ணயம் மற்றும் பொறியியல் வரைபட ஆய்வு வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தக் கல்வி வகுப்பின் கால எல்லை மூன்று முதல் நான்கு வாரங்கள் ஆகும். பல்வேறு தொழில் நிறுவனங்களிலிருந்து அனுப்பப்பட்ட முப்பத்தேழு பயிற்சியாளர்கள் இந்த வகுப்புகளில் இதுவரை பயிற்சி பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்கென நடப்பு நிதியாண்டில் ரூ. 1.70 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வீட்டுவசதித் துறை.

தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கான ஊக்க உதவி வீட்டுவசதித் திட்டம்.

இது 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டிருக்கும் தொழிலாளர்களுக்குக் குறைந்த வாடகை வீடுகள் கட்டுவதற்கான வீட்டு வசதித் திட்டமாகும். இவ் வீடுகள் தொழிலாளர்களுக்குக் குறைந்த வாடகைக்கு விடப்படுகின்றன.

[1977 ஆகஸ்ட் 9

1968-69 வரையில் இது மத்திய அரசின் பொறுப்பிலுள்ள திட்டமாக இருந்தது. அதன் பின்னர் மாநிலத் திட்டமாக இருந்து வருகிறது. திட்டச் செலவுகளுக்கான நிதி நெருக்கடியின் காரணமாக இத் திட்டத்திற்கு ஆண்டுதோறும் ஒரு சிறு தொகையே ஒதுக்க முடிந்தது. 1977-78 ஆம் ஆண்டுக்கு இத் திட்டத்தின் கீழ் தனியார் துறையைப் பொறுத்தவரை கடன் வகைக்காக ரூபாய் 7.5 இலட்சமும், மான்ய வகைக்காக ரூபாய் 2.5 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் பொதுத் துறைக்காக அடையாள ஒதுக்கீட்டுக்கு மட்டுமே வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம், தொழிற்சாலைத் தொழிலாளர் வீட்டு வசதிக்காக அமைக்கப்படும் பலவகை ஆதாரங்களில் ஒன்று என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

வீட்டு வசதி வாரியம், வீட்டு வசதி நகர்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து, வீடுகள் கட்டுவதற்கு நிதி வசதி பெற்று பொது மக்களுக்கு மட்டுமின்றி பொதுத்துறை உட்பட்ட தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கிறது.

தொழிற்சாலை தொழிலாளர்களுக்கென்று வீட்டு வசதி வாரியத்தால் நிறைவேற்றப்படும் திட்டங்களில் கீழ்க்கண்டவைக் குறிப்பிடத் தக்கவையாகும் :—

| | மொத்த வீடுகள் அங்கணங்கள். | ரூபாய் [லட்சத்தில்] |
|---|---|---|
| 1 வியாசர்பாடி அசோக்லேலண்டு தொழிலாளர்களுக்காக .. | 350 (48 அங்கணம்) | 61·13 |
| 2 பாடி மற்றும் அம்பத்தூர் குழு தொழிலாளர்களுக்காக .. | 415 | 53·47 |
| 3 அண்ணா நகரில் பாடி டி.வி.எஸ். குழு தொழிலாளர்களுக்காக .. | 420 | 53·26 |
| 4 பல்லாவரத்தில் யூனியன் கார்பைடு தொழிலாளர்களுக்காக .. .. | 145 | 21·82 |



1977 ஆகஸ்ட் 9]

| | மொத்த வீடுகள் அங்கணங்கள். | ரூபாய் [லட்சத்தில்] |
|---|---|---|
| 5 மின்வாரியத் தொழிலாளர்களுக்காக டாட்டாபாத், கோயம்புத்தூர் | 120 (அங்கணம்) 175 | 39·25 |
| நாமக்கல் .. .. .. .. | 96 | 9·51 |
| தஞ்சாவூர் .. .. .. .. | 122 | 16·85 |
| திண்டுக்கல் .. .. .. .. | 84 | 10·19 |
| விருதாச்சலம் .. .. .. | 65 | 9·25 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. | 13 | 1·42 |
| விழுப்புரம் .. .. .. | 20 | 2·82 |
| கடலூர் .. .. .. | 40 | 8·40 |
| காட்பாடி .. .. .. | 148 | 22·20 |
| 6 சிப்காட், இராணிப்பேட்டை.. .. | 132 | 20·95 |

## போக்குவரத்துத் துறை.

### எழுதுபொருள் அச்சுத்துறைக்கு, "மான்யக் கோரிக்கை 56. பலவகை மூலதன" ஒதுக்கீட்டின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்கான கொள்கைக் குறிப்பு.

மேற்கொண்ட வரவு-செலவு கணக்கின்கீழ் மொத்தம் ரூபாய் 9.11 இலட்சம் தொகை அடியிற்கண்ட வகைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(அ) அரசு அச்சகத்தில் "மானோ டைப்" பிரிவு திறம்பட செயல்படுவதற்காகவும், தக்க வசதிகளுடன் லாபகரமாக இயங்குவதற்காகவும் ரூபாய் 9.10 இலட்சம் தொகைக்கு இரண்டு "மானோ டைப் சூப்பர் காஸ்டர்" இயந்திரங்கள் வாங்குவது:

(ஆ) மதுரை வட்டார அச்சகத்திற்கு மாத் தளவாடங்கள் வாங்கியதில் மீதித்தொகை பட்டுவாடா செய்யவேண்டிய அவசிய மேற்பட்டால் ரூபாய் 1,000 அடையாள ஒதுக்கீட்டாக வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்வது.

## சமூக நலத்துறை.

### 488 இ—சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்கள்—அ.ஆ. அரிசன பழங்குடி மற்றும் பின்தங்கிய வகுப்பினர்.

கோரிக்கை எண் 56-ன் கீழ் அரிசன, பழங்குடி நலத் திட்டங்களில் பலவகை மூலதன ஒதுக்கீட்டுக்காக, 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 72.90 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இதில் ரூ. 0.51 இலட்சம் இந்திய அரசு ஆதரவுத் திட்டத்தின் கீழும், ரூபாய் 72.37 இலட்சம் மாநிலத்திட்ட ஒதுக்கீட்டின் கீழும் ஆகும்.

ஒதுக்கீடுகளின் விவரங்கள் கீழ்வருமாறு:—

1977-78 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு.

| | அரிசனங்கள் | பழங்குடி மக்கள் |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| மாணவர்கள் விடுதிகளுக்கு .. கட்டிடங்கள் கட்ட .. .. | 60·02 | 0·51 |
| பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்ட | 1·86 | .. |
| குடியிருப்புகள் .. .. .. | 0·01 | .. |
| சிறுர் பள்ளிக் கட்டிடங்கள் .. | 10·48 | .. |
| | 72·37 | 0·51 |

**விடுதிகளுக்கு கட்டிடங்கள் கட்ட.**—மொத்தமுள்ள 605 விடுதிகளில் (587 அரிசனங்களுக்கும், 18 பழங்குடி மாணவர்களுக்கும்), 80 விடுதிகள் (அரிசன மாணவர்கள் விடுதிகள் 69, பழங்குடி மாணவர் விடுதிகள் 11) தற்போது அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களிலும் மற்றவை வாடகைக் கட்டிடங்களிலும் உள்ளன.

அரிசன குடியிருப்பு மற்றும் மேம்பாட்டு வாரியம் அரிசன/பழங்குடி மாணவர்களுக்கான விடுதிகள் கட்டும் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. 1977-78 ஆம் ஆண்டு மேற்படி வாரியத்தின் மூலம் அரிசன பழங்குடி மற்றும் ஏனைய பின்தங்கிய வகுப்புகள் மாணவர்களுக்கு விடுதிகள் கட்ட ரூ. 60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ரூ. 0.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பத்து காணியில் பழங்குடி மாணவிகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள விடுதியைக் கட்ட ஆகும்.

**பள்ளிகளுக்காக கட்டிடங்கள் கட்ட.**—அரிசன/பழங்குடி நலத்துறை மூலம், அரிசன், பழங்குடி மாணவர்களுக்கு 24 உயர் நிலைப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன." இதில், 14 உயர் நிலைப் பள்ளிகளுக்கு சோதனைக்கூட வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. 1977-78 ஆம் ஆண்டு மேலும் 5 உயர்நிலைப் பள்ளி



களுக்கு சோதனைக்கூட வசதிகள் செய்து தரப்பட இருக்கின்றன. ஒவ்வொரு சோதனைக் கூடக் கட்டிடத்திற்கும் ரூ. 37,000 வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**குடியிருப்புகள்.**—1973-74-ம் ஆண்டு தமிழ்நாடு அரிசன குடியிருப்பு மற்றும் மேம்பாட்டு வாரியம் அமைக்கப்பட்டது. இந்த வாரியம் தமிழ்நாடு முழுவதும் படிப்படியாக குடியிருப்புகள் கட்ட பொறுப்பேற்றிருக்கிறது. இந்த வாரியத்தின் முதலீட்டுப் பங்குத் தொகைக்காக அடையாள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பாலர் பள்ளிக் கட்டிடங்கள்.**—1962 ஆண்டு முதல் 0-6 வயது வரம்புக்குட்பட்ட சிறுர்களுக்கு ஆன பள்ளிகள் தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பள்ளிகள் மரங்களின் கீழும், திண்ணைகளிலும் இயங்கி வந்தன. ஊராட்சிகளின் ஒத்துழைப்பாலும், அந்தந்தப் பகுதி மக்களின் ஒத்துழைப்பாலும் இப்பள்ளிகள் கூரைக் கொட்டகைகளிலும், வாடகை இல்லாத மற்ற கட்டிடங்களிலும் அமைக்கப்பட்டன. 1974 முதல் 1979 வரையான ஐந்தாண்டு காலத்தில் மேற் கூறப்பட்ட சிறுர் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கான செலவில் ஒரு பங்கை ஏற்க கேர் நிறுவனம் முன் வந்தது. 1974-75 ஆம் ஆண்டு தொடங்கி ஆண்டொன்றுக்கு 200 கட்டிடங்கள் கட்ட ஒப்பளிக்கப் பட்டது. 1977-78 ஆம் ஆண்டும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படும். இந்த 200 கட்டிடங்களில், 50 கட்டிடங்கள் அரிசன குடியிருப்பு மற்றும் மேம்பாடு வாரியம் கட்டும் குடியிருப்புகளிலும் (இவை புதிய பள்ளிகள்), 50 கட்டிடங்கள் ஒருங்கிணைந்த சிறுர் மேம்பாட்டுப் பணிகள் திட்டப் பகுதிகளிலும், 100 கட்டிடங்கள் தற்போது சிறுர் பள்ளிகள் இயங்கும் இடங்களிலும் இருக்கும். 1977-78 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ. 10.48 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

## வேளாண்மைத்துறை.

இயற்கை அளித்துள்ள சிறந்த உணவாகப் பால் கருதப் படுகிறது. மனித உடல் நலமுடனும் ஆரோக்கியத்துடனும் இருப்பதற்குத் தேவையான அனேகமாக எல்லாவகைச் சத்துப் பொருள்களும் இதன்கண் உள்ளது. உழவர்கள் பயிர்தொழில் முக்கியமாகக் கொண்டிருப்பினும் பாற்பண்ணை அவர்களது துணைத் தொழிலாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. தமிழ்

நாட்டில், கறவைமாடுகள் ஒவ்வொன்றும் சராசரி கொடுக்கக் கூடிய பால் அளவும், நபர்வாரியாக பருகும் பால் அளவும் உயர்ந்த தரத்தை அடையவில்லை. ஒரு மனிதனுக்குரிய சமனீட்டு உணவுக்கு ஈடு செய்ய நாளொன்றுக்கு 300 கிராம் பால் தேவைப்படுகிறது. அனைத்திந்திய அடிப்படையில் நபர்வாரியாகக் கிடைக்கும் சராசரி பால் அளவு 130 கிராம்; ஆனால், கால்நடை வளர்ப்பு பற்றிய செயற்குழு மதிப்பிட்டவாறு தமிழ்நாட்டில் நபர்வாரியாகக் கிடைக்கும் பால் அளவு 63 கிராம் மட்டுமே ஆகும். ஆகவே, குடியானவர்களுக்கு உகந்த, தனித்து செயல்படக்கூடிய ஒரு தொழிலாக பாற்பண்ணையைச் செய்வதற்காகவும், மக்களின் உணவில் சத்துக் குறைவை ஈடு செய்வதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாதவரத்தில் உள்ள கால்நடைக் குடியிருப்புக்கும் பாற்பண்ணைக்கும் பால்வளத்துறை பொறுப்புடையதாகும். இம்மாநிலத்தில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில், ஏனைய பாற்பண்ணை வளர்ச்சி நடவடிக்கைகளையும் இத்துறை கவனித்து வருகிறது. "பால்பெருக்குத் திட்டத்தின்கீழ்" இம் மாவட்டங்கள் வாரா. இம் மாநிலத்தில் உள்ள கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள்/ஒன்றியங்கள் அனைத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடும் பொறுப்பும் இத்துறைக்கு உள்ளது. "பால்பெருக்குத் திட்டத்தின்கீழ்" ஏனைய 8 மாவட்டங்களும் (செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், தருமபுரி, நீலகிரி, மதுரை) வருகின்றன.

தமிழ்நாடு பால்வள நிறுவனம், பாலைக் கொள்முதல் செய்து, செம்முறைப் பதப்படுத்தி, சென்னை, மதுரை மாநகரங்களுக்கு விற்பனை செய்வதையும், "பால் பெருக்குத் திட்டத்தை" செயல்படுத்துவதையும் கவனித்து வருகிறது. இம்மாநிலத்தில் பால் உற்பத்தி அளவை உயர்த்துவதில், கிராமங்களில் பரவலாக அமைந்துள்ள பால் கூட்டுறவுகள் குறிப்பிடத்தக்க பணியினைச் செய்து வருகின்றன. "பால் பெருக்குத் திட்டத்தின்கீழ்" "ஆனந்த்" பாணியில் அமைக்கப்பட்ட புதியவகை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இம்மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரையில் 1,133 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



தமிழ்நாடு பால்வள நிறுவனம், கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு பொறுப்புகள் வரையறுக்கப் பெற்றுள்ள பொதுத் துறை நிறுவனமாகும். இந்நிறுவனம் தமிழ்நாடு அரசுக்கே சொந்தமானது. இந்நிறுவனம், 1972 மே திங்களில் சட்டப்படி ஒருங்கிணைக்கப்பட்டு, பால்வளத்துறையின் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு, 1972 ஜூலை 1-ம் நாளன்று செயல்படத் தொடங்கியது. "பால்பெருக்குத் திட்டத்தின்கீழ்", செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை ஆகிய மாவட்டங்களில் பாற்பண்ணை வளர்ச்சித்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு இந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் திருநெல்வேலி மாவட்டங்களில் குறைந்த அளவிலும் இந்நிறுவனம் பணி புரிந்து வருகிறது. பாற்பண்ணை வளர்ச்சி, கால்நடை அபிவிருத்தி, தீவன உற்பத்தி, பால், பால்பொருட்கள் விற்பனை இவற்றில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

கால்நடை குடியிருப்பும், பாற்பண்ணையும்.

மாதவரத்தில் உள்ள கால்நடைக் குடியிருப்பு 816.85 ஏக்கர் பரப்பளவு உடையது. இந்தக் குடியிருப்பில் எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இலவசக் கால்நடை மருத்துவம், இனவிருத்தி வசதிகள், கால்நடைத் தீவனம் வழங்குதல், பால் வற்றிய மாடுகளை பீட்டுப்பராமரித்தல், உரிமதாரர்களுக்கும் அவர்களுக்குச் சொந்தமான கால்நடைகளுக்கும் இடவசதி அளிப்பதுடன், அவர்களுக்கு நிதி உதவி அளித்தல் ஆகிய வசதிகள் இவ்விடத்தில் செய்து கொடுக்கப்படுகின்றன. இந்தக் குடியிருப்பில் தற்போது 22 உரிமைதாரர்கள் உள்ளனர். இவர்கள் பாற்பண்ணைக்கு நாள்தோறும் சுமார் 600 லிட்டர் பால் வழங்குகின்றனர். மாதவரத்தில் உள்ள அரசு பாற்பண்ணை இத்துறையின் பொறுப்பில் செயல்படுகிறது.

இந்தப்பண்ணையில், அயலினக் காளைகளும் உயர் இனக் காளைகளும் வளர்க்கப்பட்டு, அவைகள் கூட்டுறவு சங்கங்களுக்கும், ஒன்றியங்களுக்கும் கலப்பு இனப் பெருக்கம் செய்வதற்காக வழங்கப்படுகிறது. 1976-77 ஆம் ஆண்டில் இப்பண்ணையிலிருந்து 11 முர்ரா இனக் காளைகள் தமிழ்நாடு பால்வள நிறுவனத்தாரின் கருத்தரிப்பு நிலையங்களுக்கும், 5 ஜெர்சி காளைகள் கால்நடை பராமரிப்பு துறைக்கும் வழங்கப்பட்டுள்ளன. இப்பண்ணையிலிருந்து 126 கறவை மாடுகள் கூட்டுறவு சங்கங்களுக்கும் மற்ற

பொது (சுற்றுலா) துறை.

நிலையங்களுக்கும் முற்போக்கு விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. 6 கலப்பின மாடுகள், கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டன. தற்போது இப்பண்ணையில் 600-க்கு மேற்பட்ட மாடுகள் உள்ளன. இவைகளில் ஏறக்குறைய 250 இளம் கன்றுகள் அடங்கும். இப்பண்ணையில் அதிக அளவில் பசு மாடுகளே உள்ளன. எருமை இனம் 5 சதவிகிதமே உள்ளது. இப்பண்ணையில் நாளொன்றுக்கு சராசரி 1,000 லிட்டருக்கு அதிகமான பால் உற்பத்தி செய்யப்பட்டு மாதவரத்தில் உள்ள பால்பண்ணைக்கு அனுப்பப்படுகிறது. பால் உற்பத்தி-பாற்பண்ணை வளர்ச்சித் துறை ஆணையாளர், பால்வள நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக இருப்பதோடு பால்வளத்துறை, கால்நடை வளர்ப்புத் துறைகளின் தலைவராகவும் இருக்கிறார்.

1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ம் தேதி முதல் கூட்டுறவு பால் விநியோக சங்கங்கள் மற்றும் யூனியன்களின் நிர்வாக பொறுப்பு பால் உற்பத்தி துறையின் கீழ் மாற்றப்பட்டுள்ளது. காஞ்சீபுரம், வேலூர், ஈரோடு, விருதுநகர், மதுரை, திருச்சிராப்பள்ளி, கடலூர் இவைகளை தலைமையகமாகக் கொண்டு 7 துணை பதிவாளர்கள் ஏழு பகுதிகளையும் நிர்வகித்து வருகின்றனர்.

1977-78 ஆம் ஆண்டு கீழ்கண்ட முக்கியமான திட்டங்களை ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் செயல்படுத்த உத்தேசித்துள்ளது:—

(அ) பாலின் தரத்தை மீண்டும் குளிர்பதம் செய்யாமல், நீண்ட காலம் பாதுகாப்பதற்காக 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு நவீன பாலை முறைப்படி சூடாக்கி சுத்தம் செய்யும் நிலையம் நிறுவப்படும். திருநெல்வேலியில் இது நிறுவப்பட உள்ளது. ரூபாய் 5 இலட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நாங்குநேரியில் 4,000 லிட்டர் பால் கொள்ளளவுள்ள ஒரு குளிர் சாதன நிலையம் நிறுவப்படும். இதனுடைய முதல் பொருள் செலவினம் ரூ. 2 லட்சமாகும்.

(இ) மாதவரம் பால்பண்ணைக்கு மாடுகள் வாங்க ரூ. 1.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு சில சில்லறை வேலைகளுக்கும் பண ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



(எ) நீலகிரி மாவட்டத்தில் பால்வள மேம்பாட்டிற்காக தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பங்கு மூலதனத்தில் ரூபாய் 12 இலட்சம் முதலீடு செய்ய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 10,000 விவசாயிகள் பயன் பெறுவர்.

**1977-78 ஆம் ஆண்டின் வரவு-செலவு ஒதுக்கீடு மானிய கோரிக்கை—56.**

(ரூ. ஆயிரத்தில்)

| | |
|---|---|
| 1. திருநெல்வேலியில் பாலை முறைப்படி சூடாக்கி சுத்தம் செய்யும் இயந்திர நிலையம் அமைப்பதற்கு | 5,00 |
| 2. குளிர்சாதன நிலையங்கள் அமைப்பதற்கு | 2,00 |
| 3. மாதவரம் பால்பண்ணைக்கு மாடுகள் வாங்குவதற்கு | 1,25 |
| 4. தொழிற் நுட்ப பொருள்கள் சாலைகள் கட்டிடங்கள் முதலிய இதர செலவினங்கள் | 3 |
| 5. தமிழ் நாடு பால்வள நிறுவனத்தின் பங்கு மூலதனத்திற்கான உதவித் தொகை | 12,00 |
| | 20,28 |

பொது (சுற்றுலா) துறை

உயர்ந்த பண்பாடு வழிமுறை, வரலாற்று புகழ்மிக்க நினைவுச் சின்னங்கள், வானுயர்ந்த கோபுரங்களைக் கொண்ட கோயில்கள், இயற்கைக் காட்சிகள் சூழ்ந்த எழில் இடங்கள், அழகுமிகு கடற்கரைகள், நீர்வீழ்ச்சிகள், மலைவாழ் இடங்கள், வனவிலங்குப் புகலிடங்கள் நிறைந்துள்ள தமிழ் நாடு, சுற்றுலாத் துறையில் திட்டமிட்ட வளர்ச்சியை அடைவதற்கு ஏற்ற அளவற்ற வாய்ப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சுற்றுலா வளர்ச்சிக்குரிய அந்த அரிய வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால், சுற்றுலாவுக்கு நமது திட்டப் பணிகளில் ஓரளவு முன்னுரிமை அளிக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

இந்திய சுற்றுலா வளர்ச்சி மன்றத்தின் பரிவுரைகளுக்கிணங்க, நமது மாநிலத்தில் 1971, மே திங்களில் சுற்றுலாத்துறை என்ற ஒரு தனித்துறை அமைக்கப்பட்டது. பிரச்சாரம், விளம்பரம் உட்பட பொதுவான நிர்வாக, ஒழுங்குமுறை மேம்பாட்டுப் பணிகளை பொது (சுற்றுலா) துறை (இயக்குநர் அலுவலகமும், செயலக அமைப்பும் இதில் சேர்ந்துள்ளன) கவனித்து வருகிறது. சுற்றுலா மாளிகைகளையும் சுற்றுலாப் பயணிகளுக்கான முழு வசதி வண்டிகளையும் நிர்வகிக்கும் பணி முதலிய வணிகமுறை நடவடிக்கைகளை 1971, ஜூலையில் அமைக்கப்பட்ட தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கவனித்துக் கொள்கிறது.

தலைமையிடத்தில் துறை-செயலக அமைப்பு இருப்பதோடு மதுரை, உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, சேலம், மாமல்லபுரம், சென்னை ஆகிய இடங்களில் சுற்றுலாத் துறை அலுவலகங்கள் உள்ளன. இந்த அலுவலகங்கள் சுற்றுலா பற்றிய தகவல்களைப் பரப்புவதோடு மட்டுமல்லாமல், சுற்றுலா வளர்ச்சிக்காக களப்பிரிவுகளாகச் செயல்படுவதோடு, அந்தந்தப் பகுதிகளில் விளம்பரப் பணிகளையும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளையும் கவனித்து வருகின்றன.

**சுற்றுலாத் தகவல் வழங்குமிடங்கள்.**—மதுரை, திருச்சி, இராமேஸ்வரம் ரயில் நிலையங்களிலும், கோடைக்கானலிலும் செயல்படுகின்றன. சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் சுற்றுலாத் தகவல் வழங்குமிடமொன்று விரைவிலேயே திறக்கப் படவிருக்கிறது. புதுடில்லியில் சுற்றுலாத் தகவல் நிலையம் திறப்பது குறித்து அரசு முனைப்பாக ஆய்ந்து வருகிறது.

இம்மாநிலத்தில் அடுத்துவரும் ஆண்டுகளில் சுற்றுலா வளர்ச்சிக்கான செயல்திட்டம், உள்நாட்டிலும், அனைத்து நாட்டு நிலையிலும், தமிழ் நாடு ஒரு சிறந்த சுற்றுலாப் பகுதியாக உருவாக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு வகுக்கப்பட வேண்டியுள்ளது. 1980 ஆம் ஆண்டுக்குள்ளாக, இந்தியாவுக்கு சுமார் பத்து லட்சம் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தரக்கூடும் என்று மதிப்பிடப்படுகின்றது. தற்போதுள்ள சுற்றுலா வளர்ச்சிப் பாங்கின் அடிப்படையில் தமிழ் நாடு 3 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை எதிர்பார்க்கக்கூடும். உள்நாட்டில் சுற்றுலாத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சிகளையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.



தமிழ் நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்குத் திட்டமிடுதல் என்பது எதிர்பார்க்கப்படும் உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கத்துடன், சுற்றுலா வசதிகளைச் செய்வதையும் விரிவுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு விரிவான கண்ணோட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குப் பங்கு மூலதன உதவி**—தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளப் போகிற பலதிறப்பட்ட சீரமைப்பு வேலைகளுக்கு 1977-78 ஆம் ஆண்டில் ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஏற்காடு:** ஏற்காடு சேர்வராயன் மலையின் பொன்னகரம் என அழைக்கப்பெறுகிறது. குறைந்த வருமானமுடைய சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் இங்கு வருவதால் இப் பகுதிக்கு தனி முக்கியத்துவம் அளிப்பது இன்றியமையாததாகும். ஏற்காடு பகுதியையும் அங்குள்ள ஏரியையும் மேம்படுத்துவதற்காகப் பெரும் திட்டம் ஒன்றைத் தயாரிக்க கட்டிடக் கலைஞர் ஒருவரை அரசு நியமித்தது.

இந்த அறிக்கையைச் செயல் படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுப் படிப்படியாக திட்டத்தை முடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வேரியின் விரிவாக்கத்திற்கான முதற்கட்டப் பணிகளை மேற்கொள்வதற்கு 1.93 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**கோடைக்கானல்:** நமது மாநிலத்தில் கோடைக்கானல் மற்றொரு பெரிய மலைவாழ் ஓய்விடமாகும். இங்கு பயணிகளுக்காக மேலும் பல்வேறு நல வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும். இம்மலை வாழ் இடத்தின் மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை படிப்படியாக மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் இங்குள்ள ஏரியைச் சுற்றி சில சிறு அளவிலான மேம்பாட்டுப் பணிகளுக்கு 0.53 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**முட்டுக்காடு—கோவளம் வனப்புமையம்:** சென்னைக்கும் மாமல்லபுரத்திற்குமிடையிலான கடற்கரைப் பகுதி மேம்பாடு குறித்து ஐக்கிய நாட்டு வளர்ச்சித்திட்ட நிபுணர் குழு அனுப்பியுள்ள பரிவுரைகளின்படி, இயற்கை அழகு மிக்க கடல் நீரோடை

[1977 ஆகஸ்ட் 9

களைப் பயன்படுத்திக்கொண்டு, முட்டுக்காடு—கோவளத்தைச் சுற்றியுள்ள பகுதியை எழில் மிக்க பூங்காவாகப் பேணிக்காக்க வேண்டியுள்ளது. இவ்விடத்தை மனமகிழ் இடமாக மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. திட்ட அறிக்கையை தயாரிப்பதற்காகக் கட்டிடக்கலை வல்லுநர் ஒருவர் நியமிக்கப்பட இருக்கிறார். எனவே, 1977-78 ஆம் ஆண்டிற்கு அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

பொது.—இம் மாநிலத்தில் முக்கியமாக அனைத்துப் பயனரிகள் மையங்களிலும் பயணிகளுக்குத் தேவைப்படும் அடிப்படையான வசதிகளைச் செய்து கொடுக்கும் பல்வேறு திட்டங்களை இந்த துறை ஆய்ந்து வருகிறது. உள்நாட்டுப் பயணிகள் இன்பப் பயணம் மேற்கொள்வதற்கு அரசு ஆக்கமும் ஊக்கமும் தருவதற்கு ஆவலாய் உள்ளது. உள்நாட்டுப் பயணிகளுக்கு வேண்டிய அனைத்து இன்றியமையாத வசதிகளையும் செய்து கொடுக்க எண்ணி உள்ளது. சரியாக அறியப்பெறாத பயணிகள் இதுவரை போய்ப் பாராத, தென் ஆற்காடு மாவட்டத்தில் சிதம்பரம் அருகில் உள்ள 'பிட்சாவரம்', வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஏலகிரி, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆவுடையார் கோவில் போன்ற பயணிகள் மையங்களை மேலும் வளப்படுத்துவதற்காக அரசு மேலும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. மக்கள் ஓரளவே அறிந்துள்ள இத்தகைய பயணிகள் மையங்களின் வளர்ச்சிக்காகவும் உள்நாட்டுப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகவும் நிதி வாயில்களைக் கருத்திற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.



1977 ஆகஸ்ட் 10]

*மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்* : தற்போது சென்னையில் இருக்கும் மிருகக் காட்சிசாலையை வண்டலூருக்கு மாற்ற இருப்பதற்குக் காரணம், மிருகக் காட்சிசாலை இருக்கும் இடத்தை, சென்டிரல் ரெயில்வே நிலையத்தை விஸ்தரிப்பதற்குக் கேட்கிறார்கள். ஆகவே மிருகக் காட்சிசாலையை வண்டலூருக்கு மாற்றலாமா என்ற ஆலோசனை இருக்கிறது.

*திரு. ப. உ. சண்முகம்* : மத்திய அரசாங்கம் சென்டிரல் ரயில் நிலையத்தை விஸ்தரிக்க மிருகக் காட்சிசாலைப் பகுதியைக் கேட்பதோடு, மூர்மார்க்கெட்டை இடித்துக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வந்தார்கள். அதற்கு இந்த அரசு இசைவு கொடுத்துவிட்டதா என்று அறிய விரும்புகிறேன். வண்டலூரில் மிருகக் காட்சிசாலையை அமைக்கும் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்* : பேரவைத் தலைவர் அவர்களே, மிருகக் காட்சிசாலையை நல்ல இயற்கைச் சூழல் உள்ள பகுதியில் வைக்க வேண்டுமென்ற ஆலோசனையைப் பலரும் சொன்னார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும். மூர்மார்க்கெட்டை இடித்துக் கொடுக்கும் முடிவிற்கு அரசு வரவில்லை. அதுபற்றி முடிவு எடுக்கிறபோது அறிவிக்கிறேன்.

*திரு. என். கிட்டப்பா* : மிருகக் காட்சிசாலை மாநகராட்சியின் பொறுப்பில் இருப்பதால், போதுமான நிதி ஆதாரம் இல்லாமல், மிக மோசமான நிலையில் இருப்பதால், அரசே நேரிடையாக அந்த நிர்வாகத்தை எடுத்துக்கொள்ள முன்வருமா என்று அறி விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்* : இதை வனத் துறையே ஏற்று நடத்தலாமா என்கிற ஆலோசனை கவனிக்கப்பட்டு வருகிறது.

*திரு. க. அன்பழகன்* : தலைவரவர்களே, சென்னையிலே உள்ள அந்த விலங்குக் காட்சிசாலையினுடைய இடம் முழுவதும் ரெயில்வே இலாகாவிற்குத் தருவதற்கு ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்டதாக ஒரு நினைவு. அப்படி ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்குமானால் அந்த விலங்கு காட்சிசாலையை விரைவாக மாற்றுவதற்கான அடிப்படையில் என்ன பணிகள் ஆற்றப்பட்டிருக்கின்றன?

*மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்* : விரைவாக நீக்க வதற்கு எந்தவிதமான பணிகளையும் இதுவரைக்கும் அரசு றிய எடுத்துக் கொள்ளவில்லை.

[1977 ஆகஸ்ட் 10

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, வண்டலூரிலே அமைக்கவிருக்கிற மிருகக்காட்சிசாலையைப் பற்றி 4 ஆண்டுகளாகவே சொல்லிக் கொண்டு வருகிறோம். இது எப்பொழுது முடிவடையும்? எவ்வளவு இடங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, கூடிய விரைவில் மாற்றுகின்ற பொறுப்பு, அரசாங்கத்தினுடைய நிதியையும் மத்திய அரசாங்கத்திற்கு அந்த இடத்தை ஒதுக்கித் தர வேண்டுமென்ற நெருக்கடியையும் பொறுத்தது.

திரு. பண்ணை கே. சேதுராம்: தலைவரவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மிருகக் காட்சிசாலைக்குக் கொடுத்த சிங்கத்தைக் கடந்த கால ஆட்சியில் பட்டினி போட்டு சித்திரவதைச் செய்ததாகச் சொல்கிறார்கள். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குத் துணைக் கேள்வியாக அது அமையவில்லை.

திரு. கே. கந்தசாமி: மிருகக் காட்சிசாலையில் வெள்ளைப் பன்றி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மதுரையிலேயிருக்கிற நாகமலை தீர்த்தத்திலே வெள்ளைப் பன்றியை வளர்ப்பதன் மூலமாக, அவற்றை மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பி, அதிகப் பொருள் வருவாய் ஈட்டி வருவதாக அறிகிறேன். அந்த வெள்ளைப் பன்றியை வளர்த்து . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, சென்னை மிருகக் காட்சிசாலையை வேறிடத்திற்கு மாற்றப் போகிறார்களா என்பது. அதன் உள்ளே என்ன என்ன மிருகங்கள் இருக்கின்றன, என்ன நிறத்திலே இருக்கின்றன என்பதல்ல கேள்வி.

திரு. கே. கந்தசாமி: அங்கே இருக்கக்கூடிய மிருகங்களை அது சார்ந்தது என்ற காரணத்தாலே It relates to the main issue ஆக, அதைப் பார்க்கிற மக்களிடமும் ஊக்கம் ஏற்படுத்தி, அதே நேரத்தில், பொருள் வருவாயை அது ஈட்டித் தருவதன் மூலம், நமது நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க முயலலாமே. அதைச் செய்ய அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.



1977 ஆகஸ்ட் 10]

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த மிருகக் காட்சிசாலையை வண்டலூருக்கு மாற்ற இருப்பதாக அறிவித்தார்கள். வண்டலூருக்கு மாற்றுவதைவிட, சென்னை மாநகரத்திலேயே கிண்டி கவர்னர் குடியிருப்புக்கு அருகில் உள்ள தோட்டத்தில் அமைப்பது பொருத்தமாக இருக்குமா என்பதை ஆராயுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பொருத்தமாக இருக்குமா, இல்லையா என்பதைப்பற்றி அரசு வேண்டுமானால் ஆலோசிக்கலாம்.

திரு. நா. பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, கிண்டியிலுள்ள மிருகக்காட்சி சாலையின் உள்ளே போய் பார்த்தால், மிருகங்கள் மிகவும் கம்மியாக இருக்கின்றன. கூட்டம் தினமும் நூற்றுக் கணக்கில் போகிறார்கள். எதையோ பார்க்க வேண்டுமென்ற ஆர்வத்தால் உள்ளே செல்கிறார்கள். உள்ளே சென்றால் ஏமாற்றமாக இருக்கிறது. ஆகவே, இந்தியாவிலுள்ள அத்தனை வகையான மிருகங்களையும் அங்கே கொண்டு வந்து வைத்து, அந்த மிருகக்காட்சி சாலையை அபிவிருத்தி செய்ய உத்தேசம் உண்டா? அங்கே நுழைய 30 பைசா கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது. உள்ளே, டீ, காபி சாப்பிட்டால் 70 பைசா வாங்குகிறார்கள். இதையெல்லாம் சரி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: உறுப்பினர் தயவு செய்து தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. முத்தையா: தலைவரவர்களே, சென்னையிலே இருந்து வண்டலூருக்கு மாற்றுகிற இந்த யோசனையைவிட மதுரை நல்ல இடமாக இருக்கும் என்ற முறையிலே, அங்கே மாற்ற வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருக்கிறது. அப்படி மாற்ற அரசு ஏதேனும் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே இருக்கிற ஒவ்வொரு உறுப்பினரும் ஆர்வத்தின் காரணமாக, தங்கள் இடத்திலே அந்த மிருகக்காட்சி சாலை இருக்க வேண்டுமென்று விரும்புவதிலே ஆச்சரியம் இல்லை. இருந்தாலும், அரசாங்கம் ஒரு முடிவு எடுத்துள்ளது. அதைத் தவிர வேறு எந்த எண்ணமும் இந்த அரசாங்கத்திடம் இல்லை.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, மிருகக்காட்சி சாலையின் உள்ளே சென்றால் அத்தனை கூண்டுகளும் காலியாக இருக்கின்றன. அதனால், சரியானபடி மிருகங்களைப் பராமரிக்க ஏதாவது திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, அத்தனை கூண்டுகளும் காலியாக இருக்கிறது என்று சொல்வது சரியல்ல. சில் நேரங்களில் சில கூண்டுகள் காலியாக இருக்கலாம். சில நேரங்களில், கூண்டுகளைச் சுத்தப்படுத்துவதற்காக, அந்த மிருகங்கள் வேறு இடங்களுக்குக்கூட மாற்றப்பட்டிருக்கலாம்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : மிருகக் காட்சிசாலையைப் பார்க்கும் வகையிலும், ஸ்னேக் பார்க், மான்கள் சரணாலயம், கிண்டியிலே கவர்னர் மாளிகையின் வேலியோரத்தில் இருக்கிறது. இவை அத்தனையையும் ஒரே சுற்றிடத்தில் அமைக்க அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்</u> : பேரவைத் தலைவரவர்களே, மான், அதிகமான இடத்தில் ஓடியாடி விளையாட வேண்டிய நிலையிருக்கிறது. இயற்கைச் சூழ்நிலையிலேதான் புள்ளி மான் பூங்கா அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மிருகங்களை அங்கே வைப்பதற்குப் போதுமான இடம் இருக்காது என்றுதான் கருதுகிறேன்.

<u>திரு. நா. சுந்தரராஜ்</u> : இப்பொழுது இருக்கிற மிருகக்காட்சிசாலை சாதாரண அளவிலே இருக்கிறது. இந்தியாவிலேயே மிகப் பெரிய மிருகக் காட்சிசாலையாக அதை அமைக்க, ஏதாவது உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற இடத்தை நாம் காலி செய்யப் போகிறோம். வண்டலூருக்குப் போகின்ற நேரத்தில் பெரிய விஸ்தீரணமான இடத்தில் அமைக்க அரசு யோசிக்கும்.

<u>திரு. எஸ். ஆர். இராதா</u> : தலைவர் அவர்களே மாநகராட்சியிலிருந்து இந்த மிருக காட்சிச்சாலையை அரசு ஏற்று நடத்துகிறபோது, அங்கு இருக்கிற தொழிலாளர்கள், தொழில் செய்பவர்களுக்கு அதே நிலையில் பாதுகாப்பு அளிக்கும் திட்டம் இருக்கிறதா?

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றிய திட்டமும் இதோடு சேர்ந்திருக்கிறது.

<u>திரு. கெ. சொக்கலிங்கம்</u> : நான் நீண்ட நேரம் கையைத் தூக்கிக்கொண்டு இருக்கிறேன். வண்டலூர் என்னுடைய தொகுதியில் இருக்கிற காரணத்தால் கேட்கிறேன். நீண்டகாலமாக இந்தப் பிரச்னையைத் தள்ளி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்து இன்னும் வேலை துவங்கவில்லை. நானும் பெருமையோடு எதிர்பார்க்கிறேன். இந்த அரசாவது அதற்கான ஏற்பாட்டைச் செய்யுமா என்று கேட்கவிரும்புகிறேன்.



<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாவது அதைச் செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இந்த அரசு நிச்சயமாக அதைச் செய்யும். மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கோரிக்கையை முந்தைய ஆட்சியில் வைத்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும்.

<u>திரு. என். வரதராஜன்</u> : மிருகங்களின்மீது பரிவு காட்டி அதிகமான நேரத்தை ஒதுக்குகிற தலைவருக்கு நன்றி. நம்முடைய மத்திய ரயில் நிலையத்தை அதிகமாக விஸ்தரிப்பதற்காக மத்திய சர்க்கார், மிருகக் காட்சி சாலை இருக்கும் இடத்தைக் கேட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதே போல் சென்னை நகரத்தில் உள்ள பிரதான இடங்களையும் மத்திய சர்க்கார் கேட்டிருப்பதாக வதந்தி நிலவுகிறதே, அது உண்மையா? கோட்டை உள்பட இடம் தேவை என்று சொல்கிறார்கள். வேறு இடத்தில் இந்த அரசு கோட்டையை நிர்மாணித்துக் கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அடுத்து இந்த மிருகங்கள் வரலாற்று ரீதியாக மறைந்து வருவதாகச் சொல்கிறார்கள். இப்போது ஏதாவது மாமிசத்தைப் பாதியும், சைவம் பாதியும் சாப்பிடுகின்ற விலங்குகள் உற்பத்தியாகி இருக்கிறதா! என்று கேட்க விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்</u> : வதந்திகளின் பேரில் எழுப்பப்படுகின்ற கேள்விக்கு பதில் சொல்ல இந்த அரசு தயாராக இல்லை. மற்ற பகுதியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. து. புருஷோத்தமன்</u> : தலைவர் அவர்களே, மாற்றப்பட இருக்கிற மிருகக் காட்சி சாலையை கவர்னர்தோட்டத்திலே மாற்றினால் வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு முக்கியமான காரணம், அது என்னுடைய தொகுதி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுற்றுலா பயணிகளைக் கவரத்தக்க வகையிலே—அங்கே நிறைய சுற்றுலா பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். காமராஜ் அவர்களுடைய நினைவாலயம், காந்தி மண்டபம், இராஜாஜி மண்டபம், சிறுவர் பூங்கா, ஸ்நேக் பார்க் ஆகியவைகள் எல்லா சுற்றுலா பயணிகளையும் கவரத்தக்க வகையில் அந்த இடம் இருக்கிறது. ஆகவே இயற்கைச் சூழ்நிலை மிகுந்த அங்கே மிருகக் காட்சிச் சாலையை அமைத்தால் சுற்றுலா பயணிகளுக்கு நலமாக இருக்கும் என்று தெரிவித்து அப்படிப்பட்ட யோசனை இருக்கிறதா என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்திடம் போதுமான நிதி நிலை இப்போது இல்லை.

[1977 ஆகஸ்ட் 10

திரு. துரை முருகன் : இந்த மிருகக் காட்சி சாலையில் மிருகங்களைக் கூண்டுக்குள் போட்டு அடைத்து விடுகிறார்கள். ஹைதராபாத்திலே இருப்பதைப் போல, மிருகங்களைத் தன்னிச்சையாக வெளியில் விட்டு, அதனூடே நாம் சென்று பார்க்கிற அளவுக்கு புதுமையான முறையில் மிருகக் காட்சி சாலை அமைக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, வண்டலூரில் அமைக்க இருக்கிற இந்த விலங்குக் காட்சி சாலைக்குப் போதிய நிதி இல்லை என்று சொன்னார்கள். ஆனால் மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கிற நிலத்திற்குக் கிடைக்கிற நஷ்ட ஈட்டைக் கொண்டுதான், அதைப் பெற்றுத்தான் மிருகக் காட்சி சாலை அமைக்கப்படும் என்று குறிப்பு இருக்கிறது. இதிலே நஷ்ட ஈடு கொடுப்பதாக மத்திய அரசு ஒப்புக் கொள்கிறது. பணமே இல்லை என்று சொன்னார். நஷ்ட ஈடு எவ்வளவு என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதா ? மூர் மார்க்கட்டை இடித்தால் வேறு இடத்தில் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ? இந்த ஏற்பாடும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, மூர் மார்கெட்டை இடித்துக் கொடுப்பதா அல்லது அந்த இடத்தை அப்படியே ஒப்படைப்பதா என்ற குறிப்பு என்னிடத்தில் இல்லை. மிருகக் காட்சி சாலை இருக்கிற இடத்திற்கு மத்திய சர்க்கார் அதிகமான நஷ்ட ஈட்டுத் தொகை கொடுக்கிறது. அதை வைத்து இங்கே ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் ஊருக்கு மிருகக் காட்சி சாலை கேட்டார்கள். மத்திய சர்க்கார் கொடுக்கின்ற நஷ்ட ஈட்டுத் தொகையை வைத்து பல்வேறு இடங்களில் மிருகக் காட்சி சாலை அமைக்க முடியாது.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, இந்த மிருகக் காட்சி சாலை மாற்றப்படுகின்ற நேரத்தில், சென்னை நகரத்தின் மத்தியில் இருக்கின்ற மியூசியத்தையும் அதைச் சேர்ந்தாற்போல் வைத்தால் சுற்றுலா பயணிகளுக்கு வசதியாக இருக்கும். அதைச் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொா எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, அது பற்றி அரசின் ஆலோசனையில் இல்லை.



1977 ஆகஸ்ட் 10]

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, மிருகக் காட்சி சாலையில் பாம்புப் பண்ணை இருந்ததே, அது இப்போது எங்கே இருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, பாம்புப் பண்ணை கிண்டியில் இருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, உலகத்திலே பல விதமான குரங்குகள் இருக்கின்றன. அதற்குத் தனியாக ஒரு மிருகக் காட்சி சாலை வைக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, உலகத்தில் இருக்கின்ற பல்வேறு குரங்குகளின் இனங்களை விட ஓரளவுக்கு அதிகமான அளவு குரங்கினங்கள் நம்முடைய மிருகக் காட்சி சாலையில் இப்போது இருக்கின்றன.

## Extension of Bus-route.

45. *Q.* THIRU EAKAMBARA REDDY : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether the proposal to extend the bus-route No. 97-B from Tiruttani to Pallipet (via) Nagari has been approved ; and

(*b*) if so, the stage at which the matter stands ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) & (ஆ) சென்னையிலிருந்து திருத்தணிக்குப் போகும் தடம் மோட்டார் வாகனச் சட்டம் பகுதி IV-A பிரிவு 68-D-யின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு தேசியமயமாக்கப்பட்ட தடம் ஆகும். இந்தத் தடத்தைப் பள்ளிப்பட்டு வரைக்கும் நீடிக்க வேண்டுமெனில், அங்கீகரிக்கப்பட்ட இந்தத் திட்டத்தை, மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 68-E-ன்கீழ் திருத்தியமைக்கப்பட்ட திட்டமாக மாற்ற வேண்டும். இதனைச் செய்வதற்கான செயற் குறிப்பு பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

THIRU EAKAMBARA REDDY : Mr. Speaker, Sir, in Pallipet-Nagari, there are about 7 Panchayats with a population of 16,000 people. They are experiencing great difficulty in catching bus. They have to go either to Tiruttani or Pallipet. In view of the urgency and since the distance is only 16 k. ms., may I request the Hon. Minister for Transport kindly to expedite the proposal to put the bus on that route at an early date ?

[9977 ஆகஸ்ட் 10

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, பல்லவன் போக்கு வரத்து இயக்குநர்கள் கூட்டம் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் தேதியில் நடைபெற்று 'மாடிபைட் டிராப்ட் ஸ்கீம்' தயாரிக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் இறுதிக்குள் உறுப்பினர் அவர்களின் எண்ணம் நிறைவேறிவிடும் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## (2) தகவல் கோரல்.

### பேரவை விதிகளின் கீழ் உறுப்பினர்களை கொடுத்துள்ள அறிவிப்புகள் எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே. ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர், நேற்று இந்தியா பிஸ்டன்ஸ் பற்றி என்னுடைய கேள்வி முதல் கேள்வியாக இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அதற்குப் பதில் சொல்ல வேண்டியிருந்தது. அது இன்றைக்குத் தள்ளி வைக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இன்றைக்கும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. என்றைக்கு எடுப்பீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் வந்த பிறகு கேட்டு, எந்தத் தேதியில் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லப்படும்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் தண்ணீர் இல்லாத கஷ்டப்படுகின்ற பிரச்னை குறித்து நான்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றே என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தீர்கள். உடனடியாக அதற்கு 12-ம் னதிக்குள் எனக்குப் பதில் தந்தாக வேண்டும் என்று இலாக்காவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் வந்தவுடன் எடுத்துக் கொள்ளப்படும்.



1977 ஆகஸ்ட் 10]

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்ட கடிதத்தில் இன்றைக்கு எடுத்துக் கொள்ளுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலவையில் இது தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டு, பொது மராமத்து இலாக்கா அமைச்சர் பதில் அளித்துள்ளதாகக் கேள்விப்பட்டேன். இந்த அவையில் நானும், திரு. தாழை கருணாநிதி அவர்களும் இது பற்றி கேட்டதை எடுத்துக் கொள்ளவில்லை இது தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மேலும் வேதனையை ஏற்படுத்துவதாக இருக்கிறது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் என்னிடம் கேட்டபோது நானே அந்த இலாக்காவுக்கு உடனடியாக பதில் தந்தாக வேண்டும் என்று ஒரு அறிவிப்புத் தந்திருக்கிறேன். உறுப்பினர் சொன்ன நியாயத்தையொட்டி உடனே-இந்த அறிவிப்பை இலாக்காவுக்கு அனுப்பியிருக்கிறேன். என்னுடைய அறைக்கு பதில் இன்னும் வரவில்லை. பதில் வந்ததும் அவையில் வைக்கப்படும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். கூடிய சீக்கிரம் பதில் வந்தவுடன் அவையில் வைக்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, ஒரு வேண்டுகோள். முக்கியமான பிரச்னைகள் இந்த அவையில் வரும்போது தள்ளப்படுகின்றன. சுந்தரம் கிளேட்டன் பற்றிக் கேட்டோம். அது ரிஜெக்ட் ஆகிறது. இங்கே தள்ளப்பட்டவை மேலவையில் அங்கீகரிக்கப்படுகின்றன. அங்கே அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்படுகின்ற உரிமை இங்கே ஏன் கொடுக்கப்படக் கூடாது? விதிமுறைகளில் இடையூறு இருக்கிறதா, அல்லது உங்களுக்கு இடையூறாக இருக்கிறதா ?

(முற்பகல் 9-20).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து மேலவையினுடைய நடவடிக்கைகளை இங்கே குறிப்பிட்டுப் பேச வேண்டாம். இங்கே இருக்கிற பிரச்சினைகளை வைத்துத்தான் இங்கே பேச வேண்டும். மேலவையில் நடக்கிற பிரச்சினைகளை நம்முடைய அவையில் பேசுவது நல்லதல்ல. அதையே காரணமாகக் காட்டி இங்கே சொல்ல வேண்டாம் என்று அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ ஒரு வகையில் பொது மக்களுடைய அறிவுக்கு எட்டுகின்ற பிரச்சினைகளைத் தெளிவுபடுத்த இலாகாவிலிருந்து பதில் அனுப்புவதற்குத் தாமதமானாலும்கூட, அமைச்சர் அவர்கள் அதற்குப் பொறுப்பேற்று பதில் சொல்லுகிற நாளை விரைவுபடுத்தலாம். பொது மக்கள் நலன் என்று இங்கே எழுப்பப்படுகிற பிரச்

[திரு. க. அன்பழகன்] [1977 ஆகஸ்ட் 10

னைகளுக்கு அமைச்சர் அவர்கள் முன்கூட்டியே இந்தத் தேதியில் பதில் தரப்படும் என்ற வகையில் விளக்கம் தர முன் வருவார்களா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேராசிரியர் அன்பழகன் அவர்கள் சொன்னதுபோல் நான் அமைச்சர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். எவ்வளவு துரிதமாகக் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் என்று பொதுவாக ஒத்தி வைப்பு தீர்மானம் இல்லாமல், சில குறிப்பிட்ட பகுதிகளுக்குத் தண்ணீர் வரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பிட்ட பகுதியில் என்ன நிலைமை என்ற தகவல் சரியாகக் கிடைத்தால், அது இந்தப் பேரவைக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் உகந்ததாக இருக்கும். அநத வகையில் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறதே தவிர வேறுஅல்ல.

<u>திரு. க. அன்பழகன்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட விவசாயிகள் பிரச்சினை என்பது அவ்வப்போது வருத்தத்திற்கும் வேதனைக்கும் உரியதாக ஆக்கப்படுகிற காரணத்தால், இந்தப் பிரச்சினை வருகிறபோது இன்றைக்கு ஒரு டெலிகிராம் அனுப்புவதன் மூலம் மறுநாள் தஞ்சையிலிருந்து பதில் தெரிந்து கொள்வதற்கு இலாகா இயக்குநருக்கும் செயலாளருக்கும் முடியும். 24 மணி நேரத்திற்குள் பதில் பெறக்கூடிய பிரச்சனைகளாக உள்ளன. ஆகவே முன்கூட்டியே தெரிந்து கொள்வதற்கு வழி வகை செய்யப்படுமா?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, பதில் வந்து, அதற்கு ஒப்புதல் தந்ததாக எனக்கு ஞாபகம்.

<u>திரு. என். கிட்டப்பா</u> : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக கீழ்த் தஞ்சை விவசாயிகள், கடை மடைப் பாசன விவசாயிகள் தண்ணீர் வராமல் அவதிப்படுகிறார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் ஏழெட்டு நாட்களுக்கு முன்பே கொடுக்கப்பட்டுள்ளது. முன்புள்ள கழக ஆட்சியில் நேரில் சென்று பார்க்கும் நிலைமைகள் இருந்தன. அதே போன்று கடை மடை பாசன விவசாயிகளின் நிலைமைகளை நேரில் சென்று அறிய அமைச்சர் முற்படுவார்களா ?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : கேள்வி நேரம் ல்ல இது.



1977 ஆகஸ்ட் 10]

<u>திரு. ரா. உமாநாத்</u> : தலைவர் அவர்களே, திருத்துறைப் பூண்டி வட்டாரத்தில் ஆற்று வாய்க்காலில் தண்ணீர் வராமல் அது பற்றி 'அட்ஜார்ன்மென்டு' தீர்மானம் கொடுத்து அது ரூல் 41-ன்கீழ் கன்வெர்ட் பண்ணப்பட்டிருக்கிறது. அதற்கு சீக்கிரம் பதில் கிடைக்க வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இப்படி ஒன்வொன்றாகக் கிளப்பிக்கொண்டிருக்கிறீர்கள். எவ்வளவு துரிதமாக இலாக்காவிலிருந்து பதில் அனுப்ப முடியுமோ அவ்வளவு துரிதமாக அனுப்பும்படியாக இலாக்காவிற்கு அறிவிப்பு அனுப்பியிருக்கிறேன். வந்தவுடன் அவைமுன் வைக்கிறேன். அவையில் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், ஒத்தி வைப்புத் தீர்மானங்கள், அவசரமும் முக்கியத்துவமும் வாய்ந்ததால் தரப்படுகின்றன என்பதை உணர்ந்து சீக்கிரம் வரவழைக்கச் சொல்லியிருக்கிறேன். எல்லோரும் பேசிக்கொண்டே போய் நேரத்தை வீண் அடிக்க வேண்டாம் என்பது தான் பிரச்னை.

<u>திரு. மு. அம்பிகாபதி</u> : பாயின்ட் ஆப் ஆர்டர். பாமினி ஆறு, கல்லணைக் கால்வாய் தண்ணீர் சம்பந்தமாக செக்ஷன் 41-படி ...... ...

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மறுபடியும் ஒவ்வொருவரும் தனியான ஒரு பிரச்சனையை எழுப்பி அதைக் குறிப்பிட்டு பேசிக்கொண்டிருந்தால் அது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகும்?

<u>திரு. க. சுப்பு</u> : சட்டப் பேரவை உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். தொழிற் சங்கப் பிரதிநிதிகள் எல்லோரும் இருக்கிறார்கள். மேலவையைப் பொறுத்த வரையில் அது செகன்டு சேம்பர். இங்கே டிஸ்கஷன் ஆகி அங்கே கொண்டு போகிறார்கள். ஆகவே அன்றாட அலுவல்களுக்கு அப்பாற்பட்டது அல்லவென்று தெளிவுபடுகிறது. ஆனால் மேலவையில் விவாதம் நடைபெறுகிறது. ஆனால் நமது அவையில் விவாதம் செய்ய இடம் இல்லை. இது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மேலவையில் மானியக் கோரிக்கையின்மீது விவாதம் கிடையாது. இங்கே மானியக் கோரிக்கைக்கு முக்கியத்துவம் அளித்து விவாதம் நடைபெறுகிறது. இங்கே 160 ஒத்தி வைப்பு தீர்மானங்கள், 200 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் குறித்து பேசியிருக்கிறீர்கள், அனுமதித்திருக்கிறேன். எனவே, மேலவையில் நடைபெறுவதை இங்கே வைத்து ஒப்பிடுவது சரியல்ல. மானியக் கோரிக்கையை அவசரமும் முக்கியத்துவமும் வாய்ந்ததாகக் கருதவேண்டும். நேரம் வீணாகக் கூடாது. அடுத்து, பிரச்சினைக்கு வருவோம்.

## 3. உரிமைப் பிரச்சினைகள்.

### (அ) சுந்தரம்-கிளேட்டன் தொழிற்சாலை திறக்கப்படுவது குறித்து, அரசு பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையையே திரும்பவும் அமைச்சர் அவர்கள் அவைக்கு அளித்தமை குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. சுப்பு, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் 8—8—77 அன்று கீழ்க்கண்ட உரிமைப் பிரச்னை குறித்து அறிவிப்புகளைக் கொடுத்துள்ளார்கள். அதில் எழுப்பியுள்ள பிரச்னை பின் வருமாறு:

"On 8th August 1977, the Hon. Minister for Labour made a statement under Rule 82 of the Tamil Nadu Legislative Assembly Rules regarding the reopening of the Sundaram Clayton Industry at Padi. The statement made by the Minister was nothing but a repetition of the press statement released on behalf of the Government on 7th August 1977. The press release was given a wide publicity in almost all the newspapers and in the All India Radio. Therefore, a point of order was raised in the House as to the propriety of the Minister in taking the precious time of the House for making a statement under rule 82 for repeating the press release already appeared in the papers. This will certainly amount to the abuse of the powers. When the Hon. Minister explained his position on the point of order, he maintained that the management of Sundaram Clayton had given advertisements to all newspapers and the news appeared in the newspapers were nothing but some portions of the advertisements..............."

இது எப்படி உரிமை மீறல் பிரச்னை என்பதை திரு. சுப்பு அவர்கள் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு உரிமைப் பிரச்னை. வேறு எந்தவிதமான பிரச்னையோ அல்லது குற்றச்சாட்டுக்களோ சொல்ல நான் வரவில்லை. அன்றையதினம் சுந்தரம் கிளேட்டன் பற்றிய விவரங்களை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே இதுபற்றி பத்திரிகைகளில் விவரமாக வெளியிடப்பட்டு விட்டது. அதற்குப் பின்னால் அதுபற்றி இங்கே ஒரு அறிக்கை வைப்பது என்பது விதிகளுக்கு உட்பட்டதுதானா?



நேற்று கூட ஒரு அறிக்கையை இந்த மன்றத்தில் வைத்தார்கள் லீடர் ஆப் தி ஹௌஸ் அவர்கள். அதை வரவேற்கிறேன். பத்திரிகைகளில் வெளிவந்த பின்னர் அதுபற்றி இங்கே அறிக்கை கொடுப்பது என்றால் விதிமுறைகளை ரொம்ப மோசமான முறையில் பயன்படுத்துகிறார்கள், பவர்ஸை அப்யூஸ் செய்வது மாதிரி யாகிறது. பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு விவரமாக அந்தச் செய்தி வந்த பின்னர் அது பற்றி வார்த்தைக்கு வார்த்தை, எழுத்துக்கு எழுத்து பிசகு இல்லாமல் இங்கே வாசித்தார்கள். வெளியில் பத்திரிகைகளில் செய்திகள் வந்த பிறகு இங்கே 82 வது விதியின்கீழ் அறிக்கை வைப்பது என்பது முறையா என்று கேட்கிறேன். விளம்பரம் கொடுத்து பாக்ஸ் ஐட்டமாகப் போட்டார்கள் என்று சொல்லப்பட்டது. விளம்பரம் கொடுத்து அது பாக்ஸ் ஐட்டமாக வந்து விட்டது. அதை சிலபேர்கள் வேறு விதமாக வெளியிட்டிருக்கிறார்கள், அதை நாம் எப்படி தடுக்க முடியும் என்று சொல்லிவிட்டார்கள்; அமைச்சர் அவர்கள். பத்திரிகைகளில் வந்தால் தவறாக இருக்கலாம், ஆனால் அமைச்சர் அவர்கள் சொல்வது தவறாக இருக்கமுடியுமா என்று நாங்கள் பேசாமல் இருந்து விட்டோம். அமைச்சர் அவர்கள் சொல்லும் போது அது ஒரு அட்வர்டைஸ்மென்ட்டாக இருக்கலாம் என்று கூறியதால் பேசாமல் இருந்து விட்டோம். இதில் விவரங்களை கவர்ன்மென்ட் ப்ரஸ் ரிலிஸ், கவர்ன்மென்டிலிருந்தே ப்ரெஸ் ரிலீஸ் முதல்நாள் கொடுத்துவிட்டு அது ஆல் இந்தியா ரேடியோவிலும் எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றன. அப்படி பத்திரிகைகளில் வந்திருப்பதை திரும்பவும் அதன் காப்பியை எடுத்து வந்து சட்டசபையில் 82வது விதியின்கீழ் அறிக்கை வைக்கிறார்கள். அப்படிச் செய்திருப்பது

This is purposefully misleading the House.

—அப்படி இந்த ஹௌஸை மிஸ்லீட் செய்வது சரியல்ல. அமைச்சர் அவர்களே அப்படி மிஸ்லீட் செய்தால் மற்றவர்கள் என்ன செய்வார்கள்?

திக்க உறுப்பினர்கள் வருவார்கள். Prima facie t' is a case of breach of privilcge பார்த்தவுட( தெரியும். அட்வர்டைஸ்மென்ட்டாக வந்தது அல் கவர்ன்மென்ட் ப்ரஸ் ரிலீஸாக வெளியிடப்பட்டது. அமைச்சர் அவர்களிடம் நான் கேட்ட பிறகும் கூட, பத்திரிகைகளில் வெளி வந்த பிறகு இந்த அறிக்கை இங்கு வருவது என்றால் அது, Purposefully he has misled wilfully he has done it என்று தான் சொல்லவேண்டும். ஆகவே இதை அவை உரிமைக் குழு விற்கு விடுவதுதான் முறை என்று சொல்லி முடித்துக்கொள் கிறேன்.

(முற்பகல் 9-30)

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே மாண்புமிகு தொழி லாளர் துறை அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் இந்த அவையில் விதிமுறை 82-ன்கீழ் ஒரு அறிக்கையை கொடுத்தார் கள். அதற்கு முன்னதாக கூட, முக்கியமான பிரச்னைகள் சம்பந்தமாக அமைச்சர்கள்; வெளியே அறிவிப்புகள் கொடுப் பதற்குப் பதில் இந்த அவையில் அறிக்கைகளை சமர்ப்பிப்பது நல்லது என்று முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட ஒரு காரியத்தை. எழுப்பியபோது முதலமைச்சர் அவர்கள் கூட இதைச் சொன்னார்கள். எங்களுக்கு தேவையிருந்தால் அறிக்கை கொடுப்போம், இல்லையென்றால் பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளை அறிந்து தெரிந்து கொள்ளவேண்டும் என்று முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள். இங்கே இருக்கின்ற நிலைமை என்னவென்றால், முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச் னையில் தலையிட்டு, மூடப்பட்டிருக்கின்ற கம்பெனியில் தொழி லாளர்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைத்து அதற்கேற்ப கம் பெனி திறக்கப்படும் என்றும் ஒரு அறிக்கையை முதலமைச் சர் அவர்கள் வெயிட்டார்கள். இது கவர்ன்மென்ட் பிரஸ் ரிலீஸாக வெளியே வந்தது. ஆனால் அதற்குப் பின்னால் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இங்கே ரூல் 82-ல் ஒரு அறிக்கையை வைத்தார்கள். நண்பர் திரு. சுப்பு அவர்கள் சொன்னது போல், எதற்காக இப்படிப்பட்ட அறிக்கை என்று விளக்கம் கேட்ட போது, நிர்வாகத்திலிருந்து கொடுக்கப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் பத்திரிகைகளில் செய்தி வந்தது; பத்திரிகையில் வந்தது அரசு தரப்பிலிருந்து கொடுக்கப்பட்ட அறிக்கை அல்ல என்று குறிப்பிட்டார்கள். இதில் பிரச்னை என்னவென்றால், கிளேட்டன் நிர்வாகம் 10-ம் தேதி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர் கள் எப்படி இது உரிமை மீறல் என்பதை மட்டும் விளக்க வேண்டு கிறேன்.



திரு. ஜே. ஜேம்ஸ் : நிர்வாகம் 10-ம் தேதி கம்பெனியை திறப்பதாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 10-ம் தேதி திறக்கிறார் களா.... திறக்கவில்லையா என்பதைபற்றியெல்லாம் இதில் சொல்ல வேண்டியதில்லை. உரிமை மீறல் எப்படி என்பதை மட்டும் சுருக்கமாக சொல்லுங்கள்........

திரு. ஜே. ஜேம்ஸ் : எந்த அளவுக்கு இதில் உரிமை மீறப் பட்டிருக்கிறது என்பதைச் சொல்லுவதற்குத்தான் இதை சொன் னேன். ஆகவே இங்கே அமைச்சர் அவர்கள் அறிவித்தது என்ன வென்றால், 10-ம் தேதி திறக்கப் போவதாகவும் சொன்னார்கள். அதற்கு விளக்கம் கேட்டதற்கு பத்திரிகையில் வந்தது நிர்வாகத் தின் விளம்பரமே தவிர அரசாங்க அறிக்கை அல்ல என்ற பொருள்பட கூறி, 82-வது விதியின்கீழ் அறிக்கையை படித் தார்கள். வேண்டும் என்றே சபையின் நேரத்தை பயன்படுத்தி விளம்பரம் செய்து கொண்டதாக நாங்கள் கருதுகின்றோம். ஆகவே இது அவை உரிமை மீறிய செயலாக கருதி இதை அவை உரிமை குழுவுக்கு அனுப்பி இதை நன்றாக பரிசீலனைசெய்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன் மீது அமைச்சர் அவர்களின் விளக்கம் கேட்டதற்கு, அவை நேரத்தை வீணாக்க வேண்டுமென்ற உள் நோக்கத்தோடு அறிக்கையை படிக்கவில்லை என்றும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் வெயிடப் பட்ட செய்தி தனது கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை என்றும் கூறியுள்ளார்கள். மேலும் அவைக்குத் தவறான தகவல் கொடுக்க வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு அறிக்கை கொடுக்கவில்லை என்றும் விளக்கம் கொடுத்துள்ளார்கள். எனவே இதில் எந்தவிதமான உரிமைப் பிரச்னையும் எழவில்லை, வேறு ஏந்தவிதமான நடவடிக்கையும் தேவையில்லை என்று தீர்ப் புக் கூறுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சர் மீது நடவடிக்கை எடுத்துத்தான் தீரவேண்டும் என்று எதிர்க் கட்சிகள் விரும்பவில்லை. அந்த மனப்பான்மை எங்களுக்கு இல்லை என்பதை தாங்கள் நன்றாக அறிவீர்கள். ஆனால் தங் களுடைய தீர்ப்பில், இனிமேலாவது இவ்விதம் நடைபெறாத வகையில், அமைச்சர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தாங்கள் கூறுவதாக இருந்தால் நாங்கள் இதன் மீது திருப்தி அடையலாம்.

[1977 ஆகஸ்டு 10

(திரு. சி. ஆறுமுகம் : அமைச்சர்வர்களே இதற்கான பதிலை சொல்லலாமே....)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்கார்ந்து கொண்டே பேசாதீர்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அதை நான் ஏற்றுக் கொண்டேன். அந்த அமைச்சர்தான் பேசவேண்டும் என்று நான் கட்டாயப்படுத்த முடியாது. இதைப்பற்றி அமைச்சரிடம் எழுதிக் கேட்டாய் விட்டது. அதற்கான பதிலும் சொல்லியாகிவிட்டது.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இங்கு பல்வேறு அங்கத்தினர்களும் பல்வேறு பிரச்னைகளை பேசுகிறார்கள். அதைப்பற்றி பேரவைத் தலைவர் அவர்களுக்கு தீர்ப்பு வழங்குவதற்கு முழு அதிகாரமும் இருக்கிறது. இதில் மாற்றிக்கொள்ள வேண்டும் என்றோ, அல்லது இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றோ சொல்லுகின்ற உரிமை விதிகளில் எந்த உறுப்பினருக்கும் கிடையாது என்பதை எதிர்க் கட்சி தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தலைவர் அவர்கள் சொன்ன தீர்ப்பில் தவறு இருக்கிறது என்று சுட்டிக்காட்டிச் சொல்லுவதோ அல்லது இதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்வதோ உண்மையிலே அது பேரவைத் தலைவருக்குத்தான் இழுக்கை உண்டாக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொதுவாக இந்த மன்றத்தில் உரிமைப் பிரச்னை வருகிற நேரத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கூடப் பேசுவது மரபாக இருந்திருக்கிறது. நேற்றைய தினம் அவை முன்னவர் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். அதிலே எந்த மாறுபாடான கருத்தும் எடுத்துச் சொல்லப்படவில்லை. உடனடியாக உரிமைக் குழுவுக்கு அனுப்பப்பட்டது. பொதுவாக, இந்த அவையில் உரிமைப் பிரச்சினைகள் வரும்போது பல உறுப்பினர்கள் அதில் கலந்து கொண்டு உரிமைக் குழுவுக்கு அனுப்பலாமா அல்லது அனுப்பக் கூடாதா என்று விவாதித்த மரபுகள் இருந்திருக்கின்றன. அதையொட்டி இங்கே உரிமைப் பிரச்சினை எழுப்பிய சுப்பு அவர்களும், ஜேம்ஸ் அவர்களும் மட்டுமே பேசினார்கள். மற்றவர்கள் கருத்து அறியப் படவில்லை. அதற்குள்ளே தீர்ப்பு அளிக்கப்பட்டு விட்டது. தீர்ப்புக்கு முன்னால் மற்றவர்கள் கருத்தையும் கேட்பது மரபாக இருந்தது. இந்தத் தீர்ப்பில் இப்படிப்பட்ட சம்பவங்கள் இனிமேலாவது நடைபெறக் கூடாது என்ற அளவில் தங்கள் அறிவுரையாகத் தரப்பட்டிருக்குமானால் அது அவைக்கு ஏற்றதாக இருக்கும். தங்களுடைய தீர்ப்பை மாற்றவேண்டுமென்று எழுப்பவில்லை. தீர்ப்புக்கு எதிராகவும் சொல்லவில்லை.



1977 ஆகஸ்டு 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா உறுப்பினர்களும் பங்குபெற்றுத்தான் ஆகவேண்டுமென்று இல்லை. அப்படி விதிமுறைகளில் இல்லாவிட்டாலும் அது மரபாக இருந்து வந்திருக்கிறது. மானியக் கோரிக்கை விவாதத்திற்கு நேரம் தேவை என்ற காரணத்தால் அதையொட்டி ஒருவர் இருவரை மட்டும் பேசச் சொல்லுகிறோம். தீர்ப்புக் கூறிய பிறகு பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து பிரச்சினைகளை எடுத்துச் சொல்வது என்பது கூடாது. பாயின்ட் ஆப் ஆர்டர் வேறு ஏதாவது இருக்கலாமே தவிர, தீர்ப்பின்மீது இருக்கக்கூடாது.

திரு. க. சுப்பு ; பாயின்ட் ஆப் ஆர்டர், விளக்கத்திற்காகக் கேட்கிறேன். அரசாங்கத்தரப்பில் இருந்து செய்தி அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டு பத்திரிகைகளில் வந்தது ஊருக்கும் உலகத்திற்கும் தெரியும். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் என்னுடைய கவனத்திற்கு வரவில்லை என்று சொல்கிறார்களே, அது உண்மையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டரா? தயவு செய்து உறுப்பினர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தீர்ப்பு கொடுத்தப் பிறகு பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து அந்தப் பிரச்சினையையே பேசுவதா? இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. தயவு செய்து உறுப்பினர்கள், தீர்ப்புக் கொடுத்த பிறகு பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து பேசுவது கூடாது. தீர்ப்புக் கொடுத்த பிறகு அந்த பிரச்சினைக்கு மீண்டும் போகக் கூடாது.

(ஆ) "மாலை முரசு" பத்திரிகையில் ஒரு அமைச்சர் பத்திரிகையில் வெளியிட்டதாக செய்தியைப் போட்டு மற்றொரு அமைச்சர் படத்தைப் போட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தல் மாற்றம்'' என்ற தலைப்பின் கீழ் ''சட்டசபையில் மந்திரி காளிமுத்து அறிவிப்பு'' என்ற செய்தியை வெளியிட்டு சம்பந்தப்படாத அமைச்சர் மாண்புமிகு திரு. பெ. சௌந்தர பாண்டியன் படத்தைப் பிரசுரித்து காளிமுத்து என்று செய்தி வெளியிட்டிருப்பது மக்களிடையே தவறான கருத்தை உண்டாக்குவது போன்ற இந்த செய்தி அவை உரிமையை மீறியதாகும் என்று திரு. க. பண்ணை சேதுராமன் அவர்கள் ஒரு உரிமைப்பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள் (குறுக்கீடு: எந்தப் பத்திரிகை?) மாலைமுரசு பத்திரிகை என்று கருதுகிறேன். தயவுசெய்து உறுப்பினர் அவர்கள் எந்த பத்திரிகையில் வந்தது என்பதற்கு ஆதாரத்தோடு எடுத்து எப்படி இது உரிமை மீறல் பிரச்சினையாகும் என்று விளக்கவேண்டும்.

[1977 ஆகஸ்டு 10

__திரு. க. அன்பழகன்:__ பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே நான் ஒரு ஒழுங்குப்பிரச்சினை என்ற பெயரால் தங்களிடத்தில் கேட்க விரும்புவது அந்த பத்திரிகைக்கு ஆதரவாக அல்ல பத்திரிகையில் வருகின்ற செய்தியைப் பற்றி ஒழுங்குப்பிரச்சினை தரப்படுமானால் உடனே பத்திரிகை ஆசிரியருக்கு அனுப்பி விளக்கம் கேட்டுவிட்டு அதற்குப் பின்னர் உறுப்பினர்களை கேட்பதாக முன்னர் அறிவித்திருக்கிறீர்கள். தங்களுடைய பழைய தீர்ப்பை மாற்றிக்கொள்கிறீர்களா அல்லது அடிக்கடி தீர்ப்பு மாறுமா?

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ பத்திரிகையைக் கொண்டு வந்து காட்டியதன் பேரில்தான் அனுமதித்திருக்கிறேன். அதிலே மாண்புமிகு சௌந்திரபாண்டியன் படத்தைப் போட்டிருக்கிறார்கள்.

__திரு. க. அன்பழகன் :__ நான் கேட்ட கேள்வி அதுவல்ல.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ ஆதாரம் இருந்தது அதனால் அனுமதித்தேன் அவைத்தலைவருக்குத திருப்ததிகரமாக இருந்தது. அதனால் அவைக்குக் கொண்டு வரலாம் என்று அனுமதித்தேன்.

__திரு. துரைமுருகன் :__ இனிமேல் பத்திரிகைக்காரர்களைக் கூப்பிட்டு விளக்கம் கேட்கமாட்டார்களா/

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ ஒரு அமைச்சருக்குப் பதிலாக இன்னொரு அமைச்சர் புகைப்படத்தைப் போட்டிருக்கக் கூடாது. அப்படிப் போட்டிருந்ததைப் பார்த்ததால்தான் இங்கே கொண்டுவர அனுமதித்தேன்.

(முற்பகல் 9-40).

__திரு. மு. அரங்கநாதன் :__ பேரவைத்தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே நீங்கள் சொன்ன தீர்ப்புக்கும் இப்போது நீங்கள் சொன்ன தீர்ப்புக்கு மாறுபாடு இருக்கிறது ஆகவே இதே முறையிலே மீண்டும் நீங்கள் தீர்ப்புக் கொடுப்பீர்களா ?

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ அனுமதியில்லாமல் எழுந்து பேசக் கூடாது. அனுமதி பெற்று எழுந்து பேச வேண்டும். உட்காருங்கள்.

__திரு. மு. அம்பிகாபதி :__ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். . .

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ உட்காருங்கள்.



1977 ஆகஸ்டு 10]

__திரு. மு. அம்பிகாபதி :__ பாயின்ட் ஆப் ஆர்டர், தயவு செய்து அனுமதியுங்கள் ஒரு நிமிட்த்தில் முடித்துவிடுகிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ நீங்கள் இப்படி எழுப்பிக் கொண்டே இருந்தால் நேரம் வீணாகிறது, மானியக் கோரிக்கை விவாதத்தை [illegible] பாதிக்கும்.

__திரு. மு. அம்பிகாபதி :__ பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அமைச்சருடைய புகைப் படத்தைப் பத்திரிகையில் போட்டது பற்றி ஒரு முக்கிய பிரச்சினையாக அதை கருதியிருக்கிறீர்கள். மானியக் கோரிக்கைகள்மீது விவாதிக்க வேண்டுமென்று சொன்னபோது சிறிய கட்சிகளுக்கு நேரம் கொடுக்க அனுமதி மறுக்கிறீர்கள். முக்கியமான மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் செய்ய நேரத்தை மறுக்கிறீர்கள், ஆனால் இந்தப் படம் மாறியதை விவாதிக்க அனுமதிக்கிறீர்கள், இது முறைதானா, இதற்கு நேரம் ஒதுக்க வேண்டுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

__திரு. கே. பண்ணை சேதுராம் :__ தலைவர் அவர்களே, 9—8—77ஆம் தேதி மாலைமுரசு பத்திரிகையிலே கோவைப் பதிப்பிலே பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலில் மாற்றம் என்ற தலைப்பிட்டு சட்டசபையில் மந்திரி காளிமுத்து அறிவிப்பு என்று செய்தியைப் போட்டுவிட்டு அதற்குப் பக்கத்திலே அமைச்சர் காளிமுத்து அவர்களின் படத்தைப் போடாமல் அமைச்சர் சௌந்திரபாண்டியன் அவர்களின் படத்தைப் போட்டிருப்பது மக்களை எல்லாம் குழப்பத்தில் ஆழ்த்தியிருக்கிறது. இப்படிப் பட்ட நிலைமைகளை அனுமதித்தால் ஒரு உறுப்பினருடைய படத்தைப் போட்டு அமைச்சர் என்று செய்தி போடுவார்கள், எனவே இது உரிமை மீறல் செயலாக இருப்பதால் நான் இந்தப் பிரச்சினையைக் கொண்டு வருகிறேன்.

__திரு. மு. கருணாநிதி :__ தலைவர் அவர்களே, இதை ஒரு வேடிக்கையான உரிமைப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனென்றால் நாலைந்து நாட்களுக்கு முன்னால்கூட முரசொலிப் பத்திரிகையிலே உறுப்பினர் திரு. ராசமாணிக்கம் என்ற எதிர்க்கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவருடைய படத்தைப் போடுவதற்குப் பதில் திருவிடைமருதூர் ராமலிங்கம் அவர்களுடைய படத்தைப் போட்டு ராசமாணிக்கம் என்று போடப்பட்டுவிட்டது.

நாம் எல்லாம் ஒன்றாக இருந்த நேரத்திலே நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்லவேண்டுமென்றால் டபிள்யூ. பி. எஸ். சௌந்தரபாண்டியன் மறைந்துவிட்ட செய்தியைப் போடுவதற்

கார் சௌந்தரபாண்டியன் படத்தைக் கேட்டு மாலைமணி ஆபீஸுக்கு என். வி. என். ஆள் அனுப்பினார்கள், சௌந்தரபாண்டியனைப் போலவே வக்கீல் சௌந்தரபாண்டியன் என்பவருடைய படத்தை அனுப்பி, திராவிடன் பத்திரிகையிலே வழக்கறிஞர் சௌந்தரபாண்டியன் படத்தைப் போட்டு, டபிள்யூ. பி. எஸ். சௌந்தரபாண்டியன் மறைவு என்று அவருடைய வரலாறு எல்லாம் போடப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு அந்த வழக்கறிஞர் என்னுடைய படத்தை நான் செத்துவிட்டதாக திராவிடன் பத்திரிகை போட்டுவிட்டார்கள் என்று நோட்டீஸ் எல்லாம்கூட விட்டு அந்தப் பத்திரிகை வருத்தம் தெரிவிக்கின்ற அளவிற்கு நிகழ்ச்சிகள் நடந்தன.

ஆகவே இந்த உரிமைப் பிரச்னை இப்படிப்பட்ட ருசிகரமான முறையிலே பேசுவதற்குப் பயன்பட்டது என்ற அளவில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> தலைவர் அவர்களே, பத்திரிகையிலே என்னுடைய படத்தைப் போட்டுவிட்டு கலைஞர் கருணாநிதி அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள் என்று சொன்னால் அவ்வளவு சுலபமாக ஊரிலே இருக்கிறவர்கள் ஏமாந்துவிட மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. க. சுப்பு :</u> தலைவர் அவர்களே, நான் ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன். வேடிக்கையாகக்கூட இருக்கலாம். இதே மாதிரி கரண்ட் பத்திரிகையிலே சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரின் பெயரை எழுதி ஒரு எம். எல். ஏ-வின் படத்தைப் போட்டு கரப்ஷன் சார்ஜஸ் என்று போட்டு விட்டார்கள். அதைப் பற்றி பாராளுமன்றத்திலே கிளப்பி அதற்கு பாராளுமன்றம் நல்ல வழிமுறைகளை எல்லாம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. ஆகவே இதையும் லைட்டாக எடுத்துக் கொள்ளாமல் இதைக்கூட உரிமை மீறல் பிரச்னையாக எடுத்துக் கொண்டு உரிமைக் கமிட்டிக்கு அனுப்பி விவாதித்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கவனமற்ற முறையிலே பத்திரிகைகள் படங்களை பிரசுரிக்கக் கூடாது. எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதைப் போல இதை அந்தப் பத்திரிகையின் கவனத்திற்குக் கொண்டுவந்து எதிர்காலத்திலே இப்படிக் கவனமற்ற முறையிலே பிரசுரிக்கக் கூடாது என்பதைத் தெரிவிக்கிறேன். பத்திரிகைகள் எல்லாம் படங்களைப் போடுவதிலும், கருத்துக்களைத் தெரிவிப்பதிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> தலைவரவர்களே, இது போன்ற தவறுகள் ஏற்படாமலிருக்க அரசாங்கத்திலே புகைப் படம் எடுக்கப்படுகிறது. அந்தப் புகைப்படங்களை எல்லாப் பத்திரிகைகளுக்கும் சப்ளை செய்துவிட்டால் இதுபோன்ற தவறுகள் ஏற்படாது என்று நினைக்கிறேன்.

<u>திரு. க. சுப்பு :</u> தலைவரவர்களே, அமைச்சர்களுடைய படத்தைக் கேட்டுக்கு வெளியே வைத்திருக்கிறார்கள். அதனால் தவறான அபிப்பிராயம் வெளியிலே ஏற்படும். அப்படிக் கேட்டிலே அமைச்சர்களுடைய படத்தை வைக்க வேண்டுமா? அமைச்சர்களைப் பற்றி மக்களுக்குத் தெரியாதா? அவைகளைக் கேட்டிலே வைக்க வேண்டுமா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அது தனியாகக் கேட்க வேண்டிய, எழுதிக் கொடுக்க வேண்டிய பிரச்னை. அதை இங்கே இப்பொழுது எழுப்பிப் பேச வேண்டிய அவசியமில்லை

## 4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) சென்னை, அம்பத்தூர், காமராஜ் நகரில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அடுத்து, "The serious situation arising out of the fire accident at Kamaraj Nagar, Ambatur on 6th August 1977 Causing heavy loss and damages to more than 50 families" என்பது குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று திரு. க. சுப்பு அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி பேரவையின் அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. க. சுப்பு :</u> பேரவைத் தலைவரவர்களே, அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கத்தில்தான் அவசரத் தீர்மானமாகக் கொண்டு வந்தேன். அந்தபாடி, அம்பத்தூர் பகுதியிலே காமராஜ் நகர் என்ற காலனியில் தீப்பற்றி 50 வீடுகள் எரிந்து விட்டன. அது எப்படி எரிந்தது என்பதுதான் பிரச்னையே தவிர வேறு ஒன்றையும் பேச வேண்டிய அவசியமில்லை. எலக்ட்ரிக் போஸ்ட் இருப்பதால் ஒயரிலே இன்சுலேஷன் டிஃபெக்ட் ஏற்பட்டு, தவறு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தவற்றைக் கவனிக்க வேண்டியவர்கள் கவனிக்கவில்லை. அதனால் 50, 60 வீடுகள் சேதமடைந்து, ஒரு இலட்சம் மதிப்புள்ள பொருட் சேதத்திற்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அது கவனிக்கப்படாமல் போய்விட்டது.

இப்படித் திடீரென்று தீ விபத்து ஏற்பட்ட நேரத்தில் 50, 60 குடிசைகள் நாசமாயின, பலர் உடைமைகளையும் இழந்து தவிக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் உடனடியாக அங்கே சென்று மக்களைப் பார்த்து ஆறுதல் கூறியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். அரசாங்கம் உடனடியாக 80 ரூபாய் கொடுப்பது என்று வைத்திருக்கிறார்கள். முன்பு 60 ரூபாயாக இருந்தது, பிறகு 80 ரூபாயாக ஆக்கப்பட்டது. நீங்கள் வந்த பிறகு அதை 100 ரூபாயாக ஆக்குங்கள். புதிதாகச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் அவ்வாறு செய்யுங்கள். இப்படிப்பட்ட தீ விபத்துகள் ஏற்பட்ட உடனே ஆறுதலுக்காக 80 ரூபாய், 100 ரூபாய் அவ்வப்பொழுது அளிப்பதாக இருந்தாலும் அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு உதவி செய்ய அரசாங்கம் முன் வர வேண்டும். அந்த அடிப்படையில்தான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். இப்படிப்பட்ட முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிறேனே தவிர சம்பிரதாய முறையில் அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை. அவர்களுக்கு அரசாங்கம் ஆறுதல் கூறி வேண்டிய பொருள் உதவியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u> : தலைவரவர்களே, இத்தீ விபத்து மதியம் சுமார் 1.00 மணி அளவில் அம்பத்தூர் நகரியத்திலுள்ள காமராஜர் நகரில், சாலையின் ஓரத்தில் உள்ள அதிக மின் அழுத்தமுள்ள மின்சாரக் கம்பத்திலிருந்து திடீரென கிளம்பிய தீப்பொறிகளின் விளைவாக சாலையின் கிழக்குப்புறம் அமைந்துள்ள குடிசைகளில் பற்றி பரவியது. பலத்த காற்று வீசியதால் அருகிலிருந்த 32 குடிசைகளும் தீக்கிரையாயின. இதன்விளைவாக மேற்கூறிய 32 குடிசைகளில் வாழ்ந்த 46 குடும்பங்கள் வீடிழக்க நேரிட்டது. தீயணைப்புப் படையினராலும் அருகிலுள்ள டன்லப் கம்பெனியினரது உதவியாலும் தீ அணைக்கப்பட்டது. வீடிழந்து, பாதிக்கப்பட்டவர்கள் அம்பத்தூர் நகரியம் அலுவலகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்தில் உயிர்ச் சேதமோ காயமுற்றோரோ இல்லை. விபத்தில் இழந்த சொத்தின் மதிப்பு சுமார் ரூபாய் 55,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. உடனடி நிவாரணமாக அருகிலுள்ள டன்லப் கம்பெனி, அரிமா மற்றும் சுழற் சங்கங்கள் (Lions club and Rotary club), டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலை அம்பத்தூர் வியாபாரிகள் சங்கம், அம்பத்தூர் நகரியம் ஆகியவை விபத்து நடந்த நாளில் இருந்து நேற்றையவரை (9—8—1977) உணவு வசதிகளை பாதிக்கப்பட்ட மக்களுக்காக செய்ய முன்வந்தன. இதன்பொருட்டு ரூபாய் 3,680 உதவித் தொகையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக தலா 80 ரூபாய் வீதம் வழங்க சைதாப்பேட்டை கோட்டாட்சித் தலைவர் ஏற்பாடு செய்துள்ளார்.





இத்தீவிபத்து குறித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு தக்க நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் இது குறித்து மீண்டும் விவாதிக்க பேரவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(ஆ) <u>குடிசைமாற்று வாரிய குடியிருப்புகளை தொழிலாளர் நல அமைச்சர் பார்வையிட்டதன் விளைவாக, அங்குள்ள 200 குடும்பங்கள் முன்னறிவிப்புக்கூட இன்றி வெளியேற்றப்பட இருப்பது குறித்து</u>

மாண்புமிகு பேரவைத்தலைவர் : The serious situation arising out of the imminent threat of eviction without notice of about 200 families in Thiru-vi-ka Kudiyiruppu, Alayamman Koil Kudiyiruppu 109 Division Thousand Lights Constituency following the personal visit on 31-7-77 and oral instructions allegedly given by the Honourable Minister for Labour due to political animosity and the deteriorating situation among the slum dwellers which is likely to lead to serious Law and order problem thereto.

என்ற பொருள் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, விவாதிக்கக்கூடிய அளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 9—50.]

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u> : தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் 31—7—1977ஆம் தேதி, திரு. வி. க. நகர் பகுதிக்கு நேரிலே பார்வையிட வந்திருக்கிறார்கள். அது வரவேற்கத் தகுந்தது. அங்கே போகும்போது, மக்கள் சார்பாகச் சில கோரிக்கைகள் சொல்வார்கள். அதைக் கவனிப்பது வழக்கமாக இருக்கிறது. அதைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

ஆனால், இங்கேயிருக்கிற தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் அங்கே ஒருசிலர் குறைகளைச் சொல்லும்போது ஆத்திரம் அடைந்து—அவர்கள் அதிகாரிகளோடு போயிருக்கிறார்கள்; ஸ்லம் போர்டு அதிகாரிகள், ஹவுசிங் போர்டு அதிகாரிகள் ஆகியோரோடு போயிருக்கிறார்கள். போகும்போது குடிசையிலே இருக்கிற அந்தப் பகுதி மக்கள் சில குறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறைகள் களைவதாக இருந்தால் களையலாம். நியாயமில்லை என்றால் நியாயமில்லை என்று சொல்லலாம். அதிலே கருத்து வேறுபாடு இல்லை ஆனால், அங்கு, அந்தக் குறையைச் சொன்னவர் காங்கிரஸ்கட்சிக்காரர்—என்ற முறையிலே சொன்னார்கள். அப்பொழுது நம்முடைய அமைச்சரவர்கள் வேறு எந்தக் கட்சிக்காரனுக்கும் இடம் கொடுக்கக் கூடாது, ஆளுங்கட்சிக் காரனுக்குத்தான் இடம் கொடுக்க வேண்டுமென்று ஆத்திரமாகச் சொல்லிவிட்டு, காரிலே வந்து விட்டார்கள். அங்கே இருக்கிற அதிகாரிகள் அடுத்தநாள் அங்கே சென்று, அந்தக் குடிசை வாழ்மக்கள், இடங்களைக் காலி செய்யவேண்டுமென்று கேட்டார்கள். ஏதாவது நோட்டீஸ் இருக்கிறதா என்று கேட்டால், நோட்டீஸ் ஒன்றும் கொடுக்காமல்— இதுபோல், 200-க்கு மேற்பட்டவர்களைப் போலீஸை வைத்து, பாதகமாகப் பேசியிருக்கிறார்கள். இதனால், அங்கேயிருக்கிற வட்டார மக்களுக்குப் பீதியைக் கிளப்பியிருக்கிறார்கள். இது திரு.வி.க. நகரில் மட்டுமல்ல, இன்னும் சில பகுதிகளில், இதுபோல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் இருக்கிற சேப்பாக்கம் தொகுதியில் இதுபோன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதனால், மக்கள் மிகவும் பீதி அடைந்திருக்கிறார்கள். என்னைச் சந்தித்த அந்தப் பகுதியினர் ஊர்வலமாகச் செல்லவேண்டும், கிளர்ச்சி நடத்த வேண்டும் என்று சொன்னார்கள். அப்பொழுது நான் சொன்னேன், இதை ஒத்தி வைப்புத் தீர்மானமாக கொண்டு வரலாம், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்; முதலமைச்சரிடம் சொல்லலாம். சட்டபூர்வமாக இங்கே சொல்லித்தான் பரிகாரம் காண வேண்டுமே தவிர, சட்டத்தை மீறி நடக்கக்கூடாது என்று சொன்னேன். அமைச்சரவர்கள், அரசியல் கட்சி என்ற உள்நோக்கத்தோடு, ஒரு குறிப்பிட்ட கட்சியினருக்குத்தான் இடம் கொடுக்க வேண்டுமென்று சொல்வது தவறானது, சனநாயக வழிமுறைக்கு மாறானது. அமைச்சர் அப்படி சொல்லியிருக்கக்கூடாது, சொல்லியிருக்க மாட்டார் என்று நம்புகிறேன். அப்படி சொல்லியிருந்தால் அது தவறானது. இந் விஷயம் சீரியஸாகியிருக்கிறது. நேற்று கூட கண்டனக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். தொடர்ந்து நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த விஷயங்களை விளக்க இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





THE HON. THIRU S. RAGHAVANANDAM: Mr Speaker, Sir, on 31st July 1977, the Minister for Labour inspected Slum Board Colonies and Slums In Corporation Division Nos. I (Royapuram) 101 (Nungambakkam) and 109 (Alaiamman Koil Street), to see at first hand the condition of these colonies and slums and to authorise the provision of basic amenities like water supply, street lighting, public convenience etc.

திரு. சி. ஆறுமுகம்: பாய்ன்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களைத் தமிழிலே படிக்கச் சொல்லுங்கள். இது தமிழ்நாடு சட்டப் பேரவை.

THE HON. THIRU S. RAGHAVANANDAM: I can read in English also.

Based on the inspection, the Minister for Labour issued instructions for the provision of the following on immediate basis;

திரு. து. புருஷோத்தமன்: திரு. ஆறுமுகம் எழுப்பிய பாய்ன்ட் ஆப் ஆர்டருக்குத் தங்கள் தீர்ப்பு என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயாராக வைத்திருந்ததைப் படித்து முடித்தவுடன், நான் சொல்லப் போகிறேன். அதைக் கொண்டு வந்தாகிவிட்டது. ஆங்கிலத்திலும் படிக்கலாம் என்று விதி இருக்கிறது. நான் அடுத்து சொல்லப் போவதைப் பொறுத்திருந்து கேளுங்கள். அவர் படித்து முடித்தவுடன் நான் சொல்லப் போவதை கேட்டு, விவாதம் நடத்தலாம்.

திரு. சி. ஆறுமுகம்: இப்பொழுது அமைச்சரைத் தமிழில் சொல்லச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைத் தலைவருடைய அனுமதியோடு ஆங்கிலத்திலும் படிக்கலாம் என்ற விதி இருக்கிறது. தயவுசெய்து அவர் சொல்லப் போவதைக் கேட்டுவிட்டு, அதற்குப் பிறகு நான் என்ன சொல்லப் போகிறேன் என்று பின்னாலே பொறுத்திருந்து பாருங்கள்.

THE HON. THIRU S. RAGHAVANANDAM:

(i) Augment water-supply to Alaiamman Koil tenements;

(ii) Provision of more street lights at Alaiamman Koil;

(iii) Repair of leakages noticed in certain blocks in Alaiamman;

(iv) Augmentation of water supply in Mambalam Tank Bund tenements ;

(v) Clearing of garbage from Mambalam Tank Bund area ;

(vi) Improvement in street lighting in Mambalam Tank Bund area;

(vii) Provision of electrical connections in tenements where wiring has been completed ;

(viii) Provision of public fountains, street lights and public convenience units in the Thomas Road location where about 300 families have been temporarily rehabilitated ;

(ix) Provision of alternate accommodation to slum dwellers in Singaravelu Nagar Slum in Division No. 1.

2. Action is in hand in consultation with the Corporation of Madras to provide additional facilities.

3. While the Minister for Labour was inspecting Thiru Vi. Ka. Kudiyiruppu, one of the allottees there, who is an employee in Tube Investments represented to the Minister against the levy of monthly rent of Rs. 44 for his tenement. Out of the 308 allottees of Thiru. Vi. Ka. Kudiyiruppu, 23 allottees are in receipt of fixed income in their capacity as Government and Quasi-Government employees or employees in private concerns, of which he is one. Although the tenements were apparently allotted to them, based on the fact that they were slum dwellers in the area, they are in receipt of fixed incomes exceeding Rs. 250 per month. Slum tenements are intended for lowest strata of society and particularly those having casual incomes. The economic rent of each slum tenement is about Rs. 100 per month. The rent collected from the ordinary run of allottees is only Rs. 10 per month, which involves a heavy subsidy to the Government. In the view that, while the subsidy was justified, in regard to casual income earners in the lowest strata of society, it was unjustified in regard to fixed income earners, the then Government had ordered in the G.O. Ms. No. 1236, Housing, dated 7th November 1975 as follows :—

(*a*) Government employees occupying Slum Board tenements should forego House Rent allowance and should pay the uniform rent of Rs. 10 per month ;

(*b*) This would apply to employees of Quasi-Government institutions as well ;



(*c*) For employees in *private* institutions, I repeat, for employees in *private* institutions—the recovery should be at the rate of 10 per cent of their pay plus house rent allowance *wherever received.*

Since the employees, who represented, had been drawing Rs. 400 and above, he had been asked to pay Rs. 44.

4. Obviously the representation from the employee of Tube Investment against the rent for his tenement fixed on the basis of these Government orders cannot be considered.

5. While allowing such fixed income earners to occupy slum tenements meant for the lowest strata of society is itself a concession, there could be no question of relieving them from the liability to pay rent in accordance with the above mentioned Government orders, admittedly passed by the *then* Government after careful consideration (D.M.K. Government). Wherever such occupants are in arrears, including some in Thiru. vi. ka. Kudiyiruppu, the Slum Clearance Board has been periodically issuing notices for collection of arrears, but has not resorted to coercive steps for the eviction of such persons since 30th June 1977. It is wholly unjustified to connect the unreasonable reluctance of some of these fixed income earning allottees of Slum Board tenements with the visit of the Minister for Labour on 31st July 1977 which was undertaken for ensuring provision of basic amenities in slums and slum tenements for the benefit of the mass of slum dwellers.

6. The allegation which forms the basis of the Adjournment Motion is thus unfounded and misconceived. I therefore request that consent for the motion may be with held.

திரு. து. புருஷோத்தமன் : பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்பு கொடுத்து விடுகிறேன்.

திரு. தி. சு. நல்லதம்பி : தீர்ப்புக் கொடுத்த பிறகு பேச அனுமதிப்பீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதிக்காமலும் இருக்கம்.

(திருவாளர்கள் சி. ஆறுமுகம், தி. சு. நல்லதம்பி எழுந்தனர்).

தயவு செய்து உட்காருங்கள். தயவு செய்து எழுந்து எழுந்து கேட்காதீர்கள். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப் படுகிறது.

அடுத்து, சொல்லுவதைக் கேட்டுவிட்டு பிறகு கேளுங்கள்.

தயவுசெய்து அவையிலே இருக்கிற உறுப்பினர்கள தமிழ் தெரிந்தவர்கள், தமிழில் பேச முடிந்தவர்கள், தமிழில் எழுத முடிந்தவர்கள், அவையில் தயவுசெய்து தமிழிலே கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஆளுங்கட்சியிலே இருந்தும் கூட, ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஆங்கிலத்திலே கொடுத்திருப்பதைக் கூட தமிழிலே கொடுத்தால் (குறுக்கீடு)—எதிர்க்கட்சியிலே கூட—ஆளுங்கட்சியிலே கூட—இரண்டிலுமே—தமிழிலே அழகாகப் பேசக்கூடிய சுப்பு அவர்களும், சாதிக்பாட்சா அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தமிழிலே கொடுத்தால் இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் புரியும். ஆகவே அவையிலே இருக்கிற தமிழ் தெரியாதவர்கள் தமிழில் பேச முடியாத, தமிழில் எழுத முடியாத உறுப்பினர்கள் என்னுடைய அனுமதியின் பேரில் ஆங்கிலத்திலோ அல்லது அவர்கள் மொழியிலோ பேச விதிமுறைகள் இருக்கின்றன ஆனால் தமிழ் தெரிந்தவர்கள் இனி தயவு செய்து தமிழிலே எல்லா நடவடிக்கைகளிலும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>*திரு. க. அன்பழகன் :</u> தலைவர் அவர்களே, தரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் விளக்கம் தந்தார்கள். அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைக் கொடுத்தார்கள். உறுப்பினர் அவர்கள் எழுப்பியது மிக முக்கியமான பிரச்னை. The conduct of the Minis er என்ற முறையில் அமைச்சர் அவர்கள் அங்கே சென்றவிடத்தில் என்ன சொன்னார், அதனுடைய விளைவாக அங்கே என்ன நிலை ஏற்பட்டது அங்கே அமைச்சர் அவர்கள் எந்த விதிமுறைகளின்படி குறிப்பிட்ட தொகை வாடகை தராதவர்கள் வெளியேற்றப் படவேண்டும் என்றும் அதற்கு எந்த விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சொன்னார் என்பவற்றுடன் ஒத்திவைப்புத் தீர்மானத்தின்படி ஒரு அமைச்சர் ஆளுங்கட்சிக்காரருக்குத்தான் குடியிருப்பு இடம் அளிக்கப்படும் என்று சொன்னார் என்பதால்—குறை அமைச்சராலே ஏற்பட்டதை தொடர்ந்து அதனாலே அங்கு மற்றவர்கட்குப் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டதா என்பது குறித்து அமைச்சர் தகுந்த பதில் இங்கே தெரிவிக்கவில்லை.



(முற்பகல் 10-00.)

அப்படிச் சொல்லவில்லை என்றோ, அப்படி பிரச்னை எழவில்லை என்றோ, அப்படி அமைச்சர் யாரும் சொல்லமாட்டோம் என்றோ பதில் சொல்லாதபோது, ஒத்திவைப்புத் தீர்மானம் தள்ளப் பட்டது என்று தலைவரவர்களால் சொல்லப்பட்டது. இதனால் முழு அளவுக்குத் தெளிவான முடிவை அவை பெறமுடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்பதை தங்களிடத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> பேரவைத் தலைவரவர்களே, *

(கூச்சல், குழப்பம்)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தயவு செய்து உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக உட்கார வேண்டும். * * * * * * உறுப்பினர் எழுப்பிய பிரச்னைக்கு பதில் சொல்ல அமைச்சர் முன்வர வேண்டுமே தவிர, உறுப்பினரைப் பற்றி, அவர் * * என்று பேசவேண்டியதில்லை. தயவு செய்து அமைச்சர் அவர்கள் உறுப்பினர் கேட்டதற்கு பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> தலைவரவர்களே, 30—6—77-க்குப் பின்னர்.................

<u>திரு. கூத்தகுடி ச. சண்முகம் :</u> தலைவரவர்களே, அவைத் தலைவர் தீர்ப்புக்குப் பிறகு மறுபடியும் விவாதம் தொடரலாமா? அதை அவைத் தலைவர் அனுமதிக்கிறார்களா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவைத் தலைவரின் தீர்ப்புக்குப் பிறகு, பேராசிரியர் அன்பழகன் கேள்வியை எழுப்பி இருக்கக் கூடாது. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி, அவைத் தலைவரின் தீர்ப்பின்மீது பேசக் கூடாது. அவைத் தலைவர் கொடுத்த தீர்ப்பை ஏற்றுக்கொள்வது தான் அவையின் மரபு. உறுப்பினருக்கு தீர்ப்பின் மீது கருத்து மாறுபாடு இருக்குமேயானாலும் தீர்ப்பைப் பற்றி விமர்சிக்கக் கூடாது. அதுதான் அவையின் மரபு

<u>திரு. க. அன்பழகன் :</u> பேரவைத் தலைவரவர்களே, தங்களுடைய தீர்ப்பைப் பற்றி, 'உரிமைப் பிரச்னை இல்லை என்றோ, ஒத்திவைக்க அவசியமில்லை என்றோ'. தாங்கள் தருகின்ற தீர்ப்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பைப் பற்றி மாறுபாடு இல்லை. ஆனால் கிடைக்க வேண்டிய விளக்கம் கிடைக்கவில்லை. ஏனென்றால் இதில் அமைந்திருக்கின்ற முக்கியமான பிரச்னைக்கு அமைச்சர் விளக்கம் தரவேண்டும். அது கிடைக்கவில்லை. அப்படிச் சொன்னரா, அல்லவா என்பது பற்றித் தெளிவான கருத்து இல்லாததால், தவறான எண்ணத்தை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காக விளக்கம் கேட்டேனே தவிர வேறில்லை.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையிலே உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து, அதன் மீது அமைச்சர் விளக்கமோ, ஸ்டேட்மெண்டோ கொடுத்தால், அதை உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். பேரவைத் தலைவர் அவர்கள், அப்படி அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்ட ஸ்டேட்மெண்டின் மீது தீர்ப்பு அளிக்கிறார்கள். ஸ்டேட்மெண்டை ஒப்புக்கொண்டு சபாநாயகர் தீர்ப்பு அளிப்பதாகக் கருத வேண்டும். கொடுக்கப்பட்ட விளக்கம் போதாது; அதிகமான விளக்கம் தேவை என்று கேட்பது நியாயமில்லை. அதற்கு விதிமுறைகளில் இடம் இல்லை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து இதுபற்றி உறுப்பினர்கள் மேலும் கேட்க வேண்டாம். தீர்ப்பு கொடுத்த பிறகு, அதைப்பற்றி பேசுவது தவறாகும். இதோடு இதை முடிக்கிறேன். அடுத்து விவாதத்துக்கு வருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், * * * *

என்று சொன்ன வார்த்தை, சொன்ன சொல் நன்றாக, அமைய வில்லை. ஆகவே அந்த அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து என்னை அமைதியாக அவையை நடத்த அனுமதியுங்கள். அடுத்து, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் * * *



மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுப்பு அவர்கள் என்னுடைய தீர்ப்பை ஆட்சேபிப்பது அவைக்கு அழகல்ல. உட்காருங்கள்.

உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு பேசக் கூடாது. அது அவைக்கு அழகல்ல.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: விவாதம் கூடாது என்று சொல்லிவிட்டீர்கள். விவாதங்கள் எல்லாம் அவைக் குறிப்பில் இருக்கலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் கொடுத்த தீர்ப்பு, அதுதான் முடிவு.

## (5) 1977–78 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி).

### (அ) கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,02,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. கெ. சொக்கலிங்கம் : தலைவர் அவர்களே, கொள்கைப் பற்றி விவாதிக்க,—

"நிதிக் கோரிக்கை எண். 10,—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,02,15,000இல், ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1977 ஆகஸ்ட் 10

THIRU M. ARUMUGAM: Sir, to discuss the need to check milk adulterations and to prosecute cases for such adulterations, I move—

"That the allotment of Rs. 1,02,15,000 under Demand No. 10—Milk Supply Schemes be reduced by Rs. 100".

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்கு கறவை மாடுகள் வாங்க 50 சதவீதம் மானியத்துடன் கூடிய கடன் வழங்கி பால் உற்பத்தியைப் பெருக்குவதோடு விவசாயத் தொழிலாளர்களுக்கும் உதவும் முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவாதிக்க—,

''நிதி—கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,02,15,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU R. MARGABANDHU: To discuss about the necessity to start Dairy Farms, I move—

"That the allotment of Rs. 1,02,15,000 under Demand No. 10—Milk Supply Schemes be reduced by Rs. 100".

(ஆ) கோரிக்கை எண். 20—வேளாண்மை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

''நிதிக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 34,68,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

''நிதிக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 34,68,36,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



1977 ஆகஸ்ட் 10]

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர்களே, கோவை தாலுகாவில் மின்சாரத்தை உபயோகித்து விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு கிணறுகள் 150-லிருந்து 200 அடிக்கு மேலாக ஆழமாகியுள்ளதை ஒட்டி அதிக மின் கட்டணம் செலுத்துவதிலிருந்து விசேஷ சலுகை அளித்தல் குறித்து விவாதிக்க—

''நிதிக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 34,68,36,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்,''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் புலியூர்குறிச்சியிலுள்ள கோட்டையில் அரசுக்குச் சொந்தமான இடத்தில் விவசாயக் கல்லூரி ஏற்படுத்தத் திட்டமிடாதது குறித்து விவாதிக்க—

''நிதிக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 34,68,36,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்,''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கல்லூரியை அமைக்க வேண்டியது பற்றி விவாதிக்க—

''நிதிக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 34,68,36,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU R. MARGABANDHU: Sir, to discuss about the problems facing agriculturists, I move—

"That the allotment of Rs. 34,68,36,000 under Demand No. 20—Agriculture be reduced by Rs. 100".

(இ) கோரிக்கை எண். 49—வேளாண்மைகுறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல்கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

''நிதிக் கோரிக்கை எண். 49—வேளாண்மைகுறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,34,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''.

[1977 ஆகஸ்ட் 10

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, வேளாண்மைக்கு உதவும் துளை போடும்கருவி இயந்திரச் சாதனங்கள் ஒவ்வொரு ஒன்றியத்திலும் இருக்க வேண்டியது குறித்து விவாதிக்க,—

> "நிதிக் கோரிக்கை எண். 49—வேளாண்மைகுறித்த மூல தனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12;34,47,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES: Sir, Thiru Swamidhas may kindly be permitted to move the Cut Motion given notice of by him.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, கொள்கையை விவாதிக்க—

> "நிதிக் கோரிக்கை எண். 49—வேளாண்மை குறித்த மூல தனச் செலவு என்ற, தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12,34,47,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

*மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத்தலைவர் அவர்களே, அரசின் கொள்கைகளும் திட்டங்களும் கொள்கை விளக்கப் புத்தகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன. கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்கள்** ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை உறுப்பினர்கள் நன்கு படித்திருப்பார்கள் என்று மனதார நம்புகிறேன். மேற்படி கொள்கை விளக்கங்களை இந்தச் சபையில் நான் படித்ததாகக் கருதி குறிப்பேட்டில் ஏற்றுமாறு வேண்டுகிறேன். உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொண்டு வந்து பேசியதற்குப் பிறகுஇறுதியில் பதில் கூறுவதற்கு எனக்கு அனுமதி கொடுக்குமாறு கேட்டுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்தைத் தொடருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

---

** 294–339 ம் பக்கங்களில் இணைப்புகள் I, II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



1977 ஆகஸ்ட் 10]

(முற்பகல் 10-10)

*திரு. தாழை. மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கே சமர்ப்பிக்கப் பட்டுள்ள வேளாண்மைத் துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல விழைகிறேன். குறிப்பாக வேளாண்மைத் துறை எவ்வளவு அவசியம் என்பதைக் குறித்தும், அதைச் செய்கிற விவசாயிகள் எவ்வளவு சிறப்புடையவர்கள் என்பதைக் குறித்தும் வள்ளுவர் மிகத்தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்."

என்று வள்ளுவர் பெருமான் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் அந்த விவசாயிகளின் நிலை எவ்வளவு சீர்கேடாக இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

குறிப்பாக உழுதுண்டு வாழ்பவர்கள் எல்லாம் இன்றைய தினம் மற்ற தொழில்கள் செய்கிறவர்களை தொழுதுண்டு பின் செல்கிற கொடுமையான நிலைக்குத்தான் அவர்கள் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்திற்கு காவிரி நீர் வேளாண்மைக்கு எவ்வளவு அத்தியாவசியம் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும்: குறிப்பாக நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் மைசூர் மாநில முதல் அமைச்சர் அவர்களும் காவிரி நீர் பிரச்சினையைப்பற்றிப் பேசி உடனடியாக தண்ணீர் வந்துவிடும், விவசாய வேலைகள் எல்லாம் பாதிக்காது என்ற உறுதிப்பாட்டினை எடுத்துச் சொல்லியதற்குப் பிறகு, விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் அதை நம்பி விவசாய வேலைகளில் ஈடுபட்டார்கள். ஆனால் விவசாய வேலைகள் இன்றைய தினம் தண்ணீர் இல்லாத கொடுமையினால் தடைப்படுத்தப்பட்டிருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் பழைய சட்ட மன்ற உறுப்பினர் திரு ஏ. கே. சுப்பையா அவர்கள் தலைமையில் நூற்றுக்கணக்கானவர்கள் உண்ணாவிரதம் இருக்கிற கொடுமையான நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயத் தொழிலாளர்கள் எல்லாம் வறுமையில் வாடி அவர்கள் குடும்பங்கள் எல்லாம் சீரழிகிற நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அத்தியாவசிய நிலைகளை எல்லாம் எடுத்துச் சொல்வதற்காக நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்களையெல்லாம் இங்கே தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏ.க்கள் கொடுத்திருந்தும் கூட இதிலிருக்கிற அத்தியாவசிய நிலைகளை

[திரு. தாழை மு. கருணாநிதி] [1977 ஆகஸ்ட் 10

எல்லாம் உணராத இந்த அரசு அவைகளை அலட்சியப்படுத்தி விட்டு இதுவரை பத்து பன்னிரண்டு நாட்களாகியும் மிக மிக மோசமான நிலையை உருவாக்கிவிட்டு இன்றைய தினம் உட்கார்ந்திருக்கிறார்கள். ஆனால் அங்கேயிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களின் உள்ளங்கள் எல்லாம் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றைய தினம் கூட ஒரு எதிர்க் கட்சி என்று சொல்லிக் கொண்டிருக்கிற நண்பர் ஒருவர் பேசினார் ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போராட்டம் நடத்தினோம், சிறை சென்றோம் என்றெல்லாம் ஆளும் கட்சிக்கு காவடி தூக்குகிற பாணியில் பேசினார். அவர்களுக்கு நான் எடுத்துச் சொல்ல விரும்புவது என்னவென்றால், அச்சுத மேனன் ஆளுகிற ஆட்சியில் கூட போராட்டம் நடத்தினால் சிறைச்சாலைக்குத் தான் அனுப்புவார்கள். கலைஞர் அவர்களது ஆட்சியில் ஏதோ சிறைச் சாலைக்கு அனுப்பினார், ஆனால் அச்சுத மேனன் ஆட்சியில் ஏதோ பூஞ்சோலைக்கு அனுப்பினார் என்ற பாணியில் நண்பர் ஒருவர் பேசினார். இன்றைய ஆட்சியில், இன்றைய சூழ்நிலையில் என்னென்ன காரியங்கள் பொது மக்களுக்காக நடைபெறவேண்டுமோ அவற்றை எடுத்துச் சொல்வதுதான் சரியே தவிர, மாற்றுக் கட்சியைத் தாக்க வேண்டும் என்ற உணர்வோடு இங்கே பேசுவது அவ்வளவு சிறந்ததல்ல என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் விவசாயிகளாகவும் தொழிலாளிகளாகவும் எங்கெங்கோ படத்தைப் பார்த்துவிட்டு அம்மாதிரி விவசாயியாக, தொழிலாளியாக நடிப்பவர்கள் எல்லாம் வந்துவிடுவார்களானால் நம்முடைய நிலை மாற்றப்படும், உயர்த்தப்படும் என்றதவறான எண்ணத்தின் காரணமாக வோட்டுகள் போட்டார்கள். ஆனால் இன்றைய தினம் பார்க்கிறபோது அந்த விவசாயப் பெருங்குடி மக்களும் தொழிலாள நண்பர்களும் * * * * * தவிர அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயருவதற்காக அனுப்பப்பட்டதல்ல என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக வடிகால் பிரச்சினை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எவ்வளவு அத்தியாவசியம் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வடிகால் வாய்க்கால் வேலைகளைப் பொறுத்த வரையில் .............

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது



1977 ஆகஸ்ட் 10]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> துணைத் தலைவர் அவர்களே, * * * * * * * என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். விவசாயத் தொழிலாளர்கள், மற்ற தொழிலாளர்கள் இவர்களுக்கு எந்த விதத்தில் இப்படிச் சொல்வது பொருத்தமானது என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>திரு. தாழை மு. கருணாநிதி :</u> இதே நிலைமை தஞ்சை மாவட்டத்தில் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருக்குமானால், நிச்சயமாக விவசாயத் தொழிலாளர்கள் மட்டுமல்ல, விவசாய குடும்பமே * * * * * என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அளவுக்கு அவர்கள் பசியாலும் பட்டினியாலும் வாடிக்கொண்டிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> வறுமையினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது வேறு. * * * * * என்று இறந்ததுமாதிரி சொன்னார்கள். அதைப்பற்றித் தான் நான் சொன்னேன்.

<u>திரு. தாழை மு. கருணாநிதி :</u> பசியும் பட்டினியும் இருந்தால் * * * * வேறு இடமே கிடையாது.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு அந்த உலகத்தைப் பற்றித் தெரியுமா ?

<u>திரு. தாழை மு. கருணாநிதி :</u> என்னைவிட வயதில் மூத்தவரான அமைச்சர் அவர்கள் இதைத் தெரிந்து சொல்வார்கள் என்றால் அதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> ஒரு உலகம்தான் உண்டு வேறு உலகம் இல்லை என்பதை உறுப்பினர் அவர்கள் தெரிந்திருப்பார்கள் என்று நினைத்துத்தான் இதைச் சொன்னேன்.

<u>திரு. தாழை மு. கருணாநிதி :</u> * * * * என்பதை நான் அறிவேன்.

(ஆளுங்கட்சித் தரப்பிலிருந்து சில உறுப்பினர்கள் எழுந்திருந்தனர்).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> * * * * * * * என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைமையின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

[1977 ஆகஸ்ட் 10

திரு. தாழை மு. கருணாநிதி : குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் வடிகால், வாய்க்கால் வேலை மிக முக்கியமான பிரச்சனையாகும். இதை மாடர்னைசேஷன் டிபார்ட்மென்ட் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணி சிறப்பான முறையில் நடைபெறுகிறதா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் விவசாயத்திற்குப் பயன்படுகிற வடிகால் வாய்க்கால் வேலைகளைப் பற்றி அங்குள்ள கிராம மக்களுக்குத் தெளிவாகத் தெரியும். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், அதிகாரிகளாக இருப்பவர்கள் நன்றாகத் தெரிந்து கொள்ளாமல் இந்தத் திட்டங்களை வைத்துக்கொண்டு மதகு வேலைகள், மற்ற மற்ற காரியங்கள் செய்கிறார்கள். ஆனால் அந்தப் பணி விவசாயிகளுக்குப் பயன்படத்தக்க முறையில் வாய்க்கால்கள் வெட்டப்படுகின்றதா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. ஆகவே அங்கங்கு நடைபெறக் கூடிய வேலைகளை அங்கங்கு இருக்கின்ற கிராம மக்களைக் கொண்டே வேலைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பசுமைப் புரட்சித் திட்டத்தில் விவசாய முன்னேற்றத்திற்காக பல திட்டங்களைத் தீட்டி, பேரறிஞர் அண்ணா அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களும் விவசாய மக்களின் மீது அக்கறை காட்டினார்கள். அப்படிப்பட்ட திட்டங்களை இந்த அரசு செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு முன் இருந்தவர்கள் விவசாயத்திற்கு அவர்களுக்கு தேவையான நேரத்தில் கூட்டுறவுக்கடனோ, அல்லது உரங்களோ, அல்லது பூச்சி மருந்துகளோ கொடுக்கின்ற சூழ்நிலையில் இல்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் பசுமைப் புரட்சியின் காரணமாக சில திட்டங்களைப் போட்டு (மணியடிக்கப்பட்டது)—நான் தஞ்சை மாவட்டத்தின் சார்பில் பேசுகிறேன்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தஞ்சை மாவட்டத்திலிருந்து நீங்கள் மட்டுமல்ல, வேறு பலரும் பேச இருக்கிறார்கள்.

திரு. தாழை. மு. கருணாநிதி : குறிப்பாக விவசாயிகள் வாங்கியிருந்த கூட்டுறவுக் கடன், விவசாயக் கடன் இவைகளை திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் அவர்கள் இருப்பதால், அதற்காக விவசாயிகளுடைய வீடுகளிலிருந்து சாமான்கள் ஜப்தி செய்யப்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





படுகிறது. ஆடுமாடுகளை ஓட்டிச்செல்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமைகளை மாற்றி நிச்சயமாக அந்த விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கத்தக்க வகையில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[முற்பகல் 10–20]

குறிப்பாக, விவசாயிகளுடைய நலனைப் பாதுகாத்த திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம், அதனுடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் மத்திய சர்க்கார் அதிக அளவிலே நெல்லுக்கு விலை கொடுக்கக்கூடாது என்று சொல்லியும்கூட விவசாயிகளுடைய நிலையைக் கருதி 15 ரூபாயை போனசாகக் கொடுத்தார்கள். அதைப் போன்ற திட்டத்தை இன்றைய தினம் ஆட்சியில் இருக்கின்றவர்களும் நிச்சயமாக விவசாயிகளுடைய நலனைக் கருதி கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, விவசாயத்திற்குத் தேவையான மின் கட்டணங்களை எல்லாம் குறைக்க வேண்டும். அதுமட்டுமல்ல, விவசாயத்திற்குத் தேவையான மோட்டாருக்கு கனெக்ஷன் உடனடியாகக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலமைச்சர் கலைஞர் காலத்தில் 81-வது பசலியில் குத்தகை பாக்கிகளைக் கட்ட முடியாதவர்களுக்கு குத்தகை பாக்கியைத் தள்ளுபடி செய்து கொடுத்தார்கள். அதுபோன்று இன்றைய தினம் பாக்கியாக இருக்கும் குத்தகை பாக்கிகளை நிச்சயமாக இந்த அரசாங்கம் நீக்கவேண்டும். அதைக்கூட எங்களுடைய உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானம் மூலம் தெரிவித்திருக்கிறார். அதையெல்லாம் நிச்சயமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுடைய நலனைப் பாதுகாக்கும் அளவுக்கு எல்லா இடங்களிலும் அரசே நியாயமான விலையில் கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கரும்புப் பண்ணைக் கழகம் தஞ்சையில் அமைக்கப்பட்டது. அமைக்கப்பட்ட அந்தக் கரும்புப் பண்ணைக் கழகத்திற்கு ஒப்பற்ற தலைவரான பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரைச் சூட்டியிருந்தார்கள். ஆனால் இடைக் காலத்தில் ஆண்ட ஆட்சியாளர்கள் அந்தப் பெயரை மாற்றி வைத்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம் அதைப் பரிசீலித்து பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரிலேயே அந்தக் கரும்புப் பண்ணைக் கழகம் இயங்குவதற்கான திட்டத்தைத் தீட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. தாழை மு. கருணாநிதி] [1977 ஆகஸ்ட் 10

வேளாண்மைத் துறையில் தஞ்சை மாவட்டம் சிறப்புப் பொருந்திய மாவட்டமாகும். அந்த மாவட்டத்தில் ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டும். அதுவும், தஞ்சையின் நடுநாயகமாக விளங்குகிற திருவாரூரிலே அந்தப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வேளாண்மைத் துறையில் பணியாற்றுகிற தொழிலாளர்கள், பூச்சி மருந்து அடிப்பவர்கள், டிராக்டர் ஓட்டுகிறவர்கள், கொளுகுத்தி இறந்து விடுகிறவர்கள், இரவில் தண்ணீர் பாய்ச்சச் செல்லுகிறவர்கள், பாம்பு கடித்து இறந்து விடுகிறவர்கள் ஆகிய இந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் இறந்துவிடுவார்களானால் அவர்களுக்கு ஐயாயிரம் ரூபாய்க்கு அதிகமான ரூபாயை குடும்ப நலனுக்காகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> தயவுசெய்து சீக்கிரம் முடியுங்கள்.

<u>திரு. தாழை மு. கருணாநிதி :</u> அதேபோன்று விவசாயிகளுடைய நலன்கள் பாதிக்கப்படாத அளவுக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் ஏற்படுகின்ற பிரச்சினைகளையெல்லாம் சுமுகமாகத் தீர்த்துக் கொடுக்க முத்தரப்பு மாநாட்டை ஆண்டுக்கு ஆண்டு கூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்திற்கான அமைப்புகளை அமைக்க வேண்டுமென்று இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம் எதிர்க் கட்சியாக இருந்தபோது சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தத் திட்டத்தை நிச்சயமாக மத்திய அரசு செய்யவேண்டுமென்று தட்டிக்கழிக்காமல் மாநில அரசே கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சிறு விவசாயத் தொழிலாளர்களுக்கும், வேலை இல்லாத நேரத்தில்........

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> நீங்களாக உங்கள் பேச்சை முடித்துக் கொள்ளுகிறீர்களா, அல்லது நானாக முடித்து வைத்து அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டுமா?



1977 ஆகஸ்ட் 10]

<u>திரு. தாழை மு. கருணாநிதி :</u> விவசாயத் தொழிலாளர்களும், சிறு விவசாயிகளும் விவசாய காலங்களுக்குப் பிறகு வேலை இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்காக பால்பண்ணைகளை ஏற்படுத்தி அவர்கள் குடும்ப நலனைப் பாதுகாக்க எல்லா வகையிலும் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் ஒவ்வொருவரும் தயவுசெய்து 7 நிமிடத்திற்குள் முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. கு. அ. செங்கோட்டையன் :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 10ஆம் எண் மானியக் கோரிக்கையில் ஒரு கோடியே இரண்டு லட்சத்து பதினைந்தாயிரம் ரூபாய் அரசு கோரியிருப்பதை நான் வரவேற்கிறேன். பால் நல்ல சத்துணவு. அதை அபிவிருத்தி செய்யவேண்டுமென்பதற்காக இந்த அரசு முற்பட்டிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு பால்வள நிறுவனம் பெரிய நகரங்களில் மட்டும் உள்ளது. மற்றும் கோவை, இராமநாதபுரம் மாவட்டங்களில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இருப்பதை நான் வரவேற்கிறேன். கோபிச்செட்டிப்பாளையத்திலும், சத்தியமங்கலத்திலும் இதை அமைக்கலாம். இதற்குக் காரணம் பெருவாரியான நிலங்களில் நெல் பயிரும், கரும்புப் பயிரும் பயிர் செய்யப்படுகின்றன. எனவே கால்நடைகளுக்குத் தேவையான தீவனம் சுலபமாகக் கிடைக்கிறது. அதிகமான பால் தரக்கூடிய பசுக்களை அரசு ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலம் உழவர் பெருமக்களுக்கு வருமானம் அதிகரிப்பதோடு, அவர்களுக்கு தொழில் வாய்ப்பும் கிடைக்கும் என நம்புகிறேன்.

அடுத்தபடியாக, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் விவசாய உற்பத்திப் பொருட்களை நியாய விலைக்கு விற்கக்கூடிய முறையில் ஒரு கமிட்டி செயல்படுகின்றது. ஆனால் இந்தக் கமிட்டியின் மூலமாக, பருத்தி, கடலை, கரும்பு, சர்க்கரை போன்ற பணப்பயிர்கள்தான் விற்பனை செய்யக்கூடிய ஏற்பாடுகள் இருக்கின்றன. இவைகளைத் தவிர, நெல், சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற சிறு தானியங்களையும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலே விற்பனை செய்யக் கூடிய ஏற்பாடுகளை நம்முடைய அரசு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இதனால் விவசாயிகளுக்கு, சிறு தானியங்களை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயி

களுக்கு, லாபம் கிடைக்கும் என்று நம்புகிறேன். விவசாயிகளுக்கு நியாய விலை கிடைக்க ஏதுவாகும் என்பதுடன் இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் தொகை நிலுவையில் இருக்கிறது, அந்த நிலுவையில் இருக்கும் தொகையை விவசாயிகளுக்குப் பயன்படுகின்ற வகையில் வேளாண்மைத் திட்டங்களுக்குப் பயன்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேளாண்மைத் துறை அதிகாரி ஒருவரை இதற்கு செயலாளராகப் போட்டு அந்தத் திட்டங்களை நல்லமுறையிலே செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது நல்ல முறையிலே செயல்படாத ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைக் கலைத்துவிட்டு நல்லமுறையிலே தேர்தல் நடத்தி அவைகள் செயல்பட ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையிலே பத்தாயிரம் ஏக்கர் பரப்புள்ள நிலங்களை அபிவிருத்தி செய்து வேளாண்மையைப் பெருக்குவதற்காக துணை அலுவலர் நியமிப்பதற்குப் பதிலாக 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிற்கு ஒரு துணை அலுவலர் என்ற முறையிலே நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த 5 ஆயிரம் ஏக்கர் பரப்பு உள்ள பகுதியில் ஒவ்வொரு விவசாய சேவா சங்கத்தை அமைத்து அவர்கள் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவைப்படுகின்ற உரம், பூச்சி மருந்து, கடன் வசதிகள் போன்றவற்றைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த விவசாய சேவா சங்கங்கள் தொழில் நுட்பக் கருவிகளை வழங்குகின்ற அளவிலே செய்தால் உழவர் பெருமக்களுடைய வருமானமும் பெருகும், அதே நேரத்திலே விவசாய உற்பத்தியும் பெருகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய சத்தியமங்கலம் தொகுதியைப் பொறுத்தவரையில் மின் இணைப்புகள் அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அப்படிக் கொடுக்கப்படாத காரணத்தால் ஆயில் எஞ்சின் வைத்துக் கொண்டு விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையிலே விவசாயம் செய்வதற்கும், செலவுகளைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையில் அரசாங்கம் தனிக் கவனம் செலுத்தி உடனடியாக அங்கே மின் இணைப்புகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல, அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகள் கிடையாது. மலைப் பகுதிகள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியில், புதுபீர்க்கடவு, பெரியகுளம் ஏரி விரிவுபடுத்துதல், கொம்மநாயக்கன்பாளையம், பெரும்பள்ளம் ஏரி, சிக்குரசம் பாளையம் ஏரி,





வரதப்பாளையம் ஏரி, கணக்காப்பாளையம் குளம் ஆகியவைகளை செப்பனிட்டு அந்தத் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று பத்து ஆண்டுகளாக அந்த மக்கள் கேட்டும்கூட அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. அங்கே உள்ள விவசாயிகள் எல்லாம் அதனால் மானாவாரி பயிரைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது நல்ல வழிவகை செய்யக்கூடிய முறையிலே அந்த ஏரிகளை எல்லாம் செப்பனிட்டு அங்கே இருக்கின்ற உழவர் பெருங்குடி மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு தனி கவனம் நம்முடைய அரசு செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

அதுமட்டுமல்ல. விவசாயக் கூலிகளாக வேலை செய்யும் தொழிலாளர்கள் காலையிலிருந்து மாலை வரையில் உழைக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இதுவரையில் இருந்த அரசாங்கத்தால் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். மில்லிலே வேலை செய்கின்ற தொழிலாளி என்றால் அவர்களுக்குப் பாதுகாப்பு தரப்படுகிறது. ஆனால் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லை. அவர்களுக்கும் பாதுகாப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பினை நல்கிய துணைத் தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. டி. சுப்பிரமணியம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் இந்த அவையின் முன்னே பெருமையோடு சமர்ப்பித்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய தொகுதியின் சார்பில் பாராட்டுதலைத் தெரிவித்து என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன்.

எனது தொகுதியான ஆண்டிமடம் தொகுதி மழையை மட்டுமே நம்பி இருக்கின்ற ஒரு பின்தங்கிய தொகுதி ஆகும். மழைக் காலத்தில் ஏரியில் நிரம்புகின்ற தண்ணீரை மட்டுமே பயன்படுத்தி விவசாயத்தை நடத்தி வருகின்றனர். எனவே, நீர்ப்பாசன வசதிகள் எதுவும் இல்லாத பகுதி ஆகும். இருக்கின்ற ஒரு சில ஏரிகளும் மேடிட்டுத் தூர்ந்துபோய் இருக்கின்ற காரணத்தால் குறிப்பாக குழமூர், பொன்பரப்பி, மருவத்தூர், கொடுக்கூர், மருதூர், ஆண்டிமடம், ஓலையூர், இரும்புலிக்குறிச்சி, பாளையக்குடி ஆகிய அதிக மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் உள்ள ஏரிகளை ஆழப்படுத்தி அதிக நீர் தேங்கி நிற்கின்ற வசதி ஏற்படுத்தப்படுமானால் விவசாயத்தையே நம்பி வாழும் ஆயிரக்கணக்கான ஏழை விவ

[திரு. டி. சுப்பிரமணியம்] [1977 ஆகஸ்ட் 10

சாய்ப் பெருங்குடி மக்கள் வறுமை நீங்கி வாழ்வதற்கு இந்த அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன். குறிப்பாக இரும்புலிக்குறிச்சி கிராமத்திற்கும் சிறுகடம்பூர் கிராமத்திற்கும் இடையிலே உள்ள காட்டு இலாக்காவிற்குச் சொந்தமான பகுதியில் 40 ஏக்கர் பரப்பளவில் ஒரு பெரும் பள்ளத்தாக்கு உள்ளது. சுற்று வட்டாரத்தில் பெய்கின்ற மழை நீர் அத்தனையும் அங்கே வந்துதான் சேர்ந்தாக வேண்டும். எனவே, அந்தப் பகுதியைக் காட்டிலாக்காவும், பொதுப்பணித்துறையும் இணைந்து ஒரு பெரிய ஏரியாக உருவாக்கி தரப்படுமானால் அதன் சுற்று வட்டாரத்தில் இருக்கின்ற இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுவதுடன் அதன் சுற்று வட்டாரத்தில் உள்ள பரணம், குமிழியம், பலாக்குறிச்சி, செதலவாடி, இரும்புலிக்குறிச்சி, பாளையக்குடி, கிளிமங்கலம், சிறுகடம்பூர், ஆனந்தவாடி, உஞ்சினி, சோழன்குறிச்சி மற்றும் இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் குடிநீர், மற்றும் பாசனக் கிணறுகள் நீர்ப் பிடிப்பு குன்றாமல் இருப்பதற்கும் வழியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஏரித் திட்டத்திற்கு ஏற்கெனவே பொதுப்பணித்துறை அனுமதி அளித்து இருந்தாலும் வனத்துறை அனுமதி அளிக்க மறுத்து வருகிறது. ஆகவே, இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஒதுக்கீடு செய்துள்ள நிதியிலிருந்து செயல்படுத்தி வறுமையிலும் குடிநீர்ப் பற்றாக்குறையாலும் அவதிப்படுகின்ற எனது தொகுதி மக்களைக் காப்பாற்ற வேண்டுகிறேன். எனது தொகுதியைப் பொறுத்த வரையில் முக்கிய பயிர்களான வேர்க்கடலை, மிளகாய், மழை இல்லாத காரணத்தினாலும், வளமுள்ள தோட்டங்களில் முந்திரி சாகுபடி செய்ய ஏற்பாடு செய்வதால் விவசாயிகள் அன்றாட வாழ்க்கை உணவுப் பற்றாக் குறையினால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, 1977-78 ஆம் ஆண்டிற்கு அரசு அன்மக்கத் திட்டமிட்டு இருப்பதாக அறிவித்துள்ளபடி எனது தொகுதியில் நிலத்தடி நீர் பிடிப்புள்ள பகுதிகளில் குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அடுத்து, விவசாயத்திற்குத் தேவையான உரம், மற்றும் பூச்சி மருந்துகள் சிறு விவசாயிகளுக்கு முறையாக வழங்கப்படுவதில்லை. எனது தொகுதியில் பெரும்பாலும் நகர தொடர்பற்ற ஏழை விவசாய மக்கள் வாழ்கின்ற பின் தங்கிய பகுதியாக இருப்பதால் கூட்டுறவு உர வினியோகத் துறையால் ஏமாற்றப்படுகிறார்கள். சிறு விவசாயிகளுக்கு அளிக்கின்ற எந்த வித சலுகையும் நேரடியாகக் கிடைப்பதில்லை. கிராமத்தில் செல்வாக்கு படைத்தவர்களும், வசதி படைத்தவர்களும் இடையில் அனுபவித்து விடுகிறார்கள். உதாரணமாக ஒன்றியங்கள் மூலம் ஊராட்சிகளில் ஒப்படைக்கப்பட்டு இருக்கும் விசைத்தெளிப்பான்களை, ஊராட்சித் தலைவர்களும், அவர்களுக்கு வேண்டியவர்களாக இருக்கின்ற பெரும் மிராசுதார்களும் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.



1977 ஆகஸ்டு 10] [திரு. ஒ. ப. சோமசுந்தரம்]

ஏழை விவசாயிகள் விசைத் தெளிப்பான் என்றால் இன்னும் என்னவென்றே தெரியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே, அரசு த்க்க நடவடிக்கையை உடனடியாக மேற்கொண்டு விவசாயிகளுக்குத் தேவையான உரம், மற்றும் விதைகள், பூச்சி மருந்துகள் விசைத் தெளிப்பான்கள் முறையாக கிடைக்க வழிவகை செய்ய வேண்டுகிறேன்.

மேலும் கடந்த இரண்டு, மூன்று ஆண்டு காலமாக மழை இன்மையால் வறண்டு போய் விவசாயம் பாதிக்கப்பட்டு வறுமையினால் வாடிக் கொண்டிருக்கிற ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் பாக்கியை அதிகாரிகள் வசூலிப்பதில் மிகவும் கடுமையாக நடந்து கொள்கிறார்கள். ஆங்காங்கே விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். நிலவள வங்கி மூலமாக வழங்கப்பட்ட கடன்களை அரசு இன்னும் ஓராண்டு காலத்திற்கு வசூலிப்பதை நிறுத்தி வைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அமைந்திருக்கிற பேரறிஞர் அண்ணாவின் அரசு கிராமப்புற ஏழை விவசாயிகளின் வாழ்வு வளம் பெறும் அடிப்படையில் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த பெரும் முயற்சி எடுத்துக் கொண்டமைக்கு என்னுடைய தொகுதி சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் நன்றி கலந்த வணக்கத்தைக்கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற திரு. வெங்கிடு: மாண்புமிகு தலைவரவர்களே, மானியக் கோரிக்கை என்ற பெயரில், வேளாண்மை என்ற தலைப்பில் ரூ. 34,68,36,000 க்கும், வேளாண்மை குறித்த மூலதனச் செலவுக்காக ரூ. 12,34,47,000 க்கும், பால் வழங்கு திட்டங்களுக்காக ரூ. 1,02,15,000 க்கும் கோரிக்கைகள் அவை முன்னால் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அடிப்படையில், குறிப்பாக, விவசாயத் துறைக்கு மட்டும் ரூ. 47 கோடிக்கு மேல் செலவு செய்யக் கூடிய அடிப்படையில் அறிக்கை அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கக்கூடிய பல்வேறு அம்சங்களையும் சரியான அடிப்படையில் நடைமுறையில் அமுலாக்கக்கூடிய அளவுக்கு, அரசினுடைய நடவடிக்கையை கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய சாமான்ய விவசாயிகளுடைய நிலையினை அடிப்படையாகக்கொண்டு செயல்படுத்தக்கூடிய அம்சத்தில் நடவடிக்கைகள் அமையவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, இன்றைக்கு, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய அடிப்படையான அமைப்பு முறையிலே, சரியான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். கிராமப் புறங்களிலே நவீன நிலப்பிரபுத்துவ முறை மேன் மேலும் வளர்ச்சி அடைந்திருக்கிறது. நவீன

[திரு. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு] [1977 ஆகஸ்ட் 10

நிலப்பிரபுத்துவ முறை வளர்ச்சியின் காரணமாக, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய ஏழை, சிறு, நடுத்தர விவசாயிகள் நலன் மேன் மேலும் பாதிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் வாழ்க்கையில் அபிவிருத்தி இல்லை என்பதுதான் இன்றைக்கு, தமிழகத்திலே இருக்கக்கூடிய அல்லது, நாடு முழுவதும் இருக்கக்கூடிய யதார்த்தமான சூழ்நிலை என்ற அம்சத்தையும் இந்த நேரத்திலே நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, கிராமப்புறத்தில், சரியான நிலச் சீர்திருத்தத்தின் மூலமாக சரியான மாற்றம் ஏற்படுத்தி, உழைக்கக்கூடிய விவசாயிக்கு நிலம் கிடைக்க அடிப்படையான மாற்றம் தேவை. சரியான நிலச் சீர்திருத்தம் இல்லாமல் விவசாயிக்கு நிலம் கிடைக்காமல், நிலத்தில் இருக்கக்கூடிய விவசாயிக்கு நேரடியாக உணர்வு ஏற்படக்கூடிய அடிப்படையான நிலையை ஏற்படுத்தாவிட்டால், தமிழகத்திலே விவசாயத்திலே சரியான மாற்றத்தைக் காண்பது சாத்தியம் அல்ல என்பதை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களுடைய கருத்தை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, மானியக் கோரிக்கைக் குறிப்பு, தனியார் அல்லது அரசுத் துறையின் மூலமாக பயிர் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதெனவும் மற்றும் பூச்சி மருந்துகள், இரசாயன உரங்கள் போன்றவை உரிய காலத்தில் கிடைக்க இந்துறை கவனித்து வருகிறது என்ற அடிப்படையில் இந்த அறிக்கை அமைந்திருக்கிறது. குறிப்பாக, தனியார் துறையும், அரசுத் துறையும் கூட்டாகச் சேர்ந்து இந்த வேளாண்மைத் துறையை உயர்வான அளவுக்குக் கொண்டு வரத்தக்க நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது என்ற அடிப்படையிலே இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே உழவர்களுக்கு வழங்கக்கூடிய அம்சத்தில், உற்பத்தி சாதனங்கள், விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்கல், தொழில் நுட்பத் துறை இயந்திரங்கள் வாடகைக்கு விடுதல், இதர தேவையான ஆலோசனைகள் வழங்குதல், போன்ற பார்வையில் இப்படிப்பட்ட சாதனங்கள் கிராமப்புறங்களிலே இருக்கக்கூடியவர்களுக்கு, அவர்களுடைய மேம்பாட்டிற்கு வழங்குவது என்பது அரசினுடைய அடிப்படையான திட்டம்.

[முற்பகல் 10-40]

இந்த அடிப்படையான திட்டத்தை வைத்துக்கொண்டு அரசு சென்ற ஆண்டுகளிலும் சரி, நடப்பு ஆண்டிலும் சரி, நெல், பருத்தி, சோளம், கரும்பு, கேழ்வரகு, மக்காச் சோளம், சூரியகாந்திபோன்ற சாமான்ய மக்களின் தேவை அடிப்படையில் ஜீவாதாரமான கொள்கை என்ற அளவில், இந்தப் பொருள்களை உற்பத்தி செய்கிற அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக கொள்கைகளை வரையறுத்துக் கொள்ள வேண்டும் என்பது அரசின் நிலை. இந்த அம்சத்தை நாம் கணக்கிட்டுப் பார்ப்போ



10 ஆகஸ்டு 1977] [திரு. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு]

மானால் அரசால் நிறைவேற்றப்பட்ட அம்சங்கள், சரியான அடிப்படையில் சரியான காலத்தில் அரசு மேற்கொள்ள வேண்டிய அடிப்படையான நடவடிக்கைகள் என்ன? அந்த அடிப்படையான நடவடிக்கையை நாம் கணக்கிட்டுப்பார்த்தால் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய உற்பத்தி சாதனங்கள், மற்றும் இருக்கக்கூடிய பூச்சி கொல்லி மருந்துகள், உரம் சாதாரண விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய சாதாரண பொருள்கள், நியாயமான விலையில் கிடைப்பதில்லை. யதார்த்தமான இந்த நிலைமையை நாம் கணக்கிட்டுப் பார்த்தால் அரசால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சொஸைட்டிகளானாலும் சரி, மற்றும் இருக்கக்கூடிய கூட்டுறவு ஸ்தாபனங்களானாலும் சரி, அரசுத் துறையில் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனங்களானாலும் சரி, இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கக்கூடிய யதார்த்தமான சூழ்நிலையில் பணக்காரர்களின் மேல் ஆதிக்கம் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதே போல கிராமப்புறத்தினுடைய பொருளாதாரம், சாதாரண விவசாயிகளின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற அதிகாரம் அந்தப் பணக்காரர்கள் கையில்தான் இருக்கிறது. சாதாரண மக்களிடம், ஏழை மக்களிடம் இல்லை. அவர்கள் உளப்பூர்வமாக செயலாற்றக் கூடிய அளவுக்கு, சரியாக செயலாற்றக் கூடிய அளவுக்கு, சுதந்திரமாக செயலாற்றக்கூடிய அளவுக்கு முடியாத நிலையில் ஏற்கனவே நிலப் பிரபுக்கள் மத்தியில் கட்டுப்பட்டுள்ள சூழ்நிலையில் இருந்துவிடுபட முடியாத நிலை இருக்கிறது. அந்த அம்சத்தைக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது பல்வேறு விதமான சொசைட்டிகள் விவசாயிகளுக்குகடன்கள் வழங்க பல்வேறு உத்தரவுகள் போடப்பட்டிருக்கிறது. இந்த உத்தரவுகளிலும் கிராமப் புறங்களில் சாதாரண ஏழை நடுத்தர விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய 2, 3, 5 ஏக்கர் போன்ற நிலம் வைத்துள்ள சாதாரண விவசாயிகளும் அதற்குமேல் 5, 6, 10 ஏக்கர் நிலங்கள் வைத்துள்ள நடுத்தர விவசாயிகளும் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு அந்த உத்தரவுகள் மூலம் பணம் கிடைக்கிறதா என்றால், இல்லை என்பதுதான் நிதர்சனமான நிலைமை. அந்த அம்சத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் குறிப்பாக சர்க்காரால் வழங்கப்பட்டிருக்கிற கடன் உதவி சாதாரண விவசாயிகளுக்கு இருப்பதில்லை. உதாரணத்திற்கு நான் சொல்கிறேன். இன்றைய தினம் சர்க்காருடைய மானியக் கோரிக்கையிலே அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் இன்டோ ஜெர்மன் அபிவிருத்திக் கழக. . . . . (மணி அடிக்கப்பட்டது) ஒத்துழைப்புடன் திட்டம் தொடங்கப்பட்டது.

நான் கேட்கிறேன். சென்ற ஆண்டிலும் கணக்கிட்டுப் பார்ப்போமானால் இங்கே சாதாரண ஏழை விவசாயிகளுக்கு டெமிக் போன்ற மருந்து கிடைப்பது இல்லை. அந்த மருந்து

[திரு. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு] [1977 ஆகஸ்டு 10

பணக்காரர்களுக்கு கிடைத்தது அதில் பெரும் பகுதி சாதாரண மக்களுக்குக் கிடைப்பதில்லை அதே மாதிரி சாதாரண விவசாயிகளுக்கு இன்றைக்கு 10 சதவீதம் டெசிக் என்ற வெளி நாட்டு மருந்து போன வருடம் கடனாக கிடைத்தது. இந்த ஆண்டு கொடுப்பார்களா என்று தெரியவில்லை. இன்றைக்கு உருளைக்கிழங்கு பயிர் செய்யக்கூடிய விவசாயிகளுக்கு மானியக் கோரிக்கையில் அரசு 50 சதவீதம் மானியத்தில் மருந்து வழங்கும் என்று சொன்னால் கீழ் பகுதியிலே இருக்கக்கூடிய பருத்தி விவசாயிகள், நெல் விவசாயிகள் மற்றும் பலதரப்பட்ட பொருள்களை விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகள் ஏன் 50 சதவீத மானியத்துடன்—சாதாரண விவசாயிகளுக்கு இந்த அரசு ஏன் மருந்து, உரம் வழங்கக்கூடாது. வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடன் சம்பந்தப்பட்ட வரையில், 1976-77-ல் 235 விவசாயிகளுக்கு 3 லட்சத்து 50,000 ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. 235 பேருக்கு 3 லட்சத்து 50,000 ரூபாய் என்றால் ஒரு விவசாயிக்கு 15,000 ரூபாய் ஆகிறது. ஆனால் இந்தப் பணம் சாதாரண 2 ஏக்கர், 3 ஏக்கர் வைத்திருக்கக்கூடிய சிறு நில விவசாயிகளுக்குக் கிடைக்கிறதா என்றால் இல்லை. பெரும் பணக்காரர்களாக இருக்கக்கூடியவர்களுக்குத்தான் இந்தப் பணம் கிடைத்திருக்கிறது என்பது யதார்த்தமான நிலைமை. தமிழகத்தில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற கடனைப் பார்த்தால், வங்கிகளிலிருந்து விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய கடன் 60 சதவிகிதம், 70 சதவிகிதம் வரையில் கிராமப் புறங்களில் மேலாதிக்கம் செலுத்தக்கூடிய பணக்காரர்கள் கைக்குத் தான் போய்ச் சேருகிறது... சாதாரண விவசாயி கைக்குப் போவதில்லை. இந்த நிலைமை மாறி சாதாரண ஏழை விவசாயிக்கு கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும்.

அடுத்து டிராக்டர்களின் உபயோகம் சாதாரண விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. பணக்காரர்களாக இருக்கக்கூடிய, எஸ்டேட் வைத்திருக்கக்கூடியவர்களுக்குத்தான் டிராக்டர்கள் பயன்படுகிறதே தவிர, 5 ஏக்கரா, 4 ஏக்கரா வைத்திருக்கின்ற விவசாயிகளுக்கு டிராக்டர்களின் உபயோகம் கிடைப்பதில்லை. அதோடு மனித சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கின்ற போது டிராக்டர்களை பயன்படுத்துவதனால், பல்லாயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போகின்ற நிலைமை ஏற்படுகிறது என்ற அம்சம் இருக்கிறது என்பதையும் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. காய்கறி உற்பத்தி செய்கிறான் விவசாயி, அதற்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு. காய்கறிக்கு நியாயமான விலை கிடைக்கின்ற



1977 ஆகஸ்ட் 10] [திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு]

நிலைமையை ஏற்படுத்தும் அளவுக்கு, நேரடியாக கொள்முதல் செய்யக்கூடிய அளவுக்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த அடிப்படையில் ஒவ்வொரு மாவட்ட மையத்திலும், தாலூக்கா மையத்திலும், பஞ்சாயத்து யூனியன் மையத்திலும் அதிகமான சொசைடிகளையும், 'பர்சேஸ்' செய்யக்கூடிய கடைகளையும் ஏற்படுத்த வேண்டும். தனியார் 'பர்சேஸ்' துறைக்கு முடிவு கட்டக்கூடிய அளவுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வறட்சி நிவாரணப்பணிக்கு, குளம், குட்டைகளை மேம்படுத்தும் நிலையை அரசு மேற் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் ராமனுதபுரம் ஜில்லாவிலும், திருநெல்வேலி ஜில்லாவிலும், புயலால் பாதிக்கப்பட்ட நேரத்தில் மணலால் மூடப்பட்ட கிணறுகளை தூர் எடுக்கப்படவில்லை. வாசுதேவநல்லூரில், வெள்ளத்தடுப்புத் திட்டத்தின் கீழ் பல இடங்களில் குளம், குட்டைகள் கட்டுவதற்கு சிறு சிறு கரல்வாய்களை வெட்டுவதற்கு, பள்ளங்களை தூர்த்து, நீர் ஊற்று காண்பதற்கான நடவடிக்கைகளை அரசு ஏற்படுத்த வேண்டும். அந்த அடிப்படையில், குறிப்பாக என்னுடைய வட்டாரத்தில் அரசால் நிறைவேற்றப்படக்கூடிய திட்டம், 20 ஆண்டுகளுக்கு மேலாக கிடப்பில் கிடக்கிறது. என்னுடைய, தொகுதியை ஒட்டியிருக்கின்ற பகுதியில். தொண்டமுத்தூர் உறுப்பினரும் இதற்கு முன் இந்த விஷயத்தைச் சுட்டிக் காட்டினார்—சங்கனூர் பள்ளத்தைத் தடுத்து பெரியநாய்க்கன்பாளையம், யூனியனுக்கு உட்பட்ட இந்தப் பள்ளத்தை திருப்பி, சின்னவேடம்பட்டி கிராமத்தில் அணை கட்டி அதில் தண்ணீர் வரச் செய்தால், சின்னவேடம்பட்டி பகுதிக்கு 400 ஏக்கருக்கு பயன்படும். இந்தத் திட்டம் 20 ஆண்டுக்கு மேலாக கிடப்பில் இருக்கிறது. அதிகாரிகள் 80 லட்ச ரூபாய்க்கு எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் கோயம்புத்தூர் தாலூக்காவுக்கு வடக்குப் பகுதியில் பெரியநாய்க்கன்பாளையம் பஞ்சாயத்து யூனியன், சர்க்கார் சாமக்குளம் பஞ்சாயத்து யூனியன், பல்லடம் பஞ்சாயத்து தாலூக்கா பகுதிகளில் இருக்கக்கூடிய 10, 15 பஞ்சாயத்துக்களில் இருக்கக்கூடிய 50-க்கு மேற்பட்ட கிராம விவசாயிகளுக்கு பலனளிக்கும். நிலத்துக்கு நீர் ஊற்று கிடைக்கும். குடிநீர் பிரச்னை தீரும். ஆகவே இந்த வட்டாரத்தில் குடிநீருக்காக செலவு செய்கின்ற பணத்தையும் இதற்குச் செலவு செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், எதிர்காலம் செழிப்பாக இருக்கும், வசதியும், வாய்ப்பும் ஏற்படும் என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உரையை முடிக்கிறேன்.

திரு. ஒ. ப. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறைக்கான மானியக் கோரிக்கையை வரவேற்று பேசுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்திக்

கொடுத்ததற்காக உங்களுக்கும், இங்கே பேசுகின்ற சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தமைக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், பொள்ளாச்சித் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயத் தொழிலில் நம்முடைய தமிழகத்தில் ஏறக்குறைய 70 சதவிகித மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். நாட்டில் 70 சதவிகித மக்கள் செய்கின்ற அந்தத் தொழில் லாபகரமான தொழிலாக இன்றில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவைகளில் ஒன்று, விவசாயத் தொழிலில் உள்ள பல நடைமுறைச் சிரமங்கள். அந்தச் சிரமங்கள் நீக்கப்பட வேண்டும். அப்படி நீக்கப்பட்டால்தான் விவசாயத் தொழில் முன்னேற்றம் அடையுமே ஒழிய, அதற்காக எவ்வளவு மானியத் தொகை ஒதுக்கினாலும், நிச்சயமாக இந்தத் தொழில் லாபகரமாகவும், கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்குப் பயன் தரக் கூடிய தொழிலாகவும் அமையாது என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 10–50]

இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கும் கிராமப்புற மக்கள் படிப்பு அறியாதவர்கள். நன்கு படித்தவர்கள் இந்த தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. உதாரணத்திற்கு இந்தத் தொழிலில் உள்ள சில சிரமங்களைக் கூற விரும்புகிறேன். 1972-ல் பூச்சிக் கொல்லி மருந்துகள் ரூ. 6 கோடி பெறுமான அளவுக்கு வாங்கப்பட்டன. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில் வாங்காத மருந்துகள், திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் வாங்காத மருந்துகள், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் காலத்தில் வாங்காத மருந்துகள், இன்று மதிப்புக்குரிய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் திரு. கருணாநிதி அவர்கள் காலத்தில் வாங்கப்பட்டது. இந்த மருந்துகள் யாருடைய நன்மைக்காக வாங்கப்பட்டனவோ அவர்களுக்கு இதைப் பற்றி சரியாகத் தெரியாது. பூச்சிக் கொல்லி மருந்துகளை வாங்கி மூன்று வருடகாலம் வைத்திருப்பதால் அம்மருந்துகள் பூச்சிகளைக் கொல்லும் வீரியத்தை இழந்து விடும். ஒரு வருடத்திற்கு ரூ. 2 கோடி பெறுமான மருந்துகள் போதுமானதாக இருந்தும்கூட அதிகப்படியாக ரூ. 4 கோடிக்கு மருந்துகள் வாங்கப்பட்டன. இன்றும் நமது விவசாயக் கிடங்குகளில் ரூ. 2½ கோடி பெறுமான பூச்சிக் கொல்லி மருந்துகள் தேங்கிய நிலையில் கிடக்கின்றன. இந்தத் மருந்துகள்தான் விவசாயிகள் மத்தியில் விநியோகிக்கப்படுகின்றது. இந்த மருந்துகளை விவசாயிகள் வாங்கி பயிர்களுக்குத் தெளித்தால் நிச்சயமாக பூச்சிகள் சாகா. கிராமப்





புற விவசாயிகள் கள்ளம் கபடம் அறியாதவர்கள். வெள்ளை உள்ளம் படைத்தவர்கள் வெளுத்ததை எல்லாம் பால் என்று எண்ணுபவர்கள். கொடுத்த மருந்துகள் எல்லாம் பூச்சிகளைக் கொல்லும் என்ற நம்பிக்கை விவசாயிகள் வீரியமற்ற பூச்சிகளைக் கொல்லும் சக்தியற்ற மருந்துகளைத் தெளித்துக் கொண்டிருக்கிறார்கள். சென்ற வருடம் விவசாயத்துறை விவசாயிகளுக்கு வீரியமற்ற மருந்துகளை வினியோகித்தது. அதனால் பருத்தி விவசாயம் பாதிக்கப்பட்டது. பூச்சி மருந்துகளால் பாதிக்கப்பட்ட பருத்தி விவசாயிகளில் நானும் ஒருவன் என்று தாழ்மையுடன் கூறிக் கொள்ளுகிறேன். அதே போல கடலைச் செடிக்கு ஒரு பவுடர் ஒரு ஏக்கர் ஒன்றுக்கு ஒரு கிலோ தெளிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் ஏக்கர் ஒன்றுக்கு மூன்று கிலோ பவுடர் விவசாய இலாகாவினர் தெளிக்கச் சொல்லுகிறார்கள். அந்த மருந்து வீரியமற்ற மருந்து. அதன் விலை ஒரு கிலோ ரூ. 50. மூன்று மடங்கு பணம் கொடுத்து வாங்கினாலும் அதை பயிருக்குத் தெளிப்பதால் வேலை கெடுகிறது. அத்துடன் நோய் செடியிலிருந்து நீங்குவதுமில்லை. பொள்ளாச்சிப் பகுதி முன்பு இந்தியாவிலேயே கடலை விவசாயத்தில் இரண்டாவது இடத்தை வகித்தது. இன்று இந்த பவுடர் பூச்சிக் கொல்லி மருந்தால் கடலை விவசாயிகள் பாதிக்கப்பட்டு அவர்கள் மிகவும் சிரமமான சூழ்நிலையில் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் தரமுள்ள பூச்சிக் கொல்லி மருந்துகள் விவசாயத் துறையினரால் விநியோகிக்கப்படவேண்டுமென்று விவசாயத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இப்போது வினியோகிக்கப்படும் பூச்சி கொல்லி மருந்துகள் வினியோகிக்கப்படாமல் இருப்பது நல்லது என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக எங்கள் பகுதியில் அரசியல் செல்வாக்கு படைத்தவர்கள், காங்கிரஸ் ஆட்சி காலத்திலும் சரி, தற்போது எதிர்க்கட்சித் தலைவராக அமர்ந்துள்ள திரு. கருணாநிதி அவர்கள் ஆட்சிக் காலத்திலும் சரி, அவர்கள் அரசியல் செல்வாக்கை வைத்து அவரவர்களுக்கு வேண்டிய இடங்களுக்கு பரம்பிக்குளம் ஆளியாறு தண்ணீரை, நியாயமாக பொள்ளாச்சி பகுதிக்கு பாயவிடாமல் கொண்டு சென்றார்கள். பொள்ளாச்சிக்குத் தெற்கே, மாக்கினாம்பட்டி சோலையாளையம், சந்திராபுறம், பக்கோதிபாளையம் போன்ற கிராமங்களில் சுமார் 4,000 ஏக்கருக்கும், பொள்ளாச்சிக்கு மேற்கே, ஒடையகுளம், மாரப்பகவுண்டன் புதூர், திவான்சாபுதூர், கணபதிபாளையம், போன்ற கிராமங்களில் சுமார் 4,000 ஏக்கர்களுக்கு இந்தத் தண்ணீர் பாயவேண்டும்.

இப்படிப்பட்ட நிலைமைகள் வேண்டுமென்றே அரசியல் காரணங்களுக்காக, அரசு செல்வாக்கு படைத்தவர்கள் செய்த சதி என்று கூறுவேன். விவசாயத் துறையில் நல்ல பல லாபகரமான வழிகள் உள்ளன.

[திரு. ஓ. ப. சோமசுந்தரம்] [1977 ஆகஸ்டு 10

எங்கள் பகுதியில் திராட்சை ஒரு நல்ல விவசாயம். அங்கு திராட்சைப் பழம் கிலோ ஒன்றுக்கு 1 ரூபாய் என்று விற்கப்படுகிறது. அதே திராட்சைப் பழத்தை உலர வைத்து வெளிநாடுகளுக்கு அனுப்பினுல் கிலோ ஒன்றுக்கு பத்து ரூபாய் கிடைக்கும். இப்படிப்பட்ட லாபகரமான முறைகள் விவசாயத் துறையில் இருக்கின்றன. மாம்பழத்திற்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி இருக்கிறது.

எங்கள பகுதியில் மாம்பழம் ஒன்று இருபது பைசா என்று விற்கப்படுகிறது. அதே மாம்பழம் சென்னேக்கு வந்தால் ஒரு ரூபாய் என்று விற்கப்படுகிறது. மாம்பழத்தை க்வெயட், அரேபியா போன்ற நாடுகளுக்கு அனுப்பினுல் மாம்பழம் ஒன்றுக்கு பத்து ரூபாய் கண்டிப்பாக கிடைக்கும். ஒரு விவசாயிக்கு மாம்பழம் ஒன்றுக்கு பத்து ரூபாய் வேண்டுமென்று நான் கேட்கவில்லை. ஒரு மாம்பழத்திற்கு ஒரு ரூபாய் கிடைத்தால் போதும். என்வே நான் கூறியபடி மாம்பழங்களை வெளிநாடுகளுக்கு அனுப்பினுல் நல்லவிலை கிடைத்து அதனுல் விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் நல்ல பலன் பெறுவர். ஒட்டன்சத்திரத்தில் இருந்து கேரள எல்லை வரையில் மாமரங்கள் அதிகமாக பயிரிட்டு நன்கு வளரும் சூழ்நிலை இருக்கிறது கிட்டத்தட்ட 50,000 ஏக்கர்களில் மாமரங்கள் வளரும் சூழ்நிலை இருக்கிறது. அவ்விடங்களில் மாமரங்களை பயிரிட்டு பழங்களைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பினுல் அங்குள்ளவர்களும் பயன் அடைவார்கள்.

நித்திய கல்யாணி என்ற செடி இப்போது பிரபல்யம் அடைந்துள்ளது. இதில் விவசாயிகளுக்கு கிலோவிற்கு ரூ. 3 தான் கிடைக்கிறது. அதே பொருளை வியாபாரிகள் வாங்கி ஜெர்மனிக்கு அனுப்பினுல் அவர்களுக்கு கிடைக்கக்கூடியது கிலோவிற்கு ரூ. 20, ஆக இடைத்தரகர்கள்தான் இலாபம் அடைகிருர்கள். அந்த லாபம் விவசாய் மக்களுக்குக் கிடைத்தால் கிராம மக்களின், வருவாய்ப் பெருகி கிராம மக்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையமுடியும். இதை வைத்துக் கொண்டு தான் எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் தீர்க்கதரிசிபோல் ஒரு பாட்டு பாடியுள்ளார். காடு விளைஞ்சு நமக்கென்ன மச்சான், கையும் காலும்தானே மிச்சம் என்று வருகிறது, கடைசியில் காடு விளையட்டும் முன்னே, காலம் இருக்கிறது பின்னே என்று வருகிறது. இப்போது காலம் கனிந்து விட்டது. விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் நிச்சயமாக முன்னேறும் என்று கூறி என்னுடைய் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி; வணக்கம்.

*திரு. கூ. சு. முருகேசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டுக்குத் தேவை உணவு.



10 ஆகஸ்ட் 1977] [திரு. கூ. சு. முருகேசன்]

அந்த உணவிற்குத் தேவை விவசாயம். திருச்சி, தஞ்சை மாவட்டங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு தன்னிறைவு பெறக்கூடிய அளவிற்கு விவசாயம் பெருகியிருக்கிறது. அந்தளவிற்கு முன்பிருந்த அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு பசுமைப் புரட்சி என்ற திட்டத்தின் பயனுக தமிழ்நாடு உணவில் தன்னிறைவு பெறக்கூடிய அளவிற்கு அத்திட்டத்தை நிறைவேற்றி நமது மாநிலம் தன்னிறைவு பெற்று மற்ற மாநிலங்களுக்கு உணவு வழங்கக்கூடிய நிலையில் இருக்கிறது என்ருல் அதற்குக் காரணம் முன்பிருந்த அரசுதான் என்பதை நாம் உணரவேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

[முற்பகல் 11-00]

எங்கள் பகுதியில் காவிரி தண்ணீர் வருகிறது, உய்யகொண்டான் பகுதிக்கும் தண்ணீர் வருகிறது. அங்கு புது கட்டளை மேட்டு வாய்க்கால், கட்டளை வாய்க்கால் என்று ஒரு வாய்க்கால் இருக்கிறது. சட்டப்படி 70 அடி தண்ணீர் இருந்தால்தான் இதற்கு தண்ணீர் விடக் கூடிய நிலையில் இருக்கிறது. ஆனுல் போன ஆண்டு தண்ணீர் வராத காரணத்தால் விவசாயப் பெருங்குடி மக்கள் கஷ்டப்படுகிருர்கள். அங்கு சிறிய சிறிய ஏரிகளும் பெரிய ஏரிகளும் வெட்டப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தக்கூடியவர்கள். 70 அடி தண்ணீர் இருக்க வேண்டும் என்று சட்டம் இருந்தாலும் 15 நாட்களில் ஒரு தடவை தண்ணீர் விட்டு ஏரியை நிரப்பி தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்திக்கொள்வதற்கும், போன ஆண்டு ஏற்பட்ட வரட்சியினுல் கஷ்டப்பட்டதினுல் இப்போது முன்பாகவே பாதுகாப்பாக வைத்துக்கொள்வார்கள், ஆகவே அங்கு தண்ணீரை விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் உய்யகொண்டான் பகுதியில் பெரிய பெரிய ஏரிகளும் இருக்கின்றன. அவைகளை ஆழப்படுத்தும் திட்டம் முன்பிருந்த அரசாங்கத்தினிடத்தில் இருந்தது. இப்போது அது கைவிடப்பட்டிருக்கிறது. முன்பு அடிக்கடி ஆழப்படுத்தப்பட்டதால் விவசாயிகள் தண்ணீரை நிரப்பி வைத்துக்கொண்டு பயன்படுத்திக்கொள்வதற்கு வசதியாக இருந்தது. இப்போதும் மீண்டும் அந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டு, தூர் வாரி அங்குள்ள விவசாய பெருங்குடி மக்கள் பயன்படக்கூடிய வகையில் திட்டங்களை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே உய்யகொண்டான் பகுதியில் ஒருபோக சாகுபடி பாதியும், இருபோக சாகுபடி பாதியும் இருக்கிறது. உய்ய கொண்டான் பகுதியில் மஞ்சத்திடல் வரை இருபோகமும். மஞ்சத்திடலுக்கு கீழ்ப் பகுதியில் ஒரு போக சாகுபடியும் செய்யக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே இந்த இடங்களில்

[திரு. கூ. சு. முருகேசன்] [10 ஆகஸ்ட் 1977

எல்லாம் ஒரு போக சாகுபடியாக இருப்பதை இருபோக சாகுபடியாக செய்வதற்கு அந்தப் பகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் ஆர்வமாக இருக்கிறார்கள். ஆகவே இருபோக சாகுபடிக்கு தண்ணீர் விட்டால் உணவுப் பிரச்னையைத் தீர்க்கக்கூடிய அளவில் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மேலும் அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உரம், பூச்சி மருந்து போன்றவைகளுக்கு மான்யம் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், தஞ்சை, திருச்சி மாவட்டங்கள் விவசாயத்தில் முன்னேற்றமான மாவட்டங்களாக இருப்பதால், திருச்சியில் ஒரு விவசாயப் பல்கலைக் கழகம் ஒன்றை ஆரம்பித்து, அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் பயன்படக் கூடிய அளவில் அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல், பால் வழங்கும் திட்டத்தில் கிராமப் பகுதியில் இருக்கின்ற சொஸைட்டிகள் நல்ல முறையில் இயங்காத காரணத்தால் பல இடங்களிலும் பால் விநியோகம் நிறுத்தப்பட்டு இருக்கிறது. மாடுகள் சரியான முறையில் இல்லாமல் கிராம மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அங்கங்கே உள்ள கிராம மக்களுக்கு வேண்டிய பல வசதிகளையும் சொஸைட்டிகள் மூலம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நமது முதலமைச்சர் அவர்கள் 'விவசாயி' என்ற படத்தில் நடித்திருக்கிறார். இப்போது தமிழக மக்களுக்கு விவசாயியாக நடித்தவரே முதலமைச்சராக வந்திருக்கிறார். ஆகவே விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா நன்மைகளும் கிடைக்கும் என்று விவசாயிகள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே படத்தில் மட்டும் போதாது, செயலிலும் நன்மைகளை செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து விவசாயச் சட்டத்தில் குத்தகைதாரர்கள் சட்டம் என்று ஒன்றிருக்கிறது. அந்தச் சட்டத்தின் பயனாக விவசாய குத்தகைதாரர்கள் இரண்டு மூன்று ஆண்டுகளாக ஏற்பட்டு வந்த வரட்சியின் காரணமாக குத்தகை அளிக்க முடியாத காரணத்தால், அந்த குத்தகைதாரர்களை நிலத்தை விட்டு அப்புறப்படுத்தக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்ற கழக அரசு இருந்த காலத்தில் இதைத் தடுக்க ஒரு சட்டம் இயற்றி இருந்தது. அந்தச் சட்டத்தின் சந்து பொந்துக்களில் நுழைந்து நிலபிரபுக்கள் சட்டத்தை பயன்படுத்தி குத்தகைதாரர்களை வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள். பின்னால் ஆளுநர் ஆட்சி காலத்திலும் இதற்காக சட்டம்



10 ஆகஸ்ட் 1977] [திரு. சு. முருகேசன்]

கொண்டு வந்தார்கள். இருந்தாலும் சட்டத்தின் இடுக்கில் புகுந்து, வழக்கறிஞர்களின் வர்தத்திறமையால் பெரும் நிலக்கிழார்கள் குத்தகைதாரர்களை நீக்கக் கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆகவே இந்தச் சட்டத்தை திருத்தி குத்தகைதாரர்கள் பயன்படக் கூடிய அளவில் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சரியான முறையில் விவசாயம் செய்யவில்லை என்றால் குத்தகைதாரர்கள் நிலச் சுவான்தார்களுக்கு குத்தகை கொடுக்க முடியாது. இதை வைத்துக் கொண்டு, பெரும் நிலச் சுவான்தார்கள் ரெவன்யூ போர்டு மூலமாக பொசஷன் எடுத்துக் கொண்டார்கள்.

அவ்வாறு பொசஷன் எடுத்ததைத் தடுக்கும் வகையில் ஆளுநர் ஆட்சிக் காலத்தில் அவர்கள் சட்டம் மூலம் பொசஷன் எடுத்த நிலங்களைக் குத்தகைதாரர்கள் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தார்கள். ஆனால் அச்சட்டத்தில் ரெவின்யூ போர்டு மூலமாக ''எவிக்ஷன் செய்திருந்தாலும்'' என்ற வார்த்தை இல்லாததால் தமிழகத்திலுள்ள ஏழை அரிசன மக்களும் தாழ்த்தப்பட்ட குத்தகைதாரர்கள் நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளார்கள். ஆகவே, அந்தக் குத்தகைதாரர்கள் பயனடைய இந்தச் சட்டத்தில் எவிக்ஷன் என்ற வார்த்தையை சேர்த்து சட்டத் திருத்தம் செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள், அவர்கள் முன்னேற இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறைக்கான குறிப்பினை நமக்கு அளித்தமைக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

எனது பவானிசாகர் சட்டமன்றத் தொகுதியில் பவானிசாகர் அணையிலிருந்து ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதி தண்ணீர் திறந்து விடுவதாக அறிவித்துள்ள அறிவிப்பிற்காக அமைச்சர் அவர்களுக்கு விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றியதற்காக பாராட்டி முதல் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால்வள நிறுவனத்திற்கு முதலிடம் கொடுத்து ஈரோட்டில் ஒரு பால்பண்ணை அமைப்பது குறித்து அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் செட்டிபாளையம் பகுதியில் இரண்டாண்டுகளுக்கு முன்பு அதிகாரிகள் வந்து பங்குத் தொகையாக ரூ. 10 வாங்கி சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட மெம்பர்களைச் சேர்த்துள்ளார்கள் என்றும்,

[திரு. வி. கே. சின்னசாமி] [10 ஆகஸ்ட் 1977

இரண்டாண்டுக் காலமாகியும் பால் பண்ணை தொடங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. உடனடியாக நமது அரசு அங்கு ஒரு பால் பண்ணையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று விவசாயிகளின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பால் உணவு ஏழைக்கேற்ற உணவு, விவசாயிகளுக்கேற்ற உணவு, தொழிலாளர்களுக்கேற்ற உணவு, சைவம், அசைவம் ஆகிய இரு பாலரும் அருந்துகிற உணவு—இந்த உணவை மக்களுக்கு வழங்குவதற்காக நமது அரசு பல கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கியிருப்பதை அனைத்து மக்கள் சார்பாக நன்றியுடன் வரவேற்கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரை விவசாயத்திற்கு நடவு சமயத்தில் உழ, டிராக்டர்களை வாடகைக்கு கொடுத்து நம்முடைய அரசு உதவி செய்யவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். ஒரே சமயத்தில் உழவு வருகின்ற நேரத்தில் கூலிக்குக் கூட ஏர் கிடைக்காமல் போகிறது. பெரும் விவசாயிகள் சொந்தமாக டிராக்டர்கள் வைத்திருக்கிறார்கள். சிறு விவசாயிகள் உழவு செய்ய வேண்டுமென்றால் டிராக்டர்களை வாடகைக்கு எடுத்துச் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. அரசு ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக டிராக்டர்களை வாடகைக்குக் கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி. அந்த விவசாயிக்கு நேர்மையான முறையில், நியாயமான முறையில் நம்முடைய அரசு உதவிகள் செய்வதற்காகப் பாராட்டுகிறேன். ஆனால் அந்த ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் இறந்துவிடுகிற நேரத்தில் உதவித் தொகை கிடைப்பதில்லை. ஒரு விவசாயி வண்டி ஓட்டிச் செல்லுகிறான், எதிரில் ஒரு ஜீப் வருகிறது. அதிலே அடிபட்டு விவசாயி இறந்தால் அவனுக்கு ஒன்றும் கிடையாது. ஆனால் ஜீப் டிரைவர் இறந்தால் அரசாங்கம் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கிறது. விவசாயிகளுக்கும் அப்படி இறந்துவிடுகிறபோது உதவித் தொகை கொடுத்து உதவ வேண்டுமென்று விவசாயக் கூலிகளின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–10.)

அதோடு மாத்திரமன்று. நம்பியூர் ஒரு வறட்சிப் பகுதி, அங்கே பல ஏரிகள், குட்டைகள் கட்டப்படவில்லை. அவைகளை உடனடியாகக் கட்ட ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1977 ஆகஸ்ட் 10] [திரு. வி. கே. சின்னசாமி]

விவசாயிகளுக்கு மாதம் ஒரு முறை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்து அங்கே மாவட்ட வேளாண்மைத் துறை அதிகாரிகளையும், விவசாயிகளையும், கிராம அதிகாரிகளையும் கலந்து கொள்ளச் செய்து பல அறிவுரைகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏன் என்றால் இன்னும் பல விவசாயிகளுக்கு எப்படி மருந்து தெளிப்பது, உரம் எந்த விதத்திலே போடுவது என்று தெரியாமல் இருக்கிறது. ஆகவே அதிகாரிகளைக் கலந்து அப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்து அந்தக் குறைபாடுகளையெல்லாம் போக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக நம்பியூர் பகுதியிலிருந்து கோபி வரையிலுள்ள கரைகள் வாய்க்கால் பகுதிகளிலே ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் கூலி வேலைக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்கள் பத்து மைல் தூரம் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் முதல் நாளே புறப்பட்டு நடந்து சென்று வேலையைச் செய்துவிட்டு இரவு வீடு திரும்புவதற்கு 10 மணி ஆகிவிடுகிறது. இதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அப்படிச் செல்கின்ற மக்களுக்கு சேரன் பஸ் வசதி செய்து கொடுத்தால் அவர்கள் குறுகிய காலத்திற்குள் வேலைக்குச் சென்று விரைவாக வீடு திரும்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விவசாயிகளுக்கு ஒரு சில இடங்களிலே உரம் சரியாக வழங்கப்படுவதில்லை. இதை குறித்து அரசு உடனடியாகக் கவனித்து ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பவானிசாகர் தொகுதியிலே தெங்குமராட்டா என்ற பகுதியில் 1,700 ஏக்கர் நிலம் இருக்கிறது, அங்கே ஒரு கூட்டுப் பண்ணை ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு அதற்காக அதிகாரிகள் எல்லாம் ஒப்புதல் வழங்கியும்கூட இன்னும் அப்படியே இருக்கிறது. அந்தக் கூட்டுப் பண்ணையைச் செயல்படச் செய்தால் அங்கே உள்ள 300, 400 குடும்பங்கள், ஏழை மக்கள் வாழ வழிபிறக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் ஒரு மனு கொடுத்து இருக்கிறேன். அதன்மீதும் உடனடியாக நடவடிக்கை எடுத்து செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பவானிசாகர் அணைக்கட்டுத் திட்டத்தின் மூலமாக அந்தப் பகுதிகளிலே உள்ள ஆயக்கட்டுகளுக்குத்தான் தண்ணீர் விடவேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். பவானிசாகரிலிருந்து வேறு எந்தக் காரணத்தைக் கொண்டு வேறு இடங்களுக்கு தண்ணீர் திருப்பி விடக்கூடாது. அந்த பவானிசாகர் ஆயக்கட்டுப் பகுதிகளுக்குத்தான் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

[10 ஆகஸ்ட் 1977

*திரு. இரா. ஆதிசுவாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தென்னை விவசாயத்தைப் பொறுத்தவரையில் தென்னந் தோப்புகளை அமைப்பதற்கு திருநெல்வேலி ஜில்லாவிலே 500-க்கு 13 இலட்சம் ரூபாய் என்றும் திருச்சி ஜில்லாவிலே 500-க்கு 18 லட்சம் ரூபாய் என்றும் சேலம் ஜில்லாவிலே 500-க்கு 24 லட்சம் ரூபாய் என்றும் இராமநாதபுரம் மாவட்டத்திலே 900-க்கு 28 லட்சம் ரூபாய் என்றும் செங்கற்பட்டு மாவட்டத்திலே ஆயிரத்திற்கு 29 லட்சம் ரூபாய் என்றும் இந்த மானியக் கோரிக்கையிலே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே போல் 2 லட்சம் தென்னங் கன்றுகள் கொடுப்பதாகவும் சொல்லப்படுகிறது. அந்தக் கன்றுகள் எப்படிப் பொறுக்கியெடுக்கப்படுகின்றன என்று பார்க்கிறபோது அது பரிதாபத்திற்குரிய விஷயமாக இருக்கிறது. போன 1965–66 ஆம் ஆண்டிலே வேளாண்மைத் துறை அறிக்கையிலே தென்னை தரமான விதைகள் கன்னியாகுமரி ஜில்லாவிலே கிடைப்பதாகச் சொல்லப்பட்டது. கன்னியாகுமரி ஜில்லாவிலே எவ்வாறு அந்த விதைகளைப் பொறுக்குகிறார்கள் என்று பார்த்தால் வேதனையாக இருக்கிறது. விதைகளுக்கு மார்க்கட் ரேட்டை விட இத்தனை சதவீதம் கூட்டிக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

அந்த பர்சென்டேஜை வைத்துப் பார்த்தால் இவர்களுக்குத் தரமான விதைகள் கிடைப்பதில்லை. அந்த விதைகள் கிடைத்தாலும் அவைகள் மூன்றும் தரமாகத்தான் இருக்கின்றன. ஏனென்றால் இவர்களுக்கு ஒரு தோப்பிலே இத்தனை தேங்காய்கள் வேண்டுமென்று கேட்கின்றபொழுது அந்தச் சிறு விவசாயிகள் தோப்பிலுள்ள அத்தனை தேங்காய்களையும் நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்களா என்று கேட்கிறார்கள். அப்படி எடுக்க மாட்டோம், தேர்ந்துதான் எடுப்போம், இத்தனை பர்சென்ட் என்று எடுப்போம் என்று சொல்லும் நேரத்தில் இவர்களுக்கு நல்ல விதைகள் கிடைப்பதில்லை. இதனால் அங்கேயுள்ள மோசமான விதைகள் மற்ற இடங்களில் நல்ல விதைகள் என்று பிரச்சாரம் செய்து கொடுக்கப்படுகின்றன. இவர்களுக்கு நல்ல விதைகள் கிடைக்கவில்லையென்றால் பெரிய விவசாயிகளிடத்திலிருந்து தென்னங் கன்றுகளில் நல்ல விதைகளை, நல்ல தரமான உள்ள இடங்களிலிருந்து குத்தகைக்கு எடுத்து, அவைகளுக்குக் கூடுதலான மார்க்கெட் இருந்தாலும்கூட, அவைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல டி அண்ட் டி என்ற புதிய ரக தென்னங் கன்றுகளைப் பற்றி இன்றைக்குப் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. இந்த மாநிலத்திலேயே கூடுதலாக தென்னை விவசாயம் செய்யுக்



1977 ஆகஸ்ட் 10] [திரு. இரா. ஆதிசுவாமி]

கூடிய மாவட்டம் என்று சொல்ல வேண்டுமானால் அது கன்னியாகுமரி மாவட்டம் ஆகும். அந்த மாவட்டத்திலிருக்கின்ற பெரிய விவசாயிகளுக்கே அந்தக் கன்றுகள் கிடைக்கிறதா என்றால் இல்லை. அந்தக் கன்றுகள் எங்கே உற்பத்தி செய்யப்படுகிறது என்றால் திருவனந்தபுரத்திற்குப் பக்கத்தில் வேளாயினி என்ற பகுதியில் உள்ள தென்னை ரிசர்ச் ஸ்டேஷனில் தயார் செய்கிறார்கள். அது வேண்டுமென்று பெரிய விவசாயிகள் அப்ளை செய்தால் கூட மூன்று நான்கு மாதங்களாகியும் கிடைக்கவில்லை. அப்படிப் பெரிய விவசாயிகளுக்கே அவைகள் கிடைக்காதபொழுது எப்படிச் சின்னஞ் சிறு விவசாயிகளுக்குக் கிடைக்க முடியும்? ஆனால் அதை பற்றி பிரச்சாரம் செய்கிறார்கள். பத்திரிகையிலே பார்த்தால் அழகாக இருக்கிறது. நடுத்தரத்தையும் கலந்து மீடியமாகக் கொண்டு வந்தால் நன்றாகத் தேங்காய் விடும் என்று சொல்கிறார்கள். ஆனால் அது ஏட்டளவில்தான் இருக்கிறதே தவிர, அது பெரிய விவசாயிகளுக்கே கிடைக்காத பொழுது எங்கே எப்படிச் சிறு விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்று நான் கேட்கிறேன். எனவே இந்த மாதிரியான ஆராய்ச்சியை இந்த மாநிலத்தில் ஏதாவதொரு இடத்தைத் தேர்ந்தெடுத்துச் செய்யலாம். தஞ்சாவூர் மாவட்டத்தில் கூடுதலாக அதிராம்பட்டினத்தில் தென்னை விவசாயம் செய்கிறார்கள். அது போன்று பொள்ளாச்சியில் செய்கிறார்கள். கன்னியாகுமரி ஜில்லாவிலேயும் செய்கிறார்கள். எனவே, இப்படி ஏதாவதொரு மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சி ஸ்டேஷனை ஏற்படுத்திச் செய்தால் புதிய வெரைட்டிகள் ஏட்டளவில் இல்லாமல் மக்களுக்குப் பயன்படும் வகையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் தென்னைகளுக்குப் பலவிதமான நோய்கள் வருகின்றன. லீப் பிளைட், ஸ்டம் ப்ளீடர், தென்னைக் குருத்து நோய், வேர்ப்புழு போன்றவை இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் மருந்து சரியாகக் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் அவற்றைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய பவர் ஸ்ப்ரேயர்ஸ் கிடைப்பதில்லை. வயல்களுக்கு உபயோகிக்கின்ற, மற்ற விவசாயத்திற்கு உபயோகிக்கின்ற ஸ்ப்ரேயர்கள் மாதிரி அல்ல தென்னைக்குப் பயன்படுத்துகின்ற ஸ்ப்ரேயர்ஸ். அதற்கு வேறு விதமான ஸ்ப்ரேயர்ஸ் தேவைப்படுகின்றன. அது ஒவ்வொரு பிளாக்கிலும் வசதியாகக் கிடைப்பதில்லை. அது மட்டுமல்ல பெரிய விவசாயிகள் இதே மாதிரி அடித்துவிட்டாலும், அவர்களுடைய தோப்புகளில் ஸ்ப்ரே செய்துவிட்டாலும் பக்கத்திலுள்ள தென்னந் தோப்புகளில் அதைப்போல ஸ்ப்ரே செய்யாவிட்டால் திரும்பவும் அந்த நோய் அடுத்த இடத்தில் பரவ ஏதுவாக இருக்கிறது. அதனால் இந்த மாதிரி நோய்களைத் தடுப்பதற்காக மருந்தை அடிப்பதை பரவலாகச் சர்க்காரே எடுத்து அந்த மாதிரியான திட்டத்தை நிறைவேற்றினால்தான் அது பயனுள்ள

தாக இருக்கும். இப்பொழுதே பலவிதமான வரிகளைப் போடுகின்றார்கள். தென்னைக்குக் கூடுதலாக மேலும் வரிகள் போடப்படுகின்றன. அத்தோடு சேர்த்து இதற்கும் விவசாயிகளிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம். முன்பு முதலாவதாக செயற்கை உரத்தை பாரி அண்ட் கம்பெனி மிக்சட் உரத்தை 20 வருடங்களுக்கு முன்னால் நடப்புக்குக் கொண்டு வந்த பொழுது இதைப் போல மாடல் ஃபீல்டுகளை எடுத்து ஒவ்வொரு விவசாயிக்கும் 3 வருடகளுக்கு உரங்களை மானியமாகக் கொடுத்தது, பிறகு 7 வருஷங்களுக்குத் தவணை முறையிலே கொடுத்தார்கள். இப்படிக் கம்பெனிகளே செய்யும் பொழுது சர்க்கார் ஏன் இப்படித் துன்பப்படுகின்றவர்களுக்காகச் செய்ய முடியாது என்று கேட்க விரும்புகிறேன்.

இப்பொழுது மருந்துகளின் விலைகளெல்லாம் இரண்டு மடங்கு கூடிவிட்டது. அதனால் சர்க்காரே பப்ளிக் செக்டாரிலே மருந்து தொழிற்சாலையை ஆரம்பித்தால் விவச யிகளுக்குக் குறைந்த விலையில் நல்ல தரமான மருந்துகளைக் கொடுக்க முடியும்.

(முற்பகல் 11.20.)

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில், கிராம்பு கிருஷி செய்வதற்காக 200 ஏக்கரில் ரூ. 12 இலட்சம் தேவை என்று மானியத்தில் கூறப்பட்டிருக்கிறது. அந்தக் கிராம்பு விவசாயம் அங்கிருக்கக்கூடிய ஒரு இலாபகரமான பெரிய தொழில். இன்றைக்கிருக்கிற விவசாயத்திலே கூடுதல் இலாபமான தொழில் கிராம்பு பயிர் செய்வதுதான். ஆனால், இன்றைக்கு ஒரு கிராம்புக் கன்று வேண்டுமென்றால் சாதாரண விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. சின்ன விவசாயியாக இருந்தால் அவனுக்குக் கிடைப்பதில்லை. ஏனென்றால், பெரிய எஸ்டேட்டுக்காரர்கள் தான் நாற்றுப் பண்ணைகள் வைத்திருக்கிறார்கள். அங்கு சென்றால், அவர்கள் இந்த மாதிரி சிறு விவசாயிகளுக்குக் கன்று கிடைப்பதில்லை. அதனால், இன்றைக்கு ஒரு கன்று ரூ. 10 முதல் ரூ. 15 வரையில் விலைக்குக் கிடைக்கிறது. ஆகவே, அரசே சப்சிடி ரேட்டில் கொடுத்தால், சிறிய ஏழை விவசாயிகள் கிராம்பு எல்லாம் வாங்கி நட்டு, பிரயோஜனப் படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கோகோ செடியை 300 ஏக்கரில் மதுரையில் பயிர் செய்வதற்கு ரூ. 10 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில், இதற்கு முன்பு பிரச்சாரம் செய்யப்பட்டு கூடுதலாக, அதாவது இன்ட்டர் கிராப் என்ற முறையில், தென்னைக்கு மத்தியிலே பயிர் செய்யப்படுகிறது. இன்றைக்கு அந்த கோகோ பயிரானது வரவரக் குறைந்துகொண்டே வருகிறது. ஏனென்றால் கோகோ உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு இன்றைக்கு மார்க்கெட்டில் நல்ல விலை கிடைக்கவில்லை. இன்றைக்கு





காட்பரீஸ் கம்பெனி மாத்திரம்தான் ஏகபோக உரிமை கொண்டாடுகிறது. இன்றைக்குக் கோகோவைப் பிரச்சாரம் பண்ணுவது, காட்பரீஸ் கம்பெனிக்காகத்தான் பண்ணுவதைப் போல் தெரிகிறது. விவசாயிகளுக்கு நல்ல விதை கிடைக்க காட்பரீஸ் கம்பெனியைத் தவிர, மற்ற கம்பெனிகளும் பொதுமக்களும் எப்படி அதை பக்குவப்படுத்தலாம் என்று அவர்களுக்கு அறிவுறுத்தினால் கூடுதல் விவசாயம் செய்வதற்கும், அவர்கள் தானாகவே முன் வந்து விவ்சாயம் செய்யவும் உதவும்.

இன்றைக்கு எல்லா பிளாக்குகளிலும் விவசாயம், விவசாயம் என்று சொல்கிறார்களேயொழிய பவர் ஸ்பிரேயர்ஸ் கேட்டால், எங்கள் ஜில்லாவில், சரியாக அளிக்கப்படவில்லை. விவசாயக் கருவிகளை போய் கேட்டால், அலுவலகத்திலும் பழுதுபட்டுதான் இருக்கிறது. ஆயில் இன்ஜின் வைத்திருக்கிறார்கள். ஆனால், பைப் லைன் கிடையாது. ஆயில் இன்ஜின்கள் எல்லாம் பழுதுபட்டுத்தானிருக்கின்றன. இப்படியாக, விவசாயிகளுக்குத் தேவையான ஆயில் இன்ஜின்கள், பவர் ஸ்பிரேயர்ஸ் போன்றவைகள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இவைகளையெல்லாம் உடனுக்குடன் சரி செய்து, அவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்தால், விவசாயிகளுக்கு நன்மை பயப்பதோடு விவசாயமும் முன்னேறும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் ஜில்லாவில் உள்ள தென்னையைப் பற்றி சொன்னார்கள். தென்னையில் உள்ள ஒவ்வொரு பாகமும் பயன்படுகிறது. கதம்பல் ஒரு பெரிய கைத்தொழிலுக்கு மூலப் பொருளாக இருக்கிறது. இதை வைத்து இலட்சக்கணக்கான குடும்பங்கள் பிழைத்துக் கொண்டிருக்கின்றன.

அங்கு எல்லாவிதமான பழ வகைகள் கிடைக்கின்றன. எல்லாவிதமான பழ வகைகளும் பயிரிடப்படுகின்றன. உதாரணமாக, வாழைப் பழத்தை எடுத்துக் கொண்டாலும், 10, 15 வகைகள் கிடைக்கின்றன. மட்டி என்று கூறப்படுகின்ற வாழைப் பழம் அங்கு தவிர, வேறு எங்கும் கிடைப்பதில்லை. ஆனால், இப்பொழுது அந்தப் பழ வகைகளில் வைரஸ் பரவி, அந்தப் பழ வகை கிடைப்பது அரிதாக இருக்கிறது. அங்கு கால் நிலை ஒத்திருப்பதால், 'இன்டஸ்ட்ரியல் பேஸ்ட் அக்ரிகல்ச்சுரல் பாலிடெக்னிக்' வைத்தால், இந்த மாதிரி விவசாயத்தில் கிடைக்கக் கூடிய பலன்கள் அதிகமாகும், விவசாயம் முன்னேறலாம். ஆகவே, பாலிடெக்னிக் ஏற்படுத்த வேண்டுமென்று கூறி, இவ்வளவு நேரம் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன், வணக்கம்.

*<u>திரு. கா. செங்கோடான் :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாய மானியத்தின் பேரில் பேசுகின்ற வாய்ப்பளித்தற்கு முதலில் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு கிராம மக்களுடைய முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்டு இருக்கிறதாலே விவசாயிகள் முன்னேற்றத்தில் அதிக அக்கறைக் கொண்டு இருக்கிறது என்பதை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியான கபிலர் மலை தொகுதியில் மூன்று முக்கியமான குறைகள் விவசாயப் பெருங்குடி மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒன்று மின் இணைப்பு. ஆயில் இன்ஜின் வைத்து கடந்த 12 ஆண்டு காலமாக இந்த ஆயில் இன்ஜின் வைத்திருக்கிற அவல நிலைக்கு ஆளாகி பெரும் செலவு செய்திருக்கிற நிலை இருக்கிறது. இந்தக் குறைகளை நீக்கி, மின் இணைப்புக் கொடுககும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது வாய்க்கால் பிரச்னை. அடிக்கடி தண்ணீர் வராமல் தடைப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறையையும் நீக்கி தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இந்த இரண்டு குறைகளையும் ஏற்கனவே நிறைவேற்றித்தந்திருக்க வேண்டியது. ஆனால் இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிற முன்னாள் முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சராக இருந்த நேரத்தில் பரமத்தி-வேலூர் நகரத்தில் நுழைய முடியாமல் திரும்பிய நிலைமையை மனதிலே வைத்துக் கொண்டு இத்திட்டத்தை நிறைவேற்றித் தரவில்லை என்று அப் பகுதி வாழ் மக்கள் கருதுகிறார்கள். இன்னொன்றும் சொல்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்களை நூக்கி எறிந்தபோது அன்று சட்ட மன்ற உறுப்பினராக இருந்து சி. வி. வேலப்பன் அவர்கள், புரட்சித் தலைவர் அணியிலே வந்து விட்டார் என்பதை மனதிலே வைத்துக்கொண்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்று அரசியல் வட்டாரத்தில் பேசப்படுகிறது. இதில் தனிப் பட்ட அரசியல் காழ்ப்பு உணர்ச்சிக்கு இடம் இல்லை. விவசாயப் பெருமக்களுக்கு நிவாரணம் அளிப்பதிலே அதிக அக்கரைக் கொண்டு அந்த கோரிக்கைகளை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மூன்றாவது மோகனூரிலே சிறிய நீர்ப்பாசன ஸ்கீம் என்று ஆரம்பிக்கப்பட்டு, அந்தச் சங்கத்திற்கு தமிழகத் தமிழ்நாடு சிறு நீரேற்று பாசன சங்கத் தலைவராக மறைந்த திரு. எஸ். எம். கிருஷ்ணன் அவர்கள் இந்தத் திட்டத்தை ஆரம்பித்தார்கள். அந்தப் பக்கத்தைச் சேர்ந்த 40, 50 கிராமங்களில் ஏறத்தாழ 70, 80 லட்சம் ரூபாய் வசூல் செய்து, அது நிறைவேற்றப்படாமல் பாதியிலேயே நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினை அரசு மேற்கொண்டு நிறைவேற்றி, விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்க்கையை வளமாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏறத்தாழ 40, 50 கிராமங்களிலுள்ள விவசாயிகள் தங்களுடைய மாடு கன்றுகளை விற்றுக்கூட இந்த ஸ்கீம் நிறை





வேற பணம் கட்டியிருக்கிறார்கள். இன்னும் சிலர் தங்களது நிலங்களை விற்று விட்டு 2 ஏக்கர் ஒரு ஏக்கர் வைத்துக் கொண்டு தண்ணீர் வந்தால் போதும் என்று பணத்தைத் தந்திருக்கிறார்கள். இன்னும் சிலர் தங்களுடைய மகள் திருமணத்திற்கு வைத்திருந்த நகைகளை விற்று விட்டு இந்தத் திட்டம் நிறைவேற பணம் தந்திருக்கிறார்கள். இப்படிப் பல லட்சக்கணக்கான ரூபாய்களை இந்தத் திட்டத்திற்கு தந்து தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் பிச்சை எடுக்கின்ற நிலைக்கு ஆளாகி இருந்து வருகிறார்கள், என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். விவசாய அமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் பார்வையிட்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 20 லட்சம் ரூபாய்க்கு பைப்புகள் போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். பாதியிலே நிறுத்தப் பட்ட அந்தத் திட்டத்தை அரசு மேற்கொண்டு அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் குறையை தீர்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். பொதுவாக விவசாயிகள் என்றாலே அரசியல் மட்டத்திலே, அதிகாரிகள் மட்டத்திலே கேவலமான நிலை அல்லது அவலமான நிலை இருப்பதை இந்த அரசு நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறன். விவசாயிகள் என்றால் இந்த நாட்டினுடைய முதுகெலும்பு, நாட்டினுடைய உயிர்நாடி என்று இருக்கிறதே தவிர, அவர்கள் இந்தத் துறையால் மதிக்கப்படுவதில்லை. அவர்கள் வாழ்வு வளமாக வேண்டுமானால் அவர்களுக்கு கல்வியிலே தனிச் சலுகை அளிக்கப்பட வேண்டும். விவசாயத்தை மட்டும் நம்பி இருக்கக்கூடியவர்கள் உத்தியோகத் துறையிலும் தனிச் சலுகை வழங்கச் செய்ய வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11–30)

இன்னொன்றையும் பொதுவாக சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகள் மத்தியில் இருக்கக்கூடிய விஞ்ஞான அறிவு குறைவாக இருக்கிறது. ஆகவே, அவர்களிடையே, விஞ்ஞான அறிவை வளர்க்க வேண்டும். விவசாயக் கருவிகள் பழுதான நிலைமையில் இருக்கின்றன. தெருக்களில் விளக்குகள் எரியாமல் இருப்பது போல், விவசாயக் கருவிகள் விவசாயிகளுக்குப் பயன் படாத நிலைமையில் இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசு விவசாயிகளுடைய முன்னேற்றத்தில் அக்கறைக்கொண்டிருக்கின்ற அரசு. எனவே, இந்தக் குறைகளை நீக்கி, நிறைவாக்கித் தரும் என்று கருதுகிறேன்.

அதிகாரிகளுக்கு இந்த அரசு ஒரு உத்திரவை பிறப்பிக்கவேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகள் விவசாயிகளுடைய உழைப்பினால்தான் தாங்கள் உண்டு கொண்டிருக்கிறோம் என்ற எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டு அவர்களுக்கு உரிய மரியாதையைத் தரவேண்டும் என்ற உத்திரவைப்

பிறப்பிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லேலி விவசாயிகளுடைய குறைகளை நிவர்த்தி செய்வதில் இந்த அரசு உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உழைக்கும் கரங்களுக்குச் சொந்தக்காரர் என்பதால் விவசாய பெருங்குடி மக்களை வாழவைப்பார் என்ற நம்பிக்கையோடு இந்த வாய்ப்பினை தந்தமைக்கு நன்றியினைக் கூறி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

<u>திரு. டி. பி. மு. பெரியசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது இந்திய தேசிய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன்.

வேளாண்மைத் துறை பற்றியும், விவசாயிகளின் மேம்பாடு குறித்தும், ஆண்டாண்டு காலமாக இந்த மாமன்றத்தில் பேசப்பட்டு, விவாதிக்கப்பட்டு, மானியங்கள் ஒதுக்கப்பட்டு இருந்தாலும் கூட, விவசாயிகள் மத்தியில் எந்த விதமான முன்னேற்றமும், வேளாண்மைத் துறையில் எந்த விதமான அபிவிருத்தியும் இல்லை என்பதை இந்த மாமன்றம் மறைமுகமாக ஒப்புக் கொண்டிருக்கிறது. என்பதை நான் உணர்கிறேன். எனவே, மதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு கவர்னர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் விவசாயிகளின் மேம்பாடு திட்டத்துக்கும், வேளாண்மைத் துறைக்கும் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது என்பதை நாம் கண்டறிந்தோம். அப்படிக் கண்டறிந்ததின் ஒரு பகுதியாக வேளாண்மைத் துறையில் சிலவற்றை நாம் மாற்றியமைக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறையில் பசுமை என்றும், புரட்சி என்றும் பேசினார்கள். அந்தப் பசுமையும், புரட்சியும் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களின் வாழ்க்கையில் தான் ஏற்பட்டதே தவிர, வேளாண்மைத் துறையில் பசுமையோ, புரட்சியோ ஏற்படவில்லை என்று இந்த மாமன்றத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயத் தொழிலாளிகளுக்கு கூலி நிர்ணயம் என்று சட்டம் போட்டார்கள். அந்தக் கூலி நிர்ணயம் செய்ததை அமுல்படுத்தியிருக்கிறார்களா என்றால் எங்கும் அமுல்படுத்தப்படவில்லை என்ற அவல நிலைதான் இருக்கிறது. அந்த அவலநிலையைப் போக்க ஆவன செய்யவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, விவசாயம் செய்யும் காலம் போக, மற்ற காலங்களில் ஏதாவது ஒரு உப தொழில் செய்ய ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்பதில் அமைச்சர் அவர்கள் அக்கறை கொண்டிருக்கிறார்கள். அந்த



உப தொழிலை எவ்வளவுக்கு எவ்வளவு விரைவுபடுத்தி, விரிவுபடுத்திச் செய்கிறார்களோ, அந்த அளவுக்கு வேளாண்மை குடிமக்கள் மிகவும் பயனடைவார்கள், கிராமப் பொருளாதாரம் மேம்படும் என்று சொல்லிக் கொள்ள கடைமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக பால் பண்ணையைப் பொறுத்த வரையில், இன்று பால் பண்ணைக்காக ஒதுக்கப்படுகிற அதிக பால் தரக்கூடிய பசுக்கள் பெரிய பெரிய பண்ணையாளர்களுக்குத்தான் போகின்றன. சிறு விவசாய மக்களுக்கு அதிக பால் தரும் பசுக்கள் போய்ச் சேரவில்லை. ஆகவே இதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தி சீரமைக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

பயிர் பாதுகாப்பு என்று சொல்லி, வருமுன் காத்தல் என்ற கொள்கையின் அடிப்படையில், பயிர் பாதுகாப்புக்காக, முன் எச்சரிக்கையாக மருந்து அடிக்கப்படுகிறது. மருந்தடிக்கப்பட்ட பிறகும் அதிகமான நோய்களால் தாக்கப்பட்டு பயிர் அழிக்கப்படுகின்ற நிலைமையைப் பார்க்கின்றோம். பயிருக்கு அடிக்கப்படுகின்ற மருந்துகள் சரியானபடி இல்லாமல் மேன்மேலும் நோய்கள் வந்து பயிர்கள் அழிக்கப்படுவதால் விவசாயிகள் அல்லல் உறுகிறார்கள் என்ற நிலையை ஆட்சி பீடத்தில் இருக்கக்கூடிய புரட்சித் தலைவரின் தலைமையின் கீழ் இருக்கின்ற அரசு நன்றாக அறியும் என்று கருதுகிறேன். எனவே பயிர் பாதுகாப்பு விஷயமாக, மருந்து செய்யக்கூடிய தொழிற்சாலைகளை அரசே ஏற்று நடத்த வேண்டுமே தவிர, தனியார்களுக்கு மருந்து செய்யக்கூடிய தொழில் லைசென்சுகளை வழங்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்று கலப்பு உரங்கள் செய்யக்கூடிய தொழில் சில தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டு சரியான முறையில் உரக் கலப்பு இல்லாமல், மான்யூர் மிக்சர்கள் சரியானபடி இல்லாமல் விவசாயிகளுக்கு மிகுந்த நஷ்டத்தை உண்டாக்குகின்ற காரணத்தால், இந்தக் கலப்பு உரங்களைச் செய்யக்கூடிய தொழிற்சாலைகளை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக இந்த ஆண்டில் 1976-77-ல் மதுரை மாவட்டத்தில் வாழை, பருத்தி பயிர்களுக்கு மிகுந்த நோய் ஏற்பட்டு அதனால் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு, பல பருத்தி, வாழை பயிரிடும் விவசாயிகள் இன்று கடனாளிகளாக காட்சியளிக்கிறார்கள். அவர்கள் கூட்டுறவு சொசையிட்டியிலும், நிலவள வங்கியில் வாங்கியிருக்கும் கடன்களில் ஒரு பகுதியை அரசு ஏற்றுக் கொண்டு அந்தக் கடனிலிருந்து அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன். விவசாயக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கும் பொழுது விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இடம் கொடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்ளுகிறேன். தற்போது விவசாயக் கல்லூரி

[திரு. டி. பி. மூ. பெரியசாமி] [1977 ஆகஸ்ட் 10

யில் மேட்டுக் குடியினர் அதிகம் இடம் பெறுகின்றனர். கல்வியிலும் பொருளாதாரத்திலும் மேம்பட்டு இருக்கக்கூடிய மேட்டுக் குடியினர் அதிகமாக விவசாயக் கல்லூரிகளில் இடம் பெறுகிறார்கள் என்ற செய்தி பரவலாகப் பேசப்படுகிறது. இந்தக் குறைபாடுகளை அரசு போக்குமென்று நம்புகிறேன். கிணறு வெட்டும் தொழிலாளி, மருந்து அடிக்கும் தொழிலாளி இவர்களுக்கு எந்த விதப் பாதுகாப்பும் இல்லை என்று அறிகிறோம். கிணறு வெட்டும் தொழிலாளி, 80 அடி, 100 அடிக்கு கீழே வெட்டிக் கொண்டிருக்கும் போது வெடி வெடிக்கும்போது இறந்தால் அவனுக்கு எந்த வித பாதுகாப்பும் இல்லை. மற்ற துறைகளில் இருப்பதுபோல் கிணறு வெட்டுகிற நேரத்தில் உயிர்ச் சேதம் ஏற்பட்டால் வேறு ஏதாவது பாதகம் ஏற்பட்டால் அவர் குடும்பத்திற்கு ரூபாய் 5 ஆயிரம் அல்லது 10 ஆயிரம் என்று நிதி உதவி கொடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பெரியார்-வைகை சீரமைப்புத் திட்டம் ஒன்று இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சி காலத்திலும் சரி, அதற்கு பின்பு வந்த தி.மு. கழக ஆட்சியிலும் சரி, தங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் எந்தப் பகுதியில் இருக்கிறார்களோ, அந்தப் பகுதியை நோக்கித்தான் அந்தத் திட்டம் சென்று கொண்டிருந்தது. எந்தப் பகுதிக்கு தண்ணீர் தேவையோ அங்கே இந்தத் திட்டம் போகவில்லை. ஆகவே முறையாக தண்ணீர் எங்கே போக வேண்டுமோ அங்கே போகச் செய்வதற்கு ஒரு குழு அமைத்து பெரியார் வைகை சீரமைப்பு திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த நல்ல சந்தர்ப்பத்தை கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, பத்து ஏக்கர் வைத்திருக்கும் விவசாயிகள் ரூபாய் 4 ஆயிரம், ரூபாய் 5 ஆயிரம் முதல் போட்டு வெற்றிலை பாக்குக் கடை வைத்திருக்கும் வியாபாரிகள் அனுபவிக்கும் வாழ்க்கை வசதிகளைக்கூட அனுபவிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதை மனதில் நிறுத்தி விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்வு வ்ளம் பெற மேம்பாடு அடைய அரசு ஆவன செய்யும் என்ற நம்பிக்கையோடு உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மானிய கோரிக்கையின் மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மானியத்தின் கீழ் பேசுகிறபோது பல்வேறு உறுப்பினர்கள் விவசாயிகளுக்குரிய நல்ல திட்டங்களை எடுத்துச் சொல்லி அதே நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களும் விவசாயத் தொழிலாளர்களும் இன்றைக்கு போராட்டம் நடத்துவதற்கும் தண்ணீர் பற்றாக்குறை என்ற நிலையில் வாடிக் கொண்டிருப்பதாகவும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகிற நேரத்தில் எடுத்துச் சொன்னார்கள். தஞ்சை தரணியில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் இன்றைக்கு அமைந்திருக்கிற அனைத்



1977 ஆகஸ்ட் 10] [திரு. துரை கோவிந்தராசன்]

திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பார்த்து குறிப்பாக புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களைப் பார்த்து இந்த மகராசன் நடவடிக்கைக்குப் பின்னால் இன்று ஆற்றில் தண்ணீர் வருகிறது, இதுவே போதுமானது என்று சொல்லுகிற அளவுக்கு மகிழ்ந்து கொண்டிருக்கிற நிலைக்கு மாறாக, தண்ணீர் இன்றையத்தினம் ஏறத்தாழ 23 ஆயிரம் கியூசெக்ஸ் அளவுக்கு தஞ்சைப் பகுதியில் காவிரி தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிற நேரத்தில் தண்ணீரே இல்லை என்கிற அளவுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்று விவசாயிகள் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று எதிர்கட்சி நண்பர்கள் சொல்லுகிற நேரத்தில் எனக்கு பழைய ஞாபகம் கொஞ்சம் வருகிறது.

(முற்பகல் 11-40)

அதற்கு முன்னால் பல்வேறு விவசாயப் போராட்டங்கள் நடத்திய நேரத்தில் மாட்டு வண்டிகள் எல்லாம்—மன்னார்குடியிலும் கோயம்புத்தூரிலும் விவசாயப் போராட்டங்கள் நடத்திய நேரத்தில் அதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எதிர் முகாமில் இருப்பவர்கள் அன்றையத்தினம் எப்படி எடுத்தார்கள் என்பதை அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் இன்றையத்தினம் அறியாமல் இல்லை. அதே நேரத்தில் இன்றையத்தினம் தஞ்சையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இன்றும் தேவை என்றாலும், கடந்த ஆண்டுகள் ஏற்பட்ட பல்வேறு இழப்புக்கள், இடையில் ஏற்பட்ட ஆளுநர் ஆட்சியில் இருந்த அரசாக இருந்தாலும், அதற்கு முன்னால் பணியாற்றிய நேரத்திலும் கொஞ்சம் கொஞ்சமாக விதை நெல்களுடைய பல்வேறு கண்டுபிடிப்புகள் காரணமாகத்தான் உற்பத்தி பெருகி வந்திருக்கிறதே தவிர இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அவ்வளவு நல்ல காரியங்கள் செய்கிற அரசாக இல்லை என்றும் விவசாயிகளுக்கு பாதுகாப்பு திராவிட முன்னேற்றக் கழக அரசில் மட்டும்தான் இருந்திருக்கிறது என்றும் சில உறுப்பினர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புவது, 75, 76, 77-ம் ஆண்டுகளில் எட்ட வேண்டிய உற்பத்தி என்று திட்டமிட்டிருந்தது 53 மெட்ரிக் டன்தான் என்று அந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இருந்து தெரியமுடியும். ஆனால் இந்த அரசு வந்த பிறகு அந்த உற்பத்திகளை மேலும் பெருக்க வேண்டும் என்ற வகையில் அது 62 மெட்ரிக் டன்னாக உயர்த்தப்பட வேண்டும் என்ற திட்டத்தினை இந்த அரசு தீட்டியிருக்கிறது. சிறுதானியங்கள் 18 லட்சம் டன்னாக இருந்ததை 19 லட்சம் டன்னாக உயர்த்தப்பட வேண்டும் என்று குறிப்பு வைத்திருக்கிறது. பயறு வகைகள் 2·90 லட்சம் என்பது 3 லட்சம் டன்னாக உயர்த்தப்பட்டிருக்கிறது. கரும்பு 13·50 லட்சம் டன் என்பது 14 லட்சம் டன்னாக உயர்த்தப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டுகளை விட உற்பத்தியைப் பெருக்குகிற வகையில், விவசாயிகளையும் விவசாயத் தொழிலாளர்களின் முன்னேற்றத்தையும் மனதில் வைத்துக் கொண்டுதான் இந்த அரசு இத்தகைய

நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே நேரத்தில் இங்கே பேசிய ஒரு உறுப்பினர் தஞ்சைக்குப் பக்கத்திலுள்ள ஒரு சர்க்கரை ஆலைக்கு இருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயர் பொறிக்கப்பட்டிருந்ததை இடைக்கால 17 மாத ஆட்சியில் அகற்றியிருக்கிறார்கள். மீண்டும் அந்தப் பெயரை வைக்கவேண்டும் என்று கோரிக்கை ஒன்றை விடுத்தார்கள். அந்தக் கோரிக்கையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதன் செயற்குழுவிலும் பொதுக் குழுவிலும் வைத்து, குறிப்பாக தேர்தல் நேரங்களில், அந்தப் பெயர் வரவேண்டும் என்று அறிவிக்கப்பட்டு அந்தத் தீர்மானத்தை நானே முன்மொழிந்திருக்கிறேன். அந்தப் பெயரைச் சூட்ட முன்னால் இருந்த அரசு அங்கே பெயர் பலகையில் மட்டும் தான் அந்தப் பெயர் வைக்கப்பட்டிருந்ததே தவிர உள்ளே இருக்கிற விதிமுறைகளில் எல்லாம் அந்த சர்க்கரை ஆலையில் அண்ணாவின் பெயரை வைக்கவில்லை என்பதை அதிகாரிகள் மூலமாகவும் பல்வேறு துறைகளிலிருந்து எடுத்துப் பார்த்தபோது தெரிந்து கொள்ள முடிந்தது. கல்வெட்டில், ஆர்ச்சில் மட்டும்தான் அண்ணாவின் பெயர் இருந்ததே தவிர — உள்ளே எல்லா இடங்களிலும் பெயர் பொறிக்கப்பட்டு பின்னர் அழிக்கப்பட்டிருந்தால் உடனடியாக அதை திரும்ப வைக்கிறோம் என்று ஆராய்ந்து பார்த்த நேரத்தில்—துருவிப் பார்த்ததில், உன்னிப்பாகப் பார்த்ததில் அதில் மற்றவர்கள் பெயர் இடம் பெற வேண்டும் என்பதற்காக பெயரளவில் கொஞ்ச நாட்கள் அண்ணாவின் பெயரை வைத்துவிட்டு பின்னால் வேறு ஒருவர் பெயரை அங்கு இடம் பெறச் செய்ய வேண்டும் என்ற காரணத்தினாலோ என்னவோ அது மற்றயிடங்களில் விடுபட்டுப்போயிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக இந்த அரசு பல்வேறு இழப்புக்களை ஏற்றுக்கொண்டு விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக பல்வேறு காரியங்களைச் செய்ய முனைந்துள்ளது. மின்சாரக் கட்டணத்தை இரண்டு பைசா இறக்கியிருப்பது விவசாயிகளுக்கு மகிழ்ச்சிதரக்கூடிய ஒன்றாகும். விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்கிற நெல்லுக்கு முன்னால் இருந்த அரசு செய்ததுபோல் மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட கூடுதல் போனஸ்சும் அவர்களுக்குத் தர வேண்டும் என்று எதிர்கட்சித் தலைவர் அவர்கள் நேற்றையத்தினம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டபோது நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு அதிகப்படியாகக் கிடைக்கும் என்று சொல்லியிருப்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். உள்ளபடியே விவசாயத் தொழிலாளர்களுக்கு இன்றையத் தினம் தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் வராதா என்று நினைத்து ஏங்கிக் கொண்டிருந்த நேரத்தில், உள்ளப்படியே விவசாயிகள் மனம் பூரிக்கத்தக்க வகையில் தண்ணீர் வரக்கூடிய நிலையை உருவாக்கியத்திற்கு இந்த அரசை விவசாய மக்கள் பாராட்டுவதோடு, தஞ்சை மாவட்டத்திற்கு தண்ணீர் வந்து சேர்ந்தது என்ற செய்தியை கேட்கிற



நேரத்தில் தமிழகத்தில் இருக்கின்ற மக்கள் எல்லாம் பாராட்டுகிற பாராட்டுக்கள் எல்லாம் இந்த அரசுக்குத்தான் சேரும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் விதைகளை பொறுத்தவரையில் 15 தினங்களுக்கு முன்னால் இந்த அரசு, குறைந்த விலையில் விதைகளை தருகிறோம் என்று சொன்ன போதிலும், இடையில் இருக்கின்ற அதிகாரிகள், இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் டிப்போவில் 1·42 என்றிருந்த விலையை அதிகப்படுத்தி 1·80 என்று உயர்த்தி விற்று வந்த நிலையை இந்த அரசுக்கு தெரிவித்தவுடன், குறைந்த விலையில் தரமான விதைகளை கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் விலையை குறைத்து இதன் காரணமாக அரசுக்கு 8 லட்சம் ரூபாய் நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை, நல்ல தரமான விதைகளை குறைந்த விலையில் கொடுக்கவேண்டும் என்று இந்த அரசு உத்திரவிட்டதை விவசாய மக்கள் எல்லோரும் பாராட்டுகிறார்கள். குறைந்த விலையில் தரமான விதைகள் கிடைக்கக்கூடிய வகையில் வசதி செய்து தந்தது, விவசாயிகளுக்கு பயன்படக்கூடிய நல்லதொரு திட்டம் என்பதால் அது அவர்களுக்கு மகிழ்ச்சி தரத்தக்கதொன்று என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, தண்ணீர் வசதி என்பது விவசாயிகளுக்கு மிகவும் முக்கியம். " வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோன் உயரும்.... " என்று சொல்வதற்கிணங்க இந்த அரசு உயர்ந்திருக்கிறது. மேலும், மேட்டூர் தண்ணீரை திறந்து விட்டால் இரண்டு போக சாகுபடிக்கு போதிய தண்ணீர் கிடைக்கும் என்பது விவசாய மக்களுக்கு நன்கு தெரிந்திருந்தாலும், அதை எண்ணிப்பார்க்கிற பொழுது பாசன உற்பத்தித் திட்டங்கள், அதே நேரத்தில் நெல்லுக்கு விலையை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டும் என்கின்ற கோரிக்கைகள் கடந்த ஆட்சி காலத்திலும், இடையில் வந்த ஆளுநர் ஆட்சி காலத்திலும் இருந்து வந்தன. குறிப்பாக விதைகள் குறைவான விலையில் கிடைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டதற்கு இணங்க, இப்போது கம்பு, கேழ்வரகு, சோளம் போன்ற புஞ்சை தானியங்களுக்கு, கடலையிலிருந்து மற்றும் இதுபோன்ற எல்லா தானியங்களுக்கும் ஏறக்குறைய 50 அல்லது 100 மெட்ரிக் டன் அளவுக்கு கொடுக்க எல்லா தானியங்களும் தயாராக இருக்கிறது. பதினொரு லட்சம் ஏக்கரில் தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக தரிசு நிலங்களை, நல்ல நீர் உள்ள சாகுபடி நிலமாக ஆக்குவதற்கு திட்டமிட்டிருப்பதாக வேளாண்மைத் துறை அறிக்கையில் காணப்படுகிறது. இப்படிப்பட்ட திட்டங்களைப் பார்த்து இந்த அரசை பாராட்டாமல் இருக்கமுடியாது.

இதில் பால் பண்ணை என்ற ஒரு நிலையும் வருகிறது. முன்னால் இருந்தே இந்தப் பால் பண்ணை இருந்து வந்திருக்கிறது பல்வேறு பால் பண்ணைகளில் பல லட்சக்கணக்கான ரூபாய்கள்

[துரை. கோவிந்தராசன்] [1977 ஆகஸட் 1)

வேறு வகைகளில் விழுங்கிய கணக்குகள் எல்லாம் கண்டுபிடித்தது பத்திரிகைகளில் வந்ததை நாம் அறிவோம். பல்வேறு இடங்களில் இப்படிப்பட்ட கணக்குகள் ஆராயப்பட்டு, தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டன. குறிப்பாக என்னுடைய தொகுதியான தஞ்சையில் முன்னால் இருந்த அரசு காலத்தில் பால் பண்ணையில் 13 லட்சம் ரூபாய் கணக்கில் விடப்பட்டிருந்தது சுட்டிக் காட்டப்பட்டது. இந்த பால் பண்ணையில் முன்னால் இருந்த ஆட்சியைச் சேர்ந்தவர் இருந்தார்கள் என்பதால் அப்போதுள்ள அரசு ஏனோதானோ என்று விட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும் விதவைகளுக்கு பால் வழங்கும் திட்டத்தின் கீழ் மாடுகள் வாங்குவதற்கு 5,000 ரூபாய் கொடுப்பது என்றிருந்ததை பயன்படுத்தி, முன்னால் இருந்த அரசு கட்சியைச் சேர்ந்த ஒருவர் தனது மனைவியை விதவை என்று கூறி 5,000 ரூபாய் வாங்கியிருக்கின்ற நிலைமை முன்னால் உருவாகியிருக்கிறது. பின்னால் இதைப்பற்றி எழுதியும் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. இப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் நல்ல முறையில் இந்தத் திட்டங்கள் செயல்பட வேண்டும் என்ற ஆர்வத்துடன் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இதன் மூலமாக கிராமங்களில் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கச் செயய வேண்டும் என்று விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

இதிலே தரப்பட்டிருக்கிற பல்வேறு திட்டங்களின் மூலமாக இனிமேல் வருகின்ற திட்டத்தில் தஞ்சை மாவட்டத்தினுடைய பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர்கள் ஊர்களிலே விவசாயக் கல்லூரிஙய அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். நான் குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே ஒரு விவசாயக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கு ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு முந்தைய அரசு கல்நாட்டுவிழா நடத்தி வைத்தது. அந்தக் காகிதத் தொழிற்சாலையை விரைவில் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டு மானியக் கோரிக்கையை ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று வேளாண்மை பற்றிய மானியக் கோரிக்கையின் மீது ஒருசில வார்த்தைகளை உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் கருத்தாக வெளியிட விரும்புகிறேன். இந்திய நாட்டின் பொருளாதாரம் உணவு தானியங்களின் விலையைப் பொறுத்துத்தான் நிர்ணயிக்கப்படுகிறது. அதைத்தான் இந்தியப் பொருளாதாரத்தின் 'பிரைஸ் லைன்' என்று வைத்து நிர்ணயம் செய்கிறார்கள். அதே நேரத்தில் விவசாயிகளின் கூப்பாடு— உணவு தானியங்களின் விலையை உயர்த்தித் தாருங்கள் என்று கேட்கிறார்கள். ஆனால் மற்றவர்கள் உணவுதானிய



1977 ஆகஸ்ட் 10] [திரு. ரா. மார்க்கபந்து]

விலையைக் குறைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த இரண்டு கூப்பாடுகளும் நாட்டிலே பரவலாக இப்போது இருந்து வருகிறது. இதுவரை எந்த அரசும் விவசாய மக்கள் பயிரிடுகின்ற அந்தப் பயிருக்கான செலவுகளைக் கணக்கில் எடுத்து அவர்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலைக்கு உணவு தானிய விலையை நிர்ணயிக்கவில்லை. நாம் உணவு தானிய விலையை அதிகமாக்குங்கள் என்று கேட்கிற அதே நேரத்தில் அதை அதிகமாக்காது ஒரே நிலையில் வைக்கிறபோது விவசாயிகள் பெறவேண்டிய சாதனங்கள் உரம் முதலிய அத்தனையும் குறைந்த விலையில் கிடைக்க வேண்டிய வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, விவசாய மக்களுக்குக் குறித்த நேரத்திலே பூச்சி மருந்து கிடைப்பதில்லை, உரம் கிடைப்பதில்லை என்ற குரல்கள் நம்மிடையே கேட்டுக் கொண்டிருக்கின்றன. பயிர் நன்றாக விளைவதற்கு உரம் தேவை, பூச்சிக் கொல்லி மருந்து தேவை, பூச்சிக் கொல்லி மருந்திலும் கூட பூச்சிகளைக் கொல்லுவதற்கு அந்த மருந்து தேவை என்று சொல்லுகிறபோது சில மக்களை வாழவைக்க அந்த மருந்துகள் பயன்பட்டது என்ற நிலைமையில் இப்போது சர்க்காரியா கமிஷன் முன்னால் நிறுத்தப்பட்டு, பின்னால் அதிலே ஊழல் புரியப்பட்டிருக்கிறது என்று கோர்ட்டில் முடிவானது வந்திருக்கிறது. அதனுடைய விளக்கத்தை அமைச்சர் அவர்கள் மூலமாக என்ன பதிலை கொடுக்கப் போகிறார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

இந்த நாட்டிலே உருவாக்கப்பட்ட சட்டங்கள் எல்லாம் பணக்காரர்களை மையமாக வைத்துத்தான் உருவாக்கப்பட்டிருக்கின்றன. உழுகின்ற விவசாயிகளை மையமாக வைத்து சட்டங்கள் உருவாக்கப்படவில்லை. ஆகையால்தான் உழைப்பாளர் முன்னேற்றக் கழகமானது 1972-ம் ஆண்டிலே அதனுடைய விளக்கத் திட்டத்தில் கூட பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமுலாக்க வேண்டுமென்று வெளியிட்டு மேடைகள் தோறும் பேசப்பட்டு வந்தது. இந்த அரசானது அதைத் தேர்தல் பிரகடனமாகச் சொல்லியிருக்கிறது. ஆனால் ஒரு பெருத்த ஏமாற்றம் என்னவென்று சொன்னால் இன்று வழங்கப்பட்டிருக்கும் குறிப்பில்கூட பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தைப் பற்றி குறிப்பிடாதது வருந்தத்தக்கது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குரிய காரணங்களைக் கேட்டால் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் பொறுப்பில் இருக்கிறது என்று சொல்லுவார்கள் விவசாயிகளைப் பொறுத்த மட்டில்—

'Agrieulture is only in the State List'

இன்ஷூரன்ஸ் வேண்டுமானால் சென்ட்ரல் லிஸ்டில் வரலாம் ஆனால் விவசாயம் ஸ்டேட் லிஸ்டில் தான் வருகிறது. தமிழகத்தில் பல பகுதிகளைப் பஞ்சப் பகுதிகளாக அறிவிக்கிறோம். பஞ்சப்

[திரு. ரா. மார்க்கபந்து] [1977 ஆகஸ்ட் 10

பகுதிகளுக்கும் பின் தங்கிய பகுதிகளுக்கும் அதிகமாகக் கடன்களைக் கொடுக்கிறோம். அந்தக் கடன்களைத் திரும்பப் பெற வழி இல்லையென்று சொன்னால் அதை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லுகிறோம் என்பதைச் சிந்திக்க வேண்டுகிறேன்.

அந்த விவசாயிகளின் நிலை உயரவில்லை. ஆகையினாலே அவர்களுடைய பயிர்கள் அழிந்துபடுகின்றன. அந்த நேரத்திலே அவர்கள் இட்ட பயிருக்கு, வைத்த முதலுக்கு, கொடுத்த கஷ்டத்துக்கு எல்லாம் பாதுகாப்புத் தருகின்ற முறையில் பயிர்கள் நாசப்படுகின்றபோது அவர்களுக்கு முறையாக ஒரு ஏக்கருக்கு 2 ஆயிரம் ரூபாய் அளவிலே நஷ்ட ஈடு தரவேண்டுமென்ற வகையிலே சட்டத்தைக் கொண்டுவந்தால் சிறந்தது என்று கேட்டுக் கொண்டு இந்த அரசானது பயிர் பாதுகாப்புத் திட்டத்தை அமல்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் பஸ்களை தேசியமயமாக்குகிறோம். ஆனால் உரம் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகளையும், பூச்சிக்கொல்லி மருந்துகளை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகளை எல்லாம் அரசே ஏற்று அவைகளையும் நேஷனலைஸ் செய்து குறைந்த விலையில் அவைகள் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய வழிவகைகளைச் செய்யவேண்டும்.

அதே நேரத்தில் பயிரிடுகின்ற விவசாயிகள் பம்புசெட்டுகளுக்கு மினிமம் கட்டணம் என்று வாங்கப்படுகிறது, அதை குறிப்பிட்ட ஏக்கர் உள்ள பம்புசெட்டுகளுக்கு அல்லது குறிப்பிட்ட அளவு யூனிட் பயன்படுத்துகின்ற பயிரிடுகின்றவர்களுக்கு அதைத் தள்ளிவிடுகின்ற முறை சிறந்ததாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இந்த பால் வள நிறுவனம் பற்றிக் குறிப்பிடுகிறபோது இந்த அரசானது பெண்டிருக்கும், விதவைகளுக்கும் ஒரு பாதுகாப்புத் திட்டத்தை வெளியிட்டிருக்கிறது. சில பாங்குகளிலே ஒரு சில கிராமங்களை மட்டும் அடாப்ட் செய்து அங்கே கடன் முதலிய உதவிகளை வழங்குகிறார்கள். அந்த பாங்குகள் அனைத்துமே எல்லா கிராமங்களையும் அடாப்ட் செய்து அங்கங்குள்ள மக்களுக்கு அப்படிப்பட்ட கடன் முதலிய வசதிகளைச் செய்யக் கூடியமுறையில் இந்த அரசு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் கடன் பெறுகின்றபோது சுலபமான முறையிலே கடன் பெறுவதற்கான வசதிகள் கிடைக்கும்.

குறிப்பாக வேலையில்லாத் திண்டாட்டம் பயிரிடுகின்றவர்கள் மத்தியில் இருக்கிறது. ஒரு 6 மாதம் அவர்கள் அந்தத் தொழிலிலே ஈடுபட்டாலும் மற்ற 6 மாத காலத்திலே அவர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இந்தப் பால் நிறுவனங்களிலே வேலை கொடுத்தால் வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



1977 ஆகஸ்ட் 10] [திரு. ரா. மார்க்கபந்து]

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற புத்தகத்திலே 5–வது பக்கத்திலே 'தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் இயக்குநர் குழுவில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்களுடன் செயல்படுகின்றது; 1. தமிழக அரசு தலைமைச் செயலாளர் அதன் தலைவர். 2. அரசு வேளாண்மைத் துறைச் செயலாளர். 3. உணவுத் துறைச் செயலர். 4. கால்நடை மருத்துவக் கல்வி இயக்குநர். 5. அரசு (நிதித் துறை) துணைச் செயலாளர்: 6. முழுநேர நிர்வாக இயக்குநர்'. இப்படி ஆறு உறுப்பினர்கள் அதிலே இடம் பெறுவதாகக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே இந்த பால்வள நிறுவனங்களிலே வேலை செய்கின்றவர்களும் பங்குபெறுகின்ற வகையிலே ரெப்ரசன்டேஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக இரண்டு மாவட்டங்களிலேதான் யூனியன் அமைக்கப்பட்டு இருப்பதாகக் கூறுகிறார்கள். இந்தக் குறிப்பிலே 10-வது பக்கத்திலே 'ஈரோட்டில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாக பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் இரண்டு அமைக்கப்பட்டுள்ளன' என்று சொல்கிறார்கள். ஆனால் 6 மாதங்களுக்கு முன்னால் வந்த செய்தி ஜோலார்பேட்டையிலே அது அமைக்கப்படும் என்பதாகும். இப்போது அது ஈரோட்டிற்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஜோலார்பேட்டையிலே அமைக்கப்பட இருந்தது ஏன் ஈரோட்டுக்கு மாற்றப்பட்டது என்பதற்கான விளக்கங்களை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இந்தக் குறிப்பிலே 21-வது பக்கத்திலே மலைப் பகுதிகள் வளர்ச்சித் திட்டம் என்று அறிவித்திருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ள ஜவ்வாது மலைப் பகுதியிலே மில்க் சில்லிங் சென்டர் அமைப்பதற்கான திட்டம் ஒன்று இருந்தது. அது அமலாக்கப்படுமா அல்லது கைவிடப்படுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறோம்.

(நண்பகல் 12-00)

அதைப்போல பட்டதாரி பால் பண்ணை விவசாயிகள் திட்டத்தின் கீழ் அந்தத் திட்டத்தை அதிகமாகப் பெருக்குவதால் வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு தருகின்ற நிலையை உருவாக்க முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன். கன்றுகள் பேரணியை அதாவது 'காவ்ஸ் ராலி' என்பதை இந்த அரசு நடத்தினால் பால் நிறுவனத்திலே மக்கள் பெருவாரியாக ஈர்க்கப்பட்டு அந்த நிறுவனத்தை நல்ல முறையிலே நடத்த வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். 'ஃபீடர்ஸ் டயரி'களை பல பகுதிகளில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு தந்தமைக்காக நன்றி கூறி முடிக்கின்றேன். வணக்கம்.

திரு. த. புஸ்பராஜ்:—மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண். 10-பால் வழங்கும் திட்டங்கள் பற்றி எனது கருத்தை இங்கே கூறுகிறேன்.

[திரு. த. புஷ்பராஜு] [1977 ஆகஸ்ட் 10

நகரத்தில் பால் வழங்கும் நிலையம் அமைத்து, அதன் மூலம் நல்ல தரமான பால் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை வாழ்க்கையின் அடி மட்டத்தில் உள்ள ஏழை விவசாய மக்கள் வசிக்கின்ற கிராமங்களிலும் அமல்படுத்த வேண்டும். கிராமங்களில் உள்ள பள்ளிகளில் படிக்கும் ஏழைக் குழந்தைகளுக்குப் போதிய உணவு வசதி இல்லாமல் உடல் நலிவுற்று இருக்கின்றார்கள். அந்த ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் வழங்க வேண்டும். இதற்கு அரசு திட்டங்களை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து தமிழகத்திலே பல கிராமங்களில், ஏழை எளிய மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பசு மாடுகள், எருமை மாடுகள் வாங்குவதற்குக் கடன் கொடுத்து, பல ஆயிரக்கணக்கான மாடுகள் வாங்குவதற்குக் கடன் கொடுத்து, பல ஆயிரக் கணக்கான மாடுகள் வாங்கப்பட்டன. அந்தக் கால்நடைகள் அரசு கால்நடை மருத்துவர்களால் ஆராயப்பட்டு வாங்கப்பட்டது. அந்த மாடுகளில் பல பால் கொடுப்பதற்குத் தகுதியில்லாமல் இருப்பதால், ஏழை விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்துற்குப் பணம் கட்ட முடியாத நிலையில் அதிகமான கஷ்டத்திற்கு உட்படுத்தப்படுகிறார்கள். இந்த நிலையை உணர்ந்து அரசு பால் கொடுக்கத் தகுதியில்லாத மாடுகள் வழங்கப்பட்ட விவசாயிகளுக்கு, உடனடியாக அவர்கள் கூட்டுறவுச் சங்கம் மூலம் பெற்ற கடனை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக மானியக் கோரிக்கை எண். 20, 49-ல் வேளாண்மை, வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்புகளிலுள்ள மானியக் கோரிக்கைகளில் எனது கருத்தைக் கூறுகிறேன். நிலவள வங்கியின் மூலம் கடன் வாங்கி ஆழ் குழாய் கிணறு போடக் கடன் கேட்டால், மின் இணைப்பு உடன் கொடுக்கப்படும் என்று சான்றிதழ் வாங்கி வந்து கொடுத்தால் தான். நிலவள வங்கியில் கடன் கொடுக்க முன் வருகிறார்கள். வருடக் கணக்கில் மின் வாரியத்தில் அலைந்தாலும் அந்த மின் சான்றிதழ் கிடைப்பது இல்லை. இந்த நிலையை உணர்ந்து டீசல் இன்ஜின் வாங்கி, அதன் மூலம் நீர் இறைக்க விவசாயிகள் முன் வந்தால் அவர்களுக்கு நிலவள வங்கியின் மூலம் ஆழ் குழாய் கிணறு அமைக்க, உடன் கடன் வழங்க வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின் தங்கிய விவசாயிகளைக் கொண்ட மாவட்டம். எங்கள் மாவட்டத்தில் விவசாயம்தான் முக்கிய தொழில். ஆகையால் புதுக்கோட்டையில் ஒரு விவசாயக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1977 ஆகஸ்ட் 10] [திரு. த. புஸ்பராஜு]

அடுத்து, கிராமங்களில் ஏழை விவசாயிகள் அதிகமாக உபயோகிக்கும் மாட்டு வண்டி, சைக்கிள் இவைகளுக்கு பஞ்சாயத்து மூலம் வாங்கப்படும் வரியை இந்த அரசு தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுத்து இருக்கிறது. அதேமாதிரி கிராமத்தில் வசிக்கின்ற ஏழை விவசாயிகளுக்கு ஒரு மூட்டை நெல்லுக்கு ஊக்க போனஸாக 15 ரூபாயைக் கொடுக்க வேண்டும். இதற்கு முன்பிருந்த அரசு ஒரு மூட்டை நெல்லுக்கு 10 ரூபாயை ஊக்க போனஸாகக் கொடுத்ததை நினைவு படுத்துகிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. கே. பண்ணை சேதுராம் தலைமை).]—

இந்தத் திட்டத்தை உடனடியாக அமுல்படுத்தினால்தான் ஏழை விவசாயிகள் கடன் சுமையிலிருந்து நிவாரணம் பெற முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள திருவரங்குளம், வம்பன் ஆகிய ஊர்களில் இலங்கையிலிருந்து அகதிகளாகத் தாயகம் திரும்பியுள்ள பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் குடியேற்றப்பட்டு உள்ளார்கள். அந்த இடம் அவர்கள் விவசாயம் செய்யவோ, கூலி வேலை செய்து பிழைக்கவோ தகுதியில்லாத இடமாக இருக்கின்றது. அந்தக் குடும்பங்களின் இன்றைய நிலையைப் பார்த்தால் ஒருநாள் ஒரு வேளை சாப்பாட்டிற்குக் கூட வழியில்லாமல் அவதிப்படுகின்றார்கள். இந்த நிலையை அரசு உணர்ந்து உடனடியாக திருவரங்குளத்தில் விவசாயத்திற்கு உதவக்கூடிய பொருள்கள் தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றை அமைத்து அவர்களைத் காப்பாற்ற முன் வர வேண்டும். இலங்கையிலிருந்து தாயகம் வந்த மக்களுக்கு நிவாரணம் தேடவில்லையென்றால், சில ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள பட்டினியால் இறந்ததுபோல் மீண்டும் பலபேர் பட்டினியால் இறக்கக் கூடிய நிலைமை கூடிய விரைவில் ஏற்படும் என்று இந்த அரசுக்கு மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முடிவாக திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டை மாவட்டம் இணைந்திருந்த போது, திருச்சி மார்க்கெட்டிங் கமிட்டி இயங்கி வந்தது. தற்போது புதுக்கோட்டை மாவட்டமாகப் பிரிந்து மூன்று ஆண்டுகள் ஆகியும், புதுக்கோட்டைக்குத் தனி மார்க்கெட்டிங் கமிட்டி அமைக்கப்படவில்லை, — இதனால் ஆண்டு ஒன்றுக்கு சுமார் பத்து இலட்சம் ரூபாய் புதுக்கோட்டைக்குச்

சேரவில்லை. ஆகையால் அரசு புதுக்கோட்டை மாவட்டத்திற்குத் தனியாக மார்க்கெட்டிங் கமிட்டி அமைத்துத் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்த உப தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

திரு. பி. ராமதாஸ்: பெரு மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் நமது அவை முன்னே சமர்ப்பித்துள்ள மானியக் கோரிக்கையை வரவேற்று, எனது போடி தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது போடி சட்டமன்ற தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதியாகும். அங்கு பெரும்பாலும் மானாவாரி நிலங்கள் தான் அதிகம் உள்ளது. மழையை நம்பியிருக்கும் பெரும்பாலான விவசாயிகள் கடந்த 4 ஆண்டுகளாக மழையின்மையின் காரணமாக மிகவும் கஷ்டப்பட்டும், நஷ்டப்பட்டும் உள்ளனர். அவர்களுடைய முழுமையான தொழில் எல்லாம் விவசாயம் ஒன்றுதான். எனது தொகுதியிலே அந்த ஏழை விவசாயிகளுக்கு வேறு தொழில் தருவதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் இல்லை. ஆகவே, விவசாயத்தையே பிராதனமாக நம்பியிருக்கும் எனது தொகுதி ஏழை விவசாயிகளுக்கு ஒருவகையிலே நிரந்தரமான பாசன வசதியை அளித்திட இந்தத் திட்டம் மேற்கொள்ள வேண்டுமென இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விழைகின்றேன். மேலும், என்னுடைய தொகுதி மலைப் பிரதேசத்தை ஒட்டிய பகுதியாகும். அங்கே கூட்டங்குடி ஆறு என்ற ஒன்றிருக்கிறது. மழைக் காலத்தில் அந்த ஆற்றில் விழும் நீரெல்லாம் வீணாகவே போகிறது. எனவே, அரசு பரிசீலனையில் உள்ள கூட்டங்குடி திட்டத்தைக் கூடிய விரைவில் நிறைவேற்றி, அந்த அணையைக் கட்டித் தருவார்களானால், நாங்கள் என்றென்றும் இந்த அரசுக்குக் கடமைப்பட்டிருப்போம் என்று எனது தொதியின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியான போடியிலிருந்து 1 மைல் தொலைவிலே பெரியாறு உள்ளது. ஏற்கனவே, அரசின் பரிசீலனையில் உள்ள பாசனத் திட்டத்தை எங்கள் தொகுதியில் அமைத்துத் தந்தால், அந்தத் தொகுதி மக்கள் மழையை நம்பியிராமல், பெரியாறு நீரை பயன்படுத்தி, மேலும் வளம் பெற்று உயர்வார்கள் என்றும் அதற்காக நன்றியுடையவர்களாக என்றும் போடி சட்டமன்ற மக்களின் சார்பிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இன்றைய தினம் இறைவைப் பாசன திட்டத்தின் கீழ், பல ஆழ் குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு, அந்த ஆழ் குழாய்க் கிணறுகள் இன்னும் இயங்காமலிருக்கின்றன. அவை ஒழுங்காக வேலை செய்ய அதற்கான வழிவகைகளைச் செய்து,



ஏழை விவசாயிகளுக்கு உதவிட வேண்டுகிறேன். மேலும், அன்பும் அடக்கமும் பண்பும் பாசனமும் உள்ள மாண்புமிகு விவசாய அமைச்சரவர்கள் போல், தமிழக விவசாயமும் புதுக்கோலம் பெற, எனது நல்வாழ்த்துக்களைக் கூறி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, அமர்கிறேன், வணக்கம்.

* திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியத்தின்மீது, பல உறுப்பினர்கள் பேசி இருக்கிறார்கள். இருந்தாலும் முக்கியமான மானியம் மட்டுமல்ல, பெரும்பகுதி மக்கள் நம்பி வாழ்க்கை நடத்தக்கூடிய துறையுமாகும். இப்பொழுது உற்பத்தி பெருக்கத்திற்காக, நம்முடைய வேளாண்மைத் துறை பலவிதமான ஆராய்ச்சிகள் மூலமாக, சீரான வீரிய விதைகள் அது சம்பந்தமாகப் போட வேண்டிய உரங்கள் இவைகளையெல்லாம் ஆராய்ச்சி செய்து கொடுத்திருந்தாலும் கூட, அவற்றினுடைய பெரும்பகுதி பலனை, கொஞ்சம் வசதியுள்ள பெரும் விவசாயிகள்தான் பயன்படுத்தி, ஓரளவு தங்களுடைய உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள். சாதாரணமாக, சிறு விவசாயிகள் இப்பொழுது சீரான விவசாயத்தைச் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் இரசாயன உரங்கள் விலைகள் அதிகமாக இருப்பது மட்டுமல்ல, பூச்சிக் கொல்லி போன்ற மருந்துகளின் விலை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆகவே, சாதாரண சிறுசிறு விவசாயிகள் அதை வாங்கிப் பயன்படுத்த முடியாத நிலைமையிருக்கிறது. அதை எப்படி தவிர்க்கலாம் என்பதை இந்தத் துறை ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டத்தை அமுல் நடத்தும் போது அத்திட்டம் சீராக நடக்க நடைமுறைகளை வகுக்க வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்திலும், அந்தந்த ஊராட்சி ஒன்றிய அளவில் சிறு விவசாயிகளைக் கொண்ட ஆலோசனைக் குழுக்களை அமைத்து, அந்தந்த வட்டாரத்தில் இந்தச் சிறு விவசாயிகளுடைய நிலையை மேம்படுத்த, இந்தத் திட்டத்தை எப்படி பயன்படுத்தலாம் என்று சரியான அளவிலே பரிசீலனை செய்து, அந்த அடிப்படையிலே செய்ய வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

(பிற்பகல் 12–10.)

இன்று பல இடங்களிலே அதற்காக ஒதுக்கப்பட்ட பணங்கள் மத்திய அரசு கொடுக்கப்பட்ட மானியங்கள் நேரடியாக சிறு விவசாயிகள் மேம்பாட்டுக்கு உபயோகப்படுத்துவதற்குப் பதிலாக வேறு பல காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக சிறு விவசாயிகள் மேம்பாட்டுக்கு என்று சொல்லி, ரோடு போடுவது

(திரு. சோ அழகர்சாமி) [1977 ஆகஸ்ட் 10

பாலங்கள் கட்டுவது—இது போன்ற காரியங்கள் பல இடங்களிலே நடத்தப்படுகிறது. அது அறவே தவிர்க்கப்படவேண்டும். 5 ஏக்கரா நிலம் உள்ளவர்கள் 2 ஏக்கரா நிலம் உள்ளவர்கள் பாசன வசதி பெறுவார்களானால் அவர்களுடைய நிலையை எந்த வகையில் மேம்பாடடையச் செய்யலாம், அவர்களுக்கு அந்தப் பணம் எப்படி செயல்படவேண்டுமென்ற நிலையிலே சீரான திட்டம் இட்டு செயல்படுத்தவேண்டும். அதற்காக வட்டாரங்களிலே, ஊராட்சி ஒன்றியங்களிலே ஆலோசனைக் குழுக்கள் அமைக்கவேண்டும். இப்போது மாவட்ட அளவில் ஆலோசனைக் குழுக்கள் இருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தக் குழுவின் தலைவராக இருக்கிறார். மாவட்ட அளவிலே இருக்கிறதே தவிர வட்டார அளவிலே இல்லை. ஆகவே அவைகளை வட்டார அளவில், அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதே மாதிரியாக இன்று விவசாய உற்பத்திப் பெருகியிருக்கிறது. புஞ்சை மகசூலாக இருந்தாலும் சரி, அல்லது பாசனப் பயிராக இருந்தாலும் சரி, உற்பத்திப் பெருகியிருக்கிறது. சந்தேகமே கிடையாது. ஆனால் விவசாயிகள் வாழ்க்கையிலே வசதிகள் பெருகியிருக்கிறதா. அந்த அளவுக்கு வருமானம் உயரவில்லை, அவனுடைய வருவாய் பெருகவில்லை. இதற்குப் பிரதானமான காரணம் விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. அத்தனை பேர்களும் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு இந்தத் துறை யோசனை செய்து சரியான திட்டத்தை அரசுக்குச் சமர்ப்பிக்கவேண்டும். விலை சீரான நிலையில் இருப்பது இல்லை. ஒரு நேரத்திலே விலை உயருகிறது. ஒரு நேரத்திலே குறைகிறது. உயரக்கூடிய விலையின் லாபம் வசதி படைத்தவர்களுக்குப் போய்விடுகிறது. சாதாரண விவசாயிகளுக்கு கிடைப்பது இல்லை. கூட்டுறவு சங்கங்களில் கடன்களை கட்டவேண்டுமென்ற நிர்ப்பந்தத்திலே மகசூல் வந்த உடனே சாதாரண விவசாயி விற்றுவிடுகிறான். ஆனால் வசதி உள்ளவர்கள் வைத்திருந்து விலை உயரக்கூடிய நேரத்திலே விற்பனை செய்வதால் அவர்களுக்கு அந்த விலை கிடைக்கிறது. சீரான விலை ஒரு ஆண்டு பூராவும் இருப்பதில்லை. ஆண்டு பூராவும் ஒரே மாதிரி விலை இருக்கவேண்டுமென்று நிர்ணயம் செய்து அந்த விலைதான் விற்க வேண்டுமென்று இந்தத் துறை பரிசீலனை செய்து, அதை அமைச்சர் அவர்களை வெளியிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சரைப் பொறுத்தவரையிலே அவர் சார்ந்திருக்கிற மாவட்டத்தில் அதைப்பற்றி நிறைய அனுபவம் பெற்றிருக்கிறார்கள். விவசாய விலை எப்படி ஏறி இறங்குகிறது என்பது அவருக்குத் தெரியும். காய்கறிகள் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. காய்கறிகள் பயிரிடப் படுகின்ற காலத்தில், அதிகமாக பயிராவதால், மாட்டுக்கு, அல்லது குப்பையிலே போடக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே காய்கறிகள் ஏராளமாக கிடைக்கக் கூடிய நேரத்தில் வேறு ஏதாவது மற்ற பொருள்கள்—ஜாம்—போன்ற பொருள்கள் செய்யக்கூடிய ஏற்பாடுகள் ஆங்காங்கு இருந்தது என்றால், அவைகள் அதிகமாக விளையக்கூடிய நேரத்தில், விளைச்சல் காரணமாக விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாது. ஆகவே அதனை உபதொழிலாக ஆங்காங்கு வேறு பொருளாக மாற்ற சிறு சிறு தொழில்களை ஏற்படுத்தினால் பிரயோஜனமாக இருக்கும். அதுமட்டுமல்ல இந்த மானாவாரி அபிவிருத்தி என்று ஒரு திட்டம் இருக்கிறது. இன்னும் அதிகமாக கவனம் செலுத்தி ஏற்பாடு செய்யவேண்டும். மானியம் கிடைக்கிற ஏற்பாடுதான் இருக்கிறதே தவிர, கடன் வாங்கவேண்டும் என்று சொன்னால், விவசாயிகள் வங்கிகளை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. ஒதுக்கப்பட்ட பணம் பல இடங்களில் செலவிடப்படாமல் இருக்கிறது. மானியம் 25 சத விகிதம் கடன் 75 சத விகிதம் என்று இருக்கும்போது, கடன் பெறுகிறபோது அதிலே சிக்கல் இருக்கிறது. ஆகவே அரசாங்கம் மானியத்துக்கு சமமாக கடன் வழங்க ஏற்பாடு செய்தால் காரியங்கள் நன்றாக நடைபெறும். அதே மாதிரி விவசாயிகள் பாதிக்கக்கூடிய பல நிலைகள் இருக்கின்றன. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறக் கூடிய கழிவு நீர்களை பல இடங்களில் ரொம்ப பூரணமாக விவசாயத்தைப் பாதிக்கிறது. மேட்டூர் கெமிக்கல்ஸ் பற்றி ஏகப்பட்ட புகார்கள் ஏற்கெனவே வந்திருக்கிறது. அதே போல் இன்டியா சிமின்ட்ஸ். அங்கிருந்து கிளம்புகிற புகை அந்தப் பக்கத்திலே இருக்கிற விவசாய நிலங்களை நச்சுப் படுத்தி பூரா அளவு பாதித்திருக்கிறது. அதே மாதிரி சன் பேப்பர், சேரன்மாதேவியில் இருக்கிறது. அந்தக் கழிவு நீர் பயிர்களைப் பாதித்திருக்கிறது. அதை எல்லாம் தடுக்க இந்தத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வளவோ சொல்லி இருக்கிறோம், விவசாயம் வளர வேண்டுமென்று சொல்கிறோம். தொழில் துறை அதை செயல்படாமல் தடுக்கிறது. அந்தப் புகையைப் போக்க வேறு நாடுகளிலே பாதுகாப்பு ஏற்பாடு பண்ணுகிறார்கள். கழிவு நீரை வேறிடத்தில் விட வழியில்லை. இப்போது கழிவு நீரால் விவசாயம் பாதிக்கிற அளவுக்கு இருக்கிறது. திருச்சியிலே சாராயத் தொழிற்சாலை தண்ணீர் அதே மாதிரிதான். தொழிற்சாலைத் தண்ணீரால் விவசாயத்தைப் பாதிக்காத அளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு துளை போடுகின்ற கருவிகள் தேவைப்படுகின்றன. அவை கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே அதை நாம் வாங்கி வைத்து கேட்டவுடன் கிடைக்கிற மாதிரி செய்யவேண்டும்.

---

இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிலே, 258 இடங்களில் கசிவுநீர் குளங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த மாதிரி அதிகமான இடங்களில் அமைக்க வேண்டும். அதற்கு வேண்டிய நிதி ஆதாரத்தை விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் நிதியமைச்சரைக் கேட்டு அதிகமாகப் பெற்றிருக்க வேண்டும்.



1977 ஆகஸ்ட் 10] [திரு. சோ. அழகர்சாமி]

[திரு. சோ. அழகர்சாமி] [1977 ஆகஸ்ட் 10

குழாய் கிணறுகள் மிகவும் அவசியம். 400 அடிக்கு குழாய் போட்டால் 10 ஏக்கர் கூட பாசனம் செய்ய முடியும். அப்படிச் செய்தால் சிறு தானியங்களை, அதிகமான தண்ணீர் இல்லாமல், விளைவிக்க முடியும். அதற்கு குழாய் கிணறுகளை அமைத்து, அதன் மூலமாக 20 ஏக்கர், 15 ஏக்கர் அளவுக்கு தண்ணீர் பாய்ச்சுகிற திட்டங்களாக செய்து கொள்ளலாம். சிறு விவசாயிகளாக இருக்கிற 30 பேரைச் சேர்த்து, குழாய் கிணறுகளை இந்தத் துறை மூலமாக சமுதாயக் கிணறுகளைப் போன்று அமைத்துக் கொடுத்து, அதற்கு வேண்டிய வசதிகளையும் செய்தால், மகசூலை அதிகப்படுத்தலாம்.

அடுத்தபடியாக பால்பண்ணை, இன்றைக்கு கிராமங்களில் பால் உற்பத்தி பெருகி இருக்கிறது. அப்படி உற்பத்தியாகின்ற பாலை முழுவதும் வாங்கிக்கொள்ளுகின்ற நிலை இல்லை. மதுரையில் பாலை பதப்படுத்தத்தக்க கூடிய தொழில் இருக்கிறது. அதனுடைய சக்தித்திறன் ஒரு லட்சம் தான். ஆகவே கிராமத்தில் உற்பத்தி ஆகின்ற பால் முழுவதையும் வாங்க முடியாத நிலை இருக்கிறது. அதுவுமல்லாமல் ரூ. 1·10 தான் கொடுக்கிறார்கள், பாலில் 7 சதவிகிதம், 8 சதவிகிதம் கொழுப்பு இருப்பதை 4½ சத விகிதமாக்கி, சென்னையை எடுத்துக்கொண்டால் 3 சதவிகிதம் ஆக்கி, ரூ. 2, ரூ. 2·50 என்று விற்கிறார்கள். இவ்வளவு இடைவெளி இருக்கிறது வாங்கும் விலைக்கும் விற்கும் விலைக்கும். அதுவும். சக்கைப் பாலை விற்பதில் இவ்வளவு இடைவெளி விலையிலே வைக்க வேண்டுமா என்பதை அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், சீசன் காலத்தில் உற்பத்தியாகின்ற பாலை வாங்கிக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லாவிடில் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும். அப்படிச் செய்தால் தான், விவசாயிகள் கூட்டுறவு வங்கிகள் மூலம் மாடுகள் வாங்குவதற்காக பெற்றுள்ள கடனை அடைக்க முடியும். ஆகவே பால் உற்பத்தியாளர்களிடமிருந்து, பால் முழுவதையும் வாங்கிக் கொள்ளுகின்ற முறையில், மதுரையிலும் மற்ற இடங்களிலும் ஏற்பாடு செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல் நியாயமான, சீரான விலை கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. மா. மீனாட்சிசுந்தரம்:</u> மதிப்பிற்குரிய பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே; இந்த விவசாய மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். எனக்கு முன்னால் பேசிய ஆளுங் கட்சியினுடைய கொறடா அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் பற்றாக்குறை இல்லை; எல்லா ஊர்களிலும் தணணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது என்று கருத்துபடபேசினார்கள். ஆனால் உள்ள நிலைமை இரண்டு நாளைக்கு முன்னால் இருந்த நிலைமை எனக்கு என் தொகுதியிலிருந்தும்



1977 ஆகஸ்ட் 10] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

ஊர்களிலிருந்தும், பல பெரியவர்கள் மூலமாகவும் வந்திருக்கின்ற செய்தி, தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது. அதிலும் குறிப்பாக கடைமடை பகுதிகளுக்குத் தண்ணீர் இல்லாமல் நாற்று விட்டு நட முடியாத சூழ்நிலை இருக்கிறது. என்பதை தந்தி மூலமாகவும், கடிதங்கள் மூலமாகவும் தெரிவித்திருக்கிறார்கள். நான் கூட கடந்த 3-ஆம் தேதி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் இந்த சபையில் வரவில்லை. இருந்தாலும், அந்தப் பகுதியில் இருக்கின்ற கடைமடைப் பகுதிகளில் போதிய அளவு தண்ணிர் இல்லை என்ற குறையை நிச்சயமாக உறுப்பினர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று உணர்கிறேன். அதோடு கீழ் தஞ்சை கடைமடைப் பகுதி விவசாயிகள் அதிக தண்ணீரைப் பயன்படுத்த முடியாமல், கீழ்த் தஞ்சை பகுதியைச் சேர்ந்த ஆளுங் கட்சியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் கீழ் தஞ்சைக்கு வர வேண்டிய தண்ணீரை குறைத்து மேல் தஞ்சை அதிகமான தண்ணீரைப் பயன் படுத்த வேண்டும் என்று சொல்லி அந்தப் பகுதிக்கு அதிகமான தண்ணீர் போவதாக விவசாயிகள் பேசியிருக்கிறார்கள். இந்த மன்றத்தின் முன்னாள் உறுப்பினர் திரு. எ. கே. சுப்பையா கூட கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் விவசாயிகளை அழைத்துக்கொண்டு போய் மாவட்ட ஆட்சித் தலைவரையும், பொறி இயல் துறையைச் சார்ந்தவர்களையும் சந்தித்ததாக கடிதம் எழுதியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்க உடனடியாக வழிவகை காணவேண்டும், ஏனென்றால் நாற்றுகள் எல்லாம் அழிந்து விடுகின்ற நிலைமையில் இருக்கின்றன.

[பிற்பகல் 12.20]

விவசாயிகள் எல்லாம் கூட மாவட்ட ஆட்சித் தலைவரை நேற்றைக்கு முன் தினம் சந்தித்திருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது. இந்த விவசாயத் துறை மானிய கோரிக்கையில், தண்ணீர் பற்றாக்குறையையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அடுத்தபடியாக, புகையான், அழுக்கான் போன்ற வியாதிகள், திடீரென்று பயிர்களைத் தாக்குகிறது. கடை மடைப் பகுதிகளில் அந்த வியாதிகள் அதிகமாக வருகின்றன. அவைகளைப் போக்குவதற்கு சரியான மருந்துகள் இல்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்தில், ஒரு மாற்று வழியாக, நாற்றங்கால் தயார் செய்து, குருவை, சம்பா நர்சரியில் தயார் செய்து, அந்தப் பயிர்களை ஏழை சிறு நில விவசாயிகளுக்கு நாற்றாக தந்தால், வியாதியைத் தடுப்பதோடு அவர்களுக்கு பயன் உள்ளதாக இருக்கும் என்ற ஒரு திட்டம் இருந்ததாக நான் அறிகிறேன். அத்திட்டம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. இருந்தாலும் இந்த அரசு உடனடியாக அந்த நாற்றங்காலைத் தயார் செய்து அரசு விதைப் பண்ணைகளின் மூலம் நாற்று சப்ளை செய்தால் அந்த வியாதி போய்விடும் என்று நம்பிக்கையிருப்பதால், அதை இந்த அரசு யோசிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. மா. மீனாட்சிசுந்தரம்] [1977, ஆகஸ்ட் 10

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் பெரும்பாலான பகுதி மானாவாரி, பகுதி. வானம் பார்த்த சீமையாக இருக்கிறது. மானாவாரிக்கு ஏற்ற சாகுபடிக்கான முறைகள் இந்த அரசு திட்டத்தில் அதிகமாக இருப்பதாகத் தெரியவில்லை. அங்கே குறிப்பாக, கடலை, எள், மிளகாய், புகையிலை போன்ற சாகுபடி எல்லாம் நிறைய நடக்கிறது. அவை பழைய முறையில் இருந்து கொண்டிருக்கிறது. மாற்றுத் திட்டமாக வேறு விதைகளை எல்லாம் தரவேண்டும். குறிப்பாக விதைக்கடலை அந்த சீசனில் கிடைப்பது இல்லை. குருவைக் கடலைக்கு விதை கிடைப்பதில்லை. அதைகூட விவசாய இலாக்கா மூலம் சாகுபடி நேரத்தில் கடலை விதை குறைந்த விலைக்கு விற்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு வடிகால் பயனற்ற தண்ணீர் கூட அரசு அதிகாரிகளில் சிலபேர் தண்ணீர் எடுக்கக்கூடாது என்று தடுத்து விடுகிறார்கள். அது வீணாகப் போகிற தண்ணீரை இறைத்து சாகுபடி செய்ய அரசு உத்திரவு போடவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடு அந்தப் பகுதியில் வேத புரீஸ்வரர் தேவஸ்தானம், வேதாரண்யம், என்ற ஒரு பெரிய தேவஸ்தானம் இருக்கிறது. அதன் நிலங்கள், அதைப் பரம்பரையாக சாகுபடி செய்து கொண்டிருக்கிற உரிமை பெற்றவர்கள் அந்த நிலத்தை அடமானம் வைத்து கடன் வாங்குகிற, குடிக்காணிப் பட்டா என்று சொல்லுவார்கள், அந்தப் பட்டாதாரர்களும் பட்டா கொடுத்தால்தான் விவசாயிகள் முன்னேற முடியும். இல்லாவிட்டால் அரசு மூலமாக கடன் பெறுவதற்கோ வேறு வகையில் ஓர் நீர்ப்பாசன அமைப்புக்களை உண்டாக்குவதில் ஈடுபடமுடிவதில்லை. அதையும் இந்த அரசு கவனித்து ஆவனசெய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் விவசாயிகளுக்கு மாதச் சம்பளம், பயிர் பாதுபாப்புத் திட்டங்கள், உர விலையைக் குறைப்போம் என்றெல்லாம் சொன்னார்கள். இந்த விவசாய சம்பந்தமாக அறிக்கையில் அது மாதிரி எந்தத் திட்டமும் நிறைவேறியதாகத் தெரியவில்லை. மானாவாரிப் பகுதிகளுக்கு இறவைப் பாசனத் திட்டங்களை நிறை வேற்றவேண்டும். வேதாரணியம் கடற்கரை ஓரப் பகுதியாக இருப்பதால், நிலத்தடி நீர் இயக்குநர் அலுவலகத்தின் மூலம் கீழே இருக்கிற தண்ணிரை எடுக்க கூடாது என்று சட்டம் இருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே அந்தப் பகுதி விவசாயிகள் தண்ணீர் கீழே இருந்து எடுக்க முடியாத நிலைமையில், வேறு ஆறுகளிலிருந்தும் தண்ணீர் வருகிற நிலைமை இல்லாததாலும் மிகவும் கஷ்டப் படுகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை.)

கோடை காலத்தில் ஆடு மாடுகளுக்குக் கூட குடிக்க தண்ணீர் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. அந்தை உடனடியாகக் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிலவள வங்கி மூலம் கடன்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது வேதாரண்யத்தில் இருக்கிற நில வள வங்கியை வேறு ஒரு வங்கியொடு இணைக்கப் போவதாக தகவல் தெரிகிறது.



1977 ஆகஸ்ட் 10] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

ஆனால் அந்த நில்வள வங்கியை வேதாரண்யத்திலேயே வைத்துக் கொள்ளவேண்டும். கிட்டத்தட்ட முப்பது லட்சம் ரூபாய் கடன் இணைத்ததில் அளித்திருக்கிற வேறு வங்கியோடு ஏழை விவசாயிகள் மேலும் கடன் பெறமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்படக்கூடும். அந்தப் பகுதியில் கரை, (ஒப்பன்) கிணறுகள் கொண்ட பகுதியாகும். அந்தக் கிணறுகளை எல்லாம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பழுது பார்க்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கொடுக்கக்கூடிய கடன்கள், வேறு பல கடன்களை கொடுத்து அந்தப் பகுதி விவசாய மக்களை முன்னேற்றவேண்டுமென்றுகேட்டு கொள்கிறேன். இந்த அறிக்கையில் 85 லட்சம் ரூபாய் ரோடு வசதிக்காக ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது. ரோடு வசதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற இந்தத் தொகை போதாது. அடுத்து, என் பகுதியில் காய்கறி அதிகமாகச் சாகுபடி செய்யப்படுகிறது. அங்கு விளையும் காய்கறிகள், வேறு பல உணவு தானியங்களை எடுத்துச் செல்ல ரோடு வசதி அறவே இல்லை என்ற நிலைதான் அங்கிருக்கிறது. எனவே என் பகுதியில் ரோடு வசதிகளை அதிகப்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கொடிக்காடு கிராமத்தில் காடு ஒன்று இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது) அந்தக் காட்டில்மாடுகளை மேய்ப்பது வழக்கம். ஆறு மாதங்களுக்கு அல்லது ஒரு ஆண்டிற்கு ஒரு மாட்டுக்கு இவ்வளவு ரூபாய் என்று வசூல் செய்து கொண்டிருந்தார்கள். இப்போது அந்தக் காட்டில் மாடுகளை விடக் கூடாது என்று காட்டு இலாகா மூலம் உத்தரவு ஒன்று வந்திருப்பதாகத் தெரிகிறது. இதை அமைச்சர் அவர்கள் கவனித்து, எப்போதும் போல் அந்தக் காட்டில் மாடுகளை மேய்ப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கோள்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு அமைச்சர் இல்லாதது ஒரு பெரிய குறையாக இருக்கிறது. ஏனெனில் தஞ்சை மாவட்டம் தான் தமிழகத்திற்கே ஒரு பெரிய நெல் களஞ்சியமாக உணவு கொடுத்துக் கொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலுள்ள தண்ணீர் தட்டுப்பாடு உரத் தட்டுப்பாடு இவற்றையெல்லாம் போக்குவதற்கு ஒரு அமைச்சர் இருந்தால்தான் உடனடியாக அந்தக் காரியங்களைக் கவனிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கும். ஆனால் இப்போது தஞ்சை மாவட்டத்திலிருந்து அமைச்சரவையில் ஒரு அமைச்சர் இல்லாததன் காரணமாக நினைத்தவர்கள் எல்லாம் ஆளுங்கட்சியினர்கள் தலையிடுகிற ஒரு நிலை அந்த மாவட்டத்தில் இருக்கிறது. அதிகாரிகளை மற்றவர்கள் அணுகுவது என்றால் நினைத்தவர்கள் எல்லாம் தலையிட்டு குழப்பத்தையும் ஊழலையும் ஏற்படுத்துகிற நிலைதான் இருக்கிறது. ஆகவே இந்த அமைச்சரவையில் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு அமைச்சர் இருந்தால்தான், விவசாய உற்பத்தி, மற்றும் தஞ்சை மாவட்டத்திற்காக மேம்பாட்டு வசதிகள் நல்ல முறையில் அமையும் என்ற என் விருப்பத்தைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

[1977 ஆகஸ்ட் 10

*திரு. சொ. ந. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, விவசாய மானியக் கோரிக்கையின் மீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உழவு மாடுகள் வாங்க கடன் தரவேண்டும் என்றும் ஆட்டுப் பண்ணைகள் வைத்துக்கொள்வதற்கும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அவினாசித் தொகுதியில் கணியாம்பூண்டி, போத்துப் பாளையம், பூண்டி, தெக்கலூர், பொகளூர், அன்னூர், குன்னத்தூர், அலகேபாளையம், போன்ற பஞ்சாயத்துக்களில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு பாசன வசதி செய்து கொடுத்து விளைபொருள்களை அதிகமாக உற்பத்தி செய்கிற விதத்தில் நல்ல விதமாக உதவி செய்ய வேண்டும் என்று விவசாயத் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12–30]

அத்தோடு கரும்புக்கு அதிகமான விலை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் வெல்லத்திற்கு பலமுனை வரி போட்டிருக்கிறார்கள். அந்த வரியை ஒரு முனை வரியாக விதித்தால் இது விவசாய மக்களை பாதிக்காது. அரிசன் ஏழை விவசாயக் கூலிகள் எங்கள் பகுதியில் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விவசாயம் செய்து கொண்டிருக்கின்ற நிலத்தை அவர்களுக்கு சொந்தமாக பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் எங்கள் பகுதியில் சரியான படி விதைகள் கொடுப்பதில்லை. நாள் பட்ட விதைகளைத்தான் கொடுக்கிறார்கள். இதை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விநியோகிக்கிறார்கள். பூச்சி மருந்தும் நாள்பட்ட மருந்தைதான் கொடுக்கிறார்கள். இதைப்பற்றி விவசாய அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எங்கள் பகுதியில் பவானி தண்ணீர் போகிறது. இருந்தும் போதிய தண்ணீர் வசதி கிடையாது. அங்குள்ள விவசாய மக்கள் பலன் பெறக்கூடிய அளவில் நல்லமுறையில் சாகுபடி செய்வதற்கு தகுந்த நீர்ப்பாசன வசதி அளிக்கவேண்டும். அவ்விதமான ஒரு வசதியை ஏற்படுத்திக்கொடுத்தால், அங்குள்ள விவசாய பெருமக்கள் இந்த அரசாங்கத்தை மறக்காமல் போற்றிக்கொண்டிருப்பார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பால்பண்ணைகள் அமைப்பதற்கு அதிகமான பணம் தரவேண்டும். அப்போது தான் நிலமில்லாத ஏழை விவசாய மக்கள் பயன் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதில் பேச சந்தர்ப்பம் தந்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



1971 ஆகஸட் 10]

*திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே. வேளாண்மை பால்வழங்கும் திட்டம் ஆகிய மான்யக் கோரிக்கைகளின் மீது பேசுகின்ற வாய்ப்பை பெற்றதற்காக நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இங்கே தரப்பட்ட நிதி நிலை அறிக்கையின் மீதும், மான்யக் கோரிக்கைகளின் மீதும் பேசுகின்ற நேரத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதில் புரட்சி இருக்கும் என்று எதிர்ப்பார்த்தோம், ஆனால் இவற்றில் எந்தவிதமான புரட்சியும் இல்லை என்ற பொருள்பட தங்களுடைய கருத்துக்களை கோடிட்டு காட்டினார்கள்.

நான் அவர்களை எல்லாம் மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் பசுமை புரட்சி இருக்கும் என்று சொன்னார்கள். என்ன பசுமை புரட்சி இருந்தது என்று பார்த்தால், நெல்லுக்கும் புல்லுக்கும் கருணாநிதி என்று பெயரை வைத்தார்கள். நீருக்கும் நெருப்புக்கும் கருணாநிதி என்ற பெயரை வைத்தார்கள் இது தான் பசுமைப் புரட்சியா? குடுமியான்மலை அரசினர் பண்ணையில், கலைஞர் கருணாநிதி ஆராய்ச்சி நிலையம் என்று பெயர் வைத்தார்கள். அதே குடுமியான்மலையில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரில் அண்ணா பயிற்சி நிலையம் என்று பெயரை வைத்தார்கள். கலைஞர் கருணாநிதி பெயரில் ஆராய்ச்சி நிலையம், ஆனால் அறிஞர் அண்ணா பெயரில் பயிற்சி நிலையம். இதை இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் கலைஞர் கருணாநிதியின் பெயரால், படிப்பகங்கள், மேடைப் பேச்சு பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்குமானால் அது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். வேளாண்மைத் துறையில் கலைஞர் கருணாநிதி பெயரால் வேளாண்மை ஆராய்சசி மன்றம் என்று வைப்பது, அமாவாசைக்கும் அப்துல்காதருக்கும் எவ்வளவு பொருத்தம் இருக்குமோ அந்த அளவு பொருத்தம் தான் இதற்கும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் இதற்காக செலவு செய்த தொகையைப் பற்றி ஆராய்ச்சி செய்தால் அங்கேயும், பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரிலுள்ள பயிற்சி நிலையத்திற்கும் கலைஞர் கருணாநிதி பெயரால் அமைந்திருக்கும் ஆராய்ச்சி நிலையத்திற்கும் செலவு செய்திருப்பதை ஆராய்சி செய்து பார்க்கிற போது, அதிலும் உள் நோக்கம் இருப்பதாக தெரிகிறது.

1974–75-ஆம் ஆண்டு கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்ட தொகை 7.85 லட்சம் ரூபாய். அதே ஆண்டு அண்ணா பெயரில் இருக்கக்கூடிய பயிற்சி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்ட தொகை 1.27 லட்சம் ரூபாய். 1976–77-ஆம் ஆண்டு கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்கு ஒதுக்

கப்பட்டு செலவு செய்யப்பட்ட தொகை 12 லட்சம் ரூபாய். அதே நேரத்தில் பேரறிஞர் அண்ணா பெயரால் இருக்கக்கூடிய பயிற்சி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை வெறும் 71,000 ரூபாய். இப்படி செலவு செய்யப்பட்ட தொகையில் இருந்து அங்கிருக்கக்கூடிய உள்நோக்கம் நன்றாகத் தெரிகிறது. இப்படித்தான் அவர்கள் பசுமைப் புரட்சியை நடத்திக் காட்டியிருக்கிறார்கள் என்பதற்காக கலைஞர் கருணாநிதிக்கு இந்த மாமன்றத்தின் மூலமாக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண்மையில் தரைப் பகுதி விவசாயம் என்றும், மலைப் பகுதி விவசாயம் என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. தரைப் பகுதியில் கரும்பு, நெல், பருத்தி, வாழை, எண்ணெய் வித்துக்கள் ஆகியவையும், மலைப் பகுதியில் வாழை, காப்பி, ஆரஞ்சு போன்ற பயிர்களும் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. தரைப் பகுதியில் விவசாயம் செய்யப்படுகிற நெல், கரும்பு, வாழை, எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றுக்கு இந்த அரசு ஒதுக்குகின்ற தொகையையும், மலைப் பகுதிகளில் பயிராகின்ற வாழை, ஆரஞ்சு, காப்பி போன்றவைகளுக்கு ஒதுக்குகின்ற தொகையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நூற்றுக்கு ஒரு விழுக்காடுகூட மலைப் பகுதிக்கு இல்லை என்பதை மலைப் பகுதி மக்களின் சார்பாக மிக வேதனையோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தரைப் பகுதி விவசாயத்தில் பாசனத் திட்டங்கள், பயிர்ப் பாதுகாப்புத் திட்டங்கள், பயிர் வளர்ச்சித் திட்டங்கள் என்று பலவகை இருக்கின்றன. மலைப் பகுதி விவசாயத்திற்கு எந்த விதமான திட்டங்களையும் முன் இருந்த அரசாங்கமும் செய்யவில்லை, இப்போது உள்ள அரசாங்கம் கூட மலைப்பகுதித் திட்டத்திலே குறிப்பாக நீலகிரி மாவட்டத்திற்குத்தான் முக்கிய இடம் கொடுத்திருக்கிறது. கொடைக்கானல் மலைப் பகுதி நீண்ட நெடுங்காலமாகப் புறக்கணிக்கப்பட்டுவருகிறது. கொடைக்கானல் பகுதியில் உற்பத்தியாகும் வாழைக்கு கடந்த ஆறு, ஏழு ஆண்டுகளாக வாழை முடிகொத்து நோய் ஏற்பட்டு தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கடந்த அரசு அதற்காகப் பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்திருந்தாலும் விவசாயிகளுக்குப் பலன் கிட்டவில்லை. இதைத் தடுத்து வாழைச் சாகுபடியைச் சீராக்க மருந்து கொடுக்கப்படுகிறது, உரம் கொடுக்கப்படுகிறது என்று வேளாண்மைத் துறை அமைச்சர் குறிப்பில் 16-ல் 36,000 ஏக்கர் பரப்பளவில் வாழை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வாழையை நம்பியிருக்கும் மலைசாதியினர், வாழையை நம்பியிருக்கும் பின்தங்கியவர்கள், வாழையை நம்பியிருக்கும் பழங்குடி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வேதனைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய கொடைக்கானல்





மக்களுக்கு மாற்றுத் திட்டம் காண்கிறவரை அந்தப் பகுதியை வறட்சிப் பகுதியாக ஆக்கி, வாழை விவசாயம் செய்கிறவர்களுக்கு கிஸ்தி வஜா செய்து கொடுக்கவேண்டுமென்று இந்த மாமன்றத்தில் அவர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தரைப் பகுதியில் பெரியகுளம் பகுதியில் சோத்துப்பாறை அணைக்கட்டுத் திட்டம் ஆராய்ச்சியில் இருந்து வருகிறது. இதனால் 4,500 ஏக்கர் நஞ்சை நிலம் இருபோக நஞ்சையாகவும், ஆயிரம் ஏக்கர் புஞ்சை ஒரு போக நஞ்சையாகவும் மாற இருக்கிறது. பெரியகுளம் சோத்துப் பாறை, குப்பம்பாறை, வவ்வால்துறை அணைக்கட்டுக்களைக் கட்டிக் கொடுத்தால் பசுமைப் புரட்சியை நடத்த மார்க்கமாக இருக்கும்.

ஆசிரியர்கள் பயிற்சி என்ற தலைப்பில்—இந்த மாநிலத்தில் விவசாயப் பல்கலைக் கழகம், விவசாயக் கல்லூரி இருக்கிறது—அதைப் போலவே 13 விவசாயப் பள்ளிகள் தமிழகத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று குறிப்புரையில் கண்டேன். அதில் ஆண்டு ஒன்றுக்கு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த 390 இளைஞர்களுக்கு வேளாண்மை பயிற்சி அளிக்கப்படுகிறது என்ற செய்தி உண்மையிலேயே இனிப்பாக இருக்கிறது. ஆனால் 1976—77-வது ஆண்டு 11,700 கிராமப் பள்ளி ஆசிரியர்கள் பயிர்களில் தோன்றும் புழு, பூச்சி, கரப்பான் போன்றவைகளைக் கண்டு பிடிக்க அந்த அரசு, இடைக்கால அரசு ஆசிரியர்களை விவசாயத்திற்கு முடுக்கிவிட்டது என்று வேளாண்மை அமைச்சர் அவர்கள் தன் குறிப்புரையில் ஆறாவது பாராவில் குறிப்பிட்டிருக்கிறார். மாணவர்களுக்குப் பள்ளியில் பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டிய ஆசிரியர்கள், காலம் சென்ற தி.மு.க. ஆட்சிக் காலத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு ஆள் சேர்க்க பயன்படுத்தப்பட்டார்கள். இடைக்காலத்தில் வந்த இந்திரா அம்மையார் ஆட்சிக் காலத்தில் புழு, பூச்சி, கரப்பானைப் பார்க்க வயலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இதுபோன்ற திட்டங்களை எல்லாம் உடனடியாகக் கைவிட்டு விவசாயிகளுக்கு நல்ல திட்டங்களை அறிவித்து அவர்களுக்கு வளத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக் கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமருகிறேன். வணக்கம்.

[பிற்பகல் 12-40]

*திரு. மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் பால்வழங்கும் திட்டத்திற்காக 1 கோடியே 2 லட்சத்து 15 ஆயிரம் ரூபாயும், வேளாண்மைக்காகவும், வேளாண்மை மூலதனச் செலவுக்காகவும்

48 கோடியே 2 லட்சத்து 83 ஆயிரம் ரூபாயும் மானிய கோரிக்கைகளாக இங்கே வைக்கப்பட்டு உள்ளன. நான் பால் துறையை மட்டும் எடுத்துக்கொண்டு சில வார்த்தைகளை கூற விரும்புகிறேன். இந்த பால்வள நிறுவனத் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்ற நேரத்தில் சேலம் மாவட்டம் அறவே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை என்னுல் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது. சேலம் மாவட்டத்திலே 10 ஆண்டுகளுக்கு மேலாக சேலம் நகர கூட்டுறவு பால் வழங்கு சங்கம் நல்லமுறையிலே செயல்பட்டு வருகிறது. ஆனுல் அதே நேரத்திலே, மதுரையிலே, திருச்சியிலே, நாகர்கோவிலிலே, தஞ்சாவூரிலே என்று பல மாவட்டங்களிலே சங்கங்கள் இதற்காக இருந்தும்கூட நிர்வாகக் குழுக்கள் சரியாக இயங்காத காரணத்தால் அவையெல்லாம் அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தக்கூடிய முறையில் இருந்த காரணத்தால் கலைக்கப்பட்டன. ஆனுல் சேலம் மாவட்டத்திலே இருக்கிற இந்த சேலம் நகர கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் மட்டும்தான் தமிழகத்திலேயே தொடர்ந்து நல்லமுறையிலே, லாபத்திலே நடந்து வருகிறது என்பதை இந்தத் துறையின் இயக்குநர் அவர்களும், பால்வள நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் நன்கு உணருவார்கள். இப்படிச் சிறந்த முறையிலே பணியாற்றிவரக்கூடிய சேலம் மாவட்டத்தில் பால் பதனிடும் தொழிற்சாலை ஒன்றும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும் ஆரம்பிப்பதாகச் சொல்லப்பட்டு நான்கு ஆண்டுக் காலத்திற்கு முன்னதாக டென்மார்க் நாட்டிலிருந்து பால்வள பொறியியல் நிபுணர் ஒருவர் சேலம் வந்து அதற்கான வாய்ப்புக்களையும் வசதிகளையும் ஆராய்ந்து பரிசீலனை செய்து சென்றார். ஆனுல் அதற்குப் பிறகு அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை, சேலம் மாவட்டம் அறவே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் இந்த மானியக் கோரிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

சேலம் மாவட்டத்தில் உள்ள ஆறு தாலூகாக்களில் சுமார் 63 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தியாகிறது. நாமக்கல் தாலூகாவிலே 30 ஆயிரம் லிட்டர் பாலும், ஆத்தூர் தாலூகாவிலே 10 ஆயிரம் லிட்டர் பாலும், சேலம் தாலூகாவில் 5 ஆயிரம் லிட்டர் பாலும், ராசிபுரம் தாலூகாவில் 10 ஆயிரம் லிட்டர் பாலும், சங்ககிரி தாலூகாவில் 5 ஆயிரம் லிட்டர் பாலும், கொங்கணுபுரம் தாலூகாவில் 3 ஆயிரம் லிட்டர் பாலும் ஆக மொத்தம் 63 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தியான போதிலும்கூட சேலம் நகரத்திலே 10 ஆயிரம் லிட்டர் பால்கூட கிடைப்பதில்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. பொதுமக்களுக்கும் அங்கேயுள்ள நகராட்சி மகப்பேறு மருத்துவமனை மற்றும் அரசினர் மருத்துவமனை ஆகியவற்றிற்கும் சேர்த்து 10 ஆயிரம் லிட்டர் பால்தான் கொடுக்கப்படுகிறது. ஆனுல், அங்கே 7 ஆயிரம் லிட்டர் பால் பதனிடக்கூடிய குளிர்ச்சி சாதனம் இயந்திரம்தான் இருக்கிறது. ஆகவே பால் உற்பத்தியின் அளவு அங்கே



63 ஆயிரம் லிட்டராக இருந்தாலும்கூட சேலம் நகரத்திலே 5 ஆயிரம் லிட்டர் குளிர்சாதன மிஷின் ஒன்றும், 2 ஆயிரம் லிட்டர் குளிர் சாதன மிஷின் ஒன்றும் ஆக 2 குளிர் சாதன மிஷின்கள் தான் இயங்குகின்றன. அது மட்டுமல்ல, சேலம் நகரத்திலே உள்ள மில்க் டயரி பார்ம்க்கு சொந்தமான கட்டடங்களையும், நிர்வாகக் கட்டடங்களையும், எதிர்காலத்திலே அபிவிருத்தி செய்வதற்கு ஏற்றவகையிலே நாலரை ஏக்கர் நிலமும் பெற்றிருக்கிறது. சேலத்திலே விரைவில் இரும்பாலை வரக்கூடிய நிலைமை இருப்பதால் அந்தப் பகுதி அபிவிருத்தி அடைந்து சேலம் நகரத்தின் தோற்றமே மாறக்கூடிய நிலைமை இருக்கிறது. அது மட்டுமல்ல, அந்த நகரைச் சுற்றி புதிய குடியிருப்புகள் ஏற்படக்கூடிய நிலைமை இருப்பதால் அங்கே நல்ல சுத்தமான தரமான பாலை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக தேவையான அளவிற்கு வழங்குவதற்கு ஏற்ற முறையில் தேவையான இயந்திரங்களை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலை உற்பத்தி செய்கிற நேரத்திலே இரண்டுவிதமான முறைகள் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று பால் உற்பத்தியாளர் சங்கம் மூலமாக பால் உற்பத்தி செய்வது. அந்த வகையில் கோயம்புத்தூரிலே ஒன்றும், ஈரோட்டிலே ஒன்றும் ஆக இரண்டு ஒன்றியங்கள் ஏற்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது நடைமுறையிலே சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஈரோட்டிலே தமிழ்நாடு பால்வள நிறுவனம் நேரடியாக பாலை வாங்குவதற்கு ஏற்பாடு இருப்பதால் உற்பத்தியாளர் சங்கம் செயல்படுவதற்கு இடம் இல்லாமல் போகிறது. கோயம்புத்தூர் பால் உற்பத்தியாளர் சங்கம் சிறந்த முறையிலே செயல்படும் நிலைமை என்பது நடைமுறையிலே இல்லை. ஆகவே இதனுல் பயனில்லை. பால் உற்பத்தியாளர் சங்கம் விவசாயிகளிடமிருந்து பால் வாங்கி இடைத்தரகர்களாக இருந்து கடைசியில் பயன்படுத்துவோர்களுக்குக் கொடுப்பதால் பல சிக்கல்கள் ஏற்படும், சில பேர்களுடைய வசதியைப் பெருக்கிற முறையில் ஊழல்களை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாகவும் வசதியாகவும் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவேஇந்தத்திட்டத்தை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும்.

உற்பத்தியாளர் சங்கம் என்பது நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல. இருக்கின்ற ஒரு நிர்வாகத்திற்குப் பதிலாக இரட்டை நிர்வாகத்தை அது ஏற்படுத்தி அதனுல் பல சிக்கல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதில் இருக்கிறது. கனம் அமைச்சரவர்கள் பால் வள நிறுவனத்திற்கு, எதிர்காலத்தில் சேலத்தில் வரவிருக்கும் இரும்பாலைத் திட்டத்தைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு அங்கே பால் பதனிடும் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

[1977 ஆகஸ்ட் 10

புலவர் கா. கோவிந்தன் : பேரவைத் தலைவரவர்களே, நேற்று உணவு மானியக் கோரிக்கையை விவாதித்துவிட்டு அடுத்து இன்று வேளாண்மைத் துறை பற்றிய மானியத்தை விவாதிப்பது மிகவும் பொருத்தமாகும்.

" உண்டி முதற்றே உணவின் பிண்டம் "

என்று கூறிய புலவர் " உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே " என்றும்,

" உண்வெனப்படுவது நிலத்தொடு நீரே " என்றும் கூறியிருக்கிறார்கள். நிலமும், நீரும் உழுகின்ற உழவர்களும் ஒன்றுபட்டாலொழிய உண்டாகாது என்ற அளவிலே அந்தத் தொழில் பற்றிய மானியக் கோரிக்கையாகிய வேளாண்மைத் துறை பற்றி இன்று விவாதிப்பது மிகவும் சிறப்பிற்குரியதாகும்.

இந்த வேளாண்மைத் துறையிலே நிலத்திற்கு உடையவர்களாகவும் அந்த நிலத்திலே உழுகின்றவர்களாகவும் இருக்கின்ற மக்களுடைய தொகை ஒரு கோடி. ஆனல் உழவுக்கு உரிய நிலம் நஞ்சை புஞ்சை ஒருபோகம் இருபோகம் ஆக எல்லா நிலங்களையும் சேர்த்தால் 1 கோடியே 66 இலட்சம் ஏக்கரா நிலம்தான் தமிழகத்தில் இருக்கிறது. ஆக இப்பொழுது ஒரு கோடி மக்கள் ஒரு கோடியே 60 இலட்சம் ஏக்கர் நிலத்தை நம்பி வாழ்கின்ற நிலையை மேலும் அதிகமாக்கி அவர்களுடைய வருவாயைக் குறைக்கின்ற முறையிலே எந்தவிதமான திட்டமும் அமையக் கூடாது. உழுகின்ற நிலத்தின் அளவைப் பெருக்குவது என்பது இயலாது. ஆகவே, அந்த நிலத்திற்கு உடையவர்களாகவும், உழுகின்றவர்களாகவும் இருக்கின்ற மக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு என்ன வழிமுறைகளைக் கையாள வேண்டுமென்பதை அரசு சிந்தித்துச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது நெற்பயிர் 40 இலட்சம் ஏக்கராவிலே பயிரிடப் படுகிறது. உற்பத்தியைப் பார்க்கின்ற நேரத்திலே 1974-75ஆம் ஆண்டில் 53 இலட்சம் டன் நெல் என்று கூறப்படுகிறது. இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற புள்ளி விவரங்களிலே 58.67 இலட்சம் டன் 1975-76லே உற்பத்தியாகி இருக்கிறது என்று கொடுத்திருக்கிறார்கள், 1975–76 ஆம் ஆண்டிலே 58.67 இலட்சம் டன் உற்பத்தி என்று கூறிவிட்டு, 1976-77ஆம் ஆண்டிலே 53 இலட்சம் டன் என்றும், இப்பொழுது 1977-78ஆம் ஆண்டிலே 62 இலட்சம் டன் குறிக்கோள் என்றும் கூறுவதைப் பார்க்கும் பொழுது கொஞ்சம் புள்ளி விவரத்திலே தவறு இருப்பதாகக் காணப்படுகிறது. இதைச் சரி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1977 ஆகஸ்ட் 10] [புலவர் கா. கோவிந்தன்]

இப்பொழுதுள்ள நெல்லின் பரப்பளவை மேலும் அதிகமாக்க வேண்டும் என்ற கருத்தை அமைச்சரவர்கள் கூறியுள்ளார்கள். அதை வரவேற்க வேண்டும். ஆனல் நேற்று பேசிய உறுப்பினர்கள் நெல்லுக்குக் கொடுக்கும் விலையானது போதுமானதாக இல்லை என்று கூறினார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சென்ற காலத்திலே, திராவிட முன்னேற்றக் கழக அரசு கொடுத்த அந்த போனஸைவிட அதிகமாகக் கொடுக்கப்படும் என்ற வாக்குறுதியைக் கொடுத்ததற்காக நிச்சயமாக தமிழ்நாடு நன்றி செலுத்தும். அதை விரைவில் கொடுப்பதற்கு, நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு விதிமுறைகளை வகுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு தொழிற்சாலையிலே நாம் இத்தனை கெஜ் நீளம் உற்பத்தி செய்ய வேண்டும், இத்தனை டன் எடையுள்ள நூலை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற குறிக்கோளை வைத்துக்கொண்டு அதிகமான திட்டங்களை வைத்துச் செயல்படும் நேரத்தில் அந்தக் குறிக்கோளை எட்ட முடியும். ஆனல் பயிர்த் தொழிலைப் பொறுத்தவரையில், ஒரு ஏக்கரில் இவ்வளவு பயிர் செய்யலாம், இதற்கு இவ்வளவு செலவாகியிருக்கிறது, ஆண்டு முடிவிலே, பருவம் முடிந்த பிறகு இவ்வளவு நெல் உற்பத்தியாகும் என்று பார்த்து எந்த விவசாயியும் விவசாயம் செய்ய முடியாது. காரணம், விவசாயி எவ்வளவு திறமையாக இருந்தாலும் இடையிலே ஏற்படுகின்ற இடையூறுகள் எவ்வளவு இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

[பிற்பகல் 12-50]

தண்ணீர் போதாத நிலைமை, காற்று அடிக்கின்ற நிலைமை, கடுமையான வெயில் காய்கின்ற நிலைமை, பூச்சியினுடைய கொடுமை ; அடுத்து சில நேரங்களிலே கதிர்கள் வருகின்ற நேரத்திலே கூட்டம் கூட்டமாக சில பறவைகள் வரும். கதிர்கள் பால் ஏறுவதற்கு முன்பு, அவை உறிஞ்சிவிடும், கதிர்கள் எல்லாம் நிற்குமே ஒழிய, பதர்களாக மாறிவிடும். அப்படிப்பட்ட நிலைமையில், எதிர்பாராத நிலைமையில் பயன்பெறாத நிலைமையிருக்கிறது. இவ்வளவுதான் கிடைக்கும் என்று திட்டமிடாத நிலைமையிலே உழவன் பயிர் செய்கின்ற நிலைமையிலே இருக்கிறான். அதைக் காப்பாற்ற, பயிரைக் காப்பாற்ற திட்டம் தேவை என்பதை உணர்ந்தார்கள். ஆளுங்கட்சியினர் தேர்தல் நேரத்திலே இதைக் கொண்டு வருவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனல், இப்பொழுது அது மத்திய அரசினுடைய கடமை, மத்திய அரசைக் கேட்டு எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்கிற அளவுக்கு, அவர்களுடைய வார்த்தை, கொண்டு வருகிறோம் என்ற உறுதியிலே இருந்து, நழுவுகிற நிலைமை. அதற்கு மாறாகக் கொண்டுவருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர், கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து ஆண்டறிக்கை தந்திருக்கிறார்கள். அதிலே ஒரு இடத்திலே சொல்கிறார்கள், ஐ. ஆர். 20 நெல் பயிரிட்டு அவர்களுக்கு நிகர இலாபமாக ஒரு ஏக்கருக்கு ரூ. 3,500 வந்திருக்கிறது என்று. நான், பணிவன்போடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரையும், அதிலே பணிபுரிவோரையும் வேண்டுகிறேன், தமிழகத்திலே இருக்கிற எல்லா நிலங்களையும் பயிரிடுகின்ற பொறுப்பை, அவர்களே ஏற்று, ரூ. 3,500 வருமானத்திலே, ரூ. 1,000 எடுத்துக்கொண்டு, அல்லது ரூ. 2,500ஐ எடுத்துக் கொண்டு, ரூ. 1,000ஐ விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற திட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களானால், தமிழ்நாடு மிகவும் நன்றியோடு அந்த திட்டத்தை வரவேற்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ரேடியோவிலே பேசும்பொழுது, இவ்வளவு உரம் போட வேண்டும், இன்ன இன்னது இவ்வளவு, இவ்வளவு போட வேண்டும், இவ்வாறு செய்தால் கடைசியிலே இத்தனை கிலோ நெல் உற்பத்தியாகும் என்று சொல்கின்ற நேரத்திலே கேட்க மிக அழகாக இருக்கிறது. ஆனால், செயல்முறையிலே பார்க்கிற நேரத்திலே-இங்கே இருக்கக்கூடியவர்கள் விவசாயப் பெருமக்கள் என்று நினைக்கிறேன், அவர்கள் நன்றாக உணர்வார்கள். அப்படிப் பட்ட நிலைமை இல்லை. செலவு அதிகமாகிறது. நாம் உழவனுக்கு இவ்வளவு கூலி, ஆண் ஆளுக்கு இவ்வளவு கூலி, பெண் ஆளுக்கு இவ்வளவு கூலி என்று வைத்திருக்கிறோம். கூலி உயர வேண்டும், உயர வேண்டுமென்று வலியுறுத்துவதோடு, உற்பத்தியாகிற நெல்லுக்கு உரிய விலை இல்லாவிட்டால், எப்படிப்பட்ட நிலை ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நான் வட ஆற்காடு மாவட்டத்திலேயிருந்து வருபவன். தஞ்சை மாவட்டத்திலேயிருந்து வருபவர்கள் தங்கள் குறைகளைச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டம்தான் தமிழகத்தின் நெற் களஞ்சியம் என்று சொல்லப்படுகிறது. தஞ்சைக்கு அடுத்து, தமிழகத்திலே அதிக நெல் உற்பத்தி செய்வது வட ஆற்காடு என்ற அந்த இரண்டாவது ஸ்தானத்தை அது பெற்றிருக்கிறது: நிலத்திலே, அதிக அளவு நெல் உற்பத்தி செய்வதைப் பொறுத்த வரையிலே, வட ஆற்காடு மாவட்டம் தொடர்ந்து பரிசு பெற்று வருகிறது. அப்படிப்பட்ட மாவட்டத்திலிருந்து நாங்கள் வருகிறோம். ஆனால், வட ஆற்காடு மாவட்டத்திலிருக்கிற நாங்கள் பயிரிடுகிற முறைக்கும் தஞ்சை மாவட்டத்திலே பயிரிடுகிற முறைக்கும் உள்ள வித்தியாசத்தை உணரவேண்டும். தஞ்சை மாவட்ட உற்பத்தியிலே, எல்லாம் சேர்த்து, ஒரு ஏக்கர் நிலத்திற்கு நிலவரியாக, தண்ணீர் தீர்வையாக, லோக்கல் சர்சார்ஜ் பஞ்சாயத்து வரியாக, கொடுக்கின்ற பணம், ஒரு ஆண்டிற்கு ரூ. 60-லிருந்து ரூ. 80 வரும் என்று, தஞ்சை மாவட்டத்தி





ிருந்து வந்திருக்கின்றவர்களையெல்லாம் கேட்டபொழுது சொன் னார்கள். நாங்கள், வட ஆற்காடு மாவட்டத்திலிருக்கிற நிலத்தடி ரைப் பயன்படுத்தி, கிணறு வெட்டி, மின்சார மோட்டார் வைத்து, தண்ணீரை இறைத்து பயிர் செய்யவேண்டியிருக்கிறது. ங்களுக்கு ஓர் ஏக்கருக்கு ஓர் ஆண்டிற்கு மின்சாரக் கட்டணத் ிற்கு ரூ. 200 ஆகிறது. தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு ராண்டிற்கு ஆகிற நில, நீர்வரிச் செலவு ரூ: 85, நாங்கள் மின்சாரக் ட்டணமாகக் கட்டும் பணம் தண்ணீருக்காகச் செலவிடும் பணம் ஆகும். அது ஆண்டிற்கு ரூ 200. தஞ்சை மாவட்டத்திலே உற்பத்தி ாகும் நெல்லுக்கும் ரூ. 78குவிண்டாலுக்கு. வட ஆற்காடு மாவட்ட விவசாயி உற்பத்தி செய்வதற்கும் ரூ. 78 குவிண்டாலுக்கு. துதை எண்ணிப் பார்க்கவேண்டும். (குறுக்கீடு) நம்முடைய தஞ்சை மாவட்ட உறுப்பினர் அவர்கள் ரூ. 85 என்று சொல்லி து தவறு, ரூ. 104 என்று சொல்கிறார்கள். ரூ. 104 ன்றாலும் கூட, வட ஆற்காட்டில் அது இரு மடங்காக இருக் கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதனால், அவர்க ளுடைய வரியை உயர்த்த வேண்டுமென்று நான் கூறமாட்டேன். தஞ்சை மாவட்ட மக்களுக்கு நீங்கள் ஆயிரம் ஆயிரமாக செல விட்டு அணைகளைக் கட்டி, நீர்த்தேக்கம் கட்டி, அவர்களுக்கு வேண்டிய தண்ணீரைக் கொடுத்து, அதற்கு அவர்களிடத்திலே வரியாக, தண்ணீர்த் தீர்வையாக ரூ. 10, ரூ. 15, ரூ. 25 என்று வசூலிக்கின்றீர்கள். அதைப்போலவே வடாற்காடு மாவட்டத் திலே கிணறுகள் வெட்டி மின்சார மோட்டார் அமைக்கின்ற பணியை அரசு ஏற்றுக்கொண்டு எங்களிடத்திலே தண்ணீர் தீர்வையாக 15 ரூபாய், 25 ரூபாய் என வசூல் பண்ணக்கூடிய முறையை அரசு மேற்கொள்ளுமானால் அது நியாயமான முறை யாகும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகளுடைய நிலைமை எப்படி இருக்கிறது? இங்கே பேசினார்கள். ஏழை விவசாயிகள் அறுவடையான உடனே தங்களுடைய நெல்லை விற்க வேண்டிய நிலைமை இருக் கிறது. நியாயமான விலை கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். நியாயம்தான். விவசாயிகள் தவிர மற்றவர்கள் எல்லாம் தாங் கள் செய்கின்ற பொருளுக்கு தாங்களே விலை வைக்கிறார்கள். தன்னுடைய பிள்ளைக்கு தானே பெயர் வைப்பது போல, தங் களுடைய தொழிற்சாலையிலே உற்பத்தியாகிற பொருளுக்கு தாங் களே விலை வைக்கிறார்கள். ஆனால் விவசாயிகள் தாங்கள் உற் பத்தி பண்ணுகிற நெல்லுக்குத் தாங்களே விலை வைக்கமுடிய வில்லை. ஒழுங்கு முறை விற்பனை கிடங்குகளுக்குக் கொண்டு போகிறார்கள். அங்கே என்ன ஆகிறது? மூட்டையை வைக் கிறார்கள். 10 வியாபாரிகள் வந்து அவர்கள் என்ன விலையைச் சொல்லுகிறார்களோ அந்த விலையை எழுதி அந்த மூட்டைக்குள் போட்டுவிட்டு போய்விடுகிறார்கள். அங்கே கூட விவசாயிகள் விலை சொல்லவில்லை. தான் பெற்ற பிள்ளைக்கு வெளியே இருக்கிறவர்கள் பெயர் வைக்கிற நிலைமை இருக்கிறது.

அந்த நிலையை மாற்றவேண்டும். முன்பெல்லாம் கூட்டுறவு சங்கங்களிலே விவசாயிகள் தங்களுடைய நெல்லை உலர்த்தி கொண்டுபோய் வைப்பார்கள். அவர்கள் 75 பங்கு 60 பங்கு கடன் கொடுப்பார்கள். அந்தக் கடனை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வேண்டிய செலவுகளை செய்துவிட்டு தங்களுடைய விவசாய வேலைகளை நடத்திக் கொண்டு, நல்ல விலை வருகிற நேரத்திலே விற்பார்கள். அந்த நிலைமை இப்போது இல்லை. அதைச் செய்ய முடியுமா என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கரும்புக்கு என்னென்ன சொன்னார்கள்? கரும்புக்கு எவ்வளவு செலவாகிறது? இப்போது 40 டன் ஒரு ஏக்கருக்கு வரும் என்று சொன்னார்கள். அதுவே கொஞ்சம் நல்ல திறமையான விவசாயிகளுடைய நிலத்திலே இருந்துதான் கிடைக்கும். சாதாரண விவசாயிக்கு 30, 35டன்தான் ஆவரேஜ் வரும். 40 டன் என்றால் 4 ஆயிரம் ரூபாய். ஒரு ஏக்கருக்கு விதைப் புள் 25 ஆயிரம் தேவை, ஏக்கருக்கு 500 ரூபாய் ஆகிறது. கிடங்கு வெட்டி, கரும்பு புள் நட ரூ. 100 ஆகிறது. அவர்கள் சொல்கிறபடி உரம் போட ரூ. 750 ஆகிறது. மருந்து போட்டு கொத்தி மண் அணைக்க ரூ. 100 ஆகிறது. கரும்பு வெட்ட டன்னுக்கு 10 ரூபாய் ஆகும். 40 டன்னுக்கு 400 ரூபாய் ஆகிறது. லாரி வாடகை ரூபாய் 600 ஆகிறது. ஆக ரூ. 2,500 ஆகிறது. இதிலே தண்ணீர் இறைக்கின்ற செலவு இருக்கிறது. அந்தக் கணக்கை இதில் சேர்க்கவில்லை. இது ஓராண்டுப் பயிர். 4 மாதம் 6 மாதம் பயிராக இருந்தால் எவ்வளவு செலவாகும். 40 டன்னிலே விளைவதாக இருந்தாலும் இந்த விலை போதுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே விவசாயத்தை வைத்தால், விவ்சாயி எந்த அளவு பாதிக்கப்படுவான் என்று எண்ணிப் பார்க்கவேண்டும். சீர்திருத்தம் எல்லாம் பேசுகிறோம். எல்லாம் நிலத்திற்குத்தான் வருகிறது. கிராமங்களில் இருக்கிற நிலத்துக்குத்தான் உச்சவரம்பு. அங்கேதான் அந்தக் கொண்டுவரவேண்டுமா? நகரத்திலே இருக்கிற தொழிலாளிக்கு உச்சவரம்பு இல்லை. ஒருவன் எவ்வளவு தொழில்கள் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். எவ்வளவு சொத்தானாலும் வைத்துக் கொள்ளலாம். கிராமத்தில் உள்ளவர்களுக்குத்தான் 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா, 15 ஸ்டான்டர்டு ஏக்கராவாக வந்து 10 ஸ்டாண்டர்டு ஏக்கராவாக வந்துள்ளது. இது வரலாமா என்ற நிலைமை இருக்கிறது.

அடுத்ததாக கடன் கொடுக்கிறார்கள். இப்போது எவ்வளவு கடன் கொடுத்திருக்கிறார்கள் என்பதை கணக்குப் பார்த்த நேரத்தில் நேற்றைய மானியத்திலே நிலவளவங்கியிலே 1974-75-லே 15·43 கோடி, 1975–76-லே 19·05 கோடி, 1976–77-லே 19·14 கோடி, 1977–78-லே 19·14 கோடி கடன் கொடுக்கி-





றார்கள். குறுகிய கால மத்திய கால கடன்கள் 1975–76-ல் 102 கோடி, 1976–77-ல் 125 கோடி, 1977–78-ல் 138 கோடி— இப்படி கடன் கொடுக்கிறார்கள்.

ஆண்டுக்காண்டு நாம் விவசாயத்திற்கு கடன் கொடுக்கிறோம் என்பது ஓரளவு பெருமையாக இருந்தாலும், இதனால் விவசாயிகளுடைய தலைமேல் கடன் ஏறிக்கொண்டே போகிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே ஆண்டுக்காண்டு விவசாயிகளுக்கு கடன் அளிக்கிற நிலைமைதான் இருக்கிறதே தவிர, அவர்கள் கடன் தீர்க்கிற நிலைமை இல்லை. ஆகவே ஒரு ஆய்வு நடத்தவேண்டும். தமிழகத்திலே இருக்கிற விவசாயிகளுடைய பொருளாதார நிலைமை எந்த அளவு இருக்கிறது, வருவாய் இருக்கிறதா என்று எண்ணிப் பார்த்து கடன் வாங்குகிற அளவுக்கு வருவாய் உயருகிறதா, கடன் பளு குறைந்து வருவாய் பெருக எந்த அளவுக்குத் திட்டம் தீட்டலாம் என்பதை மறு ஆய்வு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1–00]

அடுத்து, இப்போது நீர் தான் விவசாயத்துக்கு முக்கியம் என்று சொன்னோம். வட ஆற்காடு மாவட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்றால், வட ஆற்காடு, சேலம், தர்மபுரி ஆகிய மூன்று மாவட்டங்களும் கூடிய விரைவில் ஆந்திராவில் உள்ள ராயலசீமாவைப் போன்ற வரண்ட பகுதியாக மாறுகின்ற நிலை இருக்கிறது. நாம் பருவ மழை பெய்யும் என்று எதிர்பார்க்கிறோம். தென்மேற்கு பருவ மழை பற்றி நான் பள்ளியில் படிக்கின்றபோது வரலாற்று ஆசிரியர் சொல்வார். அது அரபிக்கடலின் வழியாக வரும்போது, மேற்குக் கடற்கரை ஓரத்தில் பெய்யும் மழை, பாலக்காட்டு கணவாய் வழியாக தப்பி வருகின்றமேகம், இங்கே வந்து மழையாகப் பெய்யும். இல்லை என்றால் நம் தலைமயிரைப் பிய்த்துக்கொண்டு போகும் அளவுக்கு காற்றாகமாறி அடிக்கும் என்று சொல்வார். அந்த நிலைமை தான் வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிறது. வட கிழக்கு பருவக் காற்று மூலம் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் மழை பெய்கிறது. ஐப்பசி மாதத்தில் ஏதாவது புயல் உருவானால்தான் தமிழ்நாட்டுக்கு மழை உண்டு. அந்தப் புயல்கூட தமிழ்நாட்டுக் கடற்கரையை நோக்கி வருவதற்குப் பதிலாக ஆந்திரா கடற்கரையை நோக்கி தாக்குகிறதே தவிர, தமிழக கடற்கரையை தாக்குவதில்லை. ஆகவே நாம் ஒரு புதிய ஆய்வினைச் செய்யவேண்டும். பிற மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு திருப்பி விடுகின்ற தண்ணீர் எவ்வளவு இருக்கும்; தமிழ்நாட்டில் பெய்கின்ற மழையால் எந்த அளவுக்குத் தண்ணீர் கிடைக்கும்; நிலத்தடி நீர் எவ்வளவு கிடைக்கும் என்று எண்ணிப்பார்த்து, நெல்லை நாம் எவ்வளவு ஏக்கரில் பயிர் செய்கிறோம், பாய்ச்ச அதற்கு எவ்வளவு

[புலவர் கா. கோவிந்தன்] [1977 ஆகஸ்ட் 10

ண்ணீர் தேவை; ஒரு நாள் விட்டு ஒருநாள் தண்ணீர் வேண்டிய
ாய்கறி, மிளகாய், அதற்கு எவ்வளவு தண்ணீர் தேவை, ஒரு
ாரத்திற்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டிய கரும்பு,
ாழை இதற்கு எவ்வளவு தண்ணீர் தேவை என்று பார்த்து
மக்குக் கிடைக்கின்ற தண்ணீரைக் கொண்டு எந்த அளவுக்கு
யிர் செய்யலாம், எந்த வகைப் பயிர் செய்யலாம், நெல் பயி
டுவதைக் குறைத்து மற்ற பயிர்கள் பயிரிடும் பரப்பளவை
அதிகரிக்கலாமா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். இப்போது
நெல் விளைகிற நிலப் பரப்பே போதாது என்று சொல்லுகிற
போது, அதன் பரப்பளவை குறைக்கலாமா என்றால் குறைக்கலாம்.
நெல்லே விளையாத நாடுகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம்
வளர்ந்திருக்கின்றன. நமக்கு மற்ற பயிர்களில் வருகிற வருவாய்
பெருகி விடுமேயானால், அதைக் கொண்டு நெல்லை வாங்க வழி
செய்யமுடியும். ஆகவே அதை ஓரளவுக்கு ஆய்வு செய்ய வேண்டும்மென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பால் வழங்குவது பற்றி ஒரு கருத்தைச் சொல்லி உரையை முடிக்கிறேன். நான் முன்பு கூறியது போல மக்களுக்கு வேண்டிய உழவு நிலமாகக் கிடைக்கக் கூடியது 1 கோடியே 66 லட்சம் ஏக்கர். நமது நாட்டில் இருக்கின்ற கால் நடைகளில், ஆடுகள் 90 லட்சம், மாடுகள் 1 கோடி, எருமைகள் 30 லட்சம்; ஆக 2 கோடியே 20 லட்சம் கால்நடைகள் இருக்கின்றன. இவை புல் மேய்ந்து வாழக்கூடிய உயிர்வகை. இதற்கு நாம் மேய்ச்சல் நிலம் எவ்வளவு விட்டிருக்கிறோம் என்றால் 5 லட்சம் ஏக்கர்; அதாவது தலைக்கு இரண்டரை சென்ட். இதுகூட நாம்விடுவதில்லை. அதுவும் குறைந்துகொண்டு வருகிறது, எவ்வளவு குறைந்து கொண்டு வருகிறது என்றால் 1972–73-ல் 228 ஆயிரம் ஹெக்டர் நிலமாக இருந்தது, 1974–75-ல் 208 ஆயிரம் ஹெக்டர் நிலமாக ஆகியிருக்கிறது. 1972–73-க்கும் 1974–75-க்கும் இடையே 20 ஆயிரம் ஏக்கர் நிலம் குறைந்திருக்கிறது மேய்க்கால். இப்படி மேய்க்காலை குறைத்துவிட்டு, கால்நடைகள் வளர வேண்டும் என்றால், எப்படி வளரும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

இரண்டாவது இங்கே நமக்கு பால் உணவு எந்த அளவுக்கு இருக்கிறது என்று கணக்குச் சொன்னார்கள். நம்முடைய மக்கள் நல்வாழ்வு வாழ நாளைக்கு 300 கிராம் பால் தேவை. ஆனால் அகில இந்தியாவில் 130 கிராம் அளவும், தமிழ்நாட்டில் 63 கிராம் அளவும் தான் கிடைக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். பால் பற்றாத நிலைமை இருக்கிறது என்று சொல்லிவிட்டு, அதே நேரத்தில் இப்போது நம்முடைய பாலைக் கொண்டு செய்கிற உணவுப் பொருட்களை வெளிநாட்டில் விற்பதற்கு நம்மால் இயலவில்லை என்று சொல்வதில் என்ன கருத்திருக்கிறது? நமது மக்களுக்குப் போதிய பால் கிடைக்கவில்லை என்று சொல்கிறபோது, பாலிலிருந்து உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வது பொருத்தமானதா என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.



1977 ஆகஸ்ட் 10] [புலவர் கா. கோவிந்தன்]

இன்றைன்று, பால் வழங்க, அரிசனங்களுக்கு, கிராமத்தில் இருப்பவர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாகக் கடன் தருகிறோம், பால் உற்பத்தியைப் பெருக்குகிறோம் என்கிறார்கள். கிராமங்களிலிருந்து பால் சென்னைக்கு வருகிறது. கோவைக்கு வருகிறது, பல நகரங்களுக்கு வருகிறது. ஆனால் பாலை உற்பத்தி செய்கின்ற கிராம மக்கள் பாலைக் குடிக்கின்ற நிலையில் இல்லை. ஆகவே உங்கள் கொள்கை எல்லாம் நகர மக்களை எண்ணிப் பார்த்து கொடுக்கிற திட்டமாக் இருக்கிறதே தவிர, கிராமங்களில் இருக்கின்ற மக்கள் பாலைப் பருகும் அளவுக்கு, அவர்கள் உடல் நலத்தைப் பெருக்கும் அளவுக்கு இல்லை. ஆகவே இதை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கூறி, இந்த அளவோடு கருத்தைத் கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள், கூறினார், எல்லாவற்றிற்கும் வரம்பு கட்டக் கூடிய சட்டமெல்லாம் கிராமங்களுக்குத் தான் வருகிறது என்று. அவர்களுடைய கட்சி ஆட்சி காலத்தில் நில உடைமைக்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சட்டம் செய்யப்பட்டது. அதுவே சரியல்ல, விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கவில்லை என்று புகார் இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட நிலப் பிரபுகளுக்கு நில உச்ச வரம்பு விகிதத்தை மாண்புமிகு உறுப்பினர் தவறு என்று கூறுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

*திரு. புலவர் கா. கோவிந்தன்; நான் கூறியது அங்கே உள்ள நிலப் பிரபுக்களைப் பற்றி மட்டுமல்ல. சிலர் வாயில் எப்போதும் ஏகபோக மிராசுதார்கள், வர்த்தக சூதாடிகள் என்ற அப்படிப்பட்ட வார்த்தைகள் வரும். நான் மிராசுதாரர்களை ஆதரிக்கவில்லை. பொதுவாக உச்ச வரம்பு கட்டி செய்கிற சீர்திருத்தங்கள் நகர்ப்புறத்தில் உள்ள கோடீஸ்வரர்கள், ஆலை முதலாளிக்கு வருவதில்லை. நகர்ப்புற சொத்துக்களுக்கு வரவில்லையே என்று தான் குறிப்பிட்டேன், மிராசுதார்கள் என்றும் அப்படியே அங்கே இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை.

*மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று வேளாண்மைத் துறை மானிய கோரிக்கையின் மீதான பால் வழங்குதல் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் ஏறத்தாழ பத்தொன்பது மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டு பல்வேறு வகையான கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதிகமாக சொல்லப்பட்ட கருத்துக்கள் எல்லாம் விவசாயிகளின் விளைபொருள்களுக்கு அதிகமான விலை கொடுக்க வேண்டுமென்றும், பூச்சி மருந்துகள், உரங்கள் போன்ற இடு பொருள்கள் கொடுக்க வேண்டுமென்ற, கருத்தினை இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

[திரு. ப. குழந்தைவேலு] [1977 ஆகஸ்ட் 10

இங்கே பணிவன்புடன் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சொல்லிக் கொள்ளவதெல்லாம் மகா கவி பாரதியின் வாக்குப்படி,

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
— வீணில்உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்'

என்கிற அடிப்படையில்தான் இந்த அரசு விவசாயத் துறையிலே தன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல், திருக்குறளில் சொல்லப்பட்டிருப்பது போல்,

'உழுவார் உலத்தார்க் காணியஃதாற்ருது,
எழுவாரை எல்லாம் பொறுத்து'

தேருக்கு அச்சாணி போன்றவர்களாக விவசாயிகள் விளங்குகிருர்கள் என்ற கருத்தின் அடிப்படையிலும், எந்தக் கருத்தை எடுத்துச் சொன்னுலும் விவசாயிகளை முன்பாக வைத்துத் தான் கருத்தினைச் சொல்லுகிருேம். ''வில்லேர் உழவர் பகை, கொளினும் கொள்ளற்க, சொல்லோர் உழவர் பகை'', என்ற குறள்படிக்கு போர் வீரனுக இருந்தாலும், புலவனுக இருந்தாலும், விவசாயிகளை முன் வைத்துத்தான் நம் கருத்துக்களைச் சொல்லுகிருேம்.

ஆகவே விவசாயம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த துறை என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. வருகிற 1977–78-ம் ஆண்டிலே அவர்களுக்கு நாங்கள் பல திட்டங்கள் அறிவித்திருக்கிருேம். இந்தத் திட்டங்களை அறிவித்து அதை செயல் படுத்துகிற முறையினை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள் என்பதனையும் இந்த அரசு உணர்ந்திருக்கிறது. குறிப்பாகச் சொல்லவேண்டுமானுல், எதிர்க்கட்சி வரிசையிலே மாண்புமிகு உறுப்பினர் தாழை கருணுநிதி அவர்கள், சொல்லும்பொழுது குத்தகை பாக்கிகளை தீர்க்க வேண்டுமென்றும், விவசாய தொழிலாளர்களுக்கு அதிகமாக மானிய உதவி கொடுக்க வேண்டுமென்று சொன்னுர்கள். அது மட்டுமல்ல. முத்தரப்பு மாநாடுகள் கூட்டுவதன் மூலமாக விவசாயிகளுக்கு உண்டான உதவிகளை எல்லாம் செய்ய வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிருர்கள். மாண்புமிகு உறுப்பினர் வெங்கிடு அவர்களும் நவீன நிலச்சுவான்தாரி முறையில் எப்படி விவசாயிகள் அல்லலுற்றியிருக்கிருர்கள் என்பதைப் பற்றியும், இடுபொருள், பூச்சி மருந்துகள் சரியான காலத்தில் கொடுக்க வேண்டுமென்ற கருத்தினை சொன்னுர்கள்.



1977 ஆகஸ்ட் 10] [திரு. ப. குழந்தைவேலு]

[பிற்பகல் 1-10]

மேலும் நியாயமான விலையில் பொருள்கள் கொடுக்கப்பட வேண்டும், பணக்காரர்கள் இந்தத் துறையில் அதிகம் ஆதிக்கம் செலுத்துகிருர்கள் என்றும் எடுத்துச் சொன்னுர்கள். இந்த நல்ல நேரத்தில் நான் பணிவன்புடன் எடுத்துத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பணக்காரர்களின் ஆதிக்கத்தை ஒழிப்பதற்காகத்தான் இந்த அரசு பல முனைகளில் விவசாயிகளை காப்பதற்காக திட்டங்களைப் போட்டிருக்கிறது என்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சிறு விவசாயிகளுக்கு நியாயமான விலையில் பூச்சிமருந்துகள் போன்றவை கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும் சொன்னுர்கள். குறிப்பாகச் சொல்லவேண்டும் என்று சொன்னுல் பொள்ளாச்சி ஒ.பி. சோமசுந்தரம் அவர்கள் இங்கே ஏறத்தாழ இரண்டரைக் கோடி ரூபாய் அளவிற்கு வீரியம் இழந்ததாக இருக்கக்கூடிய பூச்சி மருந்துகள் இருக்கிறது என்று சொன்னுர்கள்.

நேற்றைக்கு முன்தினம் என்று நினைக்கிறேன். ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிறபோது வீரியத்தை இழந்த மருந்துகள் எந்த இடத்திலும் விவசாயத் துறை சார்பாகக் கொடுப்பதில்லை; அப்படிக் கொடுப்பதாக இருந்தால் வீரியம் இருக்கிறதா இல்லையா என்று சோதித்து அறிந்தபின்னுல்தான் அவைகள் எல்லாம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது என்ற திட்டம் விவசாயத் துறை சார்பாக இருக்கிறது என்று குறிப்பிட்டேன். அப்படி ஏதாவது வீரியம் இழந்த மருந்து கொடுக்கப்படுகிறது என்பதைக் குறிப்பாக உணர்த்துவார்களானுல் அவைகளை உடனுக்குடன் பரிசீலனை செய்து வேண்டிய நடவடிக்கைகள் எடுப்போம், என்று ஆணித்தரமாக சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, திரு முருகேசன் அவர்கள் சொல்லிய கருத்துக ஒருபோக சாகுபடியை இருபோகச் சாகுபடியாகச் செய்ய வேண்டுமென்று சொன்னுர்கள். விவசாயத்துறை சார்பாக குறிப்பாக புன்செய் நிலங்கள், சம்மந்தப்பட்டமட்டில் தண்ணீர் பற்ருக்குறை ஏற்படும்போது, ஒருபோக சாகுபடியை இருபோக சாகுபடியாக்குவதற்கும், இரு போக சாகுபடியை மூன்றுபோக சாகுபடியாக்குவதற்கும் உண் டான திட்டங்களை விவசாயத் துறை அறிவித்திருக்கிறது.

திரு மாரிசாமி போன்றவர்கள் சொன்னுர்கள். தென்னங்கன்றுகள் கொடுப்பதில் பல ஊழல்கள் இருக்கின்றன என்று எடுத்துச் சொன்னுர்கள். அதுமட்டுமல்ல, நெட்டை, குட்டை ரகம், இவைகள் போன்றவற்றைக் கொடுப்பதில் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மூன்ரும் தர விதைகள் எல்லாம் கொடுக்கிருர்கள், டி அன் டி தென்னங்கன்றுகள் கொடுப்பதில் சிக்கல் இருப்பது மட்டுமல்ல, ஊழல் இருப்பதாகவும் எடுத்துச் சொன்னுர்கள்.

[திரு. ப. குழந்தைவேலு] [1977 ஆகஸ்ட் 10

அப்படி ஏதாவது ஊழல்கள் இருந்தாலும் அவைகளைப் போக்குவதற்குண்டான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதை இந்நேரத்தில் நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தென்னங்கன்றுகள் பயிரிடுவதில் இந்த அரசு மிகுந்த கவனம் எடுத்துக் கொண்டு வருகிற 1977–78-ம் ஆண்டில் அதிகமான தென்னங்கன்றுகள் நடுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கிறது எனபதை நான் இந்த நல்ல நேரத்தில் **பணிவன்புடன்** தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக வி.கே. சின்னசாமி போன்றவர்கள் எடுத்துச் செல்லும்போது கடவுள் என்னும் முதலாளி கண்டு எடுத்த தொழிலாளி விவசாயி என்பதைக் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே விவசாயியை கடவுளுக்குச் சமமாக மதிக்கிற அரசுதான் இந்த அரசு என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன். திரு. மாரிசாமி போன்றவர்கள் அக்கிரிகல்சரல் பாலிடெக்னிக் ஒன்று கட்டித்தர வேண்டும் என்று கேட்டார்கள். இந்த நேரத்தில் நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில் இருக்கக் கூடிய மூன்று விவசாயக் கல்லூரிகளிலிருந்து வெளிவரும் விவசாய பட்டதாரிகள் தமிழ்நாட்டின் தேவைக்கு அதிகமானவர்கள் இருக்கிறார்கள். இன்னும் ஒரு விவசாயக் கல்லூரி அல்லது விவசாய பாலிடெக்னிக் ஏற்படுத்துவது என்பது இந்த நேரத்தில் முடியாத காரியம் என்றும், தேவையற்றதாகவும் கருதப்படுகிறது.

அடுத்து, கருத்து தெரிவித்த அருமை நண்பர் டி.பி.எம். பெரியசாமி அவர்கள் பயிர் பாதுகாப்பிற்கு நாம் முதல் இடம் கொடுக்க வேண்டும் என்றும், பூச்சிமருந்துகள் தயாரிப்பதில் தனியார் நிறுவனம் பூச்சி மருந்துகள் தயாரிப்பதைவிட அவை தேசிய அடிப்படையில் அமைந்த ஸ்தாபனங்களாக இருக்கவேண்டும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லிய கருத்துக்கள் எல்லாம் பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து, இங்கே கருத்து தெரிவித்த திரு. மார்க்கபந்து அவர்கள் இன்ஷூரன்ஸ் திட்டத்தை அதாவது பயிர்ப்பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கனவே இதுபற்றி முதலமைச்சர் அவர்களும் இந்த பயிர்பாதுகாப்புத் திட்டத்தைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். மேலும் ஆளுநர் உரையிலும் இதுபற்றி அதிகமாக பேசப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை செயலாக்குவதற்கு மத்திய அரசுடன் ஆலோசித்து, தான்டேகர் போன்ற பொருளாதார நிபுணர்களின் யோசனையின் பேரில் இந்தத் திட்டம் அமலுக்கு கொண்டு வரப்படும் என்பதை இந்த நல்ல நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.



1977 ஆகஸ்ட் 10] [திரு. பா. குழந்தைவேலு]

மேலும் எல்லா கிராமங்களிலும் கடன் வழங்கும் திட்டங்களை கொண்டு வருவதற்கு திட்டமிட வேண்டும் என்று திரு. மார்க்கபந்து அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையும் அரசு யோசித்து செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்துப் பேசிய அருமை நண்பர் அழகிரிசாமி அவர்கள், பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டம் மாநில அளவில் இருந்தால் மட்டும் போதாது, வட்டார அளவில் இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதையும் அரசு பரிசீலிக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் காய்கறி உணவுப் பொருட்களுக்கும் நியாயமான விலை கிடைக்கவேண்டும் என்பதையும் சொல்லியிருக்கிறார்கள். மேலும் அவர்கள் குறிப்பாக சொல்லுவது, தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவு நீர் விவசாயத்தை கெடுத்து விடுகிறது. மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலை, இந்தியா சிமின்ட்ஸ், ஸன் பேப்பர் மில்ஸ், போன்ற தொழிற்சாலைகளிலிருந்து கழிவுநீர் சாகுபடி நிலங்களில் சேர்ந்துவிடாதபடி தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அரசு யோசித்து பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பேசிய, திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் நெல்லுக்கு ஏற்படக்கூடிய புகையான் நோயை தீர்ப்பதற்கு உழவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இதற்கு பி. எச். ஸி. மருந்து எந்த அளவுக்கு உபயோகிக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. சரியான அளவில் இதை உபயோகித்தால் இந்த நோயை கட்டுப்படுத்த முடியும் என்று விவசாயத் துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள்.

மேலும், அடுத்து பேசிய திரு. எஸ். என். பழனிசாமி அவர்களும், திரு. பண்ணை சேதுராமன் அவர்களும், வாழைக்கு ஏற்படக்கூடிய முடிக்குத்து (பஞ்சடாப்) நோயை போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். மதுரை மாவட்டத்தில் இந்த நோய் அதிகமாக இருப்பதாகச் சொன்னார்கள். இந்த நோயை போக்குவதற்கு விவசாயத்துறை பல ஆராய்ச்சிகளை செய்து பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக கருத்து தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் ஒரு கருத்தினை எடுத்துச் சொன்னார்கள். 1975–76-ம் ஆண்டு நம்முடைய உற்பத்தி 58.67 லட்சம் டன்னாக இருந்தது. 1976–77-ம் ஆண்டில் 53 லட்சம் டன்

ளுகவும், 1977—78-ம் ஆண்டில் 62 லட்சம் டன்ளுகவும் சொல்லப்பட்டிருக்கிறது, இடையில் உற்பத்தி ஏன் குறைந்தது, இதில் ஏதோ தவறு இருப்பதாகவும், முரண்பாடு இருப்பதாகவும் தெரிவித்தார்கள். 1976—77-ம் ஆண்டில் தென்மேற்கு பருவக் காற்று இல்லாமல் இருந்தது, அத்துடன் எதிர்பார்த்த மழை சரியான நேரத்தில் பெய்யவில்லை. இதன் காரணமாக ஏறக்குறைய 7 லட்சம் ஏக்கராக்களில் நெல் பயிர் செய்ய முடியவில்லை. 1977—78-ம் ஆண்டில் இயல்பான முறையில் பருவக் காற்று, பாசன வசதி இவைகள் எல்லாம் சரியாக இருக்கும் என்ற அடிப்படையில் நமது உற்பத்தி 62 லட்சம் டன் இருக்கும், அந்த அளவுக்கு உற்பத்தியை செய்வோம் என்கின்ற கணக்கை எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

(பிற்பகல் 1–20.)

ஆகவே, இந்தக் கணக்குகளில் எந்தவிதமான முரண்பாடோ தவறுதலோ இல்லையென்பதை எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மேலும், விவசாயிகளுடைய கடன்களைக் குறைக்க திட்டங்கள் தீட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அதை இந்த அரசு கருத்தில் வைத்து ஆவன செய்யும் என்பதை இந்த நல்ல நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பால்வழங்கு திட்டத்தைப் பற்றி அருமை நண்பர் அழகிரிசாமி அவர்களும் மற்ற நண்பர்களும் பேசும்போது பாலின் விலையைக் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்த நேரத்தில் ஒரு மகிழ்ச்சியான, இனிப்பான செய்தியைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏற்கெனவே நண்பர்கள் எல்லாம் பால் சாப்பிட்டு வந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். பாலுடன் பால்கோவாவும் சேர்த்துச் சாப்பிட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். பால்வழங்கு திட்டத்தின் சார்பாக நாம் கொடுக்கின்ற பாலின் விலையைப் பார்க்கும்போது மற்ற மாநிலங்களைக் காட்டிலும் குறைவான விலையில் கொடுக்கிறோம் என்பதற்கு புள்ளி விவரங்களைச் சொன்னால் உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்.

பெங்களூரில் ஒரு லிட்டர் பால்விலை 3·6 சதவீகிதம் கொழுப்புச் சத்துள்ளது விலை 2 ரூபாய்; ஹைதராபாத்தில் 3 சதவிகிதம் கொழுப்புச் சத்துள்ள பால் ஒரு லிட்டர் விலை ரூ. 2·10 காசு; பம்பாயில் 5 சதவிகிதம் கொழுப்புச் சத்துள்ள பால் விலை ரூ. 2·60 காசு; நாம் இங்கே இப்பொழுது கொடுக்கக்கூடிய பால் 4·5 சதவிகிதம் கொழுப்புச் சத்துள்ள ஒரு லிட்டருக்கு இரண்டு ரூபாய்க்கும் குறைவான விலையில் கொடுக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்





கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே வாங்குகிற பாலுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிற நேரத்தில் அதை விற்கும்போது விலை அதிகமாவதால் வாங்கும் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பால்வளர்ச்சித் துறை சார்பாக பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். 1977-78ஆம் ஆண்டு திட்ட நிதி ஒதுக்கத்தின் கீழ் குளிர் பதன வசதி தேவையில்லாமல், பாலை நீண்ட காலத்திற்கு தரமாக வைத்திருக்கும் பொருட்டு, பாலைப் பதம் செய்யும் நவீன இயந்திரம் ஒன்றை நிறுவத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். இந்த இயந்திரம் 10,000 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்டதாக இருக்கும். தற்போது திருநெல்வேலியில் பாலைப் பதம் செய்யும் இயந்திரம் ஏதும் இல்லாததால் இந்த இயந்திரத்தை அங்கு நிறுவக் கருதப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட கொள்முதல் குழுவுக்கு கூடுதலாக, உற்பத்தியாளர் சங்கங்களை அமைப்பதற்காக மேலும் இரண்டு மாவட்டங்களில் கொள்முதல் குழுக்களை அமைக்க கருதப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி, மற்றும் இரு மாவட்டங்களில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1977-78 ஆம் ஆண்டில் 3 நடமாடும் கால்நடை பிரிவுகள் தொடங்கப்படும்.

தோராயமாக இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் 4,000 லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்ட குளிர் பதன நிலையம் ஒன்று திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரியில் அமைக்கப்படும்.

3·5 கோடி ரூபாய் பெறுமானமான பால் தொழிற்சாலை ஒன்று கோவை ஈரோட்டில் நிறுவப்பட இருக்கிறது. அந்தத் திட்டம் புதிதாகப் போடப்பட்ட திட்டம் என்று பல உறுப்பினர்கள் சொன்னார்கள். அது புதிதாகப் போடப்பட்ட திட்டமல்ல, ஏற்கனவே முடிவான அந்தத் திட்டத்திற்கு 1977–78-ல் ஆக்கபூர்வமான நடவடிக்கையைக் கொண்டு வர இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சேலத்திலும் மற்றும் உள்ள பகுதிகளிலும் பால் நிறுவனங்களை நிறுவ வேண்டுமென்று பல நண்பர்கள் சொன்னார்கள். அவற்றைப் பற்றியெல்லாம் அரசு யோசித்து பரிசீலிக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உறுப்பினர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அரசுக்கு அந்தக் கருத்துக்களைச் சொல்லுவதன் மூலமாக விவசாயத் துறையில் பல புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டவும், அதே நேரத்தில் அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உண்டான வழிவகைகளையும் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் நாங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கிறோம். குறிப்பேடுகளில் இருந்து தெரிந்து கொள்ள இருக்கிறோம். அப்படி நீங்கள் சொல்லிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நீங்கள் எல்லாம் பேருதவியாக இருக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக் கொண்டு, வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளவர்கள் அவற்றை வாபஸ் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளுக்கு நாங்கள் கேட்டுள்ள நிதியை ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இதுகாரும் பேச அனுமதியளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் **நன்றி கூறி விடைபெறுகிறேன்.**

*புலவர் கா. கோவிந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே' மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடையளிக்கின்ற நேரத்திலே பால் விலை அதிகமாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், அவர்களுக்கு இனிப்பாக ஒரு செய்தியை கூறுகிறேன் என்று சொன்ன நேரத்தில் அப்போது இந்த மன்றத்திலே இருந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம்—இரண்டு விதமாக இருக்கிறார்கள், ஒன்று பால் உண்ணுகிறவர்களும் இருக்கிறார்கள், பால் உற்பத்தி பண்ணுகிறவர்களும் இருக்கிறார்கள்—பால் வாங்கக்கூடிய விலையைக் கூட்டி, அதை விற்கிற விலையைக் குறைப்பார்கள் என்ற கருத்துப்பட அமைச்சர் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள் மற்ற மாநிலங்களிலே உள்ள விலைகளை ஒப்பிட்டுக் காட்டி சொல்லி முடித்துவிட்டார்கள். இது இனிப்பான செய்தியாகாது, ஆக்வே வாங்குகிற போது விலையைக் கூட்டி வாங்கி, விற்கிறபோது விலையைக் குறைத்து விற்கிற இனிப்பான திட்டம் ஏதாவது இருக்கிறதா? அப்படிப்பட்ட மகிழ்ச்சியான செய்தி, இனிப்பான செய்தியைத் தருவரார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, இதே சட்டமன்றத்திலே வேளாண்மைத் துறை மானியத்தின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் பேசுகின்ற நேரத்திலே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள், அது நடைமுறைப்படுத்தப்படுமா என்று கேட்க விரும்புகிறேன். அவர்கள் குறிப்பிட்ட கருத்து, ரைஸ்



மில்களை தேசியமயமாக்க வேண்டுமென்று சொன்னார்கள், ரைஸ்மில்கள் என்றால் கிராமங்களிலே கூலிக்காரர்கள் வைத்திருக்கிற ஒன்றிரண்டு ரைஸ்மில்களைச் சொல்லவில்லை, கள்ள மார்க்கட்காரர்களிடம் இருக்கிற......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பாலிஸி மேட்டர், உறுப்பினர்கள் கருத்துக்கள் சொன்னாலும் எல்லாவற்றிற்கும் அமைச்சர் பதில் சொல்லவேண்டுமென்று நிர்ப்பந்தம் இல்லை. அவர்கள் பதில் சொன்னாலும் சொல்லலாம், சொல்லாமலும் இருக்கலாம்; அது பாலிஸி மேட்டர்.

திரு. ஏ. ரகுமான்கான்: அப்படிப்பட்ட கருத்து உண்டா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம், சொல்லாமல் இருக்கலாம், நான் நிர்ப்பந்திக் முடியாது.

திரு. ஏ. ரகுமான் கான்: It is open to the Hon. Minister to accept or to refuse.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த உறுப்பினர் அந்தக் கருத்தைச் சொன்னாரோ அவர்தான் அதைக் கேட்கவேண்டும், நீங்கள் கேட்கக்கூடாது. அமைச்சர் பதில் சொல்லாமல் கூட இருக்கலாம். அவர் பேசினார் என்றால் அவர் கேட்கட்டும், அந்த உறுப்பினருக்கு உள்ள அக்கறை அது.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது நம் மாநிலத்திலே வழங்கப்படுகிற பாலிலே 4 சதவிகிதம் கொழுப்புச் சத்து இருப்பதாகச் சொன்னார்கள். எவ்வளவு சதவீதம் கொழுப்புச் சத்து இருக்கிறது என்பதை அந்த பாட்டில்களின் மேல் எழுதி ஒட்டப்படுமா? ஏனென்றால் கொழுப்புச் சத்து அதிகமாக இருந்தால் அதைச் சாப்பிடுகிற போது கொலஸ்டல் வரும், அப்படி வராமல் இருக்கக்கூடிய முறையில் ஒவ்வொரு பாட்டிலின் மீதும் எவ்வளவு சதவீதம் கொழுப்பு சத்து இருக்கிறது என்று ஒட்டுவார்களா?

திரு. ஏ. ரகுமான்கான்: Not regarding this matter; But regarding previous matter, I am entitled to get answer from the Hon. Minister. It is open to him either to refuse or to accept.

[1977 ஆகஸ்ட் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் பேசிய பேச்சில் குறிப்பிட்டதுபற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை என்றால் நீங்கள் சந்தேகத்தைக் கேட்கலாம். வேறு உறுப்பினர் பேசியதை வைத்து நீங்கள் எழுந்து கேட்பது சரியல்ல, அது முறையல்ல. உறுப்பினர்கள் கேட்பதற்கு அமைச்சர்கள் பதில் சொல்லலாம், சொல்லாமலும் இருக்கலாம், நேரம் இல்லாத காரணத்தாலே. நான் நிர்ப்பந்திக்க முடியாது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : பூச்சிக்கொல்லி மருந்துகள் வீரியமுள்ளதாக வழங்குவது என்ற அம்சத்தில் அரசு சரியான முறையிலே கவனம் செலுத்துமா? சென்ற ஆண்டு கோவை தாலூகாவில் பஞ்சாயத்து யூனியன்களிலே வழங்கப்பட்ட பூச்சி மருந்துகளும் சரி, துடியலூர் கூட்டுறவு நிலவள வங்கியின் மூலமாக வழங்கப்பட்ட மருந்துகளும் சரி, அந்த மருந்துகளை விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய நேரத்திலே, அந்த மருந்துகளிலே எந்தவித சக்தியும் இல்லாமல் போய்விடுகிறது. கோவை மாவட்டத்திலே இதனால் பருத்தி விளைவும் பாதிக்கப்பட்டது. ஏக்கருக்கு 8 பொதி, 10 பொதி என்று விளைந்தது இதன் காரணமாகக் குறைந்துதான் விளைந்தது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனைப்படி இனிமேல் இம்மாதிரியான குறைகள் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கொழுப்புச் சத்தை அதிகமாகச் சாப்பிட்டால் கொலஸ்டல் ஏற்பட்டுவிடுமே ஆகவே அதை எழுதி ஓட்ட வேண்டும் என்று சொன்னார்கள். அந்த யோசனையையும் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1.30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் கெ. சொக்கலிங்கம், ரா. கிருஷ்ணன், செ. சிவசாமி, ரா. மார்க்கபந்து ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு. மு. ஆறுமுகம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.



7 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள ள்வி—

" நிதிக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் ற தலைப்பின்கீழ் ரூ. 1,02,15,000-க்கு மேற்படாத தொகை சுக்கு வழங்கப்பெற வேண்டும். "

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, றவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திருவாளர்கள் பி. எஸ். திருவேங்கிடம், ரா. வெங்கிடுசாமி கிற வெங்கிடு, எ. சுவாமிதாஸ், பொ. உத்திராபதி, ரா. க்கபந்து ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவை அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள ரவி—

" நிதிக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப் கீழ் ரூ. 34,68,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு ங்கப்பெற வேண்டும். "

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, றவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திருவாளர்கள் என். கிட்டப்பா, எ. சுவாமிதாஸ் ஆகியவர் டைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் ம்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள வி—

" நிதிக் கோரிக்கை எண். 49—வேளாண்மை குறித்த நனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,34,47,000-க்கு படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். "

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, வேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

## 6. அறிவிப்பு.

### பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (10—8—1977) நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மானியக் கோரிக்கைகளின் விவாத நாட்களில் கீழ்க்கண்ட மாற்றங்கள் தீர்மானிக்கப் பட்டன:—

| | | |
|---|---|---|
| 12—8—1977 | 21.—மீனளம். | |
| | 23.—கூட்டுறவு. | |
| 17—8—1977 | 22.—கால்நடை வளர்ப்பு.<br>30.—சமூக நலன்கள். | —1½ மணி நேரம். |
| | 26.—கைத்தறியும் துணித் தொழிலும்.<br>27.—கதர். | —1½ மணி நேரம். |
| 22—8—1977 | 3.—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம். | |
| | 39.—சாலைகளும், பாலங்களும். | |
| | 40.—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து. | |
| | 53.—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. | |
| | 54.—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | |
| 24—8—1977 | 8.—தேர்தல்கள். | |
| | 9.—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். | |
| | 11.—மாவட்ட நிர்வாகம். | |
| | 12.—1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு இந்து-சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம். | |



நாளை (11—8—1977) காலை மானியக் கோரிக்கை எண். 29. தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் மானியக் கோரிக்கை எண். 33, வீட்டுவசதி ஆகிய மானியக் கோரிக்கைகளின் விவாதம் முடிந்த பிறகு, மானியக் கோரிக்கை எண். 34. நகர்ப் பகுதி வளர்ச்சி மானியக் கோரிக்கை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

காலையில் நேரம் போதுமான அளவு இல்லாவிட்டால் நாளை மாலை மீண்டும் 3 மணி அளவில் அவை கூடி விவாதத்தைத் தொடரும். மற்ற மானியக் கோரிக்கைகள் பொறுத்தவரை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தேதிகளில் அவைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

[பிற்பகல் 1-36]

பின்னர் பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### *A. Statutory rules and orders.*

37. The Sixth Annual Report of the Tamil Nadu Agricultural University for the year 1976–77. (Laid on the Table of the House unde ection 43 (3) of the Tamil Nadu Agricultural University Act, 197 amil Nadu Act 8 of 1971.)

### *B. Reports, Notifications and other papers.*

*Nil.*

---

* Cut Motions circulated separately.

[1977 ஆகஸ்ட் 10

இணைப்பு I.

[218-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## கோரிக்கை எண். 10. பால் வழங்குத் திட்டங்கள்.

### கொள்கை விளக்கம்.

1. இயற்கை அளித்துள்ள முழுமையான சிறந்த உணவாகப் பால் கருதப்படுகின்றது. மனித உடல் நலமுடனும், வளமுடனும் இருப்பதற்குத் தேவையான அநேகமாக எல்லா வகைச் சத்துப் பொருள்களும் இதன்கண் உள்ளது. உழவர்கள் பயிர்த் தொழிலை முக்கியமாகக் கொண்டிருப்பினும், பாற் பண்ணை அவர்களது துணைத் தொழிலாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் கறவை மாடுகள் ஒவ்வொன்றும் சராசரி கொடுக்கக்கூடிய பால் அளவும், நபர் வாரியாக நுகரும் பால் அளவும் உயர்ந்த தரத்தை அடையவில்லை. ஒரு மனிதனுக்குரிய சமனிட்டு உணவுக்கு நாளொன்றுக்கு 300 கிராம் பால் தேவைப் படுகிறது. அனைத்திந்திய அடிப்படையில் நபர் வாரியாகக் கிடைக்கும் சராசரி பால் அளவு 130 கிராம். ஆனால், கால் நடை வளர்ப்பு பற்றிய செயற்குழு மதிப்பீட்டின்படி, தமிழ் நாட்டில் நபர் வாரியாகக் கிடைக்கும் பால் அளவு 63 கிராம் மட்டுமே ஆகும். ஆகவே குடியானவர்களுக்கு உகந்த, தனித்துச் செயல்படக் கூடிய ஒரு தொழிலாக பாற் பண்ணையை உருவாக்குவதற்காகவும் மக்களின் உணவில் சத்துக் குறைவை ஈடு செய்வதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2. மாதவரத்தில் உள்ள கால்நடைக் குடியிருப்புக்கும், பாற் பண்ணைக்கும், பால் வளத்துறை பொறுப்பேற்றுள்ளது. இம் மாநிலத்தில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஏனைய பாற் பண்ணை வளர்ச்சி நடவடிக்கைகளையும் இத்துறை கவனித்து வருகிறது. "பால் பெருக்குத் திட்டத்தின் கீழ்" இம்மாவட்டங்கள் அடங்கா. செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், தருமபுரி, நீலகிரி, மதுரை ஏனைய 8 மாவட்டங்கள் "பால் பெருக்குத் திட்டத்தின்" கீழ் வருகின்றன.

இம் மாநிலத்தில் உள்ள கூட்டுறவுப் பால் வழங்கு சங்கங்கள்/ஒன்றியங்கள அனைத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடும் பொறுப்பும் இத்துறைக்கு உள்ளது.

3. உலக உணவு நிறுவனத்தின் 618-ம் எண் திட்டம் "பால் பெருக்குத் திட்டம்" என அழைக்கப்படுகிறது. இத் திட்டப் பால் உற்பத்திச் சேவையைச் சிக்கனப் படுத்திச் சீராக்கவும் கிராமங்களில் கிடைக்கும் பாலை வாங்கிப் பதப்படுத்தி, பம்பாய்,



1977 ஆகஸ்ட் 10]

கல்கத்தா, டெல்லி, சென்னை போன்ற பெரிய நகரங்களில் விற்பனை செய்வதற்காகவும் வகுக்கப்பட்ட ஒரு பாற் பண்ணை வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டமாகும். பால் வழங்குதலைப் பரவலாக விரிவுபடுத்தி, மக்கள் வாங்கும் சக்திக்கேற்ற விலையில் அதனை விற்பனை செய்வதற்காக உலக உணவு நிறுவனத்தால் நன்கொடையாக வழங்கப்படும் ஆடை நீக்கிய பால் பொடியையும், வெண்ணெயையும் பயன்படுத்துவதுதான் இத் திட்டத்தின் நோக்கமாகும். உலக உணவு நிறுவனத்தின் உதவி, ஆடை நீக்கிய பால் பொடி வடிவிலும், வெண்ணெய் வடிவிலும் அமைகிறது. பால் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு நான்கு பெருநகர் பாற் பண்ணைகளில் இவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பொருட்களின் விலை மதிப்பு, பால் உற்பத்தி பெருக்கம், பாற் பண்ணைகள் நிறுவவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலே சொல்லிய பொருட்களைப் பயன்படுத்திப் பாலை வேண்டிய அளவுக்குத் தொடர்ந்து அளிப்பதற்கு ஏற்ப செய்முறைப் பதன வசதிகள் கூடுதலாக செய்து கொடுக்கப்பட்டு உள்ளன. இத் திட்டத்தின்கீழ் நிதி உதவி 70 சதவீதம் கடனாகவும், 30 சதவீதம் மானியமாகவும் கிடைக்கிறது. தமிழ் நாட்டுக்கு ரூ. 887 லட்சம் முதலில் ஒதுக்கப்பட்டது. இதில் ரூ. 475.86 லட்சம் இதுவரை கொடுக்கப்பட்டுள்ளது. 1976-77 ஆம் ஆண்டின் முடிவில் ரூ. 470.71 லட்சம் செலவிடப்பட்டது.

4. தமிழ் நாடு பால் வள நிறுவனம், பாலைக் கொள்முதல் செய்து, செய்முறைப் பதப்படுத்தி, சென்னை, மதுரை மாநகரங்களுக்கு விற்பனை செய்வதையும், பால் பெருக்குத் திட்டத்தைச் செயல்படுத்துவதையும் ஏற்றுள்ளது. இம்மாநிலத்தில் பால் உற்பத்தி அளவை உயர்த்துவதில், கிராமங்களில் பரவலாக அமைந்துள்ள பால் கூட்டுறவுகள் குறிப்பிடத் தக்க பணியினைச் செய்து வருகின்றன. பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் "ஆனந்த்" பாணியில் அமைக்கப்பட்ட புதிய வகை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இம்மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இது வரையில் 1,133 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச் சங்கங்களின் சிறப்பு அம்சங்களாவன:

(அ) முன்பு அமைக்கப்பட்டுவந்த சங்கங்களில் பாலின் அளவின் அடிப்படையில் மட்டும் பணம் செலுத்தப்பட்டு வந்தது. இதற்கு மாறாக, புதிய சங்கங்கள் அந்த இடத்திலேயே ஒவ்வொருவர் தரும் பாலில் கொழுப்புச் சத்து எவ்வளவு என்று முடிவு செய்து அதன் அடிப்படையில் பாலுக்குப் பணம் கொடுக்கப்படுகிறது.

(ஆ) சங்கங்கள், கடனை மையமாகக் கொண்டதல்ல.

(இ) இச்சங்கம் உற்பத்தியாளர் நலனை ஆதாரமாகக் கொண்டதாகும்.

(ஈ) உள்ளூர் விற்பனையில் இது ஈடுபடுவதில்லை.

(உ) பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, கால்நடை மருத்துவப் பணி, செயற்கை முறைக் கருத்தரிப்பு, கால் நடைச் சமனீட்டுத் தீவனம் முதலிய அடிப்படை வசதிகள் உறுப்பினர்கள் இருப்பிடங்களிலேயே செய்து கொடுக்கப்படுகின்றன.

(ஊ) இத்தகைய உற்பத்தியாளர்கள சங்கச் செயலாளர்கள் செயற்கைக் கருத்தரிப்புப் பணி செய்யும் முறையில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

(எ) உற்பத்தியாளர் சங்கங்கள் அமைப்பதற்கும், பாரம்பரியமாக உள்ள சங்கங்களை "ஆனந்த்" பாணியில் மாற்றி அமைப்பதற்கும் முன் ஆய்வுப் பணியும், சிக்கன முறையில் பால் சேகரிப்பு மார்க்கங்களை நிர்ணயிப்பதும் அவசியமாகும்.

5. பால் உற்பத்தி, பாற் பண்ணை வளர்ச்சித் துறை ஆணையாளர், தமிழ் நாடு பால் வள நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக இருப்பதோடு, பால்வளத்துறை, கால்நடை வளர்ப்புத் துறைகளின் தலைவராகவும் இருக்கிறார். இவர் பால் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாவார். பால் வளத்துறையில், இவருக்கு உதவியாக, பால் கூட்டுறவுகள் தொடர்பாக சட்டபூர்வமான, ஒழுங்குமுறை சார்ந்த மேற்பார்வை அலுவல்களைக் கவனித்துக் கொள்வதற்கு (கூட்டுறவு) பால் உற்பத்தித் துணை ஆணையாளர் (பாற்பண்ணை), துணைப் பதிவாளர் 7 பேர், கூட்டுறவுப் பணியாளர்கள் ஆகியோர் உள்ளனர். தொழில் நுட்பப் பிரிவில், இவருக்கு உதவியாக, மாதவரத்தில் உள்ள அரசு பால்பண்ணை, கால்நடைக் குடியிருப்பு இவற்றைக் கவனித்துக் கொள்ளவும், இம்மாநிலத்தில் திட்டங்களைச் செயல்படுத்தவும் (பாற் பண்ணை) பால் உற்பத்தித்துறைத் துணை ஆணையாளர் ஒருவர் இருக்கிறார்.

6. தமிழ் நாடு பால்வள நிறுவனம், கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு பொறுப்புகள் வரையறுக்கப்பெற்றுள்ள பொதுத் துறை நிறுவனமாகும். இந்நிறுவனம் தமிழ் நாடு அரசுக்கே சொந்தமானது. இந்நிறுவனம், 1972 மே திங்களில் சட்டப்படி ஒருங்கிணைக்கப்பட்டு, பால் வளத்துறையின் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு, 1972 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் நாளன்று செயல்படத் தொடங்கியது. "பால் பெருக்குத் திட்டத்தின் கீழ்", செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை ஆகிய மாவட்டங்களில் பாற் பண்ணை வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் குறைந்த அளவிலும் இந்நிறுவனம் பணி புரிந்து



வருகிறது. பாற் பண்ணை வளர்ச்சி, கால்நடை அபிவிருத்தி, தீவன உற்பத்தி, பால், பால் பொருட்கள் விற்பனை இவற்றில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

7. தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் இயக்குநர் குழுவில் கீழே குறிப்பிடப்பட்டுளளவர்களுடன் செயல்படுகின்றது :—

(1) தமிழக அரசு தலைமைச் செயலாளர் அதன் தலைவர்.

(2) அரசு வேளாண்மைத் துறைச் செயலர்.

(3) உணவுத் துறைச் செயலர்.

(4) கால்நடை மருத்துவக் கல்வி இயக்குநர்.

(5) அரசு (நிதித்துறை) துணைச் செயலாளர்.

(6) முழுநேர நிர்வாக இயக்குநர்.

8. நிர்வாக இயக்குநரின் கீழ், இரு பொது நிர்வாகிகள் உள்ளனர். ஒருவர், சென்னையில் உளள மாநகர் பால் திட்டத்திற்குப் பொறுப்பேற்றுள்ளார். மற்றொருவர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலியைச் சேர்ந்த தென் மாவட்டங்களில் நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்காக, மதுரையில் பொறுப்பு வகிக்கிறார். (பால் உற்பத்தி) நிர்வாகி ஒருவர், சென்னை, வேலூர், ஈரோடு, உதகை ஆகிய நான்கு மண்டலங்கள் அடங்கிய சென்னை பால் உற்பத்தி நிலையத்திற்குப் பொறுப்பு உடையவர் ஆவார். பால்வளத் துறையிலும், தமிழ்நாடு பால்வள நிறுவனத்திலும் உள்ள இந்த அமைப்புடன், பால் வழங்குதல் தொடர்பான பணி நடவடிக்கைகள் யாவும், அமைப்புப் பகுதிகளிலும், வளர்ச்சி, விற்பனைப் பகுதிகளிலும் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

9. பால்வள நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 137.96 இலட்சமாகும். தமிழ்நாடு அரசிடமிருந்து பால்வள நிறுவனம் எடுத்துக் கொண்ட சொத்துக்களின் மதிப்பு ரூ. 241·00 இலட்சமாகும்.

1975-76 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் மொத்த வியாபாரத் தொகை ரூ. 13 கோடியாக இருந்தது. இது 1976-77ல் ரூ. 22 கோடியாக உயர்ந்தது. 1977-78ல் ரூ. 25 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கால்நடைக் குடியிருப்பும், பாற்பண்ணையும் :**

10. மாதவரத்தில் உள்ள கால்நடைக் குடியிருப்பு 816.85 ஏக்கர் பரப்பளவு உடையது. இலவசக் கால்நடை மருத்துவம், இனவிருத்தி வசதிகள், கால்நடைத் தீவனம் வழங்குதல், பால்

[1977 ஆகஸ்ட் 10

வற்றிய மாடுகளை மீட்டுப் பராமரித்தல், உரிமக்காரர்களுக்கும் அவர்களுக்குச் சொந்தமான கால்நடைகளுக்கும் இடவசதி அளிப்பதுடன், அவர்களுக்கு நிதி உதவி அளித்தல் ஆகிய வசதிகள் இவ்விடத்தில் செய்து கொடுக்கப்படுகின்றன. இந்தக் குடியிருப்பில் தற்போது 22 உரிமக்காரர்கள் உள்ளனர். இவர்கள் பாற்பண்ணைக்கு நாள்தோறும் சுமார் 600 லிட்டர் பால் வழங்குகின்றனர். மாதவரத்தில் உள்ள அரசு பாற்பண்ணை இத்துறையின் பொறுப்பில் செயல்படுகிறது.

இம்மாநிலத்தில் கலப்பினத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, இப் பண்ணையில் அயல் நாட்டு இன உயர்ரக காளைகள் பராமரிக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றியங்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்படுகின்றன. 1976-77 ஆம் ஆண்டில், இப்பண்ணை, தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் கருத்தரிப்பு நிலையங்களுக்கு 11 முர்ரா இனக் காளைகளையும், கால்நடை வளர்ப்புத்துறைக்கு 5 ஜெர்ஸி இனக்காளைகளையும் வழங்கியது. இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுகள், ஏனைய நிறுவனங்களுக்கும் முன்னேற்ற நிலையிலுள்ள உழவர்களுக்கும் இப்பண்ணையிலிருந்து 126 கிடேரி கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களுக்கு 6 கலப்பினக் கால்நடைகளும் வழங்கப்பட்டுள்ளன. தற்போது இப்பண்ணையில் சுமார் 250 இளங்கன்றுகள் உட்பட 600க்கு மேற்பட்ட எண்ணிக்கை கொண்ட கால்நடைகள் உள்ளன. இப்பண்ணையில் தோராயமாக 5 சதவீதம் மட்டுமே எருமைகள் உள்ளன. அரசு பாற்பண்ணையின் சராசரி உற்பத்தி நாளொன்றுக்கு 1,000 லிட்டராகும். இந்தப் பால் மாதவரம் பாற்பண்ணைக்கு வழங்கப்படுகிறது. கலப்பினக் கால்நடைகளின் இரத்தத்திலுள்ள செந்நிறக்குருதியணுவில் இருப்பளவைக் கண்டறியும் பொருட்டு, 1976—77ஆம் ஆண்டின் இறுதியில் அரசு பாற்பண்ணையின் ஒரு பகுதியாக ஆய்வுக்கூடம் ஒன்று நிறுவப்பட்டது. பசுக்களில் கருத்தரிப்பதில் ஏற்படும் கோளாறுகளை ஆய்வதற்கு இது உதவும்.

## கூட்டுறவுகள்:

11. கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள், ஒன்றியங்களின் நிர்வாகக் கட்டுப்பாடு 1–8–1965 ஆம் நாள் முதல் பால்வளத் துறைக்கு மாற்றப்பட்டது. துணைப்பதிவாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் ஏழு வட்டார அலுவலகங்கள் உள்ளன. அவை காஞ்சீபுரம், வேலூர், ஈரோடு, விருதுநகர், மதுரை, திருச்சிராப்பள்ளி, கடலூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக்



1977 ஆகஸ்ட் 10]

கொண்டு செயல்பட்டு வருகின்றன. வழக்கமான சங்கங்கள், 'ஆனந்த்' (திருத்த) முறை சங்கங்கள் ஆகிய இரு வகைக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை மாநில வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

### செயற்குழு

சங்கங்கள்.

| துணைப்பதிவாளர் (பாற்பண்ணை) வட்டம் | மாவட்டம் | திருத்த வகை | வழக்கமான சங்கங்கள். | செயல்படாத நிலையிலுள்ள சங்கங்கள். | கலைக்கப்பட்ட சங்கங்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| கடலூர் : | தென்னார்க்காடு. | 16 | 44 | 121 | 72 | 253 |
| வேலூர் : | வடார்க்காடு. | 89 | 208 | 101 | 28 | 426 |
| | தருமபுரி | 88 | 19 | 11 | 16 | 134 |
| ஈரோடு : | கோயம்புத்தூர். | 326 | 52 | 93 | 66 | 537 |
| | சேலம் | 175 | 39 | 90 | 40 | 344 |
| | நீலகிரி | 37 | 20 | 3 | 2 | 62 |
| காஞ்சீபுரம் : | செங்கல்பட்டு. | 75 | 128 | 177 | 295 | 675 |
| திருச்சி : | திருச்சி | [illegible] | 100 | 89 | [illegible] | [illegible] |
| | தஞ்சாவூர் | [illegible] | 86 | 72 | [illegible] | [illegible] |
| | புதுக்கோட்டை | [illegible] | 21 | [illegible] | 30 | 78 |

[1977 ஆகஸ்ட் 10

| துணைப்பதிவாளர் (பால்பண்ணை) வட்டம் | மாவட்டம் | திருத்த வகை | வழக்கமான சங்கங்கள். | செயல்படாத நிலையிலுள்ள சங்கங்கள். | கலைக்கப்பட்ட சங்கங்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| விருதுநகர் : | இராமநாத புரம். | 1 | 63 | 68 | 34 | 166 |
| | திருநெல்வேலி. | 76 | 89 | 57 | 48 | 270 |
| | கன்னியா குமரி. | .. | 45 | 1 | 9 | 55 |
| மதுரை : | மதுரை | 229 | 233 | 190 | 137 | 789 |
| | இராமநாத புரம் (கிழக்கு). | .. | 55 | 42 | 39 | 136 |
| | கோயம்புத்தூர் (பகுதி). | 21 | 1 | 4 | 2 | 28 |
| மொத்தம் .. | | 1,133 | 1,205 | 1,146 | 1,037 | 4,521 |

12. தற்போதுள்ள வழக்கமான தொடக்கச் சங்கங்கள் அனைத்தையும் திருத்த முறையில் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றி அமைக்கக் கருதப்பட்டுள்ளது. பால், பால் பொருள்கள் உற்பத்தி, கொள்முதல், பதப்படுத்தல், விற்பனை செய்தல் ஆகியவற்றை ஒருங்கிணைக்க இயலும் வகையில் அத்தகைய தொடக்கச் சங்கங்களை மாவட்ட அளவிலான ஒன்றியங்களாக மாற்றுவதே நீண்ட காலத் திட்டத்தின் நோக்கமாகும். ஈரோட்டில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் இரண்டு அமைக்கப்பட்டுள்ளன. அத்தகைய ஒருங்கிணைந்த பால் வளர்ச்சியின் நோக்கத்திற்காக ஏனைய மாவட்டங்களிலும் ஒன்றியங்களை அமைக்க அரசு பரிசீலனை செய்கிறது. ஈரோடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் கீழ் ஈரோட்டில் பால் வழங்கு பண்ணை ஒன்றை நிறுவ அரசு ஏற்பளித்துள்ளது.



1977 ஆகஸ்ட் 10]

13. 1976—77ஆம் ஆண்டில் 125 செயல்படாத நிலையிலுள்ள சங்கங்களைப் புதுப்பிக்கும் திட்டத்தின்கீழ் 89 சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 1977-78 ஆம் ஆண்டில் 130 செயல்படாத நிலையிலுள்ள சங்கங்களை மேற்கொள்ள கருதப்பட்டுள்ளது. 1976—77 ஆம் ஆண்டின் இறுதியில் 1,146 செயல்படாத நிலையிலுள்ள கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள் இருக்கின்றன.

14. 31—3—1977ஆம் நாள் நில்வரப்படி பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், ஒன்றியங்கள் ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் :

| | | |
|---|---|---|
| 1 | இம்மாநிலத்திலுள்ள செயல்படு பால் வழங்கு கூட்டுறவுகளின் எண்ணிக்கை | 2,338 |
| 2 | பால்வழங்கு கூட்டுறவுகளிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை. | 6,17,519 |
| 3 | செலுத்தப்பட்ட சங்கங்களின் பங்கு மூலதனம். | ரூ. 1,74,50,000 |

கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியங்கள் :

| | | |
|---|---|---|
| 4 | கூட்டுறவு பால்வழங்கு ஒன்றியங்கள் எண்ணிக்கை. | 2 |
| 5 | பால்வழங்கு ஒன்றியங்களிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை. | 14,916 |
| 6 | செலுத்தப்பட்ட ஒன்றியங்களின் பங்கு மூலதனம். | ரூ. 18,96600 |

உற்பத்தி விவரங்கள் :

15. (அ) நாள் ஒன்றுக்கு சாரசரி உற்பத்தி :

| | (இலட்சம் லிட்டர்கள்.) |
|---|---|
| சங்கங்கள் .. .. .. | 3·78 |
| ஒன்றியங்கள் .. .. .. | 0·55 |
| | 4·33 |

(ஆ) நாள் ஒன்றுக்கு சராசரி விற்பனை;
(அ) உள்ளூர் விற்பனை :

| | |
|---|---|
| சங்கங்கள் .. .. .. | 2·05 |
| ஒன்றியங்கள் .. .. | 0·28 |
| (ஆ) தமிழ்நாடு பாற்பண்ணை வள நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. | 2·00 |
| | 4·33 |

16. 1976–77 ஆம் ஆண்டில் ரூ. 3·60 இலட்சம் அளவில் 84 பால்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்கு மூலதன உதவி வழங்கப்பட்டுள்ளது. 1977–78 ஆம் ஆண்டில், மேலும் 40 கூட்டுறவுகள் பயன்பெறும் வகையில் ரூ. 2 இலட்சம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 95 கூட்டுறவு பால் வழங்குச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு தறவை மாடுகள் வாங்குவதற்காக 1976–77 ஆம் ஆண்டில், ரூ. 18 இலட்சம் அளவில் கடன் வழங்கப்பட்டது. இதன் மூலம் 1,700 உறுப்பினர்கள் பயன் பெற்றனர். பால் உற்பத்தி, கொள்முதல் ஆகியவற்றை அதிகரிக்கும் பொருட்டும், திருச்சி நகரத்திற்கு பால் வழங்கலை மேம்படுத்தும் பொருட்டும் கொள்முதல் குழு ஒன்றுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இக்குழுவில், கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர். பால்பண்ணை உதவியாளர், ஏனைய பணியாளர்கள் அடங்குவார்கள். அவர்கள் தற்போதுள்ள 40 சங்கங்களையும், 'திருத்த' முறையில் மாற்றி அமைத்து, பெரம்பலூர், அரியலூர், உடையார் பாளையம், துறையூர் வட்டங்களில் 60 புதிய சங்கங்களை அமைப்பார்கள். இந்த 100 சங்கங்களும் அமைக்கப்பட்ட



பின்னர், ஆறுமாத காலத்தில், திருச்சி ஸ்ரீரங்கம் ஒன்றியத்தின் தற்போதைய உற்பத்தித் திறன் 5,000 லிட்டரிலிருந்து 10,000 லிட்டராக உயரும். இந்த உற்பத்தித் திறன் அடுத்த ஆண்டில் 15,000 லிட்டராக மேலும் உயர்த்தப்படும்.

பயிற்சித் திட்டம் :

17. கிராமச் சங்கங்களில் கலப்பினத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொருட்டு, 'திருத்த' முறையில் தொடக்கச் சங்கங்களின் செயலாளர்களுக்கு செய்ற்கை முறை கருத்தரிப்பு, பண்ணை நிர்வாகம் ஆகியவற்றில் முனைப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அதன் மூலம் இந்த உறுப்பினர்கள் பயன் அடைவர். 1,133 உற்பத்தியாளர் சங்கங்களில் 571 சங்கங்களின் செயலாளர்களுக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2 முதல் 3 ஆண்டுகளில் எஞ்சியுள்ள சங்கங்களுக்கும் பயிற்சி அளிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நிர்வாகமும், தொழில் நுட்பத் தேவைகளும் கவனிக்கப்படவேண்டியதன் பொருட்டு, 'கூட்டுறவின்' தொடக்கச் சங்கச் செயலாளர்களுக்கு 'கூட்டுறவு' பயிற்சி அளிப்பதன் வாய்ப்பையும் அரசு ஆய்ந்து வருகிறது. வழக்கமான சங்கங்களைப் பொறுத்தவரையில் இதுவரை செயற்கை முறை கருத்தரிப்புப் பணிப் பயிற்சியாளர் 16 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. வழக்கமான சங்கங்களில் குறிப்பாக பால் பெருக்குத் திட்டம் செயலில் இல்லாத மாவட்டங்களில் செயற்கை முறைக் கருத்தரிப்புப்பணிப் பயிற்சியாளர்களுக்கு மேலும் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் பரிசீலனையில் உள்ளது.

18. 1977–78 ஆம் ஆண்டு திட்ட நிதி ஒதுக்கத்தின் கீழ்க்காணும் முக்கிய திட்டப் பணிகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது :—

(அ) மேலும் குளிர்ப்பதன வசதித் தேவையில்லாமல் பாலை நீண்ட காலத்திற்குத் தரமாக வைத்திருக்கும் பொருட்டு, பாலைப் பதம் செய்யும் நவீன இயந்திரம் ஒன்றை நிறுவுதல். இந்த இயந்திரம் 10,000 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்டதாக இருக்கும். தற்போது திருநெல்வேலியில் பாலைப் பதம் செய்யும் இயந்திரம் ஏதும் இல்லாததால் இந்த இயந்திரத்தை அங்கு நிறுவக் கருதப்பட்டுள்ளது.

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட கொள்முதல் குழுவுக்கு கூடுதலாக, உற்பத்தியாளர்கள் சங்கங்களை அமைப்பதற்காக மேலும் இரண்டு மாவட்டங்களில் கொள்முதல் குழுக்களை அமைக்கக் கருதப்படுகிறது.

[1977 ஆகஸ்ட் 10

(இ) திருச்சிராப்பள்ளி, மற்றும் இரு மாவட்டங்களில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, 1977–78ஆம் ஆண்டில் 3 நடமாடும் கால்நடை பிரிவுகள் தொடங்கப்படும்.

(ஈ) தோராயமாக இரண்டு இலட்சம் ரூபாய்ச் செலவில் 4,000 லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்ட குளிர்ப்பதன நிலையம் ஒன்று திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் அமைக்கப்படும்.

(1974–75 முதல் 1976–77 வரை)

1977–78ஆம் ஆண்டிற்கான அங்கீகாரம் பெற்ற நிதி ஒதுக்கீடு பற்றியவை விவரம் பின்வருமாறு :—

| | 1975–76 கணக்குகள். | 1976–77 கணக்குகள். | 1977–78 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகத்திற்கு நிதி உதவி .. | .. | 7·30 | .. |
| பால் கொள்முதல் திட்டம் | .. | .. | 2·97 |
| அரசு பால் பண்ணைக்குச் சாதனங்கள் வாங்குதலும், கட்டிடங்கள் கட்டுதலும் .. | .. | .. | 0·77 |
| கால்நடை மருத்துவ ஊர்திப் பிரிவு நிறுவுதல். | .. | .. | 2·20 |
| சென்னையிலுள்ள அரசு பாற் பண்ணையை விரிவுபடுத்தல் .. .. | 1·61 | 1·05 | 2·26 |
| கலப்பினக் கால்நடைகளின் இரத்தத்தில் உள்ள சிவப்பணு (ஹீமோகுளோபின்) குறித்த ஆராய்ச்சி .. .. | .. | .. | 0·12 |
| மதுரை பால் பண்ணையை விரிவுபடுத்தல் .. | 1·15 | .. | .. |
| பால்பண்ணைப் பணியாளர்களுக்குப் பயிற்சி .. | 0·16 | 0·05 | .. |
| தொழில் நுட்ப வசதித் திட்டம் ... ... | .. | .. | 0·02 |



1977 ஆகஸ்ட் 10]

| | 1975-76 கணக்குகள் | 1976-77 கணக்குகள் | 1977-78 வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| | [ரூபாய் இலட்சத்தில்]. | | |
| உலக உணவுத் திட்டம் | 0·03 | .. | .. |
| துறை அளவிலான குளிர வைக்கும் நிலையம் .. | 2·09 | 2·09 | 2·00 |
| பாலை முறைப்படிச் சூடாக்கிச் சுத்தம் செய்யும் நிலையம் தொடங்குதல் .. .. .. | .. | .. | 5·00 |
| மொத்தம் .. | 2·95 | 10·49 | 15·34 |

கூட்டுறவு :

| | | | |
|---|---|---|---|
| ால் வழங்கு சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு நிதி உதவியும் கால்நடைகள் வாங்குவதற்குக் கடனுதவியும் .. .. | 26·10 | 24·60 | 22·00 |
| ாகனங்கள் வாங்குவதற்கு கடன் .. | 2.90 | 3·00 | 2·00 |
| ால் வழங்கு சங்கங்களின் நிர்வாக, தொழில் நுட்பப் பணியாளர் வகையில் இச்சங்கங்களுக்கு உதவித் தொகை .. .. | 0·64 | 0·50 | 0·73 |
| வனப் பண்ணைகள் அமைப்பதுட்பட, அறிவியல் முறையில் கால்நடை வளர்ப்புக்காகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி .. | .. | 0·50 | .. |
| | 29·64 | 28·66 | 24·73 |
| ல் பண்ணை வளர்ச்சிக்கு மொத்தம் .. | 32·59 | 39·15 | 40·70 |

பால் விற்பனை :

19. மேலே கூறப்பட்ட விவரங்கள், திட்டப் பணிகளுக்கென்று ஒதுக்கப்பட்ட செலவாகும். 1977–78 ஆம் ஆண்டில், கோரிக்கை எண்கள் 10-ன் கீழும், 56-ன் கீழும், திட்டத்தின்கீழ் வராத பணிகளின் கணக்கில் ரூ. 95·36 இலட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பால் பண்ணைப் பராமரிப்பிற்கான செலவு ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பதால், திட்டத்தின்கீழ் வராத பணிகளின் செலவும் அதிகரிக்கின்றது. ஆகையால் 1977–78ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் மொத்தச் செலவு ரூ. 1,35·43 இலட்சமாகும். இத்தொகை, மலைப் பகுதி வளர்ச்சித் திட்டம், மேற்கு மலைப் பகுதி வளர்ச்சித் திட்டம், அரிசன நலத் திட்டம் ஆகிய சிறப்புத் திட்டங்களுக்கென்றே ஒதுக்கப்பட்டதாகும்.

20. பால் சேகரித்தலும், செய்முறைப் பதப்படுத்துதலும் :

தமிழ்நாடு பால் வள நிறுவனம், சராசரியாக ஒரு நாளைக்கு 2 இலட்சம் லிட்டர் பால் சேகரிக்கின்றது. 1976–77ஆம் ஆண்டில், அதிக அளவு பால் கிடைக்கும் காலங்களில், நாள் கொள்முதல் 2·60 இலட்சம் லிட்டராகும். குறைந்த அளவு பால் கிடைக்கும் காலங்களில், ஒரு நாளையக் கொள்முதல் 1·26 இலட்சமாகும். சென்னை, மதுரை பால் பண்ணைகள், 4·5 சதவீத கொழுப்பும், 8·5 சதவீதக் கொழுப்பற்ற திண்மைப் பொருளும் (S.N.F.) அடங்கிய தரப்படுத்தப்பட்ட பாலை விற்பனை செய்கிறது. சென்னை மாநகரத்தில் 3 சதவீதம் கொழுப்பும், 8·5 சதவீதக் கொழுப்பற்ற திண்மைப் பொருளும் அடங்கிய, 15,000 லிட்டர் கொழுப்புச் சத்து குறைக்கப்பட்ட பாலும் (Toned Milk) விற்பனையாகின்றது. குறைந்த அளவு பால் கிடைக்கும் காலங்களில், வெண்ணெய் மற்றும் பால்பொடி சேர்த்து பால் பதப்படுத்தப்படுகிறது. அதிக அளவு பால் கிடைக்கும் காலங்களில், குறைந்த அளவு ஆடை நீக்கப்பட்ட பால்பொடியே சேர்த்துப் பால் பதப்படுத்தப்படுகிறது. குளிர்காலம், மாடுகள் கன்று ஈனும் காலமாதலால், நவம்பர் முதல் மார்ச் வரையில் (அதிகப் பால் கிடைக்கும் காலம்) மற்ற மாதங்களை விட பால் உற்பத்தி பெரும்பாலும் இரு மடங்காக உள்ளது. பருவ கால ஏற்ற இறக்கங்கள் இருந்தபோதிலும், விற்பனை ஒரே சீராக இருக்க வேண்டியது அவசியமாகிறது. பால் குறைந்த அளவே கிடைக்கும் காலங்களில், பாலின் தேவையை நிறைவு செய்வதற்கும், பால் மிகுதியாகக் கிடைக்கும் காலங்களில் பாலின் கொழுப்புச் சத்தை தரமான நிலையில் அமைப்பதற்கும், ஆடை நீக்கப்பட்ட பால்பொடி, வெண்ணெய் ஆகியவை தேவைப்படுகின்றன. அதிக அளவு பால் கிடைக்கும்பொழுது, அது 'மதுரை பால் பவுடர் நிலையத்திற்கு' அனுப்பப்படுகின்றது; அங்கு, பாலை, ஆடை நீக்கப்பட்ட பால்பொடியாகவும், வெண்ணெய், நெய்யாகவும் மாற்றுவதற்கான வசதிகள் உள்ளன.





21. சென்னை மாநகரில், பால் விற்பனை, 1972–73ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 80,750 லிட்டராக இருந்தது; தற்போது 2,20,000 லிட்டராகக் குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்துள்ளது; இதனால் ஒரு இலட்சம் மக்கள் பயனடைகின்றனர். மதுரையில், இவ்விற்பனை, 1974–75ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 22,600 லிட்டராக இருந்தது. 1976–77ஆம் ஆண்டில் 42,600 லிட்டராக உயர்ந்துள்ளது. 1976–77ஆம் ஆண்டில், மதுரை பால் பவுடர் தயாரிப்பு நிலையம் 84 இலட்சம் லிட்டர் பாலை, 929 டன் பால் பவுடராகவும், 294 டன் வெண்ணெய், நெய்யாக மாற்றியுள்ளது. 1975–76, 1976–77 ஆம் ஆண்டுகளில் விற்பனை செய்யப்பட்ட, சுவையூட்டப்பட்ட பால், பாலிலிருந்து செய்யப்படும் யோகர்ட் (தயிர்), வெண்ணெய், நெய் முதலியவற்றின் விற்பனை விவரம் பின்வருமாறு :—

| விவரங்கள். | 1975–76. | 1976–77. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (அளவு லட்சத்தில்.) | |
| வெண்ணெய் (கிலோ கிராமில்) .. | 1·26 | 3·01 |
| நெய் (கிலோ கிராமில்) .. | 1·24 | 2·46 |
| பால்பொடி (கிலோ கிராமில்) .. | 0·39 | 4·42 |
| சுவையூட்டப்பட்ட பால் (லிட்டரில்) | 3·53 | 9·71 |
| தயிர் (கோப்பைகளில்) .. | 0·23 | 3·13 |

22. தொழில் நுட்ப வசதி வழங்குதல்.—பசுக்களின் தீவிரக் கலப்பின உற்பத்தி, எருமைகளின் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றுக்காகப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகம், புதிய திட்டங்களைச் செயலாக்குவதுடன், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு தேவையான கால்நடைத் தீவனம், தழை உணவு வசதி, மருத்துவ உதவி போன்ற பிற தொழில் நுட்ப வசதிகளையும் அளிக்கின்றது. கால்நடை மருத்துவப் பணிகள் உறுப்பினர்களது இல்லங்களிலேயே அளிக்கப்படுகின்றது. மேலும், அவர்களுக்கு, கிடாரிக் கன்றுகளை வளர்ப்பதற்கும், மாட்டுத் தீவனத்தை உற்பத்தி செய்வதற்கும் உதவித் தொகை அளிக்கப்படுகின்றது. பால் பண்ணைக் கழகம், ஊட்டியில், "பொலி காளை-தாய்ப் பண்ணையில்" அயல் இன ஜெர்ஸி மாட்டு மந்தை ஒன்றையும், எட்டு செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்களையும், பராமரித்து வருகின்றது. இவையன்றி, 27 நடமாடும் கால்நடை மருத்துவமனையும், 8 அவசரகால மருத்துவப் பிரிவுகளையும், நடத்துகின்றது; இவற்றில் 67 கால் நடை மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 1976–77ஆம் ஆண்டில் இக்கழகம், இத் திட்டத்தின்கீழ் 2·5 இலட்சம் உழவர்களால் பராமரிக்கப்பட்ட மூன்று இலட்சம் கால்நடைகளுக்குத் தொழில் நுட்ப வசதி அளித்துள்ளது.

23. ஒரு மணி நேரத்திற்கு, ஐந்து டன்கள் உற்பத்தி செய்யும் திறனுடைய, மாதவரம் கால்நடைத் தீவனத் தயாரிப்பு ஆலை 1—4—1975-ல் பால் வள நிறுவனத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்நிலையம் தற்போது, திங்களொன்றுக்குச் சராசரியாக 1,000 டன் கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்கின்றது. மாநிலத்திலுள்ள, கால்நடை பராமரிப்புத் துறையின் பண்ணைகளுக்குக் கால்நடைத் தீவனம் வழங்கும்பொறுப்பு பால் வள நிறுவனத்தினிடம் உள்ளது. 1,300 டன் அளவு பால் விற்பனைப் பொறுப்பை நிறைவு செய்வதற்காகக் கால் நடைத் தீவன உற்பத்தியைப் பெருக்கும்பொருட்டு, வட ஆர்க்காடு மாவட்டத்தின் ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின், கால்நடைத் தீவன உற்பத்தி ஆலையை, நிறுவனம் குத்தகைக்கு எடுத்துள்ளது. சில மூலப் பொருட்களின் தட்டுப்பாடு, பெரிதும் வேறுபடுகின்ற விற்பனை நிலவரங்கள் ஆகிய இரு முதன்மைப் பிரச்னைகளை, நிறுவனம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஆதாயமோ, விரயமோ இன்றி, கால்நடைத் தீவனம், பால் பண்ணை வைத்திருக்கும் உழவர்களுக்கு வழங்கப்படுகிறது.

விரிவாக்கம் :—

24. ''பால் பெருக்கத் திட்டத்தின்'' கீழ், மாதவரம் நிலையத்தின் பால் பதப்படுத்தப்படும் திறன், ரூ. 21 இலட்சம் செலவில், 50,000 லிட்டரிலிருந்து 1,25,000 லிட்டராக அதிகரித்துள்ளது. மூன்று கோடி ரூபாய் செலவில், நாளொன்றுக்கு 2,00,000 லிட்டர் திறனுடைய, புதிய நிலையம் ஒன்று அம்பத்தூரில் (சென்னை) 16—4—1976 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. இப்புதிய நிலையம், மொத்த விற்பனை அடிப்படையில் அமைக்கப்பட்டது. 1977—78 ஆம் ஆண்டில், ஒரு மணி நேரத்திற்கு 5,000 பைகளை நிரப்பும் திறனுடைய இரண்டு இயந்திரங்கள் இங்கு நிறுவப்படவிருக்கின்றன. மதுரையில் ரூ. 90 இலட்சம் செலவில் அமைந்த, நாளொன்றுக்கு 10 டன் பால்பொடி தயாரிக்கும் திறனுடைய, தயாரிக்கும் நிலையமொன்று நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

25. ஈரோட்டிலுள்ள பால் சேகரித்து வழங்கும் பண்ணையின் 1975—76ஆம் ஆண்டில், 30,000 லிட்டரிலிருந்து 1,00,000 லிட்டராக அதிகரித்துள்ளது. வேலூரில், நாளொன்றுக்கு 7,000 லிட்டர் பாலைக் குளிரவைக்கும் திறனுடைய நிலையம் 1974-75 ஆம் ஆண்டில், நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பாலை பதப்படுத்தும் நிலையமாக விரிவடைந்துள்ளது. 1972-73 ஆம் ஆண்டிலிருந்து 1976—77-ஆம் ஆண்டு வரையில் ஆறு குளிரவைக்கும் நிலையங்கள் புதியதாக நிறுவப்பட்டன. 1973—74 ஆம் ஆண்டில் எட்டு, பால் சேகரித்துச் செல்லும் வண்டிகள் பெறப்பட்டன.





26. கோயம்புத்தூர் ஒன்றியத்திலுள்ள, பால் பதப்படுத்தும் நிலையத்தை விரிவுபடுத்தவும், கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த, இதுவரை செயல்படாமல் இருந்த குளிர்விக்கும் நிலையங்களை, மீண்டும் இயங்கச் செய்யவும், தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம், இந்தியப்பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 9 லட்சம் உதவித் தொகை பெற்றுள்ளது. பால் பண்ணை, கால்நடை பராமரிப்புப்பணிகள் கூட்டுறவுகளுக்கு தொழில் நுட்ப உதவியையும் இது அளிக்கிறது.

27. சிறப்புத் திட்டங்கள்.—

இக் கழகத்தின் இயல்பான நடவடிக்கைகள் தவிர, சமுதாயத்தில் பின் தங்கிய வகுப்பினருக்காக பல திட்டங்களை அரசு செயற்படுத்தி வருகிறது. இவற்றின் விவரங்களாவன:

அ. மலைப் பகுதிகள் வளர்ச்சித் திட்டம்.

1975-76லிருந்து தொடங்கி ஐந்து ஆண்டுக் காலத்திற்கு நீலகிரி மாவட்டத்தில் ரூ. 85.00 இலட்சம் மதிப்பில் பால் பண்ணை வளர்ச்சிக்கு இத்திட்டம் வகை செய்யும். ஐந்தாம் ஆண்டு இறுதியில் பால் உற்பத்தியின் அளவு 30,000 லிட்டர்களாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 10,000 விவசாயிகள் பயனடைவார்கள். இதற்கென இது வரை 41.31 இலட்சம் ரூபாய் அரசு கொடுத்துள்ளது.

ஆ. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ் ரூ. 11.90 இலட்சம் செலவில் பாலாடை-வெண்ணெய் தயாரிப்புத் தொழிற்சாலையொன்று கொடைக்கானலில் நிறுவப்படுகிறது. கொடைக்கானல் கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்திடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1977 மார்ச் திங்களில் ரூ. 5.00 இலட்சம் முதல் தவணையாக கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கான தொடக்கப் பணிகள் நடந்தேறி வருகின்றன. நடந்தேறி வரும் பணியினைக் கண்காணித்த பிறகு மேற்கொண்டும் தேவைப்படும் தொகைகள் வழங்கப்படும்.

இ. பட்டதாரி/மெட்ரிகுலேஷன் பால்பண்ணை விவசாயிகள் திட்டம்.

''ஐந்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டம்'' மற்றும் ''வேலைவாய்ப்பு ஊக்குவிப்புத் திட்டம்'' ஆகியவற்றின்கீழ், 119 பட்டதாரிகளுக்கும், 41 மெட்ரிக்குலேஷன் தேறியவர்களுக்கும் சுய வேலை வாய்ப்பிற்காகப் பால் பண்ணையில் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி அளிக்கப்பட்ட

பால் பண்ணை விவசாயிகளில், 24 பட்டதாரிகளும், ஒரு மெட்ரிகுலேட்டும் மாதவரம் பால் பண்ணை காலனியில் அவர்களுடைய பால் பண்ணைப் பிரிவை அமைத்துள்ளனர். 35 பட்டதாரிகளும், 4 மெட்ரிகுலேட்டுகளும் நாட்டுடைமையாக்கப்பட்ட நான்கு வங்கிகளிடமிருந்து ரூ. 34.62 இலட்சம் நிதி உதவி பெற்று, மாவட்டங்களில் அவர்களுடைய சொந்த நிலங்களிலே பால் டண்ணையை அமைத்துள்ளனர். மாதவரம் பாற்பண்ணையில் உள்ள பட்டதாரிகள் 500 லிட்டர்கள் பால் வழங்குகின்றனர்; வெளியூர்களில் உள்ள பட்டதாரிகளின் மூலம் நாளொன்றுக்கு 1,140 லிட்டர்கள் பால் இந் நிறுவனத்துக்கு வழங்கப்படுகிறது.

ஈ. சிறப்பு கால்நடை வளர்ப்புத் திட்டம்/கன்று வளர்ப்புத் திட்டம்.

25,000 சிறு உழவர்கள்/சொற்ப நில—உழவர்கள்/வேளாண்மைத் தொழிலாளர்களிடம் உள்ள கலப்பினக் கிடாரிக் கன்றுகளை நல்ல முறையில் வளர்ப்பதற்காக இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதன்படி தேவையான சத்துணவும், மருத்துவ உதவியும் அளிக்கப்படும். சத்துணவின் விலையில் பெரும் பகுதி மானியமாகவும் வழங்கப்படும். வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம், கோவை, மதுரை ஆகிய மாவட்டங்களில் 3 வருட காலத்திற்கு கன்று வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூ. 237.97 இலட்சம் நிதியுதவியை அளிக்க இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதுவரை இந்த மாவட்டங்களில் 2,486 கன்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

உ. அரிசன நலத் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ், அரிசன உறுப்பினர்களுக்கு கறவையினங்களை வாங்குவதற்கான உதவியை அளிப்பதற்கு, மதுரை மாவட்டத்தில் 15 கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களையும், வட ஆற்காடு மாவட்டத்தில் 12 கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களையும் அரசு தேர்ந்தெடுத்துள்ளது. மதுரை மாவட்டத்திற்கு ரூ. 22.50 இலட்சமும், வட ஆற்காடு மாவட்டத்திற்கு ரூ. 18.00 இலட்சமும் மூன்று ஆண்டுக் கால அளவிற்கு அளிக்கப்பட்டுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு சங்கத்திடமிருந்தும் 100 உறுப்பினர்களுக்கு கறவையினங்கள் வாங்குவதற்கான கடன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. கறவையினங்கள் வாங்குவதற்கு அரிசன உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,500 வழங்க இத்திட்டம் வழி செய்கிறது. இதில், ரூ. 1,000 கடனாகவும் எஞ்சிய 500 ரூபாய் உதவியாகவும் வழங்கப்படுகிறது. ஒரே உறுப்பினர் இரண்டாவது கறவையினம் வாங்கவேண்டுமாயின், முதல் கறவையினத்தை வாங்கிய பிறகு 10 மாதங்கள் கழித்து பிறகு தொகை அளிக்கப்படுகிறது.



ஊ. வறட்சியால் பாதிக்கக் கூடிய பகுதிகளுக்கான திட்டம்.

இம்மாநிலத்தில் தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக குறிப்பிடப்படுவன. இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 23.55 இலட்சம் செலவு மதிப்பீட்டில் பால்பண்ணை வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திட்டம் ஆய்வின்கீழ் உள்ளது. முகவை மாவட்டத்திற்கான மொத்த திட்ட மதிப்பீடு 16.81 இலட்சம் ரூபாய்கள். இதன்கீழ், பால் குளிர்ப்பதன நிலையமொன்று பரமக்குடியில் அமைக்கப்படவிருக்கிறது. இதற்காக ரூ. 1.8 இலட்சம் தொகை வழங்கப்பட்டுள்ளது.

பொது.

28. சிறு உழவரின் வளர்ச்சி முகவரமைப்பு, வறட்சிக் காட்படும் வட்டாரத் திட்டம் போன்ற ஏனைய பல திட்டங்களின் துணையுடன் பால் பெருக்குத் திட்டமும் செயல்படுத்தப்படுவதால் பால் உற்பத்தி பெருகியுள்ளது. கொள்முதல் செய்வதற்கான கிடைக்கக் கூடிய பாலின் அளவு உயர்ந்துள்ளது. ஆனால், தனியார் நிறுவனங்கள், பிற மாநில பால்வள நிறுவனங்கள் ஆகியவற்றின் போட்டியின் காரணத்தால் பால், பால்பண்ணை உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதில் சில சிக்கல்கள் உருவாகியுள்ளன. கேரளா, ஆந்திரா, கர்நாடகம், மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் நம்முடைய பால் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. தமிழ்நாடு பால்வள நிறுவனம், கூட்டுறவுச் சங்கங்களின் மூலம், மாநிலத்தில் மேற்கொண்டும் பல நகரங்களிலும், சிறு நகரங்களிலும் பால் விற்பனைக்காக ஏற்பாடு செய்யத் திட்டமிட்டுள்ளது. இதற்கு முன் கண்டிராத அளவுக்கு பால் உற்பத்தி பெருகி உள்ளதன் விளைவாக, சில பிரச்சனைகள் ஏற்பட்டு உள்ளன. அதாவது பால்வள நிறுவனத்தின் பால் நிலையங்கள், சேகரிக்கும் பாலின் அளவை ஒழுங்குபடுத்தும் அவசியம் ஏற்பட்டு உள்ளது. வழங்கப்படும் பாலை ஏற்றுக்கொண்டால் அதனை உடனே பதப்படுத்தி விற்பனை செய்வதற்கான வசதிகளை கருத்தில் கொண்டு, பால் அதிகமாகக் கிடைக்கும் காலங்களில் உற்பத்தியாளரிடமிருந்து ஏற்க வேண்டிய பாலின் விகிதத்தை வரையறுப்பது ஓரளவுக்குத் தவிர்க்க முடியாததாகும். பால் உற்பத்தியாளர்கள், நுகர்வோர்கள் ஆகிய இருதரப்பாரின் நலன்களைக் கருத்தில் கொண்டு நியாயமான முறையில் இவ்வாறு செய்யப்பட்டு வருகிறது.

## இணைப்பு II.

[36-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

கோரிக்கை எண் : 20—வேளாண்மை.

### குறிப்பு.

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி குடியானவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த உழவியல் ஆய்வு முடிவுகளையும் தொழில் நுட்ப ஆலோசனையும் அவர்களுக்கு வழங்குவது வேளாண்மைத்துறையின் தலையாய பணி. பயிர் செய்வதில் உள்ள பிரச்சினைகளைப் போக்கிட ஆராய்ச்சியும், தனியார் துறை மற்றும் அரசுத் துறையின் மூலம் பயிர் செய்வதற்கு வேண்டிய இடுபொருட்களை வழங்குவதும், குறிப்பாக உழவர்களுக்கு தேவைப்படும் உற்பத்தி சாதனங்களான விதைகள், உரங்கள் மற்றும் பூச்சிமருந்துகள் ஆகியவைகளை உரிய காலத்தில் கிடைப்பதற்கான வழிவகைகளை இத்துறை கவனித்துக் கொள்கிறது. தொழில் நுட்ப அறிவுரை வழங்குவதுடன் நிலத்தைப் பண்படுத்தவும் மற்றும் நிலத்தடி நீரை வெளிக் கொண்டு வந்து பயன் பெற்றிடவும், வேண்டிய இயந்திரங்களையும் இதர கருவிகளையும் வாடகைக்கு இத் துறை வழங்குகிறது. விதை, உரம் மற்றும் பூச்சி பூசண மருந்துகள் போன்ற இடுபொருட்களின் தரத்தினைப் பாதுகாத்தல், வேளாண்மை விளைபொருட்களின் தரத்தினைப் பாதுகாத்தல், வேளாண்மை விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்வதற்கு உழவர்களுக்கு உதவுதல் போன்றவை வேளாண்மைத் துறையின் இதர பணிகளாகும்.

### 1976-77-ம் ஆண்டின் முன்னேற்றம்.

#### (அ) கால நிலை.

1976-77-ம் ஆண்டில் தென் மேற்குப் பருவக் காற்று, ஆறுகளின் தோற்றுவாய்ப் பகுதிகளில் எதிர்பாராதவிதமாகப் பொய்த்ததின் விளைவாக மாநிலத்தின் சில பகுதிகளில் வழக்கமாக மேற்கொள்ளப்படும் சாகுபடி பாதிக்கப்பட்டது. பருவ மழை இயல்புக்கு மாறான வகையில் பெய்ததன் விளைவாக ஆற்றுப் பாசனப் பகுதிகளில் நெற்பயிர் மிகவும் பாதிக்கப்பட்டதோடு, பல மாவட்டங்களில் மானாவாரிப் பயிர்களும் தாமதமாக விதைக்கப்பட்டன.



முதல் பட்டத்தில்தான் நமது மாநிலத்தின் நெல்லின் மகசூல் திறன் அதிகம். ஆனால் ஆறுகளின் தோற்றுவாய்ப் பகுதிகளில் தென்மேற்குப் பருவ மழை தவறியதின் விளைவாக முதல் போக நெற் பயிரை 7 லட்சம் ஏக்கர் பரப்பில் பயிரிட இயலாமல் போயிற்று. காவிரி நீர், பாசனத்திற்காக 45 நாட்கள் தாமதமாக, 24—7—1976 அன்றுதான் மேட்டூரிலிருந்து திறந்து விடப்பட்டது. மேட்டூர் அணைக்கு நீர் வரத்துக் குறைவாக இருந்ததாலும், அணையின் நீர் மட்டத்தின் அளவு குறைவாக இருந்ததாலும் தஞ்சை மாவட்டத்தில் கல்லணைக் கால்வாய் பகுதிக்குத் தண்ணீர் விட முடியாமற் போயிற்று. தஞ்சையில் குறுவை ஆரம்பக் கட்டத்திலிருந்தே முறைப் பாசனம் மேற் கொள்ளப்பட்டது. வேளாண்குடி மக்கள் தாளடிப் பருவத்தில் நெல் பயிரிடுவதைத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற தென் மாவட்டங்கள் மற்றும் சில மாவட்டங்களின் பகுதிகள், வறட்சியின் பிடியில் சிக்கி, பாதிக்கப்பட்டு, பின் வடகிழக்கு பருவ மழையினால் ஓரளவு நிவாரணம் பெற்றன. ஆண்டின் பின் பகுதியில் கிடைத்த நல்ல வடகிழக்கு பருவமழையினால் பயிர்களின் நிலைமையில் ஓரளவு முன்னேற்றம் காணமுடிந்தது.

#### (ஆ) 1976-77-ம் ஆண்டின் சாதனைகள்.

இந்த ஆண்டு முழுவதும் விவசாயிகளுக்கும், விவசாயத் துறையினருக்கும் ஒரு சோதனையாக அமைந்தது. மாறுபட்ட பருவ நிலைகளுக்கு ஏற்ப உற்பத்தித் திட்டங்களையும், பயிர் செய்முறைகளையும் அவ்வப்போது மாற்றி அமைக்க வேண்டியதாயிற்று. சோதனையாக அமைந்த இந்த ஆண்டில் நிறைவேற்றிய சில குறிப்பிடத்தக்க சாதனைகள் வருமாறு :—

1. <u>மாற்றுப் பயிர் திட்டம்.</u>—வேளாண்மைத் துறை இந்த மாறுபட்ட நிலைமையில் செயல்படுத்தக்கூடிய பயிர் திட்டங்களைத் தீட்டியது. பல்வேறு ஆற்றுப்பாசனப் பகுதிகளில் மாற்றுப் பயிர் திட்டத்தை மேற்கொள்ள விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டனர். மாற்றுப் பயிர் திட்டத்தை களப் பணியாளர்கள் மக்களிடையே தீவிரமாக பிரச்சாரம் செய்ததின் பயனாக உழவர்கள் புதிய பயிர் முறைகளைப் பின்பற்றினர். அதன் விளைவாக, தென்மேற்கு பருவ மழை பொய்த்ததனால் ஏற்படவிருந்த பயிரிழப்பை பெருமளவில் குறைக்க முடிந்தது. ஆற்றுப் பாசனப் பகுதிகளில் முதல் பட்டத்தில் வழக்கமாகப் பயிரிடப்படும் நெற்பயிர்களுக்குப் பதிலாக குறைந்த அளவு நீரை ஏற்று வளரவல்ல சிறு தானியங்களும் பயிறு வகைப் பயிர்களும் அதிக அளவில் பயிர் செய்யப்பட்டது. தஞ்சையில் கல்லணை கால்வாய்ப் பகுதியில் ஆற்று நீரில்லாத காரணத்தால் தரிசாக இடக்கவிருந்த 2.10 லட்சம் ஏக்கரில் நெல் நேரடி விதைப்பு செய்யப்பட்டு மானாவாரிப் பயிராக பயிர் செய்யப்பட்டது.

2. சிறு தானிய உற்பத்தியில் பெரும் சாதனை.—1976-77-ம் ஆண்டில் வேளாண்மைக்கு ஏற்ற பருவநிலை இல்லாதிருந்தும் மிகப் பெருமளவில் உயர் விளைச்சல் ரகங்களைப் பரப்பியதனாலும் புஞ்சையில் இருபோக சாகுபடி முறைகளையும் திருந்திய ச குபடி முறைகளையும் கடைப்பிடித்ததாலும், சிறுதானிய உற்பத்தியில் கூடுதலாக ஒரு லட்சம் டன்னிற்கும் அதிகமான அளவிற்கு உற்பத்தி செய்ய இயன்றது.

3. <u>கோடைப் பருவத் திட்டம்</u>.—கடந்த ஆண்டின் பிற் பகுதியில் கிடைத்த நல்ல மழையின் உதவியைக் கொண்டு ஆண்டுத் துவக்கத்தில் ,ஏற்பட்ட ,இழப்பினை முடிந்த அளவு ஈடு செய்ய, சிறப்பு கோடைத் திட்டம் செயல்படுத்தப் பட்டது. இதன் விளைவாக கோடைப் பருவத்தில் 2.80 லட்சம் ஹெக்டேரில் நெற்பயிரும், 2·00 லட்சம் ஹெக்டேரில் சிறு தானியங்களும், 2·46 லட்சம் ஹெக்டேரில் நிலக்கடலையும், 3.91 லட்சம் ஹெக் டேரில் பயறு வகைகளும் பயிர் செய்யப்பட்டன.

4. <u>வறட்சி நிவாரணமும் சிறு பாசனப் பணிகளும்</u>. சென்ற ஆண்டில் வறட்சியினால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு நிவாரணம் காணவும், பாதிப்புகளைத் தணிக்கவும் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மண்வளப் பாதுகாப்பு வேலைகள் 4,32,110 ஹெக்டேர் பரப்பில் செயல்படுத்தப்பட்டன.- 258 கசிவு நீர் குளங்கள் கட்டப்பட்டன. நிலத்தடி நீரை வெளிக் கொணர்ந்து உற்பத்திப் பெருக்கத்திற்காக உபயோகிக்க 8,927. குழாய்க் கிணறுகள் மற்றும் வடிமுனைக் குழாய்கள் அமைக்கப் பட்டன. ராமநாதப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த ராஜபாளை யம் வட்டத்தில் கடும் காற்றினால் மண் மேடிட்டுப்போன 2,572 ஏக்கர் நிலத்தை இத்துறை 45 நாட்களில் சீர்திருத்தி பழைய நிலைக்கு கொண்டு வந்தது. தென் மாநிலங்களில் வறட்சி யில் பாதிக்கப்பட்ட புஞ்சை விவசாயிகளுக்கு 1,000 " கொரு " கலப்பைகள் உள்ளூரிலேயே ,செய்து, விநியோகம் செய்யப் பட்டன. இக்கலப்பைகள், கிடைக்கும் மழை ஈரத்தைப் பயன்படுத்தி, காலத்தே புஞ்சைப் பயிர்களின் விதைப்பை முடிக்க மிகவும் பயன்பட்டன.

5. அனைத்துலக மேம்பாட்டு இயக்கத் திட்டம்.—இயந்தி ரங்களைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்க அனைத்துலக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1,509 டிராக்டர்கள் உழவர் களுக்கு நீண்ட .காலக் கடனுக வழங்கப்பட்டன.

6. பயிர் பாதுகாப்பில் ஆசிரியர்களின் பணி.—முதன்முறை யாக 1976-77-ம் ஆண்டில் 11,700 கிராமப் பள்ளி ஆசிரியர் களுக்கு பயிர்களில் தோன்றும் பூச்சி மற்றும் நோய் ஆகிய வகைகளை அடையாளம் காண்பதற்காக பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியின் நோக்கம் விவசாயிகளுடன் நெருங்கிய தொடர் புடைய ஆசிரியர்களுக்கு பயிர் பாதுகாப்பு பற்றி தெரிவித்து





அவர்கள் மூலமாக பூச்சி மற்றும் நோய் தாக்குதல் பற்றிய எச்சரிக்கை கொடுப்பதற்கும், பூச்சி பூசணத் தடுப்பு முறைகள் மேற்கொள்ளுவதற்கும், அவர்களை விரிவாக்கப் பணியாளர் களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஒரு பாலமாக திகழச் செய்வதாகும்.

7. சீரமைப்பு.—வேளாண்மை விரிவாக்கப் பணியை சீரமைக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் அறிவியல் நிபுணர் குழுவின் துணை கொண்ட ஒரு வேளாண்மை அதிகாரியை நிய மிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பயனுக ஏற்கனவே உள்ள அலுவலகங்களை தக்கவாறு மாற்றி அமைத்து சேலம், வட ஆற்காடு, தென்னுற்காடு, ராமநாதபுரம் மாவட்டங் களில் திட்ட வேலைகளைக் கவனிக்க இம் மாவட்டங்கள் ஒவ் வொன்றிலும் ஒரு துணை வேளாண்மை இயக்குநர் அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது.

8. ஆராய்ச்சிப் பணிகள்:—1976-77-ம் ஆண்டில் 21 உயர் விளைச்சல் தரும் இரகங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு வேளாண் மைக்கு வெளியிடப்பட்டது. பயிர்களுக்கு நிலத்திற்கும், நீருக்கும் ஏற்ப உரத்தேவையை பரிந்துரை செய்வதற்காக " பயிர் உணர்வு ஆய்வுகள் " பெருமளவில் செய்யப்பட்டன. நீலப் பாசி, அசோலா, மற்றும் ,வெண்துத்தம் போன்றவைகளை நெற்பயிருக்கு பயன்படுத்துவது குறித்தும் ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன.

குமரி மாவட்டத்தின் தட்ப வெட்ப நிலை மாநிலத்தின் மற்றப்பகுதிகளுக்கு சற்று வேறுபட்டதாகும். இப்பகுதியை துயருறுத்தும் அமிலத் தன்மை வாய்ந்த மண் பற்றிய பிரச்சினை களை நீக்கவும், இம்மாவட்டத்தின் தனித்தன்மை கொண்ட தட்பவெட்ப நிலைக்கு ஏற்ப ரகங்களையும், பயிர் முறைகளையும் உருவாக்கவும் திருப்பதிசாரம் என்ற இடத்தில் ஓர் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டது.

மேற்கூறிய நடவடிக்கைகளின் விளைவாகவும், வேளாண் குடிமக்களின் அயராத, சலியாத உழைப்பினாலும் சாதகமற்ற பருவநிலையிலும் 1976-77-ம் ஆண்டில் நமது உற்பத்தி கீழ் வருமாறு அமைந்துள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது :—

1. நெல் .. .. 53.00 லட்சம் டன்.
2. சிறுதானியம் .. .. 18.00 ,,
3. பயறுவகைகள் .. .. 2.90 ,,
4. எண்ணெ வித்துக்கள் .. .. 13.43 ,,
5. கரும்பு (வெல்லம்) .. .. 13.50 ,,
6. பருத்தி (பேல்கள்) .. .. 3.60 லட்சம் பேல் கள்.

3. 1977-78-ம் ஆண்டிற்கான குறிக்கோளும் மேற்கொள்ள விருக்கும் திட்டங்களும்.

1977-78-ம் ஆண்டுக்கான திட்டமிடப்பட்டுள்ள பயிர் உற்பத்திக் குறியீடுகள் பின்வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| 1. நெல் | .. .. .. | 62.00 | லட்சம் டன். |
| 2. சிறுதானியங்கள் | .. | 19.00 | ,, |
| 3. பயறு வகைகள் | .. | 3.00 | ,, |
| 4. எண்ணெய் வித்துப் பயிர்கள். | .. | 14.90 | ,, |
| 5. கரும்பு (வெல்லம்) | .. | 14.00 | ,, |
| 6. பருத்தி | .. .. | 4.00 | இலட்சம் பேல்கள். |

மேற்குறித்த உற்பத்திக் குறிக்கோள்களை அடைவதற்கான வழிவகைகள் வருமாறு :—

(அ) நெல்.

உயர் விளைச்சல் தரவல்ல இரகங்கள் 22 லட்சம் ஹெக் டேரில் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. அதிக விளைச் சல் பெற்றிட குறிப்பாக ஐ. ஆர். ரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படும். குறுகிய வயதுள்ள ஆடுதுறை, 31 மற்றும டி. கே. எம். 8 ஆகிய ரகங்கள் அதிக அளவில் பயிரிட தனி முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சம்பா பருவத்திலும், செங்கல்பட்டு, இராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியா குமரி மாவட்டங்களில் உள்ள புழுதி நெல் சாகுபடி செய்யப் படும் பகுதிகளிலும், உயர் விளைச்சல் இரகங்கள் பயிரிட வழிவகைகள் செய்யப்படும். காவிரி டெல்டாவில் சம்பா பருவத்தில் பயிரிடுவதற்கு ஏற்புடைய சிறந்த கோ. 40. ரகத்தை தஞ்சை மாவட்டத்தில் அதிக அளவில் பயிரிட வழிவகைகள் செய்யப்படும். ஆந்திர பிரதேச ரகமான என். எல். ஆர். 9672 என்ற சன்ன ரகம் சம்பா பருவத்தில் பெருமளவு பயிரிட ஏற்றதா என சோதனை செய்யப்படும். இவ்வாண்டு 9,500 மெட்ரிக் டன்கள் சான்றிதழ் பெற்ற உயர் விளைச்சல் ரக விதைகள் விநியோகம் செய்ய விவசாய இலாகா நடவடிக்கை எடுத்துள்ளது.





(ஆ) சிறு தானியங்கள்.

சிறு தானிய உற்பத்தியைப் பெருக்க உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிட வழிவகை செய்யப்படும். 1.20 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் சோளமும், 1.80 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் கம்பும், 1.40 லட்சம் ஹெக்டர் பரப்பளவில் கேழ்வரகும், 0.70 லட்சம் ஹெக்டேரில் மக்காச் சோளமும், உயர் விளைச்சல் ரகங்களைக் கொண்டு பயிரிடப்படும். ஐ. எஸ். 3541, கோவில்பட்டி நெட்டை, சி. எஸ். எச். 1; சி. எஸ். எச். 5 சோளம், கே. எம். 1, கே. எம். 2, கம்பு, போன்ற ரகங்கள் மானாவாரிப் பகுதிகளில் உழவர்களால் பெருமளவில் விரும்பப்படுகிறது. மானாவாரி நிலங்களில் இந்த ரகங்கள் அதிக அளவில் பயிரிட வகைகள் மேற்கொள்ளப் படும். உயர் விளைவு இரகங்களைப் பயிரிட்டு அதிக விளைச்சல் பெற்றிட தகுந்த உழவியல் முறைகளும் மேற் கொள்ளப்படும். கீழ்க்கண்ட அளவில் சிறு தானிய வித்துக்களை உழவர்களுக்கு வழங்க வேளாண்மைத்துறை திட்டமிட்டுள்ளது.

| | | மெட்ரிக் டன். |
|---|---|---|
| 1. கம்பு | .. .. .. .. | 150 |
| 2. சோளம் | .. .. .. .. | 400 |
| 3. கேழ்வரகு | .. .. .. .. | 175 |
| 4. மக்காச் சோளம் | .. .. .. .. | 315 |
| | மொத்தம் .. | 1,040 |

(இ) பயறு வகைப் பயிர்கள்.

கோடையில், நெல்லை அடுத்து, கூடுதல் பரப்பு பயிரிடு வதன் மூலமாகவும், கலப்புப் பயிர் முறை மூலமாகவும் பயறு வகைப் பயிர்கள் பயிர் செய்யப்படும் பரப்பளவு, 9.70 லட்சம் ஹெக்டேரிலிருந்து 10.40 லட்சம் ஹெக்டேராக அதி கரிக்கப்படும். நிலக்கடலை, பருத்தி போன்ற பயறு வகை பயிர்களை கலப்புப் பயிராகப் பயிரிடும் முறை தீவிரப் படுத்தப்படும். நுண்ணுயிர் ஊட்டுதல், மணிச் சத்து உரங் களைப் பயன்படுத்துதல், பயிர்ப்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுதல் போன்ற வழி முறைகள் பயறு உற்பத்தி யைப் பெருக்க பரந்த அளவில் மேற்கொள்ளப்படும். 1,600 மெட்ரிக் டன் தரமான விதைகளை விநியோகிக்க இத்துறை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

(ஈ) எண்ணெய் வித்துப் பயிர்கள்.

நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்தி போன்ற எண்ணெய் வித்துப் பயிர்கள் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் அதிகப்படுத்த தனி முயற்சிகள் மேற்கொள்ளப் படும். இறவைப் பருவத்தில் அதிகப் பரப்பளவில் நிலக்கடலை பயிரிடவும், மானாவாரிப் பருவத்தில் திருந்திய உழவியல் முறைகளை மேற்கொள்ளவும் சிறப்பான கவனம் செலுத்தப் படும். சுமார் 15,000 ஹெக்டேர் கூடுதல் பரப்பளவில் நிலக் கடலை பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் இவ்வாண்டின் நிலக்கடலை சாகுபடி பரப்பளவு 11 லட்சம் ஹெக்டேராக இருக்கும். மானாவாரி நிலக்கடலைப் பயிருக்கு உரமிட குடியானவர்களை ஊக்குவிப்பதுடன், விவசாயத்துறை புதிதாக கண்டுபிடித்துள்ள நுண்ணூட்டக் கலவையைப் பயன்படுத்துதல், ஜிப்சம் இடுதல் போன்ற புதிய முறைகளை சுமார் ஒரு லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். 1,08,000 மூட்டை நிலக்கடலை விதை இத்துறையின் மூலம் விநியோகிக்கப்படும்.

சூரியகாந்திப்பயிர் 25,000 ஹெக்டேரில் கூடுதலாகப் பயிர் செய்யப்படும். இதன் மூலம் சூரியகாந்தியின் மொத்தப் பரப்பளவு 1.75 லட்சம் ஹெக்டேர் அளவுக்கு எட்டும். வேளாண் தொழில் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு உறுதுணையாக இருப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் 900 மெட்ரிக் டன் சூரியகாந்தி விதைகள் விநியோகம் செய்யப்படும்.

(உ) பருத்தி.

கூடுதலாக 7,000 ஹெக்டேர் பரப்பளவில் இறவைப் பருத்தியும், 20,000 ஹெக்டேர் பரப்பளவில் மானாவாரிப் பருத்தியும் பயிரிட முயற்சி எடுத்துள்ளோம். 12,000 ஹெக்டேர் பரப்பளவில் வீரிய ஒட்டு இரகமான 'வரலட்சுமி' பருத்தி பயிர் செய்யப்படும். பஞ்சாயத்து யூனியன் டிப்போக்கள் மூலமாக 1,750 மெட்ரிக் டன் பருத்தி விதைகள் வழங்க வழிவகைகள் மேற்கொள்ளப்படும். இராமநாதபுரம் மாவட்டத்தில் மத்திய அரசினர் உதவியுடன் மேலும் ஒரு தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டம் துவக்கப் படும். இந்த ஆண்டு 25 மெட்ரிக் டன் வரலட்சுமி விதைகள் நமது மாநிலத்திலேயே உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும்.





(ஊ) கரும்பு.

தஞ்சாவூர், பெரம்பலூர் மற்றும் பாலக்கோடு சர்க்கரை ஆலைப்பகுதிகளில் கூடுதலாக 9,000 ஹெக்டேர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. உயர் விளைச்சல் தரும் கரும்பு இரகங்கள் பயிரிடுவது பரவலாக்கப்படும். 24,000 ஹெக்டேர் பரப்பளவுக்கு விதைக்கரணைகள் வழங்கப் படும்.

சர்க்கரை ஆலை சாலை அபிவிருத்தி திட்டம்.—சர்க்கரை ஆலைப்பகுதிகளில், கரும்பு போக்குவரத்தை எளிதாக்க, புதிய சாலைகள் அமைக்கவும், பழையசாலைகளை செப்பனிடவும் இத் திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தில் 1975–76 மற்றும் 1976–77-ம் ஆண்டுகளுக்கான முன்னேற்றம் கீழ்க்காணுமாறு :

| வருடம். | மொத்தச் செலவு (இலட் சத்தில்). | புதிய சாலைகள் கி.மீ. | கப்பி போடுதல் கி.மீ. | தார் போடுதல் கி.மீ. | மதகுகள் எண். | பாலங்கள் எண். | தாழ்வான பாலங்கள் எண். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1975–76 | 70.22 | 68.02 | 76.26 | 65.60 | 158 | 13 | 6 |
| 1976–77 | 75.00 | 31.51 | 72.28 | 58.64 | 85 | 16 | 5 |

1977–78-ம் ஆண்டு புதிய சாலைகள் அமைக்கவும், பழைய சாலைகளைச் செப்பனிடவும்—ரூ. 85—இலட்சமும், பழைய சாலைகளைப் பராமரிக்க ரூ. 15 இலட்சமும், [illegible]ப் பகுதிகளில் மத்திய அரசு உதவித் திட்டத்தில் [illegible]ப்புச் சாலைகள் அமைக்க ரூ. 5 லட்சமும் ஆக மொத்தம் ரூ. 10 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(எ) காய்கறி பயிர்கள்.

காய்கறி அபிவிருத்தித் திட்டத்தைத் தீவிரப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 50,000 ஹெக்டேர் பரப்பளவில் 6.88 இலட்சம் டன்கள் அளவுக்கு காய்கறி உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை நகரிலும், இம்மாநிலத்தின் மற்ற பெருநகர்ப் பகுதிகளிலும் வீட்டுக் காய்கறித் தோட்டங்கள் அமைப்பது தீவிரப் படுத்தப்படும்.

(ஏ) இடு பொருள் தொடர்பு நடவடிக்கைகள்.

1. விதைகளும், நாற்றுகளும்.—நெல், சிறுதானியம் மற்றும் பயறு வகைகளில் தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கென வேளாண்துறை 49 மாநில விதைப் பண்ணைகளை நிறுவியுள்ளது. நிலக்கடலை விதை உற்பத்தி 4 மண்டல விதைப் பண்ணைகளில் செயல்படுகிறது. தென்னங் கன்றுகள் 24 தென்னை நாற்றங்கால்களிலும், பழக்கன்றுகள் மற்றும் காய்கறிப் பயிர்கள் 19 மாதிரிப் பழத்தோட் டங்களிலும் இதர அரசு பண்ணைகளிலும் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தப் பண்ணைகள் யாவும் லாபகரமாக, மாதிரிப் பண்ணைகளாக அமைய நடவடிக்கை எடுக்கப்படும். சுமார் 12 இலட்சம் நெட்டை இரக தென்னைக் கன்றுகளும், 25,000 நெட்டை×குட்டை வீரிய ஒட்டுக்கன்றுகளும், 7 இலட்சம் பழக்கன்றுகளும் நடப்பு ஆண்டில் மேற்கூறிய பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும். 48 மெட்ரிக் டன் காய்கறி விதைகள் விநியோகிக்கப்படும். விதை அபிவிருத்திக்காக, 8,000 மெட்ரிக் டன் அளவுள்ள விதைகள் சுத்திகரிக்கும் திறன்கொண்ட 5 விதை மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. நல்ல தரமான, சான்றிதழ் பெற்ற விதைகளை உற்பத்தி செய்து, உரிய காலத்தில் விவசாயி களுக்கு கிடைக்கச் செய்வதே இத்துறையின் பெரு நோக்கமாகும். புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை யில் உள்ள அண்ணா பண்ணையில், வீரிய ஒட்டு விதை உற்பத்தி பற்றிய பயிற்சி விருப்பமுள்ள உழவர்களுக்கு அளிக்க திட்ட மிடப்பட்டுள்ளது. உழவர்களுக்கு பெருமளவில் சான்றிதழ் பெற்ற விதைகளை விநியோகிக்க இத்துறையைச் சார்ந்த ''விதைச் சான்றிதழ் அளிக்கும் பிரிவு'' விரிவுபடுத்தப்படும்.

2. இரசாயன உரங்கள்.—புதிய இரகங்களின் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்தும் எந்தத் திட்டத்திலும் சீராக உரமிடுதலையும் தீவிரப்படுத்துதல் அவசியம். இதனைக் கருத் தில் கொண்டு 1977–78-ம் ஆண்டு 2.75 இலட்சம் டன் தழைச்சத்து உரத்தையும், 0.70 இலட்சம் டன் மணிச் சத்து உரத்தையும், 0.70 இலட்சம் டன் சாம்பல்சத்து உரத்



தையும் விநியோகிக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மாநிலத்திற்கு தேவையான அளவு இவ்வுரங்களைப் பெறு வதற்கு உரிய ஏற்பாடுகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இவை 12,000 தனியார் மற்றும் கூட்டுறவுத் துறை விற்பனை மையங்கள் மூலமாக உழவர்களுக்கு விநியோகிக்கப்படும். மேலும் தகுந்த அளவில் உரமிடுதல் பற்றிய தீவிரப் பிரச்சாரமும் அதே சமயத்தில் மேற்கொள்ளப்படும். உரங்களின் தரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பிரத்தியேகமான அலுவலர்கள் உள்ளனர். உரங்களின் தரத்தை நிர்ணயம் செய்ய 3 ஆய்வுக்கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. இயற்கையாக கிடைக் கும் தழைச்சத்து உரமான நீலப்பாசியின் உற்பத்தி யையும், உபயோகத்தையும் விவசாயிகளுக்கு விளக்கும் பொருட்டும் விவசாயிகளே உற்பத்தி செய்து கொள்ளும் பொருட்டும் அதிக அளவில் விளக்கப் பண்ணைகள் ஏற்படுத் தப்படும்.

3. பயிர்ப் பாதுகாப்பு.—போதுமான அளவு பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் உள்ளன. பயிர்ப் பாதுகாப்பு கருவிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 1,000 புதிய விசைத் தெளிப்பான்கள் வாங்கி உழவர்களுக்கு குறைந்த வாடகைக்கு விடப்படும். நெற் பயிரில் தோன்றும் தண்டு துளைப்பான், நிலக்கடலையில் தோன்றும் சிவப்புக் கம்பளிப் புழு போன்ற பூச்சிகளும் மற்றும் நோய்கள் தாக்குதலில் இருந்து காப்பாற்ற சுமார் 60,000 ஹெக்டேர் பரப்பளவில் மருந்து தெளிப்பு மேற்கொள்ளப்படும்.

புகையான் தாக்குதலைத் தவிர்ப்பதற்கென சுமார் 20,000 ஹெக்டேர் பரப்பளவில் குறைந்த செலவில் மருந்து தெளிப்ப தற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். பூச்சி தாக்குதலைப்பற்றிய ''கண்காணிப்பு முறை'' சீரமைக்கப்படும். பயிர்களைத் தா கும் பூச்சிகள் பற்றிய எச்சரிக்கைச் செய்திகள் அகில இந்திய வானொலியின் வாயிலாக உழவர்களுக்கு தொடர்ந்து அறிவிக் கப்படும். பூச்சிகள் மற்றும் நோய்கள் தாக்குதல் குறித்து காலத்தே உழவர்களுக்கு எச்சரித்திட பயிற்சி பெற்ற பள்ளி ஆசிரியர்களின் பணியை சிறந்த முறையில் பயன்படுத்தப் படும்.

(ஐ) தோட்டக்கலை.

மாதிரிப் பழத்தோட்டங்கள்.—பழச்செடிகள், மற்றும் இதர தோட்ட வகைக் கன்றுகள் உற்பத்தி செய்து தேவைக் கேற்ப விநியோகிக்கவும், விஞ்ஞான முறையில் தோட்டங்கள்

அமைப்பதை செயல்முறையில் காட்டவும், இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட 9 இடங்களில் அரசு மாதிரிப் பழத் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன :—

ஆத்தூர் (செங்கை மாவட்டம்)
கூட்டப்பட்டு (வட ஆற்காடு மாவட்டம்)
மருங்குளம் (தஞ்சை மாவட்டம்)
கொடைக்கானல் (மதுரை மாவட்டம்)
பெரியகுளம் (மதுரை மாவட்டம்)
பூவாணி (இராமநாதபுரம் மாவட்டம்)
குற்றாலம் (நெல்லை மாவட்டம்)
திம்மாபுரம் (தருமபுரி மாவட்டம்)
கூனூர் (நீலகிரி மாவட்டம்)

தென் ஆற்காடு மாவட்டத்தில் மற்றுமொரு மாதிரித் தோட்டம் அமைக்கப்படவிருக்கிறது.

இந்த மாதிரித் தோட்டங்களைத் தவிர, (Kew) 'கியூ' என்னும் அன்னாசிப் பழச் சாகுபடிக்காக மதுரை, கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு திட்டம் 1974–75 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் அமைந்துள்ள ''அண்ணா பண்ணையில்'' 1974–75 ஆம் ஆண்டில் ''பழவகைகள் ஆராய்ச்சி நிலையம்'' அமைக்கப்பட்டது. இந்நிலையத்தில், சீதோஷ்ண மண்டலத்தில் பயிராகும் பல பழவகைகள் சாகுபடி பற்றிய ஆராய்ச்சி சீரிய முறையில் நடைபெற்று வருகிறது.

மலைப் பிரதேசத்தில் தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்.—வட ஆற்காடு, சேலம், திருச்சி மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள மலைப்பிரதேசங்களில் வாழும் மலைசாதியினரின் மேம்பாட்டிற்காக இத்திட்டம் செயல்படுகிறது. தோட்டக்கலை அபிவிருத்திக்காக, தேவையான எல்லா உபகரணங்களும் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகின்றன.

(ஒ) ஆராய்ச்சிப் பணிகள்.

உயர் விளைச்சல் ரகங்கள், குறிப்பாக மானாவாரி மற்றும் புழுதி விதைப்பு பகுதிகளுக்கு ஏற்ற பயிர் ரகங்களை சோதனைகள் மூலம் தேர்ந்தெடுக்கும் பணி தொடரப்படும். 31 நெல் ரகங்கள் பல்வேறு நிலையில் ஆய்வில் உள்ளன. புழுதி நிலப் பகுதிகளுக்கு ஏற்ற 3 இரகங்களும், களர் மற்றும் உவர் நிலங்களுக்கு ஏற்ற நான்கு இரகங்களும் இவற்றில் சேரும். இவ் ஆய்வின் முடிவுகள், கன்னியாகுமரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த உழவர்களுக்கு மிகப் பெரிய அளவில் பயனுடையதாய் இருக்கும். ''பயிர் உணர்வு ஆய்வுகளின்'' அடிப்படையில் மண்பரிசோதனையும் உரப் பரிந்துரைகளும் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்றவாறு அமைக்கப்படும். மானாவாரிப் பகுதிகளின் தேவைகளுக்கு சிறப்பான கவனம் செலுத்தப்படும். இதற்காக மானாவாரி சாகுபடி முறைகளை பற்றிய ஆய்வும், நீர் சேகரிப்பு நுட்ப முறைகள் பற்றிய ஆய்வும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.





சிறப்புத் திட்டங்கள் :—1. மலைப் பகுதித் திட்டம்.—நீலகிரி மாவட்டத்தின் தனித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள மண்வளப் பாதுகாப்பு, விதை உற்பத்தி, சிறிய விவசாயிகளின் தேயிலை மற்றும் காப்பி தோட்டங்களை அபிவிருத்தி செய்தல் ஆகிய திட்டங்கள் இந்த ஆண்டும் தொடரப்படும். இந்தத் திட்டங்களுக்காக ரூ. 84·80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் தோடர்கள் மற்றும் மலைவாழ் மக்களின் தேவைகளையும் நிறைவு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

2. ஒருங்கிணைந்த மானாவாரி மேம்பாட்டுத் திட்டங்கள்.—புதுக்கோட்டை, கோவில்பட்டி பகுதிகளில் செயல்படுத்தப்படும் மானாவாரி மேம்பாட்டுத் திட்டங்களின் நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்படும். இந்த இரண்டு முன்னோடி திட்டங்களுக்காக ரூ. 14·16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. வாழையில் முடிக்கொத்து நோய்த் தடுப்பு.—மலைவாழை மிகுந்த பரப்பளவில் பயிரிடப்படும் கொடைக்கானல் பகுதியில் கடுமையான அளவில் முடிக்கொத்து நோய் காணப்பட்டது. இந்நோய் பரவுதலைத் தடுக்கவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழை சாகுபடியை சீராக்கவும் மாநில அரசு உரிய பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டுள்ளது. இந் நோயைக் கட்டுப்படுத்த முறையான மருந்து தெளிப்பு முறைகளை தீவிரப்படுத்துவதுடன், சமச்சீர் உரமிடுதல் போன்ற உழவியல் முறைகளையும் பரிந்துரை செய்து, நோய் தாக்கப்பட்ட தோட்டங்கள் மீண்டும் வளம் காண வழிவகைகள் செய்யப்படும். இந்த ஆண்டில் 36,000 ஏக்கர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்திய-ஜெர்மானிய நீலகிரி மாவட்ட அபிவிருத்தித் திட்டம்.—

மேற்கு ஜெர்மனி அரசு ஒத்துழைப்புடன் நீலகிரி மாவட்ட அபிவிருத்திக்காக இத்திட்டம் 1967-ம் ஆண்டு ஜனவரி 8-ம் தேதி துவக்கப்பட்டது. இம்மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவது இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

<u>இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன—</u>

(அ) உயர் விளைச்சல் ரக உருளைக்கிழங்கு, காய்கறிகள், உணவு தானியங்கள் மற்றும் புல்வகைகளைப் பயிரிடுதல்.

(ஆ) தீவிரப் பிரசாரத்தின் மூலம் விவசாயிகளுக்கு இப் பயிர்களின் சிறந்த சாகுபடி முறைகளை விளக்கி மேற் கொள்ளச் செய்தல்.

(இ) பயிர் சுழற்சி (Crop rotation) மூலம் பல பயிர் சாகுபடி முறையைக் கடைப்பிடித்தல். இதன் மூலம் உருளைக் கிழங்கு மட்டும் சாகுபடி செய்வதை மாற்றுதல்.

(ஈ) உற்பத்தி செய்யும் வேளாண்மைப் பொருள்களுக்கு தகுந்த விலை கிடைக்க விற்பனை வசதிகளைப் பெருக்குதல். இத் திட்டம் 10 ஆண்டுகளாக நடைபெற்று 11-ம் ஆண்டின் துவக் கத்தில் உள்ளது.

உருளைக்கிழங்கு பயிரைத் தாக்கும் பொன்னிற நூற்புழு வைக் கட்டுப்படுத்தும் தீவிரத் திட்டம், 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் துவக்கப்பட்டது. இப் புழுவை அழிப்பதற்கான மருந்து வேளாண்மை பெருமக்களுக்கு சலுகை விலையில் வழங்கப் பட்டது. முதல் மூன்று முறை தெளிப்பதற்கு இம்மருந்து இனமாக வழங்கப்பட்டது. அடுத்து, மூன்று முறை உப யோகிக்க, படிப்படியாக 75, 50 மற்றும் 25 சத வீத மான்ய விலையில் இம்மருந்து வழங்கப்பட்டது. இந்த பூச்சி ஒழிப்புத் திட்டம் 1976 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் தேதியுடன் முடி வுற்றது. புதிதாகத் தாக்கியுள்ள பகுதிகளில் இப்புழுவைக் கட்டுப்படுத்த 'டெமிக்' என்னும் ஒரு புதிய மருந்து 50 சத மான்ய விலையில் வழ்ங்கப்படுகிறது. இந்த மான்யத் திட்டத்தின் கீழ் 3.6 டன் மருந்து விநியோகிக்கப்பட்டு, 450 ஏக்கரில் இப்புழு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 246 வேளாண்மை பெருங்குடி மக்கள் பயனடைந்துள்ளனர்.

4. இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சிறு விவ சாயிகள் கடன் நிதியிலிருந்து சிறு, மற்றும் ஏழை விவசாயி களுக்கு காய்கறி சாகுபடிக்கான கடன் வசதி செய்து தரப் படுகிறது. 1976-77ஆம் ஆண்டு 235 விவசாயிகளுக்கு ரூ. 3.8 லட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

5. 1976-77ஆம் ஆண்டு 75 ஹெக்டேரில், விவசாயிகள் நிலத்தில் விதை உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது. பொன்னிற நூற்புழு தாக்காத பகுதியாக தேர்ந்தெடுக்கப் பட்டு, சான்றிதழ் பெற்ற விதைக் கிழங்குகள் விநியோகிக்கப் பட்டன. 1977-78ஆம் ஆண்டு 'அழுகல் நோய்' தாக்காத புதிய ரகங்களை சாகுபடிக்கு கொண்டு வர இருக்கிறது.



6. காய்கறி உற்பத்திக்கு, திட்டத் துவக்கத்திலிருந்தே தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பொறுக்கு காய்கறி விதை விநியோகம், கூடுதலான பரப்பில் காய்கறி சாகுபடி மேற்கொள்ளுதல், அனுசரணை ஆராய்ச்சிப் பாத்திகள் அமைத் தல், செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல், சிறந்த காய்கறி சாகுபடி முறைகளை விவசாயிகளுக்கு எடுத்துக் காட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களா கும். விதை வழங்கும் திட்டத்தின் கீழ் 1976-77 ஆம் ஆண்டு 16 டன் சிறந்த உயர் விளைச்சல் காய்கறி விதைகள் விநி யோகிக்கப்பட்டு 1,644 ஹெக்டேர் நிலத்தில் சாகுபடி செய் யப்பட்டது.

7. நீலகிரி காய்கறி உற்பத்தியாளர் சங்கம் அரசு பதிவு பெற்றது. இம்மாவட்டத்தில் பயிராகும் காய்கறிகளை விவ சாயிகளிடமிருந்து வாங்கி, விற்பனை செய்வது இதன் முக்கியப்பணி, திருச்சி, சென்னை, மைசூர், பம்பாய், கல்கத்தா மற்றும் டெல்லி ஆகிய இடங்களில் உள்ள விற்பனை நிலையங்களுக்கு இந்த சங்கம் காய்கறிகளை அனுப்பி வைக்கிறது. இச் சங்கத்தில் 1,565 உறுப்பினர்கள் உள்ளனர். விவசாயிகளுக்குத் தேவையான விதைகளை இச் சங்கம் வழங்குகிறது. இவ் வாண்டு இச் சங்கத்தின் வரவு-செலவு சுமார் ரூ. 50 லட்சத்தை எட்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

8. வசதிகள் நிறைந்த ஒரு மண் ஆராய்ச்சி நிலையம் உதகை யில் அமைக்கப்பட்டுள்ளது. வேளாண் நிலங்களிலிருந்து மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டு இம்மாவட்டத்திற்கான நிளவள வரைபடம் தயாரிக்கப்பட் டுள்ளது. சென்ற ஆண்டு 9,200 மண் மாதிரிகளும் 464 பயிர் மாதிரிகளும் இந்நிலையத்தில் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

1977-78 ஆம் ஆண்டில் 2,200 மெ. டன் நோய் தாக்காத விதை உருளைக்கிழங்குகள் விநியோகம் செய்யப்படும். 100 ஹெக்டேரில் நூல் புழுவை கட்டுப்படுத்தும் திட்டம் மேற் கொள்ளப்படும். உயர் விளைச்சல் தரும் காய்கறி விதைகள் 19 மெ. டன் விநியோகம் செய்யப்படும். கூடுதலாக 20 ஹெக்டேரில் பழக்கன்றுகளும், 120 ஹெக்டேரில் மரவள்ளி யும், 800 ஹெக்டேரில் உயர் விளைச்சல் தரும் இஞ்சியும் மற்றும் 40 ஹெக்டேரில் வாசனைத் திரவியப் பயிர்களும் பயிர் செய்யப்படும்.

<u>(ஓ) பயிற்சித் திட்டம்:</u>

உழவர்களுக்கு பயிற்சி அளிக்க இம்மாநிலத்தில் ஒன்பது உழவர் பயிற்சி நிலையங்கள் இதுவரை நிறுவப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒன்றும்,

தர்மபுரி மாவட்டத்தில் ஒன்றும், ஆக இரண்டு உழவர் பயிற்சி நிலையங்கள் புதிதாக நிறுவப்படும். இம்மாநிலத்தில் 13 விவசாயப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் வேளாண் குடும்பத்தைச் சார்ந்த 390 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கை தொடர்ந்து நடத்தப்படும்.

(ஔ) விற்பனையும் தரக்கட்டுப்பாடும் :

நல்ல விற்பனை முறைகள் மூலம் விவசாயிகளின் வருவாயை அதிகமாக்கும் வகையில் வேளாண் துறையின் விற்பனைப் பிரிவு பருத்தி தரம் பிரித்தல் மற்றும் எண்ணெய், நெய் போன்ற வேளாண் விளை பொருட்களின் தரம் பிரித்தல் போன்றவைகள், பரவலாக்க பிரத்தியேகமான கவனம் செலுத்தப்படும். 1977–78 ஆம் ஆண்டில் மேலும் இரண்டு '' அக்மார்க் '' ஆய்வுகூடங்களும், 10 தரம் பிரிக்கும் மையங்களும், 15 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் தரம் பிரிக்கும் மையங்களின் வாயிலாக கூடுதலாக 1,29,000 குவிண்டால் பருத்தியைத் தரம் பிரிக்க உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## வேளாண்மைப் பொறியியல்.

வேளாண்மைப் பொறியியல் பிரிவு, நிலத்தையும், நீரையும் நல்ல முறையாகப் பயன்படுத்தற்குரிய அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ளும்.

(அ) நிலச் சீர்திருத்தம் :

நிலத்தை சமப்படுத்துவதற்கும் உழவு வேலைகளுக்காகவும் 163 புல்டோசர்களும், 177 டிராக்டர்களும் இத்துறை வசம் உள்ளன. 1977–78 ஆம் ஆண்டில் 4,600 ஹெக்டேர் நிலம் புல்டோசர்கள் மூலமாக சமப்படுத்தப்படும். 20,200 ஹெக்டேர் பரப்பளவில் டிராக்டர் மூலம் உழவு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) சிறுபாசனம் :

விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்காக இத்துறை வசம் 147 விசைத் துளைப்பான்களும் மற்றும் பல கருவிகளும் உள்ளன. 6,000 குழாய்க் கிணறுகள் அமைக்கவும், ஏற்கெனவே உள்ள 2,300 கிணறுகளை ஆழப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 2,000 கிணறுகளில் துளைகள் இடவும் திட்டமிடப்பட்டுள்ளது.



(இ) மண்வளப் பாதுகாப்பு :

மண்வளப் பாதுகாப்பின் கீழ் சமதள வரப்புகள் அமைத்தல், படிப்பாத்திகள் அமைத்தல், நிலத்தைச் சமப்படுத்துதல் போன்ற முறைகள் 39,620 ஹெக்டேர் பரப்பளவில் மேற்கொள்ளப்படும். தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் வறட்சி நிவாரணமாக 10,000 ஹெக்டேர் பரப்பில் இதுபோன்ற திட்டங்கள் செயலாக்கப்படும். மதுரை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 4,000 ஹெக்டேர் பரப்பளவில் '' காற்றரிப்பு தடுப்பு முறைகள் '' மேற்கொள்ளப்படும்.

புதிய முயற்சிகள் :

(அ) நீர் பராமரிப்பு.—நமது மாநிலத்தில் வேளாண்மை வளர்ச்சிக்கு வேண்டிய அளவு பாசன நீர் இல்லாதது ஒரு பெரும் குறை: கிடைக்கின்ற நீரினின்று அதிக அளவு பயன் பெற்றிட வாய்க்கால் வழியாகவும், வயலிலும் நீர் வீணாவதைத் தடுக்கும் முறைகளைக் கண்டுபிடித்து குடியானவர்களிடம் பரப்பிட வேண்டும். இந்த லட்சியத்தைக் கருத்தில் கொண்டு நடப்பு ஆண்டில் வைகை ஆற்றுப் பகுதியில் சுமார் 1,000 ஏக்கரில் ''நீர் பராமரிப்பு'' பற்றிய முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான பூர்வாங்க ஆய்வுகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இது போன்ற ''நீர் பராமரிப்பு'' திட்டங்கள் தஞ்சையிலும் மேற்கொள்ளப்படும்.

(ஆ) மானாவாரி சாகுபடி.—இதுகாறும் வேளாண்மைத் திட்டங்கள் பெருமளவு இறவைப் பகுதியிலேயே திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டு வந்துள்ளது. மானாவாரிப் பகுதிகளில், வேளாண் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த தீவிர முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும். மானாவாரிக்கான உழவியல் முறைகளை பரப்புதல், உயர் விளைச்சல் ரக சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி மற்றும் நிலக்கடலை ஆகியவற்றை அதிக அளவில் பயிரிடச் செய்தல், இருபயிர் சாகுபடி மூலம் உற்பத்தித் திறனை கூடுதலாக்குதல் ஆகிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இத்தகைய முறைகளை உழவர்களுக்கு விளக்க பெருவிளக்கப் பண்ணைகள் நிறுவப்படும்.

(இ) பெருவிளக்கப் பண்ணைகள்.—விரிவாக்கப் பணியில் பெருவிளக்கப் பண்ணைகள் அமைப்பது ஒரு புதிய திட்டமாகும். இதன் குறிக்கோள் ஒவ்வொரு நீர் வரவு பகுதியிலும் நிலத்தையும் நீரையும் நல்ல முறையில் பயன்படுத்துவது ஆகும். நடப்பு ஆண்டில் சுமார் 2,000 விளக்கப் பண்ணைகள் குறைந்தது 60,000 விவசாயிகள் பங்கு கொள்ளும் வகையில் அமைக்கப்படும். சுமார்

25 விவசாயிகளுக்குச் சொந்தமான 20 ஏக்கருக்கு குறையாத நீர் வரவுப் பகுதியில் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அவை அளவீடு செய்யப்படும். மண்ணின் தரம் பரிசோதிக்கப்பட்டு, மண் மற்றும் நீர் ஆகியவைகள் சேதமாகாமல் பாதுகாக்க வழி முறைகள் வகுக்கப்படும். மண் பரிசோதனையின் முடிவுக்கு ஏற்ப நிலச் சீர்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும். முறையாக இயற்கை உரங்களை பயன்படுத்தி மண்வளத்தை பாதுகாக்கும் நுட்பமுறைகள் செயல் விளக்க முறையில் விளக்கிக் காட்டப்படும். இந்தப் பகுதிக்கு ஏற்பவும், விவசாயிகளுக்கு ஆதாயமானதாகவும் இருக்கும் பயிர் முறைகள், மற்றும், உழவியல் முறைகள் உருவாக்கப்பட்டு விவசாயிகளின் முழு ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படும். இவ்விளக்கப் பண்ணைகள் அம்மாவட்டத்தில் பணிபுரியும் விஞ்ஞானிகள் விரிவாக்கப் பணியாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பண்ணையின் விவசாயிகள் ஆகியோரின் கூட்டு முயற்சியாகும். இப்பண்ணைகளைக் காணும் பொருட்டு மற்ற விவசாயிகள் குழுவாகச் சேர்த்து அழைத்துச் செல்லப்படுவார்கள். இம்முயற்சி பாசனப் பகுதிகளிலும் மானாவாரிப் பகுதிகளிலும் நிலத்தையும் நீரையும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு வழி வகுக்கும்.

## 1977–78-ம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்.

நடப்பு ஆண்டில் ரூபாய் 112·58 லட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.—இத்திட்டங்கள் பெரும்பான்மையாக தரமான விதைகள் உற்பத்தி செய்யவும், உழவர்களுக்கு நல்ல வசதிகள் கிடைப்பதற்கும் வழி வகை செய்யும். மாநில விதைப் பண்ணைகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் அமைக்கப்படும். தரக்கட்டுப்பாட்டிற்கும் விதைகள் சான்றிதழ் செய்வதற்கும் தனியே ஒரு ஆய்வகம் நிறுவப்படும். ரொபஸ்டா வாழை பயிரிடுவதை அதிகரிக்க திருச்சி மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் 200 ஏக்கர் பரப்பளவில் நல்ல தரமான கன்றுகளை உற்பத்தி செய்ய சிறப்புப் பண்ணைகள் நிறுவப்படும். நல்ல தரமான கரும்பு ரகங்களின் இனப்பெருக்கத்தை அதிகரிக்கும் விதைக்கரணைகள் உற்பத்திக்காக மண்டல பண்ணைகள் அமைக்கப்படும். நூல் புழு தாக்காத உருளைக் கிழங்கு விதைகள் தயார் செய்வதற்கும், ஹோசூரில் உருளைக் கிழங்கு விதை உற்பத்தி மையம் நிறுவப்படும். நிலத்தடி நீரை வெளிக்கொணர்ந்து பயன்படுத்துவதற்கு கூடுதல் துளைக்கருவிகள் வாங்கப்படும். திருநெல்வேலி மாவட்டத்தில் காற்றரிப்பு தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்படும். தஞ்சாவூர் மாவட்டத்தில் 10,000 ஏக்கரில் நீர் பராமரிப்பு பகுதிகள் நிறுவப்படும்.



## கழிவுநீர் உபயோகத் திட்டம்.

நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள கழிவுநீரை உரத்திற்காகப் பயன்படுத்துவது நகர கம்போஸ்ட் உரத் திட்டத்தின் ஓர் பகுதியாகும். இத்திட்டத்தில் வடிகால் முறையை மாற்றியமைத்தல் அல்லது கட்டுமானம் செய்தல், கழிவு நீரைச் சேகரித்து கழிவு நீர்ப் பண்ணையில் நீர்ப்பாசனத்திற்கு உபயோகப்படுத்தல் ஆகியவை அடங்கும். தற்போது 22 உள்ளாட்சி நிறுவனங்கள் கழிவுநீர்ப் பண்ணைகளைப் பராமரித்து வருகின்றன.

2. நடக்கும் ஆண்டில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய " கழிவுநீர் உபயோகத் திட்டத்தை " 10 உள்ளாட்சி நிறுவனங்களில் ரூபாய் 1,32,18,950 செலவில் செயல்படுத்த மாநில அரசு நிர்வாக அங்கீகாரம் அளித்துள்ளது. இதில் மைய அரசு மானியமாக ரூ. 43,62,253-50 (மூலதனச் செலவில் 33 சதவீதம் ) அளித்துள்ளது. மானியத்தின் முதல் பகுதியாக ரூ. 14,54,081-ஐ உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அளிப்பதற்காக மைய அரசு வழங்கியுள்ளது.

3. கழிவுநீர்ப் பண்ணைகளின் மொத்த பரப்பளவு, பயனடைந்த மொத்த நிலப் பரப்பளவு, உற்பத்தியான புல் இதர பயிரின் அளவு, நகராட்சியின் வருமானம் ஆகிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

(1) உள்ளாட்சி நிறுவனங்களினால் பராமரிக்கப்படும் கழிவுநீர்ப் பண்ணைகளின் மொத்தப் பரப்பு .. 3,004·53 ஏக்கர்.

(2) பயன் அடைந்த மொத்த நிலப் பரப்பளவு .. 1,435·89 ,,

(3) உற்பத்தியான புல், இதர பயிரின் மொத்த அளவு (மெ.டன்)

| | | |
|---|---|---|
| 1975–76 | .. | 75,761 மெ. டன். |
| 1976–77 | .. | 79,451 மெ. டன். |

(4) நகராட்சியின் வருமானம்—

| | | |
|---|---|---|
| 1975–76 | .. | ரூ. 29,10,386 |
| 1976–77 | .. | ரூ. 29,19,814 |

## இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்கான வறட்சி பகுதித் திட்டம்.

இத்திட்டம் இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. பல அபிவிருத்திப் பணிகள் மூலம் இம்மாவட்டத்தில் உள்ள பொதுமக்களின், முக்கியமாக ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் வறட்சி தாக்குதலினால் இவர்களுக்கு ஏற்படும் நலிவை ஓரளவு குறைப்பதற்கும் இத்திட்டம் வழிவகை செய்கிறது.

2. இத்திட்டத்திற்காக செலவை 'மத்திய அரசும், மாநில அரசும் சமமாக பகிர்ந்து கொள்கின்றன. ஐந்தாவது திட்ட கால முழுவதற்கும் மாவட்டத்திற்கு ரூ. 6 கோடி என்ற அளவில் மொத்தம் 12 கோடி ரூபாய் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. 6 கோடி ரூபாய் செலவை மத்திய அரசும் மற்ற 6 கோடி ரூபாய் செலவை மாநில அரசும் ஏற்கும்.

3. 1976–77-ம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 138·43 லட்சமும், தருமபுரி மாவட்டத்திற்கு ரூ. 81·09 லட்சமும் செலவழிக்கப்பட்டுள்ளது. 1977–78-ம் ஆண்டுக்கான செயல் திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டுள்ளது. இந்த ஆண்டின் ஒதுக்கீடு, இந்த ஒப்புதலுக்குப் பின் முடிவெடுக்கப்படும்.

## வேளாண்மை மறுநிதி மற்றும் அபிவிருத்திக் கழகத் திட்டங்கள்.

பம்பாயிலுள்ள வேளாண்மை மறுநிதி மற்றும் அபிவிருத்திக் கழகத்தின் உதவியுடன் அரசு சில திட்டங்களை செயலாற்றி வருகிறது:—

2. திட்டத்தின் நிதி தேவையின் 75 சதவீதத்தை இக் கழகமும், மற்ற 25 சதவீதத்தை அரசும் ஏற்கும். இம்மறு நிதி உதவியுடன் உள்ள திட்டங்கள் அனைத்தும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு நில வங்கி மூலம் கூட்டுறவு பதிவாளரால் செயல்படுத்தப்படுகிறது.

3. 1977-78-ம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட கீழ்க்கண்ட திட் டங்கள் செயல்படுத்தப்படும்.

(1) தென்னை.—ஐந்து தென்னை அபிவிருத்தித் திட்டங்கள் நம் மாநிலத்தில் செயல்படுத்தப்படும். திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தில் 500 ஏக்கரில் புதிய தென்னந்தோப்பு கள் ரூ. 13.26 லட்சம் செலவில் அமைக்கப்படும். திருச்சி





மாவட்டத்தில் 500 ஏக்கரில் தோப்புகள் அமைக்கவும் 14,000 கன்றுகள் வயல் ஓரங்களில் நடவும் ரூ. 17.73 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அடுத்து, சேலம் மாவட்டத்தில் ரூ. 24.38 லட்சம் செலவில், 500 ஏக்கரில் தென்னந்தோப்புகள் அமைக்கவும் 15,000 கன்றுகள் நடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இராம நாதபுரம் மாவட்டத்தில் 900 ஏக்கர் தோப்புகளும், 700 கன்று கள் நடவும் மேற்கொள்ளப்படும். இதற்கு ரூ. 27.84 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செங்கை மாவட்டத்தில் ரூ. 28.40 லட்சம் செலவில் 1,000 ஏக்கரில் தென்னந்தோப்புகள் அமைக்கப்படும்.

(2) திராட்சை.—வட ஆற்காடு மாவட்டத்தில் ரூ. 24.57 லட்சம் செலவில் 150 எக்கரில் திராட்சைத் தோட்டம் அமைக்கப் படும்.

(3) ரப்பர்.—கன்யாகுமரி மாவட்டத்தில் ரூ. 9.45 லட்சம் செலவில் 300 ஏக்கரில் ரப்பர் தோட்டம் அமைக்கும் கூடுதல் திட்டம் செயல்படுத்தப்படும்.

(4) கிராம்பு.—கன்யாகுமரி மாவட்டத்தில் 200 ஏக்கரில் கிராம்பு சாகுபடி செய்ய ரூ. 12.81 லட்சம் செலவில் மற்றுமொரு திட்டம் செயல்படுத்தப்படும்.

(5) பழத் தோட்டங்கள்.—மதுரை மாவட்டத்தில், கீழ் பழனிப் பகுதியில் பழத் தோட்டங்கள் அமைக்க ரூ. 12.19 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 490 ஏக்கரில் பழத் தோட்டங்கள் அமைக்கப்படும்.

## பரிசீலனையில் உள்ள திட்டங்கள் :

மேற் கூறியவை தவிர, கீழ்க்கண்ட இதர திட்டங்களும் பரி சீலனையில் உள்ளன:—

(1) தென்னை.—கோவை மாவட்டத்தில், கோவை, பொள் ளாச்சி, உடுமலைப்பேட்டை, அவிநாசி மற்றும் தாராபுரம் வட்டங்களில் ரூ. 2,09.71 லட்சம் செலவில் சுமார் 7,900 ஏக்கரில் புதிதாக தென்னந்தோப்புகள் அமைக்கும் திட்டம்.

(2) இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 1,05.46 லட்சம் செலவில் 3,000 ஏக்கரில் தென்னை அபிவிருத்திக்கான திட்டம்.

(3) கோகோ.—மதுரை மாவட்டத்தில் ரூ. 9.64 லட்சம் செலவில் 300 ஏக்கரில் கோகோ அபிவிருத்தித் திட்டம்.

(4) திராட்சை.—கோவை மாவட்டத்தில் ரூ. 45·63 லட்சம் செலவில் 500 ஏக்கரில் திராட்சை அபிவிருத்தித் திட்டம்.

(5) மல்லிகை.—மதுரை மாவட்டத்தில் 350 ஏக்கரில் ரூ. 23·10 லட்சம் செலவில் மல்லிகைப்பூ சாகுபடி அபிவிருத்தித் திட்டம்.

(6) ஆரஞ்சு.—நீலகிரி மாவட்டத்தில் ரூ. 8·59 லட்சம் செலவில் 500 ஏக்கரில் ஆரஞ்சு சாகுபடித் திட்டம்.

(7) மிளகு.—நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்தில் ரூ. 9 லட்சம் செலவில் 500 ஏக்கரில் மிளகு அபிவிருத்தித் திட்டம்.

(8) காப்பி.—மதுரை மாவட்டத்தில் ரூ. 19 லட்சம் செலவில் 300 ஏக்கரில் காப்பித் தோட்டத் திட்டம்.

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் :

2½ ஏக்கர் வரை பாசன வசதியுள்ள நிலம் அல்லது 5 ஏக்கர் வரை பாசன வசதியற்ற நிலம் உள்ள சிறு விவசாயிகளின் வளத்தைப் பெருக்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிடுதல், திருந்திய சாகுபடி முறைகளை கையாளுதல், தகுந்த உரமிடல் பல பயிர் சாகுபடி ஆகிய முறைகளை இச்சிறு விவசாயிகள் கடைப்பிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துடன் முடிந்த இடங்களில் பாசன வசதிகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. மான்யத்துடன் இணைந்த கடன் வசதிகள் மூலம் தேவையான இடுபொருள்கள் மற்றும் விவசாயக் கருவிகள் வழங்குவதற்கு உதவி அளிக்கப்படுகிறது. பால்பண்ணை போன்ற உபதொழில்கள் அமைக்கவும் உதவி செய்யப்படுகிறது. கால்நடைகள் வாங்க, அவற்றிற்கான மருத்துவ வசதி பெற, மற்றும் விவசாயப் பொருள்களை விற்பனை செய்ய ஆகிய பல துறைகளிலும் உதவி அளிக்கப்படுகிறது. சென்னை, இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்கள் நீங்கலாக இத்திட்டம் இதர 12 மாவட்டங்களிலும் அமுலில் உள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள 50,000 சிறு விவசாய குடும்பங்கள் இத்திட்டத்தினால் பயனடைவர்.



1976-77 ஆம் ஆண்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மத்திய அரசினால் ஒதுக்கப்பட்ட தொகை, வழங்கப்பட்ட தொகை மற்றும் செலவழிக்கப்பட்டது பற்றிய விவரங்கள் கீழ்க்காணுமாறு :—

| மாவட்டம். | மத்திய அரசினால் 1976-77-க்கு ஒதுக்கப்பட்ட தொகை. | வழங்கப்பட்டது (சென்ற ஆண்டு மிகுதி உட்பட). | 1976-77-ல் செலவழிக்கப்பட்டது. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| மதுரை .. .. | 37.00 | 28.020 | 31.747 |
| திருநெல்வேலி .. .. | 31.50 | 35.809 | 31.546 |
| தென்னாற்காடு .. .. | 32.00 | 26.960 | 26.720 |
| வட ஆற்காடு .. .. | 32.00 | 20.179 | 18.618 |
| சேலம் .. .. | 32.94 | 26.410 | 25.120 |
| செங்கற்பட்டு .. .. | 32.00 | 31.530 | 21.890 |
| தஞ்சாவூர் .. .. | 30.00 | 15.202 | 14.900 |
| திருச்சிராப்பள்ளி .. .. | 32.00 | 21.340 | 19.960 |
| புதுக்கோட்டை .. .. | 30.00 | 23.532 | 23.094 |
| கோயமுத்தூர் .. .. | 29.30 | 28.590 | 24.200 |
| நீலகிரி .. .. | 30.00 | 15.680 | 14.380 |
| கன்னியாகுமரி .. .. | 19.00 | 19.140 | 18.900 |
| மொத்தம் .. .. | 357.74 | 292.592 | 271.075 |

[1977 ஆகஸ்டு 10

## தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம்.

தமிழ்நாட்டில் வேளாண்மைக்குத் தேவையான இடு பொருள்களை தயாரித்து விநியோகம் செய்வதன் மூலம், வேளாண்மை பெருக்கத்திற்கு ஊக்கமளிக்கும் நோக்குடன் 1968-ம் ஆண்டு முதல் தமிழ்நாடு வேளாண்மை தொழிற் கழகம் பணியாற்றி வருகிறது.

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கீட்டு முதலீடு நான்கு கோடி ரூபாய். செலுத்தப்பட்ட முதலீடு ரூ. 3.3 கோடி. மத்திய அரசும் மாநில அரசும் இதில் சரிசமமாக பங்குகள் கொண்டுள்ளன.

பூச்சி மருந்துகள் தயாரித்து விநியோகித்தல், டிராக்டர்கள் மற்றும் அவற்றின் உபகரணங்களை விற்பனை செய்தல், தவணை முறையிலும் விற்பனை செய்தல், டிராக்டர்கள் மற்றும் விவசாய கருவிகளை விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுதல், பழுதடைந்த டிராக்டர்களை சீர்படுத்துதல் ஆகியவை இக்கழகத்தின் முக்கியப் பணிகள். வேலையில்லாத தொழில் நுட்ப இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து, வேளாண்மைப் பணிமனைகள் அமைக்க உதவி செய்கிறது. மீன்வலை தயாரிக்கும் கூடத்தையும் நடத்துகிறது. 1976 ஆகஸ்டு முதல் இந்த மீன்வலை தயாரிப்பு நிலையம் மீனவர்களுக்கு தேவையான வலைகளை உற்பத்தி செய்து விநியோகிக்கிறது. மேலும், இக்கழகம் மக்காச் சோளத்திலிருந்து பல பொருள்கள் தயாரிப்பதற்கான ஒரு தொழிற்கூடத்தையும் அமைத்துள்ளது. இதன் மூலம் மக்காச் சோளத்திற்கு தகுந்த விற்பனை வசதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

அடுத்த ஐந்தாண்டுகளில் செயல்படுத்த கீழ்க்காணும் புதிய திட்டங்கள் இக்கழகத்தின் பரிசிலனையில் உள்ளன :—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்காச்சோள அறவைப் பிரிவு அமைத்தல்.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் பேப்பர் தொழிற்சாலை.

(இ) திருநெல்வேலி மாவட்டத்தில் 'சென்னு' செடியிலிருந்து பூச்சி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை.

(ஈ) தென் ஆற்காடு மாவட்டத்தில் கல்ராயன்மலைப் பகுதியில் (டானின்) தொழிற்சாலை அமைத்தல்.

(உ) தருமபுரி மாவட்டத்தில் போச்சாம்பள்ளியில் எண்ணெய்த் தொழிற்சாலை.

1975-76 ஆம் ஆண்டு இக்கழகம் 13·92 இலட்ச ரூபாய் லாபம் பெற்றிருக்கிறது.



1977 ஆகஸ்டு 10]

## தமிழ்நாடு மாநிலப் பண்ணைக் கழகம்.

தமிழ்நாடு மாநில பண்ணைக் கழகம் 1974ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1956-ம் ஆண்டு இந்திய கம்பெனி சட்டத்தின்கீழ், இது ஒரு வரையறுக்கப்பட்ட அரசு சார்புள்ள நிறுவனமாக அமைந்துள்ளது. இம்மாநிலத்தில் பல பகுதிகளில் உள்ள சுமார் 11 இலட்சம் ஏக்கர் சாகுபடிக்கு ஏற்ற தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வருதல் இக்கழகத்தின் முக்கிய நோக்கம். இதன் மூலம் உணவு மற்றும் வாணிப விவசாயப் பொருள்களின் உற்பத்திக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் இக்கழகம் 1,655 ஏக்கரில் சாகுபடி மேற்கொண்டுள்ளது. இது தவிர, 1,044 ஏக்கர் முந்திரித் தோட்டங்களும் பராமரிப்பில் உள்ளன. இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்கு மறு வாழ்வு அளிக்கும் வாய்ப்பாக இப்பண்ணைகளில் அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். கடலோரப் பகுதிகளில் உள்ள சதுப்பு நிலங்களைச் சீர்திருத்தி, சாகுபடிக்கு கொண்டு வரவும் இக்கழகம் முனைந்துள்ளது. தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கழுவேலி சதுப்பு நிலப்பகுதி சீர்திருத்தம் இப்பொழுது இதன் பரிசீலனையில் உள்ளது.

இக்கழகத்திற்கான நிதித் தேவைகள், அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள், அகதிகள் மறுவாழ்வு கூட்டுறவு வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்களிலிருந்து குறுகிய கால மற்றும் நீண்ட காலக் கடன் தொகையாக பெறப்படுகிறது, நீண்ட காலக் கடன் தொகைகள் நிலச் சீர்திருத்தம் போன்ற அபிவிருத்தித் திட்டங்களுக்கும், குறுகிய காலக் கடன்கள் சாகுபடி செலவிற்கும் பயன்படுத்தப்படுகின்றன. அரசு தன் பங்காக இதுவரை ரூ. 15 இலட்சம் வழங்கியுள்ளது. மத்திய அரசின் அகதிகள் மறுவாழ்வு அமைச்சகம் இக்கழகத்தின் பங்குத் தொகை முதலீட்டிற்காக ரூ. 77.94 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. இக்கடன் தொகை இலங்கையிலிருந்து வரும் 1,306 அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் நிபந்தனையுடன் வழங்கப்பட்டுள்ளது.

1977—78-ம் ஆண்டு இக்கழகம், 2,774 ஏக்கர் கூடுதல் நிலப் பரப்பை சீர்திருத்தம் செய்யவும், மொத்தம் 8,038.42 ஏக்கரில் சாகுபடி செய்யவும் திட்டமிட்டுள்ளது. இந்த ஆண்டு நிதி அறிக்கையிலிருந்து சாதாரண நிலையிருப்பின் ரூ. 13.6 இலட்சம் இலாபம் கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தொடர்ந்து நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. வேளாண்மை பொறியியல் பட்டப்படிப்பு மற்றும் சுற்றுப்புற உயிரியல் பற்றிய மேல்பட்டப் படிப்பு ஆகியவற்றின் முதல் அணி மாணவர்கள்

1977 ஆகஸ்டு 10]

1976-77 ஆம் ஆண்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மத்திய அரசினால் ஒதுக்கப்பட்ட தொகை, வழங்கப்பட்ட தொகை மற்றும் செலவழிக்கப்பட்டது பற்றிய விவரங்கள் கீழ்க்காணுமாறு :—

| மாவட்டம். | மத்திய அரசினால் 1976-77-க்கு ஒதுக்கப்பட்ட தொகை. | வழங்கப்பட்டது (சென்ற ஆண்டு மிகுதி உட்பட). | 1976-77-ல் செலவழிக்கப்பட்டது. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| மதுரை .. .. | 37.00 | 28.020 | 31.747 |
| திருநெல்வேலி .. .. | 31.50 | 35.809 | 31.546 |
| தென்னாற்காடு .. .. | 32.00 | 26.960 | 26.720 |
| வட ஆற்காடு .. .. | 32.00 | 20.179 | 18.618 |
| சேலம் .. .. .. | 32.94 | 26.410 | 25.120 |
| செங்கற்பட்டு .. | 32.00 | 31.530 | 21.890 |
| தஞ்சாவூர் .. .. | 30.00 | 15.202 | 14.900 |
| திருச்சிராப்பள்ளி .. | 32.00 | 21.340 | 19.960 |
| புதுக்கோட்டை .. | 30.00 | 23.532 | 23.094 |
| கோயமுத்தூர் .. .. | 29.30 | 28.590 | 24.200 |
| நீலகிரி .. .. .. | 30.00 | 15.680 | 14.380 |
| கன்னியாகுமரி .. .. | 19.00 | 19.140 | 18.900 |
| மொத்தம் .. | 357.74 | 292.592 | 271.075 |





1977 ஆகஸ்டு 10]

## தமிழ்நாடு மாநிலப் பண்ணைக் கழகம்.

தமிழ்நாடு மாநில பண்ணைக் கழகம் 1974ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1956-ம் ஆண்டு இந்திய கம்பெனி சட்டத்தின்கீழ், இது ஒரு வரையறுக்கப்பட்ட அரசு சார்புள்ள நிறுவனமாக அமைந்துள்ளது. இம்மாநிலத்தில் பல பகுதிகளில் உள்ள சுமார் 11 இலட்சம் ஏக்கர் சாகுபடிக்கு ஏற்ற தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வருதல் இக்கழகத்தின் முக்கிய நோக்கம். இதன் மூலம் உணவு மற்றும் வாணிப விவசாயப் பொருள்களின் உற்பத்திக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் இக்கழகம் 1,655 ஏக்கரில் சாகுபடி மேற்கொண்டுள்ளது. இது தவிர, 1,044 ஏக்கர் முந்திரித் தோட்டங்களும் பராமரிப்பில் உள்ளன. இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் வாய்ப்பாக இப்பண்ணைகளில் அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். கடலோரப் பகுதிகளில் உள்ள சதுப்பு நிலங்களைச் சீர்திருத்தி, சாகுபடிக்கு கொண்டு வரவும் இக்கழகம் முனைந்துள்ளது. தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கழுவேலி சதுப்பு நிலப்பகுதி சீர்திருத்தம் இப்பொழுது இதன் பரிசீலனையில் உள்ளது.

இக்கழகத்திற்கான நிதித் தேவைகள், அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள், அகதிகள் மறுவாழ்வு கூட்டுறவு வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்களிலிருந்து குறுகிய கால மற்றும் நீண்ட காலக் கடன் தொகையாக பெறப்படுகிறது. நீண்ட காலக் கடன் தொகைகள் நிலச் சீர்திருத்தம் போன்ற அபிவிருத்தித் திட்டங்களுக்கும், குறுகிய காலக் கடன்கள் சாகுபடி செலவிற்கும் பயன்படுத்தப்படுகின்றன. அரசு தன் பங்காக இதுவரை ரூ. 15 இலட்சம் வழங்கியுள்ளது. மத்திய அரசின் அகதிகள் மறுவாழ்வு அமைச்சகம் இக்கழகத்தின் பங்குத் தொகை முதலீட்டிற்காக ரூ. 77.94 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. இக்கடன் தொகை இலங்கையிலிருந்து வரும் 1,306 அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் நிபந்தனையுடன் வழங்கப்பட்டுள்ளது.

1977—78-ம் ஆண்டு இக்கழகம், 2,774 ஏக்கர் கூடுதல் நிலப் பரப்பை சீர்திருத்தம் செய்யவும், மொத்தம் 8,038.42 ஏக்கரில் சாகுபடி செய்யவும் திட்டமிட்டுள்ளது. இந்த ஆண்டு நிதி அறிக்கையிலிருந்து சாதாரண நிலையிருப்பின் ரூ. 13.6 இலட்சம் இலாபம் கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தொடர்ந்து நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. வேளாண்மை பொறியியல் பட்டப்படிப்பு மற்றும் சுற்றுப்புற உயிரியல் பற்றிய மேல்பட்டப் படிப்பு ஆகியவற்றின் முதல் அணி மாணவர்கள்

இவ்வாண்டு தேர்வு பெற்றனர். தோட்டக்கலைப் பட்டப் படிப்பு மற்றும் விதை நுணுக்கத்தில் உயர் பட்டப்படிப்பு மாணவர்களின் இரண்டாம் அணி இவ்வாண்டு தேர்வு பெற்றனர். 1976—77-ம் ஆண்டில் வேளாண்மை தொழில் மேற்பார்வை சம்பந்தமான உயர் பட்டப்படிப்பு துவக்கப்பட்டுள்ளது. இதில் பத்து மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

2. 1976-ம் ஆண்டு டிசம்பர் முதல் தேதியிலிருந்து சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியும் மற்றும் கால்நடை சம்பந்தமான ஆராய்ச்சி நிலையங்களும், வேளாண்மை பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டன. இதன் மூலம் இக்கழகத்தின் ஆராய்ச்சிப் பணி பல துறைகளில் விரிவாக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு முதல் தூத்துக்குடியில் மீன் துறைக் கல்லூரி ஒன்றும் துவக்கப்பட்டுள்ளது. இதில் 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

3. கோ. 40 நெல் (ராஜராஜன்), கோ. 21 சோளம், கோ. 6 கம்பு, கோ. 3 துவரை, கோ. 9 அவ்ரை, கோ. 2 கீரை வகை மற்றும் எம்.டி.யு. 1 மிளகாய் ஆகிய 7 புதிய பயிர் இரகங்கள் இவ்வாண்டு சாகுபடிக்கு வெளியிடப்பட்டுள்ளன. உயர் விளைச்சல் தரும் இந்த இரகங்கள் விவசாயிகளால் பெரிதும் விரும்பி வரவேற்கப்படும். முக்கியமாக கோ. 40 நெல் இரகம் இப்பொழுது சாகுபடியில் உள்ள கோ. 25 இரகத்திற்கு மாற்று ரகமாக அமைய வாய்ப்பிருக்கிறது. ஆகவே, நம் மாநிலத்திலும், அண்டை மாநிலங்களிலும் சுமார் 10 லட்சம் ஏக்கரில் இந்தப் புதிய ரகத்தை சாகுபடிக்குக் கொண்டு வர வாய்ப்பிருக்கிறது.

4. தொழிற்கூடங்களிலிருந்து வெளிப்படும் கழிவுகளினால் பயிர் மற்றும் கால்நடைகளுக்கு ஏற்படும் தீங்கு பற்றிய ஆராய்ச்சி தீவிரமாக்கப்பட்டுள்ளது. தழைச்சத்தை நிலத்தில் சேமிக்கும் நுண்ணுயிர் பற்றிய ஆராய்ச்சி மூலம் பல சுவையான முடிவுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதன் பயனாக, புதிய, சிறந்த நுண்ணுயிர் வகைகள் கண்டுபிடிக்கப்பட்டு வேளாண் பெருமக்களின் உபயோகத்திற்கு விநியோகப்பட்டிருக்கின்றன. இந்த ஆராய்ச்சிக்கென் அமெரிக்க நாட்டில் உள்ள ஒரு நிறுவனம் 50,000 டாலர் தொகையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு உதவியளித்துள்ளது.

5. ஒரு எரிவாயு சாதனம், சூரிய ஒளி மூலம் இயங்கும் நீர் கொதி கலன் மற்றும் வேளாண்மைக் கழிவுகளைக் கொண்டு பேப்பர் தயாரிக்கும் இயந்திரம் ஆகியவை இப்பல்கலைக் கழகத்தில் புதிதாக தயாரிக்கப்பட்டுள்ளன. இவைகள் புழக்கத்திற்கு வரும்பொழுது, கிராம மக்களுக்கு சிறந்த சாதனங்களாக அமையும். நெல் அறுவடை செய்யும் ஒரு இயந்திரம் கூடிய





விரைவில் வேளாண்மைப் பெருமக்களின் உபயோகத்திற்கு வழங்கப்பட இருக்கிறது. ஜவ்வரிசி தொழிற்சாலைகளுக்கான ஒரு புதிய இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தற்சமயம் இத்தொழிற்சாலைகளில் காணப்படும் கழிவுகளினால் ஏற்படும் தீமைகளை அகற்ற முடியும். சேலத்தில் உள்ள தொழிற்சாலைகளில் இப்புதிய கண்டுபிடிப்பு பரிசோதனையில் உள்ளது.

6. வனத்துறையில் யூகலிப்டஸ், சவுக்கு, மூங்கில் ஆகியவைகளில் புதிய வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப் புதிய வகைகள் மேட்டுப்பாளையத்தில் அமைந்துள்ள வனத் துறை ஆராய்ச்சி நிலையத்தில் பயிராக்கப்பட்டு பரிசோதனையில் உள்ளன. இவைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7. மீன் துறையில், கழிவு நீரில் மீன் வளர்க்கும் ஆராய்ச்சி தீவிரமாக்கப்பட்டுள்ளது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் மற்றும் உலக விஞ்ஞானக் கழகம் ஆகியவற்றின் உதவியுடன் மீன் வளர்ப்புக்காக இரு ஆராய்ச்சித் திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளன.

8. இப்பல்கலைக் கழகத்தின் விஸ்தரிப்புப் பணி தீவிரமாக்கப்பட்டுள்ளது. கோவை மற்றும் மதுரையில் உள்ள உழவர் பயிற்சி நிலையங்கள், மாணவர்களின் பரிசோதனைக் கூடங்களாக திகழ்ந்தன. வேளாண் பெருங்குடி மக்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளவும், விஸ்தரிப்பு பயிற்சியைப் பெறுவதற்கும் இவை மிக உதவியாக இருந்தன. தபால் மூலம் வேளாண்மைக் கல்வி, மற்றும் அகில இந்திய வானொலி மூலம் ஒலிபரப்பப்பட்ட பாட திட்டங்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. "வளரும் வேளாண்மை" என்ற வேளாண்மைப் பத்திரிகையின் வெளியீடு 3,000-லிருந்து 4,500 ஆக உயர்ந்தது.

9. திருச்சிக்கு அருகில் ஒரு பண்ணை விஞ்ஞான கூடம் திறக்கப்பட்டுள்ளது. இந்திய வேளாண்மைக் கழகத்தின் உதவியுடனும், தனியார் உதவி நிதியுடனும் துவக்கப்பட்டுள்ள இந்த பயிற்சிக் கூடத்தில் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளோருக்கு பல துறைகளில் பயிற்சி அளிக்கப்படும்.

10. இந்த பல்கலைக் கழகத்திற்கு 1976—77-ம் ஆண்டு அரசு அளித்த உதவி ரூ 191·55 இலட்சம்.

11. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் 1976—77-ம் ஆண்டில் ஆராய்ச்சிப் பணிகளுக்காக ரூ. 54·78 இலட்சமும், விரிவாக்கப் பணிகளுக்காக ரூ 29.93 இலட்சமும் உதவியளித்துள்ளது.

1977—78-ம் ஆண்டு வேளாண்மை, கால் நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத்திற்காக கீழ்க்கண்ட தொகைகள் செலவழிக்கப்பட உள்ளன. —

| | | திட்டம். | திட்ட மில்லாதது. | மொத்தம். |
|---|---|---|---|---|
| | | (இலட்சத்தில்) | | |
| வேளாண்மை | .. | 30.00 | 165.00 | 195.00 |
| கால்நடை பராமரிப்பு | .. | 60.25 | 81.91 | 142.16 |
| மீன்வளம் | .. | 5.00 | .. | 5.00 |
| மொத்தம் | .. | 95.25 | 246.91 | 342.16 |

இது தவிர, இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தின் உதவி ரூ.78.54 இலட்சமாக இருக்கும். மற்றும் வேளாண்மை கால்நடை பராமரிப்பு அபிவிருத்தி மான்யமாக இந்திய விவசாய ஆராய்ச்சி கழகத்திலிருந்து ரூ.80 இலட்சம் எதிர்பார்க்கப்படுகிறது. இவை தவிர மத்திய அரசு உதவியாக ரூ. 4.86 இலட்சமும், இதர வகைகளில் ரூ. 8.75 இலட்சமும் எதிர்பார்க்கப்படுகிறது..

வேளாண்மை உற்பத்தித் திறன் ஆய்வுக் குழு.—தமிழ்நாடு வேளாண்மை உற்பத்தித் திறன் ஆய்வுக்குழு, 1860-ம் வருடத்திய சொசைட்டி சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்டு 1976-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் பணியாற்றி வருகிறது, வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களின் உற்பத்தித் திறனைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு அதன் அடிப்படையில் உற்பத்திக்கான வழி முறைகளை சிபாரிசு செய்வது இக்குழுவின் முக்கிய பணியாகும்.

1976—77-ம் ஆண்டு கீழ்க்கண்ட ஆய்வுகளை இக்குழு மேற்கொண்டுள்ளது :—

(1) திருநெல்வேலி மாவட்டத்தில், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சில முக்கிய திட்டங்களினால் ஏற்பட்டுள்ள மாறுதல்களைப் பற்றிய ஆராய்ச்சி.

(2) செங்கல்பட்டு மாவட்டத்தில் சாகுபடிக்கு ஏற்ற தரிசு நிலங்களைப் பற்றிய ஆய்வு அறிக்கை தயாரித்தல்.

(3) வேளாண்மைத் துறையினரால் உபயோகப்படுத்தப்படும் கிணறு தோண்டும் கருவிகளின் திறன், அவைகளை மேலும் அதிகமாக உபயோகிக்க உள்ள சாத்தியக் கூறுகள், இவைகள் வாடகைக்கு விடுவதன் மூலம் உள்ள பொருளாதார திறன்-ஆகியவை பற்றிய ஆய்வு.





(4) நமது மாநிலத்திலும், பாண்டிச்சேரி மாநிலத்திலும் அமைந்துள்ள வேளாண்மைப் பணியனைகளின் வேலைத் திறன் பற்றிய ஆய்வு.

(5) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளின் சமுதாய வாழ்க்கைத் தரம் பற்றிய ஒரு ஆய்வு.

(6) மதுரை மாவட்டத்தில், சிறு விவசாயிகளின் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கால்நடை பராமரிப்பு அடைந்துள்ள முன்னேற்றம் பற்றிய ஆய்வு.

1977—78-ம் ஆண்டு கீழ்க்கண்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் :—

1. தமிழ்நாட்டில், வேளாண்மை உற்பத்தியில், கூட்டுறவு வேளாண்மை பணிமனைகளின் பங்கு பற்றிய ஆய்வு.

2. சில காலங்களில் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ள பழங்கள் மற்றும் காய்கறிகளை சிறந்த முறையில் பயன்படுத்த உள்ள வாய்ப்புகள் பற்றிய ஆய்வு.

3. ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கும் கழிவு நீரை சிறந்த முறையில் பயன்படுத்த உள்ள சாத்தியக் கூறுகள் பற்றிய ஆய்வு.

4. வட ஆற்காடு மாவட்டத்தில் உயர் விளைச்சல் வாணிப பயிர்களின் தேவைக்கேற்ற உற்பத்தியைப் பற்றிய பரிசீலனை.

5. சென்னையில் உள்ள சில குடிசைவாழ் மக்களின் உணவுப் பழக்கத்தைப் பற்றிய விவரங்களைச் சேகரித்தல். முக்கியமாக இவர்கள் பால் உபயோகிப்பதைப் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்படும். மேலும் பழநி பகுதியில் சிறு விவசாயிகள் தமிழ்நாடு பால்வள நிறுவனம் மூலம் அடைந்துள்ள பயன் பற்றிய அறிக்கை.

6. பன்றிப் பண்ணைகள் அமைப்பது பற்றியும், தமிழ்நாட்டில் பன்றி அபிவிருத்தி பற்றிய ஆய்வறிக்கை தயாரித்தல்.

7. கிராமிய மின் இணைப்புத் திட்டம் செயல்படும் விதத்தைப் பற்றியும், அதனால் ஏற்பட்டுள்ள பயன்களைப் பற்றியும் ஆய்வு.

8. வட ஆற்காடு மாவட்டத்தில் சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டத்தில் விதை, உரம், பூச்சிமருந்து போன்ற இடு பொருள்கள் வழங்குதல் பற்றிய அறிக்கை.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

## வியாழக்கிழமை, 1977 ஆகஸ்டு, 11.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவை தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### இளைஞர் அணித் திட்டம்.

*46 வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இளைஞர் அணித் திட்டத்தின்கீழ் தற்போது பணியாற்றிக் கொண்டு வருவோரின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : இளைஞர் அணியில் தற்பொழுது பணியாற்றி வருவோரின் மொத்த எண்ணிக்கை 1,113 ஆகும். அதில் ஆண்கள் 865. பெண்கள் 248.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இளைஞர் அணியில் வேலைக்கு இருந்தவர்களை, அவசர காலத்தைப் பயன்படுத்தி, நூற்றுக் கணக்கானவர்களை வீட்டிற்கு அனுப்பியிருக்கிறார்கள். மீண்டும் அவர்களை வேலையில் அமர்த்திக்கொள்ள உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர் அணி என்கிற திட்டம் 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தோற்றுவிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி இரண்டு ஆண்டுகள் தான் அவர்கள் வேலையில் அமர்த்தப்படுவார்கள் என்று அறிவிப்பு இருந்ததே தவிர தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிப்பதாகச் சொல்லப்பெறவில்லை. என்றாலும் இரண்டாண்டுகளுக்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் என்று நீட்டிப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

[1977 ஆகஸ்ட் 11

திரு. ரா. மார்க்கபந்து : சென்ற ஆட்சியின்போது இளைஞர் அணியில் முன்னால் இருந்து பாஸ் செய்தவர்களை எல்லாம் எடுக்காது, பின்னால் வந்தவர்களை, தங்கள் ஆட்சிக்குச் சாதகமாக இருந்தவர்களை நிரந்தர சர்வீசில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். சீனியாரிடி லிஸ்ட்படி முன்னால் இருந்து பாஸ் செய்தவர்களையும் நிரந்தர சர்வீசில் சேர்க்க முன்னுரிமை தரப்படுமா? அதைப்பற்றி இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்ற ஆட்சியின்போது என்று குறிப்பிட்டார்கள். சென்ற ஆட்சி என்பது குடியரசுத் தலைவர் ஆட்சியா? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியா? என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

திரு. ரா. மார்க்கபந்து : எந்த ஆட்சியாக இருந்தாலும் பரவாயில்லை. என்றாலும் நான் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைத்தான் குறிப்பிட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இளைஞர் அணித் திட்டத்தின்கீழ் 1971—72 இல் ஆண்கள் 1,801, பெண்கள் 199 ஆக 2,000 பேர்களும். 1972—73 இல் ஆண்கள் 1,450, பெண்கள் 150 ஆக மொத்தம் 1,600 பேர்களும், 1973—74 இல் ஆண்கள் 1,525, பெண்கள் 275 ஆக மொத்தம் 1,800 பேர்களும், 1974—75 இல் ஆண்கள் 400-ம் பெண்கள் 250-ம் ஆக மொத்தம் 650 பேர்களும், மொத்தமாக ஆண்களில் 5,176 பேர்களும், பெண்களில் 874 பேர்களும் மொத்தம் 6,050 பேர்களும் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போன்ற குற்றச்சாட்டிற்கு, அரசிடம் எந்தவிதமான ஆதாரமும் இல்லை.

திரு. ரா. உமாநாத் : இந்தத் திட்டம் அமுலாக்கப்பட்டபோது, இவர்களது காலம் முடிந்த பிறகு இவர்களை நிரந்தரமாக வேலையில் அமர்த்துவது குறித்த நோக்கமோ, திட்டமோ அரசிடம் இருந்ததா? அப்படி இருந்திருக்குமானால் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



1977 ஆகஸ்ட் 11]

நல்ல வேலையைப் பெறத் தக்கவகையில் அவர்களுக்குக் கூடுதல் தகுதியை அளிக்கும் நோக்கத்துடனேயே தொண்டர்களாகப் பணிபுரியும் வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

திரு. என். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இளைஞர் அணியிலே பணியாற்றுகின்ற மாணவர்களுக்கு தேர்வுக் கழகத்தால் நடத்தப்படுகின்ற தேர்வுகளில் முன்னுரிமை தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அவர்களுக்கு என்று தனி முன்னுரிமை எதுவும் வழங்கப்படவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இளைஞர் அணியில் வேலை செய்கிறவர்களை முதலில் நியமித்தபோது என்ன நோக்கத்தோடு நியமித்து இருந்தாலும் இப்போது அவர்கள் 4 ஆண்டு அனுபவம் பெற்றிருக்கிறார்கள். பலர் விவாகம் செய்து குழந்தை குட்டிகளோடு வாழ்க்கை நடத்துகிறார்கள். பலருக்கு ஓவர் ஏஜ் ஆகிவிட்டது. அவர்கள் இனி வேறு வேலையில் சேர வாய்ப்பில்லை. ஆகவே, இதை மனிதாபிமான நோக்கத்தோடு பார்த்து இப்போது இருக்கின்றவர்களுக்காவது அவர்கள் பாதிக்கப்படாத முறையில் அனைவருக்கும் நிரந்தரமான மாற்று வேலைகள் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : சமூக நலத்துறையில் 1974-ம் ஆண்டு மே மாதம் 5-ம் நாளன்று பிறந்த 378-ம் எண்ணில் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. அதன்படி அரசுத்துறையிலுள்ள நியமன அதிகாரிகள் அனைவருக்கும், அதாவது துறைத் தலைவர்கள், பொதுத்துறைக் கழகங்கள், ஓரளவு அரசு நிறுவனங்கள் ஆகியவற்றின் நிர்வாக இயக்குநர்கள், சட்டப்படிக்கான மன்றங்களின் தலைவர்கள், தமிழ்நாடு அரசுப்பணி தேர்வாணைக் கழகத்தின் வரம்பினுள் வராத நியமனங்களையும், வேலைவாய்ப்பு நிறுவனம் பரிந்துரைத்த தகுதி வாய்ந்தவர்களின் பெயர்ப் பட்டியல்களிலிருந்தோ, அல்லது பொருத்தமான அதிகாரி ஒருவரால் அளிக்கப்பெற்று செல்திறமுள்ள சான்றிதழை வைத்திருக்கிற பணிபுரிகின்ற பணியிலிருந்து நீக்கம் பெற்ற வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்திராத இளைஞர் அணித் தொண்டர்களின் பெயர்களைக் கொண்ட பட்டியலிலிருந்தோ ஆட்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் நிரப்புவதற்கு விருப்ப உரிமை அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பட்டம் பெற்றுவிட்டு வேலை இல்லாமல் இருந்த இளைஞர்கள் முழுமையாக இதனால் பயனடைய முடியவில்லை என்றாலும், ஓரளவு குறிப்பிட்ட 3 ஆயிரத்திலிருந்து 4 ஆயிரம் பேர்கள்—இளைஞர்

கள்— மாதந்தோறும் உரிய, ஓரளவு ஊதியத்தை அவர்கள் பெற்று கிராமங்களிலே அந்தப் பணியை ஆற்றினார்கள். சிற்சில இடங்களிலே நோக்கம் நிறைவேறவில்லை என்ற காரணத்தினால் சில இளைஞர் அணியினர் மீது நடவடிக்கையும் அப்போது எடுக்கப்பட்டது. அந்த அளவுக்கு இந்த முயற்சியை ஊக்கப்படுத்துகின்ற வகையில் சரியான முறையில் பணியாற்றாத இளைஞர் அணியினர் மீது நடவடிக்கைகள் எடுத்தும். நல்ல முறையில் பணியாற்றுகின்ற இளைஞர் அணியினரைத் தொடர்ந்து அந்தப் பணியில் ஈடுபடுத்தவும் அவர்கள் எதிர்காலத்திலே நல்லதொரு வேலைக்குச் செல்கின்ற அளவுக்கு அத்தகைய நிலையை அவர்களுக்கு ஏற்படுத்த இந்த அரசு முயற்சி எடுக்குமா? மதுவிலக்குப் பிரச்சாரத்தைத் தீவிரமாக அமல் படுத்த வேண்டும் என்று நினைக்கும் இந்த அரசு அதற்கும் இந்த இளைஞர் அணியினரைப் பயன்படுத்திக் கொள்ளலாம் அல்லவா?

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டு அப்போது இருந்த அரசு கொண்டுவந்த காலத்திலே கூட அவர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்புத் தரவேண்டுமென்று கொண்டு வரவில்லை. அது மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கும் தெரியும். இருந்தாலும் அவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காகவும் கிராமங்களிலே சரியான முறையிலே பணியாற்றி கிராமத்து மக்களுக்கு விவசாயத்திலே நவீன கருவிகளைப் பயன்படுத்த சொல்லிக் கொடுப்பதற்காகவும், கிராமத்திலே இருக்கிற ஏற்றத்தாழ்வுகளை ஒழித்துக்கட்டுவதற்காகவும், இன்னும் உற்சாகப்படுத்த சங்கங்களை அமைக்கின்ற நோக்கத்துடன்தான் இந்த அணி ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாண்டு காலம்தான் அவகாசம் கொடுக்கப்பட்டது. அப்போதைக்கப்போது கால நீட்டிப்புக் கொடுத்து அதற்குப் பின்னாலே 1975-ஆம் ஆண்டில் அதை நான்காண்டு காலத்தில் முடித்துவிடுவது என்று அப்போதைய அரசு முடிவெடுத்தது. என்றாலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன யோசனையை கருத்திலே கொண்டு அரசு அதுபற்றி தீவிரமாக ஆலோசிக்கும்.

(முற்பகல் 9.10).

<u>திரு. மு. அம்பிகாபதி :</u> பேரவைத் தலைவரவர்களே எம்.ஏ., பி.ஏ. படித்த இளைஞர்கள், இளைஞர் அணியில் நான்கு ஆண்டுகள் பணியாற்றி, பிறகு வேலையில்லாத நிலைமை ஏற்பட்டு சிரமப்படுவதைக் கருத்தில் கொண்டு, இனிமேலாவது தொடர்ச்சியாக அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் அளவுக்கு அரசு திட்டங்களைத் தீட்டுமா? இடைக்கால திட்டங்களாகத் தீட்டுவதன் விளைவாக அப்படிப்பட்ட வாலிபர்களுக்குப் பெண் கொடுத்த பெண்வீட்டார், அந்த வாலிபர் வேலையிமக்க



பிறகு, இவனை நம்பி பெண்கொடுத்தோமே என்று ஏங்கவும் இதன் விளைவாக வீடுகளில் கலகம் நடப்பதைத் தவிர்க்கவும் அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> பேரவைத் தலைவரவர்களே, வேலையிழந்த இளைஞர் அணித் தொண்டர்களுக்குத் தொடர்ந்து வேலை கொடுக்க இந்த சர்க்காரிடம் இப்போதைக்கு எந்த விதமான குறிப்பும் இல்லை. என்றாலும், இந்த நிலைமை தொடர்ந்து பரிசீலிக்கப்படும்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து :</u> தலைவரவர்களே, இளைஞர் அணியைச் சார்ந்தவர்கள் சில ஆண்டுகள் வேலை பார்த்து விலகியதால், திரும்ப அரசு வேலை கிடைக்க வயது உச்ச வரம்பு விதிமுறைகள் அவர்களுக்குத் தளர்த்தப்படுமா? இந்த இளைஞர் அணியிலிருந்து விலக்கப்பட்டுள்ளவர்களுக்கு, எப்படி அரசாங்க வேலைகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறதோ—உதாரணமாக சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷனிலிருந்து வேலை வாய்ப்பினை, இழந்திருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கின்ற வகையில் அரசு இலாக்காக்களில் காலியாகும் வேலைகளுக்கு எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேன்ஜிலிருந்து எடுக்க வேண்டியதில்லை, இப்படிப்பட்டவர்களுக்கு வேலையைக் கொடுத்த பிறகு எஞ்சியுள்ளவற்றிக்கு மட்டும் எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சிலிருந்து 'கால் ஃபார்' செய்தால் போதும் என்று எப்படி உத்திரவு போட்டு நடைபெற்று வருகிறதோ—அதே போன்று இளைஞர் அணியிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பவர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள அரசு முயற்சிக்குமா?

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இளைஞர் அணியில் பணியாற்றியவர்களுக்கு நான்கு ஆண்டுக்காலம் வயதில் விலக்கு கொடுத்திருக்கிறார்கள். முன்னுரிமை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி எழுப்பினார்கள். முன்னுரிமையைப் பொருத்த மட்டில், அவர்கள் எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேன்ஜில் பதிவு செய்திருந்தால், அதற்குமுன் எந்தத் துறையில் பணியாற்றினார்களோ, அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரி கொடுக்கின்ற சான்றிதழ் அடிப்படையில் வேலை கொடுக்க உரிமை உண்டு.

<u>திரு. க. கந்தசாமி :</u> பேரவைத் தலைவரவர்களே, இளைஞர் அணியைச் சேர்ந்தவர்களுக்கு, வயது உச்ச வரம்பைத் தளர்த்த வேண்டும் என்பது ஒரு கோரிக்கை, அதே போன்று அவர்களுக்கு வேலை கொடுக்க முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது மற்றொரு கோரிக்கை. அதுமாத்திரமல்லாமல், அவர்கள் நான்கு ஆண்டுகள் பணிசெய்த காரணத்தால், இனிமேல் பரீட்சை எழுதமுடியாமல் பாடத்தை மறந்திருப்பார்கள்.

[திரு. க. கந்தசாமி] [1977 ஆகஸ்ட் 11

ஆகவே அவர்கள் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சைக்கு ஆஜராகாமல், நேரடித் தேர்வில் சான்றிதழ் போன்றவற்றை வைத்துக்கொண்டு வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இதை அரசாங்கம் பரிசீலிக்குமா? மேலும் அரசு ஊழியர்கள் குடும்பநலத் திட்டத்தின் கீழ், அரசு ஊழியர் பணியிலிக்கும்போது இறந்தால், அவர்கள் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அந்தத் திட்டம் இந்த இளைஞர் அணியினருக்கு விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் யோசனைகளாக இல்லாமல், கேள்விகளாக கேட்க முயற்சிக்கவும்.

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, படிப்பது மறப்பதற்கு இல்லை. படித்ததை உயிருள்ள வரையில் மனதில் வைத்து, அதன்படி நடக்க படிக்கின்றோமே ஒழிய மறப்பதற்கு அல்ல. நம்முடைய அரசு ஊழியர்களுக்கு கொடுக்கின்ற 10,000 ரூபாய் இவர்களுக்கும் கொடுக்கப்படுமா என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கேட்டார்கள். அப்படி கொடுப்பதற்கில்லை.

திரு. துரை. கலியமூர்த்தி: தலைவரவர்களே, இளைஞர் அணியில் இருந்து எத்தனைபேர் அரசு வேலைக்கு சென்றவர்கள் வேலை பார்ப்பவர்களுக்கு நிரந்தர வேலையாக கொடுக்கப்படுமா? அவர்கள் அரசு வேலைக்குச் செல்ல வயது உச்சவரம்பு நீக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, எனக்கு கொடுத்திருக்கின்ற தகவலின்படி, 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதியில் இளைஞர் அணியில் பணியில் உள்ளவர்கள் ஆண்கள் 865, பெண்கள் 248, ஆக மொத்தம் 1.113 பேர் வேலையில் இருக்கிறார்கள். அவர்கள் இருக்கின்ற வேலை அவர்களுக்கு நிரந்தரமானதல்ல.

*47 வினா—திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

இளைஞர் அணியில் சேர்ந்து வேலை பார்த்து விலக்கப்பட்டவர்கள் வேலை கேட்டு நாகர்கோவில் பகுதியில் போராட்டம் நடத்துவது உண்மையா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ம் தேதிலிருந்து நாகர்கோவிலில் கிளர்ச்சி செய்த இளைஞர் அணியைச் சேர்ந்தவர்கள் 1977—ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் தேதி அன்று அக்கிளர்ச்சியை கைவிட்டனர்.



1977 ஆகஸ்ட் 11]

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, அந்த மாவட்டத்தில் மட்டுமல்ல, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் எத்தனை பேர் இளைஞர் அணியில் வேலை பார்த்தவர்கள், வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். போராட்டத்தில் இறங்கியவர்களுக்கு ஏதாவது வாக்குறுதி அளிக்கப்பட்டதா? அதுமட்டுமல்ல, அமைச்சர் அவர்கள் இதற்கு முன்னால் கேள்விக்கு பதில் அளிக்கும்போது, பல இலாக்காக்களுக்கு உத்திரவிடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எந்த இலாக்காவிலாவது இவர்கள் யாருக்காவது வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இளைஞர் அணியில் மாவட்ட ரீதியாக இத்தனை பேர்கள் வேலையில் அமர்த்தப்பட்டார்கள், நீக்கப்பட்டார்கள என்ற புள்ளி விவரம் தற்போது என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால், பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் 'ஆன் டிசிபிளினரி கிரவுண்ட்ஸ்' ஆண்கள் 529, பெண்கள் 14, ஆக மொத்தம் 543, பணி முடிந்து விலக்கப்பட்டவர்கள் ஆண்கள் 1,141, பெண்கள் 162, ஆக மொத்தம் 1,303, பணியிலிருந்து விலகிக் கொண்டவர்கள், மாற்று வேலை பெற்றவர்கள், 2,641 ஆண்களும், 450 பெண்களும் ஆவர். என்ற விபரத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் இளைஞர் அணியைச் சேர்ந்தவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களை ஆளும் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் சென்று அவர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்புக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று வாக்குறுதி அளித்ததன் பேரில் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது என்பது அரசுக்குத் தெரியுமா? எம்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ் இவர்களுக்கு நிவாரணம் அளிப்பது என்பது தற்காலிக வேலைக்குத்தான். எனவே இந்தப் பிரச்னை தீர இது வழியாக இருக்காது. ஆகவே இளைஞர் அணியைப் பொறுத்தவரையில் நிரந்தரமாக வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் தமிழ்நாடு இளைஞர் அணி சங்கத் தலைவர் முருகேசன் தலைமையின்கீழ் 30 பேர் கொண்ட குழு ஒன்று 9—6—77 காலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்பு தமிழ்நாடு இளைஞர் அணியில் சேவை செய்வோருக்கு நிரந்தரமான வேலை வாய்ப்புத் தரவேண்டுமென்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வுக் குழு நடத்தும் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கோரி போராட்டம் நடத்தினர். பின்னர் மூவர் மட்டும் 8—7—77 வரை தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

9—7—77 அன்று 50 இளைஞர் அணியினர் ஊர்வலமாக வந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன் மறியல் செய்தனர். இவர்களில் 5 பேர் கைது செய்யப்பட்டு அன்று மாலையிலேயே விடுவிக்கப்பட்டனர். 11—7—77 அன்றும் மறியல் தொடர்ந்தது. 10 பேர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்கள் இளைஞர் அணியினரைக் கிளர்ச்சியைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க 11—7—77 அன்று கிளர்ச்சி கைவிடப்பட்டது.

உண்ணுவிரதம் கைவிடப்பட்டதாக அரசுக்கு தகவல் வந்திருக்கிறது. அவர் உத்தரவாதம் எதுவும் கொடுத்ததாக எந்தவிதத் தகவலும் வரவில்லை.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜேஸ் அவர்கள் நான் உறுதிமொழி அளித்ததாக இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் நான் என்ன வாக்குறுதி கொடுத்தேன் என்றால் இந்த இளைஞர் அணி பிரச்னை மாநிலம் தழுவிய பிரச்னை, மாவட்டப் பிரச்னை அல்ல....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி போடுங்கள்.

திரு. மி. வின்சென்ட் : அரசுக்கு அவகாசம் தாருங்கள் என்று கேட்டுக் கொண்டேனே தவிர, வேறு எந்தவித வாக்குறுதியும் கொடுக்கவில்லை.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, சென்ற மாதம் 28-ம் தேதி கோட்டை முன் இளைஞர் அணி உண்ணுவிரதம் இருக்கப்போவதாக விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அரசு அவர்களை அழைத்து சுமூகமான பேச்சு வார்த்தை நடத்த முயற்சி செய்ததா? அது பற்றி அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, சென்ற மாதம் அவர்கள் 6-ம் தேதி உண்ணுவிரதத்தை நடத்துவதாக இருந்தது. அதைப் பற்றி தகவல் வந்தவுடன் நான் அவர்களையும் அவர்களுடைய சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தியதன் மூலம் அவர்கள் தங்களுடைய போராட்டத்தைக் கைவிட்டனர்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து இந்த இளைஞர்கள் 4 வருஷம் வரையில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் வேலையில்லாமல் தெருவில் தள்ளப்பட்டு அவர்களுக்கு எந்த முறையிலாவது தொடர்ந்து வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை இழந்து விரக்தி அடைந்து இருப்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு 240 நாட்கள் தொடர்ந்து வேலை





செய்த 'கேஷுவல் லேபரர்' தொடர்ந்து வேலையில் அமர்த்தக்கூடிய சட்டம் இருக்கும்போது, இந்த இளைஞர் அணியைச் சேர்ந்தவர்களுக்குத் தொடர்ந்து வேலை கொடுப்பது இந்த அரசின் கடமை என்று இந்த அரசு பொறுப்பேற்று, அந்தக் காரியத்தை நிறைவேற்றுமா?

(முற்பகல் 9-20.)

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இளைஞர் அணி மூலம் வேலைக்குச் சேர்க்கப்பட்டவர்களுக்குத் தொடர்ந்து வேலை கொடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை இந்த அணியை ஆரம்பித்த அரசு அன்றையதினம் அந்த உத்தரவாதத்தையும் கொடுக்கவில்லை; ஆகவே தொடர்ந்து வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதற்கு நியாயம் இல்லை. இருந்தாலும் அனுதாபத்தோடு இந்த அரசு பரிசீலிக்கும்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : Sir, on a point of clarification. The hon. Member, Thiru Ramani has observed that a period of 240 days is quite sufficient. But that must be within the limitation of one calendar year.

திரு. கு. ரமணி : 240 நாட்கள் வேலை செய்த ஒருவர் அவருக்கு கன்பர்மேஷன் ஆவதற்கு அல்லது வேறுவிதமான உரிமைகள் சட்டப்படி உடனே வழங்குவதற்கு வேலைக்கமர்த்திய மற்றவர்கள் ஒத்துக் கொண்டால் அது நிச்சயமாக அமலுக்கு வரும். அது அனுபவத்தில் பழக்கத்தில் இருக்கிறது—as a convention. அப்படி 240 நாட்கள சர்வீஸ் இருக்கும்படியானவர்களுக்கு நிரந்தரமான தொழிலாளர்களுக்குள்ள சலுகைகள் கொடுக்கப்படுகின்றன, தனியார் துறை உட்பட என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா, தெரியாதா?

விடை இல்லை.

திரு. க. அன்பழகன் : இளைஞர் அணி சமூக நலப் பணிகளுக்காகத்தான் மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தப்படவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் உருவாக்கப்பட்டது. அப்படி இளைஞர் அணி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அது தாற்காலிகமாக என்று தொடங்கப்பட்டாலும் இன்றைக்கு சமூக நலப் பணிகளின் தேவை மிகுதியாக இருக்கிறது. அதை விட மதுவிலக்குத் திட்டத்தைப் பிரசாரம் மூலம்—டெம்பரன்ஸ் மூவ்மென்ட்போல அதற்கு மக்களிடையே செல்வாக்குப் பெறச் செய்யவேண்டும் என்ற குறிக்கோளை ஏற்றுக் கொள்கிற அரசு மதுவிலக்குத் திட்ட பிரசாரத்திற்காக இந்த அணியை மறுபடியும் ஈடுபடுத்திப் பயன்படுத்திக் கொள்வார்களா?

[1977 ஆகஸ்ட் 11

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : சமூக நலப் பணிகளும், மதுவிலக்குப் பிரச்சாரமும் இப்போதிருக்கிற அரசுக்கு மட்டும் இருக்கிற கட்டாயம் அல்ல. இதை முந்திய அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது அன்றைய சூழ்நிலையில் இந்த இளைஞர் அணியை ஆரம்பித்தபோது அவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்புக்களை அளித்திருக்கலாம். ஆனால் அன்றையதினம் இளைஞர் அணியை ஆரம்பித்த அன்றைய அரசு இது நிரந்தரமானதல்ல, இரண்டு ஆண்டு காலத்திற்கு என்று உத்தரவாதத்தை அன்றைக்குக் கொடுத்தது. இருந்தாலும் இன்றைக்கு பொறுப்பேற்றிருக்கிற இந்த அரசு இதைப் பற்றி பரிசீலித்து அவர்களை வேறு எந்தத் துறையிலாவது பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்பதைப்பற்றி ஆலோசித்து வருகிறது.

திரு. மு. அம்பிகாபதி : தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் பகுதியில் இளைஞர் அணியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் உண்ணாவிரதம் — அதுவும் சாகும்வரை உண்ணாவிரதம் — இருப்போம் என்று அறிவித்திருப்பது அரசுக்குத் தெரியுமா? அந்த உண்ணாவிரதத்தைக் தடுக்க...... கைது செய்து அல்ல.... வேலை கொடுப்போம் என்ற உத்தரவாதத்தை அளிக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இது நாகர் கோவிலில் நடைபெற்ற உண்ணாவிரதத்தைப் பற்றியது. தஞ்சை மாவட்டத்தில் உண்ணாவிரதம நடப்பதாக அல்லது அறிவிப்புக் கொடுத்ததாக உறுப்பினர் அவர்கள் இங்கே கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். அதுபற்றி இந்த அரசுக்கு எந்தத் தகவலும் இதுவரையில் வரவில்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரலாம்.

திரு. மு. கருணாநிதி : அமைச்சர் அவர்கள் பதில் அளித்தபோது முன்பிருந்த கழக அரசு இளைஞர் அணியைத் தொடக்கிய காலத்தில் நிரந்தரமான பணி என்று வகுத்திருந்தால், இந்தச் சங்கடம் வந்திருக்காது என்று குறிப்பிட்டார்கள். கிட்டத்தட்ட 4,000 இளைஞர்களுக்கு, யுவதிகளுக்கு அப்போது நிரந்தரமான பணி என்று மாதத்திற்கு ரூ. 175 என்று தரப்படும் என்று சொன்னால் நிரந்தரமான பணியாக அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்; எனவே கிட்டத்தட்ட 4,000 இளைஞர்களை அந்த அணியில் இணைத்துக் கொண்டபோது அவர்களுக்கு ஏதாவது வேலைவாய்ப்பு கிடைத்து வேறு வேலைக்குச் செல்வதற்கு அப்போது வாய்ப்பு ஏற்படும். இளைஞர் அணியிலிருந்து பிரிந்து வேறு ஏதாவது வேலைக்கு அவர்கள் செல்லலாம் என்றும் அல்லது எழுத்து மூலமாக அல்லாமல் அரசாங்க வேலைகளில் கூட இளைஞர் அணியில் உள்ளவர்களுக்கு முன் உரிமை தரப்படலாம் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு அளிக்கப்பட்டுத்தான் அப்போது இந்த இளைஞர் அணி ஏற்படுத்தப்பட்டது என்பதும் அதே அளவில் மாதம் ஒன்றுக்கு ரூ. 175 தருவார்கள் என்றும் அந்தளவிற்கு அவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படும் என்றும் உத்தரவாதம் அளித்து மீண்டும் இதைத் தொடர்கிற உத்தேசம் அரசுக்கு உண்டா?



1977 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இந்த அணியை ஆரம்பித்த அன்றைய அரசு—1971-ஆம் ஆண்டில் இதை ஆரம்பித்த நேரத்தில் அப்போது இருக்கிற சிக்கல்களை மனதில் கொண்டு தான் இரண்டு ஆண்டுகள் என்றும் அவர்களுக்கு நிரந்தரமான வேலை கிடைக்காது என்றும் அந்த உத்திரவாதத்தின் அடிப்படையில்தான் அன்றைய தினம் இளைஞர் அணியை ஆரம்பித்தார்கள். அதே சிக்கல்இன்றைய அரசுக்கும் இருக்கும் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நல்ல முறையில் அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இன்றைய தினம் இந்த அரசைப் பொறுத்த வரையில் அந்த இளைஞர்களை எந்தெந்தத் துறையில் எப்படி எப்படிப் பயன்படுத்தலாம் என்பதை இன்னும் தீவிரமாக ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, இளைஞர் அணியில் 1971—72லிருந்து பி.ஏ., படித்தவர்கள் எம்.ஏ., படித்தவர்கள் இப்படிப்பட்டவர்கள் நான்கு ஆண்டுகளாக பணியாற்றி இருக்கிறார்கள். இந்த இளைஞர் அணியில் சேராதவர்கள், 69-ஆம் ஆண்டிலிருந்து இப்படிப் படித்தவர்கள் முன்னால் இளைஞர்களாக இருந்து இப்போது முதியவர்களாக ஆகிவிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தருவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு இப்போது அரசாங்கம் தயாராக இல்லை.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இளைஞர் அணியில் பணியாற்றிய பெண்களின் எண்ணிக்கை குறைவுதான். பெண்களுக்கு வேலை கிடைத்தால் தான் திருமணம் முடிக்க முடிகிறது. ஆகவே பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதில் முன் உரிமை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்களானாலும் பெண்களும் சரிசமம் என்று சொல்லுகின்ற காலம் இது. ஆகவே பெண்களுக்கு மட்டும் முன்னுரிமை கொடுப்பது என்பது, இதில் இப்போது முடியாது.

**THIRU M. A. LATHEEF ;** Sir, May I known whether in the appointment orders given to these youths, there was a specific stipulation . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று தான் நான் கேட்டுக் கொண்டேன். தயவு செய்து தமிழில் கேள்வி போட்டால் மற்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரிந்து கொள்வதற்கு நலமாக இருக்கும்.

THIRU M. A. LATHEEF Nobody can prevent me

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆங்கிலத்தில் கேட்பதை நான் தடுக்கவில்லை. தமிழில் கேளுங்கள் என்று வேண்டிக் கொள்கிறேன். அவ்வளவுதான்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, இந்த இளைஞர்களுக்குக் கொடுக்கப்பட்ட அப்பாய்ன்ட்மென்ட் உத்தரவில் நிரந்தரமானது அல்ல, தற்காலிகமான வேலைதான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதா ? அப்படி தரப்பட்டிருந்தாலும், இப்போது வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றவர்களின் பிரச்சினை ஒரு சமுதாய பொருளாதார பிரச்சனையாக உருவாகியிருக்கிறது. ஆகவே அதைச் சமாளிக்கக்கூடிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது, என்ற முறையில் வேறு வகையில், அவர்களுக்கு எம்பிளாய்மெண்ட் ரூல்ஸ் என்ற அடிப்படையில் அணுகாமல், அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு முன் உரிமை அளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரெர். எட்மண்ட் : வேலை நிரந்தரமற்றது என்று முன்பே இவர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நிரந்தரமற்றது என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலும் இன்றைய சூழ்நிலையில் அவர்களது கோரிக்கையை அரசாங்கம் பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களது பதிலிலிருந்து இவர்களுக்கு வேறு விமோசனமே இல்லை என்று தெரிகிறது. இவர்களுக்கு அரசு போக்குவரத்துக் கழகங்களில் வேலை கொடுக்க முன் உரிமை அளிக்கப்படுமா ? தனிப்பட்ட பஸ் போக்குவரத்துக் கம்பெனிகளிலும், அரசு சார்பில் நடத்தப்படும் போக்குவரத்துக் கம்பெனிகளிலும் இவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு முன் உரிமை கொடுத்து வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் இவர்களது குறையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கம்பெனியில் எத்தனை பேர்களை வைத்துக் கொள்வார்கள் என்று தெரிவித்தால் நலமாக இருக்கும்.

சென்னை—நாகப்பட்டினம் பெருந்துப் போக்குவரத்து.

*48 வினா : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு **விடையளிப்பாரா ?**



சென்னையிலிருந்து நாகப்பட்டினம் செல்லும் அரசுப் பேருந்துகளின் பயண கால நேரத்தினைக் குறைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்னையிலிருந்து நாகப்பட்டினத்திற்கு அரசு விரைவுப் பேருந்தின் மூலம் சென்றால் பயண காலம் 8 மணி 20 நிமிடம் ஆகிறது. துரித இரயில் மூலம் சென்றால் 9 மணி 5 நிமிடமாகிறது' அதாவது இரயிலில் செல்வதால் பேருந்தின் மூலம் செல்லுவதைக் காட்டிலும் 45 நிமிடங்கள் அதிகமாகிறது. பேருந்தின் பயண காலத்தைக் குறைக்க செயற்குறிப்பு ஒன்றுமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னையிலிருந்து நாகப்பட்டினம் போவதற்கு எட்டு மணி ஆகிறது என்று சொன்னார்கள். ஆனால் மாயவரம் செல்லுவதற்கே 9 மணி நேரம் ஆகிக்கொண்டிருக்கிறது. காரணம் இப்போது ஓடுகின்ற பஸ்கள் பழைய பஸ்களாக இருக்கின்ற காரணத்தாலும், தேவையான உபகரணங்கள் எல்லாம் நெருக்கடி காலத்தில் அகற்றப்பட்டு விட்டன என்று தொடர்புடையவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, இவையெல்லாம் மாற்றப்பட்டு, குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்திற்கு சென்று சேருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற குறைகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. அவைகளைப் போக்குவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : பேருந்துகளில் சென்றால் பயண காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்திற்குச், சென்று சேர முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. காரணம் கேட்டால், போதிய அளவு பழுது பார்க்கவில்லை என்று ஓட்டுநர்களும் மற்றவர்களும் சொல்லுகிறார்கள். ஆகவே தகுந்த முறையில் பழுது பார்த்து, குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேருவதற்கான ஏற்பாட்டை செய்ய இந்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : திரு. கிட்டப்பா அவர்களும் இது சம்பந்தமான கேள்வியைத்தான் கேட்டார்கள். குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேருவதற்கான நடவடிக்கை எடுப்பதற்குத் தகுந்த உத்திரவுகளை அரசு பிறப்பித்திருக்கிறது. இதைப் பற்றி அரசாங்கம் கவனித்துக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1977 ஆகஸ்ட் 11

(முற்பகல் 9-30).

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, பிரேக்-டவுன் காரணமாக ஏற்கனவே கொடுக்கப்பட்ட நேரத்திற்கு அதிகப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இந்த லாங் டிஸ்டன்ஸ் போகக் கூடிய ரூட்டுகளில் புதிய பஸ்கள் போடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மேற்சொன்ன குறிப்பிட்ட இடத்திற்கு புதிய போக்குவரத்துக்களை அனுப்ப முடியாது. புதிய பேருந்துகளை விடப் போவது குறிப்பில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, புகை வண்டிக் கட்டணத்தைவிட பேருந்துக் கட்டணம் குறைவாக இருக்கிறது என்பதுதான் முக்கியமாக யோசிக்கப்படுகிறது. ரயில் 9 மணி நேரத்தில் போகிறது என்றால், பஸ்ஸும் அதே நேரத்தில் போவதுதான் சிலாக்கியமானது என்பது என் கருத்தாகும். அதை 8 மணி 7 மணி என்று குறைத்தால், அவர்கள் நாகப்பட்டினம் போய்ச் சேருவதற்குப் பதில், வேறு மருத்துவ மனைக்குப் போக நேரிடலாம் எனவே, அரசு இதிலே வேடிக்கை காட்டாமல், யோசித்து நேரடி நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களது யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். ஆர். இராதா : இந்த அரசு பேருந்து நேரடியாகப் போக வேண்டிய வழியில் போகாமல், திண்டிவனம், பன்ருட்டி ஆகிய இடங்களுக்குப் போய்விட்டு, அதற்குப் பின்னால் போகிற காரணத்தால், காலம் தாழ்ந்து போக வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் காலமும் காசும் வீணாகிறது. எனவே, 'நேரடியாகப் போவதற்கு ஏற்பாடு செய்தால் சீக்கிரமாகப் போக, முடியும் ; எனவே இதைக் கருத்தில் கொண்டு விரைவாகச் செல்வதற்கான வழிவகைகளைக் காண மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிகள் எடுப்பாரா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அரசுக்கு அத்தகைய உத்தேசம் எதுவும் இல்லை. காரணம், பேருந்துகள் இடையில் சில ஊர்களுக்குச் செல்ல வேண்டுமென்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளதால், அந்தப் பகுதிகளுக்கு செல்ல வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பெரும்பாலும் இந்த பஸ்கள் ரிப்பேர் ஆகின்ற காரணத்தாலும், அடிக்கடி பிரேக் டவுன் ஆகின்ற காரணத்தாலும், குறிப்பாக இப்படி



1977 ஆகஸ்ட் 11]

பிரேக் டவுன் ஆகின்றபோது, இந்தப் பேருந்துகளில் உடனடியாக அவற்றைப் பழுது பார்ப்பதற்கு, ஓட்டுநர் நிவர்த்தி செய்து ஓட்ட கருவிகள் (டூல்ஸ்) இல்லாததை நான் என் அனுபவத்திலே பார்த்திருக்கிறேன். இதைச் சரி செய்து ஓட்டுவதற்கான அத்தகைய கருவிகளை இந்தப் பேருந்து வண்டிகளில் வைத்து, குறிப்பிட்ட நேரத்தில் வண்டிகள் ஓட உறுதி செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற குறைகள் பற்றிய தகவல்கள் அரசின் நடவடிக்கைக் குறிப்பில் இருக்கிறது. எனவே அவரது யோசனை, உடனடியாக சீக்கிரத்தில் நடைமுறைப் படுத்தப்படும் என்று உறுதி கூறிக் கொள்கிறேன்.

திரு. பி. எஸ். திருவேங்கடம் : தலைவர் அவர்களே, சாதாரண வண்டியைக் காட்டிலும், விரைவு வண்டிக்குக் கட்டணம் அதிகம் வசூலிக்கிறார்கள். ஆனால் சமீப காலத்திலே அந்தப் பேருந்து வண்டிகள் மிகவும் பழுதடைந்தும், சீட்டுகள்—உட்காரும் இடம் மோசமாகவும இருக்கிறது. எனவே, அவைகளைச் சரி செய்து விரைவாக வண்டிகள் போவதற்கான நடவடிக்கையை இந்த அரசாங்கம் மேற் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய குறைபாடுகள் விரைவில் களைய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது செல்கின்ற பேருந்துகளில் ஸ்டெப்னிக்கள இருக்கின்றன. ஆனால், அதை மாட்டுவதற்கான 'ஜாக்கி' தரப்படுவதில்லை. எனவே, ஒவ்வொரு பேருந்திலும் ஜாக்கி வைக்கும் யோசனையை இந்த அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கனவே, ஒரு உறுப்பினர் இத்தகைய கேள்வி கேட்டு, பதில் சொல்லியிருக்கிறேன். அந்த வகையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, சாதாரணமாக வி.ஐ.பி. ஓரிடத்திலே இருந்து மற்றொரு இடத்திற்குப் போகும் போது, அந்த வண்டி பிரேக்-டவுன் ஆகிவிடும். அதனால் அவர்களுக்குச் சங்கடம் ஏற்படும் என்ற அடிப்படையிலே, அமைச்சர்கள் போகும்போது ஒரு எஸ்கார்ட் வண்டி தரப்படும். அதைப் போல், இப்படி வி.ஐ.பி.க்கள் இந்த எக்ஸ்பிரஸ் பேருந்துகளில் வந்தால் பின்னாலேயே ஒரு பிரேக் டவுன் வண்டி கொடுப்பதற்கு, இன்னொரு வண்டி விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1977 ஆகஸ்ட் 11

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் அத்தகைய வண்டிகளைப் பேருந்துகளின் பின்னால் விடுவதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்படாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

## (2) அறிவிப்பு.

மதுரைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு (Madurai University Senate) கீழ்க்கண்ட நால்வரின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளன:—

(1) திரு. சோ. பாலகிருஷ்ணன்.
(2) திரு. இரா. முத்தையா,
(3) திரு. பி. ராமதாஸ்,
(4) திரு. ஏ. ரகுமான்கான்.

முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால், மேற்கண்ட நால்வரும் மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் அறிவிக்கிறேன்.

## (3) அறிக்கை அளித்தல்.

(அ) சுந்தரம் கிளேட்டன் தொழிற்சாலை மீண்டும் திறப்பது குறித்து தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அறிக்கை அளித்தல் :—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 82-ன் கீழ் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை அளிப்பார்கள் :

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, சென்னை பாடியிலுள்ள சுந்தரம் கிளேட்டன் நிறுவனத்தில் ஏறத்தாழ 1,320 தொழிலாளர்கள் உள்ளனர்.

1977-ம் வருடம் சனவரியிலிருந்தே தொழிலாளர்கள் வேலையில் மெத்தனப் போக்கை காட்டி வந்ததாகவும், இதனால் உற்பத்தி 10 சதவீதம் முதல் 25 சதவீதம் வரைக் குறைந்ததாகவும்



1977 ஆகஸ்ட் 11] [திரு. எஸ். இராகவானந்தம்]

நிர்வாகம் குற்றம் சாட்டியுள்ளது. மேலும் வருகை ஊக்கத் திட்ட மாற்றம், மற்றும் சில கோரிக்கைகளைத் தொழிலாளர்கள் நிர்வாகத்தினர் முன் வைத்தனர். வேலையில் மெத்தனம் காட்டியதற்காக 61 தொழிலாளர்கள் மீது குற்றம் சாட்டியும் அவ்வாறு மெதுவாக வேலை செய்யத் தூண்டியதாகவும், மெதுவாக வேலை செய்ததில் பங்கேற்றதாகவும் 15 தொழிலாளர்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்தும், 1977-ம் வருடம் ஜூன் மாதம் 6-ந் தேதியில் நிர்வாகம் அறிவிப்பு விடுத்தது. குற்றத்தாள் கொடுத்ததையும், தற்காலிக வேலை நீக்க அறிவிப்பு விடுத்ததையும் திரும்பப் பெறுமாறு தொழிற்சங்கம் கேட்டது. ஆனால், நிர்வாகம் அக் கோரிக்கையை ஏற்காததால், 1977-ம் வருடம் ஜூன் மாதம் 7-ந் தேதி முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். நிர்வாகத்தினர் 1977-ம் வருடம் ஜூன் மாதம் 10-ந் தேதி மாலை 5-00 மணி முதல் கதவடைப்பு செய்தார்கள்.

இத் தொழிற்சாலையில் எழுந்துள்ள தகராறில் 1977-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 7-ந் தேதி அன்று தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரைக் கிணங்க ஒரு உடன்பாடு ஏற்பட்டு தொழிற்சாலை 1977-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 10-ந் தேதி முதல் திறக்கப்படுவதாக இருந்தது தெரிந்ததே. இதற்கிடையில் இதே பகுதியில் உள்ள பிரேக்ஸ் இந்தியா நிறுவனத்திலும், லூக்காஸ்-டி.வி.எஸ். நிறுவனத்திலும் எழுந்துள்ள தொழில் தகராறுகளில் ஒரு சுமுகமான முடிவு உருவாக்கி மூன்று தொழிற்சாலைகளின் பிரச்சினைகளையும் உடனடியாகத் தீர்த்து, குறிப்பிட்ட தொழிற்சாலைகள் உள்ள பகுதிகளில் பொதுவாக நல்ல தொழில் அமைதியை விரைவில் ஏற்படுத்துவதுதான், அனைத்துத் தரப்பினருக்கும் நலமாக இருக்கும் என்று அரசு விரும்பியதன் அடிப்படையில் அதற்கேற்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுந்தரம், கிளேட்டன் நிர்வாகத்தினரும் வேலை நிறுத்தக் காலத்தில் வெளியே சென்றுள்ள தொழிலாளர்கள் மீண்டும் சென்னைக்குத் திரும்ப அவகாசம் அளிக்கும் வகையில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ம் தேதி அன்று தொழிற்சாலையைத் திறப்பதற்குப் பதிலாக வேறு ஒரு தேதியைத் தெரிவிப்பதாக ஒரு அறிக்கை விடுத்துள்ளார்கள். அரசு தக்க முயற்சிகளை மேற்கொண்டு இந்த நிறுவனங்களில் எழுந்துள்ள தொழிற்தகராறுகளை விரைவிலேயே தீர்த்து வைக்க ஆவன செய்யும்.

## 3. ஒழுங்குப்பிரச்சினை.

### (அ) உறுப்பினர்களுடைய—தீர்மானங்கள் அனுமதிக்கப் படாமை குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி அறிக்கையின் மேல் ஒன்றும் பேச அனுமதிக்க மாட்டேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டரில்..........

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கையைப் படித்தார்கள். அடுத்த நிகழ்ச்சியைப் பற்றிப் பேரவைத் தலைவர் அறிவித்த பிறகுதான் ஒழுங்குப் பிரச்சினை கொண்டு வரலாம்.

திரு. கே. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி இந்தப் பிரச்சினையைப் பற்றியே பேசுவீர்கள்.

THIRU J. JAMES : On a point of Order. I would like to point out certain irregularities followed here in regard to Rule 42. I am not raising any point of order on the Statement by the Hon. Minister under Rule 82.

தலைவர் அவர்களே, நான் ரூல் 57-ன் கீழ் இந்த அவையில் இன்று பாடியில் நிலவி வருகிற தொழில் அமைதியின்மையைப் பற்றி விவாதிக்க ஒரு நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன்.

42-வது விதியின்கீழ் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன். எனினும் இன்றையதினம் லேபர் டிமாண்ட் வருகிற காரணத்தால், அதிலே பேச வாய்ப்பு இருக்கும் காரணத்தால், தீர்மானத்தை எடுத்துக் கொள்ள முடியாது என்று கூறியிருந்தீர்கள். நாங்கள் அதை ஏற்றுக் கொண்டோம்.

நான் ஏற்கனவே கொடுத்த 57-வது விதியின் கீழ் நோட்டீஸ் என்னவாயிற்று? இன்றையதினம் நாங்கள் கொடுத்த தீர்மானங் களை மறைத்துவிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதி





82-ன் கீழ் ஸ்டேட்மென்ட் வைத்திருப்பதைப் பார்க்கும்போது ஏதோ நாங்கள் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யத் தவறி விட்டோம் என்ற நிலை ஏற்படுகிறது. அது பொதுமக்களி டத்தில், தொழிலாளர்களிடத்தில் எங்களைப் பற்றிக் கெட்ட எண்ணம் உருவாகக் காரணமாக இருக்கிறது. நான் உங்களுக் குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்—நாங்கள் இந்தப் பிரச் சினையை அவைமுன் வைத்தோம், அதன் பேரில் அவற்றை ஏற்று ஸ்டேட்மென்ட் வைக்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தால் நலமாக இருந்திருக்கும்.

ஆனால் ஏதோ இன்றையதினம் நாங்கள் கடமையில் இருந்து தவறி விட்டோம் என்பது போலவும், அமைச்சர் அவர்கள் தங்கள் கடமையைச் சரியாக நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பது போலவும் மக்கள் எண்ணக்கூடிய அளவில் இந்த ஸ்டேட்மென்ட்டை அமைச்சர் அவர்கள் தந்தி ருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 9—40]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அன்றைக்குக் கொண்டுவந்த நேரத்திலே அதை அவசரமாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம், நிர்ப்பந்தம் இல்லை என்ற காரணத்தால்தான் அது திருப்பப்பட்டது. இன்றைக்குத் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கை கொடுப்பதன் மூலம் இதிலே உறுப்பினர்கள் எல்லாம் சேர்த்து இன்றைக்கு மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு இருக்க ஏதுவாகும் என்ற முறையிலேதான் கொடுத்திருக்கிறார்கள். அன்றைக்கு கொடுத்த நேரத்திலே திருப்பிவிடப்பட்டதால் உறுப்பினர்களுடைய உரிமைகள் எதுவும் பறிக்கப்பட்டு விடவில்லை. அன்றைக்கு இருந்த சூழ்நிலையில் அவைத் தலைவர் தள்ளினார்களே தவிர வேறு அல்ல, அமைச்சர் அவர்கள் உறுப் பினர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதால்தான் இன்றைக்கு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நாங்கள் டிமாண்டிலே பேசுவதற்காக வாய்ப்புக்கொடுக்க அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. ஆனால் அமைச்சர் அவர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்று நான் சொல்லவில்லை, அமைச்சர் அவர்கள் அந்த வாய்ப்பைத் தவறாக எடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1977 ஆகஸ்ட் 11

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் கேள்வி நேரம் முடிந்த பிறகு இந்தப் பிரச்சினையை அவையிலே எழுப்பினேன். பாடியிலே 1977-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10-ம் தேதி யன்று தொழிற்சாலை திறக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. இடையிலே குழப்பமான அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன, எனவே அந்தத் தொழிற்சாலை திறக்கப் படுமா, அந்தத் தொழிற்சாலை திறக்கப்படுவதில் இடையூறுகள் இருக்கின்றனவா என்று கேட்டபோது அமைச்சர் அவர்கள் தகவல் இருந்தால் கொடுக்கலாம் என்று தாங்கள் சொன்னீர்கள், அதற்குப் பிறகு அமைச்சர் அவர்களும் தகவல் இருப்பதாகவும் சொன்னார்கள். அதற்குப் பிறகு நேற்று நானும் அவர்களும் கலந்து பேசியதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு அறிக்கை தருவதாகச் சென்னார்கள். அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே நேற்றைய தினம் எழுப்பப்பட்ட பிரச்சினையை ஒட்டி இந்த அறிக்கை தரப்படுகிறது என்று சொல்லியிருந்தால் இப்படிப்பட்ட பிரச்சினைகள் தோன்றியிருக்காது. நானும் திரு. ஜேம்ஸ் அவர்களும் எழுப்பினோம். ஆகவே இதை அறிக்கையிலே சேர்த்திருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். மேலவையிலே கூட பாடியில் உள்ள தொழிற்சாலை திறக்கப்படுவது சம்பந்தமாக பிரச்னை எழுப்பப்பட்டு அதற்காக அமைச்சர் அவர்களும் இணக்கம் தெரிவித்து அங்கே அரை மணி நேர விவாதத்திற்கு அனுமதியளிக்கப்பட்டு அங்கே விவாதிக்கப் பட்டிருக்கிறது. இதே பிரச்னை பற்றி மேலவையிலே விவாதிக்கப்படுகிற நிலையில் இங்கே நம்முடைய அவையிலே அரை மணி நேரமோ அல்லது ஒரு மணி நேரமோ இங்கே உறுப்பினர்கள் அதிகமாக இருப்பதால் இதற்காக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலவையிலே தொழிலாளர் நலமானியம் பற்றிப் பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடையாது. இங்கே அதற்குச் சந்தர்ப்பம் இருப்பதால்அதிக வாய்ப்புகள் உண்டு என்பதால்தான் அப்படிப்பட்ட முடிவு எடுக்கப்பட்டது. ஆகவே இதிலே எந்தவிதமான ஒழுங்குப் பிரச்னையும் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்ததற்குப் பிறகு உடனே உரிமைப் பிரச்னைக்கு முக்கியத்துவம் கொடுத்து அது எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதுதான் விதி. நேற்றுக்கூட தாங்கள் ஒரு அருமையான தீர்ப்பைக் கொடுத்தீர்கள், பத்திரிகைகள் எல்லாம் படங்களையும் கருத்துக்களையும் வெளியிடுகிறபோது சரியான முறையிலே பிரசுரிக்க வேண்டுமென்று சொன்னீர்கள். ஆனால் அன்று பத்திரிகையிலே திரு. உமாநாத் அவர்களுடைய......



1977 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எனக்கும் தெரியும் திரு. சுப்பு, நீங்கள் கொடுத்த உரிமைப் பிரச்னை என்ன ஆயிற்று என்று வேண்டுமானால் கேளுங்கள். அன்றைக்கு அவர் கொடுத்தபோது பத்திரிகையோடு கொடுத்தார். ஆனால் இன்றைக்குப் பத்திரிகை கொடுக்கப்படவில்லை, கொடுத்தது 8.55 மணி. ஆனால் அந்த அன்று பத்திரிகை கிடைக்கவில்லை. இங்கே கூட யாராவது வைத்து இருக்கிறார்களா என்று கேட்டதில் இல்லை. இதைக் கூட, தாங்கள் நேரடியாகக் கொடுக்கவில்லை. திரு. சுவாமிதாஸ் அவர்கள் என்னிடம் திரு. சுப்பு அவர்கள் கொடுக்கச் சொன்னார் என்று கொடுத்திருக்கிறீர்கள், அது என்மேல் தவறா? எனவே அந்தப் பிரச்சினையை அவைத் தலைவர் விட்டுவிட்டார் என்று கருதாதீர்கள். நான் நாளைக்கு அதை எடுத்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : அது மிக முக்கியமான பிரச்னை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முக்கியமான பிரச்சினைதான், நான் இல்லையென்று சொல்லவில்லை. நேற்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதைப்போல் இதையெல்லாம் இந்த அவையிலே கொண்டுவருவதின் மூலமாக பத்திரிகைகள் கவனமாக இருக்கவேண்டுமென்பதைத் தெரிவிக்கலாம், அந்த முறையிலேதான் நீங்களும் கொண்டு வந்திருக்கிறீர்கள்; இல்லையென்று சொல்லவில்லை.

## (5) கவன ஈர்ப்பு.

### காவிரிப் பாசனப் பகுதிகளில் தண்ணீர் முறைவைத்து விடுவதால் கீழ்த் தஞ்சை மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்படிருப்பது குறித்து.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 41-ன்கீழ் காவிரியின் பாசனம் பெறும் பகுதிகளாகிய தஞ்சை மாவட்டம், குறிப்பாக கீழ்த் தஞ்சை மாவட்டம் தண்ணீர் சரியாக வராததாலும் முறை வைத்து விடுவதாலும் விதைத்த விதை முளைத்த நாற்று சேடைபாய்ந்த வயல்கள் எல்லாம் காய்ந்து விவசாயிகள் சொல்லவொணா தொல்லையை அனுபவிப்பதைப்பற்றி என்ற பொருள்பற்றி மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மேட்டூர் நீர்த் தேக்கம் விவசாயத்திற்காக ஜூலை மாதம் 15-ஆம் தேதி திறந்து விடப்பட்டு, ஜூலை 19-ஆம் தேதி முதல் காவிரி, வெண்ணாறு, மற்றும் கல்லணை வழியாக விடப்படுகிறது.

மேற்கூறிய ஆறுகளிலும் மற்ற முக்கிய கால்வாய்களிலும் தொடர்ந்து தண்ணீர் விடப்படுவதுடன், முறைத் திட்டம் புகுத்தப்படவில்லை.

குறுவை சாகுபடிக்குப் போதுமான அளவுக்குத் தண்ணீர் வழங்கப்படுகிறது. மேட்டூரில் இருந்து விடப்படும் தண்ணீரின் அளவும் விநாடிக்கு 21,000 கன அடியிலிருந்து 25,000 கன அடியாக 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31-ந் தேதி முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக விடப்படும் தண்ணீரின் பலன் கீழ்ப் பகுதிகளுக்கு இப்போது எட்டியிருக்கும். அதே சமயம் தண்ணீர் உபயோகத்தில் ஓரளவு சிக்கனமும் கண்காணிப்பும் தேவை. மேட்டூர் அணைக்குத் தொடர்ந்து மேலும் வரும் தண்ணீரின் அளவைக் கருத்தில் கொண்டு குறுவை சம்பா பயிர்களுக்குத் தேவையான தண்ணீரை வழங்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் சொல்லிய நேரத்தில் முறை இல்லை என்று சொன்னார்கள். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு பேசிய நேரத்தில் பின்னாடி காலத்தில் தண்ணீரானது சாகுபடிக்கு இல்லாத காரணத்தால் இப்பொழுது முறை அவசியம் என்று கூறினார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு நேரடியாகத் தஞ்சை மாவட்டப் பகுதிகளுக்குச் சென்று பார்க்கின்ற பொழுது கட்டாயமாக முறை வைத்து அதனால் விவசாயிகள் சிக்கலை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டுக்கு முன்னாடி முறையாக விட்டதன் காரணத்தால் இரண்டு முறை செலவழிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதற்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த பொழுது முறையைப் பின்னாடி வைத்தார்களே தவிர முன்னாடி வைக்கவில்லை. அதனால் விவசாயிகள் ஏறக்குறைய ஒன்பதாண்டுக் காலம் சிக்கல் இல்லாமல் இருந்தார்கள். ஆனால் சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் முறை இல்லை என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய சிக்கலை அமைச்சரவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. மா. மணிமாறன் : முறை வைக்கப்பட்டிருக்கிறது முறை இல்லாமல் தண்ணீர் விடுவதற்குப் பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவலின்படி முறை வைப்பு இல்லை என்பதுதான்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த விதி எண். 41-ன் கீழ் இதைப் போலவே தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாகக் கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் சீர்காழி, மாயூரம் தாலுக்காக்களில் காவிரியின் கிளை நதிகளில் தண்ணீர் சரிவரக் கிடைக்காமல் விவசாயம் பாதிக்கப்படுகிறது என்று கவன ஈர்ப்புத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏழெட்டுப் பேர் கொடுத்திருக்கிறார்கள். 41-வது விதியின் கீழ் கொடுக்கப்படுவது அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்தது என்று இருக்கிற காரத்தினால்கூட இந்த முக்கியமான அவசரத் தன்மை வாய்ந்த நிலைமையைக் கூட எடுத்துக் கொள்ளாதது பற்றித் தலைவரவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம், உறுப்பினரவர்களுக்கு நான் அறையிலே விளக்கமாகச் சொன்னேன். ஆனால் உங்களுக்கு, எழுப்ப உரிமை உண்டு, எழுப்பி விட்டீர்கள். 15, 20 நாட்கள் பொறுத்துக்கூட கவன ஈர்ப்புத் தீர்மானங்மானங்கள் அவையில் வந்திருக்கின்றன. அதற்காக அவ்வளவு நாள் கடத்த வேண்டுமென்றுகூட நான் நினைக்கவில்லை. ஒன்றை நான் வெளிப்படையாகவே சொல்கின்றேன். அத்தனை அமைச்சர்களுக்கும் டீ. ஓ. லெட்டர் எழுதியிருக்கிறேன். சீக்கிரமாக, எவ்வளவு துரிதமாக பதில் தர முடியுமோ அவ்வளவு துரிதமாகத் தர வேண்டுமென்றுதான் நான் நினைக்கிறேன். நான் இதைப்பற்றி அறையிலேயே உங்களிடத்தில் சொன்னேன். ஆனால் அப்பொழுது நான் உங்களிடத்திலே சொல்லி, விளக்கியது தவறு என்று கருதுகிறேன். உடனே அவையிலே வந்து கேட்கிறீர்கள். நான் எல்லா உறுப்பினர்களுக்கும் சொன்னேன். தகவல் வந்ததும் வைக்கிறேன் என்று. நான் சம்பந்தப்பட்ட இலாக்கா அமைச்சர்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். அவைகள் வந்தவுடன் வைக்கப்படும்.

## (6) 1977–78 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும், —தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண். 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1977 ஆகஸ்ட் 11

" நிதிக் கோரிக்கை எண்.—29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,12,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

THIRU S. J. SADIQ PASHA: Sir, to discuss policy, I move—
"That the allotment of Rs. 4,12,12,000 under Demand No. 29, Labour including Factories, be reduced by Rs. 100.

THIRU J. JAMES: Sir, to discuss the necessity to give employment regularly to the C.L.R. employees now retrenched in the Government Rubber Plantation in Kanyakumari district, I move—

"That the allotment of Rs. 4,12,12,000 under Demand No. 29—Labour including factories, be reduced by Rs. 100.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, தொழிலாளர் நல ஆணையர் முன்னால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொழிலாளர் நல இலாக்காவினாலேயே மீறப்படுவது பற்றி விவாதிக்க :

" நிதிக் கோரிக்கை எண். 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,12,12,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, சோழன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுவது பற்றி விவாதிக்க:

" நிதிக் கோரிக்கை எண் 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,12,12,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



1977 ஆகஸ்ட் 11]

THIRU P. CHANDRAN: Sir, to discuss about the retrenchment and the remedies to be sought for, I move—

"That the allotment of Rs. 4,12,12,000 under Demand No. 29—Labour including Factories, be reduced by Rs. 100.

(முற்பகல் 9-50)

(ஆ) கோரிக்கை எண். 33—வீட்டு வசதி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

" நிதிக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ், ரூ. 9,96,33,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ".

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, குறைந்த செலவில் வீடுகட்டித் தருவது பற்றி விவாதிக்க :

" நிதிக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,96,33,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, வீடில்லாத எல்லோருக்கும் வீட்டு மனை கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றி விவாதிக்க :—

" நிதிக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,96,33,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRU J. JAMES: Sir, to discuss the necessity to provide to the poor, helpless widows and others, houses free of cost in the villages, I move—

"That the allotment of Rs. 9,96,33,000 under Demand No. 33—Housing, be reduced by Rs. 100".

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, கிராமப் பகுதிகளில் வீட்டு வசதியைப் பெருக்க 30 வருட தவணைகளில் நீண்ட காலக் கடன் கொடுத்து வீட்டு வசதியைப் பெருக்க வேண்டும் என்பதுபற்றி விவாதிக்க :—

" நிதிக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ், ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,96, 33,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRU R. MARGABANDHU: To discuss about the damages caused to houses constructed through contractors, I move—

"That the allotment of Rs. 9,96,33,000 under Demand No. 33—Housing, be reduced by Rs. 100."

(இ) கோரிக்கை எண். 34—நகர்பகுதி வளர்ச்சி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:—

"நிதிக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,48,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு சு. பாலன் : தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க:—

" நிதிக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,48,01,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, நகராட்சிகளில் வருவாய் பெருக, பெரும் உணவு விடுதிகள், நகரப் பேருந்துகள் சினிமாக்கள் போன்ற தொழில்களை நடத்த நகரசபைகளுக்கு அனுமதி வழங்குவது பற்றி விவாதிக்க:—

" நிதிக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ ,48,01,000-ல் ரூ 100 குறைக்க வேண்டும் ".

என்ற வெட்டு தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



திரு எ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க:—

" நிதிக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,48,01,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU R. MARGABANDHU: Sir, to discuss about the suspension of all constructions in urban areas, I move—

"That the allotment of Rs. 8,48,01,000 under Demand No. 34—Urban Development be reduced by Rs. 100."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 3 மானியக் கோரிக்கைகள் மீதும் விளக்கக் குறிப்புகள் * கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைக் குறிப்பேட்டில் நான் படித்ததாக ஏற்றுக் கொண்டு, அச்சடிக்குமாறு கேட்டுக்கொள்வதுடன், உறுப்பினர்கள் இதனுடைய விவாதத்தைத் துவக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே, விவாதத்தைத் துவக்குகின்ற உறுப்பினருக்கு 15 நிமிடம், மற்ற உறுப்பினர்களுக்கெல்லாம் 5 நிமிடம். தயவு செய்து குறிப்பிட்ட நேரத்தை உறுப்பினர்கள் கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(4) ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஆ) ஆய்வு உரையில் உள்ள அச்சுப்பிழை குறித்து.

திரு மு. அம்பிகாபதி : பாய்ன்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவரவர்களே, நேற்றிரவு 11 மணிக்கு இந்த அறிக்கை கொடுக்கப்பட்டது. இருந்தாலும் படித்திருக்கிறோம். அந்த அறிக்கையில் 38-ம் பக்கம், கடைசி பாராவில் '............ பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாகத்தினருக்கும் தொழிலாளருக்குமிடையில் தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னர்

* 483—609-ம் பக்கங்களில் இணைப்புகள் I, II, III, ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

1—9—1977 அன்று உடன்பாடு ஒன்று ஏற்பட்டது' என்று இருக்கிறது. 1—9—1977—எனவே, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அச்சுப் பிழையாக இருக்கலாம். அதைப் பெரிதாக்கிக்கொள்ளவேண்டியதில்லை. 1—8—1977 என்று உங்களுடைய பகுத்தறிவைப் பயன்படுத்தி எடுத்துக்கொள்ளுங்கள்.

திரு மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, இதுவரை நான் பகுத்தறிவைப் பயன்படுத்தவில்லை என்று சந்தேகப்படுகிறாரா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பயன்படுத்துகிறீர்கள், தீவிரப்படுத்துங்கள் என்று சொல்கிறேன்.

## (6) 1977–78-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி.

திரு க. சுப்பு : தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் நல மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் புதிதாக பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு துறைகளிலும் பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள் எல்லோருக்கும் பொதுவாக இந்தத் துறை இருக்கிறது. நல்ல துறை. டிரான்ஸ்போர்ட், உணவு, கூட்டுறவு போன்ற எல்லாத் துறைகளிலும் உள்ள தொழிலாளர்களுடைய பிரச்னையை உள்ளடக்கி கவனிக்கக் கூடிய துறையாக இது விளங்குவதால், அவசரமில்லாத போக்கும், நிதானமான போக்கும் கடை பிடிக்க வேண்டிய நிலையில் அமைச்சர் அவர்கள் இருக்கிறார் என்பதையும் நான் சுட்டிக்காட்டத் தேவையில்லை. அப்படிப்பட்ட துறையில் முக்கியமான மானியத்தின் மீது ஆக்கபூர்வமான ஆலோசனைகளைச் சொல்வது எனது கடமை என்று கருதுகிறேன்.

இன்றைய தினம் நமது நாட்டைப் பொறுத்தவரையிலும் பஞ்சாலை நிர்வாகத்தில் பல பிரச்னைகள் வந்திருப்பதை தாங்கள் அறிவீர்கள்.. ஆரம்பத்திலே தொழிலாளர்களை அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தி அதற்குத் தீர்வு காண முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.



## (4) ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

### (ஆ) ஆய்வு உரையிலுள்ள அச்சுப்பிழை குறித்து —தொடர்ச்சி.

திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சற்று முன்னாலே, பல்லவன் போக்குவரத்து கழக தகராறில் முடிவு 1—9—1977 என்று தமிழிலே இருப்பதைத் தாங்கள் 1—8—1977 என்று திருத்திக்கொள்ள பகுத்தறிவைப் பயன்படுத்திக்கொள்ளும்படி சொன்னீர்கள். ஆனால் இங்கே ஆங்கிலத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற ஏட்டின் குறிப்பில் 1—3—1977 என்று இருக்கிறது. இதற்கு எப்படி பகுத்தறிவைப் பயன்படுத்துவது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அச்சுப் பிழைதான். அச்சுத் தொழிலாளியினது பிழைதான். 3-ம் 8-ம் ஒரே மாதிரி யான டைப் ஆக இருப்பதால் அச்சுத் தொழிலாளி இந்தப் பிழையைச் செய்திருக்கிறார் என்று நினைக்கிறேன். அதை 8 ஆக திருத்திப் படித்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பகுத்தறிவைப் பகுத்துப் பயன்படுத்த வேண்டும்.

திரு மு. கருணாநிதி : மூன்று எண்ணல்ல. 1st March 1977 என்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது திருத்த வேண்டிய ஒன்றுதான். அதைத் திருத்தி ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு க. சுப்பு : எனக்குத் தரப்பட்டிருக்கிற நேரம் 15 நிமிடம். இதிலிருந்து 15 நிமிடம் எடுத்துக் கொள்கிறேன். பாயின்ட் ஆப் ஆர்டர்க்கு எல்லாம் நான் பொறுப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலிருந்து 15 நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : எது சரியானது என்றால் 1st March 1977 தான் கரெக்ட். எதிர்கட்சித் தலைவர் சொல்வதுதான் கரெக்ட்.

திரு. மு. அம்பிகாபதி : ஒரே குழப்பமாக இருக்கிறது. 1—8—77 என்று இருக்கிறது. அமைச்சர் 1—3—77 என்று சொல்கிறார்:..........

(6) 1977–78-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும்—வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. க. சுப்பு : அதுதான் சொல்லியாகிவிட்டதே. 1977-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 1-ம் தேதி தான் சரி. பஞ்சாலைத் தொழிலிலே ஏற்படக்கூடிய ஒரு நெருக்கடி, சில பேர்கள் கருதுவதைப் போல் ஏதோ தொழிலாளர்கள் போனஸ் கேட்டார்கள்; கூலி உயர்வு கேட்டார்கள், அதனாலே நெருக்கடி வந்தது என்பதைப் போல் அல்ல. சில பேர்கள் தவறாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். சமூகப் பின்னணியில், பொருளாதாரப் பின்னணியில் அணுக வேண்டும். எதற்காகப் பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன ? எதற்காக அவைகள் நசிந்து போகின்றன என்பதற்குச் சரியான கணிப்பிலே நாம் செயல்படவேண்டும்.

இன்றைய தினம் தமிழகத்திலே வறுமையின் எல்லைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறவர்கள் 65 சதவிகிதம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்த அளவு 65 உதவிகிதத்திற்குக் கீழே வாழ்கின்ற மக்கள், எவ்வளவுதான் துணியை உற்பத்தி செய்தாலும் வாங்கும் சக்தி உடையவர்கள் இருக்கிறார்களா என்றால் இல்லை. இவ்வளவு வாங்கும் சக்தி இல்லாதவர்களுக்கு மத்தியிலே இந்த ஆலைகளை அமைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுடைய வாங்கும் சக்தியை அதிகரிக்க சீரான திட்டம் போடாமல், அந்தச் சக்தியை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்காமல் உற்பத்தியாவதை மார்க்கெட்டுக்குக் கொண்டுவர இயலாது. அந்த அளவு உள்நாட்டு மார்க்கெட்டு மோசமாக இருக்கிறது. வெளி நாட்டு மார்க்கெட்டு நமக்குக் கிடையாது. ஏன் என்றால் பெல்ஜியம், ஜப்பானில் எல்லாம் சொபிஸ்டிகேடட் மிசின் வைத்து உற்பத்தி செய்யும் போது இந்தியாவிலே உள்ள நூற்பாலைகள் அவர்களுடன் போட்டி போடுவது என்பது முடியாத காரியம் என்பதை நாம் அறிவோம். அப்படிப்பட்ட காரணங்களினால்தான் ஆலைகள் இங்கே மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆகவே சமூகப் பின்னணியை நாம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கூற விரும்புகிறேன். அதை விட்டு விட்டு தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டார்கள், போனஸ் கேட்டார்கள், ஆகவே மூடினார்கள் என்று சொல்வது சரியானது அல்ல, என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நமது அமைச்சர் அவர்கள் பல்வேறு தொழிற் சங்கங்களின் நிர்வாகங்களிலே தொடர்பு வைத்திருந்தவர்கள். அவர்கள் நல்ல அனுபவம் வாய்ந்தவர்கள். அதிலே இருக்கக்கூடிய பிரச்னையை நன்கு அறிந்தவர்கள். கோவையில் மூடப்பட்டிருக்கிற 5, 6 ஆலைகளையும் தமிழகத்திலே இருக்கக்



கூடிய மூடப்பட்ட ஆலைகளை எல்லாம் திறப்பதற்கு இந்த அரசாங்கம் என்ன கொள்கை வைத்திருக்கிறது என்பது நமக்கு புரியவில்லை. இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தின் கொள்கை என்ன என்றும் இன்னும் தெரியவில்லை. தொழில் கொள்கை என்ன, தொழிலாளர் நலக் கொள்கை என்ன என்பதைப் புரிந்துகொள்ள முடியாத நிலையிலேதான் இந்த வாதத்தை தொடங்க வேண்டியிருக்கிறது.

பொதுவாக, வேலை இல்லாமல் பலர் இருக்கும்போது புதிதாக ஆட்டோமேஷன் என்ற பெயரில் சோபிஸ்டிகேடட் மெஷின்களை வைக்கின்ற முறையைக் கொண்டு வருவது, வேலையில்லாத் திண்டாட்டத்தை இன்னும் அதிகமாகச் செய்யும். ஆகவே இதிலே அரசாங்கம் சரியான முடிவெடுக்க வேண்டும். நம்மைப் பொறுத்தவரையில் எதிர்க்க வேண்டிய முடிவு இது. எல்.ஐ.சி. லே ஆட்டோமேஷன் கொண்டு வந்தபோது எதிர்த்தார்கள். கணக்கு அலுவலகத்திலே ஆட்டோமேஷன் கொண்டு வந்த போது எதிர்த்தார்கள். இன்றைக்குக் கூட சிவில் சப்ளை கார்ப்பரேஷனிலே அப்படி ஒரு முறையைக் கையாளுவது என்று முடிவெடுத்து இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அப்படி ஆட்டோமேஷன் புகுத்தினால் ஏற்கனவே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய பணியாளர்கள், வேலை இல்லாத நிலைக்கு ஆளாக்கப்படுவார்களா அல்லது இவர்களை வேறு வேலையில் பயன்படுத்தப் போகிறார்களா, இப்படிப்பட்ட நேரத்தில் ஆட்டோமேஷன் கொண்டு வந்தால், வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும், அதன் மூலம் மேலும் பல சிக்கல்கள் உருவாகும்.

(முற்பகல் 10·00)

அரசாங்கம் தன்னுடைய கொள்கையை அறிவித்துவிட வேண்டும்.

அதே மாதிரி, தனியார் ஸ்தாபனங்களுக்கு முன் உதாரணமாக இருக்க வேண்டிய அரசாங்கம், அந்த மாதிரி இல்லாமல் மிகவும் மோசமான உதாரணத்தைக் கடைப்பிடித்து வருகிறது. ஏற்கனவே ஒத்துக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தையாவது அரசாங்கம் நடைமுறைப்படுத்துகிறதா என்றால் இல்லை. பஸ் கார்ப்பொரேஷன் அமைக்கப்பட்டபோது, அதற்கு முன்னால் தனியார் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த பஸ் தொழிலாளர்கள் அந்தந்த கார்ப்பொரேஷன் கீழ் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தீர்மானம் இருக்கிறது. அதற்கு ஜி.ஓ. இருக்கிறது. அவர்கள் கல்வித் தகுதியைப் பார்க்காமல், அவர்கள் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ஜ் மூலம் வரவேண்டும் என்றில்லாமல், அவர்கள் தனியாரிடம் பணியாற்றியதை மையமாக வைத்துக் கொண்டு வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்றைக்கு அவர்கள்

எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேன்ஜ் மூலமாக வரவேண்டும் என்கிறார்கள். வயது வரம்பை வைக்கிறார்கள். ஏற்கனவே ஒத்துக்கொண்ட கொள்கையைக்கூட புறக்கணிக்கின்ற நிலைமை இருக்கிறது.

இன்றைக்குப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதற்குள் நான் போக விரும்பவில்லை. அதிலிருக்கின்ற முக்கிய பிரச்னை டிசிப்பிளினரி புரொசீடிங்ஸ் என்று சொல்லி பழி வாங்கப்படுகிறார்கள். 'அன்பேர் லேபர் பிராக்டீசஸ்' கடைப் பிடித்து தனிப்பட்ட முதலாளிகள் தொழிலாளிகளை 'விக்டிமைசேஷன்' செய்தால், பொறுத்துக் கொள்ளலாம். அரசாங்கமே செய்கிறார்கள் என்றால், தொழிலாளர்களால் பொறுத்துக் கொள்ள முடியாது.

போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களை, 'ரிட்ரெஞ்ச்மெண்ட்', 'டிசிப்பிளினரி புரொசீடிங்ஸ்', 'டிரான்ஸ்பர்' என்ற பெயரால் மோசமான நடவடிக்கைகளை எடுப்பதால், அவர்கள் கோபம் அடைகிறார்கள். பல்வேறு கழகங்களில் இருக்கிற தொழிலாளர்கள் தங்கள் போர்க் கொடியை உயர்த்தியிருக்கிறார்கள். அதனால் பலர் ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய சம்பளத்தையும், ஊதிய விகிதாச்சாரங்களையும் மாற்றியமைக்கச் சம்பளக் கமிஷன் கேட்டிருக்கிறார்கள். டிரான்ஸ்போர்ட் வேஜ் போர்டு கேட்டிருக்கிறார்கள். அதையும் இந்த அரசாங்கம் அரசு ஊழியர்களுக்கு அறிவித்த நேரத்திலேயே அறிவித்திருக்கலாம். ஏனோ அறிவிக்கவில்லை; இன்றைக்கு அறிவிக்கக் காத்திருக்கிறாரோ என்னவோ தெரியவில்லை. அதை அறிவிக்கவேண்டும்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷன் இலாக்காவில் அதுவும் அரசாங்க இலாக்காதான்—அதில் பணியாற்றுகின்ற தோழர்களை திடீரென்று ரிட்ரெஞ்மெண்ட் செய்கிறார்கள். அதற்கு ஒரு பாலிசி வேண்டாமா? மத்திய சர்க்கார் 'ரிட்ரெஞ்ச்மெண்ட்', 'லே ஆப்' சட்டத்தைத் திருத்த ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

அதை இந்த சர்க்கார் கடைப் பிடிக்கக்கூடாத? சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷனில் தஞ்சை மாவட்டத்தில் 5,000 பேர் வேலையிலிருந்தார்கள். அவர்களில் 4,000 பேரை வேலையிலிருந்து நீக்கி விட்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு அரசாங்கம் வேண்டுமா? இதற்கு ஒரு தொழிலாள நல இலாக்கா வேண்டுமா? அந்த இலாக்காவுக்கு ஒரு அமைச்சர் வேண்டுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.





லக்ஷ்மி மெஷின் ஒர்க்ஸ் மூடப்பட்டிருக்கிறது. அதைத் திறக்க என்ன நடவடிக்கை என்று கேட்டோம். அப்போது அமைச்சர் சொன்னார். அது தொழில் தகராறால் மூடப்பட்டிருக்கிறது. தகராறு கோர்ட்டுக்குப் போயிருக்கிறது என்று சொன்னார். கோர்ட்டுக்குப் போய் நிவாரணம் என்றாவது கிடைத்திருக்கிறதா என்பது அமைச்சருக்குத் தெரியுமா? காலம் கடத்தி, வேறு வேலையைத் தொழிலாளர்கள் தேடிக் கொள்ளச் செய்யத்தான் இந்த முறையை முதலாளிகள் கையாள்வார்கள். கோர்ட்டுக்குப் போய் தொழிலாளர்கள் நிவாரணம் வாங்கியதாக சரித்திரமே இல்லை. அப்படியே கோர்ட்டுத் தீர்ப்பு வழங்கினாலும், அந்தத் தீர்ப்பு அமுலாக்கப்படுவதில்லை. பல முதலாளிகள் கோர்ட்டுத் தீர்ப்பை நிராகரித்துக் கொண்டிருக்கிறார்கள். பிராவிடெண்டு பண்டு காண்டிரிபியூஷன் கொடுக்காத முதலாளிகள் இருக்கிறார்கள் என்றால், அப்படிப்பட்ட நிர்வாகங்களை எதிர்த்துப் போராடுவது என்பது சாதாரணமல்ல. ஆகவே அரசாங்கம் பிரச்னையை கோர்ட்டுக்கு அனுப்பிவிட்டோம் என்று சொல்வது 'எஸ்கேபிசமே' தவிர, பிரச்னையைத் தீர்க்கும் நடைமுறை அல்ல.

லக்ஷ்மி மெஷின் ஒர்க்ஸில், அமைச்சர் சொன்னதற்குப் பின்னால்கூட, குழந்தை குட்டிகளோடு சிறைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். நேற்று 56 பேர் ஜெயிலுக்குப் போயிருக்கிறார்கள். இன்றைக்கு எவ்வளவு பேரோ தெரியாது. இப்படித் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி உள்ளே போக வேண்டியிருக்கிறது. வெளியிலேயும் போராட்டம், உள்ளேயும் போராட்டம். சிறையிலும் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. மூன்று நாட்களாக மத்திய சிறையில் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். வெளியிலும் போராட்டம், உள்ளேயும் போராட்டம் வெடிக்கும். இங்கே சிறையில், உள்ளே நடக்கின்ற போராட்டம், மற்ற இடங்களிலேயும் வெடிக்கும்.

எனவே பிரச்னையைத் தீர்க்க முன்வராமல் கோர்ட்டுக்குப் போகும் ஏற்பாடு சரியல்ல.

போனஸ் கொடுக்கப்படாத சம்பளம்என்பது ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இடைக்காலத்தில் அதை எடுத்துவிட்டார்கள். இந்த அரசாங்கம் போனஸ் என்பது கொடுக்கப்படாத சம்பளம் என்ற கொள்கைக்கு ஆதரவாக இருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே இப்போதாவது போனசைக் கொடுக்க தீர்மானம் கொண்டு வந்திருக்கலாம். போனஸ் சட்டத்தை வாபஸ் வாங்கி, 8.33 சதவிகிதம் என்ற அளவுக்காவது போனஸ் கொடுக்க மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தும், வகையிலே தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும் என்று சொன்னோம். தனியார் அப்படிப்பட்ட தீர்மானம் கொண்டு வராமல், அரசாங்கமே அப்படிப்பட்ட தீர்மானத்தைக் கொண்டு வந்திருந்

[திரு. க. சுப்பு] [1977 ஆகஸ்ட் 11

தால் நன்றாக இருந்திருக்கும். அமைச்சராவது 82 வது விதிப்படி இப்படிப்பட்ட முக்கியமான பிரச்னையைக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால் அவர்கள் கொண்டு வரவில்லை. ஆகவே அரசாங்கத்தின் கொள்கையைப் புரிந்து கொள்வது கஷ்டமாக இருக்கிறது.

பால் வள நிறுவனத்தில் 500 பேர் இருக்கிறார்கள் பகுதி நேர ஊழியர்கள். 10 மணி நேரம் வேலை செய்கிற அவர்கள் பகுதி நேர ஊழியர்கள் என்றால், முழு நேர ஊழியர்கள் எவ்வளவு மணி நேரம் வேலை பார்க்க வேண்டுமோ தெரியவில்லை.

இது மாதிரி 'அன்பேர் லேபர் பிராக்டிஸ்' இருக்கிறது. கான்டிராக்ட் லேபர் மாதிரி கருதுகிறார்கள். கான்டிராக்டரிடம் டீலர் மாதிரி கருதப்படுகிறார்கள். அவர்கள் காலை 2 மணியிலிருந்து இரவு 10 மணி வரை வேலை செய்பவர்களைப் பகுதி நேர ஊழியர்கள் என்று கருதப்பட்டு அவர்களுக்கு லீவு வசதி கிடையாது, வேலை நிர்ணயம் கிடையாது. பால்வள நிறுவனத்தில் இந்த நிலை இருக்க வேண்டுமா? தனியார் துறையில் ஒரு முதலாளி இப்படி இருந்தாலும் அனுமதிக்கலாம். இங்கே அரசாங்கமே முதலாளி. எனவே அரசாங்கம் மற்றவர்களுக்கு முன் உதாரணமாக நடந்து கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பற்றி கேட்க வேண்டியதே இல்லை. மத்திய கூட்டுறவு வங்கிகளின் ஊழியர்கள் இப்போது போர்க்கொடி உயர்த்தியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் குற்றம் என்று சொல்லவில்லை. நிலைமைகள் அப்படிக் கிளம்பி வெடித்திருக்கின்றன. இவைகளை எப்படிச் சமாளிப்பது என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கைத்தறி நெசவாளர்கள் பிரச்னை மிகவும் மோசமாகி விட்டது. நேற்றைக்குக்கூட ராமநாதபுரத்தில் இந்தப் பிரச்னையை தீர்க்க சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். பிரச்னைகள் தோன்றுவதும் அரசு நடவடிக்கை எடுப்பதும் இது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. தண்டவாளம்போல் போய்க் கொண்டிருக்கிறதே தவிர 'மீட்' ஆவது இல்லை. எனவே பிரச்னைகளைத் தோற்றுவிக்காமல் அரசு ஒரு முடிவான நிலைக்குக் கொண்டுவர முயலவேண்டும்.

புதிய அரசு, அமைச்சர்கள் வந்தவுடன் அதிகமாக எதிர்பார்த்தோம். தமிழில் தகராறு இருந்தாலும் பிரச்னைகளை எடுத்துச் சொல்லுவார், முக்கியமான முடிவுகளைக் கொண்டு வருவார் என்று நினைத்தேன். ஒரு பேப்பரைப் பார்த்தேன்: ஒரு பிரச்னையைப் பற்றி முதலமைச்சர் பேசி இருக்கிறார். 'நான் அமெரிக்கா சென்றபோது அங்கும் கதவடைப்பு.......



1977 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எந்தப் பேப்பர்?

திரு. க. சுப்பு : தங்களுடைய அனுமதியோடு இந்தச் செய்தியை வாசிக்கிறேன். அந்த நேரத்தைக் கழித்து விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு குற்றச்சாட்டு கொண்டுவந்தால் அதை கொடுக்க வேண்டும்.

திரு. க. சுப்பு : குற்றச் சாட்டு அல்ல. ஒரு நியூஸ் அயிட்டம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பெயரைச் சொல்லுங்கள். அது செய்தியாகவும் இருக்கலாம், குற்றச் சாட்டாகவும் இருக்கலாம்.

திரு. க. சுப்பு : உறுப்பினர்களை நம்ப வேண்டும், பொய் சொல்லமாட்டோம் என்று. கொள்கைப் பிரச்னையாக இருப்பதால் வாசித்தேன்.

'அமெரிக்காவில் கதவடைப்பு. அங்கே கூட ஸ்டிரைக். காரணம் நிறைய உற்பத்தியாகி அது தேங்கிவிட்டதால், அங்கே கதவடைப்பு. ஆனால் இங்கே போனஸ் வேண்டும், சம்பளம் வேண்டும், என்று போராட்டம் நடத்துவதால் தொழிற்சாலையை மூடவேண்டிய நிலையில் உள்ளது'',

இது முதலமைச்சர் பேச்சு. வேறு ஒருவர் பேச்சாக இருந்தால் படித்திருக்க மாட்டேன். அமெரிக்காவில் கதவடைப்பு என்றால் உற்பத்தி அதிகமாகி தேங்கி விடுகிறது என்ற காரணமாக. இங்கே தொழிலாளர்கள் போனஸ் வேண்டுமென்று கேட்கின்றனர். ஊதிய உயர்வு கேட்கின்றனர். ஆகவே தொழிற்சாலையை மூடவேண்டியிருக்கிறது. இப்படி இவர்கள் கேட்கலாமா என்ற அர்த்தத்தில் தான் இருக்கிறது. இது முதலமைச்சர் நேற்றுப் பேசியது. ரொம்ப நாளைக்கு முன்பு பேசிய பேச்சு என்று சொல்லிவிட முடியாது. அப்படிப்பட்ட ஆபத்து இங்கே இருப்பதாக உணருகிறோம். இந்தக் கொள்கையை அரசாங்கமே அனுமதித்தால் ஆபத்து. சுந்தரம் கிளேட்டன்' ஏன் மூடிக் கிடக்கிறது என்று கேட்டால் இவன் சம்பளம் கேட்கிறான், மூடி கிடக்கிறது. ஏன் அதைத் திறக்க அரசு நடவடிக்கை எடுப்பதில் தாமதம் என்று கேட்டால் அதைப் பற்றி விவாதிக்க சட்ட மன்றத்தில் அனுமதிக்கவில்லை. உங்கள் கொள்கை அப்படி இருக்கிறது.

தொழிலாளி கோரிக்கை வைத்தால் தொழிற்சாலை மூடவேண்டிய நிலை. இந்தியா மீட்டர்ஸ் ஏன் திறக்கவில்லை. கேள்வி கேட்டதற்கு பதில் சொல்ல வேண்டாமா? மூன்று நாட்கள் ஆகி விட்டன. நேற்றைக்கும் ஒத்திப் போட்டு இன்றைக்கும் ஒத்திப் போட்டார்கள். கேள்விக்கு பதில் சொல்லுவதையே

ஒத்திப் போட்டால், பிரச்னையை எப்படி பேசித் தீர்ப்பது? அந்தப் போக்கைச் சுட்டிக்காட்டி, அணுகுமுறை எவ்வாறு இருக்கிறது என்பதை தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவது சிறப்பாக இருக்கும் என்பதற்காகச் சொல்லுகிறேன். அமைச்சர் அவர்கள் பரிவோடு தொழிலாளர் பிரச்னையை அணுக வேண்டும்.

பொருள் போக்கு வரத்து ஊழியர்களின் ஒரு பகுதியினர் எக்ஸ்—செர்வீஸ்மென். ராணுவத்தில் பணியாற்றியவர்கள். இங்கே அவர்கள் ரெட்ரன்சுமெண்டு ஆனவுடன் அவர்கள் மத்திய அரசின் கீழ் வருவதால், ஒரு விண்ணப்பம் பிரைம் மினிஸ்டருக்கு தயார் செய்து தொழிலாளர் நல அமைச்சரிடம் கொடுத்தால், வாங்க மறுத்ததோடு, ஏண்டா உள்ளே விட்டீர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். பிரைம் மினிஸ்டருக்கு அட்ரஸ் பண்ணியதை ஏன் இங்கு கொடுக்கக் கூடாது? இவருக்கு அட்ரஸ் பண்ணியதை பிரைம் மினிஸ்டருக்குக் கொடுக்கக்கூடாது. ஆனால் பிரைம் மினிஸ்டருக்கு அட்ரஸ் செய்ததை இவரிடம் கொடுக்கலாம். இது எப்படி குற்றமாகும்?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, பிரைம் மினிஸ்ட்டரிடம் கொடுத்ததை என்னிடம் கொடுத்தால் அது ப்ராப்பராக இருக்காது. எனக்கு என்று என்னிடம் ஒரு மெமோராண்டம் தயாரித்துத் தந்தால் I will take necessary action.

திரு. க. சுப்பு: ப்ரைம் மினிஸ்டரிடம் கொடுத்ததன் நகலைத்தான் இவர்களிடம் கொடுக்கிறார்கள், அதில் என்ன குற்றம்? முதல் அமைச்சர் அவர்களுக்கு அட்ரஸ் செய்ததை உங்களிடம் கொடுக்கலாம், உங்களுக்கு அட்ரஸ் செய்ததை முதல் அமைச்சர் அவர்களிடம் கொடுக்கக் கூடாது. நான் கேட்கிறேன், அப்படி தப்பாகக் கொடுத்திருந்தாலும் கூட, ஒரு தொழிலாளி வேலை இல்லாமல் இருக்கிறார், அவரை ஏன் உள்ளே விட்டாய் என்று கேட்கிறபோது உண்மையிலேயே அது வேதனை தருவதாகும் பொதுவாக அமைச்சரிடம் உள்ளே சென்று ஒரு நகலைக் கொடுக்கும்போது—அதுவும் அவன் வேலை இழந்து அமைச்சர் அவர்களைச் சந்திக்க வரும்போது அனுமதி தரப்படவில்லை என்று சொன்னால், திட்டி அனுப்பியிருக்கிறார் என்று சொன்னால், அந்த ஊழியர், எவ்வளவு மனவேதனையோடு வந்தார் என்பதை நான் அறிவேன். நான் அவரைச் சந்தித்தேன், அதனால் எனக்குத் தெரியும் அவர் மனவேதனை. தொழிலாளர்கள் மனுக்கள் கொடுக்கும்போது கூட அது சரி இல்லை, இது சரி இல்லை என்று சொல்லி திருப்பியனுப்பினால் எப்படி நாம் பிரச்னைகளுக்குத் தீர்வு காணப் போகிறோம்?



உங்களது தொழிலாளர் கொள்கை என்ன என்று தெளிவாகத் தெரியவில்லை. பத்திரிகையில் பார்த்தபோதுதான் இதுதான் கொள்கை என்று தெரிந்து கொண்டேன்; முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியதற்கு மேல் ஒரு கொள்கை இருக்க முடியாதல்லவா? இன் டோட்டோவாக அவர்களை பாலோ செய்யக் கூடியவர்கள் நீங்கள். தொழிலாளர்கள் கோரிக்கைகள் வைப்பதே தவறு, அதனால்தான் ஆலைகள் மூடப்படுகின்றன என்று எண்ணத்தை வெளிப்படையாக ஏற்படுத்தக்கூடிய பேச்சு அது. அதற்காக நான் வருத்தப்படுகிறேன். அத்தகைய போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்.

மூடப்பட்டிருக்கிற ஆலைகளை எப்போது திறக்கப் போகிறீர்கள்? அரசாங்கம் அவற்றை ஏற்றுக்கொள்வது என்றால் வரவேற்கிறோம். ஆனால் ஒன்று கூற விரும்புகிறேன். திரு. சி. சுப்பிரமணியம் வொர்க்கேர்ஸ் செக்டார் என்று சொல்வது வேறு, திரு. ஜார்ஜ் பெர்னான்டஸ் வொர்க்கேர்ஸ் செக்டார் என்று சொல்வது வேறு.

ஆனால் முதல் அமைச்சர் அவர்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை. நலிந்துபோன ஆலைகளைத் தொழிலாளர்கள் எடுத்துக்கொள்வது என்றால்—வலிக் மில்ஸ்—ஏற்கனவே நலிந்துபோன ஆலைகளினால் நலிந்து போனவர்கள் தொழிலாளர்கள்—நலிந்து போன ஆலைகளை எடுத்து அவர்கள் எப்படி நடத்த முடியும்? குருவி தலையில் பனம் பழத்தை வைப்பது மாதிரியாகும். தொழிலாளர்கள் நல அரசு என்று சொல்லக்கூடிய அரசு தொழிலாளர்களின் துயர்களைத் துடைக்க முன்வர வேண்டும். சின்ன ஒரு ஸ்டுடியோவை எடுத்து நடத்துவது வேறு, பெரிய தொழிற்சாலை ஏற்றெடுத்து நடத்துவது வேறு.

இப்போது பி. அன்ட். ஸி. மில்லின் நிலை எந்த நேரத்தில் வெடித்துக் கிளம்பும் என்று தெரியாது. மூவாயிரம் நாலாயிரம் தொழிலாளர்களை ரிட்ரெஞ்ச் செய்ய வேண்டும் என்ற போக்கில் நிர்வாகம் போய்க் கொண்டிருக்கிறது. லேபர் செகரட்டிரியைக் கொண்டுபோய்ப் போட்டிருக்கிறார்கள். அங்குள்ள டெக்னிக்கல் ப்ராப்ளம்ஸை அவர்கள் தெரிந்து கொள்ளவே, படிக்கவே, பத்தாண்டுக் காலம் பிடிக்கும். லேபர் செகரட்டரி அவர் வேலையைச் செய்ய வேண்டும். அவரைக் கொண்டு போய் மானேஜிங் டைரக்டராகப் போட்டால் அவர் எப்போது பிரச்னைகளைத் தெரிந்து கொள்ள முடியும் என்று நினைத்துப் பார்க்க வேண்டும். போனவுடனேயே வேலைப் பளுவை அதிகரிப்பது, சம்பளத்தைக் குறைப்பது என்று ஆரம்பித்தால் என்ன செய்வது? சர்க்கார் அதிகாரியைப் போட்டிருப்பதால் போராட்டத்தை தவிர்க்க வேண்டியிருக்கிறது, தனிப்பட்ட ஆளாக இருந்தால் சண்டை போட முடியும். சர்க்காரின் தொழிலாளர் கொள்கைகள் தெளிவாக்கப்பட வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் லே ஆப், ரிட்ரெஞ்ச்மென்ட், லாக் அவுட் இவை கூடாது என்ற கொள்கையை சரியாக நடைமுறைப் படுத்த வேண்டும்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன், கட்டபொம்மன் போக்குவரத்து கார்ப்பரேஷன், பல்லவன் போக்குவரத்து கார்ப்பரேஷன், மின்சார வாரியம் இவற்றில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக பல தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள். விக்டிமைஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவே நடந்தது என்று சொன்னாலும் கூட எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளை, தொழிலாளர்கள் மீது பழிவாங்க எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளைத் திரும்பப் பெற வேண்டும். இல்லை என்றால் இந்த அரசு அதற்கு உடந்தையாக இருக்கிறது என்றுதான் கூற வேண்டியிருக்கும்.

எனவே பழிவாங்கப்பட்டிருக்கும் தொழிலாளர்களின் மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளை கைவிட்டு விட்டு அவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்த வேண்டும்.

நேற்று கூட மின்சார வாரியத் தலைவரைச் சந்தித்து விவாதித்தோம். தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக பழிவாங்கப்பட்டவர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அவர்களுக்கு கொடுக்க வேண்டிய சம்பளமும் கொடுக்கப்பட வேண்டும்.

அதே மாதிரி ''பெய்ட் ஹாலிடேஸ்'' சம்பளத்தோடு விடுமுறை கொடுக்கின்ற விஷயத்தில் பல கம்பெனிகளும் சரியாக நடந்து கொள்வதில்லை. பொது தேர்தலுக்கு சம்பளத்தோடு விடுமுறை கொடுக்க வேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் அதை மதிப்பதற்கு நிர்வாகத்தினர் தயாராக இல்லை. வோட்டுப் போடுவதற்கு சம்பளத்தோடு விடுமுறை கொடுக்க வேண்டுமென்று இங்கிருந்து சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் அதை யாரும் மதிப்பதில்லை. இப்படிப்பட்ட நிர்வாகத்தின்மீது நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் ? சென்னையை எடுத்துக் கொண்டால், வேறுள்ள இடங்களிலிருந்து இனிமேல் தான் விவரங்கள் தெரியும். சென்னையிலேயே வெங்கடேஸ்வரா மில்ஸ் தேர்தல் நாளன்று விடுமுறையில் சென்றவர்களுக்கு ஆகஸ்ட் 15-ம் தேதி வேலை நாளாக வைத்திருக்கிறார்கள். ஆகஸ்ட் 15 சுதந்திர நாள், அவர்களுக்கு சுதந்திரமும் கிடையாது. எதுவும் கிடையாது. வோட்டு போடுவதற்கு உரிமையும் கிடையாது. அதே போன்று தான். 'ட்யூப் ப்ராடக்ட்ஸ் ஆஃப் இந்தியா' அங்கும் இப்படித்தான். பொதுத் தேர்தல் நாளன்று வேலை செய்ய வேண்டும், சம்பளத்தோடு விடுமுறை கொடுப்பதில்லை. இதையெல்லாம் கவனிக்க வேண்டும், யார் கவனிப்பது, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். இவர்களது போக்கு மாற வேண்டும் என்றால் தொழிலாளர் நல அமைச்சரது போக்கு மாற வேண்டும், இப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொஞ்சம்



நிதானத்துடன் சிந்தித்து கவனம் செலுத்த வேண்டும். அதற்குப் பதிலாக மந்திரியாக வந்தவுடனேயே எல்லாவற்றையும் மாற்றி விடக்கூடாது. மந்திரியாக வந்தவுடன் எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களையும் போய்ப் பார்த்திருக்கிறார்கள். அது நல்லது தான். ஆனால் இவர்களை பார்த்தால் மட்டும் போதாது, தொழிலாளர்களுடைய பிரச்னைகள் என்ன என்பதையும் பார்க்க வேண்டும், தொழிலாளர்களையும் பார்க்க வேண்டும். இந்தச் சர்க்கார் வந்தவுடன் கான்கிரீட்டாக செயல்படக் கூடிய விதத்தில் திறமையாக நடைபெறக்கூடிய அளவில்—இதுவரை செயல் முறைகள் அமையவில்லை.

ஐந்து மில்களை ஏற்றெடுக்கப் போகிறோம் என்று அறிவித்தார்கள். அதுவும் இவர்கள் வந்தபின் அறிவித்ததாக எடுத்துக் கொள்ள முடியாது. அது கவர்னர் ஆட்சி காலத்திலேயே அறிவிக்கப்பட்டது. ஆகவே அதையும் இந்தச் சர்க்கார் பெருமையாக எடுத்துக் கொள்ள முடியாது. சர்க்காருக்கு பெருமை ஏற்படக்கூடிய வகையில், திறமையாக செயல் படுகிறது என்ற சொல்லக் கூடிய அளவில் நடந்து கொள்ள வேண்டும். இது தான் தொழிலாளர்கள் பிரச்னையில் எங்கள் கொள்கை, மூடிய மில்களை திறப்பதற்கு இதுதான் கொள்கை. தொழிலாளர்களின் பாதுகாப்புக்கு இது தான் எங்கள் கொள்கை என்று திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும்.

முக்கியமாக தொழிலாளர்களுக்குப் பணிபாதுகாப்பு முக்கியம். அதைக் கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. சௌ. வே. வரதராஜன்: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழிற்சங்க-தொழிலாளர்களின் வேலை, வீட்டு வசதித் திட்டம் இவைகளின் மீது நான் பங்கெடுப்பதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இப்போது வீட்டு வசதி திட்டத்தைப் பற்றி சில விவரங்களை உங்கள் முன் கொடுக்க விரும்புகிறேன். வீட்டு வசதி திட்டத்திற்கு 76-77ல் இருந்த மூலதனத்தைவிட 35 சதவீதம் அதிகமாக ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி அளிக்கும் திட்டத்தில் பலகுடியிருப்புகளை கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒரு திட்டமாகும். அதைப் போலவே மின்வாரிய தொழிலாளர்களுக்கும் கோவை, திண்டுக்கல், கடலூர், காட்பாடி, திருச்சி முதலிய இடங்களில் வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் போலவே சேலம் நகரத்திலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் மின்வாரியத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று மின்வாரியத் தொழிலாளர்கள் சார்பில் கேட்டுக்

கொள்கிறேன். மேலும் நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 77-78ல் 1119 வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. இதில் கணிசமான அளவுக்கு சேலம் நகரத்தில் நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் வீடுகளை கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கும் சேலம் மாநகரத்தில் நெருக்கடி மிகுந்த நகராக சேலம் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடி மிக்க நகரத்தில் வீட்டு வசதி தகுந்த அளவில் அமையவில்லை. இதைப்பற்றி முந்திய அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தும் அப்போதும் அது கவனிக்கப்படவில்லை. சேலம் நகரத்தில் பல காலி இடங்கள் இருக்கின்றன. இந்த இடங்களில் வீட்டுமனை ஏற்படுத்தி வீடுகளை கட்டிக்கொள்வதற்கு வசதிகளை செய்து கொடுப்பதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

காவலர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் சேலத்திலுள்ள சில பிரச்னைகளைப்பற்றி குறிப்பிடவிரும்புகிறேன். பரபரப்பான சம்பவம் ஒன்று ஏற்பட்ட நேரத்தில், இரவு நேரத்தில் ஒரு காவல் நிலையத்திற்கு சென்றபோது அங்கு ஒரு ஆள் மட்டும் தான் இருந்தார். மற்றவர்கள் இல்லையா என்று விசாரித்த போது, அவர்களுக்கெல்லாம் வீட்டு வசதியில்லாத காரணத்தால் பல இடங்களில் பகிர்ந்து வாழ்ந்து கொண்டு இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே காவல் நிலையத்திற்கு அருகிலேயே காவலர்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுக்க முன்வரவேண்டும். அப்படிக் கட்டிக் கொடுத்தால் எந்த நேரத்திலும் நாங்கள் மக்களுடைய குறைகளை தீர்க்க எப்போது வேண்டுமானாலும் வர முடியும் என்று அவர்கள் சொன்னது மறுக்க முடியாத ஒன்றாக உள்ளது. ஆகவே சேலம் நகரத்தில் உள்ள காவல் நிலைய தொழிலாளர்களுக்கும், காவல் நிலைய அதிகாரிகளுக்கும் காவல் நிலையத்தின் அருகிலேயே வீட்டுவசதியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று அவர்கள் சார்பில் நான் கேட்டுகொள்கிறேன்.

(முற்பகல் 10·20)

அடுத்து, வீட்டு வசதி வாரியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 350-க்கும் குறைவாக வருமானம் வருகின்ற, பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கு வீட்டு வசதித் திட்டம் செய்து தர இருப்பது பாராட்டத்தக்க திட்டமாகும். சேலத்திலுள்ள நெசவுத் தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் மாதம் ரூ. 350 300 பெறுவது என்பது குதிரைக் கொம்பாக இருக்கும் என்பது எல்லோருக்கும் பகிரங்கமாக தெரிந்த ஒரு உண்மை. ஆகவே அரசுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ சேராத காரணத்தால், இவர்கள் ஒரு தனியான நிலையில் இருப்பதால் அதிலும் மாதம் ரூ.300 கிடைப்பதே அரிதாக இருப்பதால், எந்த விதமான வருமானமும் இல்லாமல் சில சமயங்களில் அவர்கள் படும் துயரம் சொல்லத்தரமன்று. எனவே, இந்த அரசு இவர்கள் நிலையை கவனித்து, குறைந்த வருமானம் பெறும், மிகவும் பிற்பட்ட நிலையிலுள்ள சேலத்திலுள்ள இந்த நெசவாளர்களுக்கு





இந்த வீட்டு வசதித் திட்டத்தில் ஒரு நெசவாளர் காலனியை ஏற்படுத்தி, குறைந்த வாடகையில் அமைத்து தந்து, அவர்களது நீண்டகாலக் குறையை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். இது மிகவும் முக்கியமான ஒரு பிரச்னை. எனவே மீண்டும் மீண்டும் இந்த பிரச்னையை நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, குடிசை மேம்பாட்டுத் திட்டம். 77–78ல் இதற்காக 25 இலட்சம் ரூபாய் செலவிடப் போவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் மதுரை, திருச்சி, கோவை வாழ் குடிசை பகுதி மக்களுக்கான திட்டமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே, சேலம் நகரத்தை மறந்து விட்டார்கள். அங்குள்ள பெரும்பாலான மக்கள் மிகவும் வசதி குறைவாக இருக்கின்றார்கள். அங்குள்ள குடிசைப் பகுதிகளிலே உள்ள பெரும்பாலான மக்கள், நமக்கு ஆதரவு தந்து நம்முடைய அரசு அமைய முன்வந்தார்கள். அந்த அரசை அமைத்த புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் தங்களுக்கு கண்டிப்பாக அவர்களுடைய குறைகள் போக்கப்படும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற நம்பிக்கையில் நமக்கு வாக்களித்திருக்கிறார்கள். எனவே, இந்த மதுரை திருச்சி, கோவை வாழ் குடிசை பகுதி மக்களுக்கு திட்டம் கொண்டு வந்தது போல், சேலம் நகரத்திலே வாழக்கூடிய குடிசை வாழ் மக்களுக்கும் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து அந்த மக்கள் குறைகளைப் போக்குகின்ற வகையிலே முயற்சிகள் மேற்கொள்ளப் பட வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நகர்ப் புற வளர்ச்சி மேம்பாட்டைப பற்றிச் சொல்கின்றபோது, சேலத்திலே இரும்புத் தொழிற்சாலை ஏற்படுவதை யொட்டி, காலனிகள் உருவாகும் சூழ்நிலைகள் உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஆனால் அதை ஏட்டளவில் நிறுத்திக் கொள்ளாமல், சேலத்தில் உடனடியாக கொண்டு வருவதற்கு, கண்டிப்பாக கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு இந்தச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து :</u> மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் மான்யத்தின் பேரிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன். இன்றைக்கு தமிழ்நாட்டிலே பல்வேறு இடங்களிலே வேலை நிறுத்தம், கதவடைப்பு இவைகள் எல்லாம் நடைபெற்று வருவதாக நாம் அறிகின்றோம். இதற்கு முழுத் தகவல்கள் என்னிடம் இல்லை என்றாலும் கூட, அரசுத் தரப்பிலே அந்த முழுத் தகவல்கள் இருக்குமென்று நான் நம்புகிறேன். மிக அதிகப்படியான இடங்களிலே லாக்-அவுட், ஸ்டிரைக் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, தொழிலிலே பாதுகாப்பற்ற

நிலை இருக்கின்றதா, தொழிலாளர்கள் வேலை இழந்துள்ள நிலையை நாம் பார்க்கிறோம். அரசு இதிலே போதிய கவனம் செலுத்தி, அவசர உணர்வோடு கவனம் செலுத்தி, இந்த பிரச்னைகளை தீர்ப்பதற்கு முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோவையிலே, லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் என்ற தொழிற்சாலை கடந்த பல மாதங்களாக மூடப்பட்டு, 2,500-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையிழந்த நிலையை பார்க்கிறோம். அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு, அரசு எந்த முயற்சியும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. அரசுத் தரப்பிலே நாங்கள் முயற்சி எடுத்துப் பேசினோம் என்று சொல்வதிலே பயனில்லை. பேசி, விரைவிலே பிரச்னை முடிந்தால் தொழிலாளர்களுக்கு நலமாக இருக்கும். அந்த வகையிலே தொழிலாளர் நல அமைச்சர் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மேட்டூர் ஸ்பின்னிங் மில்லில் 200 பேர்களுக்கு சார்ஜ் ஷீட் கொடுத்து நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அங்கு தொழிலாளர்கள் ஒரு நோட்டீஸ் கொடுத்து போராட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு தகவல் வந்திருக்கிறது. இம்மாதிரி தொழிலாளர்களுக்கு இருக்கிற சங்கடங்களைப் பற்றி தொழிற்சங்கங்கள் கொண்டு வருகிறபோது அதை உடனுக்குடன் தலையிட்டு அது பெரிய அளவில் ஸ்ட்ரைக் என்று தொழிற்சாலை மூடப்படக் கூடிய நிலைமை ஏற்படாமல் தடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. சேலத்தில் சவுத் இந்தியா கிளாஸ் அண்டு கெமிக்கல் ஒர்க்ஸ் என்ற தொழிற்சாலை 500 பேருக்கு வேலை தரக்கூடிய தொழிற்சாலை எட்டு மாத காலமாக மூடப்பட்டிருக்கிறது என்றும் அந்தத் தொழிலாளர்கள் எல்லா வகையான முயற்சிகளையும் எடுத்தும் ஒன்றும் செய்ய முடியாத காரணத்தால் இப்போது 5-8-1977 முதல் தொடர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். பிறகு நிரந்தர உண்ணாவிரதம் என்ற நிலை ஏற்படுமானால் அவர்களுடைய நிலை என்னாகும் என்பதை அரசு பரிசீலிக்கவேண்டும். இம்மாதிரி மூடப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு வேண்டிய முயற்சிகளில் அவசர உணர்வோடு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் முந்திரித் தொழிற்சாலைகள் எல்லாம் செயல்படவில்லை என்று அறிகிறேன். முந்திரித் தொழில் என்பது ஒரு காட்டேஜ் இண்டஸ்ட்ரி, குடிசைத்தொழில் மாதிரி குறைந்த சம்பளம் பெற்று தொழிளாலர்கள் வேலை செய்கிறார்கள். அந்த முந்திரித் தொழில் நமக்கு வேண்டிய அந்நியச் செலவாணியை அதிகமாக ஈட்டித் தரக்கூடிய தொழில். அந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு இயங்காத காரணத்தால் அந்நிய





செலாவணி நட்டம் அடைவதோடு குறைந்த சம்பளத்தில் வேலை செய்யக்கூடிய வேலையில்லாத நிலைமையில் இருப்பதால் அதுபற்றி பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மூலப் பொருள்கள் கிடைக்காததன் காரணமாகவும் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய மூலப் பொருள்களை சப்ளை செய்வதற்கான ஏற்பாட்டையும் அரசாங்கம் உடனடியாகச் செய்யவேண்டும். திருப்பூரிலே பனியன் தொழிற்சாலை—ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய அந்தத் தொழிலிலே சங்கடமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவை சரியாக நடைபெறவில்லை. அதுபற்றியும் பரிசீலனை செய்து அந்தத் தொழிற்சாலை சரியாக இயங்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும்.

தொழிலாளர் நலனுக்காகப் பல்வேறு சட்டங்களை இயற்றி இருக்கிறார்கள். ஆனால் அதனால் தொழிலாளர்கள் பலன்களைப் பெறுவதற்கு எவ்வளவோ போராட்டங்களை நடத்த வேண்டியிருக்கிறது. ஷாப் ஆக்ட் என்று வைத்திருக்கிறோம். சிறு சிறு கடைகளில் வேலை செய்யக் கூடியவர்களுக்காக இருக்கும் சட்டத்தால் அந்தத் தொழிலாளர்களுக்குப்பலன் கிடைத்திருக்கிறதா, நன்மையை அனுபவிக்கிறார்களா என்றால் பலன் கிடைத்திருக்கிறது என்று சொல்ல முடியாது. அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் ஒழுங்காக வேலை நேரத்தை நிர்ணயம் செய்வது ஆகியவற்றில் அரசு முயற்சி எடுத்து நிறைவேற்றித் தரவேண்டும்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனை பொறுத்தவரை மூட்டை தூக்கக்கூடிய ,சாமான்களை ஏற்றி இறக்கக்கூடிய தொழிலாளர்கள் நிறையப் பேர்கள் வேலை செய்கிறார்கள். அதை அங்கிருக்கும் தொழிற்சங்கத்திற்கு கொடுத்து செயல்படுத்தினால் தொழிலாளர்களுக்குப் பயன்படும். ஆனால் காண்டிராக்ட் லேபர் மாதிரி வைத்திருப்பதால் மிகக் குறைந்த ஊதியத்தைத்தான் அந்தத் தொழிலாளர்களுக்கு காண்டிராக்ட் எடுப்பவர்கள் கொடுக்கிறார்கள். சர்க்கார் அனுமதிக்கக்கூடிய கூலியைவிடக் குறைந்த கூலியைக் கொடுத்து அந்தத் தொழிலாளர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் போக்கை சிந்தித்து அம்மாதிரி காண்டிராக்டுகள் தொழிலாளர்களுக்கே கிடைக்கும் வகையில் அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசுத் தரப்பில் தஞ்சை கூட்டுறவு மத்திய வங்கித் தொழிலாளர்கள் 15, 20 நாட்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள்—தண்ணீர் திறப்பதற்கு முன்பு தண்ணீர் வந்து விவசாயிகளுக்கு உடனுக்குடன் கடன்களை வழங்குவதற்கான சூழ்நிலையில் அவர்கள் திரும்ப. வேலைக்கு சென்றிருக்கிறார்களே தவிர, அவர்களுடைய குறைபாடுகள் களையப்படவில்லை. கும்பகோணம் கூட்டுறவு வங்கி தொழிலாளர்களுக்கு கொடுக்கக்கூடிய வசதிகளையாவது, சலுகைகளையாவது தஞ்சை மாவட்ட மத்தியவங்கித் தொழிலாளர்களுக்கு

கொடுக்க வேண்டும். அது கூடக் கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். அந்த மாதிரிக் குறைகளை அரசு கவனித்து தீர்த்து வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் மத்தியில் இருக்கும் மற்றொரு பிரச்னை போனஸ் பிரச்னை, நிறுத்தப்பட்ட போனசை முன்போல மீண்டும் கொடுப்பதற்கு முயற்சியை மத்திய அரசு செய்யவேண்டுமென்ற தீர்மானத்தை இந்த அவையில் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தைக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நாங்கள் நிச்சயமாக ஆதரிப்போம் என்று கூறி உரையை முடிக்கிறேன். வணக்கம்.

[முற்பகல் 10—30]

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கமொன்று தர நான் கடமைப்பட்டு இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் நேற்றைய தினம் நான் ஒரு தொழிற்சாலையைத் தொடங்குகிற நிகழ்ச்சியில் பேசியதைப் பற்றி, தினகரன் பத்திரிக்கையிலே வெளிவந்த செய்தியை இங்கே படித்து, அவர்கள் சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். அது உண்மைக்குப் புறம்பானது என்பதையும் நான் என்ன பேசினேன் என்பதையும் வெளியிட வேண்டிய கடமைக்கு நான் ஆளாக்கப்பட்டிருக்கிறேன்.

அமெரிக்காவிலிருந்து இந்தியத் துணைக் கண்டத்திற்கு வருகிற நேரத்திலே அங்கு நான் கேள்விப்பட்ட செய்தி ஒரு தொழிற்சாலை மூடப்பட்டது என்றும், அப்படி மூடப்பட்ட தொழிற்சாலை எதற்காக மூடப்பட்டது என்பதைப்பற்றி நான் பேசியபோது அங்கே உற்பத்தியான பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு விட்டது என்றும் அந்தத் தொழிற்சாலை மீண்டும் உற்பத்தி செய்யுமானால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு விலை சரியாகக் கிடைக்காது என்ற காரணத்தால் அந்தத் தொழிற்சாலை அங்கேமூடப்பட்டது என்று கேள்விப்பட்டு வியப்படைந்தேன் என்றும். ஆனால் பொருள் உற்பத்தி அதிகமாகத் தேவைப்படுகிற நம்முடைய நாட்டில் ஆங்காங்கு தொழிற்சாலைகள் மூடப்படுவதும் , வேலைநிறுத்தங்கள் நடத்தப்படுவதும் உண்மையிலேயே வேதனைக்குரியதாகும். தொழிலதிபர்கள் தொழிலாளர்களைத் தங்கள் குழந்தைகளாக மதித்து பாதுகாக்க முன்வந்தார்களானால் இப்படிப்பட்ட பிரச்னைகள் ஏற்படுவதற்கு இடமிருக்காது என்றும் நான் கூறியதை, கொள்கை மாறுபட்ட நிலையில் அந்தப் பத்திரிகை வெளியிட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சட்டசபைக்கு இந்தத் தகவலைத் தெரிவிக்கின்ற நிலையில் அதற்கு மேல் தனிமனிதன் என்ற நிலையிலேயும் நான் ஏற்று இருக்கிற பொறுப்புக்கு ஏற்பவும் அந்தப் பத்திரிக்கையின் மேல் நடவடிக்கை எடுக்க இருக்கிறேன் என்ற செய்தியையும் சொல்லிக்கொள்கிறேன். நண்பர் சுப்பு அவர்கள் இந்த உண்மையைப் புரிந்துகொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.





திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977[78 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வழங்கியதற்குப் பிறகு அதனையொட்டி அந்த அடிப்படையில் இன்றைய தினம் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைக்கான, தமிழ்நாட்டில் வீட்டு வசதிக்கான மானியக் கோரிக்கைகளின்மீது இங்கே நான் பேசக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். தொழிலாளர் நலத்தைப்பற்றியும்தொழிலாளர்களுடைய பிரச்னைகளைப்பற்றியும் தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் எப்படிப்பட்டதாக இருக்கின்றன. அவைகளை எப்படி நிறைவேற்றிக் காட்ட வேண்டும் என்பதைப் பற்றியும் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிறவர்கள் கொஞ்சம் வேகத்தோடு பேசினார்கள் என்பதை இந்த சபை உற்றுக் கவனித்திருக்கிறது என்று நான்மனப்பூர்வமாகக் கருதுகிறேன்.

தொழிலாளர் நலத்தைப் பொருத்தமட்டில் தொழிலாளர்களுடைய ஆக்கப்பூர்வமான உணர்வுகளைப் பொறுத்தவரையில் இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேறக் கழகத்தினுடைய அரசு நிச்சயமாக அந்த உணர்வுகளுக்கும் எண்ணங்களுக்கும் மதிப்பைக் கொடுக்கும் என்பதினுடைய அடிப்படையிலே என்று இந்த ஆட்சி துவக்கப்படுகிற நேரத்திலேயே தொழிற் பிரச்னைகள் வந்த நேரத்திலே அவைகளை, கூடிப்பேசி அதற்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காரண காரியங்களை ஆற்றி அதிலே வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள் என்பதைப் பணிவன்போடு நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் அதுதொழிற்சாலைகள் நிரம்பிய மாவட்டமாகவும் பல்வேறு வர்க்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே தொழில்களிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தமிழகம் வெகு நல்ல முறையிலே அறிந்திருக்கிறது. அந்தக் கோவை மாவட்டத்திலே தொழிலாளர்களுக்கு பல்வேறு பிரச்னைகள் கோரிக்கைகள் இருக்கின்றன என்பதை நாம் மறுத்து சொல்ல முடியாது.

குறிப்பாக சொல்ல வேண்டுமென்று சொன்னால் பஞ்சாலைகளிலே வேலை செய்து கொண்டிருக்கும் தொழிலாளிகள் அந்தப் பஞ்சாலைக்குள்ளே புழுங்கிப் புழுங்கி அவனும் அந்தப் பஞ்சியாக மாறிவிட்ட நிலையிலேதான் ஏழைத் தொழிலாளர் வர்க்கம் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறது. பஞ்சாலைகளிலே வேலை செய்து கொண்டிருக்கின்ற அந்தத் தொழிலாளிகள் அந்தப் பஞ்சிலேயே உலவிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால் அந்தத் தொழிலாளிகள் அடிக்கடி காச நொய், மற்றும் இது போன்ற இதர நோய்களுக்கு அடுத்தடுத்து ஆளாகிற நிலையை நாம்

பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த நோய் வரும்நேரத்தில்அந்தத் தொழிலாளிக்கு எப்படிப்பட்ட பாதுகாப்பை அளிக்கிறோம் என்பதையும் நாம் உற்றுக் கவனித்தாக வேண்டும். அப்படிப்பட்ட பலஹீனத்தில் வறண்ட உச்ச நிலையிலே அந்த ஏழைத் தொழிலாளி வாழ்ந்து கொண்டிருக்கிறான். அந்தத் தொழிலாளியின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளுகின்ற அளவில் எத்தனை தொழிற்சாலை நிர்வாகிகள் இருக்கிறார்கள் என்பதுதான் இன்றைக்கு நமக்குச் சந்தேகமாக இருக்கிறது.

ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் அந்தப் பஞ்சாலையிலே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் பல்வேறு தொழிற்சாலைகளை எடுத்துப் பார்க்கின்ற நேரத்தில் அங்கே டெம்பரரி தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அவர்களுக்கு ஏதாவது நிர்ணயம் இருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும் அவர்களுக்கு ஆதாரம் இருக்கிறதா என்றால் நிச்சயமாக் கிடையாது அவர்களுக்கு அந்த வேலையிலே உத்ரவாதம் இருக்கிறதா என்று கேட்டால் கிடையாது என்கிற பதில்தான் இன்றைய தின்ம் இருந்து கொண்டிருக்கிறது ஏறத்தழா ஏழாண்டு காலமாக் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சர்க்கார் இந்த நாட்டிலே ஆண்டதை நாம் மறந்திருக்க நியாயம் கிடையாது. ஆனால் அந்த நேரத்திலேகூட இந்தத் தொழிலாளிகளிடத்தில் தங்கள் பாசப் பரிவைக் காட்டினார்களா என்று கேட்கிறபொழுது இல்லை என்ற பதில்தான் நமக்கு மிச்சமாகக் கிடைக்கிறது என்பதை நான் டனிவோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்த டெம்பரரி தொழிலாளர்களுக்கு ஒரு நிர்ணயத்தை உண்டாக்க வேண்டியது நிர்வாகத்தின் கடமை. அந்த நிர்வாகத்திற்குக் கொஞ்சம் எச்சரிக்கையோடு சொல்ல வேண்டியது அரசினுடைய தலையாய பணி, தலையாய பொறுப்பு என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஐந்தாறு ஆண்டுகாலமாகக் கூட அல்ல, ஏறத்தாழ பத்தாண்டு காலமாக அந்தப் பஞ்சாலைத் தொழிலாளி அந்தத் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான். தொழிற்சாலையிலே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இருக்கின்ற வசதிகள் மிகமிகக் குறைவாக இருக்கின்றன. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆட்களை மாற்றிக் கொள்கின்ற வித்தையைச் சில நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைய தினம் செய்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் எங்களுடைய திருப்பூர் நகரத்தில் ஒரு பஞ்சாலைத் தொழிற்சாலை இருக்கிறது. அது எஸ்.ஆர். சி. மில். அந்தத் தொழிற்சாலையின் அதிபர் அடிக்கடி ஆளை மாற்றுகின்ற வித்தையிலே கைதேர்ந்தவராக இருக்கிறாரே ஒழிய தொழிலாளர்களுக்கு நன்





மையைச் செய்து தருகிறார்களா என்று கேட்டால் நிச்சயமாகக் கிடையாது. 5 ரூபாய், 5½ ரூபாய் என்ற அளவில் கூலியை நிர்ணயித்து அந்தத் தொழிலாளிகளை அடிக்கடி மாற்றுகின்ற வித்தையிலே அவர் கைதேர்ந்த விற்பன்னராக இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறார். ஏழாண்டுக் காலமாக அப்படி இருந்து கொண்டிருக்கிறார். ஒரு வேளை பழைய அரசுக்கும் அவருக்கும் இருந்த நேச ஒப்பந்தத்தினுடைய காரணமோ என்னவோ நமக்குத் தெரியவில்லை. ஆனாலும் அந்த முதலாளி இன்றைய தினமும் அப்படியே செய்து கொண்டிருக்கிறார். கேட்டால், தொழிலாளிகள் தங்களுடைய உரிமைக் குரலை எடுத்துச் சொன்னால், அந்த முதலாளி சொல்கிறார், எந்த ஆட்சி வந்தாலும் என்னை அசைக்க முடியாது என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற நிலைமைகளை நாம் இந்தக் கால கட்டத்திலே கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே. இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றித் தீர வேண்டியது நம்முடைய அரசாங்கத்தின் கடமை என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

ஆலையிலே வேலை செய்கின்ற அந்தத் தொழிலாளிகளின் மேல் இன்றைய தினம் வேலைப் பளுவைக் கூடுதலாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது கூடாது என்பதுதான் நம்முடைய வாதம். வேலைப் பளுவை அதிகமாக்குவதன் மூலமாக உழைக்கின்ற உழைப்பாளியின் தலையின் மேல் வேலைப் பளுவைச் சுமத்துவதன் மூலமாக ஒரு வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு வழி வகுக்கிறார்கள் என்பதுதான் நம்முடைய பதிலாகும். ஏற்கனவே வேலை செய்து கொண்டிருக்கின்ற அந்தத் தொழிலாளிகளின் மீது வேலைப் பளுவைச் சுமத்துகின்ற நேரத்தில் மற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு நழுவிப் போய் விடுகின்றது, கைவிட்டுப் போய் விடுகின்றது. இப்படிப்பட்ட நிலைமைகளை அரசு கவனிக்க வேண்டுமென்று நான் பணிவோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அவசரச் சட்டம் இங்கே அமலாக்கப்பட்ட நேரத்தில் தொழிற்சாலைகளிலே பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள். உடனே எதிர்த் தரப்பிலே இருக்கின்றவர்கள் கேட்கக்கூடும், அவசர கால நிலைமைய நீங்கள் கூட ஆதரித்தீர்கள் அல்லவா என்று கேட்கக்கூடும். ஆதரித்தோம், இல்லை என்று மறுக்கவில்லை. ஆனால் இதைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு சில நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள், ஒரு சில முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தொழிலாளர்களைப் பழி வாங்கும் நிலைமைகளில் இறங்கினால், எந்தக் காரணமும் இல்லாமல் எந்தத் தொழிலாளியையாவது வேலையை விட்டு நீக்கினால் அங்கே, அரசைப் பார்த்து நான் கேட்டுக்கொள்கிறேன் எந்தெந்த நிர்வாகத்திலே எந்தெந்தத் தொழிலாளர்கள் அந்த நேரத்தில் வெளியேற்றப்பட்டிருக்கிறார்களோ அந்தத் தொழிலாளர்களையெல்லாம் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்ற

நம்பிக்கையை அந்தத் தொழிலாளர்களுக்கு அரசு அளிக்கவேண்டுமென்பதை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-40)

எனது திருப்பூர் நகரம், அது ஒரு பனியன் உலகம். அங்கு பனியன் தொழிற்சாலைகள் அதிகமான அளவிலிருக்கின்றன. எதிர்க்கட்சியினுடைய தலைவர் ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில், பனியன் தொழில் கூட, இன்றைக்குத் திருப்பூரிலே மங்கிக் கிடப்பதாக, தொய்ந்து கிடப்பதாகச் சொன்ஞர்கள். நான் உள்ளே புகுந்து ஆராய விழையவில்லை. ஆனல், பல்வேறு காரணங்களால், பல்வேறு கோளாறுகள் இருந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்கு ஒரு மெத்தனமான போக்கு அந்த உலகத்திலே இருந்தாலும் கூட, நம்முடைய அரசாங்கத்திடம் தெளிவுபடுத்தி எடுத்துக் காட்டியிருக்கிறேம். பனியன் உலகத்திலே, தொழிலிலே, என்னென்ன பலவீனங்கள் என்று முதலமைச்சரிடத்திலும், அரசாங்கத்தினிடமும் எடுத்துச் சொல்லியிருக்கிறேம். அதனைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளிலே நிச்சயம் அரசு ஈடுபடும் என்று முதலமைச்சரவர்கள் தெளிவுபடுத்திஞர்கள்.

பல்வேறு தொழிலாளர் பிரச்னைகள் இருக்கின்றன, நேரம் அதிகமாக இல்லை. எனவே, அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து, தொழிலாளர்களுடைய உழைப்பை மாத்திரம், தொழிலாளர்களுடைய இரத்தத்தை மாத்திரம் உறிஞ்சிக் கொண்டிருக்கிற இந்த முதலாளி வர்க்கத்தைப் பார்த்து, அரசு தரப்பைக் கொஞ்சம் இந்த நேரத்தில் திருப்பி, அபாயச் சங்கை ஊதியாகவேண்டும், சிவப்பு விளக்கைக் காட்டியாக வேண்டுமென்று சொல்லி, என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. கு. ரமணி: தலைவரவர்களே, இந்த மானியத்தின் மீது, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல நான் முன் வந்துள்ளேன். இந்த பட்ஜெட்டில் 84-வது பக்கத்தில், 29-வது பாராவில், 'சென்னைக்கு வருகிற தொழிலாளர்களது பிரதிநிதிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் ஆகியோருக்குப் போதுமான வசதியுள்ள, அதிகம் வாடகையில்லா இடவசதி வழங்கும் பொருட்டு, குறைந்த செலவில் அரசாங்கம் இடம் கொடுப்பது' என்ற ஒரு ரெபரன்ஸைத் தவிர, பொது பட்ஜெட்டை வைத்த காலத்தில் கொள்கையை விளக்கி, அந்த அளவில் விவரங்களைச் சொல்லியிருக்க வேண்டும். தொழிலாளர் பக்கம் நிற்கிற அரசு என்று பலதரம் இங்கே உறுதி கொடுத்துக் கொண்டிருக்கிற அரசு, அப்படியே நிற்கிறார்கள்,



நிற்பார்கள் என்று நாங்கள் நம்புகிறேம். அந்த விஷயத்தைப் பட்ஜெட்டிலே கொண்டு வந்திருப்பார்களென்று நினைத்தோம், கொண்டு வரவில்லை. நம்முடைய தொழிலாளர் அமைச்சரவர்கள் இந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கிற காலத்தில், தொழிலாளர் நலக் கொள்கை என்ன என்பதைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கூற வேண்டுமென்று நான் அவரைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த நிலைமையில், அரசினுடைய நடவடிக்கைகள் தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும், தொழிலாளர்களுக்குப் பக்கத்தில் நின்று அவர்களைக் கைதூக்கி விட்டுக் கொண்டு வரக்கூடிய நடவடிக்கைகளாகவும் இருக்கவேண்டும். அந்தமாதிரி நிலைமைகளை நடைமுறைக்குக் கொண்டு வரச் செய்ய வேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி, முக்கியமாக, இங்கே அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது பிரதான விஷயம். பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இன்ஜினீயரிங், மற்றும் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இந்தியா மீட்டர்ஸ் கம்பெனி 3 வருஷமாக மூடப்பட்டு, இன்றைய வரையில் திறக்கப்படாமல், அவர்களுக்கு இன்றைய வரையில் எந்தவித நிவாரணமும் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அதே போல், கைத்தறி துறையிலே வேலையில்லாத் திண்டாட்டம். இப்படி எங்கே எடுத்துக்கொண்டாலும், தொழில் உலகத்திலே நெருக்கடி ஏற்பட்டு, தொழிலாளிகளுடைய வாழ்க்கையில் கஷ்டங்கள், முட்டி, மோதி, நிற்கிற நிலையில் இருக்கிறது. இன்றைக்கு அரசாங்கம் ஏதோ நடவடிக்கை என்று சொன்ஞல், சின்னச் சின்ன கண் துடைப்பு வேலைகளால் பிரச்னைகள் தீராது. அடிப்படையான மாறுதல் தேவை. ஆகவே, கொள்கைப் பிரச்னையில் தெளிவு படுத்த வேண்டும். தொழிலாளர் பக்கம் நிற்கிற நடவடிக்கையை அரசு எடுக்கப் போகிறது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்க விரும்புகிறேன்.

தொழிலாளர்களுடைய சக்தி முழுவதும் அவர்களுடைய ஒற்றுமையில் இருக்கிறது. அந்தத் தொழிலாளர் இயக்கத்தின் ஜனநாயக முறையில் நடத்தும்படியான தன்மையிலே இருக்கிறது. எந்த ஒரு சங்கமும் ஜனநாயக முறையில் வளர்க்கப்படவேண்டும். தொழிற் சங்கத்தை வளர்க்கக் கொடுக்கும்படியான ஆதரவு தான் சகல பிரச்னைகளையும் தீர்க்க உதவும். அந்த ஜனநாயக முறையில் அமைக்கப்பட்ட சங்கங்கள் முன்னுக்கு வந்து, வளர்ச்சி அடைய வழி வகுக்க, தாஞகவே இயங்க வேண்டுமே தவிர, அரசாங்கத்தின் ஆதரவு அடிப்படையில் வளர்கின்ற முறை இப்போது இருக்காது என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அப்படி அரசு செய்யாது என்று நான் நம்புகிறேன்.

அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கட்சி அந்தக் கட்சி என்று பார்க்காமல், தொழிலாளர்களுடைய ஜனநாயக உரிமைகளைப் பார்க்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த முறையிலே அவர்கள் நடக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. ஆனால், கடந்த காலத்திலே ஆண்ட காங்கிரஸ் கட்சி, ஐ.என்.டி.யூ.சி.க்கு ஆதரவு காட்டி, வளர்த்தது. அதற்குப் பின்னால் ஆட்சிக்கு வந்த கட்சி, தங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஆதரவு காட்டி சங்கத்தை வளர்ப்பது என்ற நிலைமை இருந்தது. ஆனால், ஒரு விஷயம், எந்தக் கட்சி, எந்த அரசாங்கம் தங்கள் கட்சி சங்கத்திற்கு பாட்ரனேஜ் அளித்தாலும் அது நிற்காது. அது அந்த அரசாட்சி வீழ்கின்ற நேரத்தில் தகர்ந்து போகும். அந்தச் சங்கங்கள் இல்லாமல் போவதையும், திண்டாடுவதையும் நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலைமைகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. அதற்கு மாறாக, ஒற்றுமையை வளர்க்கக் கூடிய நிலைமையில், ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று இருக்க இந்த அரசு ஆதரவு அளிக்க வேண்டும். அதற்கு இரகசிய முறையில், தொழிலாளர்களுடைய பாலட் வைத்து, எந்தச் சங்கம் வெற்றி பெறுகிறதோ, அந்தச் சங்கத்தை பர்மனெண்ட் பார்கெய்னிங் ஏஜெண்டாக, பேச்சு வார்த்தை நடத்த ஒப்பந்தம் செய்கிற முடிவெடுக்கும்படியான, காரியங்களை நிறைவேற்றும்படியான சங்கமாக ஏற்று நடத்த இந்த அரசு நிச்சயமாக முக்கிய கவனம் செலுத்தி, ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நாங்கள் கூறுகிறோம்.

அதே மாதிரி தொழிலாளர் ஒற்றுமையை முக்கியம் என்று நாம் பார்க்கிறோம். அதற்குத் தடங்கல்கள் பல இருக்கின்றன. ஆர்கனைஸ்டு செக்ஷனாக தொழிலாளர் வர்க்கம் இருந்தபோதும், சங்கம் இருந்தபோதிலும், கோவை லட்சுமி மெஷின் ஒர்க்ஸில் நடப்பது என்ன? தொழிற்சாலைகளில் என்ன தொழில் தகராறுகள் வந்தாலும் பேசி முடிப்பதுதான் வழக்கம். ஆனால் பேச்சு வார்த்தை நடத்தக் கூப்பிட்டாலும் வரமுடியாது என்று கூறுகிற முதலாளிகள் இருக்கிறார்கள். லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் போராட்டம் நடந்து 2 மாதத்திற்கு மேல் ஆகியும் முடிவில்லாத நிலை, வேலை செய்த ஒரு மாதத்திற்கும் அவர்களுடைய சம்பளம் கொடுக்கப்படவில்லை. இந்த மாநில அரசாங்கம் கூடிப் பேச அழைத்தால் முதலாளி வருவது இல்லை என்று நாங்கள் கேள்விப்படுகிறோம். இதனால் தொழிலாளர்கள் சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம், போராட்டம் நடத்துகிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லியிலே சென்று முதலமைச்சர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டு பேசியபோது பெரும் முதலாளிகள் ரௌடிகளை வைத்துக் கொண்டு ரௌடிசம் நடத்தி வருகிறார்கள். அவர்களை மத்திய அரசாங்கம் ஆதரிக்கக் கூடாது என்று குறிப்பிட்டார்கள். முதலாளி வர்க்கத்தின் போக்கு அப்படியே இருக்கிறது. அவர்களுக்கு சில அதிகாரி



களிடத்தில் கிடைக்கும் மறைமுக ஆதரவு, ஆலோசனைகளை வைத்து இந்த இயக்கத்தை நசுக்கிவிடும்படியான நோக்கத்தை இந்த அரசு பார்த்து தகுந்த நடவடிக்கை அப்போதைக் போது எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஜனநாயக முறையில் சங்கம் வளரக்கக்கூடிய உரிமை வழங்கப்பட்டு அங்கீகாரம் பெற்றால்தான் உண்மையில் தொழிற் சங்கம் வளரும். பல்வேறு சங்கங்கள் இருக்கும்போது ரகசிய ஓட்டுரிமை அடிப்படையில் தேர்தல் பெருவாரிவைத்து ஆதரவு எந்தச் சங்கம் பெற்று உள்ளது என்பதை அறிந்து செயல்படவேண்டும் என்பதும், அது தான் உண்மையான சங்கம் உருவாக வழி என்றும் நான் நம்புகிறேன். அதற்காக சட்டத்தை இந்த அரசு—இந்த மாநில அரசு இங்கே கொண்டுவர வேண்டுமென்று கூற விரும்புகிறேன். ஏனென்றால் இது 'கன்கரண்ட்' சப்ஜக்ட்-ஆக இருக்கிறது. இதற்கு இந்த அரசு நிச்சயமாக உதவி புரியும் என்று நம்புகிறேன்.

அடுத்தது முக்கியமான பிரச்னை போனஸ் பிரச்சனை. தீபாவளி வரப்போகிறது. தமிழ் நாட்டுத் தொழிலாளர்கள் மத்தியிலே மிகக் கடுமையான நிலை வரப் போகிறது. அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. தொழிலாளி வருடம் முழுதும் குடும்பம் நடத்தி, பற்றாக்குறை இவ்வளவு என்று கணக்குப் பார்த்தால் கடனாளி ஆகிறான். அவனுக்கு லாபத்தில் கிடைக்கும் நியாயமான பங்கை, குறைந்த பட்ச போனஸ் கிடைக்க வகை செய்யவேண்டும். அவன் வாழ்க்கைக்கு சம்பளம் போதவில்லை என்ற காரணத்தால் போனசுக்கு வழிவகை செய்யவேண்டியிருக்கிறது. அவனிடம் எந்த தத்துவம் பேசினாலும் பிரயோசனம் கிடையாது. ஆகவே 8–1/3 சத வீத போனசு கொடுக்கும்படியாக மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்து இந்த சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றி அரசு தலைமையில் அனைத்துக் கட்சிகளின் தூதுக்குழு ஒன்றுபோய் மத்திய சர்க்காரை சந்தித்து உடனடியாக சட்டத்தை திருத்தக் கோர வேண்டும். பழைய சட்டத்தை வாபஸ் பெறக் கோரவேண்டும் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். அவசர நிலை காலத்தில் தொழிலாளர்கள் மிக மோசமாக நடத்தப்பட்டனர். அதற்குக் காரணம் என்ன? தவறான ஒரு மனோபாவம் ஓங்கி நின்றது.

கிராமத்திலே இருக்கிற ஏழை எளிய மக்களையும், பின்தங்கிய மக்களையும் கைதூக்கி வந்ததாகவும், இங்கே இருக்கிற தொழிலாளர்கள் ஆடம்பரமாக இருப்பதாகவும் கூறி இதுதான் சோசலிசக் கொள்கை என்று சொல்லிக்கொண்டு ஏதோ இந்தத் தொழிலாளர்கள் வசதி படைத்தவர்கள், நன்றாக சாப்பிட்டுக் கொண்டு இருக்கக் கூடியவர்கள் என்று தப்பான எண்ணம் தரும்படியான, தொழிலாளர்களைப் பிரிக்கும்படியான, கிராம ஏழைகளுக்கு தொழிலாளிதான் எதிரானவன்போல் சித்தரித்துக் காட்டுகிற மனோபாவத்தை சிருஷ்டிக்கும்படியான நிலைமை

உருவாக்கப்பட்டது. அதை நிச்சயமாக இந்த அரசு ஏற்கக்கூடாது, உண்மையை உணர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது நியாயம் இல்லை. அப்படிப்பட்ட நிலைமையில் உழைப்பாளர் வர்க்கத்தினுடைய ஜனநாயக உரிமைகள் கடைசியாகப் பறிக்கும் முயற்சி என்பதை எண்ணித் தடுக்கவேண்டும். ஒவ்வொரு போராட்டமும் அரசுக்குப் பாதகமாக, சாதகமா என்று பார்க்கக் கூடாது. உண்மை நிலையை உணரவேண்டும். இந்தப்பிரச்னை எந்த நிலைமையில் ஏற்பட்டது என்று பார்க்க வேண்டும். ஸ்டிரைக்கைத் தேடி தொழிலாளர்கள் அலைவது இல்லை. ஆனால் அவன் வயிறு காயும்போது வேறு வழியில்லாமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவேண்டியிருக்கிறது. வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்று சந்தோஷமாக, நல்ல அருமையான பலகாரங்கள் சாப்பிடுவது போல் எண்ணி அவன் செய்வது இல்லை. கதியற்ற நிலைமையில் தான் அவர்கள் வேலை நிறுத்தத்துக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட தொழிலாளர்கள் ஆக்கமும் ஊக்கமும் பெற்று நியாயமான போராட்டத்தை வெற்றிபெற அரசு இடம் கொடுக்கவேண்டும். போராட்டம் எல்லாம் வரட்டும் பிறகு பார்த்துக் கொள்ளலாம் அரசுத் தொழிலாளர் பக்கம்தான் நிற்கும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அரசினுடைய கொள்கை தொழிலாளர்களுக்கு உதவுவதாக இருக்க வேண்டும் தொழிலாளர்பக்கம் அரசு நிற்கிறது என்ற கொள்கைக்கு கருவிகளால் செயல்பட முக்கியமானத் தேவை இந்த லேபர் டிப்பார்ட்மெண்ட் மற்ற டிப்பார்ட்மெண்டுகள் இருந்தாலும் அதைவிட லேபர் டிப்பார்ட்மெண்டு மிக முக்கியம். இன்று நேற்றல்ல எனக்கு ஞாபகம் 1937-க்குப் பிறகுதான் லேபர் ஆபிசர் என்ற அமைப்பே உருவாகி லேபர் டிப்பார்ட்மெண்டு என்று உருவாகி, பிறகு கன்சிலியேஷன் ஏற்பாடுகள் முன்னேறி வந்தன. அன்றைய தினம் முதல் நாளது வரை இந்த இலாகாவில் அவ்வப்போது ஏற்படுகிற மாறுதல் நிலைமையிலிருந்து, நாட்டிற்கு நன்மை பயக்கின்ற முறையில், ஊழலைப் புகுத்தாமல் பாரபட்ச மற்ற முறையில், கொள்கையை நிறைவேற்ற வேண்டுமென்ற முறையில் இந்த இலாகா இருக்கிறதா என்று கேட்டால் இல்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

அங்கே இருக்கின்ற அதிகாரிகள், லேபர் கமிஷனர் போன்றவர்கள் தொழிலாளர்களுக்காகப் பாடுபடவேண்டும். அவர்கள் தராசு பிடித்த மாதிரி நடுநிலைமையில் இருக்கிறேன் என்றால், தொழிலாள வர்க்கம் தான் அடிப்பட்டுப் போகும். அதிகாரிகள் முதலாளிகளுக்குப் பக்க பலமாக இருக்கக்கூடாது. பலவீனமான தொழிலாளர் பக்கம்தான் இருக்க வேண்டும். ஒரு ரெபரன்ஸ் கோர்ட்டுக்குப் போகிறது என்றால், அதில் நெளிவு, சுளுவு இருக்கிறது என்றால், அதிகாரிகள் தொழிலாளர்களுக்குப் பக்கத்தில் நின்று நல்லது செய்ய வேண்டும். சட்டத்திற்குட்பட்டு தொழிலாளர்கள் நன்மை பெறும் வகையில் விளக்கம் கொடுக்க வேண்டும். முதலாளிகளுக்குச் சாதகமாகச் சொல்லக்கூடாது. இதற்கு அனுபவங்கள் உள்ளன.



தாராபுரம் கூட்டுறவு மில்லில் வேலை நீக்கம் செய்யப்பட்ட பிரச்னை கோர்ட்டுக்குப் போவதற்கு அங்கே ரெபரென்ஸ் கிடைக்கவில்லை. சங்ககிரி ஆலையில் 19 பேர் கொண்ட சங்க நிர்வாக கமிட்டி முழுவதும் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள், தலைவர் காரியதரிசி உட்பட, அன்றைக்கிருந்த லேபர் அமைச்சர் தலையிட்டு 14 பேரை திரும்ப வேலைக்கு எடுக்கச் சொன்னார்கள். 5 பேர் விஷயத்தை மானேஜ்மெண்டோடு கலந்து பேசி மீண்டும் வேலைக்கு எடுக்கச் சொல்வதாகச் சொன்னார்கள். அது நடக்க முடியவில்லை. கோர்ட்டுக்குப் போக இதிலும் ரெபரன்ஸ் கிடைக்கவில்லை. பலவிதமான ரெப்ரசென்டேஷன் செய்தும் பிரயோசனப்படவில்லை. கடைசியாக தொழிலாளர்களே ஹைக்கோர்ட்டுக்கு போனார்கள் என்ற நிலைமை தான் இருக்கிறது.

கோவையில் ஆர்.எம்.டி. கம்பெனியில் 52 தொழிலாளர்கள், மிகவும் டெக்னிகல் நுணுக்கம் தெரிந்தவர்கள், ஆர்.எம்.டி. தொழிற்சாலையில் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை மிகவும் மோசமான நடவடிக்கை. அது கோர்ட்டுக்கு போகும்போது, ரெபரன்ஸ் கிடைக்கவில்லை. விஜயலட்சுமி மில்லில் 10 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்ட கேசிலும் ரெபரன்ஸ் கிடைக்கவில்லை. சிவகாசி அச்சுத் தொழிலாளர் பிரச்னையிலும் ரெபரன்ஸ் கிடைக்காத நிலைமை இருக்கிறது. இதெல்லாம் லேபர் இலாக்காவில் இருக்கிற லேபர் கமிஷனர், டெபுடி கமிஷனர், லேபர் ஆபிசர்களுக்குத் தெரியாதா? தெரியும். அப்போது அவர்கள் என்ன செய்யவேண்டும். சட்டத்திற்கு உட்பட்டு எந்த அளவுக்கு இந்த பலவீதமான தொழிலாளர்களுக்கு உதவி செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்ய வேண்டியது அவர்களுடைய கடமை. அந்த மனப்போக்கு இன்றைக்கு இல்லை. அந்த 'ஓரியன்டேஷன்' இலாக்காவில் இன்றைக்கில்லை. இதை பூரணமாக மாற்றியமைக்க வேண்டும்.

அது மட்டுமல்ல: இந்த இலாக்காவில் வேலைசெய்து ரிடையர் ஆகும் காலத்தில், இந்த அதிகாரிகள் லேபர் கமிஷனர் போன்றோர் முதலாளிகளிடம் வேலைக்கு செல்கிறார்கள். அதை ஒருகாலும் இந்த அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது. எனக்குஒரு வேதனையான அனுபவம் இருக்கிறது. 30 ஆண்டு காலம் கமிஷனராக சர்விஸ் செய்தவர், என்னோடு பழகியவர். லேபர் கமிஷனராக பணி புரிந்துவிட்டு, கோவை மில் முதலாளிகளின் சங்கத்தின் காரியதரிசியாக வந்தார். ரிடையராகிற வரைக்கும் இங்கே வேலை, அடுத்த நாள் தொழிலாளர்களுக்கு எதிராக முதலாளிகளிடம்

வேலைக்குப் போகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையைச் சட்ட பூர்வமாகத் தடுக்க வேண்டும். அரசாங்கத்தின் பக்கத்தில் இருந்து வேலை செய்தவர்கள், தொழிலாளர்களுக்காக வேலை செய்தவர்கள், ரிடையரான பிறகு முதலாளிகளுக்காக வேலை செய்கின்ற நிலைமையை அனுமதிக்கக்கூடாது. கெட்ட பெயர் அரசாங்கத்திற்கு வரும். இதைத் தொழிலாளர்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.

வேலை நிறுத்த காலத்தில் போலீசை தலையிட வைப்பது என்பது சென்ற காலத்தில் இருந்தது. இப்போது அரசே தலையிட்டு அதைத் தடுக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கதாகும். ஆனால் இன்றைய தினம் முதலாளிகள் செய்யும் 'ரௌடிசம்' நிற்கவில்லை. சுந்தரம் கிளேட்டனில் 400 ரௌடிகளை உள்ளே வைத்திருக்கிறார்கள். போலீஸ் அவர்களை கைது செய்து, சார்ஜ் ஷீட் போட்டு ஒரு நாளைக்காவது ஜெயிலில் வைத்தது உண்டா? உள்ளே இருப்பவர்கள் ரௌடிகளா அல்லது டிபார்ட்மென்ட் ஊழியர்களா என்று தெரியாத நிலைமையில் செய்கிறார்கள். போலீஸ் உதவி முதலாளிகளுக்குச் சாதகமாக வரக்கூடாது. தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்வது தங்கள் கோரிக்கைகளில் வெற்றி பெறத்தான். ஆகவே அதற்கு இடையூறாக 144 சட்டங்களைப் போட்டு தடுக்கக் கூடாது. தொழிலாளர்கள் பேரில் ஜாமீன் வழக்குப் போடக் கூடாது. கிரிமினல் லா அமெண்ட்மென்ட் சட்டத்தை அவர்கள் பேரில் உபயோகப்படுத்தக்கூடாது. இதைத்தான் கொள்கை அளவில் சொல்ல வேண்டும் என்று அரசைக் கேட்கிறோம்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை உண்டு என்று கோபுரங்கள் மீது நின்று கொக்கரிக்கிறோம் நாம். 2½ லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பெண்கள் வேலை செய்கின்ற அந்த தேயிலைத் தோட்டங்களில் ஆண்களைப் போல அவர்களுக்கு சமக்கூலி கேட்கவே வேலைப் பளுவை உயர்த்தினார். அதற்கு ஆர்பிட்ரேஷன் வைத்து 'அவார்ட்' கொடுக்கப்பட்டது. அது அமுல் ஆக்கப்படவில்லை. அதை எதிர்த்து முதலாளிகள் கோர்ட்டுக்குப் போகிறார்கள். அட்ஜுடிகேஷன் என்றால் இரண்டு பக்கத்தையும் கட்டுப்படுத்தும் தீர்ப்பாகும். ஆனால் அதை எதிர்த்து முதலாளிகள் கோர்ட்டுக்குப் போகிறார்கள். என்றால் சட்ட உரிமை எப்படி பாழாகிறது என்று பார்க்க வேண்டும். இப்படி கோர்ட்டின் தீர்ப்புக்களை முதலாளிகள் மீறி விடலாகாது.

அதே மாதிரி குறைந்த பட்ச சம்பள நிர்ணயம் செய்யப்பட்டது பல தொழில்களில் அமுலில் இல்லை. கல் உடைக்கும் தொழிலாளி, கிணறு வெட்டும் தொழிலாளி, பலவேறு நகரங்களில், சென்னை, கோவை, மதுரை போன்ற நகரங்களில் பாரம் சுமக்கிற தொழிலாளி ஆகியோர்களுக்கு பாக்டரி சட்டமோ விபத்து சகாய சட்டமோ, கிராசுவிடி சட்டமோ, பிராவிடன்ட் பண்டு



சட்டமோ, குறைந்த பட்ச சம்பள சட்டமோ வேறு எந்த சட்டமோ அவர்களுக்கு இன்றைக்கு இல்லை. அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கெல்லாம் சட்டத்தின் மூலம் பாதுகாப்புகள் ஏற்படுத்த வேண்டும். அந்தச் சட்டத்தை மீறுவதற்கு விடக்கூடாது இந்த நிலைமைகளை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அன்றைக்கு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களிடம் சப்ளிமெண்டரி கேள்வி கேட்ட காலத்தில் எக்ஸ்பிரஸ் பத்திரிகை தொழிலாளர்கள் மத்தியில் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு ஒப்பந்தம் கடிதத்தில் இருக்கிறது. பணம் கையில் கிடைக்குமா என்று கேட்டதற்கு, அமைச்சர் அவர்கள் அத் தொழிலாளர்கள் அகில இந்திய பத்திரிகை தொழிலாளர்கள் சங்கம் வைத்திருப்பவர்கள், ஒப்பந்தத்தை அவர்களே நிறைவேற்றிக் கொள்ளுவார்கள் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நேற்று கூட திரு. டி. ஆர். ஆர். அவர்களைச் சந்தித்தேன். இடைக்கால நிவாரணத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் வாங்கி கொள்ள முடியும் என்று தைரியமாக இருக்கிறார்கள். முடியவில்லையென்றால் நிச்சயம் அரசு தலையிடும்.

*திரு. கு. ரமணி: நன்றி. நான் சொல்ல வந்த விஷயம். அமைச்சர் அவர்கள் கேட்க வேண்டும். சுதேசமித்திரன் பத்திரிகை 100 வருஷம் புழக்கத்தில் உள்ளது. செல்வாக்கு வாய்ந்த சரித்திர பிரசித்தி பெற்ற அந்த பத்திரிகை தொழிலாளர்களின் நிலைமை என்ன? இடைக்கால நிவாரணம் கிடைக்கவில்லை அரசாங்க பாங்குகளில் கடன் வாங்கி செலவழிக்கிறார்கள் நஷ்டம் என்கிறார்கள். தொழிலாளர்களுக்கு மாதாமாதம் சம்பளம் கொடுப்பதில்லை. ரிட்டயர் ஆன தொழிலாளிக்கு கிராசுவட்டி கொடுப்பதில்லை. அதே போல் நவமணி பத்திரிகையின், நிலைமை. அவர்களுக்கு மாதச்சம்பளம் கொடுப்பது இல்லை. அவர்கள் உழைக்கும் பத்திரிகையாளர்கள், அவர்களுக்கு கொடுத்த கோர்ட்டு தீர்ப்பை அமல் நடத்தவில்லை. இதுமாதிரி பல்வேறு உதாரணங்களைச் சொல்ல முடியும். அவகாசம் இல்லை.

தொழிலாளர் நல இலாகா இந்த நடவடிக்கைகளை கணக்கில் கொண்டு கோர்ட்டு தீர்ப்பை நடைமுறைக்குக் கொண்டு வராத முதலாளிகளை பிராசிகியூட் செய்ய வேண்டும். வெறும் பைன் போட்டால் பத்தாது. மூன்று மாதம், நான்கு மாதம் என்று ஜெயில் தண்டனை கொடுக்கவேண்டும். ஹங்கர் ஸ்ட்ரைக் இருக்கிற தொழிலாளி தற்கொலை முயற்சி பண்ணுகிறார் என்று அவனுக்கு ஜெயில் தண்டனை கொடுக்கிறார்கள். என் அந்த தண்டனையை இவர்களுக்கு கொடுக்கக்கூடாது. சட்டத்தைத் திருத்துங்கள் என்று சொல்கிறேன். அன் ஆர்கனைஸ்டு ஒர்க்கர்ஸ், அன் ஆர்கனைஸ்டு இன்டஸ்ட்ரீஸ் என்று இருக்கிறது. பாரம் சுமக்கும் தொழிலாளிகள், கட்டிடம் கட்டும் தொழிலாளிகள், ரோடு வேலை

செய்யும் தொழிலாளிகள், கிராமங்களில் உள்ள ஆர்ட்டிசன்ஸ் அதாவது தச்சன், கொல்லன், கருமான், விவசாயத் தொழிலாளர்கள், இப்படி பல்வேறு கடும் தேக உழைப்பு செலுத்தக்கூடியவர்கள், இவர்களுடைய கடின உழைப்புக்கு மதிப்பு இல்லை. நாசுக்கான நிலைமையில் உழைப்பவர்களுக்கு மதிப்புக் கொடுப்பது நியாயமல்ல. சமுதாயத்திற்கு தேவையான கடின உழைப்பு தரக்கூடிய தொழிலாளர்களுக்கு மதிப்பளிக்கும் முறையில் எந்தச் சட்டமும் இல்லை. ஷாப் ஆக்ட் ஒரு சிலருக்கு நடைமுறை ஆக்கலாம். காம்பென்ஸேஷன் ஆக்ட், மினிமம் வேஜஸ் கிராச்சிவட்டி ஆக்ட் இவைகள் எல்லாம் இருக்காது. இவைகளை பரிசீலனைசெய்து அவர்களுக்கு வசதி செய்து தரக்கூடிய சட்டங்களைக் கொண்டு வரவேண்டும்.

அதே மாதிரி தொழிலாளர்களுடைய ஒட்டு மொத்தமான இயக்கத்தின் பால் அனுஷ்டிக்கக்கூடிய கொள்கைகள் அவர்கள் இயக்கம் முன்னேறிச் செல்வதற்கான பாதை, தொழிலாளர் வர்க்கத்தோடு கலந்து காரியத்தைச் செய்யக் கூடிய முறையில், சங்கங்களுடன் கலந்து தீர்மானிக்க வேண்டும். அரசாங்க கமிட்டிகளில் அவர்கள் பிரதிநிதிகளுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கவும் வேண்டும். எமர்ஜன்சி காலத்தில் அப்பெக்ஸ் பாடி என்று வைத்து மூன்று சங்கங்களுக்கு ஆதரவளித்து மற்ற சங்கங்களை கீழே தள்ளினர். பாரபட்சம் என்ற நிலைமைக்கு ஏதாவது ஒரு அணி வேலை செய்தனர்? இது சரித்திரத்தை மறுக்கும் முறையில் போகும் போக்கு. அப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது. எந்தக் கட்சி ஆள், எந்தத் தலைவர் என்பது பிரச்னை அல்ல. அவைகளை கணக்கில் கொண்டு அரசு அதன் கமிட்டிகளில் எல்லா தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக ஒரு விஷயம் என்னவென்றால், இந்த ஆட்டோமேஷன் பிசினஸ், தானியங்கி யந்திரம், அதிலும் கம்ப்யூட்டர் பெரிய அபாயத்தை உண்டாக்குகிறது. இங்கே சட்ட மன்றத்தில் 1969-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ம் தேதி நடந்த விவாதத்தில் அன்றுள்ள அரசு கம்பியூட்டரை எதிர்த்து ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்த காலத்தில், அந்த தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் சி. கோவிந்தராஜன் கொண்டு வந்து, அதன் மீது விவாதம் நடந்து நிச்சயமாக கம்பியூட்டரை ஆதரிக்க மாட்டோம். எதிர்ப்போம், மத்திய அரசுத் துறையில் வந்தாலும் எதிர்ப்போம் என்று வாக்குறுதி அளித்ததன் பேரில் தீர்மானம் வாபஸ் பெறப்பட்டது.

(முற்பகல் 11-00)

இப்போது ஏ. ஜி.-ஸ் ஆபீஸில் அந்த மாதிரி இயந்திரம் வருகிறது. 1,500 பேர்களுக்கு அதனால் வேலை போகலாம். பட்ஜெட் டேட்டா ப்ராஸஸிங் செண்டர் என்று ஏற்படுத்தி இந்த





மெஷின் அங்கு புகுத்தப்பட்டிருக்கிறது. எலக்ரிசிட்டி போர்ட்டிலும் இந்த இயந்திரங்கள் சென்று பில்லிங் செக்ஷனில் உள்ள ஏராளமான எழுத்தர்கள் போன்றவர்களுக்கு வேலை இல்லாமல் போகக் கூடிய அபாயம் இருக்கிறது. விலை மதிக்க முடியாத சக்தியாகும் மனித சக்தி, அந்த மனித சக்திக்கு நாம் முதல் இடம் கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்காமல் கம்ப்யூட்டர் இயந்திரங்களைக் கொண்டு வரும் நிலையை எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது. கம்ப்யூட்டர் மயமாக்கப்படுவது தடுக்கப்படவேண்டும்.

விலைவாசி ஏற்றத்தாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும் கடுமையான கஷ்டங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள தொழிலாளர்களைப் பாதுகாக்க என்ன கொள்கையை இந்த அரசு கொண்டிருக்கிறது என்பதை திட்ட வட்டமாக அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

போனஸ் சட்டத்திற்கான திருத்தங்கள் ஒரு தீர்மானத்தை இங்கே பாசாக்குவதற்கு முயற்சி எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்த படியாக ஒரு வார்த்தை சொல்லி முடித்துக் கொள்கிறேன். வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் நல்லதொரு திட்டம் தான். ஆனால் அதைச் செயலாக்கும் முறையைப் பற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டும். நான் குடியிருக்கும் வார்டில் வி. கே. கிருஷ்ண மேனன் ரோட்டில் கட்டிக் கொடுத்திருக்கிற பிளாக்கை எடுத்துக் கொண்டால், எந்தக் குடிசைக்காரர்களுக்கு அந்த வீடுகள் கிடைக்க வேண்டுமோ அவர்களுக்குக் கிடைக்காமல் வேறு சிலர் வாங்கி உள்வாடகைக்கு குடி வைத்து அதிக வாடகை வசூலித்து கொண்டிருக்கிறார்கள். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்வதுபோல் இது ஒன்றே போதும். அண்ணா நகரில் மத்திய தரக் குடும்பங்கள்—காலேஜ் ப்ரபொஸர்கள், அதிகாரிகள், அரசாங்க ஊழியர்கள் இவர்கள் எல்லாம் தங்கள் தங்கள் பிராவிடண்ட் பண்டிலிருந்து வேறு விதத்திலும் பணம் எடுத்து மனைக் கட்டு வாங்கி கட்டடம் கட்டி குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு இப்போது 50. 60 சத விகிதம் விலையை உயர்த்தியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். என்னவென்று புரியவில்லை. இது பற்றிய கணக்குகளைக் கேட்டால் எந்த விதமான பதிலும் வருவதில்லை. அதிகப் பணத்தை மட்டும் வசூலிக்கிறார்கள். இப்படியிருந்தால் எப்படி மனிதன் வாழ்வது? இதிலுள்ள ஊழல்களை தடுக்க வேண்டும். ஒரு விசாரணை நடத்த வேண்டும். அதிகாரிகளை மட்டும் நம்பினால் விவரங்கள் கிடைக்காது அங்குள்ள பொது ஜன அமைப்புக்களோடு தொடர்பு கொண்டு விவரங்களைக் கேட்டறிய வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்கு இன்னும் பல படிகள் செல்ல வேண்டியிருக்கிறது. தொழிலாளர்களுக்கு ஒன்றி நிற்கிறோம், அவர்கள் பக்கத்தில் நிற்கிறோம் என்று சொல்வது நல்லது

தான். ஆனால் அது எப்படி செயல்படுத்தப்படும், எப்படி நடைமுறைக்கு வரும் என்பதற்கு திட்ட வட்டமான கொள்கை அறிவிப்பு கொடுத்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. இ. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் உள்பட தொழிலாளர்கள், வீட்டு வசதி மானியக் கோரிக்கைகளின் மீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட ஆர்க்காடு மாவட்டம் தோல் பதனிடும் தொழிற்சாலைகள்மிகுந்த ஒரு மாவட்டமாகும். ஆனால் இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நலனுக்காக இதுவரையில் எந்த அரசும் பணியாற்றவில்லை. அந்த தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அன்றாடம் வேலை செய்தால்தான் சாப்பாடு என்ற நிலையில் அவர்கள் மிகவும் வாடி வதங்கியிருக்கிறார்கள். வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு இந்த மூன்று ஊர்களிலும் ஏறக்குறைய 300 தொழிற்சாலைகள் உள்ளன. இந்த 300 தொழிற்சாலைகளில் ஏறக்குறைய 30,000 பேர்கள் வேலை செய்கிறார்கள். தற்போது 20,000 பேர்கள் வேலையில்லாமல் நடமாடிக்கொண்டும் வீட்டில் உறங்கிக்கொண்டும், வயிற்றில் துணியைக் கட்டிக்கொண்டும் அவஸ்தைப்படுகிறார்கள். அவர்களது குறைகள் இதுவரை நிவர்த்திக்கப்படவில்லை இதற்கான காரணங்கள், தொழிற்சங்கங்கள் சரியாக எடுத்துரைக்கவில்லை, முதலாளிகளும், இதுவரை இருந்த அரசுகளும் அதைப் பற்றி ஆராய்ந்ததில்லை. அதேநேரத்தில் கமிஷனர், முதலாளிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மூன்று பேர்களும் கூடி அவர்கள் எடுத்துக்கொள்ளும் பேரம்மூலம் தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு வருகின்றன. அதே நேரத்தில் தொடர்ந்து ஒரு தொழிலாளிக்கு வேலை கொடுப்பதில்லை. தொடர்ந்து வேலை கொடுத்தால் அவர்களை நிரந்தரமான தொழிலாளியாக ஆக்கி பதிவு செய்து அவர்களுக்கு பிராவிடன்ட் பன்ட் போன்ற சலுகைகள் கொடுக்க வேண்டும். இதற்காக 30 நாட்கள் என்று கணக்கிட்டு, 30 நாட்கள் முடிந்ததும் அவர்களுடைய கணக்கை தீர்த்து 20, 30 ரூபாய் கொடுத்து வெளியே அனுப்பிவிடுகிறார்கள். அப்படியே யாராவது அவர்களுக்கு வேண்டியவர்களாக இருந்தால், வேறு ஏதாவது ஒரு பெயரில் மாற்றி பதிவு செய்து வேலை கொடுத்து வருகிறார்கள். இப்படிப்பட்ட அவதிகளை இதுவரை எந்த அர்சாங்கத்தாலும் நீக்கப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் தொழிற்சங்க பிரதிநிதியாய் இருப்பவர் எம். ஆறுமுகம் என்பவர். அவர்கள் தன்னுடைய குடும்பத்திற்கு வேண்டியவாறு பார்த்துக்கொண்டு,





அதற்குத் தகுந்தபடி போராட்டங்களையும் ஸ்டிரைக்குகளையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படி முதலாளிகளின் பாக்கட்டுகளில் இருப்பவர். அவர் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் காரணமாக இன்று பல தொழிலாளர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இயந்திரங்களை புகுத்தி வேலைசெய்து கொண்டிருந்த தொழிலாளர்களை வெளியே அனுப்பிவிட்டார்கள்.

பத்து வருடங்களாக இங்குள்ள பதனிடப்பட்ட தோல் உயர்ந்த தரமாக இருந்தது, வெளிநாடுகளில் விரும்பி வாங்கக் கூடிய நிலைமையில் இருந்தது. அப்படியிருந்த தோல் இப்போது தரமானதாக இல்லை. காரணம் முன்னால் பச்சைத் தோலாக கொண்டுவருவதை பதப்படுத்தி நல்ல முறையில், ஆக்குவதற்கு ஒரு மாத காலம் வேலை செய்து வந்தார்கள் ஏறக்குறைய ஒரு மாத காலத்திற்கு எல்லா செக்ஷன்களிலும் ஆட்கள் கைகள் மூலமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். இப்போது இயந்திரங்கள் மூலம் வேலையை மாற்றி செய்வதின் காரணமாக இதில் வேலை செய்து வந்த தொழிலாளர்கள் வேலையின்றி வெளியில் வந்து மிகவும் வேதனைப்பட்டு தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இயந்திரங்கள் மூலம் வேலை செய்வதால் பெரியவர்களுக்கு வேலையில்லாமல், 10, 15 வயதுள்ள சிறுவர்களை வைத்து வேலை வாங்குகிறார்கள். இவர்களுக்கு 2½ ரூபாய் 3 ரூபாய் என்று கூலியாக கொடுத்து கண்துடைப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல 8 மணி நேரம் 10 மணி நேரம் என்று வேலை செய்து கடின உழைப்பையும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குத் தகுந்தவாறு கூலி கொடுப்பதில்லை.

மேலும் தோலிலிருந்து பெறும், முடிகளை சுத்தம் செய்வதற்காக அதிகமான அளவில் பெண்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு சட்டப்படி கூலி கொடுப்பதில்லை. காலை 8 மணிக்கு வேலைக்குச் சென்றால் இரவு 8 மணிக்குத் தான் திரும்புகிறார்கள். இத்தனைக்கும் 2½ ரூபாய், 3 ரூபாய் என்று தான் கூலி கொடுக்கிறார்கள். இதற்கிடையில் லேசான மழை பெய்துவிட்டால் கூட அரை நாள் வேலை என்று சொல்லி சம்பளத்தையும் குறைத்துக் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட குறைகளை எந்த அரசாங்கமும் போக்கவில்லை, முதலாளிகளுடைய குறைகள் என்ன என்பதையும் அரசாங்கம் இதுவரை கவனிக்கவில்லை.

ஆகவே தொழிலாளர்களுடைய பிரச்னைகளில் இந்த அரசு தெளிவான முடிவுகளை எடுப்பதற்கான, ஒரு கமிஷனை அமைத்து அதன் மூலமாக, எந்தவேலையாக இருந்தாலும் சரி அவைகளை எல்லாம் நன்றாக பரிசீலனை ...செய்யவேண்டும். தொழிலாளர்களுடைய குறைகளைப் பரிசீலனை செய்கின்ற நேரத்தில்

முதலாளிகளுடைய குறைகளையும் அறிந்து இவர்களால் ஏன் தொழிற்சாலைகளை இயக்க முடிவதில்லை என்பதையும் ஆராய்ந்து இரு சாராருடைய குறைகளையும் போக்குவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அரசு போக்குவரத்தில் பெரிய பஸ்களை ஓட்டும் ஓட்டுநர்களுக்கு சம்பளம் குறைவாகவும், சிறிய வாகனங்களை ஓட்டுபவர்களுக்கு அதிகமான சம்பளம் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. பெரிய பஸ்களை ஓட்டுபவர்கள் பல கஷ்டங்களுக்கு இடையில் நெளிவு சுளிவுகளை தெரிந்து அதற்கு தகுந்தவாறு ஓட்டுபவர்களுக்கு குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று குறைப்பட்டுக் கொள்கிறார்கள். இந்தக் குறையையும் நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மாவட்ட வேலைவாய்ப்புப் பெற்றுத்தரும் நிலையம் எந்த முறையில் இயங்குகிறது என்று பார்த்தால் ரூ. 200, ரூ.100 லஞ்சம் கொடுத்தால் அதை வாங்கிக்கொண்டு இன்டர்வியூவுக்கு பெயர் அனுப்பி வேலை வாய்ப்பைப்பெற்றுக் கொள்ளக் கூடிய நிலை இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டம் பெரியதொரு மாவட்டம். அதோடு பின்தங்கிய மாவட்டமாகவும் இருக்கிறது, இங்கு தொழிற்சாலைகள் குறைவாக இருக்கிறது, ஆகவே அதிகமான தொழிற்சாலைகளை இங்கே ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் திருப்பத்தூரில் ஒரு வேலைவாய்ப்பு நிலையம் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வாணியம்பாடியில் ஒரு தொழிற் கல்வி நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். மேலும் ஜவ்வாது மலையில் நிறைய சந்தன மரங்கள் கிடைக்கின்றன. ஆகவே வாணியம்பாடியில் ஒரு சந்தன தொழிற்சாலை ஏற்படுத்தி அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பை தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இளைஞர் அணியில் வேலை செய்தவர்கள், படித்த பட்டதாரிகள் இவர்கள் இப்போது வேலையின்றி கஷ்டப்படுகிறார்கள், இவர்கள் பல மகஜர்களை எங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இவர்களுடைய குறைகளையும் தீர்த்து வைத்து அவர்களுக்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11–10]

அதே நேரத்தில், கடைசியாக நகர்ப்புற வளர்ச்சியை காணுகையில், கிராமப்புற வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, கிராமத்திலுள்ள மக்களின் நலன்களை சீர்திருத்த, மாற்றியமைக்க திட்டங்கள் செய்யும்போது அவர்களுக்கு குறைந்த விலையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும்படியும், அதே நேரத்திலே



நெருக்கடி நிலை காலத்தில் பழிவாங்கப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கவேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், வட ஆற்காடு மாவட்டத்தில் பீடி சுற்றும் தொழிலாளர்களின் குறைகளை இந்த அரசு நிச்சயம் கவனிக்க வேண்டும். அவர்களுக்கு நியாயமான கூலி நிர்ணயம் செய்து கொடுக்கவேண்டும். பீடி சுற்றும் தொழிலாளர்கள் இந்த வேலையில் ஈடுபடும்போது, அவர்களது உடல் நிலை பாதிக்கப்படாத முறையில், அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் பற்றிய பிரச்னைகள் இப்போது அலசப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தத் தொழிலாளர்கள் எல்லோருக்கும் சட்டப்படி லீகல் புரொடெக்ஷன், சட்டப் பாதுகாப்புகள் தரப்படவேண்டுமென்பதிலே என்னுடைய சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

குறிப்பாக, வேலூரிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சி.எம்.சி. ஆஸ்பத்திரியிலே ஏறக்குறைய 2,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கிளார்க்குகள், வார்ட் பாய்ஸ், வார்டு சிப்பந்திகள், ஸ்டெனோகிராபர்ஸ், ஸ்வீப்பர்ஸ் என்று சொல்லக்கூடிய ஏறக்குறைய 2,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்களுக்கு இந்திய இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்ட், ஷாப் அண்டு எஸ்டாபிலிஷ்மெண்ட் ஆக்ட் என்ற இந்த இரண்டு சட்டங்களும் அவர்களுக்கு பொருந்தாத காரணத்தினால், இந்தத் தொழிலாளர்கள் தங்களுக்கு உரிய உரிமைப் பிரச்னைகளைக் சட்டப்படி எடுத்துச்சொல்லயாத நிலைமையில், ஓராண்டு காலத்திற்கு முன்னாலே ஒரு பெரிய வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். அந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களை அந்த நிறுவனமானது வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். டாக்டர்கள் உள்பட பல பேர்கள் அப்போது அப்படி வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள். அப்போதிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானது, சி.எம்.சி.யிலே வேலை செய்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புத் தருகின்ற முறையிலே, 'பிரைவேட் காலேஜ் டீசர்ஸ் புரொடெக்ஷன் ஆக்ட் ஆப் 1976' சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது, இந்த சி.எம்.சி. நிறுவனத்தார் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, அதிலே 'செக்யூரிடி பார் தி மைனாரிடி இன்ஸ்டிடியூஷன்'க்கு 'எக்ஸெம்ஷன்' வாங்கி அதிலேயும் அவர்கள் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் மூலமாக பலவிதமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத நிலைமை ஏற்

பட்டிருக்கிறது. ஆகவே, அந்தச் சட்டத்திலே குறைபாடாக உள்ள இந்த 'எக்ஸெம்ஷன் கிளாஸை' வாபஸ் பெறுவதற்கு இந்த அரசு அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, 'ரிட்ரென்ச்மெண்ட் அண்டு டிஸ்மிசல்' என்று சட்டத்தில் உள்ளதை சில நிறுவனங்கள் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. குறிப்பாக, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ரேடியோஸ், டேப்ரிக்கார்டர் போன்ற பொருள்களைத் தயார் செய்கின்ற 'ரீசா' என்ற நிறுவனம் 20 ஆண்டுகளாக சென்னையிலே நடைபெற்றுக் கொண்டு வருகிறது; அதிலே வேலை செய்கின்ற 65 தொழிலாளர்கள் ஒரே நாளிலே வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பதிலாக மறுநாளே 60 தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ; ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் இதைப்பற்றி ஷார்ட் நோட்டீஸ் கேள்வியை 15 தினங்களுக்கு முன்னாலே இந்தச் சட்ட மன்றத்திலே கொடுத்தும், இதுவரைக்கும் பதில் வரவில்லை, எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தொழிற்சாலை முதலாளிகளுக்கு தங்கள் இஷ்டப்படி நடந்து கொள்ள இந்தச் சட்டங்கள் எல்லாம் பாதுகாப்பாக இருக்கின்ற காரணத்தால், இந்தச் சட்டங்களின் துணை கொண்டு தனிப்பட்ட நிறுவனங்களிலே உள்ள முதலாளிகள் தங்கள் இஷ்டம்போல் தாங்கள் நினைத்தால், விரும்பினால் தொழிலாளர்களை வேலையில் வைத்துக்கொள்வது, விரும்பாவிட்டால் வேலையிலிருந்து துரத்துவது என்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே தனிப்பட்ட நிறுவனங்கள் தங்கள் இஷ்டப்படி நடந்து கொள்ளாத நிலையில், 'இண்டஸ்ட்ரீஸ் டிஸ்பியூட் ஆக்டின்' கீழும், அதே நேரத்தில் மற்ற செகியூரிடி, பிராவிடண்ட் பண்டு, கிராசியூடி, மெடிகல் எய்ட் போன்ற சலுகைகளை அளிக்கக் கூடிய சட்டங்களையெல்லாம் அமுலாக்குகின்ற வகையில் இதற்கு ஒரு வழிவகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, வழக்கறிஞர்களிடத்தில் குமாஸ்தாக்களாக வேலை செய்கிறவர்களைத் தாங்கள் விரும்புகிற வரையில் பயன்படுத்திக் கொண்டு விரும்பாதபோது வெளியில் துரத்திவிடுகிற தன்மை இருக்கும் காரணத்தால் அந்தக் குமாஸ்தாக்களுக்கு இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் ஆக்டின் கீழ் பாதுகாப்புத் தருவதோடு பிராவிடெண்ட் பண்ட், கிராசுயூடி, மெடிகல் எய்டு ஆகிய எல்லாம் அவர்களுக்குத் தரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹவுசிங் ஃபெசிலிடிஸ் பற்றிச் சொல்லுகிற காலத்தில் அரிசன சமுதாய மக்களுக்கு வீடு கட்டித்தருகிற ஒரு திட்டமானது இந்த அரசினுடைய குறிப்பில் இருக்கிறது. அது போன்று



Housing facilities Scheme must be extended even to the backward cl ss people என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதற்காக தனியான ஒரு கார்ப்பரேஷனை இந்த அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். அதை எப்படிச் செயலாக்குவது, வருமானத்தின் அடிப்படையிலா அல்லது சமுதாய அந்தஸ்தின் அடிப்படையிலா என்பதைப் பரிசீலித்து அவர்களுக்கு வீடு கட்டித் தருகிற திட்டத்தைப் பற்றி இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, அரசாங்கக் கட்டிடங்களைக் காண்டிராக்ட் மூலம் கட்டும்போது அதிகாரிகளுக்கும் காண்டிராக்டர்களுக்கும் இடையே 'கொல்யூஷன்' ஏற்பட்டு அதன் காரணமாக, அரசாங்கப் பணம் ஏராளமாகச் செலவிடப்பட்டும் கட்டிடங்கள் முறையாகக் கட்டப்படுவதில்லை. அவர்கள் கட்டிய கட்டிடங்களுக்கு பிட்னஸ் சர்டிபிகேட் கொடுத்தவுடனேயே காண்டிராக்டர் லயபிலிடியில் இருந்து விடுவித்துக் கொண்டு விடுகிறார். அந்த அதிகாரியும் அந்த இடத்திலிருந்து மாற்றலாகிப் போய்விட்டால் அவருக்கும் எந்தவிதமான லயபிலிடியும் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, பொதுமக்கள் பணம் பாழாகிறது.

குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்தில் சாத்துவாச்சேரி ஸ்கீம் என்று ஒரு வீடு கட்டும் திட்டத்தை அனுமதித்திருக்கிறார்கள். அங்கு ஏராளமான வீடுகள் கட்டப்பட்டன. சென்ற வருஷத்தில் மழை பெய்த போது அந்தக் கட்டிடங்கள் வெடித்து, ஓட்டை விழுந்து பல வீடுகள் விழுந்துவிட்டன. அதற்காக பணம் கட்டிய வீட்டுச் சொந்தக்காரர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதிகாரிகள் காண்டிராக்டர்கள் 'கொல்யூஷன்' காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதிரி இழப்புகள் ஏற்படுகிற நேரத்தில் 'Both contractors and officials must be made responsible to make good the damages' என்ற வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் ஒன்று. நகர்ப்புற வளர்ச்சியைப் பற்றிச் சொல்லுகிறபோது ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆரம்பிக்கப்பட இருக்கிற தொழிற்சாலைகளை மேலும் மேலும் நகர்ப்புறங்களில் தொடங்கிக் கொண்டிராமல் கிராமப் புறங்களிலே ஆரம்பிப்பதன் மூலம் கிராமப்புறங்களில் இருந்து நகர்ப் புறங்களுக்குக் குடியேறும் மக்கள் எண்ணிக்கை குறையும். ஏற்கனவே நகர்ப்புறத்தில் உள்ள தொழில் நிறுவனங்களில் பணி செய்யும் தொழிலாளர்களுக்கு அந்த மானேஜ்மென்ட் வீட்டு வசதி மற்ற வசதிகளைச் செய்து நகர்ப்புற வளர்ச்சிக்கு ஆக்கம் தரச் செய்ய வேண்டும் என்று கூறி, உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் கருத்தாக இவற்றை வைத்து விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, ஊரக வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களை, தாங்கள் எனக்குக் கொடுத்திருக்கும் நேரத்திற்குள் கூற விரும்புகிறேன். சேலம் மாவட்டத்தில் சவுத் இந்தியா கிளாஸ் பாக்டரி என்ற தொழிற்சாலை இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலேயே கிளாஸ் டம்ளர் போன்றவற்றைச் செய்யக்கூடியது இந்த ஒரு பாக்டரிதான். கடந்த எட்டு மாதமாக இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டு 500 தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். இதனால் மூவாயிரத்திற்கு மேற்பட்டவர்கள், அந்தத் தொழிலாளர்களின் குடும்பங்கள் பட்டினியாக வாழக்கூடிய அவல நிலையில் தொடர்ந்து இருந்து வருகிறார்கள். இந்த நிறுவன உரிமையாளர் ஏற்கனவே டி.ஐ.சி.சி.யில் நிறையக் கடன்களைப் பெற்றிருக்கிறார்கள். அதோடு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலும் கடன் வாங்கியிருக்கிறார்கள். இதனால் இந்தியன் பாங்கு அந்த நிறுவனத்திற்கு சீல் வைத்துவிட்டார்கள். இந்த நிலைமையில் வேலையில்லாது 500 தொழிலாளர்கள் பட்டினியாகக் கிடந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை எந்தவிதமான நிவாரணமும் கிடைக்கவில்லை. பல நேரங்களில் அவர்கள் தூதுக் குழுவாக வந்து அரசு செயலாளரைச் சந்தித்திருக்கிறார்கள்.

[முற்பகல் 11·20]

ஆனால் நாளதுவரை எந்தவிதமான நிவாரணமும் கொடுக்காத நிலையில் கடந்த ஒரு வார காலமாக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்பு அவர்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அந்த ஆலையை மூடுவதற்கு முன்னதாக அவர்கள் ஒன்றரை மாதம் வேலை செய்திருக்கிறார்கள். ஒன்றரை மாதச் சம்பளம் தரப்படாமல் பாக்கி இருக்கிறது. அந்தத் தொகை 1 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் வரைக்கும் வருகிறது. அவர்களுக்கு அந்த சம்பள பாக்கியைக் கொடுக்க வேண்டுமென்ற முறையில் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு அறிக்கை அனுப்பியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த அரசு அந்த நிறுவனத்திற்கு ஏராளமான தொகை கடனாகக் கொடுத்திருப்பதால் இப்போது அந்த நிறுவனத்திலே உள்ள இயந்திரங்களை விற்கப்போவதாகச் சொல்கிறார்கள், அதற்காக இங்கே அனுமதி கேட்க வந்திருக்கிறார்கள், அந்த இயந்திரங்கள் எல்லாம் அரசினுடைய ஆதிக்கத்தில் இருப்பதால் இயந்திரங்களை விற்பதற்கு முன்னாலே தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பாக்கித் தொகையான 1 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்களுக்குக் கிடைக்கச் செய்யவும், பட்டினி கிடக்கிற அந்தக் குடும்பங்களுக்கு 200 ரூபாய் அளவில் நிவாரணமும் அளிக்கும்படி செய்யவும் கொடுத்து உதவினால்





அந்த ஆலையின் இயந்திரங்களை விற்கும்போது அந்தப் பணத்தை அதிலிருந்து வசூலிக்க வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் நகரத்திலேயும் அதைச் சுற்றி பத்து மைல் தூரத்திற்குள்ளேயும் அங்கே இரும்பாலை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிகவும் பிரகாசமாக இருப்பதால் சேலம் நகரத்தையும் சுற்றுப் புறங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்கிறது. அந்த இரும்பாலைத் திட்டம் முழுமையாக நிறைவேறக் கூடிய நேரத்திலே 12 ஆயிரம் தொழிலாளர்கள் அங்கே வேலை பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால் ஏறத்தாழ 50 சதவீதம் தொழிலாளர்களுக்கு மட்டுந்தான் வீட்டுவசதி செய்யக்கூடிய முறையில் அங்கே திட்டமிட்டிருக்கிறார்கள். மீதம் வரக்கூடிய கிட்டத்தட்ட 6 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்துகொடுக்க திட்டமிடப்படவில்லை. அந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் சேலம் நகரத்திலேயேதான் குடியிருப்புகளை ஏற்படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்போது சேலம் நகரத்திலே பயங்கரமான நெரிசல் ஏற்படும். இப்போதே அந்தத் திட்டத்திலே வேலை பார்க்கிற தாற்காலிகத் தொழிலாளர்கள் எல்லாம் சேலம் நகரத்திலேயே குடியேறி விட்டதால் அங்கே வீட்டுக்குத் தட்டுப்பாடும், குடிநீர்க் கஷ்டமும் ஏற்பட்டு இருக்கிறது. சேலத்திற்குப் பக்கத்திலே உள்ள அழகுசமுத்திரம் பஞ்சாயத்திலும் இன்னும் சில பஞ்சாயத்துக்களிலேயும் இந்த சட்ட விதிகளுக்கு அப்பாற்பட்ட முறையிலே கட்டுமானங்கள் நடந்துவருகின்றன. அதைத் தடுக்காவிட்டால் சேலத்தின் அழகும் அந்த இரும்பாலை சுற்றுப்புறத்தின் அழகும் அழிந்து விடும். ஆகவே, அதைத் தடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் நுட்பம் தெரிந்த நகரமைப்பு அலுவலர்கள் இப்போது நகர்ப்பகுதிகளிலேதான் நியமிக்கப்படுகிறார்கள். தொழில் நுட்பம் தெரிந்த அலுவலர்களை பஞ்சாயத்துக்களிலேயும் நியமிக்க வேண்டும், இப்படி நியமனம் செய்தால் தான் தேவையற்ற கட்டுமானங்களைத் தடுப்பதற்கும் வருங்காலத்தில் சேலம் நகரத்திலேயும் புறநகர்ப் பகுதிகளிலேயும் ஏற்படுத்தப்போகிற அபிவிருத்தித் திட்டங்களை ஒழுங்காக செயல்படுத்துவதற்கும் வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாவட்ட மண்டல அபிவிருத்திக் குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராகவும் அதிலே உறுப்பினர்களாக சட்ட மன்ற உறுப்பினர்களும் நகரமைப்பு துணை இயக்குநரும் இருக்கிறார்கள். ஆனால் அந்தக் குழு சரிவரச் செயல்படவில்லை என்ற காரணத்தால் நகர அபிவிருத்திப்பணிகளையும் அங்குள்ள மக்களுக்கு நல்ல பணிகளையும் செய்ய முடியவில்லை. ஆகவே அந்த மண்டலக் குழுவை நல்லமுறையிலே செயல்படக்கூடிய முறையிலே

விரைவிலே நடவடிக்கைகள் எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தாக்கீது அனுப்புவதுடன் இந்தக் குழுவிற்குப் பல நல்ல அதிகாரங்களையும் கொடுத்தால்தான் அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு நல்ல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உதவியாக இருக்கும்.

நகரமைப்புத் திட்டத்தைப் பற்றிச் சொல்லப்படும்பொழுது நகரமைப்பு அலுவலர்கள் ஏழை எளிய மக்கள் வாழக்கூடிய இடங்களில், அவர்கள் ஏற்கனவே வாழக்கூடிய கூரை வீடுகள், வில்லை வீடுகள் இவைகளை மாற்றியமைக்கக்கூடிய நேரத்திலே இந்த நகராட்சிச் சட்டங்கள் தொல்லையாக இருக்கின்றன. ஆகவே அந்த ஏழை எளிய மக்கள் வீடுகளை மாற்றியமைக்கிறபோது நகராட்சிச் சட்டங்களிலிருந்து பாதுகாப்பு கொடுக்கக்கூடிய முறையில் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதிய குடியிருப்புகள் புறநகர்ப் பகுதிகளிலே ஏற்படுத்தப்படுகிறபோது அந்த லே அவுட்களில் சரியானபடி பாதை வசதியும் விளக்கு வசதிகளும் போடப்படாமல் இருப்பதால் அந்த மனைகளை எல்லாம் விற்றுவிட்டுச் சென்று விடுகிறார்கள்.

அப்படித் தெரியாமல் மனைகளை வாங்கிய மக்கள், நகராட்சியிடம் சென்று அனுமதிக்காக அலையும்பொழுது, ஏற்கனவே அனுமதிக்கப்பட்டபடி அந்த மனைகளைப் பிரித்து அரசின் உத்தரவுப் பிரகாரம் எந்தவிதமான சாலைகளும், மின் விளக்கும் போடப்படாமல், நகராட்சிக்கு ஒப்படைக்காமல் சென்று விட்டதால் அனுமதி கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ மனையை வாங்கிய ஏழை எளிய மக்கள் அந்த அனுமதி கிடைக்காததால் அரசாங்கத்திடம் கடன் வாங்கவோ அல்லது வீடுகள் கட்டவோ முடியாமல் பரிதாபமான நிலையில் இருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட மனைகளைப் பிரித்துச் செய்வதைத் தனியார் போடுவது கூடாது என்று செய்து, அவைகளை வீட்டு வசதி வாரியமே ஆங்காங்கு செய்து ஏழை எளிய மக்களுக்குத் தவணை முறையில் மனைகளைப் பிரித்து வழங்கவும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*<u>திரு. அ. பாலுச்சாமி</u>: மாண்புமிகு மாமன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1977–78 ஆம் ஆண்டுக்கான வீட்டு வசதிக்காகவும், தொழிற்சாலைகளைப் பெருக்கிடவும் நிதி அதிக அளவு ஒதுக்கப்பட்டிருப்பதை நான் மனதார வரவேற்கிறேன்.

தமிழகத்தில் வாழ்கின்ற மொத்த ஜனத்தொகையில் 80 சதவீதத்தினர்க்கு மேல் கிராமப் புறங்களில் வாழ்கின்றவர்கள். இவர்கள் எல்லோருமே விவசாயத் தொழிலையே நம்பி வாழ்பவர்கள். விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் அவர்களுக்குப் போதிய வசதியான நிலங்கள் இல்லை. இவ்வாறு நிலங்கள் இல்லாத காரணத்தினால் மக்களில் 60 சத





விகிதத்தினர் கூலி வேலை பார்த்து அவர்களுடைய வாழ்க்கையை நடத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அப்படிக் கூலி வேலையை நம்பிக்கொண்டிருக்கின்ற அவர்கள் விவசாயக் காலங்களில் மட்டும் கூலி வேலை செய்கிறார்கள், மற்ற 6 மாத காலங்களில் அவர்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகையால் எங்களது நிலக்கோட்டை தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கு மழையின்றி பெரிய வறட்சிப் பகுதியை போன்று இருக்கிறது. அப்பகுதியில் ஏற்கனவே மழையின்றிக் கஷ்டப்பட்ட காரணத்தினால் அது பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்கப்பட்டு வரி வஜா செய்தும், நிறுத்தி வைக்கப்பட்டும் இருந்த தொகுதியாகும். அந்தத் தொகுதியில் எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லாத காரணத்தினால் அங்கே கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் மிகவும் சிரமப்பட்டு தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எங்களுடைய நிலக்கோட்டை தொகுதியில் ஏதாவது சிறு தொழிற்சாலைகளை அமைத்து, கிராமங்களில் கஷ்டப்படுகின்ற கிராம மக்களுக்கு நன்மை செய்யக் கூடிய விதத்தில் நமது அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எங்களது தொகுதியில் கைத்தறி நெசவாளர்கள் வாழ்கிறார்கள். கைத்தறி நெசவாளர்கள் மிகவும் கஷ்டப்படும் சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவர்களது கைத்தறி நெசவுக்குத் தகுந்த போதிய சாதனங்கள் கிடைக்காத காரணத்தினால் மிகவும் சிரமப்பட்டு கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு கைத்தறி நெசவாளர்களின் தொழிலுக்கேற்ப அங்கே ஒரு தொழிற்சாலையை அமைத்து அவர்களது வாழ்க்கையை வளமாக்க வேண்டுமென்று மிகப் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கைத்தறி நெசவாளர்கள், மற்றும் கிராமப்புறங்களில் வாழ்கின்றவர்கள் வீட்டு வசதியின்றித் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நமது அரசாங்கம் அவர்களுடைய நலனை நாடி வீட்டு வசதிகளை இப்பொழுது பெருக்கிடுவதற்கு அதிக நிதி ஒதுக்கித் தந்திருப்பதையும், மேலும் அவர்களது வீட்டு வசதிகளை நல்லமுறையிலே செய்து கொடுக்க முனைந்திருப்பதையும் வரவேற்கிறேன்.

அவர்களது தொழில் அடிப்படையில் தொழிற்சாலைகளை அமைத்துக் கொடுத்தால் நன்மையாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

மேலும், கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு வீட்டு வசதியைப் பெருக்குகின்ற நோக்கோடு, கிராமப்புறங்களிலும் அதிக அளவு வீடுகள் கட்டிக் கொடுத்து கிராமப்புற மக்களின் துயர நிலையைப் போக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. பாலுச்சாமி] [1977 ஆகஸ்ட் 11

கிராம மக்களது நிலைக் கருதி ஆங்காங்கு கிராமங்களில் வீட்டு வாரியம் என்று அமைத்து ஆங்காங்கு வீடுகள் இல்லாமல் கஷ்டப்படுகின்றவர்களுக்கு நன்மைகள் பல செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்சொன்ன பல வழிகளுக்கு, கிராம மக்களது வாழ்வை வளமாக்கிட நமது அரசு எடுத்துள்ள பெருமுயற்சிகளை கிராமப் புறத்திலுள்ள விவசாயப் பெருமக்களும், நெசவாளர்களும் மற்றும் பலதரப்பட்ட தொழிலை நம்பி இருப்பவர்களும் போற்றிப் புகழ்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்றே கிராமப்புறங்களில் சாலை வசதியின்றியும், குடிதண்ணீர் வசதியின்றியும் பெரிதும் கஷ்டப்பட்ட பிரச்னையைப் போக்கிட நமது அரசு எடுத்துள்ள முயற்சியை கிராமந்தோறும் வாழ்கின்ற மக்கள் அனைவரும் குடிதண்ணீர் கஷ்ட நிலையைப் போக்கிட வந்த ஒப்பற்ற முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை மனமாறப் பாராட்டுகின்றார்கள். இதுபோன்று கிராம வசதியினைப் பெருக்குவதற்கு நல்ல பல திட்டங்களை கிராம வளர்ச்சிக்குத் தந்து அண்ணல் காந்தி அவர்கள் அடைய நினைத்த கிராம இராஜ்யத்தை, பேரறிஞர் அண்ணா அவர்கள் கிராம மக்களின் வாழ்வை வளமாக்கிடக் கண்ட கனவை, இன்று முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் முன்னேற்ற வடிவம் கொடுத்துச் செயல்படுவதைப் போற்றி, மாமன்றத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி, எனது உரையை முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11–30)

*திரு. மு. அம்பிகாபதி : பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் உட்படத் தொழிலாளர் பற்றிய இந்த மானியக் கோரிக்கையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன். இன்றைய தினம், தொழிலாளி வர்க்கத்தின்மீது தாக்குதல் தொடுக்கப் பட்டிருக்கிறது. தொழிலாளி வர்க்கம் என்பது ஒரு வர்க்கம். அதைச் சுரண்டுகிற வர்க்கம் முதலாளி வர்க்கம். அந்த சுரண்டும் வர்க்கத்தைக் கட்டுப்படுத்தி, தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்களை இயற்றுவதும் அதுபற்றி விவாதிப்பதும்தான் பிரதானமான அம்சமாகும்.

எதிர்த்தரப்பிலே இருக்கிற கனம் உறுப்பினர் மணிமாறன் அவர்கள்கூட முதலாளிகள் தொழிலாளிகளின் இரத்தத்தை உறிஞ்சுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி உறிஞ்சப்படுகிற இரத்தத்தை தடுத்தி நிறுத்தி, தொழிலாளர்களுடைய உரிமை பாதுகாக்கப் படுவதற்கான விவாதத்தை இன்றைய தினம் நாம் நடத்திக்கொண்டிருக்கிறோம்.



1977 ஆகஸ்ட் 11] [திரு. மு. அம்பிகாபதி]

குறிப்பாக, தமிழகத்தில் நொடிந்துபோன மில்களை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கையாகும். தொழிலாளி வர்க்கம் நீண்ட நாள் போராடி 1920-ம் ஆண்டு ஏ.ஐ.டி.யூ.சி. என்கின்ற அமைப்பு துவக்கப்பட்டது. 1926-ஆம் ஆண்டு தொழிலாளர் சட்டம் வருகிறது, தொழிலாளிகள் சங்கம் அமைக்கலாம், உரிமை கோரலாம் என்பது போன்ற சில சட்டங்கள் வருகின்றன.

தொழிலாளி வர்க்கம் நீண்டநாள் போராடி, நொடித்துப் போன மில்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென முன்பு கூறினார்கள். முன்பிருந்த மத்திய அரசு அதை எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தது. நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பேரேஷன் என்ற ஒன்று அமைக்கப்பட்டு, பல மில்கள் எடுக்கப்பட்டன; இலாபகரமாகவும் நடந்து வருகின்றன. ஆனால், இன்றைக்கு மந்திரியிலே இருக்கிற அரசாங்கம், தொழிலாளர்கள் நடத்த வேண்டும், அல்லது வசதியானவர்களிடம் இணைத்து விட வேண்டுமென்று சொல்கிறது. 10 ஆண்டு, 20 ஆண்டு, 30 ஆண்டு தொழிலாளி வர்க்கத்தையும் அவர்களுடைய வசதிகளையும் சுரண்டிக் கொழுத்திருக்கிற முதலாளிகள், பாங்குகளிலே பணம் வாங்கி, அந்த மில்களை நடத்தி, சொந்தமாக சொத்து சேர்த்து, அந்தப் பணத்தைக் தங்கள் தனி உபயோகத்திற்கு எடுத்துச் செல்லுகிறார்கள். கறவை மறந்த, கறவைக்கு லாயக்கற்ற மாட்டை, மலையிலே மேய்ப்பவனுக்கே ஒப்படைப்பதைப்போல், எலும்பும் தோலுமான மாட்டை ஒப்படைப்பதைப்போல் ரூ. 32 கோடி கடன் இருக்கிறது, தினம் ரூ. 1 இலட்சம் நட்டம் வருகிறது, பி.அண்டு.சி. மில் நிர்வாகத்தைத் தொழிலாளர்கள் நடத்துவார்களா என்று கேட்டால், ரூ. 32 கோடி கடனையும் ரத்து செய்யுங்கள், புதிய இயந்திரத்தைப் பொருத்திக் கொடுங்கள். அது மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கிற 200 பஞ்சாலைகளைத் தொழிலாளர் நடத்தத் தயார். இதைச் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆகவே, ஜார்ஜ் பெர்னாண்டஸ் அறிவித்த கொள்கை இன்றுள்ள நிலையில், தொழிலாளர்களே ஏற்று நடத்த வேண்டுமென்ற அந்தத் தொழில் கொள்கை இந்தத் தேசத்திற்கு ஒவ்வாதது, ஏற்கத்தகாதது. அது தொழிலாளி வர்க்கத்தை பழி போடச் செய்யும் முயற்சியாகும்; தொழிலாளி வர்க்கத்தின் தலையிலே அந்தப் பழியைப் போட்டு, தொழிலாளி வர்க்கம் இதைச் செய்யவில்லை, நீ போனஸ் கேட்காதே, பஞ்சப்படி கேட்காதே, கூலி உயர்வு கேட்காதே என்று தொழிலாளி வர்க்கத்தின்மீது பளுவைச் சுமத்தி, அபல்படுத்த ஒரு திட்டமே தவிர, இந்தத் திட்டம் சரியானதல்ல என்பதை இந்தத் தமிழகச் சட்டமன்றம் மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். நொடித்த மில்களையெல்லாம் அரசே எடுத்து நடத்த வேண்டும். அரசு எடுத்தால்கூட அந்த மில்களில் ஏற்பட்ட நட்டத்தைக் கொடுக்க மாட்டோம் என்ற நிலையை உருவாக்க வேண்டும். முதலாளிகள் ஏதோ செய்து நட்டம் என்பார்கள். முதலாளி

கருக்கு ஏன் நட்டத்தைக் கொடுக்கவேண்டும்? கொடுப்பதென்றால் மக்கள் தலையிலே போடுகிற வரியைத் தானே கொடுக்கவேண்டும், ஆகவே, செப்புக் காசு கூட, நொடித்த மில்களுக்குத் தரமாட்டோம் என்று சொல்லவேண்டும். கடன் என்றால், தனிப்பட்ட முறையிலே முதலாளிகள் கொடுக்க வேண்டும். அவர்களின் சொத்தை ஜப்தி செய்யட்டும். எடுத்துக் கொண்டு போகட்டும். எனவே, மில்களை அரசாங்கமே எடுத்த நடத்த வேண்டும் என்பதை மத்திய அரசுக்கு இங்கே வலியுறுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் பட்டணத்திலே நடப்பது என்ன? டி.வி.எஸ். சுந்தரம் கிளேட்டன், பிரேக்ஸ் இன்டியா, லூகாஸ் டி.வி.எஸ். இவைகளிலே என்ன நடக்கிறது. பிரேக்ஸ் இன்டியாவிலே எங்கள் தலைவர் கே.டி.கே. தங்கமணி எம்.ஏ., பார்-அட்-லா அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவரை தொழிலாளி ராமமூர்த்தி என்பவர் முன்மொழிகிறார். அந்த ராமமூர்த்தி டிஸ்மிஸ் செய்யப்படுகிறார். இது நாள் வரையிலும் வேலை கொடுக்கவில்லை. கே.டி.கே.தங்கமணியைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது செல்லாது என்று சொல்கிறார்கள். வி.பி. சிந்தன் சுந்தரம் கிளேட்டனிலே தலைவராகத் தேர்ந்தெடுத்தது செல்லாது என்று சொல்கிறார்கள். அதைச் சொல்ல இவர்கள் யார்? தொழிலாளர்கள் தேர்ந்தெடுத்தவர்களை ஏற்பது முறையே தவிர, அங்கீகரிக்க முதலாளிகள் யார் என்று அரசாங்கம் இந்த நிர்வாகத்தைக் கேட்கவேண்டும். அதற்கு இதனால் தகராறு வந்திருக்கிறது. சுந்தரம் கிளேட்டன், பிரேக்ஸ் இன்டியா மூடியிருக்கிறார்கள். மெயின்டனன்ஸ்க்காக மூடி இருக்கிறோம் என்று சொல்கிறார்கள், எத்தனை மாதங்களாக மெயின்டனன்ஸ்? இதைக் கண்டிக்கவேண்டாமா? இன்றைக்கு இந்த நிறுவனங்களில் நடப்பது தொழிலாளர் வர்க்கத்திற்கு விரோதமானது என்பதை நான் கூறிக்கொள்கிறேன். சுருட்டுத் தொழிலாளர்கள் +2லைசென்சைக்காட்டி வேலை இல்லை என்று சொல்கிறார்கள். சட்டப்படி அறிவிக்கப்பட்ட இந்த சலுகைகள் கொடுக்கப்படவில்லை. சுருட்டுத் தொழிலாளிகள் சந்தியிலே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் + 2 லைசென்சை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருச்சி, தஞ்சை, மன்னார்குடி, கோவை, கும்பகோணம், நாகப்பட்டிணம் ஆகிய இடங்களிலே இந்த நிலை இருக்கிறது. (குறுக்கீடு) பீடித் தொழிலையும் சேர்த்துக் கொள்ள வேண்டும், தனியார் மோட்டார் துறை தொழிலாளர்களுக்கு சட்டப்படி சலுகை கிடைக்க சீரான நடவடிக்கை எடுக்கவேண்டும். லேபர் அதிகாரிகள் கறாராக அமல் நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில மோட்டார் அதிகாரிகள் அதிபர்கள் வீட்டில் அல்வா சாப்பிட்டுவிட்டு அங்கு தொழிலாளர்களே இல்லை என்று சொல்கிற நிலைமை இருக்கிறது. இது முன்னரே நடந்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்டித்தான் சொல்கிறேன். மேலும், உப்பளத்துறை தொழிலாளர்கள், அச்சகத் துறை தொழிலாளர்கள் இவர்களுக்கு ஊதிய நிர்ணயம்



செய்து சீக்கிரம் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கமிட்டி போட்டிருக்கிறார்கள். நான் அறிவேன். அதை உடனடியாக அறிவிக்க இப்போது உத்திரவாதம் வேண்டும். பல தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சம் ஊதியம் அறிவிக்கப்படாமலே இருக்கிறது. அதிகாரிகள் அமல் படுத்தி கறாராக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பற்றி சில விவரங்களைச் சொல்ல நான் முற்படுகிறேன். சோழன் போக்குவரத்துக் கழகம் என்று ஒன்று இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 14-12-1975-ல், 713-ன்படி ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவு எப்பொழுது அமுலாகிறது? அந்த உத்தரவு, தி.மு.கழக அரசு நீக்கப்பட்ட பின்னால் 2-4-1976 அன்று அமுலுக்கு வந்தது. 1975-ல் போடப்பட்ட உத்தரவு, 1976-ல் ஏப்ரல் 2-ம் தேதி அமுலுக்கு வந்தது. அந்த உத்தரவின்படி கிட்டத்தட்ட 129 பேர்கள் வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். மாயவரத்திலே சிதம்பரநாதன் என்ற தொழிலாளி வேலை நீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக, தற்கொலை செய்து கொண்டான். வேலையில்லை, பிழைப்பில்லை, தற்கொலை செய்து கொண்டான். ரூ. 10,000 அவனுக்கு உண்டா, இல்லையா? கிடைக்கவில்லை. அவன் தற்கொலை செய்து கொண்டதற்குக் காரணம் அந்த வேலை நீக்க உத்தரவு தான்.

* * * *

ஏனென்றால், இந்தச் சட்டமன்றமே அவர்களுக்குச் சம்பளம் மற்ற சலுகைகள் எல்லாம் வழங்குகிறது. ஆகவே, அவர்களைப்பற்றி எடுத்துச் சொல்லுகின்ற உரிமை எனக்கிருக்கிறது. இன்றைக்கு சி.ஆர்.சி.-யில் 119 பேரை வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். இன்னும் 43 பேரை வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 432 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு 79 பேர் ஷோகாஸ் நோட்டீஸ் கொடுக்கப்படாமலே வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 9 (ஏ) ரூல் வயலேட் செய்யப்பட்டிருக்கிறது. வித்டிராயல் ஆஃப் பெனிஃபிட்ஸ் நோட்டீஸ் இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. பேமென்ட் ஆப் வேஜஸ் ஆக்ட் அலட்சியம் செய்யப்படுகிறது. குறைந்த அளவு கொடுக்கப்பட வேண்டிய சம்பளம் கூட மறுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு அநியாயங்களும் சோழன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனில் 1976-ல் நடந்திருக்கிறது.

தொழிலாளர் துறை ஆலோசனை கூறினாலும், அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. நிர்வாகம் திருந்துவதாகவும் தெரியவில்லை. குறிப்பாக, திருஞானசம்பந்தம் என்பவர் வேலை நீக்கம் செய்யப்பட்டவர், அவர் ஒரு தொழிலாளி. அவர் மீண்டும் வேலை கொடுக்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 11-37-ல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

[திரு. மு. அம்பிகாபதி] [1977 ஆகஸ்ட் 11

வேண்டுமென்று ஹைகோர்ட்டுக்குச் சென்றார். தொழிலாளி ஹைகோர்ட்டுக்குப் போக முடியுமா? இருந்தும் சென்றார். வேலை கொடுக்க வேண்டுமென்று 16—7—1976-ல் ஹைகோர்ட் உத்தரவு போட்டிருக்கிறது. ஆனால், அன்றிலிருந்து இன்று வரை, 11—8—1977 வரை, அவருக்கு வேலை கொடுக்கப்படாதது மட்டுமல்ல, ஹைகோர்ட் அந்த ஜூரிஸ்டிக்ஷனில் தலையிட முடியுமா என்று அந்த சி.ஆர்.சி. நிர்வாகம் கேள்வி கேட்கிறது ஹைகோர்ட்டை.

அதேபோல், தஞ்சையில் தமிழரசன் இன்னொரு தொழிலாளி, குடந்தையிலே, செக்கர் முருகேசன் என்பவர், வேலையிலிருந்து நீக்கப்பட்டு, டெப்புட்டி லேபர் கமிஷனர் அவர்கள் வேலையில் மீண்டும் அமர்த்த வேண்டுமென்று சொன்னபிறகும், ஹைகோர்ட் போவதற்கான ஆலோசனைதான் நடக்கிறது. (குறுக்கீடு) சுப்ரீம் கோர்ட்டுக்கும் போகலாம்.

அடுத்து, சி.ஆர்.சி. பற்றி ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிடுகிறேன். சி.ஆர்.சி. தொழிலாளர்களின் வழக்கில் ஒரு பகுதி இன்டஸ்ட்ரியல் டிரிபியூனலில் இருக்கிறது. இன்டஸ்ட்ரியல் டிரிபியூனலில் 36-வது செக்ஷன்படி, நிர்வாகத்தின் சார்பில் வக்கீல் வரக்கூடாது என்று நாங்கள் ஆட்சேபித்தோம். உடனடியாக, சி.ஆர்.சி. நிர்வாகம், மிகுந்த புத்திசாலித்தனமாக என்று கருதி எம்பிளாயர்ஸ் அசோசியேஷனில் ரூ. 250 பணம் கட்டி, சி.ஆர்.சி. நிர்வாகம் எம்பிளாயர் மாதிரி சேர்ந்து, அந்த எம்பிளாயர் சங்கம் மூலமாக, எம். ஆர். நாராயணசாமி என்பவரை இன்டஸ்ட்ரியல் டிரிபியூனலுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11—40)

இது தொழிலாள வர்க்கத்திற்கு எதிரான கொள்கை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தனியார் முதலாளிகள் நிறுவனங்களிலிருந்த இந்தக் கொள்கை சி.ஆர்.சியில் எப்படி வந்தது? யார் ஆலோசனை கூறியது? ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள். மருத்துவப் பரீட்சை என்ற பெயரில் 37 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எனக்கு என்ன வியாதி, ஏன் என்னை வேலை நீக்கம் செய்தீர்கள் என்று கேட்டால், எனக்குத் தெரியாது, இங்கே வேலையில்லை, போய்விட்டு வா என்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் உள்ளது நிர்வாகம். 346 அப்ரென்டிசுகளை சோழன் என்ஜினியரிங் கார்ப்பொரேஷனுக்கு எடுப்பது என்ற பெயரால், அதன் வழியாக சி.ஆர்.சி.-க்கு கொல்லைபுறமாக நுழைத்து, அவர்களை உள்ளே கொண்டுபோய், சி.ஆர்.சியிலிருந்து 342 தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். 1976-லிருந்து இந்த நிலைமை நடந்து வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகத்திலுள்ள தொழிலாளர்களுக்கு, என்.ஜி.ஓ.க்களுக்கு ஊதிய உயர்வு அளித்ததுபோல, அளிக்க அறிவிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட நிலையில் அரசாங்கத்தின் கீழ் இயந்திரங்களாக தொழிலாளர்கள் பணி



1977 ஆகஸ்ட் 11] [திரு. மு. அம்பிகாபதி]

யாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி பேருந்து நிறுவனம் சீரழிந்து கொண்டிருக்கும் நிலையைப் போக்க வேண்டும். தற்போது பேருந்து நிர்வாக இயக்குநராக இருக்கும்

* * * *

போக்குவரத்து தொழிலாளர்களைப் பொறுத்த வரையிலும் அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் ஒரே மாதிரியான ஊதிய நிர்ணயம், வேலை நிர்ணயம் உடனடியாகச் செய்யப்பட வேண்டும்.

பொது நிறுவனங்களாக இருக்கின்ற மளிகைக் கடைகள், ஜவுளிக்கடைகள் இவைகளில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்த நிறுவனங்களில் 1976-ம் ஆண்டு ஆரம்பத்தில் 2,19,621 பேரும், 1977-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 2,21,860 பேரும் வேலையில் உள்ளதாக கொடுக்கப்பட்டிருக்கும் கணக்கு தவறான கணக்காகும். இது ஒரு கடைக்கு ஒரு ஆள், $1\frac{1}{2}$ ஆள் தான் ஆகிறது. தவறான கணக்கு. இதைப் பரிசீலிக்க வேண்டும். ஒரு கடைக்கு 5 பேர் இருப்பார்கள். ஆகவே இவைகளில் 10 அல்லது 15 லட்சம் பேர் வேலையில் இருப்பார்கள். அவர்களுக்குப் பாக்டரி சட்டம், ஷாப் சட்டம் ஆகியவற்றை அமுல் படுத்த வேண்டும். 8 மணி நேரத்திற்கு மேல் வேலை வாங்கக் கூடாது.

அடுத்து, அரசு அச்சகத்தில் 28-6-1977-ல் 46 டெக்னிகல் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எப். டி. 56 (டி) விதியைக் காரணம் காட்டி வேலை நீக்கம் நடந்திருக்கிறது. அங்கே இயக்குனராக இருந்த திருவாளர் ஜெயபாண்டியன் நிர்வாகத்தில் நடைபெற்றுள்ள இந்த நிர்வாகச் சீர்கேடுகளை ஒரு நபர் கமிஷன் போட்டு விசாரிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே பல தவறுகள் நடந்திருக்கின்றன. ஆகவே இதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இதிலும் திருவாளர் பசுபதிக்கு பொறுப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நிலை இருக்கிறது.

அடுத்து, பரதன் பப்ளிகேஷன் என்ற அருமையான பெயரைக் கொண்ட அச்சகத்திலிருந்து கல்கி, கோகுலம், ஸ்வாராஜ்யா இதழ்கள் வெளிவருகின்றன. கல்கி அலங்கரித்த இடம். நமது முதல்வர் நடிக்கப் போவதாக அறிவிக்கப்பட்ட சிவகாமியின் செல்வன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த 'கள்வனின் காதலி', ராஜாஜியின் 'சக்கரவர்த்தித் திருமகன்'

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 11—42-ல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

ஆகியவை அச்சடிக்கப்பட்ட அச்சகம் இன்றைக்கு மூடப்பட்டிருடிருக்கிறது. தொழிலாளர்கள் வேலையில்லாமல் வெளியே நிற்கிறார்கள். அங்கே 25 எப். எப். ஏ-1, செக்ஷனின் கீழ் 60 நாள் நோட்டீஸ் கொடுத்து மூடிவிடுவேன் என்று 5-7-1977 அன்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு கிராசுவிடி, ஊதியம், காம்பென்சேஷன் ஆகியவை கிட்டத்தட்ட 15 லட்சம் ரூபாய் வரவேண்டியிருக்கிறது. எனவே இந்த விஷயத்தில் அமைச்சரவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

__மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் :__ மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது தயவு செய்து அதிகாரிகளுடைய பெயர்களைக் குறிப்பிட்டுப் பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பதில் சொல்ல வாய்ப்பு இல்லாத காரணத்தால், அவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுப் பேசுவது முறையாகாது. அப்படி ஏதாவது அவர்கள் மீது குற்றம் சொல்ல வேண்டுமென்றால், உரிய அமைச்சரைச் சந்தித்து சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

__திரு. மு. அம்பிகாபதி :__ அடுத்து இன்றைக்கு 'கல்கி'யில் உண்ணாவிரதம் நடக்கிறது. சென்னையில் உள்ள மூடப்பட்டிருக்கும் தாம்ப்சன் அச்சகத்தின் முதலாளி கே. எம். செரியன், தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுப்பதில்லை. 28 மாதங்களாக பிராவிடண்டு பண்டு கட்டவில்லை. 18 மாதங்களாக இ. எஸ். ஐ. கட்டுவதில்லை. வங்கியில் வாங்கிய கடனைச் சொந்தத்திற்கு உபயோகப்படுத்துகிறார். அச்சகத்திற்குப் பயன்படுத்துகிறதில்லை. தொழிலாளர்கள் போராடுகிறார்கள். உழைக்கும் பத்திரிக்கையாளர்களுக்கு ஊதியம் நிர்ணயம் செய்ய இடைக்கால நிவாரணம் மத்திய அரசு அளித்தது. கேரள அரசாங்கம் பத்திரிகையாளர்களுக்கு நல்ல வீட்டு வசதி, மாநிலம் முழுவதும் பஸ்ஸில் செல்ல இலவச பாஸ் வழங்கியிருக்கிறது. தமிழகத்தில் மக்கள் குரல் பத்திரிகை அதை வழங்கியிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இந்நாள் முதலமைச்சர் நிறுவனராக இருக்கும் அண்ணா பத்திரிகையும், முன்னாள் முதலமைச்சர் நிறுவனராக இருக்கும் முரசொலியும் மற்றும் தென்னகமும் அதை வழங்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படி வழங்காத பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரம் கொடுக்க மாட்டோம் என்று அரசு அறிவிக்கவேண்டும். இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரை ஊதியக் குழு பரிந்துரைகளை அமல்படுத்துவதில் அரசாங்கம் கறாராக இருக்க வேண்டும். இன்றைக்கு கேரளாவில் மற்ற இடங்களில் சரியாக அமல்படுத்தப்படுகிறது. தொழிலாளர் சட்டங்களை அமல் செய்யாவிட்டால் போராட்டங்கள் வெடிக்கும். தொழிலாளி வர்க்கம், 'வி ஆர் நாட் பூவர், வி. ஆர். ஆல் ஒர்க்கிங் கிளாஸ்,' என்று தோழர் டாங்கே கூறினார். அது ஒரு கிளாஸ். முட்டைக்குள் இருக்கும் வெள்ளைக்கரு, மஞ்சள்கரு, 21 நாள் உள்ளே



இருந்து பின்னால் குஞ்சாக ஓட்டை உடைத்துக்கொண்டு வெளியே வருகிறது. தொழிலாளி வர்க்கம் துடித்துக் கொண்டிருக்கிறது. தொழிற்சாலை வைத்திருக்கும் முதலாளி, நான் முட்டை ஓடாக இருந்தேனே என்கிறான். முட்டை ஓடு என்ற முதலாளியின் வேலை முடிந்து விடப்போகிறது. ஊதியம் கொடு, போனஸ் கொடு என்று குஞ்சுக்கும் முட்டை ஓட்டுக்கும் இப்போது மோதல் நடக்கிறது. வெற்றி பெறுவது குஞ்சு தான். வெற்றி பெறுவது தொழிலாளி வர்க்கம் தான். இந்த வர்க்கத்திற்காக இந்த அரசு துல்லியமான சட்டங்களை நிறைவேற்றி, துரிதமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அரசு அதிகாரிகள் அவற்றைத் தெளிவாகப் புரிந்து கொண்டு செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

__திரு. துரை முருகன் :__ தலைவர் அவர்களே, இந்த மா மன்றத்தில் தொழிலாளர் நல அமைச்சர் வைத்திருக்கிற மானியத்தின் மீது என் கருத்துக்களையும், நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நாட்டில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டதற்குப் பின்னால் நாட்டில் விரும்பத்தகாத பல்வேறு விளைவுகள் ஏற்பட்டதை நாம் அறிவோம். தொழிலாளர்கள் அவசரச் சட்டத்தால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய வருவாய் இழந்து, உரிமையையும் இழந்து தவித்துக்கொண்டிருக்கிற காட்சியை எல்லோரும் கட்சி சார்பற்று ஒட்டுமொத்தமாக ஆதரிப்போம் என்பதில் எனக்கு கடுகளவும் ஐயம் இல்லை. காரணம் இதற்கு முன்னால் லாபம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு தொழிற்சாலையில் 8.0 சதவீதம் போனஸ் கொடுக்க வேண்டும்மென்று சட்டம் இருக்கிறது. ஆனால் இன்றைக்கு அந்தச் சட்டம் எடுக்கப்பட்டு 'அலக்கபிள் சர்பிளஸ்' இருந்தால் தான் 4 சதவீதம் போனஸ் தொழிலாளர்களுக்கு தரலாம், இல்லாவிட்டால் தர வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதே போல் முதலாளிகள், தொழிலாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் உட்கார்ந்து பேசி, முடிவு காண்கின்ற 34 (3)—அதை அடியோடு நீக்கி விட்டார்கள். இதன் விளைவு இப்போது மானேஜ்மெண்டு உச்சக் கொம்பில் உட்கார்ந்து கொண்டு தொழிலாளர்களை கேவலமாகப் பார்க்கிற நிலைமை உருவாகியிருக்கிறது. எனவே, மீண்டும் அந்த 34 (3) வருகிற அளவுக்கு இந்த சர்க்கார் முடிவு எடுக்க வேண்டும். அதற்கு ஒரு வழி காணவேண்டும்.

அது மட்டுமல்ல, இன்னும் கூட தொழிலாளர்களுக்கு தொல்லை தரவேண்டுமென்று, பாங்க் ஊழியர்கள், இன்சூரன்ஸ் தொழிலாளர்கள் இந்த போனஸ் சட்டத்தின் கீழ் வரமாட்டார்கள்

[திரு. துரைமுருகன்] [1977 ஆகஸ்ட் 11

என்று தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள். அத்தகைய தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதே போன்று தான் செக்ஷன் 2 (13) பிரகாரம், ஒருவர் 1,500 ரூபாய் சம்பளம் வாங்குகிறார் என்றால் அடிப்படைச் சம்பளம் ரூபாய் 750ஐத் தான் எடுத்துக் கொள்வோம் என்று சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

[பிற்பகல் 11-50]

அவைகளை நீக்குவதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். கம்பெனிக்காரர்களிடம் பேசுகிற போது அவர்கள் பாலன்ஸ் ஷீட்டைத் தருகிறார்கள். அந்த பாலன்ஸ் ஷீட் யாரால் தயாரிக்கப்பட்டது? அந்தக் கம்பெனி பணம் கொடுத்து வைத்திருக்கிற ஆடிட்டர்கள் தயாரித்தது. அவர்கள் செய்கிற தில்லுமுல்லுகளை சரிசெய்து பாலன்ஸ் ஷீட்டைத் தயார் செய்து கொடுக்கிறார்கள். அந்த பாலன்ஸ் ஷீட்டைத்தான் அவர்கள் நம் முன் தருகிறார்கள். அதைப் பார்த்து இவ்வளவு செலவு ஏன் ஆயிற்று என்று கேட்பதற்கு தொழிலாளர்களுக்கு உரிமை இல்லை. உழைக்கிறவன் தொழிலாளி, கம்பெனியை முன்னேற்றுகிறவன் தொழிலாளி, முதலாளிக்கு லாபத்தைத் தேடித் தருபவன் தொழிலாளி. ஆனால் லாபம் வந்ததை எப்படி செலவு செய்திருக்கிறீர்கள், இது நியாயம்தானா என்று கேட்பதற்கு உள்ள உரிமை தொழிலாளர்களுக்கு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அதற்கு ஒரு பரிகாரத்தை இந்த அரசு கண்டாகவேண்டும்.

செக்ஷன் 32 பிரகாரம் பார்த்தால் சில தொழிலாளர்களுக்கு இந்த போனஸ் கிடைக்கிற வழி கூட இல்லாமல் இருக்கிறது. எனவே, அதற்கும் ஒரு பரிகாரம், ஒரு வழிவகை கண்டாக வேண்டும். Compulsory deposit system ஆக்டை எடுத்துக்கொண்டால், இன்றைய நிலை என்னவென்றால், தொழிலாளர்களின் உரிமையைப் பறிக்கிற ஒரு திட்டமாகும் இது. அவர்களை 'கம்டல்' செய்து அவர்களது பணத்தை சர்க்காரிடம் முடக்க வேண்டும் என்ற அடிப்படையில் தீட்டப்பட்ட ஒரு திட்டமாகும் இது. இந்தத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

லிப்டன்ஸ் தொழிலாளர்கள் ஹைகோர்ட்டில் ஒரு ரிட் போட்டார்கள். இன்றைய நிலை என்னவென்றால் செகன்ட் இன்ஸ்டால்மென்டை திருப்பித் தர உத்தரவிடப்பட்டிருக்கிறது. மீதிப் பணத்தை வட்டியோடு தொழிலாளர்களுக்குத் திருப்பித் தர வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1977 ஆகஸ்ட் 11] [திரு. துரைமுருகன்]

அடுத்து, தொழிற்சங்கங்களின் கீழ் வேலை செய்கிற தொழிலாளர்களில் இந்த நாட்டில் மிகவும் பரிதாபத்திற்குரிய தொழிலாளர்களாக இருப்பது பீடித் தொழிலாளர்கள்தான். தமிழகத்தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 2 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். இந்த இரண்டு இலட்சம் பீடித் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு ஒரு கிலோ புகையிலையை பீடியாகச் சுற்றினால் அதற்கு ட்யூட்டியாக அரசுக்குப் போவது ரூபாய் 3. அதிலே நமது மாநில அரசு பெறுவது 75 காசு. ஒரு கிலோ புகையிலையில் 4,000 பீடிகள் சுற்றலாம் என்று கணக்குச் சொல்லுகிறார்கள். ஆக ஒரு பண்டில் பீடி சுற்றினால் —ஒரு பண்டில் என்பது ஆயிரம் பீடிகள் கொண்டது— நமது மாநில அரசு 40 காசுகள் பெற முடிகிறது. இப்படி ஒரு பீடி சுற்றுகிற குடும்ப ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட மூவாயிரம் பீடிகள் சுற்றலாம். ஒரு பீடி சுற்றும் குடும்பத்தின் மூலம் அரசுக்கு ஒரு நாளைக்குக் கிடைக்கிற வருமானம் ரூ. 1-80 காசு. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 540 கிடைக்கிறது. ஒட்டு மொத்தமாக பீடி சுற்றும் குடும்பங்கள் மூலம் இந்த அரசுக்கு வருகிற ஒட்டுமொத்த வருமானம் ரூ. 11 கோடி 89 லட்சம் ரூபாய்.

ஏழை பீடித் தொழிலாளர்களால் இந்த அரசுக்கு இவ்வளவு வருமானம் வருகிறது. ஆனால் பீடி சுற்றும் தொழிலாளர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது. தலைவர் அவர்களுக்கும் இது தெரியும். காரணம் அவர்கள் எங்கள் மாவட்டத்துக்காரர். பீடியை எப்படிச் சுற்றுகிறான் என்றால் முறத்தில் மடியில் பீடித் தூளைப் போட்டுக் கொண்டு முன்னாலும் பின்னாலும் தஞ்சாவூர் பொம்மைபோல் ஆடி ஆடிக்கொண்டு சுற்றுகிறான்: அந்த புகையிலை நெடி மூக்கில் சென்று 99 சதவீதம் பீடித் தொழிலாளர்கள் தமிழகத்தில் டி.பி.யால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கை கால்கள் சூம்பிப்போய், உடல் கறுத்து தான் சம்பாதிக்கும் பணத்தில் பாதியை ஆஸ்பத்திரிக்கும் மருந்துகளுக்கும் செலவு செய்யும் ஒரு துர்பாக்கியகரமான நிலை இருக்கிறது. ஆனால் மத்திய அரசு 1967-ல் எல்லாத் தொழிலாளர்களுக்கும் தருகிற அத்தனை சலுகைகளும் பீடித் தொழிலாளர்களுக்கும் தரப்பட வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அதை எதிர்த்து முதலாளிகள் சுப்ரீம் கோர்ட்டில் ஒரு வழக்கு போட்டார்கள். 1968-ல் வழக்குபோடப்பட்டு, இன்றைக்கு அந்தச் சலுகைகள் தரப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிட்ட பிறகும் கூட, பீடித் தொழிலாளர்களுக்கு அந்தச் சலுகைகள் கிடைக்கவில்லை. இந்த பீடித் தொழிலாளர்களைப் புறக்கணிக்கும் வகையில்தான் பீடி முதலாளிகள் இருக்கிறார்கள்.

சொல்லப்போனால் பீடி முதலாளிகள் தாங்கள் வளர்க்கும் யானைக்கு ஒரு கிலோ எண்ணெய் போட்டுத் தேய்க்கிறார்கள். யானைக்கு ஒரு கொசுவலை கட்டித் தருகிறார்கள். யானைக்கு என்று

கவனிக்க பத்து ஆட்களை வைத்திருக்கிறார்கள். இவ்வளவு செலவு செய்கிறவர்கள் விளம்பரத்திற்காக பீடித் தொழிலாளர்களுக்கு ஆயிரம் பீடிக்கு ரூ 4.75 என்றிருப்பதை அதிகமாக்கி ரூ. 8 தர மறுக்கிறார்கள். பீடித் தொழிலாளர்கள் ஒருவிதச் சலுகையும் இன்றி கஷ்டப்படுகிறார்கள். பீடித் தொழிலாளர்களுக்கு பஞ்சப் படி கிடையாது. க்ராச்சுவிட்டி கிடையாது. ப்ராவிடன்ட் பண்ட் கிடையாது, ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி வசதி கிடையாது.

ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி என்று சொல்லும்போது நான் ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த ஆஸ்பத்திரியில் இருப்பதைவிட துர்பாக்கியகரமான நிலை வேறு எதுவும் கிடையாது. ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிக்குச் சென்றால்தான் தொழிலாளர்களுக்கு லீவு கிடைக்கிறது. வேறு ஒரு இடத்திற்குப் போனால் லீவு கொடுப்பதில்லை. அந்த ஆஸ்பத்திரியின் இன்றைய நிர்வாகத்தை எடுத்துக் கொண்டு பார்த்தால், டைரக்டர் ஆபிஸில் இருந்து ஆயிரக்கணக்கான டிரான்ஸ்பர்கள் நடந்தன. எமர்ஜன்ஸி பிரகடனப்படுத்தப்பட்ட பிறகு, மூன்று மாத காலத்தில் எவ்வளவு டாக்டர்களை டிரான்ஸ்பர் செய்திருக்கிறார்கள் என்ற கணக்கை வாங்கிப் பாருங்கள். ஒரு டிரான்ஸ்பருக்கு 3,000, அதை நிறுத்துவதற்கு 3,000 என்று கொடுக்க வேண்டியிருக்கிறது என்று எங்களிடம் வந்து முறையிடுகிறார்கள். எதிர்க்கட்சியில் இருக்கின்ற எங்களிடம் நூற்றுக்கணக்கான டாக்டர்கள் வந்து இவ்விதம் முறையிடுகிறார்கள். மாற்றுவதற்கும் 3,000 அதை நிறுத்துவதற்கும் 3,000 என்று கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த நிலையில் டைரக்டர் ஆபீஸ் இருக்கிறது, இவ்வளவு கேவலமான நிலையில் ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளின் நிலைமை இருக்கிறது. இந்த நிலையைப் போக்க தனியாக இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தோல் பதனிடும் தொழிற்சாலையை எடுத்துக் கொண்டால் இதிலுள்ள தொழிலாளர்களின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. பீடிசுற்றும் தொழிலாளர்களைப்போல தோல் பதனிடும் தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்களுக்கும் மிகவும் கேவலமான நிலையாக இருக்கிறது. உள்ளே போய்ப் பார்த்தால் அவர்கள் ஜவ்வைப் போட்டு இழுத்து தொழில் செய்வதைப் பார்த்தால் இரண்டு நாட்களுக்கு யாரும் சாப்பிட முடியாது. இந்த அளவுக்குக்கஷ்டத்தோடு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு எந்த விதமான கிராஜுவட்டியோ அல்லது வருங்கால வைப்பு நிதியோ எதுவும் கிடையாது. அவர்களுடைய குடும்பத்திற்கு என்று எந்த விதமான பாதுகாப்பு நிதியும் கிடையாது. இருக்க வீட்டு வசதியும் கிடையாது.

குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில் இந்தத் தொழில் வாணியம்பாடி, ஆம்பூர், வேலூர், பேரணாம்பேட், ராணிப்பேட்டை இந்த இடங்களில் எல்லாம் இருக்கிறது. பல



ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அத்துடன் தீப்பெட்டித் தொழிற்சாலைகளை எடுத்துக் கொண்டால் ஏறத்தாழ 150 தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன என்பதை நாம் ஆராய வேண்டும், (மணியடிக்கப்பட்டது). முக்கியமாக தொழிற்சாலைகள் அதிகமாக ஏற்படுத்த வேண்டும். அதே நேரத்தில் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்ற என் தொகுதியில் ராணிப்பேட்டையில் குறைகள் இல்லாத ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, விவாதத்திற்குரிய மானியங்களை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மூலதனத்தை அதாவது முதலை ஆளுகின்றவர்கள் முதலாளிகள் என்று சொல்லுகிறோம், பொருளை ஆளுகின்றவர்கள் பொருளாளர் ஆவார். ஆனால் தொழிலை ஆளுகின்ற நிலையில்லாதவர்களுக்கு தொழிலாளிகள் என்று பெயர். இப்படி நம்முடைய நாட்டில் ஏற்பட்டிருப்பது நம்முடைய துர்ப்பாக்கியம் தான். பெயரளவில் தொழிலாளி என்று வைத்துக்கொண்டு தொழிலை ஆள இயலாதவர்களாக இருக்கக்கூடிய நிலை, வருந்தக் கூடிய ஒரு நிலையாகத்தான் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, உண்மையான தொழிலாளர்களாக நாம் அவர்களை மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்வதோடு, தொழிலாளியின் கையில் தொழில் இருந்தால்தான் தொழிலாளி தொழிலை ஆள முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில்கள் நல்லமுறையில் நடைபெற வேண்டும் என்றால், மற்ற சாதனங்களும் ஊக்கம் அளிக்கும் வகையில் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டும். அப்போது தான் நம் நாட்டில் தொழிலாளர்களின் நல்வாழ்வை ஏற்படுத்த முடியும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உற்பத்தி தேவைப்படுகின்ற இடத்தில், மூலதனத்தை உருவாக்கி, நல்லமுறையில் தொழில்களை நடத்தி அதற்குத்தகுந்தவாறு குறியீடுகளை எய்த வேண்டும் என்ற வகையில் நமது தொழிற்கொள்கை அமையுமானால் நிச்சயமாக நமது பிரச்னைகளை எல்லாம் தீர்க்க முடியும். ஆனால் நம்முடைய நோக்கங்கள் எல்லாம் பாரதூர வித்தியாசங்களுக்கு இடையில் ஆசாபாசங்களுக்கு ஆட்பட்டு நமது தொழிலாளர் கொள்கை அமையுமானால் அது இன்னும் அதிகமான பிரச்னைகளைத்தான் உருவாக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

குறிப்பாக எங்களுடைய மாவட்டத்தில் இரண்டு முக்கிய தொழில்கள் நடைபெறுகின்றன. பீடித் தொழில், அடுத்தது தோல் பதனிடும் தொழில். இவைகளைப்பற்றி மாண்புமிகு

உறுப்பினர்கள் இதற்கு முன்னால் சொன்ன யோசனைகளையொட்டி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

பீடித் தொழிலை எடுத்துக் கொண்டால் பிராஞ்சு சிஸ்டம் என்றிருக்கிறது. இந்த சிஸ்டத்தில், மற்றத் தொழில்களில் இருப்பதைப்போல் எம்ப்ளாயீஸ், எம்ப்ளாயர் என்று கருதப்படுவதில்லை. சட்ட பூர்வமாக இத்தொழிலைக் கருதாததன் காரணமாக இதன்கீழ் வேலை செய்கின்றவர்களுக்கு மற்றத் தொழிலாளர்களுக்கு கிடைப்பது போல் பெனிஃபிட்ஸ், பென்சன், கிராஜுவிட்டி, போன்றவைகள் கிடைப்பதில்லை. இது சம்பந்தமாக மத்திய அரசாங்கம் ஒரு கமிட்டி அமைத்திருப்பதாக மூன்று ஆண்டுகளுக்கு முன்பே சொல்லப்பட்டு வந்தது. கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். எவ்வளவு நாட்கள்தான் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

பீடித் தொழிலாளர்களுடைய நிலைமையை எடுத்துக் கொண்டால், நண்பர் துரைமுருகன் அவர்கள் சொல்லியதுபோல், அவர்கள் பீடிகளைச் சுற்றும் போது பத்மாசனம் செய்வது போல் தான் இருந்து கொண்டு பீடிகளைச் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். நாம் கொஞ்ச நேரம் காலை மடக்கி வைத்துக் கொண்டு உட்கார்ந்து இருந்தாலே காலை நொண்டிக் கொண்டுதான் எழுந்திருக்க வேண்டும். அப்படியிருக்கும்போது ஒரேயடியாக 12 மணி நேரம் அப்படியே பத்மாசனம் போட்டுக் கொண்டு இருந்து கொண்டு, கையையும் ஆட்டிக் கொண்டு தலையையும் ஆட்டிக் கொண்டு, பீடியைச் சுற்றுவதோடு மட்டுமல்ல, தன் உடலையும் சுற்றிக் கொண்டு வேலை செய்கின்ற இந்தத் தொழிலாளிக்கு தகுந்த ஊதியம் கிடைக்கின்றதா என்று பார்த்தால் மிகவும் கேவலமான ஊதியம்தான் கிடைக்கிறது என்பதை இங்கே எல்லோரும் சுட்டிக் காட்டினார்கள்.

(நண்பகல் 12·00)

ஆகவே, இந்த பீடித் தொழிலாளர்கள் பிரச்சினையில், இந்த அரசு மிகவும் கவனமாக முயற்சி செய்து, அவர்களுக்கு எல்லாவித நன்மைகளும் கிடைக்கச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இ. எஸ். ஐ. மருத்துவ வசதிகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். இப்போது வாணியம்பாடி ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனை என்று சொல்லும்போது, தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு அந்த வசதிகள் தரப்படுகிறதே தவிர, பீடித் தொழிலாளர்களுக்கு அந்த வசதிகள் இல்லை. அவர்களுக்கும் உதவ வேண்டுமென்று சொன்னால், அதற்கு மத்திய அரசாங்கத்தின் ஒப்புதல் தேவையாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் எடுத்துச்





சொல்வார்கள். இப்படி மத்திய அரசாங்கம் என்று வருகின்ற வகையிலே, என்ன முறையிலே அதற்கு வழிவகை காண வேண்டுமென்பதைக் கண்டுபிடித்து ஆவன செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கே இந்த மன்றத்தில் பேசுகின்றபோது, உறுப்பினர் தமிழரசன் அவர்கள் இந்தத் தோல் பதனிடும் தொழிலிலே 20,000 தொழிலாளர்களுக்கு மேல் வேலை இல்லாமல் இருக்கிறார்கள், என்ன காரணமோ, தெரியாது என்று சொன்னார்கள். காரணம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். இதைப்பற்றி இந்த அவையிலே கூட இரண்டு முறை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். தோல் பதனிடும் தொழிற்சாலைகளை, பினிஷ்ட் யூனிட்டாக மாற்றி அமைக்க வேண்டுமென்று திடீரென்று மத்திய அரசாங்கம் அறிவிப்புக் கொடுத்தது. அப்படி மாற்றியமைக்க வேண்டுமென்று திடீரென்று அறிவிப்பு வந்த காரணத்தால், அதை அமுல்படுத்த முடியாத காரணத்தால், பல நூற்றுக் கணக்கான சிறிய தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் இந்த தொழிற்சாலைகளிலே வேலை செய்து கொண்டிருக்கின்ற நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்த பினிஷ்ட் யூனிட்டுகள் மெகனைஸ்ட் வசதி செய்யப்பட்டது. இவை எந்திரங்கள் மயமாக்கப்பட்ட காரணத்தால், இதை லேபர் ஓரியண்டெட்டாகச் செய்ய முடியவில்லை. இதனால் பல தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதை மாற்றி சரிப்படுத்துவதற்கு எந்தெந்த முறையிலே மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச்சொல்லவேண்டுமோ, அந்த முறையிலேசொல்லிஇதற்கான ஏற்பாடுகள் செய்தால் நல்லதாகவும், சிறப்புடையதாகவும் இருக்கும். அப்போதுதான் இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு விடிவு காலம் ஏற்படும் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம், நான் என் தொகுதிக்குச் செல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். பட்டினியும், பசியுமாக அவர்கள் இருக்கின்ற காரணத்தால், நான் என் தொகுதிக்குப் போகும்போது அவர்களை நான் சமாதானப்படுத்துவது மிகவும் சிரமமாக இருக்கிறது. எனவே, இதற்கு அரசாங்கம் உடனடியாக தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த அவுசிங் போர்டைப் பற்றிச் சொல்லும்போது, இந்த வீட்டு வசதி வாரியத்தால் கட்டிக் கொடுக்கப்படும் வீடுகள் தரமாக இல்லை என்று பல்வேறு சாராரால் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் வந்திருக்கின்றன. அப்படி கட்டிக் கொடுக்கப்படுகின்ற ஒவ்வொரு கட்டிடத்திற்கும், அதற்கு அலாட் செய்யப்படுகின்ற தொகையை சரியாக ஒதுக்குவதில்லை என்றும், சிமெண்டிற்குப் பதிலாக வேறு சில பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் தரமில்லாத பொருள்கள் பயன்படுத்தப்பட்டு

[திரு. எம். ஏ. லத்தீப்] [1977 ஆகஸ்ட் 11

கட்டித் தருவதால், அப்படி கட்டப்படும் வீடுகள் 2, 3 ஆண்டுகள் கூடபயனுள்ளதாக அமையவில்லை என்கின்ற அடிப்படையில் பல குற்றச்சாட்டுகள் சொல்லப்படுகின்றன. எனவே, இதையும் இந்த அரசு எந்தெந்த முறையில் சீர்படுத்த வேண்டுமோ, அந்த வகையில் செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், இந்த வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுவதிலும், எல்லாத் தரப்பினருக்கும் நியாயமான முறையிலே ஒதுக்கீடு செய்து தரவேண்டும். ஆனல் சரியாக செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. அதே போல் இந்த வீடுகளுக்காக நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்போது ஒரு சமூக அநீதி இழைக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. உதாரணமாக, ஒரு சிறுபான்மையோருடைய நிலந்தான் இதற்காக ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. அந்த நிலத்திற்குப் பக்கத்திலேயே சர்க்கார். நிலம், புறம்போக்கு நிலம் அல்லது மற்றவர்களது நிலங்கள் இருந்தாலும், இந்த சிறுபான்மையோருடைய நிலங்கள்தான் அதிகமாக ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. அதிகாரிகளிடத்திலே அவர்கள் தங்களுக்குத் தேவையான இடம் வேண்டுமென்று கேட்டால், கொடுக்க முடியாது என்று சொல்லி, அந்தச் சிறுபான்மை யோருக்கு அதிகமான அநீதி இழைக்கப்படுகிறது:

உதாரணமாக, ஈரோட்டில் ஒரு முக்கியமான குடும்பத்தைச் சேர்ந்தவரிடமிருந்து 200 ஏக்கரா நிலத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனல், அவர் ஒரு உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். தன் குடும்பத்திலுள்ள பேரன், பவுத்திரிகளுக்குக் கொஞ்சம் நிலம் வேண்டும், அதற்காக 2 ஏக்கர் நிலம் தனக்கு வேண்டுமென்று கேட்டால், கொடுக்க முடியாது என்று சொன்னல் என்ன நீதி இருக்கிறது? மொத்த நிலமோ அவருக்குச் சொந்தமானது, அவர் கேட்பதோ அதிலே 2 ஏக்கர். இப்படிக் கொடுக்க முடியாது என்று சொன்னல் அது என்ன நியாயம்? இப்படி ஒரு இடத்தில் நீதி செய்வதாகச் சொல்லிவிட்டு, மற்றொரு இடத்தில் அநீதி செய்தால், அது சமூக அநீதி ஆகாதா? தவிர இப்படி நிலங்களை ஆர்ஜிதம் செய்வதிலேகூட, சிறுபான்மையோருடைய நிலங்களைத்தான் 70 சத விகிதம் இந்த அரசாங்கம் செய்கிறது. குறிப்பாக, ஒரு உதாரணத்திற்காக ஈரோட்டைச் சொன்னேன். இத்தகைய உதாரணத்தை மனதிலே வைத்து, அரசாங்கம் சமூக நீதி செய்வது மிகவும் முக்கியமானது; நியாயமானது There should be equity and justice. அந்த முறையிலே எனது இந்த வேண்டுகோளை விடுத்து, நேரமாகிவிட்ட காரணத்தால், சபாநாயகர் அவர்களுக்கு நன்றிதெரிவித்து அமர்ந்து கொள்கிறேன்



1977 ஆகஸ்ட் 11]

திரு: கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அவை யின்முன் வைக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல மானியத்தின்மீது இந்திய தேசிய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் வரவேற்று சுருக்கமாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, தொழிலாளர் நலன், முதலாளிகள் போக்கு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் விளக்கிக் கூறிவிட்டார்கள். ஆகவே, அந்த விளக்கங்களுக்குள் மறுபடியும் நுழையாமல் விட்டுப்போன இரண்டொரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தாற்காலிகமாக இருந்தாலும், பியூன், அட்டெண்டர் போன்று அரசு ஊழியர்களாக இருந்தால், அவர்கள் எதிர்பாராத நிலையில் மரணம் அடைந்தால் அரசு பத்தாயிரம் ரூபாய் அவர்கள் குடும்பத்திற்குக் கொடுக்கிறார்கள். அதேபோன்று இந்த மாதிரி தொழிலாளர்களுக்கும் கொடுக்கவேண்டும். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தொழிற் துறையில் அனுபவம் கொண்டவர்கள். அவர்களை இந்தத் துறைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் போட்டிருப்பதற்காகப் பாராட்டுகிறேன். அவர்கள் கொஞ்சம் வேகமாக இருக்கிறார்கள். அனுபவ ரீதியாக அவர்கள் உணர்ந்து பணியாற்றும் போது அதற்குப் புறம்பாக ஏதாவது சொன்னல் அவர்கள் ஆத்திரப்படுகிறார்கள் என்று கருதுகிறேன். மானேஜ்மென்ட் ஒரு பங்கு, அரசு ஒரு பங்கு, தொழிலாளி ஒரு பங்கு என்று கொடுத்து எப்படி அரசு ஊழியர்களுக்கு ஃபாமிலி பென்ஷன் ஸ்கீம் இருக்கிறதோ அதேபோன்று இந்தத் தொழிலாளர்களுக்கும் அவர்கள் குடும்பம் பாதிக்கப்படாத அளவுக்கு பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதற்குத் திட்டத்தை உருவாக்க வேண்டும்.

இ. எஸ். ஐ. ஆஸ்பத்திரி பற்றிச் சொன்னார்கள்: அங்கும் குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றை நீக்க அவசியம் அரசு முற்பட வேண்டும்.

சென்ற காலத்திலே ஐந்து வருடம் பத்து வருடம் என்று வேலை பார்க்கக் கூடியவர்களைக் கூட பதிலிகளாக வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய பிராவிடென்ட் பண்ட்-ஷேமநல நிதி கிடைப்பதில்லை. இருக்கக்கூடிய சட்டத்தைப் பயன்படுத்தி அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய இந்த நன்மைகள் கிடைக்க முடியாமல் மானேஜ்மென்டார் செய்கிறார்கள். ஆகவே, பதிலியாக இருந்தாலும் அரசு கொடுக்கக்கூடிய நன்மைகளைப் பெறுவதற்கான வழிகளைச் செய்ய முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை கோட்ஸ் மில் தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய மில். ஹார்வி ஸ்தாபனம் அதை நடத்திய அந்தக் காலத்திலிருந்தே பல தொழிற்சங்கத் தலைவர்கள் இருக்கிறார்கள். தொழிலாளர்களுடைய வாரிசுக்கு வேலை கொடுக்கக்கூடிய திட்டத்தில்

[திரு. கே. கந்தசாமி] [1977 ஆகஸ்ட் 11

வேலையில் சேர்க்கப்படக் கூடிய நேரத்தில் மில் ஸ்தாபன பிரதிநிதிகள் தொழிலாளர்களை ஏமாற்றி பணம் வாங்கிக் கொண்டு வேண்டாதவர்களைச் சேர்த்திருக்கிறார்கள். இதை நான் நிரூபிக்க முடியும். அருள்கூர்ந்து இதை விசாரிக்கவேண்டும். ஐயாயிரம் ரூபாய் பத்தாயிரம் ரூபாய் வாங்குகிறார்கள். நடைமுறையில் 100-க்கு 75 சத விகிதம் தவறு நடக்கிறது. இப்படி எத்தனையோ மில்களில் நடக்கிறது. உதாரணத்திற்கு இதைச் சொன்னேன். தேவர் திருமகன் அந்நியர் ஆண்ட காலத்திலேயே, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டங்கள் இல்லாத காலத்திலேயே, மதுரை பசுமலையில் மகாலட்சுமி மில்லில் அடக்குமுறை தாண்டவமாடியபோது தொழிலாளர்களுக்கு ஆதரவாக அன்றே போர்க்கொடி உயர்த்தினார்கள். அதிலே மறைந்த அமரர் ஜீவா அவர்களும், தோழர் இராமமூர்த்தி அவர்களும் பங்கு கொண்டார்கள் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் இப்படிப்பட்ட தவறுகள், அநீதிகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. மகாலட்சுமி மில்சில் கூட்டுறவு ஸ்தாபனம் வைத்திருக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு அந்த மானேஜ்மென்ட்டார் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். அந்த மில்லிலும் ஐந்து வருஷம், பத்து வருஷம் பதலியாக இருக்கிற தொழிலாளர்களை நினைத்த நேரத்தில் நிறுத்தி பழி வாங்கி வீட்டுக்கு அனுப்பிவிடுகிறார்கள்.

சென்ற காலத்தில் ஐந்து ஆண்டுக் காலத்தில் ஜாயின்ட் செலக்ட் கமிட்டிகள் இவர்கள் நிலைபற்றி விசாரித்தபோது, இவர்களுக்கு வீடுகள் சுகாதாரத்தோடு கட்டித்தர வேண்டும். வருஷத்திற்கு இரண்டு முறை குடும்பத்தோடு சுற்றுலா போய் வர வழி செய்ய வேண்டுமென்று சிபாரிசு செய்தார்கள். மானேஜ்மென்ட் அவற்றைச் செய்ய அரசு ஒத்தாசை செய்ய வேண்டுமென்று கூறப்பட்டது.

[பிற்பகல் 12-10]

அது கடந்த காலத்திலே என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. இந்தக் காரியத்திற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, இன்னும் லாக் அவுட் இருந்து கொண்டிருக்கிறது. கடந்த காலத்திலே ஜனாதிபதி ஆட்சியிலே சில குவில்ஸ் இருந்தாலும்கூட அவசர காலப் பிரகடனத்தாலே சில நன்மைகளும் ஏற்பட்டன. அப்போது எல்லாம் உற்பத்தி பெருகியது; எங்கு பார்த்தாலும் ஸ்ட்ரைக் கிடையாது, லே ஆப் கிடையாது, லாக் அவுட் கிடையாது. ஆனால், இன்றைக்கு முதலாளிகள் தங்களுடைய இஷ்டப்படி லாக் அவுட் செய்கிறார்கள், அவர்களையெல்லாம் ஏன் இந்த அரசு பிராஸிக்யூட் செய்யக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய ஒரு உறுப்பினர் கூட சொன்னார், 6 மாதம் 1 வருடம் என்று போடவேண்டுமென்று. அப்படி வேண்டுமென்றே செய்கிற முதலாளிகளை ஏன்



1977 ஆகஸ்ட் 11] [திரு. கே. கந்தசாமி]

ஜெயிலிலே பிடித்துப் போடக்கூடாது. அவர்கள் என்னைப் போன்ற லாயர்களை வைத்து—நானா ஜூனியர் லாயர்தான்— என்னைவிட பிரெய்னி லாயர்களை வைத்து லீகல் ஃப்ளாஸ் இருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு இப்படிப்பட்ட வேலைகளைச் செய்கிறார்கள்....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் வயதுக்கு நீங்கள் சீனியர் லாயர் என்று தான் எல்லோரும் கருதிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. கந்தசாமி : நான் சீனியர் தான். இருந்தாலும் பிராக்டிஸிலே பிரேக் ஏற்பட்டுவிட்டது. அரசியலுக்கு வந்த பிறகு பிராக்டீஸ் விட்டுப்போய் விட்டது. இப்படிப்பட்ட முதலாளிகளையெல்லாம் தயவு செய்து புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்த இந்த அரசு, இதிலே புரட்சியை ஏற்படுத்தக் கூடிய முறையிலே தயவுசெய்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு பேரை யாவது பிடித்துப் போடவேண்டும். சாராயம் குடித்தான் என்று ஏழை* 2 வருஷம் போடுகிறார்கள். அப்படி இருக்கிறபோது லேபர் லாஸில் இருக்கிற ப்ளாஸ்-ஐ வைத்து இப்படிச் செய்கிற முதலாளிகளைப் பிடித்துப் போடுங்கள்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் :* என்ற வார்த்தையைப் பயன்படுத்தாதீர்கள்.

திரு. கே. கந்தசாமி : அந்த வார்த்தையை தயவுசெய்து நீக்கிவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள், முடியுங்கள்.

திரு. கே. கந்தசாமி : முடிக்கிறேன்.

The present labour laws have got too many flaws. They should be thrown out. They must be made upto-date

இப்படி ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டியை அமைத்து அந்தச் சட்டங்களிலே இருக்கிற லக்குனாக்களைப் போக்கி, ஏழைத் தொழிலாளர்களுக்கு உதவி செய்யக் கூடிய முறையிலே நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க ஒரு சொல் அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் பேரவைத் தலைவரைப் பார்த்துப் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன். அமைச்சரைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தீர்கள், அதற்காகச் சொல்கிறேன்.

திரு. எஸ். நடராசன் : தலைவர் அவர்களே, அவையின் முன்னால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையின்மீது நகராட்சிகள் குறித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று எண்ணுகிறேன். நகராட்சிகளைப் பற்றி இன்றைய தினம் இந்த அவையிலே விவாதிப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது என்ற காரணத்தினாலே நகராட்சிகளுக்கு இன்றைய தினம் இருக்கின்ற நெருக்கடிகளைச் சுட்டிக்காட்டுவது நகரத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

நகராட்சிகளுக்குப் போதிய வருமானம் இல்லை என்ற காரணத்தாலே நகராட்சிகள் ஏதாவது திட்டங்கள் தீட்டினாலும், அல்லது வருவாயைப் பெருக்க வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கைகள் அனுப்பினாலும் அவைகளைப் பரிசீலிப்பதில் காலதாமதம் ஏற்படுகின்றது. இந்தக் காலதாமதத்தை நீக்க வேண்டும்.

நகராட்சிகளின் வருவாயைப் பெருக்குவதற்கு நகராட்சியிலே கட்டப்படுகின்ற திரையரங்குகள், விடுதிகள், கடைகள் போன்றவற்றைக் கட்டுவதற்கு நகராட்சிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். தஞ்சாவூர் நகரத்திலே திருவள்ளுவர் திரையரங்கும் என்ற ஒரு திரையரங்கம் திராவிட முன்னேற்றக் கழக நகராட்சி மன்றம் இருந்த காலத்திலே கட்டப்பட்டு அது மாதம் ஒன்றுக்கு எந்தவிதமான செலவும் இல்லாமல் 15 ஆயிரம் ரூபாய் வாடகையிலே நடந்துகொண்டு இருக்கிறது. இது மிகப் பெரிய வருமானம் ஆகும். அது மாத்திரமல்ல. இந்தச் சினிமாக் கொட்டகை மூலமாக வரிகளும் நகராட்சிக்குக் கிடைக்கின்றது. இந்த நகராட்சிகளுடைய வருவாயைப் பெருக்குவதற்காக/நகராட்சிகள் ஏதாவது பரிகாரம் காணக்கூடிய முறையில் திட்டங்களைப் போட்டு அனுப்பினால் அரசு அவற்றை அனுமதிக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சிகளிலே ஏதாவது கட்டடங்கள் கட்டவேண்டுமென்று ஏற்பாடு செய்கிறபோது டவுன் பிளானிங் என்ற அடிப்படையிலே வருகிற காரணத்தால் காலதாமதம் ஏற்படுவதால் வீடுகளைக் கட்டுவதற்குப் பெரும் தொல்லைகள் ஏற்படுகின்றன.

அவர்கள் தாங்கள்தான் பிளானிங் ஆபீசுக்கு அனுப்பி விட்டோமே என்று நினைத்து வீட்டைக் கட்டலாம் என்று வேலையை ஆரம்பிக்கவும் முடியாது. அப்படி ஆரம்பித்தால் அதைத் தடுக்



கிறார்கள். வாங்கிய சாமான்கள் வீணாகக் கிடந்தால் வட்டி அதிகமாக ஆகிக்கொண்டு இருக்கிறது என்று கருதி சும்மா இருக்க முடியாமல் கட்ட வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, டவுன் பிளானிங் செக்ஷனுக்கு மனு வந்தவுடனேயே உடனடியாக அதைப் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை நகரத்தைப் பொறுத்த வரையில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகள் ஏராளமாக இருக்கின்றன. அந்தப் புதிய பகுதிகளில் நகராட்சிக்குரிய வரிகள் என்னென்ன உண்டோ அவைகளை யெல்லாம் வசூலிக்கிறார்களே தவிர அவர்களுக்கு எந்தவிதமான வசதிகளையும், குடிதண்ணீர் வசதி, சாலை வசதி போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதில்லை. காரணம் அதிகச் செலவாகும் என்பதால்தான். எனவே நகராட்சிக்கு என்று அதிக நிதி ஒதுக்கிக் கொடுத்தாவது வரியை அதிகமாகச் செலுத்துகின்ற புற நகர்ப் பகுதிகளில் வசதிகளைப் பெருக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை நகரம் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. புகை வண்டித் தொடர் அப்படி இரண்டாகப் பிரிக்கிறது. அந்தப் புகை வண்டித் தொடரைக் கடந்து செல்ல வேண்டுமென்று சொன்னால் ஒன்று மேம்பாலம் வழியாகச் செல்ல வேண்டும், அல்லது கீழ் பாலம் வழியாகச் செல்ல வேண்டும், மற்றொரு பாதை இரயில்வே கேட். மேம்பாலம் வழியாக ஒரு டன்னுக்கு மேல் எடையுள்ள வாகனங்கள் செல்லக்கூடாது. கீழ் பாலத்தில் 8 அடி, 9 அடிக்கு மேல் உள்ள பஸ்களோ, லாரிகளோ செல்ல முடியாது. இரயில்வே கேட் வழியாகச் செல்லலாம் என்றால் ஒரு நாளைக்கு 12 மணி நேரமாவது அது பூட்டியிருக்கிறது. தஞ்சை நகரத்தில் விளையும் நெல் பூராவும் தென் மாவட்டங்களுக்குத்தான் அதிகமாகப் போய்ச் சேருகின்றன. 22 இலட்சம் டன் ஏறக்குறைய ஒரு ஆண்டுக்குச் செல்கிறது. அந்தப் புறநகர்ப் பகுதியில்தான் மருத்துவக் கல்லூரியும், மன்னர் சரபோஜி கல்லூரியும், பெண்கள் கல்லூரியும், தானியக் கிடங்கும் ஆகிய இவையனைத்தும் இருக்கின்றன. ஆகவே, போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருப்பதால் அந்த மேம்பாலத்தைப் புதிதாகக் கட்டித் தரவில்லை என்றாலும் இருக்கின்ற மேம்பாலத்தை அகலப்படுத்தி, வலிவானதாக ஆக்கிக் கொடுத்தால் அது பேருதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான கோரிக்கை என்னவென்றால், தஞ்சை நகரமானது மன்னர் காலத்திலிருந்து 'கண்ட மேனி அழியாமல், இருக்கிறது. காரணம், பாதாளச் சாக்கடைத் திட்டம் அங்கே நிறைவேற்றப்படவில்லை. ஒரு மாவட்டத்தின் தலைநகரம். நாட்டுக்கே உணவு போடுகின்ற மாவட்டத்தின் தலைநகரம்.

1977 ஆகஸ்ட் 11] [திரு. எஸ். நடராசன்]

அந்த நகரத்தில் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. எனவே, அந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நகரம் விரிவடைய விரிவடைய அங்கேயுள்ள கம்போஸ்ட் டெப்போ நகரத்திலே மத்தியிலே இருக்கிறது, சுற்றி வீடுகள்வந்து விட்டன. இப்படி நகரத்திற்கு உள்ளே இருக்கின்ற அந்த டெப்போவை நகரத்திற்கு அப்பால் கொண்டு செல்ல ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகர்ப்புறங்களிலே இன்றைக்குக் குடியிருப்பவர்களின் தொகை அதிகமாக இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் கிராமங்களில் உள்ளவர்களுக்கு 6 மாத காலத்திற்கு மேல் வேலை கிடையாது. அப்படியுள்ளவர்களெல்லாம் பிறகு நகர்ப்புறங்களில் வேலை தேடிக் கொண்டு வருகிறார்கள். தங்களுடைய வயிற்றைக் கழுவிக் கொள்ளலாம் என்று நகர்ப்புறங்களுக்கு வருகிறார்கள். அப்படி வருகின்ற அவர்கள் ஆங்காங்கு சிறு சிறு குடிசைகளை அமைத்துக் கொள்ளும் நேரத்தில் அவர்களுக்குக் குடிதண்ணீர் வசதி கிடையாது. அவர்கள் இருக்கின்ற இடங்களுக்குப் போதுமான விளக்கு வசதியும் கிடையாது. இவைகளையெல்லாம் கவனித்து அந்த ஏழை மக்களுக்கு அந்த இடங்களைப் பட்டா செய்து கொடுத்து, அங்கே குடிதண்ணீர் வசதி, சுகாதார வசதி இன்னும் விளக்கு வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகர்ப்புறங்களில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பகுதிகளைப் பொறுத்த வரையில், அந்தப் புதிய நகரங்களுக்குச் சாலைகளும், விளக்கும் போட்டுக் கொடுக்காத காரணத்தினால் அந்தச்சாலைகளை நகராட்சி மன்றங்கள் எடுத்துக் கொள்ளாமல் தனிப்பட்ட இடம் என்று சாக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நகராட்சியிலே ஒப்படைக்கின்ற வகையில் ஒப்படைக்கவில்லை, லேட் போட்டு, ரோடு போட்டு ஒப்படைக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பார்த்துக் கொண்டிருந்தால் முடியாது. நகராட்சிகள் அதை எடுத்துச் செய்வதற்கு, வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்ப்புறங்களில் திருமணக் கூடம் மிகவும் அவசியமானது. திருமணக் கூடங்கள் இல்லாமல் நகரங்கள் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கின்றன. திருமணக் கூடங்கள் என்றால் அவைகள் திருமணத்திற்கு மட்டும் பயன்படுவதில்லை, ஏதாவது கூட்டம் நடக்க வேண்டும், வேறு நல்ல காரியங்கள் நடக்க வேண்டும், விவாதங்கள் நடக்க வேண்டும், கலை நிகழ்ச்சிகள் நடக்க வேண்டு மென்றால் அவைகளுக்காகவும் திருமணக் கூடங்கள் பயன்படும்.



1977 ஆகஸ்ட் 11] [திரு. எஸ். நடராஜன்]

எனவே, நகராட்சிகளுக்குச் சொந்த இடம் கொடுத்து அவைகளையும் இந்த ஆட்சி நகரசபைகளுக்குச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

(பிற்பகல் 12-20)

*திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகின்றேன். தீவிர நடவடிக்கையிலே ஈடுபடுகிறது, தொழிற்சங்கங்களினால்தான் தொழிலில் நெருக்கடி ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். திண்டுக்கல்லிலே சவுந்தரராஜா மில், கடந்த 15 நாட்களாக கதவடைப்பு செய்யப் பட்டிருக்கிறது. அங்கு ஐ. என். டி. யூ. சி. சங்கம் ஒன்றுதான் இருக்கிறது. மிகப் பெரிய கொடுமையான காரியம் அங்கு நடைபெறுகிறது. 650 தொழிலாளிகளில் 200 பேர் டெம்பரரியாக இருக்கிறார்கள். 15 ஆண்டுகாலமாக, தினசரி ரூ. 4-க்கு வேலை செய்ய வேண்டியதிருக்கிறது. ரூ. 15 கொடுக்க வேண்டியவனுக்கு ரூ. 4 கொடுக்கிறார்கள் எவ்வளவு கொடுமையாக அந்தத் தொழிலாளிகள் சுரண்டப்படுகிறார்கள்? ஐ. என். டி. யூ. சி. சங்கம் கோரிக்கை வைத்தால், நான் பட்டினி போடுவேன், அதிகப் படியான வேலைப் பளுவையும் அக்கிரமத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று முதலாளிகள் சொல்கிறார்கள். கவனித்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, நகராட்சிகளிலே, துப்புரவுத் தொழிலாளிகள், குப்பை கூளங்கள் தூக்கி நமக்கு உதவுகிறார்கள். அவர்கள் எவ்வளவு மோசமாக இருக்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். மதுரை மாநகராட்சியில் முன்னாலே அவர்களுக்கு 3 ஜோடி சட்டைகள் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது இரண்டு ஜோடியாக மாற்றிவிட்டார்கள். ஏன் இவ்வாறு அக்கிரமம் செய்ய வேண்டுமென்று நான் கேட்கிறேன். திண்டுக்கல்லிலே, 15 பேர், கடந்த இரண்டு வருடங்களிலே இறந்துவிட்டார்கள். அரசு ஊழியர்களுக்கு குடும்ப நலத்திட்டத்தில், இறந்தவர்கள் குடும்பத்திற்கு ரூபாய் 10,000 கொடுத்து வருகிறோம். ஆனால், இரண்டு வருஷங்களாக அந்தத்தொழிலாளர்கள் குடும்பத்திற்கு கொடுக்கப் படவில்லை. நம்முடைய இலாகா என்ன செய்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

அதே போல், மதுரையிலே, காங் மஸ்தூர்களாக 600 பேர் வேலை செய்கிறார்கள். அவர்களில் பெர்மனென்டாக இருப்பவர்கள் 45 பேர்தான். 600 பேர்கள் டெம்பரரியாக இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளம் ரூபாய் 7½, தினசரி ஆனால் அவர்களுக்குக் கொடுப்பது ரூபாய் 5-50 பைசா.

[திரு. எஸ். வரதராசன்] [1977 ஆகஸ்ட் 11

கோயம்பத்தூர் நகரத்திலே, நூற்றுக்கணக்கானவர்கள் என்.எம்.ஆர். என்ற வகையில், பணி புரிகிறார்கள். அவர்களுக்குப் பொதுப்பணித்துறையில் கொடுக்கும் சாதாரண கூலியைக் கூடக் கொடுக்காமல் வஞ்சனை செய்கிறார்கள். இதையெல்லாம் ஏன் இந்த இலாகா கவனிக்கவில்லை?

அதே போல், தோல் பதனிடும் தொழிலாளிகளைப்பற்றி எனக்கு முன்னால் சொன்னார்கள். பாதி பதனிட்ட தோலை ஏற்றுமதி செய்கிறார்கள். இதனால் தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போய்விடுகிறது. ஆகவே, முழு அளவில் இங்கேயே தோல் பதனிட வேண்டும். அதோடு, தோல் பதனிடுவதற்காக, இயந்திரங்கள் புகுத்தப்படுகின்றன. 40,000 தோல் பதனிடும் தொழிலாளர்கள் முன்பிருந்தார்கள். இப்பொழுது, இயந்திரங்கள் புகுத்தப்படுவதால், 20,000, 25,000-ஆக அந்த எண்ணிக்கை குறைந்திருக்கிறது. குப்பை கூளங்கள் தூக்கக்கூடிய அந்தத் தொழிலாளி, மோசமான நிலைமையிலே இருக்கக் கூடிய அந்தத் தொழிலாளி, இன்றையதினம் வேலையையும் இழக்கிறான். தொழிலிலே நெருக்கடியும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, தாழ்த்தப்பட்ட பகுதியிலிருந்து வந்து பணிபுரியும் அந்தத் தொழிலாளிக்கும் உடனடியாக உதவி செய்ய வேண்டும். அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த கமிட்டி அமைக்கப்பட்டும் அந்தக் கமிட்டியின் முதலாளிகள் பிடிவாதத்தின் காரணமாக எந்த வித சிபார்சும் செய்யவில்லை. தொழிற் சங்கங்கள் கோரிக்கைகளை சமர்ப்பித்து உள்ளார்கள். அதை ஏற்று, அத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்க வேண்டும். அந்த தொழிலாளர்களுக்கு முழு வேலை கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இயந்திரங்களைத் தடைப்படுத்த வேண்டும். பாதியளவு பதனிட்டு ஏற்றுமதி செய்ய தடைப்படுத்த வேண்டும். அவர்களது சம்பளத்தை உயர்த்த வேண்டும். இதற்கெல்லாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பீடித் தொழிலாளர்கள் ஆடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, தொழிலே ஆடிக் கொண்டிருக்கிறது. 1968-லே மத்திய சர்க்கார் இயற்றிய சட்டம் இன்று அமுலாக்கப்படவில்லை. சுப்ரீம் கோர்டுக்குச் சென்று தடை வாங்கி, பலவிதமான பிரச்னைகளை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்றையதினம் இந்தச் சட்டம் அமுலாக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அந்தத் தொழிலாளர்களுக்கு விடுமுறை, தந்து, பாக்டரி சட்டப்படி அவர்களை நடத்த வேண்டும். முதலாளிகள், அவுட்டோர் என்று வேலை கொடுத்து, பாக்டரி ஆக்டை கடைபிடிப்பதில்லை. 1968-ஆம் ஆண்டு பாக்டரி சட்டத்தை அமுலாக்க மறுக்கிறார்கள்.

இப்பொழுது ஆயிரம் பீடிக்கு 20 பைசா போனஸ் கொடுக்கப்படுகிறது. அதை 50 பைசாவாக ஆக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். குறைந்த பட்சக் கூலியைப் பீடித் தொழிலாளர்



1977 ஆகஸ்ட் 11] [திரு. என். வரதராஜன்]

களுக்கு அமுலாக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். தமிழ்நாட்டிலே இலட்சக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்.

மதுரையிலே செல்லார் பகுதியில் கைநெசவு ஃபாக்டரி இருக்கிறது. அதில் ஒரு ஃபாக்டரியில் 2,000 கை நெசவுத் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஏற்கெனவே, கை நெசவுத தொழிலாளர்கள் பற்றி ராஜா சுப்ரமணியம் அவர்கள் விசாரணை செய்தார்கள். தமிழ்நாடு முழுவதும் விசாரணை செய்தது. அந்த ரிப்போர்ட் அரசிடம் இருக்கிறது. கை நெசவுத்தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிகக சட்டம் இயற்றவேண்டும.

இதே போல் வடஆற்காடு மாவட்டத்தில் 150-க்கு மேற்பட்ட தீப்பெட்டி தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. அவற்றை உடனடியாக திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

நகரத்தினுடைய அபிவிருத்தி என்ற புத்தகம் கொடுத்திருக்கிறார்கள். இந்த குறைந்த விவரத்துடன் அந்தப் புத்தகத்தைக் கொடுக்க வேண்டாமென்று சொல்ல விரும்புகிறேன். எந்த விளக்கமும் அந்தப் புத்தகத்தில் இல்லை. விவரமாக இருக்க வேண்டும். ஏழை மக்களிருக்கிற நாட்டிலே அபிவிருத்தி செய்வது எவ்வளவு சிக்கலானது என்று அந்தப் புத்தகத்தில் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன் நகரங்களில் இருக்கிற டவுன் பிளானிங் செக்ஷன் ஏழை நாட்டிலே உள்ளவர்களைக் கொண்ட செக்ஷன்தானே. அந்த செக்ஷனில் உள்ளவர்கள் 10 அடி, வீட்டிற்கு 10 அடி இடம் விட வேண்டுமென்று சொல்கிறார்கள். 4 பக்கமும் 20 அடி இடம் விட்டால்தான் ரூபாய் 10,000ல் வீடு கட்டுபவன் வீடு கட்டமுடியும். அதற்கு அவன் ப்ளூ பிரிண்டிற்கு ரூபாய் 500 செலவு செய்ய வேண்டும். கைப்பிடி சுவர் அதிகமாகக்கட்டிவிட்டாலும் இடிக்க வேண்டும் என்கிறார்கள். நடுத்தர குடும்பத்தில் ரூபாய் 10,000, ரூபாய் 20,000 வைத்து வீடு கட்டுகிறவன் எவ்வளவு கஷ்டப்படுகிறான் என்பதை நாம் உணர வேண்டும். மெயின் ரோட்டில் செல்வந்தர்கள் வீடு கட்டுகிறார்கள், 5 அடிக்கு 1 அடி என்று கூட விடாமல் நெருக்கமாக கட்டுகிறார்கள். டவுன் பிளானிங் அதிகாரிகளுக்கும், அவர்களுக்கும் நெருக்கமான தொடர்பு இருக்கிறது. அதனால் இந்த நிலை இருக்கிறது.

இன்றைக்கு இருக்கிற வரி முறைகளை மாற்றி அமைக்க வேண்டும். மொத்தமாக இன்றைக்கு 15 ரூபாய் 20 ரூபாய் வாடகை உள்ள குடிசைகளுக்கு வரி போடாதீர்கள். இன்றைக்குப் பலர் நிறைய வீடுகள் வைத்திருக்கிறார்கள். 100, 200 வீடுகள் கூட வைத்திருக்கிறார்கள். அதற்கு மேலும் 450 வீடுகள்,

[திரு. எஸ். வரதராஜன்] [1977 ஆகஸ்ட் 11

ஆயிரம் வீடுகள் கூடச் சொல்லலாம். இன்னும் கூட நகரங்களில் அதிக வீடுகள் வைத்திருக்கக் கூடாது என்று ஒரு சட்டம் போட வேண்டும். இன்றைக்கு நாம் கட்டியிருக்கிற வீடுகளில் வீடு அற்றவர்களுக்கு கிடைக்காத நிலை இருக்கிறது. வீடு உள்ளவர்களுக்கே கிடைத்திருக்கிறது. இதற்கு ஒரு விசாரணை வைத்தால் நிரூபிக்கிறேன். கிட்டத்தட்ட அனைவருக்கும் வீடு இருக்கிறது. 80 சதவீதம் பேர்கள் இதில் வாடகை பண்ணுகின்ற சுரண்டலுக்கு இந்தப் பணம் ஏன் உபயோகப்பட வேண்டும்? உடனடியாக நகர்ப்புறத்திலே குடிசைப் பகுதியிலே, பின் தங்கிய பகுதியிலே கவனம் செலுத்த வேண்டும்.

அதே போல, குடிநீர் பிரச்சனை வேதனையை அளிக்கிறது. விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி கடல் நீரை குடிநீராக ஆக்க வேண்டும். இந்த அரசு விஞ்ஞான ரீதியிலே கடல் நீரை குடிநீர் ஆக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். வீராணம் எப்படி வருமனது? கிருஷ்ணா தண்ணீர் வருமா? எப்படியாவது தொலையட்டும். விஞ்ஞான ரீதியில் வசதி உண்டாக்கித் தர வேண்டும்.

பம்பாய், கல்கத்தா போன்ற பெருநகரங்களுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்குகிறது. அதைப்போல சென்னையை அபிவிருத்தி செய்வதற்காக, சென்னைக்கும் பணம் ஏன் கொடுக்கக் கூடாது. பாதாள ரயிலே, பல்வேறு பாதைகள் அமைக்க அதிகமான நிதி பெற வேண்டும். போக்குவரத்து நெரிசலைப் போக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை முனிசிபல் அதிகாரிகளை அனுப்பி நகரமுனிசிபல் வரிகளை அதிகப்படுத்துகிறார்கள். அவர்கள் நகரம் அபிவிருத்தி அடைந்து விட்டதாகக் கற்பனைசெய்துகொண்டு வீடுகளுக்கு 20 ரூபாய் இருந்த வரியை 100 ரூபாயாகப் போட்டு விட்டு வந்து விடுகிறார்கள். அப்புறம் என்ன ஆகும், அதிகாரிகளைப் பார்த்து வரி முறையீட்டுக் குழுவுக்கு மனுப்போட்டால் சாதாரண வீடுகளுக்குக் குறைப்பதில்லை. இந்த நிலைமையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு சிங்காநல்லூர் தொகுதி தொழில் வளம் மிகுந்த பகுதியாகும். தமிழகத்தின் "மான்செஸ்டர்" என்று கூட சொல்வார்கள். அங்கு நகராட்சசபை எவ்வளவு வரி வசூலித்து இருக்கிறது என்று சொல்ல வேண்டும். அங்கு சிறு வீடுகளுக்குத் தான் வரி அதிகம். தொழில் அதிபர்களுக்கு வரி குறைவு. இவைகளை எல்லாம் மாற்றி அமைக்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: — தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வைத்திருக்கிற மானியத்தில் ஒரு சில கருத்துக்கள் கூற விரும்பு



1977 ஆகஸ்ட் 11] [திரு. ஜே. ஜேம்ஸ்]

கிறேன். தொழிலாளர் துறைக்கு இன்றையதினம் தொழிற் சங்கத் தலைவராக இருந்த ஒரு நபர் அமைச்சராக வந்திருப்பது உண்மையிலேயே பாராட்டுதற்குரியதாகும்.

தொழிலாளர் நல அமைச்சர் ஒரு தொழிற்சங்கத்தின் தலைவராக இருந்தபோது ஒரு கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவராக இருந்தவர். அதனை மறந்து இன்று பல்வேறு அரசியல் கட்சி சார்புள்ள தொழிற்சங்கங்கள் உள்ள தமிழக மாநிலத்தில் அமைச்சராக இருக்கிறார் என்பதனை அடிக்கடி மறந்து செயல் படுகிறார் என்பது வேதனைக்குரிய காரியமாக இருக்கிறது.

இன்றையதினம் மத்திய அரசு தனது கொள்கையைத் தெளிவாக அறிவித்திருக்கிறது. ஏனென்றால், மத்திய அரசாங்கம் கொள்கை சார்பற்ற முறையில் தொழிலாளர் பிரச்னையை அணுக வேண்டும் என்று மாநில அரசுகளுக்குக் கூட அறிவிப்புகள் அனுப்பியதாகக் கருதுகிறேன். ஆனாலுங்கூட நமது மாநில அரசு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இந்தக் கொள்கையில் நம்பிக்கையில்லாது செயலாற்றுவது கண்டு வருந்துகிறேன்.

[பிற்பகல் 12-30]

கடந்த 60 நாட்களாக கோவை மாவட்டத்தில் இருக்கின்ற லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் தொழிலாளர்கள் வேலையிழந்து தவிக்கிறார்கள் என்பதை அரசு அறியும். அங்கேயிருக்கின்ற பிரச்னை பெரிய பிரச்னை அல்ல. தொழிலாளர்கள் அவர்கள் வேலை செய்த 'மே' மாதச் சம்பளத்தைக் கேட்டார்கள். அதோடு சம்பள உயர்வு கேட்டார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்களுக்கு இருக்கின்ற பல்வேறு பிரச்னைகளைக் கோர்ட்டுக்கு விட வேண்டும் என்ற கோரிக்கைகளை வைத்தார்கள். இதனை அறிந்த நிர்வாகம் உடனடியாகக் கதவை அடைத்து தொழிலாளர்கள் பல பேர் வேலையிழந்திருக்கிறார்கள். இந்த நிலையில் இந்த அரசு தொழிலாளர்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்குப் பதிலாக, எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னதாக வேலையிலிருந்து நீக்கப்பட்ட, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அன்றைய தினம் சார்ந்திருந்த கட்சியைச் சேர்ந்த 15 தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்தியதன் காரணமாக அந்த பிரச்னைக்கு தீர்வு காணப்படாமல், ஏறத்தாழ 1,500 தொழிலாளர்கள் வேலையிழந்து நிற்கிறார்கள் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அடுத்து இன்றையதினம் நமது சென்னை மாநகரத்தில் பாடியில் உள்ள சுந்தரம் கிளேடன் என்ற தொழிற்சாலையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சியை நாம் தினசரி பத்திரிகையில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அங்கே பல்வேறு கோரிக்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1977 ஆகஸ்ட் 11

கைகளை தொழிலாளர்கள் வைத்திருந்தார்கள். ஆனால் அந்தப் பிரச்னைகள் அவ்வப்போது தீர்வு காணப்படாமல், அரசாங்கம் ஏதோ அரசியல் லாபத்துக்காக, தோழமைக் கட்சி அல்லது வேண்டியவர்கள் அதில் 'இன்டரெஸ்டட் பார்ட்டீஸ்' என்பதை அறிந்துகண்ணைமூடிக்கொண்டு இருந்த காரணத்தால்தான், இந்த நிலைமை வளர்ந்திருக்கிறது. பிரச்னை எழுந்தவுடன் அவற்றிற்குத் தீர்வு கண்டிருந்தால் இன்றையதினம் அங்கேயிருக்கின்ற நிலைமையை நிச்சயமாக தவிர்த்திருக்க முடியும். அதற்குப் பதிலாக தொழிலாளர்களை மோதவிட்டு, இன்றையதினம் பல தொழிலாளர்கள் காயப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்கள் என்பதை அமைச்சர் மறுக்கலாம். அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லலாம். தாக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மருத்துவ மனையில் போதிய சிகிச்சை கொடுக்கக்கூட அரசாங்கம் தயக்கம் காட்டியிருக்கிறது தென்றால், எந்த அளவுக்குத் தொழிலாளர்கள் மீது இந்த அரசு அக்கறையோடு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளமுடியும். ஏதோ காரணத்தால் அவர்கள் தாக்கிக் கொண்டார்கள். மருத்துவ மனைக்குச் சென்றபோது, அவர்களுக்குப் போதுமான சிகிச்சை அளிக்கப்படவில்லை என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இங்கே முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு தீர்த்ததாகவும், தொழிலாளர்களுக்கு விமோசனம் வந்துவிட்டது என்றெல்லாம் மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் 82-வது விதியின்கீழ் அறிக்கை கொடுத்தார்கள். அதற்கு முன்னதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளம்பரம் செய்தார்கள், தொழிலாளர்கள் அரசாங்கத்தின் மீது வைத்த நம்பிக்கையின் காரணமாக பிரச்னை தீர்ந்துவிட்டது என்று. ஆனால் தொழிற்சாலைக்குச் சென்றால், அங்கே தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பில்லை. அவர்கள் தாக்கப்பட்டு, பல தொழிலாளர்கள் மீண்டும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், அரசாங்கம் தொழிலாளர் பிரச்னையில் நிச்சயமாக அக்கறை செலுத்தவில்லை ; ஏதோ அரசியல் கண்ணோட்டத்துடன்தான் செயல்படுகிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன்.

கோவை லக்ஷ்மி மெஷின் ஒர்க்ஸ் பிரச்னை பற்றி இன்று நிலைமை என்ன ? தினசரி 50 அல்லது 60 தொழிலாளர்கள் கலெக்டர் அலுவலகத்திற்கு முன்னால் மறியல் செய்து, அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு வருகிறார்கள். இந்த நிலைமை ஏற்பட்ட பிறகும் கூட, இந்த அரசு இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும் என்று நிச்சயமாக அக்கறை எடுக்கவில்லை என்றால், தொழிலாளர்கள் மீது எந்த அளவுக்கு இந்த அரசு அனுதாபம் காட்டுகிறது என்று நான் சந்தேகப்பட நிச்சயமாகக் காரணம் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



1977 ஆகஸ்ட் 11] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அடுத்து, இந்த மாநிலத்திலே இருக்கிற ஒரே ஒரு தொழிற்சாலையான சேலத்தில் இருக்கிற கிளாஸ் பாக்டரி எட்டு மாதமாக மூடிக் கிடக்கிறது என்பதை அமைச்சர் அறிவார். மத்திய அரசு பதவி ஏற்றவுடன் எந்தத் தொழிலாளர்கள் நெருக்கடி காலத்தில் பாதிக்கப்பட்டார்களோ, நெருக்கடி காலத்தில் அன்றிருந்த மத்திய அரசு தொழிலாளர்களுக்கு எதிராக நிறைவேற்றிய சட்டங்கள் அனைத்தையும் திருத்தியமைத்து, பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள், குறிப்பாக ரயில்வே தொழிலாளர்கள், ஒரு லட்சத்துக்கு அதிகமான தொழிலாளர்கள், வேலையிழந்த நாட்களுக்குக் கூட ஊதியத்தோடு மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டார்கள். ஆனால் நமது அரசு இன்றைய தினம் சேலம் கிளாஸ் பாக்டரி மூடப்பட்டிருந்தபோதிலும் அதைப் பற்றி அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. ஏறத்தாழ 500 தொழிலாளர்கள் வேலையிழந்து தவிக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியில் தோட்டத் தொழிலாளர்கள் அதிகம். குறிப்பாக அரசாங்க ரப்பர் தோட்டத்திலுள்ள தொழிலாளர்கள்—ஏற்கனவே மத்திய சர்க்கார் கம்பல்சரி டெபாசிட் தொகையை திருப்பிக்கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்து முதல் தவணைகொடுக்கப்பட்டு விட்டது. ஆனால் அரசு ரப்பர் தோட்டத்தொழிலாளர்களுக்கு முதல் தவணை கொடுக்கப்படவில்லையென்றால் உண்மையிலேயே இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்காகச் செயல்படுகிறதா என்பதில் நான் சந்தேகப்படுகிறேன். எல்லாத் தொழிற்சாலைகளிலும் செகண்டு இன்ஸ்டால்மெண்டு கூட கொடுத்தாகிவிட்டது. ஆனால் அரசு பொறுப்பில் இருக்கிற ரப்பர் தோட்டத்தில் இன்னும் முதல் தவணை கொடுக்கப்படவில்லை என்றால் இது நிச்சயமாக வருந்தத் தக்கது.

அதேபோல் தனியார் தோட்டங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு இன்று எந்தவிதப் பாதுகாப்பும் இல்லை. குறிப்பாக ஸ்லேட்டர் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஊதிய பாதுகாப்போ, வேலைக்கு பாதுகாப்போ கிடையாது. இப்போது கன்னியாகுமரி ஜில்லாவில் காந்திமதி தோட்டங்களில் உண்ணாவிரதம் போன்ற போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அரசு உடனே தலையிட்டு காந்திமதி தோட்டத் தொழிலாளர்கள் பிரச்னைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மையா
கராட்சி
அடுத்து, கட்டபொம்மன் போக்குவரத்துத் தொழி தார்கள்.
பற்றி எனக்கு முன்னதாக பல உறுப்பினர்கள் ர்ச்சி பற்றி
இதற்கு முன்பாக மாண்புமிகு போக்குவரத்து அமைச் ன்றியங்கள்
களிடமும் கூறியிருக்கிறேன். நெருக்கடி நிலை லாமல், நக
நாட்டில் இருந்தபொழுது ஏறத்தாழ 800 தொ க்கியத்துவம்
அங்கே உள்ள நிர்வாகம் ஒர்க் லோடு என்ற ச்சி, டவுன்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1977 ஆகஸ்ட் 11

காட்டி, இகனுமிக் பாலிசி என்று கூறி வேலையிலிருந்து நீக்கினார்கள். அந்தத் தொழிலாளர்கள் நியாயமாக வேலையிலிருந்து நிறுத்தப்பட வேண்டியவர்களா, இல்லையா என்பதைப் பரிசீலனை செய்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்குப் பதிலாக அந்த விஷயத்தில் இதுவரையிலும் இந்த அரசாங்கம் கவனம் செலுத்தவில்லையென்று சுட்டிக்காட்ட விரும்புறேன். உடனடியாக அவர்களுக்கு மீண்டும் வேலை அளிக்க வேண்டும். காரணம் அவர்கள் 10, 12 ஆண்டுகளாக நிரந்தரத் தொழிலாளர்களாக வேலை செய்தவர்கள். திடீரென்று வேலையிலிருந்து அப்புறப்படுத்தினால் அது அநீதி என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து, பல முந்திரி தொழிற்சாலைகள் மூடிக் கிடக்கின்றன. அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு எந்த வேலைப்பாதுகாப்பும் இல்லை. அவர்களுக்கு ஊதியம் மிகவும் குறைவாகக் கொடுக்கிறார்கள். அங்கே இருக்கிற நிர்வாகத்தினர் பலரும் கேரளாவைச் சேர்ந்தவர்கள். அவர்கள், கேரளாவில் நியாயமான ஊதியத்தைக் கொடுப்பதற்குப் பயந்து, இந்தத் தொழிற்சாலைகளை இங்கே அமைத்திருக்கிறார்கள். நியாயமான ஊதியத்தைக் கொடுங்கள் என்று கேட்டால் அந்தத் தொழிற்சாலையை மீண்டும் கேரளாவுக்குக் கொண்டு போய்விடுவோம் என்று பயமுறுத்துகிறார்கள். ஆகவே அத் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியம் கொடுக்க அரசு முந்திரி ஆலை நிர்வாகிகளை வற்புறுத்த வேண்டும். அங்கே தொழிற்சாலை மூலப்பொருள் இல்லாத காரணத்தால் மூடிக் கிடக்கிறது என்று கூறப்படுகிறது. மூலப்பொருளை அரசு வாங்கி அத்தொழிற்சாலைகளுக்குக் கொடுத்து அவைகள் செயல்படுவதற்கு அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, லாரியில் பாரம் ஏற்றும் தொழிலாளர்களுக்கு எந்தச் சட்டப் பாதுகாப்பும் இல்லை. அவர்களுக்கு சட்டரீதியாக ஊதிய பாதுகாப்போ, மற்ற நன்மைகளோ இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கும் போதுமான பாதுகாப்பளிக்க சட்டம் இயற்ற வேண்டும். மற்ற தொழிலாளர்களுக்கு ...கிடைக்கும் ஊதியம் இவர்களுக்கும் கிடைக்கத்தக்க ...கைது செ.கு பாதுகாப்பு அளிப்பதற்கு அரசாங்கம் தேவையான இந்த நிலைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரச்னையைத்
எடுக்கவில்லை ..., பீடித் தொழிலாளர்களைப் பற்றி அதிகமாக பல
இந்த அரசு ஆ... எடுத்துக் கூறினார்கள். அரசாங்கத்திற்கு பீடித்
நிச்சயமாகக் க...
களின் கவனத்திர்கள் வழியாக நிரம்ப லாபம் வருகிறது. ஆகவே



1977 ஆகஸ்ட் 11] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அவர்கள் பிரச்னைகளை விசேஷமாகக் கவனித்து பரிகாரம் தேடிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக காண்டிராக்ட் லேபர் பாலிசி என்று இருக்கிறது. அந்தச் சட்டத்தை அமல் நடத்துவதற்கு பல்வேறு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே இந்தச் சட்டம் அமலில் இல்லையென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். காரணம், அரசாங்கத்தில் நடைபெறுகிற நிர்வாகத்திலும் கூட பல்வேறு தொழிற்சாலைகளிலும், நிறுவனங்களிலும் காண்டிராக்ட் முறையில் தொழிலாளர்களை வைத்து குறைந்த ஊதியம் கொடுக்கிறார்கள்.

[பிற்பகல் 12-40]

காண்டிராக்ட் ரெகுலேஷன் ஆண்ட் அபாலிஷன் ஆக்ட்படி நிரந்தரத் தொழிலாளர்களுக்கு எந்த அளவிற்கு ஊதியம் கொடுக்க வேண்டுமோ அந்த அளவிற்குக் கொடுக்கவேண்டும். இல்லை என்றால் அதில் வருகிற வித்தியாசத்தை நிர்வாகம் கொடுக்க வேண்டும் என்று சட்டம் இருக்கும்போது அரசு தொழில் நிறுவனங்களில் கூட காண்ட்ராக்ட் தொழிலாளர்களுக்கு குறைந்த சம்பளம்தான் கொடுக்கப்படுகிறது என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதோடு இப்போதுள்ள கொள்கையை சற்று மாற்றியமைக்கவேண்டும். தொழிலாளர்களுக்காக இந்த அரசு செயல்பட வேண்டும். இப்போது மூடப்பட்டிருக்கிற ஆலைகளை உடனடியாகத் திறக்க வழிவகை காணவேண்டும். குறிப்பாக பாடியில் உள்ள சுந்தரம்-கிளேட்டன், கோவை லஷ்மி மெஷின்ஸ் போன்றவைகள் உடனடியாகத் திறக்கப்பட்டு தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கோரி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் தொழிலாளர் நலத்திற்கான கோரிக்கையும், வீட்டு வசதிக் கோரிக்கையும், நகர்ப்புற வளர்ச்சிக் கோரிக்கையும் இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அப்படி வைக்கப்பட்டிருக்கிற கோரிக்கைகளை உள்ளடக்கி, நகர்ப்புற வளர்ச்சி என்ற தலைப்போடு ஒட்டி நகரசபைகளுடைய நிர்வாகங்கள், மாநகராட்சிகள் பற்றிய நிர்வாகம் ஆகியவையும் விவாதிக்கப்படவேண்டும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற தன்மையில் பல நண்பர்கள் நகராட்சி மன்றங்கள் பற்றியும், மாநகராட்சி பற்றியும் இங்கே தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். உள்ளாட்சித் துறை என்ற துறையில் கிராமங்கள் வளர்ச்சி பற்றி மட்டுமல்லாமல், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் அவற்றின் நிர்வாகம் என்ற அளவில் மட்டும் அல்லாமல், நகராட்சி மன்றங்கள் நிர்வாகம் என்பதும் மிகவும் முக்கியத்துவம் பெறுகிற ஒன்றாக இருப்பதால், நகர்ப்புற வளர்ச்சி, டவுன்

ப்ளானிங், நகர அமைப்புத் திட்டம் என்ற அந்த அடிப்படையில் பிறந்த அமைப்புத் திட்டங்களோடு தொடர்புடையதாக நகராட்சி நிர்வாகங்களும் ஆக்கப்பட்டு கோரிக்கை எண் 34 நகர்ப்புற வளர்ச்சியின் கீழ் இடம் பெறுவது என்ற முறையில் இருப்பதை விட இது நிர்வாகம் என்ற முறையில், அதை உள்ளாட்சித் துறை நிர்வாகம் என்ற முறையில் அந்தக் கோரிக்கையோடு இணைக்கப்படுமானால் விவாதிக்குமிடத்து அது அதிக பயனுடையதாகும் என்ற என் கருத்தினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நகராட்சி நிர்வாகங்கள் எப்படி மானியங்களில் இடம்பெறுகின்றன என்பதைப் பார்க்கும்போது மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் நகராட்சித்துறை நிர்வாகம், இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றிற்காக ஆகும் செலவு அங்கே காட்டப்பட்டுள்ளது. 284 எண் கணக்குத் தலைப்பில் நகர்ப்பகுதி மேம்பாடு என்பதில் 21 லட்சம் ரூபாய் நிர்வாகத்திற்கு என்று காட்டப்பட்டிருக்கிறது. கோரிக்கை 57இல் கடன், முன்பணம் வழங்கல் என்பதன்கீழ் சென்னை மாநகராட்சிக்கு இவ்வளவு, மதுரை மாநகராட்சிக்கு இவ்வளவு என்று பல்வேறு இனங்களில் கடன் வழங்கப்பட்டுள்ளதாகக் காட்டப்படுகிறது. எனவே பொதுவாக நிதி வருவாயை வகைப்படுத்துகிறபோது அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் அத்துறையின் மனப்போக்கில் முறைப்படுத்துவதைவிட பொது மக்கள் உணர்ந்து கொள்ளும் விதத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் இன்னின்ன பகுதிகளுக்கு இவ்வளவு இவ்வளவு செலவிடப்படுகிறது என்று உணரத்தக்க வகையில், அதற்குரிய முறையில் கோரிக்கைகளின் தலைப்பில் அவைகள் இணைக்கப்பட்டால் அதிக நலன் பயக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டு வீட்டு வசதித் திட்டங்கள் என்ற தலைப்பிற்குள்ளே வருகிறபோது நகர்ப்புற வளர்ச்சியில் இடம் பெறக்கூடிய, சொல்லப்போனால் பல்வேறு நக்ரங்களில் கட்டப்படுகிற வீட்டுவசதி பற்றிய குறிப்புகள் வருகின்றன.

அதைப்போலவே ஊரக வளர்ச்சித் துறையிலும் வீட்டுவசதித் திட்டத்தைப்பற்றி வருகிறது. இவைகளை எல்லாம் ஒருமுகப் படுத்தினால் நல்லது. இதில் நிதி வழங்குவதற்கு என்று பல்வேறு தலைப்புகள் தரப்பட்டிருந்தாலும், பாகுபடுத்தியும், இணைத்தும் காணக்கூடிய முறையில் இதனை வகுக்க வழிமுறை காண வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நகர்ப்புற வளர்ச்சி என்பது ஏறத்தாழ ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பாகவே உருவாகி வந்திருக்கிறது. Town and Country Planning Act என்ற சட்டம் கொண்டுவரப்பட்டதின் மூலமாக நகர்ப்புற வளர்ச்சி, நாட்டுப்புற வளர்ச்சி, இவைகள் எப்படி எப்படிச் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதை அந்தச் சட்டத்தின் மூலமாக வழி செய்து ஏற்கெனவே இருக்கிற நகர்ப்புற வளர்ச்சித் துறை இயக்குநர் மூலமாக கமிட்டிகள் அமைக்கப்பட்டு





பல்வேறு வகையான பல திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டை எட்டுப் பகுதிகளாகப் பிரித்து அங்கங்கே நிலவுகின்ற தட்ப வெட்ப சூழ்நிலை, மழை பெய்யக்கூடிய தன்மை, வேளாண்மை இவைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அதன் அடிப்படையில் விரிவான ஆராய்ச்சி வட்டார அளவில் நடைபெற்றிருக்கிறது. கடந்த 1974–75ஆம் ஆண்டில் வட்டார வளர்ச்சி குறித்து பல ஆலோசனைக் கூட்டங்களும் அந்தந்த வட்டாரங்களில் நடைபெற்று நகராட்சி வட்டாரங்களில் வளர்ச்சிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. எதிர்காலத்திலும் ஒவ்வொரு மாவட்டமும் ஒவ்வொரு வட்டாரமாக இயங்கும் என்று கருத்து தெரிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். இது ஒரு திட்ட வரைவு என்ற முறையில்தான் உள்ளது என்ற அளவில் நின்றுவிட்டாலும் அல்லது தாமதமாகுமாறு விட்டுவிட்டாலும் எது எந்தவிதமான பயனும் இல்லாமல் ஆகிவிடும் என்பதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் தலைநகராக இருக்கின்ற இடத்தைத் தவிர வேறு சில சிறு நகரங்களும் வளர்ந்து கொண்டே வருகின்றன. அப்படிப்பட்ட வளர்ச்சிக்கு ஏற்றபடி எவ்வாறு வழிவகை செய்து எதிர் காலத்திற்கு பயன்படுவதாக ஏற்படுத்துவது என்பதற்காக அர்பன் நோட்ஸ், அர்பன் டெவலப்மென்ட் ஸ்கீம்ஸ் என்ற அளவில் அந்த இடங்களை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். சேலம் மாவட்டத்தைப் பொறுத்த அளவில் நாமக்கல் நகரம் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒன்றிரண்டு ஆண்டு கால அளவு மத்திய அரசின் உதவியோடு, அந்த நகரத்தையும் அதைச் சுற்றியுள்ள 25 சதுர மைல் அளவுக்கு இருக்கின்ற கிராமங்கள் ஆகியவற்றில் வளர்ச்சி ஏற்படக்கூடிய அளவிற்கு ஏற்றதான வளர்ச்சித்திட்டம் ஒன்று வரையப்பட்டுள்ளது. நாமக்கல் நகர்ப் பகுதி வளர்ச்சி ஆய்வுக்கு ஒரு தனி நிதியை ஒதுக்கியிருந்தார்கள். இதுபோன்று இன்னும் பல இடங்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். சேலம் மாவட்டத்தைப் பொறுத்த அளவில் ஆத்தூரை எடுத்துக்கொள்ளலாம், திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தளவில், குளித்தலை, மணப்பாறை போன்ற இடங்களை எடுத்துக்கொள்ளலாம். இவ்விதமாக மாவட்டத்திற்கு இரண்டு மூன்று இடங்களைத் தேர்ந்தெடுத்து அப்பகுதியில் வளர்ச்சியை எப்படி உருவாக்குவது என்பதை ஆய்ந்து மாவட்ட அளவில் மாவட்ட தலைநகரங்களில் மேலும் மக்கள் குடியேறும் நிலையைத் தவிர்க்கவும் மாவட்டத் தலைநகர் இட நெருக்கடிக்கு ஆளாகாதவாறு பார்த்துக்கொள்ளவும் உதவிகரமாக இருக்கும். மத்திய அரசு 1975–76ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிதி உதவி கொடுக்கவில்லை என்ற அடிப்படையில் இது கைவிடப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை மாநகர் வளர்ச்சியைத் பொறுத்த அளவில்............

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பான செய்தியை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த அவை உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் பேசிய நேரத்தில், அவையின் குறிப்பேட்டில் இடம் பெறத் தகாத, அல்லது முடியாத சில கருத்துக்களைப் பேசியிருக்கிறார். அதை அப்படியே படித்துக் காட்டுகிறேன்....

> ''மாயவரத்திலே சிதம்பரநாதன் என்ற தொழிலாளி வேலை நீக்கம் செய்யப்பட்டதின் காரணமாக, தற்கொலை செய்து கொண்டான். வேலையில்லை, பிழைப்பில்லை, தற்கொலை செய்து கொண்டான். ரூ. 10,000 அவனுக்கு உண்டா, இல்லையா ? கிடைக்கவில்லை. அவன் தற்கொலை செய்து கொண்டதற்குக் காரணம் அந்த வேலை நீக்க உத்தரவு......''

இங்கேதான் நான் உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். மேலும் என்ன பேசியிருக்கிறார் என்றால் * *

* * * *

இப்படி அதிகாரியின் பெயரை இங்கே சுட்டிக்காட்டுவது மரபு அல்ல.

(பிற்பகல் 12—50)

தற்கொலை செய்து கொண்டதற்கு இந்த அதிகாரி காரணம் என்று உள்நோக்கம் கற்பிக்கப்படுகிறது. அது மட்டுமல்ல. அந்த அதிகாரியின் மேல் கொலைக் குற்றம் சாட்டப்பட வேண்டுமென்று இந்த அவையில் அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார். அந்த வகையில் அவர் பேசிய இன்னொரு பகுதி.

* * * *

இந்த இரண்டு பகுதிகளையும் அருள்கூர்ந்து அவையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் உங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும், இந்தச் செய்தி பத்திரிகைகளில் வராமல் பத்திரிகையாளர்களை நீங்கள் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன்னவர் சொன்னதுபோல் இந்த அவையிலே யாரும் தனிப்பட்ட நபரின் பெயரைக் குறித்தோ அல்லது அவர் பற்றிய குற்றச்சாட்டுகளையோ இந்தச் சபையிலே எடுத்துச் சொல்லக்கூடாது என்பது நம்முடைய மரபு. ஆகவே, தனிப்பட்ட அதிகாரி இடத்தில் எவ்வளவுதான் உங்களுக்கு காழ்ப்புணர்ச்சி இருந்தாலும், அவ

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12-49-ல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.



ரைப்பற்றி * * வேறு எந்த தனிப்பட்ட முறையிலோ குற்றம் சாட்டக் கூடாது என்பது இந்தப் பேரவையின் மரபு. எனவே, அதையொட்டி பேரவை முன்னவர் அவர்கள் சொன்ன அந்த வாசகங்களை அப்படியே நீக்குவதோடு, பொதுவாக பத்திரிகைகளிலே வெளிவரக்கூடாது என்றும் உத்தரவிடுகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உத்தரவிட்டதற்குப் பிறகு விளக்கம் கிடையாது. எனவே, இங்கே பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கு நியாயமில்லை.

அவையின் முன்னவர் உங்களுடைய நலனுக்காக, நன்மைக்காக கொண்டுவந்த இந்தப் பிரச்னையை இதோடு விட்டு விடுவது உறுப்பினர் அவர்களுக்கு நல்லது.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகரின் விரிவுத் திட்டத்திற்காக மாநகர் வளர்ச்சிக்கான குழுமம் ஏற்படுத்தி, அது இப்போது எம்.எம்.டீ.ஏ. என்று அழைக்கப்படுவது, அந்த அமைப்பின் மூலம் சென்னை மாநகரின் வளர்ச்சி நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், ஏதோ ஒருவகையில் உருவாகி எதிர்காலத்திலே மக்களுடைய நல்வாழ்விற்கு எதிரான நிலைமைகளுக்கு இடம் அளிப்பதாக ஆகிவிடக்கூடாது என்ற அடிப்படையிலே, முன்கூட்டியே திட்டமிட வேண்டுமென்கின்ற முறையிலே இது செயல்பட்டு வருகிறது. அப்படிச் செயல்பட்டதன் விளைவாகத்தான், உலக வங்கியின் கவனத்தை ஈர்க்கக்கூடிய வாய்ப்பு பெற்று, திரும்பத் திரும்ப அவர்கள் கேட்கக் கூடியவற்றிற்கெல்லாம் விளக்கங்கள் தந்து, இன்றையதினம் பல கோடி ரூபாய் அளவிற்குப் பல்வேறு திட்டங்களுக்கு உலக வங்கியில் நிதி உதவி இந்திய அரசாங்கத்தின் மூலம் சென்னை பெறக்கூடிய நிலைமை பெற்றிருக்கிறது என்பதை எண்ணுகிறபோது, ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எல்லாமே இடிந்து விழுந்துவிட்டது என்று எண்ணுகிறவர்கள், இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற இரண்டு அறிக்கைகளையும், ' ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறை' யினால் என்ற இந்த கொடுக்கப்பட்டிருக்கின்ற 'நகர்ப்புற வளர்ச்சி' என்ற அறிக்கையைப் பார்த்தாலும் சரி, 'வீட்டு வசதி' என்று கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையைப் பார்த்தாலும் சரி, கழக ஆட்சிக் காலத்திலே, அந்த 9 ஆண்டு காலத்திலே செய்துள்ளதைத் தொடர்ந்து, மேலும் ஊக்குவிக்கின்ற செயல் திட்டங்களாகத்தான் இந்த நிலை உருவாகி வந்திருக்கின்றது என்பதையும், இந்த வீட்டு வசதி வாரியம் மேலும் விரிவாகச் செய்யக்கூடிய

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12-50-ல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதும், அதேபோல், குடிசை மாற்று வாரியம் செயற்பட்டுள்ளது என்பதும் விளங்கும். அகில இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் நாம் குடிசைவாழ் மக்களுக்கு ஒரு தரமான வாழ்க்கை வசதியை உருவாக்கப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டதன் பயன் இத் திட்டம் என்பதை இந்த அறிக்கைக் குறிப்பிலேயே ஒரு விளக்கம் மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

சென்னை மாநகர வளர்ச்சிக் குழு என்று ஓரிடத்திலும், இன்னொரு இடத்திலே குழுமம் என்றும், மற்றோர் இடத்திலே கழகம் என்றும் ஒரே சொல்லாக வழங்கப்படாமல் வேறாக வழங்கியுள்ளதால் இந்த மொழி பெயர்ப்பு சிறப்பாக அமையவில்லை. இந்த மாநகர வளர்ச்சிக் கழகமானது, சென்னை நகரத்தினுடைய பெரு வளர்ச்சியிலே, சென்னை நகரத்தின் பக்கத்திலே 'சாடிலைட் டவுன்' கள் ஆக, துணை நகரங்களாக ஏற்படுத்த வழி கண்டிருக்கிறது.

அதில், செங்கற்பட்டுக்குப் பக்கத்திலே மறைமலை நகர் என்ற பெயரால் அமைந்திருக்கும் புது நகருக்கு இதுவரையில் 1975–76, 1976–77 ஆண்டுகளில் அதனுடைய வளர்ச்சிக்காக ஏறத்தாழ 85 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டிருக்கிறது. அதற்கு இன்னும் அதிகமாகத் தொடர்ந்து செலவிட வேண்டும். 1977–78-ல் அந்தத் தொகை குறைவாகத்தான் தரப்பட்டிருக்கிறது என்பதை இங்குள்ள புள்ளி விவரத்தைக் கொண்டு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அதைப் போலவே சென்னை சுற்றுப்புறத்தில்—அர்பன் நோட்ஸ்—புதிய வளர்ச்சிக்கு உரிய முனைப்பான இடங்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்கு 1975–76-ல் 16,45,000 ரூபாயும், 1976–77-ல் 65,24,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்பட்டது. இன்றைய தினம் 2,80,000 ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மணலி போன்ற இடங்கள் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தோடு கூடிய ஒரு புறநகர் பகுதி என்ற முறையில் வளர்ச்சி அடைய வழிகாணப்பட்டு அந்தத் திட்டம் நிறைவேற வேண்டுமென்று சொல்லும்போது அது 400 இலட்சம் அளவு செலவாகிற திட்டங்கள் என்று அறிக்கையில் தரப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அந்த வளர்ச்சி ஊக்குவிக்கப்பட வேண்டுமானால் ஒதுக்கப்பட்ட நிதி குறைவு என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி, தாம்பரம், ஆலந்தூர் இப்படிப்பட்ட பகுதிகளில் சென்னை நகரத்திற்குப் பக்கத்திலுள்ள பகுதிகள் வளர்ச்சியடைய வேண்டுமென்று சென்னை மாநகர வளர்ச்சித் திட்டத்தில் விரிவான ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. அவைகட்கு வளர்ச்சி நிதியும் ஒதுக்கப்படவில்லை. இன்னொரு பக்கத்தில் பார்த்தால் சென்னை நகரத்திற்குள் வளர்ச்சிப் பணிகள்





மாநகராட்சி மன்றத்தாலும் செய்யப்படுகின்றன. அவைகளுக்கான திட்டங்கள் எல்லாம் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழு இருக்கிறதே அந்தக் குழுவோடு கலந்து பேசி பல வளர்ச்சித் திட்டங்களை குடிதண்ணீர்த் திட்டம், கழிவு நீர்க் கால்வாய்த் திட்டம், புதிய சாலைகள் அமைப்புத் திட்டம் எல்லாம் இணைந்த உறவோடு செயல்படுத்தப்பட வேண்டும். அப்படிச் செயல்பட மாநகராட்சி மன்றத்திற்குத் தரப்பட்டிருக்கும் கடன் அல்லது உதவித் தொகை மிகக் குறைவாகத்தான் இருக்கிறது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது.

கோரிக்கை 57 என்ற தலைப்பில் கடன்கள் வழங்கப்படுவதைப் பார்க்கும்போது சென்னை மாநகராட்சிக்குக் கடனாக 334 லட்சம் ரூபாய்தான் பலவகைப் பணிகளுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதுமானதாக இல்லை. கடந்த 1976–77-ல் கூட திருத்த மதிப்பீடு 365 லட்சம் ரூபாய் ஆகும். மதுரை மாநகராட்சிக்குக் கடன்கள் வெறும் 12 லட்சம் அளவுக்குத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முன்னாலே 27 லட்சம் ரூபாய் அளவுக்கு ஓராண்டுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. நகராட்சிக் கடன்களைப் பற்றியும் இதிலேதான் பேச வேண்டியிருக்கிறது. தொகை கொஞ்சம் உயர்த்தப்பட்டிருந்தபோதிலும் தேவைகள் மிக அதிகமாக இருக்கின்றன. கும்பகோணம் போன்ற நகராட்சிகளில் கழிவு நீர்ச்சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோள் பல ஆண்டு காலமாக இருக்கிறது. அதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை. அப்படி நிதி ஒதுக்கப்பட்டிருக்குமானாலும் அந்த விவரங்களை எல்லாம் தனியாகத் தருவார்களானால், எந்தெந்த நகரசபைக்கு எவ்வளவு கடன் தரப்படுகிறது என்ற விவரங்கள் தரப்பட்டிருக்குமானால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முழு நிறைவு ஏற்பட்டிருக்க முடியும். அது வழங்கப்படவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டிய அவசியம் இருக்கிறது.

அடுத்து, சென்னை மாநகரத்தினுடைய போக்குவரத்து வளர்ச்சி குறித்து—எதிர்காலத்தில், 20 ஆண்டு காலத்தில் எப்படிப்பட்ட தேவை ஏற்படும் என்பதற்கு ஆய்வுகள் நடத்தப்பட்டன. போக்குவரத்தில் மிக அதிகமான தேவையை ஈடு செய்ய வேண்டியிருக்கிறது. அண்டர்கிரவுண்ட் ரயில்வே ஏற்படுத்துவது—நிலத்திற்கடியில் ரயில் போக்குவரத்தை உருவாக்க வேண்டுமென்பது கடந்த மூன்று ஆண்டு காலமாக மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தப்பட்ட ஒன்று. சென்னை கடற்கரை ஓரமாகத் தெற்கு வடக்கு திசையில் திருவொற்றியூரிலிருந்து திருவான்மியூர் வரை நீண்ட ரயில் பாதை அமைப்பது, சில இடங்களில் நிலத்திற்கு அடியில், சில இடங்களில் பக்கிங்காம் கால்வாய்க் கரையில், சில இடங்களில் கூவம் ஓரத்தில் என்ற முறையில் சென்னை நகரத்தின் போக்குவரத்து நெரிசலைப் போக்க அந்தப் போக்குவரத்துத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்பது கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று.

[திரு. க. அன்பழகன்] [1977 ஆகஸ்ட் 11

(பிற்பகல் 1—00)

கல்கத்தா போன்ற நகரங்களிலே இப்படிப்பட்ட திட்டங்கள்
நிறைவேறியிருக்கின்றன. இந்தத் திட்டம் மத்திய அரசினிடத்
திலே வற்புறுத்தப்பட்டு வந்த ஒன்று. அப்படி வற்புறுத்தப்பட்டு
வந்துங்கூட இந்த அரசாங்கம், மத்திய அரசாங்கத்தால் இது
ஏற்றுக்கொள்ளப்பட்டதா அல்லவா என்பதையும் அதற்கான
முதற்கட்ட செலவுத் தொகை இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்
கிறதா என்பதையும் சொல்லாமல் இருப்பது வருந்தத்தகுந்த
ஒன்று.

அது மட்டுமல்ல, நகரப் பகுதியினுடைய வளர்ச்சியிலே,
அந்த வளர்ச்சிக்காகப் பணியாற்றுகிறபோது புதிய நகரங்கள்,
துணை நகர்கள் இவை எல்லாம் உருவாவதற்கு மிகப் பெரிய
செலவில் புதிய கட்டடங்கள் உருவாக்குவதும் அந்த வகையில்
கட்டடத் தொழில் வளர்வதும் அவசியமான ஒன்று. அரசாங்
கத்தால் எத்தனை வீடுகள் கட்டப்படுகின்றன என்பதை எண்ணிப்
பார்த்தால் அதைவிட தனியார்கள் அவரவர்கள் தேவைக்கான
வீடுகளைக் கட்டிக் கொள்வதை ஊக்குவிக்கின்ற முறைதான் சமு
தாயத் தேவையை நிறைவேற்றக் கூடியதாக அமையும் என்பதை
உணரலாம். அரசாங்கம் செய்வது, தனிப்பட்டவர்கள் கட்டுகிற
வீடு முதலான கட்டடங்களை நோக்குமிடத்து மிகக் குறைவாகத்
தான் இருக்கும். அரசாங்கம் கட்டுவது அதைவிட அதிகமாக
இருக்க வேண்டுமென்பது இயற்கையும் அல்ல, முடியக்கூடியதும்
அல்ல.

1975-76-ஆம் ஆண்டில், பொருளாதாரத்தின் மெலிந்த
பிரிவினர்களுக்கும் குறைந்த வருவாய்ப் பிரிவினர்களுக்கும் கட்டப்
பட்ட வீடுகள் 5,506 ஆகும். ஆனால் 1977-78-ஆம் ஆண்டில்
இந்த இரண்டு பிரிவினர்களுக்கும் சேர்த்துக் கட்டப்பட இருக்
கின்ற வீடுகள் 6,580 என்பதை அமைச்சர் அவர்கள் கொடுக்கப்
பட்டிருக்கிற இந்த அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். இந்த
6,580 வீடுகள் யார் யாருக்காகக் கட்டித்தரப்படும், எத்தனை
என்ற விவரத்தைப் பார்க்கிறபோது, பொருளாதாரத்தின்
மெலிந்த பிரிவினர்களுக்கு 2,353 வீடுகளும், குறைந்த வருவாய்ப்
பிரிவினர்களுக்கு 1,227 வீடுகளும், நடுத்தர வருமானம் உள்ள
பிரிவினர்க்கு 1,119 வீடுகளும், பிரித்துத் தரப்படுகின்றன.
இவற்றையெல்லாம் கூட்டிப் பார்க்கிறபோது மொத்தம் 4,699
வீடுகள் வருகின்றன. இங்கே சொல்லப்பட்டிருக்கிற 6,580
வீடுகளில் மீதம் உள்ள வீடுகள் எப்படி எந்த இடத்தில் சேர்க்கப்
படும் என்பது தெரியவில்லை. உயர்ந்த வருமானம் உள்ளவர்
களுக்கு 1,800 ரூபாய் ஆண்டு வருமானம் பெறக்கூடியவர்களுக்கு
ஒதுக்கப்பட்டிருக்கிற வீடுகள் ஏறத்தாழ இந்த எண்ணிக்கையை
ஈடுசெய்யுமோ என்று நினைக்கிறேன். இப்படி ஈடு செய்யுமானால்
வீக்கர் செக்ஷன்ஸ், நலிந்த பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு
6,580 வீடுகள் என்று போட்டிருப்பது பொருந்தி வரவில்லை.
அதற்கான விளக்கம் தரப்படவில்லை.



1977 ஆகஸ்ட் 11] [திரு. க. அன்பழகன்]

அரசு ஊழியர்களுக்கு வாடகை வீடுகள் கட்டுகிற திட்டம்
இருந்தாலும்கூட அந்தத் திட்டத்திற்காக 200 லட்சம் ரூபாய்
ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பு இருந்தாலும் கூட அவை
யெல்லாம் எங்கெங்கே கட்டப்படும், எந்த எந்தத் தலைநகரங்
களிலே கட்டப்படும் என்ற விவரங்கள் இதிலே இருந்திருக்கு
மானால் அது எந்த அளவிற்குப் பயன் உள்ளதாக இருக்கும்
என்பதை என்னைப் போன்றவர்கள் அறிந்திட வாய்ப்பிருக்கும்.
அதுவும் தரப்படவில்லை.

காவலர்க்கு வீடுகள் கட்டப்படுவதாக, இந்த ஆண்டும் அந்தத்
திட்டம் எடுத்துக் கொள்ளப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்
கிறது. மொத்தம் உள்ள காவலர்கள் எவ்வளவு பேர், அவர்
களுக்கு வீடுகள் எத்தனை ஆண்டுகளில் கட்டப்படும் என்ற கருத்
துக்கள் குறிப்பிலே வரவில்லை.

குடிசை மாற்று வாரியப் பணிகளை ஊக்குவிக்கின்ற முறை
யிலே குடிசை மாற்றுப் பணி என்பது ஒன்று. குடிசைகள் உள்ள
காலனி அல்லது சேரிப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டங்களுக்
காக நம்முடைய அரசு மூலமாக செய்யப்படுகிற சில பணிகள்
இன்னொன்று, உலக வங்கியின் உதவியோடு விரைவுத் திட்டப்
பணிகள் என்ற முறையிலே மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்
படும் என்று சொல்லப்படுகின்றது. அந்த விரைவுத் திட்டப்
பணிகள் என்று சொல்லப்படுகின்ற கருத்துக்களோடு சேர்த்துப்
பார்க்கிறபோது இந்த வீட்டு வசதி பற்றிய அறிக்கையிலே இரண்
டாவது பக்கத்திலே முழு வசதிகள் அடங்கிய மனைகள் (Sites
and Services) திட்டங்களுக்கு ரூ. 2.25 கோடியும்,
குடிசை மாற்று வாரியத்தினுடைய குடிசைப் பகுதி மேம்
பாட்டுத் திட்டத்திற்கு 1.4 கோடியும் நிதி வகை செய்யப்பட்
டிருக்கிறது. மறுபடியும் மற்றொரு இடத்திலே இதைப் பார்க்கிற
போது பக்கம் 13-ல் ''குடிசைப் பகுதி மாற்றும் திட்டங்களுக்கு
1976-77-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 320
இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது'' என்ற கடந்த ஆண்டு செய்தி
யையும் சொல்லி, அதே பக்கத்தின் கடைசியில் "1977-78-ஆம்
ஆண்டில், குடிசை மாற்று வாரியத்தின் குடிசைப் பகுதி மாற்றுத்
திட்டங்களுக்கும், விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்
பாட்டுத் திட்டங்களுக்கும் உலக வங்கி திட்டங்களுக்கும் சேர்த்து
ரூ. 540 இலட்சம் ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ''
என்று இருக்கிறது. அங்கே 540 இலட்சம் என்று சேர்த்துப்
பேசப்படுகிறது. மற்றொரு பக்கத்திலே அதே செய்தியைப்
பார்க்கின்றபொழுது ''உலக வங்கித் திட்டம்'' என்ற தலைப்
பிலே ''நடப்பு ஆண்டில் ரூ. 140 இலட்சம் மதிப்பீட்டுச் செல
வில், 30 குடிசைப் பகுதிகளில் உலக வங்கித் திட்டம் மேற்
கொள்ளப்பட இருக்கிறது'' என்று வருகிறது. 140 இலட்சம்
என்பது முன்னேயே பேசப்பட்டு விட்டது. 365 இலட்சத்திலே
யே இது சேர்த்துப் பேசப்பட்டு விட்டது. மொத்தத் தொகை
எவ்வளவு என்று படித்துப் பார்க்கின்றபொழுது, நம்முடைய

[திரு. க. அன்பழகன்] [1977 ஆகஸ்ட் 11

வரவு செலவுத் திட்டத்தில் ஆராய ஒதுக்கீடு தந்து வருவதால், உலக வங்கி இந்தத் திட்டங்களுக்கு எதற்கு எவ்வளவு தருகிறது என்ற பட்டியல் இல்லாத காரணத்தினால் 540 இலட்சத்திலும் உலக வங்கியைப் பார்க்கிறோம், 140 இலட்சத்திலேயும் உலக வங்கியைப் பார்க்கிறோம். இங்கே அப்படிக் குடிசை மாற்றுத் திட்டம், குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்று வரும் இந்தத் திட்டங்களுக்கெல்லாம் தரப்படுகின்ற தொகையை இப்படிப் பல்வேறு இடங்களில் சொல்வதன் மூலமாக ஒரு குழப்பம் உண்டாக்கப்படுகிறது என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. எது எது எப்படி நிதி பெறுகிறது என்று இணைத்து அறிக்கை தருவதால் இந்தப் பிரச்னைகளை நல்லமுறையில் உணர்ந்து கொள்ள முடியும் என்ற முறையில் எண்ணிப் பார்த்து இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல அரசு ஊழியர்களுக்காக வீடு கட்ட் உதவும் திட்டம் என்பது ஒன்று அரசாங்கத் துறையிலே கட்டும் திட்டம் என்பது. கடன் வாங்கி வீடு கட்டுகின்ற திட்டத்தை ஊக்குவிக்கின்றபொழுது அவர்கள் வீடு கட்டுவதற்காக அரசு ஊழியர்கள் தங்களுடைய வருவாயைச் சேமித்து எதிர்காலத்தில் தங்களுக்குப் பாதுகாப்பு தேடிக்கொள்ள முடியும். அப்படி வீடு கட்ட கடன் கேட்பவர்களை வரிசையாக முறைப்படுத்தினாலும் 350, 400 பேர்களுக்குத்தான் ஒதுக்கியுள்ள அந்த நிதியிலிருந்து கடன் தர முடியுமே தவிர அதற்கு மேல் முடியாது. அந்தக் கடன் நிதியிலிருந்து 1,000 பேருக்காவது வழி செய்தால் அரசு ஊழியர்கள் எளிதாகக் கடன் பெற உதவுவதால் சேமித்து வைத்து வீடு கட்ட வேண்டுமென்ற எண்ணத்தை அவர்களுக்கு ஏற்படுத்த முடியும். அப்படி ஊக்கப்படுத்துகின்ற முறை இதில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளைக் கட்டும் இடங்களில் அதிலிருந்து வருமானம் வர வேண்டும். வருமானம் இல்லாமல் இருந்தால் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்படும் வீடுகளைப் பாதுகாப்பது (மெயின்டெயின்) செய்வது கடினம் என்பதால் சில இடங்களில் சில தொழில் நிலையங்கள், காட்சி அறைகள், வாடகைக்கு விடுவதற்கு அலுவலகக் கட்டிடங்கள் ஆகியவைகள் சேர்த்துக் கட்டப்பட வேண்டியது அவசியம் என்று ஏற்கனவே தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்ட நிலை இப்பொழுதும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. பக்கம் 16-ல் 'ஆதாயம் தரும் தொழில் திட்டங்கள்' என்ற தலைப்பிட்டு இருப்பது ''ஆதாயம் தரும் வருமானப் பணிகள்' என்று குறிப்பிட்டு இருக்க வேண்டும். வருமானப் பணிகளாக அவை இருக்க முடியுமே தவிர, தொழில் திட்டங்களாக இருக்க முடியாது: அது ஏதோ இண்டஸ்ட்ரீஸ் அல்லது பேக்டரிஸ் என்பது போன்று தொழில் திட்டங்கள் என்று தரப்படுவது பொருந்தாது



[977 ஆகஸட் 11] [திரு. க. அன்பழகன்]

வெளியூர்களில் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. அடுத்து ஏழை மக்கள் வீடு கட்டுவதற்கு உதவும் திட்டத்திற்காக 2 கோடி ரூபாய் வரையிலும் கூட, கிராமங்களிலே உள்ள மக்களுக்கு வீடு கட்டக் கடன் கொடுக்க மத்திய கூட்டுறவு வங்கி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வங்கி நிதியிலே 2 கோடி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது என்று இருக்கிறது.

அந்தத் தொடர் எழுதப்பட்டிருக்கின்ற 12-ஆம் பக்கத்திலே அரசு நிதி உதவி செய்வதைப் போல, கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் கடன் கொடுக்கும் திட்டத்திற்கு ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று இருக்கிறது. கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் கடன் கொடுக்கும் திட்டத்தில் 2 கோடி ஒதுக்கப்பட்டது என்றால் ஆங்கிலத்திலே இருப்பதற்கு மேற் சொன்ன கருத்து சரியாக இருக்கும். அந்தக் கூட்டுறவு வங்கிக்கு அதற்காக 5 இலட்சமும், 10 இலட்சம் வட்டிக்காக அரசு உதவி செய்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் திட்டங்களின் மூலந்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடுகள் வரும் என்று நான் கருதுகிறேன், மீனவர்களுக்கான வீடுகள் வரும் என்று நான் கருதுகிறேன்.

ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகள், மானியத் தொகை ஒதுக்கிக் கட்டப்பட்ட வீடுகள் அது ஏதோ 30,000 என்றும், 25,000 என்றும் சொல்லப்பட்டாலும்கூட, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர் ஒருவர் பேசுகையில் அவைகள் கோழிக்கூடு மாதிரி இருக்கிறது என்று சொன்னார்கள். இதுவே கோழிக்கூடு மாதிரி இருக்கிறது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதினால் (குறுக்கீடு) மன்னித்துக் கொள்ளுங்கள், நான் பெயரைத் தவறாகச் சொல்லிவிட்டேன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் பேசுகின்ற பொழுது கோழிக்கூடு மாதிரி இருக்கிறது என்று குறிப்பிட்டார். இதுவே கோழிக்கூடு மாதிரி இருக்கிறது என்றால் பங்களா கட்டினால்தான் முடியும். அப்படிப் பங்களா கட்ட யாராலும் முடியாது. கட்டப்பட்ட வீடுகளைப் பொறுத்தவரையிலேயும் இதுவரையிலே இந்தியாவிலேயே கேரள மாநிலம் உட்பட எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தரமான வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

(பிற்பகல் 1.10)

*திரு. பொ. உத்திராபதி: பேரவைத் தலைவரவர்களே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் கூறுவது, கோழிக்கூடு என்பதற்குக் காரணத்தை எங்களால் நிரூபிக்க முடியும். கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் நாங்கள் பங்களாக்கள் கேட்கவில்லை, மாடி, மாடியாகக் கேட்கவில்லை.

ஒரு குடும்பம் 5 பேர், 7 பேர் கொண்ட குடும்பம் இருப்பதற்கு வசதியாக வேண்டுமென்று கேட்டோமே தவிர, 10 பேர்கொண்ட குடும்பத்திற்கு, சின்ன கோழிக்கூடாக இருக்கிறது அந்தக் கட்டிடம். அதனால் கோழிக்கூடு என்று சொன்னோமே தவிர தவறாக எடுத்துச் சொல்லவில்லை.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வீட்டிலே கோழிக் கூடு அப்படித்தான் அமைத்திருப்பார் என்று கருதுகிறேன். கேரளாவிலே கட்டப்பட்ட வீடுகள் நிலைத்திருக்கவில்லை என்று அன்றைக்கு இருந்த அமைச்சர் சொன்னார். இடிந்தே போய் விட்டது என்று சொன்னார். இங்கே சிமெண்ட் இல்லாமல் கட்டப்பட்டது, அப்படிப்பட்ட கட்டிடங்கள் என்று சொன்னார்கள். குறைகள் இருக்கலாம். குறைகள் என்பது வேறு, நோக்கம் என்பது வேறு. தி.மு.கழக அரசின் நோக்கம் என்ன, அது தவறா என்பதைப் பார்க்க வேண்டுமே தவிர, வேறு எந்த மாநில அரசும் இந்தியாவிலேயே, அம்மாதிரி திட்டம் கொண்டு வந்ததாகத் தெரியவில்லையென்று டெல்லியிலேயிருந்து வந்த அன்றைய அமைச்சர்...............

*திரு. சோ. அழகர்சாமி : கேரளாவில் கட்டப்பட்ட வீடுகள் இடிந்து விட்டன என்று சொன்னார். கேரளாவில் கட்டப்பட்ட வீடுகள் மழைக் காலங்களில், தண்ணீர் வரக்கூடிய வாய்க்கால் ஓரங்களில் ஒன்றிரண்டு வீடுகள் அப்படி ஆகியிருக்கலாம். இப்பொழுது கூட, நாம் கட்டிய வீடுகள் ஒழுகிக் கொண்டிருக்கின்றன. பல இடங்களில் இதைப் பார்க்கலாம்.

திரு. க. அன்பழகன் : கேரள வீடுகள் பல இடிந்து விட்டன என்பதை ஒத்துக் கொண்டதற்கு நன்றி. ஆனால், தமிழ் நாட்டிலே கட்டப்பட்ட வீடுகள், டெல்லியிலேயிருந்து வந்த அமைச்சர்களால், வேறு மாநிலத்திலிருந்து வந்த அமைச்சர்களால், இந்த அளவுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டுவது அது வரவேற்கத்தக்கது என்று பாராட்டப்பட்டது. அதற்கு இந்த அறிக்கையிலே எதுவும் சொல்லப்படவில்லை. ரூ. 4,000 செலவில், ரூ. 3,500 செலவில், பொதுக்கிணற்றோடு, சிலவிடங்களில் பொதுக்கூடத்தோடு அந்த அடிப்படையிலே கட்டப்பட்ட வீடுகளைத் தொடர்ந்து கட்டுவதற்காக, தனியாக நிதி ஒதுக்கப்படவில்லை. அதற்கு நிதி மானியமாகத் தரப்பட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்த ஆண்டு தொடர்ந்து 10,000 வீடு கட்ட, அல்லது இவ்வளவு வீடு கட்ட நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

மீனவர்களுக்காகக் கடந்த இரண்டு ஆண்டு காலத்திலே ஒதுக்கப்பட்ட நிதி, இலவச வீடு கட்டுவதற்காக என்று பார்த்தால், பக்கம் 150-லே 1976–77-லே ரூ. 100 இலட்சம் அளிக்கப்



பட்டது. திருத்த மதிப்பீடு உட்பட. 1977–78-லே செலவு ரூ. 2,000 மட்டும்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக, மீனவர்களுக்காக வீடு கட்டுகிற திட்டம் இப்பொழுதில்லை. கடலோரத்தில் வாழ்கிறவர்களுக்கு, அதிகமாக ஆபத்துக்கு ஆளாகிறவர்கள் என்ற அடிப்படையில், அவர்களுக்கு நிதி உதவி கொடுத்து வீடுகள் கட்டுகிற திட்டம் ஏற்கனவே செயல் படுத்தப்பட்டது. இப்பொழுது கடனாகக் கொடுத்து, அதற்கான வட்டியை மட்டும் மாநில அரசு தந்து விடும், அல்லது கட்டுகிற செலவுகளுக்குக் கடன் தொகையைத் தருகிறவர்களுக்கு வட்டியை மாநில அரசு ஈடுகட்டலாம் என்ற முறையில் சொல்லப்பட்டுள்ளது. ஒரு வேளை, வேறு இனங்களிலே ரூ. 2 கோடி, ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படலாம். இந்த அறிக்கையிலே அந்த நிதி விவரம் இந்த இடத்திலே இல்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மீனவர்களுக்கும் என அரிசன ஹவுசிங் கார்ப்பரேஷன் ரூ. 3½ கோடிக்குத் தனியாக இடம் பெறுகிறது. அது இதிலே இடம் பெறுகிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை.

திரு. க. அன்பழகன் : அப்படியானால், மீனவர்களுக்கு வீட்டு வசதித் திட்டம் தீட்டுகிறபொழுது, இதற்கென்று தலைப்பிட்டு, இன்னின்ன செலவு செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டுத் தந்திருக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பட்ஜெட்டைப் பொறுத்தவரையிலே, 3 வால்யூம்கள் தயாரிக்கப்பட்டு, குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். இந்த விளக்கக் குறிப்பைப் பார்க்கும் போது, தொழிலாளர்களுக்கு என்று ஒரு ஐட்டம் வருகிறது.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, வீட்டு வசதி என்
பது இந்தத் தலைப்பு. அந்தத் திட்டத்தில் மீனவர் வீட்டு வசதித்
திட்டம் என்பதும் இடம் பெற வேண்டிய ஒன்று. அந்தத் தலைப்
பிலே, இது கடனாகத் தரப்பட்டாலும் கூட, ஏதாவது தந்துள்ள
வேறு தலைப்பிலே இப்படி தரப்படுகிறது என்ற குறிப்பு இருக்கு
மானால் ஒரு வகையிலே இந்த நிறைவு ஏற்பட முடியும். இந்த
ஆண்டு ரூ. 3 கோடி நிதி கொடுத்தாலும் கூட நீங்கள் கடன்
திட்டம் துவங்கியிருப்பதைப் பார்க்கும்போது, கடன் கொடுக்
கப்படுகிற நிலையில் பழங்குடியினர், தாழ்த்தப்பட்டவர்கள், மற்ற
வர்களும் இப்படித்தரும் கடன் வசதியை ஏற்றுக் கொள்ள
வேண்டுமென்ற நிலையை நான் ஏற்றுக் கொள்கிறேன். எல்
லோருக்கும் எல்லாமே இலவசமாகச் செய்ய முடியும் என்ற
நம்பிக்கை எனக்கில்லை. ஆனால், மீனவர்களைப் போன்று செய்
யப்பட வேண்டியவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்

களுக்காக இந்தத் திட்டம் தொடரப்பட வேண்டுமென்பதை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அடுத்து நான் சொல்ல விரும்புவது சென்னை நகரத்திலே வீடு கட்டுகிற பணி ..........

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் சொன்னது கடன் வசதி அல்ல. கிரான்ட்—அரிசனங்களுக்குக் கொடுப்பதைப் போல, மானியம்.

திரு. க. அன்பழகன் : அமைச்சர் அவர்கள் அந்த 3 கோடி ரூபாய் அப்படி இலவசமாக வீடு கட்ட ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் கடன் தொகை என்று இந்த இடத்தில் வருகிறது. கடன் தொகை என்று வருகிற போது இனி எதிர் காலத்திலே கடன் வழங்குகிற முறையிலே மட்டும் செய்ய எண்ணியிருப்பார்களோ என்பது எனக்குள்ள சந்தேகம். ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகள் போக மிச்சம் உள்ள வீடுகளைக் கட்டிக் கொள்ளத்தான் நிதி ஒதுக்கப்பட்டிருக்கக் கூடும் என்று கருதுகிறேன்.

அடுத்து நான் வீடுகட்டும் பணி அடியோடு நின்று போய் விட்டதை நினைவுபடுத்துகிறேன். மிக முக்கியமான காரணம் நகரப் புறத்திலே வாழ்கிற மக்கள் அதிக சொத்து சேர்க்க இடமிருக்கக்கூடாது என்ற கொள்கையுடன் ஆரம்பித்து ஏராளமான வீடுகளைச் சிலர் கட்டி பெரும் சொத்தாக வைத்திருக்கிறார்கள் என்று கூறி, 'அக்ரிகல்சுரல்' லேண்டு சீலிங்' போல் நகரிலும் வரவேண்டுமென்று சொன்னார்கள். இப்போது இது எந்த அளவுக்கு உருவாகியிருக்கிறது என்று சொன்னால், ஒரு மனை $3\frac{1}{2}$ கிரவுண்டு 4 கிரவுண்டு இருக்கும் என்றால் இது அதிகமாக இருக்கிறது என்று ஆய்ந்து பார்க்கிற நிலைமை ஏற்பட்டு, அந்த வீட்டுமனை அளவு கணக்குப் பார்க்கவேண்டுமென்று சொல்லப்பட்டு, அது வரையில் புது வீடு கட்டும் அனுமதி வழங்குவதை நிறுத்தியதால் இன்றைய தினம் வீடு கட்டுகிற பணி அடியோடு தடைபட்டிருக்கிறது. ஏற்கனவே இந்திய அரசாங்கத்தின் சார்பில் அர்பன் லாண்டு சீலிங் என்ற முறையில் சட்டம் போட்டு, இடைக்காலத்திலே குடியரயத் தலைவர் ஆட்சியிலே மாநிலத்தில் திணிக்கப்பட்டு உள்ளது. அந்த சட்டம் மறுபரிசீலனை செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்கிறேன், அரசாங்கம் எடுத்துக் கொள்ளக்கூடிய நிலையிலேயுள்ள நிலங்களை கட்டாயமாக அதாவது குறைந்த பட்ச அளவு சேர்ந்தாற்போல் இருக்கிற காலி நிலத்தை, ஒரு ஏக்கர் 2 ஏக்கருக்கு குறையாத அளவுக்கு அளவுள்ள நிலங்களை அரசு எடுத்துக் கொள்வதற்குக் குறித்திடும் என்ற முறையில் உச்ச வரம்பு சட்டம் நோக்கம் உடையதாக இருக்க வேண்டுமே தவிர, வீட்டுக்கு வீடு, தாழ்வாரத்துக்குத் தாழ்வாரம், மாட்டுக் கொட்டகை, கார் ஷெட் இவற்றின் பரப்பை எல்லாம் ஆய்ந்து கொண்டிருக்குமானால், எந்த வகையிலும் பயன்பட முடியாது





என்று குறிப்பிட விரும்புகிறேன். 20, 30 வீடுகள் வைத்திருக்கிறார்கள் என்றாலும் இந்தச் சட்டம் அவர்களுக்கு விதி விலக்கு. இன்னொருவர் வைத்துள்ள 4 வீட்டு மனைகள் உள்ள இடத்திலே விதிவிலக்கு கிடையாது. அரசாங்கத்திலே இந்தச் சட்டத்தை முறையாக நிறைவேற்றமுடியாத காரணத்தாலேயே, வீடு கட்டுகிற பணி தடைபட்டு இன்றைக்கு நின்று போயிருக்கிறது. அதன் காரணத்தாலே டவுன் பிளானிங் துறை மூலமாக நகர வளர்ச்சி ஏற்படக்கூடிய அடிப்படையில் இந்த சட்டத்தை மறுபடியும் ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுத்து சென்னை போன்ற நகரத்திலே ஓராண்டுக்கும் மேலாக அடியோடு நின்ற வேலைகளைத் தொடர வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வீட்டு வசதி வாரியத்தின் மூலம் தரப்பட்ட நிலங்களுக்கு 1967-லே மனைக்கு 5,500 ரூபாய் விலை போட்டு 'டென்டேடிவ்' என்று சொல்லப்பட்டு 1969-லே ஏறத்தாழ 6 ஆயிரம் ரூபாயாகவும் பின் 1974-லே 7,800 ரூபாயாகவும் உயர்ந்து இடையிலே குடியரசுத் தலைவர் ஆட்சியிலே 10,984 ரூபாயாக 1977-ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ம் தேதியிலே உயர்த்தப்பட்டிருக்கிறது. ஒரு நிலத்தை அந்த நிலத்திலே வீடு கட்டி வாழ விரும்பும் நடுத்தர மக்களுக்குத் தரும்போது போடப்படுகிற மதிப்பு ஒரு சிறு அளவாக 20 சதவிகிதம் அல்லது 25 சதவிகிதம் விலை உயர்ந்தால் நியாயமாகும். ஆனால் வளர்ச்சித் திட்டம் என்ற பெயரிலே 2 மடங்கு அளவு விலையை உயர்த்துகிறபோது மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்ட வேண்டிய கால கட்டத்தில் கட்ட முடியாமல் திண்டாடுகிறார்கள். அரசாங்க ஊழியர்கள் நிலையான வருமானம் பெற்றாலும் கூட, வருமானத்திலே மிச்சம் பிடிக்கிற சக்தி இல்லாத காரணத்தாலே அடிமனை விலை இது தான் என்று முன்னதாகத் தீர்மானிக்கப்படாத நிலையிலே மிகப் பெரிய தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அதுவும் குடியரசுத் தலைவர் ஆட்சி காலத்திலே இங்கு உயர்த்தப்பட்டது என்ற காரணத்தினாலே மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வியாசர்பாடியில் பர்மா அகதிகளுக்கு வீடு கட்டித் தருவதாகச் சொல்லி ஒரு வீட்டை அடையாளத்திற்குக் கட்டி அதே முறையிலே வீடு கட்டித் தருவதாக சொல்லி, அதற்கான ஆணை 1976 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ம் தேதியிலே அவர்களுக்குத் தரப்பட்டது.

(பிற்பகல் 1.20.)

பத்து லட்சத்து இருபத்தொன்பதாயிரத்து நூறு ரூபாய் அதற்காக நிதி செலுத்தப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவ ரால். அதைக் கொண்டு ஹவுசிங் போர்டு வீடு கட்டித் தர வேண்டும். பர்மா அகதிகள் வியாசர்பாடி ஏரிப் பகுதியில்

இருப்பவர்க்கு இந்தத் திட்டத்தின் மூலமாக வெள்ளத்திலிருந்து பாதுகாப்பு கிடைக்கும் என்ற காரணத்தால், அதை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர்கள் வேலையிலிருந்து விடுவிக்கப்படுகின்ற கால கட்டத்தில், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய கிராசுவடி, பென்ஷன், அல்லது அப்படிப்பட்ட அவர்களுக்குத் தரப்பட வேண்டிய உதவித் தொகைகள் கிடைக்க நீண்ட காலம் ஆகிறது என்று வருத்தப்படுகிறார்கள். 2, 3 ஆண்டுகள் ஆகிறது என்று தெரிவிக்கிறார்கள். அப்படி ஆகாமல், 6 மாதத்திற்குள்ளாக, அவர்களுக்கு அந்த உதவித் தொகையை கிடைக்கச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியில் பணியாற்றுகிறவர்கள், விபத்தில் இறந்து போவார்களேயானால், அரசு அலுவலர்களுக்குத் தரப்படும் 10,000 ரூபாய் உதவித் தொகை அவர்கள் குடும்பத்திற்குக் கால தாமதமாகத் தரப்படும் நிலை இருக்கிறது. ஏறத்தாழ ஓராண்டுக்கு மேல் ஆகிறது. வாரிசு உரிமையைச் சரிபார்ப்பதில் தாமதப்படுத்துகிறார்கள் என்று கூறப்படுகிறது. அது விரைவுபடுத்தப்பட வேண்டும். காலம் இடம் தராத காரணத்தால் இந்த அளவோடு உரையை முடிக்க விரும்பி, அடுத்த ஆண்டிலாவது உள்ளாட்சித் துறை என்பது நகராட்சித் துறை உள்ளிட்ட உள்ளாட்சித் துறையாக அமைய வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன்.

## 3. அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி.

**(ஆ) விவசாயச் சங்கத்தினர் மேற் கொள்ள இருக்கும் போராட்டங்களைக் கைவிடக் கோரி போக்குவரத்துத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவை 82-வது விதியின் கீழ் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையை சமர்ப்பிப்பார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகள் நலனில் மிகுந்த அக்கறையுடன் செயல்படுவது இவ்வரசு. பொறுப்பேற்றுக் கொண்ட ஒரு சில நாட்களிலேயே விவசாய மின் கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு 16 பைசா என இருந்ததை 14 பைசா எனக் குறைத்து சிறு விவசாயிகளுக்கு நன்மையைத் தேடித் தந்தது. ஏற்கனவே பெரு நட்டக்கில்





இருந்து வரும் மின்வாரியம் ஏற்கனவே இருக்கும் ரூ. 30 கோடி இழப்பிற்கு மேல் இந்த மின் கட்டணக் குறைப்பால் ரூபாய் இரண்டரை (ரூ. 2½) கோடிக்கு இழப்பாகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் அண்மையில் வெளியிட்ட வரவு செலவு திட்டத்தில் ஏற்கனவே விவசாயப் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட வரியையும் இந்த அரசு வெகுவாகக் குறைத்துள்ளது. முதல் வகை, இரண்டாவது வகை பாசனங்களின் கீழ் உள்ள நிலங்களுக்கு, ஏக்கருக்கு முறையே ரூ. 12-லிருந்து ரூ. 10 ஆகவும், ரூ. 10 லிருந்து ரூ. 8 ஆகவும் ஒவ்வொரு பயிருக்கும் கூடுதல் பாசனக் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் ஆகிய வணிகப் பயிர் களுக்கு தனித் தீர்வையை ரூ. 20-லிருந்து ரூ. 15 ஆகக் குறைத் துள்ளோம். புகையிலை, மிளகாய், பருத்தி, நிலக்கடலை ஆகிய பயிர்களுக்கு, ஏக்கருக்கு ரூ. 12.50 என்று இருந்த தனித் தீர்வை யை அறவே நீக்கிச் சலுகை செய்துள்ளோம். மேலும் 1386 ஆம் பசலிக்கான தனித் தீர்வையை அறவே அரசு ரத்து செய்து சலுகையளித்துள்ளது.

விவசாயிகளுக்கு இன்னும் பல குறைகள் இருக்கின்றன என் பதும் அரசுக்குத் தெரியும். அவைகளையெல்லாம் ஆராய்ந்து படிப்படியாகத் தீர்ப்பதற்கு இந்த அரசுக்கு அவகாசம் தேவை என்பதை மாற்றாரும் மறுக்க முடியாது. இருப்பினும் விவசாய சங்கத்தின் பிரதிநிதிகளைச் சந்திக்க அரசு எப்போதும் தயாராக உள்ளது என்பதும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி விவசாய சங்கப் பிரதிநிதிகள் மாண்புமிகு முதல்வர் அவர்களை ஆகஸ்டு 7, 8 தேதிகளில் சந்தித்துப் பேசினர். இம்மாதம் 10-ம் தேதி சென்னையில் நடக்கவிருந்த விவசாயிகள் பேரணிக்கு லாரிகளில் ஆட்களை ஏற்றிவர அனுமதி கோரினர். அண்மைக் காலங்களில் லாரிகளில் வருகின்ற ஏழை மக்களில் பலர் ஆபத்துக்குள்ளாகி உயிர் இழக்கின்ற பரிதாப நிலை தொடர்ந்ததன் காரணமாக முன்பிருந்தே அமுலில் இருந்து வரும் சட்டத்தின்படி லாரியில் பொது மக்களை ஏற்றிவர அனுமதி அளிப்பதில்லையென அரசு எடுத்துள்ள முடிவை அவர்களிடம் கூறப்பட்டது. பிறகு பேருந் துகள் மூலம் விவசாயிகள் சென்னைக்கு வர அனுமதி கேட்டனர். அரசு அதை ஏற்றுக் கொண்டது. சம்பந்தப்பட்ட அரசு அதிகாரி களுக்கும் சென்னையில் நடக்கவிருக்கும் இத்தகைய பேரணிக்கு எவ்வித இடையூறும் உண்டாக்க வேண்டாமென்று தெரிவிக்கப் பட்டது. ஆனால் இப்பொழுது லாரிகளில் ஆட்களை ஏற்றிச் செல்ல முன்பே இருந்த பொதுத் தடையை அமுல் படுத்துவதை எதிர்த்து, வேண்டுமென்றே தங்களுக்கு எதிராகத்தான் இது

[திரு. சி. பொன்னையன்] [1977 ஆகஸ்ட் 11

கொண்டுவரப்பட்டது என திரித்துக் கூறி, போக்குவரத்து வசதிகளை தடை செய்து பொது மக்களுக்கு இடையூறு செய்ய முயற்சிகள் நடப்பதாகத் தெரிகிறது.

இத்தகைய போக்கின் விளைவாக பாதிக்கப்படுவது பொது மக்களும் ஏழை எளிய மக்களும் தான் என்பது அனுபவம் காட்டும் உண்மை. அதுவும் குறிப்பாக எந்த விவசாயிகளின் நலனுக்காக இத்தகைய போராட்டங்கள் என்று சொல்கிறார்களோ அத்தகைய ஏழை விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களுமே இதனால் பாதிக்கப்படுகின்றனர்.

போக்குவரத்து வசதிகள் தடைபடுவதன் மூலம் வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள், படிப்புக்குச் செல்லும் கிராமப்புற மாணவர்கள், மருத்துவமனைக்கு அவசரமாக கிராமங்களிலிருந்து செல்லும் தாய்மார்கள் ஆகியோரே பெரிதும் அவதிக்குள்ளாவர். இதை நன்குணர்ந்து இத்தகைய வன்முறைப் போராட்டங்களுக்கு பொது மக்களும் விவசாயப் பெருங்குடி மக்களும் ஆதரவு நல்கிட வேண்டாமென அவையின் மூலம் கேட்டுக் கொள்கிறோம். வன்முறை நடவடிக்கைகள் எந்த ரூபத்தில் வந்தாலும், எத்தகையோர் ஈடுபட்டாலும், வன்முறையைத் தவிர்த்து பொது மக்கள் நலனைப் பேண வேண்டியது ஒரு அரசின் தலையாய கடமையாகும். ஆகவே இந்த அரசு அத்தகைய வன்முறையாளர்கள் மீது பொதுமக்களின் நலன் கருதி தகுந்த நடவடிக்கைகளை மேற் கொள்ளும்போது, பொது மக்களின் ஆதரவையும் அவையின் மூலம் வேண்டுகிறோம்.

இந்தக் கருத்துக்களை மனதில் கொண்டு விவசாயச் சங்கத்தினர் இன்று இரவு முதல் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் பற்றி உடனே மறு பரிசீலனை செய்து மக்களுக்கு இடையூறு தரக்கூடிய போராட்டங்களை கைவிடுமாறும் அவையின் மூலம் கேட்டுக் கொள்கிறோம்.

உண்மை நிலையினை உணர்ந்து இந்த அரசு ஏழை விவசாயிகளுக்காக எடுத்துள்ள நல்ல முடிவுகளுக்கு ஆதரவு தருமாறும் அனைத்து மக்களையும் கேட்டுக் கொள்கிறோம். பொதுமக்கள் தங்களின் அன்றாட வாழ்க்கை முறையில் சீராக கடமையை நிறைவேற்றிட அரசு எல்லா அளவிலும் பாதுகாப்புத் தரும் என்று அவையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஒரு ஐயப்பாடு எனக்கு. இப்போது வைக்கப்பட்டது 82-வது விதியின்படி ஒரு அறிக்கை என்றால் இந்த அவைக்குத் தெரியாத புதிய செய்திகளைச் சொல்லுவதற்குதான் அறிக்கை வைக்கப்பட



1977 ஆகஸ்ட் 11] [திரு. மு. கருணாநிதி]

வேண்டும். இது விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டிறவர்களுக்கு ஒரு வேண்டுகோளாக உள்ளதால், எப்படி 82-வது விதியின்படி வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மன்னிக்க வேண்டும். A Statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Speaker. இன்று இரவு 12 மணியிலிருந்து போராட்டம் ஆரம்பிப்பது என்று விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய முக்கியமான பிரச்னை என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகையால் அதைக் குறித்து உடனடியாக அந்தப் போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்டுக் கொள்வதற்காகவும், பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்காகவும் போராட்டத்தின் மூலம் ஏற்படக்கூடிய விளைவுகளைத் தவிர்ப்பதற்காகவும் இப்படிப்பட்ட ஒரு அறிக்கை தேவைப்படுகிறது என்ற காரணத்தால் அந்த அறிக்கை படிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. சுப்பு: பாய்ன்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாய்ன்ட் ஆப் ஆர்டர் வேண்டாம். பல தடவை சோதித்துப் பார்த்து விட்டுத் தான் வேண்டாம் என்று சொல்லுகிறேன். தயவு செய்து உட்காருங்கள்.

## (6) 1977-78 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும்—வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்பகுதி வளர்ச்சி, வீட்டு வசதி, தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் என்ற மூன்று மானியங்களின் மீதும் பங்கு கொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் மிகவும் நல்ல முறையில் பேசினார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பல்வேறு கருத்துக்கள் வழங்கப்பட்டாலும் பொதுவாக எல்லோருமே மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு தான் பேசினார்கள். All roads lead to Rome என்று சொல்லுவது போல், பல்வேறு பாதைகள் இருந்தாலும் இறுதியாக ரோமாபுரிக்குச் செல்லுவது என்பதைப் போன்று, எல்லோரும் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். இறுதியாக மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று பேசிய காரணத்தால், மீண்டும் அவர்களுக்கு நன்றியறிதலையும், பாராட்டுதலையும், வயதின் காரணமாக தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த அமைச்சர

வையில் நான் தொழிலாளர் நல அமைச்சர் பொறுப்பை புரட்சித் தலைவர் என்னிடத்தில் கொடுத்த பொழுது என்னை அழைத்துச் சொன்னார்கள்.

__திரு. ஏ. ரகுமான்கான்:__ தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். ஆல் ரோட்ஸ் லீட் டு ரோம். எல்லாப் பாதைகளும் ரோமாபுரிக்குச் செல்லுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தவறான பாதையாக இருந்தால் ரோமாபுரிக்குப் போகாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

__மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:__ The implied meaning of the expression "all roads" means, "proper roads"

இதுவரையில் நீங்கள் கட்சியினுடைய தொழிற்சங்கப் பேரவையின் பொதுச் செயலாளராக இருந்தீர்கள். அப்போது நீங்கள் செயல்பட்ட முறைக்கும் அமைச்சரான பிறகு செயல்பட வேண்டிய முறைக்கும் வித்தியாசம் உள்ளது. இப்போது நீங்கள் எல்லா அரசியல் கட்சிகளையும் தொழிற்சங்கங்களையும் தொழிற் சங்கத் தலைவர்களையும் ஒரே முறையில் பாவிக்க வேண்டும், வேறுபாடு காட்டக்கூடாது, என்ற சிறந்த அறிவுரையை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

[பிற்பகல் 1-30]

அதன்படி இன்று 1-30 மணி வரையில் நடந்து கொண்டிருக்கிறேன் என்று நான் நம்புகிறேன்.

__மாண்புமிகு பேரவைத்தலைவர்:__ பேரவையின் அனுமதியுடன், அவையின் நேரத்தை மேலும் நடவடிக்கைகளை நடத்த நீட்டிக்கிறேன்.

__திரு மு. கருணாநிதி:__ எனக்கு ஒரு பெரிய சந்தேகம். அமைச்சர் அவர்கள் சொன்னபோது, முதல் அமைச்சர் அவர்கள் சொன்னபடி இன்று 1-30 மணி வரையில் நடந்து கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். 1-30 மணிக்குமேல் எப்படி நடப்பார்?

__மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:__ மேலும் தொடர்ந்து அப்படி நடந்து கொள்வேன் என்றும் உறுதி கூறுகிறேன். அதற்கு 'பௌண்டேஷன், இன்ப்ராஸ்ட்ரக்ச்சர்' போடுகிற வகையிலே நான் அமைச்சர் பொறுப்பை ஏற்றவுடனே எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களையும் சென்று பார்த்தேன். அவர்களுடைய ஆதரவையும் ஆலோசனைகளையும் கேட்டிருக்கிறேன். சிலயிடங்களில் அலுவலகத்தில் அவர்கள் இல்லை என்று சொன்னால் இல்லத்திலேயே சென்று பார்த்திருக்கிறேன். மருத்துவ





மனையிலேகூட சென்று ஆதரவு தேடியிருக்கிறேன். நான் அவர்களிடம் சொன்னதெல்லாம், 'help me to help you.' 'You' என்று சொல்லும்போது தொழிலாளர் வர்க்கத்திற்காக இந்த அரசு உதவி செய்வதற்காக நீங்கள் எங்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று நான் கேட்டபோது என்ன அது என்று கேட்டார்கள். ஒரு பிரச்னையை நீங்கள் எழுப்பும்போது அந்தப் பிரச்னையில் தொழிலாளர்கள் வெற்றிபெறுவதற்குள்ள பாயின்ட்கள், புள்ளிவிவரங்கள், மற்றக் காரியங்களை எல்லாம் எங்களுக்குச் சொல்லி 'பீட்' (feed) செய்தால் அதிகாரிகள் கொடுப்பதையும் வைத்து நீங்கள் சொல்வதையும் அதற்கு நல்ல மதிப்பு கொடுத்து கன்ஸிலியேஷன் நடத்தி வெற்றி தேடித் தருவதற்கு உதவியாக இருக்கும் என்று நான் சொன்னேன். அது தொடர்ந்து நடைபெறும் என்று நான் கூறுகிறேன். ஏனென்றால், இன்றைய தினம் விவாதத்தில் அந்த உயர்ந்த பண்பாட்டையும் நான் பார்த்தேன். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

விவாதத்தில் இறுதியாகப் பேசிய பேராசிரியர் அவர்கள் நகர்ப்புற வளர்ச்சி பற்றியே அதிகமாகப் பேசினார்கள். இறுதியாகச் சொன்னதை முதலில் வைத்துக் கொண்டு பிறகு வீட்டு வசதி, இறுதியில் தொழிலாளர்கள் நலன்—பாக்டரீஸ் என்பதைப்பற்றிப் பேசலாம் என்று கருதுகிறேன்.

பேராசிரியர் அவர்கள் எந்தப் பாணியில் ஒதுக்கப்பட வேண்டும், எந்த வகையில் எல்லாம் தரவேண்டும் என்ற சிறந்த ஆலோசனையைச் சொன்னார்கள். அது பரிசீலிக்கப்பட்டு ஏற்ற முடிவுகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். வியாசர்பாடியில் உள்ள பர்மா அகதிகளுக்கான வீட்டு அமைப்பைப் பற்றிச் சொன்னார்கள். அங்கே 3,100 குடும்பங்கள் இருக்கின்றன. தனித்தனியாக வீடுகள் அமைப்பது என்றால் அதில் சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே

Taking into consideration the density of the population of the Madras City—

மதராஸ் நகரில் உள்ள மக்கள் தொகை நெருக்கத்தை மனதில் கொண்டு மூன்று அடுக்கு மாடமாக வைத்தால்தான் அது முடியும் என்ற காரணத்தால் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் அங்கே இருப்பவர்கள் தனித்தனியாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்தப் பிரச்னை பரிசீலிக்கப்படும்.

திரு. நல்லதம்பி அவர்களுக்கும் அதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னையில் இருக்கக்கூடிய வீடுகள் கட்டுவதற்கு தாமதமாகிறது என்று பேராசிரியர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். 1,300 வரைபடங்களுக்கு அனுமதி தரவேண்டியிருக்கிறது. தேங்கியிருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். அதற்காக அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அந்த வேலைகள் துரிதமாக நடக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சையை பொறுத்தவரையில் மாஸ்டர் ப்ளான்—-

A master plan for Thanjavur had already been prepared last year and it is under consideration தயார் செய்து அது பரிசீலனையில் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மதுரையை பொறுத்தவரையில் மாஸ்டர் ப்ளான் தயார் செய்து அது பரிசிலனையில் இருக்கிறது. திருச்சிக்கு பின்னர் பரிசீலனை செய்யப்படும். முனிசிப்பாலிட்டிகளைப் பொறுத்த வரையில், என் சொந்த ஊராகிய தஞ்சாவூரைச் சேர்ந்த அருமை சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் நடராசன் அவர்கள் அங்கே சினிமாக் கொட்டகை கட்ட வேண்டும் என்றும் கல்யாண மண்டபம் வேண்டும் என்றும் அதற்கு அதிகாரம் தேவை என்றும் சொன்னார்கள். அதை அந்தந்த முனிசிப்பாலிட்டிகள் செய்ய வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருப்பவர்கள்—மன்னார்குடியில் பஸ் ஸ்டாண்ட் கட்டுவது, திருத்துரைப்பூண்டியை முனிசிப்பாலிட்டியாக்குவது, நாகப்பட்டிணத்திலிருந்து நாகூரை தனியாகப் பிரிக்க வேண்டும் என கேட்டிருக்கிறார்கள். நாகூரின் வருமானம் இரண்டு லட்சம் ரூபாய், எனவே அதைப் பிரிப்பது சாத்தியமல்ல. முனிசிப்பல் எல்லைகளுக்குள்ளே பஸ் ஸ்டாண்ட்ஸ் போன்றவை கட்டுவது அங்குள்ள முனிசிப்பாலிட்டி அதிகாரங்களுக்கு உட்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எம்.எம்.டி.எ. பற்றி பேராசிரியர் அவர்கள் தெளிவாக சொன்னார்கள். ரயில் போடுவதைப்பற்றி சொல்லப்பட்டது. இதற்கான வரைபடம் எல்லாம் தயாராக இருக்கிறது. பீச் ஸ்டேஷன், போர்ட், பார்க் இந்த இடங்களை எல்லாம் குறிப்பிட்டு போடப்பட்டிருக்கின்ற வரைபடம் என்னிடத்தில் தயாராக இருக்கிறது. (வரைபடத்தை சபையில் காட்டினார்கள்) இந்தத் திட்டத்தை இந்த அரசு ஏற்றுக்கொண்டு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும். மத்திய அரசின் அனுமதி கிடைத்தபின் இதற்கு ஆவன செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மற்றும் மணலித் திட்டத்தைப் பற்றி பேராசிரியர் அவர்கள் அருமையான கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள்.





அதை இந்த அரசின் கொள்கைகளோடு இணைத்துப்பார்த்து பல நல்ல முடிவுகளை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து வீட்டு வசதியைப் பற்றி பல உறுப்பினர்களும் பேசினார்கள். அரிசனங்களுக்கு கொடுக்கப்படும் இரண்டு கோடி ரூபாய் " இன்ட்ரஸ்ட் ப்ரீ " ( Interest free ) அதாவது வட்டியில்லாமல் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முக்கியமாக இதில் 4,000 பேர்கள் பெறுபவர்கள் என்று சொல்லப்பட்டிருந்தாலும் 8,000 —பேர்கள் பலன் பெறுவார்கள். ஒரே நேரத்தில் 8,000 குடும்பங்களில் உள்ளவர்கள் பலன் பெறுவார்கள். அதற்குத் தகுந்த முறையில் "பேஸ்ட் புரோகிராம்" அளவில் இது செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களும் இதைப்பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

வீட்டுவசதி வாரியத்தில் நான்கு வகைகளில் பிரித்து, 'ஹைர் பர்ச்சஸ் ஸிஸ்டம்' ( Hire Purchase System ) மூலம் வீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் முக்கியமாக ஸ்லம் க்ளியரன்ஸ் போர்டு, ஸ்லம் இம்ரூவ்மென்ட் இவைகளில் மாண்பு
மிகு உறுப்பினர்களுடைய கவனத்தை நான் ஈர்க்க விரும்புகிறேன்.
பல சங்கடமான உண்மைகளை இதில் தெரிவிக்க வேண்டியிருக்
கிறது. குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகளைக் கட்டிக்
கொடுக்கும்போது, குடிசைகளில் இருந்தவர்களுக்கு வேறு
இடத்திற்கு போவதற்கு 50 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அத்
துடன் புகைப்படம் எடுத்து அத்தாட்சியும் கொடுக்கப்படுகிறது.
பின்னால் கட்டிடம் கட்டிய பின்னால் அவர்களை அழைத்து வீடுகளை
கொடுத்து வருகிறோம். இது தான் திட்டம். ஆனால் அண்
மையில் சில கசப்பான விஷயங்கள் இங்கு சொல்லப்பட்டன.
அவை உண்மையல்ல, குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்
படுகின்ற வீடுகளில் ஏழைகள்தான் இருக்க வேண்டும் என்று
இருக்கிறது. 'peopl: in t:e lower rung of the ladder'
இதில் இருக்க வேண்டியவர்கள் மிகமிக ஏழைகள். அதாவது
நடுத்தெரு நாராயணன்களாக இருக்கின்றார்களே அவர்களுக்கு.
முறுக்கு மசால்வடை விற்றுக்கொண்டிருக்கிறார்களே அவர்களுக்கு,
வண்டி இழுத்துக் கொண்டிருக்கிறார்களே அவர்களுக்கு, கல்
உடைக்கும் தொழிலாளர்கள் இருக்கின்றார்களே அவர்களுக்கு.
இப்படிப்பட்டவர்களுக்கு இந்த வீடுகளைக் கொடுக்கவேண்டும்.
இதல்லாமல் வேறு பலரும் இந்த வீடுகளில் இருந்து கொண்டிருக்
கிறார்கள். அது சரியா தவறா என்பது வேறு விஷயம். இப்
போது இருக்கக்கூடிய, நான் கூறிய இந்த சிறுபான்மையோர் 10
ரூபாய் கொடுக்கிறார்கள். என்னுடைய அபிப்பிராயம் இந்த,

10 ரூபாய் என்பதே அதிகம்தான். என்னிடம் கூட நான் அமைச்சராக ஆவதற்கு முன்பு என் பாக்கெட்டில் 10 ரூபாய் சேர்ந்தாற்போல் இருந்தது இல்லை. (சிரிப்பு) இப்போது ஆயிரம் ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. இப்போது 10 ரூபாய் இருக்கலாம். இதற்கு முன்பு இரண்டு ரூபாய். நான்கு ரூபாய்க்கு மேல் இருந்ததில்லை. காரணம் பஸ்ஸில்தான் எங்கும் போவேன். காரில் போவதில்லை. அப்படி நம்மிடமே இல்லாத போது 10 ரூபாய் வாடகை எப்படி ஒரு தொழிலாளி அதிலும் ஒரு ஸ்லம் தொழிலாளி ஒரு நடைபாதை வாசி, எப்படி பத்து ரூபாய் கொடுக்க முடியும்?

திரு. க. அன்பழகன்: அமைச்சர் அவர்கள் இரண்டொருக் கருத்துக்களைச் சேர்த்துச் சொல்லும்போது சில கருத்துக் குழப்பம் ஏற்படுகிறது. நடைபாதைகளில் இருக்கின்றவர்கள் வேறு, குடிசைவாசிகள் என்பது வேறு, குடிசைகளில் வாழ்கின்றவர்கள் தங்களுக்கு வீடு கிடைப்பதை தனது உரிமையாக வைத்துக் கொண்டு கேட்கிறார்கள். 59, 60-வது ஆண்டில் இதற்கான திட்டம் கொண்டு ஆரம்பமாகும் போது இதற்கான வழிவகை உருவாகியிருக்கிறது.

The rent for thoso who enter into tho'e new buil lings, is fixed on the ba is of the slum in which they live.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: என்னுடைய கருத்து குடிசைகளில் இருக்கின்ற நடைபாதைவாசிகள், ஏழைகள், அன்னக்காவடிகள் இவர்களுக்கு வீடுகள் கொடுக்கப்படவேண்டும் என்றிருந்தாலும் கூட, இருக்கின்றவர்கள் யார் என்பதைப் பார்த்தால், கவர்ன்மெண்ட், குவாஸி-கவர்ன்மெண்ட், டிரான்ஸ் போர்ட், எலக்ட்ரிசிட்டி போர்டு இவைகளில் வேலை செய்கின்ற வர்களும் பத்து ரூபாய் கொடுக்கின்றார்கள். ஆனால் இவர் களுக்கு என்ன உத்தரவு போடப் பட்டிருக்கிறது என்றால், பத்து ரூபாய் வாடகையாகக் கொடுத்தால் வீட்டு வாடகைப்படியை வாங்கக் கூடாது, அவுஸ் ரென்ட் அலவன்ஸை ஃபோர்க்கோ செய்யவேண்டும் என்றிருக்கிறது. அவர்கள் என்ன பெறு கிறார்கள் என்றால் அவுஸ் ரென்ட் அலவன்ஸ் என்ற முறையில் 20, 25 ரூபாய் என்று வாங்குகிறார்கள். இந்த உத்தர வின்படி கொடுப்பதாக இருந்தால், கொடுக்கின்ற பத்து ரூபாய் அத்துடன் இதிலுள்ள 20 அல்லது 25 ரூபாய் ஆகவே 35 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று வருகிறது. இண்டஸ்ட்ரீஸ் தொழி லாளர்களை எடுத்துக் கொண்டால் 10 சதவீதம் கொடுக்கவேண்டும் என்றிருக்கிறது. சம்பளம் அலவன்ஸ் எல்லாம் சேர்த்து 450 ரூபாய் என்றால் பத்து சதவீதம் தரவேண்டும் என்றிருக்கிறது. முந்திய அரசு இருந்த போதுதான் இதற்கான உத்தரவு போடப் பட்டது. அதை நான் பாராட்டுகிறேன்.

Basic Wage plus D.A plus H.R.A.





இதை மொத்தமாகப் பார்த்துக் கணக்கிட்டு, அடிப்படைச் சம்பளம், பஞ்சப் படி, வீட்டு வாடகைப் படி இவற்றையெல்லாம் மொத்தமாகப் பார்த்து எல்லாவற்றையும் சேர்த்து அதில் 10 சதவீதம் கொடுக்கவேண்டும். அதாவது 440 ரூபாய் ஒரு தொழிலாளி ஊதியம் பெற்றால் 44 ரூபாய் கொடுக்கவேண்டும்.

(பிற்பகல் 1-40)

ஆனால் ஒரு பெரிய சங்கடமான நிலை என்னவென்றால், இந்த ஸ்லம் டுவெல்லர்ஸ் என்று சொல்லக்கூடியவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்களால் இந்த 10 ரூபாய் கொடுக்க முடி யாமல், பாக்கியோடு இருக்கிறார்கள். அரசாங்கத்திலே உள்ள பிக்சட் இன்கம் குரூப்பிலே உள்ளவர்களுக்கும் அரியர்ஸ் இருக் கிறது. மாதாமாதம் பிடித்துக் கொண்டிருக்கிறோம். இப் போது கொடுக்க வேண்டியது, ஏற்கனவே கொடுக்க வேண்டிய பாக்கிக்காக மாதாமாதம் பிடித்துக் கொண்டிருக்கிறோம். அடுத்து இன்டஸ்ட்ரியல் ஒர்க்கர்ஸ், அவர்களைப் பொறுத்தவரை யில் அவர்களும் இந்த 10 சதவீதத்தை இன்னும் கொடுக்காமல் அந்த இல்லங்களிலேயே குடியிருந்து கொண்டிருக்கிறார்கள்.

அவுசிங் போர்டிலே வாடகை கொடுக்க வேண்டும். இல்லா விட்டால், வெளியேற வேண்டும். அதற்கு வேண்டிய நோட்டீஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறோமே தவிர-என் மதிப்பிற்குரிய நண் பர் சாதிக்பாட்சா உணர்ந்து கொள்ளவேண்டும், நானும் அவரும் ஒரே இடத்தில், ஒரே கட்சியில் இருந்தவர்கள். அவர் சிறந்த ஒரு வழக்கறிஞர்— நான் யாரையும் வெளியே போக வேண்டுமென்று சொல்லவில்லை. 'You will be evicted, orally or by written orders' என்று எழுத்து மூலமாக, வாய் மூலமாகச் சொல்லப்படுகிறதே தவிர, யாரையும் வெளியே போகச் சொல்ல வில்லை என்பதை புரட்சித் தலைவர் அவர்கள் மீது ஆணையாகச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா: இந்தப் பதிலை நேற்று அவர்கள் சொல்லியிருந்தால், விவாதத்திற்கே இடமிருந்திருக்காது. நான், நேற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த இடத்திற்குப் போய் இருந்தார்கள், அப்போது அவர்கள் அப்படிச் சொன்னார் களா என்று கேட்டேன். நான் சொல்ல வந்தது பாரபட்சமாக நடக்கக்கூடாது என்பதற்காகத்தான். அந்த உத்தரவு இருந்தது. ஆனால் நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை. ஜனாதிபதி ஆட்சி காலத்திலேகூட இது நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை. இருந்தாலும்கூட, அந்தக் குடியிருப்பில் இருக்கக்கூடியவர்கள் எல்.ஜி.ஜி.எஸ்தான். நான்காம் வகுப்பைச் சேர்ந்த ஊழியர்கள் தான், அவர்கள் 20, 30 ஆண்டுகளாக அங்கே குடியிருக்கிறார்கள்

அவர்கள் கோரிக்கை, அவர்களால், அந்த அளவுக்கு வாடகை கொடுக்கமுடியாது என்பதுதான். இதை அமைச்சர் அவர்கள் பரிவுடன் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னேயிலே அவசரம் காட்டாமல், அவர்கள் கொடுக்க வேண்டிய ஒரு வருட, இரண்டு வருட வாடகையை உடனே கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தாமல், சுமுகமாகப் பேசி முடிவெடுத்து வசூலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> பேரவைத் தலேவர் அவர்களே, இதையெல்லாம் மனதிலே கொண்டுதான் 30—6—1977-க்குப் பின்னர் யாரையும் குடிசைகளிலிருந்தோ, குடியிருக்கும் வீடுகளிலிருந்தோ வெளியேற்றக் கூடாது என்று புரட்சித் தலேவர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிருர்கள். அந்த உத்தரவு 22—7—1977 அன்று கொடுக்கப்பட்டதாகும். அதை மீறும் தைரியம் எனக்கில்லே. மீறவும் மாட்டேன் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனல் நிரம்ப அரியர்ஸ் இருக்கிறது. எப்படி இதை வசூல் செய்வது என்பதை எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடிய தலேவர்கள், எனக்கு ஆலோசனே வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்லம் கிளியரன்சா, ஸ்லம் இம்புரூவ்மெண்டா, இதில் எதை வைத்துக் கொள்வது என்பதை முதல் அமைச்சர் அவர்களுடன் கலந்துகொண்டு, எதிர்க்கட்சித் தலேவர்கள் எல்லோரிடத்திலும் ஆலோசனே கேட்கலாம் என்றிருக்கிறேன்.

ஸ்லம் கிளியரன்சிலே சிக்கல்கள் இருக்கின்றன என்று நான் சொன்னேன். குடிசையிலே இருப்பவர்கள் எல்லாம் ஏழைகள் என்று நாம் கருதி, சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்கள் என்று நாம் கருதி, குடிசை மாற்று வாரியத்திற்கு நாம் அவர்களே அனுப்புகிறேம். ஆனல், அங்கே இந்த 10 ரூபாய் கட்ட முடியாமல், அவர்கள் அரியர்ஸ் வைத்திருக்கிருர்கள். அரசாங்க ஊழியர்களும், இன்டஸ்ட்ரியல் ஒர்க்கர்கம் அங்கே போய் குடியிருக்கிருர்கள். அவ்வளவு பேர்களும் குடிசையிலே இருப்பவர்கள் அல்ல. குடிசைக்குப் பக்கத்திலே போய்ப் படுத்துக் கொண்டிருக்கிருர்கள். குடிசைக்கு அருகாமையிலே போய் படுத்துக் கொண்டிருக்கிருர்கள். அப்பேர்பட்டவர்களுக்கு வீடுகள் கிடைக்கவில்லே. ஏதோ நாம் அப்படி வீடுகள் கட்டும்போது 3 அடுக்கு, 4 அடுக்கு என்று சொல்கிறேம்.

<u>திரு. க. சுப்பு :</u> குடிசையிலே இல்லாமல், பக்கத்திலே படுத்திருக்கிறவர்கள் என்று சொல்கிறேம். இப்படி சொல்லிவிட்டு, யார் யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று நீங்கள் நினேக்கிறீர்களோ, அவர்களேயெல்லாம் நுழைப்பதற்கு . . . . . . . . .





<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u>

I am not yielding, please hear me

முதலில் நாம் இவர்களுக்கு போட்டோ எடுக்கிறேம். அப்படியிருந்தும், சில சமயங்களில் தவறுகள் நிகழ்ந்து விடுகிறது

"To err is human. After all we are fallible. We are not super humans. We are not infallible."

அப்படி குடிசைகளில் உள்ளவர்களேப் போட்டோ எடுக்கும்போது. சிறு தவறுகளும் நிகழ்ந்து விடுகிறது. 100 ரூபாய் செலவு செய்து குடிசை போடுகிருர்கள். ஆனல் அவர்களுக்கு வீடு கிடைப்பதில்லே.

அப்படி நாம் கட்டுகின்ற மூன்றடுக்கு கட்டடத்தில் மூன்ருவது அடுக்கில் இருக்கும் ஏழைத் தொழிலாளி மனேவி கர்ப்பமுற்று இருப்பதாக மனதில் வைத்துக் கொண்டால், தண்ணீரை எடுத்துச் செல்ல வேண்டுமென்ருல் அல்லது மார்க்கட்டுக்குச் சென்று சாமான்களே வாங்கி வரவேண்டுமென்ருல் அதிலே சிரமம் இருக்கிறதா இல்லேயா ? அது தேவையா ? லிப்ட் வைக்க வேண்டுமென்ருல் அதிகச் செலவாகும், தேவையும் இல்லே. குடிசை மாற்று வாரியம் அதிகமாகச் செலவு செய்கிறது. இன்று தேவை குடிசை மாற்றமா அல்லது ஸ்லம் இம்ப்ரூவ்மெண்டா ? ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட் என்ருல்—குடிசையில் வாழக்கூடிய மக்கள் வாழும் பகுதியில் ரோடு போடுவது, தண்ணீர் வசதி செய்து கொடுப்பது, பப்ளிக் லெட்ரின் அமைத்துக் கொடுப்பது என்று செய்து கொடுத்தால் அது நன்ருக இருக்குமா ? அகில உலக நிபுணர்கள் எல்லாம்கூட இதைப்பற்றிச் சிந்திக்கிருர்கள். இங்கே கூட சென்ட்ரல் ஸ்டேஷன் பாலத்திற்குக் கீழே சேப்பாக்கம் தொகுதியில் ஸ்லம் இம்ப்ருவ் மெண்ட் செய்யப்பட்டிருக்கிறது. அந்த இடம் நன்ருகவே இருக்கிறது. அதில் அதிக அக்கறை செலுத்தலாமா அல்லது குடிசை மாற்றத்தில் அதிக அக்கறை செலுத்தலாமா என்பதைப் பற்றி இந்த அரசு முடிவு எடுப்பதற்கு சர்வ கட்சித் தலேவர்களேயும் அழைத்துப் பேசலாம் என்று கருதுகிறேன். அதற்கு நீங்கள் ஒத்துழைப்பீர்கள் என்று நம்புகிறேன்.

தொழிலாளர் பிரச்சினே என்று வரும்போது அருமைச் சகோதரர் மாண்புமிகு சுப்பு அவர்கள் பேசினர்கள். நீண்ட நேரம் பேசினர்கள். அதில் எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லுவதற்கு முன்னல் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அவர் சத்தியா ஸ்டுடியோ பற்றிச் சொல்லும்போது சிறிய பிரச்சினே என்று சொன்னர். எப்படி அது சிறியது என்று சொன்னர் என்று விளங்கவில்லே. ஒரு தொழிலாளி என்ருலும் பிரச்சினேதான். அங்கே போராட்டம். . . . . . . . . . .

(திரு. சுப்பு எழுந்தார்.)

I am not yielding

எனக்கு ஒரு குறை இருக்கிறது. கன்டின்யுவிடி போகக்கூடாது.

திரு. க. சுப்பு : நான் சொல்ல வந்தது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பேசி முடித்து விட்ட பிறகு கேளுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அங்கே அந்தப் பிரச்சினை பெரிதாக்கப்பட்டது. உண்ணாவிரதம் இருந்து, முறைப்படி மறியல் செய்யப்பட்டு அதற்காக நிதி எல்லாம் வசூல் செய்யப் பட்ட பிரச்சினை ஆகும். நான் சொல்ல விரும்புவது........

திரு. க. சுப்பு : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

You will be taking my time

கடைசியில் சொல்லட்டும். கோஜென்சி போகிறது.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர். நான் சொன்ன திலிருந்து தவறான லைனுக்குப் போகக் கூடாது. தொழிலாளர்களே தொழிற்சாலையை ஏற்று நடத்த வேண்டுமென்பது முதலமைச்சர் திட்டம். சத்தியா ஸ்டுடியோ சிறிய தொழிற்சாலை, எளிதாக இருக்கலாம். பி அண்ட் சி மில்லை தொழிலாளர்களே நடத்த வேண்டுமென்று சொன்னால் அதைச் சிந்திக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொன்னேன். சத்தியா ஸ்டுடியோ தகராறுபற்றிச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதைத் தொழிலாளர்கள் நடத்துகிற சிறப்பையும் தெரிந்து கொள்ள வேண்டும். சிறிதாக இருக்காலம். சுலபம் அல்ல. அந்தத் தொழிலாளர்களுடைய ஊதியம், செலவு போக இறுதியில் வரக்கூடிய லாபத்தில் சம பங்கு கொடுக்கப்படுகிறது. போனஸ் 8 சதவிகிதம், 9 சதவிகிதம் கொடுப்பது போல் அல்ல. திரு. துரைமுருகன் சொன்னது போல் 750, 1,200 என்று கொடுக்கிறார்கள் என்று சொன்னது போல் அல்ல—நான்கு ரூபாய் வாங்குகிற குறைந்த சம்பளக்காரரும் ஆயிரம் ரூபாய் வாங்கக்கூடிய எஞ்சினியரும் சமமாகப் பங்கு போட்டுக் கொள்ளுகிறார்கள் என்ற நல்ல சேதியைச் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரிய வேலையைப் பற்றி ஒரு வார்த்தை. 30—6—1977-ல் தான் நாங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறோம். வந்த பிறகு 25 காண்டிராக்டர்களை சர்ப்ரைஸ் செக் செய்து பிடித்தோம். ஒரு நாள் இரவு அந்த நிர்வாகத்தைச் சேர்ந்த அதிகாரிகளைக் காரில் அனுப்பி சர்ப்ரைஸ் செக் செய்து 25



காண்டிராக்டர்களைப் பிடித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். பைன் போடப்பட்டிருக்கிறது. நோட்டீஸ்—

Notice issued to show cause against removal from list of registered contractors

அவர்களை அப்படி காண்டிராக்டர்கள் லிஸ்டில் இருந்து எடுத்து விடுவதாக இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அருமைச் சகோதரர் ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அவர்கள் சொன்னது—

Contract of Labour (Regulation and Abolition) Act 1970

அதில் காண்டிராக்ட் முறையைச் சீர்படுத்த வேண்டும், ஒழுங்கு படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்தவரை—

There is no question of regulation. We are bent on abolishing it.

ஒரேயடியாக காண்டிராக்ட் முறையையே எடுத்துவிட வேண்டுமென்பது எங்கள் கட்சியின் கொள்கை. (ஆரவாரம்.)

We have shown it in our election manifesto

எங்களுடைய தேர்தல் அறிக்கையிலும் சொல்லியிருக்கிறோம். 25 காண்டிராக்டர்களை பிடித்திருக்கிறோம். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்.

It is all interesting news

நாம் எல்லோரும் சேர்ந்து—

We should fight injustice and corrupt practices

அநீதியை எதிர்க்க வேண்டும். கரப்ட் பிராக்டிசை ஒழிக்க வேகாரிக. என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதற்கேற்ப ம்திஅண்டுளின் பேரில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

| | |
|---|---|
| Building Inspector | 1 |
| Assistant Engineers | 5 |
| Asst. Executive Engineers | 6 |
| Junior Engineer | 2 |
| Work Assistant | 1 |
| Total | 15 |

[பிற்பகல் 1-50].

ஆக 15 பேர்கள் மீதும் இந்த ஒன்றரை மாத காலத்திற்குள்ளாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் பெரிய திமிங்கலங்கள் அகப்படுமோ என்னவோ தெரியவில்லை.

கோவை மாவட்டத்திலே உள்ள பஞ்சாலைகளின் தொழிலாளர் போராட்டம் பற்றி இங்கே கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். சுந்தரம் கிளேட்டன்ஸ் பற்றியும் பேசப்பட்டது. எல்.எம். டபிள்யூ. பற்றியும் இங்கே உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள்.

Beedi and Cigar Workers Act 1966 and rules made thereunder in 1968

பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். எல்.எம்.டபிள்யூ பிரச்னை பற்றி சொன்னபோது, எங்களுடைய கட்சிக்காரர்கள் என்ற காரணத்தால் கட்சிக் கண்ணோட்டத்தோடு நீங்கள் நடந்து கொள்கிறீர்கள் என்று சொன்னார்கள் நான் ஒரு கருத்தை தெரிவித்துக் கொள்கிறேன். நான் அந்த கன்சிலியேஷனில் கலந்துகொள்ளவில்லை. அவர்கள் ஒரு முறை வந்து பேசிவிட்டுச் சென்றார்கள். இந்த நேரத்திலே நான் ஒரு நல்ல செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

The Chairman of that establishment, Shri G K Devarajulu

அவர்கள் இன்று பிற்பகல் நாலரை மணிக்கு என்னைச் சந்தித்துப் பேசுவதற்காக கோவையிலிருந்து வருகிறார்கள். என்னுடன் பேசியதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு பேச இருக்கிறார்கள். கோவையிலிருந்து ஒரு டி.சி.எல். நல்ல அனுபவமுள்ளவர் அவர் சென்னைக்கு வந்திருக்கிறார், அவரை அங்கே அனுப்பியிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுந்தரம் கிளேட்டன்ஸ் பற்றி நான் இன்று காலையிலேயே 82 வது விதிப்படி அறிக்கை தந்துவிட்ட காரணத்தால் அதைப் பற்றி மீண்டும் சொல்லத் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

இந்த பீடி, சுருட்டு தொழிலாளர் சட்டம், 1966, இல் வந்தது, பேரறிஞர் அண்ணா அவர்கள் அதற்கு ரூல்ஸ் எல்லாம் பிரேம் பண்ணினார்கள். அந்தச் சட்டம் சுப்ரீம் கோர்டிற்குப் போய் வந்தது என்பதை எல்லோரும் அறிவார்கள். அதற்கென தனி அதிகாரி ஒருவர் இருக்கிறார். கடந்த காலத்தில் அது சரியாகச் செயல்படவில்லை என்பதை இங்கே உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். 19—7—1977 அன்று ஒரு கூட்டம் நடத்தினோம், அதிலே இரு சாராரும் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அதற்குப் பிறகு 4—8—1977 அன்று இரண்டு சாரார்களும் முதலாளிகளும் தொழிலாளர் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டு பேச்சு வார்த்தை நடைபெற்றிருக்கிறது. இந்தப் பிரச்னையில் நல்ல முடிவெடுத்து காரியங்களைச் செய்வோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரையில் ஸ்பெஷல் டி.சி.எல். ராஜா சுப்பிரமணியம் என்பவரைக் கொண்டு



கமிட்டி அமைக்கப்பட்டு அவர் அறிக்கை அனுப்பியிருக்கிறார், அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நிரம்ப வேலை நிறுத்தங்கள் நடக்கின்றன. இருந்தாலும்

bottled up grievances and accumulated anger

ஆக இருக்கின்றன. அதாவது தேக்கிவைக்கப்பட்ட குறைகள், தேக்கி வைக்கப்பட்ட கோபம் அது இருக்கத்தான் செய்யும். ஏனென்றால், இது புரட்சித் தலைவர் ஆட்சியாயிற்றே, இந்த உலகத்தையே ஆளவேண்டியது உழைக்கும் கரங்கள் என்று சொன்னவராயிற்றே, இதைப் பயன்படுத்தி அவர்கள் வேகத்தை காண்பிக்கிறார்கள் என்றால் அதற்காக வருத்தப்படவில்லை. வேலை நிறுத்தம் செய்கிற உரிமையைப் பறிக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. தொழிலாளர்கள் போராடிப் பெற்ற அந்த உரிமையில் இந்த அரசு தலையிடாது என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

I want to make a categorical statement

ஆனால் அதே நேரத்திலே வன்முறையைப் பயன்படுத்தி, பலாத்காரத்தைப் பயன்படுத்தி, கேரோவைப் பயன்படுத்தக்கூடிய நிலைமைகள் நடந்துவிடக் கூடாது என்பதை இந்த அரசு பார்த்துக்கொள்ளும். No need to strike என்று சொல்லமாட்டோம். ஏனென்றால் தொழிலாளர்களுடைய உரிமையில் நாங்கள் கைவைக்கத் தயாராக இல்லை.

அடுத்து திரு. ரமணி அவர்கள் சொன்னார்கள். நெல்லிக்குப்பத்தில்

subsisting settlement is not honoured by Government

என்று சொன்னார்கள். இருக்கக்கூடிய ஒப்பந்தம், அரசால். சமரஸ அதிகாரிகளால் மதிக்கப்படவில்லை என்றார்கள். இந்த ஒப்பந்தம் இந்த அரசின் காலத்தில் ஏற்பட்டதில்லை. இதைப் பரிசீலனை செய்து முழுமையாகச் செயல்படுத்த இந்த அரசு முயற்சிக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்திலே சி. பி. எம்., சி.ஐ.டி.யு. தோழர்களை நான் கேட்டுக் கொள்வது இது எல்லோருக்கும் பொருந்தும். எங்கே ஒப்பந்தம் இருந்தாலும் அந்த ஒப்பந்தத்தினுடைய ஆயுட்காலம் வரையில் அது டேம்பர் செய்யப்படாமல்

it is a sacrosanct thing

அது புனிதமானது என்ற முறையில் செயல்பட வேண்டுமென்பதை மனதில் கொள்ள வேண்டும். எப்படி நெல்லிக்குப்பத்திலே ஏற்பட்ட ஒப்பந்தத்தை, நான் ஒப்பந்தம் செய்திருக்கிறேன்.

அதை உடைக்கக்கூடாது. அரசாங்கம் உடைக்கக்கூடாது என்று சொல்வதை அரசு ஏற்றுக்கொள்கிறதோ, அதைப்போன்று எங்கெங்கு சப்சிஸ்டிங் செட்டில்மெண்ட் இருக்கிறதோ அவைகளும் இந்த முறையிலே கருதப்பட வேண்டும் என்பதையும் நீங்கள் மனதிலே கொள்ளவேண்டும். காலவரையறையே குறிப்பிடாமல் ஒப்பந்தம் செய்திருந்தால் அதற்கு 6 மாத காலம்தான் உயிர். காலவரையறை சொல்லி ஒப்பந்தம் செய்திருந்தால் அது முடிந்த பிறகு அடுத்த நாளே சங்கம் நினைக்கும் நேரத்தில் 19 (2)-ன் பிரகாரம் 60 நாள் நோட்டீஸ் கொடுத்து முடிந்த பிறகு settlement will expirc என்று சொல்லி பேச்சுவார்த்தை ஆரம்பிக்கலாம். இந்த முறையில் பழுத்த தொழிற்சங்கத் தலைவர்களான, என்னோடு தோளோடு தோள் நின்ற திருவாளர்கள் உமாநாத் அவர்கள், ரமணி அவர்கள், கோவிந்தராசன் அவர்கள் மற்றுமுள்ள ஏ.ஐ.டி.யூ.சி. அழகர்சாமி போன்றவர்களெல்லாம் என்னுடன் தோளோடு தோள் நின்று போராடிய அந்த இனிப்பான நேரங்களையெல்லாம் நான் மறக்கவில்லை. To fight for working class is an honour தொழிலாளர்களுக்குப் போராடுவது என்பது கிடைக்கக் கூடிய ஒரு வாய்ப்பாகும். நம்முடைய செட்டில்மெண்டை முதலாளிகள் மதிக்க வேண்டுமென்று சொல்கிறோம். அதேபோல வேறு இடங்களில் ஏற்படுகின்ற ஒப்பந்தங்களையும் நாம் மதிக்கின்ற நிலை வேண்டும். அதை இந்த அரசின் வேண்டுகோளாக வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

போனஸ் சட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். போனஸ் சட்டத்தில் 8 . 1/3 என்பது ஒரு கொள்கை. அது சட்டமில்லை. Payment of Bonus Act, 1965 என்ற அந்தச் சட்டத்திலே இருந்த 4 சத விகிதம், 8 1/3 சத விகிதம், என்பது, ஒரு ஆர்டினன்ஸ் என்பது, ஒரு மாத ஊதியம் both basic pay plus DA அதை 12-ஆல் பெருக்கினால் 100 ஆக வரும். அப்படி ஒரு மாத ஊதியம் கொடுக்க வேண்டுமென்று இருந்து, பிறகு ஒரு சட்டம் வந்தது. அதை எடுத்து விட்டார்கள். உங்களுக்கு அது தெரியும். மீண்டும் 8 1/3 என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் கேட்டார்கள். இதைப்பற்றி திரு. அம்பிகாபதி அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். அது வரும்பொழுது இந்த அரசினுடைய கொள்கையும் அதில் சொல்லப்படும். 8 1/3 சதவிகிதம் மட்டும் வந்தால் போதாது என்று அருமை மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னார்கள். இராணிப்பேட்டை தொழிற்சங்கத் தொடர்புடைய அவர், நல்ல பழுத்த தொழிற்சங்க வாதியாக உருவாகி வருகிறார். அதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். போனஸ் சட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற 'பார்முலா' அல்லாமல் வேறொரு பார்முலாவிலே போனஸ் ஒப்பந்தம் செய்யலாம். 34 (3) பிரகாரம்





Settlement can also be reached under a formula different from the one enunciated under the Bonus Act

அது போனஸ் ஆக்டிலே எடுக்கப்பட்டு வந்தது. இதுவும் உள்ளே வர வேண்டும் என்பது அரசின் கொள்கை. அதைப்பற்றி ஆலோசித்துக்கொண்டு வருகிறோம். குறைந்த பட்சம் போனஸ் என்பது தீர்மானமாக இருக்கலாம். ஆனால் மொத்தமாகப் பார்க்கும்போழுது போனஸ் ஆக்டில் பல் வேறு திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும், ஒட்டுமொத்தமாக உருவாக்கி அவைகளைக் கொடுப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. இப்பொழுது இன்றைக்கு 2½ அல்லது 3 மணி அளவில் கேரளாவில் இருந்து வந்திருக்கின்ற தொழிலாளர் நல அமைச்சரவர்களைச் சந்திக்க இருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுடன் டெல்லி செல்ல இருக்கிறார்கள். அவர்களிடத்தில் இந்தக் கருத்தைப் பரிமாறுவோம் என்பதை உங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். திரு. அம்பிகாபதி அவர்களுடைய தீர்மானம் வரும்பொழுது தெளிவாக நான் இந்தக் கருத்துக்களைச் சொல்கிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு
number of inspections made under Shops and Establishments Act, after 30—6—77, in the short span of 45 days is 9, 959.
9,959 இன்ஸ்பெக்ஷன் செய்திருக்கிறோம். மீறப்பட்ட சட்டங்கள் இது. சட்டப்படி குற்றச்சாட்டுகள் இவை. எல்லாவற்றையும் சொல்வது என்றால் நேரமாகிவிடும். ஆனால் பட்டியல் இருக்கிறது
action taken for Non-implementation of notices, etc.
ஆங்கிலத்தில் படித்தால் தகராறு வரும். ஆனால் இங்கு அப்படித்தான் இருக்கிறது. Catering Establishment Act கீழ் 781 இன்ஸ்பெக்ஷன் செய்திருக்கிறோம்; 154 ப்ராசிகியூஷன் நடவடிக்கை எடுத்திருகிறோம்.

இதுவெல்லாம் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அதைத்தான் நான் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

திரு. எஸ். இராகவானந்தம்] [1977 ஆகஸ்ட் 11

Plantation Labour Act கீழ் number of inspections after 30-6-77-145, Prosecution -13

Beedi and Cigar Factories Act கீழ் number of inspections made under Minimum Wages Act is 463; prosecutions launched is 107. I repeat, we have done these things within 45 days.

[பிற்பகல் 2-00]

அதோடு கொடுக்கக்கூடிய வழக்குகளை அரசு மூலமாக, அட்ஜூடிகேஷன், ரெபரன்ஸுக்கு அனுப்புவதைப் பற்றி, இரு வேறு கருத்துக்கள் சொன்னார்கள். வழக்கு மன்றத்திற்குப்போக முடியுமா என்று கேட்டார்கள். வழக்கு மன்றத்திற்குப் போக வேண்டுமென்று எனது அருமை நண்பர் காட்டூர் கோபால் மற்றும் எல்லா கட்சிக்காரர்களும் வந்திருக்கிறார்கள். எல்லாவற்றையும்

I have referred to adjudication.

ஸ்கிரீனிங் கமிட்டியைப் பற்றிச் சொன்னார்கள். ஸ்கிரீனிங் கமிட்டி தேவையா, அதை எடுக்கவேண்டுமா என்று கேட்டார்கள். அதை இந்த அரசு பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறது. ஆனால், ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஸ்கிரீனிங் கமிட்டி ரெஃபர் செய்ய வேண்டாமென்று எழுதியும், வழக்கு மன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். ஹை லெவல் கமிட்டி, அது, லேபர் கமிஷனர், செயலாளர் போன்றவர்களை அடங்கிய அந்தக் கமிட்டி வழக்கைத் தொழிலாளர் நல கோர்ட்டுக்கு, லேபர் கோர்ட்டுக்கு அனுப்ப வேண்டாமென்று சொல்லியும் நான் சிபாரிசு செய்து ரெஃபர் செய்திருக்கிறேன். ஜூலை, ஆகஸ்டில் 97 இஷ்யூஸ் அட்ஜூடிகேஷனுக்கு ரெஃபர் செய்யப்பட்டிருக்கிறது. 45 நாளில் 97 கேஸ் ரெஃபர் செய்திருக்கிறோம்.

ஒரு நாளில் 18 மணி நேரம், 19 மணி நேரம் விழித்துக் கொண்டிருக்கும்போது, 9 மணி நேரத்தை சி.பி.எம். தோழர்கள் எடுத்துக் கொள்வார்கள். எல்லோரிடமும் பேசி இருக்கிறோம். எல்லோரையும் கேட்க தயாராக இருக்கிறேன். எந்தக் கட்சியைச் சேர்ந்த தொழிற் சங்கத் தலைவர்கள் வந்தாலும் கட்சி பாகுபாடற்று நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம், ரெஃபர் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இந்தத் தொழிலாளர் நல இலாகா மூலமாக இந்த அரசு சில நல்ல காரியங்களைச் செய்ய இருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். உங்களுக்குத் தெரியும், கன்சிலியேஷனுக்கு நாம் சென்றால், மரத்தடியில்தான் நின்று கொண்டிருப்போம். நிர்வாகச் சார்பாக வருபவர்களை உள்ளே அழைத்துப் பேசினால் இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் பிரதிநிதிகள் வெளியே



1977 ஆகஸ்ட் 11] [திரு. எஸ். இராகவானந்தம்]

நிற்க வேண்டும். பிறகு நாம் உள்ளே செல்லும்போது, அவர்கள் வெளியே உட்கார வேண்டும். அதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. ஆனால், வெளியூர்களிலிருந்து இங்கு வந்தால், தங்குவதற்கு இடம் இல்லை, கமிஷனர் ஆபீஸ் பகுதியில் இடம் இல்லை. இங்கு சென்னைக்கு தொழிலாளர் தலைவர்கள் வரும்போது, ரூ. 15, ரூ. 20, ரூ. 30 வாடகை கொடுத்து, வசதி மிகக் குறைவான இடத்தில் மிகக் கஷ்டப்பட்டு இருக்க வேண்டியிருக்கிறது. அலுவலகங்களுக்கு வந்தாலும் தங்க இடம் இல்லை. ஆகவே, என்னுடைய சேம்பரில் 63 நாற்காலிகள் வைத்திருக்கிறேன். வருகின்ற தொழிற் சங்கத் தலைவர்கள் யாரும் நிற்கக் கூடாது, அத்தனை பேரும் உட்கார வேண்டும், நம்மைப் போல் அவர்களும் தலைவர்கள், நம்மோடு நேற்று வரை இருந்தவர்கள். சென்ற மார்ச் 27-ஆம் தேதி கூட நம்மோடு சிறைக்கு வந்தவர்கள். 'உழைப்பவரே உயர்ந்தவர். நீங்கள் உழைப்பவர்கள். ஆகவே, உழைப்பவராகிய நீங்களே, உயர்ந்தவர்' என்று நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார். ஆகவே, உழைப்பாளிக்குப் பிரதானமான முறையில் இடம் கொடுக்கவேண்டுமென்று, அவர்களை நிற்க வைத்து பேசக் கூடாது என்று 63 நாற்காலிகள் போடப்பட்டிருக்கின்றன. அதை அதிகமாக உபயோகப்படுத்திக் கொண்டவர் மாண்புமிகு உறுப்பினர் கோதண்டராமன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

வெளியூரிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு ரூ. 6 இலட்சம் செலவில் கட்டிடம் கட்ட இருக்கிறோம். மெய்ன்டெனன்ஸ் செய்வதற்காக, ரூ. 2, ரூ. 2½, ரூ. 3 என்ற வகையில் அதற்கு வாடகை கொடுத்தால் போதும். தமிழக அளவிலே பேச்சு வார்த்தை நடத்த சென்னைக்கு வந்தால், ரூ. 30 அளவுக்கு வாடகை கொடுக்க வேண்டியிருக்கிறது. ஏழைத் தொழிலாளி சந்தாவிலிருந்து செலவு செய்து விட்டு, தொழிலாளிகள் கஷ்டப்படுகிறார்கள் என்று கருதுகிற காரணத்தால், அவர்கள் தலைவர்கள் தங்குவதற்கு வசதிகள் செய்து அறைகள் கொடுக்கப்படும். அந்த அறைகளிலே குறைகள் இருந்தால் உடனடியாக, நிவர்த்திக்கப்படும். அந்தத் தங்கும் வசதிக் கட்டிடத்திற்காக ரூ. 6 இலட்சம் தருவதற்கு மனமுவந்து நிதி தந்த நிதியமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர் வேலைநீக்கம், dismissal, termination, removal from Service இப்படி இருந்ததால், 2 (ஏ) பெட்டிஷன் லேபர் ஆஃபீஸரிடம் போட்டு, லேபர் கமிஷனரிடம் சொல்லி, ரெஃபரன்ஸ், என்று சொல்லி, மறுபடியும் ரெஃபரன்ஸ் கொடுப்பது என்ற புரசீஜர் கம்பர்சம் என்ற காரணத்தாலே, நேரடியாக 3 (2) (சி) பெட்டிஷன் கொடுப்பதைப் போல், தொழிலாளர்கள் பணம் வேண்டு

மென்று சொன்னால், லேபர் கோர்ட்டுக்குப் போகிறார்களே, அதைப் போல் நேரடியாகத் தொழில் கோர்ட்டுக்கு அனுப்புவதற்கு வழி வகுக்கின்ற வகையிலே, சட்டத்தைத் திருத்துவதற்கு உத்தேசம் இருக்கிறது.

இன்னொரு சட்டம், பேக்டரி ஆக்ட் செக்ஷன் 79-ன்படி, 240 நாள் இந்த ஆண்டு வேலை செய்தால், அடுத்த ஆண்டு 20 நாளைக்கு ஒரு நாள் எர்ன்ட் லீவ் எடுக்கலாம். ஓராண்டில் 239 நாள் வேலை செய்தால் கூட, எர்ன்ட் லீவ் கிடைக்காது. He will not be entitled to any earned leave அது மிகக் கொடுமையானது. எனவே, அதைத் திருத்துவதற்காக நாங்கள் ஆரம்ப ஆண்டோ, வேலைக்கு வந்த ஆண்டோ, அல்லது அடுத்த ஆண்டோ, அல்லது அடுத்த ஆண்டோ, ஏதாவது ஒரு ஆண்டில் 240 நாள் வேலை செய்துவிட்டால் for subsequent years அவருக்கு 20 நாளைக்கு ஒரு நாள் என்று கொடுக்க வேண்டும். இங்கே 5 days week—200 days 6 நாள் வேலை, ஒரு நாள் ஓய்வு என்றால் 20 நாள் வேலை செய்தால் போதும், ஒரு நாள் லீவு என்று சட்டத்தைத் திருத்துவதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறோம். ஏனென்றால், அது concurrent list-ல் வருகிறது. அங்கிருந்து ஒப்புதல் பெற்றுத்தான் திருத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். ஸ்டாண்டிங் ஆர்டர் ஆக்ட் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். Standing Order Act. If a worker absents himself continuously for 8 days, he is deemed to have vacated the job. 8 நாள் தொடர்ச்சியாக ஒருவன் வேலைக்கு வராமல் இருந்தான் என்று சொன்னால் ஆட்டோமேடிக்காக வேலையில் இருந்து விலகிக் கொண்டதாகக் கருதப்பட்டு, அவனை வேலையில் இருந்து நீக்கி விடுவார்கள். அவன் நடுத் தெருவில் நின்று அவதிப் படுவதைத் தான் நீங்கள் பார்க்கிறீர்கள்.

எனவே habitual offence, absence from duty என்று சொல்லப்பட்டு 'மிஸ் கான்டக்ட்' என்ற வகையில் அவன் தண்டனை அடைகிறான். அப்படி இருக்கும்போது இதற்காகத் தனியாக 8 நாள் என்று ஏன் இருக்க வேண்டும் என்று பார்த்து அதையும் நீக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறோம்.

Under Standing Order Act 100 பேர்களுக்கு அதற்கு மேலும் உள்ள தொழிற்சாலையிலே தான் தொழிற்சாலை நடைமுறை விதிகள் பொருந்தும் என்று தற்பொழுது உள்ள சட்டத்தில் கூறப் பட்டுள்ளது. அது குறைந்த பட்சம் 50 பேர்கள் என்று இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.





கேன்டீன் ஆக்ட், பேக்டரி ஆக்ட் 46 பிரிவு ரூல்ஸ் 65-ன்படி 250-ம் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருந்தால் அந்தத் தொழிற்சாலையில் கேன்டீன் இருக்கவேண்டும் என்று Statutory provision இருக்கும்போது அந்தத் தொழில் அதிபர்கள் அவைகளை கான்ட்ராக்டாக விட்டுவிடுகிறார்கள். ஆனால் சட்டத்தின் உண்மை நிலை என்ன வென்று சொன்னால்—they should be deemed to be workers of the establishment—அந்த நிலை தொழிலாளர்களாகப் பாவிக்க வேண்டும். இதற்கு கேஸ் லா இருக்கிறது. எனவே நான் இங்கே பேசியதை அரசாங்கத்தின் கொள்கையாக எடுத்துக் கொண்டு இந்த நிறுவனத்தின் சொந்தக்காரர்கள் கேன்டீன் ஓர்க்கர்ஸையும், நிறுவனத்தின் ஓர்க்கர்ஸ்களாக மாற்றுவார்கள் என்று நான் நம்புகிறேன். இல்லை என்றால், அதை வலியுறுத்தும் வகையில் சட்டம் கொண்டு வரப்படும்.

இன்னும் ஒரு நல்ல செய்தியை நான் கூற விரும்புகிறேன். நீங்கள் லேபர் கோர்ட்டுக்குப் போகும்போது Workmen's Compensation Act, Payment of wages Act, Gratuity இதற்கெல்லாம் மனுப் போடும்போது ஸ்டாம்ப் ஒட்டுகின்ற நிலைமை இப்போது இருக்கிறது. இனிமேல் ஸ்டாம்ப் ஒட்டத் தேவையில்லை. இதனால் ஆகக்கூடிய செலவை இந்த அரசு ஏற்றுக் கொள்ளும். அதற்குரிய சட்டம் விரைவிலே வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இனித் தொழிலாளர்கள் (At no Stage, Stamp duty need be paid) ஸ்டாம்ப் ஒட்டத் தேவையில்லை. இதற்கான சட்டத்தைத் கொண்டு வரவும், அதற்கான தொகையை ஏற்றுக்கொள்ள நிதி இலாகா ஒப்புதல் அளித்துள்ளது. இப்படிப் பல திட்டங்களைக் கொண்டு வரவிருக்கிறோம். ஆனால் Give us time please.

மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையிலே அமைந்துள்ள இந்த அரசு ஏழைகளின் அரசு. ஏழைகளுக்காகப் பாடுபடும் அரசு என்பதைச் சொல்லி என்னுடைய பேச்சை முடிக்கும் முன்னாலே ஒரு கதையைச் சொல்லி முடிக்கிறேன்.

கம்யூனிஸ்டு கட்சிப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் இருக்கிறது. Greek Mythology வருகிறது என்று கருதுகிறேன். Antiaues அவர் சமுத்திர ராஜனுக்கும், பூமாதேவிக்கும் பிறந்தவன். அவனை யாராலும் வெல்ல முடியவில்லை. ஆராய்ந்து பார்த்து உண்மையைக் கண்டுபிடித்தான் ஹெர்குலிஸ் என்பவன் Antiaus பூமாதேவிக்கு பிறந்த காரணத்தினால், பூமியில் நிற்கும்போது இவனைக் கொல்ல யாராலும் முடியாது. ஏனென்றால் பூமாதேவி அவனைப் பெற்று பால் கொடுத்து, வளர்த்த தாய் தனது additional strength கொடுக்கிறாள், அதன் மூலம் அவன் மேலும் வலிமை அடைகிறான். எனவே அவனை

யாரும் வெல்ல முடியவில்லை. என்றைய தினம் அவனை பூமியிலிருந்து பிரிக்கிறோமோ அன்றைய தினம் தான் அவனைக்கொல்ல முடியும் என்ற முறையில், ஹெர்குலிஸ் அவனை ஒரு நாள் தலையின் மேலே தூக்கி எறிந்து (suspended In the air) வீழ்த்தினான், என்பது கதை.

தன்னைப் பெற்று வளர்த்த தாயினிடமிருந்து அவன் பிரிந்த காரணத்தாலே அவன் தோற்றான். எனவே அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வைப் பெற்று பால் கொடுத்து, வளர்த்த ஏழை எளிய மக்களிடம் இருந்து நாங்கள் பிரியமாட்டோம். எனவே புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு நல்ல பல காரியங்களைச் செய்ய இருக்கிறோம். (எதிர்கட்சித் தலைவர் எழுந்தார்) Let me finish, cogency போய்விடும் அல்லவா.

திரு. மு. கருணாநிதி : இந்தக் கதையிலே ஒரு சந்தேகம். அவனைத் தலையின் மீது தூக்கி எறிந்ததாகச் சொல்லுகிறார். அப்படி ஏறிந்தபோது அவன் பூமியிலே விழுந்ததும் அவனுக்கு மீண்டும் உயிர் வந்ததா? இல்லையா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சுருக்குவதற்காக சொன்னேன். நீங்கள் பெரிய கதாசிரியர் அல்லவா பூமியில் இருந்து தலைக்கு மேலே தூக்கி கழுத்தை நெரித்துக் கொன்ற பிறகுதான் பூமியில் போட்டான். எனவே இந்த அரசு ஏழைகளுக்காகப் பாடுபடும் என்று சொல்லி 3 மானியங்களின் மீது கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டு தீர்மானங்களையும் பின்வாங்கி (குறுக்கீடு) 'வாபஸ் இஸ் நாட் எ டமில் வேர்டு' முழுமனதாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். வணக்கம். வாழ்க புரட்சித் தலைவர்.

திரு. என். சங்கரய்யா : எங்களுடைய கட்சியின் சார்பாக கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானத்தின்படி தொழிலாளர் நல இலாகாவில் உயர்ந்த, பதவி வகித்தவர்கள், ஓய்வு பெற்ற பிறகு தனியார் நிறுவனங்களில் வேலை ஏற்றுக்கொள்ள கூடாது, அதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விட்டிருந்தோம். அது பற்றி இந்த அரசின் கொள்கை என்ன என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

[பிற்பகல் 2-10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இது பற்றிய சட்டம் என்னவென்றால், ரிடையர் ஆன பிறகு இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக எங்கேயாவது



வேலையில் சேர வேண்டுமென்றால், அரசின் அனுமதியைப் பெற வேண்டும். நான் அவ்வாறு அனுமதி கேட்டவர்களுக்கு அனுமதியை மறுத்திருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, சேலம் கிளாஸ் பாக்டரி கடந்த எட்டு மாத காலமாக மூடிக் கிடக்கிறதே, அது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுகிறேன். அரசாங்க அனுமதி பெறாமல் கதவடைப்புச் செய்யப்பட்டு, இன்றைய தினம் 500-க்கு அதிகமான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது பற்றி அமைச்சர் அவர்கள் பதிலில் ஒன்றும் கூறவில்லை. அதை அரசாங்கம் உடனடியாகத் திறந்து தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க ஏதாவது செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இதில் உள்ள சட்டப் பிரச்னை, சாப்டர் 5 (பி) ஆப் தி இன்டஸ்டிரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்டின்படி 300-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கக்கூடிய தொழிற்சாலையில் குளோஷர், ரிட்ரெஞ்சுமெண்ட், லே ஆப்' செய்வது என்றால் 90 நாட்கள் நோட்டீஸ் கொடுத்து அரசின் முன் அனுமதி பெற வேண்டும். இந்த அரசு யாருக்கும் அந்த மாதிரி அனுமதி தரவில்லை. லாக் அவுட்டைப் பொறுத்த வரையில், அது இந்த டெபனிஷனில் சேரவில்லை என்ற காரணத்தால், தொழில் அதிபர்கள் லாக் அவுட் செய்கிறார்கள். 300-க்கு கீழ் 50-க்கு மேல் தொழிலாளர்கள் வேலைசெய்யும் தொழிற்சாலை 50 நாள் நோட்டீஸ் கொடுத்தால் போதும், மூடி விடலாம். இந்தச் சட்டத்தில் எல்லாம் சிக்கல் இருப்பதால், இந்த சட்ட மன்றத் தொடர் முடிந்த பிறகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு ஓய்வு இருக்கின்ற நேரத்தில், தொழிலாளர் தலைவர்கள், தொழிலாளத் துறை அதிகாரிகள், இவர்களைக் கொண்ட ஒரு கூட்டத்தை நடத்தி கருத்துக்களை அறியலாம். நான் இந்த மாமன்றத்தில் சொன்னது போல, தொழிலாளர் நல சட்டங்களை எந்தெந்த வகையில் திருத்தினால் தொழிலாள வர்க்கத்திற்கு நன்மை என்பது பற்றி பரிந்துரை வழங்க ஒரு குழுவினை நியமிக்க இருக்கிறோம். அப்போது நல்ல பல யோசனைகளை தொழிற்சங்கத் தலைவர்கள் சொல்லலாம். மூடியிருக்கின்ற தொழிற்சாலைகளை, ஏற்கெனவே புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருப்பது போல, தொழிலாளர்களே எடுத்து நடத்த வேண்டும் என்பது மத்திய அரசாங்கத்தின் கொள்கை; அதுதான் நமது கொள்கையும். அதைப் பற்றிய விரிவான அறிக்கை பின்னர் கொடுக்கப்படும். இப்போது கல்கி தொழிலாளர்கள், அந்தத் தொழிலை ஏற்று நடத்துகிறோம் என்பதற்கு ஒரு ஸ்கீம் கொடுத்திருக்கிறார்கள். அதை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பேரவையில் பல உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : ஒரு சிலரே மீண்டும் மீண்டும் எழுந்து சந்தேகம் கேட்டுக் கொண்டிருந்தால், இப் போதே மணி 2¼ ஆகிறது. மற்ற உறுப்பினர்கள் தங்கள் சந் தேகத்திற்கு விளக்கம் பெறவேண்டும். தயவு செய்து ஒருவர் ஒரு தடவை கேட்டால் போதும்.

<u>திரு: ஜே. ஜேம்ஸ்</u> : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். நான் சேலம் கிளாஸ் பாக்டரி பற்றி கேட்டேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னால் நலமாக இருக்கும்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : இது சம்பந்த மாக மாண்புமிகு உறுப்பினர் என்னைக் கண்டு விவாதித்தால் தக்க நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

<u>திரு. கே. கந்தசாமி</u> : தலைவரவர்களே, நான் பேசும்போது அரசு ஊழியர்களுக்கு பாமிலி பென்ஷன் ஸ்கீம் இருப்பது போல், தொழிற்சாலைகளில் தொழிலாளர்களாக வேலை பார்ப்பவர்களுக்கு குடும்ப நலத்திட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று சொன் னேன். அது சம்பந்தமாக அமைச்சர் அவர்களின் கருத்து என்னவென்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : பேரவைத் தலை வரவர்களே, அமைக்கப்பட இருக்கும் குழு இது பற்றியும் பரி சீலனை செய்யலாம்.

(மீண்டும் அவையில் பல உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : உறுப்பினர் ஒவ்வொரு வரும் விளக்கம் கேட்டுக்கொண்டே போனால், காலம் போதாது. முடிந்த வரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். அதோடு விட்டுவிட வேண்டும். ஏதாவது புதிய கருத்தாக இருந்தால் கேளுங்கள்.

<u>திரு. துரை முருகன்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, "ஆட்டோமேஷனைப் பற்றி அரசின் நிலைமை என்ன" என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று எதிர்பார்த்தேன். இதுபற்றி அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதை சொல்வார் என்று எதிர்பார்த்தேன். அதை விளக்க வேண்டும். நாங்கள் அவ்வளவு பேரும் இ. எஸ். ஐ. ஆஸ்பத்திரி பற்றிச் சொன்னோம். அதுபற்றி அமைச்சர் பதில் ஒன்றும் சொல்லவில்லை.



<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றிற்கும் பதில் தருவதாக இருந் தால் இன்னும் இரண்டு மணி நேரம் சொல்லுவதற்கு நான் தயார். உதாரணமாக, மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி, 'அண்ணா', 'தென்னகம்', 'முரசொலி' போன்ற செய்தித் தாள் கள் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் கொடுக்கப் பட்டதா என்று கேட்டார்கள். 'ஜனசக்தி'யில் என்ன நடந்தது என்று சொல்லுவார்களேயானால் அதையும் பரிசீலனை செய்து இவற்றிற்கும் சேர்த்து சொல்லலாம் என்று இருந்தேன். விட்டுப் போன காரணத்தால் கவனம் இல்லை என்று கொள்ளத் தேவை இல்லை. அவைகள் எல்லாம் பரிசீலிக்கப்படும்.

<u>திரு. சி. கோவிந்தராசன்</u> : தலைவர் அவர்களே, ........

<u>திரு. க. சுப்பு</u> : (எழுந்திருந்தார்)..........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : உறுப்பினர்கள் கேட்ட பொழுது எல்லாம் பேசுவதற்கு அனுமதி தந்திருக்கிறேன். ஏறக் குறைய 22 உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். ஒவ்வொரு வரும் ஒரு சந்தேகத்தைக் கேட்க ஆரம்பித்தால், நானும் இந்த அவையில் இருந்திருக்கிறேன். ஒன்று அல்லது இரண்டு தடவை தான் அனுமதித்திருக்கிறார்கள். கேட்டதற்கு எல்லாம் அனுமதி கொடுத்ததாக நான் பார்த்ததில்லை. உறுப்பினர் கோவிந்த ராசனை பேச அனுமதிக்கிறேன். வேறு யாருக்கும் அனுமதி தரமாட்டேன்.

<u>திரு. சி. கோவிந்தராசன்</u> : நான் கேட்பது கொள்கைப் பிரச்னை ................

<u>திரு. க. சுப்பு</u> : எழுந்திருந்தார்..........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : 234 உறுப்பினர்களில் யார் கலாட்டா செய்வார்கள் என்பது எனக்கும் தெரியும். உங் களுக்குள்ள உரிமை எல்லோருக்கும் இருக்கிறது. தயவு செய்து உட்காருங்கள். அத்தனை பேரையும் பேசுவதற்கு அனுமதிக்க முடியாது.

<u>திரு. க. சுப்பு</u> : மீண்டும் எழுந்திருந்தார் ........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இல்லையென்றால் முடியாது தயவு செய்து கட்டுப்பட்டாக வேண்டும் அர்த்தம் தெரி யாமல் என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? தயவு செய்து அமருங்கள். உட்கார்ந்து பேசுவது தவறு.

[1977 ஆகஸ்ட் 11

திரு. க. கந்தசாமி : தலைவர் அவர்களே, தயவு செய்து டெப்னட் ரூலிங் வேண்டும். * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபோல் எதிர்க்கட்சித் தலைவர் அவையில் இருந்தபோது நடந்தது இல்லை. உட்கார்ந்து கொண்டு கொஞ்சம்கூட அவைத் தலைவரை மதியாமல், கலாட்டா செய்வது அவையின் மரியாதைக்கு நல்லதுதானு என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சொன்னால் போதும். இப்படி தேவையில்லாத பிரச்னையைக் கிளப்பக் கூடாது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் நல்லெண்ணத்தோடு ஒரு கருத்தைச் சொன்னபோது * * * என்று கேட்டார்கள். அது நல்ல வார்த்தையாக எனக்குப்படவில்லை என்று தெரிவித்து, பத்திரிகையில் வரும் கந்தசாமி சொன்னார், அதை குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் கந்தசாமி அவர்கள் சொன்ன * * என்ற வார்த்தை குறிப்பிலிருந்து நீக்கப்படவேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் எஸ். ஜே. சாதிக் பாட்சா, சி. கோவிந்தராசன், ஜே. ஜேம்ஸ், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

[பிற்பகல் 2-20]

திரு. ப. சந்திரன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : " நிதிக் கோரிக்கை எண் 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,12,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். "

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

---

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 2-18 2-30 இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.



1977 ஆகஸ்ட் 11] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, வீடில்லாத எல்லோருக்கும் வீட்டுமனை கொடுக்கவேண்டும் என்பதுதான் என் வெட்டுத் தீர்மானம். வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதல்ல. ஆகவே, ஒரு ஆண்டு காலத்திற்குள் வீட்டு மனை கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு என் வெட்டுத் தீர்மானத்தை நான் வலியுறுத்தவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோதண்டராமன் அவர்கள் புதிய மரபை உருவாக்குகிறார்கள் என்று கருதுகிறேன். இந்த அவையில் அவர்கள் நீண்ட காலமாக இருந்திருக்கிறார்கள். திரும்பப் பெறுகிறாரா இல்லையா என்பதைத்தான் சொல்லவேண்டுமே தவிர இந்த நேரத்தில் விவாதம் இல்லை. தயவு செய்து அமருங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. செ. சிவசாமி ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திரு. ரா. மார்க்கபந்து அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—"நிதிக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,96,33,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1977 ஆகஸ்ட் 11

திரு. சு. பாலன், திரு. என். வரதராஜன், ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திரு. ஏ. சுவாமிதாஸ், திரு. ரா. மார்க்கபந்து ஆகியோர் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவை முன்னுள்ள கேள்வி :— "நிதிக் கோரிக்கை எண். 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,48,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 7 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

#### A. *Statutory Rules and Orders*.

38. Notification issued in G.O. Ms. No. 95, Social Welfare, dated 28th January 1977 in regard to an amendment to the Suppression of Immoral Traffic in Women and Girls (Tamil Nadu) Rules, 1958 published with Home Department Notification S.R.O. No. A-3097 of 1958, dated the 14th May, 1958 in Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 14th May 1958. (Laid on the Table of the House under section 23(4) of the Suppression of Immoral Traffic in Women and Girls Act, 1956 (Central Act 104 of 1956).



1977 ஆகஸ்ட் 11]

39. Notification issued in G.O. Ms. No. 881, Rural Development and Local Administration, dated 16th May 1977 in regard to certain variations to the Mylapore Eastern Section Area Town Planning Scheme of Madras City sanctioned in the late Public Health Department Notification No. 913, dated the 17th November 1939 published at pages 793—795 of Part I-A of the *Fort St George Gazette*, dated the 21st November 1939. (Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).

40. Notification issued in G.O. Ms. No. 895, Rural Development and Local Administration, dated 18th May 1977 in regard to certain variations to the Egmore-Harrington Road Area Town Planning Scheme of Madras City sanctioned in the Rural Development and Local Administration Department Notification No. II(2)/70, dated the 15th December 1969, published at pages 17—38 of Supplement to Part II-Section 2 of the *Fort St George Gazette*. dated the 18th February 1970. (Laid on the Table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

#### B. *Reports, Notifications and other papers*.

† 47. Policy Note on Agriculture Demands—1977-78 (English and Tamil).

† 48. Performance Budget—Agriculture—1977-78 (English only).

† 49. Policy Note on Dairy Development Department and Milk Supply Schemes, 1977-78 (English).

‡ 50. Policy Note on Dairy Development Department and Milk Supply Schemes.1977-78 (Tamil)

‡ 51. Policy Note on Demand No. 29—Labour including Factories 1977-78 (English).

@ 52. Policy Note on Demand No. 29—Labour including Factories 1977–78 (Tamil).

11 53. Policy Note on Leprosy Beggars Rehabilitation Programme—Demand No. 18—1977–78 (English and Tamil).

11 54. Review of the Progress made in the Co-operative Development Schemes during the year 1976—77 (English and Tamil).

---

* Cut Motions circulated separately

† Circulated to Members on 9-8-1977

‡ Despatched to Members on 9-8-1977

@ Circulated to Members on 10-8-1977

11 Despatched to Members on 10-8-1977



## இணைப்பு I.

(367-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

### கோரிக்கை எண் 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்—ஆய்வுரை

### தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை.

தொழிலாளர் நிர்வாகம்பற்றி இவ்வறிக்கையில் கீழ்க் காணும் வகைப்பாடுகளின்கீழ் மறு ஆய்வு செய்யப்படுகிறது :—

(i) நிறுவனங்கள் சட்டம்.

(ii) ஊதியங்கள் சட்டம்.

(iii) தொழில் தகராறுகள் சட்டம்.

(iv) சமூகப் பாதுகாப்புச் சட்டம்.

(v) தொழிலாளர் நலம் பற்றிய சட்டம்.

இவற்றோடு, எடை அளவைகள் சட்டத்தைச் செயல் படுத்துதல், வேலைவாய்ப்புப்பணி, கைவினைஞர் பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துதல் பற்றிய பணி குறித்து தனித் தனி அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

### (1) நிறுவனங்கள் சட்டம்.

தொழிற்சாலைகள் சட்டம், 1948.—1976 ஆம் ஆண்டுத் தொடக்
கத்தில் பதிவேட்டில் 7,408 தொழிற்சாலைகள் இருந்தன.
அதன் பின்னர் 1,213 தொழிற்சாலைகள் சேர்க்கப்பட்டு 425
தொழிற்சாலைகள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் ஆண்டு
முடிவில் இந்தத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 8,196 ஆக
உள்ளது. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | பதிவேட்டில் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | 1975 | 1976 |
| பிரிவு 2 (m) (i) | 6,925 | 7,667 |
| பிரிவு 2 (m) (ii) | 483 | 529 |
| | 7,408 | 8,196 |
| வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை | 4,99,672 | 5,04,809 |

1976 ஆம் ஆண்டில் உரிமக் கட்டணமாக ரூ. 46,69,714 வசூலிக்கப்பட்டுள்ளது.

1976 ஆம் ஆண்டில், தொழிற்சாலை ஆய்வாளர்களால் 3,026 தொழிற்சாலைகள் ஒரு முறையும், 4,782 தொழிற்சாலைகள் இரு முறையும், 233 தொழிற்சாலைகள் மும்முறையும், மேற்பார்வை ஆய்வாளர்களால் 1,493 சோதனை ஆய்வுகளும் நடத்தப்பட்டன. மேலே சொல்லியவற்றோடு கூட 412 ஞாயிரு ஆய்வுகளும், 903 சிறப்பு ஆய்வுகளும், 331 திடீர் ஆய்வுகளும், 207 இரவு ஆய்வுகளும் நடத்தப்பட்டுள்ளன.

1976 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகள் சட்ட விதித் துறைகளை மீறியதற்காக தொழிற்சாலைகள் நிர்வாகங்கள் மீது 1,923 வழக்குகள் தொடரப்பட்டன. இவ்வாண்டில் 1,776 வழக்குகள் முடிவு செய்யப்பட்டன. அபாதக் கட்டணமாக 1975 ஆம் ஆண்டில் ரூ. 19,440 வசூலிக்கப்பட்டிருக்கையில், இவ்வாண்டில் ரூ. 1,02,750 வசூலிக்கப்பட்டது.

1975, 1976 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட விபத்துக்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:—

| ஆண்டு. | மரணம் நேரிடாத விபத்துக்கள். | மரண விபத்துக்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1975 | 20,475 | 24 |
| 1976 | 26,181 | 32 |

தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும், அவற்றில் அமர்த்தப் பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையும் பெருகியுள்ளதன் காரணமாக, கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் இவ்வறிக்கை ஆண்டில் விபத்துக்கள் சிறிது அதிகரித்துள்ளது.

விபத்துக்கள் ஏற்படுவதைக் குறைக்கும் பொருட்டு, தொழிலாளர்கள், 21 நாட்களாகியும் பணி செய்ய இயலாத அளவுக்கு உள்ளாகிய கடும் விபத்துக்கள், மரண விபத்துக்கள் பற்றிப்





புலன் விசாரணை செய்து இந்த விபத்துக்கள் தொடர்ந்து ஏற்படுவதைத் தடுப்பதற்கான மாற்று நிவாரண ஏற்பாடுகள் குறித்தும் அவை நிறைவேறுமாறு பார்த்துக் கொள்ளத் தொடர் நடவடிக்கை எடுப்பது குறித்தும் ஆய்வாளர்கள் ஆலோசனை கூறியுள்ளனர். பெரிய தொழிற்சாலை அனைத்தும், நிர்வாகத்தினர், தொழிலாளர்கள் பிரதிநிதிகளைக் கொண்டு தங்கள் அமைப்புகளில் "பாதுகாப்புக் குழுக்கள்" அமைத் துள்ளனர். தொழிலாளர்களை 100-க்கு மேல் கொண்டவையும், ஓர் ஆண்டில் 20-ம் அதற்கு மேலும் விபத்துக்கள் நிகழ்ந் துள்ளதாக அறிவித்துள்ளவையுமான தொழிற்சாலைகளில், "பாதுகாப்புக் குழுக்கள்" அமைக்குமாறு வற்புறுத்தி வேண்டப் பட்டுள்ளது. இதுவரையில் 331 தொழிற்சாலைகள் "பாதுகாப்புக் குழுக்கள்" அமைத்துக்கொண்டுள்ளன. விபத்துக்கள் குறையவும், பாதுகாப்பான சூழ்நிலைச் சுற்றுப் புறங்களை உருவாக்குவதிலும் அவை பெரும் பங்கு ஆற்றியுள்ளன. "அதிக அளவு விபத்துக்களை" அறிவித்துள்ள தொழிற்சாலைகளில், விபத்துக்களின் வீதம் குறையத் தங்கள் பணியாளர் அமைப்புகளில் "பாதுகாப்பு அதிகாரிகளை" நியமிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்டம், 1976.

தொழிற்சாலைகள் சட்டம், 1976 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ளது. இச்சட்டம் 26—10—1976 ஆம் நாளிலிருந்து. செயலுக்குக் கொண்டு வரப் பட்டுள்ளது. இச் சட்டத்தின் முக்கிய கூறுபாடுகள் பின் வருமாறு:—

(a) "தொழிலாளர்" என்னும் சொல்லுக்குரிய பொரு விளக்கம், ஒப்பந்தக்காரர்கள் மூலம் வேலையில் அமர்த்தப்பட்ட தொழிலாளர்களையும் சேர்த்துக் கொள்ளும் வகையில் தற்போத

[1977 ஆகஸ்ட் 11

திருத்தப்பட்டுள்ளது. இதனால், பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை உயரக் கூடியதற்கான வாய்ப்பு உள்ளது.

(b) தொழிலாளர்களை 1000-க்கு மேல் உடைய தொழிற்சாலைகள் பாதுகாப்பு அதிகாரிகளை நியமனம் செய்வதற்கு முதன் முறையாக வகை செய்யப்பட்டுள்ளது.

(c) சட்டத்தில் தண்டனை விதிப்பதற்குரிய விதித்துறைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. சட்டத்தின் பாதுகாப்பு விதித் துறைகளை மீறியதன் காரணமாக ஏற்பட்ட விபத்துக்களின் சூழல்களில் குறைந்த அளவு அபராதம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

(d) மரண விபத்துக்கள் பற்றிய புலன் விசாரணை சட்ட பூர்வமாக்கப்பட்டது.

### சிரமவீர் பரிசளிப்புத் திட்டம்.

இத் திட்டத்தின் நோக்கம் என்னவெனில், பொதுவாக தொழில் திறமையை மேம்படுத்துவதில் தனித்தனி தொழிலாளர் ஆற்றக் கூடிய பணிக்கும், தொழிலாளர் பாதுகாப்பு, உயர் உற்பத்தி, தரம் உயர்த்துதல், உற்பத்திச் செலவைக் குறைத்தல், இறக்குமதிப் பொருட்களுக்குப் பதிலாக உள் நாட்டுப் பொருட்களைப் பயன்படுத்தல் ஆகியவை குறித்துத் தொழிலாளர் நல்கிய சிறந்த கருத்துக்களுக்கும், அல்லது ஆலோசனைகளுக்கும் உரிய மதிப்பளித்து மாநில அளவில் பரிசளிப்பது ஆகும், 'ஆலோசனைத்திட்டம்' செயலில் உள்ள தொழிற்சாலைகளுக்கும், தொழிற்சாலை நிலையில் பரிசளிப்பு திட்டம் செயல்படுத்த எற்கெனவே தகுதி பெற்ற தொழிற்சாலைக்கும் இது பொருந்துவதாகும். முறையே முதல் மூன்று வகுப்புகள் இவைற்றுக்காக ரூ. 500, ரூ. 250, ரூ. 100 ஆக ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும். 1975 சாதனை ஆண்டிற்கான



1977 ஆகஸ்ட் 11]

பரிசுகள், 29-3-77 அன்று சென்னையில் உள்ள தொழிலாளர் நலத்துறை துணை ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டன.

### பாதுகாப்பு குறித்த அரசுப் பரிசுகள்.

விபத்துக்களை குறைப்பதில் நிர்வாகங்களுக்கிடையே, யார் முன்னவர் என்பதில் போட்டி உணர்வை ஏற்படுத்தும் நோக்கோடு, விபத்து குறைப்புப் பணியில் சிறந்த ஆற்றலைக் காட்டும் தொழிற்சாலைகளுக்கு இந்தப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. தற்காக தொழிற்சாலைகள் கீழ்க்காணும் இருவகைகளாகப் ரிக்கப்பட்டுள்ளன :—

வகை "A" —ஒரு காலண்டர் ஆண்டில் 10 லட்சமும் அதற்கும் மேற்பட்ட மணி நேரங்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகள்.

வகை "B" —ஒரு காலண்டர் ஆண்டில் 5 லட்சத்திற்கும் 10 லட்சத்திற்கும் இடைப்பட்ட மணி நேரங்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகள்.

ஒவ்வொரு வகைத் தொழிற்சாலைகளின்கீழ் மூன்று திட்டங்களின் கீழ் பரிசுகள் வழங்கப்படுகின்றன:—

(a) விபத்து தொடரும் வீதத்தில் உயர் சதவீதக் குறைப்பு.

(b) தொழிற்சாலையில் மிகக் குறைந்த விபத்து வீதம்.

(c) மணி நேரங்களில் விபத்தில்லாத நீண்ட கால அளவு.

இந்தத் திட்டங்கள் ஒவ்வொன்றின்கீழ், தொழிற்சாலை வாரியாக பத்து பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் பரிசு என்கிற வகையில் "A" வகைத் தொழிற்சாலைகளுக்கு

சுழல் கேடயமும் ரொக்கப் பரிசு ரூ. 1,000 மும், ‘ B'' வகை தொழிற்சாலைகளுக்கு சுழல் கேடயமும், ரூ. 500 ரொக்கப் பரிசும் வழங்கப்படுகின்றன. இரண்டாவது, மூன்றாவது பரிசுகளுக்காக, தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இந்தப் பரிசுகள் ஒவ்வொரு காலண்டர் ஆண்டிலும் வழங்கப்படுகின்றன. பரிசு வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக ஒவ்வோராண்டும் சுமார் ரூ. 35,000 மாநில அரசு செலவு செய்கிறது, இரண்டு இலட்சத்திலிருந்து ஐந்து இலட்சத்திற்கும் இடைப்பட்ட மணி நேரங்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளுக்காக, 1976 ஆம் ஆண்டிலிருந்து ஒரு புதிய பரிசளிப்புத் திட்டத்திற்கு 7—1—1977-ம் நாளிட்ட 16-ம் எண் ஆணை வாயிலாக அரசு அனுமதி வழங்கியது.

**பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் :**

1976 ஆம் ஆண்டில் 19 வகுப்புகள் நடைபெற்றன. இந்த வகுப்புகளில் 553 மேற்பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். பயிற்சி வகுப்புகள், சென்னை, அரக்கோணம், பள்ளிப்பாளையம், இராணிப்பேட்டை, தூத்துக்குடி, நெய்வேலி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு வகுப்பும், மதுரையில் இரண்டு வகுப்புகளும் நடைபெற்றன.

**திரைப் படங்கள் :**

பாதுகாப்பு குறித்து விளம்பரப் படுத்துவதற்காக ஆண்டு தோறும் பாதுகாப்பு, சுகாதாரம் பற்றிய திரைப்படங்கள் வாங்கப்படுகின்றன. தொழிற்சாலை இயக்குநர் அலுவலகத்தில், தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் பற்றிய 27 திரைப்படங்கள் தற்போது உள்ளன. பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளில் இத்தகைய திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. தொழிலாளர் நலனுக்காக இவற்றை திரையிடுவதற்குக் கோருகிற தொழிற்சாலைகளுக்கு இலவசமாகவும் இவை கொடுக்கப்பட்டு வருகின்றன.



**சுகாதாரம் :**

தொழிலாளர்களிடையே ஈயத்தைக் கையாளுவதால் உண்டாகும் நச்சுத் தன்மை, ஸிலிகாஸிஸ்' சரும நோய், தொழில் செய்வதால் உண்டாகும் ஏனையவகை நோய்கள் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதைக் கண்டறிந்து, அனல், ஒலிச் சூழ்நிலைகளில் வசதியாக வேலைசெய்வது பற்றிக் கருத்து கூற, சென்னை, தொழிற்சாலைத் தலைமை ஆய்வாளர் பொறுப்பின்கீழ், மாநிலத் தொழிற்சாலைத் தலைமை ஆய்வாளர் அலுவலகத்தில் தொழில் சுகாதார உடல்நலப் பிரிவு—ஆய்வுக்கூடம் ஒன்றை அமைக்க அரசு அனுமதி வழங்கியது. இந்த ஆய்வுக்கூடம் இப்போது அமைக்கப்பட்டு தொழில் நுட்ப உதவியாளரும், சிற்றெழுத்தர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆயவுகூடப் பணிக்கு உள்ளூரிலேயே கிடைக்கக்கூடிய சாதனங்கள் யாவும் வாங்கப்பட்டுள்ளன. இறக்குமதி செய்யப்படவேண்டிய சாதனங்கள், அனுமதிபெறுவது குறித்த ஏற்பாடுகளுக்கு உத்தரவு பெற்றதும் பின்னர் வாங்கப்பட விருக்கின்றன.

தொழிற்சாலைகளில் அபாயகரமான வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்களை, மருத்துவ ஆய்வாளர் விரிவாக மருத்துவ சோதனை செய்கிறார். தொழில் முறைமையில் உண்டாகும் நோய்களைப் பற்றி இவர் புலனாய்வு செய்துள்ளார்.

அச்சகங்களில் தொழிலாளர்களுக்கு ஈயங்களைக் கையாளுவதால் ஏற்படும் நோய்பற்றி இந்த ஆய்வுக் கூடத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

•

**தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டம், 1947:**

1976 ஆம் ஆண்டு, 1977 ஆம் ஆண்டு தொடக்கத்தின்போது, இச்சட்டத்தின் கீழ்வரும் கடைகள், நிறுவனங்கள் இவற்றின்

எண்ணிக்கை, அவற்றில் வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை இவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

| எந்த ஆண்டு முதல் தொடக்கம் என்பது. | இச்சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள் எண்ணிக்கை. | வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1976 | 2,16,803 | 2,19,621 |
| 1977 | 2,17,695 | 2,21,860 |

இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள் 3,27,965 முறையான சோதனைகள், 4,480 திடீர்ச் சோதனைகள், 22,475 விடுமுறைச் சோதனைகள், 3,532 சிறப்புச் சோதனைகள், 1,326 இரவுச் சோதனைகள் நடத்தினர்.

1976 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 941 வழக்குகள் முடிவுறு நிலையில் உள்ளன. 5,588 வழக்குகள் இவ்வாண்டில் அனுமதி பெற்றன. 6,529 வழக்குகளில், 4,546 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன. 11 வழக்குகள் விடுதலையில் முடிந்தன; 8 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. 1976 ஆம் ஆண்டில் அபராதத் தொகையாக ரூ. 1,41,383 வசூலிக்கப்பட்டது.

இச் சட்டத்தின் 41-வது பிரிவின்படி, மேல்முறையீடுகள் முடிவு செய்யப்பட்டிருப்பதை கீழ்க்காணும் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன:—

| | |
|---|---|
| ஆண்டுத் தொடக்கத்தில் முடிவுறு நிலையில் உள்ள மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 215 |
| இவ்வாண்டில் வரப்பெற்ற மேல்முறையீடுகளின் எண்ணிக்கை. | 331 |
| மொத்தம் | 546 |
| இவ்வாண்டில் முடிவுபெற்ற மேல்முறையீடுகளின் எண்ணிக்கை. | 340 |
| இவ்வாண்டு முடிவில் முடிவுறு நிலையில் உள்ள மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 206 |





1976 ஆம் ஆண்டில், நிலையான விதிவிலக்குகள் எதுவும் அரசு வழங்கவில்லை. (சந்தைகள், திருவிழாக்கள் நீங்கலாக) 3 தற்காலிக விலக்குகளை அரசு வழங்கியது. ஓர் ஆண்டுக் காலத்திற்கு (சந்தைகள், விழாக்கள் நீங்கலாக) 16 தற்காலிக விலக்குகளையும் 5 நேர்வுகளில் சந்தைகள், திருவிழாக்களுக்கு தற்காலிக விதிவிலக்குகளும் அரசு வழங்கியது. 93 நேர்வுகளில், தொழிலாளர் நலத்துணை ஆணையாளர் தாற்காலிக விலக்குகளை அளித்துள்ளார்; இரண்டு நேர்வுகளில் இச்சட்டம் செயல்படுவதைத் தாற்காலிகமாகத் தள்ளிவைக்க அனுமதித்துள்ளார்.

தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்—நிறுவனங்கள் சட்டத்தின் விதித்துறைகள், தொழிலாளர்-வேலைவாய்ப்புத் துறையின் 30—10—1976 நாளிட்ட 983 ஆம் எண் அரசு ஆணையில், புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு ஊராட்சிகளுக்கு நீட்டிக்கப் பட்டுள்ளன.

**தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம் :**

1976 சனவரி 1 ஆம் நாளன்றுள்ளபடி 65,151 தொழிலாளர்களை வேலைக்கமர்த்திய 20,173 உணவகங்கள் இருந்தன. 1977 சனவரி 1 ஆம் நாளன்றுள்ளபடி, 66,313 தொழிலாளர்களை வேலைக்கமர்த்திய 20,497 உணவகங்கள் இருந்தன. இவைகளில் 10,281 நிறுவனங்கள் தொழிலாளர்களைக் கொண்டிருந்தன. 10,216 நிறுவனங்கள் தொழிலாளர்கள் இல்லாமல் இருந்தன.

1976 ஆம் ஆண்டில் பதிவுக் கட்டணமாக ரூ. 4,02,744.26 பெறப்பட்டது.

இந்த ஆண்டில், ஆய்வாளர்கள், இச்சட்டத்தின் கீழ், 25,816 முறையான ஆய்வுகளையும், 511 திடீர் ஆய்வுகளையும், 1,834 விடு முறைநாள் ஆய்வுகளையும், 283 தனி ஆய்வுகளையும், 23 இரவு நேர ஆய்வுகளையும் செய்தனர்.

1976 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இச்சட்டத்தின் விதித் துறைகளையும், விதிகளையும் மீறியது குறித்த 290 குற்ற வழக்குகள் முடிவு செய்யப்படாமல் இருந்தன. 1,221 குற்ற வழக்குகள் இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டன. அவற்றில், 892 வழக்குகளுக்குத் தண்டனை அளிக்கப்பட்டது; இரண்டு வழக்குகள் விடுதலையில் முடிந்தன; ஒரு வழக்கு திரும்பப் பெறப் பட்டது. 1976 ஆம் ஆண்டில், ரூ. 49,346 அபராதத் தொகையாகப் பெறப்பட்டது.

ஆண்டு தொடக்கத்தில், உணவகங்களின் தொழிலாளர்களைப் பதவியிலிருந்து நீக்கியது அல்லது அகற்றப்பட்டதை எதிர்த்து, இச்சட்டத்தின் 19 ஆவது பிரிவின்கீழ் செய்யப்பட்ட 44 மேல் முறையீடுகள், மேல்முறையீட்டு அதிகாரிகள் என்று அறிவிக்கப் பட்டுள்ள தொழிலாளர் நல அதிகாரிகளிடம் முடிவு செய்யப் படாமலிருந்தன. இந்த ஆண்டில், 116 மேல் முறையீடுகள் முடிவு செய்யப்பட்டன. ஆண்டின் இறுதியில், 53 மேல் முறையீடுகள் முடிவு செய்யப்படாமல் இருந்தன.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டத்தின் விதித் துறைகள், தமிழ்நாட்டில் புதிதாக அமைக்கப்பட்ட சில பேரூராட்சிகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளன.

### 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்:

1976 ஆம் ஆண்டு தொடக்கத்தில், 87,877 தொழிலாளர்களை வேலைக்கமர்த்திக் கொண்ட 370 மலைத் தோட்டங்கள் இருந்தன. இந்த ஆண்டில், 1,241 தொழிலாளர்களை வேலைக்கமர்த்திய 40 புதிய மலைத் தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன; 324 தொழி லாளர்களை வேலைக்கமர்த்தியிருந்த 6 மலைத் தோட்டங்கள் பதிவி லிருந்து நீக்கப்பட்டன. எனவே, 1976 ஆம் ஆண்டின் இறுதியில் மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் கீழ், 88,767 தொழிலாளர்களை வேலைக்கமர்த்திய 404 மலைத் தோட்டங்கள் இருந்தன.

மலைத் தோட்டங்களின் ஆய்வாளர்களும், மருத்துவ அதிகாரி களும் 1976 ஆம் ஆண்டில், 1,096 முறையான ஆய்வுகளையும், 121 தனி ஆய்வுகளையும், 98 விடுமுறை ஆய்வுகளையும், 47 திடீர் ஆய்வு களையும் நடத்தினர்.

1975 ஆம் ஆண்டு இறுதியில், 22 குற்றச் சாட்டுகள் நீதி மன்றத்தில் முடிவு செய்யப்படாமல் இருந்தன; 1976 ஆம் ஆண்டில் 93 குற்ற வழக்குகள் அனுமதிக்கப்பட்டன. 55 குற்ற வழக்குகளுக்கு தண்டனை அளிக்கப்பட்டது. ரூ. 7,935 அபராதம் விதிக்கப்பட்டது. 13 குற்ற வழக்குகள் விடுதலையில் முடிந் தன அல்லது ஒருபாதி விடுதலையில் முடிந்தன. இரண்டு வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. 1976 ஆம் ஆண்டு இறுதி யில் 45 குற்ற வழக்குகள் நீதிமன்றத்தில் முடிவு செய்யப்படாமல் இருந்தன.



இந்த ஆண்டு, மலைத்தோட்டத் தலைமை ஆய்வாளரிடம் ஏற்பளிப்பைப் பெற்றபின்னர், மலைத்தோட்ட அதிபர்கள், மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு விரிப்புக் கம்பளிகளும், சம்பளங் களும் வழங்கினர்.

மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும் பத்தினருக்கும், இலவசமாக மருத்துவ வசதிகளுக்கு வகை செய்ய வேண்டியது மலைத்தோட்ட அதிபர்களின் கடமைகளில் ஒன்றாக, மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் 10 ஆவது பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது.

மலைத்தோட்டங்களிலுள்ள தோட்ட மருத்துவ மனைகளையும், மருந்தகங்களையும் ஆய்வு செய்வதற்காக, மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளரின் கட்டுப்பாட்டின்கீழ், இரண்டு மருத்துவ அதிகாரி கள், உதகமண்டலம், நாகர்கோயிலைத் தலைமையிடங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர். மலைத்தோட்டங்களில், வரையறுக்கப்பட்ட மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படு கின்றனவா என்பதை உறுதி செய்வதற்காக அறிக்கை ஆண்டில் இவர்கள் 366 எஸ்டேட்டுகளை ஆய்வு செய்தனர்.

### மலைத்தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு.

தொழிலாளர் நல ஆணையாளர் தலைவராய் உள்ள மலைத் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு, 18—9—1976 அன்று ஏர்க்காட்டில் கூடி, பிறவற்றுடன், கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்தது :—

1. தெருக் கூட்டுவதற்காக மற்றும் சாக்கடைச் சந்திப்புக் குழிகளைச் சுத்தம் செய்து, குப்பைகளை அகற்றுவதற்காக அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் நலன் பாதுகாத்தல்.

2. குழந்தை வளர்ப்புப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆயாக்களை நியமித்து, அவர்களின் சான்றிதழ்களைக் காட்டி வைத்தல்.

3. தொழிலாளர்கள் கல்வித் திட்டத்தைச் செயல் படுத்துதல்.

4. விரிப்புக் கம்பளிகள் வழங்குதல்.

5. "முழு அளவில் உணவளித்தல்" என்பதற்கான விளக்கம்.

6. பெண் ஆய்வாளர்களை நியமித்தல்.

[1977 ஆகஸ்ட் 11

**ஆய்வுப் பணியாளர்கள் அமைப்பில் கூடுதல் பணியாளர்களை நியமித்தல்.**

மலைப் பகுதிகளில் இடர்ப்பாடான சூழ்நிலைகளில் வசிப்பவர்களும், பணிபுரிபவர்களும், ஆனால், மாநிலத்தின், நாட்டின் பொருளாதாரத்தில் பெருமளவில் பங்கேற்பவர்களுமான மலைத் தோட்டத் தொழிலாளர்களின் குறைபாடுகளுக்கு உடனடியாக தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்பதை அரசு உணர்கிறது. இதனை நோக்கமாகக் கொண்டு, மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தினைச் செயல்படுத்துவதற்காகவென்றே, மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளர் என்றழைக்கப்படும் தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் பதவி ஒன்றை ஏற்படுத்துவது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

**1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்.**

1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின் விதித்துறைகள், இம்மாநிலத்தில், 1968 ஜூலை திங்களிலிருந்து செயலுக்கு வந்தது. பல மாநிலங்களிலுள்ள தொழிலாளர்கள், பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின் செல்திறன் குறித்து நீதிமன்றத்திற்குச் சென்றனர். ஆனால், அதன் செல்திறனை தலைமை நீதிமன்றம் ஆதரித்தது. இதனால், இச்சட்டம், விதிகளை நிறைவேற்றுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் (ஆய்வுகள்), இச்சட்டத்தின் 6 (2) பிரிவின்கீழ்த் தலைமை ஆய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார். தொழிலாளர் நல ஆய்வாளர்களும், துணை-ஆய்வாளர்களும், மேற் சொன்ன சட்டத்தின்கீழ், அவரவர்களின் அதிகார வரம்பிற்குள் உள்ள பகுதிகளில், ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள், எடை—அளவைகள் (நிறைவேற்று) சட்டத்தின்கீழ் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கு, மேற்சொன்ன சட்டத்தின்கீழ்த் தகுதிவாய்ந்த அதிகாரிகளின் பணிகளைச் செய்ய அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர். தொழிலாளர் நலத்



1977 ஆகஸ்ட் 11]

துணை ஆணையாளர்கள், இச்சட்டத்தின் 5 ஆவது பிரிவின்கீழ், மேல்முறையீடுகளை விசாரணை செய்வதற்கு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் 1,704 தொழில் இடங்களைக் கொண்ட 467 வணிகக்குறி உரிமையாளர்கள் உள்ளனர். 1976-ல் இந்தத் தொழில் இடங்களில் சுமார் 16,393 தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டனர். பீடி சுற்றும் தொழிலில், வீட்டுத் தொழிலாளர்களாக (வீட்டில் பீடி சுருட்டுபவர்கள்) ஒரு இலட்சம் பேர் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

1,704 தொழிலிடங்களில், 1,476 தொழிலிடங்கள் 1976-ல் உரிமத்திற்காக விண்ணப்பித்துக் கொண்டுள்ளன. 228 தொழிலிடங்கள் இன்னும் உரிமத்திற்காக விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு செய்யத் தவறியவர்களுக்கு எதிராகத் தண்டனை நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

1976-ல், உரிமக் கட்டணமாக, ரூ. 21,392.50 வசூலிக்கப்பட்டுள்ளது.

1976-ல், ஆய்வாளர்களால், 1,585 முறையான ஆய்வுகளும், 30 விடுமுறை ஆய்வுகளும், 54 திடீர் ஆய்வுகளும், 62 தனி ஆய்வுகளும் நடத்தப்பட்டன.

1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின் விதித் துறைகளுக்குப் புறம்பாக நடந்தது குறித்து 199 குற்ற வழக்குகள் 1976-ல் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் 153 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. 10 வழக்குகள், விடுதலையில் முடிந்தன. ஒரு வழக்கு திரும்பப் பெறப்பட்டது. 78 குற்ற வழக்குகள், 1976 ஆம் ஆண்டு இறுதியில் நீதிமன்றத்தில் முடிவுறாமல் இருந்தன. ரூ. 18,265 அபராதத் தொகையாகப் பெறப்பட்டுள்ளது.

1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1936) விதித் துறைகளும், அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளும், பீடி-சுருட்டு நிறுவனங்களிலும் இச்சட்டம் பொருந்துகிற தொழிலிடங்களிலும் பணியாற்றக் கூடிய

தொழிலாளர்கள் அனைவருக்கும் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன.

பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தைத் தமிழ் நாட்டில் செயல்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்ய, தொழிலாளர் நல—வேலை வாய்ப்புத் துறையின் 9—1—1976 நாளிட்ட 30 ஆம் எண் அரசு ஆணையில், அரசு முத்தரப்புக் குழு ஒன்றை அமைத்துள்ளது. பீடி நிறுவனங்களின் தலைமை ஆய்வாளரை [தொழிலாளர் நல துணை ஆணையாளர் (ஆய்வுகள்)] இக்குழுவின் தலைவராக அரசு நியமித்துள்ளது. தொழிலாளர்கள், தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். எடை-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியின் தொழில்நுட்பம் சாராத நேர்முக உதவியாளர், இக்குழுவின் செயலாளராவார். 1976-77-ல் இக்குழு ஒரு முறை கூடியது.

பீடித் தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கவும், பீடி-சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து விவாதிக்கவும் பீடித் தொழிற்சாலைத் தொழிலாளர்கள், நிர்வாகிகளின் பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்றை தொழிலாளர் நல அமைச்சர் 19—7—1977 அன்று கூட்டினார்.

ஹோட்டல் தொழிலிலுள்ள பணியாளர்களின் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கும் பொருட்டு, இதைப் போன்ற முத்தரப்புக் கூட்டம் ஒன்றை அரசு கூடிய விரைவில் கூட்டும்.

**1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்.**

சென்னை தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் (ஆய்வுகள்), 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ்த் தமிழ் நாட்டில், ஆய்வு ஆண்டில், தொடர்ந்து தலைமை ஆய்வாளராக இருப்பார்.

1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதித் துறைகளும், அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளும், 11 தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும்,



28 தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்களாலும் நிறைவேற்றப் படுகின்றன. மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் மூல ஆய்வுகளைத் தொழிலாளர் நல ஆய்வாளர்கள் செய்கின்றனர். தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட வேண்டியுள்ள மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் 5 சதவீத நிறுவனங்களைச் சரிப் பார்க்கும் ஆய்வுகளையும் செய்கின்றனர்.

1976 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 1,325 பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இருந்தன. 142 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. இதனால், பதிவு-செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 1,467 ஆக உயர்ந்தது. இந்த 1,467 நிறுவனங்களில், 104 நிறுவனங்கள், இந்த ஆண்டில், பதிவிலிருந்து நீக்கப்பட்டன. பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 1,358 ஆக இருந்தன. பணிபுரிந்தவர்களின் எண்ணிக்கை 48,770 ஆக இருந்தது.

1976 ஆம் ஆண்டில். பதிவுக் கட்டணமாக, ரூ. 19,802 கிடைத்தது. பதிவைப் புதுப்பித்த வகையில் 1976 ஆம் ஆண்டில் ரூ. 40,174.05-ம் கிடைத்தது.

1976 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், 66 குற்ற வழக்குகள் முடிவுறாமல் இருந்தன. இந்த ஆண்டில், 261 குற்ற வழக்குகள் அனுமதிக்கப்பட்டன. இதனால், குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 327 ஆக உயர்ந்தது. இந்த 327 வழக்குகளில், 239 வழக்குகள் தண்டனையில் முடிந்தன, 3 வழக்குகளில் விடுதலை கிடைத்தது. 3 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. ஆண்டின் இறுதியில், எஞ்சியுள்ள 82 வழக்குகள் முடிவுறாமல் இருந்தன. ரூ. 28,220 அபராதமாகக் கிட்டியது.

**1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர் (பணி நிலைமைகளும் பல்வேறு விதித்துறைகளும்) சட்டம்.**

பத்திரிகை நிறுவனங்களின் ஆய்வாளர்கள் என்ற தகுதியில் தொழிலாளர் நல ஆய்வாளர்களால், ஆய்வு ஆண்டில், இச் சட்டத்தின் விதித்துறைகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1976 ஆம் ஆண்டின் இறுதியில், 1,391

தொழிலாளர்களை வேலைக்கமர்த்திய 43 நிறுவனங்கள் இருந்தன. ஆய்வு ஆண்டில் ஆய்வாளர்களால் 32 முறையான ஆய்வுகள் செய்யப்பட்டன.

## 1961 ஆம் ஆண்டு தொழில் வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம்.

1976 ஆம் ஆண்டில், 41 தொழில் நிறுவனங்களின் நிலை ஆணைகள், சான்றளிக்கும் அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்டன. 13 நேர்வுகளைப் பொறுத்தமட்டில், இந்த நிலை ஆணைகளின் திருத்தங்களும், இந்த ஆண்டில் சான்றளிக்கப்பட்டன.

இச்சட்டத்தின் 6-வது பிரிவின்கீழ், மேல் முறையீட்டு அதிகாரிகளாகத் தொழிலாளர் நல நீதிமன்றங்கள், இந்த ஆண்டில், 2 மேல் முறையீடுகளை முடிவு செய்துள்ளன.

## தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய-பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம்.

இந்தச் சட்டம் தொழிற்சாலைகள் சட்டத்தின் இரண்டாவது பிரிவைச் சேர்ந்த (m) பகுதியில் பொருள் விளக்கம் அளிக்கப் பட்டுள்ள 'தொழிற்சாலைகள்' அனைத்திற்கும் பொருந்துகிறது; அல்லது அந்தச் சட்டத்தின் 85-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்கீழ் ஒரு தொழிற்சாலையாகக் கருதப்படுகின்ற எந்த இடத்திற்கும் பொருந்துகிறது. மலைத் தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின் இரண்டாவது பிரிவைச் சேர்ந்த (f) பகுதியில் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள மலைத் தோட்டங்களுக்குப் பொருந்துகிறது; தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டத்தின் 2 ஆவது பிரிவைச் சேர்ந்த (6) ஆவது பகுதியில் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளவாறு கடைகள், நிறுவனங்கள் அனைத்திற்கும் பொருந்துகிறது. மேலும், 1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டத்தின் 2 (h)-வது பிரிவின்கீழ் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் அனைத்திற்கும் கூட இச்சட்டத்தின் விதித்துறைகளை அரசு நீட்டித்துள்ளது.



இச் சட்டத்தின் விதித் துறைகளை மீறியமைக்காக ஆய்வாண்டில் தொழிற்சாலை நிர்வாகங்களுக்கெதிராக 2,197 வழக்குகள் தொடரப்பட்டன. இவற்றில் 2,057 வழக்குகளில் நிர்வாகங்கள் குற்றமிழைத்துள்ளதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. ஒரு வழக்கின் நேர்வில், நிர்வாகத்தின்பால் குற்றமில்லையென நிர்வாகத்தரப்பு விடுவிக்கப்பட்டது. வேறு இரண்டு வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. இந்த ஆண்டில் ரூ. 54,308 அபராதமாக வசூலிக்கப்பட்டது.

இச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள், இவ்வாண்டு 126,868 முறை நேரிற் சென்று பார்வையிட்டனர்.

## 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தலும், நீக்கலும்) சட்டம்.

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தலும், நீக்கலும்) சட்டம் 10—2—1971 ஆம் நாளில் செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ், 1975 டிசம்பரில் மாநில அரசு விதிகளை இயற்றியது. 31—12—1975 அன்று இவை செயலுக்கு வந்தன. இச்சட்டத்தின்கீழ், தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் அலுவலகங்களில் உள்ள தொழிலாளர் நல உதவி ஆணையாளர்கள் பதிவு அதிகாரிகளாகவும், தொழிலாளர் நல ஆய்வாளர்கள் உரிமம் வழங்கும் அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். இச்சட்டத்தின் 15 (1)-வது பிரிவின்கீழ், தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்கள், மேல் முறையீட்டு அதிகாரிகளாக நியமிக்கப் பெற்றுள்ளனர். தொழிற்சாலை ஆய்வாளர்கள், மலைத் தோட்ட ஆய்வாளர்கள், தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் ஆகிய பார்வையிடும் அதிகாரிகள் யாவரும் இந்தச் சட்டத்தின்கீழ், ஆய்வாளர்களென அறிவிக்கப்பட்டுள்ளனர். தவிரவும், மண்டலங்களில் உள்ள தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்களும், தொழிலாளர் நல உதவி ஆணையாளர்களும், தொழிற்சாலை மேற்பார்வை ஆய்வாளர்களும், தலைநகரின் தொழிலாளர் நல ஆணையாளரும், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரும், தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளரும், தொழிலாளர் நலத் துணை ஆணையாளரும் (பார்வையிடல்) இச்சட்டத்தின்கீழ் ஆய்வாளர்களென அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலையிலமர்த்தப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் இச்சட்டத்தைச் செயற்படுத்துமாறு தொழிற்சாலை ஆய்வாளர்களுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. தொழிற்சாலைச் சட்டத்தின் விதிகளுக்கு உட்படாத நிறுவனங்களில் தொழிலாளர் நல ஆய்வாளர்கள் இந்தச் சட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றனர். தொழிற்சாலைகள் உட்பட எல்லா வகைப்பட்ட நிறுவனங்களிலும் வேலைக்கமர்த்தப் பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் தொடர்பாகத் தொழிலாளர் நல ஆய்வாளர்கள் உரிமம் வழங்கும் அதிகாரிகளாக அறிவிக்கப் பட்டுள்ளனர்.

இதுவரை ஒப்பந்தக்காரர்கள் மூலமாக 5,715 தொழிலாளர்களை வேலையில் அமர்த்தியுள்ள 253 முக்கியத் தொழிலதிபர்கள், சட்டத்தின் 7 (1) பிரிவின்கீழ், பதிவு செய்யப் பெற்றுள்ளனர். 3,316 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள 79 ஒப்பந்தக் காரர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இச் சட்டத்தை நிர்வகிப்பதற்கு அரசுக்கு ஆலோசனை கூறும் பொருட்டு தொழிலாளர் நலன்—வேலைவாய்ப்புத் துறை அரசுச் செயலாளர் தலைமையின்கீழ், மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனைக் குழு ஒன்று இச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் தொழிலதிபர்கள் பிரதிநிதிகள் நால்வரும், தொழிலாளர் பிரதிநிதிகள் நால்வரும், சென்னை தொழிலாளர் நல ஆணையாளரும், பொதுப்பணித் துறைத் தலைமைப் பொறியாளரும் (பொது) (பின்னர்க் கூறிய இவ்விருவரும் குழுவில் அரசுச் சார்புடைய உறுப்பினர்கள்) இடம் பெற்றுள்ளனர். தொழிலாளர் நல உதவி ஆணையாளர் (இணக்கப்பணி) இக்குழுவின் ஆய்வாளராவார்.

### 1976 ஆம் ஆண்டு விற்பனை மேம்பாட்டுப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்.

மருந்து தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ள இச்சட்டம் 6—3—1976 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. இந்தச் சட்டத்தின் 8 ஆவது பிரிவின்படி தொழிலாளர் நல ஆணையாளர், தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் (பார்வையிடல்), தொழிலாளர் நல வட்டாரத் துணை



ஆணையாளர்கள், தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் இச்சட்டத்தின்கீழ் 'ஆய்வாளர்களாக' அறிவிக்கப்பட்டுள்ளனர்.

### (ii) ஊதியங்கள் குறித்து சட்டம் இயற்றுதல். 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டம்.

கீழ்க்காணும் வேலை நியமனங்களுக்காகக் குறைந்தளவு ஊதிய விதங்களை 1976-77 ஆம் ஆண்டில் அரசு வரையறுத்துள்ளது; திருத்தியமைத்துள்ளது.

1. வேளாண்மையிலும், அதனைச் சார்ந்த துணைப் பணிகளிலும் வேலை.

2. மூக்குப் பொடித் தயாரிப்புத் தொழிலில் வேலை.

3. மணமூட்டிய சுவைக்கும் புகையிலை தயாரிப்புத் தொழிலில் வேலை.

4. சாலையமைத்தல், கட்டிடம் கட்டுதல், கல் உடைத்தல், சரளைக்கல் தயாரிப்பு, சாலைகள் பேணுதல் ஆகிய தொழில்களில் வேலை.

5. அரிசி ஆலை, மாவரைக்கும் ஆலை, பருப்புத் தோல் நீக்கும் ஆலை ஆகியவற்றில் வேலை.

6. கற்களை வெட்டியெடுக்கும் சுரங்கங்களில் கற்களை உடைத்தல், சரளைக்கல் ஆகிய தொழில்களில் வேலை.

7. மலைத் தோட்டங்களில் வேலை.

8. ஓட்டல்கள், உணவகங்களில் வேலை.

9. திரைப்பட அரங்குகளில் வேலை.

10. உள்ளாட்சி அதிகார மன்றமொன்றில் வேலை.

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் குறைந்தளவு ஊதியங்கள் தொடர்பாகச் சட்ட விதித் துறைகளைச் செயற்படுத்துவதற்கு வருவாய்த் துறை ஆய்வாளர்கள், துணைத் தாசில்தார்கள், வட்டத் தாசில்தார்கள், வருவாய்த் துறை அலுவலர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோர்

செயற்படுத்தும் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். அறிவிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களைக் கொடுக்கத் தவறுகின்ற நில உடைமையாளர்கள்மீது வழக்குத் தொடர்வதற்கு அனுமதி வழங்கக் கோட்ட வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும் அரசு அதிகாரமளித்துள்ளது.

கீழ்க்காணும் வேலை நிறுவனங்கள் தொடர்பாக அரசு ஏற்கனவே அமைத்த குறைந்தளவு ஊதியங்கள் குறித்த ஆலோசனைக் குழுக்கள் தங்கள் விவாதங்களை முடித்துக்கொண்டு இறுதி அறிக்கைகளை அரசுக்கு அனுப்பியுள்ளன. இந்த வேலை நியமனங்களுக்குக் குறைந்தளவு ஊதிய வீதங்களை வரையறுத்தல்/திருத்தியமைத்தல் பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது:—

1. தீப்பெட்டித் தொழிலில் வேலைவாய்ப்பு.

2. செங்கல் ஓடுகள் தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு.

3. அரசு மோட்டார் போக்குவரத்தில் வேலைவாய்ப்பு.

4. ஆட்டோ மொபைல் பணிக்களரிகளில் வேலைவாய்ப்பு.

ஏற்கெனவே அமைக்கப்பட்ட குறைந்த அளவு ஊதியங்கள், ஆலோசனைக் குழுக்கள் கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளைப் பொறுத்த வரையில் குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயிப்பது பற்றி அல்லது திருத்தியமைப்பது பற்றி பரிசீலித்து வருகின்றன :—

1. தோல் பதனிடு தொழிலிலும் தோல் தயாரிப்புத் தொழிலிலும் வேலை.

2. அச்சகங்களில் வேலை.

3. பருத்தி விதை நீக்குதல், பட்டை அடித்தல், தொழிலில் வேலை.

4. கழிவுப் பஞ்சுத்தொழிலில் வேலை.

5. உப்பளங்களில் வேலை.

கீழ்க்காணும் வேலைகள் குறித்து குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயம் செய்ய அல்லது திருத்தியமைக்க குறைந்த அளவு ஊதியங்கள் ஆலோசனைக் குழுக்களை அமைப்பதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன:—





1. எண்ணெய் ஆலை எதிலும் வேலை.

2. சலவை நிலையங்களிலும், துணிகளை (உள்ளன் துணிகள் உட்பட) வெளுப்பதிலும் வேலை.

3. கடைகள், வணிக நிறுவனங்களில் வேலை.

4. திரைப்படத் தொழிலில் (உற்பத்தி, வழங்கல், விளம்பரம்) வேலை.

5. செயற்கை வைரம் பட்டை தீட்டுதலில் வேலை.

கீழ்க்காணும் வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயம் செய்ய, அரசுக்கு இயலும் வகையில், 1976-77 ஆம் ஆண்டில், மேற்படி வேலைகள் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன :—

1. அங்காடிகள் இருக்குமிடங்கள், சந்தைகள் இவை போன்ற பிற இடங்களில் சரக்குகளை ஏற்றுதல், இறக்குதலில் வேலை.

2. திரைப்படத் தொழிலில் (உற்பத்தி, வழங்கல், விளம்பரம்) வேலை.

3. செயற்கை வைரம் பட்டை தீட்டுதலில் வேலை.

4. தேயிலையை வாங்கி, தேயிலைதூள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் வேலை (4-8-77 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது).

அங்காடி இருக்குமிடங்கள், சந்தைகள் (விழாக்காலக் கடைகள், அங்காடி இடங்கள்) சரக்கு ஏற்றுதல், இறக்குதல் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் ஓர் அமைப்பாக இல்லாத துறையிலுள்ள தொழிலாளர்கள் ஆவர். குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பு, வெளியீடு முறையைப் பின்பற்றி இத் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயிக்க அரசு கருதுகிறது.

இச்சட்டத்தின்கீழ், இவ்வாண்டில் தொழிற்சாலை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல ஆய்வாளர்கள், மலைத்தோட்ட ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் தொழிலாளர் நலத்துணை ஆய்வாளர்கள், ஆகியோர் 8,963 தடவை ஆய்வுகளை மேற்கொண்டனர்.

சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறியதற்காக வழக்குகள் தொடரப்படுகின்றன. இந்த வகையில், 106 வழக்குகள் இவ்வாண்டுத் தொடக்கத்தில் நீதிமன்றத்தின் முன்பு விசாரணையில் இருந்தன. ஆய்வு ஆண்டில் 383 வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டன. இவற்றில் 223 வழக்குகளில் தண்டனை விதிக்கப் பட்டது. எஞ்சிய 266 வழக்குகள் இவ்வாண்டின் முடிவில் விசாரணையில் இருந்தன. 11,985 ரூபாய் அபராதமாக வசூலிக்கப் பட்டது.

குறைந்த அளவு ஊதியங்கள் கொடுக்கப்படவில்லை என்று கோரி, குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆவது பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட 3 மனுக்களைத் தொழிலாளர் நீதி மன்றங்களின் தலைமை அதிகாரிகள் விசாரித்துத் தீர்ப்பளித்தனர்.

**குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம், 1936.**

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகமும், பிற தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரை தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகமும் இச் சட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது.

சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறியதற்காக 744 நேர்வுகளில் தொழில் அதிபர்கள் மீது வழக்குத் தொடர அனுமதி வழங்கப் பட்டது. இவ்வழக்குகளில் 565 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன. 21,370 ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டது.

ஊதியங்கள் கொடுப்பது குறித்த 275 கோரிக்கைகள் 1976-ம் ஆண்டு தொடக்கத்தில் விசாரணையில் இருந்தன. தொழிலாளர் இழப்பீடு குறித்து ஊதியங்கள் சட்டத்தின்கீழ் விசாரிக்கும் அதிகாரிகளான கூடுதல் ஆணையாளர்கள் முன்பு 579 உரிமைக் கோரிக்கைகள் இவ்வாண்டுத் தாக்கல் செய்யப்பட்டன, (1975 ஆம் ஆண்டில் 424 கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட் டிருந்தன). இவற்றில், இவ்வாண்டு 446 கோரிக்கைகள் குறித்து தீர்ப்பளிக்கப்பட்டன. ஆண்டிறுதியில் 408 கோரிக்கைகள் விசாரணையில் இருந்தன.

இச்சட்டத்திற்குட்பட்ட தொழில் நிறுவனங்கள் குறித்து ஆய்வாளர்கள் 29,271 தடவை ஆய்வுகளை மேற்கொண்டனர்.



இரயில் நிலையங்கள், விமானத் தளங்கள், சுரங்கங்கள் ஆகிய இடங்களில் தொழிலதிபர் ஒருவர் அமைத்துள்ள சிற்றுண்டி விடுதியைப் பொறுத்தவரை, ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் 11 ஆவது பிரிவின்கீழ் வெளியிடப்பெற்ற அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ள சில நிபந்தனைகளுக்குட்பட்டு தொழிலாளர் ஊதியத்திலிருந்து தொகை பிடித்துக் கொள்ளுவதற்கு அனுமதி யளிக்கும் அதிகாரியாக மத்தியத் தொழிலாளர் நலத் தலைமை ஆணையாளரை மத்திய அரசு நியமித்துள்ளது.

மேற்சொன்ன சட்டத்தின் செயல்நோக்கத்திற்காக, (2) பத்தியில் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வகைத் தொழில் நிறுவனங்களுக்கு மத்திய அரசைச் சேர்ந்த கீழ்க்காணும் அதிகாரிகளை ஆய்வாளர்களாக தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. மேற்சொன்ன ஆய்வாளர்கள் இந்த தொழில் நிறுவனங்கள் குறித்துத் தங்கள் பணியைச் செய்து வர வேண்டும்:—

| அதிகாரிகள் | தொழில் நிறுவனங்களின் வகை. |
|---|---|
| 1. (மத்திய) சரக தொழிலாளர் நல ஆணையாளர் சென்னை. | சென்னை துறை முகத்தில் உள்ள (கப்பல்) துறை தோணிதுறை. |
| 2. (மத்திய) உதவி தொழிலாளர் நல ஆணையாளர், தலைமையிடம் சென்னை. | ௸ |
| 3. (மத்திய) தொழிலாளர் நல சட்டங்களைச் செயற்படுத்தும் அதிகாரி, தலைமையிடம் சென்னை. | ௸ |

ஒரு திருத்தச் சட்டத்தின் மூலம், (1976 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் திருத்தச் சட்டம்) இச்சட்டத்தின்கீழ் வருவதற்கான தொழிலாளர்களின் ஊதிய வரம்பு ரூபாய் 400-லிருந்து ரூபாய் 1,000 மாக உயர்த்தப்பட்டுள்ளது.

**1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம்.**

இச்சட்டம், ஆண், பெண் இருபாலாருக்கும் ஒரே வீதத்தில் சம்பளம் வழங்குவதற்கும் வேலைவாய்ப்பில், பால் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுக்கவும் வகை செய்கிறது. இச்சட்டம், இதுவரையில் மலைத் தோட்டத் தொழில் உட்பட 26 தொழில்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது.

[1977 ஆகஸ்ட் 11

அரசு, இச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின்கீழ் ஆய்வாளர்களையும் மேற்படி சட்டத்தின் 7 ஆவது பிரிவின் கீழ் அதிகார மன்றங்களையும் நியமித்துள்ளது.

மலைத் தோட்டத் தொழில் தொடர்பான ஒரே ஒரு தகராறு தவிர, இம்மாநிலத்தில் இச்சட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பான புகார் எதுவும் வரவில்லை. இத்தகராறு தொடர்பாக, சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின்னர் 27–10–1976 அன்று தொழிலாளர் நல இணை ஆணையாளர் அதனைத் தீர்த்து வைத்தார்.

## (iii) தொழில் தகராறுகள் சட்டங்கள்.

### 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

இவ்வாண்டில் எழுந்த தொழில் தகராறுகளின் எண்ணிக்கையும் அவை தீர்த்துவைக்கப்பட்ட விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | 1975 | 1976 |
|---|---|---|---|
| (a) | வரப்பெற்ற புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை. | 6,971 | 7,090 |
| (b) | புலனாய்வு செய்யப்பட்ட புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை. | 6,436 | 7,025 |
| (c) | இணக்க முறையில் தீர்க்கப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 1,044 | 1,608 |
| (d) | தீர்வுக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 390 | 448 |
| (e) | நடுவர் தீர்வுக்கு அனுப்பப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 29 | 24 |

மேற்சொன்ன (c) (d) (e) பிரிவுகளின் கீழ் வாராதவை தனிப்பட்ட இணக்க முறையில் அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உரியவாறு முறையான ஆலோசனை வழங்கி தீர்த்து வைக்கப்பட்டவையாகும். அல்லது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டியதோ அல்லது நடுவர் தீர்வுக்கு விடவேண்டியதோ அவசியமில்லை என்று கருதப்பட்டவையாகும்.



77 ஆகஸ்ட் 11]

வேலைநிறுத்தங்கள்.

இவ்வாண்டிலும் முந்திய ஆண்டிலும் நடைபெற்ற வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் ஒப்பீட்டு விவரங்கள் வருமாறு:—

| | | 1975 | 1976 |
|---|---|---|---|
| (a) | கதவடைப்புகள் உட்பட நடைபெற்ற வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை. | 244 | 207 |
| (b) | இழந்த உழைப்பு நாட்கள் | 16,86,246 | 10,00,507 |

வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகளின் தொழில் வாரியான விவரங்கள் வருமாறு:—

| தொடர் எண் மற்றும். (1) | வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகளின் எண்ணிக்கை. (2) | ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. (3) | இழந்த உழைப்பு நாட்கள். (4) |
|---|---|---|---|
| 1975— | | | |
| 1. துணி ஆலைகள் | 102 | 66,904 | 8,52,793 |
| 2. பொறியியல் | 58 | 6,860 | 2,00,530 |
| 3. தோல் பதனிட்டு ஆலைகள் | 3 | 237 | 1,934 |
| 4. புகையிலை, பீடி தொழில் | 4 | 637 | 11,364 |
| 5. மலைத் தோட்டத் தொழில்கள் | 6 | 3,691 | 13,219 |
| 6. ஏனையவை | 71 | 92,716 | 6,06,416 |
| மொத்தம் | 244 | 1,71,045 | 16,86,246 |
| 1976— | | | |
| 1. துணி ஆலைகள் | 97 | 56,172 | 5,89,639 |
| 2. பொறியியல் | 36 | 8,750 | 1,87,541 |
| 3. தோல் பதனிட்டு ஆலைகள் | 1 | 990 | 2,205 |
| 4. புகையிலை, பீடித் தொழில் | 6 | 1,076 | 14,085 |
| 5. மலைத் தோட்ட தொழில்கள் | 2 | 4,000 | 12,500 |
| 6. ஏனையவை | 65 | 9,771 | 1,94,537 |
| மொத்தம் | 207 | 80,759 | 10,00,507 |

[1977 ஆகஸ்ட் 11

1976 ஆம் ஆண்டில் வேலைநிறுத்தங்கள்/ கதவடைப்புகள் குறித்து தீர்வுகாணப்பட்ட வழிமுறைகள் வருமாறு:—

| | | |
|---|---|---|
| (a) | நேரடிப் பேச்சு வார்த்தை .. .. | 15 |
| (b) | தாமாக முன்வந்து வேலை தொடங்கப்பெற்றவை | 31 |
| (c) | தொழிலாளர் நல அரசு அதிகாரிகள் தீர்த்து வைத்தவை. | 148 |
| (d) | காலவரையற்றவை .. .. | .. |
| (e) | மூடியவை .. .. | 2 |
| (f) | ஆண்டின் இறுதியில் பேச்சு வார்த்தை முன்னேற்றத்தில் இருந்தவை. .. | 11 |
| | மொத்தம் .. | 207 |

*1976 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (திருத்தச்) சட்டம்:*

இச்சட்டம் 5—3—1976 அன்றிலிருந்து செயலுக்கு வந்தது. இச் சட்டத்தின்படி, சராசரியாக 300 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிகின்ற நிறுவனங்களின் தொழில் அதிபர்கள், ஆட்குறைப்பு செய்வதற்கோ தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வதற்கோ நிறுவனங்களை மூடுவதற்கோ முன் அனுமதியைப் பெற வேண்டும். மாநில அரசு, இந்தச் சட்டத்தின்கீழ் விதிகள் இயற்றி, (அ) ஆட்குறைப்பு செய்ய (ஆ) வேலைநீக்கம் செய்ய மற்றும் (இ) நிறுவனத்தை மூடுவதற்கு முன் கீழ்க்கண்ட அதிகாரிகளிடம் விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும் என்பதையும் அறிவித்துள்ளது:—

(1) 25 M பிரிவின்கீழ் ஆட்குறைப்பு செய்ய அனுமதிபெறுவதற்கான விண்ணப்பம் 60-B விதியின்கீழ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நலத்துறை இணை ஆணையாளருக்குச் செய்து கொள்ளப்பட வேண்டும்.

(2) 1976 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (திருத்தச்) சட்டத்தின் 25-N பிரிவின்கீழ் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வதற்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம், 61-A பிரிவின்கீழ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நலத்துறை ஆணையாளருக்கு செய்து கொள்ளப்பட வேண்டும்.



1977 ஆகஸ்ட் 11]

(3) நிறுவனத்தை மூடுவதற்கு அனுமதி வேண்டும் விண்ணப்பம், 61-B பிரிவின்கீழ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள மாநில அரசுக்கு செய்து கொள்ளப்பட வேண்டும்.

வரப் பெற்று முடிவு எடுக்கப்பட்ட, மற்றும் முடிவெடுக்கப் படாமல் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை வருமாறு:—

| | ஆட்குறைப்பு. | வேலை நீக்கம். | நிறுவனத்தை மூடுதல். |
|---|---|---|---|
| (a) வரப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை .. .. .. | 82 | 5 | 2 |
| (b) முடிவு எடுக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை .. .. .. | 23 | 3 | 2 |
| (c) இன்னும் முடிவு எடுக்கப்படாமல் உள்ள விண்ணப்பங்கள் .. .. | 1 | .. | .. |
| (d) குறைபாடுள்ளவை எனத் திருப்பி அனுப்பப்பட்டவை .. .. | 58 | 2 | .. |

**தொழில் உறவுகள் அடங்கல் சட்டம் குறித்த குழு:**

தொழில் உறவுகள் அடங்கல் சட்டம் குறித்து பரிவுரைகள் செய்யவும் குழு ஒன்று அமைக்கவும் இந்தியத் தொழிலாளர் மத்திய தொழிலாளர் நலம் மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சரின் தலைமையின் கீழ் 30 உறுப்பினர்களைக் கொண்ட மூத்தரப்பு குழு ஒன்றை இந்திய அரசு அமைத்துள்ளது. இவ் வரசுக்கு அக்குழுவில் பிரதித்துவம் அளிக்கப்பட்டு தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் ஓர் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது, தொழில் தகராறுகள் சட்டம், தொழிற்சங்க சட்டம் மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டத்தின் கீழ் வருகின்ற தொழில்கள் குறித்த தொழில் உறவுகள் பற்றிய அடங்கல் சட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டியது நீண்ட நாட்களாகவே நிறைவேறாமல் உள்ளது. நாடாளுமன்றத்தின் அடுத்த குளிர்காலக் கூட்டத் தொடரில் இச்சட்டம் கொண்டுவரப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**இணக்கத் தீர்வு அமைப்பை வலுப்படுத்துதல் :**

தொழில் தகராறுகளுக்கும், தொழிலாளர்கள் இழப்பீட்டுத் தொகைச் சட்டம் மற்றும் ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளுக்கும் விரைவான தீர்வு காண குறிப்பாக அம்பத்தூர், திருவொற்றியூர் பகுதிகளில், அரசு, தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் ஒருவரைக் கொண்ட புதிய பகுதி ஏற்படுத்தியுள்ளது. இந்த அதிகாரி சென்னையில் இருப்பார்.

**1976 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சில முக்கியமான தீர்வுகள் :**

**எலெட் ஆப்டிக்கல் இண்டஸ்ட்ரீஸ், கிண்டி.**—சில தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து இந்த நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 16--6--1975-லிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். இந்த வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து, நிர்வாகத்தினர் 24—6—1975-லிருந்து கதவடைப்பு செய்தனர். சென்னை தொழிலாளர் நல அதிகாரி-IV-ம், சென்னை, தொழிலாளர் நல (இணக்கத் தீர்வு) உதவி ஆணையாளரும் இத் தகராறை சுமுகமான முறையில் தீர்த்து வைக்கப் பல்வேறு தேதிகளில் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். எவ்விதத் தீர்வும் காணமுடியாமல் போகவே, சென்னை தொழிலாளர்நல அதிகாரி IV தன்னுடைய சமாச முறிவு அறிக்கையை அரசுக்குத் தெரிவித்தார். வேலை நிறுத்தம் அல்லது கதவடைப்பை நடுவர் தீர்ப்புக்கு அனுப்பி, அரசு, 1975 அக்டோபரில் உத்தரவுகள் பிறப்பித்தது. வேலை நிறுத்தம் அல்லது கதவடைப்பு தொடர்ந்து நடைபெறுவதற்குத் தடை விதித்து அரசு 1975 அக்டோபரில் ஓர் உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவினை ஒட்டி, நிர்வாகத்தினர் 23--10—1975 அன்று கதவடைப்பை நீக்கினர். தொழிலாளர்கள் தங்களது வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு 28—10—1975 அன்று வேலைக்குத் திரும்பினர். அன்றே, காவலர் மீது வன்முறைக் குற்றச்சாட்டுக் கூறி, நிர்வாகத்தினர், 31—12—1975-லிருந்து அந்த நிறுவனத்தை மூடுவதற்காக, தொழில் தகராறுகள் சட்டத்தின் 25 FFA பிரிவின் கீழ் அறிவிப்பு ஒன்று கொடுத்தனர். சென்னை, தொழிலாளர் நல அதிகாரி IV-ன் முன்னிலையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அவர் தனது இணக்கத் தீர்வு அறிக்கையை அனுப்பி வைத்தார். தொழிலாளர் நல உதவி ஆணையாளர் (இணக்கத் தீர்வு) தகராறில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் மேற்கொண்டும் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். இந்தப் பேச்சு வார்த்தைகளின் விளை



வாக, அத்தகராறு குறித்து, தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாட்டினை ஒட்டி இந்த நிறுவனம் 3—5—76 முதல் மீண்டும் திறக்கப்பட்டது.

**நான்கோ இரப்பர் அண்டு பிளாஸ்டிக் லிமிடெட், கோயம்புத்தூர்.**—192 தொழிலாளர்கள் பணியாற்றும் மேற்படி நிறுவனம், நிதிநிலை நெருக்கடி காரணமாக 1—7—1975 முதல் மூடப்பட்டது.

சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே. 19—4—1976 அன்று கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் முன்னிலையில் ஏற்பட்ட ஒரு தீர்வின் மூலம், தொழிற்சாலையில் மீண்டும் வேலையைத் தொடங்குவதற்கான வரையறைகள் நிபந்தனைகளின் பேரில் நிர்வாகத்தினர் தொழிலாளர்களுடன் ஓர் உடன்பாடு செய்து கொண்டனர்.

இந்த நிறுவனத்திற்குப் பண உதவி செய்ய ஒப்புக் கொண்டுள்ள இந்தியன் வங்கி, அதன் நலன் பாதுகாக்கப்படும் வகையில், அரசு அதிகாரி ஒருவர் தொழிற்சாலையின் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்படவேண்டும் என்று விரும்பியது. நிர்வாகத்தினர் இதற்கு ஒப்புதல் அளித்துள்ளனர்.

தொழில்-வணிகத்துறையின் உதவி இயக்குநரை இத் தொழிற்சாலைக்கு நிர்வாக அதிகாரியாக நியமித்து அரசு, 1977 ஏப்ரலில் உத்தரவுகள் பிறப்பித்தது.

இத்தொழிற்சாலையை விரைவாக மீண்டும் திறப்பதற்காக, அண்மையில் 24—6—1977 அன்று கோயம்புத்தூர், தொழிலாளர் நலத் துணை ஆணையாளரின் முன்னிலையில் இச்சட்டத்தின் 12(3) பிரிவின்கீழ் ஒரு தீர்வு காணப்பட்டது. இதன்படி, நிர்வாகத்தினரும் தொழிலாளர்களும் சில நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டனர். இத்தொழிற்சாலை விரைவில் மீண்டும் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சென்னை ரப்பர் தொழிற்சாலை, திருவொற்றியூர், சென்னை-19—**
சென்னை-19, சென்னை ரப்பர் தொழிற்சாலைக்குள் சில வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றதை அடுத்து அத் தொழிற்சாலை நிர்வாகத்தினர், 25—10—1975 அன்று கதவடைப்பு செய்தனர். இச் சம்பவங்கள் தொடர்பாகக் குற்றஞ் சாட்டப்பட்ட 140 தொழிலா

ளர்கள் மீது விசாரணை முடியும் வரையில் அவர்களை நிர்வாகத்தினா தற்காலிக வேலைநீக்கம் செய்தனர். பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளுக்குப் பின்னர், சென்னை, தொழிலாளர் நல ஆணையாளரின் முன்னிலையில் சம்பந்தப்பட்ட தரப்பினர் ஒரு உடன்படிக்கைக்கு வந்தனர். இந்த உடன்படிக்கையையொட்டி, 25—10—1975 தொடங்கிய கதவடைப்பு, 4—3—1976 முதல் நீக்கப்பட்டது.

வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களைத் தவிர மற்ற தொழிலாளர்கள் அனைவரும் படிப்படியாக வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். வேலைநீக்கம் செய்யப்பட்ட 140 பேரில், 47 பேர் வருத்தம் தெரிவித்துக் கடிதம் அனுப்பியதால், வேலை நீக்கம் செய்யப்படாத தொழிலாளர்கள் வேலைக்கு திரும்புவதற்கான படிப்படியான திட்டத்திற்கிணங்க அவர்கள் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மேலும் 51 தொழிலாளர்கள், சம்பவங்களுக்கு வருத்தம் தெரிவித்து கடிதம் அனுப்பினர். அதன் அடிப்படையில் அவர்கள் 19—3—1976 முதல் வேலையில் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். அவர்கள், வேலை நீக்கம் செய்யப்பட்ட 4—3—1976 முதல் 18—3—1976 வரையான கால அளவு ஓர் தண்டனையாகக் கருதப்பட்டு, மேற்கொண்டு நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. எஞ்சிய 42 தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நீக்கத்திலேயே இருந்தனர். இந்த 42 தொழிலாளர்களுக்கு எதிராக நிர்வாகத்தினர் ஒழுங்கு நடவடிக்கை எடுத்ததன் விளைவாக அவர்களில் 31 தொழிலாளர்கள், 7—11—1975 லிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இத் தொழிலாளர்களை வேலையில் சேர்த்துக் கொள்ளாதது தொடர்பான தகராறில், சென்னை, தொழிலாளர் நல உதவி ஆணையாளரின் முன்னிலையில் 5—10—1976 அன்று சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதனை ஒட்டி, வேலை நீக்கம் செய்யப்பட்ட 34 தொழிலாளர்களின் கணக்குகள் அமைதியாகத் தீர்த்து வைக்கப்பட்டன. மற்ற தொழிலாளர்கள், தனிப்பட்ட முறையில் நிர்வாகத்தினருடன் கணக்குகளைத் தீர்த்துக் கொண்டனர்.

மதுரா கோட்ஸ் லிமிடெட், மதுரை.—மதுரை, பாண்டியன் மில்ஸ் உட்பட மதுரை, அம்பாசமுத்திரம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள மதுரா கோட்ஸ் லிமிடெட்டின் தொழிலாளர்கள் சுமார் 16,000 பேர், 1974-75 ஆண்டுக்கான அவர்களது ஊதியக் கொடை தொடர்பாக 21/22-1-1976 முதற்கொண்டு வேலை நிறுத்தம்





சய்தனர். தொழிலாளர் நல ஆணையாளர் நடத்திய பேச்சு ார்த்தைகளாலும் அவர் வழங்கிய ஆலோசனையைத் தொடர்ந்தும் த்தகராறில் தீர்வு ஏற்பட்டு தொழிலாளர்கள் 6—2—1976 முதல் வலைக்குத் திரும்பினர்.

(ii) 1—1—1974 முதல் 30—6—1975 வரையிலான கால அளவுக் நரிய ஊதியக் கொடை பற்றிய வழக்கில் அளிக்கப்பட்ட 7—5—1975 ஆம் நாளிட்ட தீர்ப்பு செல்லுபடியாகக் கூடியது, கட்டுபடுத்தக் கூடியது என்றும், மேற்படி தீர்ப்புக்கு இணங்க, நிர்வாகத்தார், தொழிலாளர்களுக்கு, எஞ்சிய ரூபாய் 68.3 இலட்சத்தை வழங்க வேண்டும் என்றும் சென்னை, சிறப்புத் தொழில் தகராறு நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து நிர்வாகத்தினர், தலைமை உயர் நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்தனர். தலைமை உயர்நீதி மன்றம், இத்தகராறை நடுவர் மன்றத்திற்கே திருப்பி அனுப்பி, திருத்தப்பட்டவாறுள்ள ஊதியக் கொடை வழங்கல் சட்டத்தின் விதித்துறைகளுக்கு ஏற்ப அதனைத் தீர்த்து வைக்குமாறு உத்தர விட்டது. மேற்படி தீர்ப்பை வழங்கிய சிறப்பு தொழில் தகராறு கள் நடுவர் மன்றம் செயல்படாத நிலையில் உள்ளதால், இத்தகராறை புதியதொரு நடுவர் மன்றத்திற்கு வருவதற்கான ஆணைகளை உச்ச நீதிமன்றத்திடம் பெறுமாறு, அரசு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தற்போது அறிவுறுத்தியுள்ளது.

(iii) மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த மதுரா கோட்ஸ் லிமிடெட்டின் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் உரிய 1975-76 ஆம் ஆண்டுக்கான மொத்த வருமானத்தில் 8-1/3 சத வீதம் ஊதியக் கொடையாக வழங்கப்பட வேண்டும் என்றும், அதுவும் 1977 சித்திரைத் திருவிழாவுக்கு முன்னரே கொடுக்கப்படவேண்டும் என்றும் அந்நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் கோரிக்கை எழுப்பினர். தொழிலாளர் நல ஆணையாளர், சம்பந்தப்பட்ட தரப்பினரை விசாரித்த பின்னர் ஒவ்வொரு தொழிலாளருக்கும் முன் பணமாக ரூபாய் 100 கொடுக்கப்பட வேண்டும் என்றும் ஊதியக் கொடை வழங்கல் சட்டத்திற்கிணங்க ஊதியக் கொடை எதுவும் வழங்கப்படுமானால், அதில் இந்த ரூபாய் 100 சரிக்கட்டிக் கொள்ளப்பட வேண்டும் என்றும் 1977 ஜூலை வாக்கில் அவ்வாறு சரிக்கட்டப்படவில்லை யானால், அந்த முன்பணம், 1977 செப்டம்பரில் வழங்கப்படக்கூடிய 1977 ஆகஸ்ட் திங்களுக்கான சம்பளத்திலிருந்து தொடங்கி 8 சம

தவணைகளில் திருப்பி வசூலிக்கப்பட வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கினர். அவரது ஆலோசனையின் அடிப்படையில் இத்தகராறு தீர்க்கப்பட்டது.

*ஹாக் பிரிட்ஜ், ஹி விட்டிக் அண்டு ஈசன் லிமிடெட், சென்னை.*—சிறு வழங்கல் மின் மாற்றிகளுக்கான (small distribution transformers) கேட்பு ஆணைகள் போதிய அளவு கிடைக்காத காரணத்தால் நிர்வாகத்தினர், சுமார் 80 தொழிலாளர் பணி புரிந்து வந்த தொழிற்சாலை எண் 2-ஐ, 20—3—1976 லிருந்து தற்காலிகமாக மூடி விட்டனர். இருந்தபோதிலும், அவர்கள் 31—10—1976 வரையில் தொழிலாளர்களுக்கு ஊதியங்கள் வழங்கி வந்தனர். நிலைமை சீரடையாத காரணத்தால், நிர்வாகத்தினர், 30—11—1976 லிருந்து தொழிற்சாலை எண் 2-ஐ மூடிவிடத் தாங்கள் முடிவு செய்திருப்பதாக அறிவிப்பு ஒன்றை வெளியிட்டனர். அதன்படி, 2 ஆம் எண் தொழிற்சாலை மூடப்பட்டது. 2 ஆம் எண் தொழிற்சாலையின் பாதிக்கப்பட்ட தொழிலாளரைப் பொதுவான காரணமாகக் காட்டி, 1 ஆம் எண் தொழிற்சாலையைச் சேர்ந்த சுமார் 220 தொழிலாளர்கள் 13—12—1976 லிருந்து மீண்டும் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் இணக்கப் பேச்சுவார்த்தைகளை நடத்தி உடன்பாடு எதுவும் ஏற்படச் சாத்தியமில்லாததால் இணக்க அறிக்கை ஒன்றை அனுப்பினர். இரண்டாம் எண் தொழிற்சாலையை வேலைமுடக்கம் காரணமாக எழுந்துள்ள பிரச்சனை குறித்து சென்னை, தொழில் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடுமாறு குறிப்பிட்டு அரசு, ஆணைகள் பிறப்பித்தது. ஆயினும், உடன்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்பை உண்டாக்குவதற்காகத் தொழிலாளர் நலத் தலித் துணை ஆணையாளர் முன்னர் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. பேச்சு வார்த்தைகளின் போது, தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர், தொழிலாளர்கள் பணியை மீண்டும் மேற்கொள்வதற்கு இயலும் பொருட்டு, முன் பணங்கள் வழங்குவதற்குக் கருத்து தெரிவித்தார். மேற்சொன்ன கருத்துரைக்குக் கட்டுப்பட்டுப் பணிக்குச் செல்லத் தமது விருப்பத்தைத் தெரிவித்த சில தொழிலாளர்கள் பணிபுரிய அனுமதிக்கப்பட்டனர். மேலும் அவர்களுக்கு, தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் தெரிவித்துள்ளவாறு முன்பணமும் வழங்கப்பட்டது. இதற்கிடையில் தொழிற் சங்கம் 25—5—1977



ளிட்ட தமது கடிதத்தில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டதாகத் தெரிவித்தது. 1 ஆம் எண் தொழிற்சாலை ற்போது வழக்கம் போல் செயல்பட்டு வருகிறது.

*இந்திய போர்ஜ் அண்டு டிராப் ஸ்டாம்பிங்க்ஸ் லிமிடெட், சென்னை-58*—தொழிலாளர்கள் உற்பத்தியில் மந்த நிலையைக் காட்டினர் என்று குற்றஞ்சாட்டி சுமார் 580 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள சென்னை, இந்திய போர்ஜ் அண்டு டிராப் ஸ்டாம்பிங்க்ஸ் லிமிடெட் நிர்வாகத்தினர் 26—4—1976-லிருந்து தொழிற்சாலையைக் கதவடைப்பு செய்ததாக அறிவித்தனர். தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னர் நடந்த பேச்சு வார்த்தைகளின் விளைவாக உடன்பாடு ஒன்று ஏற்பட்டு 3—6—1976-லிருந்து மீண்டும் பணிபுரியத் தொழிலாளர்கள் சென்றனர். நிர்வாகத்தினர் தொழிலாளர்கள் வன்முறைச் செயலில் ஈடுபட்டுள்ளதாகவும், ஒழுங்கற்ற முறையில் நடந்து கொண்டதாகவும் குற்றங்கூறி, 7—8—1976-லிருந்து மீண்டும் கதவடைப்பு செய்வதாக அறிவித்தனர். தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னர் நடந்த பேச்சுவார்த்தைகள் உடன்பாடு எதிலும் முடியவில்லை. தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளரது இணக்க அறிக்கையின் பேரில், அரசு, தகராறுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை நடுவர் தீர்ப்புக்கு விட்டது. மேலும் தொடர்ந்து கதவடைப்புச் செய்யக் கூடாதென்றும் குறிப்பிட்டது. நிர்வாகத்தினர் 27—1—1977 அன்று கதவடைப்பை ரத்து செய்தனர். ஆனால், தொழிலாளர்கள் மீண்டும் பணிக்குத் திரும்பவில்லை. தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னர் மேற்கொண்டும் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடத்தப்பட்டது. அதன் விளைவாக, 2—2—1977-லிருந்து தொழிலாளர் மீண்டும் பணிக்குத் திரும்பினர். பின்னர் தகராறு குறித்த பிரச்சினைகள் பற்றி இருதரப்பினருக்குமிடையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு முடிவு காணப்பட்டது. அதன் அடிப்படையில், வழக்கம்போல் பணி நடந்து வருகிறது.

*சிவானந்தா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்*—சிவானந்தா மில்ஸ் லிமிடெட்டில் சுமார் 759 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். நூல் சிக்கெடுக்கும் துறையில் வழக்கமாகப் பயன்படுத்தும் இயந்திரங்களுக்குப் பதிலாக உலோக இயந்திரங்களைப் பயன்படுத்துவது குறித்த பிரச்சினை காரணமாக 26—7—1976 லிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். அதன் விளைவாக,

நிர்வாகத்தினர் 11—8—1976-லிருந்து கதவடைப்பை அறிவித்தனர். கோயம்புத்தூர், தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் நடத்திய பேச்சு வார்த்தைகளின் விளைவால் உடன்பாடு ஒன்று ஏற்பட்டு 25—8—1976 அன்று பணி மீண்டும் மேற்கொள்ளப்பட்டது.

**கத்திரி மில்ஸ் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்**—நூல் சுற்றும் துறையில் கையினால் நூல் சுற்றும் கருவிகளுக்குப் பதிலாக விசையினால் இயங்கும் நூல் சுற்றும் கருவிகளைப் பயன்படுத்தும் பிரச்சினை குறித்து சுமார் 615 தொழிலாளர்கள் 28—7—1976 அன்று வேலை நிறுத்தம் செய்தனர். கோயம்புத்தூர், தொழிலாளர் நலத் துணை ஆணையாளரது தலையீட்டின் பேரில், தகராறு தீர்க்கப்பட்டு 3—8—1976 அன்று பணி மீண்டும் நடைபெற்றது.

கையினால் நூல் சுற்றும் கருவிகளை இயக்குவது, முடிச்சு நீக்கிகளைப் (knotters) பயன்படுத்துவது தொடர்பான 3—8—1976 நாளிட்ட உடன்பாட்டைச் செயற்படுத்தாதனால் தொழிலாளர்கள் 3—9—1976 அன்று மீண்டும் வேலை நிறுத்தம் செய்தனர். சென்னை தமிழ் நாடு தொழில் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநர் பொறுப்பில் உள்ள தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் நடத்திய பேச்சு வார்த்தையின் விளைவாக தகராறுக்கு முடிவு காணப்பட்டு 24—12—1976 அன்று தொழிலாளர்கள் மீண்டும் பணிக்குத் திரும்பினர்.

**பல்லவன் போக்குவரத்துக் கழகம், சென்னை**—(i) தொழிற் சங்கம் 19—10—1976 நாளிட்ட தமது வேலைநிறுத்த அறிவிப்பில், ஊதியங்களிலிருந்து தொகைகள் பிடிப்பதைத் தள்ளிவிடுதல், பணி இறுதிப் பயன்கள், ஈட்டுப்படி, வருகைநாள் ஊதியக் கொடை முதலியவை போன்ற சில கோரிக்கைகளை எழுப்பியிருந்தது. தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ், மேற்சொன்ன தகராறு குறித்து பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாகத்தினருக்கும் தொழிலாளருக்குமிடையில் தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னர் 1—9—1977 அன்று உடன்பாடு ஒன்று ஏற்பட்டது.

(ii) தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின்கீழ் பிடிப்புத் தொகைகளைத் தள்ளி விடுதல், பேறுதல்படி முதலியவை குறித்து, நிர்வாகத்தினருக்கும் பணியாளருக்கும் (நிர்வாகப் பணி



யாளர்) இடையில் 17—3—1977 அன்று தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னர் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது.

மலைத் தோட்டங்கள்.—(i) சம ஊதியச் சட்டத்தைச் செயற்படுத்தல், ஊதியத்தை மாற்றியமைத்தல், அதிக உற்பத்திக்காக ஊக்கத்தொகை அளித்தல், 1976, 1977, 1978 ஆகிய மூன்றாண்டுகளுக்குத் தேயிலைத் தோட்டத்திற்கான ஊக்கத் தொகை விதம் ஆகியவை குறித்த பிரச்சினை பற்றி சென்னை, தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்னர் 27—10—1976 அன்று 1947 ஆம் ஆண்டு, தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின்கீழ் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது.

அந்த உடன்பாட்டின்படி, சென்னை தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் விசாரணை செய்து 24—6—1977 அன்று தீர்ப்பு வழங்கியுள்ளார்.

(ii) மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள், தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின்கீழ் 2—9—1975 ஆம் நாளிட்ட உடன்பாட்டின் நிபந்தனைகளின்படி தொழிலாளர்களுக்கு 1975 ஆம் ஆண்டுக்கு ஊதியக் கொடை வழங்க வேண்டுமென்று கோரினர். தொழிலாளர் நல ஆணையாளர் இணக்கப் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்பேச்சு வார்த்தையின் விளை வாக, தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின்கீழ் தொழி லாளர் நல ஆணையாளர் முன்னர் 25—2—1977 அன்று உடன்பாடு ஒன்று ஏற்பட்டுள்ளது.

(iii) மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள், ஊதியங்களை மாற்றியமைத்தல், தொழிலாளர்களைப் பதிவு செய் தல் முதலியவற்றிற்காக தொழிற்சங்கம் மூலம் கோரிக்கைகளை எழுப்பினர். அவர்கள் 20—5—1977-லிருந்து வேலைநிறுத்தம் செய்யப்போவதாகத் தெரிவித்து, அவர்களது கோரிக்கைகளுக்கு ஆதரவாக 4—4—1977, 8—4—1977, 20—4—1977, 27—4—1977, 4—5—1977 நாளிட்ட வேலைநிறுத்த அறிவிப்புகளை கொடுத் தனர். சென்னை, தொழிலாளர் நல ஆணையாளர் இணக்கப் பேச்சு வார்த்தைகளை நடத்தினர். 1947 ஆம் ஆண்டு தொழில் தக ராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின்கீழ் 18—5—1977 அன்று உடன் பாடு ஒன்று ஏற்பட்டது.

சவுத் இந்திய விஸ்கோஸ் லிமிடெட், சிறுமுகை—சுமார் 1,600 தொழிலாளர்கள் காகிதக் கூழ் தொழிற்சாலையில் புதிய 'டைஜஸ்டர்' இயந்திரத்தின் (Digester Machine) பணிச்சுமை சம்பந்தமாக 28—12—1976 லிருந்து வேலைநிறுத்தம் செய்தனர். கோயம்புத்தூர், தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் முன்னர் நடந்த இணக்கப்பேச்சு வார்த்தைகள் சுமுகமாக முடியவில்லை. தொழிலாளர் நல ஆணையாளர் மேற்கொண்டும் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். இறுதியாக 16—2—1977 அன்று உடன்பாடு ஏற்பட்டது. 21—2—1977 அன்று தொழிலாளர் மீண்டும் பணிக்குத் திரும்பினர். பின்னர், முடிவெடுக்கப்படாமலுள்ள பிரச்சினைகள் குறித்து, கோயம்புத்தூர், தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் முன்னர் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு 22—5—1977, 23—5—1977 ஆகிய நாட்களில் உடன்பாடுகள் ஏற்பட்டன.

பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம், மதுரை—வசூல் அடிப்படையிலான நாட்படி, பேறுதல் படி வழங்குதல் முதலியவை குறித்து மதுரை, பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழக நிர்வாகத்தினருக்கும் தொழிலாளருக்கும் இடையில் 21—2—1977 அன்று தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னர் தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது.

டி.யு.சி.எஸ். லிமிடெட், சென்னை—தொழிலாளர் நல அமைச்சர் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக, சென்னை, டி.யு.சி.எஸ். லிமிடெட் நிர்வாகத்தினருக்கும் தொழிலாளருக்கும் இடையில் 2—7—1977 அன்று உடன்பாடு ஏற்பட்டது. உடன்பாடு ஏற்பட்டதன் காரணமாக, சுமார் 1,000 தொழிலாளர்கள் 1—7—1977-லிருந்து வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு 3-7-1977-லிருந்து பணிக்கு மீண்டும் திரும்பினர்.

எஸ். ஆர். பி. டூல்ஸ் லிமிடெட், இராணிப்பேட்டை & சென்னை—இராணிப்பேட்டை & சென்னை எஸ். ஆர். பி. டூல்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் எழுந்த தகராறு காரணமாக சுமார் 5 திங்களாகத் தொடர்ந்து இருந்து வந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டு, 7-7-1977-லிருந்து பணி மீண்டும் நடைபெற்றது. அமைச்சரின் ஆலோசனையின்படி பல்வேறு காரணங்களுக்காகப் பணியிலிருந்து



விடுவிக்கப்பட்ட அல்லது தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் 38 பேரையும் நிர்வாகத்தினர் பணிக்கு மீண்டும் சேர்த்துக் கொண்டனர்.

நெசவாலைத் தொழிலாளர்கள் மேற்கொண்ட போது வேலைநிறுத்தம்—நெசவாலைத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு தொழிற்சங்கங்கள், பண்டிகை முன் பணப் பிடித்தம், பண்டிகைப் படி வழங்குவது, மூடப்பட்ட நெசவாலைகளை மீண்டும் திறப்பது, கூடுதல் ஊதியச் (கட்டாய வைப்பீடு)ச் சட்டத்தின்கீழ் பிடித்தத் தொகைகளை மீண்டும் வழங்குவது, பணி முடக்கம் ஏற்படும்போது தொழிலாளர்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்தல் முதலிய கோரிக்கைகள் தொடர்பாக 19—1—1977-லிருந்து வேலை நிறுத்தம் செய்யப் போகும் தமது கருத்தை அறிவித்து 1977, ஜனவரித் திங்களில் வேலை நிறுத்த அறிவிப்பைக் கொடுத்தன. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரும், தொழிலாளர் நலத் துணை ஆணையாளரும் தலையிட்டதனால் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தை 1—2—1977-க்கு தள்ளிப்போட ஒப்புக் கொண்டது. தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளரும், தொழிலாளர் நல ஆணையாளரும் மேற்கொண்டும் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். தொழிலாளர்கள் எழுப்பிய பல்வேறு பிரச்சினைகள் குறித்து எடுத்துள்ள நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு அரசு பத்திரிகைச் செய்தி ஒன்றையும் வெளியிட்டது. இவற்றிற்கிணங்க, தொழிற் சங்கங்கள் 1—2—1977-லிருந்து வேலை நிறுத்தத்தைக் கைவிட்டன.

நெசவாலைத் தொழிலில் நெருக்கடி—வணிகம், நிதி இடர்பாடுகள், துணி இருப்பு தேங்கியிருத்தல் முதலியவற்றில் காணப்பட்ட மந்தநிலை காரணமாக 1974 ஆம் ஆண்டிலிருந்து நெசவாலைத் தொழில் நெருக்கடி நிலையை எதிர்நோக்க வேண்டிய நிலை வந்துள்ளது. நெசவாலை நிர்வாகத்தினர் இம்மந்த நிலை காரணமாகத் தொழிலாளர்களைப் பெருமளவில் தற்காலிக வேலை நீக்கம் செய்ததாகப் புகார்கள் வந்துள்ளன. தொழிலாளர் நல—வேலைவாய்ப்புத் துறைச் செயலாளர், தொழிலாளர் நல ஆணையாளர், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர், தென்னிந்திய ஆலை உரிமையாளர் சங்கம், தொழிற் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடனும், நெசவாலைகளுக்கு நிதியுதவி

செய்துள்ள வங்கிகளின் அதிகாரிகளுடனும் 1976, ஏப்ரல் திங்களில் இதுகுறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினர். அதன் விளைவாக நெசவாலைகள் செயல்படுவது குறித்து ஆய்வு செய்யவும், மூடப்பட்ட ஆலைகளைத் மீண்டும் தொடங்குவதற்கான நடவடிக்கைகளுக்குப் பரிவுரை செய்யவும் 1976, ஜூலைத் திங்களில் அரசு மாநில அளவில் குழு ஒன்றை அமைத்தது. இந்திய அரசும், மிகவும் பாதிக்கப்பட்ட ஆலைகளின் நிலைமை குறித்து மதிப்பிடவும், ஆலைகளுக்குத் தேவைப்படும் நிதியுதவியை எந்த அளவுக்கு அவை பயன்படுத்த இயலும் என்பது குறித்து கருதிப்பார்க்கவும் இது போன்றதொரு குழுவை அமைத்தது. மாநில அளவிலான குழுவின் இடைக்காலப் பரிவுரைகளின் அடிப்படையில்,

(a) ரவீந்தரா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்,

(b) லோட்டஸ் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்,

(c) ஸ்ரீசக்தி மில்ஸ் லிமிடெட், பொள்ளாச்சி,

(d) பவானி மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

ஆகியவற்றைப் பொறுத்மட்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொழிலாளர் நல—தொழில் துறைகள் எடுத்துள்ள முயற்சிகளின் விளைவால், 1976-ல் மூடப்பட்டிருந்த கீழ்க்காணும் ஆலைகள் மீண்டும் திறக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன :—

| தொடர் எண்ணும் ஆலையின் பெயரும். | மூடப்பட்ட நாள். | மீண்டும் திறக்கப்பட்ட நாள் |
|---|---|---|
| 1. ஜனார்தன மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | 12—1—76<br>16—1—77 | 3—10—76<br>14—2—77 |
| 2 காவேரி ஸ்பின்னிங் வீவிங் மில்ஸ் லிமிடெட், காவேரி நகர் .. | 1—12—75 | 5—3—77 |
| 3 ரவீந்திரா மில்ஸ் லிமிடெட் கோயம்புத்தூர் | 1—2—76 | 2—2—77 |
| 4 மது ஸ்பின்னிங் வீவிங் மில்ஸ், கோயம்புத்தூர் | 7—2—76 | 17—2—77 |



| தொடர் எண்ணும், ஆலையின் பெயரும். | மூடப்பட்ட. நாள். | மீண்டும் திறக்கப் பட்ட நாள். |
|---|---|---|
| 5 ஸ்ரீ சக்தி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், பொள்ளாச்சி | 12—7—76 | 3—6—76 |
| 6 வசந்தா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர் | 12—7—76 | 20—8—76 |
| 7 நாகம்மாள் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர் | 23—11—76 | 2—3—77 |
| 8 பவானி மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர் | 27—[illegible]—77 | 10—2—77 |
| 9 தி கோயம்புத்தூர் கமலா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர் | 28—12—76 | 27—3—77 |
| 10 பி அண்டு சி மில்ஸ் சென்னை .. | 25—11—76 | 20—2—77 |

பக்கிங்காம் அண்டு கர்னாட்டிக் மில்ஸ்—பி & சி மில்லில், பெருமழையாலும் வெள்ளத்தாலும் இயந்திரங்களுக்கு ஏற்பட்ட சேதத்தின் காரணமாக 25—11—1976-லிருந்து பணி முடக்கம் ஏற்பட்டது. இதன் விளைவாக 25—11—1976-லிருந்து தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருந்தனர். 27—11—1976-லிருந்து துப்புரவுப் பணிகளை மேற்கொள்வதற்காகச் சுமார் 2,000 தொழிலாளர்களை பணிக்கமர்த்த நிர்வாகத்தினர் தொடங்கினர். துப்புரவுப் பணிகளிலும், இயந்திரங்களை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரும் பணியிலும் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களும், வேலையில்லாமல் இருந்த காலத்திற்கு நிவாரணம் அளிக்குமாறும், ஆலையை விரைவில் மீண்டும் திறக்குமாறும் கோரி 24—1—1977-லிருந்து ஆலையை விட்டுச் சென்றனர். அதன் விளைவாக, ஆலை செயல்படாமல் அப்படியே நின்றுவிட்டது. தொழிலாளர்கள் தங்களது ஈட்டிய ஊதியத்தை 13—12—1976 அன்று பெற்றனர். 1977, பிப்ரவரி திங்களில் அவர்களுக்கு, பின்னர் சரிக்கட்டப்படும் அடிப்படையில் முன் பணமும் வழங்கப்பட்டது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி, இந்திய ஸ்டேட் வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளை அடுத்தும், மாநில அரசும் இந்திய அரசும் மேற்கொண்டுள்ள முயற்சிகளை யொட்டியும், 20—2—1977 அன்று ஆலை திறக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி 20—2—1977 அன்று ஆலை மீண்டும் திறக்கப்பட்டு

தொழிலாளர்கள் படிப்படியாக வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 10—3—1977 அன்று வழக்கமான நிலையை மீண்டும் அடைந்தது. 25—11—1976-க்கும் 10--3-1977-க்கும் இடைப்பட்ட காலத்தைப் பொறுத்தமட்டில், தொழிலாளர்களது கோரிக்கையை முடிவு செய்கையில், அடிப்படைச் சம்பளம், அகவிலைப்படி ஆகியவற்றில் பாதிக்குச் சமமான தொகையை வழங்குவதற்கும் தொழிலாளர் நல ஆணையாளர் முன்னர் 14—3—1977 அன்று உடன்பாடு ஏற்பட்டது.

### மூடப்பட்ட ஆலைகளின் தொழிலாளர்களுக்கு ரொக்க நிவாரணத் தொகை.

(i) அம்பத்தூர், இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட்டின் தொழிலாளர்களுக்கு 1976, ஜனவரியில் பொங்கல் சமயத்தில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொருவருக்கும் ரூ. 50 ரொக்க நிவாரணத் தொகை அளிக்கப்பட்டது.

(ii) மது ஸ்பின்னிங் மில்ஸ், ரவீந்திரா மில்ஸ், லோட்டஸ் மில்ஸ், சக்தி டெக்ஸ்டைல்ஸ், பத்மா மில்ஸ், காவேரி ஸ்பின்னிங் வீவிங் மில்ஸ், ஜனார்தனா மில்ஸ், சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ் ஆகிய 8 நெசவாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 1976, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ரூ. 100 ரொக்க நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

) சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், லோட்டஸ் மில்ஸ், பத்மா மில்ஸ் ஆகியவற்றின் தொழிலாளர்களுக்கும் 1977 ஜூன் திங்களில் ஒவ்வொருவருக்கும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 200 ரொக்க நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.

### மூடப்பட்ட துணை ஆலைகள் :

மூடப்பட்ட துணை ஆலைகளின் பிரச்சினையைப் பரிசீலிப்பதற்கு முதலமைச்சரும் தொழிலாளர் நல அமைச்சரும் முன்னுரிமை அளித்துள்ளனர். கோயம்புத்தூர் வட்டாரத் துணி ஆலைகளின் தொழிலாளர் பிரதிநிதிகளுடன் 6—7—1977 அன்று பயனுள்ள வகையில் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர். தொழிலாளர் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்கள் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளன.



### துணித் தொழில் சீரமைப்பு :

1976 ஆம் ஆண்டில் துணி ஆலைகள் சீரமைப்பு தொடர்பான 58 தகராறுகள் இத்துறையின் உதவியுடனும், 48 தகராறுகள் நேரடி பேச்சுவார்த்தைகள் மூலமாகவும் தீர்த்து வைக்கப்பட்டன.

### நடுவர் தீர்ப்பு :

தகராறுகளில், குறிப்பாக, பணியிலிருந்து விலக்கப்படுதல், பணி நீக்கம் செய்யப்படுதல், ஆட்குறைப்பு, அது போன்ற பிரச்சினைகளில் சம்பிரதாயமற்ற நடுவர் தீர்ப்பு முறைக்கு இணங்கிப் போகுமாறு தகராறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஆலோசனை கூறப்பட்டது. 1976 ஆம் ஆண்டில் 24 தகராறுகள் சம்பிரதாயமற்ற முறையில் நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டது.

ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையில், சுயேட்சையான உறுப்பினர்கள் இருவர், தொழிலதிபர்கள் தரப்பைச் சேர்ந்த ஐவர், தொழிலாளர்கள் தரப்பை சேர்ந்த ஐவர் ஆகியோரைக் கொண்டு, தகராறுகளைத் தீர்ப்பதற்குத் தன்னிச்சையான நடுவர் தீர்ப்பு முறையைப் பிரபலப்படுத்துவதற்கு நடுவர் தீர்ப்பு வளர்ச்சிக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. தொழிலாளர்நல தனித்துணை ஆணையாளர் இக்குழுவின் செயலாளர் ஆவார். இக்குழு இதுவரை மூன்று முறை சந்தித்திருக்கிறது.

### தீர்ப்பு மன்றம் :

1975, 1976 ஆகிய ஆண்டுகளில், சென்னை, தொழில் நடுவர் மன்றம், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னை, துணை தொழிலாளர் நீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகள்,

அவை தீர்ப்பளித்த தகராறுகள் ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | தொழில் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை | | தீர்ப்பளிக்கப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | 1975 | 1976 | 1975 | 1976 |
| தொழில் நடுவர் மன்றம், சென்னை. | 87 | 65 | 36 | 40 |
| தொழிலாளர் நீதிமன்றங்கள். | 364 | 383 | 390 | 478 |

மேற்சொன்னவற்றுடன், 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 33-C (2) பிரிவின் கீழ், 1976 ஆம் ஆண்டில் தொழிலாளர் தாக்கல் செய்திருந்த 2,122 மனுக்கள் மீது தொழிலாளர் நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன.

**தொழில்களை, பொதுமக்கள் உபயோகப் பணிகளாக அறிவித்தல்:**

இதற்கு முன்னர், பொதுமக்கள் உபயோகப் பணிகளாக அறிவிக்கப்பட்டிருந்த கீழ்க்காணும் தொழில்கள், நடப்பாண்டிலும் தொடர்ந்து அவ்வாறே அறிவிக்கப்பட்டுள்ளன :—

1. சிறு துறைமுகப் பணிகள் அனைத்தும்.
2. இரும்பு—உருக்கு.
3. மருத்துவ மனைகளிலும் மருந்தகங்களிலும் ஆற்றப்படும் பணி.
4. தீ அணைப்புப் பணிகள்.
5. பருப்பு ஆலைகளும் உணவுப் பொருளாகப் பயன்படும் மாவு தயாரிப்பு ஆலைகளும்.
6. அரிசி ஆலைகளும், சமையல் எண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலைகளும்.
7. பாலும், பால் பொருட்களும்.





8. தோல், ஆக்ஸிஜன், அஸிடைலின் தொழில்கள்.
9. பிஸ்கட், ரொட்டிப் பொருள்கள் தயாரிப்பு.
10. பெட்ரோலியப் பொருள்கள் உற்பத்தி, விற்பனை விநியோகம்.
11. உரத் தயாரிப்புத் தொழில்.
12. சிமிட்டி தயாரிப்புத் தொழில்.
13. பருத்தித் துணி தயாரிப்பு.
14. மோட்டார் போக்குவரத்துத் தொழில்.
15. சர்க்கரை உற்பத்தி.
16. ரேயான், நைலான், ஏனைய செயற்கை நூலிழைகள் தயாரிப்பு.
17. கனரக இரசாயனப் பொருள் உற்பத்தி.
18. அலுமினியம் உற்பத்தி.
19. நீராவி உற்பத்திச் சாதனம், உயர் அழுத்தக் கொதி கலன்கள், கட்டுமானக் கொதிகலன்கள், வால்வு பொருத்திகள், ஆவியழுத்தப் பாத்திரங்கள் முதலியன.

**வசூல்கள் :**

1976 ஆம் ஆண்டில், 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 33-C(1) பிரிவின்கீழ், தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய மொத்தம் 9,65,310.16 ரூபாய் நிலுவைத் தொகைகளின் வசூலுக்காக, 119 நேர்வுகளில் அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

**வழக்குகள் :**

தொழிற் தகராறுகள் சட்டத்தின்கீழ் 1976 ஆம் ஆண்டில் மூன்று வழக்குகள் தொடங்க அரசு அனுமதி வழங்கியது. பணி நிறுத்தத்தைத் தொடருவதற்குத் தொழிலதிபர்கள் விண்ணப்பித்துக் கொள்ளப்பட்ட அனுமதி, வரையறுக்கப்பட்ட

[1977 ஆகஸ்ட் 11

அதிகாரியால் மறுக்கப்பட்ட பிறகும் தொடர்ந்து பணிநிறுத்தம் மேற்கொண்டதால் 1976 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் (திருத்தச்) சட்டத்தின்கீழ், உடுமலைப்பேட்டை, பழனி ஆண்டவர் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர், பிரகாஷ் (பிரைவேட்) லிமிடெட் ஆகிய இரண்டு நிறுவனங்களின் தொழிலதிபர்கள்மீது வழக்குத் தொடர அரசு அனுமதி வழங்கியது. தொழிலாளர்களைப் பணிநீக்கம் செய்வதற்கு முன்னர் அனுமதி கோரி விண்ணப்பம் செய்துகொள்ளத் தவறியதற்காக, (1) கோயம்புத்தூர் வசந்தா மில்ஸ், (2) ஈரோடு ஸ்ரீ நடேசர் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட், (3) திருப்பூர் காட்டன் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட் ஆகிய மூன்று நிறுவனங்களின் தொழிலதிபர்கள் மீது வழக்குத் தொடர அரசு அனுமதி வழங்கியது. ஆலையை மூடுவதற்கு வரையறுக்கப்பட்ட அதிகாரியால் அனுமதி மறுக்கப்பட்ட பிறகும் ஆலையை மூடியதால் (1) போத்தனூர், லோட்டஸ் மில்ஸ், (2) கோயம்புத்தூர், மது ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் தொழிலதிபர்கள் மீதும், ஆலையை மூடுவதற்கு முன்னர், அனுமதி பெறத் தவறிய காரணத்தால் (3) நாகர்கோவில், நாகம்மாள் மில்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தொழிலதிபர்மீதும் வழக்குகள் தொடர அரசு அனுமதி வழங்கியது.

**தொழிற் சங்கங்கள்:**

1976 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் தேதி நிலவரப்படி, 2,342 பதிவு பெற்ற தொழிற் சங்கங்கள் இருந்தன; இவ்வாண்டில், 338 தொழிற் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. இருநூற்றி நாற்பத்தாறு தொழிற் சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டது. இரண்டு தொழிற் சங்கங்கள் பிற மாநிலங்களுக்கு மாற்றப்பட்டன. ஒரு தொழிற்சங்கத்தின் பதிவு திரும்பப் பெறப்பட்டது. மூன்று தொழிற்சங்கங்கள் கலைக்கப்பட்டன. ஒரு தொழிற்சங்கம் இணைக்கப்பட்டது. இவ்வாண்டு இறுதியில் இருந்த பதிவுபெற்ற தொழிற் சங்கங்கள் 2,429 ஆகும்.

**தொழிற்சாலையில் ஒழுங்குமுறை:**

தொழிற்சாலையில் ஒழுங்குமுறை விதியைச் செயற்படுத்தும் பொறுப்பு மாநில மதிப்பீட்டு—செயல்பாட்டுக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பல்வேறு தொழிலதிபர்கள் எவ்வித



1977 ஆகஸ்ட் 11].

மைய அமைப்புகளையும் சேராத பல்வேறு தொழிற்சங்கங்கள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு தொழிற்சாலை ஒழுங்குமுறை விதியைப் பின்பற்ற ஆலோசனை கூறுமாறு தொழிலாளர் நல அதிகாரிகளுக்கும் தொழிற்சாலை ஆய்வாளர்களுக்கும் உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக, தொழிற்சாலை ஒழுங்குமுறை விதியைப் பின்பற்றுவதாக 2,429 தொழிற்சங்கங்கள், 326 நிர்வாகங்கள், 24 உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவை எழுத்து மூலமாக ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டுள்ளன.

**ஊதியக்கோடை வழங்கல் சட்டம்:**

1976ஆம் ஆண்டு ஊதியக்கொடை வழங்கல் (திருத்தச்) சட்டத்தின் (சட்டம் 23/1976) மூலம் ஊதியக்கொடை வழங்கல் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, தொழிற்சாலையில் ஊதியக்கொடை வழங்கும் அடிப்படை முறையில் கீழ்க்காணும் மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன:—

1. ஊதியக்கொடை வழங்கல் குறித்த பழைய சட்டத்தைச் சேர்ந்த 34 (3) பிரிவின்கீழ் அனுமதிக்கப்பட்டு வந்தவாறு மேற்படி சட்டத்திற்கிணங்க அன்றி வேறெந்த முறையின் அடிப்படையிலும், ஊதியக்கொடை வழங்குவதற்கு இனி எவ்வித வாய்ப்புமில்லை.

2. 1974-ல் தொடங்கும் கணக்கு ஆண்டில், தொழிலதிபரிடம் ஒதுக்கீடு செய்யப்படத்தக்க உபரித் தொகை எதுவும் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவ்வாண்டுக்குக் குறைந்தபட்சம் 4 சதவீத ஊதியக்கொடை வழங்கப்படத்தக்கதாகும்.

3. 1975-ல் தொடங்கும் கணக்கு ஆண்டில் அல்லது அதன் பின்னர், ஒதுக்கீடு செய்யப்படத்தக்க உபரித்தொகை இல்லாவிடின் அக்கால அளவில் ஊதியக்கொடை எதும் வழங்கப்படத் தக்கதல்ல.

4. ஒதுக்கப்படத்தக்க உபரிநிதி இருந்தாலும், குறைந்தபட்ச ஊதியக்கொடை 4 சதவீதமாக இருக்கலாமேயன்றி 8-1/3 சதவீதமாக இருக்கலாகாது.

[1977 ஆகஸ்ட் 11

5. இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகைக்குக் கூடுதலாகத் தொகை எதும் கொடுக்கப்பட்டால் அது வருமான வரி காரியங்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படாது.

6. உற்பத்தி அல்லது உற்பத்தித் திறன் அடிப்படையில், உயர்ந்த பட்சம் 20 சதவிதம் என்ற நிபந்தனைக்குட்பட்டு ஊதியக் கொடை வழங்குவது ஒன்றே அனுமதிக்கப்படக்கூடிய ஒரே மாற்று ஏற்பாடாகும்.

இச்சட்டத்தின் 19 ஆவது பிரிவின் கீழ் ஊதியக் கொடை வழங்குவதற்கான கால அளவை நீட்டிக்க தொழிலாளர் நல ஆணையாளருக்கு அரசினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. 1976 ஆம் ஆண்டில் 52 நேர்வுகளில் இத்தகைய கால நீட்டிப்புக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வாண்டில், 1965 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் 2(1) பிரிவின்கீழ் வகை செய்யப்பட்டுள்ளவாறு இரண்டு நேர்வுகளில் நிர்வாகத்தினர் தங்கள் கணக்கு ஆண்டை மாற்றிக்கொள்ள தொழிலாளர் நல ஆணையாளரால் உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

## தொழிற்சாலையில் தொழிலாளர் பங்கு பெறும் திட்டம்.

இந்திய அரசின் உத்திரவுகளின்படி, இம்மாநிலத்தில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

ஐந்நூறு பேருக்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டுள்ள 225 நிறுவனங்களில் 209 நிறுவனங்கள் இத்திட்டத்தை முழுமையாகச் செயற்படுத்தியுள்ளன. 15 நிறுவனங்கள் இத்திட்டத்தைப் பகுதியாகச் செயற்படுத்தியுள்ளன. சுமார் 2,15,000 தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் வந்துள்ளனர். கண்காணிப்புச் சோதனைகள் மேற்கொண்டதில் இத்திட்டம் வெற்றிகரமாக இயங்குவதாகத் தெரியவருகிறது. குழுக் கூட்டங்களில், உற்பத்தித்திறன், பாதுகாப்பு, தொழிலாளர் நலன் ஆகியவை குறித்த விஷயங்கள் விவாதிக்கப்பட்டு பயனுள்ள முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலையில் தொழிலாளர் பங்கு கொள்வதனால் ஏற்படும் விளைவை மதிப்பீடு செய்ய சென்னை, மதுரை ஆகிய இடங்களில் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டுள்ளன.



1977 ஆகஸ்ட் 11]

## IV. சமூகப் பாதுகாப்பு.

### தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியும் 1952 ஆம் ஆண்டு குடும்ப ஓய்வூதிய நிதிச் சட்டமும்.

தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்புநிதி வடிவில் ஓய்வுகால நன்மைகளும், அவர்கள் கடமையாற்றும்போது இறந்துவிட்டால் அவர்களைச் சார்ந்துள்ள நெருங்கிய உறவினர்களுக்கு நிதியுதவியும், மாதந்தோறும் குடும்ப ஓய்வூதியத் தொகையும் கிடைக்க 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகள்—பல்வகை விதித்துறைகள் சட்டமும் அதன் மூன்று திட்டங்களும் வகை செய்கின்றன. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், தொழிலாளர் குடும்ப ஓய்வூதிய நிதித் திட்டம், தொழிலாளர் வைப்புத் தொகை இணைந்த காப்புறுதித் திட்டம் முதலிய திட்டங்கள் இந்நாட்டிலுள்ள தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குப் பெரிதும் தேவைப்படும் சமூகப் பாதுகாப்பை அளிக்கின்றன. சில நிபந்தனைகளுக்குட்பட்டு, தொழிலாளர் வருங்கால வைப்புநிதி சந்தாதாரர்கள் பணியில் இருக்கும்போது மரணமடையும் நேர்வுகளில், அவர்களது கணக்கில் கடைசி 36 மாதங்களில் இருந்த சராசரித் தொகைக்குச் சமமானதொரு தொகை (10,000 ரூபாய்க்கு மேற்படாமல்) வழங்குவதன் மூலம், அண்மையில் கொண்டுவரப்பட்ட தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் (வைப்பீட்டுத் தொகையுடன் இணைக்கப்படுவது) அவர்களுக்கு காப்புறுதி அளிக்கிறது.

கீழ்க்காணும் 16 தொழில்களுக்கு இச்சட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது:—

1. அபெர்டைட் சுரங்கங்கள்.
2. கல்நார் சுரங்கங்கள்.
3. கால்ஸைட் சுரங்கங்கள்.
4. உருண்டைக் களிமண் சுரங்கங்கள்
5. குருவிந்தக்கல் சுரங்கங்கள்.
6. மரகதக்கல் சுரங்கங்கள்.
7. களிமச் சுரங்கங்கள்.

[1977 ஆகஸ்ட் 11

8. சிலிகா (மணல் வகை) சுரங்கங்கள்.

9. படிகக்கல் சுரங்கங்கள்.

10. செம்மண் சுரங்கங்கள்.

11. குரோமைட் சுரங்கங்கள்.

12. கிராஃபைட் சுரங்கங்கள்.

13. ஃளோரைட் சுரங்கங்கள்.

14. பிசின், ஊண்பசை தயாரிப்புத் தொழிற்சாலைகள்.

15. துண்டுக் கற்கள், கல் வரிசைகள், கற் பாறைகள், கூழாங் கற்கள் தயாரிக்கப்படும் கற் சுரங்கங்கள்.

16. பன்றியிறைச்சி வறுத்தல் தயாரிப்புத் தொழிற்சாலைகளும் பன்றியிறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலைகளும் உட்பட, மீன் இறைச்சி பதப்படுத்தல், அசைவ உணவுப் பொருள் பாதுகாப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள்.

இவ்வாறாக 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகள்—பல்வகை விதித்துறைகள் சட்டத்தின்கீழ் 1975-76-ல் மொத்தம் 137 ஆக இருந்த தொழிற்சாலைகள்/நிறுவன வகைகள் 153 ஆக உயர்ந்துள்ளன.

தமிழ்நாடு வட்டாரத்தில், 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகள்—பல்வகை விதித்துறைகள் சட்டத்தின் கீழ், 1976, மார்ச்சில் 8,970 ஆக இருந்த தொழிற்சாலைகள்/நிறுவனங்கள் 1977, மார்ச் இறுதியில் 9,953 ஆக உயர்ந்தன. 31—3—1977 நிலவரப்படி இத்தொழிற்சாலைகளில்/நிறுவனங்களில் இருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 10,38,811; வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்துவோரின் எண்ணிக்கை 9,57,686. 3,42,727 பேர் குடும்ப ஓய்வூதிய நிதிக்கும் தொகை செலுத்தி வருகின்றனர்.

சம்பளத்தில் 6¼ சதவீதம் சட்டப்படி செலுத்த வேண்டிய பங்குத் தொகையாகும். உயர்த்தப்பட்ட அளவான 8 சதவீதப் பங்குத்தொகை செலுத்துவது 94 தொழிற்சாலைகளுக்கு/நிறுவன வகைகளுக்குப் பொருந்தும்.



1977 ஆகஸ்ட் 11]

31—3—1977 உடன் முடிவடையும் கால அளவுக்கான கேட்பு/வசூல்/இருப்பு நிலவர விவர அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது (அடைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள கணக்குகள் 31—3—1976 நிலவரப்படியான கணக்குகளாகும்).

| நிலுவையின் தன்மை. | 31—3—77 நிலவரப்படி, நிலுவைகள் உட்பட, கேட்புத் தொகை. | 1—4—76 முதல் 31—3—77 வரை வசூல். | 31—3—77 நிலவரப்படி இருப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| சேர்ந்து வந்த பழைய தொகைகள் .. | 54·86 | 47·98 | 6·87 (7·08) |
| தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிப் பங்குத் தொகைகள் .. | 2,648·21 | 2,546·52 | 101·69 (106·12) |
| நிர்வாகச் செலவுகள். | 65·00 | 62·60 | 2·39 (2·49) |
| ஆய்வுச் செலவுகள். | 13·63 | 12·80 | 0·82 (1·84) |
| குடும்பநல ஓய்வூதிய பங்குத் தொகைகள் .. | 254·89 | 254·45 | 0·43 (0·41) |
| பங்குத் தொகைகள். | 164·90 | 5·16 | 159·73 |
| நிர்வாகச் செலவுகள். | 3·72 | 0·11 | 3·61 |

1975-76 ஆம் ஆண்டில் ரூ. 51.64 இலட்சம் தொகை கொண்ட
555 நேர்வுகளுக்கு மாறாக, 1976-77 ஆம் ஆண்டில், ரூ. 48.04
இலட்சம் தொகை கொண்ட 370 நேர்வுகளில் வசூலிப்பு நடவடிக்
கைகள் எடுக்கப்பட்டன. இம்முறையின் மூலம் வசூலிக்கப்பட்ட
மொத்த நிலுவைத் தொகை 1975-76 ஆம் ஆண்டில் ரூ. 35.34
இலட்சம் என்பதற்கு மாறாக, ரூ. 34.64 இலட்சம் ஆக இருந்தது.
இந்த ஆய்வு ஆண்டில், 923 குற்ற வழக்குகள் நீதிமன்றத்தில்
தொடங்கப்பட்டன. 1977 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இறுதி
வரையில் தாக்கல் செய்யப்பட்ட, முடிவு செய்யப்பட்ட,

முடிவுறாமல் உள்ள குற்ற வழக்குகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| 31-3-76 ஆம் நாள் நிலவரப்படி முடிவுறாமலுள்ள வழக்குகள். | இவ்வாண்டில் தொடங்கப்பட்ட வழக்குகள். | முடிவு வழங்கப்பட்ட வழக்குகள். | 31-3-77 ஆம் நாள் நிலவரப்படி முடிவுறாமலுள்ள வழக்குகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 384 | 923 | தண்டிக்கப்பட்டவர்கள்—288. * <br> விடுதலை செய்யப்பட்டவர்கள்—17. <br> திரும்பப் பெறப்பட்ட வழக்குகள்—57. <br> எச்சரிக்கப்பட்டவர்கள்—30. <br> தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகள்— — <br> விடுவிப்புப் பெற்றவர்கள்— — | 915 |

1. விதிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை 28,580 ரூபாயும், ரூ. 3,122.50 தொகையும் இந்த அலுவலகத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

2. அபராதத் தொகையுடன் நீதிமன்றம் கலையும் வரை சிறைத் தண்டனை விதித்தல்.





நீதிமன்றத்தில் குற்ற வழக்குகள் தொடர்வதுடன் கூட, 7 நிறுவனங்களைப் பொறுத்தவரையில் இ.பி.கோ. 405, 406, 409 ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த விதித்துறைகளின்கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. காவல் துறையில் பதிவு செய்யப்பெற்ற புகார்களுக்கு இன்னும் முடிவு வழங்கப்படவில்லை.

**வட்டி வீதம்.**—தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியில் பணம் கொடுப்பவரின் கணக்கில் உள்ள தொகைக்காக 7.5 சத வீத வட்டி 1976-77 ஆம் நிதி ஆண்டிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. முந்திய 1975-76 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட வட்டி 7 சதவீதமாகும்.

**திருப்பி செலுத்த வேண்டியிராத முன்பணங்கள்.**—1—4—1976 முதல் 31—3—1977 வரையிலான காலத்தில் திருப்பி செலுத்த வேண்டியிராத முன்பணமாக ரூ. 346.35 இலட்சம் வரையில் சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்டது.

| எந்த நோக்கத்திற்காக முன்பணம் வழங்கப்பட்டதோ, அந்த நோக்கம். | சந்தாதாரர்களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 ஆயுள் ஈட்டுறுதித் தவணைக் கட்டணம் செலுத்துதல் .. | 23,375 | 28·49 |
| 2 குடியிருப்பு வீடு/வீட்டு மனைகள் வாங்குதல்/வீடுகளைக் கட்டுதல் .. .. | 2,056 | 52·97 |
| 3 நுகர்வோர் கூட்டுறவு கடன் வழங்கும்/வீட்டு வசதிச் சங்கங்களின் பங்குத் தொகையை வாங்குதல் ... .. | 313 | 0·01 |

| | | |
|---|---|---|
| 4. நிறுவனங்கள் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் காலத்தில் .. .. .. | 11,484 | 44·57 |
| 5. உறுப்பினர்களுக்கு அல்லது அவர்களது குடும்பத்தினருக்கு ஏற்படுகின்ற வியாதிக்கு நோய் சிகிச்சை அளிப்பதற்காக ... ... ... | 627 | 4·80 |
| 6. உறுப்பினர்களின் மகளது திருமணத்திற்காக அல்லது அவர்களின் குழந்தைகளின் கல்விக்காக ... .. .. | 7,182 | 90·51 |
| 7. வழக்கத்திற்கு மாறாக இயற்கைச் சீற்றத்தின் காரணமாக, உறுப்பினர் ஒருவரின் இயங்கும் அல்லது இயங்காச் சொத்திற்கு ஏற்படும் சேதம் ... .. ... | 59,314 | 124·76 |
| 8. மின்வெட்டு காரணமாக பாதிக்கப்பட்ட உறுப்பினர்கள் .. ... ... | 89 | 0·24 |
| மொத்தம் ... | 1,04,440 | 346·35 |

***வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளைத் தீர்த்து இறுதியாகத் தொகை கொடுத்தல்.***—1976-77 ஆம் ஆண்டில் வருங்கால வைப்பு நிதியின் மூலம் சேர்த்து வைத்ததிலிருந்து கணக்குத் தீர்த்து பணம் கொடுக்கும் வகையில் 37,446 நேர்வுகளில் ரூ. 10.32 கோடி வழங்கப்பட்டிருக்கையில், முந்திய ஆண்டில் இவ்வகையில் 34,970 நேர்வுகளில் ரூ. 8.76 கோடி வழங்கப்பட்டது. இவ்வாண்டில், 191 நேர்வுகள் பொறுத்தவரையில், மரண நிவாரண நிதியிலிருந்து ரூ. 0.68 இலட்சம் வழங்கப்பட்டது; 1975-76 ஆம் ஆண்டில் 237 நேர்வுகள் பொறுத்தவரையில், மரண நிவாரண நிதியிலிருந்து ரூ. 0.90 இலட்சம் வழங்கப்பட்டது.



***ஆண்டு விவரக் கணக்கு அளித்தல்.***—1975-76-க்கு உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய 6.37 இலட்சம் ஆண்டு விபரக் கணக்குகளில் 25—6—1977 வரை 6.32 இலட்சம் விவரக் கணக்குகள் அனுப்பப்பட்டன; அதில் 5,228 மட்டுமே அனுப்பப் படவில்லை. அவை கூடிய விரைவில் அனுப்பப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

***வட்டாரக் குழு—தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி, தமிழ் நாடு வட்டாரம்.***—தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் அடங்கிய வட்டாரக் குழு ஒன்று, 1952 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது; மாநில அரசு, தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதித் திட்டம், தொழிலாளர்கள் குடும்பநல ஓய்வூதியத் திட்டம், தொழிலாளர்கள் வைப்பீடு தொடர்பான ஈட்டுறுதித் திட்டம் ஆகியவற்றை செயல் படுத்துவது தொடர்பான விஷயங்கள் குறித்து ஆலோசனை நல்குவதன் மூலம் பொறுப்பதிகாரிகள் அடங்கிய மத்தியக் குழுவிற்கு உதவி புரிகிறது. தமிழ் நாடு அரசு தொழிலாளர் நல-வேலைவாய்ப்புத் துறையைச் சேர்ந்த செயலாளர் இக்குழுவின் தலைவர் ஆவார். இக்குழு, 5—6—1976, 4—9—1976, 25—3—1977 ஆகிய நாட்களில் மூன்று முறை கூடியது.

***குடும்ப நல ஓய்வூதிய—ஆயுள் காப்புறுதித் திட்டம்.—தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியம் மற்றும் ஆயுள் காப்புறுதித் திட்ட பயன்கள்***:—ஒருவர், இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத கால அளவிற்கு குடும்பநல ஓய்வூதியத் திட்டத்தின் உறுப் பினராக இருந்து, அவர் தொடர்ந்து பணியாற்றக்கூடிய காலத்தில் அறுபது வயது அடைவதற்கு முன்னரே இறந்து விடுகின்ற நேர்வில், அவரது குடும்ப உறுப்பினர், குடும்பநல ஓய்வூதிய மற்றும் ஆயுள் காப்புறுதித் திட்டத்தின் கீழ் வரை யறுக்கப்பட்டுள்ளபடி குறிப்பிடப்பட்ட வீதங்கள் அடிப் படையில் அத்திட்ட பயன்களைப்பெற தகுதியுடையவராவார்.

இந்த ஆய்வு ஆண்டில், 35 பேர்களுக்கு குடும்ப நல ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஆயுள் காப்புறுதித் திட்டம் ஆகியவற்றின்கீழ் முறையே 3,520 ரூபாயும் 19,640 ரூபாயும் வழங்கப்பட்டது.

**ஓய்வு காலப் பயன் தொகை எடுத்தல்/தொகைத் திருப்பிக் கொடுத்தல்.**—ஒருவர், தனது 25 வயதில் அல்லது அதற்கு முன்பு குடும்பநல ஓய்வூதியத் திட்டத்தில் பங்கு கொண்டு அத்திட்ட உறுப்பினராக ஆனபின், தான் 60 வயது அடைகின்றபோது, அவர், திட்டத்தின் விதித்துறைகளுக்கு உட்பட்டு ரூ. 4,000 தொகையை ஒரு மொத்தமாகப் பெற தகுதியுடையவராவார்.

ஆய்வு ஆண்டில், மேற்சொன்ன நன்மைகளைப் பெறுவதற்காக 24,705 விண்ணப்பங்கள் வரப்பெற்றன; அவற்றில், கணக்கு தீர்த்து 10,208 பேர்களுக்கு ரூ. 13.24 இலட்சம் வழங்கப்பட்டது.

**தொழிலாளர்கள் வைப்பீடு தொடர்பான ஈட்டுறுதித் திட்டம, 1976.**—இந்நிதி உறுப்பினராக உள்ள தொழிலாளர் ஒருவர் இறந்துவிட்டால், அவரது குடும்பத்தின் நியமனதாரர்களுக்கு/ உறுப்பினர்களுக்கு, முந்திய மூன்று தொடர் ஆண்டுகளில் அவரது கணக்கில் உள்ள சராசரி நிலுவைத் தொகைக்கு சமமான தொகை வழங்கப்படும்; அத்தொகை பத்தாயிரத்திற்கு மேற்படக் கூடாது; ஆனால், முந்திய மூன்று தொடர் ஆண்டுகளில் அவரது கணக்கில் உள்ள சராசரி நிலுவைத் தொகை ரூ. 1,000-க்கு குறைந்திருக்கக் கூடாது.

இந்த ஆய்வு ஆண்டில், ஈட்டுறுதி பங்குத்தொகையாக ரூ. 61.10 இலட்சமும் விலக்களிக்கப்பட்ட மற்றும் விலக்களிக்கப் படாத நிறுவனங்களிடமிருந்து நிர்வாகச் செலவாக ரூ. 12.35 இலட்சமும் வசூலிக்கப்பட்டுள்ளது. தொகை வழங்கப்படுவதற் கான 149 விண்ணப்பங்கள் இதுவரை வரப்பெற்றுள்ளன; அவை வகைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**கூடுதல் ஊதியங்கள் கட்டாய வைப்பீடுத் திட்டம்.**—1—4—1976 முதல் 31—3—1977 வரையிலான காலத்தில், 1974 ஆம் ஆண்டு கூடுதல் ஊதியங்கள் கட்டாய வைப்பீடு சட்டத்தின்கீழ் 3,000 நிறுவனங்கள் கொண்டு வரப்பட்டன. 31—3—1977 ஆம் நாள் நிலவரப்படி, குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு C—AED 3 ஆம் குறியீட்டு என் கீழ் இந்த வட்டாரத்தில், ஒதுக்கப்பட்ட மொத்த குறியீட்டு எண்கள் 44,300 ஆக உள்ளன.



கூடுதல் ஊதியங்கள் வைப்பீட்டுக் கணக்கில் செலுத்தப்பட்ட வைப்பீட்டுத் தொகைகளின் முதல், இரண்டாம் தவணைகளை 12.5 சதவீத வட்டியுடன் சேர்த்து 31—3—1977 ஆம் நாள் நிலவரப்படி, முறையே ரூ. 106.42 இலட்சமும் ரூ. 33.40 இலட்சமும் திருப்பிச் செலுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கூடுதல் அகவிலைப்படி வைப்பீட்டுக் கணக்கில் செலுத்தப் பட்ட வைப்பீட்டுத் தொகைகளின் 1/5 தொகை, 6—7—1976 ஆம் நாள் முதல் திருப்பிச் செலுத்தப்படுகிறது. 31—3—1977 ஆம் நாள் நிலவரப்படி, கூடுதல் அகவிலைப்படி வைப்பீட்டு மொத்தத் தொகையாகிய 9.94 கோடி ரூபாய்க்கும், 12.5 சதவீத வட்டித் தொகையாகிய 4.90 கோடி ரூபாய்க்கும் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

தங்களது தொழிலாளர்களிடமிருந்து கூடுதல் ஊதியங்கள் கட்டாய வைப்பீட்டுத் தொகைகளை வசூலித்து, அவற்றைச் செலுத்தத் தவறியுள்ள 12 குறிப்பிட்ட அதிகாரிகளுக்கெதிராக குற்ற வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

கூடுதல் ஊதியங்கள் வைப்பீட்டுத் தொகையின் மூன்றும் தவணை 6—7—1977 அன்று செலுத்த வேண்டியுள்ளது. கூடுதல் அகவிலைப்படி வைப்பீட்டுத் தொகையின் இரண்டாம் தவணையை வட்டியுடன் சேர்த்து தொழிலாளர்கள் சேமநல நிதிக் கணக்கில் சேர்ப்பதற்குப் பதிலாக ரொக்கமாக அளிக்கப்பட இருக்கின்றது.

**தொழிலாளர் நல காப்புறுதித் திட்டம்**—தொழிலாளர் நல காப்புறுதிச் சட்டத்தின் விதித்துறைகளையொட்டி, தொழிலாளர் நல காப்புறுதித் திட்டம் 1955 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் செயல்படுத்தப்பட்டது. தருமபுரி மாவட்டம், நீலகிரி மாவட்டம் நீங்கலாக, இம்மாநிலத்திலுள்ள மாவட்டங்கள் அனைத்திலும் இத்திட்டம் தற்போது செயல்பட்டு வருகிறது.

இத்திட்டம் இப்பொழுது 44 இடங்களில் செயல்பட்டு வருகிறது; அதனால் 3,80,000 தொழிலாளர்கள் பயனடை கின்றனர். மின்சக்தியைப் பயன்படுத்தி, இருபதும் அதற்கு மேலும் எண்ணிக்கையுள்ள தொழிலாளர்களை வேலைக்கமர்த்திக் கொண்டு, திங்கள் ஒன்றுக்கு ரூ. 1,000-க்கு மேற்படாத

ஊதியத்தை வழங்குகின்ற தொழிற்சாலைக்கு இத்திட்டம் பொருந்துகிறது. கீழ்க்காணப்பெறும் உதவிகள், இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படுகின்றன :—

1. மருத்துவ உதவி—(மருந்துப் பொருள் வடிவில்).
2. நோய்க்கால உதவி—ரொக்கத்தில்
3. பேறுகால உதவி—ரொக்கத்தில்
4. ஏலாமையுற்றோருக்கு உதவி
5. சார்ந்துள்ளவர்கள் நல உதவி
6. இறுதிச் சடங்குகளுக்கான செலவு தொகை

1976-77 ஆம் ஆண்டில், சென்னை, மதுரை, கோயம்புத்தூரில் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகள் மூன்றும், தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்கள் நூற்று நான்கும், நடமாடும் மருந்தகங்கள் ஒன்பதும், பயன்பாட்டு மருந்தகங்கள் மூன்றும், பகுதி நேர மருந்தகங்கள் இரண்டும் செயல்பட்டு வந்தன. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை ஒன்று, சென்னையிலுள்ள கலைஞர் கருணாநிதி நகரில் 13—4—1977 ஆம் நாள் முதற்கொண்டு புதிதாக செயல்பட்டு வருகிறது. நான்கு தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகள், 104 மருந்தகங்கள், நான்கு மருத்துவமனைகள், 43 மருந்தகங்கள் ஆகியவை அரசுக்குச் சொந்தமான கட்டிடத்தில் செயல்பட்டு வருகின்றன; எஞ்சியவை தனியார் வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டம், அரசின் பங்குத் தொகை பெறுவதற்குரிய திட்டமாகும்; இத்திட்டத்திற்காகும் செலவு மாநில அரசு, புதுடில்லி, தொழிலாளர் நல காப்புறுதிக் கழகம் ஆகியவற்றிற்கிடையே ஒப்புக்கொள்ளப்பட்ட வீதங்களில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. மருத்துவ உதவி குறித்த செலவைப் பொறுத்த வரையில், மாநில அரசும், தொழிலாளர் நல காப்புறுதிக் கழகமும் 1 : 7 என்ற விகிதத்தில் தற்போது பகிர்ந்து கொள்கின்றன. எனினும், பகிர்ந்துக் கொள்ளத்தக்க மொத்தச் செலவு, கழகம் வரையறுக்கிற உச்சவரம்புக்கு உட்பட்டதாகும்.



1—4—1977 முதல் செயலுக்கு வந்துள்ள உச்சவரம்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| 1. விரிவாக்கப்பட்ட மருத்துவ வசதி. | தொழிலாளர் குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 80. |
| 2 முழு மருத்துவ வசதி. | தொழிலாளர் குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 105 [இத்திட்டம் செயல்படும் எல்லா இடங்களிலும் முழு மருத்துவ உதவி, ஈட்டுறுதி செய்து கொண்டவர்கள் அனைவருக்கும் கிடைக்கிறது. முழு மருத்துவ உதவி அளிக்கப்படுகின்ற இடங்களில் முழு மருத்துவ உதவி ஈட்டுறுதி செய்துக் கொண்டவர்களின் குடும்பத்தினருக்கு கிடைக்கிறது. மற்ற இடங்களில், விரிவாக்கப்பட்ட வசதிகள் மட்டுமே (அதாவது மருத்துவ வசதிகள் நீங்கலாக எல்லா வசதிகள்) அளிக்கப்படுகின்றன. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், கோயில்பட்டி ஆகிய இடங்களில் முழு மருத்துவ உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட ஏனைய இடங்கள் அனைத்திலும் விரிவாக்கப்பட்ட மருத்துவ உதவி அளிக்கப்படுகிறது]. |

[1977 ஆகஸ்ட் 11

மேற் கூறியதைத் தவிர, உச்ச வரம்புத் தொகைக்கு மேற்பட்டு, ஆண்டொன்றுக்கு தொழிலாளர் ஒருவருக்கு ரூ. 25-க்கு மேற்பட்டு ஆனால் ரூ. 45-க்கு மேற்படாமல் மருந்துப் பொருள்கள், மருந்துகள், ஏனைய குணப்படுத்தும் மருந்துகள் குறித்த செலவு அனுமதிக்கப்படும்; ஆனால், மாநில அரசு, தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம் ஆகியவற்றிற்கிடையே 1 : 7 என்ற வழக்கமான விகிதத்தில் இது பகிர்ந்துக் கொள்ளப்படத் தக்கதாகும்.

சோதனை நடவடிக்கையாக, சென்னை வட்டாரத்தில் ஆண்டொன்றுக்கு ரூ. 1,38,500 மதிப்பிட்டுச் செலவில் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் ஒரு இலட்சம் குழந்தைகளுக்கு பயனளிக்கும் வகையில் நோய்த் தடுப்புத் திட்டம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் குடும்ப நலச் சங்கத்தின் உதவியுடன் 1—1—1976 ஆம் நாளிலிருந்து 8 வகுப்பு ஒருங்கிணைந்த குடும்ப நல நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில், சென்னை அயன்புரம், கோயம்புத்தூர், தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகம் சைதாப்பேட்டை ஆகிய மூன்று தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகளில் குடும்ப நல முகாம்களும் நடத்தப்பட்டன.

16—1—1977 ஆம் நாளிலிருந்து சென்னை மாநகரம், கோயம்புத்தூர் மாநகரம், மதுரை மாநகரம், புறநகர்ப் பகுதிகள் ஆகிய இடங்களிலுள்ள கீழ்க்காணும் புதிய வகை நிறுவனங்களில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் நீடிக்கப்பட்டுள்ளது.

(1) மின் விசையைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள்—10 முதல் 19 பணியாளர்கள் பணி புரியும் தொழிற்சாலைகள்.

(2) மின் விசையைப் பயன்படுத்தாத தொழிற்சாலைகள்—20 அல்லது அதற்குக் கூடுதலாகப் பணியாளர்கள் பணி புரியும் தொழிற்சாலைகள்.

(3) உணவகங்கள்.

(4) சிற்றுண்டிச் சாலைகள்.



1977 ஆகஸ்ட் 11]

(5) கடைகள்.

(6) திரைப்படம் உட்பட திரையரங்கங்கள்.

(7) பத்திரிகை நிறுவனங்கள்.

1977-78 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படாத கீழ்க்காணும் பகுதிகளுக்கு இத் திட்டத்தை நீடிக்கக் கருதப்பட்டுள்ளது.

(1) அரக்கோணம்.

(2) தாராபுரம்.

(3) குமாரபாளையம்.

(4) சேலம் புறநகர்ப் பகுதிகள்.

(5) சங்ககிரி.

(6) திருச்செங்கோடு.

1977-78 ஆம் ஆண்டில் கோயம்புத்தூரைச் சுற்றியுள்ள பகுதிகள், சேலம், வட ஆற்காடு, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகள் ஆகிய இடங்களில் நிறுவனங்களின் சில புதிய துறைகளுக்கு தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் நீடிக்கப்படும்.

**பங்குத் தொகைகள்.**—தொழிலாளர் சிறப்பு பங்குத் தொகை, தொழிலதிபர்களிடமிருந்தும் தொழிலாளர்களிடமிருந்தும் பெறும் பங்குத் தொகைகள் என்ற வகையில் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகத்தால் ரூ. 10,94,13,602.17 வசூல் செய்யப்பட்டது.

காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளர்களுக்கு 1976 ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் 1977 மார்ச் 31 ஆம் நாள் முடிய கொடுக்கப்பட்ட ரொக்க உதவித் தொகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | ரூபாய். |
|---|---|
| 1. நோய்க்கால உதவி | 2,11,19,101.05 |
| 2. நாள்பட்ட நோய்க்கால உதவி | 10,25,721.45 |
| 3. பேறுகால உதவி | 10,22,065.00 |
| 4. தற்காலிக ஊனமை உதவி | 27,36,352.80 |
| 5. நிலையான ஊனமையுற்றோருக்கு உதவி | 8,00,440.04 |

| | ரூபாய் |
|---|---|
| 6. சார்ந்துள்ளவர்கள் நல உதவி | 4,21,254.55 |
| 7. இறுதிச் சடங்குகளுக்கான செலவுத் தொகை | 79,302.55 |
| 8. தகவல் குறித்த செலவுத் தொகை | 8,23,140.97 |

**1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம்.**—1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம், கீழ்க்கண்ட நேர்வுகளில் இழப்பீட்டுத் தொகை வழங்க வகை செய்கிறது : (a) தொழிற்சாலைகளில் வேலை காரணமாகவும், வேலை செய்யும்போதும் ஏற்படுகிற விபத்துக்கள் ; (b) மரணத்தை அல்லது ஏலாமையை விளைவிக்கிற தொழில் சார்ந்த சில நோய்கள். தொழிற்சாலைகள், சுரங்கங்கள், மலைத் தோட்டங்கள், போக்குவரத்து, கட்டுமான பணிகள், இரயில்வே, அபாயம் விளைவிக்கிற சில குறிப்பிட்ட தொழில்கள் ஆகியவற்றில் பணி புரிகின்ற தொழிலாளர்களுக்கு (தொழிலதிபரின் வாணிகம் அல்லது தொழில் காரியங்களுக்காக அன்றி வேறு விதத்தில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள நாட்கூலி பெறும் தொழிலாளர்கள் நீங்கலாக ஏனைய தொழிலாளர்களுக்கு) இது பொருந்தும்.

1—1—1976 ஆம் நாள் நிலவரப்படி 500 வழக்குகள் முடிவுறு நிலையில் இருந்தன. இவ்வாண்டில் 1,046 வழக்குகள் பெறப்பட்டன. மொத்தம் 1,546 வழக்குகளில், இந்த ஆண்டு 915 வழக்குகள் மீது முடிவெடுக்கப்பட்டன. இவ்வாண்டு முடிவில் 631 வழக்குகள் முடிவுறு நிலையில் இருந்தன.

**1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தில் திருத்தம்.**—இந்திய அரசு, 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுத் திருத்தச் சட்டத்தின் மூலம் 1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தை திருத்தி, ஊதிய வரம்பை ரூ. 500-லிருந்து ரூ. 1,000-க்கு உயர்த்தியுள்ளது ; 1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் IV அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையும் உயர்த்தப் பட்டுள்ளது.

**தொழிற்சாலை விபத்துக்கள்—துயர் துடைப்பு நிதி.**—ஆண்டொன்றுக்கு ரூ. 15,000 தொடர் மானியத்துடன் அரசு ஒப்பளிப்பு வழங்கிய வகையில் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது ; கல் உடைத்தல், கன்னி வைத்து தகர்த்தல், கிணறு தோண்டுதல்



ஆகியவற்றில் பணி புரிகையில் காயமேற்பட்டு நிரந்தர இயலாமை அடைந்த தொழிலாளர்கள் அல்லது மரணமடைந்த தொழிலாளரைச் சார்ந்துள்ளவர்களுக்கு இந்நிதியிலிருந்து உதவியளிக்கப்படும். 1923 ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்குவதற்கு நிதி ஆதாரம் இல்லாத தொழிலதிபர்களின் தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு அல்லது வேறு காரணங்களுக்காக இழப்பீடு பெற இயலாத தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோருக்கு இந்நிதியிலிருந்து துயர் தணிப்பு உதவித் தொகையளிக்கப்படும். இத்தகைய நேர்வுகளில் இழப்பீடு வழங்க போதுமான நிதி ஆதாரம் இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் இதனால் பயனடைவர். நேர்வு ஒன்றில், துயர்துடைப்பு நிதியாக ரூ. 1,000, 1976 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

**பணிக் கொடை.**—தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குப் பணிக் கொடை வழங்குவதற்கு வகை செய்கின்ற இச்சட்டம் 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16 ஆம் நாள் முதற்கொண்டு செயல்படுத்தப்பட்டது. தமிழ்நாடு பணிக் கொடை விதிகள் 1973 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து செயல்படுத்தப்பட்டன. இச்சட்டத்தின்கீழ், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நல உதவி ஆணையாளர்கள் அவரவர் பகுதிகளில் கட்டுப்பாட்டு அதிகாரிகளாக இருப்பர் என்றும், தொழிலாளர் நல துணை ஆணையாளர்கள் அவரவர் பகுதிகளில் மேல்முறையீட்டதிகாரிகளாக இருப்பர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளன.

1976 ஆம் ஆண்டில், இச்சட்டத்தின் கீழ், கட்டுப்பாட்டு அதிகாரிகள் 606 வழக்குகளை முடிவு செய்துள்ளனர். இவ்வாண்டில், மேல்முறையீட்டதிகாரிகள் 39 மேல்முறையீடுகளை முடிவு செய்துள்ளனர்.

## V. தொழிலாளர் நலத் திட்டங்கள்.

**அரசு உதவி பெறும் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்—**
**தனிக் தொழிலதிபர் திட்டங்கள்.**—சமூக நலக் கொள்கையை
கொண்டு, பெருகிவரும் தொழிலாளர்களுக்கு

பாங்குடைய வசதியான குடியிருப்புகள் ஒதுக்குவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; ஏனெனில், அவர்களில் பெரும்பாலோருக்கு சொந்த வீடுகள் வைத்துக் கொள்ள இயலாது அல்லது அவர்கள் பணியிடத்திலிருந்து வெகு தொலைவில் வசிப்பவர்களாய் உள்ளனர். சில தொழிலதிபர்கள் தங்களுடைய பணியாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் குடியிருப்பு வசதிகள் அளிக்கிறார்கள்; ஆனால், இது இடவசதிப் பிரச்சினையை சிறிது கூடத் தீர்ப்பதாக இல்லை. எனவே, பணியிடங்களுக்கு அருகில் வசதியுள்ள இடங்களில் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி அளிக்கக் குறைந்த விலையிலான வீட்டு வசதித் திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைச் சட்டத்தின்கீழ் வரும் தொழிலாளர்களின் நன்மைக்காக வீடுகள் கட்ட பொதுத் துறை, கூட்டுறவுத் துறை, தனியார் துறை ஆகியவற்றுக்கு இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், கொடுக்கப்பட்டுள்ள 'நிதியுதவி' வகை பின்வருமாறு :—

| ஏற்பளிக்கப்பட்ட முகவரமைப்பு. | கடன் தொகை. | உதவித் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (சதவீதம்) | |
| (i) மாநில அரசு சட்டப்படி அமைந்த வீட்டு வசதி வாரியம் உள்ளாட்சி மன்றங்கள். | 50 | 50 |
| (ii) தகுதி வாய்ந்த தொழிற்சாலை தொழிலாளர்களின் பதிவுபெற்ற கூட்டுறவுச் சங்கங்கள். | 80 | .. |
| (iii) தனியார் துறை பணியாளர்கள். .. | 50 | 25 |

தனியார் துறையில் உள்ள வீட்டு வசதித் திட்டங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. தனியார் தொழில் அதிபர்கள், மலைத் தோட்ட தொழிலாளர் வீட்டு வசதித்



திட்டங்கள் ஆகியவை குறித்த வீட்டு வசதித் திட்டங்களுக்கு மட்டுமே இத்துறை தற்போது பொறுப்பு வகிக்கிறது. இரு சிறிய அறைகள் கொண்ட வீடு (இரண்டடுக்கு மாடிக் கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக ரூ. 5,350-ம் இரு சிறிய அறைகள் கொண்ட வீடு (பல அடுக்கு மாடிக் கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக ரூ. 6,050-ம், வழக்கமான இரு அறைகள் கொண்ட வீடு (இரண்டடுக்கு மாடிக் கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக ரூ. 7,600-ம், வழக்கமான இரு அறைகள் கொண்ட வீடு (பல அடுக்கு மாடிக் கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக ரூ. 8,500-ம் நிதியுதவி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

1976-77 ஆம் ஆண்டில், ஆறு தனியார் துறை நிறுவனங்களைப் பொறுத்தவரை இத்திட்டத்தின் கீழ் 9.25 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதியுதவி நீட்டிக்கப்பட்டுள்ளது. 1977-78 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்தில் இது காரியத்திற்காக ரூ. 10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

1976-77 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் வீட்டு வசதித் திட்டங்களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது :—

| திட்டத்தின் பெயர். | ஒப்பளிப்பு வழங்கப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | திட்ட மதிப்பீட்டுச் செலவு. | ஒப்பளிக்கப்பட்ட தொகை. | |
|---|---|---|---|---|
| | | | கடன் தொகை. | உதவித் தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1 தருமபுரி மாவட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நிறுவனம், பாலக்கோடு. | இரு சிறிய அறை இரண்டடுக்கு கட்டிடக் குடியிருப்புகள் 100 | 7,60,000 | 2,67,500 | 1,33,750 |
| 2 ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நிறுவனம், வட புதுப்பேட்டை. | இரு அறை கொண்ட பல அடுக்கு மாடிக் கட்டிடக் குடியிருப்புகள் 48 | 6,24,000 | 2,04,000 | 1,02,000 |
| 3 ஸ்ரீ இராமலிங்க ஆலை நிறுவனம், அருப்புக் கோட்டை. | இரு சிறிய அறை கொண்ட இரண்டடுக்கு மாடிக் கட்டிடக் குடியிருப்புகள் 120. | 11,70,000 | 3,21,000 | 1,60,500 |



| திட்டத்தின் பெயர். | ஒப்பளிப்பு வழங்கப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | திட்ட மதிப்பீட்டுச் செலவு. | ஒப்பளிக்கப்பட்ட தொகை. | |
|---|---|---|---|---|
| | | | கடன் தொகை. | உதவித் தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | ரூ. | ரூ. |
| தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நிறுவனம், மேட்டுப்பட்டி, மதுரை மாவட்டம். | இரு சிறிய அறை கொண்ட பல அடுக்கு மாடிக் கட்டிடக் குடியிருப்புகள் 102. | 13,94,000 | 4,33,500 | 2,16,750 |
| | முறையான இரண்டு அறை கொண்ட பல அடுக்கு மாடிக் கட்டிட குடியிருப்புகள் 102. | 19,21,000 | 3,08,550 | 1,54,275 |

**மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்.**— இத்திட்டம் மலைத் தோட்டச் சொந்தக்காரர்கள் தங்களது தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதை நோக்கமாகக் கொண்டது. ஓர் அறை கொண்ட குடியிருப்புகள் ஒவ்வொன்றும் ரூ. 4,000 உச்சவரம்பு செலவில் கட்டப்படுகின்றன. அத்தொகையில் 50 சதவீதம் கடனாகவும், 37.5 சதவீதம் உதவித் தொகையாகவும் இருக்கும். இம்மாநிலத்தில் மலைத் தொட்டங்களிலேயே இருந்து கொண்டு பணி புரியும் தொழிலாளர்களில் சுமார் 93 சதவீதத் தினருக்கு வீட்டு வசதி அளிக்கப்பட்டுள்ளது.

1. வீடுகள் தேவைப்படுகிற தனித் தொழிலாளர்கள் உட்பட உள்ள குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை — 35,715
2. வழங்கப்பட்ட தரமான வீடுகளின் மொத்த எண்ணிக்கை — 33,200
3. இன்னும் வழங்கப்படாத தரமான வீடுகளின் மொத்த எண்ணிக்கை — 2,515
4. கிடைக்கிற பிற வகை வீடுகளின் மொத்த எண்ணிக்கை — 3,496

1977 ஆம் ஆண்டு மே மாதம், கீழ்க்கண்ட எஸ்டேட்டுகளுக்கு, வீடுகள் கட்டுவதற்காக, கடன்—உதவித் தொகை வழங்க, அரசு அனுமதித்துள்ளது.



| எஸ்டேட்டின் பெயர்: | கடன்: | உதவித் தொகை: | கட்டுவதற்காக உள்ள வீடுகள்: |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 குன்னூர் தேயிலை எஸ்டேட் லிமிடெட்: குன்னூர் .. | 64,000 | 48,000 | 32 |
| 2 மணம்பாலி எஸ்டேட், வால்பாறை .. | 80,000 | 60,000 | 40 |
| 3 மேல் நீர்வீழ்ச்சி எஸ்டேட், வால்பாறை .. | 1,00,000 | 75,000 | 50 |
| 4 ணலவார் எஸ்டேட், நெடுங்குந்சாலை அஞ்சல் .. | 1,20,000 | 90,000 | 60 |
| 5 வெண்ணியார் எஸ்டேட், நெடுங்குந்சாலை அஞ்சல் .. | 24,000 | 18,000 | 12 |
| 6 நெடுங்குந்சாலை எஸ்டேட், நெடுங்குந்சாலை அஞ்சல் — | 42,000 | 31,500 | 21 |
| 7 கிளென்வேல் எஸ்டேட், நெடுங்குந்சாலை அஞ்சல் — | 96,000 | 72,000 | 48 |
| 8 ஈலியார், கல்லவார் எஸ்டேட், சோலையார் அஞ்சல்: | 2,00,000 | 1,50,000 | 100 |

[1977 ஆகஸ்ட் 11

**மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதி ஆலோசனைக் குழு.**—இந்த ஆலோசனைக் குழுவில், வேலைக்கு அமர்த்துபவர்களும், வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் தலைவர் ஒருவரும், உள்ளனர். தொழிலாளர் வேலை வாய்ப்புத் துறையின் அரசுச் செயலாளர் இக்குழுவின் தலைவராவார். இக்குழு 12—5—1976-ல் உதகமண்டலத்திலும், 17—9—1976-ல் ஏர்க்காட்டிலும் கூடியது. வீடுகள் தொடர்பான விஷயங்கள் பற்றி ஆலோசனை செய்வதும், வீடுகள் சம்பந்தப்பட்ட, மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதித் துறைகளை தக்க முறையில் செயல் படுத்துவதற்கான வழிமுறைகள் பற்றிய கருத்துக்களைத் தெரிவிப்பதும், இக்குழுவின் தலையாய பணிகளாகும். மேலே குறிப்பிட்ட கூட்டங்களில், கீழ்க்கண்டவை குறித்து, முடிவெடுக்கப் பட்டன:—

1. எஸ்டேட் பள்ளி ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டித் தருதல்.

2. கண்காணிப்பாளர்களுக்கு வீட்டு வசதி.

3. அரசு சிங்கோனா மலைத் தோட்டங்களில் குடியிருப்புகள் கட்டுதல்.

4. எஸ்டேட்டுகளுக்குப் புறத்தே வாழும், பழங்குடியினருக்கும், ஆதிவாசிப் பணியாளர்களுக்கும் வீட்டு வாடகைப் படி அளித்தல்.

5. குளியல் அறைகளும், கழிவிடங்களும் கட்டுதல்.

6. இரண்டாவது அடமானம்.

7. மலைத் தோட்டங்களில் சமூகக் கூடங்கள்.

8. மலைத் தோட்டங்களில் பணியாளர்கள் குடியிருப்புகளுக்காகக் கட்டப்படும் வீடுகளில் தேவதாரு (white cedar), கருங்காலி (silver oak wood) மரங்களைப் பயன்படுத்துதல்.

இவையன்றி, பணியாளர்களின் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி அளிக்கும் பணியும், இக்குழுவின் கவனத்தை ஈர்த்துள்ளது. இது குறித்த முன்னேற்றங்களை மறு ஆய்வு செய்யும் பொருட்டு,



1977 ஆகஸ்ட் 11]

சம்பந்தப்பட்ட மலைத் தோட்டக் காவல் தலைவரைச் செயலாளராகவும், மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும் கொண்ட "நெறிப்படுத்தும் குழு" ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**பணியாளர்கள் கல்வி.**—இம்மாநிலத்தில், மூன்று இடங்களில், இந்திய அரசின் "பணியாளர்கள் கல்வித் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் முன்னேற்றம் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய வட்டார இயக்குநர்கள், பணியாளர்களது ஆசிரியர்களுக்கும், பணியாளர்களுக்கும், கீழே குறிப்பிட்டுள்ளதுபோல், பயிற்சிப் படிப்பிற்கான வகுப்புகளை நடத்துகின்றனர்.

| | சென்னை. | மதுரை. | கோயம்புத்தூர். |
|---|---|---|---|
| பயிற்சி பெற்ற பணியாளர்/ ஆசிரியர்கள் எண்ணிக்கை. | 172 | 94 | 159 |
| பயிற்சி பெற்ற பணியாளர்களின் எண்ணிக்கை. | 5,662 | 4,821 | 6,090 |

மூன்று வட்டார உள்ளூர் குழுக்களுக்கும், தொழிலாளர் நல ஆணையாளரே தலைவராவார்.

**பணியாளர்கள் கல்வி நிலையம், சென்னை.**—பணியாளர்—ஆசிரியர் பயிற்சி வகுப்பு, குறிப்பாகப் பெண் பணியாளர்களுக்கென்றே அமைந்த பயிற்சிப் படிப்பு 8—12—1976 முதல் 7—3—1977 வரை நடத்தப்பட்டது. அரசுத் துறையிலிருந்து 31 பெண் பணியாளர்களும், தனியார் துறையிலிருந்து 9 பேரும், இப் பயிற்சி பெற்றனர்.

19—2—1977 ஆம் நாளன்று, "நாட்டின் பொருளாதாரத்தை மாற்றி அமைப்பதில் பணி புரியும் பெண்களின் பங்கு"—என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. சமூக ஆராய்ச்சி நிலைய இயக்குநர் அடிப்படைக் கருத்துக்களைக் கொண்ட உரையாற்றினர். இக்கருத்தரங்கில் பணி புரியும் பெண்கள் 60 பேர் கலந்து கொண்டனர்.

23—3—1977 ஆம் நாளன்று நடந்த விழாவில், சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் முதன் முதலாக 'அஞ்சல் வழிக் கல்வி' யைத் தொடங்கி வைத்தார்; இவ்விழாவில் தமிழகத்தின் பல இடங்களிலிருந்தும் 200 தொழிற்சங்கவாதிகள் கலந்து கொண்டனர்.

பல்லவன் போக்குவரத்துக் கழக (பெருநகர்) நடத்துநர்களுக்கு "மக்கள் தொடர்பு" பற்றி ஐம்பது, ஒருநாள் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

**பணியாளர்கள் கல்வி நிலையம், மதுரை.**—இவ்வட்டாரத்திலுள்ள பயிற்சி பெறும் பணியாளர்—ஆசிரியர்களுக்கு, மக்கள் தொகைக் கட்டுப்பாடு, தொழில்களில் பணியாளர்களின் பங்கு, உற்பத்தித் திறன், தொழில் ஒழுங்கு முறை முதலியவற்றில், மூன்று 'மும்முர நினைவு கூர் பயிற்சி வகுப்புகள்' நடத்தப்பட்டன. திருச்சிராப்பள்ளி துணை வட்டார நிலையத்தில் ஆய்வு காலத்தின் போது, 'நினைவு கூர் பயிற்சி வகுப்பு' ஒன்று நடத்தப்பட்டது.

இந்நிலையத்தில், இந்தியா சிமிட்டி இணைக் குழுக்கள், சங்கர் நகர், ஸ்ரீ விஜயகுமார் மில்ஸ் லிமிடெட், பழனி, மதுரா கோட்ஸ் லிமிடெட், மதுரை, தரங்கதாரா கெமிக்கல்ஸ், சாகுபுரம், பென்னர் (இந்தியா) லிமிடெட், மதுரை, டி.வி.எஸ். அண்டு சன்ஸ் (P ) லிமிடெட், மதுரை ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் உறுப்பினர்களுக்கு மூன்று ஒரு வார சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

புதிய தூத்துக்குடி துறைமுகத்தில் பணியாற்றும் "அங்காடிக் குழு" உறுப்பினர்களுக்காக, "தொழில்களில் பணியாளர்களின் பங்கு" என்பது பற்றி, சிறப்புப் பயிற்சி ஒன்று அப்பயிற்சிக் காலத்தில் நடத்தப்பட்டது. அங்காடி குழு/மதுரை இணைக் குழு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின், இராமநாதபுரம் திட்ட வட்டாரம் (தெற்கு) ஆகியவற்றிலுள்ள உறுப்பினர்களின் நலனுக்காக, சிறப்பு மும்முரப் பயிற்சி நிகழ்ச்சி ஒன்று, 21—3—1977 முதல் 31—3—1977 வரை நடத்தப்பட்டது.



ஆளுநர்கள் குழுக் கூட்டமும், பணியாளர்கள் கல்விச் சங்கத்திற்கான மத்தியக் குழுவின் கூட்டமும் 1976 ஆம் ஆண்டு அக்டோபர் 29, 30 தேதிகளில், மதுரை, தெற்கு வெளித் தெருவிலுள்ள, டி.வி.எஸ். மண்டபத்தில் நடைபெற்றது.

பல்வேறு நிறுவனங்களில், குறிப்பிட்ட பாடங்களில் 91 'ஒரு நாள் பள்ளிகள்' நடத்தப்பட்டன. 3,342 பணியாளர்கள் இதில் கலந்து கொண்டனர். ஆய்வு ஆண்டில், 'தஞ்சாவூர் அரசு, வட்டார மோட்டார் பட்டறையில்' பணிப் பயிற்சியாளர்களுக்கு நினைவுகூர் பயிற்சி வகுப்பு 3 தொகுதியாக நடத்தப்பட்டது.

**பணியாளர்கள் கல்வி நிலையம், கோயம்புத்தூர்.**—1976 ஆம் ஆண்டு மே திங்கள், உதகமண்டலத்தில், 'தொழிலாளர்—நிர்வாகத் தொடர்புகள்—புதிய அணுகு முறைகளின் தேவை'—என்பது பற்றி கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள தொழில் சார்ந்த பணியாளர்களின் நலத்திற்காக, "தேசிய முன்னேற்றமும் பணியாளர்களின் பங்கும்"—என்பது பற்றி, மூன்று நாள் கருத்தரங்கு ஒன்று, உதகமண்டலத்தில், 1977 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 13 ஆம் நாளிலிருந்து 15 ஆம் நாள் வரை நடைபெற்றது.

இவ்வாண்டில், வால்பாறை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில், பணியாளர்—ஆசிரியர்களுக்காக மூன்று, 'மறு பயிற்சி வகுப்புகள்' நடத்தப்பட்டன. இம்மூன்று வகுப்புகளிலும் 74 பணியாளர்—ஆசிரியர்கள் பங்கு கொண்டனர்.

கோயம்புத்தூர் வட்டாரத்தின் பல்வேறு இடங்களில், நான்கு 'மக்கட் தொகைக் கல்வி' பற்றிய கருத்தரங்குகள் நடைபெற்றன. மேற்கூறிய நிகழ்ச்சிகளில் 500 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

மூன்று நாள் கருத்தரங்குகள் எட்டு நடைபெற்றன. அங்காடிகள்—இணைக் குழுக்களின் உறுப்பினர்கள் 263 பேர் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

[1977 ஆகஸ்ட் 11

வடுகபாளையம், அரசூர், தாராபுரம் ஆகிய இடங்களில் உள்ள கிராமப்புறப் பணியாளர்களுக்காக, மூன்று, 'ஒரு நாள் முகாம்கள்' நடத்தப்பட்டன. பெண் பணியாளர்கள் உட்பட 140 கிராமப் பணியாளர்கள் இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

**நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளும், நியாய விலைக் கடைகளும்.**—தொழில் சார்ந்த நிறுவனங்களில், 31—12—1976 ஆம் நாள் நிலவரப்படி, 300-ம் அல்லது அதற்கு மேலும் பணியாளர்களைக் கொண்ட நுகர்வோர் கூட்டுறவுப் பண்டக சாலைகள், நியாய விலைக் கடைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | நிறுவனங்களின் எண்ணிக்கை. | நுகர்வோர் கூட்டுறவுப் பண்டக சாலைகளின் எண்ணிக்கை. | நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| தனியார் துறை | 378 | 222 | 39 |
| அரசுத்துறை (மாநிலம்) | 65 | 45 | 4 |

**தமிழ்நாடு தொழிலாளர் சஞ்சிகை.**—தொழில் தகராறுகள், வேலை முடக்கம், வர்த்தக ஒன்றியங்கள், முக்கியமான ஒப்பந்தங்கள், தொழிலாளர் நீதி மன்றங்கள், சென்னை தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகள், உயர்நீதி மன்றம், தலைமை நீதி மன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகள், தொழிலாளர்களுக்கான நுகர்வோர் பொருள் விலைக் குறிப்புகள் முதலியவை பற்றிய பயனுள்ள தகவல்களையும், புள்ளி விவரங்களையும் இந்தத் திங்கள் வெளியீடு தருகிறது. அத்துடன், தொழிலாளர்கள் பிரச்சனைகள், தொழில் நிர்வாகம் பற்றிய கட்டுரைகளையும், அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவன அறிக்கைகள், முக்கூட்டு அமைப்புகளான இந்திய தொழிலாளர் மாநாடு, தொழிலாளர் நிலைக் குழு, மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழு முதலியவற்றின் தீர்மானங்கள், பரிவுரைகள் ஆகியவற்றையும்



1977 ஆகஸ்ட் 11]

இது வெளியிடுகிறது. இச்சஞ்சிகையின், முக்கியப் பகுதியாகிய புள்ளிவிவரம் பகுதி இப்போது தமிழில் அச்சிடப்பட்டு வருகிறது.

**மாநிலத் தலைமைக் குழு.**—'தேசிய தலைமைக் குழு' இந்திய அரசு ஆகியவற்றின் பரிவுரைகளைத் தொடர்ந்து, 'மாநிலத் தலைமைக் குழு', ஒன்று, தனியார் துறையில் தொழிலாளர் உறவுகளில் காணப்படும் சிக்கல்களை ஆராய்வதற்காக 1976 ஆம் ஆண்டு மார்ச் திங்களில், 'மாநிலத் தலைமைக் குழு' ஒன்று அமைக்கப்பட்டது. 3 அலுவலக உறுப்பினர்களன்றி 13 தொழிலதிபர் பிரதிநிதிகளும், 13 தொழிலாளர் பிரதிநிதிகளும், 'மாநிலத் தலைமைக் குழுவில்' பிரதிநிதித்துவம் பெற்றிருந்தனர். இக் குழு, 23-3-1976, 29-7-1976, 8-10-1976 ஆகிய நாட்களில் மூன்று முறை கூடியது. இந்திய அரசின் ஆணைகளைக் கருத்திற் கொண்டு, மேற்கொண்டு கூட்டங்கள் தற்போது நடைபெறவில்லை.

**நிலைக் குழு.**—'மாநிலத் தலைமைக் குழு' வின் முடிவிற்கு வழிகாட்டியாகக் குறிப்புத் தரும் வகையில், இக் குழுவினால், குறிக்கப்பட்ட விஷயங்களைக் கருதிப் பார்ப்பதற்காகவும், தொழில்களில், தொழிலாளர்களின் பங்கு குறித்த திட்டங்கள் செயலாக்கப்படுவதைக் கண்காணிப்பதற்காகவும், இந்நிலைக் குழு நிறுவப்பட்டது. தொழிலாளர் துறை ஆணையாளர் இக் குழுவின் தலைவராவார். 4 தொழிலதிபர் பிரதிநிதிகளும், 4 தொழிலாளர் பிரதிநிதிகளும் இக் குழுவின் உறுப்பினர்களாக உள்ளனர். இதுவரையில் இக் குழு 9 முறை கூடியுள்ளது. இக் குழு, மாநிலத் தலைமைக் குழுவின் படைப்பாக இருக்கின்ற காரணத்தால் தற்போது இக் குழு கூட்டம் நிகழ்த்தவில்லை.

**முத்தரப்பு ஆலோசனைக்குழு.**—மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியமே முதன்மையான ஆலோசனைக் குழுவாகும். இதனிடம் தொழிலாளர் தொடர்பான கொள்கைகள் பற்றிய பொருள்கள் அனைத்துக்கும் அறிவுரைகள் கேட்கப்பட்டுள்ளன. துரதிர்ஷ்டவசமாக, கடந்த ஓராண்டிற்குமேல் இவ்வாரியம் செயல்படவில்லை. தொழிலாளர் தொடர்பான ஏனைய பொருள்களை நன்கு ஆய்வு செய்தும், தொழிலாளர்களது கொள்கைகளை உருவாக்குவதில் அரசுக்கு வேண்டிய அறிவுரையை வழங்கியும், முத்தரப்புக் குழுவை மீண்டும் செயற்படுத்தும் பொருட்டும், இந்த அரசு தேவையான முயற்சிகளை எடுக்கும்.

**பல்துறை அதிகாரிகளின் ஆண்டுக் கூட்டம்.**—தொழிலாளர் நிர்வாகத்தைச் சேர்ந்த பல்வேறு பொருட்கள் குறித்தும், எடைகள்—அளவுகள் சட்டத்தைப் போல் தொழிலாளர்—தொழிற்சாலைகள் சட்டத்தைத் தீவிரப்படுத்துவது குறித்தும் பரிசீலனை செய்ய, 1976 ஆம் ஆண்டு மே திங்களில், உதகமண்டலத்தில், தொழில் துறை அதிகாரிகளின் 14 ஆவது ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது.

**தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியம்.**—இந்திய அரசாலும், தேசியத் தொழிலாளர் நலக்குழுவாலும் அமைக்கப்பட்ட தொழிலாளர் நலக் குழுவின் பரிவுரைகளுக்கு இணங்கி, அரசு ரூ. 5 இலட்சம் தொடக்க மானியத் தொகையைக் கொண்டு, தொழிலாளர் நலநிதி என்னும் ஒரு நிதியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், தொழிலாளர் நல அமைச்சரைத் தலைவராகக் கொண்ட, ஒரு தொழிலாளர் நல வாரியத்தையும் அமைத்துள்ளது.

தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச்சட்டம், வேலை வாய்ப்பளிப்பவர்கள், வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் ஆகியோரிடமிருந்து பங்குத் தொகைகளைப் பெற்று, தொழிலாளர் நல நிதிக்கும், தொழிலாளர் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குரிய பயன்பாட்டிற்கும் வழங்குகிறது. தொழிற்சாலைகளின் ஆய்வாளர்களும், மலைத் தோட்டங்கள் வளர்ப்பு ஆய்வர்களும், தொழிற்சாலைகள், மலைத்தோட்டங்கள் தொடர்பான சட்டத்தின்கீழ், ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், உணவு வழங்கு நிறுவனங்கள், பீடி நிறுவனங்கள், மேற் சொன்ன சட்டத்தின் 2 (d) (v பிரிவின்கீழ் கொண்டுவரப்பட்ட நிறுவனங்கள் ஆகியவை தொடர்பான ஆய்வாளர்கள், தொழிலாளர்கள் நல ஆய்வாளர்கள் ஆவர். அரசால் வழங்கப்பட்ட தொடக்க மானியத் தொகையுடன், தொழிலாளர் நல நிதி குறித்து, இதுவரை ரூ. 71.46 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**மேற்கொள்ளப்பட்ட நலத் திட்டங்கள்.**—பின் வருமிடங்களில் தொழிலாளர் நல நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன :—

(i) அம்பத்தூர், (ii) செம்பியம்—சென்னை, (iii) வாணியம்பாடி, (iv) குடியாத்தம், (v) கோயம்புத்தூர், (vi) திருப்பூர், (vii) மதுரை, (viii) திண்டுக்கல், சிவகாசி, (x) கோவில்பட்டி.



ஒவ்வொரு நிலையத்திலும் 50 தொழிலாளர்களது குழந்தைகள் (5 ஆண்டிற்குக் குறைவான) அனுமதிக்கப்பட்டுள்ளனர். தருதிவாய்ந்த பால சேவிகாவின் மூலம் அவர்களுக்கு, பள்ளி செல்வதற்கு முன்பான பயிற்சி கொடுக்கப்படுகிறது. மேலும் இலவச உணவும், நாள்தோறும் பாலும் வழங்கப் படுகின்றன. பொம்மைகளும் வழங்கப்படுகின்றன.

ஐம்பது பயிற்சியாளர்களுக்குத் (தொழிலாளர்களது மனைவியர் அல்லது புதல்வியர்) தையற்கலை பாடப் பிரிவில் பயிற்சி வழங்கப்படுகிறது. இப் பாடப் பயிற்சிக்கான காலம் ஓராண்டாகும். இப் பயிற்சிக் காலத்தில் 30 ரூபாய் உதவித் தொகை செலுத்தப்படும். ஒவ்வொரு நிலையத்திலும் தையற்கலையில் தருதிவாய்ந்த ஆசிரியை ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

குழந்தை கவனிப்பு நிலையம் ஒன்று, திரு. வி. க. மாதர் நல்வாழ்வு சங்கத்தினால், செம்பியத்தில் நிறுவப்பட்டுள்ளது. இவ்வாரியம், இச்சங்கத்திற்கு ஓராண்டு மானியத் தொகையாக ரூ. 8,000 வழங்குகிறது. பள்ளி செல்வதற்கு முன்பான பயிற்சி ஓர் ஆசிரியரால் கொடுக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு நாள்தோறும் பாலும், ரொட்டியும் வழங்கப்படுகின்றன.

தொழிலாளர்களது நலனிற்காக, சென்னையில் இரண்டு படிப்பகங்களும், கோயம்புத்தூரில் ஒரு படிப்பகமும், மதுரையில் ஒரு படிப்பகமும் ஆக 4 படிப்பகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இப்படிப்பகங்களில் மாத, வார வெளியீடுகளும், செய்தித்தாள்களும் வழங்கப்படுகின்றன.

தாம்பரத்திலுள்ள உருக்கி நோய் மருத்துவ நிலையத்தில், ரூ. 3.64 இலட்சம் செலவில், 26 படுக்கைகளுடன் கூடிய உருக்கி நோய் வார்டு (இணைப்பு) ஒன்று கட்டப்பட்டுள்ளது. இது, தொழிற்சாலை பணியாளர்களுக்கென்று கட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கான பல அடுக்குக் கட்டிடம் ஒன்று ரூ. 35 இலட்சம் செலவில் பொதுப்பணித் துறையினால் கட்டப்படுவது நடைமுறையில் உள்ளது. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், தொழிலாளர் நலத் துறை ஆகியவற்றின் அலுவலகங்களுக்கு, இப் பல அடுக்குக் கட்டிடத்தில்

இடவசதி அளிக்கப்படும். அவற்றால் வழங்கப்படும் வாடகைத் தொகை நலநிதிக்கான வரவுகளுடன் சேர்க்கப்படும்.

தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் பொருட்டு விவாதங்களுக்காக சென்னைக்கு வரும் தொழிலாளர்களது பிரதிநிதிகள், தொழிற் சங்கத் தலைவர்கள் ஆகியோருக்குப் போதுமான வசதியுள்ள, அதிகம் வாடகையிலா இடவசதி வழங்கும் பொருட்டு, தொழிலாளர் நல வாரியத்திற்கு உதவுவது குறித்து அரசு தீர்மானித்துள்ளது.

பின்வரும் திட்டங்கள் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளன :—

1. தொழிலாளர்களுக்காக மாமல்லபுரம், குற்றாலத்தில் விடுமுறை இல்லங்களைக் கட்டுதல். தொழிலாளர்களின் நலன் குறித்து ஊட்டி, ஏர்க்காடு, கோடைக்கானலில் ஓய்வு—மனமகிழ் நிலையங்களை நிறுவுதல்.

2. தொழிலாளர்களின் நலனிற்காக தொலைக் காட்சிப் பெட்டிகளை வாங்குதல்.

3. கூடுதல் தொழிலாளர் நல—மனமகிழ் நிலையங்களைத் திறத்தல்.

4. தமிழ்நாட்டில் தொழிலாளர் வசிக்கும் பகுதிகளில் 9 மகளிர் மன்றங்களை உருவாக்குதல்.

5. மூன்று ஓய்வு இல்லங்கள், 3 சமூக உறவு அறைக் கூடங்களும், தொழிலாளர்தம் பண்பாட்டு நிலையங்களையும் திறத்தல்.

6. பொழுதுபோக்கு, கல்வி சம்பந்தப்பட்ட படங்கள் ஆகியவற்றைக் காண்பிக்கும் பொருட்டு, திரைப்படக் கருவியை விலைக்கு வாங்குதல்.

சட்ட உதவி.—சிற்சில நிலைகளைப் பொறுத்தவரை, ஒரு ரிட்மனு அல்லது ரிட் முறையீட்டிற்கு 150 ரூபாய்வீதம் உயர்நீதி மன்ற நடவடிக்கைகள் தொடர்பான தொழிற் சங்கங்களின் சட்டச் செலவுகளைச் சமாளிக்க இயலும் வண்ணம், நிதியுதவி வழங்குவது குறித்து ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சட்ட உதவிக்கு ஒப்புதல் வழங்கும் பொருட்டு, தொழிலாளர்





நல ஆணையாளருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 11 நேர்வுகளில், இதுவரை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள தொகை ரூ. 1,650 ஆகும்.

உதவி பெறுவதற்குத் தகுதி வாய்ந்த ஏழைத் தொழிலாளர்கள் அல்லது அவர்களைச் சார்ந்தவர்கள் தொழிலாளர், இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ், இழப்பீட்டு நிதி கோர, அவர்களுக்கு மாநிலச் செலவில் சட்ட உதவி வழங்குவது குறித்து அரசால் ஓராண்டிற்கு வழங்கப்பட்டுள்ள தொகை ரூ. 1,000 ஆகும். மேலும், உயர் நீதி மன்றத்தில் தங்களது வழக்குகளுக்கு ஆதரவாகச் சட்ட உதவி பெறுவதற்குக் காயம் அடைந்த தொழிலாளர்கள் தகுதி வாய்ந்தவர்கள். தொழிலாளர்களது இழப்பீடு குறித்து கூடுதல் ஆணையாளரின் ஆணைகளுக்கு எதிராக நிர்வாகத்தார் முறையிடும்போது, தொழிலாளரின் இழப்பீட்டிற்காக கூடுதல் ஆணையாளரின் முன்னிலையில், உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக ஏற்கெனவே வழங்கப்பட்ட நிதி உதவி அவர்களுக்கு மீண்டும் வழங்கப்படும்.

நடப்பாண்டில், சட்ட உதவி குறித்து ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள தொகை ரூ. 530 ஆகும்.

தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்கள் :—3 குழுக்கள் (சென்னை, கோயம்புத்தூர், மதுரையில்) செயலாற்றி வருகின்றன. அவை ஓய்வு பெற்ற நீதித் துறை அதிகாரியாலும், ஓய்வு பெற்ற தொழிலாளர் நல அதிகாரியாலும் நிர்வகிக்கப்படுகின்றன. இக்குழுக்கள் வசதி குறைந்த மக்களுக்குச் சட்ட உதவி வழங்குவது குறித்தத் திட்டம் ஒன்றினை உருவாக்குவதில் எழுந்த பொதுக் கேள்விக் கூறுகளை ஆய்வு செய்யும் பொருட்டு, நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழுவால் செய்யப்பட்ட பரிவுரைகளை ஒட்டி, அரசால் இக்குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. இக் குழுக்கள், தொழிலாளர்களது முறையீடுகளை நன்கு அறிந்து கொண்டு, அவர்கள் மீது அனுதாபம் காட்டியும், அவர்களது குறைகளைக் களைவது குறித்து அவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறையையும், தொழிலாளர்களுக்கென்று இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்கள், சம்பந்தப் பட்ட பொருட்கள் ஆகியவற்றின்கீழ் நிவாரணம் பெறுவதற்காக அணுக வேண்டிய முறைகளையும் அவர்களுக்கு எடுத்துக் கூறுகிறது.

[1977 ஆகஸ்ட் 11

**தமிழ்நாடு தொழிலாளர் சத்துணவுத் திட்டம்:—** மாநிலத்திலுள்ள தொழிற்சாலையில் பணி புரியும் தொழிலாளர்களது குடும்பங்களின் நலன் குறித்து, கேர் (CARE) உதவியுடன் (தமிழ்நாட்டில்) சென்னையில் இத் தொழிலாளர் சத்துணவுத் திட்டத்தைச் செயற்படுத்தியதில் தமிழ் நாடே முன்னோடி மாநிலமாக உள்ளது. இதனால் பயன் அடைந்தவர்கள் தொழிலாளர்களது குடும்பங்களிலுள்ள பள்ளி செல்வதற்கு முன்பான வயதுள்ள குழந்தைகளும், மகப் பேற்று நிலையில் சத்துக் குறைவாக இருக்கும் தொழிலாளர்களது மனைவி மார்களும் ஆவர்.

இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட (தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய நல நிலையங்கள் உள்பட) 63 நிலையங்களைப் பொறுத்த மட்டில், தற்போது 21,654 பேர் பயன் அடைந்துள்ளனர். தற்போதுள்ள தொழிலாளர் சத்துணவுத் திட்டத்துடன், ஒருங்கிணைந்த சுகாதாரப் பணி முனைப்புத் திட்டத்தைச் செயற் படுத்துவதன் அவசியம் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. அதனால், வழங்கப்படும் சத்துணவுடன், மருத்துவச் சோதனையையும் பெற்று இத் தொழிலாளர்கள் பயனடைகிறார்கள்.

**குழந்தைகள் தொழிலில் ஈடுபடுவதைக் களைதல் :—** இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பல்வேறு தொழில்கள், தொழிற்சாலைகளில் பணிபுரியும் குழந்தைத் தொழிலாளர்களது எல்லாப் பிரச்சனைகளையும் பற்றி அறிய ஓர் ஆழமான ஆய்வு நடத்தும் பொருட்டு, வருவாய் வாரியத்தின் முதுநிலை உறுப்பினர், திரு. அர்பன்ஸ் சிங், ஐ. ஏ. எஸ். அவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டார். பின்வரும் பொருள்கள் குறித்து, அவ்வுறுப்பினர் தனது பரிந்துரைகளைப் பணிந்தனுப்பியுள்ளார்.

(1) சிறியோர்க்கு வேலை கொடுக்கும் நடைமுறையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள்.

(2) அவர்களுக்கு தகுந்த, மாறுபட்ட வேலைவாய்ப்பு/மறு வாழ்வு வழங்குதல்.



1977 ஆகஸ்ட் 11]

(3) ஒரு முறைமாற்றில் பள்ளிக்குச் செல்லுமாறு செய்து, அவர்கள் வீட்டிலேயே மேற்கொள்ளும் பணிக்கு வசதிகளை வழங்க வழிவகை செய்தல்.

(4) 14 ஆண்டு முடிவடைந்த சிறியோர்களின் வேலைப் பளுவைக் குறைத்தல்.

உறுப்பினரின் அறிக்கை, அரசின் பரிசீலனையில் உள்ளது.

**தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம்:—** 1976-77 ஆம் ஆண்டில், தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம் பின்வரும் பயிற்சிகளை நடத்தியது.

| பயிற்சியின் பெயர். | பயிற்சியின் எண்ணிக்கை. | கால அளவு. | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 தொழில் சங்கத் தலைமையில் வளர்ச்சிப் பயிற்சி. | 3 | 3 திங்கள் | 74 |
| 2 பல்துறை அதிகாரிகளுக்கான நினைவூட்டுப் பயிற்சி. | 2 | 4 வாரங்கள் | 24 |
| 3 தமிழ் நாட்டிலுள்ள போக்கு வரத்துக் கழகத்தின் அதிகாரிகளுக்கான நினைவூட்டுப் பயிற்சி. | 1 | 3 நாட்கள் | 20 |
| 4 பொதுத்துறை, தனியார்துறை நிறுவனங்களிலுள்ள தொழிலாளர் நல அதிகாரிகளுக்கான மறு பயிற்சி. | 1 | 6 வாரங்கள் | 14 |
| 5 விம்கோ தொழிற்சாலையில் பாதுகாப்புப் பயிற்சி. | 1 | 3 நாட்கள் | 21 |
| 6 நிர்வாகப் பயிற்சியாளர்களுக்கான தொழிலாளர் நலச் சட்டங்களில் பயிற்சி. | 1 | 2 நாட்கள் | 39 |





**கைத்தறிப் பணியாளர்களிடம் நிலவும் நிலைமைகளை ஆய்வு செய்ய மாநில அளவிலான குழுவை அமைத்தல்.**

1976 ஆம் ஆண்டு மே திங்களில், கைத்தறித் தொழிற்சாலைகளில் பணியிலிருக்கும் நெசவாளர்களின் பணிபுரியும் சூழ் நிலைமைகள், அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம், பணிப் பாதுகாப்பு ஆகியவற்றை ஆய்வு செய்ய குழு ஒன்று அமைக்கப் பட்டது. அவர்கள் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு சிறப்புச் சட்டம் தொடர்பாகவும் இக்குழு அறிக்கையைத் தாக்கல் செய்யலாம்.

நெசவாளர்களைப் பதிவு செய்து கொள்ளுதல், சொத்துக்களுக்கு உரிமம் அளித்தல், வேலை நேரத்தை நிர்ணயித்தல், விடுமுறைகள், ஊதியத்துடன் விடுமுறை, நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் மற்ற சட்டங்களையும் அவர்களுக்காகப் பயன்படுத்துதல் முதலியவற்றைச் செய்தல் மூலம் அவர்களது பணி சூழ்நிலைமைகளைச் செயல்படச் செய்ய சிறப்புச் சட்டம் இயற்றப்படவேண்டும் என்று இக்குழு பரிவுரை செய்தது. இக்குழுவின் பரிவுரைகள் அரசின் பரிசிலனையில் உள்ளன.

**சமூகப்—பொருளாதார ஆய்வு.**

மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்கள், பீடித் தொழிலாளர்கள், தோல் பதனிடுவோர் போன்ற நிறுவனமாக அமைக்கப் படாத பிரிவினரான அத்தொழிலாளர்களின் வாழ்க்கை, பணி சூழ்நிலைமைகளை உயர்த்த, பொருத்தமான சமூக நலச் சட்டங்களை உருவாக்கும் நோக்கில், அரசு, மதிப்பீடு—பயன்முறை ஆய்வுத் துறை இயக்குநரகத்தின் கீழ், நேரடிப் புலனாய்வாளர்களை நியமித்து, சமூக—பொருளாதார ஆய்வு செய்ய அனுமதி வழங்கியுள்ளது.

**எடைகள்—அளவுகள் :—**

தமிழ்நாடு, 1958-ஆம் ஆண்டு எடைகள்—அளவுகள் (தீவிரப் படுத்தல்) சட்டத்தின் விதித்துறைகளின்கீழ், தொழிலாளர் துறை ஆய்வாளர்கள் (இன்ஸ்பெக்டர்கள்) தொழிலாளர் துணை ஆய்வாளர்கள் (டெபுடி இன்ஸ்பெக்டர்கள்) உதவி ஆய்வாளர்கள் (அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர்கள்) ஆகியோரால்,

[1977 ஆகஸ்ட் 11

தொழிலாளர் நலத் துறையின் துணை ஆணையாளராக உள்ள எடைகள் அளவுகளின் கட்டுப்பாட்டு அதிகாரியின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ், தமிழ்நாடு மாநிலத்திலுள்ள எடைகள்—அளவுகள் தரங்களைத் தீவிரப் படுத்துவது செயற் படுத்தப் பட்டது.

இத்துறை, எடைகள் -அளவைகள் முதலியவற்றைப் பயன் படுத்தும்போது செய்யப்படும் ஒழுங்கீனங்களை முறையான மேற் பார்வைகள், திடீர் மேற்பார்வைகள், அடிக்கடி திடீர் சோதனைகள் ஆகியவற்றை மேற்கொள்வதன் மூலம் ஒழிக்க முயற்சிகள் மேற் கொண்டுள்ளது.

1976 ஆம் ஆண்டில், எடைகள்—அளவைகள் சட்டத்தின் விதித் துறைகள், அதிலுள்ள விதிகள் ஆகியவற்றை மீறியதற்காக 16,597 வழக்குகள் தொடரப்பட்டன. தாக்கல் செய்யப்பட்ட 16,597 வழக்குகளில், 14,645 வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டு 7,93,820 ரூபாய் அபராதமாகப் பெறப்பட்டது. 1975 ஆம் ஆண்டில், 16,077 வழக்குகள் தொடரப்பட்டு அவற்றுள் 11,682 வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டு 4,17,390 ரூபாய் அபராதமாகப் பெறப் பட்டது.

1976 ஆம் ஆண்டில், வில்லைக் கட்டணத்தின் மூலம் 27,01,458.95 ரூபாய் (உரிமை மாற்றுக் கட்டணம் உட்பட) வசூலிக்கப்பட்டது. ஆனால், 1975 ஆம் ஆண்டில் 23,69,731.97 ரூபாய்தான் வசூலிக்கப் பட்டது.

**1976** ஆம் ஆண்டில் 622 வணிக உரிமங்கள், 347 பழுது பார்ப் போர் உரிமங்கள், 98 உற்பத்தி செய்வோர் உரிமங்கள் முதலியன சென்னை எடைகள்—அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியால் வழங்கப்பட்டன. இவ்வெண்ணிக்கையில், புதிதாக வழங்கப் பட்ட உரிமங்கள், பழைய உரிமங்களை மீண்டும் புதுப்பித்தது ஆகிய இரண்டும் அடங்கும்.



1977 ஆகஸ்ட் 11]

1974, 1975 ஆம் ஆண்டுகளின் ஒப்பு நோக்கு எண்ணிக்கைகளைக் கீழே காணலாம்.

| ஆண்டு. | பழுது பார்ப்போர். | வணிகர். | உற்பத்தி யாளர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1974 .. .. | 265 | 550 | 77 |
| 1975 .. .. | 277 | 541 | 80 |

வணிகர்கள், பழுதுபார்ப்போர், உற்பத்தி செய்வோர் ஆகி யோரிடமிருந்து உரிமக் கட்டணத்தின் மூலம் பெறப்பட்ட தொகை 43,315 ரூபாய் ஆகும்.

எடைகள்—அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி, மாவட்ட தலைமையிடங்களிலிருக்கும் தனக்குக் கீழுள்ள அதிகாரிகளுடன், இச்சட்டத்தின் விதித்துறைகளை முனைப்புடன் செயல்படுத்துவதை உறுதி செய்யும் நோக்கில் முறையான கூட்டங்களை நடத்தி வரு கிறார். அவ்வப்போது கூட்டுத் திடீர்ச் சோதனைகளும் மேற் கொள்ளப்படுகிறது. 1976 ஆம் ஆண்டில் 20,001 கூட்டுத் திடீர்ச் சோதனைகள் இம் மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, 2,617 வணிகர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது.

கிராமங்களில் எடைகள்—அளவைகள் சட்டத்தையும், அதன் விதிகளையும் மும்முரமாகச் செயற்படுத்த, கிராமங்களுக்குச் சென்று முறையான மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டன. அதிகாரிகள் 9,790 கிராம மேற்பார்வைகளை நடத்தி, 49,817 வணிகர்களைச் சோதனை செய்தனர்.

கூட்டுத் திடீர்ச் சோதனைகள், மும்முரமான மேற்பார்வைகள் ஆகியவற்றின் விளைவாக, 24,969 பல்வேறு உலோகங்களால் செய் யப்பட்ட பல்வேறு எடைக்கற்களும், 38,898 பல்வேறு கொள்ள ளவுள்ள அளவைகளும், 7,738 எடைபார்க்கும் கருவிகளும், 3,890 அளவைக் கருவிகளும் தவறான, குறைபாடுடைய அல்லது மறு பரிசிலனை செய்யப்படாத இனங்கள் என்று கருதப்பட்டு பறிக்கப்பட்டன. பறிக்கப்பட்ட பொருட்கள் நீதிமன்ற வழக்கிற்காக வைத்திருக்கப்பட்டு, அவை நீதிமன்றத்தின்

வழிமுறைப்படி திருப்பிக் கொடுக்கப்பட்டன. மற்ற பறிக்கப்பட்ட பொருட்களைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு எடைகள்—அளவைகள் செயற்படுத்துதல்) சட்டத்தின் விதி முறைகள், அதன் கீழ் செய்யப்பட்டுள்ள விதிகளை ஒட்டி அவற்றை அரசிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

## இணைப்பு

தொழிலாளர் சட்டங்களின்கீழ் உள்ள நிறுவனங்கள், தொழிலாளர்களின் எண்ணிக்கை.

| ஆண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | வேலையிலிருப்போர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **I. தொழிற்சாலைகள் சட்டம், 1948—** | | |
| 1975 .. .. .. | 7,408 | 4,99,672 |
| 1976 .. .. .. | 8,196 | 5,04,899 |
| **II. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947—** | | |
| 1976 .. .. .. | 2,16,803 | 2,19,621 |
| 1977 .. .. .. | 2,17,685 | 2,21,860 |
| **III. தமிழ்நாடு உணவகங்கள் சட்டம், 1958—** | | |
| 1976 .. .. .. | 20,173 | 65,151 |
| 1977 .. .. .. | 20,497 | 66,313 |





| ஆண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | வேலையிலிருப்போர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **IV. மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951—** | | |
| 1975 .. .. .. | 370 | 87,877 |
| 1976 .. .. .. | 404 | 88,767 |
| **V. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம், 1961—** | | |
| 1975 .. .. .. | 1,325 | 48,320 |
| 1976 .. .. .. | 1,358 | 48,770 |
| **VI. வணிக ஒன்றியங்கள் சட்டம், 1925—** | | |
| 1976 .. .. .. | 2,342 | |
| 1977 .. .. .. | 2,429 | |

## தேசிய வேலைவாய்ப்புப் பணி.

1. வேலைவாய்ப்புகள்.—கிடைக்கக்கூடிய பணிகளை தேடுவோருக்கு அவற்றை முடிந்தவரைச் சமமாகவும், முறையாகவும் பகிர்ந்தளிக்க தேசீய வேலைவாய்ப்புப் பணியின்கீழ் வேலைவாய்ப்பகங்கள் உருவாக்கப்பட்டன. நாட்டில் இன்று 575 வேலை வாய்ப்பகங்கள் உள்ளன.

தமிழ் நாட்டில், 17 மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களும், 8 உதவி வேலைவாய்ப்பு அலுவலகங்களும், 2 சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்களும் உள்ளன. இந்தச் சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இரண்டில், ஒன்று, உயர் தகுதி வாய்ந்தவர்களுக்காகவும், மற்றொன்று உடல் ஊனமுற்றோர்களுக்காகவும்

ஏற்படுத்தப்பட்டது. சென்னை, மதுரை, அண்ணாமலை பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பல்கலைக் கழக வேலைவாய்ப்புச் செய்தி—வழிகாட்டும் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. 1976 ஏப்ரல் முதல் 1977 மார்ச் வரையிலான காலப் பகுதியில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் செய்த செயல் முறைகளைக் கீழே காணலாம்:—

| வரிசை எண்ணும் விவரமும். | 1976–77 ஆம் ஆண்டு (1976 ஏப்ரல் முதல் 1977 மார்ச் வரை.) |
|---|---|
| 1 பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை. | 3,73,784 |
| 2 பணியில் அமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை. | 33,860 |
| 3 அறிவிக்கப்பட்ட காலி இடங்களின் எண்ணிக்கை. | 52,855 |
| 4 வேலைவாய்ப்பகங்களைப் பயன்படுத்திய வேலையிலிருப்போர் சராசரி எண்ணிக்கை. | 1,046 |
| 5 மற்றவர்கள் (தனிப்பட்டோர் பிரிவு) .. | 232 |
| 6 மார்ச்சுத் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி பதிவில் உள்ளவர்கள் எண்ணிக்கை. | 8,84,047 |

வேலை தேடுவோர்க்கு வேலை தேடித்தரும் முறையில், வேலை வாய்ப்பகங்கள், சாதாரண வேலை தேடுவோர்க்கு, வேலைக்கு வழி காட்டுதல், பதிவு செய்துள்ள உடல் ஊனமுற்றோர்க்கு வேலைக்கு வழிகாட்டுதல் போன்ற பல்வேறு பணிகளையும் மேற்கொண்டுள்ளன. வேலை வாய்ப்பகங்களின் பல்வேறு செயல் முறைகளும் விவரமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.



2. உடல் ஊனமுற்றோர்க்கு சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம்.—உடல் ஊனமுற்றோர்களின் வேலை தொடர்பான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், சென்னை மாநகரில் ஒரு சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம் செயல்பட்டு வருகிறது. மேலும் இரண்டு அலுவலகங்கள் மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக, முறையான வேலைவாய்ப்பகங்களின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. 1976-77 ஆம் ஆண்டில், இந்தச் சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகங்களால் செய்யப்பட்ட பணிகள் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

| வரிசை எண். | விவரம். | குருடர். | செவிடர். | ஊன முற்றோர். | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | பதிவு செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை. | 177 | 136 | 2,160 | 2,473 |
| 2 | பணியிலமர்ந்தோர் எண்ணிக்கை | 21 | 27 | 620 | 668 |
| 3 | 31-3-1977 நாள் நிலவரப்படி பதிவில் உள்ளவர்கள். | 541 | 453 | 7,033 | 8,027 |

3. தொழில்-நிர்வாக வேலைவாய்ப்பு அலுவலகம்.—இவ்வலுவலகம் தொழில் பட்டம் பெற்றவர்கள், நிர்வாக—உயர் இனப் பதவிகளைத் தேடுவோர் போன்ற மிகைத் தகுதி பெற்றவர்களின் வேலை தொடர்பானத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, சென்னையில் செயல்பட்டு வருகிறது. இவ்வலுவலகம் 5,816 உயர் தகுதி பெற்றவர்களைப் பதிவு செய்து, அவர்களில் 375 பேர்களை ஆய்வு ஆண்டில் பணியிலமர்த்தியது. 31—3—1977 ஆம் நாள் நிலவரப்படி, 10,459 பேர்கள் பதிவில் உள்ளனர். இவ்வலுவலகம், காலியிடம், தொழிலாளர் வேலையிடம் ஆகியவற்றைத் தெரிவித்து, மாநில தலைமை வேலைவாய்ப்பு அலுவலகமாகவும் செயல்பட்டு வருகிறது.

[1977 ஆகஸ்ட் 11

4. **பல்கலைக்கழக வேலைவாய்ப்புச் செய்தி—வழிகாட்டும் பிரிவு.**—பல்கலைக் கழகங்களின் பணி புரிய, தமிழ்நாட்டில் 3 பல்கலைக் கழக வேலைவாய்ப்புச் செய்தி—வழிகாட்டும் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை, அண்ணாமலை நகர் ஆகிய மூன்றிடங்களில் இவை உள்ளன. மாணவர்களுக்கு வழிகாட்டுவதே இந்தப் பிரிவுகளின் முக்கியச் செயலாகும். விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்வதோடு, தனிப்பட்டோர் பிரிவுகளால் அறிவிக்கப்பட்டதும், தொழில்—நிர்வாக வேலைவாய்ப்பு அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டதுமான தகுந்த வேலையிடங்களில் அவர்களை நியமிக்கும் பணியையும் செய்கின்றன. ஆய்வு ஆண்டில், இந்தப் பிரிவு 1,466 பேர்களைப் பதிவு செய்து, அவர்களில் 73 பேர்களை வேலையில் அமர்த்தியது. 1977 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இறுதியில், 2,880 பேர்கள் இந்தப் பிரிவின் பதிவில் உள்ளனர்.

5. **தொழில் வழிகாட்டுதலும், வேலைவாய்ப்பு ஆலோசனையும்.**—நீலகிரி, தருமபுரி, புதுக்கோட்டை மாவட்டங்களைத் தவிர, தமிழ்நாட்டிலுள்ள மற்ற எல்லா மாவட்டங்களிலும் தொழில் வழிகாட்டும் பிரிவுகள் செயல்படுகின்றன. தொழில் வழிகாட்டும் பிரிவின் முக்கிய வேலை, தொழில் பற்றிய செய்திகள், பயிற்சி பற்றிய செய்திகள், வாழ்க்கைத் தொழில் பற்றிய செய்திகள், வேலைவாய்ப்புகள் பற்றிய செய்திகள், பணியில் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கான வசதிகள் முதலிய தகவல்களைப் பரப்புவதாகும். விண்ணப்பதாரர்களில் ஒரு மொத்தமான கூட்டத்தினர்க்கு வழிகாட்டுதல், தனிப்பட்டோருக்கு வழிகாட்டுதல் ஆகியனவும் தொழில் வழிகாட்டும் பிரிவுகளின் முக்கியப் பணிகளாகும். மேலும் இளைஞர்களின் நன்மைக்காக, குறித்த காலத்திற்கொருமுறை, காலாண்டிற்கு ஒருமுறை தகவல் வெளியீட்டிதழ்களும் இந்தப் பிரிவுகளால் வழங்கப்படுகின்றன. 1976 மார்ச்சுத் திங்கள் முதல், 1977 மார்ச்சுத் திங்கள் வரையிலான காலப் பகுதியில் தொழில் வழிகாட்டும் பிரிவுகளால் பயனடைந்தவர்



1977 ஆகஸ்ட் 11]

களின் எண்ணிக்கை கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண், விவரம். | 1976 ஏப்ரல் திங்கள் முதல் 1977 மார்ச்சுத் திங்கள் வரை. |
|---|---|
| (1) | (2) |
| 1 மேற்கொள்ளப்பட்ட குழு வழிகாட்டித் திட்டங்களின் எண்ணிக்கை .. .. | 3,863 |
| 2. வழிகாட்டும் தகவல்கள் கொடுக்கப்பட்டோர் எண்ணிக்கை .. .. | 19,694 |
| 3. பதிவின் போது வழிகாட்டுதலைப் பெற்றோர் எண்ணிக்கை .. .. | 31,792 |
| 4. தற்போதையப் பதவியில் மறுபதிவு செய்யப்பட்ட பழைய தேர்வுகளின் எண்ணிக்கை .. .. | 5,060 |
| 5. கலந்துரையாடல்களில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை .. .. | 1,01,697 |
| 6. வேலைகள் பயிற்சி/வேலைபயிலும் பயிற்சியில் வழிகாட்டப்பட்டு பணியில் அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை. | 19 |
| 7. பயிற்சி/வேலை பயிலும் பயிற்சிக்கு வழிகாட்டப்பட்டு பணியில் அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை .. | 1,529 |
| 8. பயிற்சி/வேலை பயிலும் பயிற்சி நிலையை அடைவதில் உதவி பெற்றுள்ளோரின் எண்ணிக்கை .. .. | 12,676 |
| 9. உதவித் தொகை/மேற்படிப்பிற்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை .. .. .. | 12 |

வேலைவாய்ப்பு—பயிற்சி இயக்குநர் அலுவலகத்தில் உள்ள மாநில வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவு, மாவட்டங்களில் வாழ்க்கை தொழில் வழிகாட்டிப் பிரிவுகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து கண்காணித்து வருகிறது. மறு ஆய்வுக் காலத்தில் 31 தொழிற் பயிற்சி நிலையங்களிலும், கிண்டி மாதிரிப் பயிற்சி நிலையத்திலும் விருப்பப் பார்வைப் போட்டிகள் நடத்தப்பட்டன. வாழ்க்கைத் தொழிலுக்கான பொருட்காட்சிகள் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டன. ஷெட்யூல்டு வகுப்பினர்/பழங்குடியினர் விண்ணப்பதாரர்களின் நலனுக்காக அவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கவும், பயிற்சி/வேலை பயிலும் பயிற்சி வசதிகள் பெருக்கவும் தனிக்குழு ஒன்று மாநிலத் தொழில் வழிகாட்டிப் பிரிவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் பழங்குடியினர் பயனுக்காக இரண்டு துணை வேலை வாய்ப்பு அலுவலகங்களைத் தொடங்க செயற்குறிப்பில் உள்ளது. இந்த நிலையங்கள், வட ஆற்காடு மாவட்டத்தில் ஆலங்காயத்தில் ஒன்றும், தென்னாற்காடு மாவட்டத்தில் சங்கராபுரத்தில் ஒன்றும் அமைக்கப்படும். இந்த அலுவலகங்கள் அமைக்கப்பட்ட பிறகு, பழங்குடியினர் விரைவில் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. "இனிமேல்" என்னும் தலைப்பின்கீழ், தகவல் அறிவிப்புகளின் 2,25,000 படிகள் அச்சிடப்பட்டு, அவைகளை எஸ்.எஸ்.எல்.ஸி. புத்தகங்களுடன் பள்ளிகளுக்கு வழங்குவதாக அரசு தேர்வு இயக்குநருக்கு வழங்கப்பட்டன. கணிதயியல் பட்டதாரிகளுக்காக 'வாழ்க்கைத் தொழில் வாய்ப்புகள்' குறித்த கையேட்டின் 5,000 படிகள் அச்சடிக்கப்பட்டு களப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டன. விமானப் போக்குவரத்துத் தொழில் குறித்த கையேட்டின் 50,000 படிகள் அச்சடிக்கப்பட்டு களப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டன. இத்துறையின் நடவடிக்கைகள் தொடர்பாக பல்வேறு சுவரொட்டிகள், விளக்கப்படங்கள் முதலியவற்றை இந்த இயக்குநர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டுத் திரை அச்சிடும் பிரிவு அச்சடித்துள்ளது.

**6. வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் திட்டம்.**—தமிழ் நாட்டில் இந்த கால அளவில் மறுஆய்வின்படி வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் திட்டம் தொடர்பான புள்ளிவிவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—



| முடிவடைந்த காலாண்டு. | ... அனுப்பப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை. | ...தில் அனுப்பிய வர்களின் எண்ணிக்கை. | ...பதில் அனுப்பிய வர்களின் சதவீதம். | நியமனத்தின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| **அரசுத்துறை :** | | | | |
| 31—3—1976 .. .. | 6,351 | 5,915 | 93·1 | 10,26,320 |
| 31—3—1977 .. .. | 6,904 | 6,352 | 92·0 | 10,82,406 |
| **தனியார் துறை :** | | | | |
| 31—3—1976 .. .. | 10,574 | 9,492 | 89·8 | 6,36,100 |
| 31—3—1977 .. .. | 9,512 | 8,646 | 90·8 | 5,97,883 |

**7. புள்ளிவிவரக் கணிப்புப் பிரிவு.**—வேலைவாய்ப்பு-பயிற்சி இயக்குநர் அலுவலகத்தின் மாநில வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் பிரிவில் செயல்படும் புள்ளிவிவரக் கணிப்புப் பிரிவு, வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் விவர அறிக்கைகளை அந்தக் கால அளவில் மறு ஆய்வில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலக புள்ளிவிவரங்கள் ஆகியவற்றை பல்வகைப்பட்ட இயந்திர முறையில் அட்டவணைப்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளது. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செம்மையாக நிறைவேற்றுவதில் திறமையை அதிகரித்துக்கொள்ளவும், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் முறைகேடுகள் நிகழ்வதைத் தடுக்கவும், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் புள்ளிவிவரங்களை படிப்படியாக கணக்கிடக் கருதியுள்ளது. தொடக்கத்தில் சென்னை, செங்கற்பட்டு மாவட்டம் ஆகிய இடங்களில் உள்ள ஒன்பது வேலைவாய்ப்பு அலுவலகங்களில் புள்ளிவிவரங்களைக் கணக்கிடக் கருதப்பட்டுள்ளது. முதல் ஆண்டில் இத்திட்டத்திற்கான செலவு ரூபாய் 9.90 இலட்சம் ஆகும் என்று மதிப்பிடப்பட்டது. ஆண்டு தொடர் செலவு ரூபாய் 5.93 இலட்சம் ஆகும் என்று மதிப்பிடப்பட்டது. மாநில சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் முதல் துணை மதிப்பீடுகளில், 1977-78 இன் ஆறு திங்களுக்கு இத்திட்டத்திற்காக ரூபாய் 5.83 இலட்சம் மதிப்புள்ள தொகை ஒன்று வழங்கப்படும்.

கணக்கிடுதல் முறையினால் பணியாளர் தொகுதியில் ஆள் குறைப்பு எதுவும் ஏற்படாது. மற்றொரு விதத்தில், ஒன்பது வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல் பதிவேட்டில் உள்ள வேலைவாய்ப்பற்றிருப்போருக்கு மிகுந்த கவனத்துடன் சரியான தகவலைக் கொடுக்கிறது.

**8. ஆழ்ந்த ஆய்வுக் குழு.**—இயக்குநர் அலுவலகத்தின் வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆழ்ந்த ஆய்வுக்குழு, பல்வேறு விரிவான ஆய்வுகளையும், இத்துறைக்குச் சம்பந்தப்பட்ட ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளது. நாட்டிடை தொழிலாளர் நல அமைப்பின் பல்வேறு பரிந்துரைகள்/முடிவுகள் குறித்து குறிப்புகளையும் இந்த ஆழ்ந்த ஆய்வுக்குழு கொடுத்துள்ளது. இளைஞரின் பயனுக்காக மறு ஆய்வின்கீழ் இந்தக் கால அளவில் கீழ்க்கண்ட வாழ்க்கைத் தொழில் வழிகாட்டி கருத்தரங்குகள் நடத்தப்பட்டன:—



1. ஓரளவு வரட்சித் தன்மை வாய்ந்த வெப்பமண்டலம் குறித்த வேளாண்மை திட்டத்தில் அறிவியல் பட்டதாரிகளுக்கான தொழில்.

2. தொழு நோய், காச நோய் ஆகிய களங்களில் மருத்துவ பட்டதாரிகளுக்கான தொழில்.

3. எழுத்துத் திறமை, பத்திரிகைத் துறை ஆகியவற்றில் தொழில்.

4. அரிசன வகுப்பினர்/பழங்குடியினரைச் சேர்ந்த மாணவர்களுக்கான தொழில், வேலைவாய்ப்பு வழிகாட்டி (6 பிற மாவட்ட நிலையங்களிலும் அதே கருத்தரங்கை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.)

5. தொழில் நுட்ப தகுதி பெற்ற அரிசன வகுப்பினர்/பழங் தொழில் வழிகாட்டி கருத்தரங்கு.

6. செயல் முறை அறிவியல் ஆராய்ச்சி களத்தில் தொழில், இந்த ஆண்டில், வேலைவாய்ப்பு கொள்கைகள், ஆட்படை ஊற்றம் குறித்த முன்னறிவு, ஏனைய கொள்கையின் வேலைவாய்ப்புக் கூறுகளை பகுப்பாய்வு செய்தல் ஆகியவற்றை வகுக்க மாநில இயக்குநர் அலுவலகத்தில் ஆட்படை ஊற்ற ஆராய்ச்சி குழு ஒன்றை அமைக்க கருதப்படுகிறது.

**9. மாநில வாழ்க்கைத் தொழில் தகவல் அறிவிப்புப் பிரிவு.**—வேலைவாய்ப்பு—பயிற்சி இயக்குநர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள வாழ்க்கைத் தொழில் பிரிவு பணி வகைகளை மேற்கொள்கிறது.

1. வாழ்க்கைத் தொழில் ஆராய்ச்சி, பகுப்பாய்வு.

2. வாழ்க்கைத் தொழில் குறித்த துண்டு வெளியீடுகளை அச்சிடுதல்.

3. புது டில்லி, வேலைவாய்ப்பு, பயிற்சி இயக்குநர் அலுவலகம் ஒப்படைத்துள்ள வாழ்க்கைத் தொழில் குறித்த துண்டு வெளியீடுகளை, திருத்தியமைத்தல்.

4. வாழ்க்கைத் தொழில் நிலவரம் பற்றி குறிப்பு, தொழில் குறித்த நூல் ஆகியவற்றைத் தயாரித்தல், வாழ்க்கைத் தொழில் குறித்த துண்டு வெளியீடுகளை கள அலுவலகங்கள், நூலகங்கள் முதலியனவற்றிற்கு வழங்குதல்.

**10. இயக்குநர் அலுவலகத்தில் பணியாளர் பயிற்சிப் பிரிவு.**—வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பின்பற்ற வேண்டிய அலுவலக நடைமுறை, பணிகள் ஆகியவற்றில் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தக்கால அளவில் மறு ஆய்வின்படி, 4 பணியாளர் பயிற்சி வகுப்புகள் இப்பிரிவால் நடத்தப்பட்டன. பயிற்சி வகுப்பில் 67 பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 1976, அக்டோபர் திங்களிலிருந்து 1976, டிசம்பர் திங்கள் வரை, முன்னாள் இராணுவத்தினரை பொதுத் துறைகளிலும், தனியார் துறைகளிலும் பணியில் அமர்த்துவதற்கான தனி நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கையின் பயனால், 31—12—1976 ஆம் நாளுக்குள் வரையறுக்கப்பட்ட இலக்கு 1506 என்றிருக்க, மாறாக 1970 முன்னாள் இராணுவத்தினர் பணியில் அமர்த்தப்பட்டனர்.

**11. துறையின் வேலைவாய்ப்புப் பிரிவில் ஆய்வுப் பிரிவு:**—தமிழ் நாட்டில், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலையை மதிப்பிடவும், வேலைவாய்ப்பு அலுவலகங்களின் அலுவல்களை மேம்படுத்துவதற்கு உரிய பரிகார நடவடிக்கையை தெரிவிப்பதற்கும் விரிவான ஆய்வை நடத்துவதற்கு இயக்குநர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள இப் பிரிவு பொறுப்புள்ளதாகும். ஆய்வுக்கால அளவில், இயக்குநரும், இந்த இயக்குநர் அலுவலகத்தின் பிற அதிகாரிகளும் 21 வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ஆய்வு செய்தனர்.

**12. சென்னையிலுள்ள வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகத்தின் பணிகள்:**—இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகப் பிரிவு, பர்மா, மற்றும் ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. ஸ்ரீலங்கா அகதிகளின் மறுவாழ்விற்காக மண்டபம் என்னுமிடத்தில் துணை-வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்றும் வழிகாட்டி குழு ஒன்றும் செயல் படுகின்றன.





ஆய்வுக் காலத்தில் வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகப் பிரிவு தொடர்பான புள்ளிவிவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| விவரங்கள். | அகதிகள். | |
|---|---|---|
| | பர்மா. | ஸ்ரீலங்கா. |
| (1) | (2) | (3) |
| 1. இந்தக் கால அளவில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை. | 1,243 | 4,944 |
| 2. இந்தக் கால அளவில் பணியில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை .. .. | 389 | 352 |
| 3. 1977, மார்ச் திங்கள் 31-ம் நாள் நிலவரப்படி செயல் பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை .. .. | 2,354 | 10,506 |

பர்மா/ஸ்ரீலங்கா அகதிகள் விண்ணப்பதாரர்களுக்கான பயிற்சி வசதிகளை இந்தப் பிரிவும் வழங்குகிறது. வியட்நாம் அகதிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய தேவையான மறுவாழ்வு உதவித் தன்மையை மதிப்பிடுவதற்கு தனி முயற்சிகளை இந்தப் பிரிவு மேற்கொண்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் குடியிருக்கும் வியட்நாம் அகதிகளைப் பொறுத்தமட்டில், அவர்களின் கற்றுக்கொள்ளும் ஆர்வம் முதலியனவற்றை மதிப்பிடவும், அவர்களுக்கு எந்த அளவிற்கு உதவி நல்க முடியும் என்பதைக் கண்டறியவும் ஆய்வு ஒன்றும் நடத்தப்பட்டது.

13. உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியம் மற்றும் **உடல் ஊன முற்றோருக்கான திட்டம்:**—உடல் ஊனமுற்றோர்களின் பிரச்சனைகளின் அளவை அறிதல், புதுவாழ்வுக் குறித்த அரசுடனும், ஏனைய நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு பல்வேறு நல்வாழ்வு திட்டங்களை வகுத்து செயல்படுத்துதல் ஆகிய பணிகளில் இயக்குநர் அலுவலகத்துடன் இணைக்க ஈடுபடுகிறது. ஆய்வுக் காலத்தில், 681 உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்களை இந்த வாரியத்தால் பணியில் அமர்த்த முடிந்தது. தனி நடவடிக்கை ஒன்று எடுக்கப்பட்டதன் பயனால், பல்வேறு தொழில் பயிற்சி நிலையங்

களில் 185 உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்காகச் சேர்க்கப்பட்டனர். சொந்தத்தில் தொழில் நடத்த, உடல் ஊன முற்ற விண்ணப்பதாரர்களுக்கு ரூபாய் 200 முதல் ரூபாய் 18,600 வரை அரசு உடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம், இந்த வாரியம், கடன் வசதிகளையும் அளித்துள்ளது. சென்னை மருத் துவக்கல்லூரியின் பொருட்காட்சிக் குழுவிடமிருந்து ரூபாய் 30,000 நன்கொடையை உடல் ஊனமுற்றோருக்காக மாநில வாரியம் பெற்றுள்ளது. ஆண்டுதோறும் இத்தொகையில் சேரும் வட்டியை, எளிய, உரிய உடல் ஊனமுற்ற நபர்களுக்கு செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட உறுப்புகள், சாதனங்கள் ஆகியவற்றை வழங்குவதற்காகப் பயன்படுத்திக்கொள்ளப்படும். ஆய்வுக்காலத்தில் இயலாமையுற்ற உலக விழாக்கள் சென்னை மாநகரத்திலும், அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டன. குருடர், முடம் நீக்குயியல் சார்ந்த ஊனமுற்றவர், செவிடர், மன வளர்ச்சி அடையாதவர், தொழுநோய் நீக்கப்பட்டவர் போன்ற ஐந்து தொகுதிகளின்கீழ் மிகத் திறமைவாய்ந்த உடல் ஊனமுற்ற பணியாளர்களுக்கும், உடல் ஊனமுற்றோரின் முனைப்பான வேலை கொடுப்போருக்கும் மாநில அரசு வழங்கும் பரிசுகள், நிம்கார் பரிசுகள் ஆகியவை இயலாமையுற்ற உலக விழாக்களில் வழங்கப்பட்டன. இந்த வாரியத்துடன் இணைக்கப் பட்டுள்ள புத்தகத்திற்கு அட்டை போடும் பயிற்சி பிரிவு புத்தகத்திற்கு அட்டை போடும் தொழில் 32 உடல் ஊனமுற்ற நபர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

**14. வேலைபயிலும் பயிற்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்கு தனிக் குழுவும் அதன் வளர்ச்சியும்.**—இயக்குநர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள இக்குழு, வேலைபயிலும் திட்டங்களிலும், 1961-ஆம் ஆண்டு வேலைபயில்வோர் சட்டத்திலும் பங்கேற்று 1973-ஆம் ஆண்டு வேலைபயில்வோர் (திருத்தம்) சட்டத்தின்கீழ் வேலைபயிலும் திட்டங்களை விரிவுபடுத்தியது.



31—3—1976, 31—8—1977 ஆம் நாளன்று நிலவரப்படி பணியில் அமர்த்தப்பட்ட பயிற்சி பெறுவோரின் புள்ளி விவரங்கள் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

I. தொழிற் பயிற்சி பெறுவோர்கள்.

(1961 ஆம் ஆண்டு சட்டம்)

| நாள் நிலவரப் படிக்கான கால அளவு. | பயிற்சி இடங்கள் அமையப் பெற்றவை. | | | பயன்படுத்தப்பட்ட பயிற்சி பெறும் இடம். | | | எய்தப்பெற்ற சதவிகிதம். |
|---|---|---|---|---|---|---|---|
| | பொதுத் துறை. | தனியார் துறை. | மொத்தம். | பொதுத் துறை. | தனியார் துறை. | மொத்தம். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 31—3—1976 | 2,207 | 5,967 | 8,174 | 2,124 | 6,198 | 8,322 | 102 |
| 31—3—1977 | 2,372 | 6,794 | 9,166 | 2,374 | 7,157 | 9,481 | 103 |

II. 1973 ஆம் ஆண்டு பயிற்சி பெறுவோர் (திருத்த) சட்டம்.

| ....நாள் நிலவரப்படிக் கான கால அளவு. | பயிற்சி இடங்கள் அமையப் பெற்ற இடம். | | | நிர்வாக பயிற்சிபெறுவோர். | | பயன் படுத்தப்பட்ட பயிற்சி பெறும் இடங்கள். | | | (தரம்) மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பட்டதாரி. | தொழில் நுட்பதாரி. | மொத்தம். | பட்டதாரி. | தொழில் நுட்பதாரி. | பட்டதாரி. | தொழில் நுட்பதாரி. | மொத்தம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 31—3—1977.. | 1,519 | 1,340 | 2,859 | 180 | 57 | 816 | 129 | 21,093 | 2,346 |



15. மாநில இயக்குனரகத்தில் உள்ள பொதுமக்கள் தொடர்பும்—விளம்பரப் பிரிவும்.—இவ்வியக்குனரகத்துடன் இணைக்கப்பட்ட விளம்பரப் பிரிவு, இத்துறையுடன் தொடர்புடைய பல்வேறு விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. மாவட்டங்களில் பல்வேறு பொருட்காட்சிகளை, வேலை வாய்ப்பு நிறுவனம்/தொழிற் பயிற்சி நிலையம் ஆகியவற்றில் நடத்துவதன் மூலம் தேவையான ஏற்பாடுகளில் இந்தப் பிரிவு பங்கு கொள்கிறது.

16. ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தின் வேலை வாய்ப்பு பணி திட்டம்:—வேலை வாய்ப்புத் திட்டப் பணிகளுக்காக ஐந்தாவது ஐந்தாண்டு திட்ட முழுமைக்கும் ரூ. 50 இலட்சம் திட்ட ஒதுக்கீட்டை அரசு அளித்துள்ளது. வேலை வாய்ப்பு பணிகளின் கீழ் வேலை வாய்ப்பு பணிகளை மிகுதியாகவும், நல்ல விதமாக செய்யவும், வேலை தேடுபவர்களுக்கும், வேலையிலிருப்பவர்களுக்கும் நல்ல பணியினை அளிப்பதும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகளின் முக்கிய குறிக்கோளாகும்.

1976-77 வரை ரூ 10.17 இலட்சங்களில் கீழ்க்காணும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அப்பணியினை அவர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள்.

1. மாவட்டங்களின் 1959 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பு நிறுவனங்களின் (கண்டிப்பாக காலியிடங்களை அறிவிக்க வேண்டும்) சட்டத்தை செயற்படுத்துவதற்கான பணியாளர் அமைப்பு.

2. மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரிகளை அதிகப்படுத்துதல், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்பவர்களை நியமித்தலும்.

3. மாவட்டங்களில் உதவி வேலை வாய்ப்பு அதிகாரிகளை அதிகப்படுத்துதல்.

4. பெரிய மாவட்டங்களில் ஆறு மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரிகள் பதவிகளை உதவி இயக்குநர்களாக உயர்த்துதல்.

5. மாவட்ட இயக்குனரகத்தின் பொது மக்கள் தொடர்பு, விளம்பரப் பிரிவு ஆகியவற்றை அமைத்தல்.

6. தொழில் நுட்ப வகைகள் தவிர ஏனையவற்றை கவனிப்பதற்கு சென்னை நகரத்தில் ஒரு வேலை வாய்ப்பு அலுவலகம் அமைத்தல்.

7. வேலை வாய்ப்பு நிறுவனங்களில் 32 இளைநிலை உதவி யாளர்கள் பதவிகளை உதவியாளர்களாக உயர்த்துதல்.

8. மாவட்டங்களில் இருக்கின்ற வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவுகளை அதிகப்படுத்துதல்.

**கைவினைஞர்கள் பயிற்சித் திட்டம்.**—பணிமனை நிலையின்கீழ் தொழிலில் கைவினைஞர்கள் நன்கு பயிற்சி பெற்றுள்ளனர். அதிக அளவில் தொழிற்சாலைகளை கொண்ட நாடுகளில் பயிற்சி அளிப்பது இவ்விதமாக உள்ளது. ஆனால் இன்னும் தொழில் மயமாக வளர்ச்சியடையும் இந்தியாவில் கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் வசதிகளைக் கொண்ட நிறுவனங்கள் வெகு குறைவாக உள்ளன. தொழில் வளர்ச்சியடைவதற்கு தொழில் நுட்ப பயிற்சி பெற்ற கைவினைஞர்களின் பெருகி வரும் தேவைகளை பூர்த்தி செய்ய, அனைத்து இந்திய அடிப்படையில் வரையறுக்கப் பட்ட தரத்துடன் இந்தத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. பயிற்சியை செம்மையாக அளிப்பதற்கு, இந்தத் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பணிமனைகளின் நிலைமைகள் மீண்டும் அபிவிருத்தி செய்யப்பட்டன. பயிற்சி திட்டத்திற்கு இந்தத் தொழிற் பயிற்சி / நிலையங்கள் முதுகெலும் பாக உள்ளன.

கைவினைஞர் பயிற்சி திட்டதின்கீழ், வேலைவாய்ப்பு பயிற்சி இயக்குனரகத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் கீழ்க்கண்ட பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன:—

1. தொழிற் பயிற்சி நிலையங்களில் நிறுவனப் பயிற்சி.

2. 1961 ஆம் ஆண்டு வேலை பயில்வோர் சட்டத்தின்கீழ் வேலை பயிலும் பயிற்சி.

3. தொழிற்சாலை ஊழியர்களுக்காக மாலை வகுப்புகள் (மாலை நேர வகுப்புகள்).





4. தொழிற் பள்ளிகளுக்கான முறைப்படுத்துதல் கோவை யின் கீழ் மானிய உதவி பெற்ற தனியார் தொழிற் பள்ளிகளில் கைவினைஞர்களை பயிற்சி அளித்தல்.

5. வேலையிழந்த பொற்கொல்லர்கள், மாதிரி அமைப்பாளர் கள், கைத்தறி நெசவாளர்கள் (பகுதி நேரம்) ஆகியோருக்காக குறிப்பிட்ட தொழில்களில் பயிற்சி.

**1. தொழிற் பயிற்சி நிலையங்கள்.**—தற்போது, பெண்களுக்கான ஒரு தொழிற் பயிற்சி நிலையம் உட்பட 31 தொழிற் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்களிலிருந்து ஆண்டுதோறும் சுமார் 7,000 கைவினைஞர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 29 பேர்களுக்கு பொறியியலிலும், 6 பேர்களுக்கு பொறியியல் இல்லாத பயிற்சியும் கொடுக்கப்படுகின்றன. இதில் சில தொழில் பயிற்சியின் கால அளவு ஒரு வருடமும், ஏனைய சில தொழில் பயிற்சிகள் இரண்டு வருடமும் கொண்டதாகும். நிலையப் பயிற்சியின் இறுதியில், அகில இந்திய தொழிற் தேர்வில் மாணவர்கள் கலந்து கொள்வர். இதில் வெற்றி பெற்றவர்கள், தேசிய தொழில் சான்றிதழ் பெற தகுதியுடையவராவார்கள்.

ஒவ்வொரு தொழிலும் உள்ள இடங்களில் 5 சதவீதம் பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளுக்காக ஒதுக்கப்படுகிறது. அரிசன வகுப்பினர்/ அரிசனப் பழங்குடியினருக்கு 18 சதவீத இடம் ஒதுக்கப் பட்டிருந்தபோதிலும், 1976-ல் 23.2 சதவீதம், 105 அரிசன பழங்குடியினர் உட்பட 1,576 பேர்கள் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1976 ஆம் ஆண்டில் 197 உடல் ஊனமுற்ற பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1976-77 ஆம் ஆண்டில் 31 தொழிற் பயிற்சி - நிறுவனங்கள்/நிலையங்களிலும் அனுமதிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை 10,216 ஆகும்; 1977-78 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 11,160 ஆகியது. ஆகவே, நடப்பு ஆண்டில் 944 கூடுதல் இடங்கள் ஏற்பட்டுள்ளன.

இம் மாநிலத்தில் தொழிற்பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் தரம் மிக உயரிய வகையைச் சேர்ந்ததாகும். ஏற்கனவே நடைபெற்ற 12 அனைத்திந்திய ஆண்டு திறனாய்வுப் போட்டியில், இம்மாநிலம் 6 போட்டிகளில் முதன்மை இடத்தைப் பெற்று வருகிறது. "சிறந்த மாநிலம்" என்பதற்கான பட்டத்தை

மும்முறை பெற்றுள்ளது; எஞ்சிய மூன்று ஆண்டுகளில் இடையிடையே வெற்றி பெற்றுள்ளது. நடப்பு ஆண்டில், தொழிற் பயிற்சி மாணவர்களுக்காக இயந்திரக் கம்மியர் (பொது மின்னணுயியல்) படிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அடையாறு மின்அணு தொகுதியில் இருக்கும் ஆய்வுக்கூட வசதிகளை பயன்படுத்திக்கொள்வதற்காக, இங்கு இந்த பாடப் பிரிவு வகுப்பு அமைக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 3.95 இலட்சம் செலவில் இந்தப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் ஆண்டுகளில் ஒவ்வொரு வருடமும் ரூ. 95,030 நிர்வாகச் செலவும் இந்தப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சியின் கால அளவு இரண்டு வருடங்கள். இந்தப் பிரிவுக்கு ஒவ்வொரு வருடமும் 16 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். முன்னமே தொழிற்சாலையில் பணியிலிருக்கும் பணியாளர்களின் தேவைகளுக்கேற்ப கூடுதல் பயிற்சி பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வருடம், அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் "இந்தியன் ஸ்டேண்டர்ஸ்" பொறியியல் வரைபடங்கள் படித்தல் முதலிய பாடப் பிரிவுகளும் ஆரம்பிக்கப் பட்டன. இந்தப் பாடப்பிரிவின் காலம் 3-லிருந்து 4 வாரங்களாகும். 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை, பல்வேறு தொழிற்சாலைகளின் உதவியால் 37 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

2. **வேலை பயில்வோர் சட்டம்.**—தொழிற்சாலைகளின் தேவையை பூர்த்தி செய்ய கைவினைத் தொழிலில் போதிய அளவுக்குப் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு, தேசிய நிலையில் அவர்களது மொத்த திறமையை வளர்க்கும் பொருட்டு இந்தியா முழுவதும் ஒரே சீரான பயிற்சி வசதியை முறைப்படுத்தி செயல்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளுமாகும். பயில்வோர் பயிற்சி கல்வி அளிப்பதற்காக புதிய நபர்களையோ, அல்லது தொழில் பயிற்சி நிறுவனத்தில் தேறிய பயிற்சியாளர்களையோ தெரிந்தெடுக்க தொழிலதிபர்கள் முழு சுதந்திரம் உடையவராவார். தொழிற் பயிற்சி நிறுவனங்களில் ஏட்டளவு தொழிற் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதைப்போலவே, இத்தகைய வசதிகள் இல்லாத சிறு நிறுவனங்களில், நேரடியாக சேர்த்துக் கொள்ளப்படும் பயில்வோருக்கு அடிப்படைப் பயிற்சியையும் அரசு அளித்து வருகிறது. செய்முறைப் பயிற்சியை தொழிற்சாலையே அளித்து வருகிறது.



தற்சமயம், 216 தொழிற்சாலைகளையும் தொழில் பயில்வோருக் காக 103 தொழில் நிறுவனங்களையும் இச்சட்டம் கொண்டிருக் கிறது. இதன் முடிவில், 1,247 தொழிற்சாலை நிறுவனங்களில் தீவிர ஆய்வு நடத்தியதில், 9,481 வேலைபயில்வோர் பயிற்சி பெற வாய்ப்பிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இவ் வருடம், தொடர்ந்து முயற்சி செய்ததினால், மேலும் இச் செயல் நிறை வேற்றம் முன்னேற்றம், அடைந்துள்ளது. ரூ. 130-ரூ. 200 என்ற வீதத்தில், தொழில் அதிபர்களால், எல்லா தொழில் பயில்வோர் களுக்கும் உதவித் தொகை அளிக்கப்படுகின்றது. இவ் உதவித் தொகை தொழிலின் கால அளவைப் பொறுத்ததாகும்.

3. **தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாலை நேர வகுப்புகள்.**—தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர் களின் அறிவு முன்னேற்றத்திற்கு வசதிகளை அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் ஆகும். இதனால் அவர்கள் கூடுதல் பதவி உயர்வுகளை பெறலாம். ஆகையால், எங்கெங்கு தொழிற்சாலைகள் அதிகமாயிருக்கிறதோ அங்கெல் லாம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி கிண்டி, வடசென்னை, அம்பத்தூர், மதுரை, கோயமுத்தூர் ஆகிய தேர்ந் தெடுக்கப்பட்ட 5 தொழிற் பயிற்சி நிலையங்களில் தற்சமயம் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட மொத்த பயிற்சி இடங்கள் 1,000 ஆகும். தற்சமயம் 945 பணியாளர்கள் பயிற்சிக்குச் சென்றுள்ளனர்.

4. **உதவி பெறும் தொழிற் பள்ளிகள்.**—தற்சமயம், தொழிற் பள்ளிகளின் விதிமுறைக் கொள்கைகளின் கீழ் அங்கீகார மளிக்கப்பட்ட 65 தொழிற் பள்ளிகள் தமிழ்நாட்டில் உள்ளன. இந்தப் பள்ளிகள், தச்சுத் தொழில், கருமார் தொழில், பொருத்துபவர், பற்றவைப்பவர், பின்னல் வேலை, துணி வெட்டு தல்—தைத்தல் முதலிய தொழிற் பயிற்சிகளை அளிக்கிறது.

இந்தப் பள்ளிகளில் பயிற்சி அளிக்கப்பட அனுமதிக்கப் பட்ட 4,580, மாணவர்களில் 4,148 மாணவர்கள் பயிற்சிக்குச் சென்றுள்ளனர். அங்கீகரிக்கப்பட்ட எல்லா தனியார் நிறுவனங்களிலும் பயிற்சி தரத்தை முறைப்படுத்த, பொதுவான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு, எல்லா தொழில் நிலையங்களுக்கும் அறிமுகப் படுத்தப்பட்டது. தற்போது பொதுவான தேர்வும் நடத்தப் படுகிறது. தொழிற் பள்ளிகளுக்கான விதிமுறைக் கொள்கைகளின் விதித்துறைகளின் படி மானியம் பெற இப்பள்ளிகள் தகுதி பெறுகின்றன.

5. சிறப்புத் திட்டங்கள்—வேலையிழந்த பொற் கொல்லர்கள், மாதிரி அமைப்பாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் (பகுதி நேரம்) ஆகியவர்களுக்கு பொருத்தமான வேலையைப் பெறுவதற்கான சில தொழிற் நுட்ப பயிற்சிகளை அளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமும், குறிக்கோளுமாகும். சேலம், திருச்சி, பேட்டை; மதுரை ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு கருமார் தொழிலும் இணைப்புத் தொழிலும், செம்பு வேலைப்பாடும் தகர வேலைப்பாடும் போன்ற இரு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ. 10 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. உதவித் தொகை வழங்க அனுமதிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை 160 ஆகும். 140 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.



## இணைப்பு II

### கோரிக்கை எண். 33—வீட்டுவசதி.

### கொள்கை குறிப்பு.

1977-78 ஆம் ஆண்டு வீட்டு வசதித் துறையின் திட்டங்களில் கீழ் கூறப்பட்ட முக்கிய அம்சங்கள் அடங்கியுள்ளன:—

1. இந்தத் திட்டங்களில் மிக முக்கியமான அம்சம் யாதெனில் 1975-76, 1976-77 ஆம் ஆண்டுகளின் மூலதனங்களைக் காட்டிலும் இந்த ஆண்டில் மூலதனம் குறிப்பிட்ட அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. 1975-76 ஆம் ஆண்டில் வீட்டு வசதித் துறையின் திட்டங்களின் மூலதனம் ரூ. 26.42 கோடியாகும். 1976-77 ஆம் ஆண்டின் மூலதனம் ரூ. 23.93 கோடியாகும். 1977-78 ஆம் ஆண்டில் இந்த மூலதனம் ரூ. 32.20 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 1976-77 ஆம் ஆண்டின் மூலதனத்தைக் காட்டிலும் 35 சதவீதம் அதிகமாகும்.

2. இரண்டாவது முக்கியமான அம்சம் யாதெனில் மேலே கூறப்பட்டுள்ள மூலதனங்களுக்கு நிதி ஆதாரங்களிலிருந்து (ஒதுக்கீடு) பங்கீடு செய்துள்ளதாகும். 1975-76 ஆம் ஆண்டில் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் மற்றும் கடன் ஈட்டுப் பத்திரங்கள் மூலமாக தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவி ரூ. 6.59 கோடியாகும். 1976-77 ஆம் ஆண்டில் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் மற்றும் கடன் ஈட்டுப் பத்திரங்கள் மூலமாக தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவி ரூ. 6.57 கோடியாகும். 1977-78 ஆம் ஆண்டில் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் மற்றும் தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட இருக்கும் மொத்த நிதியுதவி ரூ. 9.50 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப் படுகிறது. இந்தச் சூழ்நிலையில் குறிப்பிடத்தக்க திருப்திகரமான அம்சம் யாதெனில், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் ஒப்புதல் அளித்துள்ள திட்டங்களின் எண்ணிக்கையிலும், அதற்காக கொடுக்க ஒப்புக்கொண்டுள்ள மொத்தக் கடன் தொகையிலும், இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதலிடம் வகிக்கிறது.

3. மற்றும் ஒரு புது அம்சம் யாதெனில் வீட்டு வசதி வாரியத்தின் திட்டங்களுக்கும், குடிசை மாற்று வாரியத்தின் திட்டங்களுக்கும் உலக வங்கியின் நிதியுதவி கிடைத்துள்ளதாகும். இந்திய அரசு மூலமாக பெறப்பட இருக்கும் உலக வங்கியின் நிதி

யுதவியிலிருந்து வீட்டு வசதி வாரியத்தினுடைய "முழு வசதிகள் அடங்கிய மனைகள்" (Sites and services) திட்டங்களுக்கு ரூ. 2.25 கோடி முதலீடு செய்வதற்கும் குடிசை மாற்று வாரியத்தினுடைய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 1.40 கோடி முதலீடு செய்வதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

4. மற்றொரு முக்கியமான அம்சம் யாதெனில், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலமாக நிர்வகிக்கப்பட இருக்கின்ற ஊரக குடியிருப்பு வசதிக்கு ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகும். இந்த ஒதுக்கீட்டில் குறிப்பிடத் தக்க நிதி பழங்குடியினர் மற்றும் அரிசன மக்களின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில், அவர்களுக்கு அளிக்கப்படும் கடன்களுக்கான முழு வட்டித் தொகையையும் மானியமாக ஈடு செய்வதற்குத் தமிழ்நாடு அரசு முடிவு செய்திருக்கிறது. இம் மாற்றத்தின் விளைவாக, நகர்புறத்தைச் சார்ந்திருக்கும் சங்கத்தின் கடனுதவிகளில் மிகப் பெரிய மாற்றம் ஏற்படும். இம்மாற்றம் ஊரகக் குடியிருப்புத் திட்டங்களுக்கு சங்கக் கடனுதவிகளை அதிகமாக செலவு செய்யப்படும் கொள்கையின் முன்னோடியாக விளங்கும்.

5. மற்றும் ஒரு வரவேற்கத் தக்க அம்சம் யாதெனில், பொருளாதாரத்தின் மெலிந்த பிரிவினர்கள் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர்களுக்கான வீடு கட்டும் திட்டங்களுக்கான மூலதனத்தில் ஏற்படும் ஒரு மாற்றமாகும். பொருளாதாரத்தின் மெலிந்த பிரிவினர்களுக்கும் குறைந்த வருவாய் பிரிவினர்களுக்கும் 1975-76 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ள 5,506 குடியிருப்புகளுக்கு எதிராக, இந்த இரு பிரிவினர்களுக்கும் 1977-78 ஆம் ஆண்டில், 6,580 குடியிருப்புகள் கட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6. அரசு ஊழியர்களுக்குத் தேவையான வாடகைக் குடியிருப்புத் திட்டத்திற்கு மூலதனத்தை அதிகப்படுத்தியிருப்பது மற்றும் ஒரு அம்சமாகும். இந்தக் கணக்கில் 1975-76 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ. 150 லட்சம், 1976-77 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ. 125 லட்சம் தொகைக்கு எதிராக, 1977-78 ஆம் ஆண்டின் மூலதனம் ரூ. 200 லட்சமாகும்.

2. 1977-78 ஆம் ஆண்டு வீட்டு வசதித் திட்டம் ஒவ்வொன்றையும் குறித்து அடுத்து வரும் பத்திகளில் விவரிக்கப்படுகிறது.



பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான திட்டங்கள்.

3. வீட்டு வசதி வாரியம், ஆண்டு வருமானம் ரூ. 4,200-க்கும் குறைவாகப் பெறுகின்ற, பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்குக் குறைந்த செலவிலான வீட்டு வசதிச் சிறப்புத் திட்டத்தின்கீழ், ரூ. 6,000-த்திலிருந்து ரூ. 13,000 வரை செலவிலான வீடுகளைத் தவணை முறைத் திட்டத்தின்கீழ் ஒதுக்கல் செய்வதற்காகக் கட்டுகிறது. வீட்டின் மொத்த செலவுத் தொகையில் 1/10 பகுதியை முன் பணமாக வசூல் செய்யப்படுகிறது. மீதித் தொகை 20 ஆண்டுக் காலத்தில் வசூல் செய்யப்படுகிறது. இதற்கு வீட்டு வசதி வாரியத்தின் மேற்பார்வைக் கட்டணம், வழக்கமான $12\frac{1}{2}$ சதவீதத்திற்குப் பதிலாக $6\frac{1}{4}$ சதவீதம்தான் வசூலிக்கப்படுகிறது. இதுகாறும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இத் திட்டத்தின்கீழ் 5,207 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் கட்டப்படவிருக்கும் குடியிருப்புகளின் எண்ணிக்கை 2,353.

4. அரசு நிதி நிலை அறிக்கையில் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 5 லட்சம் வீட்டு வசதி வாரியத்திற்குக் கடனாகக் கொடுக்கப்படும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவிகளைக் கொண்டும், இத்திட்டத்திற்காக 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 65.56 லட்சம் செலவு செய்வதற்கு உத்தேசித்திருக்கிறது.

குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம்.

5. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஆண்டு வருவாய் ரூ. 4,200-க்கும் ரூ. 7,200-க்கும் இடைப்பட்ட வருவாயினரின் நலனுக்காக, இத்திட்டத்தின்கீழ் வீடுகளைக் கட்டித்தருகிறது. இத்திட்டத்தின்கீழ் கட்டப்படுகிற வீட்டின் விலை ரூ. 18,000 ஆகும். இத்திட்டத்தின்கீழ் வீடுகள் ஒதுக்கல் பெறுகிற நபர்கள் 25 சதவீதத் தொகையை முன் பணமாகச் செலுத்த வேண்டும். மீதித் தொகை 20 ஆண்டுக் காலத்தில் மாதத் தவணைகளில் செலுத்தப்பட வேண்டும். இதுகாறும் வீட்டு வசதி வாரியம் இத் திட்டத்தின்கீழ் 8,011 வீடுகளைக் கட்டி முடித்துள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் 1,227 வீடுகள் கட்டப்பட இருக்கின்றன.

[1977 ஆகஸ்ட் 11

### தொழிலாளருக்கான வீட்டு வசதித் திட்டம்.

6. வீட்டு வசதி வாரியம் பொது மக்களுக்கு மட்டுமல்லாமல் அரசுத் துறை, தனியார்த் துறை இரண்டிலும் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கும் வீடுகளைக் கட்டிக்கொடுக்கிறது. தொழிலாளர்களுக்காகக் கட்டித் தரப்பட்ட வீட்டு வசதி வாரியத்தின் திட்டங்களில் சில கீழே கூறப்பட்டுள்ளன :—

( i ) வியாசார்பாடியில் அசோக் லேலண்டு தொழிலாளர்களுக்காக ரூ. 61.13 லட்சம் செலவில் 350 வீடுகளும், 48 குடியிருப்புகளும் கட்டப்பட்டுள்ளன.

( ii ) பாடி, அம்பத்தூர் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்காக, அண்ணா நகரில் ரூ. 53.47 லட்சம் செலவில் 415 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

(iii) பாடியில், டி.வி.எஸ். குழுவினரின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்காக, அண்ணா நகர் மேற்கு விரிவில் ரூ. 53.26 லட்சம் செலவில் 420 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

(iv) யூனியன் கார்பைடு தொழிலாளர்களுக்காக, பல்லாவரத்தில் ரூ. 21.82 லட்சம் செலவில் 145 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

( v ) மின்சார வாரியத்தின் தொழிலாளர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள வீடுகளின் விபரம் பின்வருமாறு:—

| | | | (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|---|
| டாடாபாத் கோயம்புத்தூர் | 120 | குடியிருப்புகள் | |
| | 175 | வீடுகள் | 39·2 |
| நாமக்கல் | 96 | ,, | 9·5 |
| தஞ்சாவூர் | 122 | ,, | 16·85 |
| திண்டுக்கல் | 84 | ,, | 10·19 |
| விருத்தாசலம் | 65 | ,, | 9·25 |
| திருச்சி எஸ் எம் இ என் காலனி | 13 | ,, | 1·4 |
| விழுப்புரம் | 20 | ,, | 2.8 |
| கடலூர் | 40 | ,, | 8·40 |
| காட்பாடி | 148 | ,, | 22·23 |
| சிப்காட் ராணிப்பேட்டை | 132 | ,, | 20·95 |



1977 ஆகஸ்ட் 11]

### நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம்.

7. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ள பல வீட்டு வசதித் திட்டங்களில் நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டமும் ஒன்றாகும். ஆண்டு வருமானம் ரூ. 7,200-க்கும் ரூ. 18,000-த்திற்கும் இடைப்பட்டவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் வீட்டு வசதி செய்து தரப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீட்டின் விலை ரூ. 42,000 என்று வரையறுக்கப்பட்டுள்ளது. மொத்த விலையில் 25 சதவீதம் முன் பணமாக செலுத்தப்பட வேண்டும். மீதித் தொகையை 15 ஆண்டுகளில் மாதத் தவணைகளில் செலுத்த வேண்டும். வீட்டு வசதி வாரியம் இதுகாறும் 5,003 வீடுகளைக் கட்டியுள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் 1,119 வீடுகளைக் கட்டுவதற்கு உத்தேசித்துள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், அரசு கடன் தொகையைக் கொண்டும், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியைக் கொண்டும் இத்திட்டத்திற்கு 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 391.19 இலட்சம் செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.

8. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், உயர்ந்த வருவாய்ப் பிரிவினர்களுக்கும் வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின்கீழ் வீடு ஒதுக்கல் பெறுவதற்கு வருவாய் வரம்பு ஆண்டுக்கு ரூ. 18,000-த்திற்கு மேற்பட்டதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வீட்டின் மொத்த விலையில் 25 சதவீதம் முன் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். மீதித் தொகையைத் தவணைகளில் செலுத்த வேண்டும்.

### நிலம் கையகப்படுத்தல்—வீட்டு மனை மேம்பாட்டுத் திட்டம்.

9. நிலத்தின் விலைகளில் ஊக பேரங்களைத் தடுக்கும் பொருட்டும், வீடு கட்டுவதற்கு நியாயமான விலையில் நிலம் கிடைக்கச் செய்யும் பொருட்டும், பெருமளவில் வளர்ந்து வரும் நகரங்களில் நெரிசலைத் தணிக்கும் பொருட்டும், நிலங்களைப் பெருமளவில் முன்னதாகக் கையகப் படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தை ஆதாயம்—விரயம் அற்ற அடிப்படையில் செயற்படுத்தி வருகிறது. இது நகரங்களுக்குள்ளும், வெளியிலும் பெருமளவு நிலங்களைக் கையகப் படுத்துகிறது. அவற்றைத் தன்னிறைவுள்ள சிறிய நகரியங்களாக அல்லது நகர அண்மைப் பகுதிகளாக மேம்படுத்துகிறது. அப்பகுதியில் நல்ல சாலைகள், தெரு விளக்குகள், நீர் வழங்கல்,

[1977 ஆகஸ்ட் 11

கழிவு நீர்க்கால்கள், விளையாடும் இடங்கள், பூங்காக்கள், மற்றும் பள்ளிகள், மருத்துவ மனைகள், கடைகள், விளையாட்டுத் திடல்கள் போன்ற ஏனைய பொது வசதிகளை அமைத்துத் தருகின்றது. இது காறும் 4,337 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. 1977-78 ஆம் ஆண்டின் குறியீட்டின்படி 300 ஏக்கர் நிலங்கள் கையகப் படுத்தப்பட இருக்கின்றன.

10. இத் திட்டத்திற்காக அரசு வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை வீட்டு வசதி வாரியத்திற்கு கடனாக வழங்கப்படும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியான ரூ. 137 இலட்சத்தின் உதவியுடனும் இத்திட்டத்திற்காக 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 240 இலட்சம் செலவு செய்ய உத்தேசித்துள்ளது.

**உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்பட இருக்கும் முழு வசதி களுடன் அடங்கிய மனைகள் திட்டம்.**

11. வீட்டு வசதி வாரியம் கூடிய விரைவில் உலக வங்கி நிதி யுதவியுடன், முழு வசதிகள் அடங்கிய மனைகள் திட்டத்தை செயல்படுத்த இருக்கிறது. இத் திட்டத்தின்கீழ் சென்னை நகரத்தை ஒட்டியுள்ள அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கை யூர் ஆகிய இடங்களில் 13,467 மனைகள் வழங்க உத்தேசிக்கப்பட் டுள்ளது. இதற்காக ரூ. 932.88 இலட்சம் செலவில் மொத்தம் 168 எக்டேர் நிலங்கள் கையகப்படுத்தப்படும். இத்திட்டத்தில் வீட்டு மனைகளைத் தவிர வாணிபத்திற்காகவும் சிறு கைத் தொழிலுக் காகவும் மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

12. இத்திட்டத்தில் சுகாதார வசதிகளுடன் கூடிய ஒவ் வொன்றும் 40 சதுர மீட்டர் பரப்பளவிலான 6,228 மனைகளும், 47 சதுர மீட்டர் பரப்பளவிலான கூரையுடன் கூடிய 2,742 மனைகளும், 47 சதுர மீட்டர் அளவிலான குடியிருப்புடன் கூடிய 792 மனை களும் பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினர்களுக்கு வழங்கப் படும். மேலும் 74 முதல் 140 சதுர மீட்டர் பரப்பளவுடைய 3,284 மனைகளும் 223 சதுர மீட்டர் பரப்பளவிலான 421 நடுத்தர வருவாய்த் தொகுதி மனைகளும் வழங்கப்படும்.

13. இத்திட்டத்தில், ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், பொது உபயோகம், வாணிப உபயோகம், சமுதாயக் கூடங்கள், சிறு தொழில்கள் ஆகியவைகளுக்குத் தேவையான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.



1977 ஆகஸ்ட் 11]

14. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 932.88 இலட்சமாகும். இது மூன்று ஆண்டுகளில் முடிக்கப்படவிருக்கிறது. சென்னைப் பெரு நகர் வளர்ச்சிக் கழகம் தனது நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உருவாக்கியிருக்கும் இத் திட்டத்தை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் உலக வங்கி நிதி உதவியுடன் செயல் படுத்த உத்தேசித் துள்ளது.

**தமிழ் நாடு அரசுப் பணியாளருக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம்.**

15. இத்திட்டம் எல்லா அரசு பணியாளருக்கும் உரியது. தமிழ் நாடு அரசு வீட்டு வசதி அளிக்கப்பட்டவர்களிடமிருந்து குறைந்த வாடகையாக சம்பளத்தில் 10 சதவீதத்தை பிடித்துக்கொள்கிறது. இவர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படுவதில்லை. சாதா ரணமாக இந்த அடிப்படையில் பிடிக்கப்படுகின்ற வாடகை கட்டு படியாகும் வாடகையைவிட குறைவாகும். தொகை வேறு பாடு மாநில அரசால் ஈடு செய்யப்படுவதால், அரசுப் பணி யாளர்கள் அரசின் ஈட்டுத் தொகையின் பலனை அனுபவிக்கின் றனர். திட்டத்தை செயல்படுத்தும் முகவர் அமைப்பாக வீட்டு வசதி வாரியம் உள்ளது. கட்டி முடிக்கப்பட்டபின், வீடுகளைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பினையும் அதுவே ஏற்கிறது. பொது கட்டிடங்களின் உரிமை மாநில அரசிடம் நிலைபெறுகிறது. பொது வாக இத்திட்டத்தின்கீழ் வீடுகள் அரசாங்க நிலங்களில் கட்டப் படுகின்றன.

16. 1977-78 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 150 இலட்சத்திலிருந்து, ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுவரும் திட்டத்தில் 557 வீடுகளும், புதிதாக தொடங்கி செயல்படுத்தப்பட இருக்கும் திட்டத்தில் 756 வீடுகளும் கட்டி முடிக்கப்படும். 1977-78 ஆம் ஆண்டில் கூடுதலாக 2,000 குடியிருப்புகள் கட்டும் பணியை வீட்டு வசதி வாரியம் மேற்கொள்ளுவதற்கு உறுதுணையாக, வரவு-செலவுத் திட்டத்தில் மேலும் ரூ. 50 இலட்சம் அறிவிக்கப்பட் டுள்ளது.

### அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக முன்பணம் வழங்கல்.

17. மனைகள் வாங்குவது உட்பட வீடுகள் கட்டுதல், முன்னரே கட்டப்பட்ட வீடுகள் வாங்குதல் ஆகியவற்றிற்காக அரசுப் பணியாளர்களுக்கு முன் பணங்கள் வழங்கப்படுகின்றன. 6 ஆண்டுகள் தொடர்ந்து அரசின்கீழ் பணி புரிகின்ற அரசுப் பணியாளர்கள் இக்கடன் பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள். அரசுப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய சம்பளத்தைப் போன்று 60 மடங்குத் தொகை அல்லது ரூ. 70,000 இவற்றில் எது குறைவாக உள்ளதோ, அத்தொகை முன் பணமாக வழங்கப்படுகிறது. கடன் தொகை, பணியாளர்கள் தங்கள் பணிக்காலத்திற்குள் அவர்களது சம்பளத் தொகையில் 1/3 பங்கு வீதம் திருப்பி செலுத்துவதற்கு உள்ள திறனின் அடிப்படையிலும், இறப்பு மற்றும் ஓய்வுக்கால பணிக் கொடையின் அடிப்படையிலும், நிச்சயிக்கப்படுகிறது. 31—3—1977 வரை 6,347 விண்ணப்பங்களுக்கு கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் மாநில அரசு அலுவலர்களுக்கு ரூ. 125 இலட்சமும், அனைந்திந்திய பணி அலுவலர்களுக்கு ரூ. 5 இலட்சமும் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலம் வரை இக்கடன் தொகைக்கு ஆண்டுக்கு 9 சதவிகித வட்டி வசூலிக்கப்பட்டு வந்தது. அரசுப் பணியாளர்களுக்கு மிகப் பெரிய சலுகை அளிக்கும் நோக்குடன், அரசு 1977-78 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படும் வீடு கட்டும் கடன் தொகைக்கு கீழ்க் கூறப்பட்டுள்ள வீதங்களில் வட்டி வசூல் செய்ய முடிவு செய்துள்ளது.

| | |
|---|---|
| ரூ. 25,000 வரையிலுமான கடன் தொகைக்கு ஆண்டுக்கு .. .. .. .. | 7½ |
| ரூ. 25,001-லிருந்து ரூ. 50,000 வரையிலுமான கடன் தொகைக்கு ஆண்டுக்கு .. .. | 8 |
| ரூ. 50,001-லிருந்து ரூ. 70,000 வரையிலுமான கடன் தொகைக்கு ஆண்டுக்கு .. .. | 9 |

### காவலர் வீட்டு வசதித் திட்டம்.

18. காவலர் வீட்டு வசதித் திட்டத்தின் நோக்கமே காவல் துறை சார்நிலை பணியாளர்களில் 30 சதவீதத்தினருக்கு குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பதாகும். இத்



திட்டத்தின் கீழ், பொதுப் பணித் துறையும், வீட்டு வசதி வாரியமும் 1976-77 ஆம் ஆண்டு வரையிலும் ரூ. 875.257 இலட்சம் செலவில் 9,596 குடியிருப்புகளைக் கட்டி காவல் துறையிடம் கொடுத்துள்ளது. 1976-77 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 56.22 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1977-78 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 17.58 இலட்சம் பொதுப் பணித் துறை 55 குடியிருப்புகளை கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ. 20.69 இலட்சம் வீட்டு வசதி வாரியம் சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் 288 குடியிருப்புகளை கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

### தொழிலாளர்களுக்கு மலிவு வீட்டு வசதித் திட்டம்.

19. இத்திட்டத்தின்கீழ் அரசுத் துறை, தனியார் துறை ஆகிய இரண்டு வழியிலும் தொழிலாளர் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. அவை குறைந்த வாடகையில் அதாவது 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தில் வரையறுத்துள்ளவாறு தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன. அவை ஒரு தொழிலாளரின் மாத வருவாய் ரூ. 350க்கு மேற்படவில்லையென்றால் மிக மலிவான வாடகையிலும், தொழிலாளர் ஒருவரின் மாத வருவாய் ரூ. 350க்கு மேற்பட்டு, ஆனால் ரூ. 500க்கு உட்பட்டிருந்தால் நியாய வாடகையிலும் விடப்படுகின்றன. வீடு கட்டுவதற்காகும் செலவு உச்ச வரம்பில் கடனாக 50 சதவீதம், மானிய உதவியாக 25 சதவீதம் என்னும் வீதாச்சாரத்தில் தனிப்பட்ட தொழிலதிபர்களுக்கு அரசு நிதி உதவி வழங்குகிறது. இந்த உச்ச வரம்புச் செலவில், எஞ்சிய 25 சதவீதமும் அதற்கு மேற்பட்டுவரும் செலவும் அந்தந்த தனிப்பட்ட தொழிலதிபர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வாறு கடனுதவி அளிக்கும் பொருட்டு பின்வரும் செலவு உச்சவரம்புகள் விதிக்கப்பட்டுள்ளன. இரட்டை மாடிக் கட்டிடங்களில் இரண்டு சிறிய அறைகள் கொண்ட குடியிருப்பு ஒன்றுக்கு ரூ. 5,350, பன் மாடிக் கட்டிடங்களில் இரண்டு அறை கொண்ட சிறிய குடியிருப்பிற்கு ரூ. 6,050, இரட்டை மாடிக் கட்டிடங்களில் உள்ள முறையான அளவில் அமைந்த இரண்டு அறைகள் கொண்ட வீடு ஒன்றுக்கு ரூ. 7,600, பன் மாடிக் கட்டிடத்தில் முறையான அளவிலான இரண்டு அறைகள் கொண்ட வீடு ஒன்றுக்கு ரூ. 8,500. இத்திட்டத்தின் தொடக்க காலத்திலிருந்து, 12 தனிப்பட்ட தொழிலதிபர்கள் அரசிடமிருந்து கடனாக ரூ. 17,66,725-ம் மானியமாக

ரூ. 7,38,968-ம் பெற்று 696 வீடுகளைக் கட்டி முடித்துள்ளார்கள். இவ்வீடுகளுக்கு மாத வாடகை ரூ. 12 லிருந்து ரூ. 15 வரை வசூலிக்கப்படுகிறது.

20. அரசு தனியார் துறையில் தொழிலாளர்களுக்கு மலிவு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ரூ. 23.01 இலட்சம் செலவில் 372 குடியிருப்புகள் கட்டுவதற்காக 4 வீட்டு வசதித் திட்டங்களுக்கு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

21. 1977-78 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் தனியார் துறையில் தொழிலாளர்களுக்கு மலிவு வீட்டு வசதித் திட்டத்திற்கு ரூ. 10 இலட்சம் ஒதுக்கியுள்ளது (கடன் ரூ. 7.50 இலட்சம், மானியம் ரூ. 2.50 இலட்சம்).

## தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்.

22. சென்னையிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் லிமிடெட், மாநிலத்திலுள்ள எல்லா வீட்டு வசதிச் சங்கங்களுக்கும் தலைமைச் சங்கமாகும். தலைமைச் சங்கம் இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து கடன் தொகை பெற்று தன்னுடைய இணைப்புச் சங்கங்களுக்கு பண உதவி வழங்குகிறது. இதுகாறும் இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து அரசு உத்திரவாதத்தின் பேரில் மொத்தம் ரூ. 31.92 கோடி கொண்ட 19 கடன்களை பெற்றுள்ளது. இச்சங்கம் ஆரம்ப வீட்டு வசதிச் சங்கங்களுக்கு ரூ. 36.33 கோடி ரூபாய் கடனைக் கொடுத்துள்ளது. இக்கடன் உதவியைக் கொண்டு 36,524 வீடுகள் இதுவரை கட்டப் பட்டுள்ளன. சமுதாயத்தில் நலிந்த பிரிவினரான பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர் ஆகியோருக்கு நிவாரணம் தரும் வகையில் தலைமைக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் வெவ்வேறு வகையான வட்டி விகிதங்களைப் பின்பற்றும். தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தில் நிலையான வைப்புத் தொகையில் முதலீடு செய்வதற்கு ஏற்ற வகையில் பொது மக்களை ஊக்குவிக்க, அரசு ரூ. 100 இலட்சம் வரை வைப்புத் தொகைகளுக்கு உத்திரவாதம் அளித்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் கடன் பெறும் திறனை பலப்படுத்தும் வகையில், மாநில அரசு தன்னுடைய பங்கு மூலதனமாக ரூ. 85 இலட்சத்தை முதலீடு செய்துள்ளது.



## ஊரக வீட்டு வசதித் திட்டம்.

23. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் நிதி ஆதாரத்திலிருந்து ரூ. 2 கோடி ஒதுக்கீடு பெற்றதன் பயனாக, ஊரக வீட்டு வசதித் திட்டத்திற்கான தொகையானது குறிப்பிடத் தக்க அளவு உயர்த்தப்பட்டுள்ளது.

24. இதுகாறும் 10 ஊரக வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் தாலுகா மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. 1977-78 ஆம் ஆண்டில் மேலும் 50 சங்கங்களை அமைக்க உத்தேசிக்கப்பட் டுள்ளது. இதற்காக தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் கடன் கொடுக்கும் திட்டத்திற்கு ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரிசனங்களுக்கும் பழங்குடியினருக்கும் அளிக்கப்படும் வீடு கட்டும் கடன்களுக்கு, கடன் தொகையின் முழுப் பயனையும் பெறுவதன் பொருட்டு, கடன்களுக்கு வட்டி வாங்காமல் சலுகை அளித்து, அரசு முழு வட்டித் தொகையையும் ஈடு செய்கிறது.

## குடிசைப் பகுதி மாற்றும் பணி.

25. அரசு 1970 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் 'குடிசை மாற்று வாரியத்தை அமைத்து, அதனிடம் சென்னை நகரில் உள்ள குடிசைகளை அகற்றி மாற்றி அமைக்கும் பணியை ஒப்படைத்தது. இப்பணி இதுவரையிலும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு வந்தது. இதற்கென்று தனியாக "தமிழ் நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு/அகற்றும்) சட்டம் 1971" என்ற சட்டத்தை உருவாக்கி குடிசைப் பகுதி மாற்று வாரியத் திற்கு சட்டப் பூர்வமான பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

26. வாரியம் அமைக்கப்பட்ட உடனே, குடிசை வாழ்மக்களின் பிரச்சினைகளின் அளவை மதிப்பிடும் பொருட்டு ஒரு சமூகப் பொருளாதார ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வுக் கணக்கு, சென்னை நகரில் 1,202 குடிசைப் பகுதிகள் உள்ளன என்றும், அவை களில் மொத்தம் 7,37,531 மக்கள் கொண்ட 1,63,804 குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்றும் புலப்படுத்துகின்றது. கிட்டத் தட்ட சென்னை மாநகரின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு குடிசைப் பகுதிகளில் வாழ்ந்து வருகிறார்கள். இந்த

ஆரம்ப ஆய்வின் அடிப்படையில், வாரியம் ஒரு குறுகிய காலத் திட்டத்தை உருவாக்கி, மிகவும் மோசமான நிலையில் உள்ள குடிசைப் பகுதிகளை அகற்றும் பணியை மேற்கொண்டது.

27. குடிசை மாற்று வாரியம் அமைக்கும் முன்பு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 7,384 குடியிருப்புகளை கட்டி முடித்திருந்தது. இக்குடியிருப்புகளும் குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கப் பட்டன. இவைகளில் முடிவடையாமல் இருந்த பாக்கிப் பணிகளை குடிசை மாற்று வாரியம் செய்து முடித்தது. 1970 ஆம் ஆண்டு வாரியம் அமைக்கப்பட்ட பிறகு அது ரூ. 24.66 கோடி செலவில் 29,418 குடியிருப்புகளை கட்டுவதற்கு 89 திட்டங்களை எடுத்துக்கொண்டது. வாரியத்தின் தொடக்க காலத்திலிருந்து 1976-77 ஆம் ஆண்டு முடிய 20,939 குடியிருப்புகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. மாநில அரசு, வாரியத்தின் தொடக்கத்திலிருந்து 1976-77 ஆம் ஆண்டு முடிய ரூ. 21.41 கோடியை மானியமாக வழங்கியுள்ளது.

28. குடிசைப் பகுதி மாற்றும் திட்டங்களுக்கு 1976-77 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 320 இலட்சம் ஒதுக்கப் பட்டது. 1977-78 ஆம் ஆண்டில், குடிசை மாற்று வாரியத்தின் குடிசைப் பகுதி மாற்றுத் திட்டங்களுக்கும், விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டு திட்டங்களுக்கும் உலக வங்கி திட்டங் களுக்கும் சேர்த்து ரூ. 540 இலட்சம் ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது.

### வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்கள்.

29. வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் முதல் தடவையாக குடிசைப் பகுதி மாற்றும் திட்டங்களுக்கு நிதியுதவி செய்வதற்கு முன்வந்துள்ளது. இக்கழகம் ரூ. 3.36 கோடி செலவில் 4,380 குடியிருப்புகளைக் கட்டுவதற்காக, 16 குடிசைப் பகுதி மாற்றும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்கள் அனைத்திலும் பணி தொடங்கப்பட்டுள்ளது.



### பக்கிங்காம் கால்வாய் குடிசைப்பகுதிகளை மாற்றும் திட்டம்.

30. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், சென்னை பக்கிங்காம் கால்வாய் (தெற்கு) கரையோரங்களில் உள்ள 40 குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்கும் பணியை செயல்படுத்து வதற்கு உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், இரண்டு கட்டங்களில் ரூ. 8.057 கோடி மதிப்பீட்டுச் செலவில், அடுக்கு மாடிக் குடியிருப்புகளைக் கட்டி சுமார் 4,750 குடும்பங்களை குடியேற்ற வகை செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக உடனடி யாகக் கிடைக்க இருக்கும் பொதுப்பணித் துறைக்கு சொந்தமான நிலங்களில் ரூ. 2.094 கோடி மதிப்பீட்டுச் செலவில் 2,094 குடி யிருப்புகளை உடனடியாக கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக சென்னை மாவட்ட ஆட்சியாளரால் கையகப் படுத்தப்பட்டு ஒப்படைக்கப்பட இருக்கும் தனியார் நிலங்களில், ரூ. 5.963 கோடி மதிப்பீட்டுச் செலவில் 5,693 குடியிருப்புகளைக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

31. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், 1976-77 ஆம் ஆண்டில் "விரைவு படுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை" எடுத்துக் கொண்டது. இத்திட்டத்தின் கீழ், இது வரையிலும் எவ்வித மேம்பாட்டுப் பணிகளும் செய்யப்படாமல் உள்ள 504 குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இத்திட்டத்தினால் 41,422 குடும்பங்கள் பயனடை வார்கள். இத்திட்டம் இரண்டு ஆண்டு காலத்தில் செய்து முடிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் செலவு ரூ. 1.70 கோடியாகும். இத்திட்டத்தின் கீழ் 504 குடிசைப் பகுதி களிலும் குடி நீர் வசதி, தெரு விளக்குகள், நடைபாதைகள், பொதுக் கழிப்பிடங்கள் ஆகிய வசதிகள் செய்து தரப்படும். இவ் வசதிகளை மேற்கொண்டு பராமரிப்பு செய்வதற்காக, அரசு, சென்னை மாநகராட்சிக்கு நிதியுதவி அளிக்கும். 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளில் இத்திட்டத்திற்காக ரூ. 150 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## உலக வங்கித் திட்டம்.

32. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு, சுற்றுப் புற மேம்பாட்டுத் திட்டப் பணிகளை செய்வதற்காக, கணிசமான நிதியுதவி அளிப்பதற்கு உலக வங்கி முன் வந்துள்ளது. இப்பணிக்காக, உலக வங்கி ரூ. 4½ கோடி வழங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்நிதி, மூன்றாண்டுகளில் செலவு செய்யப் படும். நடப்பு ஆண்டில் ரூ. 140 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், 30 குடிசைப் பகுதிகளில் உலக வங்கித் திட்டம் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

33. இத்திட்டத்தின் கீழ் குடிசைகளில் வாழும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுமார் 40 சதுர மீட்டர் மனை தரப்படும். இம்மனை சீராக மேம்படுத்தப்பட்டு, பாதாளச் சாக்கடை, தண்ணீர் வழங்குதல், சாலைகள், தெரு விளக்குகள் போன்ற எல்லா வகையான வசதிகளும் செய்து தரப்படும். இம்மனையில், குடிசைவாசி தன்னுடைய சொந்த முயற்சியினால் தன்னுடைய வீட்டைத் தானே கட்டிக் கொள்வதற்கு ஊக்குவிக்கப்படும். குடிசைவாசி, இத்திட்டத்தில் மிகுந்த அக்கறை காட்டி தன் சொந்த முயற்சியினால் வீட்டைக் கட்ட முன் வரும்போது அவருக்கு மனையை விற்பனைத் திட்டத்தின் கீழ் தருவதற்கு எண்ணம் உள்ளது. அரசு மேன்மேலும் உதவியை அதிகப்படுத்தி அவருக்கு துணை செய்ய உத்தேசித்திருக்கிறது. அவருடைய திருப்பித் தரும் திறன் அடிப்படையிலும், அவர் இதில் கொண்டுள்ள ஈடுபாட்டின் அடிப்படையிலும், அவருக்கு தயார் படுத்தப்பட்ட அடித்தளம் அல்லது ஜன்னல் மட்டத்திற்கு கட்டு மானம் அல்லது முகப்பு மட்டத்திற்கு கட்டுமானம் அல்லது கூரை மட்டத்திற்கு கட்டுமானம் செய்து தரப்படும். இதைக் கொண்டு அவர் தன் சொந்த முயற்சியாலும், உதவியாலும் கட்டுமானப் பணியை முடித்து வசதிகளுடன் வாழ்வதற்கு வகை செய்யப்படும்.

## ஆதாயம் தரும் தொழில் திட்டங்கள்.

34. குடியிருப்புகளுக்கு ஏற்படும் வாடகை இழப்பைச் சரிக் கட்டுவதற்காக, அரசால் ஆண்டுதோறும் தரப்படுகிற பெரிய உதவித் தொகைச் சுமையைக் குறைப்பதற்காகப் பல்வேறு வழிகள் ஆலோசிக்கப்பட்டன. அவற்றுள் ஒன்றே ஆதாயம் தரும் தொழில் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் கடைகள், காட்சி அறைகள், உணவு விடுதி, அலுவலகக் கட்டிடம், திருமண மாகாதவர்கள் தங்கும் அறைகள், கிடங்குகள் முதலானவை கட்டப்பட இருக்கின்றன. இத் திட்டங்கள், பல்வேறு குடிசை மாற்றுத் திட்டப் பகுதிகளில் செயல்படுத்தப்படும். திட்டங் களுக்குத் தேவையான முதலீடு, நீண்ட காலக் கட்டுகை, வணிக வங்கிகளிலிருந்தும், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தி லிருந்தும் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களி லிருந்து பெறப்படும் வருவாயைக் கொண்டு கடன் உதவி முழுவதையும் 10 அல்லது 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்திய பின்னர், இக்கட்டிடங்கள், வாரியத்திற்கு நிலையான வருவாயை ஈட்டித் தரும். இவ்வாரியம் இதுகாறும் நான்கு திட்டங்களை முறையே நொச்சிக்குப்பம், ஆண்டிமான்யம், ஆலையம்மன் கோவில், வியாசர்பாடி ஆகிய இடங்களில் செய்து முடித்துள்ளது. மற்றொரு திட்டம் வெங்கட நாராயணா சாலையில் முன்னேற்றத்தில் உள்ளது. ஆலையம்மன் கோயில் மற்றும் வெங்கட நாராயணா சாலையில் எடுத் துள்ள இரண்டு திட்டங்களுக்கு வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் கடனுதவி அளித்துள்ளது.

## வெளியூர்களில் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

35. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வெளியூர்களில் குடிசைப் பகுதி அகற்றுதல்/மேம்படுத்துதல் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. இதுகாறும் கோவை, மதுரை, திருச்சி, சேலம், தஞ்சை, திருநெல்வேலி ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் 6,690 குடியிருப்புக்களைக் கட்டியுள்ளது. 1976-77 ஆம் ஆண்டில், குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவ தற்கான, விரைவு படுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய நகரங்களில் செயல் படுத்தி உள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மேற்கூறிய மூன்று இடங்களிலும் இத்திட்டப் பணிக்கு ரூ. 25 இலட்சம் செலவு செய்துள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் இத்திட்டப் பணியை இந்த மூன்று இடங்களிலும் செயல்படுத்துவதற்கு மதுரை, திருச்சி, கோவை ஆகிய மூன்று நகராட்சி மன்றங் களுக்கும் ரூ. 100 இலட்சம் கொடுக்கப்படும்.

36. இதுகாறும் மேற் கூறப்பட்ட, வீட்டு வசதித் துறையின் பணிகள் பற்றிய விளக்கம், நிர்வாகத்தில் வெளிப்படையான-தூய்மையான நிர்வாக முறைகளை உறுதி செய்வதற்கு அண்மைக் காலத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப்பற்றிச் சுருக்கமாகக் கூறினல் ஒழிய முற்றுப் பெருது. இங்ஙனம் எடுத்துக்கொள்ளப்பட்ட நிர்வாக அபிவிருத்திப் பணிகளில் சில கீழே கூறப்பட்டுள்ளன:—

(அ) அரசின் வாடகைக் குடியிருப்பு ஒதுக்கல், விண்ணப்பத்தின் வரிசை முறைப்படி, கண்டிப்பாகச் செய்யப்படுகிறது. ஐந்து காலி இடங்களில் முதல் மூன்று காலி இடங்கள், மாற்றப் பெறுபவர்களுக்கும், புதிதாகத் திருமணம் ஆனவர்களுக்கும் தரப்படுகின்றன. மீதிக் காலியிடங்கள் தலவாரியான அரசாங்கப் பணியாளர்களுக்குத் தரப்படுகிறது. விண்ணப்பத் தேதி வரிசை முறைப்படி விண்ணப்பப் பட்டியல்கள் தயார் செய்து, சம்பந்தப்பட்ட எல்லா அரசு அலுவலகங்களின் அறிவிப்பு பலகைகளிலும் பார்வைக்காக வைக்கப்படுகின்றன.

(ஆ) வீட்டு வசதி வாரியத்தின் வாடகைக் குடியிருப்பு ஒதுக்கலும், விண்ணப்பத்தின் வரிசை முறைப்படியே கண்டிப்பாகச் செய்யப்படுகிறது. இங்கும் விண்ணப்பங்களின் பட்டியல்கள், பொதுமக்களின் ஆய்வுக்காக அறிவிப்புப் பலகைகளில் வைக்கப்படுகின்றன.

(இ) குடிசை மாற்று வாரியத்தின் வாடகை மற்றும் தவணை முறைக் குடியிருப்புகளின் காலியிடங்கள் பற்றிய விபரங்களும் தகுதி பெற்ற குடிசைவாசிகளுடைய விண்ணப்பங்களின் விவரங்களும் இதே போன்று அறிவிப்புப் பலகைகளில் பார்வைக்காக வைக்கப்படுகின்றன.

(ஈ) வீட்டு வசதி வாரியத்தின் தவணைமுறை வீடுகள்/மனைகள்/குடியிருப்புகள் ஆகியவை, பொது விளம்பரங்கள் மூலம் விண்ணப்பங்கள் பெற்று, விண்ணப்பத்தின் வரிசை முறை அடிப்படையிலும், வருமானத் தகுதி அடிப்படையிலும் ஒதுக்கல் செய்யப்படுகின்றன.

(உ) திருப்பி ஒப்புவிக்கப்படுகின்ற வீட்டு வசதி வாரியத்தின் மனைகள், அரிசனங்கள் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்கள் ஆகியோருக்கு ஒதுக்கல் செய்வதற்காக ஒதுக்கிடு செய்யப்படுகின்றன.





(ஊ) வீடு கட்டும் கடன்கள் அரசுப் பணியாளர்களுக்கு, விண்ணப்பத்தின் வரிசை முறைப்படி கண்டிப்பாகத் தரப்படுகிறது.

(எ) வீட்டு வசதி வாரியத்திலும், குடிசைப் பகுதி மாற்று வாரியத்திலும், நடைபெறுகின்ற கட்டுமானத்தின் தரத்தைச் சோதனை செய்வதற்கு, திடீர் ஆய்வுகள் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு, தவறு செய்யும் ஒப்பந்தக்காரர்கள் மீதும், கடமை தவறும் குற்றவாளி அலுவலர்கள் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(ஏ) வீட்டு வசதி வாரியம், மற்றும் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினுடைய பல்வேறு கோட்ட அலுவலகங்கள் மற்றும் இதர பிரிவு அலுவலகங்களின் அகத்தணிக்கையை நாளது தேதி வரை சரி செய்துகொண்டு வரும் நோக்கத்துடன், மாநில கணக்காய்வுத் தலைவர் அலுவலகத்திலிருந்து, அனுபவம் வாய்ந்த அலுவலர்களைக் கொண்டு, கூடுதல் அகத்தணிக்கைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தணிக்கை, முறையான அடிப்படையில் செய்யப்பட்டு உரிய காலத்திற்கு முன்பாகவே முடிக்கப்படுகிறது.

## இணைப்பு III

### கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி கொள்கைக் குறிப்பு.

இந்த இருபதாம் நூற்றுண்டு எதிர்நோக்கியுள்ள பெரும் பிரச்சினைகளில் நகர் மையங்களின் திட்டமிட்ட வளர்ச்சி பற்றிய சிக்கல் முக்கியமான ஒன்றென உலகம் முழுவதும் தற்பொழுது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நகர்ப்புற மையங்களில் முன் நிகழ்ந்திராத மக்கட் பெருக்கமும் அதனுடன் வறுமையின் தாழ்ந்த நிலையும் நம் நாட்டில் இச்சிக்கலை மேலும் பெரிதாக்கியுள்ளன. இந்திய நாட்டில் அதிக நகர் மையங்களைக் கொண்டதென தனிச் சிறப்பு பெற்றது தமிழ்நாடு. நகர் மையங்களின் திட்டமிட்ட வளர்ச்சி பற்றிய நடவடிக்கைகளை முன்கூட்டியே காலங் கருதி செய்யாவிடில் நம்மிடையே விரும்பத்தகாத நிலை ஏற்பட்டுவிடும். இக்கருத்தினை அறிந்தே தமிழக அரசு நகர் ஊரமைப்பு இயக்கத்திற்கு தனியே ஓர் இயக்குநர் பதவியை ஏற்படுத்தி, நகர் ஊரமைப்புத் துறையின் பணிகளை மேம்படுத்தவும், முறைப்படுத்தவும் முடிவு செய்துள்ளது.

2. நகர்ப்புற வளர்ச்சிக்கு திட்டமிடுதல் என்பது தற்கால அறிவியலில் புதிய ஒரு துறையாகும். கடந்த பத்தாண்டுகளில் மேற்கத்திய நாடுகளில் புதிய விஞ்ஞான முறை நுணுக்கங்களைப் பயன்படுத்தி பெரும் வளர்ச்சித் திட்டங்கள் நகரமைப்புத் துறையில் உருவாக்கப்பட்டுள்ளன. சூழ்நிலை பாதுகாப்புப் பணி உள்பட நகர் ஊரமைப்பு இயலின் எல்லா கூறுபாடுகளையும் கவனிக்கும் வகையில் இத்துறையின் பணிகளை விரிவு செய்யவும், தமிழக அரசு பல வழிகளை கருத்திற்கொண்டுள்ளது. நகர் ஊரமைப்பு இயலின் புதிய பல நுணுக்கங்களைப் பயன்படுத்தும் வகையில் இத்துறையை சீரமைத்தலும், திட்ட வளர்ச்சியின் எல்லா நிலைகளிலும் தகுந்த கண்காணிப்பு முறைகளை ஏற்படுத்துதலும், இன்று தமிழக அரசை எதிர்நோக்கியுள்ள கடமைகளாகும்.

3. சென்னை பெருநகர் பகுதிக்கு, பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்படுத்தியது நகர் ஊரமைப்புத் துறையின் பெருஞ்செயலாகும். இக்குழுமம் உலக வங்கி மற்றும் இந்திய அரசின் உதவியுடன் திட்ட அமைப்பிலும் திட்டத்தை செயற்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. சென்னை பெருநகர்ப் பகுதி நீங்கலான தமிழகத்தின் பிற பகுதி எட்டு மண்டலங்களாய் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திற்கும் இத்துறையால் வரைவு மண்டலத் திட்டங்கள் ஆயத்தமாக்கப்பட்டுள்ளன. இம் மண்டலங்கள் மேலும் உள் மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, அவ்வுள் மண்டலங்களுக்கான விரிவான திட்டங்கள் தற்போது ஆயத்தம் செய்யப்படுகின்றன. திட்ட அமைப்பு விரிவான முறையில் செய்ய வேண்டும் என்ற நிலை தற்போது ஏற்பட்டுள்ளதால், ஒவ்வொரு மாவட்டத்தையும், ஒரு தனி திட்டப் பகுதியாக (மண்டலமாக) அமைக்க இத்துறை முன்மொழிவுகளை ஆயத்தம் செய்துள்ளது.

4. தமிழக அரசின் திட்ட அமைப்புப் பணிகளுக்குத் துணை செய்யும் வகையில் உருவாக்கப்பட்ட நகர் ஊரமைப்பு வாரியத்தை மீண்டும் செயல்படச் செய்ய ஆவன செய்யப்படும். மேலும், 1971 ஆம் ஆண்டின் புதிய நகர் ஊரமைப்புச் சட்டத்தை விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படும். தமிழக அரசு அறிவித்துள்ள உள்ளூர்த் திட்டக் குழுமங்கள் செயலாற்றல் பெறுதல் வேண்டும். புதிய நகர் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் இதுவரை 94 உள்ளூர்த் திட்டக் குழுமங்கள்





ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம் மற்றும் கோயமுத்தூர் ஆகிய ஐந்து பெரிய நகரங்களுக்கு தனிக் கவனம் அளிக்கப்பட வேண்டும். தமிழக அரசு இந்த நடப்பு நிதியாண்டில் இந்த ஐந்து நகர்களுக்கு 1991 ஆம் ஆண்டில் பெருகி இருக்கக்கூடிய மக்கள் தொகையை கருத்தில்கொண்டு முழுமைத் திட்டங்களை வகுக்க உத்தேசித்துள்ளது. இந்த ஐந்து நகரங்களுக்கு ஒருங்கிணைந்த நகரமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, இந்திய அரசு மற்றும் உலக வங்கியின் உதவியுடன் இத்திட்டங்கள் நிறைவேற்றப்படும். முழுமைத் திட்டத்துடன் ஒருங்கிணைந்த போக்குவரவு பற்றிய ஆய்வுகள் கோயமுத்தூர் நகருக்கு முடிக்கப்பட்டு, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி நகரங்களுக்குத் தொடங்கப்பட்டுள்ளன. ஓசூர், மாமல்லபுரம், சேலம் இரும்புத் தொழிற்சாலைப் பகுதி போன்ற தனித்த வளர்ச்சி கொண்ட பகுதிகளுக்கு புதிய நகரங்களை உருவாக்க தமிழக அரசு உத்தேசித்துள்ளது. மேலும், நகர்ப்புறப் பகுதிகள் திட்டமிட்ட முறையில் வளர்ச்சிபெற அடிப்படையாக உள்ள விரிவான வளர்ச்சித் திட்டங்கள் விரைவில் உருவாக்கி செயலுரிமையாக்க தமிழக அரசு உத்தேசித்துள்ளது. இந்த விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் விரைவில் செயலுரிமை பெறும் பொருட்டு, செயலுரிமை வழங்கும் அதிகாரத்தை 1971 ஆம் ஆண்டின் நகர் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் நகர் ஊரமைப்புத் துறை இயக்குநருக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளது.

5. நகர் ஊரமைப்புத் துறை இதுவரை 53 முழுமைத் திட்டங்களை ஆயத்தமாக்கியுள்ளது. அவை யாவும் செயலுரிமை பெரும்படி முறையில் பல்வேறு நிலையில் பரிசீலனையில் உள்ளன. மேலும் இத்துறை நடப்பு நிதியாண்டில் 10 நகர் மையங்களுக்கு முழுமைத் திட்டங்களையும், எட்டு உள் மண்டலங்களுக்கு வட்டாரத் திட்டங்களையும் உருவாக்க உத்தேசித்துள்ளது. 1920 ஆம் ஆண்டின் நகரமைப்புச் சட்டத்தின்கீழ் 189 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தமிழக அரசால் செயலுரிமை அளிக்கப் பட்டு அத்திட்டப் பணிகள் செயற்படுத்தப்படுகின்றன. இப் பணிக்காக தமிழக அரசு 1970-77 ஆண்டுகளில் ரூ. 43.90 இலட்சம் உள்ளாட்சி மன்றங்களுக்கு கடன் தொகையாக அளித்துள்ளது. மேலும் நடப்பு நிதியாண்டில் நகராட்சிகளுக்கு ரூ. 6.00 இலட்சம் அளிக்க தமிழக அரசு உத்தேசித்துள்ளது.

6. இத்துறையில் பணியாளர்கள் செயல்திறனில் மேம்பாடு அடையவும் பதவி உயர்வு பெறவும், நகாரமைப்பு இயலில் மேல் படிப்பிற்காக இத்துறை தனது பணியாளர்களை சார்பாளர்களாக அனுப்பி, பயிற்சித் திட்டங்களை நிறைவேற்றுகிறது. தொழிற்கல்வி பயிற்சித் திட்டத்தின்கீழ் 21 பேர்களுக்கு இத்துறை பயிற்சி அளித்துள்ளது. மேலும் இத்துறை பல்வேறு ஆராய்ச்சிகளையும், திட்டத்திற்கான அடிப்படையான ஆய்வுகளையும் மேற்கொண்டு, வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் போன்ற அரசுத் துறைகளுக்கு உதவி அளிக்கிறது.

### சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழு.

சென்னை பெருநகர் வட்டாரத்தின் திட்டமிட்ட முறையான வளர்ச்சிக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் இக்குழுமத்திற்கு 1975 ஆம் ஆண்டு சட்டபூர்வமான அங்கீகாரம் அளிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் புறநகர்ப் பகுதி மற்றும் புது நகா திட்டமிடலுக்கும், வளர்ச்சிக்கும் தன்னை ஈடுபடுத்தி வருகிறது. மேலும், அடிப்படைத் திட்டங்கள் தீட்டுதலும், சென்னை பெருநகர் பகுதிக்குள் வட்டார வளர்ச்சி இனிது நிறைவேற்றும் வகையில், குடிநீர் அளித்தல், சாலை பராமரிப்பு, போக்குவரத்து, விட்டுவசதி, குடிசை மாற்று அபிவிருத்தி, சமுதாய உதவித் திட்டம் போன்ற இவ்வோரன்ன பிற பலதரப்பட்ட பிராந்தியத் திட்டங்களை வகுத்து, ஒருங் கிணைத்து நிறைவேற்றுவதில் உலக வங்கித் திட்டத்தின் ஒரு பகுதி யாக இக்குழுமம் மேற்கொண்டு செயல்படுகிறது.

### சமுதாய வசதிகளைப் பெருக்கும் திட்டம்.

இத்திட்டம் பள்ளிக்குச் செல்லுமுன் கற்கவேண்டிய கல்வி, கூடுதல் சத்து உணவு, நலம் பேணுதல், கல்வி அறிவு, வேலை வாய்ப்பு, குடிசைப் பகுதி மேம்பாடு ஆகியவற்றிற்குத் திட்ட மிடுகிறது. தற்போது மேற்கொண்டுள்ள திட்டங்களும், இவைகளின் முன்னேற்றங்களும் கீழ்க்கண்டவாறு :

### மணலி திட்டமும் வளர்ச்சியும்.

மணலி புறநகர்ப் பகுதி, சென்னை மாநகரின் வடபுறத்தே, மணலி எண்ணூர்-திருவொற்றியூர் சுற்றுப்புறங்களிலுள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளிகளுக்கும் இதர





தொழிலாளிகளுக்கும் குடியிருப்பு மனைகள் அமைக்கும் வகையில் அபிவிருத்தி செய்யப்படுகிறது. இவ்வபிவிருத்தியின் முதற் கட்டமாக 198 ஹெக்டேர் நிலப்பரப்பிற்கு 400 இலட்ச ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டு, 114.78 இலட்ச ரூபாய் இதுவரையில் செலவிடப்பட்டுள்ளது. 69.20 இலட்ச ரூபாய் கடனுதவியாக, புறநகர் வீட்டுவசதி அபிவிருத்திக் கழகத்திடமிருந்து மணலி பகுதியில் 543 வீடுகள் கட்டுவதற்காகப் பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள நகர்ப்புறப் பகுதிகளுக்குத் திட்டமிடுதல் மற்றும் மாநகரின் ஐந்து புறநகர்ப் பகுதிகளின் வளர்ச்சியும் கவனிக்கப் படவேண்டியுள்ளது.

### மறைமலை நகர் புது நகரம்.

மறைமலைநகர் என்ற பெயருடன் புதிய நகரம் சென்னை மாநகரிலிருந்து 45 கி.மீ. தொலைவில் தாம்பரம் மற்றும் செங்கல்பட்டிற்கு இடையே திட்டமிடப்பட்டுள்ளது. இப்புது நகர் முடிவாக ஒரு இலட்சம் மக்களுக்குக் குடியிருப்பு வசதியளித்து, தன்னிறைவு பெற்றதாக விளங்கும் வகையில் அபிவிருத்தி செய்யப்படுகிறது. இப்புது நகர் தொழிற்சாலை, குடியிருப்பு, வணிகம் மற்றும் அறிவுக்கூடங்கள் ஆகியவைகளுக் கான மனைகள் கொண்டதாக விளங்கும். சமுதாய வசதிகளுக்கான மனைகளும் ஏற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக 200 இலட்ச ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டு 86.086 இலட்ச ரூபாய் இதுவரை செலவிடப்பட்டுள்ளது. மேலும் இரு துணை நகரங்கள் ஒன்று திருவள்ளூரிலும் பிறிதொன்று கும்மிடிபூண்டியிலும் நிறுவ திட்டமிடப்பட வேண்டியுள்ளது.

### அடிப்படைத் திட்டம் மற்றும் வட்டார வளர்ச்சித் திட்டம்.

1971 ஆம் ஆண்டின் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் (திருத்தப்பட்டது), சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை பெருநகர் பகுதிக்கு முழுமையாக ஓர் அடிப்படைத் திட்டம் தயார் செய்வதும் வெளியிடுவதுமான பொறுப்பை மேற்கொண்டுள்ளது. மற்றும் சென்னை பெருநகர்ப் பகுதி வட்டார வளர்ச்சித் திட்டங்களைத் தயார் செய்வது, வெளியிடுவது மற்றும் நிறைவேற்றுவது ஆகிய பணிகளை மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் 1971 முதல் 1991 வரை உள்ள

20 ஆண்டுகள் வரை இருக்கக்கூடிய மக்கள் தொகைக்கானதாகும். இதற்கான ஓர் அடிப்படைத் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. கூடுதலாக பல வட்டார வளர்ச்சித் திட்டங்களும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. நகருக்குள் 30 பகுதிகளுக்கு வட்டார வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணி சென்னை பெருநகர் பகுதிக்குள் வரும் எல்லா புறநகர்ப் பகுதிகளையும் உள்ளடக்கி செயல்படுத்த வேண்டியுள்ளது.

## தனி வளர்ச்சித் திட்டம்.

திட்டமிட்ட வளர்ச்சி அடையும் குறிக்கோளோடு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பேருந்தின் திருப்புமுனைகள், மொத்த விற்பனை அங்காடிகள் ஆகிய இவைகளுக்கு மாற்று இடங்களை அமைத்தல் மற்றும் பல்வேறு அலுவலகங்கள், ஊர்க் கடைப் பிரிவுகள் கட்டுதல் போன்ற பணிகளைச் செய்ய உத்தேசித் துள்ளது. இவை குறித்து திட்டப் பணிகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

## சென்னை புறநகர் வளர்ச்சித் திட்டம்.

பல்வேறு திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றும் நிறுவனங் களோடு கலந்து ஆலோசித்து புறநகர் வளர்ச்சியை மேம்பாடு செய்தல் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பொறுப் பாகும். திட்ட ஒருங்கிணைப்பு மற்றும் மதிப்பீடு செய்தல் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மிக முக்கியப் பணிகளில் ஒன்றாகும். இத்திட்டம் 1971 முதல் 1991 வரை இருக்கக்கூடிய மக்கள் தொகைக்கானதாகும்.

நடப்பு ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து உலக வங்கியின் உதவியோடு 47 கோடி ரூபாய் செலவில் சென்னை புறநகர் வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்படுகின்றது. இதன் கூடவே



20.24 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழான மற்றப் பணிகளும் 1977-78 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்கண்ட திட்டங்கள் சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலை இலாகா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், குடிசைமாற்று வாரியம், சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சிறுதொழில் அபிவிருத்திக் கழகம், பல்லவன் போக்கு வரத்துக் கழகம், தமிழ்நாடு கைத்தொழில் வளர்ச்சிக் கழகம் போன்ற சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உதவுகிறது. 1980 ஆம் ஆண்டுக்குப் பிறகான இரண்டாவது கட்ட புறநகர் வளர்ச்சித் திட்டத்தை உலக வங்கியின் ஒப்புதலுக்காக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தீட்டத் துவங்கியுள்ளது.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

### வெள்ளிக்கிழமை, 1977, ஆகஸ்டு 12.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### ஒகேனக்கல்லில் நீர் மின் நிலையம்.

* 49. வினா—திரு. என். இராமச்சந்திரன்: டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே அணைகட்டி ஒகேனக்கல்லில் நீர் மின்சார நிலையம் ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தில் இரு மாநிலங்களுக்கிடையேயான பிரச்சினைகள் அடங்கியுள்ளன. இது பூர்வாங்க நிலையிலிருக்கிறது.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைசூர் மாநிலத்தோடு ஒரு சுமுகமான உறவு இருக்கிற இந்த நேரத்தில் ஒகேனக்கல்லில் இந்த நீர் மின் சாரத் திட்டத்தை அமைக்க திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாபுண்மிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஒகேனக்கல் நீர் மின்திட்டம் சுமார் 800 மெகவாட் உற்பத்தி செய்யக்கூடிய திட்டமாகும். இரு மாநிலங்களுக்கிடையே ஓடும் காவிரி ஆற்றின் குறுக்கே அணை கட்டி இந்த மின் உற்பத்தித் திட்டத்தை அமைக்க வேண்டியிருக்கிறது. அண்மையில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த மின்சாரத்துறை அமைச்சரிடம் இதுபற்றி எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு இதற்கான நடவடிக்கைகளை, கர்நாடக அரசைக் கலந்து இந்த அரசு எடுக்க முயற்சி செய்யும்.

[1977 ஆகஸ்டு 12

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இந்தத் திட்டம் பற்றிய பரிசீலனை பூராவாக முடிந்து விட்டது. இதற்கு முன்னால் இருந்த அரசே பேச்சுவார்த்தைகளை நடத்தியது. இதற்கான செலவுத் தொகை என்ன ஆகும் என்பது திட்டமிடப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தத் திட்டம் காவேரி ஆற்றில் இருந்து எவ்வளவு தண்ணீர் மேட்டூருக்கு வருகிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. காவேரி நதி நீர் பங்கீடு குறித்து இன்னும் ஒரு முடிவுக்கு வராத சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் இந்தத் திட்டம் தீவிர ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

திரு. செ. ராமலிங்கம்: மைசூரிலிருந்து நமக்கு தண்ணீர் விடுவதற்கு நாம் மைசூருக்கு மின்சாரம் தருகிறோம். அப்படி நம் மாநிலத்தில் இருந்து காரைக்காலுக்கு தண்ணீர் விடுவதற்கு பாண்டிச்சேரி மாநிலம் நமக்கு என்ன கொடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. சி. ஆறுமுகம்: இந்த ஒகேனக்கல் நீர் மின்சாரத் திட்டம் பற்றி நீண்ட காலமாகப் பேசப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தை விரைவாக முடிப்போமானால் தமிழகத்தில் மின்சாரப் பற்றாக்குறையை அகற்ற முடியும். இதில் போதிய கவனம் செலுத்தி நமது அரசு வேகமாக கர்நாடக அரசோடு பேச்சுவார்த்தையை நடத்தி, இத்திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 1965இல் இருந்து இந்த ஒகேனக்கல் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் பொதுவாக இந்த இரண்டு மாநிலங்களிலும் உள்ள மின்சாரத் தட்டுப்பாட்டை நீக்க முடியும். இந்தக் கருத்தை கர்நாடக அரசுக்குச் சொல்லியிருக்கிறோம். நல்ல சூழ்நிலை இருப்பதால் நல்ல எதிர்காலம் பிறக்கும் என்று கருதுகிறேன்.

திரு. என். இராமச்சந்திரன்: மைசூர் அரசாங்கம் நம்முடைய அனுமதியின்றி ஹேமாவதியில் அணை கட்டியிருக்கிறது. அதைப்போல நாம் மைசூர் அரசாங்கத்தின் அனுமதியின்றி ஒகேனக்கல்லில் இந்தத் திட்டத்தை ஏற்படுத்த முடியாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தண்ணீர் மேலே இருந்து கீழே வரவேண்டும்.



1977 ஆகஸ்டு 12]

திரு. ப. உ. சண்முகம்: நான்காண்டுகளுக்கு முன்பு கர்நாடக மாநிலத்தில் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த திரு. சென்னபசவப்பா அவர்களும் நானும் இந்த இடத்தைச் சென்று பார்த்தோம். அந்த இடத்திற்கு பத்தாயிரம் க்யூசெக்ஸ் தண்ணீர் வந்தால் எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும், இருபதாயிரம் க்யூசெக்ஸ் வந்தால் எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்கிற புள்ளிவிவரங்களை சேகரிக்கும்படியாக அவர் கர்நாடக அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றிய தகவல் நமக்கு ஏதாவது வந்திருக்கிறதா? நமது அரசாங்கம் இதுபற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அளித்த தகவலுக்கு நன்றி.

திரு. வி. கே. கோதண்டராமன்: கனம் அமைச்சர் அவர்கள் காவிரி ஆற்றுத் தண்ணீர் பிரச்னை தீராத காரணத்தினால் தான் இந்த ஒகேனக்கல் நீர் மின்சாரத் திட்டம் தடைபடுகின்றது என்று கூறினார்கள். அப்படியானால் காவிரி ஆற்றுத் தண்ணீர் பிரச்னை எந்த அளவுக்கு பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது, ஏதாவது ஒரு முடிவுக்கு வர முடியும் என்கின்ற நம்பிக்கை இருக்கின்றதா? அப்படி முடியாவிட்டால், இதை விரைவில் முடித்துவைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஒகேனக்கல் நீர் மின் திட்டம் காவேரி நீர்த் திட்டத்தோடு இணைந்த பிரச்னை. காவேரி நீர்ப் பங்கீடு பிரச்னை பற்றி தனியாக கேள்வி போட வேண்டுகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றின் குறுக்கே கர்நாடக அரசு எத்தனை அணைக்கட்டுகள் கட்டியிருக்கின்றது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிக் கேள்வி வேண்டும்.

திரு. இ. ராமலிங்கம்: தென்னார்க்காடு மாவட்டத்தில் காவிரி நீர் பாயும் பரப்பு என்ன?

(விடை இல்லை.)

திரு. க. அன்பழகன்: அமைச்சர் அவர்கள் விடையளித்ததிலிருந்து இந்தப் பிரச்சனை விரைவாக தீர்க்கப்படுவதற்கான சூழ்நிலை இருப்பதாகத் தோன்றவில்லை.

[1977 ஆகஸ்டு 1

"Cauvery Valley Authority" காவிரி ஆற்றுப் படுகை ஆணைக்குழு என்று ஒரு அமைப்பை நியமிக்கப் போவதாகச் சொல்லப் பட்டது. அப்படிப்பட்ட அமைப்பு இதுகாறும் நியமிக்கப் பட்டிருந்தாலும் இல்லையென்றாலும், விரைவில் அமைக்கப் பட்டு இந்த நீர்ப் பிரச்சனையை விரைவில் தீர்த்துவைப்பதற்கு அந்த அமைப்பு வழிகோலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அண்மையில் ஆளுநர் ஆட்சி காலத்திலும் காவிரி பிரச்சனை குறித்து நடந்த பேச்சு வார்த்தையின் மூலமாகவும் அதற்கு முன்பே இப்படிப்பட்ட "Cauvery Valley Authority" என்ற அமைப்பை ஏற்படுத்தலாம் என்று மூன்று மாநிலங்களும், தமிழகம், கேரளா, கர்நாடகம் இம்மூன்று மாநிலங்களும் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டிருந்தன. இதைப்பற்றி செயலாளர்கள் அளவில் பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது.

திரு. செ. சிவசாமி : காவிரி பிரச்சனை இன்னும் தீர்க்கப் படவில்லை என்று சொல்லப்படுகிறது, அப்படியென்றால் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் என்ன ஆனது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது ஒகேனக்கல் நீர் மின் திட்டம் பற்றிய கேள்வி.

திரு. வி. கே. கோதண்டராமன் : காவிரி ஆற்றுத் தண்ணீரை நம்பித்தான் " சோழ வளநாடு சோறுடைத்து " என்றும், " மாடு கட்டி போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டி போரடித்தது. " தமிழகம் என்றும் நம் நாடு பாராட்டப் படுகிறது. ஆகவே, இந்த விஷயத்தில் தீவிர நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இப்போது யானைகளும் கிடைப்பதில்லை, அதே போல் காவிரித் தண்ணீரின் நிலைமையும் இருக்கிறது.



1977 ஆகஸ்டு 12]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) 30—6—1977-ஆம் நாள் முடிய மாநிலச் சங்கத்தில் ரூ. 12 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளும், தொடக்கநிலை நெசவாளர் சங்கங்களில் ரூ. 7·50 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளும் தேங்கியுள்ளன.

(ஆ) இத்தேக்கம் இரண்டு மாத உற்பத்தியாகும். இது ஒரு மந்தமான விற்பனை காலமென்று கருதப்படுகிறதால் மாநிலச் சங்கத்திலும், தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களிலும் உள்ள தேக்கம் கணிசமானதாக கருதப்படுவதற்கில்லை. ஆண்டுதோறும் கைத்தறித் துணிகளின் விற்பனையில் தள்ளுபடி மான்யம் வழங்க நிதிநிலையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பண்டிகைக் காலங்களில் கைத்தறித் துணிகளின் விற்பனையில் மாநிலச் சங்கத்திற்கும், தொடக்கச் சங்கங்களுக்கும் அரசு தள்ளுபடி மான்யம் வழங்குகின்றது. இதோடுகூட மேற்படி சங்கங்கள் தங்களுடைய விற்பனையில் தள்ளுபடி அளிக்கின்றன. மாநிலச் சங்கத்திடமிருந்தும் தொடக்கச் சங்கங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் வரும்பொழுதெல்லாம் அரசு, தள்ளுபடி மான்யத்தை முறையாக வழங்கி வருகின்றது.

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது 12 கோடி ரூபாய் அளவுக்கு துணிகள் மாநிலச் சங்கத்திலும், பிரதம சங்கங்களில் 7 கோடி ரூபாய் அளவுக்கும் துணிகள் தேங்கியிருப்பதாகச் சொன்னார்கள். பிரதம சங்கங்களில் நெசவாளர்களுக்கு மிகவும் குறைந்த கூலி—2 ரூபாய் அளவுக்குத்தான் கிடைக்கிறது. பிரதம சங்கங்களில் துணிகள் தேங்கியிருப்பதன் காரணமாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏழை நெசவாளர்கள் பட்டினியாக இருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதைத் தீர்க்கின்ற வகையில் பிரதம சங்கங்களில் தேங்கியிருக்கும் 7 கோடி அளவுக்குள்ள துணிகளை அரசாங்கமே வாங்கி, அதன் மூலம் கஷ்டத்தில் இருந்து கொண்டிருக்கும் தொழிலாளிகளுக்கு வேலை கிடைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, தேங்கியிருக்கின்ற துணிகளை இப்போது கொள்முதல் செய்ய கைத்தறித் துறை அறிவித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1977 ஆகஸ்டு 12

செய்தால், நெருக்கடி சற்று குறையும். அந்த அளவிலே ஏதாவது திட்டம் நம் அரசாங்கத்தில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல யோசனைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் கூறியபடி ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும், 5 சட்டைத் துணிகள், 5 வேட்டிகள் கொடுத்து, அதே சமயத்தில் அதற்கான தொகையை அவர்கள் சம்பளத்திலேயே பிடித்துக் கொள்ளலாமா என்று அரசாங்கம் யோசனை செய்துகொண்டிருக்கிறது. அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. இரா. முத்தையா :</u> தலைவர் அவர்களே, சில நல்ல ரகத் துணிகள் எல்லாம்கூட தேங்கிக் கிடப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதையெல்லாம் விளம்பரப்படுத்தும் அளவிலே, சில இடங்களுக்கு இலவசமாக வினியோகம் செய்யலாம். நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர் அவர்கள் 5 சட்டைத் துணி, 5 வேட்டிகள் கொடுத்து, அதற்கான தொகையை சம்பளத்திலே பிடித்துக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்கள். அதற்குப் பதில், அவைகளில் ஒவ்வொன்றை இலவசமாகக் கொடுக்க இந்த அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> தலைவர் அவர்களே, ஏற்கெனவே நெசவாளர்கள் ரொம்பக் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதாக உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, பணம் கொடுத்து வாங்கிக் கொண்டால் நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகள் நிறையத் தேங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே, இந்தத் துறையிலுள்ள கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் இந்த கைத்தறித் துணி அணிந்திருக்கிறார்களா ? மற்றுமுள்ள அமைச்சர்கள் அனைவரும் இந்த நேரத்திலாவது ஆயுள் முழுவதும் கைத்தறியைத் தவிர மற்றத் துணிகளை உடுத்த மாட்டோம் என்ற உறுதிமொழியை எடுத்துக் கொள்ளுகிறோம் என்று அறிவிப்பார்களா ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அமைச்சர் அவர்களைப் பற்றிச் சொன்ன உறுப்பினர், அவரைப் பற்றி என்ன சொல்கிறார் ?

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> பேரறிஞர் அண்ணா அவர்கள் என்றைக்கு கைத்தறித் துணியை உடுத்த வேண்டுமென்று சொன்னார்களோ, அன்று முதல் இன்றுவரை கைத்தறித் துணியை



1977 ஆகஸ்டு 12]

உபயோகப்படுத்துகிறேனே தவிர, வேறு துணிகளை நான் உபயோகப்படுத்துவதில்லை. அந்த எண்ணத்தில்தான் இந்த மற்றவர்களுக்கு நான் தெரிவித்தேன். குறிப்பாக, கைத்தறி அமைச்சர் அவர்கள் கைத்தறித்துணியைத் தவிர, வேறு துணிகளை உபயோகப்படுத்தக்கூடாது. அவர் மேடையிலே பேசுகின்ற போதுகூட, கைத்தறியை உபயோகிக்க வேண்டுமென்று பேசியதாகக் கேள்விப்பட்டேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது உடுத்தியிருப்பதும் கைத்தறித் துணிதான். கைத்தறியிலே அந்த அளவில் இப்போது நல்லரகத் துணிகள் உற்பத்தியாகின்றன என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. அ. க. அரங்கநாதன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, 19 கோடி ரூபாய் அளவுக்கு கைத்தறித் துணிகள் தேங்கியிருப்பதால் வேலையின்றித் தவித்துக்கொண்டிருக்கும் இந்த நெசவாளர் குடும்பங்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு அளிக்க இந்த அரசாங்கம் முன்வருமா ?

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> பேரவைத் தலைவர் அவர்களே, தேங்கிக் கிடக்கும் துணிகளை கொள்முதல் செய்தாலே, அவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு கிடைக்கும். எனவே, தேங்கிக் கிடக்கின்ற துணிகளை கொள்முதல் செய்வதே மிகப் பெரிய காரியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. ஓ. சுப்பிரமணியன் :</u> தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகள் விற்பனை ஆகாமல் தேங்கி இருப்பதற்கு காரணம், மில்களும், பவர் லூம்களும் போட்டியாக இருப்பதுதான் என்கின்ற ஒரு அபிப்பிராயம் இருப்பதால், கைத்தறித் துணிகளுக்கு மட்டும் என்று சில ரகங்களை ஒதுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகளுக்கென்று ஏற்கெனவே சில ரகங்கள ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த ரகங்களை கைத்தறி மட்டுமே, கைத்தறி நெசவாளர்கள் மட்டுமே உபயோகப்படுத்த முடியும். அதற்கான சட்டமும் அமலில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. எஸ். ஆர். இராதா :</u> தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களிலே மட்டும் 19 கோடி ரூபாய் கைத்தறித் துணிகள் தேங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த 19 கோடி ரூபாய் மட்டுமில்லாமல், தனி வியாபாரிகளிடம் இன்னும் பல கோடி ரூபாய் கைத்தறித் துணிகள் தேங்கியிருக்கின்ற காரணத்தால் அந்தத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத்

தெரிவித்து, அவர்களுடைய துணியை அரசின் மூலமாக விற்ப தற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஏற்கனவே பிரைமரி சங்கங்களில் உள்ள துணிகளைக் கொள்முதல் செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள். தனியார் துணிகளைப் பற்றித் தகவல் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட வேண்டுகோள் வந்தால் அது பற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இப்போது பண்டிகை காலங் களில் மட்டும் விசேஷ தள்ளுபடி கொடுக்கப்படுகிறது. ஆண்டு முழுவதும் விசேஷ தள்ளுபடி கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பண்டிகை காலங் களில் கொடுக்கப்படுகிற விசேஷ தள்ளுபடியை தொடர்ந்து கொடுக்கலாமா, அது நல்லதா என்ற யோசனை இருக்கிறது. அது பற்றி நல்ல தகவல்களை அங்கத்தினர் அவர்கள் அரசுக்குத் தெரி விப்பார்களானால் அதுபற்றி யோசிக்கப்படும்.

திரு. க. அன்பழகன் : கைத்தறித் தொழிலைப் பொறுத்தவரை உற்பத்தி தேங்கிப் போகும் நிலைமை ஆண்டு தோறும் நடைபெற்று வருகிற நிலையாகும். அண்மைக் காலத்தில் கைத்தறி ஏற்றுமதி ஓரளவு பாதிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலைபற்றி வெளியே பேசப்படுகிறது. ஆகவே, ஏற்றுமதி மூலந்தான் கைத் தறித் தொழில் பாதிக்கப்படாது வெற்றி பெற முடியும். ஏற்று மதிக்கான வாய்ப்பு, வெளி நாடுகளில் மார்க்கெட் பெருக்குவது பற்றிப் பரிசீலிக்கப்படுமா ? ஊக்கப்படுத்த வழிவகைகள் காணப் படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தமிழக அரசோ அல்லது மாநிலச் சங்கமோ இதுவரை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் அதிக அக்கறை காட்டாமல் இருந்தது. முதல் முறை யாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், மேற்கு நாடுகளுக்கும் நம்முடைய அதிகாரிகள் சென்று அங்குள்ள நிலவரங்களை அறிந்து அதிக அளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டு வருகிறோம் என்பதை மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. க. சு. தண்டபாணி : கைத்தறித் தொழிலுக்கு பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்ட ரகங்கள் சிலவற்றை விசைத் தறிக்கு அனுமதி வாங்கித் தருவதாகச் சொல்லி ஒரு சட்டமன்ற உறுப்பினர் அவருடைய தொகுதியில் ரூ. 50,000 வாங்கி விசைத் தறி உரிமையாளர் சார்பில் டில்லி சென்றார். அவரால் அந்தக் காரியத்தைச் செய்ய முடிந்ததா ? இதுபற்றி அரசுக்குத் தெரியுமா ?





மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அதுபற்றித் தகவல் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : தேங்கியிருக்கும் கைத்தறித் துணி களை விற்பதற்கு கதர்த் துணியை வீற்க ஏற்பாடு செய்வதுமாதிரி அரசு ஊழியர்கள், ஸ்தல ஸ்தாபன ஊழியர்களுக்கு கடன் கொடுத்தால் விற்பனை அதிகமாகும் அல்லவா ? அவர்களின் ஒரு வருஷத் தேவைக்கு வேண்டிய துணியை வாங்கிக் கொண்டு கடனை சம்பளத்தில் இருந்து திரும்பப் பெறுவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது ஏற்கனவே அமலில் உள்ள விஷயம். ஏற்கனவே, அரசாங்க ஊழியர்கள், ஸ்தல ஸ்தாபன ஊழியர் களுக்குக் கைத்தறித் துணிகளைக் கடனாகக் கொடுத்து வருகிறோம்.

திரு. கே. கந்தசாமி : 19 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத் தறித் துணிகள் தேங்கியிருப்பதாக அறிவித்தார்கள். ஏற்கனவே, அமெரிக்காவில் நம்முடைய கோஆப்டெக்ஸ் துணிகளுக்கு மிக அதிக கிராக்கி இருப்பதாகச் சொல்லப்பட்டது. அமெரிக்காவில் இப்போது கைத்தறித் துணிகளை வாங்குகிறார்களா ? இல்லையா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அமெரிக்கா, போன்ற நாடுகளில் மெட்ராஸ் செக் புது ரகத் துணிகளுக்கு அதிகமாக வரவேற்பு இருந்து வந்தது. சமீப காலத்தில் நல்ல மார்க்கெட் இல்லாத காரணத்தால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. தனியார் துறையைப் பொறுத்தவரை துணிகளைக் கொள்முதல் செய்ய மத்திய அரசு முயற்சி செய்கிறது. நம்முடைய அரசைப் பொறுத்தவரை பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள மெட்ராஸ் செக் போன்ற நல்ல ரகங்களை குறிஞ்சிப்பாடி பிராஜெக்ட் மூலமாக உற்பத்தி செய்து, மேலை நாடுகளுக்கு அனுப்ப இருக்கிறோம்.

திரு. மா. சுப்பிரமணியன் : தமிழகத்தில் சென்ற ஆண்டு விற்கப்பட்ட கைத்தறித் துணி மதிப்பு எவ்வளவு ? விற்பனை சதவிகிதம் தற்போது வளர்ச்சி அடைந்துள்ளதா அல்லது வீழ்ச்சி அடைந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தனிக் கேள்வி போடவும்.

திரு. என். வரதராஜன் : கைத்தறித் துணித் தேக்கத்திற்கும் கைத்தறித் தொழில் நெருக்கடிக்கும் நூல் விலையும், சாய விலை யும், ஜரிகை விலையும் ஏறியிருப்பதும் ஒன்றாகும் என்பதை அறிந்து நம்முடைய அரசு இவை எல்லாம் இன்ன விலைக்குத்தான் விற்கப் பட வேண்டுமென்று ஏதாவது நடவடிக்கை எடுத்து சிபாரிசு செய்யுமா?

[1977 ஆகஸ்டு 12

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, அப்படி ஒரு நடவடிக்கை எடுப்பதுபற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, நெய்யும் தொழில் செய்யும் தொழிலில் நிகரற்ற தொழில் என்ற முறையில் அண்ணா அவர்கள் அந்த நெசவாளர் குடும்பங்கள் பட்டினி கிடக்க நேரிட்டபோது அவர்கள் வீதியிலே கைத்தறித் துணிகளை விற்க முன் வந்தார்கள். ஆகவே ஆண்டுக்கு ஒன்றிரண்டு நாட்களாவது அம்மாதிரி அமைச்சர்கள் விற்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாகவும் மற்ற காலங்களிலும் தள்ளுபடி மானியத்தின் மூலமாக தொடர்ந்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்து வருகிறோம். இப்படித் துணிகள் தேங்கி இருக்கிற நிலை ஒரு அசாத்தியமான நிலை என்று கருத வேண்டியதில்லை அப்படித் தேவைப்படுமானால் அத்தனை அமைச்சர்களும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகை காலங்களில்தான் ரிபேட் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுப்பதைப் போல் ரம்ஜான், பக்ரீத் போன்ற பண்டிகை காலங்களிலும் இப்படி ரிபேட் கொடுத்து அரசாங்கம் விற்பனை செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய கைத்தறி நெசவாளர்களுக்கு நீண்டகாலக் கடன் உதவி செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுடைய துணி தேங்குவதற்குக் காரணம் லைசென்ஸ் இல்லாமல் பவர்லூம்கள் அதிகமாக ஓட்டுகிறார்கள் என்பதுதான். குறிப்பாக, சங்கரன்கோவில் பொறுத்த வரையிலே அங்கே லைசென்ஸ் இல்லாமல் பவர்லூம்கள் அதிகமாக ஓட்டுவதால் கைத்தறித் துணிகள் அதிகமாக தேங்கியிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?



1977 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இது குறித்து அவ்வப்பொழுது தகவல் வந்து கொண்டிருக்கிறபோதெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அனுமதியில்லாமல் ஓட்டப்படுகிற விசைத் தறிகளை ஓட்டாமல் நடவடிக்கை எடுத்து தடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கைத்தறி துணி ஏறத்தாழ 19 கோடி ரூபாய் மதிப்புள்ளது தேங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைக் குறைப்பதற்கு அரசுத் துறையில் உள்ள அதிகாரிகள் கட்டாயமாக கைத்தறித் துணிகளைப் பயன்படுத்த வேண்டுமென்று சட்டம் கொண்டு வந்தால் தேக்கத்தைப் போக்கலாமே, ஆகவே அதைப் பற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அரிய யோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அண்மையில் நான் வெளியூர்களுக்குச் சென்றிருந்தபோது கூட கொடுங்குடி, கரூர் இந்த வட்டாரங்களிலே கைத்தறி நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு, வறுமையில் வாடுகிறார்கள் என்ற நிலை எடுத்து விளக்கப்பட்டது. அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் தேவை என்ற கோரிக்கை என்னிடத்திலே அளிக்கப்பட்டது. அந்த அடிப்படையிலே நான் அமைச்சரிடத்திலே கேட்க விரும்புவது, ஏற்கனவே கழக அரசு இருந்தபோது கைத்தறி நெசவாளர்களுக்கு ஓரளவு கடனுகத் தொகை வழங்கப்பட்டது, அதைப்போல் வழங்குவதற்கு இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கைத்தறி நெசவாளர்கள் நம்மிடம் கோரிக்கை விடுத்துக் கொண்டு இருப்பது எல்லாம் தேங்கி இருக்கிற துணியை விற்பனை செய்ய நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டாலே அவர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்கும் என்று சொல்கிறார்கள். ஆகவே தேங்கியிருக்கிற துணிகளை நாம் எடுக்க இப்போது ஆரம்பித்து விட்டோம். ஆகவே பிரச்னை இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொங்கல் வாரத்தில் ஆண்டுதோறும் கைத்தறித் துணிகளுக்குத் தள்ளுபடி அளிக்க வேண்டுமென்பதை ஒரு கோட்பாடாக ஏற்றுக் கொண்டு ரிபேட் வழங்கி வருகிறோம். ஏற்கனவே இருந்த கழக அரசுக்கு ஒரு யோசனை இருந்தது. பொங்கல் வாரத்திலே என்று மட்டும் அல்லாமல் அண்ணா பிறந்த வாரத்தில் கைத்தறித் துணிகளுக்கு ரிபேட் கொடுக்க வேண்டுமென்று கொடுக்கப்பட்டது. ஆனால்

[1977 ஆகஸ்டு 12

இடையிலே ஆட்சி மாறிய காரணத்தாலே அது நிறுத்தப்பட்டு விட்டது. புதிய அரசு அண்ணா பிறந்த வாரத்திற்கும் கைத்தறி துணிகளுக்கு ரிபேட் கொடுக்க முயற்சி மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அரசு பதவியேற்றவுடன் மாண்புமிகு முதல மைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணா பிறந்த நாளிலும், பெரியார் பிறந்த நாளிலும் விசேஷ சலுகை கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதன்படி அரசு அதற்கான ஆக்கப் பணிகளிலே ஈடுபட்டுக் கொண்டு வந்திருக் கிறது. விரைவிலே அரசு அறிவிக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் கைத்தறி துணிகளை ஒரு மாதச் சம்பளத்தில் வாங் கினால்கூட கைத்தறித் துணித் தேக்கம் குறையும் என்பது என் னுடைய கருத்து. (ஆரவாரம்).

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவரவர் களே, வேலையில்லாது கஷ்டப்படும் நெசவாளர்களுக்கு அரசு உதவித் தொகை கொடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, இது குறித்து தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடி வுற்றன.

[ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

## (2) உரிமைப் பிரச்சினை.

### 'அண்ணா' நாளேடு பற்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "அண்ணா" நாளேடு பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் ஒரு உரிமைப்பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். இப்போது திரு க. சுப்பு அவர்கள் இருக்கையில் இல்லை. ஆகவே அது தள்ளுபடி செய்யப்படுகிறது.



1977 ஆகஸ்டு 12] [பேரவைத் தலைவர்]

## (3) அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

### பொதுக்கணக்குக்குழுவிற்கான தேர்தல்.

1977–78-ஆம் ஆண்டுக்கான பொதுக்கணக்குக் குழுவிற்கு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக் கிறேன் :—

திரு. கு. ரமணி.
திரு. பா. கே. சி. முத்துசாமி.
திரு. நா. சுந்தரராஜ்.
திரு. எம். செல்வராஜ்.
திரு. ப. உ. சண்முகம்.
திரு. என். கிட்டப்பா.
திரு. கூத்தகுடி ச. சண்முகம்.
திரு. எஸ். முத்துசாமி கரையார்.
திரு. ஆர். சௌந்தரராஜன்.
திரு. கே. கந்தசாமி.
திரு. எஸ். ஜே. இராமசாமி.
திரு. கே. பண்ணை சேதுராம்.
திரு. துரை. கோவிந்தராசன்.
டாக்டர் கே. சமரசம்.
திரு. ஆர். மணிமாறன்.
திரு. மி. வின்செட்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சம மாக இருப்பதால், 1977–78 ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவில் உறுப்பினர்களாவர்.

பேரவையின் 174-வது விதியின் கீழ் திரு. ப. உ. சண்முகம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

திரு. எம், ஏ. லத்தீப் : தலைவரவர்களே, அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் இருக்கும்பொழுது எதிர்க்கட்சித் தலைவர்தான் சாதாரணமாக இதற்குத் தலைவராக வருவது மரபு. அந்த மரபு மாற்றப்பட்டிருக்கிறதே, என்ன காரணம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் அதற்கு நியமனப் பத்திரமே தாக்கல் செய்யவில்லை. பொதுக் கணக்குக் குழுவிலே அவர் உறுப்பினர் இல்லை. ஆகவே, அதில் இருப்பவர்களில் ஒருவரை அவைத் தலைவர் தேர்ந்தெடுத்திருக்கிறார். அது மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. உ. சண்முகம்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : எதிர்க்கட்சித் தலைவராக அல்லாதவர்களும் அந்தக் குழுவின் தலைவராக இருந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருந்திருக்கிறார்கள், அது வேறு.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, சென்ற முறை அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சி என்று ஒன்று இல்லாத காரணத்தால் எதிர்க்கட்சியிலே இருந்தவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வாய்ப்பு தந்து அதில் தலைவராக நியமிக்கப்பட்டார்கள். ஆனால் இப்பொழுது அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் இருக்கும்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் தம்முடைய பொறுப்பின் காரணமாக அதற்குத் தலைவராக இருக்க வேண்டுமென்பதுதான் இங்கு மரபு பாராளுமன்றத்திலும் அப்படித்தான் மரபு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவரவர்களை நான் கட்டாயப்படுத்த முடியாது. அது அவருடைய விருப்பத்தைப் பொறுத்தது. அவர்கள் இல்லை என்கிறபொழுது வேறு யாரையும் நியமிக்கலாம், எதிர்க்கட்சி வரிசையிலிருந்து. அவர்கள் நியமனப் பத்திரத்தை ஏன் தாக்கல் செய்யவில்லை என்று கட்டாயப்படுத்த முடியாது. அவர் விருப்பப்படவில்லை, தாக்கல் செய்யவில்லை. ஆகவே, இருக்கின்றவர்களில் இன்னாரைத் தலைவராக இருக்கும்படி நியமனம் செய்கிறேன். இது மரபும் கூட.



4. கவன ஈர்ப்பு.

(அ) நெல்லிக்குப்பம் பஞ்சாயத்து ஒன்றியப் பகுதிகளில் நிலத்தடி நீர் இல்லையென்ற காரணத்தால், ஆழ்கிணறுகளுக்குமின் இணைப்புக்கொடுக்க மறுக்கப்படுவதும், அதனால் விவசாயிகளும், விவசாய உற்பத்தியும் பாதிக்கப்பட்டிருப்பதும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்புத் தீர்மானம்.

41 வது விதியின்கீழ், திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் மின்இணைப்புக் கொடுக்க மறுக்கப்படும் பொருள் குறித்து, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள்.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, 41 வது விதியின்கீழ், கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"நிலத்தடி நீர் போதுமானதாக இல்லை என்று நிலத்தடி நீர் ஆய்வு ஸ்தாபனம் தெரிவித்த கருத்தை அடிப்படையாகக் கொண்டு நெல்லிக்குப்பம் பஞ்சாயத்து ஒன்றியம் முழுவதிலும்

எந்த இடத்திலும் ஆழ்கிணறுக்கு மின் இணைப்பு கொடுப்பது மறுக்கப்படுவதால் அந்த ஒன்றியம் முழுதும் ஆழ்கிணறு நீர்ப்பாசனத்தை நம்பி விவசாயம் செய்து வரும் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பது மட்டுமல்லாமல் அந்தப் பிரதேசம் முழுவதும் உணவு உற்பத்தி தடைபட்டிருப்பது குறித்து."

[முற்பகல் 9—30]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் சுமார் 4,900 பாசனக் கிணறுகள் உள்ளன. அவைகளின் 3,882 கிணறுகளுக்கு பம்புசெட் வைக்கப்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளன. 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி வரை மின் இணைப்புக்களுக்கான விண்ணப்பங்கள் 168 இருந்தன. அவற்றுள் 1977-ம் வருடம் ஜூன் மாதம் 30-ம் தேதி

வரை 22 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது. மேலும் இரண்டு பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கும் பணி நடைபெறுகிறது. மீதமுள்ள 144 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம் மின் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. 4,900 கிணறுகள் உள்ள பகுதிகளில் 144 பம்புசெட்டுகளுக்கு மட்டும் மின் இணைப்பு வழங்கும் திட்டம் ஆய்வில் உள்ளதால் உணவு உற்பத்தி நிலைமை பெருமளவுக்கு பாதிக்கப்படாது என்று கருதப் படுகிறது.

2. பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கோரி 2 லட்சத் திற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் தற்சமயம் மின் வாரியத் திடம் இருக்கிறது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டுக்கும் மின் வாரியம் மின் இணைப்பு வழங்கும் பம்பு செட்டுகளின் குறியீடு சுமார் 35,000 பம்பு செட்டுகள்தான். எனவே, பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் தெரிவு செய்யும் ஒரு கொள்கையை வகுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் சுமார் 15,000 பம்பு செட்டுகளுக்கு மாநில நிலவள வங்கி, விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகம் முதலான நிதி நிறுவனங் கள் முதலீடு செய்கின்றன. இவை பொருளாதார ரீதியில் பிற்பட்டவர்களையும் நிதி நிறுவனங்களின் உதவியை கோரியவர் களையும் சார்ந்தால் இவற்றிற்கு மின் இணைப்பு வழங்க முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இவற்றிற்கு இந்த நிறுவனங் களின் விதி முறைக்குட்பட்டு நிலத்தடி நீர் ஒழுங்கு முறை அனுசரிக்கப்படுகிறது. எனவே, மின்வாரியம் இத்திட்டங் களுக்கு உறுதியாக மின் இணைப்பு வழங்க வேண்டும்.

3. நிலுவையிலுள்ள மனுக்களில் நிதி நிறுவனங்களின் முதலீட்டை நாடாதவர்களின் மனுக்களே அதிகமாக உள்ளது. மின் வாரியத்தின் ஒவ்வொரு ஆண்டிலும் மின் இணைப்பு வழங்கும் குறியீட்டுத் தொகைக்குட்பட்டு, பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கும் கொள்கை கீழ்கண்ட விதிமுறைக்குட்பட்டதாக வகுக்க வேண்டி உள்ளது.

(அ) பொருளாதார ரீதியில் சாத்தியமான திட்டங்கள்.

(ஆ) நிலத்தடி நீர் கிடைக்கும் வாய்ப்பு (உணவு உற்பத்தியை பெருக்குவதற்கான நிலத்தடி நீர்வளம் உள்ள பகுதிகளில் மின் இணைப்பு வழங்குவதில் முன்னுரிமை வழங்க வேண்டுமென வருவாய் வாரியம் பரிந்துரைத்துள்ளது).

(இ) ஒரு குறிப்பிட்ட பகுதியில்மின் வாரியம் மின் இணைப்பு வழங்க தயாராக இருத்தல்.



(ஈ) மின் வாரியத்தின் மின் வழங்கும் திட்டங்கள் ஒரு குறிப் பிட்ட பகுதிகளில் உள்ள குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள பம்பு செட்டுகளுக்காக வகுக்கப்படுகின்றன. எனவே ஒரு திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற குறிப்பிட்ட அளவு மனுதாரர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

4. மேற்சொன்ன வரையறைக்குட்பட்டு, நிலுவையிலுள்ள மனுதாரர்களுக்கு விரைவில் மின் இணைப்பு வழங்க எல்லாவித முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, மின் இணைப்பு வழங்குவதற்கு மின்சார வாரியம் தயாராக இருப்பதாகவும், விரைவில் கொடுக்கப்படும் என்றும் அமைச்சரவர்கள் கூறி னார்கள். விவசாயிகள் பம்ப் செட்டை கடனுக்கு வாங்கி, அதற்கான வட்டியும் அதிகமாக இருக்கக்கூடிய சூழ்நிலையில் அவர்களுக்கு அறிவிக்கப்படுவது என்னவென்றால், இனி அந்தப் பிரதேசத்தில் நிலத்தடி நீர் கிடையாது என்று 'செல்', சொல்லி விட்டது, ஆகவே, மின் இணைப்பு கிடைக்கவே கிடைக்காது என்று பயமுறுத்துகிறார்கள். அதனால், விவசாயிகள் வாங்கிய கடன்களைத் திருப்பிக் கட்ட முடியாத நிலைமையிலே, வாங்கிய பம்ப் செட்கள் வாங்கிய கடனுக்கு வட்டியும் கொடுக்க முடியாத நிலையில் அவர்கள் இருக்கின்றனர். அதனால், பயிர் செய்ய முடியாத நிலைமையிருக்கிறது. ஆகவே, துரிதமாக நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் முன் வருவார்களா? அதுமட்டுமல்ல, நிலத்தடி நீர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதமல்ல இது. சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. சி. கோவிந்தராசன் : நிலத்தடி நீர் குறைந்து போகிறது என்று சொன்னால், அங்கே நீர் தங்கக்கூடிய வகை யிலே, பக்கத்திலே இருக்கக்கூடிய ஏரிகளில், நீரோட்டம் கொண்டுவருவதற்கும் ஏரிகளையும், குளங்களையும் மராமத்து செய்து, நீர்த்தேக்கம் கொண்டு வந்தால், நிலத்தடி நீர் ஓரளவு தங்கும். அதற்கான நடவடிக்கையை பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நிலத்தடி நீரைப் பொறுத்தவரையில் ஆண்டுக்காண்டு பெய்கிற மழை அளவைப் பொறுத்திருக்கிறது. ஆகவே, எந்த அள வுக்கு நிலத்தடி நீர் நம்முடைய நாட்டிலே இருக்கிறது என் பதைக் கணக்கெடுத்துச் செலவழிக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்த வரையில் நிலத்தடி நீர் ஆய்வு பற்றிய அரசின் முடிவு, நிலத்தடி நீர் எவ்வளவு இருக்கிறதோ அதற்கு மேலாக பம்ப் செட்களை வைத்து,

தண்ணீரை வெளியே எடுக்கிறோம். ஆகையினாலே நிலத்தடி நீர் மட்டம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகிறது என்று அவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள். அந்த அடிப்படை காரணமாக, மின் வாரியத்தினைப் பொறுத்தவரையில் மின்சார பம்ப் செட்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கிற பொழுது ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுபற்றி அமைச்சரவை விரைவில் முடிவெடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : அதே மாதிரி, சம்பந்தப்பட்ட விஷயம்பற்றி நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வரும்போது பேசுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : இதைப்பற்றித்தான். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, சொன்னார், நிலத்தடி நீர் ஆய்வுக்கு...... .....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் நீங்கள் கொடுத்திருந்தால் அந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் முதலில் இலாகாவிற்கு அனுப்பப்படுகிறது. அது வரும்வரை நீங்கள் காத்திருக்கிறீர்களா? அல்லது இதிலேயே பேசுகிறீர்களா?

திரு. சோ. அழகர்சாமி : இதிலேயே பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால் அது திரும்பப் பெறப்பட்டதாகக் கருதுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இதுமாதிரி என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஏரியாவில் புதிதாக மின் இணைப்புக் கொடுப்பதில்லை என்று மறுக்கப்படுகிறது. காரணம் கேட்டால் நிலத்தடி நீர் ஆய்வாளர்கள் அலுவலகத்தில் இருந்து வந்த அறிக்கையின் பேரில் இனிமேல் எந்த மின் இணைப்பும் கொடுக்கப்படமாட்டாது என்று சொல்கிறார்கள். ஆனால் கிணற்றிலேயிருந்து தண்ணீரை இறைக்கும்போது கபிலை போட்டு, ஆயில் இன்ஜின் போட்டு இறைக்கிறார்கள். அவர்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்படுகின்றதிலிருந்து தடை விதிக்கப்படுகின்றது. அந்தத் தடை நீக்கப்படுமா என்பதுதான் கேள்வி. அந்தத் தடையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் மீது நம்பிக்கை வைத்து அனுமதித்திருக்கிறேன். நீங்கள் கொடுத்தது பற்றி நினைவிலே இல்லை. இருந்தாலும் நீங்கள் சொல்வதை வைத்து நம்பி இதற்குப் பதில் அளிக்கச் சொல்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே கேட்டுக் கொள்ளலாம்; டிபார்ட்மெண்டிலே கேட்டுக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நிலத்தடி நீரைப் பொறுத்தவரையில், கோவை, மதுரை, சேலம், வடாற்காடு, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் ஏற்கெனவே பெருமளவுக்குப் பயன்படுத்திவிட்டார்கள் என்பது நிலத்தடி நீர் ஆய்விலே பெறப்பட்ட முடிவு. ஆகவே இந்தப் பகுதியிலேதான் மின் இணைப்பு ஓரளவு மெதுவாக வழங்கப்படுகிறன. மற்ற மாவட்டங்களைப் பொறுத்தவரையில் கஷ்டங்கள் இல்லை. இருந்தாலும் இதுபற்றி விரிவாக ஆராய அரசு தயாராக இருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம் : பாயின்ட் ஆப் ஆர்டர். இதே பிரச்னை சம்பந்தமாக நான் தங்களிடம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். உங்களுடையது சம்பந்தப்பட்டது தானா இல்லையா என்று ஆய்வு நடத்த எனக்கு நேரம் இல்லை. உங்கள் பிரச்னை இலாகாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ரிமைண்டர் கூட போடப்பட்டிருக்கிறது. பிறகு வைத்துக் கொள்ளலாம். (திரு. க. கந்தசாமி எழுந்தார்.) உங்களுக்கும் இதே பதில் தான். அது வந்தவுடனே இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

திரு. செ. இராமலிங்கம் : நான் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ந் தேதி அன்று இந்தப் பிரச்னையைப் பற்றித் தங்களிடம் கொடுத்திருந்தேன். இதுவரையில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். இது தஞ்சை மாவட்டப் பிரச்னை; ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு பகுதியைப்பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதையெல்லாம்

தனித்தனியாக பரிசிலனை செய்ய வேண்டும். தஞ்சை மாவட்டத்தைப் பற்றி என்று ஒரே வரியிலே ஒன்றாகக் கொடுத்திருந்தால் பதில் கொடுத்திருக்கலாம். பகுதி வாரியாகக் கொடுத்திருப்பதால் இலாக்காக்களுக்குச் சென்றிருக்கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது மிகவும் முக்கியமான பிரச்னை. கவன ஈர்ப்புத் தீர்மானம், ஷார்ட் நோட்டீஸ் கொடுத்து இரண்டு வாரத்திற்கு மேல் ஆகிறது. அவசரமாக

பதில் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர்களுக்கு டி.ஓ. எழுதியிருப்பதாக நேற்றைய தினம் தலைவர் அவர்கள் இந்த மன்றத்திலே சொன்னார்கள். வரவேற்கத்தக்கதுதான். கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கும் மற்றவைகளுக்கும் உடனடியாக கவனம் செலுத்தி பதிலை அவையில் கொண்டுவர ஏற்பாடு செய்தால் பயனுடையதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய விதிகளில் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒரு நாளைக்கு இரண்டுக்கு மேல் வரக் கூடாது என்றுதான் இருக்கிறது. அப்படி வரவேண்டும் என்றால் அதற்கு ஒரு தீர்மானம் நிறைவேற்றி அதற்குப் பிறகு தான் எடுத்துக்கொள்ள வேண்டும். துரிதப்படுத்த இலாகாக்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகள் வந்ததும் தொடர்ந்து அவை முன் வைக்கிறேன். கூடுமானவரையில் அவைகளை அவையில் வைக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. எஸ். கணேசன் : ரொம்ப முக்கியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாப் பிரச்சனைகளும் முக்கியமானது என்று கருதுகிறேன்.

திரு. எஸ். கணேசன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தவறான தகவலை நேற்றுக் கொடுத்திருக்கிறார்கள். கீழைத் தஞ்சைப் பகுதியிலே உள்ள மக்கள், சட்ட மன்றத்தில் நாங்கள் சரியாகச் செயல் படவில்லை என்று .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொஞ்சம் இருங்கள்.



திரு. எஸ். கணேசன் : 41வது விதியின் கீழ் அவசரமும் பொது முக்கியத்துவமுமான தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறோம். 24 மணி நேரத்தில் அமைச்சர் அவர்கள் பதிலைத் தெரிந்து கொள்ள முடியும். அந்தப் பகுதி மக்கள் எங்கள் மேல் சந்தேகப்படுகிறார்கள். சட்டப் பேரவையில் சரிவரப் பணியாற்றிடவில்லை என்று..

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு நெல்லிக்குப்பம் உறுப்பினர் ஒத்திவைப்புத் தீர்மானம் எந்தத் தேதியில் கொடுத்தார் என்பதையும், நான் கொடுத்தது எந்தத் தேதி என்பதையும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என்னுடைய பிரச்சினை தங்களுக்குத் தேவையில்லை.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்த நாட்டில் ஏற்பட்ட கோர தீ விபத்து குறித்தும் எடுக்க வேண்டிய நிவாரண நடவடிக்கைகள்குறித்தும்—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுபபினர்கள் திருவாளர்கள். சோ. அழகர்சாமி, பொ. உத்திராபதி, எஸ். சிவசாமி, ஏ. ஆர். மாரிமுத்து, டி. எம். தைலப்பன் ஆகியோர், விதி 41-ன் கீழ் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்த நாட்டில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். அவர்களில் ஒரு உறுப்பினர் மட்டும் முன்மொழியுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, பேரவை விதி 41-ன் கீழ்,

''தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் 23—7—1977 இரவு ஏற்பட்ட கோர தீ விபத்தில் மூன்று குழந்தைகள் கருகி மாண்டதுடன் ரூ. 30,000 வரை சேதம் ஏற்பட்டு உள்ளதால் உடனடியாக எடுக்க வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் குறித்த ''

அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த நிகழ்வினை அமைசர் அவர்களின்கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

[முற்பகல் 9·40]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு நகரில் 23—7—1977 நண்பகல் சுமார் 12·15 மணிக்கு ஒரு தீ விபத்து ஏற்பட்டது. ஒன்பது ஓலை வேய்ந்த வீடுகளும் ஓட்டு வீடு ஒன்றின் பின்புறத்தில் ஓலை வேய்ந்த ஒரு பகுதியும் முழுவதும் தீக்கிரையாயின. தஞ்சாவூர் வருவாய் கோட்ட அதிகாரியும், ஒரத்தநாடு தாசில்தாரும், மன்னார்குடி, தஞ்சாவூர், பட்டுக்கோட்டை ஆகிய இடங்களி

விருந்து தீ அணைப்புப் படையினரை வரவழைக்க உடனடி நடவடிக்கை மேற்கொண்டனர். பட்டுக்கோட்டையிலிருந்து தீ அணைப்பு படையினர் தீவிபத்து நடந்த இடத்துக்கு விரைந்து, தீயைக் கட்டுப்படுத்தினர். இது சம்பந்தமாக சதிச் செயல் நடந்துள்ளதாக ஐயப்படுவதற்கில்லை. தீ விபத்து தற்செயலாக் ஏற்பட்டதுதான். இந்தத்தீ விபத்தில் 13 குடும்பங்கள் பாதிக்கப் பட்டன. சொத்தின் மொத்த இழப்பு சுமார் 30,000 ரூபாய் என்று மதிப்பிடப்படுகிறது. தீ விபத்தில் கீழ்க்கண்ட மூன்று குழந்தைகள் மாண்டனர் :—

1. சகாப்தீன் (வயது 2 ; ஆண் ; தந்தையின் பெயர் நயினா முகம்மது).

2. ராணி (மகிழ் என்றும் அழைக்கப்படுகிறார் ; வயது 4 ; பெண் குழந்தை ; தந்தையின் பெயர் முகமது காசீம்).

3. டாஜுன் (வயது 1½ ; ஆண் ; தந்தையின் பெயர் முகம்மது காசீம்).

விபத்து நடந்த பிறகு, உடனடியாக எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்ந்த பிரமுகர்கள் 750 ரூபாய் நன்கொடையாக அளித்தனர். அத்தொகையில் 325 ரூபாய், தீ விபத்தில் மரணமடைந்த குழந்தைகளின் பெற்றோர்களது உடனடி நிவாரணத்திற்காக அவர்களிடம் கொடுக்கப்பட்டது. எஞ்சிய தொகை மற்ற குடும்பங்களின் உடனடி நிவாரணத்திற்காக அவர்களிடம் பங்கிடப் பட்டது. தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட 13 பேர்களில் நிவாரணம் பெறத் தகுதியுள்ள 12 பேருக்கு ஒரத்தநாடு தாசில்தார் 25—7—1977 அன்று ரொக்கமும், துணிகள் வாங்குவதற்கான பணமும் வழங்கினார். ஒவ்வொருவருக்கும் ரூபாய் 60 ரொக்கமாகவும் ரூபாய் 20 துணிகள் வழங்குவதற்கான செலவுக்காகவும், ஆக மொத்தம் 80 ரூபாய் வழங்கப்பட்டது. இது தவிர மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை மானிய நிதியில் இருந்து ரூ. 1,300 வழங்கப்பட்டது.

தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி இடவசதிக்கும், ஏனைய நிவாரண நடவடிக்கைகளுக்கும், தஞ்சாவூர் வருவாய்க் கோட்ட அதிகாரியும், ஒரத்தநாடு தாசில்தாரும் ஏற்பாடுகள் செய்தனர்.

திரு. எஸ். சீநடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த ஒரத்த நாடு பகுதியில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் '' பாயின்ட் ஆப் ஆர்டரா அல்லது பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷனா அல்லது பாயின்ட் ஆப் இன்பர்மேஷனா '' எதைப்பற்றிப் பேச விரும்புகிறீர்கள்?



திரு எஸ். நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே நான் பாயின்ட் ஆப் இன்பர்மேஷனாகத்தான் பேச விரும்புகிறேன். ஒரத்த நாட்டில் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. தஞ்சாவூரிலிருந்தும், மன்னார்குடியிலிருந்தும் தீ அணைக்கும் படையினர் சென்றிருக்கிறார்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் பேச விரும்புவது எந்த விதியின்கீழ் அனுமதிக்கப்படக் கூடியது?.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, கொடுக்கப்பட்டுள்ள உதவி 60 ரூபாய். தீ விபத்தில் பெரும்பாலும் பல இடங்களில் பாதிக்கப்படுகிறவர்கள் குடிசைகளில் வாழக்கூடிய சாதாரண மக்கள். அவர்களுக்கு இப்படி ரூ. 60-ம், ரூ. 20-ம் கொடுத்தால் நான்கு நாட்களுக்குச் சாப்பாட்டுச் செலவிற்கும், துணிமணிகளுக்கும் மட்டும்தான் பயன்படுகிறது. மீண்டும் குடிசைகளைப் புதுப்பித்துக் கொள்வதற்குப் போதுமானதாக இல்லை. இப்படிப் பல இடங்களில் இருப்பதைக் காண்கிறோம். தீ விபத்து ஏற்பட்டிருக்கக் கூடிய இடங்களில் இப்படிக் குடிசைகள் போட்டுக் கொள்வதற்கு, குடிசைகளைப் புதுப்பித்துக் கொள்வதற்கு ஒரு கடன், தக்காவிக் கடன் கலெக்டர் மூலம் கிடைப்பதில் மிகச் சிரமங்கள் இருக்கின்றன. நீண்ட நாட்களாகின்றன. இப்படிப்பட்ட இடங்களில் கடன்களைக் கொடுத்து மீண்டும் குடிசைகளைக் கட்டிக் கொள்வதற்கு, வீடுகளைப் புதுப்பித்துக் கொள்வதற்கு உதவி செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அழகர்சாமி பேசும்போது 60 ரூபாய் ரொக்கமாகவும், ரூபாய் 20 துணிமணிகள் வாங்குவதற்கும் தரப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். அது போக மாவட்ட ஆட்சியாளரின் விருப்புரிமை மானிய நிதியிலிருந்து ரூ. 1,300 வழங்கப்படுகிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற யோசனைகளைப் பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக இல்லை. வட ஆற்காடு மாவட்டத்தில் நடுவபாளையம் என்ற கிராமத்தில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் கூறுவது இது சம்பந்தமாக அல்ல. அவர் வழக்கறிஞர். இதை வேறு தனியாகக் கொண்டு வாருங்கள்.

(5) 1977-78-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் (தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண். 21—மீனளம்.

மாண்புமிகு திரு. கா. உரொ எட்மண்ட் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,92,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மீன் சம்பந்தமான தொழிற்சாலைகளை அமைத்து தொழில் வளர்ச்சியை அதிகப்படுத்துவது பற்றி விவாதிக்க,

"நிதிக் கோரிக்கை எண், 21, மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,92,64,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கிடைக்கும் மீன்களை தற்போது வெளிமாநிலத்தில் உள்ள தனியார்கள் வாங்கிச் சென்று பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பி மிகுதியாக லாபம் ஈட்டுவதால் அரசு ஆங்காங்கு பதனிடும் தொழிற்சாலைகளை உருவாக்கி வெளிநாடுகளுக்கு மீன் ஏற்றுமதி செய்யும் பணியையும் மேற்கொண்டு இலாபம் ஈட்ட திட்டமிடாதது குறித்து விவாதிக்க,

"நிதிக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,92,64,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU P. CHANDRAN ; Sir, to discuss about development of fisheries, I move—

'That the allotment of Rs. 1,92,64,000 under Demand No. 21-Fisheries be reduced by Rs. 100.'

THIRU O. SUBRAMANIAM ; Sir, to discuss about the dispute between the mechanised boats and country crafts,

"நிதிக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,92,64,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



(ஆ) கோரிக்கை எண். 23—கூட்டுறவு.

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,57,80,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே கூட்டுறவுத் துறைகளுக்குத் தேர்தல் நடத்துவது பற்றி விவாதிக்க.

"நிதிக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,57,80,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்,".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மு. அண்ணாமலை : தலைவர் அவர்களே, அரூர் வட்டத்தில் பருத்தி உற்பத்தி அதிகமானதாகவும், தரமாகவும் உள்ளதால் இங்கு ஒரு கூட்டுறவுப் பஞ்சாலை அமைக்க வேண்டியது பற்றி விவாதிக்க.

"நிதிக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,57,80,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு மத்திய வங்கிகளை அரசால் நியமிக்கப்பட்ட தனி அதிகாரிகள் நிர்வகித்து வரும் முறையை அகற்றி ஜனநாயக முறையில் நிர்வாகத்தைக் கவனிக்க இயக்குநர்கள் குழு ஏற்படுத்தப்படாததைக் குறித்து விவாதிக்க,

"நிதிக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,57,80,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடன்களின் வட்டி விகிதத்தை குறைக்க வேண்டுமென்று விவாதிக்க,

"நிதிக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,57,80,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU R. MARGABANDU ; Sir, to discuss about the tenure of office of the present Directors and about Special Officers' right to have legal remedy for the Society servants, I move

'That the allotment of Rs. 5,57,80,00) under Demand No. 23—Co-operation be reduced by Rs. 100."

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவர் அவர்களே, தற்சமயம் ஐந்து ஆறு பஞ்சாயத்துகளுக்கு ஒரு கூட்டுறவுச் சங்கம் என்று உள்ளது, குறைவாக உள்ளதால் இரண்டு பஞ்சாயத்துகளுக்கு ஒரு கூட்டுறவுச் சங்கமாவது ஏற்படுத்தி அதிகப்படுத்த வேண்டியது பற்றி விவாதிக்க.

'' நிதி கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,57,80,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன.

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே இன்றைய தினம் நான் இந்த அவையின்முன் வைத்திருக்கின்ற மானியக் கோரிக்கைகள் இரண்டின் மீதும் அரசு தரப்பின் கொள்கைகளை முன்னுரையாக வடித்து இந்த அவையில் இருக்கிற உறுப்பினர்களுக்கு புத்தகங்களாக ஏற்கனவே வழங்கப்பட்டிருகின்றன. அந்த உரைகளை* படித்ததாகக் கருதி அதை நடவடிக்கை குறிப்பில் ஏற்றும்படி கேட்டுக் கொள்வதுடன் உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களைச் சொன்னால், பின்பு நான் என்னுடைய கருத்துகளைச் சொல்ல இருக்கிறேன், என்று கூறி அமர்கிறேன்.

[முற்பகல் 9–50]

திரு எம். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே கொடுத்துள்ள கூட்டுறவு மானியக் கோரிக்கை அறிக்கை மீதும், மீனளத்துறை மானியக் கோரிக்கைமீது கொடுத்துள்ள அறிக்கை மீதும் எனது கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறைக்காக கோரியிருக்கிற தொகை என்னைப் பொறுத்த வரையில் அது போதாது என்றுதான் சொல்வேன். அதேபோல் மீனளத் துறையைப் பொறுத்த மட்டிலும் கோரியிருக்கிற தொகையும் போதாதுதான். காரணம் பொதுவாக இன்றைய தினம் சமுதாயத்தில் இந்த இரண்டு துறைகளும் நல்ல முறையில் வளர்ச்சி அடைய வேண்டும். மேம்பாடு அடைய வேண்டும் என்பதில் எல்லாக் கட்சியினருக்கும் ஒருமித்த கருத்து உண்டு என்பதை நாம் அறிவோம். இதுபற்றி என் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

---

138—800....ம் பக்கங்களில் இணைப்பு I, II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.





ஏற்கனவே தேசீயத் தலைவராக இருந்த நேருஜி அவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கூட்டுறவுச் சங்கம் இருக்கவேண்டும், ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளிக்கூடம் இருக்க வேண்டும். அங்கே எல்லா வசதிகளும் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு தமிழ் நாட்டில் 11,000 கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு பிறகு சரியான முறையில் இயங்காத அல்லது வளராத சங்கங்கள் இருந்தது காரணமாக அந்த சங்கங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு இப்போது 4,800 சங்கங்கள்தான் இருக்கின்றன. என்று நம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த 4,800 சங்கங்களை 4,600 சங்கங்களாக நாங்கள் ஆக்கயிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், 'வயபிள்' என்ற முறையில் சங்கங்கள் வளர வேண்டும் அல்லது அந்த முறையில் வரவேணடும் எனபதில் கருத்து மாறுபாடு இருக்க முடியாது. ஏற்கனவே இருந்த 11,000 கூட்டுறவுச் சங்கங்களை வயபிளாக ஆக்க வேண்டுமென்று கருதி பல்வேறு கிராமங்களில் ஒரு சங்கத்தை இன்னொரு சங்கத்தோடு இணைத்து, சில சங்கங்கள் செயல்பட முடியாமல் நின்றுவிட்ட பிறகு அவற்றை லிக்விடேட் செய்ய வேண்டிய நிலை வந்துவிட்டது. இதனால் ஏற்கனவே நல்ல முறையில் இயங்கி வந்த ஒரு சில சங்கங்கள்—கடன் தவணை பாக்கி 50 சதவீதத்திற்கு மேல் வந்துவிட்டால் அந்தச் சங்கங்களுக்கு எலிஜிபிலிட்டி கிடையாது. மீண்டும் பாங்கிலிருந்து கடன் வாங்க முடியாத நிலையில் அவை இயங்க முடியாத நிலையில் அவற்றை மற்ற சங்கங்களோடு இணைக்கும்போது நன்கு செயல்பட்டு வந்த சங்கங்கள் பாதிக்கப் பட்டு அவை செயல்பட முடியாத நிலை அடைந்திருப்பதை நான் கண்டிருக்கிறேன். ஆக, அதிகாரிகள் மட்டத்தில் எப்படியாவது குறைக்க வேண்டும் என்றுதான் சொல்வார்கள். கிராமங்களை புனருத்தாரணம் செய்ய வேண்டும். கிராம் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று நாம் சொல்லி வருகிறோம்.

கிராமங்களில் எல்லாம் கடைகள் திறக்கப் போகிறோம் என்று சொல்லி வருகிறோம். ஏறத்தாழ 9,000 நியாய விலைக் கடைகளில் 7,000 கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்கள்தான் நடத்துகின்றன. என்று சொல்லியிருக்கிறார்கள். அவற்றை தயவு செய்து குறைக்க வேண்டாம். அமைச்சர் அவர்கள் நேரிடையாகப் பார்வையிட்டால் தெரியும். ஒரு சங்கத்தை அருகாமையில் இருக்கிற கிராமத்தோடு இணைத்திருந்தால் பரவாயில்லை. ஆனால் பல, கிராமங்களில் இருந்து ஆறு மைல்கள், பத்து மைல்கள் விவசாயிகள் சென்று சங்கத் தலைவரை அல்லது செயலாளரைப் பார்த்து விண்ணப்பங்கள் போட்டு காரியமாற்ற வேண்டுமென்றால் நடைமுறையில் அது ஒத்துவராது. ஆகவே இந்த வயபிள் யூனிட்டாக ஆக்கும் காரியத்தில் நிதானப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம. செல்வராஜ்] [1977 ஆகஸ்டு 12

கடந்த பத்து பதினைந்து ஆண்டு காலமாக பல அரசுகளும் வயபிளாக்குகிற திட்டத்தில் அதிகாரிகள் சிறிது மெதுவாகச் சென்றார்கள். ஆனால் அவசர கால நிலை ஏற்பட்ட காலத்தில் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்ட காரணத்தால், திடீரென்று மத்திய பாங்குகளை எல்லாம் 'ஏ'. கிளாஸாக வர வேண்டும் என்று, ஆங்காங்கு இருந்த தனி அதிகாரிகள் பல கூட்டுறவு நாணய சங்கங்களை நன்கு செயல்பட்ட நாணயச் சங்கங்களை எல்லாம் கலைத்து, லோன் வசூலிக்க முடியவில்லை என்று கூறி, திடீரென்று அவற்றை "ஏ" கிளாசாக்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

அதே போன்று 87 சதவீத மக்கள் எல்லோரும் சங்கங்களில் இணைந்திருக்கிறார்கள். என்று . சொல்லியிருக்கிறார். அது பாராட்டுதற்குரிய தொன்று.

அடுத்து, வேளாண்மைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற கடன்களில் வசூல் நிலுவை ஆண்டுக்காண்டு சமீபத்தில் உயர்ந்து கொண்டே இருக்கிறது. இந்த அள்வுக்கு உயர்ந்ததற்கு காரணம் இரண்டு மூன்று ஆண்டுகளாக ஏற்பட்ட வறட்சியின் காரணமாகக் கடனை வசூலிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. மேலும் ஆண்டுக்காண்டு நாம் எக்ஸ்டன்ஷன் கொடுத்து வருகிறோம். அதிலும் இப்போது மூன்று ஆண்டு என்று கொடுப்பதை ஆறு ஆண்டாக ஏன் உயர்த்தக் கூடாது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். ஒரு விவசாயி 1,000 ரூபாய் கடன் வாங்கியிருக்கிறான் என்றால் அதற்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்கும் போது அடுத்த மூன்று ஆண்டுகள் கழித்து 1,000 ரூபாய் இதிலும் வந்து விடுகிறது. அதோடு அந்த ஆண்டில் வாங்கிய கடனுக்கு கொடுக்க வேண்டிய ரூபாய் 300, இப்படி 1,300 ரூபாய் ஆகிறது. இப்படி 1,300 ரூபாய் கடன் செலுத்தினால்தான் அடுத்த ஆண்டு கடன் வாங்க முடியும். இல்லையென்றால் ; வாங்க முடியாது. ஆகவே இதை 6 ஆண்டுக் காலம் என்று உயர்த்தினால் விவசாயியினுடைய கடன் சுமை குறையும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து அமைச்சர் அவர்கள் கன்ஸம்ஷன் லோனைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறு விவசாயிகளுக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு பெர்சனல் செக்யூரிட்டியின் மீது திருமண காரியங்களுக்காக 250 ரூபாயும், சுகாதார வசதிக்காக அதாவது மருந்து போன்றவைகளுக்கு 250 ரூபாயும், ஈம காரியங்களுக்கு 75 ரூபாயும் என்று கொடுப்பதற்கு இதற்காக 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை இன்னும் அதிகமாக உயர்த்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் திருமணச் செலவுக்கு 250 ரூபாய் போதுமா என்பதையும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1977 ஆகஸ்டு 12] [திரு. எம். செல்வராஜ்].

ஜ்வல்ஸ் (Jewels) லோனைப் பொறுத்தவரையில் இப்போது மத்திய வங்கியிடமிருந்து கடன்களைப் பெற்று, விவசாய பாங்குகளும், கூட்டுறவு நாணய சங்கங்களும் ஜ்வல் லோன் வழங்குகின்றன. இதில் தாராளமாகப் பணத்தை கொடுப்பதற்கு ரிசர்வ் வங்கியினர் முன்பு பிடிவாதமாக இருந்தனர். இப்போது அதை 40 கோடி ரூபாய் அளவுக்கு தளர்த்தியிருக்கிறார்கள். மேலும் 60 கோடி ரூபாய் அளவுக்கு கொடுக்கப் போகிறோம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கான லோன்களை கொடுக்கும்போது கிராம சங்கங்களை நல்ல முறையில் கண்காணிக்க வேண்டும் என்றும், இன்னும் இதற்கான தொகை அதிகமாக்குவதற்கு ரிசர்வ் வங்கியோடு பேச வேண்டும். இந்த அளவுக்கு டெப்பாசிட் இருந்தால் தான் மத்திய கூட்டுறவு வங்கிக்கு ஜ்வல் லோனுக்குப் பணம் தரமுடியும் என்று ரிசர்வ் வங்கி வரையறை வைத்திருக்கிறார்கள். இதை உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று நாங்கள் இருந்த போது கேட்டிருக்கிறோம். பம்பாயிலுள்ள ரிசர்வ் வங்கி டெப்டி கவர்னரிடம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம். இப்போது சென்ற ஆண்டு தான் இதை ஓரளவு தளர்த்தியிருக்கிறார்கள். இதை மேலும் அதிகமாகத் தளர்த்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நில்வள வங்கிகள் மூலமாகக் கடன் கொடுக்கப்பட்டு கிணறுகள் போர்வெல் போன்றவைகள் எடுக்கும் போது அவை திருப்திகரமாக செயல்படாவிட்டால் (பெயிலாகிவிட்டால்), அதற்கு உதவி செய்ய நில்வள வங்கி மூலம் ரிசர்வ் பண்ட் வைக்கப்பட்டிருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில் இதில் 52 லட்சம் ரூபாய் ரிசர்வ் பண்டாக வைத்திருக்கிறார்கள். ஆனால் இதிலிருந்து பணத்தைக் கொடுப்பதற்கு இருக்கின்ற விதிமுறைகள் கடுமையாக வைக்கப்பட்டிருக்கின்றன. போர்வெல் ஏதாவது எடுத்து அது பெயிலாகிவிட்டால் அல்லது அது சரியான முறையில் வேலை செய்ய வில்லையென்றால், இந்த பண்டிலிருந்து விவசாயி எந்தவிதப் பயனையும் அடைய முடியாத அளவுக்கு விதிமுறைகள் கடுமையாக இருக்கின்றன. இதற்கு 52 லட்சம் ரூபாயும் இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதில் இருக்கின்ற விதிமுறைகளைத் தளர்த்தி பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"அக்ரோ பெடரேஷன்" பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நிலவள வங்கியிலிருந்து கடன் பெற்று ஆயில் என்சின், பம்பு செட், டீசல் என்சின் ஏதாவது வாங்க வேண்டும் என்று சொன்னால் இந்த பெடரேஷனிலிருந்து தான் வாங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள். ஆனால் தனியார் கம்பெனிகளை விட இதில் விலை அதிகமாக இருக்கிறது. இது பலதடவை பேசப்பட்ட கருத்து. இதைப் பற்றி அதிகாரிகளுக்கு நன்கு தெரியும். கடன் வாங்க வேண்டும் என்று விவசாயி வருகிறான், பம்பு செட்டோ அல்லது ஆயில்

முற்பகல் 10-00

என்சினோ அல்லது மோட்டாரோ வாங்க வேண்டும் என்றால்
பெடரேஷன் மூலமாகத்தான் வாங்க வேண்டும் என்று கட்டாயப்
படுத்துகிறார்கள். வெளியில் இருக்கின்ற விலையைவிட இதில்
விலை அதிகமாக இருக்கிறது. ஆகவே இதில் அமைச்சர் அவர்கள்
தலையிட்டு குறைவான விலைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை
எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அக்ரோ பெடரேஷன் மூலமாக, அக்ரோ
சர்வீஸ் செண்டர்கள் மூலமாக இன்றையத் தினம் மாநிலம்
முழுதும்பெரும் அளவிலே அதன் சுற்று வட்டாரத்திற்குத் தேவை
யான வேலைகள் நல்லமுறையிலே நடை பெற்று வருகின்றது.
ஆனால், ஒருசில இடங்களைத் தவிர, பொதுத் துறை, கூட்டுற
வுத் துறை, தனியார் துறை என்று மூன்று துறைகளை நாம்
ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் தனியார் துறையை
கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்க வேண்டுமென்பதைக் கருத்
தில் கொண்டு, எல்லாவற்றையும் கூட்டுறவுத் துறைக்கு
கொண்டுவர நாம் செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். அப்படி
இருக்கும்போது, சர்வீஸ் செண்டர் மூலமாகத்தான் அங்கே,
அந்த சுற்றுவட்டாரத்திலுள்ள சர்க்கார் ஜீப், வேன் போன்
றவைகள் ரிப்பேர் செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்
தோடு இந்த அமைப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. என
வே, இந்த சர்க்கார் நிறுவனத்தைச் சேர்ந்த மோட்டார் வாக
னங்கள், அவைகள் வேறு எந்தத் துறையைச் சேர்ந்ததாக இருந்
தாலும், இந்த இடத்தில் வந்து ரிப்பேர் செய்து கொள்ள
வேண்டுமென்று ஒரு ஜீ. ஓ. சர்க்கார் உத்தரவு பிறப்பிக்க
வேண்டும். அப்படி பிறப்பித்து, எல்லாத் துறைகளும் இதற்கு
ஒத்துழைப்பு தந்தால், இந்த நிறுவனம் நல்லமுறையிலே, லாப
கரமாக ஓடும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன்.

கடலூரில் டிராக்டர் அக்ரிகல்சர் சர்வீஸ் செண்டர் என்று
ஒன்றிருக்கிறது. அங்கு பெட்ரோல், டீசல் பம்புகள் இருக்
கின்றன. ஒர்க் ஷாப்பும் அங்கிருக்கிறது. அது நல்லமுறை
யிலே, லாபகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. ஆனால் ஏற்
கனவே சில மாவட்ட தலைமை அதிகாரிகள் உபயோகப்படுத்
வந்த ஜீப், வான்களை என்ன காரணத்தினாலோ நிறுத்திவிட்
டார்கள். கூட்டுறவுத் துறையிலே உள்ள அதிகாரிகள் கடிதம்
மூலம் அறிவித்தாலோ, கேட்டுக் கொண்டாலோ கூட, அவர்
கள் தங்கள் வண்டிகளை இப்போது அனுப்புவதில்லை. ஒவ்வொரு
துறையிலேயும் இருக்கக்கூடிய அதிகாரிகளிடையே கோ-ஆர்டி
னேஷன் இல்லை. இதையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று
நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்ளவிரும்புகிறேன்

கூட்டுறவு இணையம், கோவாபரேடிவ் பெடரேஷன் மூலம்
ரசாயன உரம் பெர்டிலைசர் வழங்கப்படுகிறது. 1975-76
ஆம் ஆண்டிற்கு இதற்காக 55 கோடியும், 1976-77லே இதற்
காக 47.8 கோடியும் வழங்கப்பட்டிருக்கிறது. ஏன் குறைந்
தது என்று தெரியவில்லை.



அடுத்து, விருத்தாசலத்திலே சன் பிளவர் சீட் ஆயில் தொழிற்
சாலை ஆரம்பிக்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருப்பதாக
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது அமைச்சர் அவர்கள்
கொடுத்த தகவலிலே இடம் பெற்றிருக்கிறது. அந்த ஆலை
எந்த அளவுக்கு ஓடிக் கொண்டிருக்கிறது/ லாபகரமாக ஓடிக்
கொண்டிருக்கிறதா? அப்படி லாபகரமாக ஓடவில்லை என்றால்,
லாபகரமாக ஓட்டுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

வில்லேஜ் லெவல், கிராம விவசாய சங்கங்கள் 2,566
கோடவுன்களை கட்டியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லி
யிருக்கிறார்கள். இன்னும் 2,000 கோடவுன்கள் தேவைப்
படுகின்றன. அப்படிக் கட்டினால்தான், அமைச்சர் அவர்கள்
போடுகின்ற திட்டங்கள் எல்லாம் நல்ல முறையிலே செயல்
படுத்த முடியும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். விவசாயிகள் தங்கள் பண்டங்களுக்கு நல்லவிலை,
நியாயமான விலை கிடைக்காத காரணத்தால், இப்படிப்பட்ட
கோடவுன்களிலே வைக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அவர்
களுக்கு உடனடியாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லக்
கூடிய நிர்ப்பந்தம் இருக்கிறது. இதையெல்லாம் சற்றுத்
தளர்த்த வேண்டும். அதே சமயத்தில் அவர்களுக்குக் கடன் வச
தியும் வழங்க வேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில்
தென் ஆற்காடு மத்திய கூட்டுறவு வங்கியில் தற்போது 300க்கு
மேற்பட்டவர்கள் அட்ஹாக் என்று சொல்லக்கூடிய முறையில்
பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் மத்
திய வங்கியின் நேரடிப் பார்வையில் இயங்க முடியாது என்று
சொல்லி, அந்தந்தச் சங்கத்திலேயே இணைத்துவிட்டார்கள்.
இது சம்பந்தமாக நெல்லிக்குப்பம் சட்டமன்ற உறுப்பினர்
அவர்கள் விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். இதிலேயும் நாம்
கவனம் செலுத்த வேண்டும். அங்கே இருக்கக்கூடியவர்களை
படிப்படியாக மத்திய வங்கியின் மேற்பார்வையில் வைக்க
வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம், அவர்களுடைய
கட்டுப் பாட்டிலே இல்லாவிட்டால் கிராம கூட்டுறவு நாணய
சங்கங்களின் தலைவர்களுக்கும், இவர்களுக்கும் ஏதாவது
தகராறுகள் ஏற்பட்டால், சில சங்கடங்கள் ஏற்படும். இப்
படிப்பட்ட தகராறுகள் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு முடி
யாது. ஆகவே, அவர்களையெல்லாம் படிப்படியாக, மத்தியச்
சங்கத்திற்கு ஆண்டிற்கு 50, 60 பேர்கள் வீதம் எடுத்துக்
கொள்ள வேண்டும். சில மாவட்ட சங்கங்களிலே இந்தமுறை
இருக்கிறது. ஆனால், தென் ஆற்காடு மாவட்டத்தில் அமு
லாக்கப்படவில்லை. இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்
டுக் கொள்கிறேன். காரணம், 300 பேர்கள் இன்றைக்கு
வேலையில்லாமல் அவலநிலையில் இருக்கிறார்கள். திடீரென்று

[திரு. எம். செல்வராஜ்] [1977 ஆகஸ்ட் 12

சங்கத்தின் தலைவர், அவர்களை வீட்டுக்கு அனுப்பி விட்டாலும் அவர்களுக்குப் பாதுகாப்பு கிடையாது. எனவே, இதையும் கவனிக்க வேண்டுமென்றுநான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்கிறேன்.

அடுத்து, கலெக்ஷன் ஆப் ஓவர் டியூஸ் 'collection of over due' இதைப்பற்றி எனக்குக் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. எங்கே பார்த்தாலும் அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். சட்ட மன்றத்திலே அமைச்சர் அவர்கள் என்ன சொன்னாலும், வாக்குறுதிகள் கொடுத்தாலும், அதிகாரிகள் வசூல் பண்ணுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். திரு. துரை கலியமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். சிதம்பரத்தில், சோழபுரம் என்னும் கிராம கூட்டுறவு சங்கத்திலே இப்படி திடீரென்று வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று. அப்படி அதிகாரி வசூலிக்கச் சென்றபோது, அங்குள்ள விவசாயி 50 சதவீதம் கொடுப்பதாக விண்ணப்பம் கொடுத்திருக்கிறார். ஏற்கனவே 50 சதவீதம் தர வேண்டுமென்று அந்தச் செயலாளர் அதை நீக்கிவிட்டார். பின்னர் அந்த சங்கத்தைக் கலைத்து விட்டார்கள். விவசாயிகள் இதனால் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள்.

சங்கக் கலைப்பின் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்படும் நிலைமை இருக்கிறது. அதிகாரிகள், அமைச்சர்கள் என்ன தான் ஆணைகள் பிறப்பித்தாலும் விவசாயிகள் பாதிக்கப்படும் நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. அதையெல்லாம் உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

என்னுடைய தொகுதியைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். துணைச் சபாநாயகர் அவர்கள் இரண்டு நிமிஷம் நேரம் ஒதுக்கித்தர வேண்டுகிறேன். ரிக்ஷா டிரைவர்ஸ் கூட்டுறவுச் சங்கத்தைத் மதுரையில் ஆரம்பிக்க இருப்பது பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும். சென்னையிலும் ஏழைத் தொழிலாளர்கள் ரிக்ஷா ஓட்டுகிறார்கள். சென்னைக்கும் விஸ்தரிக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியில் திருச்சோபுரத்தில் ஒரு பாலம் அமைத்துத் கொடுத்தால் மீனவர்களுக்கு வசதியாக இருக்கும். கடலூர், சிதம்பரம், ஆலப்பாக்கம் வழியாகத் திருச்சோபுரம் செல்லும்போது ரயில்வே கேட் இருக்கிறது. அந்தப் பகுதியில் பாலம் கட்டுவது பற்றி ஏற்கனவே அரசாங்க உத்தரவு ஜி. ஓ. 30ல் போடப்பட்டும் துவங்கப்படவில்லை. இதையெல்லாம் தனியாக அமைச்சர் அவர்களிடத்தில் கொடுக்கிறேன். அந்தப் பகுதியில் 15,000 மீனவர்கள் வசிக்கிறார்கள், 50 பேர் பட்டதாரிகள் கூட மீனவ சமூகத்தில் இருக்கிறார்கள். பி.ஏ.பீ.எல்., எம்.ஏ.பி.எல்., பி.எஸ்.சி. போன்ற பட்டப் படிப்பு படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன குறைகள்—நைலான் வலை கொடுக்கவேண்டும்,



1977 ஆகஸ்டு 12] [திரு. எம். செல்வராஜ்]

விவசாயத் துறையில் கொடுக்கப்படுகிற சலுகைகளைப் போல் மீன் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கும் எல்லாவிதமான சலுகைகளையும் தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நைலான் வலை சகாய விலையில் கொடுக்க வேண்டும், மானியம் கொடுக்க வேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது இதுபற்றிப் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் அவர்களுக்கு நான் ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

போட் கட்டுவதைப் பொறுத்தவரை தனியார் துறையைவிட அரசுத் துறையில் அதிக விலை ஆகிறது என்று சொல்லப்படுகிறது. அதிகாரிகளுக்கான ஓவர் ஹெட் சார்ஜஸ் எல்லாம் போடுவதால் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இவை நஷ்டத்தில் ஓடினாலும் கூட மீனவ சமுதாய மக்களுக்குச் செய்கிற நன்மையாகக் கருதி செயல்படுத்த வேண்டும். பிடிக்கின்ற மீனுக்கு நியாயமான விலை கிடைக்க அரசு வழிவகை செய்ய வேண்டும். கடலூர் துறைமுகத்தை மீன் துறையாக ஆக்கியிருக்கிறார்கள். இவ்வாறு சில துறைகளை இராமநாதபுரம், தென்னாற்காடு மாவட்டங்களில் செய்ய வேண்டும். இந்தத் துறையைப் பற்றி விரிவாக எங்கள் கட்சி உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் பேசும்போது கூறுவார்கள். ஏற்கனவே நான் தெரிவித்த பாலத்தைக் கட்டிக் கொடுத்தாலே அந்த மீனவர்கள் தங்களுடைய மீன்களை மார்க்கெட்டுக்குக் கொண்டு செல்ல வசதி ஏற்படும். அதனைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு பேசவாய்ப்பளித்த, சிறிது நேரம் அதிகமாகக் கொடுத்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* <u>திருமதி சுப்புலட்சுமி</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று உணவு கூட்டுறவு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற கூட்டுறவு மானியக் கோரிக்கையை வரவேற்று கிராமக் கடன் சங்கங்கள் பற்றிய சில கருத்துக்களை அவை முன் வைக்க விரும்புகிறேன். கூட்டுறவே நாட்டுயர்வு என்ற பழமொழிக்கேற்ப உணவு விநியோகத் திட்டத்திலும் வேளாண்மைக் கடன் வசதித் திட்டத்திலும் நாம் பெருமுக்கியத்துவம் அளித்து வருகிறோம். விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் திட்டத்தில் சென்ற ஆண்டு கூட்டுறவில் வழங்கிய கடன்களைப் பார்க்கும்போது ஜூலை மாதத்தில் இருந்து செப்டம்பர் முடிய பயிர் பயிரிடும் காலங்களில் வழங்கிய கடன்களைக் காட்டிலும் ஆண்டு இறுதியில் மார்ச் மாதத்தில் வழங்கிய கடன்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. பயிரானது பயிரிடப்படும் காலங்களில் மத்திய வங்கியானது பல நிபந்தனைகளைப் போட்டதால் விவசாயிகள் சரியான முறையில் கடன்பெற இயலாத நிலையையும் பிறகு ஆண்டு முடிவில் எப்படியாவது கடன் வழங்கும் குறியீட்டைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று நோக்கத்துடன் விதிமுறைகள் தளர்த்தப்பட்டு விவசாயிகளுக்குக் பணம் கொடுக்கப்பட்

[திருமதி சுப்புலட்சுமி] [1977 ஆகஸ்டு 12
(முற்பகல் 10–10)

டிருக்கிறது. இந்தநிலை மாற்றப்பட்டு விவசாயிகளுக்குப் பயிரிடும் காலத்திலேயே தேவையான கடன்களை வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

தவிர, ஆண்டுக்கடன் மனுமுறை எளிதாக்கப்பட வேண்டியதும் அவசியம் ஆகிறது. எனது தொகுதியிலே கீழ்பவானியிலே இரண்டு ஆண்டுகளாக தண்ணீர் விடப்படாத காரணத்தால் அங்கே பல விவசாயிகள் பயிர்க் கடன்களில் அதிகத் தவணை தவறியுள்ளனர். இது அந்த விவசாயிகளுடைய தவறன்று. அங்கே ஏற்பட்ட சூழ்நிலையும் இயற்கையும்தான் காரணமாக அமைந்துவிட்டது. இந்த தவணை கடந்த கடன்களை வசூலிப்பதற்காகவும், விவசாயிகளுக்குத் தக்க உதவிகளைச் செய்வதற்காகவும் நில வள வங்கிகளின் மூலமாக நீண்டகாலக் கடன்களை வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

இந்தக் கூட்டுறவுக் கடனானது கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படாத காரணத்தால் இந்த எனது கோரிக்கையை அரசு பரிசீலிக்க வேண்டுகிறேன்.

விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற இந்தக் கடன்கள், ரிசர்வ் வங்கியிலிருந்து மாநில வங்கிக்கும், அதற்குப் பிறகு மாநில வங்கியிலிருந்து மத்திய வங்கிகளுக்கும், அதற்குப் பிறகு மத்திய வங்கியிலிருந்து கூட்டுறவு வங்கிகளுக்கும் கொடுக்கப்படுகிறது. இதன் காரணமாக ஒவ்வொரு வங்கியிலும் வட்டி விதங்கள் அதிகரிக்கப்பட்டு, கடைசியிலே விவசாயிகள் 12·60 சதவீதம் வட்டிக்குப் பணம் பெறக் கூடிய நிலைமை இருக்கிறது. அதிலேயும் 10 சதவீதம் பங்குத் தொகைக்காக என்று கழிக்கப்படுகிறது, இந்த நிலையில் 1,000 ரூபாய்க்கு 900 ரூபாய்தான் விவசாயிகளுக்கு, கடன் கிடைக்கிறது. விவசாயிகள் இந்த நிலையில் 14 சதவீதம் வட்டி கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. தவணை தவறிய காலத்திலே இந்த வட்டி வீதம் 17 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. எனவே, வட்டிவீதத்தைக் குறைக்க வேண்டும் அல்லது இடையிலே 2, 3 வங்கிகள் கைமாறி கடன் கொடுக்கிற நிலையை மாற்றி மத்திய வங்கியிலிருந்து நேரடியாக விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கச் செய்வதற்கு நம்முடைய அரசு வழிவகை காண வேண்டும். மேலும் 10 சத வீதம் பங்குத் தொகை என்பது மிகப் பெரிய தொகையாக இருப்பதால் ஏழை எளிய விவசாயிகள் கொடுக்க கஷ்டப்படுகிறார்கள், ஆகவே 5 சதவீதமாகஅதை குறைக்க ஆவன செய்ய வேண்டும்.

தனித்து இயங்க வல்ல சங்கங்கள் நல்லமுறையில் இயங்கக் கூடிய சட்டங்கள் வகுக்கப்பட்டு விட்டன. 5 லட்சம் முதல் 10 லட்சம் வரை அந்தச் சங்கங்கள் கடனாகப் பெறுகிற நிலையில் அந்தச் சங்கச் செயலாளரை அந்தச் சங்கத் தலைவரே நியமிக்கிறார். சேலம் போன்ற மாவட்டங்களிலே அந்தச் செயலாளர் மத்திய கூட்டுறவு வங்கியால் நியமிக்கப்படுகிறார். ஆனால் கோவை மாவட்டத்திலே மட்டும் அந்தச் சங்கத் தலைவரே செயலாளரை நியமனம் செய்கிறார். இப்படிச் செய்யப்படுவதால்



[19]77 ஆகஸ்டு 21] [திருமதி சுப்புலட்சுமி]

தலைவருடைய முழுக் கட்டுப்பாட்டின்கீழ் அந்தச் செயலாளர் கொண்டுவரப்பட்டு மோசடிகளிலும் ஊழல்களிலும் அந்தச் செயலாளரும் பங்குபெற வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலைமை மாறி செயலாளரும் மத்திய வங்கியின் ஊழியராக நியமிக்கப்பட வேண்டியது இன்றியமையாத ஒன்று.

கிராமச் சங்கங்களிலே நகைகளின் பேரிலே கடன்கள் கொடுக்கிற நிலையிலே கிராமச் சங்கங்கள் நகைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு அயர்ன் ஸேப்ஸ் தேவைப்படுகின்றன. ஆனால் அவற்றின் மதிப்பு 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபாயாக இருக்கிறது. இந்தத் தொகையை அந்தச் சங்கங்கள் தங்கள் சொந்த நிதியிலிருந்து ஒதுக்கவேண்டுமென்ற அவசியம் ஏற்படுகிற காரணத்தால் பொருளாதார ரீதியிலே நலிந்துள்ள சில சங்கங்கள் இந்த அயர்ன் ஸேப்ஸ் வாங்குவதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றன. எனவே அப்படிப்பட்ட சங்கங்களுக்கு அரசு நீண்டகாலக் கடன்கள் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு கிராம கடன் சங்கத்திற்கும் சொந்த கிடங்கு என்பது மிக இன்றியமையாத ஒன்று. எத்தனையோ விவசாயக் கடன் சங்கங்கள் சொந்தக் கட்டடங்கள் இல்லாத நிலையிலே வாடகை இடத்தைக் கொண்டு அவை சரியான நிலையில் இல்லாத இருப்பிடமாக இருப்பதால் மழை முதலியவற்றால் எத்தனையோ ரசாயன உரங்கள் சேதப்படுகின்ற நிலைமையை நாம் பார்க்கிறோம்.

அத்தகைய நிலை நீங்க நடப்பாண்டிலே 210 கிடங்குகள் கட்டிக்கொடுக்கப்படும் என்ற அரசுக் குறிப்பானது வரவேற்கத் தக்க ஒன்று.

கோவை மாவட்ட வங்கியைப் பொறுத்த அளவிலே 15 ஆண்டு கள் ஆகியும் மத்திய வங்கி ஊழியர்கள் இன்னும் நிரந்தரமாக்கப் படவில்லை. இந்த அதிசயம் ஏன் என்று புரியவில்லை. இதைப் போன்றே இன்னும் பல சங்கங்களில் இந்தப் பணி நிரந்தரமாக்கப் படாத நிலையில் ஊழியர்கள் பணி செய்து வருகின்றனர். இவர்களது பணி ஓராண்டு முடிந்தவுடனேயே அவர்கள் நிரந்தரமாக்கப் பட வழிவகை செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

சங்கங்களில் நடைபெறும் மோசடிகள் வெளியானவுடன் கோர்ட் தண்டனை அளிக்கும் வரையில் நிர்வாகிகள் பதவி வகிப்பதில் மாறுதல் ஏற்படுவதில்லை. அவர்கள் தண்டனை பெறும் காலம் வரை தொடர்ந்து பணியாற்றலாம் என்ற நிலையிருந்து வருகிறது. ஆனால் மத்திய வங்கி ஊழியர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் குற்றம் செய்ததாகக் கருதப்பட்டாலே (delin- quents) வேலை நீக்கம் செய்யப்பட்டு விடுகின்றனர். பிறகு கேஸ் நடந்து கோர்ட்டில் அவர்கள் நிரபராதி என்று நிரூபிக்கப்பட்ட பிறகும்கூட அவர்கள் மீண்டும் வேலையில் அமர்வதற்கு எத்தனையோ சிரமங்கள், இடையூறுகள் ஏற்படுகின்றன. இந்நிலை மாற்றப்பட வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திருமதி சுப்புலட்சுமி] [1977 ஆகஸ்டு 12

கூட்டுறவுத் துறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் மோசடிகள் செய்கின்றார்கள், ஊழல்கள் செய்கின்றார்கள் என்று இல்லை. பெரும் சம்பளம் பெறும் அதிகாரிகளும் இத்தகைய தவறுகள் நடப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளனர். கோவை மாவட்டக் கூட்டுறவு வங்கியிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கோவை மாவட்ட மத்திய வங்கித் தலைவராக இருந்த முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் ஒருவரால் அந்த மத்திய வங்கிச் செயலாளர் ஊழியர்களின் இன்ஷூரன்ஸ் கமிஷன் பணத்தைக் கையாடியதாக கிரிமினல் குற்றம் வந்து பதவி நீக்கம் செய்யப்பட்டார். ஆனால் அவர் திராவிட முன்னேற்றக் கழக வேறு முன்னாள் சட்ட மன்ற உறுப்பினரால் அதே செயலாளர் மீண்டும் பதவியிலே சேர்க்கப்பட்டார். இது எப்படி என்பது எங்களுக்கு இன்னும் புரியாத புதிராக இருக்கிறது. இந்த நிலை ஊழியர்கள் மத்தியில் மட்டுமின்றி கோவை மாவட்ட மத்திய வங்கி கூட்டுறவாளர்கள் மத்தியிலும் பெரும் கசப்பையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. குற்றச்சாட்டு முடிவடையாத நிலையில் இன்னும் அந்தச் செயலாளர் பதவியில் இருந்து வருகிறார். தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகமோ அல்லது பெரும் பொறுப்பு வகிக்கும் அதிகாரிகளோ யாராக இருந்தாலும் குற்றம் புரிபவர்கள் பாரபட்சம் இன்றி தண்டிக்கப்படுவார்கள் என்ற இந்த அரசின் கொள்கையை நான் பெரிதும் வரவேற்று இந்தக் கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியிலே நடைபெற்ற இந்தக் குற்றத்தை விரைவில் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பரவலாக மாவட்ட வங்கிகளிலே பணியாற்றும் ஊழியர்களின் சம்பள விகிதங்களில் ஒருமைப்பாடு இல்லை. சம்பள விகிதம் மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுபடுகின்றது. 'ஏ' வகுப்பு, 'பி' வகுப்பு என்ற வங்கிகளின் தர அடிப்படையிலே மாநிலம் முழுவதும் ஒரே சீரான சம்பள விகிதங்கள் அவசியம் என்பதை வலியுறுத்துகிறேன்.

கூட்டுறவின் மூலம் கடன் வசதி, முதலீடு, விநியோகம், வைப்புகள் பரவலாக வளர வாய்ப்பு அளித்துள்ளோம். இப்படிப்பட்ட வகையிலே கூட்டுறவுச் சங்கங்கள் நல்லமுறையிலே இயங்க கூட்டுறவு ஊழியர்களின் பணி அவசியம் ஆகிறது. அத்தகைய கூட்டுறவு ஊழியர்களுக்கு இந்தச் சங்கங்களிலே வரும் இலாபத்திலிருந்து குறைந்தபட்சம் 20 சதவீதமாவது அவர்களது வருங்கால வைப்பு நிதியில் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நியாயவிலைக் கடைகள் ஒவ்வொரு கிராமத்திலும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நிறுவப்படவிருக்கின்றன. அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து அந்தச் சங்கங்கள் சரியான முறையில் இயங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஆகஸ்டு 12] [திருமதி சுப்புலட்சுமி]

பயிர்க்கடன் வழங்குவதில் உச்ச அளவு ஜாமீன் பெயரில் 5,000 ரூபாய் ஒவ்வொரு விவசாயிக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. கர்ணம் ஒருவரது சான்றிதழ் இருந்தாலே அந்தத் தொகை விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது. இவ்வளவு பெரிய தொகை கர்ணம் ஒருவரது சான்றிதழ் இருந்தாலே கொடுக்கப்படுவதன் காரணத்தினால் இடையிலே சில தவறுகள் நேர்வதற்கு வழி வகுக்கிறது. ரூபாய் 5,000-க்கு மேல் கடன் வழங்கும்போது சங்க நிர்வாகம், அல்லது வங்கி அதிகாரிகளுடைய சான்றிதழ் மட்டுமின்றி, எல்லா விவரங்களையும் இலாகா அதிகாரிகள் நேரடி விசாரணை செய்து, அறிக்கை சமர்ப்பிக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

[முற்பகல் 10-30]

இரசாயன உர விநியோகம் டி. என். சி. எம். எப். சங்கங்கள் மூலம் செய்யப்பட்டு வருகின்றன. இதில் கிடைக்கக்கூடிய இலாபத்தில் 95 சதவீதம் அந்த டி. என். சி. எம். எப் நிறுவனம் பெற்றுக் கொள்கின்றது. அந்த நிலையைத் தவிர்த்து, இந்த விற்பனையில் கிடைக்கும் இலாபத்தில், அந்த உர விற்பனைக்குக் காரணமாக இருக்கின்ற கூட்டுறவு சங்கங்களும் இலாபத்தில் 50 சதவீதம் பெற அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

சேவையைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள கூட்டுறவுத்துறை, இப்பொழுது இலாபத்தை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல் படுகிற சூழ்நிலைக்கு வந்து விட்டது. நுகர்வோர் கூட்டுறவுகளிலே விற்கப்படுகிற பொருள்களின் விலை, வெளி மார்க்கெட் விலையை விட அதிகமாகக் காணப்படுகிறது. இது குறித்து, நுகர்வோர் கூட்டுறவுத் துறையில் தக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட வேண்டுகிறேன்.

நலிந்த பிரிவினருக்கு பங்குத் தொகை, கடன் உதவித் தொகை. இலவசப் பணி ஆகியவை அளிப்பது என்ற அரசினுடைய இன்றைய நிலை பாராட்டுக்குரியது.

கிராமத்து மக்களுக்கு நுகர்வோர் திட்டத்தின்கீழ் கிராமச் சங்கங்களுக்கு ரூபாய் 40 இலட்சம் நிதி உதவி வழங்கவும் தலா ரூபாய் 10,000 பண உதவி வழங்கவும் அரசு மேற்கொண்டுள்ள அந்நிலை கிராம மக்களின் நலனிலே இந்த அரசு கொண்டுள்ள அக்கறையை எடுத்துக் காட்டியுள்ளது.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களும், ஊழியர்களும் அடங்கிய கூட்டுறவு பண்டக சாலை ஒன்றை அரசு ஒவ்வொரு வட்டாரத்திலும் அமைத்துத் தர வேண்டுகிறேன். கூட்டுறவு சம்பந்தப்பட்ட பட்டில், அரசு மேற்கொண்டுள்ள நிலையை மேலும் ஒரு முறை பாராட்டி, எனக்கு இந்த கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றி கருத்துக்களை எடுத்துக் கூற வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. செ. சதாசிவம் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கையின் பேரிலே என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே, விவசாயிகளுக்குப் பல்வேறு கடன்களை இந்தக் கூட்டுறவுத் துறை அளித்து வருவதை நாம் நன்கு அறிகிறோம். இப்படி இருக்கிற நேரத்திலே, இப்பொழுது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும் இந்தப் பணியிலே ஈடுபடக்கூடிய இந்த நேரத்திலே கூட்டுறவுத் துறை நல்ல முறையிலே வளர்வதற்கு நாம் இப்போதுள்ள சில கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டுமென்ற கருத்தினை இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன். இப்பொழுது நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களிலே வழங்கக்கூடிய வட்டி வீதத்தைப் பார்க்கும்போது. அது மிக உயர்ந்த அளவிலே உள்ள வட்டியாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த வட்டி விகிதம் ஓரளவுக்குக் குறைக்கப்பட வேண்டுமென்ற கருத்தினையும் இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நாம் ரிசர்வ் வங்கியிலேயிருந்து பெறுகின்ற கடன் வட்டி விகிதம் ஓரளவு குறைவானது. அவர்கள் போடக்கூடிய வட்டி விகிதமானது. நேரடியாகக் கிராமச் சங்கங்களுக்குச் சென்றடையாத காரணத்தால்—இடையிலே மாநில வங்கிகளும் மத்திய வங்கிகளும் இருக்கின்றன அந்த இரு வங்கிகளில் ஒன்றைக் குறைப்போமானால், குறிப்பாக மாநில வங்கி தேவையற்ற முறையில் இருக்கிறது என்ற கருத்தினை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதன்மூலம் 1½ சதவீதம் வட்டியைக் குறைக்க முடியும். மத்திய வங்கி மூலமாக ரிசர்வ் வங்கியில் தொடர்பு வைத்து, அதன் மூலமாகக் கூட்டுறவு விவசாய வங்கிகளுக்கு நேரடியாகக் கடன் கொடுத்தால், வட்டி விகிதத்தை ஓரளவுக்குக் குறைக்க முடியும். அதோடு, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலே (ஷேர் காப்பிட்டல்) பங்குத் தொகைகள் வாங்கப்படுவதில்லை. ஆனால், கிராமச் சங்கங்களிலே ரூபாய் 10 பங்குத் தொகை வசூலிக்கப் படக்கூடிய நிலை இருக்கிறது. ரூபாய் 1,000 பெறக்கூடிய விவசாயி ரூபாய் 900 தான் பெறுகிறான். மீதி, இருக்கக்கூடிய பங்குத் தொகை ரூபாய்க்கு 100-க்கு வட்டி கூடுகின்றது. பங்குத் தொகையின் பேரிலே, கிராமச் சங்கங்களிலே, பங்குத் தொகைக்கு வட்டி, அதாவது டிவிடெண்ட் கொடுக்காத நிலைமைதான் இருந்து வருகிறது. ஆகவே, அதிலே வரக்கூடிய தொகையையும் சேர்த்து வட்டியாக நினைத்துப் பார்ப்போமானால், ரூபாய் 100-க்கு 16 ரூபாய் என்று கூறக்கூடிய வட்டி விகிதம், சிக்கன சேமிப்பு வசூலிக்க வேண்டுமென்று சொல்லக்கூடிய 2 சதவீதம் ஆகியவற்றைக் கணக்கிட்டுப் பார்த்தால், இந்த வட்டி விகிதங்கள், ரூபாய் 18, ரூபாய் 19 என்ற அளவிலே வருகின்றன. அதோடு மட்டுமல்ல, நாம் அபராத வட்டி என்று 3 சதவீதம் வசூலிக்கின்றோம். இவைகளை எல்லாம் பார்த்தால் வெளியிலே இருக்கிற லேவாதேவிக்காரர்களை விட அதிக அளவு வட்டி கூட்டுறவு சங்கங்களில் அமையக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதன் காரணமாக இவைகளை மாற்றி அமைக்கின்ற முயற்சி செய்ய வேண்டு



மென்ற ஒரு கருத்தினை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அப்படி இருக்கிற வட்டி விகிதத்தைக் குறைத்து, இப்பொழுதிருக்கிற கூட்டுறவு வங்கிகளிலும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும் உள்ள நிலைமைகளைப் போல் மாற்றி, நல்ல விதத்திலே நடைபெற வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே அதிகக் கடன் பெறும் விவசாயிகளுக்கு நேரடியாக கடன் கொடுக்க முனைந்திருக்கிறார்கள். சிறு சிறு விவசாயிகள், நல்ல முறையிலே விவசாயம் செய்ய கூட்டுறவு வங்கிகளையும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளையும் அணுகி, குறைந்த வட்டியிலே கடன் தொகை பெற இந்த இலாகாவானது முயற்சி எடுத்தால், அது நலமாக இருக்கும் என்ற கருத்தினை இந்த நேரத்திலே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கிராமச் சங்கங்களுக்குக் கொடுக்கக்கூடிய கடன்களிலே சில சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆண்டுக் கடன் திட்டம் நிச்சயமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். கிராமங்களிலே பல்வேறு காரணங்களால் விவசாயிகள், கிராம வங்கிகளிலே கடன் பெறுவதில் மிகத் தாமதம் ஏற்படுகிறது. ஆனால், அந்த முறையை அறவே நீக்கிவிட்டு, ஒவ்வொரு விவசாயினுடைய விவசாய நிலங்களின் அளவைப் பார்த்து, அவர்கள் எந்த நேரத்திலே எந்தப் பயிர் செய்கிறார்கள், அவர்களுக்கு எவ்வளவு கடன் தொகை தேவை என்ற முறையையெல்லாம் கணித்து,, ஆண்டுதோறும் ஓவர்டிராப்ட் முறையிலோ, பாஸ் புக் திட்டத்திலோ, விவசாயம் செய்கிற நேரத்திலே கடன்கள் பெறுவதற்குச் சுலபமான முறையை ஏற்படுத்தினால், விவசாயிகள் இந்த ஆண்டுக் கடன் திட்டத்தில் இருந்து தப்பிக்க முடியும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த முறையிலே கடன் கொடுக்கும் நிலையைச் செம்மையாகச் சீர்படுத்தினால் நாம் எளிதான முறையிலே ஏழை எளிய விவசாயிகளுக்குக் கடன்கள் போய்ச் சேர வழிவகை செய்ய முடியும்.

கடன் கொடுக்கிற நேரத்திலேயும், ரொக்கப் பகுதியாகவும், உரப் பகுதியாகவும் நாம் கடன்கள் விநியோகிக்கிறோம். இந்தப் பொருள் பகுதியாக விநியோகிக்கின்ற முறையிலே நாம் உரங்களுக்குத் தனியாக ஒரு தொகையை ஒதுக்குகின்றோம். அந்தத் தொகை விவசாய இலாகாவிலே பரிந்துரைக்கப்பட்டு, அவர்கள் சிபாரிசு செய்கின்ற அளவுக்கு நாம் கொடுக்கிறோம். ஆனால், அப்படிக் கொடுக்கின்ற நேரத்திலே இரசாயன உரங்களைப் பெற மட்டும்தான் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றிருக்கிற நிலையிலே, நாட்டிலே விவசாயத்தை அதிகமாகச் செய்து உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால் நாம் அதிகமாக கம்போஸ்ட் உரங்களையும், தழை உரங்களையும் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

இந்த பொருள்பகுதி கொடுக்கிற நேரத்திலே, பூராவும் இரசாயன உரப் பகுதியாக கொடுக்கிறோம். ஆனால், உரத்தை இடுகின்ற நேரத்திலே, இது போன்ற கம்போஸ்ட், தழை

[திரு, செ. சதாசிவம்] [1977 ஆகஸ்டு 12

உரங்களைக் கணக்கெடுப்பதில்லை. அதனால் போதிய உரம் கம்போஸ்ட், தழை உரங்கள் வாங்க தொகை கிடைக்காமல் அவர்கள் சிரமப்படுகிறார்கள். ஆனால், இன்றிருக்கின்ற நிலையிலே விவசாயி கம்போஸ்ட், தழை உரத்தை அதிகமாக உபயோகிக்க வேண்டியிருக்கிறது. அதனால் விவசாயிகள் இஷ்டப்படி உரங்களை வாங்க பூராத் தொகையையும் ரொக்கமாகக் கொடுத்து விட்டாலும் அதிலே தவறுகள் வராமல் பார்த்துக் கொள்ள வழிவகை செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கடன்கள் பட்டுவாடா செய்கின்ற நேரத்திலே, ஜாமீன் போடுகிற நேரத்திலே, ஒருவருக்கு ஒருவர்தான் ஜாமீன் போட வேண்டுமென்ற நிலைமை நிலவுகிறது. அதனால் கிராமத்திலே இருக்கிற அவர்களுக்கு சூழ்நிலை காரணமாக ஜாமீன் கிடைக்காமல் சிறிய விவசாயிகள் சிரமப்படக் கூடிய நிலை இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 10-30]

ஆனால் ஒரு கடன்காரருக்கு, ஒரு விவசாயிக்கு ஒருவர் ஜாமீன் போடுவது என்பதைத் தளர்த்தி இரண்டு பேருக்கு போடுவதற்குள்ள வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போதுள்ள அரசுத் திட்டத்தின் கீழ் வங்கிகளில் சிறிய விவசாயிகள் மேம்பாட்டு கடன் திட்டங்கள் மூலம் கடன் கிடைப்பதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. என் பகுதியைப் பொறுத்தவரையில், நான் திருச்சி ஜில்லாவைச் சேர்ந்தவன் இம்மாவட்ட வட பகுதி, ஆற்றுப் பகுதிகளில் உள்ளவர்களுக்குத்தான் இக்கடன்கள் அதிகமாக வழங்கப்படுகிறது. என் பகுதி, தென் பகுதி, மிகவும் வறண்ட பிற்பட்ட பகுதி. அரவாக்குறிச்சி, பரமத்தி, கரூர், தாந்தோன்றி யூனியன் ஆகிய பகுதிகள் இந்தக் கடன் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படாத நிலைமை இருப்பதால் எங்கள் வறண்ட பகுதியில் இத்திட்டங்கள் அமுலாக்கப்படுவதில்லை. எங்கள் பகுதி விவசாயிகளின் செல்வம் கால்நடையாக இருந்து வருகிறது; எனவே இந்தத் திட்டத்தை இந்தப் பகுதிகளிலே செயல்படுத்துவதற்கு உடனடியாக வழிவகைகளைக் காணவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிலவளவங்கிகளில் கொடுக்கப்படுகிற கடன்கள் கிணறுகள் வெட்டுவதற்காக கொடுக்கக்கூடிய கடன்கள் கிணறு வெட்டி பாசனத்திற்கு லாயக்கு அற்றவைகளாக, கிணறுகளில் தண்ணீர் இல்லாத சூழ்நிலை ஏற்படுகிற நேரத்தில், இந்த விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடன்களைக் கட்ட வேண்டுமென்ற சட்டத்தைப் பொறுத்தவரையில், அந்த நிலை இருக்கிறது. மழைக் காலத்தில் கொஞ்சம் தண்ணீர் வருகிறது; இப்படிப்பட்ட கிணறுகளை மேலும் வெட்ட வேண்டுவதில் பயன் இல்லை



7 ஆகஸ்டு 12] [திரு. செ, சதாசிவம்]

...னபதால் கடன்களைத் தள்ளுபடி செய்யச் சொல்லவில்லை, அதனால் அந்த விவசாயிகளுக்குக் கிடைக்கக் கூடிய சலுகைகள் கிடைக்க முடியாத நிலைமை அமைந்திருக்கிறது. இதைப் போக்க வேண்டும். ஒரு விவசாயி கிணறு வெட்டி தண்ணீர் வராத நிலையில் கற்பாறையாக அமைந்துவிட்டால் பூரா தொகையும் ஓரளவு வெட்டுவதற்குள்ளேயே முழுவதும் செலவாகி விடுகிறது. அவர்கள் வாங்கிய கடன்களுக்கு மேலேயே அதிகமாக செலவு செய்ய வேண்டியிருக்கிறது. 10 ஆயிரம் ரூபாய்க்கு எஸ்டிமேட் போட்டு கடன் வாங்கியிருந்தால், அந்த விவசாயி அதற்கு மேலேயே செலவழித்து கிணறு வெட்டியிருந்தாலும் எஸ்டிமேட்டில் கொடுத்திருக்கக்கூடிய அளவிற்குக் குறைவாக வெட்டியிருந்தால் 10 ஆயிரம் வாங்கியிருந்தால் 8 ஆயிரம்தான் செலவாகியிருக்கும் என்று மதிப்பிடப்பட்டு கணக்கை முடிவு கட்டி பூராத்தொகையையும் ஒரே தவணையில் கட்டிவிட வேண்டும் எனக் கூறுகிறார்கள். எனவே இந்த விதிமுறைகளை மாற்றி அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும்படிச் செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் தலைமைச் சங்கத்தில் இருந்து கிராமச் சங்கங்களுக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்க வேண்டும். இப்போது பல்வேறு விற்பனைகள் மூலம் வரக்கூடிய லாபத்தை வைத்து ஓரளவு நஷ்டமில்லாமல் இந்தச் சங்கங்கள் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. இந்த கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் தங்கள் வருவாயை உயர்த்திக்கொண்டு நல்ல முறையில் செயல்பட பல்வேறு திட்டங்களை இயற்றி நம்முடைய கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையிலே செயல்படச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே என் கருத்தை வைத்து நான் என் உரையை முடிக்கிறேன்.

* திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் இந்த கூட்டுறவுத் துறை சம்பந்தமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சில கருத்துக்களை இங்கே முன்வைக்க விரும்புகிறேன். இந்தக் கூட்டுறவுத் துறை என்று சொன்னாலே மக்கள் மத்தியில் பொதுவான ஒரு தவறான கருத்து ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நான் எந்தக் கட்சியையும் குறை கூறவில்லை. எந்த ஆட்சியையும் குறை கூறவில்லை. இது இன்று நேற்று அல்ல கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஏற்பட்டதல்ல. கூட்டுறவுத்துறை என்று சொன்னாலே ஏதோ ஒரு ஊழல் நிறைந்த துறை என்று மக்களுக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய அந்தக் கருத்தைப் போக்கக் கூடிய முறையில் அதிகாரிகளும் மற்றவர்களும் நடந்துகொள்ளக் கூடிய முறையில் இந்த அரசாவது அதற்கான கறாரான நிலையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு கூட்டுறவு வங்கிகளிலும் சரி, மத்திய வங்கிகளிலும் சரி, வேறு சில கூட்டுறவு ஸ்தாபனங்களிலும் தனி அதிகாரிகள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு வந்திருக்கக்கூடிய காரணத்தால், அவை

களிலும் கூட தேர்ந்தெடுக்கப்பட்ட போர்டுகளை உடனடியாக அமைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதன் மூலம் ஜனநாயக முறையில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் நடத்துவதற்கு வழியாக இருக்க முடியும் என்று கூறிக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் கொடுக்கக் கூடிய கடன்கள் நலிவுற்ற மக்களுக்கு அதிகமாக வழங்கப்பட வேண்டும். வசதி படைத்தவர்களுக்கு ஏற்கனவே வசதி இருக்கிறது. எனவே கடன் வசதி செய்யக்கூடிய கூட்டுறவு ஸ்தாபனங்கள் நலிவுற்ற மக்களுக்கு, ஏழை எளிய விவசாயிகளுக்கு அதிகமாகக் கடன் கொடுக்க முன்வர வேண்டும். இந்த அறிக்கையில் கூட கூறப்பட்டிருக்கிறது. இப்படி நலிவுற்ற மக்களுக்கு 47 சதவீதம்தான் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது அப்படியானால் நலிவுற்ற மக்களுக்கு 47 சதவீதமும் மீதமுள்ள 53 சதவீதம் அவர்களுக்கு இல்லையென்று இந்த அறிக்கையே தெளிவாக்குகிறது. அதனால்தான் கூறுகிறோம். இந்த 53 சதவீதம் மட்டுமல்லாமல் 75 சதவீதம் இப்படிப்பட்ட மக்கள் கடனுதவி பெறக் கூடிய அளவுக்கு அரசு வழிவகை செய்யவேண்டும். அந்த முறையில் வங்கிகள் தங்களுடைய கொள்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

கடன்களில் மூன்று விதங்கள்; குறுகிய காலக்கடன், மத்திய காலக்கடன், நீண்டகாலக் கடன் என்று கூறப்படுகின்றன. ஆங்கிலத்தில் உள்ள குறிப்புக்கும் தமிழில் உள்ள குறிப்புக்கும் வழக்கம் போல் அந்த 'பிரிண்டர்ஸ் டெவில்' வந்திருக்கிறது. தமிழில் குறுகிய கால்க்கடன் ரூ. 117.33 கோடி என்று இருக்கிறது. ஆங்கிலத்தில் அது 119.33 கோடி என்று இருக்கிறது. அது பிரிண்டர்ஸ் டெவில் என்று கருதுகிறேன். நடுத்தர காலக்கடன் ரூ 5.75 கோடி என்று தமிழில் இருக்கிறது. அது ஆங்கிலத்தில் ரூ. 5.79 கோடி என்று இருக்கிறது. இப்படி எல்லா தஸ்தாவேஜுகளிலும் வருகிறமாதிரி இதிலும் வந்திருக்கிறது. எதை எடுத்துப் பேசுவது என்று தெரியவில்லை. நடுத்தர காலக் கடன் தமிழில் உள்ளது போல் ரூ 5.75 கோடி என்று எடுத்துக்கொண்டாலும் அல்லது ஆங்கிலத்தில் உள்ளது போல் ரூ. 5.79 கோடி என்று எடுத்துக் கொண்டாலும், இந்த நலிவுற்ற மக்களுக்கு கொடுக்கக் கூடியகுறுகிய கால, நடுத்தர காலக் கடன்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன. குறுகிய காலக் கடன் ரூ. 113 கோடி என்றும் நீண்ட காலக் கடன் ரூ. 19 கோடி என்றும் இருக்கிறது. இதுவும் மிகவும் குறைவாக உள்ளது. இந்தக் கடனை அதிகமாகக் கொடுக்க அரசு முன்வரவேண்டும்,

இந்த சமயத்தில் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன் இந்த குறுகிய காலக் கடன் சம்பந்தமாக சட்டசபையில் அந்தப் பிரச்னை வந்தது; சரியான முறையில் பயிர்கள் விளையாத காரணத்தால் அந்த குறுகிய காலக் கடன்களை நீட்டிக்க வேண்டும் குறைந்த பட்சம் அதை மத்திய காலக் கடனாகவாவது 'கன்வர்ட்



செய்ய வேண்டுமென்ற கோரிக்கைகள் எல்லாம் வந்தது. அதை அரசு கவனித்து அப்படிப்பட்ட நிலைமைகளைக் கையாளவேண்டும், மாற்ற வேண்டும், 'கன்வரட்' செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொருபிரச்னை. குறித்த கடனைத்திருப்பிக் கொடுக்காதவர்கள் மீதுஎந்தக் காரணத்தைக் கொண்டும் ஜப்தி நடவடிக்கை செய்யக் கூடாது என்று அரசு தரப்பிலிருந்து உத்தரவு சென்றிருப்பதாக அமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு முன் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார். நான் தென்னாற்காடு மாவட்டம், கடலூர் மத்திய கூட்டுறவு வங்கி, கடலூர், 4-8-77 தேதியிட்ட ஒரு சர்குலரைப் படிக்கிறேன். முழுவதையும் படிக்க நேரமில்லை. தகவல் இரண்டில் கடன் தவணை வசூல் பாக்கி தொடர்பாக என்று ஆரம்பித்து, கடைசியில் காப்பாளர்கள் இந்த விளக்கத்தைப் புரிந்து கொண்டு இரண்டாயிரம் கடன் பெற்றிருந்தால் கடனில் ஒரு பகுதியோ அல்லது முழுத்தொகையையோ பாக்கி வைத்திருப்பார்களேயானால் அவர்கள் பேரில் ஜப்தி நடவடிக்கை எடுத்து வசூல் செய்யப்பட பணிக்கப்படுகிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[முற்பகல் 10-40]

இப்படி ஒரு பக்கத்தில் ஜப்தி செய்யக் கூடாது என்ற உத்தரவு அரசாங்கத்தில் இருந்து போயிருக்கிறது என்று கூறப்படுகிறது. அப்படி நடந்துகொண்டிருக்கும் போதுதான், சமீபத்தில்தான் 4-8-77 இந்தச் சுற்றறிக்கை எல்லா ப்ரைமரி சொசைட்டிகளுக்கும் சென்று ஜப்தி செய்யக் கூடிய ஒரு நிலை இருக்கிறது. அங்கு கடன் வாங்கிய விவசாயிகள் அவதிப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது.

அடுத்து, ரிஸ்க் பண்ட். அது கூட நலிந்த மக்களுக்காக உபயோகப்படுத்தப்பட வேண்டும். உழவர்கள் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் என்று 14 இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. இது போதாது. இதை அதிகப்படுத்தவேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேணடும்.

மருத்துவச் செலவு, திருமணச் செலவு என்பதற்கான் கடன் கொடுப்பதற்காக என்று சொல்லி விவசாயிகளிடமிருந்து அவை வசூலிக்கப்பட்டது. இறுதிச் சடங்குக் கடன் ரூ. 250, திருமணக் கடனுக்கு ரூ. 250 என்றும் மருத்துவச் செலவிற்காக ரூ. 250 கடன் தருவோம் என்றும்சொல்லி, சொந்த ஜாமீனில் அதைப் பெறமுடியும் என்று சொல்லி விவசாயிகள் மத்தியில் பிரசாரம் செய்யப்பட்டு கிட்டத்தட்ட ஒன்பது லட்சம் விவசாயிகள் இதில் சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் சொந்த ஜாமினில் இந்தக் கடனைப் பெற முடியாத நிலைதான் இருக்கிறது. நிலம் உள்ளவர் வேறு யாராவது ஜாமீன் போட வேண்டும் என்ற நிலை இருப்பதால் அவர்கள் இந்தக் கடனைப் பெற முடியாத சூழ்நிலையில்

இருக்கிறார்கள். ஆகவே இதுகுறித்து என் ஆலோசனை என்னவென்றால் அதே சங்கத்தில் உறுப்பினராக இருக்கக்கூடிய மற்றொருவர் ஜாமீன் போட்டால் போதும் என்று செய்யவேண்டும். இல்லை என்றால் நிலம் வைத்திருக்கக்கூடிய நபர்களை தேடிக்கொண்டு கடன் பெறுவோர் போக முடியாது. இது ஏழைகள் இறுதிச் சடங்கு செய்வதற்காகக் கொடுக்கப்படுகிற கடன் ரூ 75 பொருளாதார நிலையில் அவ்வளவு படுமோசமாக இருக்கும். அந்தக் கடனை வாங்கக்கூடிய விவசாயிகளுக்கு நிலம் எப்படி இருக்கமுடியும்? ஆகவே அதே சங்கத்தில் இருக்கக்கூடிய வேறு ஒரு உறுப்பினர் ஜாமீன் போட்டால் போதும் என்று செய்யவேண்டும். இப்பொழுது கொடுக்கக்கூடிய கடன் தொகையும் போதாது. அதையும் அதிகப்படுத்தவேண்டும்.

அத்துடன் நகைகளுக்கு கடன் கொடுக்கப்படுகிறது. ரூ. 450 பெறுமானமுள்ள நகைக்கு ரூ. 200 தான் கடன் கொடுக்கப்படுகிறது. கிராம் ஒன்றுக்கு ரூ. 25 என்று மதிப்பு போடுகிறார்கள். கமர்ஷியல் பாங்குகளில் கிராம் ஒன்றுக்கு ரூ. 30, 35 என்று கடன் கொடுக்கப்படுகிறது. எனவே கொடுக்கப்படுகிற இந்தக் கடன் தொகையை அதிகப்படுத்த வேண்டும். அத்துடன் கல் நகைகளாக இருந்தால் கடன் கொடுப்பது கிடையாது. ஏழைகள் அத்தனை பேர்களும் வெறும் தங்கத்தால் நகைகள் போட்டுக் கொண்டிருக்க முடியாது. ஒரு ஆபரணம் என்ற முறையில் கற்கள் இருக்கத்தான் செய்யும், அவை சாதாரணமானதல்ல, நல்ல கற்களாகத்தான் இருக்கும். ஆகவே டெக்னிக்கலாகப் பார்க்காமல், கல் வைத்திருக்கும் நகைகளுக்கும் கடன் கொடுக்கும் ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும்.

இந்தக் கடன் விவகாரத்தில் ஏழை மக்களின் விவகாரங்களைக் கவனிக்காமல், வட்டியை அதிகப்படுத்தும் சூழ்நிலையும், அதிகப் பணம் கடன் பெறமுடியாத ஒரு சூழ்நிலையும் இருப்பதன் காரணமாக ஏழை மக்கள் லேவாதேவிக்காரர்களையும் பெரிய வட்டிக் கடைக்காரர்களையும் தேடிச் செல்லும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. வட்டி விகிதம் சம்பந்தப்பட்ட மட்டில் எனக்கு முன் பேசிய ஒரு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலிருந்து வரும்போது அங்கேயே வட்டி 10 சத வீதம் என்றும், மாவட்ட வங்கிகளுக்கு வரும்போது 14, 14½ சத வீதம் என்று ஆகி, கடைசியாக விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடிய நேரத்தில் வட்டி 14, 15 அல்லது 16 சத வீதம் என்ற முறையில் விதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்த வட்டி விகிதத்தைக் குறைக்க ரிசர்வ் வங்கியோடு பேசியாவது அங்கேயே அந்த வட்டி விகிதத்தைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்தால்தான் படிப்படியாக அந்த வட்டி உயருவது நிறுத்தப்படும்.

இன்னொன்று, இந்த மாவட்ட வங்கிகளே தேவை இல்லை என்ற கருத்து இருக்கிறது. மாவட்ட ரீதியாக வங்கிகள் இருக்க வேண்டுமா வேண்டாமா என்பதில் எங்கள் கருத்து என்னவென்றால், மாவட்ட வங்கிகள் இருப்பதால் இந்தச் சிக்கல்கள்





ஏற்படுகின்றன, ஹாண்ட்லிங் சார்ஜ் அதிகப்படுகிறது. அரசியல் காரணங்களுக்காக வேண்டுமென்றால் மாவட்ட வங்கிகள் தேவை என்று கூறலாமே தவிர அடிப்படையில் விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்ற எண்ணமிருந்தால் இந்த ஹாண்ட்லிங் சார்ஜை தடுத்து நிறுத்த முடியும். இந்த வங்கிகள் இல்லாமலிருந்தால் நேரடியாகக் கொடுக்கலாம். 'டூடையர்' இருந்தால் போதும். அதாவது மாநில அளவில் கீழ்மட்டத்தில் ஆக இரண்டு மட்டம் போதும் என்பதுதான் எங்களுடைய கருத்து.

இன்னொன்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. டிராக்டர்கள் வாங்குவதற்கு அளவு கடந்த கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. 74—75இல் 223 லட்சம், 75—76இல் 300.06 லட்சம், 76—77இல் 677.87 லட்சம் என்று கணக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் பல்வேறு கணக்குகளை எடுத்துப் பார்த்தால் இந்தக் கடன்மூலம் அளவு கடந்த தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற தொகைகளை எல்லாம் இதனுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, மற்ற இனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது மிகவும் சொற்பம். டிராக்டர்கள் என்று சொன்னால் இதை வாங்குபவர்கள் யார்? பெரிய மிராசுதார்களும், பணக்காரர்களும்தான் இதை வாங்க முடியும். பாமர ஏழை மக்கள் இதை பயன்படுத்திக்கொள்ள முடியாது. 5 ஏக்கர்களுக்குக் குறைவாக இருக்கின்றவர்கள் இதைப்பயன்படுத்திக்கொள்ள முடியாது, இது மட்டுமல்ல இப்படி அதிகமாக டிராக்டர்களை வரவழைப்பதால் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓர் ஆண்டுக்கு இருக்கின்ற மூன்று நான்கு மாதங்கள் வேலையும் இல்லாமல் போய்விடுகின்றது. ஆகவே, இப்போதுள்ள நமது நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலையிலும் லட்சக்கணக்கான விவசாயக் கூலிகளுக்கு வேலையில்லாத நிலையிலும் இந்த டிராக்டர்கள் தேவையில்லை என்று கருதுகிறேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறையில் ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் நடந்த ஊழல்களை எல்லாம் கண்டுபிடித்து அறிவதற்காக 'பாரதி கமிட்டி' என்ற அந்த கமிட்டி தனது அறிக்கையையும் கொடுத்துவிட்டது என்று தெரிகிறது. அந்த அறிக்கையை இந்த அவை முன் வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கன்ஸ்யூமர்ஸ் கோவாப்ரட்டிவ் சொஸைட்டீஸ் என்று பல நிறுவனங்கள் இருக்கின்றன. இவை பெரும்பாலும் பெரிய முதலாளிகளுக்கும் மில் அதிபர்களுக்கும் தான் உதவியாய் இருக்கின்றன. உதாரணமாக எடுத்துக்கொண்டால், சிறப்பான முறையில் நடந்து கொண்டிருந்த கோவை சிந்தாமணி கூட்டுறவு சொஸைட்டிக்கு ஒரு பெரிய மில் முதலாளி தலைவராக இருந்தார். இப்போது ஸ்பெஷல் ஆபீசர் மூலம் நடைபெறுகிறது. 20, 25 கோடி அளவுக்கு வியாபாரம் நடைபெற்று, மக்களின் நல்லாதரவு பெற்று சொஸைட்டி நடந்து வந்தது. இப்போது என்ன

நிலைமை? இப்போது அங்கு நிலைமை என்னவென்றால், வெளி மார்க்கட் விலையை விட எல்லா பொருட்களின் விலையும் அதிகமாக இருக்கிறது. சாமான்களும் கிடைப்பதில்லை. வேறு பல பிரச்னைகளுக்காக தொழிலாளர்களுடைய வேலைநிறுத்தம் நடைபெற்றது. இதன் காரணமாக தொழிலாளர்கள் அடக்குமுறைக்கு ஆளாகிறார்கள். இப்படி சீரழிந்த நிலையில் அந்த சொஸைட்டி சென்று கொண்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட சொஸைட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வரவேண்டுமே ஒழிய பெரிய நில்ச்சுவான்தார்களையோ, மில் முதலாளிகளையோ போடக்கூடிய நிலைமை இனி இருக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

லேபர் கான்டிராக்ட் சொஸைட்டிகள் அதிகமாக வரவேண்டும். நியாயவிலைக் கடைகளைப் பொறுத்தமட்டில் பாமர ஏழை மக்கள் இந்தக் கடைகளில் போய் ஒரு கிலோ அரிசி வேண்டும் என்று கேட்டால் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். தினமும் கூலி வேலைசெய்து வாழ்க்கை நடத்தக்கூடிய ஏழை மக்கள் ஒரு கிலோ அரிசி தான் வாங்க முடியும். அப்படி ஒரு கிலோ வாங்கப்போனால் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ஹோல்ஸேலாகவோ, பல்க்-காகவோ வாங்க முடியாது, ஆகவே சில்லறை அளவில் ஒரு கிலோ அளவில் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 75–76, 76–77 இந்த ஆண்டுகளில் பல இடங்களிலும் என்ன நடந்திருக்கிறது என்று பார்த்தால், மத்திய வங்கிகளை 'எ' கிளாஸ் பாங்காக ஆக்க வேண்டும் என்பதற்காக பிரைமரி சொஸைட்டிகளை, அவைகளிடம் இத்தனை சதவீதம் பாக்கி (அரியர்ஸ்) இருந்தது என்று சொல்லி அவைகளை எல்லாம் கலைத்து விடுகின்ற நிலைமை இருந்து வந்திருக்கிறது. இதன் காரணமாக இந்த சொஸைட்டிகளில் இருக்கின்ற ஊழியர்களுக்கு வேலையில்லை, முன்னால் இதன் மூலம் கடன் பெற்றிருப்பவர்கள் மேலும் கடன் பெற முடியாத நிலைமை ஏற்படுகிறது. முன்னால் 15 நாட்களுக்கு முன்னால் கடன் பெற்றவர்கள் இப்போது கடன் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையைத் தடுத்து நிறுத்த வேண்டும். மக்களின் வசதிக்காகத் தான் சொஸைட்டிகள் ஏற்படுத்தப்படுகிறதே தவிர, அவை எந்த தகுதியை பெறுகிறது என்பது நமது நோக்கமல்ல. அந்தக் கண்ணோட்டத்துடன் இதைப் பார்க்கக்கூடாது. கடலூர் மத்திய பாங்கில் நடைபெற்றுக்கொண்டிருப்பதை எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். அங்கு ஒரு சுற்றறிக்கை என்ற பெயரால் கையெழுத்திட்டு அனுப்பிவிட்டு விட்டு, 400 பேர்களை வெளியே அனுப்பி பிரைமரி பாங்குகளுக்கு செல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இவர்களுக்கு கன்ஸாலிடேட்டாக கொடுக்கப்பட்ட சம்பளம் 175 ரூபாய், 200 ரூபாய் தான். என்றாலும், 2 ஆண்டு, 4 ஆண்டு, எட்டு





ஆண்டு, பத்து ஆண்டு என்று சர்வீஸ் செய்தவர்கள். மேலும் அவர்களில் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் பி.யூ.சி. படித்தவர்கள் பட்டதாரிகள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் பயிற்சி பெற்றவர்கள், பத்து ஆண்டுகளாக வேலை பார்க்கிறார்கள் என்றால் வருங்காலத்தில் சென்ட்ரல் பாங்க் எம்ப்ளாயீஸ்-ஆக ஆகி விடலாம் என்ற நினைப்பில்தான் எட்டு ஆண்டுகள், பத்து ஆண்டுகள் இதில் சேர்ந்து கொண்டு குறைந்த சம்பளத்தில் பணியாற்றி வருகிறார்கள். இவர்களுக்கு எல்லாம் இப்போது அனுப்பப்பட்டிருக்கின்ற சுற்றறிக்கை அவர்களின் வேலைக்கே ஆபத்து ஏற்படக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-50]

அவர்கள் ஏன் இப்படி செய்யப்பட்டார்கள் என்பதைத் துருவிப் பார்க்கும்போது, அவர்கள் தங்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்றும், கொஞ்சம் சம்பள உயர்வு வேண்டுமென்றும், கோரி அதற்கான ஒரு இயக்கம் நடத்தி உண்ணாவிரத நடவடிக்கைகளிலே ஈடுபட்டார்கள் என்பதற்காக அவர்கள் பழிவாங்கப் பட்டார்கள், அதற்கான நடவடிக்கைகள்தான் இவைகள் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதேமாதிரி தான், கும்பகோணம், தஞ்சாவூர் ஆகிய சொஸைடிகளிலேகூட இப்படி வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்ட ஊழியர்களை, கண்ட கண்ட இடத்திற்கு மாற்றம் செய்தார்கள், இன்னும் அது நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிறு விவசாயிகளுக்கு கறவை மாட்டிற்காக கடன்வழங்கப்படுகிறது. அவர்களுக்கு ஏற்கெனவே கடன் பாக்கி இருக்கிறது என்பதையெல்லாம் பார்க்காமல் கடன் கொடுக்க வேண்டும். அவர்கள் ஏற்கெனவே கொடுத்திருக்கும் வட்டி, அசலுக்குமேல் கொடுத்திருக்கிறார்கள். அவர்களிடமிருந்து மேலும் வட்டி வாங்காமல், கடன் வசதி பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். கால்நடைகளுக்கு கடன் வாங்கும்போது, அந்தக் கறவை மாட்டின் மதிப்பில் 2 சத வீதம் இன்சூரன்ஸ் பிரிமியம் கட்ட வேண்டியிருக்கிறது. ஆனால், மாடு இறந்து 2 ஆண்டு காலம் ஆனாலும், இறந்துவிட்டது என்று வெடர்னரி டாக்டர் சர்டிபிகேட் கொடுத்தாலும், அதற்கான பணம் இன்சூரன்ஸ் நிறுவனத்தால் திருப்பிக் கொடுக்கப்படுவதில்லை. இறந்துவிட்ட மாட்டிற்கான வட்டிமட்டும் ஏறிக்கொண்டே இருக்கிறது. இவற்றையெல்லாம் நீக்குவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது)

இன்னும் 2, 3 நிமிடங்களில் முடித்து விடுகிறேன். அடுத்து மீன் வளம். மீனவர்கள் இந்த அரசாங்கத்திடம் ரொம்பவும் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் மீனவ நண்பராக படத்திலே நடித்திருக்கிறார்கள். நம்முடைய இந்தத் துறையின் அமைச்சர் அவர்கள் அந்தச் சமுதாயத்தை

சேர்ந்தவர்கள். எனவே, நிச்சயமாக நம் அனைவருக்கும் நல்ல விளைவுகள் இந்த அரசின் மூலம் ஏற்படும் என்று அவர்கள் ரொம்பவும் எதிர்பார்க்கிறார்கள். அரசு அவர்களுக்கு இன்றைக்கு செய்திருப்பது, மீனவர்கள் விபத்தில் இறந்து விட்டாலோ, கடலில் மூழ்கி இறந்துவிட்டாலோ, அல்லது தவறி இறந்து விட்டாலோ அவர்களுக்கு ரூ. 5,000 அளிப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இந்தத் தொகையும் தவணையாகத்தான் தரப் படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி இறப்பவர்கள் ½ சதவிகிதம்கூட இருக்காது. ஆனால், உயிரோடு இருக்கக் கூடியவர்கள் லட்சக்கணக்கான மீனவர்கள் இருக்கிறார்கள். இப்படி லட்சக்கணக்கானவர்கள் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக் கின்றதால், அவர்களுக்கு நாம் உதவிசெய்ய வேண்டும். கட்டு மரம், வாங்க நைலான் நூல் வாங்க, பாய் மரம் வாங்க இப்போது சாதாரணமாக 10,000 ரூபாய் செலவாகிறது. ஏற்கெனவே இவைகளுக்கெல்லாம் 20 சத விகிதம் சப்சிடி கொடுக்கப்பட்டு, வந்தது. அதுவும் இன்றைக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது.

இன்னொன்று, கட்டுமரங்களில் செல்லக்கூடியவர்கள் தவறி விட்டாலோ அல்லது விசைப்படகு தவறி விட்டாலோ, அவர்களைக் கண்டுபிடிப்பதற்கு விமானத்தில் சென்று பார்ப்பது, தேடுவது என்ற முறை இன்றைக்கு இருக்கிறது. அப்படி அந்த விமானத் திலே செல்லக்கூடியவர்கள், கடமைக்காகத்தான் செல்கிறார்களே தவிர, எந்த ஒரு விசைப்படகோ அல்லது கட்டுமரமோ அவர் களால் கண்டுபிடிக்க முடியவில்லை என்று பொதுவாகப் பேசப் படுகிறது. அதற்காக அவர்களுடைய கோரிக்கை, மீனவ சமுதாயத்தில் இருக்கக்கூடிய ஒருவரை உடன் அழைத்துச் செல்லவேண்டுமென்று சொல்கிறார்கள். காரணம், அவர்களால் நீரோட்ட நிலை, புயல் வீசக்கூடிய தன்மை, காற்றின் திசை போன்றவைகள் அவர்களுக்குத்தான் தெரியும். எனவே, அவர் களும் அந்த விமானத்தில் செல்ல இதிலே பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இவைகளை யெல்லாம் கவனிக்கவேண்டும்.

இன்னொன்று முக்கியமானப் பிரச்னை. சாதாரண கட்டு மரக்காரர்களுக்கு ஏற்கெனவே சில இடையூறுகள் இருந்தன. இன்றைக்கு, அவர்களுக்கு பெருத்தப் பிரச்னையாக இருப்பது, விசைப்படகு வர்சஸ் கட்டுமரம் என்பதுதான். குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்திலே தூத்துக்குடி முதல் கன்னியா குமரி வரை இப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால் அவர்களால் அங்கு மீன் பிடிக்க முடியாத, இறால் பிடிக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, பருவ மழை காரணத்தால்தான் அவர்கள் தங்களுக்கு மீன் கிடைக்க வில்லை, இறால் கிடைக்கவில்லை என்று நினைத்தார்கள். இப்போது கடலோரத்திற்கு அப்பால் செல்ல வேண்டிய கப்பல்களும், விசைப் படகுகளும் கரையோரத்திலேயே போகக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதால், அவர்களுடைய வலைகள் கிழிந்து விடுகின்றன.





அங்கிருக்கக்கூடிய மீன்கள், அவற்றின் குஞ்சுகள், முட்டைகள் எல்லாம் மொத்தமாக சேர்ந்து இழுத்துச் சென்றுவிடுகிறது. அதனால் அவர்கள் மீன் பிடிக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட் டிருக்கிறது. இதிலே பாதிக்கக்கூடியவர்கள் கட்டுமரத்திலே செல்லக்கூடிய ஏழை எளிய மீனவர்கள்தான். எனவே, இவர் கள் சம்பந்தப்பட்ட வரை இது ஒரு பிரதான பிரச்னையாக இருந்து வருகிறது.

ஏற்கெனவே, இவர்கள் ஜூன் மாதத்திலிருந்து நவம்பர் மாதம்வரை இறால் மீன்கள் பிடித்து முடிந்தாகி விட்டது. இதனால் இவர்களுக்கு நல்ல ஆதாயம் இருந்தது. அதை வைத்துக் கொண்டு பழுதடைந்த வலைகளை அவர்களால் பழுது பார்க்க முடிந்தது. ஆனால், இன்றைக்கு இந்தப் பிரச்னை வேறுவிதமாக மாறிக் கொண்டிருக்கிறது. அவர்களே பிடிக்க முடியாமல் விசைப் படகுகள் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றன. ஏற் கெனவே உத்தரவு இருக்கிறது—திருச்செந்தூர் பக்கத்தில் விசைப்படகை எதிர்த்து நேவல் பைட்டே நடந்தது, பத்திரிகையில் படித்தோம். அதையும் எதிர்த்தார்கள் கட்டு மரக்காரர்கள். மீன்பிடி துறைமுகத்தில் மட்டுந்தான் விசைப் படகுகளை வைத்து மீன் பிடிக்கவேண்டும். கடலில் குறிப்பிட்ட எல்லைக்கப்பால் சென்றுதான் அவர்கள் மீன் பிடிக்க வேண்டுமென்ற விதிமுறைகள் இருந்தும் அவை மீறப்படுகின்ற நிலைமை இருக்கிறது.

இறால் மீன் அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கிறது. கடந்த ஆண்டு 75-76ஆம் ஆண்டில் இதன் மூலம் 118 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைத்திருக்கிறது. அது நம்மு டைய கனி வளத்தைத் தோண்டி அல்ல, சுரங்கத்தைத வெட்டி அல்ல வேறு செல்வத்தை அழித்து அல்ல. அங்குள்ள மீனவர்கள் தங்கள் உயிரைப் பணயமாக வைத்து ஆழ்கடலில் மீன் பிடித்து ஈட்டிய அந்நியச் செலாவணியாகும். அப்படி அந்நியச் செலா வணியை சம்பாதித்துத் தரக்கூடிய மற்ற தொழில் அதிபர்களுக்கு பல்வேறுவிதமான சப்சிடிகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் இவர்களுக்கு எவ்விதமான உதவியும் கிடையாது. ஏற்கனவே வலைகள், கட்டுமரங்கள் இனமாக வாங்கிக் கொடுக்க முன் வரு வதற்குப் பதிலாக இருந்து வந்த 20 சதவீதம் சப்சிடியும் நிறுத்தப்பட்டிருக்கிறது. விசைப்படகுகள் மீனவர்களுக்கு கிடைப்பதற்குப் பதில் கடலுக்குள் இறங்க முடியாத, இறங்கத் தெரியாத, கடலையே பார்த்திராதவர்கள் விசைப் படகுகளை வைத்துக் கொண்டு ஆதிக்கம் செலுத்தும் நிலைமை ஏற்பட் டிருக்கிறது. உங்களுக்கும் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன் சினிமா நடிகைகள் கே. ஆர். விஜயா. செளகார் ஜானகி பத்மினி, பிரமிளா போன்றவர்கள் விசைப்படகுகளை வைத்திருக் கிறார்கள். அவர்களுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? இந்தத் துறையில் பெரும் முதலாளிகள் ஆதிக்கத்தால் மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஷாவாலஸ், இ.ஐ.டி. பாரி போன்ற

கம்பெனிகள் கூட விசைப்படகுகளை வாங்கி நடத்துகிறார்கள். இந்தச் சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. மீனவ மக்களால் 118 கோடி ரூபாய் அந்நிய செலாவணி கிடைத்தும் சாதாரண மீனவ மக்களுக்கு அதிக வசதி செய்து கொடுக்கப்படவில்லை.

பரதவர்கள்தான் நெய்தல் நிலத்தில் வாழ்பவர்கள் என்று வரலாற்றில் சொல்லப்படுகிறது. அவர்கள் அநேகமாக திருநெல்வேலி, இராமநாதபுரம், குமரி மாவட்டங்களில் வசிக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் கிறிஸ்துவ மதத்தில் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக "மோஸ்ட் பாக்வார்டு கிளாசு"க்குக் (Most backward class) கொடுக்கப்படுகின்ற சலுகைகள் எதுவும் கிடைப்பதில்லை. அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டும். உங்களுக்கே உரியவிஷயம். இதனால் லட்சக்கணக்கான மீனவர்களுக்கு இப்படிப்பட்ட சலுகைகள் கிடைப்பதில்லை. அரசு அதைப் பற்றிச் சீர்தூக்கிப் பார்த்து அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். எனக்குத் தெரிந்த வாலிபன் பி. யு. சி. படித்தவர்—பஸ்ட்கிளாஸ்-கணக்கில்—200-க்கு 200 வாங்கியவர்......

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில திரைப்பட நடிகைகள் பெயரைச் சொல்லி அவர்கள் பெயரால் படகுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அது அரசாங்க சார்பில் ஒதுக்கப்பட்ட படகுகளா அல்லது தனியார் துறையில் வங்கிகள் மூலமாகக் கடன் பெற்று வாங்கப் பட்ட படகுகளா ?

திரு. சி. கோவிந்தராசன் : நான் குறிப்பிட்டது சினிமா நடிகைகள் மட்டுமல்ல, வேறு சில வியாபாரிகளும் இருக்கிறார்கள் அரசாங்கம் மூலமாக வாங்கிக் கொண்டவர்கள் சிலர். மீனவர்கள் பெயரில் விசைப்படகுகளை வாங்கி உபயோகப்படுத்துபவர்கள் சிலர். அது மீனவர் பெயரில்தான் இருக்கும். சொந்தமாக வாங்கியிருப்பவர்களும் உண்டு. அந்தத் துறையில் இவ்வாறு வலிப்பட்டவர்கள் ஆதிக்கம் செய்கிறார்கள். அந்தப் பலன் மீனவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றுதான் நான் கூறினேன்.

அந்த வாலிபர் பி. யு. சில் கணக்கில் 200-க்கு 200 மார்க் வாங்கியிருந்தும் எஞ்சினியரிங் காலேஜில் சேர மனுப் போட்டு இடம் கிடைக்கவில்லை. இதற்கு அடிப்படையான காரணம் அவர்கள் "மோஸ்ட் பாக்வார்டு கிளாஸ்" என்று இல்லாமல் "கிறிஸ்தவர் என்ற நிலையில்" பார்வாடு கம்யூனிடி" என்று கருதப்படுவதுதான். இப்படிப்பட்ட சூழ்நிலையைச் சீர்தூக்கிப் பார்த்து உண்மையிலேயே பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இவர்கள் மதத்தால் முற்போக்கு என்ற நிலை இருப்பதை மாற்றி அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[முற்பகல் 11-00]





திரு. எ. சுவாமிதாஸ் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கோரப்பட்டிருக்கிற கூட்டுறவுத்துறை, மீனவத்துறைக்கான மானியங்களின்மீது ஒரு சில கருத்துக்களைச்சொல்ல விரும்புகிறேன் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டுறவுத் துறையை எப்படியாவது நல்ல முறையிலே இயங்க வைப்பதற்கான ஆக்கப் பணிகளிலே முனைந்திருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ள குறைபாடுகளையும் அவர்கள் நேரடியாக அனுபவப் பூர்வமாக அறிந்த உண்மைகளையும் தெள்ளத் தெளிவாக இங்கே எடுத்துக் கூறினார்கள்.

இந்தக் கூட்டுறவுத் துறை ஆரம்ப காலத்திலே கிராம கூட்டுறவு விவசாயக் கடன் வசதி சங்கம் என்ற பெயர் இருந்தது இல்லை. முன்னாலே "மல்டி பர்ப்பஸ் கோவாப்ரேடிவ் சொசைடீஸ்", பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் என்ற பெயராலேதான் தொடங்கப்பட்டன. ஆனால் என்ன காரணத்தாலேயோ முன்பு இந்தத் துறைக்குப் பொறுப்பு வகித்த கூட்டுறவு அமைச்சர் அந்த பெயரை மாற்றி விவசாயக் கடன் வழங்கும் சங்கம் என்று வைத்திருந்தார்கள். அந்த சங்கங்களின் நோக்கம் விவசாயிகளுக்கு கடன்களை மட்டும் வழங்கினால் போதும் என்ற அந்த அடிப்படையிலேதான் வைத்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். கிராமங்களிலே உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்குவது மட்டுமல்ல, பல நோக்கங்களைக் கொண்டதாக இயங்க வேண்டும், கடன் வழங்குவதோடு வியாபாரத்தையும் செய்ய வேண்டும், பல வகைகளிலே கிராம மக்களுக்குப் பல நன்மைகள் செய்வதற்கும் ஏற்ற முறையிலே அமையவேண்டும். அந்த வகையிலே இந்த அரசாவது அந்தச் சங்கங்களுக்கு பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் என்ற பெயரை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடன்களை வழங்கும்போதும், கடன்களைத் திரும்பப் பெறுகிறபோதும் விவசாயிகளுக்கும் மற்ற மக்களுக்கும் இருக்கிற பல சிக்கல்களை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, அந்தச் சங்கங்கள் மக்களுக்காக, மக்களால் ஆளப்படவேண்டிய சங்கங்களாக இருக்க வேண்டும். ஆனால் அங்கே இருக்கிற முறை அதிகாரங்கள் எல்லாம் ஒரு பக்கத்திலே குவிந்து அதிகாரிகளின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்ற நிலைமையைத்தான் நாம் பார்க்கிறோம். அந்தச் சங்கங்களிலே உள்ள தலைவரோ, செயலாளரோ அல்லது உறுப்பினர்களோ தாங்கள் நினைத்தபடி செயல்பட்டு நடத்த முடியவில்லை. எடுத்ததற்கெல்லாம் அங்கே உள்ள அதிகாரிகளை நம்பியே அவர்களுடைய தயவை நாடித்தான் சங்கங்களை நடத்த வேண்டியிருக்கிறது. சிறு மாறுதல் செய்ய வேண்டுமென்றாலும் கூட அதிகாரிகள் அதற்கு இணங்க மறுக்கிறார்கள்.

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1977 ஆகஸ்டு 12

திடீரென்று ஒரு இடத்தில் ஜப்தி செய்ய வேண்டுமென்று அதிகாரிகள் ஜீப்பிலே வருகின்றபோது அந்தக் கடனை வாங்கியவர்கள் அந்தத் தலைவரிடத்திலோ அல்லது டைரக்டரிடத்திலோ வந்து நாளை மறு நாள் நாங்கள் கடனைச் செலுத்திவிடுகிறோம், வீட்டுப் பொருள்களை எடுத்துச் செல்லாதீர்கள், அள்ளிச் செல்லாதீர்கள் என்று எங்களிடம் கேட்கிறபோது நாங்கள் அதைத் தடுத்து நிறுத்த முடியாத நிலைமைதான் இருக்கிறது. அதிகாரிகள் கண்டிப்பாக நாங்கள் எங்கள் கடமையைச்செய்வோம் என்றுகூறுகிறார்கள். ஆகவே கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் வாங்குகிறவர்கள் எளிதான முறையிலே கடன் வாங்குவதற்கும், திரும்பச் செலுத்துவதற்கும் பயம் இல்லாமல் செலுத்துவதற்கும் சட்டத்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓயாமல் "பை லாக்களுக்கு" திருத்தங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. இந்தப் பை லாவை திருத்துங்கள், இந்தப் பை லாவைத் திருத்துங்கள் என்று வந்து கொண்டே இருக்கிறது. எங்களால் திருத்த முடியாது என்று சொல்ல முடியுமா, ஊருக்கு ஏற்றமாதிரி அந்தத் தொழிலாளர்களுக்கு ஏற்றவாறு பை லாவை மாற்ற முடியாது, கிராமச் சங்கங்களிலே உறுப்பினர்களாக விவசாயிகள் தான் இருக்க வேண்டுமா? விவசாயிகளோடு வேறு மக்களும் இருப்பார்கள், சிறு தொழில் செய்கிறவர்களும் இருப்பார்கள், விவசாயத்தோடு ஒட்டிய "ஆர்டிஸான்ஸ்" இருப்பார்கள் சிறு வியாபாரிகள் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு எல்லாம் கடன் இல்லாமல் விவசாயிகளுக்கு மட்டும் தான் கடன் கொடுக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது, மற்றத் தொழிலாளர்களுக்கும் கடன் கொடுக்குமாறு "பைலாவைத்" திருத்த வேண்டும், திருத்தினால் தான் நல்ல முறையிலே செயல்பட முடியும். பள்ளிக்கூடங்கள் திறக்கிற நேரத்திலே ஏழை எளிய மக்கள் தங்கள் பிள்ளைகளைப்பள்ளிக்கு அனுப்புவதற்காக பீஸ் கட்ட பணம் வேண்டும், புத்தகம் வாங்க பணம் வேண்டும் இதற்கெல்லாம் பணம் வேண்டுமென்று கூட்டுறவு சங்கத்திலே கடன் கேட்டால் கிடையாது. ஆகவே மார்வாடியைத் தேடிச் செல்கிறார்கள். அதிகாரிகள் இந்த முறையை மாற்றியமைத்து எளிதாக எல்லோருக்கும் கடன்கள் கிடைக்கக்கூடிய முறையில் அமைய வேண்டும். கூட்டுறவு என்றாலே எளிதாகக் கடன்கள் எல்லோருக்கும் கிடைக்கச்செய்வது தான். அப்படி மாற்றியமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பல நண்பர்கள் இங்கே கருத்துக்களைச் சொன்னார்கள். மாநில மத்திய வங்கி என்று ஒன்று இருக்கிறது. மாவட்ட மத்திய வங்கிகள் வேறு இருக்கின்றன. அவர்களும் தங்கள சொந்தப் பணத்தைப் போட்டு எந்தவிதமான லேவாதேவி செய்யவில்லை. ரிசர்வ் வங்கியிலிருந்துதான் கடன் பெற்று செயலாற்றுகின்றனர். கிராமத்தில் இருப்பவர்கள் எத்தனை வங்கிகளுக்கு வட்டி செலுத்தி கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் செலுத்தும் வட்டியில், கிராமக்கடன் வழங்கு சங்கத்திற்கு பங்கு, மாவட்ட மத்திய வங்கிக்கு



1977 ஆகஸ்ட் 12] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

பங்கு, மாநில மத்திய வங்கிக்குப் பங்கு, ரிசர்வ் வங்கிக்குப் பங்கு என்று இப்படி இருக்கிறது. என்னுடைய அனுபவத்தைச் சொல்ல வேண்டுமானால் இந்த வங்கிகளெல்லாம் தேவையில்லை என்பது தான். ஸ்டேட் பேங்கிற்கு நாங்கள் பணம் வாங்க போக வேண்டி இருக்கிறது. கேஷ் கிரடிட் கொடுக்கிறார்கள். அங்கே டிரான்ஸேக்ஷன் வைத்திருக்கிறோம். டி.ஆர் ஆபிசில் அலுவலர்கள் இருக்கிறார்கள். எதற்காக மத்திய வங்கி வேண்டுமென்று கேட்கிறேன் மத்திய வங்கியிலுள்ள அலுவலர்களுக்கும் டி.ஆர் ஆபிசிற்கும் தகராறுகள் ஏற்படுகின்றன. டி.ஆர். ஆபீசிலே நினைப்பது மாதிரி திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. ஆகவே, இதை புனர் பரிசிலனை செய்து, சிக்கனமான அடிப்படையிலே கிராமச் சங்கங்களைச் செய்து அதிக வருமானம் பெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராமக் கூட்டுறவுச் சங்கத்தில் பணி புரியும் செயலாளர் மத்திய வங்கியால் நியமிக்கப்பட்டவர். ஆனால் எங்கள் நிதியிலிருந்துதான் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும். எங்கள் சங்கம் "வயபிலாக" இயங்காததற்குக் காரணம் இதுதான். கிட்டத்தட்ட 300, 350 ரூபாய் கொடுக்க வேண்டும். ஆனால் வட்டி விகிதாச்சாரமோ குறைவு. மிகுதியாக இலாபம் வருவது மத்திய வங்கிக்குத்தான்; எனவே மத்திய வங்கிக்குக் கிடைக்கும் இலாபத்திலிருந்தே இவர்களுக்குப் பணம் கொடுக்கலாம்; ஆனால் அவர்கள் அதற்கு மறுக்கிறார்கள். அப்படி மறுப்பதால்தான் அங்கே சங்கங்கள் சரியாக இயங்கவில்லை. அதனால் பல சங்கங்களை ஒன்றாகச் சேர்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அப்படிச் சேர்ப்பது என்பது கூட்டுறவுச் சங்க அமைப்பானது எந்தக் காரணத்திற்காக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டோமோ அந்த அடிப்படையையே தகர்க்கிறாற் போல் இருக்கிறது. அப்படியென்றால் கூட்டுறவுச் சங்கமே வேண்டாமே, வங்கியே கடன் கொடுத்து வாங்கி விடலாமே, எதற்காகக் கூட்டுறவுச் சங்கங்கள், எதற்காகத் திட்டங்கள்? எதற்காக அங்கே ஒரு தலைவர்? இதெல்லாம் வேண்டாமே? நம்முடைய நோக்கமே கிராமத்தில் உள்ளவர்களுக்கு எளிதாகக் கடன் கிடைக்கவும் கொடுக்கவும் வசதி ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். இதற்காகத்தான் கூட்டுறவுத் துறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே எளிதாகக் கடன் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடன் வாங்கும்பொழுது 10 சதமானம் அவர்களுடைய வைப்புத் தொகை என்று பிடித்தம் செய்கிறார்கள். அதோடு 'த்ரிஃப்ட் டெப்பாசிட்' சிக்கன நிதி என்று நூற்றுக்கு இரண்டு ரூபாய் வேறு கொடுக்க வேண்டும். அந்த 'த்ரிஃப்ட் டெபாசிட்' சங்கங்களின் நிதிக்கு வந்தால் உறுப்பினர்களுக்கு பயன்படும் வகையில் இருக்கும். ஆனால் கிராமக் கூட்டுறவுச் சங்க நிதியிலே இது வராது. அதுவும் மத்திய வங்கியிலே தேங்கியிருக்கிறது.

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1977 ஆகஸ்ட் 12

அதைக் கேட்கக் கூட உரிமை இல்லை. இப்படியிருக்கும்பொழுது எப்படிக் கூட்டுறவுச் சங்கத்தை நடத்துவது? ஆகவே, இதையெல்லாம் புனர் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நாங்கள் வாடகை கொடுக்க வேண்டும், ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும். ஸ்டேஷனரி, பிரிண்டிங் சார்ஜ் செலவு வேறு இருக்கிறது. பயணப்படிகள்வேறு இருக்கிறது. அடிக்கடி கூட்டுறவு மத்திய வங்கி ஊழியர்கள் டி. ஆர். ஆபிசுக்குப் போய் வர வேண்டும். அவர்களுக்குப் பயணப்படி கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படி சங்கங்களுக்குச் செலவுகள் அதிகமாக இருப்பதால் எங்களுக்கு ஏற்படுகின்ற செலவில் ஒரு பகுதியை மத்திய கூட்டுறவு வங்கி ஏற்க வேண்டும் என்ற உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறுகிய காலக் கடனுக, ஆறு மாத காலக் கடனுக நெற்பயிருக்குக் கொடுக்கின்ற கடனை நீட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது ஒரு முறையை எமர்ஜென்சி காலத்தில் புகுத்தியிருக்கிருர்கள். கடன் பட்டுவாடா செய்யும் பொழுது முன்பெல்லாம் அந்தந்தச் சங்கங்களிலே வந்திருந்து சூப்பர்வைசர் கண்காணிப்பிலே அது கொடுக்கப்பட்டு வந்தது உறுப்பினர்களுக்கு: இப்பொழுது அப்படி இல்லை. உறுப்பினர்கள் கடன் பெற வேண்டுமென்ருல் மத்திய வங்கிக்கு 3, 4 மைல் தூரம் நடந்து சென்று அங்கே சேவிங்க்ஸ் அக்கவுண்ட் ஏற்படுத்தி பிறகு வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. அப்படியென்ருல் எதற்காகச் சங்கம் இருக்கிறது? எங்கள் சங்கத்தில் கடன் வாங்க முடியவில்லை, மத்திய வங்கிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இதை மாற்றியமைத்து உறுப்பினர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். சங்கத்திலே நாங்கள் சேவிங்கஸ் அக்கவுண்ட் வைத்திருக்கிருேம், பாஸ் புக் கொடுத்திருக்கிருேம். அப்படிச் சங்கம் இயங்கிக் கொண்டிருக்கின்ற பொழுது ஏன் மத்திய வங்கியிலே சென்று பணத்தைப்பெற வேண்டும் என்று சட்டம் போட்டிருக்கிருர்கள் என்று தெரியவில்லை. இதனுல் நான் வருத்தமடைகிறேன்.

(முற்பகல் 11-10)

சங்கத்தின் பொறுப்பாளர்கள் நினைத்ததைப் போல், யாருக்கும் ஒரு பைசா கொடுக்க முடியவில்லை. அவ்வளவு ஜனநாயக முறையிலேதான் நடக்கிறது. அதிகாரங்களெல்லாம் அதிகாரிகளிடம் குவிந்து கொண்டிருக்கிறது. அதிகாரிகள் சொல்வதைப் போல் நாங்கள் ஆடிக் கொண்டிருக்க வேண்டும். குரங்குகள் போல் ஆடவேண்டும். ஆகவே, இந்தக் குறைகளை எல்லாம் போக்க வேண்டும்.

அடுத்து, மீனளத்தைப் பொறுத்த வரையில், எங்கள் ஊர் பகுதியிலே இருக்கிற மீனவர்கள் எல்லாம் நல்ல சத்தான உணவுப் பொருளை மக்களுக்கு வழங்குகிருர்கள்: கன்னியாகுமரி,



1977 ஆகஸ்ட் 12] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

திருநெல்வேலி மாவட்டங்களைப் பொறுத்த வரையில், இரண்டு வகை சத்துணவு எங்களுக்குக் கிடைக்கிறது. ஒன்று மீன். மற்றொன்று மரவள்ளிக் கிழங்கு. இவை மலிவாகக் கிடைக்கிறது, உடலுக்கு வலுவாக இருக்கிறது. அவை போல் உடலுக்கு வலுவாக வேறு உணவு எதுவும் கிடைப்பது கிடையாது. மீனிலே இருக்கிற சத்து வேறு எதிலும் கிடையாது. உழைப்பவர்களுக்கு அதைப் போல் வேறு எதுவும் சத்துள்ளது கிடையாது. அந்த வகையில் மீனை அளிக்கின்ற மீனவர்களுக்கு இந்த அரசு பல திட்டங்கள் போட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். குறிப்பாக, மீனள அமைச்சரவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிருர்கள். அது வரவேற்கத்தக்கது தான். அத்தி பூத்தார்போல் மீனவர் குலத்திலுள்ள ஒருவர் அமைச்சராக வந்திருக்கிருர் அல்லவா? ஆகவே, மீனவர்களைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்து, அவர்களைக் கொஞ்சம் கைதூக்கி விட முயற்சியை அவர் மேற்கொள்ள வேண்டும். ஏனென்ருல், சமூகத்திலே, அரிசனங்களை விட மிகவும் கீழான நிலையில் அவர்கள் இருக்கிருர்கள். பொருளாதாரத் துறையை எடுத்துக் கொண்டாலும், கல்வித் துறையை எடுத்துக் கொண்டாலும், எந்தத் துறையைப் பார்த்தாலும், அடி மட்டத்திலே இருந்து அவர்கள் துடித்துக் கொண்டிருக்கிருர்கள், முன்னேற முடியவில்லை. அவர்களுக்கு அரசு எவ்வளவுதான் சலுகை தந்தாலும் அந்த வாய்ப்பை அவர்கள் பயன்படுத்த முடியவில்லை. அவர்கள் இன்னும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். அவர்களைக் கைதூக்கி விடவேண்டும். அரிசன மக்களுக்கு கொடுக்கிற பல சலுகைகள் அவர்களுக்கும் வழங்க மறுக்கப்படுகிறது. முன்னுலே ஒரு உறுப்பினர் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொன்னுர்கள். இந்துவாக இருந்து கிறிஸ்தவர்களாக மாறினுல், சலுகைகள் மறுக்கப்படுவதை மரபாக ஆக்கி விட்டார்கள். மதத்தின் பெயரில் எப்படி பாகுபாடு இருக்க முடியும்? இந்துக்கள் பிற்போக்கு, கிறிஸ்தவர்கள் முற்போக்கு என்பது எப்படி சரி என்று தெரியவில்லை. மதத்தின் பெயராலே ஒருவனை பிற்போக்கு முற்போக்கு என்று சொல்லாமல், பொருளாதாரத் துறையிலே, கல்வித் துறையிலே ஒருவன் முற்போக்காக இருக்கிருனு என்பதைப் பார்க்க வேண்டும். கிறிஸ்தவர்களாக இருந்தாலும் இந்துகளாக இருந்தாலும் பரதர் அல்லது அரசர் இனத்தவர் அனைவருக்கும் சலுகைகளைக் கொடுத்து, மிகவும் பின் தங்கியவர் என்ற பட்டியலிலே மீனவர்களைச் சேர்த்துக்கொள்ள அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்கிறேன்.

கட்டுமர மீன்பிடி தொழிலாளிகளுக்கும் விசைப் படகு மீன்பிடி தொழிலாளிகளுக்கும் அடிக்கடி சண்டை வருவதாகச் சொல்கிருர்கள். இந்தச் சண்டைகளையெல்லாம் போக்க அரசு என்ன செய்ய வேண்டுமென்று பார்த்தால், இரண்டு பேருக்கும் சம வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்திக் கொடுத்தால் நல்லது. நான் ஒரு திட்டத்தை அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன். பெரிய லாஞ்சுகள் மீன்பிடித் துறைமுகங்களில் இருக்க

வேண்டும். அந்த லாஞ்சுகளில், 100, 200 கட்டு மரங்களை ஏற்றி, அல்லது இழுத்துச் சென்று ஆழ் கடலிலே கொண்டு போய் விட்டபின் மீன் பிடித்த பிறகு, அந்த கட்டு மரங்களை மீண்டும் லாஞ்சுகளில் ஏற்றி, கரைக்குக் கொண்டு வந்து சேர்க்கிற முறையைக் கொண்டு வந்தால், அவர்களுடைய சண்டை போகலாம் என்று கருதுகிறேன்.

கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டத்தில் பிடிக்கிற மீன்கள் கேரள மாநிலத்திற்கு கொண்டு போய் வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. இதைத் தடுத்து நிறுத்தினுல், நமது தமிழ் நாட்டிற்கும் கிடைக்க வேண்டிய வருவாய் கிடைக்கும், மீனவர்களுக்கும் வசதி ஏற்படும். நமது துறைமுகங்களில் ஏற்றுமதி செய்யவேண்டும்.

அடுத்து, உள்நாட்டு மீன் வளத்தைப் பெருக்க பல திட்டங்கள் போடுகிறுர்கள். 1957-க்குப் பின்னுல் எங்கள் கன்னியாகுமரி மாவட்டக் குளம் குட்டைகளிலே ஒருவிதப் பாசியை—வெல்வெட் பாசி என்று சொல்கிறுர்கள். அந்தப் பாசியை—புகுத்தியுள்ளார்கள். அது தண்ணீர் மேலே படர்ந்திருப்பதைப் பார்க்கலாம். பார்ப்பதற்கு அழகாக இருக்கும். அந்தப் பாசி எந்தக் குளத்திலே இருக்கிறதோ அந்தக் குளத்திலே மீன் வளராது. அந்தப் பாசியைப் போட்டால் அத்தனை மீன்களும் அழிந்து விடும். மீன் வளர்வதற்கென்று சில பாசிகள் இருக்கின்றன. அந்தப் பாசிகளை வளர்க்கலாம். இந்த வெல்வெட் பாசியை அகற்றிட ஏற்பாடு செய்தால், குளம் குட்டைகளிலே மீனை வளர்க்க உதவியாக இருக்கும். எங்கள் ஊரிலே குளங்களிலே தரமான மீன் பெருகி வளர்வதற்கு வேறு நல்ல பாசிகள்தான் காரணம். அந்தப் பாசியை வளர்க்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கூறி, மீனவர்களுக்கு ஆயுள் இன்சூரன்ஸ் திட்டம் ஒன்றை எளிதாகப் புகுத்தி, பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. செ. சிவசாமி: மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கூட்டுறவு சங்க மானியத்தின் மீது பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில ஆலோசனைகளைசொல்ல விரும்புகிறேன். சோசலிச தத்துவம் மிக முக்கியமான தத்துவம். இன்று இந்தியா பூராவிலும் சோசலிசம் பற்றிப் பேசப்படுகிறது. சோசலிசத்தின் அடிப்படை கூட்டுறவுதான் என்பதுதான் என்பதை நாம் கணக்கில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு சில இடங்களில் கூட்டுறவிலே சில தவறுகள் நடக்கின்றன. வாஸ்தவம். அந்தத் தவறுகளினுலேயே கூட்டுறவு முழுவதும் நல்லதல்ல என்று கருதக்கூடாது என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக சோசலிச நாடுகளிலே ஏன் பணவீக்கம் இல்லை? பதுக்கல் இல்லை? கள்ள மார்க்கட், கருப்புப் பணம்இல்லை? என்பதை எல்லாம் பார்த்தால் நிச்சயமாக இந்த நாடுகளிலே



கூட்டுறவு சொசைட்டிகளை நல்லபடியாக உருவாக்க, நல்ல படியாக வினியோகம் செய்தால் அவன் கஷ்டம் போக்குவதற்கு ஒரு அடையாளமாக இருக்கும் என்பதையும் தெரிவித்து, இங்கும் அம்மாதிரியான நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையிலே விவசாயிகளுக்கு வரக்கூடிய கஷ்டம் வட்டி விகிதந்தான். அது அவர்களை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது என்பதை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு சில சென்ட்ரல் பாங்குகளிலே சாதாரண விவசாயிகளுக்கு ஒரு சில வருடங்களுக்கு முன் 61/4 சதவிகிதத்தில் வட்டிபோட்டு கொடுக்கப்பட்டது. இப்போது 14 சத விகிதம் மாண்புமிகு உறுப்பினர் திருமதி சுப்புலட்சுமி அவர்கள் பேசியபோது 17 சத விகிதம் வட்டி போட்டு வசூலிக்கிறுர்கள் என்று சொன்னுர்கள். அந்த அளவு விவசாயிகளை வட்டிதான் கொன்று கொண்டிருக்கிறது என்பதை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த வட்டியை கொடுக்க நடைமுறையில் 3 அடுக்கு முறை இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிறது. அந்த முறை ஆபத்தான முறை என்று பல தடவை கூட்டுறவாளர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேும். அது மாநில வங்கி, மத்திய வங்கி, சொசைட்டிகள் இப்படியாக ஒரு சாதாரண மெம்பர்களுக்கு போய் சேரக்கூடிய காலத்தில் முறையே 16 சதவிகிதம், 17 சதவிகிதம், வட்டி வந்திருக்கிறது. அவர்களுக்கு மிகப் பெரிய கஷ்டங்களும், நஷ்டங்களும் ஏந்பட்டு வட்டியும் முதலுமாக சேர்த்து ஒரு வருஷத்திலே 1 1/2 மடங்கு 1 3/4 மடங்கு வந்து விடுகிறது. இவ்வளவு கொடுமையான நிலை எற்படுகிறது. இந்த நிலையை மாற்றி அமைப்பதற்காக குறிப்பாக எந்த காரணத்தை முன்னிட்டும் 9 சத விகிதத்திற்கு மேல் வட்டி போகக்கூடாது என்று இந்த சபை சட்டம் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, 10 மாத தவணை இன்றைக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஒரு வருஷ தவணைக் கொடுக்கப்பட வேண்டும். குறுகிய காலக் கடன் கொடுக்க வேண்டும். பங்குத் தொகை 10 ரூபாயிலிருந்து 15 ரூபாய் வாங்கப்படுகிறது. நாம் ஏற்கெனவே பங்குத் தொகை 15 ரூபாய் கட்டிவிடுகிறேும். பாக்கி நாம் வாங்குவது 85 ரூபாய். 85 ரூபாய்க்கு 12 ரூபாய் என்றுல் 100-க்கு 15 சதவிகிதம். இது 1 1/4 ரூபாய் வட்டி அளவுக்கு வந்துவிடுகிறது. இது சாதாரணமாக வெளியாரிடத்தில் வாங்குவதை விட அதிகம். கூட்டுறவு எந்த நோக்கத்தோடு உருவாக்கப்பட்டதோ அந்த அடிப்படையை மாற்றுகிற நிலையில் வட்டி விகிதங்கள் அதிகரித்து கொண்டு போவதன் காரணமாக, சாதாரண ஏழை எளிய மக்கள் இன்றைக்கு, வாங்கக்கூடிய கடன்களுக்கு சங்கடங்கள் ஏற்பட்டிருக்கிறது.

உதாரணமாக ஏற்கெனவே ஒரு கேள்வியிலே சொல்லப்பட்ட கரும்பு, வாழை, கருணை போன்ற பயிர்களுக்குகூட ஒரு வருடம் தான் தவணை கொடுக்கப்படுகிறது. அந்த கரும்பு, வாழை

கருணை போன்றவைகள் பலன்கள் தர அவர்களுக்கு 14, 15 மாதம் ஆகின்றது. ஆனால் ஒரு வருடம் தவணைக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு பக்கத்திலே இந்தக் கடனையும் கரும்புக்குக் கொடுத்த கடனையும் வசூலிப்பது என்றால், அந்த சட்டத்தைத் திருத்தி கரும்பு வாழை, கருணை போன்ற பயிர் வகைகளுக்கு 15 மாதங்களில் பலன் தரக்கூடிய பயிர்களுக்கு ஏதுவாக மாற்றப் படவேண்டுமென்று சட்டத்தை திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வெறும் மகசூலுக்கு அதிக விலை கிடைப்பது இல்லை. சாதாரண விவசாயிகளுக்கு நல்லபடியாக விளைந்தால், ஏப்ரல், மே மாதத்தில்தான் அவன் கைக்கு நெல் வருகிறது. ஏப்ரல், மே மாதத்தில் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடுமையான முறையிலே வசூலிக்கப்படுகிறது. அதன் காரணமாகவும், நல்ல விலை கிடைப்பது இல்லை. ஆனால் ஒன்று சொல்லலாம். ஏன் உற்பத்தியான பொருளை வைத்து லோன் கொடுகக்கூடாது என்று சொல்லலாம். இப்போது பொருள்களின் மேல் 60 சத விகிதம் தான் கொடுக்கப்படுகிறது. அதனால் அவனுக்கு அதிகத் தொகை கொடுக்க முடியாது. அதனாலே அவனுடைய ''புராடியூஸ்'' (produce)க்கு குறைந்த விலை கிடைப்பதன் காரணமாக நஷ்டம் ஏற்படுகிறது.

[முற்பகல் 11-20]

பஞ்ச காலம் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் வட்டி வசூலிக்கப்படுகிறது. கடந்த 4 வருடங்களாகத் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இப்படிப்பட்ட பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. 1975-ல் பஞ்ச நிலைமை ஏற்பட்டிருக்கிறது: கடன்களை ஒத்தி வைப்பதற்கு சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். பஞ்ச நிவாரணப் பணிகள் அறிவிக்கப்பட்டாலும், தொடர்ந்து வட்டி போடப்பட்டு வருகிறது. இப்படி வட்டி போடப்பட்டு வசூலிக்கப்படுகிறது. வட்டிக்கு மேல் வட்டி வசூலிக்கப்படுகிறது. விவசாயிகளுக்குக் கொடுக்கப் பட்ட கடன் மூன்று தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. 75-லே கொடுக்கப்பட்ட கடன் மூன்று தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. 76-லே கொடுக்கப்பட்ட கடன் மூன்று தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. 77-லே கொடுக்கப்பட்ட கடன் மூன்று தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. இப்படிப் பல ''லோன்கள்'' இருக்கின்றன. எவ்வளவு லோன்கள் இருக்கின்றன என்பதே விவசாயிகளுக்குத் தெரிய முடியாத அளவிற்கு இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. எத்தனை லோன்கள் என்ன நிலைமையில் இருக்கிறது என்கின்ற விவரமே புரியாத அளவிற்கு இன்றைக்கு வட்டி ஏறிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட பஞ்ச நிலைமை அறிவிக்கப்படுகிற நேரங்களில், அதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு இந்த வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இதே மாதிரி வட்டி கட்டுவதன் காரணமாகவும், முதல் ஏறுவது காரணமாகவும் அவர்களுக்குப் பல லோன்கள் கணக்கில் இருந்து கொண்டு இருக்கின்றன. ஒரு வருடம், இரண்டு வருடம், மூன்று வருடம், நான்கு வருடம் என்று இல்லாமல் அத்தனை





லோன்களையும் ஒன்று சேர்த்து, வட்டியைத் தள்ளிவிட்டு, ஒன்று சேர்த்து ஒரே ''லோனாக'' கணக்கிட்டு ''கன்வர்ஷன்'' செய்து 5 ஆயிரம், 10 ஆயிரம் என்று மொத்த ''அமவுண்ட்''-டையும், 20, 25 ஆண்டு காலத் தவணைகளில் கட்டக் கூடிய நீண்ட காலக் கடன்களாக ''ட்ரீட்'' பண்ணிக் கொடுத்தாலொழிய அவர்களுக்கு நிச்சயமாகக் கடன்களிலிருந்து மீள்வதற்கு சந்தர்ப்பமே ஏற்படாத நிலைமை உள்ளது.

அது மட்டுமல்ல இன்றைக்கு இந்தக் கடன்களைப் பொறுத்த வரையிலே ஏழை எளியவர்கள் சில சடங்குகளுக்காக வேண்டிக் கடன் பெற வழி செய்யப் பட்டிருக்கிறது. சாவு, கிரியைகள், ஆகியவைகளுக்கு கடன் பெற வழி செய்யப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு ஏழை எளியவர்கள், சாதாரண ஓரளவு நிலம் வைத்திருக்கக்கூடியவர்கள் விவசாய மேம்பாட்டிற்கு கடன்களைப் பெறுவதற்கு எல்லாவிதமான திட்டங்களையும் கொண்டு வர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே அரசைக் கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்குக் கிடைக்கும் வருவாயைக் கணக்கில், எடுத்து, அவர்களுடைய கஷ்டத்தைக் கணக்கில் எடுத்து, பஞ்சம் என்று அறிவிக்கப்படுகிற நேரத்திலே விவசாயிகளின் ''லோனை'' மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு, வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நன்கு விளைந்த வருஷத்தில் ஒரே நேரத்தல் வட்டியையும், கடனையும் வசூல் செய்வது என்பது மிகவும் கொடுமையானதாகும். மூன்று நான்கு வருடங்கள் விளையாது, பஞ்சமாக இருந்து, ஒரு வருடத்தில் விளைகின்ற நேரத்தில். மூன்று வருடம், நான்கு வருடம் என்று கொடுக்கப்பட்ட எல்லாக் கடன்களையும் ஒன்று சேர்த்து ஒரே நேரத்தில் வசூல் செய்யப்படுகிறது. இந்த நிலைமை காரணமாக் கிடைக்கக் கூடிய ''பிராடக்ட்''-களை முழுமையாக விற்று வரக்கூடிய பணத்தை வட்டிக்கும், அசலுக்கும் கட்டி விட்டு விவசாயிகள் வெறுங்கையோடு போகக் கூடிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையிலே எந்த அளவிற்கு அவர்களிடம் இருந்து வசூல் செய்வது என்பதைக் கணக்கில் எடுத்து வசூல் செய்தால்தான் அடுத்த ஆண்டு அவர்கள் வாழ்வதற்கும், பயிர் செய்வதற்கும், விவசாயத்தைப் பெருக்குவதற்கும் அவர்கள் கையிலே ஓரளவு பணம் இருக்கும், அப்படி இருந்தால்தான் அவர்கள் தங்கள் தொழிலை செம்மையாகச் செய்ய முடியும். மூன்று வருடம் கஷ்டப்பட்டவன் நான்காவது வருடம் விளைந்தால், அவ்வளவையும், ஒரே நேரத்தில், விற்று விட்டு, கடனுக்கும், வட்டிக்கும் கட்டி விட்டு வெறுங்கையோடு செல்வது சரியாகாது என்பதைஅரசு கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு உதவி செய்கின்ற முறையில் விதி முறைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நில வள வங்கிக் கடன்களைப் பொறுத்த வரையில், சிறு, சிறு கடன்களாகக் கொடுக்காமல், 7 வருடம், 10 வருடம் என்ற கணக்கில் கொடுக்காமல், 20 வருடக் கடன்களாக நீண்ட காலக்

கடன்காளகக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு சில இடங்களில் கிணறு வெட்டினால் உப்புத் தண்ணீராகப் போய் விடுகிறது. உப்புத் தண்ணீராகப் போனால் விவசாயம் செய்ய முடிவதில்லை. இப்படி உப்புத் தண்ணீராகப் போனால் அந்த விவசாயி அந்தக் கடனை எப்படி திருப்பிக் கட்ட வேண்டும் என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய வழி வகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பரமக்குடி, முதுகுளத்தூர் ஆக இப்படிப்பட்ட இடங்களில் ஒரு சில கிணறுகள் உப்புத் தண்ணீராகப் போய் விடுகின்றன. இதனால் அவர்களால் விவசாயம் செய்ய முடிவதில்லை. இப்படிப்பட்டவர்கள் பலமுறை முறையிட்டுக் கொண்டும் இது வரையிலே ஒன்றும்செய்யப்படவில்லை. அவர்களுடைய கடன்கள் தள்ளுபடி செய்யப்படவில்லை. அதே நேரத்தில் ஒரு சில கிணறுகள் பம்பு செட் போட்டு நல்ல முறையில் விவசாயம் செய்து கொண்டிருக்கிற நிலங்கள் கூட, தொடர்ந்து இரண்டு, மூன்று ஆண்டுகள் மழை பெய்யாத காரணத்தினால் கிணறுகளில் தண்ணீர் வற்றி விவசாயம் செய்ய முடியாமல் போய் விடுகிறது.

அப்படி தண்ணீர் இல்லாமல் போய்விடக்கூடிய காலத்தில் அந்தக் கிணறுகளுக்காக கொடுக்கப்பட்ட லோனை எப்படி தள்ளுபடி செய்வது என்பதைக் கணக்கில் எடுத்து அவர்களுக்குவேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். அது மட்டுமல்ல, வெட்டிய கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. 25 அடி 30 அடி 35 அடி என்று தோண்டுகிறான். கொடுத்த கடன்களை எல்லாம் செலவழித்துவிட்டு கையில் உள்ள பணத்தையும் போட்டு செலவழித்துத் தோண்டுகிறான். ஆனால் தண்ணீரைப் பார்ப்பதே இல்லை. இப்படிப்பட்ட நிலைமையில் அவன் எப்படி லோனை திருப்பிக் கட்டுவான். இந்த நிலைமைகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த லோனையும் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்டுக் கோள்ளுகிறேன்.

அடுத்ததாக மத்திய வங்கியில் வேலை பார்க்கும் ஊழியர்கள் சரியானபடி உத்தியோகம் காயம் செய்யப்படுவதில்லை. அவர்கள் எந்த நேரத்திலும் தூக்கி எரியப்படும் நிலை இருக்கிறது. உதாரணமாக, ராமநாதபுரம் மத்திய வங்கியில் 12 ஊழியர்களை தங்கள் பேச்சைக் கேட்கவில்லை என்று தன்னிச்சையாக அரசியல் காரணங்களுக்காக வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். அதற்கு பின்பு இரண்டு வருஷம் தன்னம் தனியாக கஷ்டப்பட்டு எமர்ஜன்சி வந்த பின்பு அவர்கள் திரும்பவும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இன்னும் ஒன்று இரண்டு பேர்கள் வெளியில் இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். இந்த நிலைமைகள் மாற வேண்டும். அரசியல் காரணத்திற்காக, தன்னிச்சையாக, ஊழியர்களை மாற்றுவது, சஸ்பெண்டு செய்வது, டிஸ்மிஸ் செய்வது கூடாது.



அது மட்டுமல்ல பாழடைந்த கிணறுகள் என்று ரூ. 52 லட்சம் வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்று இந்தக் குறிப்பில் இருக்கிறது இதுவரையில் இந்தக் தண்ணீர் இல்லாத கிணறுகளுக்கும் உப்புத் தண்ணீர் உள்ள கிணறுகளுக்கும் அந்த லோனை தள்ளுபடி செய்யப்பட்டதாகவே தெரியவில்லை. ஒரு சில வருஷங்களுக்கு முன்பு இதுமாதிரி எத்தனை கிணறுகள் உள்ளது என்று கணக்கிடப்பட்டது. அதன் சார்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அத்துடன் மத்திய வங்கியிலிருந்து ரூ. 10 கோடி கடன் கொடுக்கப்படுகிறதென்றால் அதை கொடுக்கும் போது பழைய கடன்களை பிடித்துக்கொண்டு மீதத் தொகையைக் கொடுக்கும் சூழ்நிலை இருக்கிறது. இதன் காரணமாக விவசாயிகளுக்கு முழுக் கடன் தொகையும் போய்ச் சேருவதில்லை. இந்த ஆண்டு ரூ. 10 கோடி கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதில் பாதிதான் விவசாயிகளுக்குப் போய் சேரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படியிருந்தால் விவசாயி எப்படி உற்பத்தியைப் பெருக்க முடியும்? அடுத்து கான்டிராக்ட் வேலைகளை லேபர் கான்டிராக்ட் உள்ள சொசைட்டிகளுக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். எல்லாவிதமான கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் தேர்தலை சீக்கிரத்தில் நடத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆரம்பத்தில் பரமக்குடியில் நிலவள வங்கி நல்ல முறையில் நடந்து கொண்டிருந்தது. கடந்த இரண்டு ஆண்டு காலமாக அது சக்தி இழந்து காணப்படுகிறது. காரணம் உத்யோகஸ்தர்களின் அஜாக்கிரதைதான், என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். ஆறு பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒரு பாங்க். அதில் ஐந்து பஞ்சாயத்து யூனியன்கள் கடன் வாங்கியிருக்கிறது. ஆறு யூனியன்கள் சேர்ந்து ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஐந்து யூனியன்களும் சேர்ந்து விட்டால் அந்த நிலவள வங்கிக்கு ஆட்டோமேட்டிக்காக வாங்கும் சக்தி வந்து விடுகிறது. மாநில அளவில் இதில் உத்யோகஸ்தர்கள் கவனம் செலுத்தி இந்த வங்கிகள் நல்ல முறையில் இயங்குவதற்கு ஏற்பாடுகள்செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் உள்ள மத்திய வங்கி இன்று வரைக்கும் இயங்காத நிலைமையில் இருக்கிறது. பரிதாபத்துக்குரிய விஷயமாகும் ஒரு மாவட்டம் முழுவதிலும் ஒரு மிகப் பெரிய வங்கி நூற்றுக்கணக்கானவர்கள் வேலை செய்யக்கூடிய, லட்சக் கணக்கில் வரவு-செலவு செய்யக்கூடிய வங்கி, வாங்கும் சக்தியை இழந்திருக்கிறது என்றால் வாங்கும் சக்தியை உண்டாக்க ஆவன செய்ய வேண்டும்

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: சீக்கிரம் முடியுங்கள்.

(முற்பகல் 11-30)

திரு. செ. சிவசாமி : இந்த செக் கொடுத்து வாங்கும் முறை இருக்கிறது. ஒரு சில இடங்களில் 20, 25 மைல்கள் சென்று செக் வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே பலயிடங்களில் ரூபாய் பட்டுவாடா செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் முடிக்கிறீர்களா அல்லது நான் அடுத்த உறுப்பினரை பேச அழைக்கட்டுமா ?

திரு. செ. சிவசாமி : மீன் வளத்தைப் பொறுத்தவரையில் இன்று கடலில் சென்று மீன் பிடிப்பவர்களுக்கு இருக்கும் ஆபத்தான நிலையைக் கருதி இந்த அரசு அப்படி ஆபத்து ஏதாவது ஏற்பட்டால் ரூ. 10,000 கொடுப்பதாக அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். மீனவர்கள் கடலில் நாலைந்து மைல்கள் சென்று மீன் பிடிக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு ஏற்பட இருக்கும் ஆபத்தை முன்னால் தெரிந்துகொள்வதற்காக, கரையில் இருப்பவர்களுக்கு வர இருக்கும் ஆபத்தைத் தெரிவிக்கும் முறையில், பத்து பதினைந்து அல்லது இருபது பேர்களுக்கு ஒரு வயர்லெஸ் டிரான்ஸ்மிட்டர் கொடுத்தால் கரையில் இருப்பவர்களுக்கு கடலில் அவர்கள் இருக்கும் ஆபத்தான நிலையை எடுத்துச் சொல்ல முடியும். அடுத்து, மணற்பாங்கான இடங்களில் மீனவர்களின் வசதிக்காக ரோடுகள் போட்டுக் கொடுக்க வேண்டும். நல்ல வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும்

(மணியடிக்கப்பட்டு திரு, சந்திரன் பேசுவதற்கு அழைக்கப்பட்டார்.)

திரு. ப. சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே இந்த அவை முன் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மீன்வளத் துறை கோரிக்கை பற்றியும் கூட்டுறவு மானியக் கோரிக்கை பற்றியும் எங்கள் கட்சி சார்பாக முன்மொழிந்துள்ள வெட்டுத் தீர்மானங்களை யொட்டி உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி சார்ப்பாக என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மீனவர்களின் குறைகளைப் பொறுத்த மட்டில் நான் கடலோரப் பகுதி எம். எல். ஏ. ஆக இல்லாதிருப்பதன் காரணமாக அவர்களின் குறைகளை அறியாதவனாகயிருக்கிறேன். ஆகவே, அவர்களது குறைகளை அறிவதற்காக நேற்று மாலை கடற்கரைப் பகுதியில் உள்ள மீனவர்களைச் சந்திக்க வேண்டும் என்று அயோத்தியா குப்பம் சென்றிருந்தேன். இருட்டி விட்ட பகுதியிலுள்ள மீனவர்களைச் சந்திக்க வேண்டும் என்று அயோத்யா குப்பம் சென்றிருந்தேன். இருட்டி விட்ட காரணத்தால் அவர்களைச் சந்திக்க முடியவில்லை. அந்த அயோத்தியா குப்பத்தைப் பார்க்கிறபோது பலமாடி குடியிருப்பு அவர்களுக்கு





கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கொடுக்கப்பட்டிருக்கிற அந்தக் குடியிருப்பைப் பார்க்கிறபோது அது இருண்ட காட்சியளிக்கிறது : அங்கே மின்சார வசதி இல்லை. அதனால் மின் ஒளி இல்லாமல் இருக்கிறது. சுற்றியுள்ள கட்டிடங்கள்யாவும் மின் ஒளியோடு விளங்கும்போது அந்தக் கட்டிடம்மட்டும் இருட்டியிருப்பதைப் பார்க்கும்போது ஏழை பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வு இருப்பதாக உணர முடிகிறது. அந்த நிலையைப் போக்க அவர்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும், அதற்கான வழிவகைகளை வகுக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். மரக்கட்டைகளைக் கொண்டு செய்யப்படுகிற படகுகளில் மீனவர்கள் இரவில் மீன் பிடிக்கச் செல்லும்போது மிகுந்த குளிர் காரணமாக அவர்கள் அவதிப்படுகிறார்கள்.

எனவே அதைப் போக்குவதற்கு அவர்களுக்கு கம்பளி உடை கொடுத்து உதவவேண்டும். கோவை விவசாயக் கல்லூரியில் '' பாச்சிலர் ஆப் பிஷரீஸ் சயன்ஸ் '' என்ற பாட திட்டம் இருக்கிறது. அந்தப் பாடதிட்டத்தை மதுரை பல்கலைக் கழகத்திலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் விஸ்தரிக்க வேண்டும். அங்குள்ள மாணவர்களுக்கு மீன் வளர்ச்சி பற்றிய பாடங்களைக் கற்பிக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து, கிராமங்களில் இருக்கிற என்போன்ற மக்களுக்கு கடல் மீன் உண்பதற்கான வாய்ப்பில்லாமலிருக்கிறது. கடலில் கிடைக்கும் மீன்களை கிராமங்களுக்குக் கொண்டுசெல்லவும், கிராம மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில் வழிவகைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடற்கரைப் பகுதிகளில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் அங்குள்ள மீனவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் அவர்களுக்கு அத்தொகுதிகளை ரிசர்வ் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு துறையை பொருத்தமட்டில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இந்தக் கூட்டுறவு துறையில் ஊழல்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். நானும் அதை ஏற்றுக்கொண்டு, இது பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு துறையில் இருக்கின்ற தலைவர்கள், அவர்களை சேர்ந்தவர்களுக்கும், அவர்களுக்கு வேண்டியவர்களுக்கும் கடன்களை அளிக்கின்றார்கள் என்பதை கூறினார்கள். அதை நான் வலியுறுத்திக் கூறுகின்ற முறையில், இந்த நிலைமையை மாற்றி எல்லோருக்கும் கடன் அளிக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுச் சங்கங்களில் கடன் வாங்கும்பொழுது, பாதி அளவு உரமாக அளிக்கின்றார்கள். ஆனால் இப்படி அளிக்கப்படுகின்ற உரங்கள் எடை சரியானதாகவோ, நல்ல குவாலிட்டி உள்ளதாகவோ இருப்பதில்லை. விவசாயிகள் தலையில் கட்ட வேண்டும் என்று இப்படிப்பட்ட உரங்கள் வழங்கப்படுகின்றன

[திரு. ப. சந்திரன்] [1977 ஆகஸ்ட் 12

இந்த உரத்தை விவசாயிகள் பெற்றுக்கொள்வதால் சரியான பலனைப் பெற முடிவதில்லை. அது மட்டுமல்ல. அவர்கள் தங்கள் தேவைக்குத் தகுந்த உரத்தை வாங்கிக்கொள்ள முடியாத நிலை இருப்பதால் கிராமப்புறங்களில் விவசாயிகளுடைய பயிர்கள் அழிந்துவிடுகின்ற நிலைமை இருக்கின்றது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கூட்டுறவுச் சங்கங்களில் கடனை வசூலிக்கின்றபொழுது அனுதாபத்துடன் நடந்துகொள்ளவேண்டும். அதாவது சிறு விவசாயிகளிடமிருந்து கடன் வசூல் செய்யும்பொழுது அனுதாப உணர்வுடன் அணுக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக மண்டகளத்துார் என்ற இடத்தில் இப்படிப்பட்ட ஒரு நோட்டீஸை போட்டும் வசூல் செய்திருக்கிறார்கள். இப்படிப் பட்ட விவசாயிகளிடம் அனுதாபத்துடன் நடந்துகொள்ள வேண்டும். இப்படிப்பட்ட கடன் தொகையை சிறிது காலத்திற்கு தள்ளி வைப்பதோடு கடன் நிவாரணச்சட்டம் கொண்டு வந்ததைப்போல, இதற்காக வசூல் செய்வதையும் தள்ளி வைக்கின்ற ஒரு திட்டத்தை கொண்டுவந்து கடனை தள்ளி வைக்கவேண்டும் என்று எங்கள் கட்சியின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறு விவசாயிகள் வளர்ச்சி சங்கம் (ஸ்மால் பார்மர்ஸ் டெவலப்மென்ட் ஏஜென்ஸி) என்ற முறையில் ஒரு அமைப்பு ஏற்படுத்தி அதன் மூலமாக ஆடு மாடுகள் வாங்குவதற்கும், கறவை மாடுகள் வாங்குவதற்கும் முன்பணமாக டெப்பாஸிட்டாக தொகை வசூலிக்கப்பட்டது. ஆனால் இதுவரையிலும் இதற்கான கடன் வழங்கப்படவில்லை. ஆகவே இதற்கு உடனடியாக கடன் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான்கு, ஐந்து கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு சூப்பர்வைசர் இருந்தார். நான்கு அல்லது ஐந்து கூட்டுறவு சங்கங்களுக்கு ஒரு சூப்பர்வைசர் என்றிருந்த போதே பல இடங்களிலும் ஊழல்கள் நடந்து கொண்டிருந்தன. அப்படியிருக்கும்போது, இப்போது 8, 9 கிராமக் கூட்டுறவு சங்கங்களுக்கு ஒரு சூப்பர்வைசர் என்று நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி சூப்பர்வைசர்களுடைய எண்ணிக்கையை குறைத்திருக்கிறார்கள். சூப்பர்வைசரின் அனுமதியுடன்தான் கடன்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே, மேலும் சூப்பர்வைசர்களின் எண்ணிக்கையை குறைத்தால் கிராம கூட்டுறவு சங்கங்கள் சரியான முறையில் செயல்படுவதற்கு வழியில்லாத நிலைமை ஏற்படும். ஆகவே இந்தக் குறையை போக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் கடன் அளிக்கின்ற பொழுது, சரியான நேரத்தில் கடன் அளிக்கப்படுவதில்லை. காலங்கடந்து கொடுக்கப்படுவதால் விவசாயிகள் எந்தவித பயனையும் அடைய முடியாத நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட குறைகளை எல்லாம் நீக்க ஆவன செய்யவேண்டும் என்று கூறி, என்னுடைய கட்சியின் சார்பாக இந்தக் கருத்துக்களை கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



1977 ஆகஸ்ட் 12]

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மீன்வளத்துறை குறித்தும், கூட்டுறவு துறைக்கும் கோருகின்ற இந்த மான்யங்களின் மீது என்னுடைய கருத்துக்களை வைத்திட விழைகிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மீன்வளத்துறையில், மீன் தொழில் எந்த நிலையில் இருக்கிறது என்பதையும், மீன் பிடிக்கின்றவர்கள் எந்த நிலையில் இருக்கின்றார்கள் என்பதையும், அவர்களுக்கு தேவையானவைகளை எல்லாம் எப்படி எல்லாம் செய்ய வேண்டும் என்பதை எல்லாம் கோடிட்டு காட்டினார்கள். மீன்பிடித் தொழிலில் கடந்த ஒன்றிரண்டு ஆண்டுக் காலமாக கடுமையான போட்டி ஏற்பட்டிருக்கிறது. பணம் பெருத்தவர்கள், பிற தொழிலில் ஈடுபட்டிருந்தாலும், எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல் சினிமாத் துறையில் ஈடுபட்டிருந்தவர்கள் எல்லாம் மீன்துறையில் போட்டியாக வந்து இருக்கிறார்கள்.

[முற்பகல் 11-40]

மீன் தொழில் செய்வதற்கு மீனவர்களுக்குப் போட்டியாக வந்திருக்கிறார்கள். இப்படி ஒரு சங்கடமான நிலையிலே இந்த மீனவச் சமுதாயம் இன்றைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கின்றபோது, இந்த மீன் துறைக்கு, இந்த மீனவர்களுக்கு இந்த அரசு எந்த அளவு பாதுகாப்பு கொடுத்திருக்கிறது என்று பார்க்கிறபோதுதான் எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. ஏனென்றால், இன்றையத் தினம் மீனளத் துறைக்கு, இந்தக் கோரிக்கையில் ஒதுக்கியிருக்கிற மானியம் ரூ. 1,92,64,000. ஆனால் மொத்தம் இந்த அரசு இந்த ஆண்டு செலவு செய்ய இருக்கின்ற தொகை ரூ. 663.40 கோடியாகும். அந்த அளவுக்கு செலவு செய்ய இருக்கிறது. ஆனால் மீனவர்களுக்கு இந்த அரசு செலவு செய்ய இருப்பதோ ரூ. 1,92,64,000தான். அப்போது நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது மீன் தொழிலில் கடுமையான போட்டி ஏற்பட்டிருக்கிறது. மீன் தொழிலை தொழிலாகக் கொண்டிருக்கின்ற மீனவர்கள் இன்றைக்கு பெரும் முதலாளிகளின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதற்கு இந்த அரசு உரிய பாதுகாப்புமுறை கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் என்னுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்த நேரத்தில், இதே மானிய கோரிக்கையின்மீது 1973-74ல் அதிக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அப்போது இதுபோன்ற போட்டி அவ்வளவாக இல்லை. ஓரளவுக்கு இருந்தது. ஆனால் இப்போது இருப்பதைப்போல் அப்போது இல்லை. அப்போது இந்த மானியக் கோரிக்கைக்கு கலைஞர் அவர்கள் அரசு ஒதுக்கிய தொகை ரூ. 2,58,39,300 என்று அரசுக் குறிப்பிலே இருந்து தெரிகிறது. அதுவும் அப்போது ரூ. 472.68 கோடி ரூபாய்தான் மொத்தச் செலவாக இருந்தது.

இந்த மாநிலத்தின் வருமானம் அப்படி இருந்தபோதே, இதற்கு ரூ. 2,58,39,300 ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் ஆண்டு வருமானம் 663 கோடி ரூபாயாகி செலவு செய்கின்ற போது, அந்தத் தொகை குறைக்கப்பட்டிருக்கிறது. இப்போது 65 லட்சம் குறைந்திருக்கிறது. ஆகவே, இது என்ன வளர்ச்சியோ எனக்குத் தெரியவில்லை. எனவே, இந்தத் துறை முழுக்க முழுக்க வளர்ச்சியடைய, அதற்குப் போதுமான அளவுக்கு படிப்படியாக உயர்த்தப்படவில்லை. ஆனால், நிதி ஒதுக்கப்கப்படுவதிலே நாம் 1973-74-க்கும், 1977-78-க்கும் வளர்ந்திருக்கிறோம். நிதியும் அப்படி வளர்ந்திருக்கிறது. அதன்படி தேவையும் வளர்ந்திருக்கிறது. ஆனால், மீனளத் துறை வளரவில்லை என்பதை நான் இந்தச் சமயத்திலே மிகவும் மன வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். படிப்படியாக எல்லாத் துறைகளும் வளர்ந்திருக்கின்ற நேரத்தில், இதற்கு மட்டும் இப்படிப்பட்ட ஒரு நிலை, நிதி ஒதுக்கியிருப்பது மன வேதனையைத் தருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. ஒரு நல்ல திட்டம் என்று, கவர்னர் உரையின் போதும் சரி, பட்ஜெட் விவாதத்தின்போதும் சரி, ஆளும் கட்சித்துறையிலே இருக்கின்றவர்களும் சரி, எல்லோரும் போற்றிப் பேசினார்கள். இறந்த மீனவர் குடும்பத்திற்கு ரூ. 5,000 அல்லது அவர்கள் தொழில் செய்ய வேண்டுமென்றால் ரூ. 5,000 கடன் வசதி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் பேசியபோதும் அப்போது இதைக் குறிப்பிட்டேன். இப்போதும் நான் அந்தத் திட்டத்தை வரவேற்கிறேன். ஆனால், இந்தத் துறையிலே சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள், இந்தத் துறைத் தொழிலை நன்கு தெரிந்தவர்கள் என்பது எனக்குத் தெரியும். இந்த சமுதாயத்திலே உள்ள மக்களுக்கு ரூ. 5,000 அல்லது ரூ. 10,000 கொடுக்கின்ற காரணத்தினாலே மட்டும், அவர்கள் வாழ்நாள் முழுக்க அதாவது கணவனை இழந்த கைம்பெண்ணோ தந்தையை இழந்த பிள்ளையானாலும் சரி அல்லது மகளானாலும் சரி, அவர்கள் நிம்மதியாக வாழ்ந்துவிட முடியாது. அதற்கு மாறாக; நான் ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். அதற்குச் சில சட்டங்கள் அல்லது சில விதிமுறைகள் தடையாக இருக்கலாம். ஏழை; எளிய மக்களைக் காப்பாற்ற வேண்டுமானால், அதை எல்லாம் தளர்த்துவதற்கு இந்த அரசு தயாராக இருக்க வேண்டும். அதைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த சர்க்காரை மிகவும் கடமை உணர்வோடு கேட்டுக் கொள்கிறேன்.

அப்படி நிதி உதவி அளிப்பதோடு அந்தக் குடும்பத்திற்கு ஒரு விசைப்படகு வழங்கினால் அது நிரந்தரமான பரிகாரமாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அதற்கு முன்மாதிரி இருக்கிறதா என்று கேட்கலாம். ஐ.என்.ஏ.— இந்தியன் நேஷனல் ஆர்மிக்குச் சென்று வந்தவர்களுக்கு அவ்வாறு படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த முறையில் மீனவர் குடும்பங்களுக்குத் தரலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயமாகும்.





அடுத்து, மீனளத் துறை மானியத்திலே சென்னையிலே மீன்பிடி துறைமுகத்தைப் பற்றி ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது. நம்முடைய மீனளத்துறை அமைச்சர் அவர்களுக்கு பல பேரிடத்தில் இருந்து வேண்டுகோள்களும், விண்ணப்பங்களும் இதுநாள் வரை வந்திருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். அந்தத் துறைமுகத்தையொட்டி என் கருத்தினைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சென்னையில் மீன்பிடித் துறைமுகம் கட்டி முடித்ததும் மேடுபடுத்தப்பட்ட நிலங்களைப் பிரித்து மீன்பிடி தொழிலை நிறுவ முன்வரும் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். மீன்பிடி தொழிலை நிறுவுவது யார்? எனக்குப் புரியவில்லை. யார் வருகிறார்கள்? என்ன தொழில்? ஆனால் அங்கே இருக்கின்ற மக்கள் ஒன்றை விரும்புகிறார்கள். அது என்னவென்றால் மீன்பிடி துறைமுகம் கட்டி முடித்து மீதியுள்ள நிலங்களில் குடியிருக்க வீடு கட்டித்தாருங்கள் என்ற வேண்டுகோள் இந்த அமைச்சரவைக்கு வந்திருக்கிறது. அந்த வேண்டுகோளை நிறைவேற்றுவது தவிர, இதுபோன்ற தனியார் நிறுவனங்களுக்கு அருள்கூர்ந்து இடம் அளிக்க வேண்டாமென்று பணிவோடு தொகுதிவாழ் மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இப்போது படகு வழங்கப்படுகிறது. ஒரு விசைப் படகுக்குரிய தொகை ஒரு லட்சத்து 81 ஆயிரம் ரூபாய் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்த அரசுக்காக படகு எங்கே கட்டப்படுகிறதோ 'ஹல்' என்று குறிப்பிடப்படுவது 40 ஆயிரமோ அல்லது 43 ஆயிரமோ என்றுதான் குறிப்பிடுகிறார்கள். அதே நேரத்தில் அரசுக்கும் சரி, தனியாருக்கும் சரி சப்ளை செய்பவர்கள் 85,000 ரூபாய் அல்லது 87,000 ரூபாய்க்கு தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். அப்படிப் பார்க்கும்போது படகின் ஒட்டுமொத்தவிலை 1,25,000 ரூபாய் அல்லது 1,30,000 ரூபாய்தான் அடங்கும். எனக்கு அந்த விவரமெல்லாம் தெரியாது, ஒருசமயம் அமைச்சருக்குத் தெரியுமோ என்னவோ பதில் சொல்லும்போது சொல்லுவார்கள் என்று கருதுகிறேன். 1,30,000 ரூபாய் மதிப்புள்ள படகை 1,81,000 ரூபாய்க்கு ஏழை மீனவர்கள் தலையில் தூக்கி வைப்பது நியாயமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். நீங்கள் தூக்கி வைத்தீர்கள் என்று சொல்லவில்லை, ஆளுநர் ஆட்சியின்போதே தூக்கி வைத்துவிட்டார்கள். இதையெல்லாம் நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு படகை எடுக்கின்றவர் "இன்ஷூரன்ஸ்" செய்து எடுக்க வேண்டும். அதைக் குறித்தே ஒரு தகராறு. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தூத்துக்குடியில் நடைபெற்ற பிஷரிஸ் அட்வைசரி போர்டில் ஒரு தகராறு நடந்தது. அக்டோபர் மாதம், நவம்பர் மாதம், டிசம்பர் மாதம் போன்ற மாதங்களில் மீனவர்கள் மீன் தொழிலைச் செய்யக்கூடாது என்ற நிபந்தனை விதித்தார்கள் அப்போது அமைச்சராக இருந்த சி.வி.எம். அண்ணாமலை அவ

களும், செயலாளராக இருந்த கந்தசாமி அவர்களும், டைரக்டராக இருந்த மயில்வாகனன் அவர்களும் நிபந்தனை விதித்தார்கள். அப்போது நான் உறுப்பினராக இருந்தேன். ஒன்றும் புரியவில்லை. அடுத்து, கூடுதலாக அரை பர்சன்ட் கொடுப்பார்களானால் அந்த நாட்களில் தொழிலைச் செய்யலாம் என்று சொன்னார்கள். ஆனால் நாங்கள்—கூடுதலாகக் கொடுக்க மாட்டோம், இப்போது கொடுப்பதைத்தான் கொடுப்போம் என்று ஒட்டுமொத்தமாக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து பதில் சொன்னோம். அந்த அரசு சம்பந்தப்பட்ட இன்ஷூரன்ஸ் நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு எங்களுக்கு இந்த நிலையையே தக்க வைத்துத் தாருங்கள் என்று கேட்டு கொண்டு அதற்கேற்ப அப்போது அதே அளவு தான் வசூலித்தார்கள். நான் இந்த அரசு என்று சொல்லமாட்டேன்—நெருக்கடி நிலைமைக்கு முன்னால் 2 சதவிகிதம் இருந்த 'இன்ஷூரன்ஸ்' தொகை நெருக்கடி நிலையின்போது 4.2 சதவிகிதமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 11-50.]

இதனாலே இன்ஷூரன்ஸுக்கு மட்டும் மாதம் ஒன்றுக்கு ஒரு மீனவன் 2 ஆயிரம் ரூபாய் ஆண்டுக்குக் கட்ட வேண்டுமானால் இப்போது அதே மீனவ சமுதாயம் 3 குடும்பங்களுக்கு 7 ஆயிரம் ரூபாய் கட்டவேண்டி இருக்கிறது. இதை சம்பந்தபட்ட அமைச்சர் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் ஆக இருக்கின்றவர்கள் 1974-7-5ல் ஒரு அரிய யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள், அதைக்கூட அன்றைக்கு வெட்டுத் தீர்மானம் என்ற பெயரால் சொல்லியிருக்கிறார்கள். என்னிடத்திலே அதற்கு ஆதாரம் இருக்கிறது. அது என்ன யோசனை என்றால் மீன் துறையிலே பயிற்சி பெற்ற மீனவர்களுக்கு வேலைவாய்ப்புத்தர, படகு தருவதுபற்றி விவாதிக்க என்று கொடுத்தார்கள். அப்போது கேட்கின்ற இடத்திலே இருந்த அவர்கள் இப்போது கொடுக்கின்ற இடத்திலே இருக்கின்ற காரணத்தால் அவர் கேட்டதையே இன்று அவர் கொடுக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னையிலேயும், செங்கையிலேயும், திருநெல்வேலி மாவட்டத்திலேயும் பிஷர்மேன் பெடரேஷன் இருந்திருக்கிறது. ஆனால் அது இப்போது இருக்கிறதா இல்லையா? நம்முடைய நிதிநிலை அறிக்கையிலும் சரி, இந்த மானியக் கோரிக்கையிலும் சரி அதைக் காணோம். நான் அறிந்த வரையிலே அந்த பெடரேஷன் நல்ல முறையிலே பணிபுரிந்திருக்கிறது. ஏன் என்றால் மற்றவர்கள் பினாமி முறையிலே போட்கள் வாங்க முடியாது, அந்த பெடரேஷன் மூலமாக பி கிளாஸ் என்றால் அந்த குப்பத்திலே உள்ளவருக்குத்தான் போட்டைக் கொடுக்க முடியும், வேறு யாரும் வாங்க முடியாது. கலைஞர் ஆட்சியில் இருந்த அந்த பெடரேஷன் எங்கு இருக்கிறதோ தெரியவில்லை.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவு செய்து சீக்கிரம் முடித்துவிடுங்கள். ஏற்கனவே நேரம் முடிந்துவிட்டது.

திரு. ப. பொன்னுரங்கம்: முன்பு இருந்த கலைஞர் ஆட்சியின்போது வழங்கப்பட்ட ஒரு ".லேலண்ட்" போட் 94 ஆயிரம் ரூபாய், அதை வசூலிப்பதற்கு தவணை 63-க்கு மேல் கொடுத்து வசூலிக்கப்பட்டது. ஆளுநர் ஆட்சியிலே அதுவும் தொடரப்படுகிறது. 1,81,000 என்று விலையை ஏற்றிவிட்டு, அதை 45 தவணைகளில் வசூலிப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. இது நியாயந்தானா, தர்மம்தானா இதை இந்த அரசு சிந்திக்க வேண்டாமா? (மணியடிக்கப்பட்டது).

இன்னொன்றை மட்டும் சொல்லிவிட்டு நான் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். என்னிடம் ஒரு ரிக்விசிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் கடந்த 31—7—1977 அன்று ஒரு போட் தொழில் செய்யச் சென்றிருக்கிறது. முக்கியமான விஷயம் இதை மட்டும் சொல்லிவிட்டு முடித்துக் கொள்கிறேன். அந்த போட்டில் சென்றவர்கள் 4 மீனவர்கள், ஆனால் அந்தப் படகு இதுவரை காணவில்லை. கடந்த 31-ஆம் தேதி சென்றிருக்கிறது. அதுகுறித்து அந்த மீனவச் சமுதாயத்தை சேர்ந்த குடும்பங்கள் பல முயற்சிகள் செய்தும், 1—8—1977-லே தேடியிருக்கிறார்கள், என்றாலும் படகு கிடைக்கவில்லை. ஆட்களும் கிடைக்கவில்லை என்றாலும் அரசின் கவனத்திற்கு இந்த வேண்டுகோள் வந்திருக்கிறது என்று இதிலே கீழே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கவர்னருக்கும் 3-ம் தேதியே தந்திருக்கிறார்கள். மீனளத் துறை அதிகாரிக்கும் தந்திருக்கிறார்கள், டைரக்டருக்கும் தந்திருக்கிறார்கள், கலெக்டருக்கும் தந்திருக்கிறார்கள். ஆனால் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்த மீனவர்களின் நலத்தில் அக்கறை இல்லாமல் இருப்பதற்கு என்ன காரணமோ தெரியவில்லை. இன்றைக்கு அந்த நான்கு குடும்பங்களும் வேதனையோடு அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சி இருந்த போது அவர்கள் 1971-ம் ஆண்டிலே முதல்வராக இருந்தபோது எஸ்.டி.வி. 123 என்ற படகு இதேபோன்று தவறிவிட்டது. ஆனால் அவர்கள் முயற்சி செய்து......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடித்து விடுங்கள். 5 நிமிடம் கூட கொடுத்து இருக்கிறது. திரு. ப.உ.ச. அவர்களுடைய நேரத்தில் உங்களுக்கு கூட கொடுத்திருக்கிறது. சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம்: கலைஞர் ஆட்சியிலே ஆகாய விமானத்தை அனுப்பி அப்பொழுது அந்த மீனவர்களைத் தேடுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இந்த அரசோ இத்தனை நாள் வரையிலேயும் எந்த முயற்சியும் எடுத்துக் கொண்டதாக நேற்றுவரையில் தகவல் இல்லை. இது மீனவர்

களின் மத்தியிலே பெரும் அதிருப்தியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நன்மைகளையெல்லாம் செய்கின்ற எங்கள் தானைத் தலைவர் கலைஞர் மீனவ நண்பரா அல்லது மற்றவர்கள்மீனவ நண்பர்களா என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

[மாண்மிகு பேரவைத்தலைவர் புதலைமை]

*திரு. செ. மெ. இராஜு: பேரவைத் தலைவர் அவர்களே, 1977-78-ஆம் ஆண்டு கூட்டுறவு மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ''கூட்டுறவே நாட்டுயர்வு'' என்று பெரியோர்கள் கூறுவார்கள். அது போல கூட்டுறவுத் துறை நல்ல முறையில் இயங்கினால்தான் அந்த நாடு மேம்பாடு அடையும் என்பதில் ஐயமில்லை. அண்மைக்காலந் தொட்டே கூட்டுறவுத் துறையில் சில முறைகேடுகள், நிர்வாகத்தில் தலையீடுகள் ஆகியவைகளினால் அந்தத் துறையைக் கெடுத்துவிட்டார்கள் என்பதை நாம் அறிவோம். விவசாயிகள் பணக்கார வர்க்கத்திடமிருந்தும், மார்வாடிகளிடமிருந்தும் அதிக வட்டிக்கு வாங்கித் தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதுடன் விளைவதைப் பூராவும் வட்டிக்குக் கொடுத்துவிட வேண்டிய நிலைமை இருக்கிறது. அப்படி வட்டிக்குக் கொடுத்துவிட்டு சும்மா வீட்டிற்குத் திரும்புவதை நாம் காண்கிறோம். அப்படிப்பட்டவர்களிடமிருந்து விடுபட கூட்டுறவு நாணயச் சங்கங்களின் மூலம் தங்களுக்குத் தேவையான உரம், மருந்து, விதைப் பொருட்கள் முதலியவற்றை வாங்கிக் கொள்வது உதவிகரமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்மைக் காலமாக வானம் பொய்த்ததன் காரணமாக எதிர்பார்த்த அளவிற்கு விளைச்சல் சரியில்லாமல் காய்ந்துபோன காரணத்தினால் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகப் பெற்ற கடனை மக்களால் திருப்பிக் கட்ட முடியவில்லை. அதனால் அரிசி, கோதுமை, ரவா போன்ற உணவுப் பொருட்களையும், துணி, கடலை எண்ணெய் முதலிய பொருட்களையும் குறித்த விலையில் விநியோகம் செய்வதை நாம் அறிவோம். இத்திட்டம் தொடர்ந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வரசு பொறுப்பேற்று குறுகிய காலத்தில் பல சோதனைகளை ஏற்றுச் செயல்பட்டு வருகிறது. அமைச்சர்களின் திறமையினாலும், புரட்சித் தலைவரின் விடாமுயற்சியினாலும், நல்லெண்ணத்தினாலும் பல நல்ல சலுகைகளை நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. அதற்காக என்னுடைய பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

நடப்பாண்டில் கூட்டுறவுத் துறையில் கடன் வசதி சங்கங்களினால் 200 கிடங்குகள் கட்டுவதற்கும், விற்பனை சங்கங்களினால் 10 கிடங்குகள் கட்டுவதற்கும் அரசு எடுத்துக்கொண்ட





முயற்சி பாராட்டத் தக்கதாகும். கூட்டுறவுத் துறைகள் மூலம் சூப்பர் மார்க்கெட், மினி சூப்பர் மார்க்கெட் அமைக்க அரசு முன் வந்தமைக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் மக்களுக்குத் தரமான பொருட்கள் தகுந்த விலைக்குக் கிடைப்பதுடன் வேலைவாய்ப்பும் பெருகும் என்று கூறிக்கொள்கிறேன். இத்துடன் எனது தொகுதியில் தம்மம்பட்டியில் ஒரு சூப்பர் மார்க்கெட் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக எனது தலைவாசல் தொகுதி மிகவும் வறண்ட பிரதேசம் ஆகும். கடந்த ஐந்தாண்டுக் காலமாக அங்கே மழையே இல்லை. இதனால் அங்குள்ள மக்கள் தங்களது வாழ்வைத் தேடி வெளியூர் சென்றுகொண்டிருக்கிறார்கள். விளைச்சல் இல்லை, பெற்ற கடனைத் திரும்பச் செலுத்தவும் முடியவில்லை. சிறு விவசாயிகள் பெற்ற கடனை எல்லாம் ஒத்திப்போடுவதைவிட சிறு விவசாயிகள் வாங்கிய அந்த விவசாயக் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்வது நல்லது என்ற கருத்தைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதியில் புளியங்குறிச்சியில் சுமார் 7,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ளனர். அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கம் இல்லை. அவர்கள் ஐந்து மைல் தூரம் நடந்து சென்று வேப்பம்பூண்டி கூட்டுறவுச் சங்கத்திலிருந்துதான் உரம், அரிசி முதலியவைகளை வாங்கவேண்டியிருக்கிறது. அவர்களின் குறையைப் போக்க அந்த ஊரில் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துக் கொடுக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே கெங்கவல்லியில் உள்ள கூட்டுறவுச் சங்கத்தில் பல முறைகேடுகள் உள்ளதாகத் தகவல் வந்துள்ளது. அதையும் சரி செய்து குறைகளை அகற்ற வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இவ்வூரில் 74 கிருஷ்ணபுரம், ஆனையம்பட்டி முதலிய ஊர்கள் இருப்பதால் இதையும் பிரித்து 74 கிருஷ்ணபுரத்திற்குத் தனியாக ஒரு சொசைட்டி அமைத்துக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாணவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக குறைந்த விலையில் நோட்டு புத்தகங்கள் வழங்கப்பட்டு வருவதை நான் பாராட்டுகிறேன். இந்த நிலை தொடர்ந்து நீடிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

[நண்பகல் 12-00]

வேலையில்லாமல் படித்த, பட்டதாரி இளைஞர்கள் தொழில் செய்யவும், கோழிப் பண்ணை வைப்பதற்கும், விவசாயிகளுக்கு ஆட்டுப் பண்ணை வைப்பதற்கும் கூட்டுறவு சங்கங்களில் நீண்டகாலக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீண்டகாலத் தவணைகளில் கூட்டுறவு சங்கங்களில் கடன் கொடுக்கும் போது, உரம் ஒரு பகுதி கொடுக்கப்படுகிறது. ஆனால், விவசாயிகளுக்குத் தேவையான உரம் கொடுப்பதில்லை. ஏதோ பழைய ஸ்டாக் இருப்பதைக் கொடுத்து விடுகிறார்கள். அதனால், விவசாயிகள் வருத்தப்படுவதைப் பார்க்கிறோம். அதை மாற்றி, விவசாயிகள் விரும்பும் உரத்தைக் கொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பெரும்பாலும் கடன் வசூல் செய்யும்போது ஜப்தி செய்ய அதிகாரிகள், வீட்டுக்கு வரும்போது, கடன் வாங்கியவர்கள் வீட்டில் இல்லாவிட்டால், வீட்டிலுள்ள பெண்களையும் மற்றவர்களையும் தவறாகப் பேசி, அந்த வீட்டை ஜப்தி செய்வதாகத் தகவல் வந்திருக்கிறது. அதைக் கவனித்து, அதற்குத் தக்க பரிகாரம் காண வேண்டுமாய்க் கேட்டுக்கொள்வதுடன் பார்ட்டி இல்லாத நேரத்தில் வசூல் ஜப்தி செய்வதை நிறுத்தி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலுள்ள மத்திய வங்கியில் முறைகேடுகள் இருந்தன. அதனால், அது கலைக்கப்பட்டு, இப்பொழுது விசாரணையிலிருந்து வருவதாக அறிகிறேன். அதைத் தீவிரமாகப் பரிசீலித்து, உடனடியாக நன்கு விசாரித்து நடவடிக்கை எடுத்துப் பரிகாரம் காண வேண்டுமாய்ப் பணிவோடு இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் மீன் பிடிப்பவர்களுக்கு இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்று கேட்டார். இந்த அரசு மீனவர்களின் நண்பனாக இருக்கும் என்று கூறி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. கரியமாணிக்கம் அம்பலம். உங்களுக்கு 5 நிமிடம்தான். இன்னொரு உறுப்பினர் கேட்டிருக்கிறார். அதனால் 5 நிமிடம், நீங்கள் அவருக்குக் கொடுத்து விடுங்கள்.

*திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவு, மீனளத் துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மீன்பிடித் தொழிலாளர்கள் இந்த நாட்டிலே மிகவும் பின்தங்கிய முறையிலே இருக்கிறார்கள். அவர்களுடைய குடியிருப்புகளைப் போய்ப் பார்த்தாலே அவர்கள் மிகவும் மோசமான நிலையிலே இருப்பது நன்றாகத் தெரிகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு விசைப் படகுக்காரர்கள் பெரும் தொல்லை கொடுத்து வருகிறார்கள். என்னுடைய பகுதியிலே விசைப் படகுக்காரர்கள் நாட்டுப் படகுக்காரர்களுடைய வலைகளை அறுத்து நாசம் செய்து அதன் விளைவாக, கலெக்டர் அவர்கள் சமரசப்படுத்தி, அவர்கள் ஒரு நேரத்திலே மீன் பிடிப்பது,



இவர்கள் ஒரு நேரத்திலே மீன்பிடிப்பது என்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், இப்பொழுது விசைப் படகுக்காரர்கள் அதை மீறி, மறுபடியும் நாட்டுப் படகுக்காரர்களுடைய வலையை அறுத்துக் கொண்டு வருகிறார்கள். அதனால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அந்த நிலையைப் போக்குவதற்கு விசைப் படகுக்காரர்கள் போகின்ற நேரத்திலே, நாட்டுப் படகுக்காரர்கள் கடலிலே போகாமலும், நாட்டுப் படகுக்காரர்கள் போகின்ற நேரத்திலே, விசைப் படகுக்காரர்கள் கடலிலே போகாமலும் இருக்க ஒரு ஏற்பாட்டை அமைச்சரவர்கள் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது பெரிய பெரிய பணக்காரர்கள் விசைப் படகு வைத்து, அதை ஒரு தொழிலாகச் செய்து வருகிறார்கள். மீனவர்கள் மிகவும் நலிந்த நிலையிலே இருப்பதன் காரணமாக, மீனவர்கள் விசைப்படகு வைத்து, மீன் பிடிக்க வேண்டுமென்ற நிலையை இந்த அரசு ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நைலான் நூல் வலைகள் மலிவு விலையிலே கிடைப்பதற்கும் அதிகமான அளவிலே கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்து, மீனவர்கள் நல்ல முறையிலே வாழ வழி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மீனவர்கள் மிகவும் ஆபத்தான வேலையைச் செய்கிறார்கள். அவர்களுக்குக் கடலிலே ஏதாவது ஆபத்து ஏற்பட்டால், அவர்கள் குடும்பத்திற்கு இந்த அரசு ரூ. 10,000 கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்கும் இந்த அரசு மானியமாக தொகை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடல் அரிப்பு என்னுடைய தொகுதியிலே மிகவும் மோசமான நிலையிலே இருக்கிறது. மீனவர்கள் வாழ்கின்ற நம்புதாளை, தொண்டி, புதுப்பட்டினம், காரங்காடு, முள்ளிமுனை, பாசிப்பட்டினம், தாமோதரன்பட்டினம், புல்லக்கடம்பன், நாரேம்பல் போன்ற இடங்களிலே தடுப்புச் சுவர்கள் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியிலே இருக்கிற மீனவர்களுக்கு கடன் வசதி கொடுக்காத காரணத்தினால்தான் கந்து வட்டிக்கு அப்படி ஒரு முறை இருக்கிறது—பணக்காரர்களிடத்தில் கந்து வட்டிக்கு கடன் வாங்கி, பிடிக்கின்ற மீனை குறைந்த விலைக்கு அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது; வட்டி வாங்கிக் கஷ்டப் படுகிற மீனவர்களுக்கு சல்லிசாக அரசாங்கத்திடமிருந்து கடன் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்] [1977 ஆகஸ்ட் 12

என்னுடைய திருவாடானை தாலுகாவில் கூட்டுறவு நிலவள வங்கி ஏற்படுத்தப்படாமல் நீண்ட நெடுங்காலமாக இருக்கிறது. ஒரு தாலுகாவிலே நிலவள வங்கி இல்லாத காரணத்தினால் வேறு தொலைவாக சென்று அதைப் பயன்படுத்த முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அங்கு ஒரு நிலவள வங்கி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம நாணய சங்கத்திற்கு கோடவுன் இல்லாத காரணத்தாலே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. என்னுடைய பகுதியிலே கண்ணங்குடி என்ற கிராமத்திலே கோடவுன் இல்லாததாலே இப்போதுகூட நெல்லை கோடவுனிலே வைக்க வேறு கோடவுன்களைப் பிடித்து அதுவும் கூட முடியாத நிலையிலே கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இந்த கிராமத்திலே ஒரு கோடவுன் கட்டுவதற்கு உடனடியாக சாங்ஷன் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

சில சங்கங்களிலே ஓவர் டியூவான சமயங்களிலே எல்லாம் கடன் கொடுக்காமல் நிறுத்தி விடுகிறார்கள். ஓவர்டியூ இருந்தவர்களுக்கு மட்டும் கடன் கொடுக்காமலிருந்தால் பரவாயில்லை. அந்தச் சங்கமே வேலை செய்யவில்லை. மற்றவர்களுக்குக் கடன் கிடைக்காமல் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இந்த ஓவர் டியூ ஏற்பட்ட இடங்களிலே கடன் வாங்கினவர்களுக்கு மட்டும் கொடுக்காமல் மற்றவர்களுக்கும் கடன் கொடுக்கக்கூடிய நிலையிலே சங்கங்கள் இயங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு சங்கங்களில் வட்டி விகிதம் அதிகமாக இருக்கிறது. வட்டியை குறைக்க வேண்டுமென்று, வட்டி நிவாரண சட்டம் கொண்டு வருகின்ற இந்த அரசு நமது கூட்டுறவு சங்கங்களிலே அதிகமான வட்டியை வாங்குவது முறையாக இல்லை. ஆகவே, வட்டி வீதத்தைக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கிராமச் சங்கங்களில் நகைக்குக் கடன் கொடுப்பதற்கு நிச்சயமாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தி. மு. க அரசாங்கம் இருந்தபோது கூட்டுறவு சங்கங்களில் நாமிநேஷன் மெம்பர்களைப் போட்டு அவர்கள் கட்சிக்கு சாதகமாக கூட்டுறவு சங்கங்கள் இருப்பதற்குச் செய்தார்கள். அந்த நாமினேஷன் முறையை எடுத்துவிட்டு இப்போது உடனடியாக சங்கங்களிலே எலக்ஷன் வைத்து நடப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சங்கங்களிலே இருக்கிற செக்ரட்டரிகள் எல்லாம் பொறுப்பில்லாதது போலவும் அந்த சங்கங்களிலே நடக்கின்ற ஊழல்களுக்கு தலைவர் மீது மட்டும் நடவடிக்கை எடுப்பதாக இருக்கிறது. அப்படியானால் தலைவர்க்குக் கட்டுப்பட்டு இந்த செக்ரட்டரி இருக்க வேண்டும் என்று சட்டத்தை மாற்றவேண்டும், அப்படி இல்லை என்றால், செக்ரட்டரி மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அந்த சங்கங்களுக்கு உடனடியாக எலெக்ஷன் வைத்து மீண்டும் நல்ல முறையில் இயங்கச்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.



1977 ஆகஸ்ட் 12]

[முற்பகல் 12-10]

திரு மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே கூட்டுறவுத் துறை, கூட்டுறவுச் சங்கங்களுடைய மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பை, தஞ்சை மாவட்ட விவசாயிகளின் சார்பில், பெற்றமைக்காக நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்கு விவசாயிகளுக்கு துணையாக செயல்பட முடியாததாக இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. விவசாய சங்கத்திலிருந்து கடன் பெறுகின்ற நேரத்தில் விவசாயிகள் படுகின்ற தொல்லை மிகவும் அதிகமாக இருக்கிறது. அவர்கள் சான்றுகளைப் பெறுவதற்குச் செல்கின்ற நேரத்தில் மிகவும் சிரமப்படுகிறார்கள். கர்ணத்திடமிருந்து, சிட்டா, அடங்கல் ஆகியவைகளின் சான்றிதழ்களைப் பெறுவதற்கு அவர்கள் மிகவும் தொல்லைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். எனவே இப்படிப்பட்ட சங்கங்களே நேரடியாக கர்ணத்திடம் பெற்றுக்கொள்ள சூழ்நிலைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சான்றிதழ்களைப் பெறுவதற்கு அவர்கள் கையூட்டுத் தர வேண்டிய நிலை இருக்கிறது. இன்றைய நடைமுறையில் மூன்று, நான்கு முறைகள் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கடன் பெற வேண்டுமென்றால், கையொப்பமிட வேண்டியிருக்கிறது. இப்படி மூன்று, நான்கு முறை கையொப்பமிடுகிற முறை இருப்பதால், ஏதாவது ஒரு முறை அவர் கையொப்பமிடத் தவறிவிடுவாரேயானால் அவர் கடன் பெறுகிறவர் வரிசையில் முதல் வரிசையிலிருந்து கடைசி வரிசைக்கு தள்ளப்பட்டு விடுகிறார். அதன் காரணமாக அவர் தனக்குத் தேவையான நேரத்தில் கடன் பெறமுடிவதில்லை. இப்படி மூன்று நான்கு முறை கையொப்பமிடவேண்டும் என்கின்ற முறைக்கு பதிலாக ஒரே ஒரு முறை கையொப்பமிட்டால் போதும் என்று செய்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட முறை இருப்பதால் இன்றைக்குச் சாகுபடிக்காகக் கேட்கின்ற கடன் அவருக்கு உரிய நேரத்தில் கிடைக்காமல் அறுவடை நேரத்தில் கிடைக்கின்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றன என்பதை அரசு உணர்ந்திட வேண்டும் என்று தெரிவித்து கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல. மாதத்திற்கு ஒரு முறைதான் கடன் பெற முடியும் என்ற நிலையை மாற்றி வாரத்திற்கு ஒரு முறை, வாரா வாரம் ஒவ்வொரு உறுப்பினரும் பெற வேண்டிய கடனைப் பெற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தச் சங்கத்திற்கு எவ்வளவு தொகை தேவைப்படுகிறது என்பதை அறிந்து அந்தத் தொகையை ஒட்டு மொத்தமாக முன் கூட்டியே பெற்று விடுமானால், அந்தச் சங்கத்திற்கு வேண்டிய தொகையை மத்திய கூட்டுறவுச் சங்கம்மொத்தமாக ஒதுக்கி விடுமானால், விவசாயிகளுக்கு கடன் வழங்குவதில் எந்த விதமான காலதாமதமும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி மூன்று, நான்கு தவணைகளில் மத்திய சங்கத்திடமிருந்து

பணம் பெறுவதால் பல சங்கடங்கள் விவசாயிகளுக்கு ஏற்பட்டு, அவர்களுக்கு உரிய நேரத்தில் கடன் கிடைக்க முடியாத சூழ்நிலையை தவிர்க்க முடியும் என்பதைத் கூறிக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற கடன்களை காசோலையாகக் கொடுப்பதால் அவர்களுக்குப் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. அவர்களுக்குக் காசோலையாகக் கொடுப்பதால் அவர்கள் வங்கிக்கு சென்று பணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு சில விவசாயிகள் கையொப்பம் இடுகிறவர்களாக இருக்கிறார்கள். ஒரு சிலர் கை ரேகை வைப்பவர்களாக இருக்கிறார்கள். அவர்களின் ரேகை ஒரே மாதிரி இருப்பதில்லை. அதன் காரணமாக அவர்கள் உரிய நேரத்தில் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்படுகின்றன.

இந்தக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரையில் ஊழியர்களும், நிர்வாகிகளும் நல்ல சீரான, சிறப்பான முறையில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். இப்படி அவர்கள் பணியாற்றுகிற மத்திய வங்கிகளும் உண்டு. குறிப்பாக தஞ்சை கூட்டுறவு வங்கியும், கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கியும் சிறப்பான முறையிலே பணியாற்றி வருகின்றன. இந்திய துணைக் கண்டத்திலேயே கும்பகோணம் கூட்டுறவு வங்கி முதலாவது இடத்தையும், தஞ்சாவூரின் மத்திய கூட்டுறவு வங்கி இரண்டாவது இடத்தையும் பெற்றிருந்தன. ஆனால் அதனுடைய நிர்வாகம் மாற்றப்பட்ட காரணத்தினால் இன்றைக்கு ஊழியர்கள் பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு போனஸ் ஒழுங்காக கொடுக்கப்படவில்லை. உரிய முறையில் கொடுக்கப்படவில்லை. அவர்கள் ஒழுங்காக அவர்களுக்குரிய வங்கி ஊதிய அடிப்படையில், ஊதியத்தைப் பெற்றுக் கொள்கின்ற முறையிலே வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமச் சங்கங்களில் கிராமத்தில் வேலை செய்கின்ற ஊழியர்கள் மிகச் சிரமப்பட்டு வேலை செய்கிறார்கள். அவர்கள் விவசாயிகளோடு நேரிடையாகத் தொடர்பு கொண்டிருப்பதால், விவசாயிகள் கடன் கேட்டு மனுக் கொடுத்து அது அவர்களுக்குக் கிடைக்காத நேரத்தில் அவர்களின் கோபத்திற்கு ஆளாகிறார்கள். அதே நேரத்தில் அவர்கள் வங்கி நிர்வாகிகளின் கோபத்திற்கும் ஆளாகிறார்கள். இப்படி இரண்டு நிலையிலும் இருக்கிற இவர்களின் ஊதியமும் மிகக் குறைவாக இருக்கிறது. அதோடு மட்டுமல்ல அவர்களின் வேலை நிரந்தரமானதாகவும் இல்லை. இப்படிப்பட்டவர்களின் ஊதியத்தை உயர்த்தவும், அவர்களின் வேலையை நிரந்தரமாக்கவும் வழி செய்ய வேண்டுமென்று அரசை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் கடன்களைப் பெற்றுள்ளவர்களில் பலர் தாங்கள் வாங்கியுள்ள கடன்களைத் திருப்பிக் கட்ட முடியாத நிலை இருக்கிறது. இப்படிப்பட்டவர்களின் தொகை நாள்தோறும் அதிகமாகிறது. என்பதை புள்ளி விவர அறிக்கை தெரிவிக்கிறது. இப்படிக்கட்ட முடியாத ''டிபால்டர்'' களுக்குப் அரசே பொறுப்பு ஏற்று அந்தக் கடனைக் கட்ட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.





சங்கத்தின் கடன்களைக் கட்டுவதற்கு சாதாரண விவசாயிகள் குத்தகை நிலத்தை விற்று கட்ட முடியாமலும், பின்னால் நிலத்தை மீட்ட முடியாமலும் இக்கட்டான நிலைமைக்கு சிறு விவசாயிகள் ஆக்கப்பட்டு திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் இங்கே புரட்சித் தலைவர், புரட்சித் தலைவர் என்று அடிக்கடி சிறப்பாகப் பேசினாலும் கூட அடுத்த ஆண்டாவது இப்படிப்பட்ட சிக்கலைத் தவிர்க்க முதலமைச்சர் புரட்சித் தலைவர் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இங்கு பேச வாய்ப்பு நல்கியதற்கு நன்றி கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் இந்த சபையின் ஒப்புதலுக்கு வைத்திருக்கிற மானிய கோரிக்கை விவாதத்தில் நானும் கலந்து கொண்டு சில கருத்துக்களை சமர்ப்பிக்க எண்ணுகிறேன். '' கூட்டுறவே நாட்டுயர்வு '' என்கிற தலையாய தத்துவத்தைக் கொண்டு உள்ள இந்தத் துறை சென்ற ஆட்சிகாலத்தில் நாட்டு மக்களால் '' கூட்டுறவு அதனுடைய நிர்வாகத்தைக் கவர்ந்து கொண்டவர்களின் வீட்டுயர்வு '' என்ற அளவுக்கு விமர்சனம் செய்யப்பட்டு நிலைமைகளை எல்லாம் இன்றைக்கு எண்ணிப்பார்க்க வேண்டியிருக்கிறது. அந்த அளவில் சிறிய சிறிய சங்கங்கள் என்ற நிலைமை இல்லை. சில மத்திய கூட்டுறவு வங்கிகளைத் தாண்டிச் செல்வதாக இருந்தால் பேருந்தில் சென்று கொண்டிருந்தால் பேருந்தில் உள்ளவர்கள் முணுமுணுப்பார்கள். ''இதோ இருக்கிறது கொள்ளைக் கூட்டத்தினுடைய கூடாரம்'' என்று. பழைய மத்திய வங்கிகளின் ''தலைவர்கள் காரில் சென்று கொண்டிருந்தால் '' அதோ சென்று கொண்டிருக்கிறார் கொள்ளைக் கூட்டத்தினுடைய தலைவர் '' என்றெல்லாம் கூட ஜனங்கள் முணுமுணுத்தார்கள். அந்த நிலைமை பெரிய சங்கங்களின் தான் என்று மட்டுமல்லாமல் குட்டிக்குட்டிச் சங்கங்களிலும் கூட நடந்த ஊழல்கள் நடந்த மோசடிகள் இன்றைக்கு எண்ணிப் பார்க்கவே வியப்பாகவே இருக்கிறது. என்னுடைய தொகுதியில் எழுமலை என்ற ஊரில் ஒரு எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் இருக்கிறது. அந்த சங்கத்தின் தலைவர் பழைய ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒன்றியச் செயலாளர். அதில் இன்றைக்கு ரூ. 91 ஆயிரம் மோசடி நடந்திருக்கிறது என்று கண்டு பிடிக்கப்பட்டு, அவர் இன்று கன்டிஷனல் பெயிலில் இருக்கிறார். ஒரு சாதாரண சின்ன சங்கத்தில், ஒன்றியச் செயலாளர் ரூ. 91 ஆயிரம் என்றால் எண்ணிப் பார்க்க வேண்டும். என்னுடைய பகுதியில் ரூ. 91 என்றாலே அண்ணாந்து பார்க்கிற பஞ்சப் பிரதேசம், அந்தப் பஞ்சப் பிரதேசத்தில் ரூ. 91

[திரு. இரா. முத்தையா] [1977 ஆகஸ்ட் 12

ஆயிரம் மோசடி நடந்திருக்கிறது என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இப்படி டம்ளர், சொம்பு என்று திருடியதோடு இல்லாமல், பல பெரிய இடங்களில் அண்டா, குண்டாவையே இந்தத் துறையில் ஈடுபட்டவர்கள் விழுங்கியிருக்கிறார்கள். பெரிய மத்திய வங்கிகள் அன்றைக்கு ஆளும் கட்சியினுடைய மாநாடுகளுக்கெல்லாம் விளம்பரம் தருகிறோம் என்ற பெயரில் ரூ. 50 ஆயிரம் ரூ. 60 ஆயிரம் வங்கி நிதியிலிருந்து எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். சாதாரணமாக கிராமங்களில் திருட்டுப் போன பொருளை யாராவது வாங்கி விட்டால் திருடியவன் கிடைக்கிறானோ இல்லையோ இந்தத் திருட்டுப் பொருளை வாங்கியவனை போலீஸ்காரர்கள் விடமாட்டார்கள். இன்றைக்குத் தெளிவாகத் தெரிகிறது. ரூ. 50 ஆயிரம், ரூ. 60 ஆயிரம் என்று மத்திய வங்கி நிதிகளைத் திருடிக் கொடுத்தது போல் தான் இது. ஆளும் கட்சியினுடைய மாநாட்டு மலர்களுக்கு ரூ. 50 ஆயிரம் விளம்பரக் கட்டணமாக வங்கிப் பணத்தை எடுத்து கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் இது எவ்வளவு பெரிய கொள்ளை. பெரிய பத்திரிகைகள் எல்லாம் இருக்கின்றன. அந்தப் பத்திரிகைகளுக்கு எல்லாம் கூட முழுப் பக்க விளம்பரமும் கொடுத்தாலும் கூட ரூ. 1,500, ரூ. 2,000 தான் வாங்குவார்கள். இது என்ன அவ்வளவு பெரிய மலரா? விளம்பரத்திற்காக ரூ. 50 ஆயிரம் கொடுத்திருக்கிறார்கள். இதை அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் துறை ஒரு போலீஸ் துறைபோல் செயல்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ரெஜிஸ்டிரார், டெபுட்டி ரெஜிஸ்டிரார், மற்றும் இந்தத்துறையில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகள் இதில் நடத்தியிருக்கிற கொள்ளைகளை மோசடிகளை கண்டுபிடிக்க ஒரு போலீஸ் துறை போல் இயங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

போலீஸ் துறையில் எஸ். பி., டி.எஸ்.பி. என்றிருப்பதை போல் ரெஜிஸ்ட்ராரும், டெப்டி ரெஜிஸ்ட்ரார்களும் இத்துறையில் இறங்கி ஈடுபட்டால்தான் நடந்திருக்கிற மோசடிகள் நாட்டுக்கு தெரியவரும், மோசடி செய்த பொருள்கள் திரும்பக் கிடைக்கும், இதை ஒரு ஆண்டுக்காலமாக துருவித் துருவிப் பார்க்கிறார்கள். பலர் அகப்படவில்லை. காரணம், இதை நன்றாகத் தெரிந்த அதிகாரிகளை எல்லாம் அன்றைக்கு இடம் விட்டு இடம் தூக்கி அடித்திருக்கிறார்கள். ஆடிட் டிபார்ட்மெண்டில் இருந்தவர்களையெல்லாம் இதைக் கண்டு பிடித்து சொல்லிவிடுவார்களோ என்ற பயத்தில் மதுரையில் இருக்கிறவரை தர்மபுரிக்கும், செங்கல்பட்டில் இருப்பவரை கன்னியாகுமரிக்கும் தூக்கி அடித்திருக்கிறார்கள். காரணம் இவர்கள்மீது புகார்கள்..........................

திரு. ஏ. ரகுமான்கான்: மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் பொதுவான குற்றச்சாட்டுக்களை சொல்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம் பொதுவான குற்றச்சாட்டுகள் என்று



1977 ஆகஸ்ட் 12] [திரு. எ. ரகுமான்கான்]

சொல்கிறபோது ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் வங்கிகளிலிருந்து மாநாட்டுப் பணம் தந்தார்கள். அதேபோல் இதழ்களுக்கு பணம் தந்தார்கள் என்று சொல்வதைவிட எப்போது, எப்படி கொடுத்தார்கள் என்று ஆதாரங்களை வைத்துக்கொண்டு பேச வேண்டும். பொதுவான குற்றச்சாட்டுகள் என்றால் டெபமேஷன் என்ற அளவில் வரும். ஆகவே ஆதாரங்களோடு பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மொத்தத்தில் இருக்கிற குறைபாடுகளைச் சொல்கிறார்கள். யாரையும் குறிப்பிட்டு இன்னார், இன்னார் என்று சொல்லவில்லை. இப்படி இப்படி, இருக்கிறது, அதை அரசு கவனிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான் கான் அவர்கள் ஏதோ சொன்னார்கள். அவர்கள் எந்த முறையில் இந்த அவையில் பேசினார் என்று அறிவிக்காமல்—"பாயின்ட் ஆப் ஆர்டரா" அல்லது "பாயின்ட் ஆப் இன்பர்மேஷனா" என்று தெரிவிக்காமல் ஒரு உறுப்பினர் பேசும்போது பேசுகிறார்; அதேபோல் மற்ற உறுப்பினர்கள் பேசும்போது எங்களுக்கு ஏற்படுகிற சந்தேகங்களைத் தெரிந்து கொள்வதற்கு நீங்கள் அனுமதிப்பீர்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*திரு. இரா. முத்தையா: ஆதாரம் இருக்கிறதா என்று கேட்கிறார்கள். ஏதோ நான் எந்தவிதமான ஆதாரங்களும் இல்லாமல் இங்கே கருத்துக்களைக் கூறிக்கொண்டிருக்கிறேன் என்ற வாதம் உண்மையாகிவிடாது. நேரடியாக சிலரை இன்னார் இன்னார் என்று சொல்வதற்கு நான் சபைத் தலைவர் அவர்களிடத்திலும் பிறரிடத்திலும் ஆதாரங்களைக் கொடுப்பதற்குத் தயாராகத்தான் வந்திருக்கிறேன். ஆதாரத்தோடுதான் பேசிக் கொண்டிருக்கிறேன். ரூ. 91,000 என்று சொன்னேன். அவர் கண்டிஷனல் பெயிலில் இருக்கிறார். விளம்பரத்திற்காக பணம் கொடுத்ததை, குறிப்பிட்ட சில பாங்குகளில் கொடுத்திருக்கிறார்கள் என்ற பட்டியலை வைத்திருக்கிறேன். குறிப்புகளை வைத்துக்கொண்டுதான் பேசிக் கொண்டிருக்கிறேன். முழுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு தான் இந்த அவையில் பேசுகிறேனே தவிர ஏற்றுக்கொள்ளாமல் ஏதோ பேசுகிறேன் என்ற கருத்தினை உறுப்பினர் அவர்கள் தெரிவிக்க வேண்டாம்.

ஒரு பாங்க் இரண்டு பாங்க் என்றல்ல. கோவையில் நடந்த மாநாட்டுக்கு செங்கல்பட்டு பாங்கிலிருந்து கொடுத்திருக்கிறார்கள். திருநெல்வேலி பாங்கிலிருந்து கொடுத்திருக்கிறார்கள். கோவை பாங்கிலிருந்து கொடுத்திருக்கிறார்கள். கும்பகோணம் பாங்கிலிருந்து கொடுத்திருக்கிறார்கள். இதெல்லாம் எந்த அடிப்படையில் கொடுத்தார்கள் என்பதை எல்லாம் இந்த அரசு விசாரித்து அதைச் செய்தவர்களைப் பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

அதோடு நான் சொல்கிறேன். பெரிய பெரிய அதிகாரிகள் மட்டுமல்ல, சின்ன சின்ன அதிகாரிகளைக் கூட, விவரம் தெரிந்தவர்களை அன்றைக்கு மாற்றினார்கள். மாற்றி விவரங்களை முழுமையாக அழித்து விடலாம் என்ற எண்ணத்தோடு செய்தார்கள் என்பதற்காகத்தான் இதைச் சொன்னேன். அந்த மோசடிகள் எல்லாம் முழுமையாக வெளி வரவேண்டுமென்றால் அந்த அதிகாரிகள் விவரம் தெரிந்த அதிகாரிகள் எல்லாம் எங்கேயோ இருக்கிறார்கள், புதியவர்கள் வந்திருக்கிறார்கள். மேலும் இந்தத் துறையில் அகப்பட்டிருப்பவர்களை எல்லாம் இன்றைக்கு விசாரிப்பதில் காலதாமதம் செய்து கொண்டிருக்கிறார்கள். பிடிக்கிறார்கள். பிடித்ததற்குப் பின்னால் நான் ரூ. 91,000யை கட்டி விட்டேன் என்று சொல்கிறார்கள். கட்டி விடுவதால் அவர்களை விட்டு விடலாமா?

மன்னார்குடியில் ஒரு பால் வழங்கு சங்கத் தலைவர் ரூ. 41,000 மோசடி செய்து, அந்த Misappr(o)poration கண்டுபிடிக்கப்பட்டு, அதற்குப் பிறகு அந்தப் பணத்தைக் கட்டிவிட்டு இன்னும் அந்தச் சங்கத்தில் அவர் தலைவராக இருந்து கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட ஊழல்களை எல்லாம் செய்தவர்களை இந்த அரசு மிகுந்த கண்காணிப்போடு இத்துறையின் மூலம் பிடிக்க வேண்டும்.

இன்னும், சட்டத்தில் இருக்கக்கூடிய சிலபல குறைபாடுகள் நிவர்த்தி செய்து இவர்கள்மீது நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கைகள் எடுக்கும்போது கிரிமினல் நடவடிக்கைகள் என்று இருக்க வேண்டும். கொள்ளை அடித்தவர்களை, பொதுப் பணத்தை வாரிக் கொண்டு சென்றவர்களை, அவர்கள்மீது கிரிமினல் நடவடிக்கைகள் எடுத்தே தீர வேண்டும்.

இவர்களை எல்லாம் * * * * *
அப்போது நாட்டு மக்களுக்கும் தெரியும். இனிமேல் வருபவர்களுக்கும் இப்படிப்பட்ட மோசடி செய்வதற்கு ஒரு அச்சம் ஏற்படும். இப்போது என்னவென்றால் எல்லாம் செய்துவிட்டு ஏகடியம் பேசிக் கொண்டு........................

திரு. து. புருஷோத்தமன் : அதைப்போல இந்த ஆட்சியில் இருப்பவர்களையும் செய்வதற்கு.......................

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, * * என்று குறிப்பிட்ட அந்த வார்த்தையை குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே, அவர் பேசி முடித்ததும், இந்த வார்த்தைகளை நீக்க வேண்டும் என்று இருந்தேன் உறுப்பினர் அவர்கள் பேசும்போது * * *
என்று குறிப்பிட்ட வார்த்தைகளை சபை நடவடிக்கை குறிப்பேட்டிலிருந்து நீக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12-25—12-29ல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.





திரு. எ. ரகுமான்கான் : முன்னால் ஆளும்கட்சியில் இருந்த பலரால் பல ஊழல்கள் நடைபெற்றன என்று பொதுவாக குறிப்பிட்டார்கள். இங்கு பேசிய ஆளும்கட்சி உறுப்பினர் அவர்களிடமிருந்து நான் தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம்,
* * * * *
என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்களா............

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : அப்போதிருந்த இந்த துறையை * * *
இப்படிப்பட்ட ஊழல்களை செய்தார் என்பதை உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொள்கிறாரா ?

(திரு. ரகுமான்கான் அவர்கள் எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுப்படையாக இதைப் பற்றி சொல்லி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னார். இப்படியே விட்டு விடுங்கள்.....
* * * * *

திரு. எஸ். ஆர். இராதா : எந்த * * செய்திருந்தாலும் அது கூட்டுப்பொறுப்பு என்று சொல்லப்படுகிறது.

மாண்புமிகு திரு. எம்.ஜி.இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள், *
என்று குறிப்பிட்டுப் பேசியதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : * * * என்று குறிப்பிட்டதை நீக்கிவிட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால் * * *
என்று ஆளும் கட்சி உறுப்பினர் தொடர்ந்து பேசியதையும் நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசிய போது * * *
மீது குறிப்பிட்ட........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் குறிப்பிட்டது, * * * பேசியதையும், அதைத் தொடர்ந்து ஆளும்கட்சி உறுப்பினர் எஸ். ஆர். இராதா அவர்கள் * *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12-25—12-29-இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

* * அவர்களைப்பற்றி குறிப்பிட்டதையும் அதைத் தொடர்ந்த பேச்சுக்களையும் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கி விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * , , பற்றியும், தொடர்ந்து ' ' , , குறிப்பிட்ட பகுதிகள் அத்தனையையும் சபை நடவடிக்கை குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிடுமாறு உத்தரவிடுகின்றேன்.

திரு. இரா. முத்தையா : தவறு செய்கின்றவர்கள், கொள்ளை அடிப்பவர்கள், ஊழல் செய்கின்றவர்கள் இவர்களை எல்லாம் எவ்வாறு விலங்கு போட்டு இழுத்து செல்வார்களோ அதைப் போல் இவர்களையும் இழுத்துச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் தான் நான் குறிப்பிட்டேன். இப்படிப் பெருவாரியான அளவில் நடந்திருக்கின்ற நிலைமைகளை எல்லாம் இந்த அரசாங்கத்தின் சார்பில்—இந்தத் துறையைப் பொறுப்பேற்றிருக்கின்ற அமைச்சர் அவர்கள் எதையும் துருவித் துருவிப் பார்க்கின்ற தன்மை கொண்டவர்கள், ஆகவே அவர்கள் இவற்றையெல்லாம் கண்டுபிடித்து குற்றவாளிகளை இனம் காண்பிப்பார் என்று நம்புகிறேன்........மேலும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.

திரு. இரா. முத்தையா : இப்படிப்பட்ட ஊழல்கள் களையப் பட்டால் தான் இந்த நாட்டு மக்களுக்கு இத்துறையின் மீது நம்பிக்கை வரும் என்பதைச் சொல்லிக் கொண்டு, என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய இரண்டு நிலவள வங்கிகளில், ஒன்று ஏழுமலையில் இருக்கின்றது. அங்கு இருக்கக்கூடிய நிலவள வங்கியில் முன்னுள் நிர்வாகத்தை சேர்ந்தவர்கள் பினுமி லோன் போட்டு அவை வசூலாகாத நிலைமை ஏற்பட்டு செயல்படாத நிலைமையில் இருந்தது. இப்போது அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த நிலவள வங்கியை ஏழுமலையிலே இருக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் யார் உண்மையான மீனவ நண்பன் என்று கேட்டார்கள். எங்களுடைய தலைவர், இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் இலக்கணம் படித்தவர் தான் எங்கள் தலைவர் புரட்சித் தலைவர் ஆவார்கள். பயன்தரும் திட்டங்களை மீனவ மக்களுக்காகச் செயல்படுத்தக்கூடியவர், அதற்காகத்தான் பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறுர்கள்.

[பிற்பகல் 12—30].

இருப்பதை தன்னைச் சுற்றிலும் இருக்கக்கூடியவர்கள் சுருட்டிக் கொண்டு போய் விடட்டும் என்னிறிருக்கிறவர்கள்தான் மீனவக்களுக்குத் நண்பர்களாக மாட்டார்கள்; துரோகிகளாக இருப்பார்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12·25—12·29 இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.



கள். எங்களுடைய புரட்சித் தலைவர் உண்மையிலேயே மீனவர்களுக்கு நண்பனுகத்தான் இருப்பவர்கள். மற்றவர்கள்தான், இருப்பதை தன்னைச் சுற்றிலும் இருக்கக்கூடியவர்கள் சுருட்டிக் கொண்டு போய் விடட்டும் என்றிருப்பவர்கள்; அவர்கள் மீனவர்களின் துரோகிகள் என்பதைச் சொல்லிக் கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. மு. சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கையின் பேரில் ஒருசில வார்த்தைகள் கூறலாம் என்று நினைக்கிறேன். கூட்டுறவுத் துறை, மின்சாரத் துறை ஆகிய இந்த இரண்டும்தான் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு, சோஷலிச சமுதாயத்தை அமைப்பதற்கு உதவியாக இருக்கும் என்று பண்டித நேரு அவர்கள் கூறியிருக்கிறுர்கள். ஆனுல், துரதிருஷ்டவசமாக, இந்த இரண்டு துறைகளும் நமது தமிழகத்திலே மின்சாரம் பற்ருக்குறை, கூட்டுறவுத் துறையிலே நிர்வாகச் சீர்கேடு ஆகிய காரணங்களால் இன்றைக்கு சோஷலிச சமுதாயத்தை நோக்கிச் செல்கின்ற பாதை தடைபட்டிருக்கின்ற நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது.

முதல் அமைச்சர் அவர்கள் கவர்னர் அவர்கள் உரை மீதான விவாதத்திற்கு இறுதிஉரை கூறும்போது, கூட்டுறவுத் துறையிலும், அறநிலையத் துறையிலும் ஏராளமான ஊழல்களை நடந்திருக்கின்றன, நிர்வாகச் சீர்கேடுகள் நடந்திருக்கின்றன ன்எறும், கோப்புகளை எல்லாம் ஆதாரமாக வைத்துக்கொண்டு இருக்கிறேம் என்றும் கூறினுர்கள். நடைமுறையிலே அவைகள் மீது நடவடிக்கைகள் எடுக்கின்ற முறையிலே கூட்டுறவுத் துறையிலே நல்ல ஒரு மாற்றம், சீர்திருத்தம் ஏற்படும் என்று நான் நம்புகிறேன்.

என்னுடைய மாவட்டதிலே, தென் ஆற்காடு மாவட்டதிலே சுமார் 120 கிராம வங்கிகள் கலைக்கப்பட்டிருக்கின்றன. ஏனென்ருல், மத்திய வங்கி 'ஏ' கிளாஸ் வங்கி ஆவதற்காக, அந்தத் தகுதிக்கான முறையிலே இந்த 100 கிராம வங்கிகளுக்கு மேல் கலைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இதனுல் கடன் பெறக் கூடியவர்கள் கடனைப் பெற முடியாமலும், கடனைப் பெற்றவர்கள் திருப்பிக் கட்ட முடியாத முறையிலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே, கூடியவிரைவிலே இந்தக் கூட்டுறவு கிராம வங்கிகளைத் திறந்து, அவர்கள் கடன் வாங்குவதற்கு வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, ரிஷிவந்தியம் தொகுதியில், திருக்கோயிலூர் பகுதியில் கூட்டுறவு நகர வங்கி இருக்கிறது. இந்த நகர வங்கியில் டிபாசிட்டர்கள் போட்ட பணத்தால், அந்த வங்கி நல்லமுறையில் நடந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு 40 லட்சம் ரூபாய் வரை கடன் கொடுத்திருக்கிறுர்கள். மீதிக் தொகையை என்ன செய்வது என்று தெரியாமல் மத்திய கூட்டுறவு வங்கியில் டிபாசிட் செய்திருக்கிறுர்கள். எனவே, அண்மையிலுள்ள கள்ளக்குறிச்சி

உளுந்தூர்பேட்டை, ரிஷிவந்தியம், பன்ருட்டி போன்ற இடங்களில் திருக்கோயிலூர் வங்கியின் கிளைகளாக ஆரம்பித்து அங்கே உள்ள அந்த மக்களுக்கு நகைகளின் பேரில் கடன், மற்றும் இதர கடன், சிறு தொழில்களுக்கெல்லாம் கடன் போன்றவைகளைத் தர இந்த அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால், கூட்டுறவுத் துறையிலே இதற்கெல்லாம் இடமில்லை, அந்த அளவுக்கு விஸ்தரிக்கச் சட்டம் இடம் தரவில்லை என்று சொல்லலாம். அப்படிச் சட்டத்திலே இடம் இல்லாவிட்டாலும், தனிப்பட்ட முறையில் ஆராய்ந்து இந்த இடங்களில் எல்லாம் சர்ப்ளசாக இருக்கக்கூடிய பணத்தின் மூலம் பல வங்கிகளைத் தாலுகா மட்டத்திலே ஆரம்பித்து, இந்த வங்கியை ஒரு நல்ல உதாரணமாக ஆக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரிசர்வ் வங்கியில் அனுமதி கொடுத்தும், கூட்டுறவுத் துறையினர் அமல் படுத்தாத ஒரு நிலை இருந்து வருகிறது. எனவே, சம்பந்தபட்டவர்கள் இதிலே கவனம் செலுத்தி, அதற்கான தக்க நடவடிக்கைகள் எடுத்தால், பல நகரங்கள் பயன் அடையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகாராஷ்டிரத்தில் இதே போல் செய்திருக்கிறார்கள். நாகபுரியில் வைத்திருக்கிறார்கள். அதே போன்று தமிழகத்திலும் அந்த முறையைக் கையாள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருக்கோவிலூர் நகர கூட்டுறவு வங்கி எல்லாப் பகுதியினருக்கும் கடன் வழங்குகிற வகையில் சிறு தொழில்களுக்கும் கடன் வழங்குகிறது. சர்ப்ளஸ் ஆக இருக்கும் பணத்தை இதர தாலுக்காக்களுக்கும் பயன் அடையக் கூடிய வகையில் வழங்க வேண்டும்.

மூங்கில்துறைப் பட்டில் ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. மூங்கில் துறைப்பட்டுக்கும் உளுந்தூர்பேட்டைக்கும் பழங்கூர் வழியாக ஒரு சாலை அமைத்துக் கொடுத்தால் கரும்பு விவசாயிகள் தங்களின் மகசூலை எடுத்துச் செல்ல வசதியாக இருக்கும். திருக்கோவிலூர் பகுதியில் கெடிலம் நதி குறுக்கிடுகின்றது. இரண்டு நதிகளுக்கும் மத்தியில் ஒரு பாலம் அமைத்துக் கொடுத்தால் 30 மைல் தூரம் நீண்ட சாலையில் செல்லுவதைத் தவிர்த்து 15 மைலில் விவசாயிகள் தங்களின் கரும்பு மகசூலை எடுத்துச் செல்ல வசதியாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலவள வங்கி மூலமாகப் பம்ப்செட் கொடுக்கும்போது மிடில் ஏஜன்சிகள் நீக்கப்பட வேண்டும். டெபாசிட் இன்ஷூரன்ஸ் திட்டத்தை கூட்டுறவு வங்கிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும். கூட்டுறவு மத்திய வங்கிகளில் டெபாசிட் செய்வதற்கு உத்திரவாதம் அளித்ததுபோல் நகர வங்கிகளில் டெபாசிட் செய்வதற்கும் அரசு உத்திரவாதம் அளிக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் அதிகாரிகளின் தலையீடு இல்லாமல் ஜனநாயக முறைப்படி செயல்பட வேண்டும். திருக்கோவிலூரில் ஒரு வேர் ஹவுஸ்





(Ware house) கார்ப்பரேஷனும், மணிலா எண்ணை சுத்திகரிப்பு ஆலையும் நிறுவப் படவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. வடிவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு மானியங்களைச் சபையின் முன் வைத்திருக்கிறார்கள். ஒன்று மீனளம். மீனளத்திலே 1,92,64,000 ரூபாய்க்கும் மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அடுத்து கூட்டுறவுத்துறை சம்பந்தப்பட்ட மானியத்திற்கு ரூ. 5, 57, 80,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு மானியக் கோரிக்கைகள் பற்றியும் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த 1976—77-ம் ஆண்டுகளில் குறுகிய கால, நடுத்தரக் கடன்களாக 119·33 கோடி ரூபாய் கொடுத்துள்ளதாக அறிக்கையில் பார்க்கிறோம். இந்த ஆண்டு 1977--78-ல் வேளாண்மைக் கடன்களுக்காக குறுகிய காலக் கடன்கள், நடுத்தரக் காலக் கடன்கள் என்று 135 கோடி ரூபாய் கொடுக்கப் போவதாக அறிக்கையில் இருக்கிறது. அதிலே 50 சதவிகிதத்தை சிறிய விவசாயிகளுக்கும் குத்தகை நிலத்தில் உழக்கூடிய விவசாயிகளுக்கும் அளிக்கப் போகிறார்கள். அதிலும் 20 சென்ட், 25 சென்ட், 50 சென்ட் என்று வைத்துக் கொண்டிருக்கக்கூடிய விவசாயிகள் கூட இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் நல்ல கடன் உதவி செய்யும் திட்டம் பயனுள்ள திட்டமாகும். இந்தத் திட்டங்களை வரவேற்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரை எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி சுப்புலட்சுமி அவர்கள் கூடச் சொன்னார்கள். கோவை மாவட்டத்தில் மாபெரும் ஊழல் நடந்திருக்கிறது என்றும் நம்முடைய அரசாங்கம் நிச்சயமாகக் கண்டுபிடித்து யார் யார் கூட்டுறவுத் துறையில், கூட்டுறவு வங்கியில் கொள்ளையடித்தார்கள் என்று அவர்களையெல்லாம் அடையாளம் கண்டு பிடித்துத் தண்டிக்க வேண்டும். சைனிஸ் ரெஸ்டாரெண்டில் இருக்கிறார்களா அல்லது புதிய சைனீஸ் ரெஸ்டாரெண்டில் இருக்கிறார்களா—மக்கள் யார் பக்கம் என்று தெளிவாகத்தெரியும். மாண்புமிகு உறுப்பினர் முத்தையா அவர்கள் கூடத் தெளிவாகச் சொன்னார்கள். கொள்ளையடித்தவர்கள் பெயரைத்தான் அவர் குறிப்பிடவில்லையே தவிர, எங்கெங்கே எந்தெந்த வகையில் கொள்ளையடித்தார்கள் என்பதையெல்லாம் குறிப்பிட்டார். ஒரு இதழுக்கு 50,000 ரூபாய் அட்வர்டைஸ்மெண்ட் ; அந்த இதழைப் பேபரில் அடித்தார்களா அல்லது போட்டோ போட்டார்களா, அல்லது ஒவ்வொரு இதழும் 100 ரூபாய் நோட்டா என்று தெரியவில்லை.

[திரு. கே. வடிவேலு] [ 977 ஆகஸ்ட் 12

அந்த அளவிற்கு ஒவ்வொரு இதழுக்கும் விளம்பரத்திற்காக 50 ஆயிரம் ரூபாய் கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் கணக்கெடுத்துப் பார்த்து, ஊழல் செய்தவர்களை, குற்றவாளிகளை, கொள்ளைக்காரர்களை, சதிக்காரர்களை யார் என்று தமிழக அரசு, புரட்சித் தலைவர் தலைமையிலே அமைந்த அமைச்சரவை மக்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-40]

எங்களுடைய கரூர் தொகுதியிலே 1964 ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறையின் மூலமாக ''ரிவர் வாட்டர் பம்பிங் இரிக்கேஷன் சொஸைடி'' என்று விவசாயிகளை உறுப்பினர்களாகச் சேர்த்து 11 ஸ்கீம்கள் ஆரம்பித்திருந்தார்கள். கரூர் நகரத்திலே உள்ள கூட்டுறவு வங்கியில் இருந்து அந்த ஸ்கீம்களுக்காக என்று 1 கோடியே 22 லட்சத்துக்கும் மேற்பட்ட தொகை கடன் கொடுத்திருக்கிறார்கள். அந்த 11 ஸ்கீம்களில் 3 ஸ்கீம்களில் தான் வேலை முடிந்திருக்கின்றன. 2 ஸ்கீம்கள் வேலை நடந்து கொண்டிருக்கிறது. மீதியுள்ள ஸ்கீம்களில் வேலை நடக்காமல் இருக்கிறது. அங்கேயும் ஊழல் இருப்பதாகச் சொல்கிறார்கள், அவைகளைக் களைய வேண்டும் என்றும் அந்த 5 ஸ்கீம்களிலேயும் பாசனத்திற்குத் தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மீனளத் துறையைப் பொறுத்தவரையில் இன்னும் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. எங்களுடைய தானைத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் நான் உழைத்துச்சம்பாதித்த பணத்தில் தன்னுடைய சொந்தப் பணத்தில் கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதித்த பணத்தில் இருந்து 1967ஆம் ஆண்டிலே என்று நினைக்கிறேன், அப்போது கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நொச்சிக் குப்பத்திலே வாழ்ந்த மீனவர்களுக்கு இரண்டு வலைகள் சொந்தப் பணத்திலிருந்து, அரசாங்கப் பணத்தை எடுத்துக் கொடுக்கவில்லை, வாங்கிக் கொடுத்தார்கள், இந்தச் செய்தி அப்போது பத்திரிகைகளிலே எல்லாம் வந்தது. அந்த வலைகளை வைத்து அந்த மீனவர்கள் இன்றைக்கும் மீன்பிடித்து நல்ல முறையிலே வாழ்ந்து வருகிறார்கள். இது ஆயிரக்கணக்கான மீனவர் குடும்பங்களுக்கும் நன்றாகத் தெரியும். இதிலிருந்து பார்த்தால், யார் உண்மையான மீனவ நண்பன் என்றால் எங்களுடைய புரட்சித் தலைவர் தான் உண்மையான மீனவ நண்பனாக இருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டுக்குச் சென்றால் மீன் குழம்பு ருசியாக இருக்கும் என்று சாப்பிட்டவர்கள் எல்லாம் இன்றைக்கு மீனவ நண்பன் யார் என்று கேட்கிறார்கள். வருகின்ற 14 ஆம் தேதி தமிழகத்திலே மீனவ நண்பன் தமிழகத் திரை உலகிலே பவனி வர இருக்கிறான், யார் மீனவ



1977 ஆகஸ்ட் 12] (திரு. கே. வடிவேலு)

நண்பன், யார் மீனவர்களின் துரோகி என்பது அப்போது தெரியும், புரட்சித் தலைவர் அவர்கள் வெளிப்படையாக இதையெல்லாம் காட்டியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. க. சுப்பு : சட்டசபை உறுப்பினர்களுக்கு ஃப்ரீயாக அதை ஒரு தடவை காட்டச் சொல்லுங்கள்.

திரு. கே. வடிவேலு : மீனவ நண்பர் யார் என்பது சந்தேகமாக இருப்பவர்கள் 14-ஆம் தேதி கண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. சி. ராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, கூட்டுறவு சம்பந்தமான இந்தக் கோரிக்கையின் மேல் இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியைக் கூறிக் கொண்டு இவ்வளவு குறுகிய காலத்திலே இந்தக் கோரிக்கையைத் தயார் செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொண்டு என்னுடைய உரையைத் துவக்குகிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் கிராமங்களிலே உள்ள விவசாயிகளுக்கு ஏழை எளிய விவசாயிகளுக்கு தங்களுடைய விவசாயத்தைச் செவ்வனே நடத்துவதற்காக கிராமப் புறங்களிலே அமைக்கப் பட்டது. இந்தச் சங்கங்கள் கிராமப் புறங்களில் ஏழை எளியவர்களுக்கு ஓரளவு நன்மையைச் செய்தது என்றாலும் கடந்த கால அரசிலே இந்தச் சங்கங்களுக்குத் தலைவர்களாக வந்தவர் களின் பினாமி பெயரால் அதாவது அடுத்தவர்கள் பெயர்களிலே கடன்களை வாங்கி அந்தப் பணத்தை சங்கங்களுக்குத் தலைவர்களாக வந்தவர்கள் எடுத்துக் கொண்டு திரும்ப அந்த பினாமிகள் அந்தப் பணத்தை வாங்காமலே கடனை வசூல் செய்யும் போது ரொம்ப அல்லல்படுகிறார்கள்.

எங்கள் பகுதியிலே, விருத்தாசலம் தொகுதியிலே உள்ள எங்கள் சங்கத்திலே இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நிறைய நடந்திருக்கின்றன. இன்னமும் அந்தக் கடன்கள் திரும்பக் கட்டப் படாமல், ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தக் கடன்கள் இன்னும் அடையாமலே விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே கூறிக் கொள்வதோடு அப்படிப்பட்ட பினாமி பெயரில் போட்டுக் கடன் வாங்கியவர்களை, இந்தத் தமிழ்நாடு அளவிலே எங்கிருந்தாலும் அவர்கள் யார் யார் என்பதைக் கண்டறிந்து அவர்கள் பெயரில் தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் தயங்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்,

அடுத்தபடியாக அந்தச் சங்கத்திலே வேலை செய்யும் பொழுது அங்கேயுள்ள செக்ரட்டரியோ அல்லது தலைவரோ விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் உரங்களை வரவழைத்து

[திரு. சி. ராமநாதன்] [1977 ஆகஸ்ட் 12

அந்த உரமானது நல்லமுறையிலே இல்லாமல் அது செட்டாகி கல் மாதிரியாக இருக்கிறது; அப்படிப்பட்ட உபயோகமில்லாத அந்த உரத்தை விவசாயிகள் தலையில் கட்டுகிறார்கள். அவர்கள் செய்த தவறோ அல்லது போர்டிலே உள்ள டைரக்டர்கள் செய்த தவறோ அல்லது நிர்வாகத்திலே இருந்து செயலாற்றுகின்ற அதிகாரிகள் செய்த தவறோ அந்தத் தவறுகளுக்காக விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, கார்மாங்குடி என்ற கிராமத்திலே விவசாயக் கிடங்கு ஒன்றைக் கட்டுவதற்காக 500 மூட்டை சிமெண்டை வரவழைத்து அந்த 500 மூட்டை சிமெண்டும் செட்டாகி அந்தக் கட்டிடம் கட்டப்படாமலே இருக்கிறது. இப்பொழுதுதான் அந்தக் கட்டிடத்தைக் கட்டத் துவங்கியிருக்கிறார்கள். அந்த 500 மூட்டை சிமெண்டின் விலையைப் பார்க்கும்பொழுது, மூட்டை ஒன்று 35 ரூபாய்க்குக் கிடைக்காத நிலையிலும் 500 மூட்டை சிமெண்டையும் செட்டாக வைத்து, கெடுக்க வைத்து விட்டார்கள். இதை யார் செய்தார்கள்? நிர்வாகத்திலே உள்ள அதிகாரிகள் செய்தார்களா அல்லது அந்தத் தலைவருடைய கவனக் குறைவினால் நடந்ததா என்பதைக் கண்டறிய இம்மாதிரியான சங்கங்களிலே நடந்த நிகழ்ச்சிகளுக்குத் தக்க நடவடிக்கை எடுக்கத் தயங்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விவசாயிகள் பங்குத் தொகையாகக் கொடுக்கப்படும் அந்தத் தொகைக்கு டிவிடெண்ட் கொடுப்பது பழக்கம். சங்கத்திலே வரும் இலாபத்திலிருந்து தருவது பழக்கம். அந்த இலாபத்திலிருந்து இந்த நஷ்டத்தை ஈடு செய்யலாம் என்று கருதியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளினால் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படும்படியான அளவிலே இல்லாமல் யார் யார் அந்த சிமெண்ட் கெட்டுப் போவதற்குப் பொறுப்பானவர்களாக இருக்கிறார்களோ அவர்கள்தான் அதற்குப் பாத்தியப்பட வேண்டுமென்ற முறையில் அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பங்குத் தொகை கொடுப்பவர்களுக்கு டிவிடெண்டை காலா காலத்தில் கொடுக்க வேண்டிய முயற்சியும் இந்த அரசாங்கத்திடம் இருக்க வேண்டும். சில கிராமங்களிலே சொசைட்டியிலே ஓவர் டியூ அதாவது பணம் கட்டாமல் சில சொசைட்டிகள் கலைக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட கிராமங்களிலே, அந்த விவசாயிகள், கடன் படாத விவசாயிகள், அவர்கள் நிர்வாகம் செய்ய வழியில்லாமல் கஷ்டப்படுகின்றார்கள்; அப்படிப்பட்டவர்களுக்கு நிர்வாகம் நடக்கக்கூடிய அளவிலே இந்த சொசைட்டிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1977 ஆகஸ்ட் 12] [திரு. சி. ராமநாதன்]

எங்கள் பகுதியிலே மீனவர்கள் இருக்கிறார்கள். எங்கள் பகுதியிலே இருமருங்கும் ஆறு இருப்பதால் அந்த ஆற்றிலே வறட்சியின் காரணமாக நீரே இல்லாமல் இப்பொழுது அங்குள்ள மீனவர்கள் மீன் பிடிக்க வழியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு ஏதாவதொரு வகையிலே நன்மை செய்யக் கூடிய அளவிலே இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

(பிற்பகல் 12-50)

<u>திரு. மு. ஆறுமுகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களால் சபைமுன் வைக்கப்பட்டிருக்கிற மீனளத் துறை, கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கைகள் மீது நான் ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கு எந்த விதமான வாய்க்கால் பாசனமும் இல்லாமல், அங்குள்ள தரிசு நிலங்கள் பூராவும் வானத்தைப் பார்த்த பூமியாக இருக்கின்றன. மற்றும் நிலத்தடி நீரைக் கொண்டு பயிர் செய்யக்கூடிய அளவுக்கு விவசாயிகள் கஷ்டப்பட்டு வருகிறார்கள்.

கடந்த சில வருஷங்களாகச் சேலத்தில் புதிய கிணறுகள் தோண்டவோ, பழைய கிணறுகளை ஆழப்படுத்தவோ, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் கொடுக்கப்படவில்லை. அதனால், விவசாயிகள் தனியாரிடம் கடன் வாங்கி, பட்ட அல்லல்கள் கொஞ்சநஞ்சம் அன்று. அப்பொழுதிருந்த ஆட்சி மூலம், கடன் நிவாரணச் சட்டத்தின் மூலம், ஓரளவு பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது, கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில், அதாவது 1977-78ஆம் ஆண்டு சிறு உழவர்களுக்கு உதவும் பொருட்டு புதிய கிணறுகளைத் தோண்டுவதற்கு, ஒரு விவசாயிக்கு ரூ.500 என்ற வீதத்தில் 1000 விவசாயிகள் பயனடைய, ரூ.5 இலட்சம் ஒதுக்கி இருக்கிறார்கள். மாநில அளவில் எடுத்துக் கொண்டால், அந்தத் தொகை மிகவும் குறைவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். காரணம் ஒரு மாவட்டத்தில், 80, 85 பேர்கள்தான் இதனால் பயன் அடைய முடியும். ஆகவே குறைந்தது 5,000 பேர்கள் பயனடையத்தக்க விகத்தில், தொகையை இன்னும் அதிகமாக ஒதுக்கி, ரூ. 25 இலட்சம் ஒதுக்கி, ஏழை சிறு விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்று நான் அவர்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கடன் நிவாரணச் சட்டங்கள் நாட்டில் அமுல்படுத்தப்பட்ட நேரத்தில், சிறுசிறு ஏழை மக்களும் விவசாயிகளும் அவ்வப்போது தங்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களைவதற்காக, தங்களிடம் உள்ள பொருள்களை அடகு வைக்க வேண்டுமென்றால், அது சட்

[திரு. மு. ஆறுமுகம்] [1977 ஆகஸ்ட் 12

பூர்வமாக தடை செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில், அவர்களுக்கு மாற்று வழி மூலம் கடன் கிடைக்க அரசு மாற்று வழி எதுவும் செய்யவில்லை. அதனால் ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள்—நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக, நகைகள் மேல் கடன் வாங்க அதிகத் தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை அங்குள்ள மத்திய கூட்டுறவு வங்கியில் அவசரநிலை பிரகடனப்படுத்தப் பட்டபோது சில ஊழியர்கள் வேண்டுமென்றே பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள். அவசரகால நிலையின் பொழுது, பழி வாங்கப்பட்ட அந்த ஊழியர்களை உடனடியாக வேலையில் அமர்த்த வேண்டும். அப்படி பழி வாங்கப்பட்டவர்களுக்கு, பழி வாங்கப்பட்ட காலத்திற்கு முழு ஊதியம் அளிக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசு ஆணையிட்டும், அந்த உத்தரவை மதிக்காத முறையில் உதாசீனம் செய்து வருகிறார்கள் அங்குள்ள மத்திய வங்கி நிர்வாகத்தினர். அரசு இதில் தலையிட்டு, பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்—கடந்த 2 ஆண்டுகளாக மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு வருகிறார்கள் என்ற முறையில், அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டும். ஆகவே, அமைச்சரவர்கள் நெருக்கடி நேரத்தின்போது பாதிக்கப்பட்ட அந்தக் கடைநிலை ஊழியர்கள் போன்ற இதர பணியாளர்கள் வாழ, அந்த ஏழைகளுடைய இன்னலைத் தீர்க்கத் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த—கூட்டுறவு வங்கியைச் சேர்ந்த—வாழப்பாடி வங்கியில் நகைகளின் பேரில் கடன் கொடுக்கப்பட்ட பொழுது ஒரு நகை காணாமல் போய் விட்டது. ஆனால், அங்குள்ள மேலாளரை விட்டுவிட்டு, காசாளரையும், கடைநிலை ஊழியரையும் பழி வாங்குகிற நடவடிக்கை எடுக்கப்பட்டது. முழுக்க, முழுக்க பொறுப்பு வாய்ந்த மேலாளரை விட்டுவிட்டு. காசாளரையும் கடைநிலை ஊழியரையும், பழி வாங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். அதன் தொடர்பாக, அவர்கள் கஷ்ட நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சேலம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஏழை விவசாயிகளுக்கு அதிக அளவு கடன் கொடுக்க, அங்குள்ள நிலவள வங்கிகளுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இந்த ஆண்டு அதிகப் பணம் ஒதுக்கப்படாத காரணத்தால், குறுகிய காலக் கடன்களும் நீண்டகாலக் கடன்களும் கோரி வந்துள்ள மனுக்கள் பைசல் செய்யப்படாமல் காலம் கடத்திக் கொண்டு வரப்படுவதால், அவர்கள் குறித்த காலத்தில் கடன் பெறாமல், கடன் கொடுத்தும், பிரயோஜனப்படாமல் போய் விடுகிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்ச் சொல்ல விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது)



1977 ஆகஸ்ட் 12]

*திரு. ப. உ. சண்முகம்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை, மின் வளத் துறை ஆகிய இரு மானியக் கோரிக்கைகளில் அமைச்சர் பிரேரேபித்து இருக்கிற தீர்மானத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது கருத்துக்களைத் தெரிவிக்க விழைகிறேன்.

பொதுவாக மழை குறைந்து போய் இருக்கிற காரணத்தால் விவசாயப் பெருமக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பெரிய இன்னல்கள் துடைக்கப்பட வேண்டு மென்பதை அவையில் இருக்கிற அத்தனை கட்சி உறுப்பினர்களும் ஒருமனதாக ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். விவசாயிகளுக்குப் பயிர் காலக் கடன் கொடுக்கிறோம். பயிர் காலக் கடன் கொடுத்து, அந்தக் காலத்தில் அவர்களால் கொடுக்க முடியா விட்டால்—வறட்சி காரணமாக கட்ட முடியா விட்டால் அவர்கள் அனாவாரி சர்டிபிகேட் வாங்கிக் கொடுக்க வேண்டும். அனாவாரி சர்ட்டிபிகேட் ஆர். டி. ஓ.விடமிருந்து வாங்கிக் கொடுத்தால் அந்த குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடனாக மாற்றப்படுகிறது. மத்திய காலக் கடனாக அப்படி ஓராண்டு மாற்றப்பட்டு அடுத்த ஆண்டு மீண்டும் மழை பெய்யும், விளையும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மறுபடியும் குறுகிய காலக் கடன் கூட்டுறவுச் சங்கத்தில் கொடுக்கிறார்கள். 4 ஆண்டுகள் அப்படி மழை பொய்த்துப் போன காரணத்தால் குறுகிய காலக் கடனை நீண்ட காலக் கடனாக மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப்போது மழை பெய்து சில பகுதிகளில் விளைந்திருக்கிற நேரத்தில் 3 ஆண்டுக்கான தவணையும் கட்ட வேண்டிய துர்பாக்கியமான நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று ஏற்கெனவே அவையில் பேசிய உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதை சுட்டிக் காட்டும் போது ரிசர்வ் வங்கியின் அனுமதியைப் பெற்று குறுகிய காலக் கடனை மத்திய காலக் கடனாகத்தான் மாற்ற முடியுமே தவிர, அந்தக்குறுகிய காலக்கடனைப் பொறுத்த வரையில் நீண்ட காலக் கடனாக மாற்றுகிற அதிகாரம் இல்லை. நம்மைப் பொறுத்த வரையில், நான் அரசாங்கத்திற்கு யோசனையாக தெரிவிக்க விரும்புவது என்ன வென்றால், அந்தக் கடனைப் பொறுத்த வரையில் ரிசர்வ் வங்கியிடம் பேசி, ஒரு வேளை சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் இந்தக் கடனைப் பொறுத்த வரையில் நீண்ட காலக் கடனாக மாற்ற வேண்டும்—மாற்றுவதற்கு சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால் நல்லது என்று கருதுகிறேன். அரசு அதைப் பரிசீலிக்க வேண்டும். நீண்ட காலக் கடன் என்று நிலவள வங்கியில் கடன் கொடுக்கிறோம். அந்த நீண்ட காலக் கடனை, அதை வாங்கி அவர்கள் சரிவரக் கட்டுகிறார்களா? இல்லையா? என்ன செய்கிறார்கள்? என்பதைப் பற்றி அந்த ஆராய்ச்சிக்குள் போவதை விட, இந்த நிலவள வங்கிகளில் உள்ள செயலாளர்கள், 20 ஆண்டுகள் 25 ஆண்டுகளாக ஒரே இடத்தில் செயலாளராக இருந்து விடுகிறார்கள். அவர்களை மாநில அளவில் கொண்டு வந்து "புரொவின்சலைசே

ஷன்'' செய்தால் ஒரே இடத்தில் இல்லாமல் அவர்களை 3 ஆண்டுக்கு, 4 ஆண்டுக்கு ஒரு முறை வேறு இடத்தில் மாற்றினால் தான் தவறுகள் செய்வதற்கு ஏது இல்லாமல் போகும். தவறுகளைக் குறைக்கவும் முடியும் என்று நான் நம்புகிறேன். இந்த நேரத்தில் ஒரு கருத்தை வலியுறுத்தித் தெரிவிக்க விரும்புவது கூட்டுறவு வங்கிகளில் பல தவறுகள் நடந்திருக்கின்றன. பினாமி லோன்கள் எல்லாம் போட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் வலியுறுத்திச் சொல்லப்பட்டது. பினாமி லோன்கள் போட்டு எடுக்கப்பட்டாலும் அவர்களுக்காக வாதாடவில்லை, குற்றவாளிகளுக்காகவும் வாதாட வில்லை. அதைப் பற்றி நான் பின்னால் சொல்கிறேன். பினாமி லோன்கள் போட யார் காரணம்? யோசித்துப் பார்த்தால் அங்கு இருக்கிற தலைவருக்கு உடந்தையாக இருக்கிற சூப்பர்வைசர்கள்தான். அவர்கள் அப்படி இருக்க வேண்டிய கட்டாயம், நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. அந்த நிர்ப்பந்தம் ஏற்படுவதற்குக் காரணம், மத்திய கூட்டுறவு வங்கியிலே இருக்கிற தலைவரால் அவர் நியமிக்கப்படுகிறார். மத்திய கூட்டுறவு வங்கித் தலைவரால் அவர் தண்டிக்கப்படுகிறார். மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் நினைத்தால் அவரை எங்கு வேண்டுமானாலும் மாற்றலாம். வேலையை விட்டு நீக்கலாம். அந்த அதிகாரங்கள் இப்போது இருக்கிற காரணத்தால் மத்திய கூட்டுறவு வங்கிக்கு யார் தலைவராக தாலும், இந்தக் கூட்டுறவு வங்கித் தலைவர் சொல்கிறபடி, கூட்டுறவு சங்க சூப்பர்வைசர்கள் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு நம்மையும் அறியாமல் ஆளாக்கி இருக்கிறோம் என்பதை மறந்து விடக் கூடாது. அமைச்சர் அவர்கள் திருப்பிக் கேட்கலாம். நீங்கள் ஆட்சியிலே இருந்த போது அதைப் பற்றி யோசிக்கவில்லையா என்று. பரிசீலனை செய்தோம். யோசித்தோம். ஆனால், பல சிக்கல்கள் காரணமாக அதைப் புகுத்த முடியவில்லை. இப்போது தலைவர்கள் இல்லை. மத்திய வங்கிகள் தனி அதிகாரிகள் அதிகாரத்தில் இருக்கிறது. தைரியமாக இப்போது செய்யலாம். எனவே, அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்வது, தாராளமாக இப்போது செய்யலாம். இந்தக் கூட்டுறவு சூப்பர்வைசர்களை ''புரொவின்ஷியலைஸ்'' செய்து அவர்களை நியமிக்கின்ற அதிகாரத்தை சர்வீஸ் கமிஷனுக்குக் கொடுங்கள். அவரை தண்டிக்கின்ற அதிகாரத்தை சர்வீஸ் கமிஷனுக்குக் கொடுங்கள். ''ரிஜிஸ்டிரார் ஆப் கோ-ஆப்பரேடிவ் சொசைட்டிக்கு'' கொடுங்கள். வேண்டுமென்றால் மத்திய கூட்டுறவு............

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளில் இருக்கிற சூப்பர்வைசர்களை எல்லாம் புரொவின்ஷியலைஸ் பண்ண வேண்டுமென்று அன்றைய அமைச்சர் அவர்கள் இப்போது சொன்னார்கள். அதற்கு மாற்று வழியாக சர்வீஸ் கமிஷன் மூலமாக அவர்களைத் தேர்ந்தெடுக்கின்ற யோசனையை இப்போது சொல்கிறார்கள். இந்த யோசனையை அப்போது நிறைவேற்ற என்ன சங்கடம் இருந்தது என்று இப்போது உள்ள நிர்வாகம் தெரிந்துகொள்வதற்காகக் கேட்கிறேன்.



(பிற்பகல் 1-00)

திரு. ப. உ. சண்முகம்: நான் சொன்னேன்: இப்போது உங்களுக்கு ஸ்பெஷல் ஆபிசர்கள் இருக்கிறார்கள். அவர்களை போடப்பட்டிருப்பதால் எதிர்ப்பில்லை. உங்களுக்கே தெரியும். எனவே இப்போது நீங்கள் தைரியமாகச் செய்யலாம் என்று தெரிவித்தேன். அமைச்சர் அவர்களுக்கும் புரிந்திருக்கும். இருந்தாலும் என்னுடைய வாயால் அது வர வேண்டுமென்று விரும்புகிறாரோ என்னவோ? அவருக்கே தெரியும் என்ற காரணத்தினால் மேற்கொண்டு எதுவும் சொல்ல விரும்பவில்லை. கூட்டுறவுத் துறையின் நன்மையையும் நாட்டு நன்மையும் சேர்த்துச் சொல்கிறேன் இப்படிச் செய்தால் தான் நல்லது. சூப்பர்வைசர்களைக் கொண்டு போய் மத்திய கூட்டுறவுத் தலைவரிடம் ஒப்படைத்திருப்பதால்தான் இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட தவறுகள் தவிர்க்கப்படுமானால் நிச்சயம் சொல்கிறேன். கூட்டுறவுத் துறையில் பல்வேறு தவறுகள் நிவர்த்திக்கப்பட முடியும். இன்றைக்குள்ள நிலையில் கூட்டுறவுத் துறை மத்தியத் தலைவரின் தயவையும் தாட்சண்யத்தையும் பெற்றால்தான்; அவருடைய அனுதாபத்தைப் பெற்றால்தான் ஒரு சூப்பர்வைசர் வேலை பார்க்கமுடியும் என்ற அவல நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையிலிருந்து அவரைக் காப்பாற்றுங்கள் என்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்

கூட்டுறவு வங்கிகளில் வேலை பார்க்கும் ஊழியர்களுக்கு இன்றைக்குப் பாதுகாப்பு கிடையாது. அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். இப்போது பாதுகாப்பு இல்லையா என்று கேட்டால், இல்லை. அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன். ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக, அர்பன் பாங்க் தலைவராக ஒருவர் இருப்பார். அங்கே ஊழியர்கள் வேலை செய்ய நியமிக்கப்படுகிறார்கள். இப்படி நியமிக்கப்படுகிறவர்கள் அவர்களுக்கு வேண்டியவர்களாகப் பார்த்து நியமிக்கப்படுகிறார்கள். அடுத்து இரண்டு, மூன்று ஆண்டுகள் பணி செய்த பிறகு அடுத்து வருகிற ஒருவர் இவரைப் பதவியிலிருந்து நீக்குகிறார்கள். கேட்டால் ஆள் குறைப்பு என்று சொல்கிறார்கள். ஆள் குறைப்பு என்று வருகிற போது அந்த ஊழியர்கள் செயலாளரிடத்திலே போய் ஏன் ஆள் குறைப்பு என்று கேட்டால் என்ன செய்யலாம், நீ வேறு ஏதாவது இடத்தில் வேலை பார்த்துக் கொள் என்று சொல்லி, ''காண்டக்ட்'' சர்டிபிகேட்டும் எழுதிக் கொடுக்கிறார்கள். ஆனால் ஓரிரு ஆண்டு காலத்திற்குப் பிறகு, மீண்டும் ஆள் தேவை என்று எடுக்கப்படும்போது புதிதாக அப்போதுள்ள தலைவருக்கு வேண்டியவருக்குப் போட்டுக் கொடுக்கப்படுகிறதே தவிர ஏற்கனவே பணி செய்தவரை மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்வதில்லை. இதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட தவறுகள் நடக்காதபடி பார்த்துக் கொள்ள அரசு எடுத்துக் கொள்ளும் எல்லா நடவடிக்கைகளுக்கும் எங்களுடைய ஆதரவினைத் தரத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம் ஊழியர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதற்குத் தானே தவிர வேறு காரணத்திற்காக அல்ல என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பயிர்க் கடன் வழங்குவது என்றால் இன்னொருவர் கூட்டுக் கையெழுத்து இட வேண்டும், "ஜாயிண்ட் கையெழுத்து" போட வேண்டும் என்ற விதி இருக்கிறது. இப்படி ஒருவர் கையெழுத்துப் போட்டால்தான் ஒரு விவசாயிக்குக் கடன் வழங்க முடியும் என்றமுறையில் ஒரு விதி இருக்கிறது. விவசாயி கடன் கேட்கும் போது அவர் வைத்திருக்கிற பயிரை அறுவடை செய்து அவர் வாங்கிய கடனைத் திருப்பித் தர வேண்டும் என்ற முறையில் தான் இந்தப் பயிர்க் கடன் வழங்கப்படுகிறது. இப்படி "ஜாயிண்ட்" கையெழுத்துப் போட வேண்டுமென்ற விதி இருப்பது நியாயமில்லை என்பதை உணர்ந்து இந்த விதியை மாற்றுவதற்கு அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்கும் போது அவர்கள் நிலத்தில் வைத்து இருக்கிற பயிரின் மீதுதான் நாம் கடன் வழங்குகிறோம். ஒரு வேளை விளைச்சல் இல்லாது பொய்த்துப் போனால், அவர்களிடமிருந்து கடனைத் திருப்பி வாங்குவதற்கு ஜப்தி செய்வது போன்ற அதிகாரம் இருக்கும் போது இன்னொருவர் கையெழுத்துப் போட வேண்டுமென்று சொல்வது கூட்டுறவுத் துறையில் சரியில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதையும் அரசு திருத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

"வையபிள் யூனிட்" (viable unit) இப்போது 4,600 யூனிட்டுகள் பரவலாக இருக்கின்றன. ஏற்கெனவே 11,000 கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இன்னும் அதிகமான ஊழியர்களை நியமித்தால் அவர்களுக்குச் சம்பளம் கொடுத்துக் கட்டுப்படியாகாது என்பதால் 4, 5 கிராமங்களை இணைத்து "வையபிள் யூனிட்" டாக வைத்திருக்கிறோம். இந்த யூனிட்டுகள் சில இடங்களில் சரியாக இயங்க முடியாத நிலைமை இன்றைக்கு இருக்கிறது. இருக்கிற செயலாளர்கள் போதாது, இன்னும் அதிகமாகப் போடுங்கள் என்று சொல்லவில்லை. "வையபிள் யூனிட்டை" இரண்டாகப் பிரித்து, ஒரே செயலாளரை வைத்து இரண்டு யூனிட்டுகளைப் பார்க்க வேண்டும் என்று செய்தால் இவைகள் சரியான முறையிலே இயங்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 4, 5 கிராமங்களை "வையபிள் யூனிட்" டாக வைத்து கிராமத்து விவசாயிகள் நான்கைந்து மைல்கள் சென்று சர்க்கரை, அரிசி போன்ற பொருட்களை வாங்கி வர வேண்டிய அவசியமில்லாமல் இரண்டாகப் பிரித்தால் அவர்கள் ½ மைல், 1 மைலுக்கு மேல் போக வேண்டிய அவசியம் இல்லாமல் கிராமத்து மக்களுக்கு எல்லாப் பொருட்களும் சுலபமாகக் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். **இதையும் அரசு பரிசீலிக்க வேண்டும்.**





அடுத்து பல கூட்டுறவு நாணயச் சங்கங்களுக்கு கோடவுன்கள் கிடையாது. இந்தக் கோடவுன்கள் கட்டும் விஷயத்தில் தனி அக்கறை எடுத்துக் கொண்டு மத்திய வங்கியும் கடன் கொடுக்கலாம். மாநில வங்கியும் கடன் கொடுக்கலாம். அப்படி கட்டப்பட்ட கோடவுன்களில் வைக்கப்படும் பொருள்களுக்கு வாடகையைப் பெற்று அதையே திருப்பிக் கட்டுகிற தவணையாக, செலுத்துவதன் மூலம் அந்தக் கடனை அடைத்து விட முடியும். ஆங்காங்கு கிராமங்களில் நாணயச் சங்கங்களுக்கு கோடவுன்கள் கட்டுவது பற்றி அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே பேசிய உறுப்பினர்கள் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தி திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போது என்ன நடந்தது, எப்படி நடந்தது என்று விமர்சித்தார்கள். அவர்களுக்கு இருக்கிற ஆதாரம் ஜனாதிபதி ஆட்சியின் போது ஒரு கமிஷன் ஒன்றைப் போட்டு ஓய்வு பெற்ற ஒரு அதிகாரியை அந்தக் கமிஷனின் தலைவராகப் போட்டு ஆங்காங்கு போய் ஊழல் நடைபெற்று இருக்கின்றனவா, தவறுகள் நடைபெற்று இருக்கின்றனவா என்று கண்டுபிடியுங்கள் என்று நியமித்தார்கள். நான் துவக்கத்திலேயே தெரிவித்துக் கொள்கிறேன். நான் குற்றவாளிகளுக்கு விடுதலை வாங்கித் தருவதற்காக வாதாடவில்லை. நிரபராதிகள் தண்டிக்கப்படக் கூடாது என்பதில் இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது என்ற நம்பிக்கையுடன் தான் இந்த விவரத்தை வைக்கிறேன். குற்றவாளிகளாக ஆக்குவது தவறு. குற்றவாளிகளாக்கித் தண்டிப்பதும் தவறு. தவறு செய்தவர்களை விட்டு வைப்பதும் தவறு. தவறு செய்தவர்களை தண்டிக்காமல் விட்டு வைப்பதும் தவறு. இரண்டையும் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் ஒரு குற்றம் எப்படி இழைக்கப்படுகிறது? நான் ஒரு மத்திய கூட்டுறவு மத்திய வங்கியைப் பற்றி முழுமையாக விசாரித்தேன். நான் கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவராக இருந்தது இல்லை. ஒரு வேளை தலைவராக இருந்திருந்தால் அந்தக் கமிஷனில் எனக்கு இடம் கிடைக்கும் வாய்ப்பு கிடைத்திருக்கலாம். அதை விசாரித்தேன். ஒரு மத்திய கூட்டுறவு வங்கி அதனுடைய ஆண்டு பட்ஜெட்டை தயாரிக்கிறது. வரவு–செலவு திட்டங்களை தயாரிக்கும் பொழுது பல பணிகளுக்கு நிதி ஒதுக்குகிறார்கள். நிதி எதற்கெதற்கு ஒதுக்குகிறார்கள் என்பதை விசாரித்தேன். விளம்பரங்களுக்கு நிதி ஒதுக்குகிறார்கள். அந்த பட்ஜெட் ரிஜிஸ்டிரார் ஆப் கோ-ஆப்பரேட்டிவ் சொசயட்டிஸ் அவர்களுக்கு வருகிறது. அவர் அதைப் பார்க்கிறார். சரியென்று ஏற்றுக் கொள்ளுகிறார். மீண்டும் அது போர்டுக்குத் திரும்பி வருகிறது. அதற்குப் பிறகு அது அங்கீகரிக்கப்படுகிறது. நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அப்படி "ஆர். சி. எஸ்." ஆல் அங்கீகரிக்கப்பட்டு விளம்பரத்திற்கு எவ்வளவு பணம் கொடுக்கலாம் என்று அங்கீகரிக்கப்பட்ட, தொகையை, வேண்டுமென்றால் ஒரு குறிப்பிட்ட கட்சிக்குக் கொடுத்தார்கள் என்று குற்றம் சாட்டலாம். ஆனால் பணம் கொடுத்தது எப்படிக் குற்றம் என்று எனக்குப் புரியவில்லை. இன்னொன்று, அந்தக் கூட்டுறவு மத்திய வங்கியின் நிர்வாகப் போர்டில் ஜாயிண்ட் ரிஜிஸ்டிரார் ஆப் கோ-ஆப்பரேட்டிவ் சொசைட்டிவ்

எக்ஸ் அபிஷியோ டைரக்டராகவும் இருக்கிருர். தவறு நடந்தால் அவர் அந்தத் தவறை அங்கேயே சுட்டிக் காட்டியிருக்க வேண்டும். அதைத் திருந்தியிருக்க வேண்டும். அவரும் அந்தத் தவறைச் சுட்டிக் காட்டவில்லை, திருத்தவும் இல்லை. அன்ருடம் தினம் தினம் ஒவ்வொரு கூட்டுறவு வங்கியிலும் டெய்லி ஆடிட் நடக்கிறது. அவர்கள் குற்றங்கள் எதையும் கண்டு பிடிக்கவில்லை. ஆண்டுதோறும் டிபார்ட்மெண்டல் ஆடிட் நடக்கிறது. அங்கும் குற்றங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆடிட்டர் ஜெனரல் ஆபிசிலிருந்து வந்து ஆடிட் செய்கிருர்கள். அப்போதும் குற்றங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை. ரிசர்வ் வங்கியிலிருந்தும் வருகிருர்கள். அப்போதும் குற்றங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆர். சி. எஸ். திடீரென்று இன்ஸ்பெக்ஷன் செய்கிருர்கள். அவரும் குற்றங்கள் கண்டுபிடிக்கவில்லை. இப்போது போட்டிருக்கிற கமிஷன் குற்றம் என்று சொல்லுகிருர்கள். இவ்வளவு, அதிகாரிகள் கண்ணுக்குப் படாதது ஒரு அதிகாரியின் கண்ணுக்குப் பட்டு விட்டதே என்ற அந்தக் கோணத்தில் நான் வாதாட விரும்பவில்லை. நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது சட்டப்படி செய்யப்பட்ட ஒன்றை, இவ்வளவு அதிகாரிகளும் ஏற்றுக் கொண்டு விட்ட ஒன்றை குற்றம் என்று ஒரு அதிகாரி சொல்லியிருக்கிருர். அது குற்றமாக இருந்தால் தண்டிக்கலாம். ஆனல் எது குற்றம் எப்படிக் குற்றமாக இருக்க முடியும் என்று எனக்குப் புரியவில்லை. சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்களில், ஒரு கூட்டுறவுச் சங்கத்தையோ, நாணயச் சங்கத்தையோ எதையும் எடுத்துக் கொண்டாலும் எனக்குத் தெரிந்தவரையில் குற்றச்சாட்டு கண்டு பிடிக்க வேண்டும், சுமத்த வேண்டும் என்ருல் நிச்சயமாகச் சொல்லுகிறேன். எந்தக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும் தப்பவே முடியாது. நிச்சயமாக குற்றச் சாட்டை சுமத்த முடியும். அந்த அளவுக்கு சட்டங்கள் அமைந்திருக்கின்றன என்ற நிலைமையை நாம் ஒத்துக் கொண்டே தீரவேண்டும்.

(பிற்பகல் 1—10)

இன்னும் ஒன்று சொல்வேன். 1971-ம் ஆண்டு சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த சென்ட்ரல் ஸ்டோர்ஸ் சூப்பர் மார்க்கெட் இரண்டும் தவறு நடைபெற்றது என்று சொல்லி கலைக்கப்பட்டன. அப்படி கலைக்கப்பட்ட பிறகு எல்லாயிடங்களிலும் சென்ட்ரல் ஸ்டோர்ஸ், சூப்பர் மார்கெட்ஸ் கலைக்கப்பட்டு ஸ்பெஷல் ஆபீசர்கள் போட்டு, அட்வைஸரிக் கமிட்டி மெம்பர்கள் போட்டு, சேலத்தில் அந்த இரண்டு இடங்களிலும்—சென்ட்ரல் ஸ்டோர்ஸ், சூப்பர் மார்க்கெட்—ஏற்பட்ட தவறுகள் ரூபாய் 39 லட்சம் என்று சர்சார்ஜ் நோட்டீஸ் ஏற்கனவே இருந்த ஒரு தலைவர் மீது கொடுக்கப்பட்டது. நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை, காரணம். இந்த அவையில் அவர் இப்போது உறுப்பினராக இல்லை. ஆனல் அது பற்றி என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்ருல், ஐந்தாண்டுகள் ஆறு ஆண்டுகள் திராவிட முன்னேற்ற கழக ஆட்சி இருந்திருந்தாலும் பகை உணர்ச்சியோடு அதை





அணுகாத காரணத்தால் 39 லட்சம் ரூபாய் என்றிருந்தாலும் மாற்றுக்கட்சியைச் சார்ந்த ஒருவர் தலைவராக இருந்தபோது நடைபெற்ற சம்பவம் என்றிருந்தாலும் இலாகா அணுகட்டும், இலாகாபூர்வமாக நடவடிக்கைகள் எடுக்கட்டும் என்று விட்டு விட்டோமே தவிர அரசாங்கத்தின் கையில் எடுத்துக்கொண்டு, அவர் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர், பழி வாங்க வேண்டும் என்ற உணர்ச்சி எங்களுக்கு அப்போது ஏற்படவில்லை.

ஒன்றை நான் ஞாபகப்படுத்துகிறேன். இன்றைய முதல் அமைச்சர் அவர்களுக்குக் கூட நினைவிற்கு வரும் என்று நினைக்கிறேன். பேரறிஞர் அண்ணு அவர்கள் இந்த அவையில் முதல் அமைச்சராக இருந்தபோது எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஒருவர்—கோவை மாவட்டத்தைச் சார்ந்த ஒருவர்—கூட்டுறவுத்துறையில் தவறு செய்து அவரைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. ஆனல் அவர்கள் முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்து எனக்கு இப்படி வந்திருக்கிறது, காப்பாற்றுங்கள், நான் ஏதாவது தவறு செய்திருந்தால் நடவடிக்கைகளை தனியாக எடுங்கள், என்னை கைது செய்வதைத் தவிர்க்கவேண்டும் என்று பேரறிஞர் அண்ணு அவர்களிடம் முறையிட்டார்கள். எதிர்க்கட்சியினரை பழி வாங்கினேம் என்ற கெட்டபெயர் எனக்கு வேண்டாம் என்று சொல்லி அண்ணு அவர்கள் அன்றைக்கு அவரைக் காப்பாற்றினுர் என்ற உண்மையைச் சொல்வதில் தவறில்லை என்று நான் கருதுகிறேன்.

பேரறிஞர் அண்ணு அவர்களுக்கு இருந்த அந்த பெரிய இதயம் அதைவிட பெரிய இதயம் படைத்தவர் நமது முதல் அமைச்சர் அவர்கள் என்று நான் சொன்னுல் அவர்கள் அதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ''சின்ன இதயம் படைத்தவன்'' என்று அவர்கள் சொன்ருல் அதை நான் ஒத்துக் கொள்ள மாட்டேன், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள். மொத்தத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகள் வீண் குற்றச்சாட்டுகள். ஆனல் தனித்தனியாக எது எது தவறு, எங்கெங்கு பணம் கையாடல் நடைபெற்றிருக்கின்றன என்று சொல்லுங்கள், குற்றம் இருந்தால் தண்டியுங்கள், குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டனை கொடுங்கள், நான் ஏற்றுக்கொள்கிறேன்.

விசாரணை வேண்டுமென்று, ஜனதிபதி ஆட்சிக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது மாசு கற்பிக்கவேண்டும் என்பதற்காக ஒரு கமிஷனைப்போட்டு அந்தக் கமிஷன் மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பழி சுமத்த வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தோடு ஒரு கமிஷன் போட்டு விசாரிக்கச் செய்தார்கள். இதுதான் நடந்த உண்மை. நான் பச்சையாகச் சொல்வதை, தலைவர் அவர்கள் மூலம் இந்த அவைக் குறிப்பேட்டில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது அரசியல் வஞ்சம் தீர்ப்பதற்கு ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட கமிஷன்தான் பாரதி கமிஷன். நான் இன்னும் ஒன்று இந்த அரசுக்குச் சொல்வேன்.

புத்தகங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்கள் புகுத்தப்பட்டன என்று சொல்லப்பட்டு அப்போது இருந்த ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் இதே பாரதியைக் கொண்டு ஒரு கமிஷனையம் போட்டார்கள். அப்போது நம் கருத்துக்களை, பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்துக்களை, பெரியார் அவர்கள் சொன்ன கருத்துக்களை புத்தகங்களில் இருந்து நீக்கவேண்டும் என்று நீக்கிவிட்டார்கள். இது சரியா? கழக கருத்துக்கள் எந்த வடிவில் இருந்தாலும் அது எடுக்கப்படவேண்டும் நீக்கப்படவேண்டும் என்ற கொள்கையுடையவரை வைத்து பழி. வாங்கும் உணர்ச்சியோடு, அரசியல் வஞ்சம் தீர்க்கப் போடப்பட்ட கமிஷன் அந்தக் கமிஷன்.

நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன் கூட்டுறவுத் துறை அமைச்சர். அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அந்த ரிப்போர்ட்டைப் படியுங்கள். ஆராய்ந்து பாருங்கள். குற்றம் செய்தவர்களை விடுதலை செய்யுங்கள் என்று நான் வாதாடவில்லை, மீண்டும் மீண்டும் சொல்கிறேன். குற்றம் செய்தவர்கள் தணடிக்கப்படுவது பற்றி எங்களுக்குக் கவலை இல்லை' குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும், ஏற்றுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை சிறப்போடு இருக்கிறது. இந்தியா முழுவதும் எடுத்துக்கொண்டால் தமிழ் நாட்டில் உள்ள கூட்டுறவுத் துறை மிகச் சிறப்புடன் இருக்கிறது என்று இந்தியா முழுவதற்கும் இருக்கிறது. அறிக்கை சொல்கிறது. நான் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்தியா முழுவதிலும் இருக்கிற. மாவட்ட கூட்டுறவு வங்கிகளில் கும்பகோணம் வங்கிதான் முதல் பரிசைப் பெற்றது. கும்பகோணம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இந்தியாவிலேயே முதற் பரிசை பெற்றது. அந்த வங்கி கூட இப்படிப்பட்ட குற்றச்சாட்டு பட்டியலிலிருந்து தப்பவில்லை. அரசியல் வஞ்சம் தீர்ப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இவை என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் நான் இவற்றை குறிப்பிடுகிறேன்.

அன்றைய ஆட்சியில் தவறே நடக்கவில்லையா என்றால். தவறுகள் நடந்திருக்கலாம். அவைகள் எல்லாம் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தபோது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மாணிக்கவாசகம் என்பவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர், நமது எதிர்க்கட்சித் தலைவருக்கு மிக நெருங்கிய நண்பராக இருந்தவர். அவர் மாவட்ட வங்கியில் பணம் கையாடல் செய்தார் என்ற குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்ட போது அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர் கைது செய்யப்பட்டு, வழக்கு தொடரப்பட்டது. அவரிடமிருந்து முடிந்த அளவுக்கு பணம் கைப்பற்றப் பட்டது. இருந்தும் வழக்கு தொடரப்பட்டு, இரண்டு ஆண்டுகள் தண்டனை கொடுக்கப்பட்டது. அதற்குமேல் அவருடைய மேல்முறையீடு ஹைகோர்ட்டில் இருப்பதின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.



குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடுக்கே இடமில்லை. ஆனால் நிரபராதிகள் தண்டிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் இவற்றை நான் சொன்னேன். நான் சட்டம் படித்தவன் அல்ல, சட்டம் படித்த நமது கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்கு ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். லார்டு மெக்காலே அவர்கள் சொன்னதாக நினைவு. சட்டத்தின் துணைகொண்டு 99 குற்றவாளிகள் தப்பித்துக்கொள்வது பெரிய விஷயமல்ல, ஆனால் நிரபராதியான ஒருவர்கூட தண்டிக்கப்பட்டு விடக் கூடாது என்று சொல்லியிருப்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். எனவே தான் அரசு இதில் கவனமாக இருக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகின்றேன் என்பதை தெரிவித்துக்கொள்வதோடு, மீனளத் துறையைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நமக்கு நீண்ட கடற்கரை இருக்கிறது. ஏராளமான மீன்கள் கிடைக்கின்றன. இறால் போன்ற மீன்கள், உலகத்தின் பல இடங்களுக்கு அனுப்பக்கூடிய அளவிற்கு தரமான மீன்களும் கிடைக்கின்றன. இவைகளை பதப்படுத்தி கோல்டு ஸ்டோரேஜ் மூலம் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். நான் இதில் அரசுக்கு சிறந்த யோசனையாக ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன். அரசு அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். வெளிநாட்டுக்கு இறாலை பதப்படுத்தி அனுப்புகின்ற தொழிலை தேசியமயமாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்விதம் தேசியமயமாக்குவதன் மூலமாக கிடைக்கின்ற லாபத்தின் மூலம், மீன் பிடிக்கின்ற மீனவர்களுக்கு நல்ல விலை கொடுக்க முடியும் என்பதோடு மட்டுமல்ல, அந்நிய செலாவணியிலும் தவறுகள் நடக்காதவாறு பார்த்துக்கொள்ள முடியும், ஆகவே இதனை தேசியமயமாக்கி நமது துறையிக்கே கொடுத்து விட்டால் நாமே கோல்டு ஸ்டோரேஜ் மூலம் பதப்படுத்துகின்ற பொருப்பையும் அரசு ஏற்றுக்கலாம், என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ஒரு கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கு கொடுக்கப் 'பட்டிருக்கின்ற 'பெர்பார்மன்ஸ் பட்ஜெட்' என்பதில் 22-வது பக்கத்தில் மீனவர்களுக்கு உதவி ('எய்ட் டு பிஷர்மென்') என்பது 'வெல்பேர் பிராஜக்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் 1975-76-ம் ஆண்டுக்கு பைனான்ஷியல் டார்ஜெட் 16.88 லட்சம் என்று சொல்லப்பட்டிருக்கிறது, அதில் பைனான்ஷியல் அச்சீவ்மென்டில் செலவு செய்திருப்பது 181.37 லட்சம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதே நேரத்தில் 1976—77-ல் பைனான்ஷியல் டார்ஜெட் 114.86 லட்சம் என்றும், அச்சீவ்மென்ட் 131.15 என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் 'எய்ட் டு பிஷர்மென்' என்று குறிப்பிட்டு எதற்கு எதற்கு இது செலவு செய்யப் பட்டிருக்கிறது என்று கொடுக்கப்பட்டிருக்கின்ற குறிப்பைப் பார்த்தால், மீனவர்களுக்கு கூட்டுறவுத் துறையில் கடன் கொடுப்பது போன்றவைகளில் செலவு செய்யப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது.

இதில் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், பூம்புகாரில் ஏறத்தாழ 63½ லட்சம்' ரூபாய் செலவில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பூம்புகாரில் கட்டப்பட்டிருக்கின்ற வீடுகளை மொத்தமாக சோத்துப்பார்த்தால் கூட, என்னுடைய நினைவு சரியாக இருக்கும் என்று கருதுகிறேன் 30 இலட்சம் ரூபாய் அளவுக்குதான் இருக்கும். ஆக பூம்புகாரில் செலவிட்டிருக்கின்ற பணத்தில் பெரும்பகுதி மீனவர்களின் நன்மைக்காகவே செலவு செய்யப்பட்டிருக்கின்றன. மீனவர்களுடைய வாழ்வில் ஏற்பட்டிருக்கின்ற இடர்பாடுகளையும் துன்பங்களையும் துயர்களையும் போக்குவதற்கு இந்த அரசு எடுக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும் நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்றும், கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற ஊழியர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கின்ற முறையில் அவர்களை அரசாங்க ஊழியர்களாக ஆக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 1-20)

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. உ. ஷண்முகம் அவர்கள் மிக உணர்ச்சிகரமாக வேண்டுகோள் விடுத்த நேரத்தில், அப்போது நான் குறுக்கிடுவது சரியாக இருக்காது என்று நினைத்து, இப்போது ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

ஜனாதிபதி ஆட்சியின்போது, அரசியல் வஞ்சம் தீர்ப்பதற்காக இந்த விசாரணை போடப்பட்டது என்று கூறினார்கள். இப்படி விசாரணை போடப்படுகின்றபோது, விசாரிக்கின்றவர்கள் ரிக்கார்டு பூர்வமாக பரிசீலனை செய்யாமல் அரசியல் நோக்கத்திற்காக, அத்தனையும் கற்பனையாக குற்றம் சாட்டியுள்ளார்கள் என்று கூறுகிறார்களா ?





திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே நான் விரிவாகச் சொல்லவேண்டுமென்று கருதினேன். என்னை மன்னித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆவடியில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டிற்காக 11 ஆயிரம் கூட்டுறவு வங்கிகள் விளம்பரம் கொடுத்திருக்கின்றன. அப்போது யார் இதை ஆட்சேபித்தார்கள் ? அப்படிக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தும் சுற்றறிக்கை அப்போது அனுப்பப்பட்டது. அப்போது ஏன் கிளப்பவில்லை ? அந்த முறையிலே ஆவடி காங்கிரஸ் கட்சி மாநாட்டிற்குக் கொடுக்கலாம். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிற்குக் கொடுத்தால் குற்றமா ?

அதைத்தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். வேண்டுமென்றால் கட்சி மாநாட்டிற்குக் கொடுத்தது தவறு என்று சொல்லுங்கள். அப்படி விளம்பரம் கொடுத்ததற்கு சர்-சார்ஜ் என்கின்ற முறையில் 50 ஆயிரம் கேட்பது சரியல்ல. அதைக் கொடுக்கக்கூடிய அதிகாரம் நிர்வாக போர்டுக்கு இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்கள் கொடுக்கிறார்கள். அதைக் கொடுக்கக்கூடாது என்று சொல்வது நியாயமில்லை.

அதுமட்டுமல்ல. அரசியல் வஞ்சம் தீர்ப்பதற்காக அந்தக் கமிஷன் போடப்பட்டது.. அதற்கு மட்டுமல்ல. பாடப் புத்தகத்திற்கும் இப்படி செய்யப்பட்டிருக்கிறது. எனவே தான் நான் சொன்னேன், திராவிட இனத்தின்மீது தொடுக்கப்பட்ட பாணம் என்று நான் சொன்னதை, வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் மீண்டும் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டாம். விவாதம் வளர்ந்துகொண்டே போகும். இத்தோடு நிறுத்திக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வள மானிய கோரிக்கையின் மீதும், கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின் மீதும் இங்கே நடைபெற்ற விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்ன பின்னர், பதிலுரையாக ஒரு சில கருத்துக்களைக் கூறலாம் என்று நான் ஆசைப்படுகிறேன்.

நான் ஏற்கெனவே விவாதம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் என்னுடைய முன்னுரையாக அரசுத் தரப்பில் இந்த இரு துறைகளுக்கு உண்டான கொள்கைகளை விளக்குகின்ற வகையில் அச்சடித்துக் கொடுக்கப்பட்ட புத்தகங்களின் வாசகங்களை என்னுடைய உரையிலே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்

1977 ஆகஸ்டு 12] [திரு. க. உரொ. எட்மண்ட்]

டுக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீதும் கொடுத்த விளக்கங்கள், அரசின் கொள்கைகள் ஆகியவற்றைப் படித்து தெரிந்திருப்பார்கள் என்ற அடிப்படையில் இங்கே பேசிய நண்பர்கள் தங்களுடைய கருத்தைச் சொல்கின்ற நேரத்தில் ஒரு சில தவறுகளைச் சுட்டிக் காட்டிய போதிலும், தங்களுடைய மேலான யோசனைகளைச் சொன்ன சாலத்திலுங்கூட, இந்த இரண்டு துறைகளிலும் ஏற்றுக் கொண்டிருக்கிற நல்ல பல முன்னேற்றத் திட்டங்களை அவர்கள் வரவேற்றுப் பேசியதற்கு நான் உள்ளபூர்வமாக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மீன் வளத் துறையைப் பொறுத்த மட்டில், இந்த அரசு மீன்வளத் துறையிலே மாத்திரமல்லாமல், அந்தத் துறையிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிற மீனவர்களின் தனிப்பட்ட முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயம் தெரிந்திருப்பார்கள். நான் அதற்கு ஆதாரமாக இங்கே எதையும் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று கருதினாலும், கடலிலே தொழிலிலே ஈடுபடுகின்ற மீனவர் சூழ்நிலை காரணமாக, இயற்கையின் கோளாறு காரணமாக, விபத்துக்குள்ளாகி மரணம் அடையும் நிலை ஏற்பட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பது, என்று இதற்கு முன்னாலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அறிவித்திருந்தது.

ஆனால் இன்றையதினம் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அப்பேர்பட்ட மீனவர்களுடைய குடும்பங்களுக்கு 5,000 ரூபாய் கொடுப்பது என்று முடிவு செய்து அதை நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே அறிவித்திருக்கிறார்கள். அறிவிக்கப்பட்ட 5,000 ரூபாயில் இரண்டாயிரம் ரூபாய் உடனடியாக அந்தக் குடும்பத்திற்குப் போய்ச் சேரும் என்பதோடு மாத்திரமல்லாமல், மீதியுள்ள 3,000 ரூபாய் அந்தக் குடும்பத்திற்குத் தவணை முறையில் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பையும் இந்த அரசு ஏற்கனவே கொடுத்திருக்கிறது.

இந்தத் துறையின்மீது தன்னுடைய கருத்துக்களைக் கூறிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தைத் சார்ந்த உறுப்பினர் மதிப்பிற்குரிய பொன்னுரங்கம் அவர்கள் இந்த கருத்தைச் சொல்கிற நேரத்தில் 5,000 ரூபாய் கொடுத்திருப்பதை உளமாரப் பாராட்ட விரும்பாமல் அதைச் சொல்ல வேண்டுமே என்பதற்காகச் சொல்லிவிட்டு ஐயாரம் ரூபாய் கொடுத்தால் போதுமா? அப்படி மீனவனை இழந்துவிட்ட குடும்பத்திற்கு ஒரு விசைப்படகு வாங்கிக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று அவர்கள் மிக எளிதாகச் சொல்லிவிட்டார்கள்.



1977 ஆகஸ்டு 12]

திரு. ப. பொன்னுரங்கம்: பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். ஐயாயிரம் ரூபாய் உடனடியாகக் கொடுக்கப்படுகிறது. அந்தக் குடும்பம் விரும்பினால் மேலும் 5,000 ரூபாய் கடனாகக் கொடுக்கப்படும் — ஆக மொத்தம் 10,000 ரூபாய் கொடுக்கப்படுவதோடு சேர்த்து படகு கொடுக்க வேண்டுமென்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அவரே பேசும்போது சொன்னார். அரசாங்கக் கணக்கில் ஒரு படகின் விலை 1,81,000 ரூபாய் ஆகிறது. இதை வெளியிலே தனியாரிடம் வாங்கினால் 1,30,000 ரூபாய் ஆகிறது என்று மாண்புமிகு திரு. பொன்னுரங்கம் அவர்களே சொன்னார்கள். ஐயாயிரம் ரூபாயை அரசு கொடுக்கிறது என்று சொன்னால், அந்த ஐயாயிரம் ரூபாயை வைத்துத்தான் அந்தக் குடும்பம் நடக்க வேண்டுமென்ற அடிப்படையில் அல்ல. மீனவர்கள் தொழில் செய்கிறார்கள் என்றால், இயற்கையை எதிர்த்துத் தொழில் செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தொழில் செய்யக்கூடியவர்களுக்கு எந்த நேரத்திலும் எப்பேர்பட்ட ஆபத்தும் வரலாம். அப்படி வருகிற நேரத்தில் உடனடியாக ஒரு நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று அரசு ஐயாயிரம் ரூபாய் கொடுக்கிறது. அந்த எண்ணத்தின் அடிப்படையிலேதான் இந்த 5,000 ரூபாய் கொடுக்கப்படுகிறதே தவிர, இந்த ரூபாயை வைத்துக்கொண்டு அந்த மீனவக் குடும்பம் காலாகாலத்திற்கும் வாழலாம் என்ற எண்ணத்தில் அல்ல என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே, மீனவர் நல முன்னேற்றத்திற்காக இன்றையதினம் அரசாங்கத்தின் கையில் இரண்டுலட்சம் ரூபாய் இருக்கிறது. இதை ஆண்டு ஒன்றுக்கு பத்து லட்சம் ரூபாயாகத் திரட்ட வேண்டுமென்ற திட்டத்தை இன்றைய தினம் அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்திலிருந்து விபத்துக்களில் இறந்த மீனவர்களுக்கு மாத்திரமல்ல, சாதாரணமாக இயற்கையான மரணம் அடைகிற மீனவக் குடும்பத்திலும் கூட, குடும்பத்தைக் காப்பாற்ற வேறு நபர்கள் இல்லை என்ற நிலை, நெருக்கடியான நிலை ஏற்படுகிறபோது அந்த மீனவ விதவைகளுக்குக் கூட ஏதாவது தொகை கொடுக்கலாமா என்பதை இந்த அரசாங்கம் மிகத் தீவிரமான முறையிலே ஆலோசித்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, விபத்தில் இறந்து போன குடும்பத்திற்கு ரூ. 5,000 கொடுப்பது போதாது, 1,40,000 ரூபாய் படகைக் கொடுக்க வேண்டுமென்பதை இப்போது இருக்கும் சூழ்நிலையில் இந்த அரசாங்கம் செய்ய இயலாது. அப்படிப்பட்ட ஒரு பொருளாதார நிலைமை இந்த

அரசுக்கு வருமானால் அதைச் செய்ய இந்த அரசு தன்னால் இயன்றதைச் செய்யும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : ரூ. 1,40,000 கொடுத்து வாங்க வேண்டுமென்பதல்ல. ஐ.என்.ஏ.-க்களுச்சூத் தந்திருக்கிறார்கள். பிரீயாகத் தந்திருக்கிறார்கள். முந்திய காங்கிரஸ் அரசும் தந்திருக்கிறது, கழக அரசும் தந்திருக்கிறது. முன்மாதிரி இருக்கிறது. பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நிரந்தர நிவாரணமாக இருக்க வேண்டும். நீங்கள் வேறு எந்த உதவி செய்தாலும் பயன்படாது. இந்த உதவியைச் செய்தால்—போட் கொடுத்தால்—தவணை முறையில் கூட நீங்கள் வசூலித்துக் கொள்ளலாம்.

(பிற்பகல் 1-30.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் பேரவையின் நேரம் 1½ மணிக்கு மேல் நீட்டிக்கப்படுகிறது.

திரு. க. உரொ. எட்மண்ட் : வசூலித்துக் கொள்ளலாம், ஆனால் 1 லட்சத்து 43 ஆயிரம் ரூபாய் ஒரு மீனவக் குடும்பத்திற்கு போட் என்ற முறையிலே கொடுக்க வேண்டுமானால் அரசாங்கம் அதற்காகப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்பதை திரு. பொன்னுரங்கம் அவர்கள் உணருவார்கள் என்று நினைக்கிறேன். எவ்விதமான ஆதாரமும் இல்லாமல் செக்யூரிட்டியும் இல்லாமல் அவர்களுக்குப் பணம் கொடுக்கிறபோது பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும், அது மட்டுமல்ல, அதற்காக அரசாங்கத்திற்குப் போதுமான நிதி நிலைமை இருக்க வேண்டுமென்பதையும் நான் இந்த நேரத்திலே அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் மீன் துறையைப் பொறுத்தமட்டில் புதிதாகப் பொறுப்பேற்ற இந்த அரசு பல்வேறு முன்னேற்றகரமான திட்டங்களைச் செய்திருக்கிறது. நம்முடைய உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் இன்னொரு குற்றச்சாட்டையுங் கூடச் சொன்னார்கள். தி.மு.க. ஆட்சியின் காலத்தில் 2 கோடிக்கு மேல் தொகை இந்தத் துறைக்கு ஒதுக்கினார்கள், ஆனால் இன்றைய தினம் மீனவ நண்பன் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற இந்த அரசு 1 கோடியே 93 லட்சம் ரூபாய் தான் இந்தத் துறைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் மெத்தப் பணிவோடு ஒன்றை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். மீனவ வளர்ச்சிக் கழகம் இப்போது மீன் துறையிலே இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது 1973—74 ஆம் ஆண்டிலேதான். அதற்கு முன்னாலே மீன் வளர்ச்சிக் கழகம் என்ற ஒன்று இல்லை. இந்த மீன் வளர்ச்சிக்





கழகம் வங்கிகளிலேயிருந்தும் ஏ.ஆர்.டி.சி. போன்ற, நிறுவனங்களிலிருந்தும் ஒவ்வொரு ஆண்டும் 2 கோடி ரூபாய் வாங்கி படகுகள் கட்டுவதாக மூலதனத்தை ஒதுக்கியிருக்கிறது என்பது தெரிந்தால் இன்றைய தினம் ஒதுக்கப்பட்டிருக்கிற 1 கோடியே 93 லட்சம் ரூபாயோடு இந்த 2 கோடி ரூபாயும் சேர்த்தால் 3 கோடியே 93 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. பொன்னுரங்கம் இன்னொன்றையும் சொன்னார்கள், படகுகள் வாங்குவது என்றால் அந்தப் பணத்தை 60 தவணைகளில் திருப்பிக்கொடுக்கலாம் என்று முன்னாலே இருந்தது. இப்போது அந்தப் பணத்தை 45 தவணைகளில் திருப்பிக் கட்டுங்கள் என்று சொல்கிறார்களே, ஐயகோ, இது என்ன அநியாயம், இது நீதியா, இது நேர்மையா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். முன்னாலே இருந்த அரசு இந்தப் படகுகளை கட்டி அவர்களுக்குக் கொடுத்தது. ஆனால் இன்றைக்கு இந்தப் படகுகளை வங்கிகளின் மூலமாக அந்த மீனவர்கள் பெறுகிறார்கள், ஆகவே வங்கிகள்தான் அந்தக் கடன் பணத்தைக் 45 தவணைகளிலே செலுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள், அவர்கள் தான் அப்படிக் குறிப்பிடுகிறார்களே தவிர இந்த அரசோ, துறையோ தவணைகளைக் குறைக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, திரு. பொன்னுரங்கம் அவர்கள் மற்றொரு கருத்தையும் தெரிவித்தார்கள். போன மாதம் ஏதோ ஒரு படகு போனது திரும்பி வரவில்லை, அதற்கு அரசு கவலை எடுத்ததா? அதைத் தேடிக் கண்டுபிடித்ததா? இதற்கு முன்னாலே இருந்த இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற கலைஞர் கருணாநிதி அவர்கள் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த நேரத்திலே படகு காணவில்லையென்றால் விமானங்களை அனுப்பினார்கள், ஹெலிகாப்டர்களை அனுப்பினார்கள், அவ்வளவு அக்கறையோடு தேடினார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு அந்தப் பொறுப்பு உண்டு, அவர்கள் செய்தார்கள், அதற்காக நான் நன்றிசெலுத்தக் கடமைபட்டிருக்கிறேன். ஆனால் இந்த அரசு பொறுப்பற்ற தன்மையிலே இருக்கிறது என்ற குற்றச்சாட்டை அவர்கள் சொன்னது சரியல்ல, நியாயமல்ல, அன்றைய தினம் காணாமல் போன படகு, அது போய் இத்தனையாவது நாளில் அந்த நாள்வரை திரும்பி வரவில்லை என்றால் தான் தேடுவார்கள், குறிப்பிட்ட கால வரையறை வைத்திருக்கிறார்கள், அதற்குள் படகு வரவில்லையென்றால் தேடுவார்கள்........

திரு. ப. பொன்னுரங்கம் : படகிலே மீனவர்கள் சென்றார்கள்.

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : படகிலே மீனவர்கள் தான் செல்வார்கள், மீனவர்கள் செல்லவேண்டுமென்று தான்

இந்த அரசு விரும்புகிறது. மீன்பிடி தொழிலுக்கு ஒரு படகு போகிறது என்றால் அந்தப் படகு ரொம்ப நாள்வரையில் வராமல் இருந்தால்—அந்தப் படகு கரைக்கு வருவதற்கு ஒரு குறிப்பிட்ட கால வரையறை வைத்திருப்பார்கள், அந்தக் கால வரையறைக்குள் வரவில்லை என்றால் ஏதோ இயற்கைக் கோளாறு, கடல் கொந்தளிப்பு, புயல் காற்று ஏதாவது ஏற்பட்டு குறிப்பிட்ட காலத்திலே படகு வரவில்லை என்று சந்தேகப்படுவார்கள். ஆனால் அப்படி இயற்கையின் சீற்றமும் இல்லை, கடல் கொந்தளிப்பும் இல்லை, புயல் காற்றும் வீசவில்லை என்றால் பொதுவாக என்ன நினைப்பார்கள் என்றால் சென்னையிலிருந்து போன படகு தூத்துக்குடிக்குப் போயிருக்கலாம். அல்லது கன்னியாகுமரி போயிருக்கலாம், குளச்சலுக்கு போயிருக்கலாம். அந்த அடிப்படையிலேதான் ஏதாவது இருந்தால் அதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தேடுகின்ற முயற்சியை மேற்கொள்வார்கள். அதைப்பற்றிய தகவல்கள் நம்முடைய மீன் துறைக்கு வந்திருக்கிறது. உடனே சம்பந்தப்பட்டவர்கள் ஒயர்லஸ் மூலமாகத் தகவல் கொடுத்து அதைத் தேடியிருக்கிறார்கள். படகின் சொந்தக்காரர் கரையிலே இருக்கிறார்; சொந்தக்காரர் கரையிலேதான் இருக்கிறார். அவர் அந்தப் படகைத் தேடியிருக்கிறார், அவரும் தகவல் கொடுத்திருக்கிறார். அவரும் தேடுகின்ற முயற்சியை எடுத்து இருக்கிறார். அந்த அடிப்படையிலே அதற்கான முயற்சிகளையெல்லாம் எடுத்துக்கொள்ளாமல் இந்த அரசாங்கம் அந்த அளவிற்குக் கல்மனம் படைத்ததாக நிச்சயம் இருக்காது. மீனவர்களின் தியாகங்களை இந்த அரசாங்கம் அறிந்திருக்கிறது. மீனவர்களுடைய உழைப்பு இந்த நாட்டிற்கு எவ்வளவு தேவைப்படுகிறது, எவ்வளவு அந்நியச் செலாவணியைக் கொண்டு வருகிறது என்பதையெல்லாம் இந்த அரசு பரிபூரணமாக உணர்ந்திருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படும்பொழுது அரசு நிச்சயமாக வாளாவிருக்காது, அதற்கான காரியங்களில் இறங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இனிமேல் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படக்கூடாது என்பதற்காக 43½ அடி நீளம் உள்ள மின்விசைப் படகுகளை, ஒவ்வொரு படகும் பத்து லட்சம் ரூபாய் செலவிலே இரண்டு படகுகளை இந்த மீன் துறை கட்டத் தயாராக இருக்கிறது. இந்தப் படகுகள் இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், மீனவர்களுக்குக் கடலில் ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் ஒத்தாசை செய்ய, அல்லது உதவி செய்யச் சென்று மீட்பு வேலைகளிலே ஈடுபடுவதற்காக, 'ரெஸ்க்யூ போட்' என்ற அந்த அடிப்படையிலே இரண்டு மின்விசைப் படகுகளை இன்றைய தினம் இந்த அரசு செய்ய இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆழ்கடல் மீன்பிடிப்பை நல்ல முறையில் செயல்படுத்த இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தினுடைய உதவியோடு 50 போட்களை வாங்கலாம் என்று அனுமதி கேட்டிருக்கிறார்கள். ஆனால்



இன்றையதினம் அந்த அனுமதி கிடைக்காத காரணத்தினால் மீன்வளத் துறையிலேயே இரண்டு ட்ராலர்களை வாங்கவிருக்கிறார்கள். ஒவ்வொரு ட்ராலரும் 40 இலட்சம் ரூபாய் அடக்கம் ஆகும். ஈ.ஐ.டி. பாரி கம்பெனியாரும் இரண்டு ட்ராலர்களை வாங்கவிருக்கிறார்கள். ஆக இந்த நான்கு ட்ராலர்களும் அக்டோபர் மாதத்திலே வந்து சேரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த நான்கு ட்ராலர்களும் வருகிற நேரத்தில் தூரக்கடல் மீன் பிடிப்பு, ஆழ்கடல் மீன்பிடிப்பு போன்ற நல்ல காரியங்களைச் செய்ய அந்தப் படகுகள் பயன்படுத்தப்படும். இன்னும் பல ட்ராலர்களை—வரவழைக்க இந்த அரசின் இந்தத் துறை முயற்சி எடுத்துக்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மெத்தப் பணிவோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பலரும் பேசினார்கள். மதிப்பிற்குரிய ஜனதாக்கட்சியின் அருமை உறுப்பினர் திரு. சுவாமிதாஸ் அவர்கள் பல நல்ல கருத்துக்களை அவர்கள் பேசுகின்ற நேரத்தில் எடுத்துச் சொன்னார்கள். இந்தச் சமுதாயத்திலே இருக்கின்ற மாணவர்கள், படித்துப் பட்டம் பெற்றவர்கள் அந்தத் துறையிலே பயன்பட முடியாத அளவிற்கு அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவேதான், இந்த துறை திரட்ட இருக்கின்ற மீனவர் நல நிதியை ஆண்டுக்கு 10 இலட்சம் திரட்ட வேண்டுமென்ற யோசனையின் அடிப்படையில் மீனவ மாணவர்கள் மேல்படிப்பு படிப்பதற்கான செலவுகளை இந்தத் துறை ஏற்றுக் கொள்ளலாமா என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். மீன் வளத்துறையிலே மீனவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், அதற்கான பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஏற்பாடுகளையெல்லாம் இந்த அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகின்றேன்.

''இன்லேண்ட் பிஷ்ஷிங்'', அதாவது பெரிய பெரிய நீர்த் தேக்கங்களிலேயும், இன்னும் ஆறுகள், குளங்களிலேயும் மீன் பிடிக்கின்ற நிலைமைகளையெல்லாம் பரிசீலனை செய்து அதற்குண்டான முன்னேற்றங்களை இந்த அரசாங்கம் இன்றையதினம் செய்து கொண்டிருக்கிறது. திரு. சுவாமிதாஸ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். குளங்களிலே ஒருவகையான பாசி இருக்கிறது, அந்தப் பாசி இருக்கின்ற குளங்களிலே மீன்கள் வளர்வதில்லை. அங்கே மீன்கள் உற்பத்தியாவதில்லை என்றெல்லாம் சொன்னார்கள். எனக்கு வந்த தகவலின்படி அந்தப் பாசியின் பெயர் 'பிஸ்டியா' என்று சொல்லப்படுகிறது. அந்தப் பாசிகள் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான குளங்களிலும், ஊராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான குளங்களிலும் அதிகமாக இருக்கிறது. அந்தப் பாசிகள் இருக்கின்ற காரணத்தால் மீன்கள் உற்பத்தியாவதை, மீன்களை வளரவிடாமல் அவை தடுத்துக் கொண்டிருக்கின்றன என்ற தகவல் வந்திருக்கிறது. அவைகள் பொதுப்பணித்துறைக்

குச் சொந்தமான குளங்களாக இருப்பதாலும், ஊராட்சி மன்றங்
களுக்குச் சொந்தமான குளங்களாக இருக்கின்ற காரணத்தாலும்,
அவைகளையெல்லாம் அப்புறப்படுத்த வேண்டிய பொறுப்பு அந்
தந்தத் துறைகளுக்குத் தான் இருக்கின்றது என்பதை இந்த
நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1–40].

பொதுவாக, இந்த மீன் வளத்துறைக்குச் சொந்தமான பெரிய
பெரிய அணைகள், குளங்களிலே இப்படிப்பட்ட பாசிகள் இருப்ப
தாகவும் அங்கே மீன் வளர்ச்சி பெற முடியவில்லை—உற்பத்தியாக
முடியவில்லை என்றும் எந்தவிதமான தகவலும் இந்தத் துறைக்கு
வரவில்லை. இந்த அடிப்படையிலே இந்தத் துறையைப்
பொறுத்தமட்டிலே உள்நாட்டு மீன் பிடிப்பிலே அதிக அக்கறை
செலுத்திக் கொண்டிருக்கிறது. இலட்சக்கணக்கான, கோடிக்
கணக்கான தரமான மீன் குஞ்சுகளை வளர்க்கின்ற பொறுப்பிலே
சில திட்டங்களை அது தீட்டியிருக்கிறது. அந்த அடிப்படையிலே
இப்படிப்பட்ட பல நல்ல முன்னேற்றமான திட்டங்களை மீன்பிடித்
துறையைப் பொறுத்தவரையிலே இந்த அரசாங்கம் செய்து
கொண்டிருக்கிறது. மீனவர்களுக்கு என்ன செய்யப் போகிறது
இந்த அரசு என்றெல்லாம் கேட்கலாம். வட சென்னையிலே,
இராயபுரத்திலும், தென் சென்னையிலே அயோத்தியாக் குப்பத்
திலும் ஒவ்வொரு கம்யூனிட்டி சென்ட்டர்—சமுதாயக் கூடம்
கட்ட யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு கூடத்தையும்
ஒரு இலட்சம் ரூபாய் செலவிலே கட்டுவதற்கு நாங்கள் யோசித்துக்
கொண்டிருக்கிறோம். இந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டால்
அங்கிருக்கிற மீனவர்களுக்குப் பொது நிகழ்ச்சிகள், கல்யாணம்
அல்லது வேறு விதமான நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்பு வசதிகள்
உருவாகும். அங்கே அவர்களுக்குத் தேவையான பாத்திரங்கள்,
நாற்காலி, மேஜைகளைக் கூடக் கொடுத்து—மீன் வளத் துறை
யிடம் கொடுத்து விடலாம்–என்ற ஆலோசனையும் இந்த அரசிடம்
இருக்கிறது.

அதைப் போல் மத்திய அரசாங்க ஒத்துழைப்போடு ஒரு
'மாடல் வில்லேஜ்'—ஒரு மீன்பிடி கிராமம் எப்படி இருக்க
வேண்டும் என்பதை செய்து கொடுப்பதற்கு, நம்முடைய மத்திய
அரசாங்கம் ரூ. 28 இலட்சத்தை இந்த அரசிற்கு ஒதுக்கியிருக்
கிறது. அந்த நிதியிலிருந்து, முகவை மாவட்டத்திலே, வாலி
நோக்கம் என்கிற பகுதியை—அந்தக் கிராமத்தை—முன்னேற்று
கிற வகையில்—மீன் பிடி கிராமத்தை உருவாக்குகிற முயற்
யிலே இந்தத் துறை ஈடுபட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்
திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல், நம்முடைய பொன்னுரங்கம் அவர்கள் மீனவர்
பகுதியில் சில இடங்களைத் தனிப்பட்டவர்களுக்கு ஒதுக்குகிறார்கள்.
அங்கு மீனவர்களுக்கு வீடுகள் ஏன் கட்டிக் கொடுக்கக் கூடாது
என்றெல்லாம் சொன்னார்கள். வீடுகள் கட்டிக் கொடுப்பது முடி
யாதது அல்ல; மீனவர்களைப் பொறுத்தவரையிலே, அந்த மீன்





ஒழுங்கான முறையிலே பதப்படுத்தப்பட வேண்டும். பதப்படுத்
தப்பட்ட அந்த மீனுக்கு நல்ல விலை கிடைக்க ஏற்பாடு செய்யப்பட
வேண்டும். அந்த அடிப்படையிலே சில முக்கியமான துறைமுகங்
களிலே ஓரிரு இடங்களைத் தனியாருக்குக் கொடுத்து, அங்கே
'ஐஸ்'—பனிக்கட்டிகள் வைத்து, குளிர் சாதனங்கள் பொருத்தி,
மீன்களைப் பாதுகாப்பதற்கு உண்டான காரியங்களுக்கு அவற்றைப்
பயன்படுத்தி, மீன்களிலேயிருந்து கருவாடு போன்றவற்றைச்
செய்து வெளி நாடுகளுக்கு அனுப்பி, அப்பேர்ப்பட்ட முயற்சி
யிலே ஈடுபட நம்முடைய மீன்பிடி துறைமுகங்களில் உள்ள
அந்த இடங்களைத் தனியாருக்குக் கொடுக்கின்ற முயற்சியிலே
இந்த அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. அதற்கு அடுத்தாற்போல்
Mechanisation of boats and katt marans.

இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள், மீனவர்கள்
எவ்வளவுதான் கஷ்டப்பட்டு மீன் பிடித்துக்கொண்டு வந்தாலும்
அவர்கள் பெருவாரியாகக் கடனாளியாக இருக்கிறார்கள். கடன்
கொடுத்திருக்கிறவர்கள் பெருவாரியாகப் பணக்காரர்களாக இருக்
கிறார்கள், அதிக வட்டி கேட்கிறார்கள். ஆகவே, வட்டியிலிருந்து
மீள முடியாத மீனவர்கள் தாங்கள் பிடித்த மீன்களைக் குறைந்த
விலையில் வட்டியாகக் கொடுத்து விடுகிறார்கள், கடனாகக்
கொடுத்துவிடுகிறார்கள். மீனவர்கள் இந்தக் கடனிலிருந்து மீளவே
முடியவில்லை என்று எல்லாம் சொன்னார்கள். இன்றைக்கு
நாட்டிலே அது நடந்து கொண்டிருக்கிறது. மீன் துறை-மீனவர்கள்
முன்னேற வேண்டுமென்றால் there should be eradication of middle-
men நடுத்தரகர்களை அப்புறப்படுத்தியாகவேண்டும். அவர்களை
ஒழித்துக்கட்டியாக வேண்டும். நடுத் தரகர்கள் ஒழிக்கப்பட்டால்
தான் மீன்துறை வளம் பெறும். அதோடு சேர்ந்து மீனவர்களும்
வளம் பெறுவார்கள். எனக்கு இந்த நிலைமைகள் எல்லாம்
தெரியும். கடற்கரை கிராமங்களிலே பொதுவாக எப்படி இருப்
பார்கள்? ரூ. 4,000-க்குக் கட்டுமரம் செய்கிறார்கள். மீனவர்
களாலே செய்ய முடியாது. பெரிய பணக்காரர்கள், 4 கட்டு
மரம், 5 கட்டுமரம் என்று செய்து, 3 பேர், 4 பேரிடம் ஒப்
படைத்துவிடுகிறார்கள். பாவம், பண வசதி இல்லாத மீனவர்கள்
இரவு போய் கடலிலே மீன்பிடித்து, காலையிலே திரும்பி, பிடிபடு
கிற மீன் ஏலத்தில் ரூ. 100-க்குப் போகும். ரூ. 100-க்குப்
போகிறதென்றால், கட்டுமரத்துக்காரனுக்கு ரூ. 50; கஷ்டப்
பட்டு மீன் பிடித்தவனுக்கு ரூ. 50. தரையிலே உட்கார்ந்து
கடற்காற்று வாங்குகின்ற பணக்காரனுக்கு ரூ. 50.

(திரு. ரா. முத்தையா தலைமை)

இது எத்தனை காலம் கட்டினாலும், கடனெல்லாம் கட்டப்
பட்டும், கட்டுமரம் உனக்குச் சொந்தம் என்று அந்தப் பணக்
காரன் அவனுக்குக் கடனிலிருந்து விடுதலை கொடுக்கிறானா என்றால்
அந்த நிலைமை இப்பொழுது இல்லை. இது பரம்பரை, பரம்பரை
யாகப் போய்க்கொண்டிருக்கிறது. அந்த நிலைமையை மாற்றி
அமைக்க வேண்டுமென்று யோசனை செய்தோம். அதற்கு

நாங்கள் எடுத்திருக்கிற யோசனையிலே மீனவர்களுக்கு கட்டு மரங்கள் முதலிலே நாமே செய்து கொடுக்கலாம் அந்தத் தொகையை சன்னம் சன்னமாக வசூல் செய்து அதற்கு உரிய தொகை வந்த பிறகு அவர்களுக்கே படகுகளைச் சொந்தமாக ஆக்குவது பற்றிய யோசனை எங்கள் கவனத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அதைப் பற்றியும் யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இப்போது தற்காலிகமான தூரமான இடங்களுக்கு போய் மீன் பிடிக்கவேண்டும். இன்றைய தினம் இருக்கிற விசைப் படகுகளோடு போட்டி போட்டுப் போகவேண்டும். இருக்கிற கட்டு மரங்கள், தோணிகள்—வெள்ளம் என்று சொல்வார்கள். அந்தத் தோணிகளை மெக்கனைஸ்ட்—இயந்திர மயமாக ஆக்கவேண்டுமென்ற யோசனை இப்போது பரிசீலனையில் இருக்கிறது. இது வெற்றிகரமாக முடியுமானால், தமிழ்நாட்டிலே 32 ஆயிரம் கட்டுமரங்களும் அதைப் போல 8 ஆயிரம் தோணிகளும் இருக்கின்றன. அவைகளை இயந்திரமயமாக்குகின்ற முயற்சியை இந்த அரசு நிச்சயமாக ஏற்றுக்கொள்ளும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் வெற்றி பெற்று அந்தப் படகுகளும், கட்டுமரங்களும் இயந்திரமயமாக ஆக்குகிற சாத்தியக் கூறுகள் இருக்கிற நேரத்தில் மத்திய அரசாங்கம் நிதி உதவி செய்வதாக இருக்கிறது. அந்த நேரத்தில் அந்த உதவியை நிச்சயமாக பயன்படுத்திக்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல கூட்டுறவு சங்கங்கள் தமிழகத்திலே 514 மீனவ கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. நம்முடைய கூட்டுறவு சங்கங்களில் என்னென்ன தவறுகள் நடக்கின்றனவோ, அதே தவறுகள் அங்கேயும் நடக்கின்றன. பொதுவாக, மீனவர்களுக்கான கூட்டுறவு சங்கங்களில் மீனவர்கள் அல்லாதவர்கள் தான் அந்தச் சங்கங்களிலே இருக்கிறார்கள். அந்தச் சங்கங்கள் மீன்களை குத்தகைக்கு எடுக்கிறார்கள். ஆற்றில், மீன் பிடித்து அல்லது அணைகளில் மீன் பிடித்து குளங்களில் மீன் பிடித்து, வருகின்ற ஏழை மீனவர்கள் ஏமாற்றம் அடையத்தக்க வகையிலே கையிலே கொஞ்சம் கொடுத்துவிட்டு கிடைக்கிற லாபத்தை கூட்டுறவு சங்கத்திலே இருக்கிற சில தனியார்கள் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள். ஆகவே இன்றைய தினம் அரசு அதையும் மிகத் தீவிரமாகப் பரிசீலனை செய்திருக்கிறோம். மீனவர்களுக்கான கூட்டுறவு சங்கங்களில் மீனவர்கள் மாத்திரம்தான் இருக்கவேண்டும். மீனவர்கள் என்றால் யார்? அதை இந்த அரசாங்கம் நிர்ணயம் செய்ய வேண்டும். இந்த சமுதாயத்திலே பிறந்ததாலேயே மீனவர்களாக முடியாது. கடலிலே, ஆற்றிலே, கிணற்றிலே, ஏரியிலே, படகிலே, தோணியிலே, கட்டுமரங்களிலே சென்று வலை வீசி மீன் பிடிக்கிறவன் தான் மீனவன். அப்பேர்ப்பட்ட மீனவன் தான், இப்பேர்ப்பட்ட கூட்டுறவு சங்கங்களிலே அங்கம் வகிக்க முடியும் என்று சட்டத்தைத் திருத்த, அதற்கான ஏற்பாடுசெய்தால் இந்த சங்கங்கள் மூலமாக கிடைக்கிற லாபத்திலே இந்த மீனவர்களுக்கும் பங்கு கிடைக்கும் என்பதிலே எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. அதற்கான யோசனையை





இந்த அரசு, இந்த நேரத்திலே செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள பெருமைப்படுகிறேன். அந்த அடிப்படையில் பல்வேறு நல்ல முன்னேற்றங்களை இந்த அரசாங்கம் செய்யும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். பெரிய திட்டங்கள் ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு மாத காலம் தான் ஆகிறது. இந்தத் திட்டம் முதல் திட்டமாகத்தான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் போகப்போக இந்தத் துறையிலே என்னென்ன முன்னேற்றங்களை செய்யலாம் என்பதற்கான யோசனையை நாங்கள் செய்து கொண்டு இருக்கிறோம்.

மீனவர்களுக்கு இன்ஷுரன்ஸ் கொண்டு வரலாமா அதை எப்படி செயல்படுத்துவது என்பதற்கான ஆலோசனையை இந்தத் துறையின் மூலமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான ஆலோசனை இலாகாவில் இருந்து வரும்போது அரசு பரிசீலித்து அதற்கான ஏற்பாடுகளை செய்யும் என்று சொல்லி இந்த மானியக் கோரிக்கையிலே எந்த அளவுக்கு அரசு அக்கறை கொண்டிருக்கிறது, மீனவர்கள் முன்னேற்றத்திலே எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இறால் போன்ற மீன்களை எல்லாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது என்று சொன்னார்கள். எனக்குக் கிடைத்த தகவலின்படி 1974-75-ல் ஏற்றுமதியான இறால் 4,520 டன்கள். இதனுடைய மதிப்பு 8 கோடி ரூபாயாகும். 1975-76-ல் ஏற்றுமதியான இறால் 5,829 டன்கள். இதனுடைய மதிப்பு 13.25 கோடி. சென்ற ஆண்டு 1976-77-ல் ஏற்றுமதியானது 8,231 டன்கள் ஆகும். இதனுடைய மதிப்பு 25.83 கோடி ரூபாயாகும். நம்முடைய மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் பேசும் போது இதையெல்லாம் தேசியமயம் ஆக்கவேண்டும் என்று சொன்னார்கள். உண்மையிலேயே தேசிய மயம் ஆக்க வேண்டுமென்றுதான் அரசாங்கம் இதைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 1-50)

இன்றையதினம் கோடிக்கணக்கான ரூபாய்க்கு தமிழ்நாட்டுக் கடற்கரையில் கிடைக்கிற இவை இங்கே பயன்படுத்தப்படாததால் இங்கிருந்து பிடிக்கப்பட்டு, கேரள மாநிலத்திற்குப் போய் அங்கிருக்கிற தனிப்பட்டவர்களால் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவர்களுக்கு எவ்வளவோ லாபம் கிடைக்கிறது. இதை நான் நல்ல முறையிலே தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறேன். அதை நாமே ஏற்று நடத்தலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். அந்த யோசனையும் இருக்கிறது. இந்தத் தொழிலிலே ஈடுபடுவதென்றால் எத்தனையோ கோடி ரூபாய்களை மூலதனமாகப் போடவேண்டியிருக்கும். நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கண் திறந்தால் இப்படிப்பட்ட நிலைமையை தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு இவைகளை ஏற்றுமதி செய்கின்ற தொழிலைச் செய்வதன் மூலம் பல கோடிக் கணக்கான ரூபாய் லாபத்தை இந்த அரசு பெற முடியும்.

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1977 ஆகஸ்ட் 12

அதே போல நம்முடைய நாட்டிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய்க்கு கருவாடு போன்ற பதப்படுத்தப்பட்ட மீன்கள் இலங்கை, மலேசியா போன்ற நாடுகளுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. இவற்றையும் இந்த அரசே செய்யலாமா என்ற ஆலோசனையையும் அதிகாரிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே பல்வேறு திட்டங்களையும் மீனவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்குமான பல திட்டங்களையும், நாங்கள் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே இவ்வளவு விளக்கத்திற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கையின் மீது அவர்கள் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையின் மீது கூறப்பட்ட பல்வேறு யோசனைகளையும் நிறைவேற்றிட இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும், அந்த முயற்சிகளிலே ஈடுபடும் என்று கூறி மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் மெத்த பணிவன்போடு கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நம்முடைய கூட்டுறவுத் துறை. இந்தக் கூட்டுறவுத் துறை விவாதத்திலே ஏறத்தாழ 18 உறுப்பினர்கள் தங்களுடைய அரிய பெரிய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் துறையைப் பொறுத்தமட்டிலே நான் ஏற்கெனவே அரசின் கொள்கையை பகிரங்கமாக எடுத்து உங்கள் முன்னாலே வைத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கூட்டுறவுத் துறையில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஏற்கெனவே அச்சடித்துக் கொடுத்த புத்தகத்திலே இந்தத் துறை பற்றிய விளக்கங்களைக் கொடுத்திருக்கிறோம். எனவே மீண்டும் அவற்றை விரிவுபடுத்திச் சொல்லத் தேவையில்லை என்பதால் மேலும் விளக்கங்களைத் தெரிவிப்பதற்குப் பதிலாக இந்தத் துறை எப்படி செயல் பட வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது என்பதை மாத்திரம் நான் இந்த நேரத்திலே மிகத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல யோசனைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக ஒரு சிலவற்றைப் பற்றி மட்டும் குறிப்பிட்டு பதில் அளித்தால் போதும் என்று நினைக்கிறேன்.

அந்த அடிப்படையில் கூட்டுறவுத்துறையைப் பொறுத்தமட்டில் தமிழகத்தில் பல்வேறு துறைகளிலும் இது ஒரு நல்ல துறை என்று சொல்லப்படும். காரணம், ஏழை எளியவர்கள், நலிந்துள்ளவர்கள் நிறைந்துள்ள விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று ஆரம்பிக்கப்பட்ட துறை தான் கூட்டுறவுத் துறை. இதிலே யாருக்கும் நிச்சயம் சந்தேகம் வேண்டாம். சந்தேகம் இருக்காது என்று கருதுகிறேன்



1977 ஆகஸ்ட் 12] [திரு. க. உரோ. எட்மண்ட்]

காரணம் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராஜன் அழகாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன். இந்தத் துறையின் மூலம் 47 சதவீதம் நலிந்தவர்கள் பயன் பெறுகிறார்கள். அப்படியென்றால் மீதமுள்ள 53 சதவீதம் வசதி படைத்தவர்கள் இதன்மூலம் பயன் பெறுகிறார்கள் என்று பொருள் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராஜன் அவர்கள் அழகாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இந்தத் துறை யாருக்குப் பயன்படவேண்டும், எப்படிப் பயன்படவேண்டும் என்பதில் இந்த அரசு மிகத் தெளிவாக இருக்கிறது. நாட்டிலே நலிந்தவர்கள், வக்கற்றவர்கள், யாருக்கு இந்தத் துறையின் சேவை தேவையோ அவர்களுக்கு முதலில் இதனுடைய சேவை கிடைக்க வேண்டும். இதனுடைய சேவை அவசியப்படாதவர்களுக்கு, தேவைப்படாதவர்களுக்கு தேவையில்லை என்று இந்த அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே சொல்லியாக வேண்டும். இந்தத் துறையை பொறுத்த மட்டிலே நூற்றுக்குநூறு இல்லாதவர்களுக்கு, நலிந்தவர்களுக்கு இந்தத் துறை பயன்பட வேண்டும். இந்தத் துறை இப்படிப்பட்டவர்களுக்குப் பயன்பட வேண்டுமென்றால் இந்தத் துறையைப் பொறுத்த வரையில் நாணயம் இருக்க வேண்டும், நேர்மை இருக்க வேண்டும். அது மட்டும் போதாது. இந்தத் துறையைப் பொறுத்த வரையில் பாரபட்சம் அற்ற தன்மை இருக்க வேண்டும்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.]

இன்றையதினம் பழைய வரலாற்றை எடுத்துப் படித்துப் பார்த்தால் வங்கிகளால் கொடுக்கப்படுகிற கடன் யாருக்கெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் நலிந்தவர்களுக்கு, வாழ்க்கையில் அடித்தளத்தில் இருக்கின்றவர்களுக்கு அளிக்கப்பட்டதா என்றால் நிச்சயமாக இல்லை. அதை விட வசதி உள்ளவர்களுக்கு சிபாரிசு இருந்தால் மட்டும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த அரசு அதிலே மிகுந்த கவனமாக இருக்கிறது. தன்னுடைய கட்சிக்காரர்கள் பயன் பெற வேண்டுமென்ற எண்ணமில்லாமல், எல்லாக்கட்சிக்காரர்களும் பயன் பெறத் தக்க அளவில் அமைய வேண்டும். இந்த எண்ணம் உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்திலே இந்த அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. கூட்டுறவுச் சங்கம் நலிந்தவர்களுக்கு, இல்லாதவர்களுக்கு அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்குத் தான் பயன்பட வேண்டும். அவர்களுக்குத் தான் கடன்கள் கிடைக்க வேண்டும் என்பதிலே இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறை எவ்வளவோ முன்னேற்றங்களைப் பெற்றிருக்கிறது. இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால் இந்தத் துறை முன்னேற்றம் பெற்றிருந்தாலும் இந்தத் துறையின் மூலமாக அதிகமான விவசாயிகள் முன்னேற்றம் அடைந்திருந்தாலும் இந்தத் துறையினால் முழுமையான முன்னேற்றம் இந்த நாடு பெறவில்லை இந்த நாட்டு மக்கள்

பெறவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளத் தான் வேண்டும். காரணம், கடந்த கால வரலாறு அப்படி இருந்திருக்கிறது. இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் ப. உ. சண்முகம் பழிவாங்குகிற நோக்கத்தோடு அன்றையதினம் இருந்த குடியரசுத் தலைவர் ஆட்சியில் விசாரணைக் குழு போட்டார்கள், பாரதிக் குழுவைப் போட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். அங்கே இருந்து வருகிற அறிக்கைகளைப் படித்துப் பார்த்தால் எந்த நிலைமையில் இருக்கிறதென்றால் உண்மையிலேயே அவ்வளவு பெரிய தவறுகள் நடந்திருக்கின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் ப. உ. சண்முகம் விளம்பரம் கொடுத்தது தவறா என்று கேட்டார்கள். தவறு என்று சொல்லவில்லை. ஆனால் விளம்பரத்திற்கு எவ்வளவு தான் கொடுப்பது என்று மனச்சாட்சி இல்லையா? விதிகள் இருக்கலாம். அதைக் கொடுப்பதற்கு குழுவிற்கு அதிகாரம் இருக்கலாம். பைலா இருக்கலாம். ஆனால் மனச்சாட்சி என்று ஒன்று இருக்கிறது எவ்வளவு தான் கொடுக்கலாம் என்று. இந்த மலருக்கு இவ்வளவு தொகை விளம்பரம் தேவையா என்று அந்தக் காலத்தில் நிர்வாகத்தை நடத்தியவர்கள் யோசிக்கவில்லை என்று தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே பாரதிக் குழு பழிவாங்கும் நோக்கத்தோடு அமைத்தார்கள் என்று நான் சொல்லுவதற்குத் தயாராய் இல்லை. ஆனால் தேவையான நேரத்தில் தேவையான காரியத்திற்காக அமைத்தார்கள். அந்தக் குழு ஒரு அறிக்கையை கொடுத்திருக்கிறது. அந்த அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டால் இனிமேல் இப்பேர்ப்பட்ட தவறுகள் இந்தத் துறையில் நடக்காமல் இந்தத் துறை ஏழை எளிய மக்களுக்கு முழுமையாக பயன்படுவதற்கு இந்தப் பாரதிக் குழுவின் அறிக்கை பயன்படும் என்ற நம்பிக்கையில் சொல்லுகிறேன். ஆகவே பழிவாங்கப்படுவதற்காக செய்யப்பட்டது என்று சொல்லவில்லை. ஆனால் விளம்பரத்தில் மட்டும் தவறுகள் நடக்கவில்லை. கொடுக்கப்பட்ட கார்களை தவறான வழியில் பயன்படுத்தியிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான வழக்குகள் இந்தக் கூட்டுறவுத் துறையில் இருக்கின்றன. அதில் அதிக சதவிகித வழக்குகள் 'கேசஸ் ஆப் மிஸ்அப்ரோபிரியேஷன்'. கையாடல் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கையாடல் செய்தவர்களை விசாரிப்பது பழிவாங்கும் நோக்கத்தோடு தான் என்று சொன்னால் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இல்லை.

திரு. ப. உ. சண்முகம் : நான் பேசும்பொழுது சொன்னேன். பணம் கையாடல் போன்ற தவறை யார் செய்திருந்தாலும் அவர்கள் மீது வழக்குப் போடலாம் தண்டிக்கவேண்டுமென்று தான் வலியுறுத்திச் சொன்னேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த ரிப்போர்ட்டில் என்ன எழுதியிருக்கிறது என்று இரு சாராருக்கும் தெரியாது. அமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையின் நகலை சபையில் வைத்தால் எல்லா உறுப்பினர்களுக்கும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.





மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மாநிலத்தில் இருக்கிற 15 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் பற்றிய அறிக்கைகள் என்னிடத்தில் இருக்கின்றன. அரசுக்கு வந்திருக்கிறது. இந்த அவையில் இப்போது வைக்க வேண்டியஅவசிய இல்லை. அவசியம் வரும்பொழுது நிச்சயமாக வைக்கப்படும். காரணம், பப்ளிக் டாக்குமெண்ட்ஸ்......

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, பொதுவாக கமிஷன் போட்டால் அதன அறிக்கையை அவையில் வைப்பது வழக்கம். முன்பு குடியரசுத் தலைவர் ஆட்சி நடந்தது. அது வைக்கப்படவில்லை. இப்படி ஏன் அதை ரகசியமாக படிக்க வேண்டும்? அந்த அறிக்கையை அவையில் வைத்தால் எல்லோரும் விவரங்களைத் தெரிந்து விவாதம் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அதை ஏன் மூடு மந்திரமாக வைத்திருக்க வேண்டும்.? அதில் என்னதான் இருக்கிறது என்று பார்க்கலாமே, சபையில் வைக்கலாமே, என்ன தப்பு இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, இப்போது இந்த அறிக்கையின்படி ஏற்கெனவே சர்சார்ஜ் நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அந்த அறிக்கையின் நகலை வைப்பது என்றால் ஒவ்வொரு உறுப்பினருக்கும் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்யும்பொழுது எடுக்கப்படுகிற சர்சார்ஜ் நடவடிக்கைகளுக்குப் பாதகம் ஏற்படலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அந்த அறிக்கையை கொடுக்காமல் இருக்கிறோம். அந்த அறிக்கைகள் பத்திரமாக இருக்கின்றன.

[பிற்பகல் 2-00]

இது இந்த அரசு போட்ட விசாரணைக்குழு அல்ல. இடையில் இருந்த ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு. அந்தக் குழு அதன் அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது. தமிழ் நாட்டில் இருக்கிற 15 மாவட்ட கூட்டுறவு வங்கிகளுக்குண்டான அறிக்கைகளை அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த 15யையும் ஒட்டுமொத்தமாக படித்துப் பார்த்தால் அநேகமாக எல்லாக்குற்றச்சாட்டுகளும் ஒரே குற்றச்சாட்டுகளாக இருக்கிறது, ஒரே மாதிரியான தவறுகள் எல்லா மத்திய கூட்டுறவு வங்கிகளிலும் நடைப்பெற்றிருக்கிறது. மிகப்பெரிய ஆச்சரியமாக இருக்கிறது தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கார்கள் தவறான வழிகளில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. மாவட்ட வங்கிகளில் இருக்கிற தொலைபேசிகள் தவறான வழிகளில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன ஒவ்வொரு தொலைபேசிக்கும் ஆண்டு ஒன்றுக்கு பல்லாயிரக் கணக்கான ரூபாய் கொடுக்க வேண்டிய நிலை அந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிற நேரத்தில் பொறுப்போடு அந்த வங்கியை நடத்துகிறவர்கள் இது மக்கள் பணம் என்று எண்ணியிருப்பார்களேயானால் இப்பேர்ப்பட்ட ஊதாரித்தனமான செலவுகளை அவர்கள் செய்திருப்பார்களா என்று அருள் கூர்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும். பல

கோடி ரூபாய் அரசு கடனாக வாங்கி இவற்றில் மூலதனமாக முடக்கியிருக்கிறது. எதற்காக முடக்கியிருக்கிறது என்றால் சில மாவட்டங்களில் பாங்க் தலைவர்கள் அல்லது அந்தக் கட்சியை சார்ந்தவர்கள் அதை அனுபவிப்பதற்காக அல்ல. நாட்டிலுள்ள லட்சக்கணக்கான விவசாயிகள் பயன் பெறுவதற்காக இந்தத் துறையை அன்றைய தினம் அரசு ஏற்படுத்தியிருந்தாலும் அதை நடத்திச் சென்றவர்கள் எவ்வளவு தவறாக இந்த கூட்டுறவுத் துறையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்துவதற்காகத்தான் இவற்றை இந்த நேரத்தில் சொல்கிறேனே தவிர யாருடைய மனதையும் புண்படுத்துவதற்காகச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தவறு எதனால் நடந்தது ?

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பாரதிக் கமிட்டி அறிக்கை இந்த அவையில் வைக்கப்படுமேயானால் பல சந்தேகங்கள் தீருவதற்கு ஏதுவாகும். ஏனென்றால் இப்போது பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஏதோ அன்றைக்கு ஆளும் கட்சியில் இருந்தவர்கள், மத்திய கூட்டுறவு வங்கிகளில் தலைவராக இருந்தவர்கள் பெரிய குற்றங்களை இழைத்து விட்டார்கள் என்ற குற்றச்சாட்டு இன்று இந்த அவையில் எழுப்பப்பட்டு அவைகள் பத்திரிகைகளில் விளம்பரமாக இருக்கின்றன. அந்த அறிக்கை இங்கே வைக்கப்பட்டால் அந்தக் குற்றச்சாட்டுகள் என்னென்ன என்பதை நாடு தெரிய ஏதுவாக இருக்கும்.

அது மாத்திரமல்ல. அந்தக் குற்றச் சாட்டுகளுக்கு உட்படுத்தப்பட்டிருப்பவர்கள் யார் யார் ?, இப்போது அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறார்களா அல்லது வேறு எந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்ற அந்த விவரங்கள் தெரிய ஏதுவாகும்,

எல்லோரும் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள்தானா அல்லது அதிலே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்களா அல்லது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களா அல்லது புதிதாக ஏற்படுத்தப்பட்ட மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ளவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள், அந்த மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவை ஆளும் கட்சி தேர்தல் நேரத்தில் பெற்றதா என்ற இவ்வளவு விவரங்களையும் தெரிந்து கொள்ள ஏதுவாகும். எனவேதான் பாரதிக் குழு அறிக்கையை இந்த அவையில் வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பாரதிக் குழு அறிக்கையை இந்த அவையில் இப்போது வைக்க வேண்டுமா அல்லது கொஞ்சம் காலம் கழித்து வைக்கலாமா என்று இந்த அரசு முடிவு செய்யும், அதை நிச்சயமாக இந்த அவையில் வைப்பதற்குண்டான வகையில் செய்யும், இதை எல்லோரும் தெரிந்து கொள்ளவேண்டும்.



நான் சொல்வது, இப்போதைக்கு அது தேவை இல்லை, யார் யார் தவறு செய்தார்களோ அவர்களுக்கு அந்தத் துறையிலிருந்து சர்சார்ஜ் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. யார் யார் எந்தத் தவறுகளைச் செய்திருக்கிறார்கள், யார் யார் எவ்வளவு கையாடல் செய்திருக்கிறார்கள், ஊழல் செய்திருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். எந்தெந்த கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்திருந்தாலும் பொதுப் பணத்தைச் சூறையாடியவர்களை, சுரண்டியவர்களை, ஊழல் பேர்வழிகளை அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி அந்தத் தவறைச் செய்தவர்கள் உண்மையிலேயே மன்னிக்க முடியாத தவறைச் செய்திருக்கிறார்கள். (ஆரவாரம்).

அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் சமுதாய விரோதிகள். விவசாயிகளுக்கு பல்வேறு கொடுமைகளைச் செய்தவர்கள், அவர்களின் ரத்தத்தை உறிஞ்சியவர்கள் என்றுதான் இந்த அரசு கருதுகிறதே தவிர அவர்கள் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆகவே நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், இவர்கள் இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆகவே அவர்களுக்கு சலுகைகள் காட்டவேண்டும் என்ற பாகுபடுத்தி நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்காது என்று இந்த நேரத்தில் மெத்தப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ப. உ. சண்முகம் : மன்னித்துக் கொள்ள வேண்டும். அரசியல் வஞ்சம் தீர்ப்பதற்காக போடப்பட்ட கமிஷன் என்று தெரிவித்தேன். அமைச்சர் அவர்கள் அந்தக் குழுவின் அறிக்கையை இங்கு காலம் வரும்போது வைக்கிறேன் என்று சொன்னார்கள். நான் சொன்னதற்கு ஆதாரம் வேண்டுமென்றால் சொல்கிறேன்.

நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பு, எமர்ஜென்சி இந்த நாட்டில் அமலில் இருந்தபோது அன்றாடம் வானொலியில் ஒவ்வொரு பாங்கையும் பற்றியும்—இந்தக் குழு அறிக்கையை, ரகசியமாக வைத்திருப்பதை—வானொலியில் சொல்வதை தங்கள் கொள்கையாக வைத்திருந்தது அன்றைய அரசு. ஆகவே அதையும் சேர்த்துச் சொல்கிறேன். அரசியல் வஞ்சம் தீர்ப்பதற்காக போடப்பட்டது அது என்பதற்கு அது ஒரு சான்றே போதும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய தினம் பாரதிக் குழு நியமிக்கப்பட்டது. அன்றைய தினம் நியமிக்கப்பட்டது வஞ்சம் தீர்ப்பதற்காக என்று சொல்லப்பட்டது. அவர்கள் அப்போது இருந்தவர்கள் என்ன நோக்கத்தோடு நியமித்தார்கள் என்பது நமக்கு தெரியாது.

ஆனால் இன்றைய தினம் அவர்கள் எந்த நோக்கத்திற்காக அமைத்தார்களோ அது நல்ல நோக்கமாக இருக்கிறது. இதன் மூலம் விசாரணை நடத்தியதில் சில உண்மைகள் தெரிகின்றன, மேலும் இவற்றின் மூலம் நாட்டு மக்கள் நல்ல பலனைப் பெறுவார்கள் என்ற அடிப்படையில்தான் இதை நான் சொல்லுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : பாரதி ஒரு அறிக்கை தந்திருக்கிறார். அந்த அறிக்கையில் மாவட்ட கூட்டுறவு வங்கிகளிலிருந்து தலைவர்கள் மீது பல குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதில் சொல்லப்பட்டிருக்கின்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் தீர்ப்பாக எடுத்துக்கொள்ள முடியாது. குற்றங்கள் சொல்லப்பட்டிருப்பதாலேயே இதில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாம் குற்றவாளிகளாக ஆகிவிட மாட்டார்கள்.

ஆகவே குற்றவாளிகள் என்று கருதப்பட்ட பின்னால் தான் அவர்கள் எல்லாம் சமுதாய துரோகிகள் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே இந்த அறிக்கை அவை முன் வைக்கப்படுமானால், யார் யார் சமுதாய துரோகிகள் என்பதை நாட்டு மக்கள் புரிந்து கொள்வார்கள்.

ஆகவே நான் மெத்தவும் பணிவன்புடனும், மிகுந்த அக்கறையுடனும் கேட்டுக் கொள்வது நாட்டு மக்கள் சமுதாய துரோகிகள் யார் என்பதை அறிந்து கொள்வதற்குப் பயன்படுகின்ற வகையில் பாரதிக் குழுவினுடைய அறிக்கையை இங்கே வைக்க வேண்டும் என்பதாகும். வைக்க வேண்டும் என்று மெத்தவும் பணிவன்போடு மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. ஊத்திராபதி : கூட்டுறவுத் துறையில் தஞ்சாவூரில் மாணிக்கம் என்பவர் கைது செய்யப்பட்டதாக . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்டவர்களைப் பற்றி எல்லாம் இப்போது சொல்ல வேண்டியதில்லை. இப்போது வேண்டாம். . .

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மன்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அறிக்கை இப்போது தான் என் கைக்கு வந்திருக்கிறது. நான் இன்னும் முழுமையாகப் படிக்கவில்லை. இதில் பல விவரங்கள் இருக்கின்றன. விரிவாக . . . (எதிர்க்கட்சி வரிசையிலிருந்து சிலர் சிரித்தனர்) இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது? அமைச்சர் என்றால் ஃபைல் வந்தவுடன் பார்த்து விட்டு சொல்லிவிட முடியாது . . . .

திரு. க. சுப்பு : அமைச்சர் அவர்களுக்குப் படிக்க இன்னும் நேரம் கிடைத்திருக்காது. இது ஒரு முக்கியமான அறிக்கை. ஆகவே . . .





மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சம்பந்தப்பட்ட பிரச்னை, மிகப் பெரியப் பிரச்னை என்பதும், அது உண்மையிலேயே கவனிக்கப்பட வேண்டிய பிரச்னை என்பதும் நாட்டு மக்கள் உன்னிப்பாக இதன் விளைவுகளைப் பற்றி அறிய காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த அவை அக்கறையோடு ஏற்றுக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த அரசு எதையும் மறைமுகமாக வைத்துக் கொண்டு ருக்கும் தெரியாமல் பழி வாங்காது என்பதையும் கூட்டுறவைப் பாறுத்த வரையில் அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் மட்டும் ல்லாமல், அறிக்கையின்படி மட்டுமில்லாமல், நிர்வாகத்தின் லம் இலாகாவின் மூலம் கிடைத்திருக்கின்ற உண்மைகளையும் வத்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை நான் ங்கே கொஞ்சம் நிதானத்தோடும், எல்லோரும் சரிவர புரிந்து காண்ட இந்தப் பிரச்னையை கிளப்புவதன் மூலமாக வேறு ல குழப்பம் ஏற்படுவதற்கு காரணமாகிவிடக் கூடாது என்ற லையிலும், யார் யார் என்றெல்லாம் சொல்லக்கூடிய நிலைமைக்கு ப்போது ஆளாக்க வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக் காள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, பாரதிக் குழு அறிக்கையில் என்ன இப்போது சொல்லிருக்கிறார்கள் என்றால் இதில் சம்பந்தப்பட்டவர்கள் சர்சார்ஜ் ணத்தைக் கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ணத்தைக் கட்டிவிட்டால் போய்விடலாம்.

ஆனால் இந்த அரசினுடைய நோக்கம் அதுவல்ல. பணத்தைக் கட்டிவிட்டு தப்பித்துக் கொள்ளலாம் என்றிருப்பவர்கள், அவர் கள் யாராக இருந்தாலும் சரி, அவர்களுக்கு சிறைவாசம் கொடுத் தால்தான், இதைப் பார்த்து மற்றவர்களுக்கும் பாடமாக இருக்கும் என்பதற்காகத்தான் இதை வைத்துக்கொண்டிருக் கிறது. (ஆளும் கட்சி தரப்பிலிருந்து ஆரவாரம்). இந்தக் குழுவினுடைய அறிக்கையைப் பார்த்து அதில் யார் தவறுகள் செய்திருந்தாலும், அவர்கள் மீது வழக்குப் போட்டு, அவர் களுக்கு தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று தான் நான் உண்மையிலேயே ஆசைப்படுகிறேன். அதற்காகத்தான் இதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம் . . .

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இவ்வளவு பயங்கரமாக இருக்கிறது என்றால், இதை அவைமுன் வைப்பதற்கு ஏன் பயப்படுகிறீர்கள் ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : ஒருவேளை கிரிமினல் வழக்கு போட வேண்டும் என்றிருந்தால், அப்போது இன்வெஸ்டிக்கேஷனுக்கு இப்போது அறிக்கையைப்பற்றி தெரிவிப்பது இடையூறாக இருக்கலாம்...

(பிற்பகல் 2·10)

ஆகவேதான் அரசு ஒரு முடிவு எடுத்த பின்னர், கிரிமினல் வழக்குகளை போடுவதற்கு சட்டப் பிரகாரம் இடமில்லை என்று தெரிந்த பின்னர் அல்லது சட்டப் பிரகாரம் கிரிமினல் வழக்கு போடுவதற்கான வழிவகை இருக்கிறது என்று தெரிந்து, கொடுக்க வேண்டிய புகார்களைக் கொடுக்க வேண்டிய இடத்திற்கு கொடுத்து இன்வெஸ்டிகேஷன் முடிந்த பின்னர், இந்த ரிப்போர்ட்டுகளை, இந்தக் குழுவின் அறிக்கையை இந்தச்சட்ட மன்றத்திலே தாக்கல் செய்வதற்கு நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறோம். எனவே, அந்த நிலைமை முடிந்த பின்னர், நிச்சயமாக இந்த அறிக்கைகள் இந்த மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே மெத்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவேதான், அதை இப்போது வைக்காமல் இருக்கிறோம். அதைப் பற்றிய ஆலோசனை அரசு மட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட தவறுகள் எப்படி நடந்திருக்கிறது என்று யோசித்துப் பார்த்தால், கட்சியின் கண்ணோட்டத்தில், நம்முடைய கட்சியின் உறுப்பினர்கள் இன்னின்ன வங்கிகளுக்குத் தலைவராக இருக்க வேண்டும், இன்னின்ன வங்கிகளுக்கு இயக்குநர்களாக இருக்க வேண்டும் என்று இதற்கு முன்னாலே இருந்தவர்கள், இந்த நிலைமைகளைக் கையாண்ட காரணத்தினாலேதான், அதன் காரணமாக ஏராளமான தலைவர்களும், இயக்குநர்களும் நியமனம் செய்யப்பட்ட காரணத்தினால் இப்படிப்பட்ட தவறுகள் நடந்திருக்கின்றன. இப்படிப்பட்ட தவறுகள் நடந்ததற்கு, இப்படிப்பட்ட நியமனங்கள்தான் வழிவகை செய்திருக்கிறது என்பதில் இந்த அரசு அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கிறது.

பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். அதில், இந்த கூட்டுறவு வங்கிகளில் ஜனநாயக முறைப்படி தேர்தல்கள் நடக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்த அரசு ஜனநாயகத்திலே அதிகமான நம்பிக்கை கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவு வங்கிகளில் இன்றையத் தினம் தனி அதிகாரிகள் போட்டிருப்பதை இந்த அரசு உண்மையிலே விரும்பவில்லை. இந்த அரசு உடனடியாக இந்த கூட்டுறவு சங்கங்களின் குழுக்களுக்கு தேர்தல்களை நடத்த வேண்டுமென்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. அதற்கான சட்டங்களை எப்படி மாற்றுவது, என்னென்ன திருத்தங்களைச்செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நான் ஒன்றை மட்டும் மிகத் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையைப் பொறுத்த மட்டில், முந்திய அரசு ஆட்சியில் இருந்தபோது செய்த தவறுகளை, ஆட்சியின் பேரிலோ அல்லது கட்சியின் பேரிலோ செய்த தவறுகளை





இன்றுள்ள அரசு தனது ஆட்சியின் பேரிலோ அல்லது கட்சியின் பேரிலோ நிச்சயமாகச் செய்யாது என்பதை நான் ஒரு உறுதிமொழியாக கொடுப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் (ஆரவாரம்) இந்த அறிவிப்பை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : உறுதிமொழியை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் எனக்கு ஏற்பட்டுள்ள வியப்பும், அச்சமும் என்னவென்றால் நாடாளுமன்றத் தேர்தல் நடந்த நேரத்திலே, எந்தெந்த வங்கிகளில் என்னென்ன சர்-சார்ஜ்—போன் செய்தது. வாகனங்களை துர்விநியோகம் செய்தது விளம்பரம் கொடுத்தது என்ற வகையில், எந்தெந்த வங்கிகளில் தவறுகள் நடந்தன என்பதை, அந்த வங்கிகளின் தலைவர்களின் பெயர்களை எல்லாம் குறிப்பாக வானொலியிலே செய்தியாகச் சொல்லப்பட்டது. பத்திரிகைகளிலேயும் இதுபற்றி வந்தது. இந்தத் தலைவர்கள் 12 பேர்களில், 6 வங்கிகளின் தலைவர்கள் கழகத்தை விட்டு, மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துவிட்டார்கள். இவ்வளவு உறுதியாக இருக்கும் ஆளும் கட்சியினர், மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவைத் தேர்தல் காலத்திலே பெற்றுக் கொண்டது என்ன நியாயம்? இது சமுதாயத் தவறுகளை ஊக்குவிப்பதாகும் அல்லவா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையத் தினம் ஆண்டு கொண்டிருப்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகும். நாடாளுமன்றத் தேர்தல் என்றெல்லாம் சொன்னார்கள். மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம் சட்ட மன்றத் தேர்தலுக்கு ஒரு மாத காலத்திற்கு முன் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கட்சியில் யார் யார் இருக்கிறார்கள், அதிலே எப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்பது உடனடியாக தேர்தல் நடந்த நேரத்திலே தெரிந்து கொள்வது அவசியமில்லை. அதற்கான நிலைமை அப்போது இல்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : மறுபடியும் காலவித்தியாசத்தின் காரணமாக ஒரு தவறு செய்கிறோம். அதாவது நாடாளுமன்றத் தேர்தலிலே அந்தத் தலைவர்களுடைய பெயர்கள் அறிவிக்கப்பட்டன. சட்டமன்றத் தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன்புதான் தெரியும் என்று சொன்னார்கள். சட்டமன்றத் தேர்தலில் ஏன் அவர்களுடைய ஆதரவைப் பெற்றிருக்கிறார்க என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு சேதியைக் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் சொன்னார்கள். குற்றம் சாட்டப்பட்டவுடனேயே அவர்கள் குற்றவாளி ஆகிவிடுவதில்லை என்று சொல்லியிருக்கி

கிறார்கள். (ஆரவாரம்) தீர்ப்பு வருகிற வரையில் அவர்கள் எங்களை ஆதரிப்பது என்று வந்தால் நாங்கள் அதை ஏற்பது தவறு அல்ல என்பதை அவர்களே ஏற்றுக் கொள்வார்கள்.

அது போல், அவர்கள் குற்றசாட்டுக்கு ஆளான பல பேர்களுடைய ஆதரவைப் பெற்றவர்கள் என்பதையும் இந்த நாடு நன்றாக அறியும்.

ஆகவே, தேர்தல் நேரத்தில் யார் யாரோடு கூட்டுச் சேருகிறார்கள் என்பது அவரவர்களுடைய தேவையைப் பொறுத்து அது நடைபெறுகிறதே தவிர, அது கொள்கைக் கூட்டு என்றோ, லட்சியத்தின் முடிவு என்றோ கொள்வதற்கில்லை என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். இதுதான் தொடர்கதை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்).

திரு. மு. கருணாநிதி : முதலமைச்சருக்கு மனதார நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். குற்றம் சாட்டப்பட்ட காரணத்தால் அவர்கள் குற்றவாளி ஆகிவிடுவதில்லை என்று கூறியிருக்கிறார்கள். அதற்காக நன்றி கூறிக்கொள்கிறேன். தேவைக்காகக் கூட்டுச் சேர்ந்தது, இது தொடர்கதை என்று குறிப்பிட்டார்கள். அதையும் ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் : இது தொடர்கதை என்று சொல்லவில்லை. 'தேவை' என்று சொல்லவில்லை. 'அவரவர்களுடைய தேவை' என்று சொன்னேன். அதை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். யாருக்குத் தேவையோ, யாரோடு சேர்ந்தால் நல்லது என்று நினைத்து அவரவர்கள் கூட்டுச் சேருகிறார்கள். சேர்ந்து கொள்ளுகிறவர்கள் தேவையா இல்லையா என்ற பிரச்சினையைப் பேசுவது நாகரிகமாக இருக்காது. பிறரை அவமானப்படுத்த விரும்பவில்லை.

இன்னொன்றை நிச்சயமாகச் சொல்லுகிறேன். குற்றம் சொல்லிய உடனேயே யாரும் குற்றவாளியாகி விடுவதில்லை. 'கைதி, என்றுதான் நீதி மன்றத்திலும் சொல்லுவார்கள். நீதிமன்றத்தில் நிற்க வைப்பார்கள். குற்றவாளி என்று தீர்ப்பளிக்கும்வரை குற்றவாளி என்று சொல்லக்கூடாது என்பது சட்டமாகும்.

அந்த வகையில் எங்களைப் பொறுத்தவரை நாங்கள் யாரையும் குற்றவாளி என்று சொல்லவில்லை. மக்கள் மத்தியில் சொல்லும் போது 'நீங்கள் தீர்ப்புக் கூறுங்கள்; இதற்கு ஒரு விசாரணை வேண்டும்' என்று தான் கேட்டிருக்கிறோமே தவிர—இன்னமும் நாங்கள் இன்னின்ன காரியத்திற்கு இவர்கள் தான் பொறுப்பு என்று முடிவைச் சொல்லவில்லை. முடிவு நீதி மன்றத்தின் கையில் இருக்கிறது என்பதைப் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன்.



கடன்களை வசூல் செய்கிறார்கள், ஜப்தி செய்கிறார்கள் என்று பல்வேறு உறுப்பினர்கள் சொன்னார்கள். மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் கோவிந்தராஜன் அவர்கள் கூட ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். பொதுவாக இந்த அரசு இப்பேர்ப்பட்ட கடன்களை வசூலிப்பதில் நிர்ப்பந்தம் காட்ட வேண்டாமென்றுதான் உத்தரவிட்டிருக்கிறது. அதற்காக வசதி படைத்தவர்களுக்கு, பணக்காரர்களுக்குச் சலுகை கொடுக்கலாமா என்றால் நிச்சயமாகக் கொடுக்க முடியாது. ஏழை எளியவர்கள், நலிந்து போனவர்கள் ஆகியவர்களிடம் கடன் வசூலிப்பதில் நிர்ப்பந்தமாக வசூல் செய்யக்கூடாது, ஜப்தி செய்யக்கூடாது என்ற பொதுவான உத்தரவை இந்த அரசு பிறப்பித்திருக்கிறதேயொழிய அதிலே பணக்காரர்கள் சலுகை பெற நிச்சயமாக இடம் இருக்கக்கூடாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக கூட்டுறவுச் சங்கங்கள் கடனை வசூலிக்கின்ற முறை தெரியும். அனுவாரி சர்டிபிகேட் கொடுத்தால் வசூல் கட்டாயம் செய்வதில்லை குறுகிய காலக் கடனை மத்திய காலக் கடனாக மாற்றிக் கொடுக்கக்கூடிய வகையில் வாய்ப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. சில நேரங்களில் ஒரு நிலத்தின் மீது கடனை வாங்கி அந்த நிலத்தை இன்னொருவருக்கு விற்பதற்கு ஏற்பாடு செய்திருப்பார்கள், அல்லது வேறு விதமான முறைகளைக் கையாண்டிருப்பார்கள். அந்த நேரத்தில் கொடுத்த பணத்தைப் பெற இப்பேர்ப்பட்ட நிலைமையைக் கையாள வேண்டுமென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள்.

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒரு நாள் சட்டமன்றத்தில் தன்னுடைய கருத்தைச் சொல்லுகிற போது மாயூரம் தாலூகாவில் வைத்தியலிங்கம் என்பவரின் மனைவியின் திருமாங்கல்யத்தைக் கடனுக்காக எடுத்துக்கொண்டு விட்டார்கள் என்று சொன்னார்கள். இது பற்றி விசாரித்து தகவல் தரவேண்டுமென்று கேட்ட நேரத்தில், நம்முடைய தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஜாயின்ட் ரிஜிஸ்ட்ராரிடமும், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி தனி அதிகாரியிடமும் கேட்ட நேரத்தில் அவர்கள் சில தகவல்களைக் கொடுத்தார்கள். 'அப்பேர்ப்பட்ட சம்பவம் ஏதும் நடக்கவில்லை; வைத்தியலிங்கம் பாண்டூர் கிராமத்தில் மாப்படுகை விவசாயக் கடன் சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறார். அவர் 3,656 ரூபாய் அந்தச் சங்கத்தில் கடனாகப் பெற்று அது மத்திய காலக் கடனாக மாற்றப்பட்டு அதனுடைய முழுப் பாக்கியையும் 28—6—1977 அன்றே அவர் செலுத்தியிருக்கிறார்' என்று கூறியிருக்கிறார்கள்.

கட்டுவதற்கு நோட்டீஸ் அனுப்புவதற்கு முன்னாலேயே அவர் பணத்தைக் கட்டிவிட்டார் என்ற தகவல் வந்திருக்கிறது. நோட்டீஸ் வருவதற்கு முன்னாலேயே பணத்தை அவர் கட்டி விட்டதால் அவரிடத்திலே வங்கியைச் சேர்ந்தவர்கள் இப்படிப் பட்ட காரியத்தைச் செய்யக்கூடிய நிலைமை இல்லை. ஆகவே திருமாங்கல்யத்தை வாங்கிக் கொண்டு போய்விட்டார்கள் என் பது உண்மைக்கு புறம்பானது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

குறிப்பிட்டு ஒரு பகுதியில் எங்காவது உண்மையிலேயே நலிந்து போன விவசாயியாக இருந்தால், கடன் திரும்பச் செலுத்து வதற்கு இயலாமல் இருப்பதற்கு நியாயமான காரணங்கள் இருந்து, அதிகாரிகள் நிர்ப்பந்தம் செய்தார்கள், கெடுபிடி செய் தார்கள், ஜப்தி செய்தார்கள் என்ற நிலைமைகள் நடந்திருந்தால் அவைகளைப் பற்றி இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந் தால் அவை பற்றி அரசு பரிசீலனை செய்து அந்த அளவிற்கு தவறான முறையிலே அதிகாரிகள் நடந்து கொண்டிருப்பார் களானால் அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, பரவலாக, பொதுவாகப் பேசாமல், இப்படிப்பட்ட சம்பவம் உண்மையிலேயே நடந்திருக்கிறது, உண்மையிலேயே நலிந்து போன விவசாயி, உண்மையிலேயே விளைச்சல் இல்லாமல் கஷ்டப் படுகிறவர் என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அரசு அதன் மீது நடவடிக்கை எடுக்கும்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னும் பல் வேறு அரிய பெரிய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். சில குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள். தவறுகள் நடக்க வில்லை என்று நான் சொல்லவில்லை. எல்லாத் துறைகளிலேயும் தெரிந்தோ தெரியாமலோ அரசினுடைய கவனத்திற்கு வராமல் தவறுகள் நடந்திருக்கலாம், அந்தத் தவறுகள் போக்கப்பட வேண்டும் என்பதை இந்த அரசாங்கம் உணர்ந்திருக்கிறது, எனவே பல்வேறு தவறுகளைச் சுட்டிக் காட்டிய உறுப்பினர்கள் எப்படிப்பட்ட தவறுகள் எங்கெங்கே நடந்திருக்கின்றன என்பது பற்றி அவைகளையெல்லாம் தனிப்பட்ட முறையிலே இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய போது இந்தத் துறை சரியான முறையிலே செயல் படுவதற்கான அரிய பெரிய யோசனைகளை ஆலோசனைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆலோசனைகளை எல்லாம் இந்த அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு வருங்காலத்தில் நல்ல முறையிலே செயல்படுகின்ற முறையிலே ஆராய்ந்து பார்த்து, உங்களுடைய ஆலோசனைகள் எல்லாம்—அது எந்தப் பக்கத்திலே இருந்து வந்தாலும்—கொடுக்கப்பட்ட ஆலோசனைகள் இந்தத் துறையின் முன்னேற்



றத்திற்கு, இந்தத் துறையின் மூலமாகப் பயனடைகிற விவ சாயிகளின் முன்னேற்றத்திற்குப் பயனுள்ளது என்று இந்த அரசு கருதுமானால் அப்படிப்பட்ட ஆலோசனைகளைச் செயல் படுத்துவதற்கு நடவடிக்கையை இந்த அரசு எடுத்துக் கொள்ளும் என்ற உறுதியைத் தெரிவித்து இந்தத் துறையை, தூய்மையான முறையில், நேர்மையான முறையில், நாணயம் கெடாமல், கட்சிக் கண்ணோட்டம் பார்க்காமல், ஏழை எளிய விவசாயிகளுக்குப் பயன்படக் கூடிய முறையில் இனிமேல் செயல்படுத்துகிறமுறையில் அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு நிச்சயமாக எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்து இங்கே பல்வேறு ஆலோசனை களைக் கூறிய மாண்புமிகு உறுப்பினர்கள் இதற்காகக் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது இப்போது வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்களுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா?

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பசிநேரம் வந்து விட்டதால் வற்புறுத்த இயலாத நிலை இருக்கிறது.

திருவாளர்கள் எஸ்.ஜே. சாதிக் பாட்சா, எ. சுவாமிதாஸ் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

திரு. ஓ. சுப்பிரமணியன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாத தால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,92,64,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங் கப்பெற வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திருவாளர்கள் பி. எஸ். திருவேங்கடம், எம். அண்ணாமலை, எ. சுவாமிதாஸ், பொ. உத்திராபதி, ரா. மார்க்கபந்து, ரெ.வீ. சவுந்தரராஜன் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

1977 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : 'நிதிக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,57,80,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

(6) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

41. Notification issued in G.O. Ms. No. 20, Housing, dated 11th January 1977 in regrd to appointment of Thiru J. T. Durariraj as non official member of the Tamil Nadu Slum Clearance Board for a Period of one year. [Laid on the Table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971)]

42. Notification issued in G.O. Ms. No. 1251, Rural Development and Local Administration, dated 26th June 1976 in regard to making of Rule relating to Issue and Disposal of Audit Reports of Panchayat Union Councils published at page 32 of Supplement to Part V of the Fort St. George Gazette, dated the 14th February 1962. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958].

£43. The Annual Financial Statement for the year 1977-78 and Supplementary Financial Statement for the year 1976-77 of the Tamil Nadu Electricity Board. [Laid on the Table of the House under sub-section (1) of section 61 of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948].

***B. Reports, Notifications and other papers.***

@ 55. Policy Note on Demand No. 33—Housing in Tamil Nadu (1977-78). (English and Tamil).



1977 ஆகஸ்ட் 12]

+ 56. Policy Note on Demand No. 34—Urban Development for the year 1977-78. (English and Tamil).

+57. A Short Note on the Working of the Tamil Nadu State Co-operative Bank Ltd. as on 30th June 1977. (Tamil only).

+58. Policy Note on Demand No. 21—Fisheries for the year 1977-78. (English and Tamil).

+59. Performance Budget of Fisheries Department for the year 1977-78. (English).

Cut Motions circulated separately.
@ Circulated to Members on 10th August 1977.
+ Despatched to Members on 10th August 1977
£ Laid on the Table of the House on 11th August 1977.

## இணைப்பு I

### கோரிக்கை எண் 21—மீனளம்.

[25-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கொள்கை விளக்கக் குறிப்பு.

மீன்பிடித் தொழில் தொன்மையானதொன்றாகும். உலகில் மற்றைய தொழில்களைப்போலவே, மீன்பிடித் தொழிலும் நவீன மயமாக்கப்பட்டு முன்னேற்றம் அடைந்து வருகிறது. சமீப காலத்தில் உலகில் அநேக நாடுகள் தங்கள் நாடுகளை ஒட்டியுள்ள கடலில் மீன் வளத்தை மட்டுமின்றி, எண்ணெய், கனிப்பொருள் முதலியவற்றைப் பயன்கொள்வதில் பெருமளவு அக்கறை காட்டி வருகின்றன. அதுவும் குறிப்பாக நம் இந்திய நாடு தனது நாட்டெல்லையைச் சார்ந்த கடல் எல்லையிலிருந்து 200 கல் தொலைவினை நம் நாட்டின் தனி உரிமைப்பட்ட பொருளாதார எல்லையாக பறைசாற்றியுள்ள நிலையில் நாட்டின் நலனுக்காக கடல் வளப்பயனைப் பெருக்குவதில் தமிழ்நாடும் தன் பங்கினைச் செய்ய தமிழ்நாட்டில் மீன்பிடித் தொழில்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது இன்றியமையாததாகும்.

வங்காளவிரிகுடா, இந்துமகா சமுத்திரம் மற்றும் அரபிக்கடல் ஆகிய மூன்று கடல்களைத தொட்டுச் செல்கின்ற நமது தமிழகத்தின் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள நெடுகிய கடற்கரை மீன்பிடித் தொழிலையும் அதனைச்சார்ந்த மற்றைய தொழில்களையும் பெருக்குவதற்கு பெருமளவு வாய்ப்பினைக் கொண்டுள்ளது. இம் மாநிலத்திலுள்ள ஆறுகள், துணை ஆறுகள், கிளையாறுகள், அணைக்கட்டுகள், பாசன நீர்த்தேக்கங்கள், கழிமுகங்கள், காயல்கள், உப்பங்கழிகள் முதலியன 3.51 லட்சம் ஹெக்டேர் அளவுள்ள இயற்கையான உள்நாட்டு மீன்வள அபிவிருத்திக் களமாக அமைந்துள்ளது. இவைகளில் முனைப்புடன் தரமான மீன் குஞ்சுகளை நீர்நிலைகளில் விட்டு அறிவியல் அடிப்படையில் மீன்களை வளர்த்தல், நிர்வகித்தல் போன்ற பணிகளை மீன்துறை மேற்கொண்டு உள்நாட்டு மீன் வளத்தை உயர்த்தி வருகிறது.

தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சியில் மீன்பிடித் தொழில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டில் ஒட்டு மொத்த மாநில வருமானத்தில் மீன்வளப் பகுதி மூலம் கிடைக்கும் வருமானம் 0.83 சதவிகிதமாகும் (1975-76). இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் கடல் மீன்பொருள்களின் மொத்த மதிப்பில் தமிழ்நாட்டிலிருந்து மட்டும் 13.43 சதவிகிதம் (1976) ஏற்றுமதி



யாகின்றது. மீன்பிடித் தொழிலின் இப்புள்ளிவிவரங்கள் தமிழ்நாட்டின் இத்தொழில் வளர்ச்சியின் முக்கியத்தையும் அதன் பங்கினையும் தெள்ளென விளக்குகின்றன. முதலாவது ஐந்தாண்டுத் திட்ட கால ஆரம்பத்தில் 0.45 லட்சம் டன்னாக இருந்த கடல் மீன் உற்பத்தி 1975-76-ல் 2.20 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. அதே போல உள்நாட்டு மீன் உற்பத்தி 0.34 லட்சம் டன்னிலிருந்து 1.50 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதியில் கடல் மீன்பிடிப்பை 4.00 லட்சம் டன்னாகவும் உள்நாட்டு மீன்பிடிப்பை 2.30 லட்சம் டன்னாகவும் உயர்த்துவதே ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் குறியீட்டு எண்ணாகும் (target) அனைத்து மேம்பாட்டு நடவடிக்கைகளிலும், மீனவர்களும் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறார்கள். இந்த இலக்கினை அடைய மீன் துறையின் நோக்கங்கள் கீழே சுருக்கமாகக் கொடுக்கப் பட்டுள்ளன :—

(1) தொன்றுதொட்டு பயன்பட்டு வரும் கலன்களையும் கருவிகளையும் மேம்படுத்தி மீன்பிடித்திறனை அதிகரித்தல்.

(2) சிறிய மீன்பிடி விசைப்படகுகள் மூலம் அண்மைக்கடல் மீன்பிடிப்பை அதிகரித்தல்.

(3) பெரிய மீன்பிடி டிராலர்களைக் கொண்டு ஆழ்கடல் மீன் பிடிப்பை பெருக்குதல்.

(4) வெவ்வேறு பருவங்களில் கூட்டமாக வரும் மேல்மட்ட மீன்களைப் பிடிக்க பலவகைப்படுத்திய மீன்பிடி முறைகளைக் கையாளுதல்.

(5) உப்பங்கழிகள், கழிமுகங்கள், காயல்களில் மீன் உற்பத்தியைப் பெருக்க உவர்நீர் மீன் வளர்ப்பு முறையைப் புகுத்தல்.

(6) மீன் வளர்ப்புக்குகந்த அனைத்து உள்நாட்டு நீர்நிலைப் பரப்புகளில் மீன் குஞ்சுகளை விட்டு வளர்த்து தற்கால மீன் வளர்ப்பு தொழில்நுட்ப முறையைக் கடைப்பிடித்து உள்நாட்டு மீன்பிடிப்பை உயர்த்துதல்.

(7) மீன்பிடிப்பும், அதனைச்சார்ந்த தொழில்களும் விரைந்து முன்னேற மீன்பிடித் துறைமுகங்கள், பனிக்கட்டி நிலையங்கள், பராமரிப்பு நிலையங்கள் முதலிய வசதிகளை ஏற்படுத்துதல்.

(8) வீட்டு வசதி, இணைப்புச்சாலை வசதி, நிவாரணங்கள் மூலம் மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.

முதலீடு இலக்கு

மாநில அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த திட்ட காலங்களில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு விவரங்கள் பின் வருமாறு:—

| | | |
|---|---|---|
| முதல் ஐந்தாண்டுத் திட்டம் | .. | ரூ 31·34 லட்சம் |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் | .. | ரூ. 75·30 லட்சம் |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் | .. | ரூ. 2,57·27 லட்சம் |
| ஆண்டுத் திட்டங்கள்— 1966-67 | .. | ரூ. 1,28·69 லட்சம் |
| 1967-68 | .. | ரூ. 1,50·55 லட்சம் |
| 1968-69 | .. | ரூ. 1,21·71 லட்சம் |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் | .. | ரூ. 9,82·51 லட்சம் |

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்ட தொகை (தற்காலிகமாக ஒதுக்க ரூ. 18,80·00 லட்சம்.

| | | மத்திய அரசு உதவி. | மத்திய அரசு பிணைப்புதவி. | மொத்தம். | |
|---|---|---|---|---|---|
| முதல் ஆண்டு | 74-75 | 1,78·05 | 8·91 | 1,86·96 | உண்மை நிலை துறையின் விவரங்கள் வரவு செலவு மதிப்பீடு. |
| இரண்டாவது ஆண்டு | 75-76 | 2,59·42 | 9·47 | 2,68·89 | |
| மூன்றாவது ஆண்டு | 76-77 | 2,11·82 | 5·42 | 2,17·24 | |
| நான்காவது ஆண்டு | 77-78 | 1,24·36* | 11·14 | 1,35·50 | |
| | | | | 8,08·59 | |

* மீனவர் வீடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 1,00.00 லட்சம் தமிழ்நாடு அரிசன் வீட்டுவசதி கழகத்தின் வரவு-செலவு மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.



தற்காலிகமாக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 18,80.00 லட்சத்திலிருந்து ரூ. 13,42.00 லட்சமாக பிற்பாடு (1976) குறைக்கப்பட்டதென்றாலும் முதல் நான்கு ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகைகள், ஐந்தாவது ஐந்தாண்டு கால முழுமைக்கும் ஒதுக்கப்பட்ட தொகைக்கு ஒருவிதத்திலும் பொருத்தமாக பிரித்திடப்படவில்லை. மீன்துறைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு, பற்றுக்குறையே ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மீன்பிடிப்பு குறைந்ததற்கு முக்கிய காரணமாகும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு முக்கிய குறியீடுகள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| (1) மீன்பிடி விசைப்படகுகள் கட்டுதல் | 1,000 (கூடுதல்) |
| (2) டிராலர்கள் வாங்குதல் | 50 (கூடுதல்) |
| (3) பனிக்கட்டி குளிர் அறைகள் | 10 (கூடுதல்) |
| (4) தங்குதுறை, இறங்குதுறை வசதிகள் ஏற்படுத்துதல். | (கூடுதல்) |
| (5) தூண்டுதல் முறை இனப்பெருக்க நிலையங்களில் மீன்குஞ்சு உற்பத்தியைப் பெருக்குதல். | 1,50 லட்சம் (கூடுதல்) |
| (6) நீர்த்தேக்கங்கள் மேம்பாடு | 5 (கூடுதல்) |

செயல்பாட்டுத் திட்டங்களும் செயல்களும் பின்வருமாறு :—

தமிழ்நாடு மீன் அபிவிருத்திக் கழகம்.—தேவையான நிதி உதவியை வணிக வங்கிகளிலிருந்து பெற்று மீன் துறையின் வணிக நோக்குப் பிரிவுகளான படகு கட்டும் நிலையங்கள், பதன நிலையங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளைப் பெருக்குவதற்கு அரசு தமிழ்நாடு மீன் அபிவிருத்திக் கழகத்தை ஏற்படுத்துவதற்கு

[1977 ஆகஸ்ட் 12

ஆணையிட்டது. அதன்படி இக்கழகம் 1—7—1974-ல் துவங்கியது. மாநில அரசு இக்கழகத்திற்கு தனது திட்டங்களைச் செயல் படுத்தவும் மேலும் அபிவிருத்தி செய்யவும் நிதி உதவி கீழ்க்கண்டவாறு வழங்கியது :—

| ஆண்டு. | பங்குத் தொகை முதலீடு. | இயந்திர மயமாக்குதல் திட்டம். | மெக்ஸிகன் டிராலர் இறக்கு மதி. | வழியும் முறைகளுக்கு மான கடன்கள். | மேம் பாடு திட்டங்கள் | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | | (ரூ. லட்சத்தில்) | | |
| 1974–75 | 50·00 | 35·22* | .. | 30·00 | .. | 1,15·22 |
| 1975–76 | 25·00 | 55·00* | 12·95 | .. | .. | 92·95 |
| 1976–77 | .. | 25·40*<br>8·32† | 1·27 | 15·00 | 26·00 | 75·99 |
| மொத்தம்.. | 75·00 | 1,23·94 | 14·22 | 45.00 | 26·00 | 2,84·16 |

கழகம் சென்னையில் 2-ம், நாகைப்பட்டினத்தில் ஒன்றும், மண்டபத்தில் ஒன்றுமாக நான்கு படகுகட்டும் நிலையங்களை நடத்தி வருகிறது. 1—7—1974 முதல் 30—6—1977 வரை (கழகத்தைச் சேர்ந்த படகு கட்டும் நிலையங்களில் 400-ம் தனியார் நிலையங்களில் 99-ம்) 499 படகுகளை கட்டி முடித்திருக்கிறது.

கழகம் இதுவரை 447 படகுகளை (30—6—1977-ல் 30 அடி படகுகள் 254-ம், 32 அடி படகுகள் 193-ம்) வழங்கியுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் கழகம் 750 படகுகள் வழங்க இயலும் என எதிர்பார்க்கலாம். முதலாவதாக வழங்கும் 500 படகுகளுக்கு 100 சதவிகிதம் வட்டி மான்யமும் அடுத்த இரண்டாண்டுகளுக்கு முறையே 66-2/3 சதவிகிதம், 33-1/3 சதவிகிதம் வட்டி மான்யம் கொடுக்க அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

எண்ணூர், மண்டபம், தூத்துக்குடி முதலிய இடங்களிலுள்ள பதன நிலையங்கள் தனியார் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. மண்டபத்திலுள்ள மீன்தூள் நிலையமும்

* விடு தொகை.
† வட்டி மானியம்.



1977 ஆகஸ்ட் 12]

முதலில் குத்தகைக்கு விடப்பட்டு மறுபடியும் கழகமே எடுத்துக் கொண்டு 1—4—1977 முதல் கழகமே நடத்தி வருகிறது. சென்னை, தூத்துக்குடி மீன்துறைமுகங்களில் பெரிய மீன் பதன நிலையங்களை ஏற்படுத்த கழகம் திட்டமிட்டுள்ளது.

கழகம் 23 மீட்டர் நீளமுள்ள இரண்டு மெக்ஸிகன் டிராலர் களைப் பெறவிருக்கிறது. இந்த டிராலர்களின் மதிப்பு ரூ. 80.00 லட்சமாகும். இந்த டிராலர்கள் தமிழ்நாட்டிற்கு 1977 அக்டோபரில் வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த டிராலர்கள் வந்தவுடன் ஆழ்கடல் மீன்வளம் பயனடைவதற்கு செயல்படுத்தப் படும். இதேமாதிரியான இரண்டு டிராலர்களை உள்நாட்டிலேயே கட்டுவதற்கும் கழகம் திட்டம் கொண்டுள்ளது.

கழகம் மீன் விற்பனையில் தன் செயல்பாடுகளை விரிவுபடுத்து வதற்குதவியாக கீழ்க்கண்ட 5 பெரிய நீர்த்தேக்கங்களிலுள்ள மீன்பிடி உரிமத்தை 1—7—1977 முதல் கழகத்திற்கு மாற்ற அரசு ஆணையிட்டுள்ளது :—

1. மேட்டூர் அணை—சேலம் மாவட்டம்.
2. சாத்தனூர் அணை—வட ஆற்காடு மாவட்டம்.
3. அமராவதி
4. ஆளியார் — கோயம்புத்தூர் மாவட்டம்.
5. திருமூர்த்தி
6. பவானிசாகர்

தமிழ்நாடு மீன்துறை அபிவிருத்தி கழகம் மீன் விற்பனையை முன்பே ஏற்றுக்கொண்டு விட்டது. மேலும் தன் நடவடிக்கைகளை பரவலாக்கி மேற்படி மீன் விற்பனையை அபிவிருத்தி செய்யவும், மெக்சிகன் டிராலர்கள் வரப்பெற்றவுடன் மீன் ஏற்றுமதி செய்யவும் திட்டமிட்டுள்ளது.

இதற்கான வகையில் கழகத்திற்கு அரசுச் செலவினமாக 1977-78-ம் ஆண்டு 67.42 லட்ச ரூபாய் கீழ்க்கண்ட வகைகளில் கொடுக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | ரூபாய் லட்சத்தில் |
|---|---|
| 1. படகில் விநியோக முறையில் வீடு தொகையாக. | 20·55 |
| 2. மீன் துறைப் பணிகள் | 3·00 |
| 3. படகுகள் வழங்குதல் கடனுக்கான வட்டி மான்யம். | 39·99 |
| 5. படகுகள் கட்டும் செலவினமாக | 1·00 |
| 6. இதர செலவினங்களுக்காக | 288.00 |
| மொத்தம் | 67·42 |

*தொன்றுதொட்டு பயன்பட்டுவரும் மீன்பிடிக் கலன்களையும் கருவிகளையும் மேம்பாடு செய்தல்.*—மீனவர்கள் தங்களின் படகுகளில் பிடித்த மீன்களை கெடாமல் பாதுகாக்க மேற்படி கழகத்தினால் 200 பாதுகாப்புப் பெட்டிகள் (Insulated Boxse) மீனவர்களுக்கு வழங்கும்பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த பாதுகாப்புப் பெட்டிகள், மீனவர்களுக்கு தாங்கள் ஏற்றுமதி செய்யக்கூடிய இருல் வகை மீன்களை கெடாமல் பாதுகாக்க உதவும்.

கட்டுமரங்கள் மற்றும் வள்ளங்களை விசைப்படுத்தும் பொருட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் சேகரிக்கப் பட்ட தகவல்களின் மீது ஒரு முடிவினை எடுத்து வெளிப்புறத்து இயங்கும் இயந்திரத்தை (Out-board motors) பொருத்தி, மேற்படி கட்டு மரங்களையும், தோணிகளையும் விசைப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தோணிகளை விசைப் படுத்தி அவைகளின் நடைமுறையில் செயல்படும் திறனை அதிகப் படுத்தும்பொருட்டு 19.6 முதல் 23.5 குதிரை சக்தி வேகம் கொண்ட உள் பொருத்தக்கூடிய நான்கு இயந்திரங்கள் வாங்கப் பட்டு, வழங்கப்படுவதற்கும் தயாராக உள்ளன. இவைகளைப் பொருத்தி விசைப்படுத்தப்பட்ட தோணிகளின் நடைமுறை திறனை ஒப்பிட்டுப் பார்த்த பிறகு இத்தகைய இயந்திரங்களை கூடுதலாக வாங்கி வழங்குவது பற்றி முடிவு செய்யப்படும்.



*மீன்பிடி விசைப்படகுகள் உதவி.*—தமிழ்நாடு மீன்வள அபிவிருத்திக் கழகத்தால் தற்போது சிறு மீன்பிடி விசைப் படகுகளை வழங்கும் திட்டம் அமுலாக்கப்பட்டு வருகிறது.

இக்கழகம் விசைப்படகுகளை தவணை முறையில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்கிறது. படகின் மொத்தவிலையில் படகு தவணைதாரர் 5 சதவிகிதமும், விடுதொகையாகவும், வட்டியில்லாக் கடனாகவும் அரசு வழங்கும் 15 சதவிகிதமும், ஏதாவது வணிக வங்கிகளின் மூலம் கடனாக 80 சதவிகிதமும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

வழங்கப்பட்ட படகுகளை சரியாக பராமரிப்பதற்கு ஏற்ப, மீன் துறை முன்பே அடிப்படை தொழிற் கூடங்களையும் (Base Workshop, பராமரிப்பு நிலையங்களையும் முக்கியமான மீன் இறங்குமிடங்களில் நிறுவியுள்ளது. தற்போது ராமேசுவரத்திலுள்ள பராமரிப்பு நிலையத்தை அடிப்படை தொழிற்கூடமாக மாற்றி அரசு சென்ற ஆண்டு ஆணையிட்டபணி இந்த ஆண்டு மேற்கொள்ளப்படுகிறது.

அநேக நாட்களாக அத்தியாவசியமாகத் தேவைப்பட்டதும், மீனவர்களுக்கு நன்மை பயக்கக்கூடியதுமான இரு "மீட்புக் கலன்கள்" (Rescue Vessels) எனக் கூறப்படும் கலன்களை தயாரிக்கும்பொருட்டு, அரசு இப் பணிக்காக ரூ. 10 லட்சம் ஒதுக்க உள்ளது. இந்தக் கலன்கள் மீனவர்களுக்கு கடலில் ஏற்படும் ஆபத்துகளின்போது உதவுவதற்கென்றே பயன்படுத்தப் படும்.

*பெரிய மீன்பிடி கலன்களை உபயோகித்தல்.*—தற்போது மத்திய மற்றும் மாநில அரசின் கீழ் அளவைக்காக உபயோகப்படுத்தப் படும் பெரிய மீன்பிடி கலன்கள் தவிர, தமிழ்நாட்டில் வேறு பெரிய மீன்பிடி கலன்கள் இல்லை.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 50 பெரிய மீன்பிடி கலன்களை மீன்பிடித் தொழிலில் புகுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளபோதிலும், இறக்குமதி கட்டுப்பாடு, மற்றும் தேர்ச்சிபெற்ற பெரிய கலன்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் நம் நாட்டில் இல்லாமை ஆகிய தட்டுப்பாடுகளால் புதிதாக பெரிய மீன்பிடி கலன்களை தமிழ்நாட்டில் ஈடுபடுத்த முடியவில்லை. 1973-ம் ஆண்டு மத்திய சர்க்கார் இறக்குமதிக்கு அனுமதித்த 30 பெரிய மீன்பிடி கலன்களுக்கு எதிராக தமிழ்நாடு மீன்பிடி அபிவிருத்தி கழகம் 23 மீட்டர் நீளமுள்ள இரு மெக்சிகன் டிராலர்களையும்,

தமிழ்நாட்டிலுள்ள தனியார் நிறுவனமாகிய ஈ.ஐ.டி. பாரி கம்பெனி இதேபோல் இரண்டு டிராலர்களையும் வாங்க முற்பட்டன. ஒவ்வொரு டிராலரும் ரூ. 40 லட்சம் விலை மதிப்புள்ளது. இவை நான்கும் இந்த ஆண்டு அக்டோபர் மாதம் தமிழ்நாட்டில் இறக்குமதியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சமீப காலத்தில் மத்திய அரசு, தனியார்களும், தனியார் நிறுவனங்களும் 100 டிராலர்களை வாங்குவதற்கு அனுமதி அளித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. மேலும் வெளிநாடுகளிலிருந்து 60 டிராலர்களை இறக்குமதி செய்ய அனுமதியளித்திருக்கிறது. தனியார்களைக் கலந்தும், நகரத்திலுள்ள அயல்நாட்டு தூதுக்குழு நிலையங்களை அணுகி அயல்நாட்டு டிராலர்களின் விலைப்பட்டியல்களைப் பெற்று பின் அவ்விவரங்களைக் கொண்டு தேர்ந்தெடுத்த டிராலர்களை இறக்குமதி செய்ய மத்திய அரசுக்கு தனியாரும் மற்றவர்களும் விண்ணப்பங்களை அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள தனியார்கள் இம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட டிராலர்களைப் பெறுவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

இதுவரை நம்மால் எடுத்துக்கொள்ளப்படாதிருந்த ஆழ்கடல் மீன்பிடிப்பு இந்த பெரிய டிராலர்களைக் கொண்டு செயல்படுத்தப்படும்.

**உவர்நீர் மீன்வளம்** (Bradish Water Fish Farming).

உவர்நீர் மீன்வள அபிவிருத்தி ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தான் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இத்துறையில் செயல்படுத்தப்பட்ட ஒரு சில மாதிரித்திட்டங்கள் லாப நோக்கோடு உவர்நீர் மீன் வளர்ப்பை மேற்கொள்ளலாம் என உணர்த்தியுள்ளன. தமிழகத்திலுள்ள 80,000 ஹெக்டேர் பரப்புள்ள காயல்கள், உப்பங்கழிகள், இவைகளில் 27,000 ஹெக்டேர் பரப்பில் இறால், கல் இறால், நண்டு, ஆளிகள், மீன்கள் வளர்ப்புக்கு பயன்படுத்தலாம். இவ்வகைகளில் பலவற்றை உள்நாட்டுத் தேவைக்கு, மட்டுமின்றி அயல்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யவும் முடியும். மாதிரித்திட்டங்களை அடுத்து கோவளம், பழவேற்காடு, கிள்ளை முதலிய இடங்களில் வணிக நோக்கோடு செயல்படக் கூடிய பெரிய பண்ணைகளை அமைக்க மீன்துறை திட்டமிட்டுள்ளது. அம்மாதிரிப் பண்ணை ஒன்று 1977-78-ல் மாநில அரசுத்திட்டத்தின்கீழ் கோவளத்திலும், மத்திய அரசு பிணையாயிருக்கும் திட்டத்தின் கீழ்



கிள்ளையிலும் ஏற்படுத்த திட்டமுள்ளது. இது தவிர இத்தகைய சுமார் ஒரு ஹெக்டேர் பரப்புள்ள சிறு பண்ணைகளை அமைத்து மீனவர்கள் நடத்த தொழில் நுட்ப உதவி மற்றும் பண உதவி வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டங்களும் மற்றும் உவர்நீர் மீன்வளத்தைத் பாதுகாக்க எடுக்கப்படும் திட்டங்களும் உவர்நீர் மீன்பிடிப்பை மேலும் 2 அல்லது 3 மடங்கு பெருக்க உதவும் என்பது உறுதி.

**அளவாய்வு.**

கீழ்க்கண்ட இடங்களில் அமைந்துள்ள அண்மைக்கடல் மீன் பிடிப்பு நிலையங்கள் அண்மைக்கடலில் மீன்வளத்தைக்கண்டறிய அளவாய்வு செய்து கொண்டிருக்கின்றன :—

1. சென்னை.
2. கடலூர்.
3. மல்லிப்பட்டினம்.
4. இராமேசுவரம்.
5. கன்னியாகுமரி.

இந்நிலையங்களில் சிறிய மீன்பிடி விசைப்படகுகளே உள்ளன. ஒரு சில 43½ அடி படகுகள் மட்டுமே சில நிலையங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தன. 1977-78-ல் மல்லிப்பட்டிணம் நிலையத்திற்கு மேலும் ஒரு 43½ அடி படகு வழங்க திட்டமுள்ளது.

நமது எல்லையைச் சார்ந்த ஆழ்கடல் பரப்பில் உள்ள மீன்வளத்தைப்பற்றிய போதுமான விவரங்கள் நமக்கில்லை. ஆழ்கடல் மீன்வள ஆய்வு நடத்துவது மத்திய அரசின் பொறுப்பாகும். உலக நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கூட்டோடு இவ்வளவாய்வினை மேற்கொள்ளுமாறு மத்திய அரசினை மாநில அரசு கடந்த காலங்களில் வலியுறுத்தி வந்தும் குறிப்பிடத்தக்க விளைவுகள் இல்லை. தகுந்த கலன்களும், கருவிகளும் இல்லாதது இவ்வளவாய்வு தாமதமாவதற்கு மற்றொரு காரணம். மீன்பிடிப்பினை பெருக்குவதற்கும், மீன் பொருள்களை ஏற்றுமதி அபிவிருத்தி செய்வதற்கும், ஆழ்கடல் மீன்வளத்தைப்பற்றிய விவரங்கள் மாநில அரசுக்கு பேருதவி செய்யும் என்பதால் ஆழ்கடல் மீன்வள ஆய்வினை மேலும் காலந்தாழ்த்தாது விரைந்து

நடத்துவது அவசியம். நூறு பெரிய மீன்பிடிக்கலன்களை இறக்குமதி செய்ய மத்திய அரசு சமீபத்தில் அனுமதியளிப்பதை யொட்டியும் இவ்வளவாய்வு செய்வது அவசியம். எனவே மத்திய அரசினை இவ்வளவாய்வினை விரைந்து மேற்கொள்ள மாநில அரசு வற்புறுத்த எண்ணியுள்ளது. அவ்வாறு மீன்வளத்தைக் கண்டறிந்தபின் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலாவது ஆழ்கடல் மீன்வளத்தினை துய்க்க தகுந்த திட்டங்கள் தீட்ட முடியும்.

### பனிக்கட்டி நிலையங்களும் குளிர்அறை நிலையங்களும்.

கடந்த காலத்தில் மீனவர்களின் நன்மைக்காகவும், மீன்பிடித் தொழில் முன்னேற்றத்திற்கும் கடலோரப்பகுதிகளில் 36 பனிக் கட்டி பொறிகளையும், குளிர் அறைகளையும் மீன்துறை நிறுவி இருக்கிறது. இத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள பதனிடப் படுத்தும் சாதனங்களின் மொத்த கொள்ளளவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| பனிக் கட்டி உற்பத்தி. | குளிர் அறை. | குளிர் படுத்தப் பட்ட மீன் வைக்கும் அறை (டன்னில்). | பனிக் கட்டி சேமிப்பு அறை | உறைய வைத்த பொருள்கள் சேமிப்பு அறை. | உறைய வைக்கும் அளவு |
|---|---|---|---|---|---|
| 82 | 180 | $7\frac{1}{2}$ | $57\frac{1}{2}$ | 150 | $19\frac{1}{2}$ |

1974-ல் தமிழ்நாடு மீன் அபிவிருத்திக் கழகம் துவங்கியபோது, எண்ணூர், மண்டபம், தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ள பெரிய பதனப்படுத்தும் பொறிகள், இத்துறையிலிருந்து மீன் அபிவிருத்திக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

மீனவர்களின் நன்மைக்காக, இத்துறை சிறிய அளவுள்ள வசதிகளை தொடர்ந்து ஏற்படுத்தும். அதே சமயத்தில் மீன் அபிவிருத்திக் கழகம் வியாபார நோக்குமுள்ள பெரிய அளவில் உள்ள வசதிகளை சென்னையிலும், தூத்துக்குடியிலும் மீன்பிடித் துறைமுகங்களில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கும். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள உய்யாலிக்குப்பத்திலும் திருநெல்வேலி



மாவட்டத்திலுள்ள பெரியதாழையிலும், கோவை மாவட்டத் திலுள்ள பவானிசாகரிலும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள பனிக்கட்டி நிலையங்கள் நடப்பு ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு துவங்கவிருக்கின்றன. அதோடு இராமேசுவரத்திலுள்ள இரண்டு டன் உற்பத்தி செய்யும் பனிக்கட்டி நிலையம் ஐந்து டன் உற்பத்தி செய்யும் நிலையமாக நடப்பு ஆண்டில் விரிவாக்கப்படும்.

### மீன்பிடியை அடிப்படையாகக்கொண்ட தொழிற்பேட்டை.

பலதரப்பட்ட மீன்பிடி தொழில்களை ஆரம்பிக்கவும் தமிழ் நாட்டிலுள்ள தனியார் நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் பொருட்டும், முக்கியமான மீன் இறங்கும் இடங்களில் உள்ள சீர்படுத்தப்பட்ட மீன் துறைக்கு சொந்தமான நிலங்களை அவர் களுக்கு ஒதுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், எண்ணூர், கடலூர், மண்டபம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் இத்துறையின் நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள மீன்பிடி துறைமுகம் கட்டி முடிந்ததும், மேம்படுத்தப்பட்ட நிலங்களைப்பிரித்து மீன்பிடித் தொழில்களை நிறுவ முன்வரும் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படும்.

*மீன்பிடித்துறைமுகங்கள்—இறங்குதுறை வசதிகள்.*—இயந்திர மீன்பிடிப் படகுகளுக்குத் தேவையான இறங்குதுறை தங்குதுறை வசதிகளை மத்திய அரசினால் உருவாக்கப்பட்ட திட்டங்களின் கீழ் ஏற்கனவே கீழ்க்கண்ட இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன:—

| வரிசை எண். | இடம். | வசதியின் விவரம். |
|---|---|---|
| 1 | கடலூர் | சிறுமீன்பிடித் துறைமுகம். |
| 2 | நாகப்பட்டினம் | இறங்கு வசதிச்சுவர். |
| 3 | மண்டபம் | கரை குடா. |
| 4 | இராமேஸ்வரம் | 'T' வடிவ கடல் முகப்பு ஜெட்டி. |
| 5 | தூத்துக்குடி | பெரிய மீன்பிடித் துறைமுகம் (9 அடி மிதப்பு வசதி). |

ஐந்தாவது திட்டத்தில் கீழ்கண்ட பணிகள் வளர்ச்சி பெற்று வருகின்றன.

| இடம் | பணியின் விவரம் | உத்தேசச் செலவு. |
|---|---|---|
| 1. கோடிக்கரை (தஞ்சாவூர் மாவட்டம்). | 'T' வடிவ கடல் ஜெட்டி | ரூ. 14.40 லட்சம் |

| | | |
|---|---|---|
| 8 மல்லிப் பட்டினம் (தஞ்சாவூர் மாவட்டம்). | 'T' வடிவ கடல் ஜெட்டி | ரூ. 10.60 லட்சம் |
| 9 சென்னை | மீன்பிடித் துறைமுகம் | ரூ. 668.01 லட்சம் (சென்னை துறைமுகக் கழகத்தினுல் உருவாக்கப்படுகிறது). |

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்ன முட்டத்தில் ரூ. 200 இலட்சம் செலவில் ஒரு பெரிய மீன்பிடித்துறைமுகத்தை அமைக்கும் செயல் திட்டம் இந்திய அரசின் ஏற்புக்காக காத்திருக்கிறது.

கீழ்க்கண்ட இரண்டு இடங்களில் படகு தங்கும் துறைகளை ஏற்படுத்துவதற்கான திட்டம், உத்தேச செலவு விவரங்களை நடப்பு ஆண்டில் பெங்களூரிலுள்ள முன் முதலீடு திட்ட அளவாய்வு இயக்குநர் தயாரித்து முடிப்பார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

(1) வாலிநோக்கம்—இராமநாதபுரம் மாவட்டம்.

(2) பழையாறு—தஞ்சாவூர் மாவட்டம்.

மேலும் படகுகளுக்கு தங்குதுறை, இறங்குதுறை வசதிகளை மேற்கொள்ளுவதற்குரியனவாக 15 இடங்கள் தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. நிதி வசதிக்கு ஏற்பவும்—திட்டம்—உத்தேச செலவு ஆகியன தயாரிக்கப்பட்டு இந்திய அரசின் ஒப்புதல் கிடைத்தபின் இவ்விடங்களிலும் மேற்சொன்ன பணிகள் வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும்.

**உள்நாட்டு மீன் வளம்.**—தற்போது ஆண்டொன்றுக்கு 1.50 இலட்சம் டன்னுகை உள்நாட்டு மீன் உற்பத்தி இருந்து வருகிறது. இந்த உற்பத்தி அளவை 2.30 இலட்சம் டன்னுகை உயர்த்துவது ஐந்தாவது திட்டத்தின் இலட்சியமாகும். வற்றாத நீர்வளம் இன்மையால் இயற்கை நீர்நிலைகளிலிருந்து மீன்குஞ்சுகள் உற்பத்தி





செய்யக்கூடிய வாய்ப்பு குறைவாக உள்ளது. நான்காம் திட்ட முடிவில் 600 இலட்சம் அளவில் இருந்த மீன்குஞ்சு உற்பத்தி 1976-77 கடைசியில் கீழ்க்கண்டவாறு மாறிற்று :—

| | நான்காவது திட்டத்தின் இறுதி நிலை. | 1976—77-ன் உற்பத்தி. (இலட்சத்தில்.) |
|---|---|---|
| இயற்கை நீர் நிலைகளிலிருந்து மீன்குஞ்சுகள் சேகரிப்பு. | 450·00 | 309·00 |
| தூண்டும் முறை மீன்குஞ்சு பொரிப்பு நிலையங்களில் மீன்குஞ்சு உற்பத்தி. | 150·00 | 198·30 (1322 இலட்சம் மீன் குஞ்சுகள்) |
| மொத்தம் | 600·00 | 507·30 |

முக்கிய மீன்குஞ்சு சேகரிப்புக்கு வழிகோலும் காவிரி நதியில் குறைவாகவும் தடைபட்டும் நீர் ஓட்டம் இருந்ததின் விளைவாக இயற்கையாகக் கிடைக்கும் மீன்குஞ்சுகளின் எண்ணிக்கை குறைவு பட்டிருக்கிறது. மேற்கண்ட நிலையின் விளைவாக மீன்குஞ்சுகள் உற்பத்தியைப் பெருக்க மாநிலத்தில் 12 இடங்களில் தூண்டும் முறை மீன்குஞ்சு நிலையங்களை படிப்படியாக மீன்துறை உருவாக்கியுள்ளது. நீர்நிலைகளில் விரைவாக வளர்ந்து பலன்தரக்கூடிய போதுமான மீன்குஞ்சுகளை இருப்பு செய்வதினுல் மட்டுமே உள்நாட்டு மீன் உற்பத்தி பெருகக்கூடுமாதலால் தகுந்த எல்லா இடங்களிலும் தேவையான அளவிற்கு மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்துவது இன்றியமையாததாகும். தமிழகத்திலுள்ள மீன்வளர்ப்பிற்கு தகுந்த எல்லா நீர்ப் பரப்புகளிலும் இருப்பு செய்ய 1,050 இலட்சம் மீன்குஞ்சுகள் தேவை என்று கணக்கிடப்பட்டுள்ளது. இலாபகரமான மீன் இன குஞ்சுகளின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டி தற்போதுள்ள நிலையங்களை அபிவிருத்தி செய்வதோடு மேலும் 5 புதிய தூண்டும் முறை மீன்குஞ்சுகள் உற்பத்தி நிலையங்களை ஐந்தாவது திட்டத்தில் உருவாக்க மீன்துறை திட்டமிட்டுள்ளது. ஏற்கனவே செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள செம்பரம்பாக்கத்தில் ஒரு தூண்டும் முறை மீன்குஞ்சுகள் உற்பத்தி நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. 1977-78-ம் ஆண்டில் கன்னியாகுமரி

மாவட்டத்திலுள்ள பேச்சிப்பாறையிலும், மதுரை மாவட்டத்திலுள்ள பாலார்—பொறந்தலாறிலும் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருக்காட்டுப்பள்ளியிலும் ஒவ்வொரு நிலையம் அனுமதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீன்குஞ்சு பராமரிப்புக் குட்டைகள் வசதியைப் பெருக்க வேண்டி மேலும் புதிய மீன் நர்சரி குட்டைகளை 1977-78-ல் ஆளியாறு, திருமூர்த்தி, சாத்தனூர் அணை, பாலார் பொறந்தலாறு, பேச்சிப்பாறை ஆகிய இடங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது திட்டத்தின் இறுதியில் மீன்குஞ்சுகளின் உற்பத்தி 750 இலட்சம் என்ற அளவை எய்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; இந்த முயற்சி ஆறாவது திட்டத்தில் தன்னிறைவு பெறும் என்பதும் தெளிவு.

*நீர்த்தேக்கங்களில் மீன்வள வளர்ச்சி.*—முறையாக மீன் குஞ்சுகளை இருப்பு செய்து, வளர்த்து, பாதுகாத்து, அவற்றைப் பிடித்து மீன்வர்த்தகம் மேற்கொள்ளவும் பொதுப்பணித் துறையினால் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களை மீன்துறை மேற்கொண்டுள்ளது. இதுவரை 36 பெரிய நீர்த்தேக்கங்கள் மீன்வள மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1976-77-ம் ஆண்டின் இறுதியில் இந்நீர்த் தேக்கங்களிலிருந்து ஆண்டொன்றுக்கு 1,200 டன் மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. 1977-78-ம் ஆண்டில் இந்த நீர்த்தேக்கங்களிலிருந்து பிடிக்கப்படும் மீன்கள் அளவின் இலக்கு 1,652 டன்னாகும்.

1977-78-ம் ஆண்டில் திருச்சி மாவட்டத்திலுள்ள பொன்னியாறு அணையை மீன்வளர்ப்பதற்கு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மீன்துறை வசமுள்ள 36 நீர்த்தேக்கங்களில் 5 நீர்த்தேக்கங்கள் 1—7—1977 முதல் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

*மீன் பண்ணையாளர் வளர்ச்சி நிறுவனம்.*—தனியார்கள் உள்நாட்டு மீன்வளர்ப்பிலும் நவீன மீன் வளர்ப்பு தொழில்நுட்ப முறைகளிலும் ஆர்வம் கொள்ள வேண்டி தஞ்சாவூரில் 26—3—1976-ல் ஒரு மீன் பண்ணையாளர் வளர்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசினரால் உருவாக்கப்பட்ட இத்திட்டத்திற்கு அவர்களால் ரூ. 4.50 இலட்சம் நிதி உதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. (ரூ. 3.90 இலட்சம் மான்யம்—0.60 இலட்சம் கடன்) 1976-77-ம் ஆண்டில் இந்த நிறுவனம்



தஞ்சை மாவட்டத்திலுள்ள 60 ஹெக்டேர் நீர்ப்பரப்பினை மீன் வளர்ப்பிற்காக தேர்ந்தெடுத்து 61 அங்கத்தினர்களுக்கு குத்தகைக்கு விடுத்துள்ளது. இந்த அங்கத்தினர்கள் மீன் வளர்ப்பு தொழில் நுட்பத்தில் 15 நாட்கள் பயிற்சியளிக்கமாட்டார்கள். தற்போது ஒரு ஹெக்டேருக்கு 300 கிலோ கிராமாக இருக்கும் இந்நீர்ப் பரப்பின் மீன் உற்பத்தி கூட்டு இன மீன் வளர்ப்பினால் ஆண்டொன்றுக்கு 1,500 கிலோ கிராமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் மேலும் 140 அங்கத்தினர்களை ஈடுபடுத்தி மேலும் 140 ஹெக்டேர் நீர்ப்பரப்பினை தஞ்சை மாவட்டத்தில் இந்த நிறுவனம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற மீன்பண்ணையாளர் வளர்ச்சி நிறுவனங்களை தர்மபுரி, மதுரை மாவட்டங்களில் ஏற்படுத்துவதற்கான செயல் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

*உள்நாட்டு நீர்நிலைகளின் மீன்வள குத்தகை.*—அரசுரிமைப் பெற்ற pro/.rcia।d உள்நாட்டு நீர்நிலைகளின் மீன்பிடி உரிமம் மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு அந்தந்த பகுதியைச் சேர்ந்த மீனவர்களின் பிழைப்புக்காக வேண்டி வழங்கப்பட்டுள்ளது. குளங்களில் தாங்களாகவே மீன்குஞ்சுகளை விட்டு குளங்களை சீர்செய்து பணம் முதலீடு செய்து மீன் வளர்ப்பில் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் ஆர்வம் காட்டவேண்டும் என்ற நோக்கத்தில் 1976-ம் ஆண்டு முதல் 1,387 பசலி ஆண்டு முதல் குளங்களை ஐந்து ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடுவதென்று (இதற்கு முன்னர் இருந்த ஒரு ஆண்டு அளவு குத்தகைக்கு மாறாக) அரசு ஆணை பிறப்பித்துள்ளது. உள்நாட்டு—கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் என்கிற வரிசையில் முதன்மை தரப்பட்டு குத்தகைக்கு விடுவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மீனவர் கூட்டுறவு சங்கங்கள் ஏதும் குத்தகைக்கு மேற்கொள்ள முன்வராத நிலையில் மட்டுமே ஏலம் மேற்கொள்ளப்படவேண்டும். இந்த நீர் நிலைகளை முறையாகக் காத்து மீன் வள உற்பத்தியை பெருக்குவதில் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் இந்த நீண்ட கால குத்தகை முறைக் கொள்கை மூலம் தொடர் ஆர்வம் காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*பயிற்சி.*—இயந்திர படகுகளையும் நவீன மீன்பிடிக் கருவிகளையும் இயக்கும் தொழில் நுட்பத்திறம் படைத்தவர்கள் கிடைக்க வேண்டி மீன்துறை ஆறு கடல் மீனவர் பயிற்சி

நிலையத்தையும் ஒரு உள்நாட்டு மீனவர் பயிற்சி நிலையத்தையும் உருவாக்கியது. இந்நாள்வரை இந்நிலையங்களில் 4,153 கடல் மீனவர்களும், 638 உள்நாட்டு மீனவர்களும் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளனர்.

சில விசேஷ துறைகளில் பயிற்சி அளிக்கும் மத்திய அரசு நிறுவனங்களும் உள்ளன. மீன்துறை அலுவலர்களை இந்த நிறுவனங்களுக்கு அனுப்பி இந்த பயிற்சி வசதிகளை மீன்துறை பெற்று வருகிறது. இந்நோக்கத்திற்காக நடப்பு ஆண்டில் ரூ. 0.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முத்து—சங்கு வளங்கள்.—முத்து, சங்கு வளங்கள் மாநில அரசின் தேசிய உடமைகளாகும்.

1971-ம் ஆண்டிற்கு முன்னர் திருநெல்வேலி கடற்கரை பகுதி தவிர்த்த மற்றைய இடங்களில் சங்கு பிடிக்கும் உரிமம் தனியார் களுக்கு ஒப்பந்தப் புள்ளி முறை மூலம் வழங்கப்பட்டு வந்தது.

அரசு நிர்ணயித்த சங்கிற்கான விலையை குளியாட்கள் ஏற்க மறுத்தமையால் கடந்த ஆண்டு சங்கு பிடிப்பு நடைபெறவில்லை.

1961-62-ம் ஆண்டிற்கு பிறகு முத்துக்குளிப்பு நடைபெறவில்லை. பிடிப்பதற்கு வேண்டிய முதிர்ந்த முத்துச்சிப்பிகள் கிடைக்கும் அளவை கணிக்க ஒவ்வொரு ஆண்டும் முத்துச்சிப்பி 'பார்கள்.' ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. முத்துச்சிப்பிகள் நன்கு முதிர்ந்து இலாபகரமான அளவிற்கு அவை கிடைக்குமென்று தெரிந்த பிறகு அடுத்த முத்துக்குளிப்பு நடத்தப்படும்.

**ஆராய்ச்சி :**

கடல் உயிரியல், தொழில் நுட்ப இயல், நீர்த்தேக்க உயிரியல், நன்னீரியல் முதலிய மீன்துறையின் பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளை கவனிக்கும்பொருட்டு நன்கு அமைக்கப்பட்ட ஆராய்ச்சிக் கூடங்கள் உள்ளன. மாநில மீன்வள ஆராய்ச்சி குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் இந்த ஆராய்ச்சிக் கூடங்கள் நன்கு கவனித்து செயல்படுகிறது. நடைமுறைக்கு ஏற்ற நல்ல திட்டங்களை செயல்படுத்துவதற்கு தொழில் நுட்ப ஆய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.



இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம், மற்றும் கடல்வாழ் பொருட்கள் ஏற்றுமதிக் கழகம், இவைகளின் உதவியுடன் கீழ்க்கண்ட முக்கிய பிரச்சினைகள் ஆராய்ச்சிக்கு மேற்கொள்ளப் பட்டுள்ளன :—

(1) விலை போகாத மீன்களின் கூடுதலான உபயோகம் பற்றிய ஆராய்ச்சி.

(2) காய்ந்த உப்பிட்ட மீன்களின் தரத்தைக் கூட்டி அதனை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு தர மேம்பாடு பற்றிய ஆராய்ச்சி.

(3) செயற்கை முறையில் முத்துக்களை உற்பத்தி செய்யும் ஆராய்ச்சி.

(4) உவர்நீர் மீன்வளர்ப்பு மற்றும் கடலோர மீன் வளர்ப்பு பற்றிய ஆராய்ச்சிப் பணிகள்; மற்றும்

(5) உள்நாட்டு மீன்பிடிப்பை கூட்டு மீன் வளர்ப்பு மூலம் அதிகப்படுத்தும் ஆராய்ச்சி.

**அரை மில்லியன் வேலை வாய்ப்புத் திட்டம் (1973-74), மற்றும் வேலை வாய்ப்பு அதிகப்படுத்தும் திட்டம் (1974-75).**

படித்தோர்க்கு வேலை வாய்ப்பளிக்கும்பொருட்டு அரை மில்லியன் வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் 23 மீனவர் கூட்டுறவு சங்கங்கள் 1973-74-ம் ஆண்டிலும், வேலை வாய்ப்பு அதிகப்படுத்தும் திட்டத்தின்கீழ் 1974-75-ம் ஆண்டு மேலும் நான்கு சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டன. அரை மில்லியன் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் சங்கத்தில் உள்ளோர்க்கு ஆறு மாத பயிற்சியும், வேலை வாய்ப்பு அதிகப்படுத்தும் திட்டத்தின்கீழ் நான்கு மாத பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. மேற்படி கூட்டுறவு சங்கங்களின் ஒவ்வொரு அங்கத்தினர்களின் பங்குத் தொகையான ரூ. 150 தவிர்த்து மேற்படி இரு திட்டங்களின்கீழ் இந்த கூட்டுறவு சங்கங்களுக்கு 1973-74-ம் ஆண்டு 45.93 இலட்ச ரூபாய்களும், 1974-75-ம் ஆண்டு 14.13 இலட்ச ரூபாய்களும் அரசு வழங்கியுள்ளது.

மேற்கண்ட 27 சங்கங்களில் நான்கு சங்கங்கள் படகுகள் கட்டவும் நான்கு சங்கங்கள் படகுகள் பராமரிக்கவும், நான்கு சங்கங்கள் மீன்களை குளிர்படுத்தி பதப்படுத்தவும், எஞ்சியுள்ள 15 சங்கங்களும் மீன்பிடி விசைப்படகுகளை இயக்கவும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. படகுகள் கட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட சங்கங்கள் 32 அடி நீளமுள்ள 30 படகுகளையும், 30 அடி நீளமுள்ள மூன்று படகுகளையும் கட்டி முடித்துள்ளன.

1977 ஆகஸ்ட் 12]

மீன்களை குளிர்படுத்தும் சங்கங்களும், படகுகள் பராமரிக்கப் பட ஆரம்பிக்கப்பட்ட சங்கங்களும் எந்தப் பணியையும் இன்னும் துவக்கவில்லை.

எஞ்சியுள்ள 15 சங்கங்கள் 31 படகுகளை வாங்கி தங்களது அங்கத்தினர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும்பொருட்டு மீன் பிடிப்பை ஆரம்பித்து உள்ளன.

விரிவாக்கம் மற்றும் புள்ளி விவரங்கள்.

மத்திய அரசு அறிவித்த முழு உதவி மான்ய திட்டத்தின் பயனாக ஒரு விரிவாக்க நிலையம் தூத்துக்குடியில் 1976-77-ம் ஆண்டு இறுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்ற விரிவாக்க நிலையங்களை இதர இடங்களில் ஏற்படுத்தும் திட்டம்பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

தனியார் நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களுக்கும் மீன் துறையின் பிரசாரப் பகுதியின் மூலம் மீன்பண்ணை அமைத்தல், மற்றும் மீன் வளர்ப்பு பற்றிய செய்திகளும், அவை பற்றிய தகவல்களும் அளிக்கப்படுகின்றன.

கடலோர மீன்பிடி குப்பங்களின் தொழில் வசதிகளின் முன்னேற்றம்.

1975-ம் ஆண்டு, மத்திய அரசு கடலோர மீன்பிடி குப்பங்களின் வசதிகளை அபிவிருத்தி செய்யும்பொருட்டு ஒரு திட்டம் தீட்டியது. கிராமங்கள் மேற்படி திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கம் என்ற கிராமமும் தஞ்சை மாவட்டத்திலுள்ள பழையாறு என்ற அண்மையில் மத்திய அரசு, வாலி—நோக்கம் கிராமத்தில் மேற்படி வசதிகளை ஏற்படுத்தும்பொருட்டு 24.045 இலட்ச ரூபாய்களை செலவு செய்ய ஒப்புதலளித்துள்ளது. மத்திய அரசால் பிணைய உதவி திட்டமாக கருதப்படும் இத் திட்டத்திற்கு 75 சத விகிதம் மான்யமாக கொடுக்கப்படுகிறது.

சமூகநலத் திட்டம்.

(1) வீட்டு வசதி—தமிழக கடலோர பகுதியில் பரவிக் கிடக்கும் 331 மீனவர் குப்பங்களில் 3.92 இலட்சம் மீனவர்கள் வாழ்கின்றார்கள். மேலும், உள்நாட்டு மீனவர் கிராமங்களில் 1.20 இலட்சம் மீனவர்கள் வசிக்கின்றார்கள். 'புயல்', 'கடலரிப்பு' ஆகிய ஆபத்துக்களின் நடுவே அவர்கள் பெரும்பாலும்



1977 ஆகஸ்ட் 12]

குடிசைகளில் வாழ்கின்றார்கள். அவர்களுக்கு தகுந்த வீட்டு வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க நிதி பற்றாக்குறை தடையாக இருந்து வந்தது. எல்லா மீனவர்கள் குடும்பங்களுக்கும், வீட்டு வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க 1975-ல் ஒரு முடிவு எடுக்கப் பட்டது. 1977-ம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய கீழ்க்கண்டபடி மீனவர்களுக்கு வீட்டுவசதி செய்து தரப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| (1) மீன்துறை வீட்டு வசதி திட்டம் | 421 |
| (2) மீன்துறையின் சிறப்பு வீட்டுவசதித் திட்டம் (கல்பாக்கம்) | 181 |
| (3) மீன்துறையின் சிறப்பு வீட்டுவசதித் திட்டம் (அம்மாபட்டினம்) | 200 |
| (4) சிறப்பு மானியத்துடன் கட்டப்பட்ட வீடுகள் (இராயமான் துறை) | 72 |
| (5) வீட்டுவசதி வாரியத்தினரால் சிறப்பு வீட்டுவசதி திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டவை :— | |
| (1) வாணகிரி | 400 |
| (2) பூம்புகார் | 500 |
| (6) தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி மற்றும் அரிசனர் வளர்ச்சி கழகத்தின் சிறப்பு குடியிருப்பு திட்டம் | 2,115 |
| (7) தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியத்தினரால் சென்னையில் அமைக்கப்பட்டவை | 4,150 |
| மொத்தம் | 8,039 |

இந்த ஆண்டு 1,692 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந் ஆண்டிலும் இத் திட்டத்தை தொடர்வதற்காக ஒரு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் படிப்படியாக செயல்படுத்த பட்டு வருகின்றது. நாளாவட்டத்தில் எல்லா குடும்பங்களு இத் திட்டத்தின்கீழ் பயன்பெறும்.

(2) இணைப்புச் சாலைகள்.—இணைப்புச் சாலைகள் அதிக அளவில் தேவையிருந்தும் நிதி ஒதுக்கீடு இல்லாததால் இணைப்பு சாலை பணி மேற்கொள்ளப்பட முடியவில்லை.

(3) கூட்டுறவுக் கடன் வசதி.—மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், மீனவர்களுக்கு, மீன்பிடி கருவிகள் வலைகள் வாங்குவதற்கு, கடன் வசதி செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. 1977-79-ல் தமிழ்நாடு மீனவர் கூட்டுறவச் சங்கங்கள் மூலம், மீனவர்களுக்கு பலவிதமான கடன் வசதிக்காக ஒரு இலட்சம் ரூபாய் வழங்க உள்ளது. மேலும், இந்திய ரிசர்வ் வங்கியின் மூலமும், புது டெல்லியில் உள்ள தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலமும் மீன்பிடிப்பு, மீன் பதனிடுதல், மீன் விற்பனை ஆகியவைகளுக்கு நிதி உதவி பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(4) ஆபத்து உதவி நிவாரணம்.—கடலில் மீன் பிடிக்கச் செல்லுகையில் மீனவர்கள் உயிர் இழந்தால் அவர்கள் குடும்பத்திற்கு ரூபாய் ஆயிரம் வழங்கப்படுகின்றது. இதுவரை பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு ரூ. 2,89,000 இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலிருந்து இவ்வுதவித் தொகையை ரூ. 1,000-லிருந்து ரூ. 5,000-ஆக உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இனி மேற்கொள்ளவிருக்கும், செயல் திட்டங்கள் மூலம், நமது மாநிலம் கடல், மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தியில், முன்னேறிச் செல்லும் என்பது என்னுடைய சீரிய எண்ணமும் நம்பிக்கையும் ஆகும். பெரிய மீன்பிடி டிராலர்களை அறிமுகப்படுத்துவது மூலம் ஆழ்கடல் மீன்வளத்தை பயன்பெறச் செய்ய முடியும் என்று ஆக்கபூர்வமாக எதிர்பார்க்கப்படுகின்றது. இயந்திர மயமாக்குதல், மீன் பதப்படுத்துதல், ஆழ்கடல் மீன்பிடிப்பு, மீன் வர்த்தகம் ஆகிய துறைகளில் தமிழ்நாடு மீன் அபிவிருத்திக் கழகத்தின் ஒருங்கிணைந்த முயற்சியோடு இந்த நாட்டில் நமது மாநிலம் மீன் உற்பத்தியில் சிறந்த ஓர் இடத்தை அடைய முடியும் என்று நான் கருதுகின்றேன்.



## கோரிக்கை எண் 23—கூட்டுறவு.

[25-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

## 1976—77 ஆம் ஆண்டில் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களில் அடைந்த முன்னேற்றம் பற்றிய ஆய்வுரை.

1976—77 ஆம் ஆண்டில் வேளாண்மைக் கடன் வசதி, விற்பனை, வேளாண் விளைபொருள்களைப் பக்குவப்படுத்தல், நுகர்வோர் பொருள்களைப் பங்கிடுதல் முதலிய பல பிரிவுகளின் கீழ் இம்மாநிலத்தில் கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து படிப்படியாக நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளது.

கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் குறுகிய கால, நடுத்தர காலக் கடன்களை அளிப்பதில் அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்ந்து ஊக்கமளிப்பதாய் இருந்து வந்துள்ளது. 1976—77 ஆம் ஆண்டில் 1-4-1976 முதல் 31-3-1977 வரையில் கூட்டுறவுச் சங்கங்கள் குறுகிய காலக் கடனுதவி வழங்குவதற்குக் குறிக்கப்பட்ட இலக்கான 110 கோடி ரூபாய்க்குச் சற்றுக்கூடுதலாகவே 113.33 கோடி ரூபாயை வழங்கியுள்ளன. இதே கால அளவில் நடுத்தரக் காலக் கடனுதவி ரூ. 5 கோடி வழங்குவதென இலக்கு குறித்திருக்க 5.75 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1975—76 ஆம் ஆண்டில் இதற்கு நிகராகக் குறுகிய காலக் கடனுதவி வழங்கப்பட்ட தொகை ரூ. 100.20 கோடி, நடுத்தரக் காலக் கடனுதவி வழங்கப்பட்ட தொகை ரூ .1.65 கோடியாகும். அதே சமயம் நீண்ட காலக் கடனுதவி ரூ. 18.00 கோடி வழங்குவதென திட்டமிருக்க 19.14 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு மொத்தம் நீண்டகால, நடுத்தரக்கால, குறுகிய காலக் கடன்களாக வழங்கப்பட்ட தொகையில் 47 சதவிகிதம் சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டது.

ஐந்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தின் முதல் மூன்றாண்டுகளில் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கென மொத்தம் செலவிடப்பட்ட தொகை விவரங்கள் கீழே தொடுக்கப்பட்டுள்ளன.

| தொடர் எண். | திட்ட விவரம். | ஐந்தாவது திட்ட முதலீடு. | செலவிடப்பட்ட தொகை. 1974–75. | 1975–76. | 1976–77. |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | மாநிலத் திட்டங்கள்—கூட்டுறவு : | | | | |
| 1. | கூட்டுறவுக் கடன் வசதி, விற்பனை, பக்குவப்படுத்துதல் ; நுகர்வோர் கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும், பலவகைக் கூட்டுறவுகள் தொடர்பான திட்டங்கள், கூட்டுறவுகளில் முதலீடு. | 1306·10 | 125·28 | 391·23 | 509·43 |
| 2. | வேளாண்மைக் கடன் வசதியும், சிறுபாசனமும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கியின் சாதாரண மற்றும் சிறப்பு வளர்ச்சிக் கடன் பத்திரங்களுக்குப் பங்குத் தொகை—புதிய கிணற்றுக்கு மானிய உதவித் திட்டம். | 1900·00 | 154·61 | 299·82 | 280·72 |
| 3. | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்; மத்திய அரசுத் திட்டங்கள், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் பொறுப்பேற்கும் திட்டங்கள். | 825·06 | 95·20 | 221·91 | 245·04 |
| | | 4031·16 | 375·09 | 912·26 | 1035·1[illegible] |





ட்டுறவுக்கடன் வசதி.

வேளாண்மைக்கடன்களை வழங்கியதிலும், நிதி வாயில்களைத் ரட்டியதிலும் கூட்டுறவுக்கடன் வழங்கு சங்கங்கள் டைந்துள்ள முன்னேற்றத்தைக் கீழ்க்காணும் விவர அறிக்கையிருந்து காணலாம்.

| னம். | 1973–74-ம் ஆண்டின் நிதிநிலைமை. | 5வது திட்ட இலக்கு. | 1975–76 வரை சாதனை. | 1976–77 திட்ட இலக்கு. | 1976–77 ஆண்டு வரை, சாதனை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| கடன் வழங்குதல் ரூ. கோடியில் | | | | | |
| குறுகிய கால, | 78·81 | 100·00 | 102·85 | 115·00 | 125·12 |
| நடுத்தரக் காலக் கடன்கள். | | (1978–79 ஆம் ஆண்டி றுதியில்) | | | |
| நீண்டகாலக் கடன்கள் | 20·55 | 150·00 | 34·48 | 18·00 | 19·14 |
| (இயல்பான சிறப்புத் திட்டங்களின் கீழ்)- | | | | | |
| அரசின் பங்கீட்டு மூலதனம் உள்பட்ட கீட்டுமூலதனம் (ரூ. கோடியில்) | | | | | |
| தொடக்கச் சங்கங்கள் | 16·36 | 19·00 | 20·65 | 19·00 | 25·47 |
| மத்திய கூட்டுறவு வங்கிகள் | 11·19 | 14·00 | 15·09 | 14·00 | 17.69 |
| தமிழ் நாடு மாநில கூட்டுறவு வங்கி | 2·73 | 3·50 | 3·23 | 3·30 | 3·34 |
| அடையப்படும் வைப்பீட்கள் (ரூ. கோடியில்) | | | | | |
| தொடக்கச் சங்கங்கள். | 6·41 | 9·00 | 8·42 | 9·00 | 9·62 |
| மத்திய கூட்டுறவு வங்கிகள். | 53·47 | 70·00 | 70·37 | 70·00 | 88.18 |
| தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி | 37·61 | 35·00 | 37·99 | 43·00 | 59,09 |

**குறுகிய கால நடுத்தர காலக் கடன்கள்.**

உழவர்களுக்குத் தேவைப்படுகின்ற குறுகிய கால, நடுத்தர காலக் கடன்களை மாநிலம் முழுவதிலும் கிராம அளவிலுள்ள சுமார் 4,800 வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குகின்றன. இச்சங்கங்கள் யாவும் மாவட்ட அளவில் அமைந்த 15 மத்தியக் கூட்டுறவு வங்கிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் மாநில கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள கிராமங்கள் அனைத்தும் வேளாண்மைக் கடன்வசதி கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. உழவர் குடும்பங்கள் அனைத்தையுமே வேளாண்மைக் கடன்வசதி கூட்டுறவுச் சங்கங்களுடன் சேர்த்துக்கொள்வதற்கான ஓர் இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. சிறு உழவர்கள், சொற்பநில உழவர்கள், நிலமற்ற குத்தகை உழவர்கள் போன்ற சமுதாயத்தின் நலிந்த பிரிவினரை இச்சங்கங்களில் சேர்த்துக் கொள்ளுவதற்குச் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக, 1976-77 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இச்சங்கங்களின் உறுப்பினராக இருந்த உழவர் குடும்பங்களின் எண்ணிக்கை 29.50 இலட்சம் என்ற அளவிலிருந்து 31—3—1977 ஆம் நாளில் 37.96 இலட்சமாக உயர்ந்துள்ளது. இவ்வெண்ணிக்கை, இம்மாநிலத்திலுள்ள உழவர் குடும்பங்களில் மொத்த எண்ணிக்கையில் ஏறத்தாழ 87 சதவீதமாகும். உழவர் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கையில் 80 சதவீதமாக இருப்பவர்களான சிறிய உழவர்கள், சொற்பநில உழவர்கள், நிலமற்ற குத்தகை உழவர்களின் எண்ணிக்கை 21.13 இலட்சமாகும். சமுதாயத்தில் நலிந்த பிரிவினரைச் சேர்ந்த இக்குடும்பங்கள் அனைத்தும் இச்சங்கத்தில் அங்கம் வகிக்குமாறு சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. 1973-74 ஆம் ஆண்டிலிருந்து உழவர் கடனுதவிச் சங்கங்கள் வழங்கிய குறுகிய கால, நடுத்தர காலக் கடன்கள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு. (1) | (ரூபாய் கோடியில்) (2) |
|---|---|
| 1973-74 | 78.82 |
| 1974-75 | 87.68 |
| 1975-76 | 102.85 |
| 1976-77 | 125.12 |





சங்கங்கள் வழங்கிய மொத்தக் கடன்களில் கணிசமான ஒரு பெரும் தொகை சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டது. இவர்கள் ஐந்து ஏக்கருக்குக் குறைந்த நன்செய் அல்லது புன்செய் நிலத்தைச் சொந்தமாகக் கொண்டவர்கள் அல்லது குத்தகைக்கு விடுகின்றவர்கள். இவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | (ரூபாய் கோடியில்). |
|---|---|
| 1973-74 | 43.31 |
| 1974-75 | 50.31 |
| 1975-76 | 57.70 |
| 1976-77 | 58.54 |

உற்பத்திக்கடனாக வழங்கப்பட்ட தொகையை உயர்த்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் கூட தவணை கடந்த நிலுவையாக இருக்கும் கடன்களை வசூல் செய்வதற்குரிய முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் வருமாறு :—

| காலம். (1) | கேட்பு. (2) | வசூல். (3) | நிலுவை. (4) | கேட்புத் தொகையில் தவணை கடந்து நிலுவை இருக்கும் தொகையில் சதவிதம். (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | |
| 30—6—1974 இல் உள்ளபடி. | 86·81 | 80·59 | 6·22 | 7·1 |
| 30—6—1975 இல் உள்ளபடி. | 103·77 | 94·77 | 9·00 | 8·62 |
| 30—6—1976 இல் உள்ளபடி. | 121·24 | 108·00 | 13·24 | 10·9 |
| 30—6—1977 இல் உள்ளபடி. | 134·13 | 114·51 | 19·62 | 14·6 |

தனித்தியங்கவல்ல அல்லது பொருளாதார அடிப்படையி தனித்தியங்கவல்ல கூட்டுறவுச் சங்கங்களுள் பொருளாதா ரீதியில் நலிந்த கூட்டுறவுச் சங்கங்களைத் திருத்தி அமைப்பதற்கா திட்டத்தினால், குறைந்தபட்ச பயிர் செய்யும் பகுதியாக 2,00 ஏக்கர் பாசனம் பெற்ற நிலங்களும், 3,000 ஏக்கர் பாசனம் பெறா நிலங்களும் உள்ளன. 1968 ஆம் ஆண்டில் வேளாண் கடன் வசதி கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை சுமார் 11,000 ஆகும் இவை தற்போது சுமார் 4,800 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது இவற்றில் சுமார் 4,500 சங்கங்கள் தனித்தியங்கவல்ல அல்லது பொருளாதார அடிப்படையில் தனித்தியங்கவல்ல சங்கங்களாகும் சுமார் 300 சங்கங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டியவையாக உள்ளன. அரசு, கட்டாய இணைப்புக்கான அதிகாரங்களைக் கொண்டு, பதிவாளர் உரிமைக்குக் கட்டுப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் மேலும் திருத்தம் செய்துள்ளது. இத்திட்டம் விரைவில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முடியும் தறுவாயில், சுமார் 4,600 தனித்தியங்கவல்ல அல்லது பொருளாதார அடிப்படையில் தனித்தியங்கவல்ல சங்கங்கள் இருக்கும்.

வேளாண் மக்களில் நலிந்த பிரிவினருக்குக் கடன்வசதி அளிப்பதற்கான ஒதுக்கீடு தொடர்பான பொருள்குறித்து, தொடக்க வேளாண் கடன் வசதிச் சங்கங்கள், மத்திய கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிற்கு ஊக்கத்தொகை வழங்கும் கருத்துடன், தொடக்கக் கடன் வசதி கூட்டுறவுச் சங்கங்கள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் பொறுப்பு நிதிக்கு ஒரு மொத்த மானியத் தொகை வழங்கும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது. நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட கடன்களால் ஏற்பட்ட திருப்பிக் கிடைப்பதற்குச் சந்தேகத்திற்கிடமான வாராத நிலையிலுள்ள கடன்களைத் தள்ளுபடி செய்வதன்மூலம் பதிவாளரின் அனுமதியுடன் அந்நிதிகளைப் பயன்படுத்தப்பட முடியும். 31—3—1977 ஆம் நாள்படி, தொடக்கக் கடன்வசதி சங்கங்கள், மத்தியக்கூட்டுறவு வங்கிகள் ஆகியவைகளின் உதவி பொறுப்பு நிதி வரவிலிருந்து கடன்வசதித் தொகை முறையே ரூ. 122.69 இலட்சமும், ரூ. 24.24 இலட்சமுமாகும்.

கூட்டுறவுக் கடன் வசதிச் சங்கங்கள் தொகைகளைக் கடன் பெறவும், இன்றியமையாத நுகர்வோர் பொருட்களை வழங்கும் பணியை மேற்கொள்ளவும் போதுமான அளவிற்குக்கடன் பெறும்



திறனுள்ளவையாக இருக்க உதவும் வகையில், அவற்றின் பங்கு மூலதனத்தொகையின் அளவு அவ்வப்போது வலுப்படுத்தப்பட வேண்டும். இந்திய ரிசர்வ் வங்கி மாநில அரசிற்குக் கடன்தொகை வழங்குகிறது. அத்தொகையை மாநில அரசு, கூட்டுறவு கடன் வசதிச் சங்கங்களின் பங்குமூலதனத்தில் முதலீடு செய்ய வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் 31-3-1977 ஆம் நாளன்று செய்யப்பட்டிருந்த மொத்த முதலீடு பின்வருமாறு :—

(ரூ. இலட்சத்தில்)

| | |
|---|---|
| தமிழ்நாடு மாநிலக்கூட்டுறவு வங்கி | 126.00 |
| மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் | 773.65 |
| வேளாண் வங்கிகள் உள்பட தொடக்கக் கடன் வசதிச் சங்கங்கள் | 584.60 |
| தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி | 170.00 |
| தொடக்க நிலவள வங்கிகள் | 88.39 |
| கூட்டுறவு நகர வங்கிகள் | 17.81 |
| மொத்தம் | 1,760.45 |

இவைதவிர, மாநில அரசு, தமிழ்நாடு கூட்டுறவு மாநில நில வள வங்கி வெளியிட்ட கடனீட்டுப் பத்திரங்களுக்குப் பங்குத் தொகையும் அளித்துள்ளது. 31—3—1977 ஆம் நாளில் இவ்வாறு பங்குத் தொகையாக வழங்கப்பட்டு நிலுவையாக இருந்த தொகை ரூ. 19.51 கோடியாகும். 1976-77 ஆம் ஆண்டில் அக்கடனீட்டுப் பத்திரங்களுக்கு வட்டியாக 105.50 இலட்சம் தொகையை அரசு பெற்றது.

பஞ்சம், வெள்ளம், வறட்சி முதலிய இன்னல்களின் விளைவாக, எழுகின்ற அவசரநிலையைச் சமாளித்து, பல்வேறு படிநிலைகளிலுள்ள கூட்டுறவு கடன்வசதி நிறுவனங்களை பலப்படுத்துவதற்காக, தக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்ற அனைத்திந்திய கிராமக் கடன்வசதி மதிப்பீட்டாய்வுக்கு அளித்த பரிவுரையை ஒட்டி, மாநிலக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்கக் கடன் வசதி கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன அந்தந்த அளவில் வைத்து வரப்பெறுகின்ற வேளாண் கடன்வசதி நிலைப்படுத்து நிதிக்குப் பங்குத்தொகை செலுத்தி வருகின்றன. இந்தி

அரசிடமிருந்து நிதியுதவி பெற்று, மாநில அரசு. மாநிலக் கூட்டுறவு வங்கியின் வேளாண் கடன்வசதி நிலைப்படுத்து நிதிக்கு ரூ. 220.75 இலட்சம் தொகையை இதுவரை பங்குத்தொகையாக அளித்துள்ளது. இதற்காகக் கடனாகவும், மானிய உதவியாகவும் இந்திய அரசு நிதியுதவி வழங்கியது. வறட்சி, வெள்ளம், புயல் முதலியவற்றின் காரணமாக, விளைச்சல் பொய்த்துவிடும் போதெல்லாம், குறுகிய காலக்கடன்களை நடுத்தரக்காலக் கடன்களாக மாற்றுவதற்காக இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. 1976-77 ஆம் ஆண்டில், உழவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, குறுகிய காலக் கடன்களை, நடுத்தரக்காலக் கடன்களாக மாற்றிய மொத்தத் தொகை ரூ. 31.22 கோடியாகும். 1975-76-இல் இதேபோல் மாற்றப்பட்ட தொகை ரூ. 13.10 கோடியாகும்.

உழவர்களுக்கு, குறிப்பாக, சிறு உழவர்கள், சொற்பநில உழவர்கள் ஆகியோருக்கு ஓரே அமைப்பின் கீழ் ஒருங்கிணைந்த கடன்வசதியையும், வேளாண் பணிகளையும் அளிக்கும்பொருட்டு, சிறு உழவர்கள் வளர்ச்சி நிறுவனம், மாநில அரசு இவற்றின் உதவியுடன் 12 உழவர்பணி வசதி கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுபோல் இன்னும் 14 உழவர் சங்கங்களை அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

கடன் நிவாரணச்சட்டம் கொண்டுவந்ததையொட்டியும், அதன் விளைவாக, நிறுவன அமைப்பில்லாத வாயில்களிலிருந்து கிடைக்கும் கடன்வசதி சுருங்கிவிட்டதையொட்டியும், கூட்டுறவுச் சங்கங்கள் ரொக்கக் கடன்கள் வழங்கும் அளவை உயர்த்தி, அதன் மூலம் பிறவாயில்களில் கிடைக்கும் கடன் வசதி நின்றுவிட்டதால் எழுந்த நிலைமையைச் சரிக்கட்ட முன் வந்துள்ளது. தொடக்க வேளாண் கடன் வசதிச் சங்கங்கள் திருமணங்கள், இறுதிச் சடங்குகள், நோயிற்குச் சிகிச்சை அளித்தல் போன்ற திட்டவட்டமான காரியங்கள் தொடர்பான செலவிற்கென சொந்த பிணையத்தின் பேரில் ரொக்கக்கடன்களை வழங்குகின்றன. இச்செயல் நோக்கத்திற்கென வழங்கப்படும் கடன், மருத்துவச் செலவு, திருமணச்செலவு என்றால் ரூ. 250 எனவும், இறுதிச் செலவிற்கான செலவென்றால் ரூ. 75 எனவும், உச்சவரம்பிற்குட்பட்டு வழங்கப்படுகிறது. இத்தலைப்பின்கீழ், 31—3—1977 வரையில் வழங்கப்பட்ட மொத்தத்தொகை ரூ. 23.63 இலட்சமாகும். இதைதவிர; கூட்டுறவு நகர வங்கிகள், மத்தியக்கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் ஆகியனவும் வேளாண்மைக் கடன் வசதி சங்கங்களில் சில



கிளைகளும், நகைகள்ஈட்டின் பேரில் கடன்கள் வழங்குகின்றன. 1976-77 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் நகை ஈட்டின்பேரில் வழங்கிய மொத்தத் தொகை ரூ. 40.10 கோடியாகும்; 1975-76 ஆம் ஆண்டில் இவ்வகையில் வழங்கப்பட்ட தொகை ரூ. 22 கோடியாகும்.

***நீண்டகாலக் கடன் வசதி:***

மாநிலத்திலுள்ள வேளாண் உழவர்களின் நீண்டகாலக்கடன் வசதித் தேவைகள், மாநில நில வள வங்கியுடன் தொடர்புடைய 223 தொடக்க நில வள வங்கிகளால் மேற்கொள்ளப்படுகிறது. புதிய கிணறுகளைத் தோண்டுதல், கிணறுகளை ஆழப்படுத்துதல், மின்விசை மோட்டார்களை வாங்குதல், எண்ணெய் பொறி, விசை யேற்றங்களை வாங்குதல், விசை ஏற்றங்களுக்கான கூடங்கள் கட்டுதல், பாசன நோக்கங்களுக்காகக் குழாய் இணைப்புகளை அமைத்தல், நில மேம்பாடு, டிராக்டர் முதலான வேளாண் இயந்திரங்களை வாங்குதல் ஆகிய வேளாண் வளர்ச்சி நோக்கங்களுக்காக, நிலவள வங்கிகளால் வழங்கப்படும் கடன்தொகையில் ஏறத்தாழ 90 சதவீதம் அவற்றினுக்கென செலவிடப்படுகிறது.

கடன்வழங்கும் நடைமுறைகளை எளிமைப்படுத்துவதன்மூலமும், கடன் வழங்கும்கொள்கை முறைகளைத் தளர்த்துவதன் மூலமும், சிறுபாசனங்கள் மற்றும் ஏனையநோக்கங்களுக்காக நீண்டகாலக்கடன்கள் வழங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது; 1968-69-ஆம் ஆண்டிலிருந்து வேளாண் மறுநிதிக் கழகத்தின் நிதியுதவிகளைக்கொண்டு உருவாக்கப்படும் திட்டங்களின் மூலம் வேளாண் வளர்ச்சிக்காக கடன் வழங்குவது குறித்துப் பகுதிவாரியான வளர்ச்சி திட்டமிடப்பட்டது.

அந்நாளிலிருந்து, 65 சிறுபாசனத் திட்டங்களும், 24 சிறு பாசனம் சாராத் திட்டங்களும் செயற்பாட்டில் உள்ளன

தமிழ் நாட்டில் 1971 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2 ஆம் நாள் முதற்கொண்டு அனைத்துநாட்டு வளர்ச்சி நிறுவனத்திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. அத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 46.76 கோடியாகும். அதில் உலக வங்கியின் நிதியுதவி ரூ. 26.25 கோடி. சிறுபாசனத்திற்கென அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தால் ஒதுக்கப்பட்ட கடன் வசதி, ரூ. 18.05 கோடியும், நிலத்தைச் சமபடுத்துவதற்காக ரூ. 0.53 கோடியும் முறையே

மாகப்பெறப்பட்டுள்ளது. டிராக்டர்கள், திட்டத்திற்குத் தேவையான கருவிகள், தொழிற்நுட்ப உதவி ஆகியவற்றிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலுவைத்தொகை ரூ. 7.65 கோடியாகும். இதிலும் பெரும் பகுதி செலவழிக்கப்பட்டுள்ளது.

நிதியுதவி செய்யும் அனைத்துநாட்டு வளர்ச்சி நிறுவனப் பண்ணை இயந்திரத் திட்டத்தின்கீழ், 1,627 டிராக்டர்களுக்கு நிதியுதவி செய்யப்பட்டுள்ளது. இதற்கான கடனுதவித் தொகை ரூ. 8.51 கோடியாகும்.

வேளாண் மறுநிதி வளர்ச்சிக் கழகத்தில் நிதியுதவித்திட்டங்களின்கீழ், மின்விசையேற்றங்களை மின்விசைப்படுத்துவதற்கான செலவு குறித்து தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வழங்கப்படும் நிதியுதவியை நீட்டிப்பதற்காக, தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிக்கு மறுநிதி வழங்குவதற்கான திட்டம் ஒன்றிற்கு பம்பாய், வேளாண் மறுநிதி வளர்ச்சிக் கழகம் இசைவளித்தது. இத்திட்டத்தின்கீழ், 1-8-1974 முதல் 30-9-1976 ஆம் நாள் வரையிலான கால அளவில் 3,094 மின் விசையேற்றங்களை மின்விசைப் படுத்துவதற்கான செலவு குறித்து 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 144.84 இலட்சம் வரை மின் வாரியத்திற்கு, கூட்டுறவு மாநில நிலவள வங்கி கடன்களை வழங்கியுள்ளது.

1974-75 ஆம் ஆண்டு முதல் 1976-77 ஆம் ஆண்டுவரையிலான கால அளவில் இயல்பாக மேற்கொள்ளப்பெறும் திட்டங்களினாலும் வேளாண் மறுநிதி வளர்ச்சிக் கழகத்தாலும், அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத் திட்டத்தாலும் வழங்கப்பட்ட கடன்கள் பற்றிய விவரம்.

| ஆண்டு. | இயல்பாக மேற்கொள்ளப்படும் திட்டங்கள். | வேளாண்மை மறுநிதி கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள். | அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத் திட்டத்தால் மேற்கொள்ளப் பட்ட திட்டங்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|
| | ரூபாய் கோடியில். | ரூபாய் கோடியில். | ரூபாய் கோடியில். | ரூபாய் கோடியில். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1974—75 | 9·71 | 2·88 | 2·84 | 15·43 |
| 1975—76 | 8·40 | 4·39 | 6·26 | 19·05 |
| 1976—77 | 8·32 | 4·30 | 6·52 | 19·14 |



வழங்கப்பட்ட கடன்களின் நோக்கவாரியான பகுப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | 1974-75 | 1975-76 | 1976-77 |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| (1) | (2) | (3) | (4) |
| 1 சிறுபாசன நோக்கம் .. | 875·00 | 1,299·44 | 818·60 |
| 2 நிலத்தைப் பண்படுத்துதல் | 20·00 | 13·52 | 19·79 |
| 3 டிராக்டர்கள் .. .. | 223·00 | 300·06 | 677·87 |
| 4 ஏனைய இயந்திரங்கள் .. | 21·00 | 11·82 | 46·70 |
| 5 நிலங்கள் வாங்குதல் .. | 29·00 | 31·95 | 83·78 |
| 6 மலைத் தோட்டங்கள் வளர்ப்பு .. .. | 44·00 | 40·23 | 41·17 |
| 7 ஏனைய உற்பத்தி நோக்கங்களுக்காக .. .. | 66·00 | 58·13 | .. |
| 8 முந்தைய கடன்களை அடைத்தல் .. .. | 41·00 | 24·48 | 46·10 |
| 9 ஏனைய நோக்கங்களுக்காக.. | 224·00 | 125·48 | 180·18 |
| | 1,543·00 | 1,905·11 | 1,914·09 |

புதிய கிணறு வெட்டுவதற்கு அதன் மொத்தச் செலவில் 25 சதவீதம் அல்லது ரூ. 500 இவற்றில் எது குறைவோ அந்த வீதத்தில் அரசு உதவித் தொகை, தொடக்க நிலவள வங்கிகள் மூலமாக சிறு உழவர்களுக்கு வழங்கப்படுகிறது. பாசனக்கிணறுகளில் டீசல் விசையேற்றங்களைப் பொருத்தும் திட்டத்தின்கீழ் டீசல் விசையேற்றும்பொறி ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000 உதவித்தொகை வழங்கும் திட்டமொன்று 1972இல் கொண்டுவரப்பட்டது. அத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. அப்படித் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட அத்திட்டத்தின்கீழ் திட்டமிட்டபடி உதவித்தொகை அளிக்க ஒப்புக்கொண்டு, பின்னர் உதவித்தொகை அளிக்கப்படாதிருந்தவற்றைப் பொருத்தமட்டில் இத்திட்டம் தற்போது மீண்டும் செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்படி தொடக்க நிலவள வங்கிகள் அனுமதித்த கடன்களைக் கொண்டு தமிழ்நாடு வேளாண் பொறியியற்பணி கூட்டமைப்பின் மூலமாக வாங்கப்பட்ட டீசல் விசைப்பொறிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 1,000 வீதம் உதவித்தொகை வழங்கப்பட்டது.

[1977 ஆகஸ்ட் 12

| ஆண்டு | நிதியுதவித் தொகை வழங்கப்பட்ட புதிய கிணறுகளின் எண்ணிக்கை. | நிதியுதவித் தொகை வழங்கப் பட்ட டீசல் பொறிகளின் எண்ணிக்கை. | வழங்கப் பட்ட தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1972—73 | 10,170 | 205 | 52·61 |
| 1973—74 | 2,388 | 5,648 | 68·38 |
| 1974—75 | 2,437 | .. | 12·12 |
| 1975—76 | 1,498 | 10,763 | 114·77 |
| 1977—76 | 600 | 1,290 | 15·82 |

பாசன விசையேற்றங்களை டீசல் மயமாக்கும் திட்டத்திற்கான உதவித் தொகை தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வறட்சியினால் பயனளிக்காத அல்லது தோண்ட முடியாத கிணறுகளினால் பண இழப்பை அடைந்து துன்புறும் கடன் வாங்கியோர், அந்த இழப்பை ஈடுகட்டிப் பயன் பெறும் வகையில் மாநில நிலவள வங்கி "தோண்ட முடியாத கிணறுகள் நிதி" என்ற அமைப்பை நிறுவியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மாநில நிலவள வங்கி தனது மொத்த ஆதாயத்தில் 10 சதவீதத்தை இந்த நிதிக்காக ஒதுக்குகிறது. இதோடு, மாநில நிலவள வங்கி, தொடக்க நிலவள வங்கிகள் ஆகியவற்றில் அரசு பங்கு மூலதனத்திற்காக செலுத்தப்படும் தவணைத் தொகைகளின் வட்டியில் 50 சதவீதமும் இந்த நிதியில் சேர்க்கப்படுகிறது. 31-3-1977 ஆம் நாள் நிலவரப்படி இந்த நிதியில் 52 இலட்ச ரூபாய் உள்ளது.

1976-77 ஆம் ஆண்டில், மாநில நிலவள வங்கியின் கடனீட்டுப் பத்திரங்களுக்கு (சாதாரண திட்டமும், சிறப்புத் திட்டங்களும்) 264.90 இலட்ச ரூபாய் அரசு வழங்கியுள்ளது. 1976-77 ஆம் ஆண்டில், நிர்வாக உதவித்தொகையாக 4.40 இலட்ச ரூபாயும், பங்குகளில் முதலீடு செய்வதற்காக 5.45 இலட்ச ரூபாயும், உதவித் தொகையாக தொடக்க நிலவள வங்கிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. தொடக்க நிலவள வங்கிகள் பயனள்ள



1977 ஆகஸ்ட் 12]

ஆய்வு செய்யப்படுகின்றன. இதன் விளைவாக தனித்தியங்கும் வல்லமையற்ற வங்கிகள் தனித்தியங்கும் வங்கிகளோடு சேர்த்து விடப்படும்.

1976-77 ஆம் ஆண்டிலிருந்து, இந்திய அரசு, மாநில நிலவள வங்கிகளின் சிறப்பு கடனீட்டுப் பத்திரத் திட்டங்களில், மாநில அரசு வழங்கும் தொகையில் 50 சதவீதத்தை வழங்குவதன் மூலம், அத்திட்டத்தில் கலந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது. அதற்கிணங்க இந்திய அரசு, 1976-77ஆம் ஆண்டில் தற்காலிக அடிப்படையில் 53.70 இலட்ச ரூபாய் வழங்க அனுமதியளித்துள்ளது.

1970-74 ஆம் ஆண்டில், சிறு உழவர்களுக்குச் சொந்தமான துண்டு துண்டு நிலத் தொகுதிகளுக்குச் சாதாரண நீர்ப்பாசன வசதிகளை செய்து கொடுக்கும் நோக்குடன் 2,442 கூட்டுறவு இறைவைப்பாசனச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. எனினும், இவற்றில் 126 சங்கங்கள் மட்டுமே தனித்தியங்கும் வல்லமையுள்ளவை என்று தெரிகிறது. கடந்த சில திங்கள்களில் 2,112 சங்கங்கள் கலைக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள சங்கங்களையும் கலைப்பதற்கான கருத்து ஆய்வில் உள்ளது. 126 தனித்தியங்கும் வல்லமையுள்ள சங்கங்கள், 2.70 கோடி ரூபாய் திட்டமதிப்புடன், 413 கிணறுகள் தோண்டுதல் உட்படச் சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன. இந்தச் சங்கங்கள் நிலவள வங்கிகளிடமிருந்து பண உதவி பெறுகின்றன.

கூட்டுறவு விற்பனை-செயல்முறை கூட்டுறவு விற்பனை :

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு விற்பனை முறை, மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு அங்காடிக் கழகம், தொடக்க அளவில் 118 கூட்டுறவு அங்காடிச் சங்கங்கள் என்ற இருவேறு முறைகளில் அமைந்துள்ளது. திருவாரூரிலுள்ள தஞ்சாவூர் கூட்டுறவு அங்காடிக் கழகம் ஒன்றுதான், மாவட்ட அளவிலான கூட்டுறவு அங்காடிச் சங்கமாக அமைந்துள்ளது. கூட்டுறவு அங்காடிச் சங்கங்களின் செயல்முறைகளை வளப்படுத்தி, அவற்றை ஊக்குவிக்கும் முறையில் அவை பெரிய அளவில் வேளாண்மை உற்பத்திப் பொருட்களை விற்பனைச் செய்ய, அரசு, ஒவ்வொரு தொடக்க அங்காடிச் சங்கத்திற்கும் 1 இலட்ச ரூபாய் வரை, பங்கு மூலதனமாக உதவித் தொகைக் கொடுக்கின்றது. உயர்ந்த நிலையிலுள்ள சங்கங்களுக்கு எவ்வித வரையறையுமில்லாமல் வழங்கப்படுகின்றது.

அதன்படி 125 சங்கங்களுக்கு 114.25 இலட்ச ரூபாய் வரை பங்கு மூலதனம் அளிப்பதன் மூலம் அரசும் இதில் கலந்து கொள்கிறது. மத்திய அரசுத் துறைத் திட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம் ஆகியன உதவித் தொகை கொடுக்கப்படுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றுக்கு 17.60 இலட்ச ரூபாய் கூடுதல் பங்கு மூலதனம் அளிக்கப்பட்டுள்ளது.

முந்தைய நிதியாண்டில், உறுப்பினர்கள் வேளாண்மை உற்பத்திப் பொருட்களை பெரிய அளவில் மொத்தமாக வாங்குவதை மேற்கொள்வதன் மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட குறிப்பிட்ட வேளாண்மை உற்பத்திப் பொருட்களை மொத்தமாக வாங்கிய மதிப்பில் 2 சதவீதத்தை சங்கங்களின் விலை ஏற்ற இறக்கச் சிறப்பு நிதிக்கு அரசு வழங்கும் பதப்படுத்திய பின் விற்கப்படும் முக்கியப் பொருட்கள், விலை அதிகமாக இருத்தல் அல்லது அந்தப் பொருட்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தல், போன்ற சூழல்களில், அரசு வழங்கும் உதவித் தொகையை 5 சதவீதம் வரை உயர்த்தி வழங்க அனுமதிக்கப்படும். மேலும், அரசு பண கோட்பாட்டு எல்லையையும் அதிகப்படுத்தியுள்ளது. இதன்படி, ஒரு தனிப்பட்ட உறுப்பினரிடமிருந்து, ஓர் ஆண்டில், 1,500 ரூபாய் முதல் 3,000 ரூபாய் மதிப்புள்ள பொருட்களை மொத்தமாக வாங்கலாம். எனவே, 30 விற்பனைச் சங்கங்களின் விலை ஏற்ற இறக்கச் சிறப்பு நிதிக்கு 8.80 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. பணியாளர்களுக்கு உறழ்வுப் படிவீத முறையில் (Sliding Scale) மூன்றாண்டுகளுக்குச் சம்பளம் கொடுக்க, விற்பனைச் சங்கங்களுக்கு நிர்வாக உதவித் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. தரம் பிரிக்கும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முறையில் உதவித் தொகை மூலம் ரூபாய் 7,500 வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. (ரூபாய் 2,500 தரம் பிரிக்கும் சாதனத்திற்கான செலவிற்கும், ரூபாய் 5,000 தரம் பிரிக்கும் பணியாளர்களின் மூன்றாண்டுச் செலவிற்கும் செலவிடப்படும்). 1976-77 ஆம் ஆண்டில் விற்கப்பட்ட வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் மதிப்பு 35.63 கோடி ரூபாயாகும். ஆனால், 1975-76-ம் ஆண்டில் 27.64 கோடி ரூபாய்க்கே விற்பனையானது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம் தன்னிடமுள்ள, விற்பனை, உரங்கள், எண்ணெய்த் தொழில், கணக்கு ஆகியவற்றில் வல்ல தொழில் மேம்பாட்டு வல்லுனர்களை தேசியக் கூட்டுறவு



வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் தொடர்ந்து பேணி வருகிறது. கழகம், மன்னார்குடியில் டிராக்டர் பணிநிலையம் ஒன்றை அமைத்துள்ளது.

இரசாயன உரங்களைப் பங்கிட்டளித்தல் கூட்டுறவு விற்பனைப் பிரிவின் தலையாய பணியாகும். குறிப்பாக 1973 ஆம் ஆண்டில் அரசு இரசாயனக் கலவை உரங்களை வழங்குதல் பொறுப்பை இந்தத் துறையிடமே ஒப்படைத்தது. தஞ்சாவூர், நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மற்ற மாவட்டங்களிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கழகம், நீலகிரி மாவட்டத்திலுள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனைக் கழகம் ஆகியன, கலவை, கலவை அல்லாத உரங்களை வாங்கி 4,400 கிராமக் கடன் வசதிச் சங்கங்களின் மூலம், சில்லரை விற்பனைக்காகப் பங்கிட்டளிக்கின்றன. இந்தக் கூட்டுறவுகள், 1973-74 ஆம் ஆண்டில் 34.18 கோடி ரூபாய் மதிப்புள்ள உரங்களையும், 1974-75 ஆம் ஆண்டில் 54.08 கோடி ரூபாய் மதிப்புள்ள உரங்களையும், 1975-76 ஆம் ஆண்டில் 55.07 கோடி ரூபாய் மதிப்புள்ள உரங்களையும், 1976-77 ஆம் ஆண்டில் 48.87 கோடி ரூபாய் மதிப்புள்ள உரங்களையும் வழங்கியுள்ளன. முன்தொகையாகக் கொடுக்கப்படும், பயிரிடுவதற்கான கடனின் ஒரு பகுதியாக இரசாயன உரங்களை கிராமக் கடன் வசதிச் சங்கங்களும் வழங்குகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கழகம் ஆகியன போதுமான அடிப்படை மூலதனத்துடன், உரங்களை வாங்கி விற்பனை செய்ய இயலும் வகையில், அரசு, இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் 1976-77 ஆம் ஆண்டு வரை, பங்கு மூலதனமாகக் கொடுக்கும் உதவித் தொகையை 211 இலட்ச ரூபாய் வரை உயர்த்தியுள்ளது.

**கூட்டுறவு செய்முறைத் தொழிற்கூடங்கள்.**

தொலி நீக்கும் இயந்திரங்கள் (decorti cators) அரிசி அரவை இயந்திரங்கள், எண்ணெய் ஆலைகள், மர வள்ளிக்கிழங்கு, அன்னாசிப் பழம் பதப்படுத்துதல் ஆகியவற்றிற்கான தொழிற்கூடங்களை, கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் இணை அமைப்புகளாக நிறுவ, பங்கு மூலதனமாகவும், கடனாகவும் உதவித்

தொகை வழங்கப்படுகிறது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்குச் சொந்தமான செய்முறைத் தொழிற்கூடங்களைக் கீழ்க்காணும் அட்டவணை காட்டுகிறது:—

| பிரிவின் பெயர். (1) | பிரிவுகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. பருத்தியினின்று விதைகளை அகற்றும் தொழிற் கூடங்கள். | 18 |
| 2. நிலக்கடலைத் தொலிபிரிக்கும் தொழிற் கூடங்கள். | 25 |
| 3. எண்ணெய் பிழியும் தொழிற் கூடங்கள். | 6 |
| 4. அரிசி அரைவைத் தொழிற்கூடங்கள். | 31 |
| 5. காபி பதப்படுத்தும் தொழிற்கூடம். | 1 |
| 6. கரைசல் முறை மூலம் பிரித்தெடுக்கும் தொழிற் கூடம். | 1 |
| 7. மரவள்ளிக்கிழங்குப் பதப்படுத்தும் தொழிற் கூடம். | 1 |
| 8. ஏலக்காய் தைலம் வடிக்கும் தொழிற்கூடம். | 1 |
| 9. பழம் பதப்படுத்தும் தொழிற்கூடம். | 1 |
| 10. எண்ணெய் ஆலை. | 1 |
| 11. குளிர்ப்பதனச் சேமிப்புக்கிடங்கு. | 1 |
| 12. அன்னாசிப்பழம் பதப்படுத்தும் தொழிற்கூடம். | 1 |

மன்னார்குடிக்கருகில், பாமணியில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம், 27.22 இலட்ச ரூபாய் செலவில் நிறுவியுள்ள மணி உரத் தொழிற்சாலை மனநிறைவளிக்கும் வகையில் செயல்பட்டு வருவதோடு, பல்வேறு தரங்களில் மணி உரக்கலப்புகளைத் தயாரித்து வருகிறது. 1975-76 ஆம் ஆண்டில், இத் தொழிற்சாலை 23,600 டன் மணி உரத்தையும் 1976-77 ஆம் ஆண்டில் 32,469 டன் மணி உரத்தையும் தயாரித்துள்ளது.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் வழங்கிய 73,500 ரூபாய் நிதியுதவியுடன், 2.25 இலட்ச ரூபாய் செலவில், குடியனூர் கூட்டுறவு வேளாண்மைப் பணிப் பிரிவு வேளாண்மைக் கருவிகள் பணிமனை ஒன்றை அமைத்துள்ளது. 1975-76 ஆம் ஆண்டில், இது



2.33 இலட்ச ரூபாய் மதிப்புள்ளதும், 1976-77 ஆம் ஆண்டில் 3.53 இலட்ச ரூபாய் மதிப்புள்ளதுமான, விசைத் தெளிப்பான்கள், சாணத்திலிருந்து பெறும் வாயுவை அடைத்து வைக்கும் கலங்கள், போன்ற வேளாண்மைக் கருவிகளைத் தயாரித்துள்ளது. மேலும், 1.40 இலட்ச ரூபாய் செலவில் பாரத்தியோன், பூச்சிக் கொல்லி மருந்து தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றையும், 1.90 இலட்ச ரூபாய் நிதியுடன் பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கும் பிரிவொன்றையும் நிறுவியுள்ளது. இந்தப்பிரிவு, 1975-76 ஆம் ஆண்டில் 46.54 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பூச்சிக் கொல்லிமருந்தையும், 1976-77 ஆம் ஆண்டில் 56.85 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பூச்சிக் கொல்லி மருந்தையும் தயாரித்தது.

திருவாரூரிலுள்ள, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கழகம், தஞ்சாவூர் மாவட்ட அரிசி ஆலைகளிலிருந்து கிடைக்கும் தவிட்டைப் பயன் படுத்திக் கொள்ளும் வகையில், 19.75 இலட்ச ரூபாய் செலவில், அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலையொன்றை அமைத்துள்ளது. இந்த ஆலை 1975-76 ஆம் ஆண்டில் 479 மெட்ரிக்டன் தவிட்டு எண்ணெயையும், 1976-77 ஆம் ஆண்டில் 636 மெட்ரிக்டன் தவிட்டு எண்ணெயையும் உற்பத்தி செய்தது.

கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு வழங்கல்—விற்பனைச் சங்கம், 45.58 இலட்ச ரூபாய் மொத்தச் செலவில், ஒண்டிப்புதூரில் சூரிய காந்தி விதை எண்ணெய் தயாரிக்கும் தொழிற்கூடமொன்றை நிறுவியுள்ளது. இச்சங்கம், இந்தத் தொழிற்கூடத்தில், 15.37 இலட்ச ரூபாய் மொத்தச் செலவில் பருத்தி விதையிலிருந்து எண்ணெய் எடுக்கவும், 15.50 இலட்ச ரூபாய் மொத்தச் செலவில் எண்ணெயைத் தூய்மையாக்குவதற்கும், கூடுதல் இயந்திரங்களை அமைத்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம், தென்னாற்காடு மாவட்டம் விருத்தாசலத்தில், 61.06 இலட்ச ரூபாய் மொத்தச் செலவில் சூரிய காந்தி விதை எண்ணெய் எடுக்கும் தொழிற்கூடமொன்றை நிறுவியுள்ளது. மேற்கண்ட எல்லாத் தொழிற்கூடங்களும் 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி மார்ச் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இக் கழகம், 62 இலட்ச ரூபாய் செலவில் வடஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலையில் நிலக்கடலை எண்ணெய்த் தொழிற்கூடமொன்றையும் நிறுவிக் கொண்டுள்ளது. விருதுநகரில், 104.70 இலட்ச ரூபாய் மொத்தச் செலவில் பருத்தி விதை எண்ணெய்

தயாரிக்கும் தொழிற்கூடமொன்றை கட்டவும் இக்கழகம் திட்டமிட்டுள்ளது. இதற்கான மறுபரிசீலனை செய்யப்பட்ட திட்ட அறிக்கைத் தயாரிக்கப்பட்டு வருகிறது.

நெல், பருத்தி, நிலக்கடலை, தானியங்கள், பயறுகள் ஆகியவற்றின் தரமான விதைகளை அதிகப்படுத்த, துடியலூர் கூட்டுறவு வேளாண்மைப்பணிக்குழு, ஒன்பது கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் உதவியுடன் கோயம்புத்தூரில் விதை மேம்பாட்டு நிலையமொன்றை 170.50 இலட்ச ரூபாய் செலவில் நிறுவியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்தில், 11 இடங்களில், 23,000 ஏக்கர்களில் 25,000 டன் விதைகளை உற்பத்தி செய்யக் கருதப்பட்டுள்ளது. 1976-77 ஆம் ஆண்டில், மாநில அரசு இச்சங்கத்தின் பங்கு மூலதனத்திற்காக தன் உதவித் தொகையின் முதல் தவணையாக 16.37 இலட்ச ரூபாய் கடனும், 9.35 இலட்ச ரூபாய் உதவித் தொகையும் வழங்க அனுமதித்துள்ளது.

இரசாயன உரங்களையும், மற்ற வேளாண்மைப் பயிரிடுபொருள்களையும் சேமித்துப் பங்கிட்டளிப்பதை எளிதாக்கவும் விவசாயிகளின் வேளாண்மை உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யவும், கடனாகவும் உதவித் தொகையாகவும் வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்களுக்கும் விற்பனைச் சங்கங்களுக்கும் சேமிப்பு கிடங்குகளை அமைக்க அரசு நிதியுதவி அளித்துள்ளது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், மாநில அரசுக்குக் கடனாகத் தரும் உதவித் தொகையை 62½ சதவீதமாக உயர்த்தியுள்ளது. மீதியுள்ள நிலுவையான 37½ சதவீதத்தை மாநில அரசு வழங்குகிறது. 1974-75, 1975-76, 1976-77 ஆம் ஆண்டுகளில், ஒவ்வொன்றிலும் 150 டன் சேமிப்புத் திறனுடைய 550 கிராமக் கிடங்குகள் அமைக்கவும் (1974-75-ல் 200-ம், 1975-76-ல் 200-ம், 1976-77-ல் 150-ம்) ஒவ்வொன்றிலும் 1,000 டன் சேமிப்புத் திறனுள்ள 13 விற்பனைக் கிடங்குகள் நிறுவவும் நிதியுதவி அளிக்கப்பட்டது. 31—3—1977-ம் நாள் நிலவரப்படி 3.77 இலட்சம் டன் சேமிப்புத் திறனுள்ள 2,566 கிராமக் கிடங்குகளும், 215 விற்பனைக் கிடங்குகளும் இருந்தன. 0.51 இலட்சம் டன் சேமிப்புத் திறனுள்ள 268 கிராமக் கிடங்குகளும், 13 விற்பனைக் கிடங்குகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

**நுகர்வோர் கூட்டுறவுகள்.**

நுகர்வோர் கூட்டுறவு அமைப்பானது, மாநில அளவில் தமிழ் நாடு நுகர்வோர் கூட்டுறவுக் கழகம், ஒரு மாவட்டம் அல்லது அதன் ஒரு பகுதி அளவில் பணியாற்றும் 12 மாவட்டக் கூட்டுறவு





வழங்கல்-விற்பனைச் சங்கங்கள் உட்பட 29 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், கிராமம் அல்லது நகர அளவில் 1,296 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் ஆகிய மூன்று அமைப்புகளாகச் செயல்படுகின்றது. 438 மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உட்பட, தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள், பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மற்ற எழுதுபணிப் பொருட்கள் ஆகிய மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. பெண்களுக்கென்றே 18 பண்டகசாலைகளும், தொழிற்சாலை, மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கு 265 பண்டகசாலைகளும் உள்ளன. தொடக்கப் பண்டகசாலைகள் இல்லாத அல்லது தொடக்கப் பண்டகசாலைகள் முனைப்பாகச் செயல்படாத இடங்களில், மொத்த விற்பனைப் பண்டகசாலைகளால், 455 கிளைப் பிரிவுகள் சில்லறை விற்பனைக்காகத் திறக்கப்பட்டுள்ளன. தொடக்கப் பண்டகசாலைகளும், 281 கிளைப் பிரிவுகளை சில்லறை விற்பனை செய்வதற்காகத் திறந்துள்ளன. நுகர்வோர் திட்டங்களின் மேம்பாட்டிற்காக, அவற்றை விரைவாகச் செயற்படுத்தியதன் காரணமாக மாநிலத்தில் 20 பல்துறைப் பண்டகசாலைகள் செயல்பட்டு வருகின்றன. 1974-75, 1975-76-ம் கூட்டுறவு ஆண்டுகளில், இந்தப் பல்துறைப் பண்டகசாலைகள், முறையே 32.19 கோடி ரூபாய்க்கும், 32.30 கோடி ரூபாய்க்கும் விற்பனை செய்துள்ளன. நுகர்வோர் கூட்டுறவுகளின் வணிகத்தை உயர்த்தவும் பல்வகைப் படுத்தவும் சிறு சிறப்பு அங்காடிகள் எனப்படும் 84 நவீன சில்லறைக் கடைகளை கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், நன்கு செயல்படும் தொடக்கப் பண்டகசாலைகள் ஆகியவை திறந்துள்ளன. கடந்த மூன்று கூட்டுறவு ஆண்டுகளில், நுகர்வோர் அனைத்துக் கூட்டுறவுகளினாலும் ஈட்டப்பட்ட சில்லறை விற்பனையின் மொத்த மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு. | மதிப்பு (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| (1) | (2) |
| 1973-74 | 60.48 |
| 1974-75 | 67.47 |
| 1975-76 | 81.00 |

9,000 நியாயவிலைக் கடைகளில், சுமார் 7,000 நியாயவிலைக் கடைகள் கூட்டுறவுகளினால் நடத்தப்படுகின்றன.

நிர்வாகப் பணியாளர்களின் செலவிற்காகவும், மேசை, நாற்காலி போன்ற மரச் சாமான்களையும், பொருத்துவதற்கான பொருட்களை வாங்குவதற்கும், நடைமுறை மூலதனத்தை அதிகப்படுத்துவதற்கும், டிரக் வண்டிகளை வாங்குவதற்கும், கிடங்குகளை நிறுவுவதற்கும், நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு, உதவித் தொகை, கடன், பங்கு மூலதனம் ஆகிய முறைகளில் வழங்கும் நிதி உதவியை அரசு அதிகப்படுத்தியுள்ளது. பொதுமக்களுக்கு வழங்கும் திட்டத்தின் கீழ், நுகர்வோர் பொருட்களை முனைப்புடன் சில்லறையாக விற்பனை செய்வதை உறுதிப்படுத்துவதற்காக மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்கக் கூட்டுறவுகளுக்குக் கொடுத்த 7 கோடி ரூபாயைத் திருப்பித் தரவும் அரசு உத்திரவாதமளித்தது.

மாநிலத் திட்டப்பணிகளின் கீழ், நுகர்வோர் தொழிற்சாலைகளை நிறுவ, நுகர்வோர்க் கூட்டுறவுகளுக்கு, கடன், பங்கு மூலதனம் ஆகிய முறைகளில் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இதுவரை நிறுவப்பட்டுள்ள தொழிற்சாலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண். (1) | பிரிவின் பெயர். (2) | பிரிவின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1. | சலவை சோப்புத் தொழிற்சாலை | 1 |
| 2. | காபி அரைக்கும் தொழிற்சாலை | 3 |
| 3. | காபி அரைக்கும் இயந்திரங்கள் | 45 |
| 4. | காகிதப் பொருட்கள் தொழிற்சாலை | 3 |
| 5. | மக்காச் சோளத் தொழிற்சாலை | 1 |
| 6. | உணவுக்குரிய நறுமணப் பொடித் தயாரிப்புத் தொழிற்சாலை. | 1 |
| 7. | மாவரைக்கும் ஆலைகள் | 10 |
| 8. | எண்ணெய் வடிக்கும் தொழிற்சாலை | 14 |

மாநிலத் திட்டப்பணிகளின் கீழ் நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு 1974-75, 1975-76, 1976-77-ம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட உதவித் தொகை முறையே 15.83 இலட்ச ரூபாய், 9.52 இலட்ச ரூபாய், 12.67 இலட்ச ரூபாய் ஆகும்.



மத்திய அரசு ஆதரவு பெற்ற நுகர்வோர் திட்டங்களின் கீழ் வளர்ச்சிப் பெற்று வேலை வாய்ப்பு வளமும் பெற்ற நுகர்வோர் கூட்டுறவுகளின் விரைந்த வளர்ச்சிக்காக மத்திய அரசு 1971-72-ம் ஆண்டிலிருந்து நிதியுதவி அளித்தது. 1971-72 முதல் 1976-77 வரையிலுள்ள காலப்பகுதியில், இத்திட்டத்தின் கீழ், திருப்பூரில் கம்பளித் தொழிற்சாலையொன்று நிறுவவும், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவுக் கழகத்தின் மூலம், மதுரையில் பங்கீட்டு மையம் ஒன்றைத் திறக்கவும். 9 பல்துறைப் பண்டகசாலைகளை நிறுவவும், ஒரு பல்துறைப் பண்டகசாலையினை பெரிதாக்கவும், 3 கிளை பல்துறைப் பண்டகசாலைகளை நிறுவவும், 12 நவீன சில்லறை விற்பனை நிலையங்களை/பெரிய சில்லறை விற்பனை நிலையங்களை நிறுவவும், மட்பாண்டத் தொழிற்சாலையொன்றை நிறுவவும் கூட்டுறவுகளுக்கு உதவித் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. மட்பாண்டத் தொழிற்சாலைத் தவிர மற்ற எல்லாப் பிரிவுகளும் திறக்கப்பட்டுவிட்டன. இத்திட்டத்தின் கீழ், நுகர்வோர் கூட்டுறவுகள், 1974-75 ஆம் ஆண்டில் 4.42 இலட்ச ரூபாயும், 1975-76-ம் ஆண்டில் 52.82 இலட்ச ரூபாயும், 1976-77 ஆம் ஆண்டில் 15.48 இலட்ச ரூபாயும் உதவித் தொகையாகப் பெற்றுள்ளன.

மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுடன் இணைந்துள்ள தொடக்கப் பண்டகசாலை போன்ற கூட்டுறவு அமைப்பின் மூலம், கிராமப்புறங்களில் பயன்கொள்வோர்ப் பொருட்களை பங்கிட்டளிப்பதை மேம்படுத்துவதற்காக 1976 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் தந்த 13.88 இலட்ச ரூபாய் உதவித் தொகையுடன், 10 நிலையங்கள் அமைக்க அனுமதிக்கப்பட்டது. இம்மாநிலத்தின் 12 மாவட்டங்களில் உள்ள மொத்த விற்பனை நுகர்வோர் கூட்டுறவுகளுடன் தொடர்புடைய 232 கிராமப்புற வேளாண்மைக் கடன் சங்கங்களின் மூலமும் இது நிறைவேற்றப்படும். இத்திட்டத்தின் தொடக்கத்திலிருந்து 1977 மார்ச்சுத் திங்கள் வரை 239.76 இலட்ச ரூபாய்க்குப் பொருட்களை இவை விற்றுள்ளன. 7 மாவட்டங்களில் உள்ள 325 கிராமக் கூட்டுறவு வேளாண்மைக் கடன் சங்கங்களின் மூலம் நிறைவேற்றப்படுவதாக, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் 20.95 இலட்ச ரூபாய் உதவித் தொகையுடன், 1976-77 ஆம் ஆண்டில் மேலும் 15 நிலையங்கள் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவுடன், இத்திட்டத்தின்கீழ், மதுரையில் காப்பி அரைவைத் தொழிற்சாலையை அமைக்கப் பயன்கொள்வோர் கூட்டுறவுகளுக்கு 0.28 இலட்ச ரூபாய் நிதி உதவியும் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவுக் கழகம், மாநில அளவில் அமைந்த ஒரு தலைமை நிறுவனமாகும். மாவட்டக் கூட்டுறவு வழங்கல்-விற்பனைச் சங்கங்கள் உட்பட மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதும், அவற்றுக்கும், அவற்றால் நடத்தப்படும் சிறப்பு விற்பனை நிலையங்களுக்கும் இன்றியமையாப் பொருட்களை வழங்க ஏற்பாடு செய்வதும் இதன் பணியாகும். 31-3-1977 ஆம் நாள் வரை இக்கழகத்திற்குப் பங்கு மூலதன உதவித் தொகையான 13 இல்ட்சம் ரூபாய் அரசால் கொடுக்கப்பட்டது. இக்கழகம், 1975-76 ஆம் ஆண்டில் 251.94 இலட்ச ரூபாய் மதிப்பிற்கும், 1-7-1976 ஆம் நாள் முதல் 31-5-1977 ஆம் நாள் வரையிலுள்ள காலப்பகுதியில் 245.80 இலட்ச ரூபாய் மதிப்பிற்கும் விற்பனை செய்துள்ளது.

மாணவர் விடுதிகளுக்கு நியாய விலையில் துணிகளும், இன்றியமையாப் பொருட்களும், வழங்கும் பணி, நுகர்வோர் கூட்டுறவுகளால் மேற்கொள்ளப்பட்டன. 1-7-1977 ஆம் நாள் முதல் 30-4-1977 ஆம் நாள் வரை கூட்டுறவுகள் 119.77 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொருட்களை 243 விடுதிகளுக்கு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 64,000 மாணவர் பயனடைந்துள்ளனர். இந்திய அரசு 35 நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு, அவை நியாய விலையில் துணிகளை விற்பனை செய்ய அதிக வங்கிக் கடனைப் பெற இயலும் வகையில் 19.22 இலட்ச ரூபாயைத் தொடக்க முதலாகக் கொடுத்தது. இந்திய அரசு, 43 நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு இன்றியமையாப் பொருட்களை அவை பங்கிட்டளிக்க வங்கிகளிடமிருந்து அதிகத் தொகையைக் கடனாகப் பெறும் வகையில் 29 இலட்ச ரூபாய் நிதி உதவியையும் அளித்துள்ளது.

### மாணவர்களுக்குப் பொது சமையற் கூடங்கள்.

மாணவ விடுதிகளில் தங்கியிராத, குறிப்பாக, கிராமப் பகுதிகளிலிருந்து வரும் ஏழை மாணவர்களுக்கும், குறைந்த வருவாயை உடைய பெற்றோர்களின் அல்லது பாதுகாவலர்களின் பிள்ளைகளுக்கும் சாப்பாட்டு வசதிகளுக்கு வகை செய்து கொடுப்பதற்காக, பல்கலைக் கழக கல்லூரி வளாகங்களுக்குள் பொதுச் சமையற் கூடங்களை அமைப்பதற்கான திட்டங்களுக்கு நிதியுதவியளிக்க இந்திய அரசு முன்வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு நிலையத்திற்கும் ரூ. 20,000 மத்திய உதவி கிடைக்கிறது. ரூ. 6.37 இலட்சம் செலவில் 33 பொது சமையற் கூடங்களைத் திறப்பதற்-



கான செயற் குறிப்புகள், மத்திய அரசின் உதவி பெறுவதற்காக அனுப்பப்பட்டன; அவைகள் மத்திய அரசால் ஏற்பளிக்கப்பட்டுள்ளன. இந்த 33 செயற்குறிப்புகளுக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1977-78-ல் இத்திட்டம் செயல்படத் தொடங்கும்.

### மாணவர்களுக்குப் புத்தகங்கள் வழங்குதல்.

பள்ளிப்பாட நூல்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மாணவர்களுக்கு வழங்கியது மாணவர்களின் நலனுக்காகச் செயல்படுத்தப்பட்ட மிக முக்கியமானதோர் நடவடிக்கையாகும். முதன்முறையாக, 1976-77-ல் சென்னை மாநகர் நீங்கலாக, மாநிலம் முழுவதிலும், அரசினர் பாட நூல்களை மாணவர்களுக்கு வழங்கும் பணி கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சென்னை மாநகரில் இப் பணியைத் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் செய்கிறது. கூட்டுறவுச் சங்கங்களால் 159 இலட்சம் நூல்கள் அளிக்கப்படுவதற்கு திட்ட இலக்கு வரையறுக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள், ரூ. 2.55 கோடி மதிப்புள்ள 169 இலட்சம் புத்தகங்களை ஆங்காங்கே அனுப்பி வழங்கியுள்ளன. இவ்வாறாக, திட்ட இலக்கிற்கும் கூடுதலாகவே பாடநூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

1976 ஆம் ஆண்டு நுகர்வோர் கூட்டுறவுகள், இந்திய அரசிடமிருந்து உதவி பெற்று, பயிற்சி நோட்டுப் புத்தகங்கள், நல்ல காகிதங்கள் ஆகியவற்றை சலுகைக் கட்டண வீதங்களில் 400 டன்கள் வரை தயாரித்தது. இவற்றை மாநில அரசு நிர்ணயித்துள்ள விலைகளில் மாணவர்களுக்கு விற்றது. 31-3-1977 ஆம் நாளோடு முடியும், அரையாண்டில், 383 டன் காகிதம் தயாரிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

### கூட்டுறவு வேளாண்மைப் பணி நிலையங்கள்.

பயனுள்ள வேலை வாய்ப்பை. வேலையில்லாப் பொறியியல் பட்டதாரிகள். பணிப்பட்டயம் பெற்றோர் ஆகியோருக்கு ஏற்படுத்தித் தரவும் உழவர்களின் பொறியியல் தொடர்பான பணித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், இந்திய அரசு ஒரு திட்டத்தை அமைத்தது. இதன் கீழ் வட்ட அளவிலான 306 கூட்டுறவு வேளாண்மைப் பொறியியல் பணி நிலையங்களும், மாவட்ட அளவிலான 16 வேளாண்மைப் பொறியியல் பணிச் சங்கங்களும் அமைக்கப்பட்டன. இந்த நிலையங்களில், வழக்கமான வாடகைக்

சாதனங்கள், டிராக்டர்கள், ஆயில் என்ஜின்கள், தெளிப்பான்கள் ஆகியவற்றைச் செப்பனிடுவதற்கான கருவி வசதிகள் முதலியன உள்ளன. இந்த நிலையங்கள் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு பணியை முடிக்கும் அடிப்படையில் தண்ணீர் ஊற்றுக்களைக் கண்டுபிடித்துக் கொடுத்தல், துளை இடுதல், கிணறு தோண்டுதல், குழாய்க் கருவிகளை அமைத்தல், நிலத்தடியில் குழாய்களை அமைத்தல், கால்வாய்கள் அமைத்தல், தண்ணீரைத் திறமையாக வும் பயனுள்ளதாகவும் பயன்படுத்த வழிகாட்டுதல் போன்ற நீர் பாசனப் பணிகளையும் செய்கின்றன. ஒவ்வொன்றுக்கும் 50,000 ரூபாய் வீதம் 220 நிலையங்களுக்கு நிதி உதவியும் அரசு வழங்கியுள்ளது. இதோடு, ஒவ்வொன்றுக்கும், 2 இலட்ச ரூபாய் வீதம் 300 நிலையங்களுக்கு 6 கோடி ரூபாய் வழங்க அரசு ஸ்டேட் பாங்கு ஆஃப் இந்தியாவிற்கு உத்திரவாதம் வழங்கியுள்ளது இத்திட்டத்தின் கீழ், 744 பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது.

வட்ட அளவிலான நிலையங்கள், மாவட்ட அளவிலான வேளாண்மைப் பணி நிலையங்கள் ஆகியவற்றின் பணிகளை ஒருங்கிணைக்க, மாநில அளவில் ஒரு கூட்டுறவு வேளாண்மைப் பணிக் கழகம் செயலாற்றி வருகின்றது. இக்கழகம் வட்ட, மாவட்ட நிலையங்கள் தங்கள் திட்ட அறிக்கைகளை முறைப்படுத்துவதற்கும், அரசு உத்தரவாதத்தின்பேரில், வட்ட நிலையங்களுக்கு ஸ்டேட் பாங்கு ஆஃப் இந்தியாவிடமிருந்து, மாவட்ட நிலையங்களின் நேர் வில் வங்கிக் கிளைகளிடமிருந்தும் கடன்களை வாங்கிக் கொடுப்பதற்கும் உதவுகிறது. டீசல் எஞ்சின்களின் முக்கிய உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கி அவற்றை நிலவள வங்கிகளின் கடன் பெற்றோருக்கு வழங்க இக்கழகம் உரிமை பெற்றுள்ளது.,

### நலிந்த பிரிவினர்களுக்கான கூட்டுறவுகள்.

தொழிலாளர்கள், துணி வெளுப்போர், நாவிதர், உப்பு தயாரிப்போர், மலைவாழ்மக்கள் போன்ற சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் நன்மைக்காகவும் கூட்டுறவுச் சங்கங்கள் செயலாற்றுகின்றன. ஒப்பந்தப் பணிகளைப் பெற்றுத் தருவதன் மூலம், தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுகள், தங்கள் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கின்றன. மற்ற சங்கங்களெல்லாம், தங்கள் உறுப்பினர்களுக்கு சேவை செய்கின்றன. அல்லது கடனைக் கொடுக்கின்றன. இந்தச் சங்கங்கள் அரசிடமிருந்து பங்கு மூலதனம், கடன், உதவித் தொகை, இலவச துறைப்பணியாளர்களின் பணி ஆகிய உதவிகளைப் பெறுகின்றன.



### பெரும்பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் :—

மலைச் சாதியினர் மிக அதிகமாக வாழ்கின்ற பகுதிகளில், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக, ஒரே இடத்தில் எல்லாவகைக் கடன், விற்பனை வசதிகளுக்கு ஒருங்கிணைந்த பணிகளுக்கு வகை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1976-77-ல் சேலம், தருமபுரி, திருச்சி, வட ஆற்காடு மாவட்டங்களில், பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ( Lamps ) ஏழு அமைக்கப்பட்டுள்ளன. தென் ஆற்காடு மாவட்டம், கல்ராயன் குன்றுகளில், மலைச் சாதியினர் வசிக்கும் பகுதிகளில் மூன்று பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மலைச் சாதியினரின் பொருளாதார நிலைகளைக் கருத்தில் கொண்டு, அரசு, இச்சங்கங்களுக்குத் தாராளமாக நிதியுதவி அளிக்க முன்வந்தது. சங்கங்கள் தங்களின் கடன் வாங்கும் திறனைப் பெருக்கிக் கொள்வதற்கு இயலும் பொருட்டு பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பகுதிகளில், சங்கம் ஒன்றுக்கு, ரூ. 50,000 பங்கு மூலதன உதவிக்கு அனுமதி அளிக்கப்பட்டது. மலைச் சாதியினர், கடன் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக பங்குகளை வாங்குவதற்கு வகை செய்யும் பொருட்டு அவர்களுக்கு அரசால் பங்கு மூலதன மானியம் வழங்கப்பட்டது. இதற்காக, ரூ. 2,64,000 திரும்பப் பெற முடியாத கடனுகை அனுமதிக்கப்பட்டது. இதைத் தவிர, பொருள்களைச் சேமிப்பதற்கும், அலுவலகக் காரியங்களுக்காகவும், கிடங்கு அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்காக 50 சதவீத உதவித் தொகைக்கு அரசு அனுமதி வழங்கியது. இதற்காக, ரூ. 2,50,000 அனுமதிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி, பயனீட்டுக் கடனுக்கான வட்டியும் சாதாரண வீதம், 12.60 சதவீதத்திலிருந்து 4 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த வேறுபாடு 8.6 சதவீதம் அரசால் ஏற்கப்படுகிறது. இதற்காக அரசு, ரூ. 4.49 இலட்சம் அனுமதித்துள்ளது. நிர்வாக உதவித் தொகை பொறுப்பு நிதி உதவித் தொகை, விலை ஏற்றத் தாழ்வு உதவித் தொகை, வண்டிகள் வாங்குவதற்கென உதவித் தொகை போன்ற பிற உதவித் தொகைகளும் ரூ.8 இலட்சம் அளவிற்கு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளன. 7 பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு அனுமதித்த மொத்த தொகை ரூ. 23.63

இலட்சமாகும். இதில் ரூ. 10.83 இலட்சம் பயன்படுத்தப் பட்டுள்ளது. எஞ்சியவை, இரண்டாவது, மூன்றாவது ஆண்டு உதவித் தொகை முதலியவை தொடர்பானதாகும். இவை, வரும் ஆண்டுகளில் பயன்படுத்தப்படும். இவை தவிர, பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொன்றிலும், நிர்வாக இயக்குநராகப் பணியாற்றுவதற்கு, 7 கூட்டுறவு துணைப் பதிவாளர்கள் பதவிகளுக்கு அந்த அனுமதி அளித்தது. இவர்களுக்கான செலவை அரசே ஏற்கிறது.

தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள 3 பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இதைப் போன்ற உதவி அளிக்கப்படுகிறது. தானிய வகைகளுக்கான சாகுபடிக் கடன்கள், உழவு மாடுகள் வாங்குவதற்கான செலவு ஆகியவற்றிற்காக ரூ. 2.25 இலட்சத்திற்கு உதவித்தொகை வழங்க அரசு அனுமதித்துள்ளது. உறுப்பினர்கள் சாதாரண வட்டி வீதங்களில் அதாவது 12.6 சதவீதத்திலிருந்து 16 சதவீதம் வரை கொடுத்து கடன் வாங்குவதற்குப் பதிலாக குறைக்கப்பட்ட வட்டி வீதங்களில் அதாவது 4 சதவீதத்தில் கடன்களைப் பெற இயலும் பொருட்டு, வட்டி வீதங்களில் உள்ள வேறுபாட்டை அரசு ஈடு செய்துள்ளது. இவை தவிர, மேசை, நாற்காலிகள் முதலியன வாங்குவதற்கும், போக்குவரத்துச் செலவு முதலியனவற்றிற்கும் உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**கூட்டுறவுக் கல்வியும், பயிற்சியும் :—**

சென்னையிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவுப் பயிற்சிக்கான சிறப்புக் குழு, மாநிலத்தின் கூட்டுறவுப் பயிற்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. சென்னையிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி, பணிக்குச் சேர்க்கப்படும் முதுநிலை ஆய்வாளர்கள், கூட்டுறவு சார் பதிவாளர்கள், துணைப் பதிவாளர்கள் ஆகியோருக்கு நேரடியாகப் பயிற்சியளிக்கிறது. இதோடு, இது, கூட்டுறவுத் தணிக்கை, கூட்டுறவு வங்கி இயல், தொழிற்சாலைக் கூட்டுறவு ஆகியவற்றில் பொது அடிப்படை பாட முறையையும், சிறப்புப் பாட முறையையும் நடத்துகிறது. சென்னையிலுள்ள மத்திய கூட்டுறவு நிறுவனம் கூட்டுறவுத் துறையில் இளநிலைப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கிறது. இம்மாநிலத்திலுள்ள இளநிலை அளவிலான ஏழு கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்களில் வேலைக்கமர்த்தப் பட்டுள்ளவர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கிறது.



தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், ஆங்கில, தமிழ் மாத இதழ்களில் கூட்டுறவுத்துறையின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை விளம்பரம் செய்தும், பிரச்சாரத்திற்காக 4 ஊர்திகளைப் பராமரித்தும், அனைத்திந்திய கூட்டுறவு வாரத்தைக் கொண்டாடியும், கூட்டுறவுப் பொருள் பற்றிய நூல்களைத் தொகுத்து வைத்திருக்கும் நூலகங்களைப் பராமரித்தும், மாநாடுகளையும், கருத்தரங்குகளையும் நடத்தியும் தொடர்ந்து விளம்பரப் பணியாற்றி வருகிறது.

**பொது.**

1969 ஆம் ஆண்டு, உருவாக்கப்பட்ட தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் செய்யப்பட்ட விரிவான திருத்தங்கள், தலைமை, மத்தியச் சங்கங்களின் சில இனங்களின் இயக்குநர்களைக் கொண்ட தேர்ந்தெடுக்கப்படும் வாரியங்கள் பெரிதாக்கப்பட்டு, இந்தச் சங்கங்களின் இயக்குநர்களது வாரியத்தின் தன்மை முற்றிலும் மாறுவதற்கும் வகை செய்தன. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இந்தக் குழுக்களில் அதிகாரம் செலுத்தினர், கூட்டுறவுகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அதிகாரமின்றியிருந்தனர். கூட்டுறவுகளின் ஒழுங்கு, நம்பிக்கை ஆகியவற்றை நிலை நிறுத்த, தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்கீழ், 10-6-1976 ஆம் நாள் முதல் குறிப்பிட்ட சில வகைகளில் 411 கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இந்தத் தனி அதிகாரிகள், இச் சங்கங்களின் பணியில் குறிப்பிட்ட அளவிற்கு ஒழுங்கும், வளர்ச்சியும் பெற வழி செய்தனர்.

இச் சங்கங்கள் செயல்படுவதில், தரத்திலும் அளவிலும் சில ஒழுங்கையும், மேம்பாட்டையும் சிறப்பு அதிகாரிகள் கொண்டுவந்துள்ளனர். 1975-76-ல் ரூபாய் 102.85 கோடி, குறுகியகால, நடுத்தரக் காலக்கடன்கள் வழங்கப்பட்டன. 1976-77-இல் இது ரூபாய் 125-12 கோடியாக அதிகரித்தது. பதிவு செய்யப்பட்ட வேளாண்மைக் குடும்பங்களின் எண்ணிக்கை 22 இலட்சத்திலிருந்து 38 இலட்சத்திற்கு அதிகரித்துள்ளது. வைப்பீடு திரட்டும் பணி ஊக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது. இத்துடன், புதிய பிறர் மனம் கவரக்கூடிய வைப்பீடு திட்டங்களும் கொண்டு வரப்பட்டன. இதனால் வைப்பீடு நிலையில் முன்னேற்றம் கண்டுள்ளது. தலைமை வங்கியில் வைப்பீடுகள் 1975-76-இல்

ரூபாய் 38 கோடியாக இருந்தது, 1976-77-ல் ரூபாய் 59 கோடியாக உயர்ந்தது. இதைப்போலவே, கூட்டுறவு மத்திய வங்கிகளில் இது தொடர்பான வைப்பீடு, 1975-76-ல் ரூபாய் 70 கோடியாக இருந்தது. 1976-77-இல் ரூபாய் 88 கோடியாக அதிகரித்தது. மாவட்டத்தில், பயிர் முறையை ஒருமுகப்படுத்தியதன் காரணமாக வழங்கப்பட்ட கடனில், மேம்பாடு ஏற்பட்டது. எடுத்துக்காட்டாக சேலம், மத்திய வங்கி பகுதியில் இந்த வங்கி நெல், நிலக்கடலை முதலிய முக்கிய உணவுப் பயிர்வகைகளுக்குக் கடன் வழங்குவதற்கு மாறாக, மரவள்ளி, புகையிலை, கரும்பு மற்றும் நீண்டகால பயிர்களுக்கு, அதன் கூட்டுறவுக் கடன்களில் 75 சதவீதத்திற்கு மேல் வழங்கியது. எனவே, சிறப்பு அதிகாரி, சாகுபடி முறை குறித்த புள்ளி விவரங்களைச் சேகரித்து, சாகுபடி செய்யப்படும் நிலத்தில் ஏக்கருக்கு இவ்வளவு என்ற கணக்கில் கடன் வழங்கினார்கள். இதனால் வழங்கப்பட்ட கடன் முறை கீழ்க்கண்டவாறு மாறியது.

| பயிரின் பெயர். | 1-4-75-லிருந்து 31-12-75வரையிலான கால அளவில் வழங்கப்பட்ட கடன் (ரூ. இலட்சத்தில்) | | 1-4-76லிருந்து 31-12-76வரையிலான காலஅளவில் வழங்கப்பட்ட கடன் (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | ஏக்கர் | தொகை | ஏக்கர் | தொகை |
| நெல் | 2,139 | 11·51 | 19,492 | 137·93 |
| மரவள்ளி | 40,742 | 339·37 | 9,848 | 83·71 |

கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களும் அவைகளின் நிர்வாகத்தினரும் பல்வேறு முறைகேடுகள் செய்துள்ளனர் என்று புகார்கள் கிடைக்கப் பெற்றதின் பேரில், 1976 ஜூன் திங்களில் இம்மாநிலத்தில் உள்ள கூட்டுறவுச் சங்க நிறுவனங்கள் செயல்படுவதை ஆய்வு செய்வதற்கென தனி விசாரணைக்குழு ஒன்றை அரசு அமைத்தது. தலைமைச் சங்கங்கள், கூட்டுறவு மத்திய வங்கிகள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், மொத்த பண்டகசாலைகள் ஆகியவை உட்பட 49 கூட்டுறவு நிறுவனங்களில் இக்குழு ஆய்வு செய்து முடித்து, இதனுடைய அறிக்கைகளைச் சமர்ப்பித்தது. முறையற்ற வகையில் நியமனம் செய்தல், மோட்டார் வண்டிகளைத் தவறாகப் பயன்படுத்துதல், தொலைபேசிகளைத் தவறாகப் பயன்படுத்துதல், நிதிகள், விளம்பரங்கள் ஆகியவற்றை தவறாகப் பயன்படுத்திக் கொள்ளுதல். பினாமி பெயர்களில் கடன் வழங்குதல், அந்தந்த கூட்டுறவுச் சங்க



நிறுவனங்களின் விதித்துறைகளுக்கு முரணாக வீணாகச் செலவழித்தல் போன்ற பலவகைப்பட்ட முறைகேடுகள் கூட்டுறவுச் சங்கங்களில் நிகழ்ந்திருப்பதை இக்குழு சுட்டிக் காட்டியுள்ளது. குழுவின் பரிந்துரைகளை ஒட்டி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் நடவடிக்கை எடுக்க முற்பட்டுள்ளார். குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட மேல்நடவடிக்கைக் குறித்து அரசு உன்னிப்பாக கண்காணித்தும் வருகிறது.

மேற்கண்ட விளக்கங்களினால் ஆய்வுக்குரிய நடப்பு ஆண்டில் கூட்டுறவுகள், குறிப்பாக கடன் வசதி, விற்பனை, செயல்முறை, நுகர்வோர் கூட்டுறவு ஆகிய ஊக்கமுள்ள பிரிவுகளில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் அடைந்துள்ளன என்பது தெரிய வந்துள்ளது.

## 1977-78 ஆம் ஆண்டிற்கான திட்டத்திலுள்ள முக்கியக் கூறுகள் பற்றி குறிப்பு.

### கூட்டுறவுக் கடன் வசதி.

**குறுகிய கால, இடைக்கால கடன் வசதி.**—1977-78 ஆம் ஆண்டில் கிராம வேளாண்மைக் கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், குறுகிய கால—இடைக்கால கடன்களாக ரூபாய் 135 கோடி வரை வழங்குவன. அதில் 50 சதவீதத்திற்கு மேல் சிறு உழவர்களுக்கும், சொற்ப நில உழவர்களுக்கும், நிலமில்லாக் குத்தகை உழவர்களுக்கும் வழங்கப்படும். வேளாண் மக்களின் நலிந்த பகுதியினருக்குக் கடன்கள் வழங்குவதை ஊக்குவிக்கும் பொருட்டு. 1977-78 ஆம் ஆண்டில், கிராமக் கடன் வழங்கு சங்கங்கள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் பொறுப்பு நிதி ஏற்பாட்டிற்கு அரசு வழங்கும் பங்குத் தொகைத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், அரசால் வழங்கப்படும் தொகை ரூபாய் 30 இலட்சமாகும்.

தொடக்க வேளாண்மைக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் 46 இலட்சம் வரை அதிகரிக்கப்படுவர். வேளாண்மைக் குடும்பங்களில் 90 சதவீதத்தினர் இத்திட்டத்தில் அடங்குவர். வேளாண் கடன் வசதி சங்கங்களில், நூற்றுக்கு நூறு வேளாண் குடும்பங்களை உறுப்பினராகச் சேர்க்கின்ற திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும். 500 கூட்டுறவுச் சங்கங்கள் நூற்றுக்கு நூறு வேளாண் குடும்பங்களை உறுப்பினராகச் சேர்த்து சாதனை புரியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது,

இதனால் 3,600 சங்கங்கள் 31-3-1973 ஆம் நாளுக்குள் நூற்றுக்கு நூறு வேளாண் குடும்பங்களை உறுப்பினராகச் சேர்த்துச் சாதனை புரியும்.

கூட்டுறவுத் துறைகள், தமது பங்கீட்டு மூலதனத்தையும், வைப்பீட்டுத் தொகைகளையும் முறையே ரூபாய் 48.00 கோடி, ரூபாய் 170.00 கோடி அளவிற்கு அதிகரிக்கச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் தேசிய வேளாண்மைக் கடன் வசதி (நீண்டகாலப் பணி குறித்து) நிதியினின்று கடன்களைப் பெறுவதின் மூலம் கடன் வசதி கூட்டுறவுத் துறைகளின் பங்கீட்டு மூலதனத்தில் ரூபாய் 150-00 இலட்சத்தை அரசு முதலீடு செய்யும்.

கடன் நிவாரணச் சட்டத்தினாலும், நிறுவனம் சாரா வாயில்களினின்று கிடைக்கும் கடன் வசதி, குறைந்ததன் விளைவாகவும், முடிந்த (அளவு) வரை கடன் வசதிக்கால இடைவெளியை நிறைவு செய்வதில் கடன் வசதி கூட்டுறவுத் துறைகள் முக்கிய அங்கம் வகிக்கின்றன. 500 வேளாண் கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்களும், 125 கூட்டுறவு அர்பன் வங்கிகளும், 295 மாநில, மத்திய கூட்டுறவு வங்கிகளின் கிளைகளும் தற்போது தங்க நகைகளுக்குக் கடன் வழங்கும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளன. 1976-77 ஆம் ஆண்டில், சென்னை நகரத்தில் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் அதன் வங்கிகளின் கிளைகள் அர்பன் வங்கிகள் உட்பட ஏனைய இடங்களிலுள்ள வங்கிகளாலும், அதன் கிளைகளாலும், சங்கங்களாலும் தங்க நகைகளுக்கு கடன் வழங்கிய தொகை ரூபாய் 40.10 கோடியாகும். கிராமப்புற பகுதிகளில் தங்க நகைகளுக்கு கடன் வழங்கும் பகுதிகளில் புதிதாகக் கொண்டு வரப்படும் என்று தீர்மானிக்கப்பட்ட வேளாண் கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் 300க்கும் மேற்பட்டவையாகும். 1977-78 ஆம் ஆண்டில், தங்க நகைகளுக்கு கடன் வழங்குவதின் மூலம் ரூபாய் 60.00 கோடிக்கு உயரும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இது தவிர, மருத்துவ சிகிச்சை, திருமணம் முதலிய நோக்கங்களுக்காக நகைகளின் மீது வழங்கப்படும் கடன்களும், பிணையதாரரிடம் நம்பிக்கையின்பேரில் வழங்கப்படும் கடன்களும் கிராமப்புற மக்களின் நலிந்த பகுதியினருக்குத் தொடர்ந்து வழங்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் கிராமப்புற மக்களில் மேற்சொன்ன நலிந்த பகுதியினருக்கு வழங்கப்படும் தொகை ரூபாய் 50.00 இலட்சம் ஆகும்.





பயன்பாட்டுக் கடன் வசதி வழங்குகிற, தெரிந்தெடுத்த கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கூட்டுறவு அர்பன் வங்கிகளுக்கும் பங்கீட்டு மூலதனத்தின் மூலம் ரூபாய் 5.00 இலட்சம் அளவு வரை நிதியுதவி அளிக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கிளைகளுக்கு 25 பொருத்தமான கட்டிடங்கள் கட்டுவதற்கும், திருட்டுச் சம்பவங்கள் முதலிய எந்தவித அசம்பாவிதங்களுமில்லாமல், தங்க நகைகளுக்குக் கடன் வழங்கும் வியாபாரத்தை மேற்கொள்ளுவதற்கும் போதுமான, வலிமையான அறைக்கான ஒதுக்கீட்டிற்கும் என்று கடனாகவும், நிதியுதவியா[illegible] ரூ. 12.50 இலட்சம் வரை, மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு [illegible] உதவி அளிப்பது குறித்தும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தனியாகச் செயல்படும் அடிப்படையில், வேளாண் கடன் வசதிச் சங்கங்களை மீண்டும் புதுப்பித்து நிறுவும் திட்டம் 1977-78 ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்படும்.

1,633 வேளாண் கடன் வசதிச் சங்கங்களில், ஒவ்வொரு வேளாண் கடன் வசதி சங்கமும், இவ்வாண்டில், ரூபாய் 2.00 இலட்சத்திற்கும் குறைவாகக் கடன் வழங்கும் தொழிலை மேற்கொண்டதென 1976-77ஆம் ஆண்டின் இறுதியில் தெரிய வந்தது. இவற்றில் 1977-78 ஆம் ஆண்டில், ஒவ்வொரு வேளாண் சங்கமாக சுமார் 1,000 வேளாண் கடன் வசதிச் சங்கங்கள், இவ்வாண்டில் ரூபாய் 2.00 இலட்சத்திற்கும் அதிகமாக கடன் வழங்கும் வியாபாரத்தை மேற்கொள்ளும்.

## நீண்ட காலக் கடன் வசதி.

1977-78ஆம் ஆண்டில், மாநிலத்திலுள்ள (நடைமுறைத் திட்டத்தின் கீழ் ரூபாய் 7.00 கோடியும், வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகத் திட்டத்தின் கீழ் ரூபாய் 11.00 கோடியும் வழங்கப்படும். இவை நிதி உதவித் திட்டங்களாகும்) தொடக்க நிலவள வங்கிகளின் வாயிலாக, ரூபாய் 18.00 கோடி வரை நீண்ட காலக்கடன்கள் வழங்குவது குறித்து திட்டமிடப்பட்டுள்ளது. தொடக்க நிலவள வங்கிகளிடமிருந்து கடன் பெற்றவர்களின் விசையேற்றக் கருவிகளை மின்விசைபெறச் செய்வது குறித்து தமிழ்நாடு மின்வாரியத்திற்கு நிதியுதவி அளிக்கும் திட்டமும், இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளை நிறுவுவதற்கு நிதியுதவி அளிக்கும் திட்டமும், இவற்றுடன் சிறுபாசனம், சிறுபாசனம் சாராத் திட்டங்களும் பரிசீலனையில் உள்ளன. இந்த

நோக்கங்கள் அனைத்திற்கும், மாநில மத்திய அரசுகள், வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகம், ஏனைய நிறுவன மூல வரமைப்புகள் ஆகியவை, மாநில நிலவள வங்கிக்கு கடனீட்டுப் பத்திரங்களை வழங்கும். மாநில நிலவள வங்கியின் கடனீட்டுப் பத்திரங்களுக்கும், அரசின் பங்குத் தொகையாக, 1977-78ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 145 இலட்சம் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

புதிய கிணறுகள் தோண்டுவதற்கென வழங்கப்படும் நிதியுதவித் திட்டத்தின் கீழ், 1977-78ஆம் ஆண்டில், சிறு உழவர் குழுவினருக்கு அல்லது சிறு உழவர்களுக்கு அவர்கள் புதிய கிணறுகள் தோண்டும்பொருட்டு வழங்கப்படும் நிதியுதவித் தொகை ஒதுக்கீட்டிற்குப் போதுமானதாக இருக்கும்பொருட்டு, 1977-78ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 5 இல்ட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிணற்றிற்கும் ரூ. 500 என்ற வீதத்தில் தோராயமாக 1,000 சிறு உழவர்களுக்கு இத் திட்டம் உதவி புரியும்.

**கூட்டுறவு விற்பனையும், செயல்முறையும்.**

**கூட்டுறவு விற்பனை :**

அதிக அளவில் வேளாண் உற்பத்தியின் விற்பனையை மேற்கொள்ளும் பொருட்டு விற்பனைச் சங்கங்களை ஊக்குவிப்பது குறித்தும் விற்பனைச் சங்கங்களின் வியாபாரத்தை மேம்படுத்தி, அவற்றின் நிதிநிலையை வலிமைப்படுத்துவதற்காகவும் வேண்டி, விற்பனைச் சங்கங்களின் பங்கீட்டு மூலதனத்திற்குப் பங்குத் தொகையாக, 1977-78ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 4.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

அதிக அளவில் உறுப்பினர்களின் வேளாண்மை உற்பத்தி பொருளை உடனடியாக விலைக்கு வாங்குவதை மேற்கொள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை ஊக்குவிக்கும் கருத்துடன், விற்பனைச் சங்கங்களின் காலத்திற்கேற்ப விலை மாறும் சிறப்பு நிதிக்கு அரசின் பங்குத் தொகையாக, ரூ. ஒரு இலட்சம் வரை வரவு-செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

விற்பனைச் சங்கங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்ட பணியாளர்கள் குறித்து நிர்வாக நிதியுதவிக்கு ஒப்புதல் வழங்குவதற்கென மேலும் ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.



செயல்முறை :

விற்பனை, விற்பனைச் சங்கங்கள் ஆகியவற்றிற்கு உதவி புரியும் ஒரு முயற்சியாக, அவற்றினுக்கு அருகிலே செயல்முறை ஆலைகள் நிறுவப்பட்டுள்ளன. பருத்தியினின்று கருவிகள் மூலம் விதைகளைப் பிரித்தெடுக்கும் ஆலைகள், அரிசி ஆலைகள், எண்ணெய் ஆலைகள், தவிட்டு எண்ணெய் ஆலைகள் சூரியகாந்தி/வேர்க்கடலை எண்ணெய் ஆலைகள், வேர்க்கடலை தொலிப்புக்கருவிகள், நெல்லினின்று உமியை நீக்கி அரிசியாக மாற்றும் கருவிகள், பழங்களைப் பதப்படுத்தும் கருவிகள் ஆகியவைகளைக் கொண்ட 88 செயல்முறை ஆலைகள் உள்ளன. தொகுதிச் செலவு, தொடக்கப் பணம், நிர்வாக நிதியுதவி ஆகியவை குறித்தும், ஆலைப்பிரிவுகளில் வேலைக்கு அமர்த்தப்பட்ட பணியாளர்களின் செலவு குறித்தும் இந்த ஆலைகளுக்கு அரசு நிதியுதவி அளித்துள்ளது. நடப்பாண்டில், ஒண்டிப்புதூர், விருத்தாசலத்திலுள்ள 2 எண்ணெய் ஆலைகளின் நிர்வாக நிதியுதவித் தொகையாக ரூ. 0.73 இலட்சம் வரையிலும், திருவண்ணாமலையிலுள்ள நிறுவனத்தின் கீழ் உள்ள வேர்க்கடலை எண்ணெய் ஆலைக்கு ரூ. 40,000 வரையிலும் நிதியுதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மை இடு பொருட்கள் :

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைப்புக் குழுவும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணைப்புக் குழுவும், சுமார் 80 கோடி ரூபாய் மதிப்புள்ள இரசாயன உரங்களை விலைக்கு வாங்கி, அவற்றைப் பகிர்ந்தளிக்க இயலும் வண்ணம், அவற்றின் பங்கீட்டு மூலதனத்தில், நடப்பாண்டில், ரூ. 42.55 இலட்சத்தை அரசு முதலீடு செய்யும்.

**விற்பனைக்கான உற்பத்திப் பொருட்களைச் சேமித்து வைக்கும் கிடங்கு :**

வேளாண்மை உற்பத்தியை அதிகப்படுத்தி, அவற்றை வசதியாகச் சேமித்து வைப்பதின் அவசியம் குறித்து முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. 1969-70ஆம் ஆண்டில் 57-31 இலட்சம் டன்னில் நின்ற வேளாண்மை உற்பத்தி 1983-84ஆம் ஆண்டிறுதியில் 111.50 இலட்சம் டன் வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1976-77ஆம் ஆண்டில் 3.03 இலட்சம் மெட்ரிக் டன் அளவுள்ள இரசாயன உரங்கள் கூட்டுறவுத் துறைகளின் கையில் இருந்தன. 1983-84ஆம் ஆண்டிறுதியில்

8.00 இலட்சம் டன்கள் அளவுள்ள இரசாயன உரங்களைக் கைக் கொள்ள இத்துறை தீர்மானித்துள்ளது. ஆயினும், தெரிந்தெடுத்த நிலையங்களிலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்களைப் போல கிராமப் புறப் பகுதிகளிலுள்ள வேளாண் கடன் வசதிச் சங்கங்களினால் கிடங்குகளைக் கட்டுவது குறித்து விரைவு படுத்துவது தவிர்க்க முடியாததாக உள்ளது.

நடப்பாண்டில், வேளாண் கடன் வசதிச் சங்கங்களினால் 200 கிடங்குகள் கட்டுவதற்கும், விற்பனைச் சங்கங்களினால் 10 கிடங்குகள் கட்டுவதற்கும் நிதி முதலீடு செய்யத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. இவ்வாறு கட்டப்படுவதால் அதிகரிக்கப்படும் கிடங்குகளின் மொத்த எண்ணிக்கை முறையே 3,034,238 ஆகும். இதனால் மொத்த சேமிப்புத்திறன் 4.68 இலட்சம் வரை உயரும்.

**நுகர்வோர் கூட்டுறவுத் துறைகள்.**

கூட்டுறவுத் துறையில் பல்வேறு பிரிவுகள் உள்ளன. அவற்றில் சாதாரண மனிதனின் நலத்தில் அதிகமாக, அக்கறை எடுத்துக் கொள்ளும் நுகர்வோர் துறைக்கு ஈடாக வேறு எதுவுமில்லை எனலாம். நுகர்வோர் கூட்டுறவுத் துறைகள், அவற்றின் உறுப்பினர்களுக்கு மட்டுமில்லாமல் பெரும் அளவில் பொது மக்களுக்கும் சேவை புரிகிறது. மேலும், இக்கூட்டுறவுத் துறைகள், விலைப்படி தயாரித்தும், நல்ல தரமான பயன்துய்ப்புப் பொருட்களை எளிதில் வழங்கியும், சரியான விலைக்கு சரியான எடையிட்டும் செவ்விய முறையில் சேவை செய்து வருகின்றன. 1977-78ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும் நுகர்வோர் துறையிலுள்ள தலையாய திட்டங்கள் கீழேத் தெளிவாகக் காட்டப் பட்டுள்ளன.

**கிராமப்புறத்து நுகர்வோர்க்கான திட்டம்**

நுகர்வோர் கூட்டுறவுத்துறைகளின் பணி, அண்மைக்காலம் வரை, நகர்ப்புறப் பகுதிகளின் எல்லைக்குட்பட்டிருந்தது. அண்மையில் "கிராமப் புற நுகர்வோர் திட்டம்" தொடங்கப் பட்டதின் கீழ் நுகர்வோர்க்கான பணிகள் கிராமப் புறப் பகுதிகளிலும் செயல்படத் தொடங்கி உள்ளன. மாவட்டக் கூட்டுறவு வழங்கல்-விற்பனைச் சங்கங்கள் அல்லது கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் அல்லது கூட்டுறவு விற்பனைச்



சங்கங்கள், கிராமக் கூட்டுறவு வேளாண் கடன் வசதிச் சங்கங்களின் நிகரப் பணியின் வாயிலாக கிராமப் புறப் பகுதிகளிலுள்ள சரக்குப் பகிர்ந்தளிக்கும் பணியை மேற் கொள்ளும். 557 கிராமக் கூட்டுறவு வேளாண் கடன் வசதிச் சங்கங்களைச் சேர்ந்த 25 திட்டங்களுக்கு இதுவரை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இச்சங்கங்கள் ரூ. 375 இலட்சம் மதிப்புள்ள பயன்துய்ப்புப் பொருட்களைக் கிராம மக்களுக்குப் பகிர்ந் தளித்தன. 1977-78ஆம் ஆண்டில், 500 சங்கங்களைச் சேர்ந்த அதுபோன்ற 25 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கிராமப்புற பகுதிகளில் ரூ. 6.00 கோடி மதிப்புள்ள பயன்துய்ப்புப் பொருட்களை அவை பகிர்ந்தளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மரச்சாமான்கள், பொருத்தும் சாதனங்கள், வண்டிகள் முதலியவற்றை வாங்கு வதற்காக, சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு ரூ. 40 இலட்சம் மதிப்புள்ள நிதியுதவி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

இத்திட்டத்தைச் செயற்படுத்தும் பொருட்டு 50 கிராம வேளாண் கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கென 1977-78ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கிராம மக்களுக்கு மிகவும் திறம்படத் தொண்டுபுரிய இயலும் வண்ணம், அச்சங்கங்களுக்குச் அடிப்படையாகத் தேவைப்படும் இடப்பகுதியை விரிவுப்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு சங்கத் திற்குமென ரூ. 10,000 என்ற விதத்தில் அச்சங்கங்களுக்கு பண உதவி வழங்கப்படுகிறது.

**சிறப்பு அங்காடிகளும், சிறு சிறப்பு அங்காடிகளும் :**

மாநிலத்தில் எற்கனவே 20 சிறப்பு அங்காடிகளும், 84 சிறு சிறப்பு அங்காடிகளும் உள்ளன. மாநிலத்தில், மேலும், ஒரு சிறப்பு அங்காடியை நிறுவுவதற்கு ரூ. 6.15 இலட்சம் வரையிலும் 8 சிறு சிறப்பு அங்காடிகளைத் திறப்பதற்கு ரூ. 4.80 இலட்சம் வரையிலும், நிதியுதவி வழங்க 1977-78ஆம் ஆண்டில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

**கட்டுப்பாட்டு விலைத்துணி:**

தமிழ்நாட்டில், கூட்டுறவுத் துறைகளின் மூலம் மட்டும் கட்டுப்பாட்டு விலைத் துணி பகிர்ந்தளிக்கப்படுகிறது. கிராமப்புறப் பகுதியில் நலிந்த பிரிவினருக்குப் பகிர்ந்தளிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட துணியில் 75 சதவீதம் வழங்கப்பட்டது. 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 412.52 இலட்சம் மதிப்புள்ள கட்டுப்பாட்டு விலைத் துணிகளில் 15,185 பேல்கள் பெரும்பாலும் கிராமப் புறப் பகுதிகளிலுள்ள 4,764 சில்லறை வியாபாரக் கடைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. கிராம மக்களிடையே இக்குறைந்த விலைத் துணி மிகவும் பிரபலமடைந்துள்ளது. இத்துணிக்கு அவர்களிடையே மிகவும் கிராக்கியும் ஏற்பட்டுள்ளது.

ஆனால், மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைத் துணி போதுமானதாக இல்லை. மாநில அரசு, துணியின் ஒதுக்கீட்டை அதிகமாக்கும் கோரிக்கையை பஞ்சாலை ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததுபோல் இந்திய அரசுக்கும் தெரியப்படுத்தியுள்ளது. இதில் மற்றோர் இடர்ப்பாடு என்னவென்றால், மாநிலத்திலுள்ள நுகர்வோருக்குப் பிடிக்காத வரைபடங்களைப் போல் உற்பத்தி செய்யப்படும் துணியின் நீள அகல உயரங்களும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. எனினும், விருப்பான வரைபடங்களுடனும் நீள அகல உயரங்களுடனும் கூடிய நல்ல ரகமான துணிகள் இனிமேல் அதிகமாக ஒதுக்கீடு செய்யப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளுவது குறித்து பஞ்சாலை ஆணையாளர் உறுதி கொடுத்துள்ளார். இது, ஒப்புக் கொள்ளப்பட்டுவிடின், 1977-78 ஆம் ஆண்டில், கிராமப் புறப் பகுதிகளில் சுமார் 20,000 பேல் துணி பெரும்பாலும் பகிர்ந்தளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டில் மாநிலத்திலுள்ள நுகர்வோர் கூட்டுறவுத் துறைகளின் வாயிலாக தேசியப் பஞ்சாலைக் கழகத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் ஜனதா துணியைக் குறைந்த விலையில் பகிர்ந்தளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பாடப் புத்தகங்களைப் பகிர்ந்தளித்தல்:**

1976-77 ஆம் ஆண்டில் முதல் முறையாக தேசியமயமாக்கப்பட்ட பாடப் புத்தகங்களைப் பகிர்ந்தளிப்பதைக் கூட்டுறவுத் துறைகள் மேற்கொண்டன. சென்ற ஆண்டு மாணவர்களுக்கு ரூ. 255 இலட்சம் மதிப்புள்ள பாடப் புத்தகங்களை அத்துறைகள்



பகிர்ந்தளித்தன. 1977-78 ஆம் ஆண்டில், ரூ. 300 இலட்சம் மதிப்புள்ள 400 இலட்சம் புத்தகங்கள், கூட்டுறவுத் துறைகளின் வாயிலாக மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. 35,530 பள்ளிக்கூடங்களில் படித்து வருகிற 77 இலட்சம் மாணவர்களுக்குச் சரியான விலையில் இப்புத்தகங்கள் வழங்கப்படும். அரசு எடுத்த இத்தீர்மானத்தின் விளைவாக, பின் தங்கிய வகுப்புகள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு அவர் தம் புத்தகங்களுக்கென்று கல்வி உதவிப்பணம் வழங்கப்படும். மெட்ரிக் படிப்புக்கு முன்புள்ள படிப்புகளைப் பயிலும் மேற்சொன்ன வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பணமாகக் கொடுக்காமல் புத்தக வடிவில் மட்டும் பகிர்ந்தளிக்கப்படும். 1977-78 ஆம் ஆண்டில், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பின் தங்கிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கூட்டுறவுத் துறைகளின் மூலம் ரூ. 75 இலட்சம் மதிப்புள்ள 100 இலட்சம் புத்தகங்கள் பகிர்ந்தளிக்கப்படும்.

**கட்டுப்பாட்டு விலையில் தாள்களைப் பகிர்ந்தளித்தல்:**

கடந்த ஆண்டில், கூட்டுறவுத் துறைகள், மாணவர்களுக்குச் சலுகைக் கட்டணத்தில் தாள்களைப் பகிர்ந்தளிக்கும் பொருட்டு, 631 டன் கட்டுப்பாடு விலைத்தாள் ஒதுக்கீட்டைப் பெற்றன. இத்தர்ள்கள் மாணவர்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் தாள்களாகவோ அல்லது தாள்களை நோட்டுப் புத்தகங்களாக மாற்றியோ பகிர்ந்தளிக்கப்படும். மாணவர்களிடையே தாள்களுக்கும், நோட்டுப் புத்தகங்களுக்கும் வரவேற்பு இருப்பதால், 1977-78 ஆம் ஆண்டில், மாணவர்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் பகிர்ந்தளிக்கும் பொருட்டு சுமார் 2,000 டன் தாள்களை ஒதுக்கீட்டைப் பெறுவது குறித்துத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**பொது சமையல் நிலையங்கள்:**

விடுதி அல்லாத வெளியேயிருந்துவரும் நலிந்த பிரிவினரைச் சேர்ந்த பெரும்பாலான மாணவர்களுக்கு குறைந்த விலையில் சாப்பாடு வழங்குவதற்கு கல்லூரி மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகசாலையினால் பொதுச் சமையல் நிலையங்களை நிறுவுவதற்கான புதிய திட்டம் ஒன்று மாநிலத்தில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் 50 நிலையங்கள்

நிறுவதற்கு உதவும் பொருட்டு திட்டமிடப்பட்டுள்ளது. 33 நிலையங்கள் நிறுவுவதற்கான நிதியுதவிக்கு ஏற்கெனவே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையங்களினால், மாநிலத்திலுள்ள 10,000 மாணவர்களுக்கு மேல் நன்மை அடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கல்லூரி/பல்கலைக் கழக மாணவர்களின் பண்டகசாலைகளின் திறனை வலுப்படுத்துதல் :**

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக்கழகம், கல்லூரி/பல்கலைக் கழக மாணவர்களின் பண்டகசாலைக்குத் தேவையான நிதியுதவித் திட்டத்திற்கு உதவும் பொருட்டு முன்வந்துள்ளது. கல்லூரிப் பண்டகசாலையெனின் ஒரு பண்டகசாலைக்கு ரூ. 15,000-மும், பல்கலைக் கழகத்தின் ஒவ்வொரு பண்டகசாலைகளுக்கும் ரூ. 30,000 எனவும் சராசரி நிதியுதவியை அக்கழகம் வழங்கியுள்ளது. கல்லூரி மாணவர்களது பண்டகசாலையின் 7 செயற்குறிப்புகள், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு உதவி கோரி அனுப்பப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து அதிக பட்ச நிதியுதவி பெறும்பொருட்டு முடிந்த அளவு பல செயற்குறிப்புகள் அனுப்புவது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்பண்டக சாலைகளுக்கு ஓராண்டிற்கு ரூ. 1,000 என்ற விதத்தில் மாநில அரசின் நிதியிலிருந்து பணம் செலுத்தப்பட்டு அப்பண்டக சாலையின் நிறுவனச் செலவினைச் சமாளிப்பதற்கு நிர்வாக நிதியுதவியும் வழங்கப்படும் என்று மேலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**வட்டாரப் பகிர்ந்தளிப்பு நிலையங்கள் :**

ரூ. 22.32 இலட்சம் நிதியுதவியுடன் கோயம்புத்தூரின் வட்டாரப் பகிர்ந்தளிப்பு நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான திட்டத்திற்கு அரசு அண்மையில் ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்தகைய நிலையங்களில், இந்தியாவிலேயே இது முதல் நிலையமாகும். இந்நிலையத்தின் முக்கிய நோக்கம் யாதெனில் கூட்டு முயற்சிகளின் மூலம் நுகர்வோர் கூட்டுறவுத் துறைகளை எங்கெல்லாம் உருவாக்க முடியுமோ, அங்கெல்லாம் பொருட்களை விலைக்கு வாங்குவதில் சிக்கனத்தையும் திறமையையும் காட்டி கூட்டுறவுச் சில்லறை அங்காடிகளுக்கு அவற்றைப் பகிர்ந்து வழங்குவதே





ஆகும். சென்னையிலுள்ள இதுபோன்றதொரு நிலையம், சென்னை நகரம், செங்கற்பட்டு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலுள்ள நுகர்வோர் கூட்டுறவுத் துறைகளுக்குத் தொண்டு புரிவது குறித்து மேலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**கூட்டுக் கொள்முதல் திட்டம் :**

ஏனைய பகுதிகளில் வட்டாரப் பகிர்ந்தளிப்பு நிலையங்களை நிறுவுவதற்கு முன்னோடியாக, மொத்த விற்பனைப் பண்டக சாலைகளினால் கூட்டுக் கொள்முதல் திட்டம் ஒன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. கொள்முதல் செய்கையில் ஏற்படும் ஊழல்களைத் தவிர்த்து போட்டி விலைகளில் பெரும் அளவு கொள்முதல் செய்கையில், கூட்டுறவுத் துறைகளினால் பேரம் பேசி விலையைக் குறைத்து வாங்கும் ஆற்றலை இக் கூட்டுக் கொள்முதல் திட்டம் வளர்த்துள்ளது.

**நுகர்வோர் ஆலைகள்.**

பயன்துய்ப்போர் கூட்டுறவுத் துறைகள் அரசால் வழங்கப்படும் நிதியுதவியைக் கொண்டு தாள் முதலிய எழுதுபொருள் ஆலைகள், காப்பித்தூள் அரவை ஆலைகள், எண்ணெய் ஆலைகள், கம்பளி ஆடைகளைத் தயார்செய்யும் ஆலைகள் முதலியவற்றை நிறுவியுள்ளன. நுகர்வோர் ஆலைகளைத் தொடங்குவதற்கென 1977-78 ஆம் ஆண்டிற்குரிய செலவுத் திட்டத்தில் ரூ. 9.55 இலட்சம் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**நலிந்த பிரிவினரை உள்ளடக்கித் தொண்டு புரிதல்.**

பின் தங்கிய பகுதிகளிலுள்ள நலிந்த பிரிவினரின் தேவைகளை பூர்த்தி செய்வது குறித்து சிறிய கிளைகளை நிறுவ, மத்திய நுகர்வோர் கூட்டுறவுத் துறைகளுக்கும், வலிமையான தொடக்கக் கூட்டுறவுப் பண்டக சாலைகளுக்கும் நிதியுதவி வழங்கும் திட்டம் ஒன்றினை இந்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. நலிந்த பிரிவிலும் மிகநலிந்த பிரிவினரான சேரி வாழ் மக்களுக்குச் சேவை செய்வதற்கென "ஜனதா அங்காடி" என்றழைக்கப்படும் சிறிய கிளைகளைத் திறப்பது குறித்துப் புதிய திட்டம் ஒன்றும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நலிந்த பிரிவினருக்கான 33 சிறிய கிளைகளைத் திறப்பது குறித்து செயற்குறிப்புகள்

ஏற்கெனவே இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அதில் 3 செய்ற்குறிப்புகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ், இந்திய அரசிடமிருந்து அதிக அளவு நிதியுதவியைப் பெற்றுப் பயனடையும் பொருட்டு பல செயற் குறிப்புகளை அனுப்புவது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனால் கிராமப் புறத்துப் பின் தங்கியப் பகுதிகளில் சிறிய கிளைகளின் நிகரப் பணி வாயிலாக மக்களில் நலிந்த பிரிவி னருக்கு நுகர்வோர் கூட்டுறவுத் துறைகள் சேவை செய்யலாம்.

### நலிந்த பிரிவினருக்கான கூட்டுறவுத் துறைகள்.

### பல்நோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக (LAMPS)

தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள மூன்று பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் சேலம், தருமபுரி, திருச்சி, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலுள்ள ஏழு பெரிய அளவு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் (LAMPS) மலைவாழ் பழங்குடியினரின் நன்மை குறித்து அமைக்கப்பட்டன. மேற்சொன்ன இச்சங்கங்கள் யாவும் 1977-78 ஆம் ஆண்டிலும் அரசிடமிருந்து நிதியுதவியினைத் தொடர்ந்து பெற்றுவரும் சேலம் மாவட்டத்திலுள்ள அனுத மலையிலும் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் குன்று களிலும் இரண்டு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க மேலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவற்றிற்கு நிதியுதவியும் வழங்கப்படும். இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவும் பொருட்டு, 1977-78 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டமதிப்பீட்டில் ரூ. 5.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர பழங்குடித் துணைத் திட்டப் பகுதிகளில் "பாசனக் கிணறுகளைத் தோண்டுதல்" திட்டத்தின்கீழ், இத் திட்டங்களைச் செயற்படுத்துவது குறித்து ரூ. 4.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்.

நான்கு தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 1 இலட்சம் வரை கடன் உதவி கிட்டும். உயர்நிலை ஆய்வாளர்கள் தரத்திலுள்ள துறைப் பணியாளர் தம் உழைப் புதவியும் அச் சங்கங்களுக்கு வழங்கப்படும். மேலும், கோயம்



புத்தூர், அரக்கோணம், சென்னை, காரைக்குடி ஆகிய இடங்களிலுள்ள இந்திய உணவுக் கிடங்குகளில் சரக்கேற்றும், சரக்கு இறக்கும் பணிகளில் இந்த நான்கு தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் முற்றுமாக ஈடுபட்டுள்ளன. இது போன்றதொரு சங்கம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள செம்பனார்கோயிலில் நிறுவப்படும்.

### சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கம்.

சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநருக்கான கூட்டுறவுச் சங்கம் ஒன்று, 1977-78 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தில் (ரூ. 0.67 இலட்சம் வரை) வழங்கப்பட்டுள்ளது. அரசு நிதியுதவியுடன் மதுரையில் தொடங்கப்பெறும். 50 சைக்கிள் ரிக்ஷாக்கள் 50 நபருக்கு வழங்கப்படும். ஒவ்வொரு நபரும் சைக்கிள் ரிக்ஷா வாங்கும் பொருட்டு அவர்களுக்கு வட்டியில்லாக் கடனாக ரூ. 800-ம், நிதியுதவித் தொகையாக ரூ. 200-ம் வழங்கப்படுவது குறித்து ஒப்புதலும் வழங்கப்படும். ஒவ்வொரு நபருக்கும் வட்டியில்லாப் பங்கீட்டு மூலதனக் கடனாக மேலும் ரூ. 100 கொடு கப்படும். அலுவலகக் கட்டிடத்திற்கான வாடகை, மரச் சாமான்கள் ஆகியவற்றிற்காகவும், தொகை வசூலிப்பவரை Bill collector நிதியுதவித் நியமிப்பது குறித்தும் இச்சங்கத்திற்கு தொகையாக மேலும் ரூ. 6,600 கொடுக்கப்படும். அன்றாட அலுவல் விவகாரங்களைப் பார்வையிடும்பொருட்டு, கூட்டுறவுச் சங்கங்களின் ஓர் இளநிலைப் பொறியாளர் பணியில் அமர்த்தப் பெறுவார்.

### கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும்.

### பணியாளர் பயிற்சி.

கூட்டுறவு நிறுவனங்களில் வேலை தேடும் பணியாளர்களுக்கு 9 திங்கள் கால அளவில் "கூட்டுறவுத் துறையில்" பயிற்சி கொடுப் பதற்கு மாநிலத்தில் 7 கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. நடப்பாண்டில் அதாவது 1977-78 ஆம் ஆண்டில் 1,050 மனுதாரர் களுக்குக் கூட்டுறவுத் துறையில் அடிப்படைப் பயிற்சி வழங்கப்படும். இது தவிர, கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரி கிற பணியாளர்கள் நன்மை பெறுவதற்காகவும், அவர்கள் தங்களது கடமைகளைச் செவ்வனே புரிவதற்குத் தங்களைத்

122072

தகுதி[illegible]யவர்களைக் [illegible]பது கொள்வதற்கும் இக்கூட்டுறவு நிறுவன[illegible]ளில் கடன் [illegible]தி நுகர்வோர் கழகம் முதலிய பல் வேறு நடைமு[illegible] வேலைக்கான பாடப் பிரிவுகளில் பயிற்சி நடத்தப்படும்.

சம்பந்தப்பட்ட துறைப் பணியாளர்களுக்கு ரூ. 0.94 இலட்சம் செலவில் சிவில், கிரிமினல் சட்டங்களில் குறுகிய காலப்பயிற்சி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறைத் தணிக்கை, விற்பனை, பயன் துய்ப்போர் கூட்டுறவுத் துறைகள், வன-மீன் கூட்டுறவுத் துறைகள் ஆகியவற்றில் மத்தியக் கூட்டுறவுத் துறை நிறுவனத்தின் வாயிலாக இதுபோன்ற முனைப்பான பயிற்சிகள் நடத்தப்படும்.

சென்னையிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி தற்போது வாடகைக்கட்டிடத்தில் அமைந்துள்ளதால், அக் கல்லூரிக்கு ரூ. 36.28 இலட்சம் செலவில் ஒரு கட்டிடம் கட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இச்செலவுத் தொகை முழுவதும் இந்திய தேசீய கூட்டுறவு யூனியன், மாநில அரசு, தமிழ்நாடு கூட்டுறவு யூனியன், கூட்டுறவுத் துறைகள் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும். மாநில அரசிடமிருந்து பெறும் நிதியுதவி ரூ. 10.00 இலட்சம் அளவு வரை மானிய வடிவில் இருக்கும்.

V211,31 N77

உறுப்பினர் கல்வி.

உறுப்பினர்கள், குழு உறுப்பினர்கள், கூட்டுறவுத் துறைகளின் தகுதியிடு உறுப்பினர்கள் ஆகியோருக்குக் கல்வி புகட்டுவதற்காக, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரு தொகுதியில் உறுப்பினர் கல்வித்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. 5 மாவட்டங்களிலுள்ள 6 தொகுதிகளிலும் இத்திட்டம் இடம் பெறும்.

N78.632

ஊக்கத்துடன் இந்நடைமுறைத் திட்டங்களை மேற்கொள்ளுவதுடன் வேளாண் கடன்கள், நகைக் கடன்கள், ஜனதா அங்காடிகள் முதலியவற்றின் மூலம் நலிந்த பிரிவினரின் முன்னேற்றம் குறித்துச் சேவை புரிவதற்கு கூட்டுறவுத் துறைகளை அரசு வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும். இதனால், நலிந்த பிரிவினரின் பொருளாதாரத் தரத்தை மேம்படுத்த தேவையான குறித்தகால நிதியுதவியையும் அரசு அவர்களுக்கு வழங்கும்.

யில்லாமல்—தொழில் இல்லாமல் இருப்பதால்—பொருள்களை விற்க வேண்டிய நிலைமையில் ஏழ்மையில் இருக்கிறார்கள் என்பதை மட்டும் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்களுக்கு சப்சிடைஸ்ட் என்ற முறையில், விலையைக்குறைத்துக் கொடுக்க, உணவு தானியம் விநியோகம் செய்ய முயற்சி எடுக்க வேண்டும். அப்படி விநியோகம் செய்வதால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்ய, மற்றவர்களுக்கு விநியோகிக்கப்படுகிற அரிசியில் இருந்து கிடைக்கிற இலாபமே போதும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன்.

சர்க்கரை விநியோகிப்பதைப் பொறுத்த மட்டில், 65 சதவீதம் லெவி முறையில் நாம் விநியோகிக்கிறோம். அது பட்டணங்களில் இருப்பவர்களுக்குத்தான் கிடைக்கிறது என்பதைச் அரசாங்கமே கூறுகிறது. கிராமங்களில் ஒரு குடும்ப கார்டுக்கு ஒரு கிலோ அரிசி கொம்ப்பது என்றால், நிச்சயமாக அது போதாது. ஆகவே, அதை அதிகப்படுத்திக் கொடுப்பதற்கான விதிமுறைகளை நடைமுறையில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைச்சரவர்களுடைய ஆரம்ப முயற்சியை நான் வரவேற்று, அந்த நிலையில் சற்றும் தவறாமல் இருந்து நடவடிக்கை எவத்துக் கொள்ள அரசு முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. க. நாச்சிமுத்து: சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள், உணவு இலாகாவைப் பற்றிய மானியக் கோரிக்கையை இந்த அவையில் வைத்திருப்பதைப் பாராட்டி ஒரு சிலவற்றை நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பொதுவாக 1976 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதி முதல் தென் உணவு மண்டலம் ஆக்கியது எல்லோருக்கும் தெரியும். இது ஒரு வருட காலத்திற்கு நடத்தப்பட்டு, நல்ல முறையிலே செயல்பட்டால் மீண்டும் இதை வைத்துக் கொள்ளலாம் என்று ஏற்கெனவே இருந்த மத்திய அரசு ஒரு வருட காலத்திற்கு இதற்கு அனுமதி கொடுத்திருந்தது. அந்தத் தென் உணவு மண்டலத்தினால் இப்போது நம்முடைய தமிழகத்திலே ஏற்கனவே இருந்த ஆண்டுகளைவிட விலைவாசிகள் ஓரளவுக்கு குறைவாகத்தான் இருக்கிறது. இந்த நிலை மேலும் நீடித்தால் தமிழகத்திற்கு விலைவாசிகள் ஏறக்கூடிய வாய்ப்பு இருக்காது என்பதை நான் சொல்லிக் கொண்டு, இந்த தென் உணவு மண்டலத்தை 1977-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-க்கு பிற்பாடும் இதே நிலையை நீட்டிக்கவேண்டுமென்று நமது அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த உணவு விநியோகம் கிராமப் புறங்களில் தமிழகம் முழுவதும் ஏறக்குறைய 103 இலட்சம் குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டிருந்தாலும், கிராமப் பகுதியிலே குடும்பக் கார்டுகள் வழங்கப்படவில்லை. இது அதிகாரிகள் குறை. கிராமப் பகுதியிலே யாரும் கேட்பார் இல்லை



என்று சொல்லி, கிராமப் புறங்களில் சரியாக வழங்கப்படவில்லை. என்னுடைய பகுதியில் குண்டடம் ஒன்றியத்திலேயும், சுல்தான் பேட்டை ஒன்றியத்திலேயும், பொங்களூர் ஒன்றியத்திலேயும் கிட்டத்தட்ட ¾ பகுதி ஊர்களுக்கு குடும்பக் கார்டுகள் விநியோகம் செய்யப்படவில்லை. உரிய அதிகாரிகளுக்கு ஆணையிட்டு கண்டிப்பாக குடும்பக் கார்டுகள் வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கிராம கூட்டுறவுச்சங்கங்களில் சர்க்கரை போடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், கிராமக் கூட்டுறவுச்சங்கங்களிலே இருக்கிற தலைவர்கள் சர்க்கரையை எடுத்துக் கொண்டு வந்து அவர்களும் கூட்டுறவுச்சங்கங்களில் உள்ள அதிகாரிகளும் சேர்ந்து கொண்டு சர்க்கரையை கூட்டுறவு சங்கங்களில்விற்பது இல்லை. 15 மூட்டை என்று அலாட்மெண்டு இருந்தால் 3, 2 மூட்டைகள் தான் விநியோகம் செய்யப்படுகிறது. அதை யாரும் கேட்பது இல்லை. ஏனென்றால் அதிகாரிகளும், கூட்டுறவு சங்கத் தலைவர்களும் ஒன்று சேர்ந்து அதை நகரங்களிலே வெளி மார்க்கெட்டில் விற்று விட்டு, 2, 3 மூட்டைகள் மட்டும் கூட்டுறவு சங்கங்களில் விநியோகம் செய்கின்ற நிலைமை இருக்கிறது. வெளிமார்க்கெட்டில் விற்ற தொகையை அதிகாரிகளும் கிராமப் புறங்களிலே இருக்கிற பெருந்தலைவர்களும் இந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அரசாங்கம் இந்தக் குறையை நிவர்த்தி செய்து கிராமங்களுக்கு சரியானபடி சர்க்கரை விநியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் நமது தமிழகத்திலே அரிசி ஆலைகளைப் பற்றி ஒரு சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். கிட்டத்தட்ட 14,700 அறவை ஆலைகள் இருக்கின்றன. அவற்றிலே 1,919 தான் பெரிய அறவை ஆலைகள். 12,809 அறவை ஆலைகள் கூலி அறவை ஆலைகளாக,-சிறிய அறவை ஆலைகளாக இருக்கின்றன. இந்த அறவை ஆலைகளை அரசு நவீனம் ஆக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறது. இதை ஓராண்டு நடத்தி அதற்குப் பிறகு நவீனமாக்கலாம் என்று அறவை ஆலைகள் உரிமையாளர்களின் கோரிக்கையைக் கேட்டு தமிழக அரசு ஓராண்டுக்குத் தள்ளி வைத்திருக்கிறார்கள். புதிதாக கட்டப்படுகின்ற ஆலைகள் எல்லாம் நவீனமாக்கப் படவேண்டுமென்றும், அப்போதுதான் லைசன்சு அளிக்கப்படும் என்றும்சொல்லியிருக்கிறார்கள். இப்படி கோவை மாவட்டத்தில் பல அறவை ஆலைகள் கட்டி, லைசென்சு வழங்கப்படாமல் இருக்கின்றன. இதற்கும் இந்த விதிமுறைகளைத் தளர்த்தி உடனடியாக லைசென்சு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சிறு அறவை ஆலைகளை நவீனமாக்கக் கூடிய நிலைமையிலே உரிமையாளர்கள் இல்லை. ஏனென்றால் வசதிகள் இல்லை. அப்படி நவீனம் ஆக்கப்பட்டால், அதற்குண்டான நெல் அறவைக்கு கிடைப்பது இல்லை. கூலி நெல்லை அறைக்கின்ற அறவை ஆலைகள்

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company. Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-8.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-2.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

PUBLISHED UNDER RULES 2[illegible] AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PR[illegible]D BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.